வெளியீடு—29—11—1974]
Issued—29—11—1974]

தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை 1974 ஆகஸ்ட் 23

**Friday 23rd August 1974**

தொகுதி LIX—எண் 1

**Volume LIX—No. 1**

©
தமிழ் நாடு அரசு
1974
GOVERNMENT OF TAMIL NADU
1974

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 PAISE]

V.211, 31 'N74
31N74.5931
61675

# Tamil Nadu Legislative Assembly Debates.

ELEVENTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

---

23RD, 24TH, 26TH, 27TH AND 28TH AUGUST 1974.

---

*Volume LIX* (*Nos.* 1 *to* 5).

---

TABLE OF CONTENTS.

*Friday, 23rd August* 1974.


| | PAGES |
|---|---|
| Personnel of the Government of Tamil Nadu. | i–v |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... | ix–xvi |
| 1. Obituary Reference— | |
| Thiru A. Kunjan Nadar, ex-M.L.A. ... | 1 |
| 2. Point of Information— | |
| Commencement of the meeting at 9-00 a.m. sharp ... ... ... ... ... ... | 2 |
| 3. Questions and Answers ... ... ... | 3–32 |
| 4. Announcement— | |
| Tamil Nadu Appropriation (No. 3) Bill, 1974. | 32 |

PAGES

*Friday, 23rd August* 1974—cont.

5. Points of Order—
   (i) Earlier conclusion of Vuestion hour ... 32–35
   (ii) Scrutiny of the file relating to the allegation levelled by Thirumathi Sathyavanimuthu ... ... ... ... 37–44
6. Permission to submit the documents in support of Thiru G. R. Edmund's allegation M 35–37
7. Calling Attention—
   (i) Compulsory collection of money by way of donations in the Educational Institutions and the plight of parents ... 44–47
   (ii) Non-availability of important medicines in the Erskine Hospital, Madurai ... 47–49
8. Discussion on the Tamil Nadu Electricity Board Annual Financial Statement for 1974–75 ... ... ... ... ... 49–126
9. Papers laid on the Table ... ... ... 126–127

*Saturday, 24th August* 1974.

1. Questions and Answers ... ... ... 153–192, 195–197
2. Points of Order—
   (i) Answer given to a supplementary question ... ... ... ... ... 192–19[illegible]
   (ii) Announcement of two Panels of Chairmen in the same session ... ... 228–22[illegible]
3. Adjournment Motion—
   Non-availability of Text-books for P.U.C. students ... ... ... ... ... 197–19[illegible]



PAGES

*Saturday, 24th August* 1974—cont.

4. Calling Attention—
   (i) Delay in letting out water from Mettur Reservoir for irrigation and its consequences ... ... ... ... 199–203
   (ii) Increase in the price of milk ... ... 204–205
5. Statement of Minister—
   Cauvery water issue ... ... ... 255
6. Scrutiny of the file relating to the allegation levelled by Thirumathi Sathyavanimuthu ... 206–213
7. Discussion on the Tamil Nadu Electricity Board Annual Financial Statement for 1974–75—cont. ... ... ... ... ... 214–228, 229–292
8. Announcement—
   Panel of Chairmen ... ... ... ... 228
9. Papers laid on the Table ... ... ... 292–293

*Monday, 26th August* 1974.

1. Questions and Answers ... ... ... 295–343
2. Adjournment Motions—
   (i) Closure of V.O.C. College, Tuticorin, due to clash among students ... ... 343–345
   (ii) Alleged serious situation prevailing at Krishnagiri due to the action taken by the Police against the students ... 345–352
   (iii) Out break of cholera in Midalam village. 352–355
   (iv) Smuggling of rice bags through Government Transport from Andhra Pradesh. 355–358

PAGES

*Monday, 26th August* 1974—cont.


3. Calling Attention—
   Non-payment of wages and the consequent hardship to the temporary labourers of Coimbatore Mills ... ... ... 358–365
4. Presentation of Reports—
   (i) Report of the Committee on Public Accounts ... ... ... ... 365
   (ii) Report of the Committee on Government Assurances ... ... ... ... 365
5. Point of Order—
   Non-presentation of the report of the Estimates Committee ... ... ... ... 366–369
6. Government Bill—
   The Tamil Nadu Horse-Races (Abolition of Wagering or Betting) Bill, 1974 ... ... 369-370
7. Discussion on the Tamil Nadu Electricity Board Annual Financial Statement for 1974–75—cont. ... ... ... ... ... 370–439
8. Papers laid on the Table ... ... ... 440


*Tuesday, 27th August* 1974.


1. Questions and Answers ... ... ... 449–518
2. Fixation of time-limit for answering of questions ... ... ... ... ... 518
3. Adjournment Motions—
   (i) Non-letting out of water from Parambikulam-Aliyar Project for Dharapuram and Palladam taluks ... ... 519-521
   (ii) Declaration as drought-affected areas Palladam, Avinashi and Coimbatore taluks and provision of relief measures. 521–523




PAGES

*Tuesday, 27th August* 1974—cont.


3. Adjournment Motions—*cont.*
   (iii) Lock-out in the Industrial Ancillary Service of G.E.C. in Saligramam and the consequent hardship to workers ... 524–525
   (iv) Attack on fishermen near Rameswaram coast ... ... ... ... 526–530
4. Government Motion—
   Suspension of Rule 41 (3) ... ... ... 530
5. Calling Attention—
   (i) Drought condition due to failure to let out water in Pattanamkal Channels in Kalkulam and Vilavancode taluks ... 531–534
   (ii) Attachment of property by Revenue and Co-operative staff in drought-affected Attur taluk, Salem district ... ... 535–537
   (iii) Statement of the Minister for Public Works, Karnataka about the sharing of Cauvery waters ... ... ... 537-538
   (iv) Refusal of the Vice-President of the Thenmankulam Village Panchayat to hand over charge to the President ... ... 538-541
6. Announcements—
   (i) The Tamil Nadu Cultivating Tenants (Right to Purchase Owners' Rights) Bill, 1973 ... ... ... ... ... 541–542
   (ii) Message from the Chairman, Legislative Council regarding Bills passed in the Council ... ... ... ... 542–543
7. Point of Information—
   Chief Minister's discussions with the Planning and Delimitation Commissions at Delhi ... 543–544
8. Thiru G. R. Edmund's allegation regarding staying of proceedings in the District Court. 544–559

PAGES

*Tuesday, 27th August* 1974—*cont.*

9. Discussion on the Tamil Nadu Electricity Board Annual Financial Statement for 1974-75—cont. ... ... ... ... ... 560-582

10. Government Bills—
    (i) The Madras City Municipal Corporation (Amendment) Bill, 1974 ... ... 583-586
    (ii) The Tamil Nadu Local Authorities Laws (Amendment) Bill, 1974 ... ... 586-593

11. Papers laid on the Table ... ... ... 593-595

*Wednesday, 28th August* 1974.

1. Announcements—
    (i) The Tamil Nadu Hindu Religious and Charitable Endowments (Fifth Amendment) Bill, 1974 ... ... ... 639
    (ii) The Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 ... ... ... 641-643
    (iii) The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1974 ... ... 712
    (iv) The Tamil Nadu Panchayats (Amendment and Validation) Bill, 1974 ... 717

2. Chief Minister's Statement—
    Discussion with the Prime Minister and certain other Central Ministers at Delhi. 639-641

3. Points of Order—
    (i) Discussion in the Speaker's Chamber about a Privilege Matter ... ... 642-643
    (ii) Propriety of Chief Minister's discussion with the concerned persons and taking a decision while the relevant taxation proposals were before the House ... 652



PAGES

*Wednesday, 28th August* 1974—*cont.*

4. Government Bills—
    (i) The Tamil Nadu Entertainment Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 ... ... ... 643-651, 653-691
    (ii) The Tamil Nadu Horse Races (Abolition of Wagering or Betting) Bill, 1974 ... 691-711
    (iii) The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1974 ... ... 712-716
    (iv) The Tamil Nadu Panchayats (Amendment and Validation) Bill, 1974 ... ... 717-721
    (v) The Payment of Wages (Tamil Nadu Amendment) Bill, 1974 ... ... 721-723
    (vi) The Tamil Nadu Motor Vehicles Taxation (Amendment) Bill, 1974 ... ... 723

5. Government Motion—
    Adjournment of the House *sine die* ... ... 724

6. Papers laid on the Table ... ... ... 724

# HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill(s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee(s)', 'Council(s)', 'Corporation(s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the index is given below: -

| | | |
|---|---|---|
| A.M./Ad. Motion | ... | Adjournment Motion. |
| Ann. | ... | Announcement. |
| B.O.H. | ... | Business of the House. |
| C.A. | ... | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A. St. | ... | Calling Attention Statement. |

| | | |
|---|---|---|
| [illegible] | ... | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | ... | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | ... | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | ... | Discussion for Short Duration on an urgent matter of Administration. |
| D.S.G. | ... | Demands for Supplementary Grants. |
| G.A. | ... | Governor's Address. |
| G.D. | ... | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | ... | Half-hour Discussion. |
| Int. | ... | Introduction stage of a Bill. |
| L.A. | ... | Legislative Assembly. |
| L.C. | ... | Legislative Council. |
| M. | ... | Motion. |
| P.M. | ... | Privilege Motion. |
| R/Res. | ... | Resolution. |
| St. | ... | Statement. |

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

## தமிழ் நாடு ஆளுநர்.

### மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், பட்ச்சுருள் தொழில் நுட்பவியல்.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், தமிழ் நாடு கழிவு நீர்—குடிநீர் வாரியம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், செய்தி-விளம்பரம், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், சிரணி, இளைஞர் அணி, பூதான—கிராமதான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** (பொதுப்பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. மாண்புமிகு திரு. செ. மாதவன்: (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கனிப் பொருள்கள், சுரங்கங்கள், இரும்பு—உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத் துறை வருவாய், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கால்நடை வளர்ப்பு, கூட்டமைப்புக்கள் உள்ளிட்ட மாநில, மாவட்ட வளர்ச்சி வட்டார அளவிலான வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிமுறைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (உணவு—கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறு நிதி உதவி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம்: (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், விட்டு வசதி-இட வசதிக் கட்டுப்பாடு, எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், குடிசை மாற்று வாரியம்.



12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் கண்காணிப்புப் பணிகள்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: மின்சாரம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம், பால் வழங்கு துறை, பால்வள முனைப்புத் திட்டம், தமிழ் நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம்.

16. மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனுமதிச் சீட்டுகள், திரைப் படச் சட்டம்.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

THIRU KODARDAS KALIDAS SHAH.

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (Chief Minister), in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections and Film Technology.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature and Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (Minister for Health), in-charge of Public Health, Medicine, Tamil Nadu Drainage and Water Board and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (Minister for Backward Classes), in-charge of Backward Classes, Information and Publicity, Registration, Ex-Servicemen, Prosperity Brigade, Youth Service Corps Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM (Minister for Public Works), in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Progamme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN (Minister for Industries), in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA (Minister for Revenue), in-charge of Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Commercial Taxes, Prohibition and Excise Revenues and Waqfs.

8. THE HON. THIRU SI. PA. ADITANAR (Minister for Agriculture), in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Animal Husbandry, Agro-Engineering Wing, Agro-Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM (Minister for Local Administration), in charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY (Minister for Food and Co-operation), in-charge of Food, Co-operation and Agricultural Refinance.

11. THE HON. THIRU K. RAJARAM (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN (Minister for Electricity), in-charge of Electricity, Legislation on Money lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

16. THE HON. THIRU N. RAJANGAM (Minister for Harijan Welfare), in-charge of Harijan Welfare, Indians Overseas and Refugees of Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

# தமிழ் நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

**பேரவைத் துணைத் தலைவர்.**

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. செ. கந்தப்பன்.
2. புலவர் சி. பழனிச்சாமி.
3. திரு. கே. பி. கந்தசாமி.
4. திரு. சி. வே. வேலப்பன்.
5. திரு. ஜே. ஜேம்ஸ்.
6. திரு. சோ. அழகர்சாமி.

**சட்டப் பேரவைச் செயலாளர்.**

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்.**

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

**உதவிச் செயலாளர்கள்.**

திரு. த. இராதாகிருஷ்ணன்.

திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. கே. சுந்தரராசன்.

**எஸ்டேட் அதிகாரி.**

திரு. பால. கு. கந்தசாமி.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ் நாடு சட்டப் பேரவை
உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். எ. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ. வ.) |
| 14 ஆதித்தனர், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். | வீரபாண்டி. |
| 19 ஆறுமுகம், திரு. சி. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. | விளாத்திக்குளம். |
| 21 இராசகோபால், திரு. க. மு. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. | வந்தவாசி. |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். | பெரம்பலூர் (செ. வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | கிணத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். | பேஸின் பிரிட்ஜ் |
| 48 கதிரவன், திரு. கா. மு. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்) | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. அ. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. | திருவரம்பூர். |
| 61 கார்த்திகேசன், திரு. வீ. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். | உதனப்பள்ளி |
| 75 கோபால், திரு. எம். | குன்னத்தூர் (செ. வ ). |
| 76 கோபால், திரு. கே. பி. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. | கந்தர்வகோட்டை |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு |
| 81 கோவை செழியன், திரு. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ். கே. | இராமநாதபுரம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனார்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | ஏற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. ஏ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. ஏ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. ஏ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. கி. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஓமலூர். (செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோணையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை-மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. ஏ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. ஏ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், திரு. க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ.) |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 158 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 பரந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 பாலையா, திரு. எ. | கொளத்தூர். |
| 180 பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 பெரியசாமி, திரு. தி. ஓ. | அவிநாசி. |
| 182 பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில் |
| 183 பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 189 மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |
| 191 மதியழகன், திரு. கே.எ. | ஆயிரம் விளக்கு. |
| 192 மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமனாதபுரம் மாவட்டம்) |
| 198 மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 ரங்கனாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 ராஜா, திரு. எ. எம். | பவானி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 220 ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். ஏ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. ஏ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர், எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.
2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.
3 திரு. கோவிந்த சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1974 ஆகஸ்ட் 23.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9-05 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

**முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. குஞ்சன் நாடார் அவர்கள் மறைவு குறித்து.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1962-ஆம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு சட்டப் பேரவையில் உறுப்பினராக இருந்த திரு. ஏ. குஞ்சன் நாடார் அவர்கள், 20—8—1974-ஆம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப் பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப்பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

[1974 ஆகஸ்ட் 23

## 2. தகவல் கோரல்.

### அவை நடவடிக்கைகளை சரியாக 9.00 மணிக்குத் தொடங்குவது குறித்து.

DR. H. V. HANDE : May I ask whether it will not be possible if we start exactly at 9.00 a.m. so that we can finish all questions and we will be doing our work on a clear basis. This is only a suggestion. Today we have delayed by about 6 minutes. Yesterday also it was like that. May I know whether efforts are being taken by the Hon. Speaker to see that we start our work by 9.00 a.m. so that we will be able to finish all questions. All of us can discuss this and come to a consensus.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது உறுப்பினர்கள் செய்ய வேண்டியது. பேரவைத் தலைவர் என்ன செய்ய முடியும்? உறுப்பினர்கள் நேரத்தில் வந்தால் செய்யலாம். உறுப்பினர்கள் நேரத்தில் வராததால் 'கோரம்' இல்லை. 'கோரம்' இல்லையென்றால், எப்படி அவையை நடத்த முடியும்? உறுப்பினர்கள் நேரத்தோடு வரவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள் வேண்டுகோள் விட்டால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'கோரம்' இல்லாததால் ஐந்து நிமிடங்கள் கழித்து சட்டசபை துவங்கியது என்று பத்திரிகையில் வருகிறது. அதை உறுப்பினர்கள் பார்த்திருக்கமாட்டார்களா?

ஐந்து நிமிடங்கள் அதிகமானாலும் எடுத்துக்கொண்டுதான் எல்லாக் கேள்விகளையும் முடிக்கிறோம். கேள்வி 258.



1974 ஆகஸ்ட் 23]

## 3. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு.

*258 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-ம் ஆண்டு முடிய ஆசிரியர் பயிற்சி பெற்று வேலை கிடைக்காமல் இருப்போர் எண்ணிக்கை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1973-ஆம் ஆண்டு முடிய ஆசிரியர் பயிற்சி பெற்று வேலையில்லாமல் இருப்போர்கள் எண்ணிக்கை 10,300.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருக்கும் ஆசிரியர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்க அரசாங்கம் என்ன திட்டம் வைத்திருக்கிறது. வேலைக்கு ஆசிரியர்களை நியமிக்கும்போது, ஸீனியாரிடி அடிப்படையில் எந்த ஆண்டு அவர்கள் தேர்வுபெற்று வேலையில்லாமல் இருக்கிறார்களோ அந்த ஆண்டிலிருந்து கணக்கிட்டு அதன் அடிப்படையில் வேலை கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1973-74-ஆம் ஆண்டில் மொத்தம் ஏறத்தாழ 21 ஆயிரம் ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருந்தார்கள். அதற்குப் பிறகு ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டம் என்பதன்கீழ் 10,100 பேருக்கு வேலை தேடிக் கொடுத்ததன் காரணமாக ஓரளவுக்கு இதனுடைய எண்ணிக்கை குறைந்தது. மேலும் ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருப்பதன் காரணமாக, பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்களை இந்த ஆண்டு சேர்க்காமல் நிறுத்தி விட்டோம். இந்த ஆண்டு ஓய்வு பெறுபவர்கள் எண்ணிக்கை அடிப்படையில், 3,600 பேருக்குப் புதிதாக வேலை கிடைக்கக் கூடும். ஆக இந்த வகையில் சிறுகச் சிறுக வேலையில்லா நிலையைப் போக்கும் முயற்சியினை அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. அரசாங்கப் பள்ளிகளில் வேலைக்கு எடுத்துக்

கொள்ளும்போது, அவர்கள் தேர்வு பெற்று வெளிவந்த காலத்தைக் கணக்கிட்டு அந்த ஸீனியாரிடி அடிப்படையில்தான் கொடுக்க வேண்டும் என்று மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரிகளுக் கெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்கவும், கல்வித் தரத்தை உயர்த்தவும் ஓராசிரியருக்கு 40 மாணவர்கள் என்று இருப்பதை, ஓராசிரியருக்கு 30 அல்லது 25 மாணவர்கள் என்ற அடிப்படையில் மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க அரசு ஆலோசிக்குமா? இதனால் வேலையில்லாதிருக்கும் ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அதிகரிப்பதோடு, மாணவர்களின் கல்வித் தரமும் அதிகமாகும் என்பதை அரசு கருத்திற்கொண்டு அதைப்பற்றி அரசு ஆலோசிக்குமா? பயிற்சிக் கல்லூரிகளில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் யோசனை கூறக் கூடாது.

திரு. கே. எ. வகாப் : யோசனை இல்லை. அப்படி அமுல்படுத்து வதனால் மாணவர்களின் தரம் உயரும் என்பதற்காகச் சொல்கிறேன். அப்படி அரசு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த ஏற்பாடுகளை எல்லாம் நிதி ஆதாரங்களைப் பொறுத்து செய்யவேண்டியிருக்கிறது. நிதி வசதி ஏராளமாக இருக்குமானால் 1 : 20, 1 : 30 என்று கூட வைக்கலாம். நிதி ஆதாரங்களை வைத்து ஆசிரியர்களின் எண்ணிக்கையை ஒதுக்குகிறோம். ஆகவே, அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் தான் வேலைவாய்ப்பு தர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, இந்த வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கும் பட்டதாரி ஆசிரியர்கள் எத்தனை பேர் இன்று வேலை தேடித்தரும் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டிருக் கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பட்டப்படிப்பு ஆசிரியர்களைப் பற்றிய விவரக் குறிப்பு இல்லை. செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப் பற்றிய விவரக் குறிப்புகள் தான் இருக்கின்றன.





டாக்டர் எச். வி. ஹாண்டே : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் ஆசிரியர்கள் மத்தியில் இருக்கும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையை இந்த அமைச்சரவை கவனத்தில் கொண்டு ஓரளவுக்கு தீர்த்துக் கொண்டு வருவதாகச் சொன்னார்கள். இதற்கு மூல காரணமே, மாணவர்கள்-ஆசிரியர்கள் ரேஷியோ அதிகமாக இருப்பது தான். அதை 1 : 30 என்று குறைக்கவேண்டுமென்று பல தடவை இந்த மன்றத்தில் சொல்லி, அமைச்சர் அவர்களும் அதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்த அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இதிலே இருக்கும் சங்கடங்களைத்தான் குறிப்பிட்டேன். இருக்கிற நிதி ஆதாரங்களைப் பொறுத்து செய்யவேண்டியிருக்கிறது. 30 மாணவர்கள் ஒரு ஆசிரியருக்கு என்று வைத்து விட்டால், மேற்கொண்டு வருகிற மாணவர்களுக்கு கல்வி வசதி அளிக்க முடியாமல் போய்விடும். ஆகவே தான் இருக்கிற ஆசிரியர்களை வைத்துக்கொண்டு வருகின்ற மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கவேண்டியிருக்கிறது. சில யிடங்களில் ஒரு ஆசிரியருக்கு 1 : 30, 1 : 35 என்ற அளவுக்கு வருகிறது. ஆசிரியர்கள்—மாணவர்கள் விகிதாசாரம் குறைக்க வேண்டுமென்ற அடிப்படையில் நாம் மெல்ல மெல்ல திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். நிதி ஆதாரங்கள் அதிகம் கிடைக்கிற போது அவற்றைச் செய்து வருகிறோம். சென்ற ஆண்டு அந்த 5 லட்சம் வேலைவாய்ப்பு என்ற திட்டத்தின் கீழ் 16,100 பேருக்கு வேலை வாய்ப்பு கொடுத்து, ஓரளவிற்கு அவர்களிடையே நிலவி இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கியிருக் கிறோம். அப்படிப்பட்ட திட்டத்தை மேலும் புதுப்பிக்கவேண்டு மென்று நாம் மத்திய அரசுக்கும் எழுதியிருக்கிறோம்.

## பள்ளித் தலைமை ஆசிரியர்கள்

*259 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்ப் புலவர்கள், பண்டிதர்களை உயர்நிலைப் பள்ளி களுக்குத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

[1974 ஆகஸ்ட் 23

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் தற்போது தலைமையாசிரியர்களை நியமிக்க ஏதாவது விதிமுறை இருக்கிறதா அல்லது எந்தத் தகுதியின் அடிப்படையில் நியமிக்கப்படுகிறார்கள்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இப்போது இருக்கிற விதிமுறைப்படி

They should possess a Degree in a Language and a Subject and a Degree in Teaching and Teaching Experience of Five Years after acquiring the Degree.

என்று இருக்கிறது. ஆக, பி.ஏ. பட்டம் பெற்றவர்களாக இருப்பார்களானால், பி.டி. டிகிரி பெற்றவர்களாக இருந்தால், அவர்களை தலைமையாசிரியர்களாக நியமிக்கலாம். ஆனால் 10-வது வகுப்பு வரை படித்து விட்டு, புலவர் பட்டம் பெற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கும் தலைமையாசிரியர் பதவி கொடுக்கவேண்டுமென்று கோரிக்கை இருந்து வருகிறது. புலவர் பட்டத்தையும் டிகிரியாக ஒப்புக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பல்கலைக்கழகத்திற்கு எழுதிக் கேட்டு இருக்கிறோம். பல்கலைக் கழகம் அதைப் பரிசீலித்து வருகிறது. பண்டிதர் பயிற்சி பெற்றவர்களும் பி.டி. ட்ரெயினிங் எடுத்துவிட்டால், ஒரு தனி பயிற்சி குறுகிய கால பயிற்சி 3 மாதம் எடுத்துவிட்டால், அந்தத் தகுதியின் அடிப்படையில் அவர்களை தலைமை ஆசிரியர்களாக கொண்டு வருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசு சார்பாக பல்கலைக்கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. பல்கலைக்கழகம் அதைப் பற்றி பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது. முடிவு இன்னும் தெரிவிக்கவில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, மலையாளத்தைத் தாய்மொழியாகக்கொண்டு பி.ஏ., பி.டி. பட்டம் பெற்றவர்கள் தலைமை ஆசிரியர்கள் பதவி கிடைக்காமல் இருக்கிறார்கள். குறிப்பாக, கன்னியாகுமரி ஜில்லாவில் அந்த நிலை இருக்கிறது. அது சம்பந்தமாக அவர்களுக்குத் தனிச்சலுகை அளிக்கும் வகையில் அரசங்கம் ஏதேனும் செய்யுமா?



1974 ஆகஸ்ட் 23]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அவர்கள் பி.டி. பட்டம் பெற்று 5 ஆண்டுகள் நிறைவு பெற்று இருந்தால் தலைமையாசிரியர்களாக ஆவதற்கு இப்போது இருக்கும் சட்டப்படி உரிமை இருக்கிறது. அப்படி எங்காவது தனிப்பட்ட முறையில் சங்கடம் இருக்குமானால் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் ஆராயலாம்.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, டிகிரி வாங்காமலேயே புலவர் பட்டம் பெற்றவர்கள், வித்வான் பட்டம் பெற்றவர்கள் நல்ல பயிற்சி தரும் திறமையுடன் நீண்டகாலம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நீண்டகாலம் பணியாற்றியுள்ள நல்ல தமிழ் ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர் பதவி பெற சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அதைத்தான் பல்கலைக்கழகம் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. நாம் பல்கலைக்கழகத்திற்கு எடுத்துத் தெரிவித்து இருக்கிறோம்.

to convert the Oriental Diploma into a Degree and permit such Degree Holders to the Shortened B.T. Sourse to qualify themselves as B.Ts.

என்ற அளவுக்கு நாம் பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்து இருக்கிறோம். பல்கலைக்கழகம் அதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, புலவர் பட்டம் பெற்றவர்கள் மூன்றாண்டு காலம் பயிற்சி பெற்று இருக்கவேண்டுமென்று விதி இருக்கிறது. முதலில் வேலையே கிடைக்காமல் இருக்கிறபோது, அவர்களுக்கு எங்கே மூன்றாண்டுகாலம் பயிற்சி பெற முடியும்? ஆகவே, அந்த மூன்றாண்டு காலம் பயிற்சி பெற்று இருக்கவேண்டுமென்ற விதியை ரத்து செய்து, புலவர் பட்டம் பெற்றவர்களுக்கும் வேலை கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, புலவர் பட்டம் பெற்றவர்களும் அவர்களுடைய தகுதிக்கேற்ப முதல்நிலை தமிழாசிரியர்கள், இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் என்று வேலைவாய்ப்பு பெற்று இருக்கிறார்கள். ஏற்கனவே பயிற்சி பெற்று இருக்கவேண்டுமென்பது ஆசிரியர்கள் பயிற்சி பெற

அவர்கள் செல்கிறபோது தான். பி.டி. ஆசிரியர்கள் பயிற்சி என்று வருகிறபோது, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் எடுத்து விட்டு, காலி இடங்கள் இருக்குமானால் இப்படி பயிற்சி இல்லாதவர்களையும் பயிற்சிக்கு எடுத்துக் கொள்வார்கள். பயிற்சி பெறுகிற கல்லூரியில் தான் இந்தச் சங்கடம் இருக்கிறதே தவிர ஆசிரியர்களாக நியமிப்பதில் அந்தச் சங்கடம் இருக்காது.

*** 260 வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி—சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டாம் வகுப்பு வரையுள்ள ஊராட்சி ஒன்றிய உயர்தரத் தொடக்கப்பள்ளிகளுக்கு பி.டி. (B.T.) பட்டம் பெற்ற ஆசிரியர்களே தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் செயற்குறிப்பு ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவரவர்களே, நாடெங்கும் இருக்கிற ஊராட்சி ஒன்றிய உயர்தொடக்கப்பள்ளிகளில் 8-வது வகுப்பு வரை இருக்கிறது. இந்த உயர்தொடக்கப்பள்ளிகளில் படித்த மாணவர்கள் உயர்நிலைப்பள்ளிகளுக்கு வருகிறார்கள். இதனால் உயர்நிலைப் பள்ளிகளின் தரம் குறைகிறது. ஆகவே, 8-வது வகுப்பு வரையிலுள்ள உயர்தொடக்கப்பள்ளிகளிலும் பி.டி. ஆசிரியர்களை நியமித்தால் நல்லது பி.டி. ஆசிரியர்கள் நிறையப் பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்தது போல் இருக்கும். ஆகவே, இந்தச் சிறிய திட்டத்தை அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பி.டி. பட்டம் பெற்றவர்களை தலைமையாசிரியர்களாக 8-வது வகுப்பு வரை உள்ள பள்ளிகளில் நியமிக்கவேண்டுமென்று கட்டாயமான விதி இல்லை. ஆனால் பி.டி. ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாக நியமிக்க வேண்டுமென்ற கொள்கையை



அரசாங்கம் மெல்ல, மெல்ல நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகளை மேற்கொண்டு இருக்கிறது. ஐந்து லட்சம் வேலை வாய்ப்பு என்ற திட்டத்தின் கீழ் மத்திய அரசு செகண்டரி கிரேட் ஆசிரியர்களை 900 தந்தார்கள். அந்த 900 இடங்களில், பி.டி. ஆசிரியர்களை தலைமையாசிரியர்களாகப் போட்டுக்கொள்கிறோம் என்று மத்திய அரசுக்கு நாம் எழுதினோம். மத்திய அரசாங்கமும் அதை ஏற்றுக்கொண்டது. அந்த அடிப்படையில் முதலில் 900 ஆசிரியர்களும், இரண்டாவது ஆண்டில் 900 ஆசிரியர்களும் பி.டி. ஆசிரியர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் உயர் தொடக்கப்பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். நாளடைவில் மெல்ல மெல்ல அந்த முறையை மேற்கொள்ளவேண்டுமென்று ஒரு எண்ணம் அரசின் கவனத்தில் இருக்கிறது.

**புலவர் சி. பழனிச்சாமி :** தலைவரவர்களே. தொடக்கக்கல்வி முதற்கொண்டு மாணவர்களுக்கு நல்ல தமிழ் அறிவு ஏற்படும் வகையில் ஒவ்வொரு உயர் துவக்கப்பள்ளிகளிலும் இரண்டாம் நிலை தமிழ் ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, உயர்தொடக்கப்பள்ளிகளில் 4 வகுப்புகளுக்கு மேல் இருக்கும் பள்ளிகளில் தமிழாசிரியர்களை நியமித்துக்கொள்ளலாம் என்ற அளவுக்கு சட்டம் விதி இருக்கிறது. ஆகவே, இருக்கின்ற ஆசிரியர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும், மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தும் அது வழங்கப்படுகிறது.

**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, பட்டதாரி ஆசிரியர்களை நடுநிலைப்பள்ளிகளில் நியமிப்பது என்ற திட்டம் 10 ஆண்டு காலத்திற்கு முன்பே அரசாங்கம் கொண்டு வந்தது. ஆனால் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இந்த அரசாங்கம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு நியமித்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் இந்த வேலையில்லாத் திண்டாட்ட காலத்தில் அங்கே ஆசிரியர்களாக இருக்க ஒப்புக்கொள்கிறார்கள். வெளியே உயர் நிலைப் பள்ளிகளில் கிடைத்து விட்டால் போய்விடுகிறார்கள். ஆகவே, தொடர்ந்து பட்டதாரி ஆசிரியர்கள் நடுநிலைப்பள்ளிகளில் ஒழுங்காகப் பணி செய்ய ஊக்குவிக்கும் வகையில் அதிகமாக சம்பளம் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதே சம்பளத்தைத்தான் அவர்களுக்கு அங்கும் தருகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அது நிதி ஆதாரங்களைப் பொறுத்து இருக்கிறது. இப்போதுள்ள நிதி நெருக்கடியில் நாம் அப்படிச் செய்வதற்கு இல்லை. பி.டி. ஆசிரியர்களை தலைமையாசிரியர்களாக நியமிக்கும் முயற்சியை தற்போது மேற்கொண்டு இருக்கிறோம். அவர்களுக்கு வேறு பல வசதி வாய்ப்புகள் செய்து தருவது பற்றி பின்னர் ஆராயலாம்.

பட்டப்படிப்பு பெற்ற ஆசிரியர்கள் ஊதியம்

* 261 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆசிரியர்களாகப் பணியாற்றிக்கொண்டே புலவர் அல்லது பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு, பெற்றுள்ள கல்வித் தகுதிக்கு ஏற்ப சம்பளம் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆசிரியர்களாகப் பணியாற்றிக் கொண்டே புலவர் பட்டம் பெற்றவர்களுக்கு கல்வித் தகுதிக்கேற்ப ஊதியம் வழங்க கருத்து ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, பணியாற்றிக் கொண்டே பட்டம் பெறுவது அவர்களுடைய திறமையைக் காட்டுகிறது. ஆகவே, இனிமேலாவது அரசாங்கம் ஆசிரியர்கள் பெற்றுள்ள கல்வித் தகுதிக்கேற்ப சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பெற்றிருக்கிற தகுதிக்கேற்ப சம்பளம் வழங்குவது என்பது சரியாக இருக்காது. வேலை காலி ஏற்படும்போது அதிகக் கல்வித் தகுதி பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. புலவர் பட்டம் பெற்றவர்கள், பி.டி. பட்டம் பெற்றவர்களுக்கு முதலிடம்





கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இடத்திற்கேற்ப சம்பளம்தான் வழங்கப்படலாமே தவிர, தகுதிக்கேற்ற சம்பளம் வழங்கவேண்டும் என்பது சரியல்ல.

*Special Pay for Professors in aided Colleges.*

* 262 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to State whether the Professors in aided Colleges, with Ph. D. Degrees are also allowed the Special Allowance of Rs. 100 per month?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இது அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் க. நாகராஜன்: தலைவரவர்களே, கால்நடை மருத்துவ மனை, வேளாண்மைக் கல்லூரி, இதர கல்லூரிகளில் ஆராய்ச்சி பணியாற்றுகின்றவர்களாக இருந்தாலும் சரி, பாடம் சொல்லிக் கொடுப்பவர்களாக, இருந்தாலும் சரி, எல்லோருக்கும் சிறப்பு ஊதியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரு குறிப்பிட்ட பகுதியில் பணியாற்றுகின்றவர்கள் டாக்டர் பட்டம் பெற்றவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்றிருந்தால், அந்தப் பகுதிகளில் பணியாற்றுகின்றவர்களுக்கு சிறப்பு ஊதியம் வழங்கப் படுவதில்லை. மேல் பட்டப் படிப்பு இருந்தால் போதும் என்ற இடத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் பணியாற்றினால் அவர்களுக்கு 100 ரூபாய் தனி ஊதியம் தருகின்ற முறை அரசாங்கக் கல்லூரிகளில் நடைமுறையில் இருக்கிறது. தனியார் கல்லூரிகளில் இப்படிப்பட்ட இடங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு இந்தத் தனி ஊதியம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் நிதித் துறையைக் கலந்து, முடிவு செய்யப்படும்.

டாக்டர் க. நாகராஜன்: தலைவரவர்களே, டீச்சிங் சைடில் இருப்பவர்களுக்கும், ரிசர்ச் சைடில் இருப்பவர்களுக்கும் தனி ஊதியம் வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசிடம் இல்லை. தனியாக ஆராய வேண்டும்.

[1974 ஆகஸ்ட் 23

## உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்பு

*263 வினு—டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பயிற்சி பெற்ற உடற்பயிற்சிக் கல்வி ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உயர்நிலைப் பள்ளிகளில் 250 மாணவர்களுக்கு ஓர் உடற்பயிற்சி ஆசிரியர் விதம் நியமிக்கப்படுகின்றனர். புதியதாகத் திறக்கப்படும் உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் எண்ணிக்கை 250-க்கு குறைவாக இருப்பினும் ஓர் உடற்பயிற்சி ஆசிரியர் நியமிக்கப்படுகிருர். உயர் தொடக்கப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை 400-க்கு மேல் இருந்து போதுமான விளையாட்டு மைதானமும் இருந்தால் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்றனர். ஆனுல் முன்சொன்னவாறு உயர்நிலைப் பள்ளிகளிலும் உயர்தொடக்கப் பள்ளிகளிலும் ஏற்படுத்தப்படும் புதிய உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் அந்தந்த ஆண்டு திட்ட வேலைகளின் கீழ் ஏற்படுத்தப் படும் பல்வேறு வகை ஆசிரியர் பதவிகளின் மொத்த எண்ணிக்கைக்குள்தான் ஏற்படுத்தப்படுகின்றன.

1973-74-ம் ஆண்டில் "ஐந்து லட்சம் பேருக்கான வேலை" திட்டத்தின் கீழ் 498 இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள்—195 பேர் உயர்தொடக்கப்பள்ளிகளிலும், 303 பேர் உயர்நிலைப் பள்ளிகளிலும்—நியமிக்கப்பட்டதுடன் உயர்நிலைப்பள்ளிகளில் ஆறு முதல்நிலை உடற்பயிற்சி ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அனைவருக்கும் 1974-75-ம் ஆண்டில் முறையான உடற்பயிற்சி ஆசிரியர் பதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

Dr. H. V. HANDE: Sir, the Hon. Minister has given us an indication of the *ad hoc* arrangements made to rehabilitate the trainees. But in view of the fact that the physical training teachers are not able to get jobs anywhere else except in the Government or private institutions, whether the Government are prepared to find out a permanent solution to the problem by regulating the intake and utilisation of these teachers?



1974 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவதைப்போன்ற எண்ணம் அரசுக்கு இருந்துவருகிறது. ஆண்டுக்காண்டு பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு போதுமான வேலை வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. ஆகவே, அந்த எண்ணிக்கையை குறைக்கலாமா என்பதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. அடுத்தாண்டிலிருந்து அப்படிச் செய்யலாமா என்று ஆலோசனை செய்துகொண்டிருக்கிருேம்.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் பயிற்சி பெற்ற பலர் இன்னும் வேலை கிடைக்காமல் இருக்கிருர்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கின்றபோது, அவர்கள் தேர்ச்சி பெற்ற வருடத்தைக் கணக்கிட்டு, சீனியாரிட்டிபடி வேலை கொடுத்தால் நல்லது. அப்படி இல்லாமல் 1971-ல் பாஸ் செய்தவர்கள் இருக்கும்போது 1972-ல் பாஸ் செய்தவர்களுக்கு வேலைகொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்த முறையை நீக்கி சீனியாரிட்டிப்படி கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அதற்கென்று ஒரு வரன்முறையை வகுத்திருக்கிருேம். அதற்கேற்ப நியமிக்க அந்தந்த பள்ளி நிர்வாகத்தினர் முன்வந்தால் அதற்கு இடமளிக்கப்படுகிறது. மொத்தம் 5,000-க்கு மேற்பட்டவர்கள் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கான பயிற்சி பெற்றவர்கள் இருக்கிருர்கள். அதுமட்டுமல்லாமல் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 750 பேர் உடற்பயிற்சி பெற்று வெளியேறுகிருர்கள். ஆகவே தான் உடற்பயிற்சிக்கு சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைப்பது பற்றி யோசனை செய்துகொண்டிருக்கிருேம்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, பள்ளிகளில் உடற்பயிற்சி வகுப்பு என்று ஒன்று இருக்கிறதே தவிர, பொதுவாக 100-க்கு 60 பேர்கள்தான் அந்த வகுப்புக்குச் செல்கிருர்கள். உடற்பயிற்சியை கட்டாயப் பாடமாக ஆக்கி, எல்லோரும் உடற்பயிற்சி பெற்றவர்கள் ஆகவேண்டும் என்ற நிலையை உருவாக்கினுல் இன்னும் பலருக்கு வேலைவாய்ப்பு ஏற்படும். இப்போது மருத்துவ கல்லூரி போன்ற வகுப்புகளுக்குப் போகும்போது அதற்கு மார்க் போடுகிருர்கள். ஆகவே, உடற்பயிற்சியை ஒரு கம்பல்சரி எஜுகேஷனுகக் கொண்டுவர அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

[1974 ஆகஸ்ட் 23

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளிகளில் உடற்பயிற்சி வகுப்பு கட்டாயமாக இருக்கிறது. மாணவர்களைப் பொறுத்தவரையில், அதற்கென்று தேர்வு இல்லை. தேர்வுபெற்றுதான் அடுத்த வகுப்புக்குப் போகின்ற நிலை இல்லாமலிருப்பதால் மாணவர்களின் அக்கறையும் ஆர்வமும் இதில் குறைந்திருக்கிறது. அதற்கும் ஒரு தகுதி வைக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு இருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில் இந்த முறையை அமுல் நடத்துவதுபற்றி முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இதிலே ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கை மார்க் பெற்று, அடுத்த வகுப்புக்கு அனுப்புகின்ற முறை இருந்தால் மாணவர்களுக்கு அக்கறையும் ஆர்வமும் ஏற்படும். அதுபற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

*Admission in Institute of Catering Technology.*

*264 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether the minimum qualifications for admission into the Institute of Catering Technology in Adyar, Madras has been raised from the 1974-75 academic year onwards; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உணவு விடுதி நிர்வாகம் மற்றும் படைத்தல் தொழில் நுட்பயியலில் மூன்றாண்டு பட்டப்படிப்பிற்கு இடைநிலை பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்றிருந்த விதியை மாற்றி புகுமுக வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என 1974-75-லிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. சிற்றுண்டிச்சாலை மற்றும் செயல்மேடைதொழில் பயிற்சிகளுக்கு குறைந்த அளவு கல்வி நுழைவுத் தகுதி எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்பதனை இடைநிலை பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என 1974-75-லிருந்து உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏனைய பயிற்சிகளுக்கு மாற்றம் ஏதும் இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, இந்த ஓட்டல் தொழில் சம்பந்தப்பட்ட கல்விக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதுபற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதிலே



1974 ஆகஸ்ட் 23]

சமையல் கலையும் உண்டு என்று நினைக்கிறேன். பொதுவாக பெண்களை விட ஆண்கள்தான் சமையல் கலையில் வல்லவர்களாக இருக்கிறார்கள். அதனால்தான் நளபாகம் என்று சொல்கிறார்கள். ஆகவே, அதில் ஆண்களுக்கு அதிக இடம் ஒதுக்கிக் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது பெரும்பாலானவர்கள் ஆண்களாகத்தான் இருக்கிறார்கள். 'காட்டரிங் இன்ஸ்டிடியூஷன்'களில் பெண்களின் எண்ணிக்கை குறைவுதான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இதிலே பயிற்சி பெறுகின்ற மாணவர்களுக்கு எவ்வளவு உதவித் தொகை வழங்கப்படுகிறது? இல்லை என்றால் இனிமேல் உதவித் தொகை வழங்க அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஏதோ ஒரு வகையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அது பற்றிய முழு விபரம் இல்லை. தனிக்கேள்வி பேடவும்.

*Pattanamkal Irrigation Scheme.*

*265 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the total number of acreage reclaimed so far under the Pattanamkal Irrigation Scheme in Kanyakumari district?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள சித்தாறு பட்டணம் கால்வாய் திட்டத்தினால் இது வரையில் 9,354 ஏக்கரா நிலங்கள் பயனடைந்துள்ளன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன்படுவதற்கான ஒருசில இடங்கள் இருக்கின்றன. புதிதாக வாய்க்கால்கள் வெட்டப்படாத பகுதிகள் இருக்கின்றன. நிலம் திருத்துவதற்கு போதிய கடன் உதவி கொடுக்கப்படவில்லை. ஆகையால் தக்காவி லோன் போன்ற ஏதாவது லோன் கொடுத்து, அதிக நிலப் பரப்பை சாகுபடிக்கு கொண்டுவர, ஏற்பாடு செய்யப்படுமா?

[1974 ஆகஸ்ட் 23

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நிலங்களுக்கு மத்தியில் வாய்க்கால் வெட்ட நில ஆர்ஜிதம் செய்ய தகராறு ஏற்பட்டு, நீதிமன்றத்திற்குக் கூட சென்றிருக்கிறார்கள். அது முடிந்த பிறகுதான் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க முடியும்.

*Devicode Branch Channel.*

*266 Q.—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that water has not been let out yet at the newly extended Devicode branch channel from Periavilai junction to Ananvilai ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

(முற்பகல் 9-30)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இந்த வாய்க்காலிலே போன தடவை தண்ணீர் விடவில்லை. இந்தத் தடவையும் தண்ணீர் விடவில்லை. இங்கு வந்திருக்கிற கேள்விக்காக பதிலில் எந்த மாசம் விடப்பட்டிருக்கிறது என்று அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தண்ணீர் விடவில்லை என்றுதான் பதில் சொன்னேன். விடாததற்குக் காரணம் அவர்கள் நிலத்தைத் திருத்தி நஞ்சையாக ஆக்காததுதான். பணப்பயிரிடும் நிலமாகவே வைத்திருக்கிறார்கள். அதைத் திருத்தி நஞ்சையாக்கினால் உடனே தண்ணீர் விடுவதுபற்றி ஆட்சேபணை இல்லை.

வரதமாநதி நீர்த்தேக்கத் திட்டம்.

*267 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டத்திலுள்ள வரதமா நதி நீர்த்தேக்கத் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) இத்திட்டத்தினால் எவ்வளவு ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்?



1974 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ரூ. 103.50 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் இத்திட்டத்தை மேற்கொள்ள அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

(இ) மொத்தம் 5,202 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஆயக்கட்டு பகுதி இதன்மூலம் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் 4,743 ஏகருக்கு பாசன உறுதியும், இதுவரை பாசன வசதி பெறுமலுள்ள 459 ஏக்கருக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அரசாங்கம் இந்த திட்டத்திற்கு எப்போது ஒப்புதல் அளித்தது? இந்தப் பணி தொடங்கப்படடுவிட்டதா? இல்லையெனில் எப்போது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய வாட்டர் அண்டு பவர் கமிஷன் ஒப்புதல் 7—1—1974 ஆணை 52 இன் கீழ் அளிக்கப்பட்டுவிட்டது. அங்கிருந்து தொழில் நுட்ப உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

புலவர் சி. பழனிச்சாமி: வரதமாநதி நீர்த்தேக்கத்தில் இருந்து—ஐயன்குளம் போன்ற கண்மாய்களுக்கு தண்ணீர் விட கிளை வாய்க்கால்கள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இந்த நீர்த்தேக்கத்தில் இருந்து சக்கிலியன் அணைக்கட்டு—கோதை அணைக்கட்டு—கள்ளை அணைக்கட்டு—உப்புக்கட்டு அணைக்கட்டு போன்றவற்றுக்குத் தண்ணீர் அளிக்கப்படுமே தவிர வேறு எதுவும் இதில் அடங்காது.

குளித்தலை-முசிறி இணைப்புப் பாலம்.

*268 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும் வகையில் காவிரி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) அப்பணி எந்த ஆண்டு பூர்த்தியாகும்?

[1974 ஆகஸ்ட் 23

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) அஸ்திவார வேலைகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

(இ) இப்பாலத்தை 1975 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதிக்குள் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: ஆரம்பத்தில் போடப்பட்ட மதிப்பீடு எவ்வளவு? இப்போது ஏதாவது உயர்த்தப்பட்டிருக்கிறதா? வேலையைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆரம்பத்தில் 80 லட்சம் ரூபாய் செலவில் இப்பாலம் கட்ட 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் மதிப்பிடப்பட்டது. பின்னர் 1972 ஜூன் மாதத்தில் இதன் மதிப்பீடு 95 லட்சமாக திருத்தி ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இன்வெஸ்டிகேஷன் மூலம் சில விவரங்கள் விடப்பட்டிருக்கின்றன என்பதைக் கண்டு இதுபற்றிய முழுவிவரமும் சேகரிக்க அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

திரு. பு. செ. முத்துச்செல்வன்: முசிறி-குளித்தலை பாலத்திற்கு இப்போது அதிகமாகச் செலவழிக்க வேண்டிய நிலை இருப்பதால் மைய அரசிடம் இருந்து ஏதாவது மானியம் பெற உத்தேசிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மைய அரசிடம் இருந்து—மானியம் கூட இல்லை—கடனாகத் தருவார்கள் என்று எதிர்பார்த்து இப்போது தமிழக அரசு தனது சொந்த நிதியில் இருந்து செலவு செய்துகொண்டு வருகிறது.

திரு. எஸ். வடிவேல்: விடுதலை வீரர்கள்—அறிஞர் அண்ணா போன்றவர்களின் பெயர்கள் எல்லாம் வைக்கப்படுகிறபோது—சக்கிலியன் அணைக்கட்டு என்று பெயர் இருப்பதாகச் சொன்னார்களே. இந்தப் பெயரையே மாற்ற முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது போன கேள்வி சம்பந்தப்பட்ட துணைக் கேள்வியாக அமைகிறது. நான் இப்போது இருக்கிற பெயரைப் படித்தேன். மாற்றுவது பற்றி யோசிக்கலாம்.



1974 ஆகஸ்ட் 23]

மணியாச்சி-ஒட்டநத்தம் சாலை.

*269 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ஒட்டப்பிடாரம் துணை தாலுக்காவில் மணியாச்சியிலிருந்து ஒட்டநத்தம் செல்லும் ஊராட்சி சாலை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் கொண்டு வரப்பட்டுள்ளதா? அதன் பணி துவக்கப்பட்டதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) ஆம். இச்சாலையை கப்பிச்சாலையாக்கும் பணி தொடங்க இருக்கிறது.

காட்ராம்பாக்கம்-கீழ்ப்புத்துப்பட்டு சாலை.

*370 வினா—திரு. ந. முத்துவேல்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வானூர் தொகுதியில் காட்ராம்பாக்கம்-கீழ்ப்புத்துப்பட்டு சாலையை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையே மேற்கொள்ள அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) & (இ) இல்லை.

புதுக்கோட்டை மாளிகை.

*271 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையிலுள்ள புதுக்கோட்டை ராஜா மாளிகையை அரசு வாங்க திட்டமிட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) & (இ) 14—1—1974-லிருந்து புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்டதன் விளைவாக, புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தையும், புதுக்கோட்டையிலுள்ள ஏனைய அரசு அலுவலகங்களையும் அமைப்பதற்காக, புதுக்கோட்டை நகரில் முன்னாள் புதுக்கோட்டை மன்னருக்குச் சொந்தமான நகர நில அளவை எண் 1985-ல் உள்ள 99.72 ஏக்கர் பரப்புள்ள நிலத்தையும், அங்குள்ள கட்டடங்களையும், 1894 ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தின் கீழ், கையகப்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, புதுக்கோட்டை ராஜாவுக்குச் சொந்தமான இடத்தை அரசாங்கம் எவ்வளவு ரூபாய்க்குப் பெறத் திட்டமிட்டுள்ளது? வேறு இடங்களில் அரசுக்குச் சொந்தமாக நிறைய இடம் இருக்கிறதே அந்த இடங்களில் புதியதாக கட்டடம் கட்ட அரசாங்கம் ஏன் முயற்சி எடுக்கவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** நிலத்தைக் கையகப்படுத்த சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உடனடியாக மாவட்ட தலைநகராக்க வேண்டி இருந்ததால் கட்டடத்தோடு கூடிய 100 ஏக்கராவுக்கு நிலத்தைக் கையகப்படுத்த ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த ஆர்ஜித சட்டப்படி மார்க்கெட் வால்யு கொடுக்கப்படுமா? நாமினல் காம்பென்சேஷன்தான் கொடுக்கப்பட இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்போது நாமினல் ரேட் கொடுக்க முடியாது என்று நான் நினைக்கிறேன். அந்தச் சட்டப்படி எவ்வளவு வருகிறதோ அதைத்தான் கொடுக்க வேண்டும்.

**திரு. எம். தேவராசன்:** ஜோத்பூர் மகாராஜாவின் அரண்மனையை வாங்கியதால் நீலகிரியில் அரண்மூர் பாலஸ் நமக்கு உபயோகமாக இருக்கிறது. அதைப்போல் மைசூர் பாலசும் விற்பனைக்கு வந்திருக்கிறதே. அதையும் வாங்கிப்போட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மகாராஜாக்களின் இடத்தை வாங்குவதற்கு நாம் மகாராஜாக்கள் இல்லை.

*Raids in Cinema Theatres.*

* 272 Q.—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) the number of raids made by the staff of the Sales-Tax Department in Cinema Theatres in the Madras City during 1972–73 during the course of the shows; and

(b) the number of cases detected, that is the number of persons who did not have proper tickets?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) 1972-73-ல் சென்னை மாநகரில் உள்ள திரைப்பட அரங்குகளில் திரைப்படம் காட்டப்படும்போது விற்பனை வரித் துறைப் பணியாளர்கள் 190 முறை திடீர்ச் சோதனை நடத்தினர்.

(இ) முறையான நுழைவு சீட்டு இன்றி ஆட்களை அனுமதித்த நேர்வு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. ஏனைய முறைகேடுகள் குறித்த நான்கு நேர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்தத் தியேட்டர்களில் வரி ஏய்ப்பினால்தான் பெரும்பான்மையான லாபம் அவர்களுக்கு. இதனால் நகர-பஞ்சாயத்துக்களுடைய வருமானம் குறைகிறது. இப்போது இருக்கிற செக்கிங் முறையை மாற்றி பஞ்சாயத்து யூனியன் கமிஷனர், எக்சிக்யூடிவ் ஆபீசர்களுக்கும் சோதனையிட அதிகாரம் கொடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இப்போதிருக்கிற சட்டப்படியே பி.டி.ஓ. சோதனையிடலாம்—தாசில்தார் சோதனையிடலாம், பஞ்சாயத்து கமிஷனர்கள் சோதனையிடலாம். அவர்கள் கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டால் மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோன்ற வருமான இழப்பு அவர்களுக்கு ஏற்படாது.

**திரு. கோவை செழியன்:** இந்தத் திரையரங்கு—தமாஷா வரியின் மூலம் ஏறக்குறைய 8 கோடி ரூபாய் வருலாகாமல்—ஏமாற்றப்படுகிறது என்று முதலமைச்சர் அவர்களே சொல்லி

யிருக்கிறார்களே, இந்தத் திரையரங்குக் காரர்கள் டிக்கெட்டுக்குள்ள பணத்தை வாங்கிக்கொண்டு உள்ளே அனுப்பிவிடுகிறார்கள்—இதனால் அரசாங்கத்திற்கும் நட்டம்—டிஸ்டரிப்யூடர்களுக்கும் நட்டம் ஏற்படுகிறது. ஆகவே இந்தத் திரையரங்குகளை லோகல் போர்டு அதிகாரிகளும் போலீசாரும் சென்று சோதனையிடுவதற்கும்—தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால் கடுமையான தண்டனை அளிப்பதற்கும் வழிவகை செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இப்போதிருக்கிற சட்டப்படியே பி.டி.ஓ., தாசில்தார், எக்சிக்யூடிவ் ஆபீசர், கமிஷனர் போன்றவர்கள் சென்று சோதனையிட வாய்ப்பிருக்கிறது. போலீசாருக்குக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். இலாக்கா மூலமாகவும் ஸ்பெஷல் ஸ்க்வாட் சென்று சோதனையிட்டு—தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்றுதான் பதில் அளித்திருக்கிறேன்.

**திரு. நா. வீராசாமி:** இப்போது ஸ்பெஷல் ஸ்க்வாடு போட்டு சோதனைகள் செய்தாலும் கூட அடிக்கடி இதுபோன்ற ஏமாற்றங்களைச் செய்கிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இதை இன்னும் தீவிரமாகத் தடுக்கக் கூடிய வகையில் எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்களை—நான்—அபிஷியல் கமிட்டியாக அங்கங்கே போட்டு இந்தச் சோதனைகளை நடத்துவதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** இந்தக் குழு வரி ஏய்ப்பைச் கண்டுபிடிப்பதற்குப் பதிலாக சினிமா பார்க்கப் போய் விட்டால் ஆபத்தாகிவிடும்.

**திரு. கே. எ. வகாப்:** இந்த வரி ஏய்க்கப்படுகிறது என்று சொன்னார்கள். முன்பே கூறியிருக்கிறேன். நகராட்சி சேர்மென், யூனியன் சேர்மென், ஊராட்சித் தலைவர்—என்கிற இந்த அளவுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்தால் எந்தவிதமான துஷ்பிரயோகமும் செய்யமாட்டார்கள். அந்த அளவுக்குச் செய்வதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** இப்பொழுதே முனிசிபல் சேர்மென் சினிமாவுக்குப் போகிறார்கள். எப்படி போகிறார்கள் என்ற விவரம் மாண்புமிகு உறுப்பினருக்கே தெரியும். அவர்கள் பார்க்கிறபொழுது, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொன்னால் நடவடிக்கை எடுப்பார்கள், எந்த முனிசிபல் சேர்மனும் நடவடிக்கை எடுக்கப் போக மாட்டார்கள். ஏனென்றால் ஓட்டு வாங்கவேண்டும். அதற்காக அதிகாரிகளைக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னால் நடவடிக்கை எடுப்பார்கள். அவர்கள் சொல்கிற குறைபாடு என்னவென்றால், கமர்ஷியல் டாக்ஸ் டிபார்ட்மெண்டில் எடுப்பதைப் போன்ற ஒரு ஃபாலோ-அப் அதிகாரம் எங்களுக்கு இல்லை என்பதுதான். அந்த அதிகாரம் கொடுத்தால், நாங்களும் நடவடிக்கை எடுப்போம் என்று அவர்கள் சொல்வதால், அரசாங்கம் அதையும் பரிசீலித்து வருகிறது, கொடுக்கலாமா என்பது பற்றி. ஆனால், நடக்கவிருக்கிற பேச்சு வார்த்தையிலே, வரி ஏய்ப்பு இல்லாத நிலைமை ஏற்படும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே, நாளை வரை பொறுத்திருந்து பார்ப்பது நல்லது.

**திரு. சொ. காவேரி மணியம்:** பேரவைத் தலைவரவர்களே, பெரும்பாலாக, டூரிங் டாக்கீஸ்களில் இம்மாதிரி வரி ஏய்ப்புகள் நடக்கின்றன. அதனைத் தடுக்க, ஏதாவது ஃபிக்ஸட் அமௌன்டை ஆரம்பத்திலேயே கட்டும்படியாகச் சொல்ல அரசாங்கத்திலே செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** டூரிங் டாக்கீஸிலே மட்டுமல்ல. மாண்புமிகு உறுப்பினர் இருக்கிற மதுரையிலே கூட, வரி ஏய்ப்பு நடைபெற்றிருக்கிறது. நாங்களும் கண்டு பிடித்திருக்கிறோம். வரி ஏய்ப்பைத் தடுக்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் கொள்கை.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** அனைத்துக் கட்சி உறுப்பினர்களைக் கொண்ட குழுவை நியமித்தால் சினிமா பார்க்கப் போய் விடுவார்களோ என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். சினிமாவுக்குப் போகாத உறுப்பினர்களைக் கொண்டு கண்டு பிடிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சினிமாவுக்குப் போகாதவர்களுக்கு அங்கு என்ன வேலை ?

திரு. ஆலடி. அருணா: கேளிக்கை வரி மூலம் ஆண்டுக்கு ரூ. 25 கோடி வசூலாக வேண்டியிருக்கிறது. ஆனால் ரூ. 13 கோடி தான் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 10 கோடிக்கு மேல் திரைப்பட அரங்கு உரிமையாளர்களால் ஏமாற்றப்படுகிறது என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி ஏமாற்றுகிற எத்தனை திரைப்பட அரங்கு உரிமையாளர்களது உரிமங்கள் நீக்கப்பட்டிருக்கின்றன, அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் இந்த மன்றத்திற்குத் தருவாரா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னது வரி ஏய்ப்பு நடக்கிறது, என்பது. அதனைத் தடுக்கத் தான் காட்சி வரி உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்கு அவர்கள் ஆட்சேபணை தெரிவித்து இருக்கிறார்கள். நேற்று முதலமைச்சர் அவர்கள் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். நாளையும் நடைபெறும். அதன் மூலமாக நல்லதொரு முடிவு ஏற்படும் என்று நம்புகிறேன்.

*Sale of pesticides.*

*276 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether it is a fact that the quality and price of pesticide chemicals marketed in the State are being regulated by the Tamil Nadu Agro-Industries Corporation ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், மார்க்கெட்டுக்கு எவ்வளவோ பூச்சி மருந்துகள் வருகின்றன. அவைகள் பஞ்சாயத்து யூனியன் மூலமாகவே விநியோகிக்கப்படுகின்றன. பூச்சி மருந்துகள் போட்டால் கூட, பூச்சிகள் சாவதில்லை. விலையையும் 3 மடங்கு, 4 மடங்கு ஏற்றிவிடுகிறார்கள். விவசாயிகளுக்கு அதிகக் கஷ்டம் இருப்பதன் காரணமாக, விலையையும் குறைத்து, பூச்சி மருந்து நல்லமுறையிலே இருக்கிறதா என்பதை டெஸ்ட் பண்ணி, பஞ்சாயத்து யூனியன் மூலம் விநியோகிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்தக் கேள்வி அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்—வேளாண்மைத் தொழில் கழகத்தைப் பற்றியது. நண்பர் அவர்கள் குவாலிட்டி கன்ட்ரோல்—தரத்தைப் பற்றி கேட்டார்கள். தரத்தைப் பரிசோதனை செய்வதற்கு ஆய்வுக் கூடங்கள் 7 இடங்களிலே இருக்கின்றன. கோவை, சேலம், திருச்சி, காஞ்சிபுரம், ஆடுதுறை, மதுரை, கோயில்பட்டி ஆகிய 7 இடங்களிலிருக்கின்றன. அங்கே, ஏறத்தாழ 10,000-க்கு மேல் 20,000 வரை மாதிரி எடுத்து, சோதனைகள் செய்யப்படுகின்றன. தவறு செய்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. Insecticide Act என்ற ஒரு சட்டம் கூட இருக்கிறது.

விலையைப் பற்றி சொன்னார்கள். விலை, டெண்டர் மூலமாக, ஒப்பந்தப் புள்ளியின் மூலமாக, கேட்கப்பட்டு, எது குறைந்த விலையாக இருக்கிறதோ, அந்த விலைக்கு வாங்கப்படுகிறது.

பூச்சி மருந்துகள் தெளிப்பதற்காகும் செலவு.

* 274 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயப் பயிர்களுக்குத் தெளிக்கப்படும் பூச்சி மருந்துகளுக்கென மத்திய அரசு மானியம் ஏதேனும் வழங்கி வருகின்றதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஆம். பருத்தி, ஏற்றுமதி ரக வாழை, பருப்பு வகைகள் (பல்சஸ்) ஆகியவற்றிற்கு, தயாரிப்பதற்கு, பூச்சி மருந்துக்கு மத்திய அரசு உதவி அளிக்கிறது.

* 275 வினா—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி வட்டாரத்தில் 1971–72, 1972–73 ஆம் ஆண்டுகளில் விமானம் மூலம் மருந்து தெளித்ததற்காக விவசாயிகளிடம் பணம் வசூல் செய்ய உத்தரவு இடப்பட்டுள்ளதா ?

[1974 ஆகஸ்ட் 23

(இ) ஆமெரில், ஏக்கருக்கு எவ்வளவு பணம் வசூலிக்க உத்திரவிடப்பட்டுள்ளது ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** 1971–72 இல் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 39.50 செலவு செய்யப்பட்டது. விவசாயிகளிடமிருந்து ரூ. 8.75 மட்டும் வசூலிக்கப்படுகிறது. 1972–73 இல் விமானத்தின் மூலம் மருந்து தெளிக்கப்படவில்லை.

*Pesticides testing laboratories.*

* 276 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether there is any proposal to set up more Pesticides Testing Laboratories in the State; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** தலைவரவர்களே, இல்லை. ஏற்கனவே 7 இடங்களில் இந்த மருந்து சோதனை ஆய்வுக் கூடங்கள் உள்ளன என்று சொன்னேன். அந்த எண்ணிக்கையைக் கூட்டுகின்ற செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

**திரு. கே. எ. வகாப்:** இந்தப் பூச்சிகளைக் கொல்வதற்காக அந்தப் பூச்சிகளையே உற்பத்தி செய்கின்ற முறை இருப்பதாகக் கூறப்படுகிறதே, இந்த முறையைப் பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்ய முனைந்திருக்கிறதா ? அல்லது, இனிமேலாவது முனையுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** மாண்புமிகு உறுப்பினர் 'பாரசைட்' பற்றிக் கூறுகிறார் என்று கருதுகிறேன். தென்னை மரங்கள், கரும்பு போன்றவைகளுக்கும் அந்த பாரசைட்டை தெளிப்பதற்கு, ஒட்டுண்ணி தயாரிப்பதற்கான கூடங்கள் தனியாக இருக்கின்றன.



1974 ஆகஸ்ட் 23]

## அரசூர் கோழிப் பண்ணைக் கட்டடம்.

*277 வினா—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கோவை அரசூரில் உள்ள கோழிப் பண்ணைக்காகக் கட்டிய கட்டடம் அதற்கெனப் பயன்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்:** இந்தக் கட்டிடம் பவுல்ட்ரி டெவலப்மென்ட் கார்ப்பரேஷன், கோழி மேம்பாட்டு கழகத்திடம் 17—4—1974 இல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அந்தக் கட்டடத்தை அது பயன்படுத்துவதாகத் தெரிவித்துள்ளது.

## அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*278 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் வட்டம், ஆத்தூர் தொகுதி ஜே. புதுக் கோட்டையில் அரிசனங்கள் எத்தனை பேருக்கு இது வரை வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன ?

(இ) இந்த ஆண்டில், அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) மதுரை மாவட்டம் திண்டுக்கல் வட்டம் ஆத்தூர் தொகுதி ஜே. புதுக்கோட்டையில் 45 அரிசனங்கள் குடும்பத்திற்கு வீட்டுமனை பட்டாக்கள் வழங்கப் பட்டன.

(இ) இந்த ஆண்டில் மேற்படி அரிசனக் குடும்பங்களுக்கு வீடுகள் கட்டிகொடுக்கும் செயற்குறிப்பு இல்லை.

* 279 வினா—திரு. எல். கணேசன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

[1974 ஆகஸ்ட் 23

(அ) தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு வட்டம், பொன்னப்பூர் கீழ்பாதி ஊராட்சி மன்றத்திடமிருந்து அந்த ஊராட்சிப் பகுதி அரிசன மக்களுக்கென இலவச வீட்டுமனைகள் ஒதுக்கக்கோரி விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) ஆம்.

(இ) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளரின் செயற்குறிப்பு ஒன்று, நில உரிமை பெறும் மத்திய அரசு சட்டத்தின் 1894-ஆம் ஆண்டின் முதலாம் சட்டத்தின் பிரிவு 4 (1) முன்மொழிவு அரசின் வாலாய ஆணை எண் 1318 சமூக நலத்துறை நாள் 1-8-1972-ல் ஏற்கப்பட்டு, 16-8-1972 தேதியில் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. பிரிவு 6 உறுதிமொழி அறிக்கை 1974-ம் ஆண்டு ஜூலை திங்களில் அரசுக்குக் கிடைத்து, அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

*280 வினா—**திரு. கே. என். குமாரசாமி:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சூலூர் வட்டம், பள்ளபாளையம் கிராமத்தில் ஆதித்திராவிடர் சமூக மக்களுக்கு வீடுகட்ட நிலம் ஏதேனும் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** அங்கத்தினர் கூறியுள்ள கிராமம் பல்லடம் வட்டம் சூலூர் பிர்க்காவில் உள்ளது. இக்கிராமத்தில் ஆதித்திராவிடர் சமூக மக்களுக்கு வீடு கட்ட நிலம் கையகப்படுத்த உறுதி விளம்பரம் வெளியிடப்பட்டு தொடர்ந்து சட்டப்படி தேவையான நடவடிக்கை மாவட்ட ஆட்சித் தலைவரால் துரிதமாக எடுக்கப்படுகின்றது.

*281 வினா—**திரு. பு. செ. முத்துச்செல்வன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:



1974 ஆகஸ்ட் 23]

(அ) முசிறித் தொகுதி வேளைக்காநத்தம் கிராம அரிசன மக்கள் குடியிருப்பு மனைகள் கேட்டு அரிசன நலத்துறைக்கு விண்ணப் பித்துள்ளனரா?

(இ) ஆமெனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) ஆம்.

(ஆ) முசிறி தாலுக்கா டி. புத்தூரைச் சேர்ந்த வேளைக்காநத்தம் கிராமத்தில் வசிக்கும் அரிசனங்களுக்கு வீட்டுவசதி அளிப்பதற்காக பிரிவு 6ன் கீழ் விளம்பல் வரைவு அரசினரால் ஏற்கப்பட்டு 5-6-1974 தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

**திரு. பு. செ. முத்துச்செல்வன்:** தலைவரவர்களே, இந்த வேளைக்காநத்தம் கிராமத்தில் வசிக்கும் அரிசனமக்கள் ஏறத்தாழ 5 ஆண்டுகளாக விண்ணப்பித்தும் இதுவரையிலே அவர்களுக்கு அந்த மனைகள் ஒதுக்கித் தரப்படவில்லை. அவர்களுக்கு விரைவாக ஒதுக்கித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன. மேற்கொண்டு அவர்கள் வீடு கட்டிக் கொடுக்கிற நிலைமை இருப்பதால், ஆட்சியாளருடைய பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அதுபற்றிப் பிறகு யோசிக்கலாம்.

**திரு. பு. செ. முத்துச்செல்வன்:** அவர்களுக்கு மனைப் பட்டாக்கள் இன்னும் வழங்கப்படவில்லை. அரசு அறிவித்து, ஆர்ஜிதப்படுத்துவதற்கான வேலைகள்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, விரைவாக அவர்களுக்கு வழங்க ஆவன செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியில் 31-12-1973-ல் 18,000-க்கு மேற்பட்ட வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன. இந்தக் கிராமத்தைப் பொறுத்தவரையில் அரசு ஆணை பிறப்பித்து,

[1974 ஆகஸ்ட் 23

பட்டா வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அளப்பதிலே ஏதாவது தகராறு இருக்கலாம். அதனால் இன்னும் நடைபெறவில்லை.

*282. வினா—திரு. பு. செ. முத்துச்செல்வன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) முசிறித் தொகுதி குணசீலம் கிராம அரிசன மக்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளனவா?

(இ) ஆமெனில், அவர்களுக்கு எப்பொழுது வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** (அ) திருச்சி மாவட்டம் குணசீலம் கிராமத்தில் அரிசனங்களுக்கு வீடு கட்ட 1966-ம் ஆண்டிலேயே நிலம் கையகப்படுத்தப்பட்டு 46 குடியிருப்பு மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

(இ) வீட்டுமனைகள் தாழ்வான நிலத்தில் அமைந்திருப்பதால் அந்தத் தாழ் நிலங்கள் மேட்டு நிலங்களாக ஆக்கப்பட்ட பிறகு வீடுகள் கட்டிக் கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. பு. செ. முத்துச்செல்வன்:** தலைவர் அவர்களே, குணசீலம் கிராமத்திலே இருக்கிற அரிசன மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற வீட்டுமனைகள் தாழ்வான இடத்தில் இருப்பதால், அவைகளையெல்லாம் மணல் அடித்து மேடாக்குவதற்காக மண் அடிப்பதற்காக 9 ஆயிரம் ரூபாய் செலவில் எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் ஆகின்றன, ஆனாலும் இன்னும் வேலைகள் நடைபெறவில்லை. மேலும் அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக அவர்களுக்கு விரைவாக மண் அடித்து, அந்த இடத்தை மேடாக்கி வீடுகள் கட்டிக்கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவர் அவர்களே, அந்த வீட்டு மனைகள் 1956-ஆம் ஆண்டே கொடுக்கப்பட்டது. அந்த இடம் பள்ளமான இடமாக தாழ்வான இடமாக நீர் தேங்குகிற இடமாகக் கொடுத்துவிட்டார்கள். ஆனால் அங்கேயுள்ள



1974 ஆகஸ்ட் 23]

அரிசன மக்களின் கோரிக்கையின் மூலமாக அந்த இடத்தை மேடாக்கிக்கொடுத்தால் வீடுகள் கட்டிக்கொள்ளலாம் என்ற நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி மாவட்ட ஆட்சியாளர்கள் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது முடிந்தவுடன் விரைவிலே அவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புலவர் சி. பழனிச்சாமி:** தலைவர் அவர்களே, பல இடங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு வீட்டடி மனைகள் ஒதுக்குகிற நேரத்திலே சில நிலவுடைமையாளர்கள் நிலங்களைக் கொடுப்பதற்கு மறுத்து வழக்கு மன்றங்களுக்குச் சென்று இடைஞ்சல்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தத் தடைகளையெல்லாம் அகற்றி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலங்களைக் கையகப்படுத்திக் கொடுக்க அரசு விரைவாக நடவடிக்கைகள் எடுக்குமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** தலைவர் அவர்களே, நிலச் சுவான்தார்கள், நிலச் சொந்தக்காரர்கள் அவர்கள் உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள நீதிமன்றங்களுக்குச் சென்று விட்டார்கள். அரசாங்கம் நீதிமன்றங்களுக்கு வேண்டுகோள் தான் விடமுடியும். பொதுமக்களுக்காகச் செய்யப்படுகின்ற நல்ல காரியமாக இருப்பதால் விரைவாக முடித்துக்கொடுங்கள் என்று அரசாங்கம் கேட்டு இருக்கிறது. கூடியவிரைவிலே அவையெல்லாம் முடியும் என்று எதிர்பார்க்கிறோம்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முசிறி வட்டத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வழங்கப்பட்ட நிலங்கள், நஞ்சை நிலங்களாக இருக்கின்றன. ஆனால் அவற்றை மேடாக்கிச் சரிசெய்து தருவதற்கான வசதிகள் அவர்களிடம் இல்லை. ஆகவே அரசாங்கமே அதற்காகத் தனி உதவி செய்ய முன்வருமா?

**மாண்புமிகு திரு. என். இராசாங்கம்:** நான் முன்னாலேயே ஒரு கேள்விக்குப் பதில் கூறியபொழுதே சொன்னேன். பள்ளமாக இருக்கின்ற இடங்களிலே வீடுகள் கட்டிக்கொள்ள வசதியாக அந்த இடங்களை மேடாக்கிக் கொடுக்கலாம் என்று சொன்னேன். அதே நிலையிலே மாண்புமிகு உறுப்பினர் தற்போது சொல்கிற இடமும் இருக்குமானால் அதே நடவடிக்கை எடுக்கலாம். எந்த

[1974 ஆகஸ்ட் 23

ஊர் என்று அவர்கள் குறிப்பிட்ட ஊரைச் சொல்வார்களானால் மாவட்ட ஆட்சியாளரிடம் கேட்டு நிலைமையை அறிந்து பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 4. அறிவிப்பு.

### தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 41/74) சட்ட மன்ற மேலவையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிந்துரை எதுமின்றி அனுப்பப்பட்டுள்ளது என்று மாண்புமிகு சட்ட மன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

## 5. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) கேள்வி நேரம் முன்னதாக முடிந்துவிட்டது குறித்து.

**திரு. கே. எ. வகாப்:** தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், வழக்கமாக கேள்வி நேரம் முடிவதற்கு முன்பாகவே இன்றைய தினம் 45 நிமிடங்களிலேயே கேள்வி நேரம் முடிந்து விட்டது. எல்லோரும் அவரவர்கள் தொகுதியைப் பற்றிய கேள்விகளைக் கேட்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள், ஆனால் பொதுவான பிரச்சனைகள்மீது நிறையக் கேள்விகள் வருவதில்லை, நாங்கள் 50 கேள்விகள் கொடுத்தால் 30 கேள்விகள் திருப்பி எங்களுக்கே அனுப்பப்பட்டு விடுகின்றன ஏதாவது ஒரு



1974 ஆகஸ்ட் 23] [திரு. கே. எ. வகாப்]

காரணத்தைச் சொல்லித் திருப்பிவிடுகிறார்கள், ஆகவே பொதுப்படையான கேள்விகள் அதிகமாக இந்த அவையிலே வருவதில்லை, பொதுப்படையான பிரச்னைகளைப் பற்றிய கேள்விகளையும் அனுமதிப்பதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இன்றைக்குப் பதில் அளித்த வினாக்களில் பொதுப்படையான பிரச்னைகளைப் பற்றிய வினாக்களும் இருந்தன, ஆகவே கேள்விகளின் நிலையைப் பொறுத்துத்தான் அவற்றை அனுமதிப்பதோ அல்லது மறுப்பதோ இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால் அதைப்பற்றி என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டுமே தவிர அவையிலே கேட்பது சரியல்ல.

**திரு. கே. எ. வகாப்:** நாங்கள் கொடுப்பதில் பாதிக் கேள்விகளுக்கு மேல் திருப்பியனுப்பப்பட்டு விடுகின்றன. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதி என்பதில்லை, சரியாக இல்லையென்றால் முழுக் கேள்விகளுமே மறுக்கப்படுகின்ற நிலைமைகூட வரலாம். ஆனால் அதையெல்லாம் பற்றி இந்த அவையிலே கேட்பது முறையல்ல, என்னுடைய அறையிலே கேட்பதுதான் முறையாக இருக்கும்.

**திரு. கே. எ. வகாப்:** நான் பல முறைகள், உங்களிடத்திலே அல்ல, சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே சொல்லி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செயலாளரிடம் நீங்கள் கேட்டு அவர்களுடைய சமாதானம் உங்களுக்குத் திருப்தியில்லையென்றாலும்கூட நீங்கள் அதைப்பற்றியெல்லாம் அறையிலேதான் கேட்க வேண்டும், இங்கே கேட்பது முறையல்ல, உட்காருங்கள்.

**திரு. கே. எ. வகாப்:** பொதுப்படையான பிரச்னைகளைப் பற்றிய கேள்விகளே அனுமதிக்கப்படுவதில்லை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்றைக்குக்கூட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதிலளித்த வினாக்கள் அவ்வளவும் பொதுப்படையான வினாக்கள்தான். ஆகவே,

[1974 ஆகஸ்ட் 23 [பேரவைத் தலைவர்]

பொதுப்படையான பிரச்னைகள் பற்றிய வினாக்கள் எவ்வளவுக் கெவ்வளவு அனுமதிக்கப்பட முடியுமோ அந்த அளவுக்கு அனுமதிக்கப்படுகின்ற நிலைதான் இருக்கிறது.

திரு. கே. எ. வகாப் : சில நேரங்களிலே நான் போய் எடுத்துச் சொல்கிறேன், பிறகு அவர்கள் அதைத் திருத்திக் கொள்கிறார்கள், ஆகவே கூடுமானவரையிலே கழிக்க வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கேள்வி நேரம் சீக்கிரமாக முடிந்து விடுகிறது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் சீக்கிரம் முடிகிறது என்பதால் இதைக் கிளப்புகிறீர்களா? டாக்டர் ஹாண்டே அவர்கள்கூட அன்றைக்கு நேரம் வீணாகிறது என்று சொன்னார்கள், அதைப்போல 5 நிமிடம் கூட வீணாகக் கூடாது என்று சொல்லி இதைத் தெரிவிக்கிறீர்களா, அதைப்பற்றி யெல்லாம் அறையிலே வந்து கேளுங்கள், அவையின் நேரத்தை வீணாக்க வேண்டாம்.

திரு. ஆலடி அருணா : சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்றையதினம் சபை 5 நிமிடம் தாமதமாகத்தான் தொடங்கியது, கேள்வி நேரம் 5 நிமிடங்களுக்கு முன்னாலேயே முடிந்துவிட்டது என்று வானொலியிலே சொன்னார்கள். 5 நிமிடம் தாமதமாகக் கூடி 7 நிமிடங்கள் முன்னதாகக் கேள்வி நேரத்தை முடித்துவிட்டு இந்தச் சபையின் பெருமையை நாம் வெளியே குறைத்துக்கொள்ள இடம் கொடுக்கக் கூடாது, ஆகவே, துணைக் கேள்விகளைத் தாங்கள் அதிகமாக அனுமதிக்க வேண்டும். நானும், நண்பர் கோவை செழியனும் கைகாட்டி மரம்போல் கையைத் தூக்கிக் கொண்டே இருக்கிறோம், எனக்கு அனுமதி தந்தீர்கள், ஆனால் மற்றவர்களுக்கும் துணைக் கேள்விகளுக்கு வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுக்கவில்லையென்று சொல்கிறீர்களே, உங்களுக்குக் கொடுத்திருக்கிறேன். யார் கையைத் தூக்கினார்கள், நான் கொடுக்கவில்லை. . . .



1974 ஆகஸ்ட் 23]

திரு. கோவை செழியன் : எனக்குக் கொடுக்கவில்லை, கையைத் தூக்கிக்கொண்டே இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லவே இல்லை, துணைக் கேள்விகள் போடுவதற்கு உறுப்பினர்கள் இல்லை. 25, 30 கேள்விகள் என்று இருந்தால் அதற்குத் தகுந்தாற்போல நான் கேள்வி நேரத்தைக் கொண்டுவருவதற்கு முடியும். . . .

திரு. கோவை செழியன் : இந்த கடிகாரம் சரியாக ஓடவில்லை, நாங்கள் சரியான டைம் பார்த்துக்கொண்டு வருகிறோம். ஆனால் இந்த கடிகாரம் ஃபாஸ்ட் ஆக போகிறது, அது எங்கள் தப்பா? நீங்கள் சரியாக கடிகாரத்தைச் சரி பண்ணச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்கிறீர்கள். இன்றைக்கு நேரம் சரியாக இருக்கிறதா என்று சொல்லுங்கள், டாக்டர் ஹாண்டே நீங்கள் சொல்லுங்கள்.

திரு. கோவை செழியன் : இன்றைக்குக் கொஞ்சம் பாஸ்ட் ஆகத்தான் இருக்கிறது. . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒன் மினிட் பாஸ்ட்டாகப் போகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒன் மினிட் தானே, ஐந்து நிமிடங்கள் இல்லையே..

6. திரு. க. உரா. எட்மண்ட் அவர்கள் சாட்டிய குற்றச்சாட்டிற்கான ஆதாரத்தை அளிக்க அனுமதி கோரல்.

திரு. க. உரா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்றத்திலே ஆரம்பத்திலே கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நான் பேசிய நேரத்திலே சில குற்றச்சாட்டுகளை நான் வைத்த நேரத்திலே, ஆதாரங்களை காட்டி நிரூபிக்கின்ற வரையிலே என்னுடைய பேச்சுக்கள் ஏட்டில் ஏறாது என்று அன்றைய தினம் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் உத்திரவிட்டார்கள். அந்தப் பகுதிகளை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்குவதற்கு முன்னால்

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 23

தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கின்ற முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு. மாதவன் அவர்களும் அன்றைய தினம் நிரூபிக்கப்படுகின்ற வரையிலும் சட்டமன்றக் குறிப்புகளில் அவை ஏறக்கூடாது என்று விடுத்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பை வழங்கி இருக்கிறார்கள். இன்றைக்கு அதற்குரிய ஆதாரங்களோடு நான் வந்திருக்கிறேன், அந்தக் குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறேன். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கு நடந்த நிகழ்ச்சிக்கு சில ஆதாரங்கள் என்று சொன்னால் அதை நீங்கள் முதலில் பேரவைத் தலைவரிடம் காட்டி பேரவைத் தலைவர் அதைப் பார்த்து முறையாக இருக்கிறதா என்று சொன்னதற்குப் பிறகு தான் இங்கே சொல்ல வேண்டுமே தவிர நீங்களாக இங்கே சொல்லக் கூடாது. நீங்கள் என்னிடம் முதலில் கொடுங்கள், நான் பார்த்து முறைப்படி இருந்தால் தான் அனுமதி கொடுப்பது பற்றிச் சொல்ல முடியும்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** அன்றைக்குத் துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பளிக்கிற நேரத்திலே அவர்களைக் கலந்து பேசி ஆதாரங்களைக் காட்டி அதற்குப் பிறகு அனுமதி கொடுக்கப்படுமென்று சொல்லவில்லை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்குத் துணைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு அளிக்கிற நேரத்திலே ஆதாரங்களைக் காட்டிப் பேச வேண்டும், அப்போதுதான் நடவடிக்கைக் குறிப்பிலே ஏறும் என்று சொன்னது ஒரு முறை. ஆதாரங்களைக் கொடுக்கின்றபோது முன்னதாகவே பேரவைத் தலைவரிடம் காட்டி அவர் அனுமதி பெற்றுத்தான் அவையிலே அதைப்பற்றிக் குறிப்பிட வேண்டுமென்பது இன்னொரு விதி, ஏற்கனவே நாம் அப்படி முறை வைத்துக்கொண்டிருக்கிறோம், ஆகவே அது



1974 ஆகஸ்ட் 23] [பேரவைத் தலைவர்]

(முற்பகல் 10-00)

இன்னொரு முறை. ஆகவே, அதை என்னிடத்தில் கொடுத்து நான் அதைப் பார்த்த பிறகு முடிவு செய்துகொள்ளலாம்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** அதை இப்பொழுது நான் தங்கள் கையில் கொடுத்து விடுகிறேன். அதைப்பற்றி இந்த மன்றத்தில் என்றைக்குப் பேச அனுமதிக்கிறீர்களோ அன்றைக்குப் பேசுகிறேன்.

**திரு. ஆலடி அருணா:** என்ன கொடுக்கிறார்கள் என்று தெரியவில்லையே.

## 5. தடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

**(ஆ) திருமதி சத்தியவாணிமுத்து கூறிய குற்றச்சாட்டு பற்றிய கோப்பை முதலமைச்சரவர்கள் பேரவைத் தலைவரிடத்தில் அளிக்காதது குறித்து.**

**திரு. கோவை செழியன்:** பாயிண்ட் ஆஃப் இன்பர்மேஷன் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்பொழுது பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் எதுவும் இல்லை. பாயிண்ட் ஆஃப் ஆர்டர் தான் கேட்க வேண்டும்.

**திரு. கோவை செழியன்:** பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் இன்ஃபர்மேஷன் இல்லை.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, அன்றைய தினம் மாண்புமிகு உறுப்பினர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார் அவர்கள் ஒரு குற்றச்சாட்டைக் கூறினார்கள். அதற்கு முதலமைச்சரவர்கள் பெருந்தன்மையாக அந்த ஃபைலை சபாநாயகரிடத்தில் கொடுத்து விடுகிறேன், அதை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி சத்தியவாணி

முத்து அம்மையார் அவர்களையும் தாங்கள் அழைத்து அதைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த ஃபைல் தங்களிடத்தில் வந்ததா? தாங்கள் அந்த ஃபைலை அவர்களிடத்தில் காட்டினீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்றைக்கு நடந்த நிகழ்ச்சி, முதலமைச்சர் கொடுத்தது உறுதிமொழிதானா அல்லது அது பேச்சுவார்த்தைகளோடு முடிந்ததா என்பதை நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பார்த்த பிறகுதான் சொல்ல முடியும். அம்மையார் அவர்கள் என்னை அறையில் சந்தித்துக் கேட்டார்கள். அதற்கு முதலமைச்சரைக் கலந்து கொண்டுதான் சொல்ல முடியும் என்று நான் சொன்னேன். நேற்று இந்த அவையிலே இதுபற்றிய பிரச்னை வந்தபொழுதும் அப்பொழுது துணைத் தலைவரவர்கள் இங்கு முதலமைச்சரவர்களும் இல்லை, பேரவைத் தலைவரும் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இப்பொழுது முதலமைச்சர் இங்கு இல்லை. முதலமைச்சர் வந்த பிறகுதான் சொல்ல முடியும்.

**திரு. கோவை செழியன்:** உறுதி மொழியிலே இரண்டு வகை உண்டா என்று அறிய விரும்புகிறேன். தாங்கள் கூறும்பொழுது உறுதிமொழியாகச் சொன்னார்களா அல்லது வார்த்தைகளோடு முடிந்ததா என்று பார்க்க வேண்டுமென்று சொன்னீர்கள். அப்படியென்றால் உறுதிமொழியிலே இரண்டு வகை உண்டா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசும்பொழுது ஒருவருக்கொருவர் கருத்து மாறுபாடுகளைச் சொன்னார்கள். அது எப்படி எப்படியோ வரும். அதையெல்லாம் பார்த்துத்தான் முடிவெடுக்க வேண்டுமென்று சொன்னேன்.

**திரு. நா. வீராசாமி:** தலைவரவர்களே, அன்றைய தினம் அந்த விவாதம் நடைபெற்ற நேரத்தில் அந்த ஃபைலை வேண்டுமானால் சபாநாயகரிடத்தில் கொடுக்கிறேன், நீங்களெல்லாம் பாருங்கள் என்று முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். அம்மையார் அவர்கள் சொன்னார்கள், அதிலே இருக்கிறது, அதை நான் நிரூபிக்கிறேன், இல்லையென்றால் நான் இராஜினாமா செய்து விடுகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள்,



அப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலை அம்மையார் அவர்களுக்கு வரக்கூடாது என்றுதான் நாங்களெல்லாம் நினைக்கிறோம். நான் தெரிந்து கொள்ள விரும்புவது, அம்மையார் சொன்ன அந்த உறுதிமொழியும் இருக்கிறதா என்பதைத்தான்.

**திரு. ஆலடி அருணா:** தலைவரவர்களே. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு பேரும் நின்று கொண்டிருந்தால் எப்படி?

**திரு. நா. வீராசாமி:** அப்படி அந்த ஃபைலை சபாநாயகரிடத்தில் கொடுத்து அதிலுள்ள வாசகத்தைப் படித்து அப்படி நிரூபிக்கப்படவில்லை என்றால் அம்மையார் அவர்கள் இராஜினாமா செய்யப் போகிறார்களா என்பதற்கான உறுதிமொழி இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆலடி அருணா:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இல்லை, உட்காருங்கள்.

* **திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, அன்றைக்கு நான் பேசும்பொழுது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சபாநாயகரிடத்தில் அந்த ஃபைலை கொடுக்கிறேன் என்று கூறியது மட்டுமல்லாமல் அவர்களே மூன்று பேர்களையும் நியமித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹாண்டே அவர்களையும், திருமதி அனந்தநாயகி அவர்களையும், என்னையும் சேர்த்து மூன்று பேரும் அதைப் பரிசீலனை செய்யுங்கள், அப்படிப் பரிசீலனை செய்து நான் சொல்வது சரியா, அம்மையார் சொல்வது சரியா என்று முடிவெடுங்கள் என்று சொன்னார்கள். அப்பொழுது நானும் நான் சொன்னதுதான் சரி, போஸ்டிங்க்ஸ் போடவில்லை, டிரான்ஸ்ஃபருக்குத்தான் போட்டேன், இதை நிரூபித்துவிட்ட பிறகு என்மீது குற்றம் இருந்தால் நான் இராஜினாமா செய்கிறேன், முதலமைச்சர் மீது குற்றமிருந்தால் அவர் இராஜினாமா செய்யட்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகுதான் அவர்கள் கோபத்தோடு ஃபைலை வீசியெறிந்து தங்களிடத்தில் கொடுக்கிறேன் என்று

சொன்னார்கள். ஆகவேதான் தங்களிடத்தில் அவர் அந்த ஃபைலைக் கொடுத்து நாங்கள் பார்க்க வேண்டுமென்று கேட்கிறேன். யார் செய்தது தவறு என்று தெரிந்த பிறகு யார் இராஜினாமா செய்வது என்பதைப் பற்றி பிறகு முடிவெடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து டாக்டர் ஹாண்டே அவர்கள் மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களின். . .

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, இப்படி ஆளுங் கட்சிக்குப் பாதுகாப்பு கொடுக்கக் கூடாது. அவர்கள் 'கமிட்' பண்ணியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 'கமிட்' பண்ணவில்லை.

**திரு. கோவை செழியன் :** நாங்களெல்லாம் பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். எலிமெண்ட்ரி ஸ்கூல் பையன்களை நடத்துவது மாதிரி நடத்துகிறீர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது, சொல்லுங்கள். பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் விதிமுறைகள் மீறப்பட்டிருந்தால் மரபுகள் மீறப்பட்டிருந்தால் பாயின்ட் ஆஃப் ஆர்டர் வருமே தவிர, ஒருவர் சொன்ன கருத்தில் மாறுபாடு இருக்கிறது, நாங்கள் ஒரு கருத்தைச் சொல்லுகிறோம் என்று சொல்வது பாயின்ட் ஆஃப் ஆர்டர் இல்லை.

**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, திரு. வீராசாமி அவர்கள் பேசும்பொழுது அப்படிப்பட்ட நிலைமையில் இராஜினாமா செய்யக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடக்கூடாது என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு வேறுவிதத்தில் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அம்மையார் சொன்ன கூற்றை வைத்துச் சொல்லியிருக்கிறார்.

**திரு. கோவை செழியன் :** அதை மினிஸ்டர் சொல்லியிருந்தால் ஒத்துக்கொள்ளலாம். ஆனால் வீராசாமி அதைச் சொல்கிறார் என்றால் இரகசியம் வெளியே போகிறதா? வீராசாமி



பேசும்பொழுது அது ரிக்கார்டாகி இருக்கிறது. வீராசாமி சொன்னார்கள், அந்த ஃபைலிலே ஃப்ரூப் பண்ண முடியாவிட்டால் அம்மையார் இராஜினாமா பண்ணத் தயாரா என்று கேட்டாரே, எப்படி இந்த ஃபைலில் இருப்பது அவருக்குத் தெரியும், அரசாங்க இரகசியம் அவருக்கு எப்படித் தெரிந்தது?

**திரு. நா. வீராசாமி :** ஃபைலை பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. முதலமைச்சரவர்களே, இந்த மன்றத்திலே அதைப் படித்தார். அது கேட்டவர்களுக்கெல்லாம் தெரியும்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, இங்கு திரு. வீராசாமி அவர்கள் கேட்ட கேள்வி அவையில் பேசப்பட்ட பேச்சை வைத்து அனுமானத்தின் அடிப்படையில் கேட்கப் பட்டதே தவிர அதற்கு ஃபைல் தெரிய வேண்டிய அவசியமில்லை, யாரும் அப்படிக் கேட்கலாம். அம்மையார் அவர்கள் கூட அப்பொழுது பேசிய கருத்தை மறுக்கவில்லை. ஆகவே, பேசப்பட்ட பேச்சை வைத்து அங்கத்தினர் எழுப்பியிருக்கிறார். அதைக் கூட எழுப்பாமல் இருந்திருக்கலாம், அவசியமில்லாத பேச்சு என்பது என்னுடைய கருத்து.

**திரு. ஆலடி அருணா :** அப்படிப்பட்ட நிலைமை வந்துவிடக் கூடாது என்று சொன்னதற்காக கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அவையிலே பேசப்பட்ட பேச்சை வைத்துச் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, இதற்கு ஃபைலைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை.

**திரு. ஆலடி அருணா :** ஃபைலின் விளைவுகளைப் பார்த்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. கோவை செழியன் அவர்களும், திரு. ஆலடி அருணா அவர்களும் ஒரு பாயின்ட் ஆஃப் ஆர்டரைத் தெரிந்துகொள்ள வேண்டும். இரண்டு பேரும் இடம் மாறி உட்கார்ந்திருக்கிறீர்கள்.

**திரு. ஆலடி அருணா :** மைக் அப்படி, இன்னொரு மைக் வையுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்பொழுது, கடந்த புதன்கிழமை என்று கருதுகிறேன், மதிப்பிற்குரிய திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் பேசும்பொழுது இந்தப் பிரச்னை எழுந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அன்றைக்கு சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களுக்குப் பதில் சொல்லும் முறையில் அந்த ஃபைலை நான் சபாநாயகர் அவர்களிடத்தில் ஒப்படைக்கிறேன். (குறுக்கீடு) என்னுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் வேறு. My point of order is entirely different from the one which has already been raised on the floor of the House.

நான் சொல்வதெல்லாம் புதன்கிழமையன்று அந்த ஃபைலைக் கொடுக்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். அந்த ஃபைல் ஏற்கனவே இருக்கிற ஃபைல். ஒரு வாரமாகிறது, இன்றோடு 8 நாட்கள் ஆகிறது. இந்த எட்டு நாட்களுக்குள் நம்முடைய முதலமைச்சரவர்கள் சபாநாயகர் அவர்களிடத்தில் அதை எப்படிக் கொடுக்காமல் இருக்கிறார்கள்? முதலமைச்சரவர்கள் மன்றத்திலே, இந்தச் சபையிலே அந்த அறிவிப்பைக் கொடுத்த பிறகும் நம்முடைய தலைவரவர்கள் அந்த ஃபைலை எதற்காக முதலமைச்சரிடத்தில் இன்னும் கேட்டுப் பெறாமல் இருக்கிறார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எப்படி பாயிண்ட் ஆஃப் ஆர்டர் ஆகும்? சபாநாயகர் எப்படி வாங்கவில்லை என்று கேட்க வேண்டிய நேரம் வேறு.

THIRU R. PONNAPPA NADAR: I would also like to raise a point of order. In the proceedings, one hon. member was asking another hon. Member to resign. Will it be in order to demand the resignation of one member of the House by another member of the House. The matter has to be ruled by the Chair.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மன்றத்திலே யாரும் இராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்வது முறையல்லதான்.**



* **திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் ஏதோ இக்கட்டான சூழ்நிலையில் பேசி நான் மாட்டிக் கொண்டிருப்பதாகவும், அதைக் காப்பாற்றுவதற்காக அந்த ஃபைலைக் கொடுக்கத் தாமதம் செய்வது போலவும் சொன்னார்கள். அதைத்தான் நான் இன்றைக்குக் கண்டிக்கிறேன். இக்கட்டான சூழ்நிலை என்ன இருக்கிறது? அது எப்படி வீராசாமி அவர்களுக்குத் தெரியும்? என்ன இக்கட்டான சூழ்நிலை? இக்கட்டான சூழ்நிலையா இல்லையா என்பது மூன்று பேரும் ஃபைலை பார்த்த பிறகுதான் யாருக்கு இக்கட்டான சூழ்நிலை என்று தெரியும். வீராசாமிக்கு எனக்கு இக்கட்டான சூழ்நிலை என்று எப்படித் தெரியும்? அதை இப்பொழுது சொல்ல வேண்டும். மூன்று பேரும் ஃபைலைப் பார்ப்பதற்கு முதலமைச்சரவர்கள் ஒப்புக் கொண்டார்கள். ஃபைல் கொடுக்கப்பட வேண்டும், அதை மூன்று பேரும் பார்க்க வேண்டும். பார்த்த பிறகுதான் இக்கட்டான சூழ்நிலை முதலமைச்சருக்கா எனக்கா என்பது நிரூபணமாகும். அதற்கு முன்பாகவே, வீராசாமி அவர்கள் இக்கட்டான சூழ்நிலை அம்மையாருக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக, காப்பாற்ற வேண்டுமென்பதற்காக பரிதாபத்தோடு ஃபைலை வைத்திருக்கிறோம் என்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அன்றையதினம் சபையிலே முதலமைச்சர் பேசிய பேச்சு அவைக் குறிப்பில் இருக்கிறது. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் 'வேண்டுமானால் ஃபைலை சபாநாயகரிடத்தில் கொடுத்து விடுகிறேன்' என்று அன்றையதினம் பேசினார்கள். ஃபைலைக் கொடுத்து விடுகிறேன் என்று சொல்லிவிட்டு டாக்டர் ஹாண்டே அவர்களைப் பார்த்து ஃபைலைக் கொடுக்கட்டுமா என்று கேட்டபோது ஹாண்டே அவர்கள் அன்றைய தினம் உட்கார்ந்த இடத்திலேயே சிரித்துக் கொண்டிருந்தார்களே தவிர ஒன்றும் பதில் சொல்லவில்லை. இன்றைய தினம் அதைப் பற்றிக் கேட்கிறார்கள். ஃபைலை பேரவைத் தலைவரிடம் கொடுக்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனை இருக்க முடியாது என்று கருதுகிறேன். நாளையதினம் முதலமைச்சர்

அவர்கள் வந்த பிறகு இந்தப் பிரச்சினையை எடுத்துக் கொள்ளலாம் என்று கூறி இன்றையதினம் இதோடு முடித்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 7. கவன ஈர்ப்பு

(அ) கல்வி நிலையங்களில் நன்கொடை என்ற பெயரில் பணம் வசூலிக்கப்படுவதால் பெற்றோர்கள் பாதிக்கப்படுகின்ற நிலை குறித்து.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் கல்வி நிலையங்களில் நன்கொடை என்ற பெயரில் மாணவ மாணவிகளிடமிருந்து கட்டாயமான முறையில் பணம் வசூலிக்கப் படுவதால் பெற்றோர்கள் மிகவும் பாதிக்கப்படும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, கல்வி நிலையங்களில் நன்கொடை வசூலிக்கப்படுவது குறித்து ஏற்கனவே அரசு ஆணைகள் வெளியிட்டுள்ளது. அதன்படி கல்வி நிலையங்களில் நன்கொடை வசூலிக்க சம்பந்தப்பட்ட இயக்குநரின் ஒப்புதல் பெற வேண்டும். நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ எந்த ஒரு கட்டாய முறையிலும் இந்த வசூலிப்பு இருக்கக்கூடாது. மாணவ மாணவியர்கள் கல்வி நிலையங்களில் சேரும் காலங்களில் இந்த நன்கொடை வசூலிப் பதும் கூடாது. மேலும் மாதாந்தர தீர்வை போலவோ, தொடர்ச்சியாகவோ, இந்த நன்கொடையை வசூல் செய்யக் கூடாது. நன்கொடை வசூலிக்க தனிக்குழு ஒன்று ஏற்படுத்தி, தனிகணக்குகள் இதற்காக வைக்கப்பட வேண்டும். மேற்கண்ட வரையறுப்புகளோடு இந்தமுறை நடைபெறுவிடில் தொடர்புள்ள தலைமையாளரின் பேரிலோ அல்லது நிர்வாகத்தின் பேரிலோ தமிழ்நாடு கல்வி விதியின்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் படும். நடப்புக் கல்வியாண்டில், இதுகுறித்து புகார்கள் எதும் அரசுக்கு வரவில்லை. விவரங்களுடன் புகார்கள் வந்தால் தொடர்புள்ளவர்கள் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும்



பெற்றோர்கள் இவ்விஷயத்தில் ஒத்துழைத்தால்தான் அரசும் பல்கலைக்கழகம் தக்க நடவடிக்கை எடுக்கமுடியும். பொதுவாக பெற்றோர்கள் இவ்விஷயங்களில் அரசுக்கு உதவுவது அவர்களது பிள்ளைகளுக்கு நன்மை தராது என்பது போன்ற ஓர் தவறான கருத்தினால் அரசுடன் ஒத்துழைக்க முன்வருவதில்லை. எனவே எந்தச் சான்றும் இல்லாத நிலையில், சம்பந்தப்பட்ட துறைத்தலைவர்கள் தணிக்கையின் போது ஒழுங்கீனத்தைக் கண்டுபிடிப்பது கடினமாகிறது. கட்டாயமாக நன்கொடைகள் வசூலிக்கப்படக்கூடாது என்பதுதான் அரசின் தெளிவான கொள்கை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அரசின் தெளிவான கொள்கை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கொள்கை நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகிறதா என்பதற் காகத்தான் இந்த 41 வது விதியின் கீழ் தீர்மானத்தைக் கொடுத் திருக்கிறேன். பச்சையப்பன் கல்லூரி, கந்தசாமி கல்லூரி, வைஷ்ணவா கல்லூரி போன்ற பல கல்லூரிகளில் நன்கொடை வாங்குகிறார்கள். பி.யூ.சி. க்கு ஃப்ரீ எஜுகேஷன் என்று நாம் அறிவித்திருக்கிறோம். ஆனால் நேர்மாறாக 300 ரூபாய், 400 ரூபாய் என்று ஒரு சீட்டுக்கு சில பாடங்களுக்கு வாங்குகிறார்கள். பி.காம் என்றால் 500 ரூபாய். இப்படிப் பயங்கரமான வகையில் நன்கொடை வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். இது அரசாங் கத்திற்கும் தெரியும். பி.யூ.சி. வரை இலவசக் கல்வி என்று சட்ட மன்றத்தில் கொடுத்த வாக்குறுதியைக் அமல்படுத்தக் கூடிய வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** நான் முதலில் குறிப்பிட்டபடி இப்போதே சட்டம் வைத்திருக்கிறோம். அரசாங்கத்தின் அனுமதி பெற்றுத்தான் நன்கொடை வசூலிக்க வேண்டும்; கணக்கில் காட்ட வேண்டும், தணிக்கை செய்யப்பட வேண்டுமென்று தெளிவாக இருக்கிறது. மீறி நடப்பவர்கள் மீது கல்லூரிக் கல்வி இயக்குநரோ, பல்கலைக் கழகமோ நடவடிக்கை எடுக்கலாம். நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் ஏதாவது தாலைந்து பெற்றோர்களிடமிருந்தாவது புகார் வரவேண்டும். புகார் வருமானால் அதன்பேரில் நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 23

இருக்கிறேன். இதுவரை அப்படிப்பட்ட கம்ப்ளெயின்ட் எதுவும் வரவில்லை. கம்ப்ளெயின்ட் இல்லாத நிலையில் பொதுவாக நடவடிக்கை எதுவும் எடுக்க இயலாத நிலை இருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இப்படி நன்கொடை வாங்குகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியும் என்று அமைச்சர் அவர்கள் இப்போது பதில் சொல்லியிருக்கிறார்கள், பெற்றோர்கள் எழுதிக் கொடுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அரசாங்கத்திற்கே நன்றாகத் தெரிகிறது. அவர்கள் தைரியமாகக் கணக்குக் கூட எழுதுகிறார்கள். ஃபிரீ எஜுகேஷன் என்று சொல்லிவிட்டு நன்கொடையை எந்த சொரூபத்தில் வாங்கினாலும் The Hon. Minister knows it and he himself is a witness. நீங்களே நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். பெற்றோர்கள் கம்ப்ளெயினிட் பண்ணுவது என்றால் அந்த மாணவன் விக்டிமைசேஷன் ஆகிவிடுவான். They will say there is no place. உங்களுக்கே தெரிந்திருக்கும் காரணத்தால் நடவடிக்கை எடுத்துக் கொள்வீர்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: உங்களுக்கே தெரியும் என்று சொல்லுகிறார்கள். எனக்கே தெரியும். பெற்றோர்கள் புகார் கொடுக்காமல் நடவடிக்கை எடுக்க முடியாது. அப்படிப் புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன். பொதுவாக அவர்களைக் கேட்டால் 'விரும்பிக் கொடுக்கிறார்கள்; வாங்கிக் கொண்டோம்' என்று சொல்லிவிடுவார்கள். ஆகவே, யாராவது கம்பிளெயின்ட் கொடுத்தால்தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அந்தப் புத்தகத்தைப் பார்த்தால் போதும் you can requisition the record of these Colleges and then take action.



1974 ஆகஸ்ட் 23] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

காலேஜில் இருக்கும் கணக்குப் புத்தகங்களை ரிக்விசிஷன் பண்ணுங்கள். கொடுக்க மாட்டேன் என்று அவர்கள் சொல்லி விட முடியாது. அதிலேயே இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னின்னார் இப்படி இப்படி வாங்குகிறார்கள் என்று எழுதிக் கொடுத்தால் அதை வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்கக் கூடத் தயாராக இருக்கிறேன். 'விரும்பிக் கொடுத்தார்கள்; வாங்கிக் கொண்டோம்' என்று அவர்கள் சொன்னால் அதன் பேரில் நடவடிக்கை எடுக்க முடியாது. வழக்கு மன்றத்திற்குச் சென்றால்கூட விரும்பிக் கொடுப்பதை வாங்கிக் கொள்வதில் தவறு இல்லை என்று சொல்வார்கள். கம்ப்ளெயின்டாகக் கொடுத்தால் அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

(ஆ) மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் முக்கியமான மருந்துகள் இல்லாததால் நோயாளிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலைமை குறித்து.

THIRU G. R. EDMUND: Mr. Speaker, Sir, under rule 41 of the Tamil Nadu Assembly Rules, I call the attention of the Hon. Minister for Public Health to a matter of urgent public importance, namely, the non-availability of important medicine in the Erskine Hospital, Madurai, in recent times and the inconvenience caused to the patients and doctors thereon.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நேற்றையதினம் இதையொட்டிய ஒரு பொதுப் பிரச்சினையை டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டு வந்தார்கள். அதைப் பற்றிய விளக்கம் அளிக்கும்போது, பொதுவாக நாட்டில் மருந்துகள் போதுமான அளவில் தாராளமாக இல்லை, பரவலாகக் கிடைக்கும் நிலை சற்றுக் குறைந்திருக்கிறது என்பது நாட்டின் பொது நிலை என்று கூறினேன். மருத்துவ மனைகளில் சில குறிப்பிட்ட நேரங்களில் அவர்கள் வேண்டுகின்ற மருந்துகள் கிடைக்காத நிலைமை ஏற்பட்டு மாற்று மருந்துகள் (ஆல்டர்நேட்டிவ் மெடிசின்) பயன்படுத்தும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல இடங்களில் அந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும் மதுரை

எர்ஸ்கின் மருத்துவ மனை பற்றி விவரங்கள் கிடைத்திருக்கின்றன. அரசு மருத்துவ மனைகளும், மருந்தகங்களும் விலை வீத ஒப்பந்தப்படி மருந்துப்பொருள்கள் சேமிப்பு நிலையத்திலிருந்தும் சென்னை, இந்தியன் டிரக்ஸ் அண்ட் ஃபார்மசூடிகல்ஸ், பிம்பிரியி லுள்ள ஹிந்துஸ்தான் ஆண்டிபயாடிக்ஸ் லிமிடெட், சென்னையி லுள்ள தாதா ஃபார்மசூடிகல்ஸ் ஆகிய நிறுவனங்களிடமிருந்தும் மற்றும் சில தனியார் நிறுவனங்களிலிருந்தும் மருந்துகளை முறைப்படி பெற்று வருகின்றன. அன்றியும் மருத்துவ நிறுவனங் களின் கண்காணிப்பாளர்களும் தலைமை அதிகாரிகளும் கீழ்க் காணும் மருந்துகளை எப்போதுமே இருப்பு கட்டி வைக் கின்றனர் :—

1. இன்றியமையாத மருந்துகள்;
2. உயிர்காக்கும் மருந்துகள்;
3. விலையுயர்ந்த மருந்துகள்.

மேற்கூறிய இடங்களிலிருந்து மருந்துகள் கிடைக்கப் பெறும் வரையில், தேவை ஏற்படும்பொழுது உள்ளூரிலேயே மருந்துகளை வாங்குவதற்கும், கண்காணிப்பாளர்களுக்கும் நிறுவனத் தலைவர்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மதுரையிலுள்ள அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் ஒரு மாதத்திலிருந்து 3 மாத காலம் வரையில் குறுகிய கால அளவுகளில் மருந்துகள் கிடைக்காததாலும், அக்கால அளவில் ரயில் போக்குவரத்தில் ஏற்பட்ட சிற்சில தாமதங்களாலும் ஒப்ப அறிவிப்பு அனுப்பிய நிறுவனங்கள் மருந்துகளை அனுப்ப இயலாத காரணத்தால், விலையுயர்ந்தவையாயிராத அல்லது உயிர் காப்பு வகையைச் சேராத கீழ்க்காணும் மருந்துகள் கிடைக்க வில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இவற்றிற்கு இணையாக குணம் அளிக்கும் மதிப்புடைய மாற்று மருந்துகள் இம்மருத்துவமனையில் கிடைக்கின்றன :—

1. வைட்டமின் 'பி' காம்ப்ளக்ஸ் மாத்திரைகள் ;
2. 'பாராசிடமால்' மாத்திரைகள் ;
3. 'பாராசிடமால்' சிரப் ;



4. 'பென்சைல் பென்சியோஸ்' கிரீம் ;
5. 25 சதவீத குளுகோஸ் 25 சி.சி. ;
6. பி. ஏ. எஸ். மாத்திரைகள் ;
7. மெத்திலேடெடு ஸ்பிரிட்;
8. பிளாஸ்டர் ஒட்டுத்துணி ;
9. பிளாஸ்டர் உறைமாவு ;
10. டால்கம் பவுடர்;
11. ஃபார்மால்டிஹைடு;
12. ஃபென்ர்கான்;
13. டெட்டால் மகப்பேறு மருத்துவப்பசை ;
14. பாரால்டிஹைடு ஊசி மருந்து.

'பாராசிடமால்' மாத்திரைகள், மெத்திலேடெடு ஸ்பிரிட், டெட்டால் மகப்பேறு மருத்துவப்பசை ஆகியவை தவிர மேற்சொன்ன மருந்துகள் யாவும் இப்போது கிடைக்குமாறு செய்யப்பட்டுள்ளன. வேறு சில மருந்துகளும் விரைவில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நிலைமையை சமாளிப்பதற்கான வழிமுறைகள், வேறு மருந்துகளைக் கொண்டு பணியாற்றப்பட்டது.

## 6. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீதான விவாதம்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1973-74-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையும் இம்மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையை * நான் இந்த மன்றத்தில் படித்ததாக ஏற்றுக் கொண்டு இதை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* 128-151-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது

DR. H. V. HANDE: Mr. Speaker, Sir, I would like to make a few observations on behalf of Anna D.M.K. in the context of my initiating the debate on the Electricity Board budget, for the current year.

At the very outset I would like to stress a very important point, namely, that the function of the Electricity Board is far from satisfactory. It has not given any help or succour or satisfaction either to the lakhs of farmers of Tamil Nadu or for consumers who are using electricity nor has it given satisfaction for the countless small-scale industries or industrial producers. In other words, it has not given satisfaction to any sector of society; on the whole, the Electricity Board is replete with corruption, favouritism, inefficiency, maladministration. Point by point I can prove it in this House provided I am given sufficient time.

I have mentioned in this House during the last year, how there was an S.E's Conference which was held during the month of May or June 1973. At that time, my information is that the Hon. Minister also presided. All the S.Es. got up and explained their problems and how even for undertaking tour of inspection they had to seek the permission of the topmost man in the Board. If my information is correct the meeting was attended by Chairman and Chief Secretary. The Chief Secretary threw up his hands and expressed his helplessness.

The particular composition of the Board has been done in an unscientific manner. The Hon. Minister does not seem to have bothered about it at all. I may also mention in this House that the successive Chairmen of the Board right from the past five or six years did not have absolutely any idea of what is happening in the Board.

Mr. Rangabashyam who was the previous Chairman was suddenly transferred at a very crucial period even without grace of notice, when the whole State was passing through a power crisis.

Then we had Mr. Padmanabhan as Chairman. I have nothing personal against him or anybody. He had very little time to look after deliberations of the Board. He had been more keen to go from place to place in foreign countries, a sort of globe-trotting.





We also find within a period of three months, there has been a considerable shuffle in the Board involving the change of the Chairman, the Accounts member and the Secretary. Now another gentleman has taken charge of the Board as Chairman.

What is the reason for this inefficiency in the Board? Due to frequent changes there is complete confusion prevailing at Board level. The main malaise with the Board is that there is no continuity among the members. Naturally these birds of passage are more anxious to please the Government and curry their favour as they are only Government officials looking for further promotions and seats of influence in Government. In other words, during the few months they are in the Board, they want to curry the favour of Government. They do not bother about administration.

The important recommendations of the Mahalingam Committee are not being given effect to. One important recommendation is the Chief Engineer (Operation) and Superintending Engineers should inspect power stations more frequently to ensure proper norms of maintenance. This recommendation seems to have been is flouted. It will be interesting to know many times power houses had been visited and inspected by Chief Engineer (Operation), other than those at Madras, in the last one year. The Hon. Minister must reply to the points I had raised. Has he visited all power stations at least once during the last year? If not, the norms of inspection had to be revised.

We find another peculiar situation. Last year, all of a sudden five posts of Chief Engineers were created, apparently to accommodate a juniormost aspirant, although it was stated at that time that the main reason was to concentrate on a functional basis. What is the necessity for these five posts of Chief Engineers? I had asked many a question in the Legislative Council when I was there. The Government had been maintaining that one Chief Engineer was enough and this stand had been maintained even when there was no technical member for over three years.

In the Legislative Council, one D.M.K. member himself put a question whether one Chief Engineer was sufficient and whether more would be posted but the Government were maintaining that one Chief Engineer was enough. For three years there was no technical member and at that time, Government felt one Chief

Engineer was enough. If a technical member was there he was supposed to bring his technical knowledge and know how. What is the position now? When there is a technical member five posts of Chief Engineers had been created. The sanction for these five heads of department posts was obtained after suppressing two posts of Superintending Engineers, Superintending Engineer (Purchase) and Superintending Engineer (Personnel). Within a month of obtaining sanction on this basis, the post of Superintending Engineer (Personnel) was revived under the new name of Deputy Chief Engineer of the same rank as Superintending Engineer. Why was that post revived? It is because the Chief Engineer (Personnel) who was drawn from a different section had absolutely no knowledge about the Board and was not able to manage the affairs properly. To give him help, to buttress him, another post called the Deputy Chief Engineer of the rank of Superintending Engineer had been created. Since it may look innocous, they have said it is only Deputy Chief Engineer's post.

(முற்பகல் 10-30)

Paradoxically enough these posts of Chief Engineers were made very very crucial and influential, completely neglecting the aspirations and rights of the other experienced officers. Again, the post of Superintending Engineer (Purchase) was revived. In addition, a further post of Superintending Engineer (Street Lights) was also created. Originally the two posts of Superintending Engineers were abolished and then a Deputy Chief Engineer was created to satisfy the Chief Engineer. It is not clear to me why this post was created. I am quite sure that the Hon. Minister in his reply would answer this valid point of mine. This pinnacle of chaos has led to dissatisfaction in the rank and file of the staff of the Electricity Board and also in the higher-ups of the Board also.

Then, Sir, what is the reason I would like to know for the transfer of the purchase work from this particular officer? The work was transferred and added on to this particular Chief Engineer. I know the Hon. Minister is aware of the officer to whom I am referring. Without bothering about anything, the purchase work was passed on to him.

It is not clear whether there is any relative ranking among the Chief Engineers. I am not bothered about any particular Chief Engineer. But unless there is a proper ranking, persons who



have been slogging in the department and who have given their blood and sweat to the Board for the past several years will go chaotic. Unless they are properly recognised, there will be utter frustration among the officers. I am saying this in the interests of the department. I say this, because I do not know who is behind all this, whether it is the Minister or some other top person I would like to know.

I am sure that the Government is aware that this particular officer has not served in the Electricity Board even as a Divisional Engineer. But over 12 years he was in the Director of Technical Education Department; then he has served in some private company and all on a sudden he has been brought here—I do not know even the person at all, but this is the information I have been collecting for the past three or six months and so it is how the Electricity Department has been going on.

I make this valid charge that these are the classical and monumental favouritism and it is at its worst now. The irony of it is that the Technical Education Department seems to be a free-field for the Electricity Board. I do not know how any one can expect persons of the Technical Education Department to come and solve the problems of the Electricity Board. Persons who have not stepped into a Power Station, persons who have absolutely no idea of what is happening in a Power Station, they are all brought in. Is it proper? Will this be good for the Board? We have been saying that they are functioning very badly for the past so many years. As far as I konw nothing seems to have been done about them.

the past so many years. As far as I know nothing seems to have frustrated and feel that it is no use collecting all these data and presenting it to the House and the Government. Nobody seems to bother, the Minister does not seem to bother and the Government does not seem to concern itself with the serious mal-practices that are taking place. If top appointments are given on favouritism, experienced persons will one day become frustrated and leave the department also. I do not know what is going to happen to this Board.

[Dr. H. V. Hande] [1974 ஆகஸ்ட் 23

Then again, the position of Engineers. They feel slighted to note that their increments are fixed at lesser levels than those of Accounts Officers. I want the Accounts Officers' increments not to be disturbed. But qualified Engineers feel that their increments should not be lesser than the Accounts Officers. The Divisional Engineers get annual increments of Rs 40 in the scale of Rs. 700–1,100. While the Deputy Financial Controllers get an increment of Rs. 50 in the scale of Rs. 700–1,000 as also the Assistant Secretaries of the Board whose scale is only Rs. 600—900. This is another important example.

These are examples of favouritism that this Board is practising.

Then with regard to inefficiency in the matter of transhipment of coal, sometime ago the Government was boasting that the Poompuhar Shipping Corporation has been formed solely to get coal for the power stations of the Tamil Nadu Electricity Board. That has not come to pass yet. Coal is transhipped by a foreign company at exorbitant rate. When indigenous vessels are available at cheap cost, why not use them? It seems they have been given to the railways; what is the difficulty for us to use these indigenous vessels? What is exactly the reason and who is exactly responsible for giving these tenders and contracts to foreign company? The whole thing requires looking into and the Aegean's Stable requires complete washing.

As far as administration and plan is concerned, it is a pity that no proper planning and administration has taken place at any level. Let us take coal for example. It was known that price of coal is likely to go up and transport also will go up. Was there any plan to get enough stock? Was any survey conducted? What exactly should be done, where to get coal cheap It seems the position was to take in whatever was available at whatever price from whatever place, immediately. They never opened their eyes to realities of the situation. No proper planning was done in the matter of purchasing coal. No action for stocking enough coal has ever taken place. Indeed it has come in the Public Accounts Committee and the Estimates Committee. They have given so many reports and they were placed in this House. But what action the Government has taken, I do not know.



1974 ஆகஸ்ட் 23] [Dr. H. V. Hande]

Last year, I made mention about black-marketing of power. The Hon. Minister gave a short reply that nothing was there. A specific charge was made that in the Economic Times, a news was published that during 1973, from the statistical records it is seen that production had been maximum when the power cut was also at the maximum and this paper also published last year serious allegations about black-marketing of power. What prevented the Government from placing a White Paper refuting the charge or expressing regret. Instead, some slipshod answeres are given. That is why I want categorically that a White Paper on the very serious charges that appeared in the press on black-marketing in power should be given to us.

Then again we have another Corporation which is going to come. I do not want it to be like the Madras City Corporation. It was known that they were going to have a power corporation. It was stated in the last budget speech. In these circumstances, where is the necessity for this top-heavy new organisation? Members will be surprised to know why the Government have come up with this proposal. The Minister will be surprised how I have come to know of this. I can tell him that this Corporation is a very very interesting idea. That is done so that it can go out of the purview of the Accountant-General and Accountant-General may not lay his hands on the Electricity Board. Then they can have a merry-go-round as in the Madras City Corporation. I am a little alarmed and I mention this with the idea of rectifying it before it is too late. What is the purpose of this Corporation? Is it to take it away from the tentacles of the Accountant-General? That should be explained on the floor of the House by the Hon. Minister. My idea is that this is done to take out the financial transactions of the Board from the scope of scrutiny by the Accountant-General as envisaged in the Electricity Supply Act.

I have a suggestion to make in this connection. Distribution can be given to the municipalities and panchayats and other local bodies. The Board can fix a quantum and leave the local authorities to distribute. That would be much better and that would be a sensible thing.

Another interesting and unfortunate thing that I would like to bring to the notice of the House is with regard to a project in Kadambarai in Coimbatore district. A sum of Rs. one crore has been spent by way of advance to the Heavy Electricals of India to purchase designs for the Kadambarai Project. A number of observation have been made by experts with regard to this project. They have said that this project may not be viable. Under this project, they have to pump water to overhead tank and that water will fall and it will be warmed in the turbines. In other words, it is called artificial hydro-electric project. What is the basic element required for this project? It is only pumping facility for taking the water to overhead tanks. It is known even to the common man with average commonsense that the cost for pumping the storage would be much higher than average cost of thermal energy. Unless we have thermal power, it cannot be done. The tragedy is this.

As far as this project is concerned and as far as the production of power is concerned, the experts have said that it is very very unsatisfactory. Even in the Mahalingam 's report also it has been stated that the thermal power production is poor. I shall only quote what has been stated in the Mahalingam's report.

'With proper operation and maintenance it should be possible to obtain a total availability of 85 per cent for large central station thermal units, as against the availability of 60–76 per cent achieved. Also, if the thermal is base loaded, a load factor of 80 per cent over the operating period can be reached. This corresponds to an annual plant factor of 68 per cent (about 6,000 kwh/kw) as against 40–45 per cent achieved.'

They have also given graphs with regard to this. It is deplorable. How are we going to have enough thermal power for this particular project? How are we going to get power to take the water up and to bring it down? Is it practicable? If is possible? I would like to know whether the experts have given clearance to this project. Is the expenditure on this project going to be fructuous or infructuous? I do not know. I hope the Hon. Minister for Electricity will reply to these questions. Is it also a fact that the Electricity Board is also fighting shy of placing





these facts and wants to spend another sum of Rs. 20 crores or so on this pumping storage project so that it might not be brought to the light of the people. Such being the case, why this scheme should be followed up?

They have already spent a sum of Rs. one crore on this project to see that it is unworkable. The department has not bothered about the techniques of this project. Theoretically they have gone half-way without knowing the technical sophisticated methods of implementing this project. Unless we have proper thermal power, we cannot do it. It is being pursued to cover up the wasteful expenditure of Rs. one crore already made in regard to designs.

Then, I would like to know the plans with regard to the Tuticorin and Kalpakam projects. Are we going to get power from Kalpakam? It is doubtful, because the atomic gadgets and reactor have not been supplied. It is difficult to get the project completed before 1980. After the recent atomic explosion Canada is not going to help us. The hope to get it in 1976 or 1977 is absolutely meaningless and it is diverse from facts.

In the note supplied to the members, even the fundamental things have not been properly explained. The basic knowledge of planning is not there. I charge this Government for not furnishing details with regard to Kalpakam and Tuticorin projects.

What about the Tuticorin Project? For this project also, there is no proper planning. There is no proper planning to get coal for this project. I would like to know the steps taken by the Government and Board to ensure the ability of the Tuticorin Thermal Scheme and Kalpakam Project. The entire coal that is required for the Tuticorin Project has to be transported by sea. The cost of coal has gone up steeply after the oil crisis. For want of coal, different units have been closed. If there was proper planning, several crores would not have been squandered. The amount has been spent only to say that the scheme is unworkable.

[Dr. H. V. Hande] [1974 ஆகஸ்ட் 23

Are we in a position to reach the quantum of 40 or 45 per cent? We are going to reach only 20 or 25 per cent, which may not be sufficient even to run the project itself. The project requires a lot of energy. Over and above that, electricity has to be supplied to the consumers. That is why, I say that the viability of the project has not been properly planned and this has to be worked out properly. I have gone through the speech supplied to the Council members twice or thrice. Nothing has been mentioned in that. No practical solution or idea has been made therein. Personally, I have nothing to complain against the Minister. He is my good friend. It is my duty to point out that it does not contain any worthwhile material. The main difficulty with regard to Tuticorin Project is that the technical aspects and the economics of the Project have not been properly planned and worked out.

There are over 28,000 workers working as temporary casual labourers in the Board. The condition is very pathetic. The tragedy is that they are working there as temporary casual labourers for the past three years. As against 60,000 or 65,000, 28,000 people are working there as temporary casual labourers. Does the Government know where the shoe pinches? They are simply condemning the Superintending Engineers and others, without understanding the problems of the casual workers. The diagnosis is different. Proper diagnosis has to be made with regard to labour problems.

I shall explain the position. There are 28,000 temporary casual labourers. Quite a few are technically qualified people. Quite a few are technically and fully qualified. What prevented this Government from absorbing them in the permanent staff pool? They can be absorbed in some suitable jobs such as clerks, typists or bill collectors, etc. The Board has recruited some thousands of people. They are serving in the Board. My blessings are to them. Some of them may be younger than I. What prevented the Government from absorbing these temporary casual labourers?

The main frustration among the temporary casual labourers is that they have not been taken to permanent roll of the Electricity Board. The Government should take steps to solve this problem



1974 ஆகஸ்ட் 23] [Dr. H. V. Hande]

and also to tackle this problem immediately. The engineers who are given training and stipend for two years are sent out. They are losing their jobs. What will be their position? I have also given a starred question on this. I do not know when it will be answered. Perhaps, it may take a longer period to answer. The Board instead of generating power, it is generating frustration among the employees of the Board. I would request the Hon. Minister to consider this.

Regarding tariff revision, I would like to say a few words. I understand a Committee was appointed for this purpose some time ago. What recommendations that Committee has made? The Tariff Revision Committee has not bothered about the poor farmers. They have completely neglected the agriculturists. Even the Ruling Party members have complained about this. The Tariff Committee only thought about the big industrialits, namely, the Aluminium Industry and the Caustic Soda Industry. They are bothered only about them. They are not bothered about the farm sector. They are not bothered about small scale industries and the domestic consumers. I do not know what the Government is going to do with the Committee's report. The tariff has to be revised only in the light of the opinions expressed by the hon. Members on the floor of the House and not on the basis of the Tariff Committee's report. The report is lop-sided and topsy turvy. There is no satisfaction on either side of the House. Therefore, it should be done in a proper way. The people knowing the position and those who have knowledge in the field should alone be asked to draft the tariff committee report. The Tariff Committee has given a lot of concessions to Aluminium Industry. Has this Government thought of asking them to supply five or ten per cent of aluminium to the Electricity Board? Has this Government thought of asking the Caustic Soda Industry to supply certain percentage at concessional rate to the Government? A number of aluminium parts are used by the Electricity Board. Have they made attempts to get aluminium at concessional rate from the industrialists? Have they got any plan to do so?

Then, this Board does not seem to be bothered about public criticism. They are most insensitive to public criticism. The number of breakdowns is something fantastic. There are breakdowns all over the State, both in rural and urban areas. Not a

single place in the State gets uninterrupted current. One of the mandatory clauses in the Electricity Supply Act is that uninterrupted supply of electricity should be given. But not a single place gets uninterrupted supply of current during any part of the day whether there is power cut or not. Public criticism has poured into ' Letters to the Editor ' column day in and day out. Nothing seems to have been done in that regard. So far as farmers are concerned, none of them gets uninterrupted supply of electricity even during the staggered period.

Then what happened to the purchase of lands at Erunkkancheri? The matter was first brought to the notice of the then Hon. Minister for Electricity, Thiru R. Venkataraman. What is the finality in the matter, I would like to know. Therefore, there is a feeling among the public that all is not well with the Board and that should be completely rectified. From 1957 I have been making a concrete suggestion that a Committee consisting of one or two persons should be appointed to go into the working of the Electricity Board. In this connection, I would like to refer to the observations of the Mahalingam Committee on the Fire Accident at Ennore Thermal Station. It says—

" With proper operation and maintenance it should be possible to obtain a total availability of 85 per cent . . . ".

That shows that there is no proper operation and maintenance in the Ennore Thermal Station. So, I request that a High Power Committee be appointed to go into the working of the Board.

Then I come to the suggestion I made last year and the answer given by the Board. On page 28 of the Statement of Action taken by the Board it is stated as follows :—

' *Suggestion.*—While a dredger is working on contract at Ennore, there is a proposal to buy another dredger.

*Reply.*—A new dredger has since been purchased. The contract period for hired dredger is over. '

I want the Hon. Minister to listen to me attentively and give a specific answer. I repeat the charge I made last time. A tender was called for dredging the canal mouth. The person who quoted a lower rate bought it from the Madras Port Trust. His application was not considered but it was given to a person who quoted a higher rate. The latter bought the dredger from Holland involving foreign exchange to the tune of nearly a crore of rupees. This happened during the period of Thiru Rangabashyam. The contract was that the mouth of the canal should be kept open for all the 12 months. This did not happen. On page 13 of the Report of the Mahalingam Committee, it is stated as follows :—

' *Sea Water Intake.*—There appears to be a problem in maintaining adequate flow of sea water to the power station C.W. pump suctions, because of the formation of sand bars . . . This being a complicated and an important subject for the continued operation of the power plant, immediate steps should be taken to find a satisfactory long-term solution for this problem. '

I made the same point in this House last time . . .

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of clarification. I want to know whether the dredger in the Port Trust is in a working condition or is it to be condemned?

(Deputy Speaker occupied the Chair)

DR. H. V. HANDE : It is the duty of the Hon. Minister to give all the details about it. My information is that it is doing excellent work even to-day. Now the hon. Member can relax.

Sir, last time when I mentioned the same point mentioned in that Report, it was not palatable to the Hon. Minister. Then there is in fact a penal clause in the contract, that if the mouth of the canal is not kept open, we can penalise the party concerned. I understand that some negotiations are going on in that regard but the point is whether they have applied that penal clause and the Hon. Minister must explain it. Some enquiry appears to have taken place in regard to the matter and then the concerned file was called in and Thiru Rajendran, I.A.S., was the Secretary at that time. You may know how I know all these things? I have got channels of communication and I have got my own C.I.Ds to collect the information. That file was called for and it never left the Electricity Board and it is still there. The Hon. Minister can place all those records. When it was called for, why was it not immediately despatched? Also I want to know, what is the cost of the new dredger which they have bought now . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member, Dr. Hande has aready taken 35 minutes.

DR. H. V. HANDE: I will finish my speech in five minutes.

If the new dredger was bought earlier, the infructuous expenditure incurred in that regard could have been avoided. Even the Audit has raised objection to it. So, why was it not bought earlier? Also, I want to know, what was the amount stipulated in the previous contract, what was the amount paid and who is the beneficiary in this transaction.

Then, for the Ennore Thermal Station, copper sheets were supposed to have been purchased. Actually they purchased steel sheets and not copper sheets. The inventory showed that 50 per cent of the goods had to be scrapped. I am told that the Director of Vigilance is conducting the case and I do not know what is going to happen? Whether they are going to drop it or pursue it. The persons concerned should not be allowed to escape however mighty they might be or whatever influence they may command from the Government.

Then, with regard to the Power House at Mambalam, for cable-laying on Thanikachalam Chetty Road a contract was given to a private person who is an influential person and I do not want to mention his name as I do not want to hurt any person. A number of persons have informed me that 50 to 60 per cent of the cables was laid by the employees of the Electricity Board. I want the Hon. Minister to find out whether that is correct and who is the Assistant Engineer who is responsible for it and why it was done.

(முற்பகல் 11-00)

The licence was given to a contractor, a very influential person with the ruling party. We have got all particulars. Thiru G. R. Edmund will also supplement. I am giving a specific instance. Licence for exhibition was given. The overhead wire was there. Right from overhead wire, the party concerned was drawing the current, without passing through the metre. The Assistant Engineer, a bold man, went to the party and questioned. That Assist-



ant Engineer was beaten by this particular person and he went and complained to the Superintending Engineer. Do you know what the Superintending Engineer did? He said:—

உனக்கு ஏதாவது மூளை இருக்கிறதா? நீ புரிந்து கொள்ள வேண்டாமா? நீ ஏன் மாட்டிக் கொண்டாய்?

It is surprising to note what the Superintending Engineer had noted in the file. He has said 'since the exhibition is closed, no further action need be taken on this matter'.

Another interesting case of corruption, maladministration, inefficiency—I will give. From one of the biggest consumers of electricity, a big firm, was due Rs. 54 lakhs to the Electricity Board. It is in Tirunelveli district. Its name is known to all and so I need not tell it. Everybody knows it. Even the Minister knows the name. This particular company owed Rs. 54 lakhs to Electricity Board. The Electricity Board went to Court. The Court declared the case to the benefit of the Board. What the Board should have done is to collect the dues immediately from the company. They should have collected Rs. 54 lakhs. In 1969 this happened. The suit was filed in 1970. In 1971 this is the story. They negotiated with the firm, after the decision of the High Court in their favour, for Rs. 29 lakhs and that too to pay in instalments. Who is responsible for this? Why should you go in for negotiation when the case had been decided in your favour? When such a huge amount is due, why should you go in for negotiation for a small amount and that too when you could legally collect the entire Rs. 54 lakhs after the court's verdict? Why they went for negotiation has to be explained to us in this House.

I have given, in the limited time at my disposal, a brief survey of the entire pathetic and deplorable manner in which the Board functions in generation and distribution and how it has created only dissatisfaction among all sections of the people right from farmers to consumers. With these words and with the observation that all is not well with this department, I resume my seat.

* திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையை நெஞ்சார வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

எனக்கு முன்னர் பேசிய ஹாண்டே அவர்கள் இந்த மின் வாரியத்தினுடைய நடைமுறை மன நிறைவைத் தரவில்லை, திருப்தியை யாருக்குமே அளிக்க வில்லையென்று மேற்போக்காகச் சொன்னார்கள். நான் மனசாட்சிப்படி ஒரு கருத்தை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

இந்தியா முழுவதும் இருக்கிற மாநிலங்களை ஒரு வரை படத்தில் வரைந்து, அதிலே மின்வாரியங்கள் செயல்படுகின்ற காட்சியை நாம் வரைந்து பார்ப்போமானால், இந்தியாவிலே இருக்கிற மிகப் பெரிய மாநிலங்களில், தமிழ் நாடுதான் இன்றைக்கு மின்சாரத் துறையிலே நல்ல நிலையான சாதனைகளைத் தொடர்ந்து செய்து முன்னனில் இருந்து வருகிறது என்பதற்கு டெல்லியிலே நடைபெறுகிற மாநாடுகளிலே மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலேயிருந்து வருகிற அமைச்சர்களும், டெல்லியிலே யிருந்து வருகிற அமைச்சர்களும் சொல்லிக் காட்டி, பாராட்டி வருகிறார்கள். அதற்கு ஆதாரங்களும் இருக்கின்றன. இதிலே சில குறைபாடுகள் இருக்கலாம். அவற்றைப் படிப்படியாக, நிவர்த்தித்து வைக்க வேண்டுமென்று சொல்வதும் அவற்றை நிவர்த்தித்தால் நன்றாக நடக்குமென்ற உணர்வையும் அளிக்க வேண்டுமே தவிர, ஒரேயடியாக அது செயல்படுவது சரியல்ல என்பதும், ஒட்டு மொத்தமாக அதன்மேல் திருப்தியே இல்லை யென்று கூறுவதும் எவ்வளவு தவறு என்று குறிப்பிட விரும்பு கிறேன்.

இன்றைக்குத் தமிழ்நாடு மின் வாரியம், கடந்த 7 ஆண்டுகளிலே, நாம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, ஆற்றியிருக்கிற சாதனைகளுக்கு மகுடம் வைத்துபோல், தமிழகத்திலே 60,000-க்கு மேற்பட்ட கிராமங்களில், 98 சதவிகிதம் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 2 சதவிகிதம் கிராமங்களில் மின்சாரம் அளிக்கப்படுமானால், நாம் முழு நிறைவு அடைந்தவர்களாவோம்.



நாம் ஒரு இலக்கை ஏற்படுத்திக்கொண்டு, இன்றைக்குப் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் மின்சாரத்தைக் கொடுக்கவேண்டும், ஒளிமயமான ஒரு தமிழகத்தைக் காண வேண்டுமென்ற வகையில் நாம் ஆற்றிருக்கிற சாதனைகள் இன்றைக்கு நன்றாக புலப்படும். ஆகவே, இன்றைக்கு இந்தியாவிலிருக்கிற ஒரு பெரிய மாநிலம்—தமிழ்நாட்டின்—98 சதவிகிதம் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுத்திருக்கிறது என்ற ஒரு பெரிய சாதனையை, எதிர்க்கட்சி யிலே இருப்பவர்கள் ஒரு வரி கூட பாராட்டாமல் இருப்பது மன வேதனையாக இருக்கிறது. இந்தியாவிலே இன்றைக்கு 25 இலட்சம் பம்ப் செட்டுகள் இருக்குமானால் அதிலே 7 இலட்சம் பம்ப் செட்கள் தமிழ்நாட்டிலே ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே 33 சதவிகிதத்துக்கு மேல் இந்தியாவிலே இருக்கிற 21 மாநிலங்களில் தமிழ்நாடு மட்டும் பெற்றிருப்பது மாபெரும் சாதனையாக இருப்பதை எண்ணி, பூரித்து, பாராட்டுகிறோம்.

இவ்வளவு பெரிய சாதனையைப் புரிந்திருந்தும், இன்றைக்கு ஏன் மின் வெட்டுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்த்து, அதனை நீக்க நல்ல யோசனைகளை இந்த மன்றத்திற்கு உறுப்பினர்கள் வழங்கலாம். ஏதோ, எங்கோ, ஒரு எ. இ. இடத்தில் குறைபாடு இருக்கிறது, அங்கே ஒரு எஸ்.ஓ. சரியல்ல என்று சொல்வதைக் காட்டிலும், எந்தவகையிலே செயல்பட்டால் அதற்குக் குரல் கொடுத்தால், மேலும் நல்ல வகையிலே இருக்கும் என்று எண்ணிப் பார்த்து அதற்கேற்ற யோசனையை வழங்க வேண்டும்.

தமிழ் நாடு, கர்நாடகத்திலிருந்து மின்சாரத்தை வாங்குகிறது. கேரளத்திலிருந்து மின்சாரத்தைக் கெஞ்சிப் பெறுகிறது. அப்படி மின்சாரம் வழங்குகிற கர்நாடகம் செய்யமுடியாத சாதனையை, கேரள மாநிலம் ஆற்றமுடியாத சாதனையை, ஆற்றிக் காட்டுவதைப் போல், தமிழ்நாட்டில் எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்கப்படுகிறது. யாராவது இரவு நேரத்திலே விமானத்திலே ஏறி பயணம் செய்வார்களானால் —நான் ஆந்திராவினுடைய எல்லையிலே இருக்கிற கும்மிடிப் பூண்டி தொகுதியிலிருந்து வருகிறேன்—ஐதராபாத்தைத்

[திரு. கா. வேழவேந்தன்] [1974 ஆகஸ்ட் 23

தாண்டி, தமிழ்நாட்டிற்கு வரும்போது, மல்லிகைப் பூ பூத்ததைப்போல், இங்கு மின்சார விளக்குகள் எரிகிற காட்சியைப் பார்கிறோமே தவிர, அந்தப் பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே, மின்சாரமில்லாமல் இருண்டு கிடக்கிறது சில இருண்டு கிடக்கிற உள்ளங்களுக்கு வேண்டுமானால், அது சரியாக இருக்குமே தவிர, ஒளி வழங்கிட உதயசூரியன் என்று அண்ணா அவர்கள் எதைச் சொன்னார்களோ, அந்த வார்த்தையை நிறைவேற்றுகிற வகையிலே, தமிழ்நாடு மின் வாரியம் மிகச் சிறப் பாக பணியாற்றி வருகிறது.

இங்கு 30 சதவிகிதம் மின்வெட்டு வந்துள்ளது. அந்த 30 சதவிகிதம் வெட்டுகூட, மத்திய அரசாங்கம் காலை வாரி விடாம லிருக்குமானால், ஓடுகிற ஓட்டத்திலே, தடைக்கல்லாக இல்லாமல் இருக்குமானால், ஏற்பட்டிருக்குமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இதே மாமன்றத்தில் நாம் ஒரு தீர்மானம் போட்டு அனுப்பி னோம். இங்கே தமிழ்நாட்டிலே பூமிக்கடியிலே தூங்கியிருக் கின்ற நிலக்கரியை வெளியே எடுத்து, அதைக் கொண்டு மின்சாரம் தயாரிக்கலாம் என்று இந்தமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றினோம். இங்கே நிலக்கரியும் தூங்கிக் கொண் டிருக்கிறது. அந்தத் தீர்மானத்தைப் பெற்றுக்கொண்ட டெல்லியும் தூங்கிக் கொண்டிருக்கிறது. அப்படி இரண்டும் தூங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால், இங்கே மின்சார வெட்டு இருக்கிறதே தவிர, வேறு என்ன காரணம் இருக்க முடியும் என்பதை நடுநிலைமையோடு சிந்தித்துப் பார்க்கவேண்டும். எத்தனை முறை, முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார், மின்சாரத் துறை அமைச்சர் சொல்கிறார், தீர்மானம் போட்டிருக்கிறோம், கட்சி மாநாடுகளிலே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறோம். இதற்குப் பிறகு மத்திய அரசாங்கம் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தை வெட்டாமல் காலதாமதம் செய்வதை, இங்கே இருக்கிற அகில இந்தியக் கட்சிக்காரர்கள் கண்டிக்க வேண்டாமா? டெல்லிக்குப் போய் மாநாடுகளில் கலந்து கொள்ளும் போது சொல்லவேண்டாமா என்றுதான் கேட்கவிரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 23] [திரு. கா. வேழவேந்தன்]

செங்கற்பட்டு மாவட்டம் கல்பாக்கம் அணுமின் நிலையம் வருகிறது வருகிறது என்று அவர்கள் காலத்திலே தொடங்கப் பட்டு, இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப்பிறகுதான் அங்கே உற்பத்தியே தொடங்கும் என்று கணக்கிடப்படுகிறது. நாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம், மத்திய அரசாங்கம் தொடங்கிய கல்பாக்கம் விரைவாக உற்பத்தியைத் தொடங்கும், அங்கேயுள்ள ஆயிரமாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும், அதன் காரணமாக மின் உற்பத்தி பெருகி, விவசாயிகளுக்குப் பலன் கிடைக்கும் என்று நம்பினோம். ஆனால் என்ன காரணத்தினாலோ மத்திய அரசாங்கம் அதை தள்ளிப்போட்டுக் கொண்டே போகிறது. நான் இந்த நேரத்திலே பயங்கரமான ஒரு குற்றச் சாட்டைச் சுமத்த விரும்புகிறேன். மத்திய அரசாங்கம், இங்கே தொடங்கப்பட்ட கல்பாக்கம் மின் நிலையத்தில் உற்பத்தியைத் தொடங்க முன்வரவில்லை, ஆனால் உத்திரப் பிரதேசத்தில் தேர்தல் வருகிறது என்று தெரிந்தவுடனே இதே பிரதம அமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் ஓடோடிப்போய் புதிதாக ஒரு அணுமின் நிலையத்தை அங்கே தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே நாம் பந்தியிலே உட்கார்ந்துகொண்டிருக்கிறோம், இலையைப் போட்டுக்கொண்டு சோறு வருமா என்று காத்துக் கொண்டிருக் கிறோம். இலை போட்டுக் காத்துக் கொண்டிருக்கிற நமக்கு சோறு போடவில்லை, புதிதாக உத்திரப் பிரதேச மாநிலத்திலே வாருங்கள் வாருங்கள் என்று அழைத்து அங்கே சோறு போடுகிறார்கள். அதனால்தான் நான் சொல்கிறேன், மத்திய அரசாங்கம் செய்ய வேண்டிய காரியத்தை செய்ய வேண்டிய நேரத்திலே செய்திருப் பார்களானால்

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்.

என்று சொல்வதைப்போல் செய்வேண்டிய நேரத்திலே செய்தி ருக்குமானால் இன்றைய தினம் இவ்வளவு பெரிய மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்குமா?

எனக்கு முன்னால் பேசிய டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், இல்-பிளான், பூவர் பிளான் என்று சொன்னார்கள். இது தமிழ்நாட்டிற்கு உரியதல்ல, இந்தியா முழுமையும் பார்த்தால்

[திரு. கா. வேழவேந்தன்] [1974 ஆகஸ்ட் 23

நமக்கு 30 சதவீதம்தான் மின்வெட்டு, ஆனால் மற்ற மாநிலங்களிலே இதைவிட அதிகமாக இல்லையா, வளர்ந்து வரும் மாநிலங்களிலேகூட ஏன் மின்வெட்டு, அதற்குக் காரணம் என்ன. மத்திய அரசாங்கம் போடவேண்டிய திட்டங்களைப் போடாமல் இருந்ததும் சிந்திக்கவேண்டியவற்றை நேரத்திலே சிந்திக்கத் தவறியதாலும்தான்.

அது மட்டுமல்ல, நாம் போடுகிற மின் திட்டங்களுக்கு என்றாலும்சரி, அனல் மின்சாரத் திட்டங்களுக்கு என்றாலும்சரி, ஒழுங்காக நேரத்தில் அனுமதி வழங்கப்படுவதில்லை. தூத்துக்குடி மின்திட்டத்திற்கு அனுமதியை எத்தனை ஆண்டுக்காலம் நாம் கேட்டு, 4, 5 மாதங்களுக்கு முன்புதான் அனுமதி கிடைத்தது. ஏற்கனவே அதற்கான அனுமதியை டெல்லிப் பேரரசு கொடுத்திருந்தால் இப்பொழுது உற்பத்தி தொடங்கியிருக்க முடியும். நாம் அனுமதி கொடுக்கவேண்டுமென்று பல முறைகள் கெஞ்சிக் கேட்டு சில மாதங்களுக்கு முன்புதான் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இந்த நாட்டு விவசாய மக்களுடைய வயிற்றிலே அடிக்கிற மிகப்பெரிய காரியத்தை டெல்லி அரசு செய்திருக்கிறது என்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின் இணைப்பு 7 லட்சம் பம்ப்செட்டுகளுக்கு நாம் கொடுத்து இருந்தாலும்கூட இன்னும் எவ்வளவோ லட்சக்கணக்கான மின் இணைப்புகள் தேவை என்று விவசாயிகள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் மின்இணைப்பு நேரத்திலேயே கொடுக்கப்பட மத்திய அரசு முன்வந்திருக்குமானால் பசுமைப் புரட்சியை இன்னும் நல்ல முறையிலே உருவாக்கி உற்பத்தியை இன்னும் அதிகமாகப் பெருக்கியிருக்க நம்மால் முடிந்திருக்குமல்லவா.

இங்கே பேசிய அங்கத்தினர்கள் சில குறைபாடுகளைச் சொன்னார்கள். நிலக்கரி வரவேண்டிய நேரத்திலே வரவில்லை என்றார்கள். பூம்புகார் கார்ப்பரேஷன் என்ற முறையிலே கப்பல் மூலமாக நிலக்கரியைக் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுத்துக்கொண்டு வருகிறது. இப்படி எவ்வளவோ நல்ல காரியங்களை அரசு செய்து இருந்தாலும் சில குறைபாடுகளையும் இந்த நேரத்திலே நான் சொல்வதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.



1974 ஆகஸ்ட் 23] [திரு. கா. வேழவேந்தன்]

இன்றைக்கு கிராமங்களுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது. ஊராட்சிகளிலே, கிராமங்களிலே, சிறுசிறு கிராமங்களிலே எல்லா, பல்புகளும் எரியவில்லை, பியூஸ் போன பல்புகள் மாற்றப்படுவதில்லை. அமைச்சர் அவர்களிடத்திலும், வாரியத்தினரிடத்திலும் நான் கேட்டுக்கொள்கிறேன், இதைத் தீவிரமாக கவனிக்க வேண்டும்.

பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் தனித்தனியாக மீட்டர்கள் வழங்கி எவ்வளவு மின்சாரம் பயன்படுத்துகிறார்களோ அதற்கு மட்டும்தான் பணம் வசூலிக்கவேண்டும் என்ற முறையைக் கொண்டுவரவேண்டும்.

கிராமங்களிலே அடிக்கடி பல்புகள் மாற்றப்பட்டாலும்கூட பின்னாலே பழுதடைந்துவிடுகின்றன. இப்படி சப் ஸ்டாண்டர்டு பல்புகள் ஏன் இருக்கின்றன என்று கண்டுபிடித்து பணம் அதிகமானாலும் பரவாயில்லை என்ற முறையிலே நல்ல தரமான பல்புகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். சோக்ஸ், ஹோல்டர்ஸ், பல்புகள், கிடைக்காத காரணத்தினால் குழாய் விளக்குகள் சரிவர எரிவதில்லை. அதையும் தீவிரமாகக் கவனிக்க வேண்டும்.

செங்கற்பட்டு மின் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும்சரி, எம்.இ.எஸ்.ஐ. எடுத்துக்கொண்டாலும் சரி அதிகாரிகளைக் கேட்டால் தேவையான லாரிகள் கிடைக்கவில்லை, கம்பங்கள் கொண்டுவரப்படவில்லை, கண்டக்டர்கள் கிடைக்கவில்லை என்றே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது சீப் எஞ்சினியர் (பர்சேஸ்) என்று ஒருவரை நியமித்து இருக்கிறோம். அவர் மூலமாக தகுந்த நடவடிக்கைகள் எடுத்து மின் திட்டங்கள் விரைவாக நடைபெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இன்னொன்றையும் நான் வெளிப்படையாகவே சொல்ல விரும்புகிறேன். ஊராட்சிகளில் பல்புகள் சரிவர எரியச் செய்வதற்கு தீவிரமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும், அதற்காக மாதம் ஒரு தடவையாவது எஸ்.ஓ., ஹெல்ப்பர் இவர்களில் யாராவது ஒருவர் அந்தந்தப் பஞ்சாயத்துத் தலைவரிடம் கையெழுத்து வாங்கவேண்டும், எத்தனை எரிந்தன, எத்தனை

எரியவில்லை என்று கணக்குப் புத்தகம் போட்டு எழுதி கையெழுத்து வாங்க வேண்டும். நாம் எரிகிறது என்கிறோம், ஆனால் ஊராட்சித் தலைவர்கள் எரியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே மாதம் ஒரு முறை அந்தந்தத் தலைவர்களிடம் அந்த பகுதி மின்திட்ட ஊழியர்கள் சென்று அந்த வட்டாரத்திலே உள்ள ஊராட்சித் தலைவர்களின் கையெழுத்து பெறவேண்டுமென்ற முறையைக் கொண்டுவரவேண்டும்.

சிஸ்டம் லெவல் அட்வைசரி கமிட்டி என்று ஒன்று இருந்தது. சில இடங்களில் இயங்கி வந்தது, பல இடங்களில் இயங்கவில்லை. நான் வாரியத்தினருக்குச் சொல்லிக்கொள்வேன், மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது அதைக் கூட்ட ஏற்பாடு செய்து பாராளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், சட்ட மேலவை உறுப்பினர்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள் இவர்கள் எல்லாம் அந்தக் கூட்டத்திற்கு வர ஏற்பாடு செய்து அவர்களுடைய கருத்துக்களைக் கேட்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய தொகுதியைப்பற்றிய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பெரிய பாளையத்தில் ஒரு சப் டிவிஷன் ஏற்படுத்தியிருக்கிறார்கள், அதற்காக நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை எம்.இ.எஸ்.ஸோடு இணைக்கவேண்டும், காஞ்சிபுரத்தோடு இணைக்கக்கூடாது; அப்படி இணைத்தால் 80 மைல் தூரம் நாங்கள் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே எம்.இ.எஸ். ஸோடு சேர்க்கவேண்டும். பொன்னேரி சப் டிவிஷன், கும்மிடிப்பூண்டி சப் டிவிஷன் என்று இரண்டாகப் பிரித்து ஒரு ஏ.இ. போடவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். கும்மிடிப்பூண்டியில் ஒரு சப் டிவிஷனை விரைவாக ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நல்ல ஒளிமயமான எதிர்காலம் பரவுவதற்கு மின்சாரம்தான் காரணம். அந்த அளவிற்கு நம்முடைய மாநிலம் மற்ற மாநிலங்களைவிட அதிகமாக வளர்ச்சியடைந்திருக்கிறது. இருந்தாலும் இருக்கின்ற ஒன்றிரண்டு குறைகளைப்போக்கி விட்டால்—பொன்மலர் நாற்றம் பெற்றது போல என்று சொல்



வார்களே, அதைப்போல—இன்னும் வளர்ச்சியுடையதாக ஆகும் என்று சொல்லி இந்த நிதிநிலை அறிக்கையை முழுமையாக ஆதரித்து அமைகிறேன். வணக்கம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்னாலே உரையாற்றிய நண்பர் திரு. வேழவேந்தன் அவர்கள் பேசும்போது இந்த அரசு ஊரெல்லாம் ஒளிமயமாக்கி விட்டது, எந்தக் கிராமத்திற்கும் இனிமேல் மின்சாரம் விஸ்தரிக்கப் படவேண்டிய தேவையில்லை, எல்லாம் முடிந்துவிட்டது என்று கூறினார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே கூறினார்கள், இந்த ஒரு திட்டத்தை வைத்திருக்கிறது, கிராமங்களுக்கெல்லாம் 1973-க்கு முன்னதாக மின்சார இணைப்பைக் கொடுக்க வேண்டும் என்பது தான் திட்டம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய வாக்குறுதி எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதை ஒருவேளை இந்த மன்றத்திலே வேண்டுமானால் திரு. வேழவேந்தன் கூறுவதைப் போலக் கூறலாம், ஆனால் கிராமங்களிலே உள்ள மக்களிடம் கூறினால் பதில் நாம் எதிர் பார்த்ததற்கு மாறாகக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன்:** எல்லா கிராமங்களுக்கும் மின்சாரம் தரப்படும் என்ற வாக்குறுதி 98 சதவிகிதம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது என்று அறிக்கையிலேயே தரப்பட்டிருக்கிறது. அது அவர்களுடைய கையிலேயும் தரப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அதைத்தான் நான் சொன்னேன். அறிக்கையிலே இருக்கும், இங்கே பேசலாம், ஆனால் கிராமங்களிலே உள்ள மக்களிடத்திலே சொன்னால் எதிர்பார்த்ததற்கு மாறாக பதில் கிடைக்கும் என்று நிச்சயமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். எந்த அளவிற்கு எல்லாக் கிராமங்களுக்கும் கொடுத்திருக்கிறோம்? ஒருவேளை இரண்டு நாட்கள் எரிகின்ற பல்புகளைக் கொடுத்திருக் கிறோம், ஒரு வாரத்திற்கு இரண்டு நாள்தான் கனக்ஷன் என்று

ஆல்டர்நேட் முறையை வைத்து இருக்கிறோம், பல்புகள் எரியவில்லை, பல்புகள் எரிந்தால்தானே மின்சாரம் கொடுத்திருக்கிறோம் என்பது தெரியும், அதைத்தான் சொல்கிறார்களோ என்னவோ. நிச்சயமாகத் தெரியும், 9 மணிக்கு மேல் விளக்குகள் எரியவில்லை.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாக நான் பேசும்போது சொன்னேன். டிரான்ஸ்பார்மர்கள் மாற்றப்பட வேண்டும் என்று சொன்னபோது சொன்னார்கள், தேவையான டிரான்ஸ்பார்மர்கள் கிடைக்கவில்லை, அதனால்தான் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லப்பட்டது. இதுவரையில் இந்தக் குறைபாடுகளை நீக்கவில்லை. தரமான பல்புகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய வாரியம் முன்வருகிறதா என்றால் இல்லை. வாரியமா அல்லது பஞ்சாயத்து யூனியன்களா என்ற தகராறுகள் காரணமாக ஏற்படும் பல்வேறு சிக்கல்களையும் கிராம மக்கள் சகித்துக் கொண்டிருக்கிறார்கள். ஊரெல்லாம் ஒளிமயமாக்குகிறோம் என்று சொல்லிவிட்டு ஆனால் ஊரெல்லாம் இருள்மயமாக்குகின்ற நிலைமை இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கத்தில் இருக்கிறது என்பதை நிச்சயமாக, திட்டவட்டமாகக் கூற முடியும். அதுதான் இன்றையதினம் நாட்டிலுள்ள நிலவரம்.

இங்கு கூறினார்கள், கேரளம், கர்நாடக மாநிலங்களைவிட முன் வரிசையில் வந்துவிட்டோம் என்று அமைச்சர் கொடுத்த அறிக்கையில் கழிந்த ஆண்டு 18 கோடி ரூபாய்க்கு மற்ற மாநிலங்களிலிருந்து மின்சாரம் வாங்கியிருக்கிறோம், ஆனால் இந்த ஆண்டு 29 கோடி ரூபாய்க்கு மின்சாரம் வாங்கியிருக்கிறோம் என்ற விவரம் இருக்கிறது. உற்பத்தியைப் பெருக்கிவிட்டோம் என்று கூறும்பொழுது நாம் மற்ற மாநிலங்களிலிருந்து வாங்கும் அளவைப் பார்த்தால் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாக வாங்கிக் கொண்டிருக்கிறோம் என்ற சூழ்நிலையிருந்தால் நிச்சயமாக போதுமான உற்பத்தி செய்யவில்லை என்பதை இங்கே கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதற்குக் காரணம் என்னவென்றால் ஒழுங்கான திட்டம் இல்லை, உற்பத்திக்கும் திட்டம் ஒழுங்காக இல்லை, விநியோகிக்கும் முறைக்கும் ஒழுங்கான திட்டம் இல்லாத அவல நிலை மின்சார வாரியத்தில் இருப்பதுதான் இந்த மாநிலத்தின் சூழ்நிலையாக இருக்கிறது.





தேவையற்ற முறையில் மலிவான வாக்குறுதிகளை அளித்ததால் கிராமங்களுக்கு கம்பிகளை விஸ்தரித்திருக்கிறோமே தவிர தேவையான மின்சார வசதியை ஏற்படுத்திக் கொடுக்கவில்லை. அதற்கான சூழ்நிலையிலே மின்சார வாரியம் இல்லை என்பதைத்தான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கம்பியை நீட்டுகிறோம் என்றால், அதற்கு முன்னதாக கம்பியை எந்த அளவிற்கு நீட்டுகிறோம், எந்த அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கியிருக்க வேண்டும் என்ற திட்டம் இல்லாத முறையில் உற்பத்தி பெருகாமல் கம்பியை நீட்டியிருக்கிறோம் என்றால் நிச்சயமாக அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருவேளை விளம்பரத்திற்காக, நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக, மின்சாரம் வந்துவிட்டது என்ற எண்ணத்தை உண்டுபண்ணுவதற்காக இந்த வேலைகள் பயன்படுமே தவிர மக்களுக்கு அது உண்மையில் பயன் தரவில்லை.

அடுத்தபடியாக, இந்த மின்சார வாரியத்தில் இப்பொழுது ஆங்காங்கு எல்லாத் திட்டங்களிலும் ஊழல்கள் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற செய்தி நமக்கு வந்தவண்ணம் இருக்கிறது. அருகாமையில் நான் நினைக்கிறேன், 15—8—1974-ஆம் தேதியன்று மதுரையில் ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாய் பெறுமான மின்சாரப் பொருட்கள் திருடப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, சபைக்கு சரியான தகவலைத் தர வேண்டுமென்பதற்காகத் தலையிடுகிறேன். பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதாகக் கருதுகிறேன். ஆனால் எனக்கு வந்த தகவலின்படி 1½ இலட்சம், அதாவது 1 இலட்சம் ரூபாயிலிருந்து 1½ இலட்சம் ரூபாய் வரையில், அதுகூட இன்னும் சரியான அசெஸ்மெண்ட் ஃபிகர் வரவில்லை, அது சம்பந்தமாக இப்பொழுது 6 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் உடனடியாக இலாக்கா மூலமாக. அந்த வழக்கு விஜிலென்சிடத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதே தவிர 15 இலட்சம் ரூபாய் என்று பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக் கொண்டு சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆனால் தவறு என்பது தவறு [illegible] தெரிந்தவுடனேயே அதிகாரிகள் மட்டத்தில்

சஸ்பென்ட் செய்து உடனடியாக போலீசுக்கு கொடுக்கப் பட்டிருக்கிறது. பிறகு விவரங்கள் வரும். யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுப்பதைப்பற்றி ஆட்சேபனை இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அமைச்சரவர்களின் தகவலுக்கு எனக்குத் தெரிந்த சில விவரங்களைக் கூற ஆசைப்படுகிறேன். அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பதற்கு மிகவும் ஆவலோடு இருக்கிறார்கள். முழு விவரமும் வரவில்லை என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரையில் சில விவரங்களைக் கூற விரும்பு கிறேன்.

எனக்குத் தெரிந்தவரையில் ஏறத்தாழ 15 இலட்சம் ரூபாய் பெறுமான பொருட்கள் மோசடி செய்யப்பட்டிருக்கிறது. சாதாரணமாக ஸ்டோரிலிருந்து சாமான்கள் கொடுக்க வேண்டு மென்றால் ஸ்டோர் கீப்பருக்கு அதிகாரிகள் சிட் அனுப்பினால்தான் கொடுக்க வேண்டும். இன்றைக்குள்ள சூழ்நிலையில் ரிகார்டு சரி யாக இருக்கிறது. சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர் கொடுத்த சிட்டின் பேரில்தான் எல்லாப் பொருட்களும் ஸ்டோரிலிருந்து வெளியே வந்திருக்கிறது. அப்படியென்றால் இந்தப் பொருட்கள் இலாக்காவிற்குச் செலவு செய்யப்படவில்லை. ஆனால் இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை என்னவென்றால் ஸ்டோர் கீப்பரையும் மற்றும் பொருத்தமில்லாத சில நபர்களையும் சஸ்பென்ட் செய்திருக்கிறீர்கள். இதற்கு மூலகாரணமாக இருக்கும் சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியரை சஸ்பென்ட் செய்யாமல் இருந்தால் இந்த விவகாரத்தின் உண்மை வெளியே வராது. உண்மையை வெளிப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் கருதினால் சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியரை சஸ்பென்ட் செய் தாக வேண்டும். அப்படியில்லாமல் இதை விஜிலென்சுக்கு அல்ல வேறு யாரிடத்தில் கொடுத்தாலும் உண்மையான விவரங்கள் வெளியே வராது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். யாரோ சில அப்பாவிகளை சஸ்பென்ட் செய்துவிட்டு, பெரும் பெருச்சாளிகள் வெளியே இருந்தால் உண்மை வெளியில் வராது.





**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, உடனடி யாக சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியரை சஸ்பென்ட் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். பொருத்தமில்லாதவர்களை சஸ்பென்ட் செய்ததாகவும் சொல்கிறார்கள். அப்படி அல்ல வழக்கு வந்திருக்கிறது. வந்தவுடன் இரண்டு எஞ்சினியர்கள், இரண்டு ஸ்டோர் கீப்பர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக் கிறார்கள். ஆறு பேர் உடனடியாக சஸ்பென்ட் செய்யப்பட்டிருக் கிறார்கள். உடனடியாக வழக்கு விசாரணைக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதில் சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர் மாட்டிக் கொண்டார் என்றால் அவரும் சஸ்பென்ட் செய்யப்படுவார். உடனடியாக இங்கு சொல்வதை வைத்துக்கொண்டு அவர்தான் பொறுப்பாக இருந்தார், சஸ்பென்ட் செய்ய வேண்டுமென்றால், இப்பொழுது சார்ஜ் இருக்கிறதா என்றால் இல்லை. வழக்கு போலீசில் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவர்தான் உடந்தை என்றால் அவர் நீக்கப்படலாம். முழு விவரங்களும் வரட்டும், வந்த பிறகு என்ன செய்ய வேண்டுமோ செய்யலாம்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, may I intervene? It is only the small flies that are caught and the big sharks are allowed to go free. That is the reason why we say that when grave charges are made against responsible officers, it is better that timely action is taken.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தவறு செய்தவர்களில் பெரியவர்கள், சின்னவர்கள் என்ற வித்தியாசம் இல்லை. யார் தவறு செய்தாலும் தண்டிக்கப்படுவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** மாண்புமிகு அமைச்சரவர்கள் இரண்டு ஜூனியர் எஞ்சினியர்களை சஸ்பென்ட் செய்திருப்பதாகக் கூறினார்கள். எனக்குத் தெரிந்த வரையில் ஜூனியர் எஞ்சினியர். களை விட சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர்தான் இன்வால்வ்ட் என்ற தகவல் வந்திருக்கிறது.

அதுமட்டுமல்லாமல் இந்தப் பொருட்கள் களவாடப்பட்ட அதே தருணத்தில் சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர் வீடு கட்டியிருப்ப தாகவும் தகவல் இருக்கிறது. ஆகவே இவ்வளவு பொருத்தமாக

நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அந்த சூப்பிரண்டெண்டிங் என்ஜினியரை இந்த அரசாங்கம் சஸ்பெண்ட் செய்து நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்குவதன் இரகசியம் என்னவென்று தெரியவில்லை. ஆகவே, என்னுடைய வாதமெல்லாம் சூப்பிரண்டெண்டிங் என்ஜினியரை பாதுகாக்க வேண்டுமென்று, இந்த அரசு விரும்பினால் இந்த விவகாரத்தின் உண்மை வெளியே வராது என்ற எச்சரிக்கையை இந்த அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இந்த இலாக்காவில் பில் தயாரிக்கும் முறையில் நான்கைந்து மாதங்களுக்கு ஒருமுறை பில் தயார் செய்து ஏழை மக்கள் அதற்கு உடனடியாகப் பணத்தைக் கட்ட வேண்டுமென்றால் நிச்சயமாக அவர்களால் அப்படிச் செய்யமுடியாது. இந்த முறையில் அவர்கள் மிகவும் அவதியுறுகிறார்கள் என்பது இந்த அரசாங்கத்திற்கு நன்கு தெரிந்த உண்மை. இன்னொன்றும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு எலக்ட்ரிசிட்டி போர்டில் சரியான கணக்கு விவரங்கள் போர்டுக்கு வந்து எட்டியதாகத் தகவல் இல்லை என்று தெரிகிறது. எலக்ட்ரிசிட்டி போர்டின் ஃபைனான்ஷியல் பொசிஷன் எப்படி இருக்கிறது என்பதை போர்டு தெரிந்து கொள்ளவில்லை என்றால் நிச்சயமாக நாளைக்கு எந்த அளவில், எங்கே போய் நிற்குமோ என்று ஐயப்பட வேண்டிய நிலைமை இருக்கிறது. இன்றைக்கு டிமாண்ட் கலெக்ஷன் பேலன்ஸ் ஸ்டேட்மெண்ட் இதுவரையில் போர்டுக்கு வந்ததாகவோ, தயார் செய்து போர்டிடம் சமர்ப்பித்ததாகவோ தெரியவில்லை. ஆகவே, அரசாங்கம் இதில் அக்கறையாக இருக்க வேண்டுமென்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் அங்கே டெம்பரரி கேஷுவல் லேபர்ஸ் இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னதைப்போல், அப்படி 20,000-க்கும் மேலே அவர்கள் இருக்கும்பொழுது வெளியிலேயிருந்து நியமனங்கள் செய்திருக்கிறோம். அது முறையா என்று கேட்க விரும்புகிறேன். பல்லாண்டு



களாக கேஷுவல் லேபர்ஸ் ஆக பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த சீர்கேடுகள் மேலும் நடக்காமல் அரசாங்கம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதோடு ஆளுங்கட்சியைச் சேர்ந்த யூனியன் அங்கே செயல்படுகிறது. அந்த யூனியனைச் சேர்ந்த தொழிலாளிகளுக்கு ஒரு விதமான முறையும், மற்றத் தொழிலாளிகளுக்கு இன்னொரு விதமான முறையும் கையாளப்படுவதாகப் புகார் இருக்கிறது. நிச்சயமாக அது வரவேற்கத் தக்கது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு இப்படிப்பட்ட நிலைமைகள் அங்கே இருப்பதால் தொழிலாளிகளின் மீது ஒழுங்காக நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகளுக்கு வாய்ப்பு இல்லை. அதிகாரிகளை தொழிலாளர்களே கெரோ செய்யும் முறை இருக்கிறது. அதற்குக் காரணம் ஆளுங் கட்சி யூனியனைச் சேர்ந்த ஊழியர்களின் பிடிப்பில் இருப்பதால் இந்த முறைகேடுகள் நடைபெறுகின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

ஒரு பவர் கார்ப்பரேஷன் அமைக்க இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். பல்வேறு கார்ப்பரேஷன்களை இவர்கள் ஆட்சியில் அமைத்திருக்கிறார்கள். அங்கிருக்கும் முறைகேடுகளை நாம் நன்றாக அறிவோம். தங்களுக்கு வேண்டியவர்களை கார்ப்பரேஷனில் அதிகாரிகளாக நியமிக்க கார்ப்பரேஷன் அமைக்க இருப்பதாக பரவலாகக் கூறப்படுகிறது. இதற்கு பவர் கார்ப்பரேஷன் அமைய இருப்பது நிச்சயமாக வரவேற்கத்தக்கது அல்ல என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** சில சமயங்களில் நல்ல நோக்கத்தோடு ஆரம்பிக்கப்படும் காரியங்கள் கூட விமர்சனத்திற்குரியதாக இருக்கிறது. பவர் கார்ப்பரேஷன் அமைப்பது தங்களுக்கு வேண்டியவர்களைப் போடுவதற்காக என்று சொல்கிறார்கள். மின்சார வாரியத் தலைவர்தான் அதற்கும் தலைவராக இருப்பார். அந்த அர்த்தத்தில் செய்யவில்லை. இந்திய அரசே

எல்லா மாநிலங்களிலும் மின்சாரப் பற்றாக்குறை இருக்கும் காரணத்தால் உற்பத்தியைத் தீவிரமாக்க தனியாகச் செயல்படுவது நல்லது என்று ஆலோசனை சொன்னார்கள். அவர்கள் சொல்லுவதற்கு முன்னாலேயே அப்படிச் செய்வது உசிதமாக இருக்குமென்று நான் ஆலோசித்துக் கொண்டிருந்தேன். ஆகவே, உற்பத்தியில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்ற அடிப்படையில் நிறைவேற்றப்படுகிறது. நோக்கம் கற்பிப்பது நல்லதல்ல.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பேசின் பிரிட்ஜ் மின் நிலைய தொழிலாளர்களுக்கு எருக்கஞ்சேரியில் லேபர் குவார்ட்டர்ஸ் கட்டுவதற்கு 1962-ம் ஆண்டில் நிலம் வாங்கப்பட்டதாகவும், இதுவரை அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவில்லை என்றும் புகார் இருந்து கொண்டிருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் 1970-72-ல் ஏற்பட்ட ஃப்ளட் காரணமாக ஏற்கனவே இருந்த குடிசைகள் நாசமடைந்து பெரும் கஷ்டத்தில் இருக்கிறார்கள் என்ற விவரம் அரசாங்கத்திற்கும் நன்றாகத் தெரியும். அந்தத் தொழிலாளர்களைச் சேர்ந்த பல்வேறு யூனியன்கள் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை என்ற புகார் இருந்து வருகிறது. அதை அரசாங்கம் உடனடியாக நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஹொகனேகல் திட்டம் நீண்ட காலமாக அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்று அறிக்கையில் பார்க்கிறோம். நெருக்கடியான இந்தச் சூழ்நிலையில் நமது அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் பார்க்கும்போது ஐந்தாவது திட்ட இறுதியில் கூட நம்முடைய மாநிலம் பற்றாக்குறையில்தான் இருக்கப் போகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த நிலையில் இம்மாதிரித் திட்டங்களை உடனடியாக அமல்படுத்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோதையாறு திட்டத்திற்கு மேல் பகுதியில் சிறு சிறு மின்சாரத் திட்டங்கள் நிறைவேற்றுவதற்குள்ள வாய்ப்பு இருக்கிறது என்று கோதையாறு மின் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டும்போது



திரு. ராயப்பா, என்று நினைக்கிறேன் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அங்கு குறைந்த செலவில் சிறு சிறு மின் திட்டங்களை அமைக்க வாய்ப்பு இருக்கிறது. அதையும் அரசாங்கம் உன்னிப்பாக ஆலோசிக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

நிலக்கரியைப் பயன்படுத்தி அனல் மின் நிலையத்தையும், நீர் மின் நிலையத்தையும் புதிதாக ஏற்படுத்த நம்முடைய மாநிலத்தில் வாய்ப்பு இல்லாத நிலையில் அணு மின் திட்டங்களை ஏற்படுத்த அரசு முன்வர வேண்டும். நீண்ட காலமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அணு மின் நிலையத் திட்டம் ஒன்றைத் தொடங்க வாய்ப்பு இருப்பதாக அரசு கூறிக் கொண்டே இருக்கிறது. காலதாமதமின்றி உடனடியாக அதனைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. என். கே. பழனிசாமி:** துணைச் சபாநாயகர் அவர்களே, நாட்டில் மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. ஃப்யூவல் பற்றாக்குறை இருக்கிறது. உலகம் பூராவும் இருக்கக்கூடிய நிலைமை இது. உலகம் பூராவும் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. நம் தேசத்திலும் ஏற்பட்டிருக்கிறது. நெருக்கடியைச் சமாளிக்க மத்திய சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? இந்த மாநிலத்திலே ஓரளவு மின்சாரம் இருந்தாலும் மற்ற மாநிலங்களிலே மிக மோசமான நிலைமை இருப்பதற்குக் காரணம் மத்திய சர்க்கார்தான். இரண்டாவது மைன் கட் வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். மத்திய சர்க்கார் அதற்கு சாங்ஷன் கொடுக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது 1,400 மெகா வாட் பவர் அதிகப்படியாக நமக்குத் தேவை என்று இருந்தாலும் எந்த அளவுக்கு அந்தத் தேவையை நிறைவேற்றப் போகிறோம் என்பதுதான் பிரச்சினை. ஃபர்னஸ் ஆயில், நிலக்கரி இரண்டும் அவசியம். இது கிடைப்பது ஒரு பக்கம்; கிடைத்தாலும் என்ன விலைக்குக் கிடைக்கும் என்பது இன்னொன்று. ஏற்கனவே இருக்கக்கூடிய இன்ஸ்டால்டு கப்பாசிடி அளவுக்காவது கரன்ட் உற்பத்தி செய்கிறோமா என்றால் இல்லை. என்ன காரணம்? போதுமான மெஷினரிகள் கிடையாது. வெளிநாடுகளை நம்பி இருக்க வேண்டியிருக்கிறது. நெய்வேலியில் ஒரு பக்கெட் எஸ்கவேட்டர் ரிப்பேர் ஆகிவிட்டால்

அதை ரிப்பேர் செய்ய ஃபாரினுக்குப் போக வேண்டும். இங்கு ஒருவருக்கும் தெரியாது. இந்த நிலையில் இன்ஸ்டால்டு கப்பாசிடியை எப்படிப் பூர்த்தி செய்ய முடியும்?

ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம்களை எடுத்துக் கொண்டால் பல திட்டங்கள் போன வருஷம் பட்ஜட் ஸ்பீச்சில் கொடுக்கப் பட்டிருக்கிறது. வரவேற்கக்கூடியவை. அது எந்த அளவுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது? எந்தெந்த மாநிலங்களில் திட்டங்களை ரெடியாக வைத்திருக்கிறார்களோ அவற்றுக்கு சாங்ஷன் தருகிறோம் என்று மத்திய அரசாங்கம் சொல்லியிருக்கிறது. அந்தத் திட்டங்களில் எவ்வளவு சாங்ஷன் செய்யப் பட்டிருக்கின்றன? எவ்வளவு பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றன? அவற்றை எடுத்துக் கொள்ள என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இந்த மின்சார பட்ஜெட்டில் அவற்றுக்கெல்லாம் விளக்கம் இல்லை.

சிறு சிறு டர்பைன்—பல திட்டங்களைப் போட்டிருக்கிறோம். அந்தத் திட்டங்கள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன? பெரிய அளவுக்கு நிறைவேற்றக்கூடிய அளவில் உத்தரவு எதுவும் கிடையாது. எப்போது பார்த்தாலும் பவர் நெருக்கடி. இரண்டு வருஷமாக இருக்கிறது. இன்னும் மூன்று வருஷத்தில் நிலைமை இன்னும் மோசமாகப் போகிறது. மின்சார நெருக்கடி காரணமாக லே ஆப்—வேலை நிறுத்தம். தொழில் பாதிக்கப்படுகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கிறது. உற்பத்திக் குறைவு, விலைவாசி ஏற்றம், இதற்கெல்லாம் சர்க்கார் சொல்லக் கூடிய சொல்யூஷன் என்ன? மறுபடியும் இந்தமாதிரி நிலைமை ஏற்படாமல் இருக்க சர்க்கார் என்ன உத்தரவாதம் கொடுக்கிறது?

99 கோடி ரூபாய் வருமானத்தை எதிர்பார்த்து 81 கோடி ரூபாய்தான் வந்திருக்கிறது. 18 கோடி ரூபாய் பற்றாக்குறை. கேரளாவிலிருந்தும், மைசூரிலிருந்தும் மின்சாரத்தை வாங்குவதற்கு அதிகப் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதிலே ஒரு 18 கோடி ரூபாய். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தை நிறுவ செலவு 15 கோடி ரூபாய். மொத்தமாகப் பார்த்தால் 50 கோடி





ரூபாய்க்கு மேல் வருகிறது. இதை எப்படிச் சரிக்கட்டப் போகிறீர்கள்? மத்திய சர்க்கார் பாங்க் ரேட்டில் 2 சதவிதத்தை உயர்த்தி விட்டது. ரிசர்வ் பாங்கில் வாங்க முடியாது. எப்படி இந்தப் பணத்தைத் திரட்டப் போகிறீர்கள்? பாக்கி இருக்கக்கூடியவற்றின் விலைகள் ஏறுகின்றன. கடன் வாங்குவது என்றால் வட்டி ஜனங்கள் தலைமேல் விழுகிறது.

ஏற்கனவே, உற்பத்தியாகக்கூடியதில் 5 சத விகிதம் டொமஸ்டிக் கன்சம்ஷன். இதிலே 11 கோடி ரூபாய் வருகிறது. 6.8 சத விகிதம் கமர்ஷியல் கன்சம்ஷன். இதிலேயும் 11 கோடி ரூபாய் வருகிறது. இண்டஸ்ட்ரீசை எடுத்துக் கொண்டால் உற்பத்தியாவதில் 49.2 சத விகிதம் போகிறது.

அதேபோல் விவசாயத்திற்கு 24.1 சதவிகிதம். யூனிட்டுக்கு எவ்வளவு சார்ஜ் செய்கிறீர்கள்? டொமஸ்டிக் கன்ஸம்ஷனுக்கு என்றால் 36 பைசா என்று வைக்கப்பட்டிருக்கிறது. விவசாயத்திற்கு 11 சதவிகிதம். ஆனால் தொழிற்சாலைக்கு மட்டும் 3.5 சதவிகிதம். பாதிக் கரண்டுக்கு மேல் சாப்பிடுவது இண்டஸ்ட்ரீஸ். அவற்றிற்கு ரிபேட்ஸ் கொடுக்கிறீர்கள். அவர்களுக்கு வேண்டிய வசதிகளை எல்லாம் செய்து தருகிறீர்கள். வெஸ்ட்கோஸ்ட் கம்பனிக்கு, மூவாயிரம் ரூபாய்க்கு குத்தகைக்குப் போவதை சர்க்கார் ஜ். 800-க்கு கொடுத்திருக்கிறது. தொழிற்சாலைகளுக்கு எவ்வளவோ சலுகைகள் அளித்தும், அவர்களுக்கு ஏராளமான லாபம் வந்தும் அவர்களுக்கு கொடுக்கப்படும் மின்சாரத்திற்கான யூனிட் சார்ஜை ஏன் ஏற்றக்கூடாது?

அடுத்தபடியாக, ஆடிட் ரிப்போர்ட். சரியான வவுச்சர்கள் கொடுப்பதில்லை. 1972-ல் இருந்து இதுவரை கொடுக்கப்படவில்லை. அவர்கள் செய்யக்கூடிய இன்டர்னல் ஆடிட்டிற்கும் வவுச்சர்கள் சரியானபடி கொடுப்பதில்லை, ஆடிட் டிபார்ட்மென்ட் செய்யக் கூடிய ஆடிட்டுக்குப் சரியான வவுச்சர்களைக் கொடுப்பதில்லையென்று சொன்னால் இந்த எலக்ட்ரிஸிட்டி போர்ட் கணக்கு முழுவதும் எப்படி உண்மை என்று சொல்வது?

போர்டில் தனியாக அக்கவுண்ட்ஸ் விங் என்றிருக்கிறது. பைனான்ஷியல் கண்ட்ரோலர் இருக்கிறார். பெரிய ஆபீஸ் இருக்கிறது. இரண்டு டஜன் கெஸட்டட் ஆபீஸர்கள் இருக்கிறார்கள். இவர்களை வைத்திருக்கும்போது இவர்கள் என்ன செய்கிறார்கள்? ஏன் சரியானபடி ஆடிட் செய்யப்படுவதில்லை? ஏன் வவுச்சர்கள் சரியானபடி கொடுக்கப்படுவதில்லை? இதற்கு சர்க்கார் பதில் சொல்லவேண்டும்.

பைகாராவை எடுக்கும்போது ரூ. 1,40,000 லைசென்ஸ்தாரர்களுக்குக் கொடுத்ததாக கணக்கு இருக்கின்றது. ஆனால் செக் செய்யும்போது யாரும் இல்லை. அப்போது அந்தப் பணம் எங்கே போயிற்று என்று தெரியவில்லை.

மேட்டூரை எடுத்துக்கொண்டால் 23 லட்சம் ரூபாய், திருச்சிக்கு 4 லட்சம், இன்னொரு மாவட்டத்திற்கு ஐந்து லட்சம் என்றிருக்கிறது. பைனான்ஷியல் லெட்ஜருக்கும் ப்ரைஸ் லெட்ஜருக்கும் இடையே வித்தியாசம் இருக்கிறது. மேட்டூருக்கு மட்டும் 23 லட்சம் என்றால் இதில் என்ன நடக்கிறது?

பின்னர், ஸ்டோர் பர்சஸை எடுத்துக்கொண்டால் என்னென்ன தேவை என்பதை ஆராய்ந்து கணக்கிட்டு மொத்தமாக வாங்கிக் கொடுக்கவேண்டுமே தவிர தனிப்பட்டவர்களிடம் வாங்குவதற்கு அனுமதிக்கக்கூடாது. ஏனென்றால் அவர்கள் காண்ட்ராக்ட்காரர்களிடமிருந்து வாங்குவார்கள். அவர்கள் கமிஷன் கொடுக்கிறார்கள். அந்தக் கமிஷனுக்காக வேண்டாத பொருள்களை வாங்கி டம்ப் செய்து வைக்கிறார்கள். கிராமங்களுக்கு லைட்ஸ் போட வேண்டுமென்றால் மெட்டீரியல்ஸ் இல்லை என்று சொல்லுகிறார்கள். உபயோகிக்க முடியாத மெட்டீரியல்ஸ் லட்சக்கணக்கில் இருக்கிறது.

ஹரிஜனங்கள் இருக்கக்கூடிய இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக 78 லட்சம் ரூபாய் ஒதுக்கினார்கள். இதுவரை 12,000 ரூபாய்தான் போர்டில் இருந்து கொடுத்திருக்கிறார்கள். ஹிந்துஸ்தான் நெட் கம்பனிக்கு அட்வான்ஸ் கொடுத்தார்கள். 25,000 ரூபாய்க்கான பொருள்கள்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது.





பாக்கிப் பணத்தைக் கேட்கும்போது வாங்கிய பணத்திற்கு செக் கொடுத்தார்கள். அந்தச் செக்கை பாங்கில் கொடுக்கும்போது அது டிஸ்ஹானராகிறது. ஏன் சர்க்கார் அந்தமாதிரி கம்பனிகளுக்கு ஆர்டர் கொடுக்கவேண்டும்? அதற்கு யார் பொறுப்பு? அவர்களின் பேரில் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்கிறேன்.

எண்ணூரில் டிபக்டீவ் டிஸைனிங். காரணம் டெக்னிக்கல் ஆள்களைப் போடாததுதான். அதை மாற்றவேண்டும்.

ட்ரெட்ஜேர்ஸ்-ஸை எடுத்துக்கொண்டால் விலை 85 லட்சம் ரூபாய். ஈஸ்ட் ஜெர்மனியிலிருந்து வருகிறது. நம் சர்க்கார் அதை நேரடியாக வாங்குவதற்குப் பதிலாக ஈஸன் கம்பனியிடமிருந்து 85 லட்சம் ரூபாய் வாடகைக்கு வாங்கியிருக்கிறது. நாமே அந்த மெஷினை வைத்துக்கொள்ளலாமே. 85 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள ட்ரெட்ஜருக்கு 85 லட்சம் ரூபாய் வாடகை கொடுக்கவேண்டிய நிலை இருக்கிறது. இது ஏன்? பில்பரேஜ் நிறைய இருக்கிறது.

பசுமலையில் ஐந்தரை லட்சம் ரூபாய் அளவிற்கு திருட்டு போயிருக்கிறது. ஒரு அஸிஸ்டன்ட் என்ஜினியரின் சொந்தக்காரர் ஸ்டோர் வைத்திருக்கிறார். சர்க்காருக்கு வேண்டிய மெட்டீரியல்ஸ், காப்பர் போன்றவை அங்கிருந்து வருகிறது. அதனால் ஐந்தரை லட்சம் ரூபாய் அளவிற்கு திருட்டு போய்விட்டது. இது வரையில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கவில்லை.

செங்கற்பட்டில் அச்சரப்பாக்கத்தில் இரண்டரை லட்சம் ரூபாய் திருட்டு போயிருக்கிறது.

திருச்சியில் ஆறு பேர்கள் வேலைசெய்யக்கூடிய ஆபீஸில் ரூ. 8,000-க்கு பொய் கையெழுத்து போட்டு, போர்ஜரி செய்து பாங்கிலிருந்து பணமும் வாங்கியாகிவிட்டது. யார் வாங்கினார்கள்? பொய் கையெழுத்து போட்டு வாங்கியவர்களின்மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இதற்கு விசாரணை போட்டார்கள். விசாரணைக்குச் சென்ற அதிகாரிகள் அந்த ஆறு

பேர்களில் யார் மீதும் குற்றம் கண்டுபிடிக்கமுடியவில்லை. அந்த ஆறு பேர்களில் யாராவது ஒருவர் தான் கையெழுத்து போட்டிருக்கவேண்டும். அவர்கள் பேரில். யார் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கேட்கிறேன். நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒருவேளை அவர்கள் கட்சிக்காரர்களாக இருக்குமோ என்னவோ. இல்லாவிட்டால் அந்தமாதிரி ரிப்போர்ட் வரவேண்டிய அவசியமில்லை. யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்தமாதிரி குறைபாடுகளைப் போக்க வேண்டும்.

கைட் லைன்ஸ் கமிட்டி என்று அகில இந்திய அளவில் ஒரு முறை இருக்கிறது. நம் போர்ட் சேர்மனும் அதில் ஒரு மெம்பர். எல்லா போர்ட் சேர்மென்களும் அதில் மெம்பர்களாவார்கள். எல்லோரும் அக்கூட்டங்களுக்குப் போகிறார்கள். ஆனால் நம் சார்பில் இவர்கள் ஏன் போகவில்லை? சர்க்கார் போகவேண்டாம் என்று தடுத்தார்களா? 40,000 பேர்கள் டெம்பரரியாக இருக்கிறார்கள். சமீபத்தில் வேறு ஆள்களுக்கு வேலை கொடுத்திருக்கிறார்கள். இவர்களை ஏன் அவற்றில் போட்டிருக்கக்கூடாது? சுருளியாறில் மலையாளி—தமிழர் சண்டை ஏற்பட்டு 23 பேர்கள் அடிபட்டனர். அவர்கள்பேரில் கேஸ் போடப்பட்டிருக்கிறது. அடித்தவர்கள் பேரில் ஒன்றும் இல்லை. இது சரியா? ட்ரேட் யூனியனில் ஒரு லட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். பல யூனியன்கள் இருக்கின்றன. ஆனால் 17 பேர்களுக்கு ஒரு யூனியன் தொடங்குவது சரியா? நாஷனல் மினிமம் வேஜ் அடிப்படையில் இந்த இலாகாவில் உள்ளவர்களின் சம்பளவிகிதங்கள் மாற்றியமைக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***திரு. கு. இராசமாணிக்கம்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் இங்கு அளிக்கப்பட்டிருக்கிற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை, 1973-74-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை இவை குறித்து நடைபெறுகிற இந்த விவாதத்தில் நான் என்னுடைய கருத்துக்களைக் கூறிக்கொள்ளவிரும்புகிறேன்.





மின்சாரம் என்பது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு சாதனமாக இன்றையதினம் ஏற்பட்டு விட்டது என்பதை நாம் அறிவோம். அதிலும் சென்ற இரண்டு ஆண்டுகளாக பல கட்டுப்பாடுகள் எல்லாம் ஏற்பட்டு அதனால் கடுமையான மின்சார வெட்டுக்கள் எல்லாம் தமிழ்நாட்டில் ஏற்பட்டது என்பதையும் நாம் அனைவரும் அறிவோம். இந்த நிலைமை தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள பல மாநிலங்களுக்கும் இந்த நிலை ஏற்பட்டது. இங்கு எதிர்க்கட்சியில் இருந்து பேசியவர்கள் எல்லாம் மாநில அரசுதான் இதற்கெல்லாம் காரணம் என்று சொன்னார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில், மாநில அரசு எந்த அளவிற்கு கிடைத்திருக்கிற மின்சாரத்தை வைத்துக்கொண்டு எந்தளவிற்கு சிறப்பாக அதை நிறைவேற்றிவருகிறது என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இங்கே மின்சார உற்பத்தி குறைவாக இருந்தும் இன்றையதினம் 98 சதவிகிதம் கிராமங்களுக்கும், நகரங்களுக்கும், சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டு இருக்கிறது. அரிசன குடியிருப்புகளில் 96 சதவிகிதம் அளிக்கப்பட்டு இருக்கிறது. அரிசன குடியிருப்புகளில் இன்னும் 900 குடியிருப்புகள்தான் மின்சார வசதி பெறுவதற்கு பாக்கியிருப்பவை. ஆனால் கடலைத் தாண்டிவிட்டு, வாய்க்காலைத் தாண்டமுடியாத நிலையில், இன்றையதினம் தமிழக அரசு இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசு கொஞ்சம் அக்கறை எடுத்துக்கொண்டால் இன்னும் பாக்கியிருக்கிற குடியிருப்புகளுக்கும் மின்சார இணைப்பு கொடுத்துவிட முடியும். இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிற நெய்வேலி இரண்டாவது சுரங்கம், கல்பாக்கம், மேட்டூர் இவைபோன்ற திட்டங்கள் வேலைசெய்தால் இப்போதுள்ள மின்சாரக் கட்டுப்பாடும் நீங்கும், மின்சார வெட்டும் இனி இராது.

சில மாதங்களுக்கு முன்னால் 60 சதவிகிதம் மின்சார வெட்டு இருந்தது. அது இப்போது 30 சதவிகிதம் ஆகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு இயற்கை நமக்கு ஓரளவுக்கு ஒத்துழைப்பு தந்து இருக்கிறது.

1969-ம் ஆண்டு அக்டோபரில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஊரெல்லாம் ஒளிமயம் செய்திடும் கிராம மின் வசதிச் சிறப்புத் திட்டம் ஒன்றை அறிவித்து, அதன் மூலமாக கிராமப்புறங்களிலே பல்வேறு கிராமத் தொழில்கள் பெருகவும், வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் தொடர்புகள் அளிக்கவும், மாநிலத்தின் கிராமப் பொருளாதாரம் பெருக வேண்டும் என்ற கருத்தில் ஒரு லட்சிய நோக்கத்தைக்கொண்ட சிறப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். அந்தத் திட்டம் இப்போது விரைவாக நல்லமுறையில் செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது என்பதை நாமெல்லாம் அறிவோம்.

(திரு. செ. கந்தப்பன் தலைமை)

உணவுப் பற்றாக்குறையால் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு கலவரங்கள் ஏற்பட்டபோதிலும், நம் நாட்டில் அத்தகைய கலவரங்கள் இல்லை. அந்த அளவுக்கு விவசாயம் இங்கே சிறந்து இருக்கிறது.

10-15 ஆண்டுகளுக்கு முன்னால் மின்சாரத்திற்கும் விவசாயத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. அந்த அளவுக்கு விவசாயிகளின் நிலைமை இருந்தது. தண்ணீர் இருந்தால் தான் பயிர் என்ற நிலைமை இருந்தது. இன்றையதினம் நல்ல தரமான விதைகள் மூலமாகவும், விசையேற்றங்களை உபயோகித்தும் ஒரு போகம், இரண்டு போகம் என்று இருந்ததை மூன்று போகம், நான்கு போகம் என்ற முறையில் மாற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு மின்சாரம் விவசாயத்திற்கு அடிப்படைத் தேவையாகப் போய்விட்டது. முன்பெல்லாம் மின்சாரம் கொண்டு வருவது என்று சொன்னால், நகரத்திற்குத்தான் கொண்டு வருவார்கள். அப்போதுதான் லாபகரமாக இருக்கும் என்று சொல்வார்கள். அந்த நிலைமையை மாற்றி, இன்று மின்சாரம் கிராமங்களுக்குச் செல்லவேண்டும், அப்போதுதான் நாடு தன்னிறைவு பெற்ற நாடாகத் திகழமுடியும், பொருளாதார வளர்ச்சி பெறமுடியும் என்ற அடிப்படையில், கிராம வளம் பெற வேண்டுமென்ற அடிப்படையில் கொண்டு செல்கிறார்கள்.



இன்றைக்கு மின்சாரம்தான் நாட்டின் உயிர்நாடியாக இருக்கிறது. சூரியன் இல்லை, சந்திரன் இல்லை, நட்சத்திரங்கள் இல்லை என்றாலும் இந்த நாடு தாங்கிக்கொள்ள முடிகிறது. ஆனால் மின்சாரம் இல்லை என்றால் முடிவதில்லை. சில நாட்கள் மழை காரணமாக சூரியன் காண்பதில்லை. அமாவாசை நேரத்தில் சந்திரன் வருவது இல்லை. அப்போதெல்லாம் எந்தப் பிரச்னையும் எழுவது இல்லை. ஆனால் ஒரு நாளைக்கு மின்சாரம் வரவில்லை யென்றால் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவருகிறார்கள், கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவருகிறார்கள், பத்திரிகைகளில் போடுகிறார்கள், அந்த அளவுக்கு மின்சாரம் இன்றைக்கு மிகவும் இன்றியமையாத் தேவையாகிவிட்டது.

மின்சார விநியோகத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் தனியார் நிறுவனங்கள் ஏழு இருந்தன. அவைகளையெல்லாம் 1973-ம் ஆண்டு இறுதியிலும், 1974-ம் ஆண்டு ஆரம்பத்திலும் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கும்பகோணம், ஆடுதுறை, பாபனாசம் போன்ற பகுதிகளில் இதுவரையில் தனியார் மின்சார விநியோக நிறுவனங்கள் இருந்தன. அப்படி இருந்த காரணத்தால் அவர்கள் கிராமங்களுக்குச் சரியான வகையில் மின்சார வினியோகம் செய்யவில்லை. என்னுடைய தொகுதியில், காவிரியின் வடபுறத்தில், இடையாநல்லூர், சிற்றிடையாநல்லூர், 50 சாத்தனூர், 53 சாத்தனூர், பாலாக்குடி, திருவல்லியங்குடி, நரிச்சுமுடம்குடி போன்ற பல்வேறு கிராமங்களும், கொள்ளிடத்தின் தெற்கே பாபனாசம் தொகுதியில் உள்ள பாலாக்குடி, மோவாத்துக்குறிச்சி, கிழாத்துக்குறிச்சி, ஏரகரம் போன்ற கிராமங்களுக்கும் மின்சார வசதி இல்லை. அதற்குக் காரணம், தனியார் நிறுவனம் அந்தப் பகுதியில் இருந்ததுதான். அவர்களிடத்தில் என்ன தான் போய்ச் சொன்னாலும் மறுத்து விடுவார்கள்.

1971-ல் தேர்தல் வந்தபோதுகூட கும்பகோணம் பாராளு மன்றத் தொகுதி தேர்தலில் அந்த நிறுவனச் சொந்தக்காரர் நின்றார்கள். தொகுதியில் மின்சாரம் கொண்டுவந்தால்தான் ஓட்டுப்போடுவோம் என்று மக்கள் சொன்னதால், கம்பங்களையும் கம்பிகளையும் கொண்டுவந்து போட்டார்கள். பிறகு மின்சார நிறுவனத்தின் சொந்தக்காரர் தோற்று விட்டதால் கம்பிகளை லாரிகளில் வந்து எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

[திரு. கு. இராசமாணிக்கம்] [1974 ஆகஸ்ட் 23

இன்றையதினம் வரையில் மின்சாரம் அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்குக் கிடைக்கவில்லை. எங்கள் பகுதியில் இது மிகவும் அடிப்படையான அவசரப் பிரச்னை. எங்கள் கிராமங்கள் காவிரியின் பக்கத்தில் இருப்பதால் எல்லாக் காலங்களிலும் பயிர் செய்யும் நிலையிருக்கிறது. எங்கள் பகுதியில் மின் இணைப்புக் கிடைக்காததால், ஆயில் இன்ஜின் வைத்து அந்தப் பகுதியில் விவசாயம் செய்கிறார்கள். தற்போது ரயில் ஸ்ட்ரைக் வந்த போது டீசல் கிடைக்காமல் அந்தப் பகுதி மக்கள் மிகவும் அல்லலுக்குட்பட்டார்கள். லாரிக்காரர்கள், பஸ்காரர்கள் வந்து டீசலை வாங்கிக்கொண்டு போய்விட்டார்கள். அவர்களோடு போட்டி போட்டுக்கொண்டு விவசாயிகளால் வாங்க முடியவில்லை. அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகளுக்கு மின் இணைப்புக் கிடைத்தால் ஒரு மாதத்திற்கு முன்பே விதை விதைத்து நடவு செய்து விட்டு, இப்போது அறுவடைக்குத் தயாராக இருக்கும் நிலைக்கு மாற்றிக்கொண்டிருப்பார்கள். இப்போது டீசல் போன்றவை கிடைக்காததால் அவர்கள் மிகவும் அவதிக்குட்பட்டு, விவசாயம் பாதிக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, 1974-க்குள்ளேயே அந்தப் பகுதி மக்களுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கவேண்டுமென்று மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கேயுள்ள மின்சாரக் கம்பங்கள் தனியார் கம்பெனிகள் சப்ளைசெய்தவைகளைப் போட்டு இருக்கிறார்கள். அவைகள் ஒரு வருடம், இரண்டு வருடம் கழித்துப் பார்த்தால் ஒட்டகம் போல் வளைந்துகொண்டு விடுகிறது. ஆகவே, இந்தத் தனியார் கம்பெனிகளோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை ரத்து செய்து விட்டு, அரசாங்கமே கம்பங்கள் தயார் செய்ய முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் ஜல்லியைக் குறைப்பார்களோ, கம்பிகளை குறைப்பார்களோ, சிமின்டைக் குறைப்பார்களோ, என்ன குறைப்பார்களோ தெரியவில்லை, கொஞ்ச நாள் ஆனால் 'ட' மாதிரி வளைந்து விடுகிறது. ஆகவே, அந்த கான்டிராக்டை ரத்து செய்து விட்டு, அப்படிப்பட்ட கம்பங்களை செய்ய அரசாங்கமே முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 23] [திரு. கு. இராசமாணிக்கம்]

மேலும், அந்தப் பகுதியில் இருக்கிற தனியார் நிறுவனங்கள் செப்புக்கம்பிகளை எடுத்துவிட்டு, அலுமினியக் கம்பிகளாக மாற்றுவதாகத் தெரிகிறது. அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும்.

எங்கள் பகுதிக்கு மின்சாரம் கொடுக்கவேண்டுமென்று சொல்கிற நேரத்தில், கம்பம் இல்லை, கம்பி இல்லை என்று சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சொல்கிறார்கள். அவற்றை விரைவில் அவர்களுக்குக் கொடுத்தால் அந்த ஏரியாவிற்கு மின்சாரம் வரும். எங்கள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் மின்சார விளக்கு எரிகிறது. கைக்கெட்டிய தூரத்தில் அது வரவேண்டுமென்றுதான் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். எங்கள் பகுதியில் ஒரு மைல், அரை மைல், மூன்று பர்லாங்கு ஆகிய தூரத்தில் மின் விளக்கு எரிகிறது. எங்கள் பகுதிக்கு அதைக் கொண்டு வந்து தாருங்கள் என்று மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களிடத்தில் எழுத்து மூலமாகக் கேட்டு இருக்கிறேன். விவசாயத்திற்கு மிகமிக இன்றியமையாத தேவையாக இருக்கிறது மின்சாரம். நாங்கள் செய்கிற விவசாய காரியத்திற்கு தண்ணீர் குறைவாக இருந்தால், மின்சாரம் இருந்தால் விசையேற்றம் வைத்து விவசாயம் நல்ல முறையில் செய்ய முடியும். ஆடுதுறை பகுதியில் நல்லாக நெல் விளையும், புதுபுது நெல் வகைகள் அங்கே தான் கண்டுபிடிக்கப்படுகின்றன என்பதும் எல்லோருக்கும் தெரியும். ஆகவே, நல்ல விளைச்சலுக்கு வழிகோலுகிறவகையில் மின்சார இணைப்பை எங்களுக்கு 1974-க்குள் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள 1974-ம் ஆண்டு மின்சாரவாரிய நிதிநிலை அறிக்கை, 1973-74-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சென்ற முறையெல்லாம் நான் மின்சாரத் துறை விவாதத்திலே பேசியிருக்கிறேன். இருந்தாலும் கூட இந்த ஆண்டு பேசுகிற போது கொஞ்சம் அதைப் பற்றி, முன்பெல்லாம் அறிந்திருந்ததை விட, அதிகமாகத் தெரிந்துகொண்டு பேசுகிறேன் என்று நினைக்கிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1974 ஆகஸ்ட் 23

இப்போது நம்முடைய அவையில் 'பப்ளிக் அன்டர்டேகிங் கமிட்டி' ஒன்று அமைத்து இருக்கிறார்கள். அந்தக் குழுவில் இருக்கிற 20 உறுப்பினர்களில் நானும் ஒருவன். எங்களையெல்லாம் அந்த மின்சார வாரியத் தலைவரும், அதனுடைய சீஃப் இன்ஜினீயரும் மற்றும் அதிகாரிகளும் எல்லா இடங்களுக்கும் அழைத்துச் சென்று அங்கேயிருக்கும் உண்மை நிலைகளை எங்களுக்கு எடுத்துக் காட்டினார்கள். அதற்காக நான் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12.00)

பொதுவாக இந்தக் குழு சென்ற இடங்களில் எல்லாம் எங்களுக்கு மனத் திருப்தி ஏற்பட்டது. குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்லும்போது, கிராமப் புறங்களிலும், கீழ் மட்டங்களிலும் இருக்கின்ற குறைபாடுகளைச் சொன்னார்கள். ஆனால் அங்கே சென்று பார்க்கும்போது மன நிறைவு ஏற்படுகிறது. மலைப் பகுதிகளிலும், அங்கே கட்டப்படுகின்ற 'டாம்' பகுதிகளிலும் ஏற்படுகின்ற கஷ்டங்கள், சிரமங்கள், அங்கே அவர்கள் செயல்படுத்துகின்ற திட்டங்கள், செய்யப்படுகின்ற செலவுகள் இவைகளை எல்லாம் பார்க்கும்போது இந்தக் கமிட்டிக்கு திருப்தி ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சார வாரியத்தின் சேர்மென் அவர்களும், மற்றும், எஸ்.இ., சி.இ. போன்றவர்களும் எங்களை நல்ல முறையிலே உபசரித்தது மட்டுமல்லாமல் இந்த மின்சார வாரியத்தைப்பற்றி எங்களை எஜுகேட்டும் செய்தார்கள். மின்சார வாரியத்தின் செயல் முறைகளைப் பற்றி நல்ல முறையிலே விளக்கிச் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் இந்திய துணைக் கண்டத்திலேயே மின்சாரத் துறையில் முதன்மையாக இருக்கிற மாநிலம் நம்முடைய தமிழ்நாடுதான் என்பதை இங்கே பேசிய எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். இந்திய துணைக் கண்டத்திலே இருக்கின்ற மின்சார பம்புசெட்டுகளில்--விவசாயப் பம்புசெட்டுகளில் மூன்றில் ஒரு பங்கு நம்முடைய தமிழ்நாட்டிலேதான் இருக்கிறது என்பதை எண்ணி நாமெல்லாம் பெருமைப்படுகிறோம். அது



1974 ஆகஸ்ட் 23] [திரு. கே. எ. வகாப்]

பெருமைப்படக் கூடிய ஒன்றுதான். இன்றையதினம் பசுமைப் புரட்சி ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் இந்த விவசாய பம்புசெட்டுகள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வட மாநிலங்களிலும் சென்று பார்த்தோம். நூற்றுக் கணக்கான கோடி ரூபாய் செலவு செய்து பக்ராநங்கல் திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள். வேறு பல திட்டங்களையும் நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்த ஆண்டு கூட அங்கே மின்சார வெட்டு 70 சதவிகிதம், 80 சதவிகிதம் என்று இருக்கிறது. ஆனால் நமக்குள்ள குறைவான வசதிகளை வைத்துப் பார்க்கும்போது, நாம் 30 சதவிகிதம், 40 சதவிகிதம் தான் மின் வெட்டு கொண்டுவந்திருக்கிறோம் என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உண்மையிலேயே நம்முடைய மாநிலத்திலுள்ள மின்சார வாரியத்தை நாமெல்லாம் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம்.

இன்றையதினம் நம்முடைய தமிழ்நாட்டின் மின்சாரத் தேவையில் 98 சதவிகிதம் விநியோகம் செய்திருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். அதுமட்டுமல்ல. இன்று இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களையும் விட கன்ஸ்யூமர்ஸ் அதிகமாக இருக்கிற ஒரு மாநிலம் நம்முடைய தமிழ்நாடு தான். இப்படி எல்லாத் துறைகளிலும் முன்னோடியாக இருக்கிற தமிழ்நாட்டிலும் மின்சார வெட்டு, பற்றாக்குறை வருகிறது என்றால் நிச்சயமாக அதற்கான சில காரணங்களை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய மாநிலத்தின் தேவை அதிகரித்துக்கொண்டிருக்கிறது. 'காலால் மடை கட்டி நீர் பாய்ச்சும் காவேரி பாய்கின்ற தஞ்சை' என்று தஞ்சை மாவட்டத்தைப் பற்றிச் சொல்வார்கள். அப்படிப்பட்ட தஞ்சை மாவட்டத்திலும் கூட பம்புசெட்டு போட்டு, நீர் இறைத்து பயிர் செய்கிறார்கள்.

எங்களுடைய வடாற்காடு மாவட்டம், தஞ்சை மாவட்டத்திற்கு இணையாக, தஞ்சை மாவட்டத்தோடு பசுமைப் புரட்சியில் போட்டி போடுகிறது என்றால் அதற்கும் காரணம் இந்த மின்சார பம்பு செட்டுகள்தான். அதிக பம்புசெட்டுகள் எங்கள் மாவட்டத்தில்

இருக்கின்றன. இப்படிப்பட்ட காரியங்களால் தான் தேவை அதிகப்படுகிறது. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகின்ற மின்சாரத்தின் அளவையும், நம்முடைய தேவையையும் ஒப்பிட்டுப் பார்த்து, நாம் எந்த அளவுக்கு இப்போது மின்சாரத்தை பயன் படுத்திக்கொண்டிருக்கிறோம் என்பதையும் பார்க்கும்போது, இந்த மின்சார வாரியமும், அதிகாரிகளும் அளித்திருக்கின்ற அறிக்கைகளைப் பார்க்கும்போது உண்மையிலேயே நாமெல்லாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அவர்கள் கொடுத்திருக்கின்ற அறிக்கையில் எத்தனை நீர் மின்சக்தி நிலையங்களை அமைக்கமுடியுமோ அத்தனையும் அமைத்து, அவைகளைப் பயன்படுத்திவிட்டோம். இனிமேல் அனல் மின் நிலையம், அணு மின் நிலையங்கள் மூலம்தான் மின்சார உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலை வந்திருக்கிறது. மேற்கு மலைத் தொடர்ச்சியில், நீலகிரியில் இருந்து கன்னியாகுமரி வரையில் பார்க்கும்போது சிறு சிறு பகுதிகள் எல்லாம் பயன்படுத்தப்பட்டு விட்ட நிலையைத்தான் பார்க்கிறோம். சிறுசிறு திட்டங்கள், பெரிய திட்டங்கள், இணைப்புத் திட்டங்கள், நீரேற்றுத் திட்டங்கள் அமைத்து எந்த வகையில் சிக்கனமாக இருக்க முடியுமோ அந்த வகையில் சிக்கனம் செய்து பயன்படுத்தியிருக்கிறார்கள். அதன் பிறகும் பற்றாக்குறை இருக்கிறது என்றால், இனி நீர் மின் நிலையங்களை விட்டுவிட்டு, தெர்மல் மின் நிலையங்களைத்தான் அமைக்க வேண்டும். எண்ணூர் தெர்மல் மின் நிலையம், தூத்துக்குடியில் திட்டமிடப்பட்டிருக்கிற அந்த இடங்களை எல்லாம் கூட சென்று பார்த்தோம். அவைகளை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது; மத்திய அரசின் பணம் தேவைப்படுகிறது. அதற்கு மாநில அரசு சுறுசுறுப்பாக இருந்து, உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதற்கு துரித மான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். இல்லா விட்டால் இன்னும் எதிர் காலத்தில் நமக்குத் தேவையான மின்சாரம் கிடைக்காமல் போய்விடும் என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே, அதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் மாநில அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கல்பாக்கத்தில் அமைந்து கொண்டிருக்கும் அணுமின் நிலையத்தில் தாமதம் ஏற்படுவதாகத் தோன்றுகிறது. அதை விரைவுபடுத்த நம்முடைய அரசு நடவடிக்கை எடுத்து, மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குந்தாவில் இருக்கின்ற 4-வது நீர் மின் திட்டத்திற்கு வேண்டிய கருவிகள், ஜெனரேட்டர்கள் கனடாவிலிருந்து வந்து விட்டன என்று சொல்லப்படுகிறது. அதையும் இன்னும் துரிதப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நடுவட்டம் நீர்த் தடுப்புத் திட்டம் ஒரு நல்ல திட்டம். புதிய திட்டங்களில் முக்கியமானதொரு திட்டம் சுருளியாறு திட்டம். இந்தத் திட்டங்கள் எல்லாம் எதிர்காலத்தில் இந்த நாட்டுக்கு பலன் அளிக்கின்ற திட்டங்களாக இருக்கும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிடும்போது காடம்பாறை நீரேற்று திட்டம் ஒரு சிக்கனம் இல்லாத திட்டம் என்று குறிப் பிட்டார்கள். இதிலே சிக்கனத்தை மட்டும் நாம் பார்க்கக்கூடாது. நம்முடைய தேவையையும் பார்க்க வேண்டும். காடம்பாறை நீரேற்றுத் திட்டத்தைப் பற்றியும் அதிகாரிகள் எங்களுக்கு விளக்கினார்கள். ஒருமுறை பயன்படுத்திய நீரை மறுபடியும் இரவு நேரங்களில் மின்சக்தி தேவைப்படாதபோது அந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி—100 மெகாவாட் மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கு 110 மெகாவாட் மின்சாரம் நீரை மேலே ஏற்றுவதற்கு செலவானாலும் கூட அது நமக்கு மிகவும் தேவை யான ஒன்று என்பதை நாங்கள் உணர்ந்தோம்.

இப்போது நமக்கு கேரளாவும் மைசூரும் மின்சாரம் வழங்கு கின்றன. ஆனால் எதிர்காலத்திலே கேரளா மின்சாரம் தர மாட்டோம் என்று சொல்லி, மைசூரும் கையை விரித்துவிட்டால் நம்முடைய மாநிலத்தின் நிலைமை என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நம்முடைய தேவையை அப்போது நாம் எப்படி பூர்த்தி செய்து கொள்ள முடியும்? அதிகம் நமக்குத் தேவை என்றால் அதிலே சிக்கனத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எப்படியாவது தேவைக்கு ஏற்ற வகையில் உற்பத்தி

செய்துதான் ஆக வேண்டும். அதிலே சிக்கனத்தைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதைப்போலவே தான் இந்த காடம் பாறை நீரேற்றுத் திட்டமும் இருக்கிறது.

வெளிநாடுகளில், அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பெரிய நாடுகளில் நீரேற்று மின் திட்டங்கள் நல்லமுறையில் செயல்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, நம்முடைய அதிகாரிகளில் சிலரை அங்கே அனுப்பி, அங்கே எப்படி இந்தத் திட்டம் செயல்படுகிறது என்பதைப் பார்த்துவரச் செய்து, இங்கே இன்னும் சிக்கனமாக எப்படி செய்யலாம் என்பதை ஆராய வேண்டும்.

டாக்டர் ஹான்டே அவர்களைக் கூட இப்படிப்பட்ட இடங்களுக்கு அழைத்துச் சென்று காட்டினால் அவர்களும் இந்தத் திட்டத்தை ஒப்புக் கொள்வார்கள் என்று நான் கருதுகிறேன். அவர்கள் இங்கே புள்ளி விபரங்களை வைத்துப் பேசினார்கள். ஆனால் காடம்பாறை திட்டத்தை அவர்கள் நேரில் பார்த்தால் அதைப் பாராட்டுவார்கள். அங்கே என்னுடன் வந்த அங்கத்தினர்கள் அனைவரும் பாராட்டக்கூடிய வகையில் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இப்படியெல்லாம் சிரமப்பட்டு, மேல் மட்டங்களில் வேலை நடைபெற்றாலும், கீழ் மட்டத்திலே செயல்படும் முறைகளைப் பார்க்கும் போது சங்கடமாக இருக்கிறது. தெருக்களிலே சரியாக விளக்குகள் எரிவதில்லை. கிராமப் புறங்களிலே பார்த்தால் தெரியும். நான் ஒரு பேரூராட்சி மன்றத் தலைவர் என்ற முறையில் இதை நன்கறிவேன். அங்கே 350 தெரு விளக்குகள் இருக்கின்றன என்றால் 250 விளக்குகள் சரியாக எரிவதில்லை. எரியவில்லை என்று சொன்னால் புதிய பல்புகளைப் போடுகிறார்கள். மறுபடியும் 'ஃப்யூஸ்' ஆகி விடுகிறது. டியூப் லைட்கள் போடுகிறார்கள். அவைகளும் சரியாக எரியவில்லை. போடச் சொன்னால் போடுகிறார்கள். மறுபடியும் இரண்டு மூன்று நாட்களில் எரியாமல் போய் விடுகின்றன. இப்படிப்பட்ட பிரச்சனைகள் கீழ் மட்டத்திலே இருக்கின்றன. அங்கே மேல் மட்டத்தில் செய்யப்படுகின்ற மாபெரும் வேலை திட்டங்கள் கீழ் மட்டத்தில் சரியாக கவனிக்கப் படாததால் குறைபாடுகள் ஏற்பட காரணமாகின்றன.





டிரான்ஸ்மிஷன் லாஸஸ் பற்றி எல்லாம் அடிக்கடி இங்கே பேசப் படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் அதுபற்றி எடுக்கப் பட்டு வரும் நடவடிக்கைகளைப் பற்றி குறிப்பிட்டார்கள். சேலத்திலும், திருவலத்திலும் ஏ. ஆர். கன்டன்சர்களை பொருத்தி, இந்த லாஸைக் குறைப்பதற்கு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. கம்பி இணைப்பு சம்பந்தப்பட்ட லாஸ் முன்பு 17 சத விகிதம் என்று சொல்லப்பட்டது. ஆனால் இப்போது 27 சத விகிதம் என்று சொல்கிறார்கள். இது எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை பார்க்க வேண்டும். இவ்வளவு பணம் செலவு செய்து மின்சாரத்தை உற்பத்தி செய்து, உற்பத்தி செய்த மின்சாரத்தில் கால் பகுதி வீணாகிறது என்றால் அதிலே நிச்சயமாக போதிய கவனம் செலுத்தப்பட வேண்டும். அதற்கு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தப் புதிய ஏ. ஆர். கன்டன்சர்களை பொருத்துவது அதற்கு முன்னோடியாக அமையும் என்று கருதுகிறேன். இந்த கம்பி இணைப்புகள் மூலம் இவ்வளவு நஷ்டம் ஏற்படுவதைக் கண்டுபிடித்து, ஆராய்வதற்கு ஒரு தனி நிபுணர் குழு ஏற்படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த லாஸ் மட்டுமல்ல என்பதையும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நமக்குத் தெரியாமல் மின்சாரம் திருட்டுப் போகிறது. பெரிய ஊர்களில் மட்டுமல்லாமல் சிறிய சிறிய ஊர்களில், சிற்றூர்களில் கூட திருட்டுப் போகிறது. அதற்கு கீழ் மட்டத்தில் இருக்கின்ற ஊழியர்கள் உடந்தையாக, துணையாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அதை ஆதாரத்தோடு காட்டு என்று சொல்வார்கள். ஆனால் நாங்கள் பார்க்கிற நேரத்தில் அதைத் தீர்ப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்கிறோம். இதையெல்லாம் சொல்லிக் கொண்டிருப்பதை விட—நிச்சயமாக அப்படி நடைபெறுகிறது—அவற்றை நிரந்தரமாகத் தடுக்க—விஜிலென்ஸ் ஸ்க்வாடு என்பதாக கண்காணிப்பு அதிகாரிகளைப் போட்டு--கிராமங்கள் உட்பட அடிக்கடி சோதனை செய்யப்பட வேண்டும். சில ரைஸ் மில்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. சில தியேட்டர்களில்—பவர் கட் இருக்கிறபோதே 3 காட்சிகள் நடக்கின்றன—ஆயினும் அவர்

[திரு. கே. எ. வகாப்] [1974 ஆகஸ்ட் 23

களுக்குக் கொடுக்கப்பட்ட கோட்டாவுக்கு அதிகமாவதில்லை. இதற்கெல்லாம் காரணம் கீழ்மட்டத்தில் இருக்கிற அதிகாரிகளின் துணைகொண்டுதான் இத்தகைய தவறுகள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட இழப்புகள் தேசிய இழப்புகளாகும். இதைத் தடுத்தாலேயே போர்டுக்கு ஏற்படுகிற பொருளாதார நெருக்கடி நீங்கிவிடும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பம்பு செட்டுகளுக்கு காலத்தில் கேட்கிறபோது கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை என்கிற குறை கிராமப்புறங்களில் அதிகமாக இருக்கிறது. பசுமைப் புரட்சியின் வெற்றிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கக்கூடியது மின்சாரத் துறை நன்றாகச் செயல்படுவதுதான். மின்சாரத் துறை பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் அதிக அளவில் கொடுப்பதன் மூலமாகத்தான் அரிசி நெருக்கடியையே நீக்கலாம். இன்னும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஓராண்டு, ஆறு மாதம், ஏழு மாதம் என்று கனெக்ஷன் கிடைக்காமல் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதனால் எங்களுக்கும் சிரமமாக இருக்கிறது. அதிகாரிகளிடத்தில் போய்ச் சொல்லும்போது அதுவும் சிரமமாக இருக்கிறது. முடிந்த அதிக அளவு கொடுக்கிறார்கள், இன்னும் சில இடங்களில் ஓவர் லோடாகக் கூடக் கொடுக்கிறார்கள்—என்றாலும் விவசாயிகளுடைய குறைகளை நீக்க—அங்கங்கே அவர்கள் எவ்வளவு கேட்கிறார்களோ அந்த அளவுக்குக் கொடுக்க வகை செய்யப்படவேண்டும். இது விவசாயிகளுடைய நன்மை மட்டுமல்ல—நாட்டினுடைய பொது நன்மைக்காகும்.

அது மட்டுமல்ல—பெரும் தொழில்களுக்கு குறைந்த விலையில் மின்சாரம் கொடுக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான எதிர்ப்பும் தெரிவிக்கத் தயாராய் இல்லை. கோடிக்கணக்கில் முதலீடு செய்கிறவர்களுக்கு 3 பைசா, 5 பைசா என்று கொடுக்கிறபோது ஐந்தாயிரம்—பத்தாயிரம் என்று முதலிட்டு சிறு தொழில்களை வைத்து நடத்துகிறவர்களுக்கு 18 பைசா, 20 பைசா என்று விநியோகம் செய்வது சரியல்ல என்றுதான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பெருந்தொழில்களும் வளரவேண்டும்—சிறு தொழில்களும் வளரவேண்டும்—இரண்டும் சேர்ந்து ஒருங்கிணைந்து வளர்ந்தால்தான் நாட்டுக்கு நன்மையாக இருக்கும். ஆகவே பெருந்



1974 ஆகஸ்ட் 23] [திரு. கே. எ. வகாப்]

தொழில்களுக்கு அளிக்கப்படுகிற சலுகைகள் சிறு தொழில்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல—இன்றையதினம் மின்சார வாரியத்தில் முன்பு இருந்ததுபோல—மாவட்ட அளவில் ஆலோசனைக் கமிட்டி இல்லை. அதுபோன்ற ஒரு கமிட்டி இருந்தால் உதவியாக இருக்கும். டி.டி.சி. கூட்டத்திற்கு வருகிறார்கள்—என்றாலும் சொல்ல வேண்டிய குறைகள் அதிகமாக இருப்பதனால் தனியாகவே இதற்கு ஒரு கமிட்டி போடுவது உதவியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் கூட்டத்தில் அந்த வட்டார அசிஸ்டெண்ட் என்ஜினியர் வந்து கலந்துகொள்ள வாய்ப்பு இருக்க வேண்டும். பார்வையாளராக அங்கு வர அழைத்தால் அவர்கள் வந்து—அங்கிருக்கக்கூடியவர்கள் சொல்கிற குறைகளைத் தெரிந்து கொள்ள—அவற்றை நீக்க உடனடி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பவர் கார்ப்பரேஷன் ஏற்படுத்துவதுபற்றிப் பேசப்பட்டது. அதை வரவேற்கிறேன். மின்சார வாரியத்தின் பணி அதிகரித்துக்கொண்டே போகிறது. ஆகவே அதன் பணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். அப்படி பகிர்ந்தளிக்கப்படுவதன் மூலமாகத்தான் திறமை அதிகமாக இருக்கும். குறைகள் போக்கப்படும். ஆகவே பவர் கார்ப்பரேஷன் ஏற்படுத்த இருப்பதை நான் வரவேற்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, தாலுக்கா சென்டர்களில் இருக்கிற மின்வாரிய அலுவலகங்களுக்காவது டெலிபோன் வசதி இருக்கவேண்டும். வந்தவாசி தாலுக்காவின் மைய நிலையம்—அதைச் சுற்றி நூற்றுக்கணக்கான கிராமங்கள் இருக்கின்றன. பப்ளிக் டெலிபோன் வசதி இருந்தால்—மக்கள் அங்கங்கே ஏற்படுகிற குறைபாடுகளை உடனுக்குடன் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும். (திரு. நா. வீராசாமி: இராணிப்பேட்டையில் இருக்கிறது.) நான் எல்லா தாலுக்கா சென்டர்

[திரு. கே. எ. வகாப்] [1974 ஆகஸ்ட் 23

களிலும் இதுபோன்ற வசதி செய்யப்பட வேண்டும் என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆற்காட்டில் இருக்கிறதோ என்னமோ எனக்குத் தெரியாது—பொதுவாகச் சொல்கிறேன். அப்போது தான் மக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக இருக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையைப் பொறுத்தவரை தொழில்பேட்டையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அதற்கு உடனடியாக மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறேன். எழுபது கோடி ரூபாய் அளவில் அங்கே வளர்ந்து கொண்டிருக்கிற தொழில்களுக்கு அதிகமான கட்டுப்பாடுகள் விதிக்காமல் மின்சாரம் அளித்து—வாரியம் அதன் வளர்ச்சிக்கு தன் ஒத்துழைப்பை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரிய ஊழியர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் வேலூர் எஸ்.இ. அலுவலகம் சென்றாலும், இங்கே ஸி.இ. அலுவலகம் சென்றாலும் வாரத்தில் ஐந்து நாட்களுக்கு மேல் இந்தத் தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினைகள் குறித்து கான்பரன்ஸ் நடக்கிறது. இதற்குக் காரணம் என்ன? தொழில்கள் என்றால் தொழிலாளர்களது பிரச்சினை இருக்கத்தான் செய்யும். ஆனால் யூனியன் வேண்டுமென்றே பல பிரச்சினைகளை எழுப்பிக்கொண்டே இருக்குமானால்—அப்புறம் வேலை நடைபெறாது—இத்தகைய யூனியன்களின் மீது அரசு கண்காணிப்பாக இருக்கவேண்டும். அவர்கள் செய்கிற கிளர்ச்சியின் காரணமாக கன்ஸ்யூமர்ஸ்தான் பாதிக்கப்படுகிறார்கள். சில மாதங்களுக்கு முன் பில்களே வரவில்லை—பின்னர் சேர்ந்து மொத்தமாக வந்து கட்ட முடியாமல் இவர்கள் தவித்தார்கள்—தவணை முறையில் கட்டலாம் என்று சலுகை தரப்பட்டது. பின்னர் அதிகாரிகளிடம் சென்றபோது அது இப்படி இல்லை அப்படி என்றெல்லாம் விளக்கம் தரப்பட்டது. ஆக ஒரு நாளைக்கு 10 பில்தான் எழுதப்படும் என்பன போன்ற வேண்டாத பல பிரச்சினைகளை தொழிற்சங்கம் எழுப்பி—எப்போதும் தகராறுகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தால் இதுபற்றி அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.



1974 ஆகஸ்ட் 23] [திரு. கே. எ. வகாப்]

குறிப்பாக தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளைக் கவனித்து முடிவு எடுக்கிறபோது—போர்டில் வேலை செய்கிற தொழிலாளி இறந்துவிட்டால் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவருக்கு அங்கே வேலை போட்டுத் தருகிற நிலைமையையும் உருவாக்க வேண்டும். இது மனிதாபிமானத்தோடு கவனித்துச் செய்ய வேண்டிய ஒன்றாகும். (மணி அடிக்கப்பட்டது.)

பொதுவாக நான் இந்தத் துறையைப் பாராட்டி, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

டாக்டர் க. நாகராஜன் : பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் 1974-ம் ஆண்டு தமிழ் நாடு மின் வாரிய நிதிநிலை அறிக்கையை ஆதரித்து சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன்.

சிறப்பான திட்டங்கள், காடம்பாறை போன்ற புதுமையான திட்டங்கள், திறமையான நிர்வாகம், எதிர்காலத்தை மனதிலே வைத்து திட்டமிடும் தன்மை, மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதைச் சமாளிக்கும் திறன், இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது, தமிழக மின் வாரியம் இன்றைக்கு இந்தியாவிலே, இன்னும் சொல்லப்போனால், தென் கிழக்கு ஆசியாவிலேயே ஒரு சிறந்த வாரியமாக இருக்கிறது என்பதை யாரும் மறக்க முடியாது. தமிழக அரசு செய்த சாதனைகளிலே, பெற்ற வெற்றிகளிலே, இந்த மின்வாரியத்தின் ஆக்கப் பணிகள்தான் முதலிடம் பெறுகின்றன. இவ்வளவு சிறப்பு பெற்ற இந்த மின் வாரியத்தின் திறமையினை என்னுடைய சில ஆக்கப்பூர்வமான யோசனைகள் மூலம் இன்னும் திறமையாகச் செயல்படுத்த விரும்புகின்றேன். நமக்கு அளிக்கப்பட்டுள்ள ஃபினான்ஷியல் ஸ்டேட்மென்டில், 150–151 பக்கங்களில், வாரியத்தினுடைய வருவாய் குறைந்துள்ளது என்று கூறப்பட்டுள்ளது. தொழில் பகுதியிலும் சரி, விவசாயப் பகுதியிலும் சரி, வீட்டுப் பகுதிகளிலும் சரி, வாரிய வருவாய் குறைந்துள்ளது. ஆனால், அதே பக்கத்திலே 'அதர் ஐட்டம்ஸ்'—மற்ற இடங்கள்—என்ற பகுதியிலே நாம் எதிர்பார்த்த வருவாய் ரூ. 1.74 கோடியாகும். ஆனால், வந்துள்ள வருவாய்

[டாக்டர் க. நாகராஜன்] [1974 ஆகஸ்ட் 23

4.82 கோடியாகும். மற்ற இடங்களிலேயெல்லாம் வருவாய் குறைந்துள்ளபோது, 'அதர் ஐட்டம்சில்' எப்படி வருவாய் அதிகரித்துள்ளது என்பது தெரியவில்லை. ஏறக்குறைய ரூ. 3 கோடி அதிகமாக வந்துள்ளது. இது எப்படி என்று தெரியவில்லை.

அதர் ஐட்டம்ஸ் என்ன என்றும் கொடுக்கப்படவேயில்லை. என்னுடைய அனுமானம் எல்லாம் கட்டணங்கள் கட்டுவதற்குக் காலதாமதம் ஏற்படும்போது, விதிக்கின்ற அபராதத் தொகை அதிகமாக இருக்கும் என்பதுதான். அதர் ஐட்டம்ஸ் அபராதத் தொகையாகத்தான் இருக்கும். வேறு ஐட்டம்ஸ் இருப்பதாகத் தெரியவில்லை. அபராதத் தொகை எப்படி விதிக்கப்படுகிறது? குறிப்பிட்ட தேதிக்குள், 15-ந் தேதிக்குள் கட்ட வேண்டுமென்று டிமாண்ட் நோட்டீஸ் அனுப்பப்படுகிறது. அந்தத் தேதிக்குப் பின்னால் பணம் கட்டுபவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. ஆனால், உண்மையிலே, விவசாயிகளுக்கும், சிறு ஆலைகளுக்கும், சிறு தொழில்களுக்கும் இந்த நோட்டீஸ் 15-ம் தேதிக்கு முன்னால் அனுப்பப்படுகிறதா என்றால் இல்லை. அவர்களுக்குப் போய் சேரும் போது, 20, 22 தேதியாகி விடுகிறது, அப்பொழுதுதான் போய்ச் சேருகிறது. அப்படி பின்னால் கிடைக்கிற நோட்டீஸை எடுத்துக் கொண்டு, உடனே சென்று பணம் கட்டினால், அதற்கும் அபராதத் தொகை கேட்கிறார்கள். அந்த நிலைமை மாற வேண்டும். சிறு விவசாயிகளுக்கு இம்மாதிரி அபராதத் தொகை அதிகமாக விதிக்கப்படுகிறது. 15-ந் தேதிக்கு முன்னால், நோட்டீஸ் கொடுத்தால் சரி, சிறு தொழில்களுக்கும் விவசாயிகளுக்கும் கட்டுவதற்கு நேரம் கிடைக்கும். ஆனால், 20-ந் தேதி பெறுகிற நோட்டீசுக்கும் அபராதம் கேட்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. இது தடுக்கப்பட்டால் நன்றாக இருக்கும். சிறு தொழில்களை நடத்துபவர்களும், விவசாயிகளும் பணம் கட்டாவிட்டால், மின்சாரம் நிறுத்தப்படுகிறது, ஃப்யூஸ் எடுக்கப்படுகிறது. அவர்கள் சொல்லொணா துன்பத்திற்கு ஆளாகிறார்கள். பெரிய ஆலைகளிலே இதுபோன்று பணம் கட்டாவிட்டால், நிறுத்தப்படுவதில்லை. அவர்கள், பல இலட்சக்கணக்கான பாக்கி இருக்கும்போது கூட, அவர்கள் ஆலையை ஓட்ட அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமையைச் சற்று பார்க்க வேண்டும். இதற்கெல்லாம் மூல காரணம் டிமாண்ட் நோட்டீஸ் காலாகாலத்திலே அனுப்பாததுதான்.



211,31 N24
31N74.579;1

1974 ஆகஸ்ட் 23] [டாக்டர் க. நாகராஜன்]

இந்த அரசு, இந்த வாரியத் தொழிலாளர்களுக்கு மத்திய அரசைக் காட்டிலும், இன்னும் மற்ற மாநில அரசுகளைக் காட்டிலும் அதிகமான சலுகை செய்திருக்கிறது. பணி நிலைமைகள் நன்றாக உள்ளன. குடும்ப நலத் திட்டம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையிலே அவர்களுடைய குடும்ப நலத் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இப்படி பல சலுகைகள் அளித்தும் கூட, அவர்களுடைய ஒத்துழைப்பை நாம் பெற முடியாமலிருக்கிறோம். அவர்கள் டிமாண்ட் நோட்டீஸை, பழைய நோட்டீஸை அனுப்புங்கள் என்று கேட்டால், ஓவர்டைம் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். வாரியக் கணக்குப் பிரிவைச் சீர்திருத்தி, வணிகப் பிரிவைப் போல் அமைக்க வேண்டும். காலாகாலத்திலே நோட்டீஸ்கள் அனுப்பி, பணி புரிகிறவர்களுக்குப் போனஸ் கொடுத்தாலும் பரவாயில்லை, அனுப்பாதவர்களுக்குத் தண்டனை வழங்கினாலும் பரவாயில்லை என்று நான் கூற விரும்புகிறேன்.

6675

மீட்டர் ரீடிங் எடுப்பதிலும் தாமதம், நோட்டீஸ் அனுப்புவதிலும் தாமதம். வசூலிப்பதிலும் தாமதம். இப்படி அந்தச் சங்கங்களிடம் ஒத்துழைப்புப் பெறமுடியவில்லையென்றால் அப்படி ஒத்துழைப்பு தராத சங்கங்களது அங்கீகாரத்தை ரத்து செய்தாலும் பரவாயில்லையென்று நான் கூற விரும்புகிறேன்.

பணியிலிருக்கும்போது இறந்துபோனவர்களது குடும்பத்துக்கு ரூ. 10.000 அளிக்கப்படும் என்ற அருமையான திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது செயல்பட்டு வருகிறது. இந்த வாரியத்தில் டெம்பாரி காஷுவல் லேபராகப் பலர் பணி புரிகிறார்கள். வருடத்திற்கு 240 நாட்களுக்கு மேல் வேலை செய்கிற எல்லா ஊழியர்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்த நிதியுதவியினை அளித்தால் சரியாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். ஆண்டுக்கு 240 நாட்களுக்கு மேல் வேலை செய்கிற எல்லா ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தை நாம் விரிவுபடுத்தலாம்.

அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து டிசம்பர் 1973-லிருந்து ஊதிய உயர்வு அளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த ஊதிய உயர்வு அளிப்பதற்கு முன்னாலே நம்முடைய அரசே இதற்கான திட்டங்

[டாக்டர் க. நாகராஜன்] [1974 ஆகஸ்ட் 23

களை வகுத்து செய்து விட்டால் நல்லது என்று நினைக்கிறேன். டெல்லியிலே நடக்கிற வேஜ் போர்டு கமிட்டியிலே பங்கு கொள்ளவே தேவையில்லை. அந்தக் கமிட்டிக் கூட்டத்திலே கலந்துகொள்ளத் தேவையில்லை.

It is an erosion of the powers of the State Government by the Central Government.
என்றுதான் கருதுகிறேன். அதை நாம் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. நம்முடைய வாரியத் தலைவர் அங்கெல்லாம் செல்லத் தேவையில்லை. நாம் ஊழியர்களுக்கு நன்றாக செலவு செய்து வருகிறோம். வேஜ் போர்டு கமிட்டியிலே அங்கம் வகிக்கத் தேவையில்லை. தமிழக அரசு இங்கேயே முயற்சிகளைச் செய்துவிடலாம்.

அடுத்து டிரான்ஸ்ஃபார்மர்கள். வாரியமே டிரான்ஸ்ஃபார்மர்களை உற்பத்தி செய்தால் என்ன என்று கேட்கத் தோன்றுகிறது. டிரான்ஸ்ஃபார்மர்கள் கிடைக்கவில்லையென்ற ஒரே காரணத்தால் டிரான்ஸ்ஃபார்மர்கள் உற்பத்தி செய்கிற கம்பெனிகளுக்கு, குறிப்பாக, ஈசன் இன்ஜினியரிங் போன்ற கம்பெனிகளுக்கு பல கோடி ரூபாயை முன்பணமாகக் கொடுக்கிறோம். அவர்கள் முன் பணம் பெற்றுக்கொண்டு, உரிய நேரத்திலே டிரான்ஸ்ஃபார்மர்களை சப்ளை செய்கிறார்களா என்றால் இல்லை. ஈசன் இன்ஜினியரிங் போன்ற கம்பெனிகளை எதிர்பார்ப்பதைவிட, மின்சார வாரியமே உற்பத்தி செய்ய அதிக நேரம் பிடிக்காது. மற்றவர்களிடம் முன் பணம் கொடுத்துவிட்டு, இந்த வாரியம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்க வேண்டியதை விட்டு அதுவே உற்பத்தி செய்தால் என்ன என்று நான் கருதுகிறேன்.

நெய்வேலி மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே, மத்திய அரசு கவனக் குறைவாகத்தான் இருந்து கொண்டிருக்கிறது. செகன்ட் மைன் கட் ஏற்படுத்துவார்களா என்பது தெரியவில்லை. தமிழ் நாட்டிலே, நம்முடைய மாநிலத்திலே ஃபர்னஸ் ஆயிலை உபயோகப் படுத்துகிறோம். நிலக்கரியை விட 5 மடங்கு அதிகமாக உள்ளது. அதனை வாங்கி, மின்சாரத்தை உற்பத்தி செய்து, நஷ்டத்திலே விற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த ஃபர்னஸ் ஆயில் வாங்க முன் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அந்த முன்



1974 ஆகஸ்ட் 23] [டாக்டர் க. நாகராஜன்]

பணத்தை வைத்துக்கொண்டே, நெய்வேலி திட்டத்தை நாம் நடத்திவிடலாம். மத்திய அரசாங்கத்திடம் அப்படி ஒரு திட்டத்தை வற்புறுத்தினால்கூட பரவாயில்லை என்று நான் நினைக்கிறேன். நெய்வேலி திட்டத்தை நாமே ஏற்றுக்கொண்டால்கூட பரவாயில்லை என்று நான் நினைக்கிறேன்.

இறுதியாக ஒரே ஒரு வார்த்தை கூறி, அமைய விரும்புகிறேன். பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படக் கூடாது என்ற வகையிலே அங்கங்கே புதிய இடங்களிலே அலுவலகத்தை அமைக்க வாரியம் முற்படுகிறது. ஆனால் புதிய இடங்களிலே அலுவலகங்களை அமைக்க வாரிய அதிகாரிகள் தடங்கலாக இருக்கிறார்கள். அது ஏன் என்றே தெரியவில்லை. ஒருவேளை, அவர்களுடைய சொந்த வசதிக்காகப் பார்க்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. அப்படி பல இடங்களில் அலுவலகங்கள் வைப்பதால் பொது மக்களுக்கு சௌகரியம் ஏற்படுகிறது. ஆகவே, அதிகாரிகள் தலையிடாமலிருக்க வாரியம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன். வணக்கம்

**திரு. நா. வெ. குருசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

தமிழ்நாட்டில் இப்பொழுது கொடுத்திருக்கக்கூடிய பட்ஜெட்டில் மொத்தமுள்ள 62,487 கிராமங்களில் மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது, 98 சதவிகிதம் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலும் அரிசனப் பகுதிகளில் 96 சதவிகிதம் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. ஏழு இலட்சம் பம்ப் செட்கள் போடப்பட்டிருப்பதாகப் புள்ளிவிவரம் கூறுகின்றது. அந்தப் புள்ளி விவரம்தான் இருக்கின்றதே தவிர, லைட்டுகள் எங்குமே எரியவில்லை. சுமார் 20 சதவிகிதம் கூட, தெரு விளக்குகள் எரிவது இல்லை. பம்ப் செட்கள் இருக்கிற ஒருசில பகுதிகளில் வரட்சி உள்ளதால் எட்டு மணி நேரம்தான் தண்ணீர் இருக்கும். ஆனால் அங்கும் 4 மணி நேரம், 5 மணி நேரம் மட்டும் மின்சாரம் கொடுத்துவிட்டு, பியூஸ் கட்டையைப் பிடுங்கி விடுகிறார்கள். அதனால் மின்சாரம் இல்லாமல், இந்த அரிசிப் பிரச்னை வந்ததற்கு மின்சார இலாகாவும் ஒரு காரணம் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. நா. வெ. குருசாமி] [1974 ஆகஸ்ட் 23

(பிற்பகல் 12-30)

ஆகவே, நாம் இதிலே பெருமையடித்துக்கொள்வதற்கு எந்த விதமான விஷயமும் இல்லை. குறிப்பாக நாம் விவசாயிகளுக்கு முழு அளவிற்கு மின்சாரத்தைக் கொடுத்தால்தான் பசுமைப் புரட்சி நல்லமுறையிலே தமிழகத்திலே ஏற்படும். இம்மாதிரி அரிசிப் பிரச்னை இருக்காது. இன்று நிர்வாகத்திற்கு ஒரு பம்பு செட்டுக்கு கனெக்ஷன் வேண்டுமென்றோ அல்லது வீடுகளுக்கு மின்சார கனெக்ஷன் வேண்டுமென்றோ விண்ணப்பம் செய்தால் எஸ்.இ. அளவில்தான் அந்த விஷயம் முடிவாக வேண்டியிருக்கிறது. எஸ்.இ. அளவிலே மனு பரிசீலிக்கப்படவேண்டுமென்ற நிலைமை இருப்பதால் தேங்கிவிடும் நிலை ஏற்படுகிறது. ஒவ்வொரு விவசாயியும் அல்லது ஒவ்வொரு வீட்டுக்காரரும் மின்சார கனெக்ஷன் வேண்டுமென்றால் ஜில்லா தலைநகரத்திற்குச் சென்று பேப்பரை பார்த்து முயற்சி செய்யவேண்டியிருக்கிறது, ஒரு வீட்டிற்கு இரண்டு விளக்குகள் போட வேண்டுமென்று விரும்புகிற ஒருவர் ஜில்லாவின் தலைநகரத்திற்கு நான்கு நாட்கள் அலையவேண்டியிருக்கிறது. ஆகவே எஸ்.இ. லெவலில் கவனிக்க வேண்டும் என்று இல்லாமல், ஏ.இ. லெவலிலோ அல்லது ஜே.இ. லெவலிலோ அனுமதி கொடுக்கலாம் என்ற முறையினைக் கொண்டு வரவேண்டும்.

எனக்கு முன்னாலே பேசிய நண்பர் திரு. நாகராஜன் அவர்கள் கூடச் சொன்னார்கள், யூனியன் தலையிட்டதாகக் கூறினார்கள், நானும் அதையே கூறிக்கொள்ள விரும்புகிறேன், அதிலும் குறிப்பாக தி.மு.க. யூனியன் மிகவும் கடுமையாகத் தலையிடுகிறது . . .

டாக்டர் க. நாகராஜன்: யூனியன்கள் நிர்வாகத்திலே குறுக்கிடுவதாக நான் கூறிடவில்லை. யூனியன்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று தான் கேட்டேன், அவர்கள் திருத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. நா. வெ. குருசாமி: குறுக்கீடுகளை யூனியன் நிறுத்திவிட வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள் . . .



1974 ஆகஸ்ட் 23]

டாக்டர் க. நாகராஜன்: நிர்வாகத்தில் யூனியன் தலையிட்டது என்று நான் சொல்லவில்லை, யூனியன்களிடமிருந்து ஒத்துழைப்பு தேவை என்றுதான் கூறினேன்.

திரு. நா. வெ. குருசாமி: மற்றபடி யூனியன்களில் முன்னேற்றக் கழக யூனியன் தான் அதிகாரிகளிடம் வந்து செய்யமுடியாத காரியங்களைச் செய்யவேண்டுமென்று கேட்கிறார்கள். அதிகாரிகள் செய்யவில்லையென்றால் அவர்களை மாற்றவேண்டுமென்று அமைச்சருக்குத் தந்தி கொடுத்துவிடுகிறார்கள். முன்னேற்றக் கழக யூனியன் என்று அமைச்சரும் அவர்களை உடனடியாக மாற்றி விடுகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்துவருகிறது. எந்த யூனியனாக இருந்தாலும் அதிகாரிகள் தப்பு செய்திருக்கிறார்களா என்று பார்த்து முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார பட்ஜெட்டிலே பேசும்போது எத்தனையோ குறைகளைப் பற்றியெல்லாம் பல உறுப்பினர்கள் பேசினார்கள். இன்னும் தெரு விளக்குகள் கூட சரியாக எரியவில்லையென்றார்கள். பல்புகள் கிடைக்கவில்லை, சோக்குகள் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள்.

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு ஒரு மாதத்திற்கு கரண்ட் பில் 400 ரூபாய் என்று சொன்னால் உண்மையிலேயே 100 ரூபாய்க்கு தான் எரிந்து இருக்கும், வருவாய் இல்லாத பஞ்சாயத்துக்களை நசுக்குவதுதான் வாரியத்தின் வேலையாக இருக்கிறது. கிராம தெருவிளக்குகளுக்கு பல்புகள் இல்லை, சோக்குகள் இல்லை. ஸ்டார்ட்டர்கள் இல்லை. இவைகள் எல்லாவற்றையும் உடனடியாகக் கொடுத்து நல்லமுறையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டும்.

பம்புசெட்டுக்கு சர்வீஸ் கொடுப்பதாக இருந்தாலும் சரி, வீட்டுக்கு சர்வீஸ் கொடுப்பதாக இருந்தாலும் சரி வயர் இல்லை என்று சொல்கிறார்கள். பம்புசெட்டு வைக்கிறவரிடமோ அல்லது வீட்டு விளக்குகள் போடுகிறவரிடமோ ஏற்கெனவே எஸ்டிமேட் போட்டு அதற்கான தொகைகளையெல்லாம் வாங்கிவிடுகிறார்கள். ஆனால் பிறகு கம்பி இல்லை, என்று சொல்லி பணம் வாங்குகிறார்கள். கம்பி இல்லை கம்பி இல்லை என்று சொல்லிக்கொண்டிருந்தால் எதற்காக ஒரு இலாகா? எதற்காக ஒரு அமைச்சர்?

எனக்கு முன்னாலே பேசிய திரு. வகாப் அவர்கள் சொன்னார்கள், பப்ளிக் அண்டர்டேக்கிங்ஸ் கமிட்டியின் மூலமாக பல நீர்த் தேக்கத் திட்டங்களைச் சென்று பார்த்தோம் என்று. நானும் அந்தக் குழுவில் ஒரு உறுப்பினர்தான், பல கிராமங்களுக்கு மின்சாரம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று பெருமையடித்துக் கொள்கிறார்களே தவிர, உற்பத்தியைப் பெருக்கவில்லை. கடந்த ஏழு ஆண்டுக்காலமாக ஒன்றுமே நடக்கவில்லை, அதற்கு முன்னாலே காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேதான் நல்லமுறையிலே ஆங்காங்கு அணைக்கட்டுகளை கட்டினார்கள், மின்சாரத்தை உற்பத்தி செய்தார்கள். ஆனால் இன்றைக்கு ஒன்றிரண்டு அணைக்கட்டுகளைக் கட்டியிருக்கிறார்களா, மின்சாரத்தின் உற்பத்தியைப் பெருக்கி யிருக்கிறார்களா என்றால் ஒன்றும் தெரியவில்லை. ஆகவே மின்சாரத் தேவைக்குத் தகுந்தாற்போல் உற்பத்தியைப் பெருக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. மு. இராசகோபால்: பெருமதிப்பிற்குரிய மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறிக்கொள்கிறேன்.

இன்று தமிழகத்திலே, நாட்டிலே, உலகத்திலேயே மின்சாரம் மிக மிக முக்கியமான ஒரு பொருளாகக் கருதப்படுகிறது. ஆனால் இன்றைக்கு தமிழகத்தை எடுத்துக்கொண்டால் மின்சாரத் துறையிலே, நான் அதிலே பணியாற்றுகின்ற எல்லோரையும் சொல்லவில்லை, குறிப்பாக, ஒரு சிலர் இருக்கிறார்கள், அவர்கள்—இன்றைக்கு நாம் கிராமப்புறங்களிலிருந்து மக்களால் தேர்ந்தெடுக் கப்பட்டு வந்திருக்கிறோம், நான் ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கூட—மக்கள் பிரதிநிதிகளை மதிப்பதில்லை. இங்கே ஏழு லட்சம் மின் இணைப்பு பம்புசெட்டுகளுக்காகக் கொடுக்கப் பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் எந்த அளவிற்கு அவை பெறப்படுகின்றன என்பதைப் பார்க்கவேண்டும்.

பம்புசெட் வேண்டுமென்று அதிகாரிகளைச் சென்று கேட்டால் கவனிப்பதில்லை, ஏ.இ.-யோ அல்லது எஸ்.ஓ.-வோ உடனடியாகப் போடுவதில்லை, எத்தனையோ சிபாரிசுகள், எத்தனையோ சட்ட



மன்ற உறுப்பினர்களின் சிபாரிசுகள் கொண்டுபோனால்தான் வேலை நடக்கிறது. அப்படிப்பட்ட கொடுமை இந்த டிபார்ட்மெண்டிலே கேட்பாரற்றுக் கிடக்கிறது. இன்றைக்கு அதைத் தட்டிக் கேட்க நாதியே இல்லை. நான் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவன். கடவுள் நம்பிக்கையற்றவன். கடவுள் ஒருவன் இருப்பானாகில் இந்தக் கொடுமையைக் கண்டு கண்டிப்பாக அவர்களைச் சுட்டெரித்து இருப்பான். எத்தனையோ மதவாதிகள் என்ன என்ன கதைகளையெல்லாம் அளந்துவிட்டிருக்கிறார்கள் இந்த நாட்டில்.

ஒரு விவசாயி ஒரு ஆபீஸுக்கு எத்தனை முறைகள் நடப்பது? அவன் சென்றால் அங்கே பணிவான முறை அவனுக்கு இல்லை, மரியாதையான சொல் இல்லை, ஒன்றுமே கிடையாது. விவசாயிக்குத்தான் அப்படி என்றால் ஊராட்சித் தலைவர் போனால் கூட மதிக்கவில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஊராட்சித் தலைவராக வந்திருக்கிறேன், பிறகு ஒன்றியத் தலைவராக வந்தேன், பிறகு எம்.எல்.ஏ.-யாக வந்திருக்கிறேன், நான் சொல்கிறேன் என்ன நிலைமை இருக்கிறது என்று.

அங்கம்பாக்கம் என்ற இடத்தில் ஒரு காலனித் தோழர்—ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்—கிணறுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டார், அது வாலாஜாபாத் செக்ஷனை சேர்ந்தது. அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்கள். எங்கே 4 உயர்ந்த ஜாதிக்காரர்கள் இருக்கிறார்களோ அங்கேதான் சேரிவாழ் மக்களுக்கும் போட்டுக் கொடுக்கமுடியும் என்று திட்டம்போட்டு வைத்திருக்கிறார்கள். அவன் மிக மிக எளிய ஏழை என்று சொல்லிப்பார்த்தும் கிடைக்கவில்லை. எல்லா வேலைகளும் முடிவடைந்த பிறகு பியூஸை கொண்டுபோய் எஸ்.ஓ.விடம் கொடுத்துவிட்டார்கள். அதை வாங்குவதற்காக ஒரு எம்.எல்.ஏ. 5 லட்டர்கள் எழுதியாகிவிட்டது. கொடுக்கவில்லையென்றால் என்ன பொருள்? இந்த நாட்டினுடைய பொதுசொத்து, பொருளாதாரம் யாருக்குப் போய்ச் சேரவேண்டும்? போடவில்லை, பிறகு எஸ்.இ. அவர்களே சென்று அதை வாங்கிக்கொடுத்தார், பெயரைவேண்டு மானாலும் சொல்கிறேன், அங்கம்பாக்கம் காலனித் தோழர் சந்தானம் என்பவர்.

டி.இ. ஒருவரைப்போட்டு வைத்திருக்கிறார்கள். அவர் வரிசை வரிசை என்று சொல்லிக்கொண்டிருக்கிறார். வரிசை எங்கே இருக்கிறது? கொடுக்க வேண்டியதைக் கொடுத்தால் வரிசை ஓடிப் போகிறது. (குறுக்கீடு) ஹா என்று சொல்கிறார்கள். உங்கள் கதையையும் சொல்வேன். பொருளாதார நிலை அப்படி இருக்கிறது. உங்களுடைய காலத்திலே உள்ள நிலைமையைவிட எங்களுடைய காலத்திலே உள்ள நிலைமை டபிள் பங்காக இருக்கிறது. அப்பொழுது 100 ரூபாய் என்றால் இப்பொழுது 200 ரூபாய். எனவே, அந்த விவசாயிகள் கேட்டால் இப்பொழுது கொடுக்க முடியாது, இன்னும் இத்தனை மாதங்கள் பொறுத்துத்தான் கொடுக்க முடியும் என்று சொன்னால்கூடப் பரவாயில்லை. அப்படியில்லாமல் அவனை இழுக்கடித்து கடைசியில் கம்பி வாங்கி வா, பைப் வாங்கி வா, போல்ட் வாங்கி வா, போல்ட் அடிக்க ஆணிகூட வாங்கிவா என்று விவசாயிகளிடத்திலேயே வாங்கி பலயிடங்களில் போடுகிறார்கள்.

ஆனால் இங்கே வந்தால் துண்டு பட்ஜெட். அப்படியென்றால் மேற்பார்வை என்ன ஆயிற்று? இப்படி இந்த நிர்வாகம் செய்வதால் விவசாயிகளிடத்தில் போனால் அரசியல் வாதிகளுக்கு. எந்தக் கட்சியானாலும் சரி, அவர்களுக்கு மரியாதை இல்லை. அந்த அளவிற்கு மரியாதை இல்லாமல், எல்லோரையும் சொல்லவில்லை, ஒருசிலர்தான் இவ்வளவு கேவலமாக நிர்வாகத்தைப் பயன்படுத்துகிறார்கள். இதைத்தான் நான் சொல்கிறேன். நீங்கள் விட்டுவிட்ட குறையினால்தான் இவ்வளவு திமிர் வந்திருக்கிறது.

ஊராட்சி மன்றங்களில் எங்கே விளக்கு எரிகிறது? எழுதினாலும் பார்ப்பதில்லை. உடனடியாக மீட்டர் வைத்து இவ்வளவுதான் எரியும் என்று சொல்லி பணத்தை வாங்கிக்கொண்டாலும் நல்லது. அங்கே 4 அணா வீட்டு வரி கட்டுகிறான். பஞ்சாயத்து யூனியனிலேயும் வாங்கிக் கொள்கிறார்கள், நீங்களும் பணம் வாங்கிக்கொண்டு போய் விடுகிறீர்கள். எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று யாரோ பாடினார் என்று சொன்னார்கள். அப்படிப் பாடிவிட்டாரே தவிர. நாட்டுப்புறத்திலுள்ள மக்கள் ஏன் பிறந்தோம், பிறந்தே இருக்கக் கூடாது, வாழ்ந்திருக்கவே கூடாது என்ற அந்த அளவிற்கு எவ்வளவு கொடுமைகளை அனுபவிக்கிறார்கள்.





மின்வெட்டு என்றால் அங்கே மட்டும் தானா? அது என்ன நியாயம்? ஒரு ஊரிலே காலை 6 மணிக்கு எடுத்துவிட்டால் ஃப்யூசை மாலை 6 மணிக்குத்தான் போடுவது என்றால், அவன் எப்படி குடிநீரைக் குடிப்பது? இருநூறு அடி, 150 அடி ஆழத்திலிருந்து நீர் எடுக்க வேண்டும் என்றால், மின்சாரம் இல்லாத நேரத்தில் கிராமத்து மக்களுக்குத் தண்ணீரே இல்லை. அவர்கள் எப்படித் தண்ணீர் குடிப்பது? ஆனால் நகர்ப்புறத்திலே எல்லாம் மின்சாரம் இருக்கிறது? ஆனால் நாட்டுப்புறங்களிலே உள்ளவர்கள் இராஜ பரம்பரை, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற வகையில் வருபவர்கள், அவர்களுக்குக் கேவலமான நிலை. கிராமங்களுக்கு அப்படி மின்சாரம் கொடுக்கப்படுகிறதா? ஐந்தாறு மணி நேரமாவது மின்சாரம் கொடுங்கள். பயிரானால் ஆகட்டும், பட்டுப்போனால் போகட்டும். ஆனால் வெட்டு என்றால் ஒரே மாதிரியாவது இருக்க வேண்டும்.

நகர்ப்புறங்களிலே வெட்டு இல்லை, நாட்டுப்புறங்களிலே மட்டும் அதிக வெட்டு என்றால் எப்படி சரியாகும்? ஃப்யூஸ் எடுத்துப் போய்விடுகிறார்கள். விவசாயி வந்து அழுகிறான். அவன் குடிப்பதற்குத் தண்ணீர் ஏது? மறுபடியும் அந்த மக்களை நாங்கள் எப்படிச் சந்திப்பது? சந்திக்க முடிகிறதா? காரிலே போகிற சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் பரவாயில்லை, ஆனால் என்னைப்போன்ற பராரியாக இருப்பவர்கள் தெருவிலே நடமாட முடியவில்லை, காப்பி குடிக்கப் போக முடியவில்லையே. நம்முடைய பொறியாளர் அவர்கள் மாதாமாதம் எங்களைக் கூப்பிட்டு, சட்டமன்ற உறுப்பினர்களையும், ஒன்றியத் தலைவர்களையும், முக்கியஸ்தர்களையும் கூப்பிட்டு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். சங்கம் என்று சொன்னார்கள். அதை ஏற்படுத்தினார்கள், பிறகு அதை அறவே நீக்கிவிட்டார்கள். அப்படிக் கேட்டு கேட்டு இருக்கிறார்களே தவிர, அவர்கள் வேலை செய்யவில்லை.

பில் போடுகிறார்கள். நான் நினைத்துக் கொண்டிருந்தேன். இரயிலிலே டிக்கட் வாங்கிக்கொண்டு செல்ல வேண்டும். சினிமாவிற்கும் டிக்கெட் வாங்கிக்கொண்டுதான் செல்ல வேண்டும், அதைப் போலவே மின்சார இலாக்காவிலும் செய்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் இங்கே எப்படிச்

செய்கிருர்கள் என்ருல், ஆறு மாதங்களாகத் தூங்கிக்கொண்டிருந்திருக்கிருர்கள். பில்லே போடவில்லை. பிறகு ஓவர் டைம் கேட்கிருர்கள். எதற்காக? காலையிலிருந்து சுற்றிவிட்டு 4 மணிக்குப் பிறகு வந்து உட்கார்ந்து 8 மணி வரையில் வேலை செய்துவிட்டு, அந்த 4 மணி நேரத்திற்கு ஓவர்டைம் பணம் வாங்குகிருர்கள். அவர்கள் சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியரை மதிப்பதில்லை. சங்கம் ஆட்டிப்படைக்கிறது அதிகாரிகளை. நிர்வாகத்திலே குறைபாடு இருக்கிறது. அரசாங்கம் அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிருர்கள் என்பதை உடனடியாகப் பார்த்து, மின்சாரத் துறையிலே சரியாக இல்லாத ஊழியர்களை எங்கெங்கு தூக்கி அடிக்க வேண்டுமோ, அங்கங்கே தூக்கியடிக்கவேண்டும். அப்பொழுதுதான் டி.ஈ., எஸ்.ஈ., ஆகியவர்களை மதிப்பார்கள். இப்பொழுது பார்த்தால் 10 வருஷம் 15 வருஷங்களாக அங்கேயே இருக்கிருன். யாரையும் மதிப்பதில்லை, ஏனென்ருல் உள்ளூர்க்காரன் என்பதால். அப்படியே மாற்றிஞலும் எம்.எல்.ஏ-விடம் சென்று சிபார்சு பிடித்து மறுபடியும் வந்துவிடுகிருன். இந்தக் கொடுமைகளெல்லாம் போக வேண்டுமாஞல் நல்ல முறையில் நிர்வாகத்தைச் செயல்படுத்த எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கட்டுமானம் என்று ஒன்று இருக்கிறது. என்னுடைய தொகுதியில் ஏளாச்சேரி, மாந்தூர் இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களுடைய தொகுதியும் என்னுடைய தொகுதியும் ஒன்ருக இருக்கிறது. இப்படி 15 ஊர்களை ஒன்ருகச் சேர்த்துப் போடுகிருர்கள். ஒரு திட்டம் போடப்பட்டது. ஆஞல் நம்முடைய பாரதமாதாவிஞல் ஏறிய விலையேற்றத்தின் காரணமாக மறுபடியும் கம்பி விலை ஏறிவிட்டது என்று திருப்பி அனுப்பி விட்டார்கள். பிறகு 6 மாதங்கள் தொல்லைகொடுத்து ஒவ்வொரு படியாக ஏற்றி எஸ்.ஈ. ஆபீசிற்குள் போவதற்குள் ஒரு மடையைக் கீழே தள்ளிவிட்டார்கள். ஏனென்ருல் விலையேற்றம். மறுபடியும் கீழேயிருந்து திட்டம் போடுவதென்ருல் எத்தனை மாதமாகுமோ? இது விவசாயிகளுக்குக் கட்டுமா? விவசாயிகள் கேட்டால் தகுந்த பதில் இருக்கிறதா என்ருல் இல்லை. மூன்று மாதம் பொறுத்து வா என்று சொன்ஞல் அவன் நிம்மதியாகப் போவான். அப்படியில்லாமல், யாரடா அவன்; சொக்காய் கூட போடவில்லை என்றெல்லாம் சொன்ஞல் அவனுக்கு எப்படியிருக்கும்? அவர்கள்



பாட்டன் பாட்டன் தலைமுறையாக அப்படி இருப்பவர்கள். அவர்களைப் போடா வெளியே என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. மருதம், ஏளாச்சேரி, உத்திரமேரூர், மாமண்டூர் ஆகியவைகளைச் சேர்த்து இருப்பதால் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள். மழை இல்லாததால் அவர்களை ஏமாற்றி, மழையில்லாததால் மின்சாரம் இல்லை, 6 மாதம் கழித்து வாருங்கள் என்று ஏமாற்றி வீட்டிற்கு அனுப்பினேன். அதிகாரிகள் கீழ் மட்டத்திலே ஒரு வேலையும் செய்யவில்லை. அதைப் போய்ப் பார்க்கச் சொல்ல வேண்டும்.

சி.ஐ.டி. ரிப்போர்ட் என்ருல் அங்கு சென்று அவன் வேலை செய்கிருஞ என்று பார்க்க சொல்ல வேண்டும். அப்படிப் பார்த்தால் எல்லோரும் வீட்டிற்குப் போவார்கள். ஒரு கம்பத்திலேயாவது சிமெண்ட் வேலை செய்கிருஞ என்று பார்த்தால், சில அதிகாரிகள் கம்பி எண்ண வேண்டி வரும். அந்த அளவிற்குக் கையாடல் செய்யப்படுகிறது. எந்த ஊரில் கம்பத்தை நட்டு அதனுடைய எஸ்டிமேட்படி சிமெண்டால் கட்டுகிருர்கள்? பிளாட்பாரம் போட வேண்டும் என்று இருக்கிறது, போடுவது கிடையாது. ஒரு மூட்டை எங்கே போடுகிருர்கள்? ஆஞல் எழுதப்படுகிறது, திட்டத்தில் இருக்கிறது. எங்கேயோ விவசாயி ஏதாவது செய்துவிட்டால் கோர்ட் வரையில் அவனை இழுக்கடித்து அபராதம் போடுகிருர்களே தவிர, மேல்மட்டத்திலே செய்வதைக் கேட்க முடியவில்லை. அந்த அளவில் உள்ள இந்தக் கொடுமைகளைப் போக்க வேண்டும்.

இன்றைக்கு மின்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருப்பதால் விவசாயம் நடந்து வந்திருக்கிறது. ஆஞல் இரண்டாண்டுக் காலத்தில் அவர்கள் செய்துள்ள கொடுமையால் விவசாயிகளுக்கு வயிற்றெரிச்சல் இல்லாமல் இல்லை. அந்த அளவிற்கு முறைப்படி செய்ய ஆட்கள் இல்லை. அதைக் கேட்கவும் நீதி, நியாயம் இல்லை. ஆகவே, உடனடியாக இதற்குத் தகுந்த பரிகாரம் காணவேண்டும். ஏனென்ருல் மின்சார போர்டும் கேட்கவில்லை, மக்களிடத்திலே தொடர்பு கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் கேட்டாலும் மதிக்கவில்லை என்ருல் பிறகு என்ன நாட்டில் நடக்கும்? எண்ணிப்

[திரு. க. மு. இராசகோபால்] [1974 ஆகஸ்ட் 23

பாருங்கள். ஆகவே, அந்த அளவிற்குப் போகக்கூடாது. மக்கள் அந்த அளவிற்குக் கோபம் அடைந்திருக்கிறார்கள். நான் நிலவள வங்கித் தலைவராக இருந்திருக்கிறேன்.

பம்பு செட்டுகள் அதை வாங்கியவர்களின் வீடுகளிலே இருக்கிறது. எப்படி அவன் பணத்தைக் கட்டுவது? திட்டங்கள் நின்று விட்டன. ஆனால் கொடுக்காமல் இருக்கிறார்களா என்றால் கொடுக்கிறார்கள். எப்படியென்றால் வசதியுடையவர்கள் வாங்குகிறார்கள். விவரம் தெரிந்தவர்கள் வாங்குகிறார்கள். அதற்கு என்ன காரணம்? அந்தக் காரணங்களை எல்லாம் கண்டு பிடிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை. என்னுடைய மன வேதனையைச் சொல்லுகிறேன். நாம் மின்சாரத்தில் என்ன தான் தன்னிறைவு பெற்றிருந்தாலும் இந்த அல்லலைப் போக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

கிராமப் புறங்களில் குடிநீர் திட்டத்திற்காகிலும் தனி மின் இணைப்புக் கொடுக்க வேண்டும். வேறாகப் பிரித்தாக வேண்டும். கிணற்றுக்கு, ஊரில் லைட்டுக்கு, தண்ணீர் சப்ளை செய்வதற்கு எல்லாம் ஒரே லைனாக இருப்பதால் ஒரு ப்யூசை எடுத்து விட்டுப் போய்விடுகிறார்கள். அதைத் தனித் தனியாகப் பிரிக்க வேண்டும். ஊராட்சியிலுள்ள மக்கள் பணத்தை மின்சார போர்டு கொள்ளையடிக்கத் தேவையில்லை. என்னுடைய ஊராட்சி மன்றத்தின் ஆண்டு வருவாயே நானூற்றுச் சில்லரை ரூபாய்தான். அந்தப் பணத்தையும் முன்கூட்டியே மின்சார வாரியம் வாங்கிக் கொள்கிறது. ஆனால் லைட் எரிவதில்லை. இந்த நிலைமைகள் எல்லாம் இல்லாதிருக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறி இந்த நிதிநிலை அறிக்கையை முழுக்க முழுக்க ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

* THIRU K. M. SUBRAMANIAM: Hon. Mr. Chairman, Sir, this is a very important subject. Many people including Central Government have not realised the importance of electricity. Next to defence, the most important subject in this country is electricity. Without power, nothing could be done. You cannot grow, you cannot manufacture even defence machinery and other things without power. Unless and until the Central Government realised



1974 ஆகஸ்ட் 23] [Thiru K. M. Subramaniam]

this and allotted more money for power schemes, we cannot progress much. They should realise this and allot more money and act accordingly.

I have seen that so far as Tamil Nadu Electricity Board is concerned, it is a big institution. Its budget is nearly half of the State's budget. Its revenue is Rs. 100 crores and capital budget is Rs. 50 crores. With the present increase in prices, the capital budget may go up to Rs. 75 crores at the end of the year. So with a budget of Rs. 175 crores, it is a very big institution.

We cannot use strong words, as Dr. Hande used, that the Board is corrupt, inefficient, etc. We cannot say that simply because a man working outside has been brought in as Chief Engineer, the whole Board is inefficient and corrupt. If, on merit a man is brought from outside, it is not wrong. If after coming here he commits mistake, he can be taken to task. Being an expert, they might have brought him to the Board. What is wrong in that? Dr. Hande should not have used strong words.

Coming to other points, there are schemes, continuing schemes. I am talking of hydro-electric schemes. My friend was saying that after Congress gave up power, no new scheme has come in. I say all these mini schemes should have been thought about in 1948, these schemes each producing 35, 25MW. If only that had been done, we could have had another 600 MW power by now. But nobody thought about that then.

The first plan and second plan were good since Thiru V. T. Krishnamachari was there as Deputy Chairman and knowing Madras State well, he had included some good schemes for our State. But from Third-Five-Year-Plan, a sort of complacency has set in. First we do viability examination here. Our Engineers are experts. But when it is sent to Delhi, they want another viability examination and for correspondence to be finalised it takes one year. Differences of opinion—it takes one year to be settled. In the meantime no work is being done. I do agree with Mr. Guruswami that nothing has been done. But who is responsible for it?

(Mr. Speaker in the Chair)

**Why is there delay in sanction?**

[Thiru K. M. Subramaniam] [1974 ஆகஸ்ட் 23

Our Tamil Nadu Engineers are excellent in their spheres of work. In the investigation side, we do not know with what amount of difficulty they work in. They work with serpant on one side, elephant on one side, tiger on the other side and so on. Under such difficult working conditions, they do excellent work. I think when praise is due, it should be given and they should be complemented for the excellent work they do.

Even in the matter of execution, they do excellent work. In Kodayar, a tunnel is being constructed for two miles connecting two dams. If one in the top gets filled, the lower dam gets water. It is excellent work. We should pay them complements. It may be, in the bottom, some may not do their duty properly. But we cannot blame the whole Board for it.

In Tambaraparni, no water is wasted. All is exploited for creating electricity. In Papanasam, four new power houses are coming up. In Tuticorin plant, land has been acquired and land for quarters also have been acquired.

I think when Poompuhar Shipping Corporation comes, it will be able to bring in more coal through its ships. When Tuticorin harbour comes, our shipping corporation can bring in 35,000 tones vessels there and daily we can get 10,000 to 15,000 tonnes of coal. Our Ennore needs daily 4,000 tonnes of coal and we do not get it now because of want of proper transport. Work on Tuticorin plant and on Poompuhar Shipping Corporation is progressing satisfactorily. We should not criticise good things.

Dr Hande complained that 20,000 people are being retrenched. When the work is over, they will have to be sent back. Where could they be absorbed? Only for distribution to the extent necessary, some will have to be retained. After construction is over, the surplus labour will have to be retrenched. What else can be done?



1974 ஆகஸ்ட் 23] [Thiru K M. Subramaniam]

(பிற்பகல் 1-00)

Now, another thing is this. The Central Government I again charge, for, they have increased the interest rates and because of that cost will be affected. We pay Rs. 3.5 crores as interest, today, on two counts, the Banks and Life Insurance Corporation, leaving alone the others like Government bonds etc. What will be the increased payment? Roughly 20 per cent is going to be the increase. And for the Electricity Board, it will be another two crores, which they will have to pay to Scheduled Banks unless the Government treats the Board as priority and does not allow banks to charge higher rates.

In conclusion, I wish to say one thing. It is easy to say that unit charges should be increased. I am against it. This is a socio-economic project and if we increase the rate of electricity, automatically there will be increase on every item manufactured with electricity. Price of aluminium will go up. Aluminium is an electricity-oriented industry and unless special rate is given to it, it cannot work. Considering all these aspects, I think we should not fall a prey to the policy of the Central Government on increasing the price of electricity. I am glad that the Chairman of the Electricity Board brought this socio-economic aspect to the knowledge of people during his recent meeting. This shows how uninformed they are.

I know there are defects. Many say it is over-staffed. I say it is under-staffed. Dr. Hande was saying that the Accounts Officer was paid high. No. What is the charge of an ordinary C.A. for one case? He charges 2,000 rupees per day. Is what the Board pays to the Accounts Officer too much?

I am very sorry the Electricity Board has not a Personnel Officer. The Engineers cannot bother themselves with workers. There should be a Personnel Officer in the grade of Chief Engineer to handle labour problems.

I know there is tremendous wastage. There is wastage in Central Government and in railways. All these have to be gone into. I throw a suggestion to the Minister. If a Managerial Expert is appointed to find out how to improve the administrative

business of the Electricity Board, that will be helpful. Modern experts are only American Experts who will suggest the appointment of another 10 engineers and close the file. That is no good. Or otherwise, you can appoint a senior I.A.S. man who knows this country and who has worked here to go into the working of the administration of the Board.

I congratulate the members of the staff and Engineers, the S.E. and others, on their very good work. For, I have seen their work as a member of the Public Undertakings Committee and I have gone round, and I know their work. I think it is very unfair on the part of anybody to accuse the staff. May be there are bad and indifferent members of the staff here and there. I request the staff to do much better and consider the proposals I have made. Thank you, Sir.

திரு. எஸ். சகாதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையையும், துணை நிதிநிலை அறிக்கையையும் ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியம் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் எவ்வளவு பெரிய இக்கட்டான நிலைமைகள் இருந்தாலும் கிராமங்களுக்கும், விவசாயத்திற்கும் செய்யவேண்டிய வேலைகளை நல்லமுறையில் செய்துகொண்டிருக்கிறது என்பதை நாம் நேரில் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதை அறிக்கை மூலமாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். இந்த மின்சார வாரியத்தில், கிட்டத்தட்ட ஏழு எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கிற ஒவ்வொருவரும் இந்த மின்சார வாரியத்தால் விவசாயிகளுக்கு, கிராமங்களுக்கு, அல்லது தொழில் அதிபர்களுக்கு லாபம் இருக்கிறதா இல்லையா என்பதை ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் எல்லோருக்கும் லாபம் இருக்கிறது என்பதை மனச்சாட்சி உள்ளவர்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அந்த அளவிற்குப் பெரிய பெரிய திட்டங்களை, பெரிய பெரிய வேலைகளை இந்த மின்சார வாரியம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து மின்வாரியத்தைப் பாராட்ட நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.





தமிழ் நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிக்கவேண்டுமென்று நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்ன அந்த வாக்குறுதியை காப்பாற்றுவதற்கு இதுவரையிலும் செய்த முயற்சிகளில் இடையில் மின்சாரத் தட்டுப்பாடுகள் ஏராளமாக வந்தபோதிலும் போட்ட திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்று 98 சதவிகிதம் கொடுக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். இந்த அளவிற்கு எடுத்துக்கொண்ட திட்டங்களை, எடுத்துக் கொண்ட வேலைகளை மின்சார வாரியம் நல்லமுறையில் செய்து கொண்டிருக்கிறது என்றால். அதை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்து, மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும், மின்சார வாரியமும், சொல்கிற குறைகளை, கேட்கிற வேண்டுகோள்களை அவ்வப்போது கவனித்து அதற்குண்டான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். சென்ற சட்டமன்றக் கூட்டத்தில் இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேசும்போது எனது தொகுதியில் உள்ள வேலைகளைப் பற்றி எடுத்துக் கூறினேன். இன்னின்ன ஊர்களுக்கு எஸ்.ஓ. ஆபீஸ்கள் தேவை என்று சொன்னேன். நான் சொன்ன ஊர்களில் எல்லாம் இந்தச் சட்டமன்றக் கூட்டத்திற்குள் அவை திறக்கப்பட்டிருக்கின்றன. கணக்குப் பிரிவு ஒன்று செஞ்சிக்குத் தேவை என்று சொன்னேன். அதையும் திறந்திருக்கிறார்கள். அந்த அளவிற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்வதைக் கேட்டு அவரவர்கள் தொகுதிக்குண்டான வேலைகளை நிறைவேற்றி வரும் மின்வாரியத்தைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கோவை செழியன்: கோரம் இல்லையே.

திரு. வை. பாலசுந்தரம்: கோரம் இருக்கிறது.

திரு. எஸ். சகாதேவன்: ஆகவே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இருந்தாலும், செய்திருக்கின்ற பெரிய திட்டங்களில் ஏற்படுகிற நல்ல பெயரை குறைப்பதற்கு, சிறுசிறு தவறுகள், நிகழ்ச்சிகள் நடந்து விடுவது உண்டு. அவற்றை இங்கே உறுப்பினர்கள்

[திரு. எஸ். சகாதேவன்] [1974 ஆகஸ்ட் 23

எடுத்துச் சொன்னார்கள். தெருக்களில் லைட் எரிவது இல்லை என்று சொன்னார்கள். நானும் ஒரு பஞ்சாயத்துத் தலைவன் என்ற முறையில் அதை ஒப்புக்கொள்கிறேன். இதுபோன்ற சிறிய தவறுகளை வைத்து பெரிய பெரிய நிகழ்ச்சிகளில் வரும் பெயர்களை கெடுத்துக்கொள்ளக்கூடாது. நல்ல காரியங்களை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு மின் இணைப்புத் தருவதில் சற்று காலதாமதம் ஆகிறது. என்னுடைய பகுதியில், செஞ்சி பகுதியில், அப்படியிருக்கிறது என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது ஒரு மலைப்பகுதி, அந்தப் பகுதியில் ஒரு ஆறோ, அல்லது அணைக்கட்டோ இல்லை. அந்த வசதி வாய்ப்பு இல்லாத காரணத்தால் விவசாயிகள் கிணறு வெட்டி விவசாயம் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது மின் இணைப்பு ஒன்று தான். அந்த மின் இணைப்பு தருவது காலதாமதம் ஆகிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

செஞ்சியில் 500-க்கு மேல் விவசாயிகள் பம்ப் செட் வாங்கி வைத்துக்கொண்டு மின் இணைப்புக்காக காத்துக்கொண்டு இருக்கிறார்கள். இன்னும் மின் இணைப்பு அளிக்கப்படவில்லை. இது குறித்து தலைமைப்பொறியாளரிடத்தில் எடுத்துச்சொல்லி, அவர்களுக்கு மின் இணைப்புத் தரவேண்டுமென்று உத்தரவிடவேண்டுமென்று கேட்டும், இதுவரையில் மின் இணைப்பு தரப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களில் உள்ள பம்ப்செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டுமென்ற திட்டம் எங்கள் பகுதியில் செய்யவில்லை. வல்லம், மேல்மலையனூர் போன்ற பகுதியில் செய்யவில்லை. அந்தப் பகுதியில் இருக்கும் விவசாயிகள் மின்சாரத்தை நம்பித் தான் இருக்கிறார்கள். நல்ல உணவு உற்பத்திச் செய்யும் விவசாயிகளுக்கு எவ்வளவு இக்கட்டான நிலை இருந்தபோதிலும் மின்சார இணைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு இல்லாத



1974 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். சகாதேவன்]

மின்சாரத்தை கொடுங்கள் என்று கேட்கவில்லை. கொடுக்கின்ற மின்சாரத்தை தாமதம் இன்றி கொடுங்கள். எல்லோருக்கும் உடனடியாகக் கொடுங்கள் என்று சொல்லவில்லை. தகுதி உள்ளவர்களுக்கு, பம்ப் செட் வாங்கித் தயாராக வைத்து இருப்பவர்களுக்கு மின்சாரம் கிடைக்க உடனடியாக வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ளவர்கள் திடீரென்று அமைச்சர்களை, ஆட்சியை குறைசொல்வதற்குக் கண்ணில் படுவது மின்சாரம். தெருவில் லைட் எரியவில்லையென்றால், ஆட்சியை குறைகூறுகிறார்கள். ஃப்யூஸ் போய்விட்டால், அமைச்சர்களை குறை கூறுகிறார்கள். அவற்றை உடனுக்குடன் கவனித்து போடாவிட்டால், அமைச்சர்களைக் குறை கூறுகிறார்கள். இவ்வாறு குறை வராமல் இருப்பதற்கு அங்கே வேலை செய்பவர்கள் நல்ல முறையில் கடமையாற்றவேண்டும்.

அங்கேயிருக்கிற அதிகாரிகள் சரியான முறையில் ஒழுங்கான முறையில் பணி செய்வதில்லை. இது குறித்து, ஏ.இ., டி.இ., இ. போன்றவர்களிடத்தில் சொன்னாலும் அவர்கள் அந்த அதிகாரிகளைக் கூப்பிட்டு கேட்க பயப்படுகிறார்கள். இதற்கு காரணம் என்ன சொல்கிறார்கள் என்றால், அவர்களெல்லாம் சங்கம் வைத்து இருக்கிறார்கள், அதனால் கேட்கமுடியவில்லை என்று சொல்கிறார்கள். பெரிய அதிகாரிகளுக்கு எஸ்.இ., சி.இ., போன்றவர்களுக்குக் கூட அவர்கள் பயப்படுவது இல்லை, ஆனால் இந்தச் சங்கத்திற்குப் பயப்படுகிறார்கள். இப்படி சங்கத்திற்குப் பயப்படுகிற பெரிய அதிகாரிகள், விவசாயிகள் ஏதாவது தவறு செய்து விட்டால், உடனே ஜீப்பை எடுத்துக்கொண்டு வந்து விவசாயிகள் மீது கேஸ் போடுவதற்கும், அவர்களை உள்ளே தள்ளுவதற்கும் கிராமத்தில் வந்து நிற்கிறார்கள். ஆனால் ஊழியர்கள் செய்யும் தவறுகளைக் கண்டிக்க அவர்களால் முடியவில்லை. பயப்படுகிறார்கள்.

இந்த நேரத்தில் இந்தச் சங்கம் குறித்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திண்டிவனத்தில் ஒரு சங்கம் இருக்கிறது. நாடு பூராவிலும் மின்சார சங்கங்கள் இருக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழக சங்கங்கள் ஆட்டிக்கொண்டிருக்கின்றன என்று

[திரு. எஸ். சகாதேவன்] [1974 ஆகஸ்ட் 23

சொல்கிறார்கள். ஆனால் திண்டிவனத்தில் அதற்கு நேரடியாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தினர் மற்ற சங்கத்தினரால் தினமும் தாக்கப்படுகிறார்கள், போலீஸ் வழக்கு போட்டாலும் திராவிட முன்னேற்றக் கழக சங்கத்தினர் மீது வழக்குப் போடுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆளும் கட்சியாக இருந்தும் கூட அந்தத் தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் மீது கேஸ் போட்டு உள்ளே தள்ளிக்கொண்டிருக்கிறார்கள், அவர்கள் தினமும் கோர்ட்டுக்கும் போலீஸ் ஸ்டேஷனுக்கும் நடந்து கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்னவென்று எனக்குப் புரியவில்லை. திண்டிவனத்தில் இருக்கும் அதிகாரிகள் ஒரு சங்கத்தை ஆதரிப்பது, முன்னேற்றக் கழக சங்கத்தை எதிர்ப்பது ஏன் என்று தெரியவில்லை. அங்கே இருக்கிற டி.இ.யே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை குறித்து போலீசில் புகார் கொடுக்கிறார். உள்ளே தள்ளியிருக்கிறார். அந்த அளவுக்கு ஒருதலைப்பட்சமாக அதிகாரிகள் இருக்கிறார்கள். இந்த ஒருதலைப்பட்சமான ஆதரவுக்கு மேல் அதிகாரிகளும் உதவியாக இருக்கிறார்கள், திண்டிவனத்தில் இருப்பவர்கள் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் எவ்வளவு பெரிய திட்டங்களைப் போட்டாலும், எவ்வளவு கிராமங்களுக்கு மின் இணைப்புக் கொடுத்தாலும், எத்தனை அணைகளை திறந்தாலும், எவ்வளவு வேலை ஆட்களை வைத்தாலும், அந்த அளவுக்கு மக்கள் அதன் பலனை அனுபவிக்க முடியவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஏற்கெனவே ஹெல்பர்கள் 20-25 கிராமத்திற்கு ஒருவர் என்று இருந்தபோது ஃப்யூஸ் போனால், அறிவிப்பு கொடுத்த ஒரு மணி நேரத்தில் அந்த விவசாயிக்கு மின் இணைப்பு கொடுத்து விடுவார்கள். ஆனால் இப்போது 3-4 கிராமத்திற்கு ஒரு ஹெல்பர் என்று வைத்து இருக்கிறார்கள். அப்படியிருந்தும் என்னுடைய பகுதியில் விவசாயி ஃப்யூஸ் போய்விட்டது என்று சொன்னால் வைத்த பயிர் காய்ந்து போன பின்னர் தான் திருப்பி மின் இணைப்பு தருகிறார்கள். அந்த அளவுக்கு கீழே இருக்கிற ஊழியர்கள் வேலைசெய்கிறார்கள். அரசாங்கம் கிராமத்தில் உள்ளவர்களுக்கு நன்மை செய்யவேண்டு



1974 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். சகாதேவன்]

மென்று பல காரியங்களைச் செய்கிறது. ஆனால் அவர்கள் சங்கத்தை வைத்துக் கொண்டு இப்படிச் செய்கிறார்கள். இதற்காக சங்கத்தை நான் குறை சொல்லவில்லை. அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் மேல் அதிகாரிகளுக்கு பயப்படுவதைவிட இந்த சங்கத்திற்கு பயந்து கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற குறைகளை நீக்குவதற்கு நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும், முடிவு கட்டவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் பில் அனுப்புவதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். விவசாயிகளுக்கு ஒரு மாதத்திற்கு வருகின்ற பில்லைகூட நகை நட்டுகளை அடகுவைத்து பணம் கட்டவேண்டிய நிலை இருக்கிறது. அப்படி இருக்கும்போது 6 மாதம், 7 மாதம் கழித்து ஒரே பில்லாகப் போட்டு, எல்லாவற்றையும் சேர்த்து கட்டு என்று சொல்லி, கட்டவில்லை என்றால் ஃப்யூஸைப் பிடுங்கிவிடுகிறார்கள். இப்போது மின்சார வாரியத்தில் நிறைய ஆட்களைப் போட்டிருக்கிறார்கள். அப்படி இருந்தாலும் சரியாக வேலை நடக்கமாட்டேன் என்கிறது. சரியாக பில் போட மறுக்கிறார்கள். இந்த நிலைமைகளைப் பார்க்கின்றபோது பொதுவாக மின்சார வாரியத்தை தொழிற் சங்கங்கள்தான் நடத்துகின்றன என்று விவசாயிகள் கருதுகிறார்கள். இப்படியே காலம் போய்க்கொண்டிருந்தால் விவசாயிகளுக்கும் ஒரு காலம் வரக்கூடும். எங்களுக்கு மட்டும் சொல்ல உரிமை இல்லையா என்று விவசாயிகள் கேட்டு, பில் கட்ட முடியாது என்று அவர்கள் சொல்லக்கூடிய நிலைமை ஏற்படக் கூடும். ஆகவே, இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் சங்கம் வைத்துக்கொள்ளட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. சம்பளம் அதிகம் வேண்டுமென்று கேட்கட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அதைப்பற்றி கவலை இல்லை. அதே நேரத்தில் விவசாயிகளுக்கு செய்ய வேண்டியவைகளை அவர்கள் செய்ய வேண்டுமென்பதையும் மறந்துவிடக்கூடாது. இப்போது விவசாயிகளுக்குச் செய்யவேண்டியவைகளைச் செய்ய மறுக்கிறார்கள்; செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். சகாதேவன்] [1974 ஆகஸ்ட் 23

இங்கே மின்சாரம் உற்பத்திச் செய்வதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது. கிடைக்கின்ற மின்சாரம் போதவில்லையா. உடனே மின்சார வாரியமும், அமைச்சரவர்களும் வெளி மாநிலங்களிலிருந்து மின்சாரத்தை விலைக்கு வாங்கிக்கொடுக்கிறார்கள். இந்த நாட்டிலே மின்சாரம் உற்பத்தி இல்லை என்றால் கேரளத்திலே போய் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். பக்கத்திலே இருக்கிற ஆந்திராவிலே போய் வாங்கி வருகிறார்கள். இப்படியெல்லாம் கஷ்டப்பட்டாலும் சாதாரண சின்ன விஷயங்களில் மின்சார வாரியத்திற்கு ஒரு கெட்ட பெயர் ஏற்படுகிறது. இதைப் பயன் படுத்திக்கொண்டு மாற்றுக் கட்சியினர் பெரிய புரளியைக் கிளப்புகிறார்கள். அதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாள் விவசாயத்திற்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டால் கூட பயிர் காய்ந்து போகும். பயிர் காய்ந்துவிட்டால் திரும்பவும் பயிர் செய்வது கஷ்டம். அப்படியானால் அந்த விவசாயிகளின் ஓராண்டு கால வாழ்க்கை பாதிக்கும். கிட்டத்தட்ட ஓராண்டு கால வருமானம் அவர்களுக்கு கிடைக்காமல் போய்விடும். மின் சார வாரியத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் ஒரு நாளைய தவறினால் விவசாயிகளின் ஓராண்டு கால வருமானம் பாதிக்கிறது. இதை அவர்கள் உணரவேண்டும்.

மின்சாரத்திற்கு தட்டுப்பாடு இருக்கிறது; அதை மறுக்கவில்லை. எல்லா நேரங்களிலும் மின்சாரம் விவசாயத்திற்குத் தேவை என்று கேட்கவில்லை. மின்சாரத்தின் விலை அதிகம் ஆகும் என்று சொன்னார்கள். விவசாயிகள் எந்த விலை கொடுத்தும் வாங்கத் தயாராக இருக்கிறார்கள். ஏனென்றால் மின்சாரத்தைவிட குறைந்த செலவில் விவசாயக் காரியங்களுக்கு வேறு எந்த பொருளும் கிடைப்பதில்லை. எதைப் பயன்படுத்தினாலும் மின்சாரத்தை விட அதிகச் செலவுதான் ஆகுமே தவிர குறையாது. சிறிது நாட்களுக்கு முன்னால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டபோது ஆயில் எஞ்சின்களைப் பயன்படுத்தினார்கள். எண்ணெய் விலை ஏறிவிட்டது. கவலை போட்டு நீர் இறைப்பதற்கு ஆட்கள் கூலி ஏறிவிட்டது. ஆகவே, என்ன விலை வேண்டுமானாலும் கொடுத்து மின்சாரத்தை வாங்கிக்கொள்ள விவசாயிகள் தயாராக இருக்கிறார்கள் அதனால் விவசாயக் காரியங்களுக்கு மின்



1974 ஆகஸ்ட் 23] [திரு. எஸ். சகாதேவன்]

விநியோகத்தில் முதலிடம் கொடுக்க வேண்டும். உணவு உற்பத்தி தான் நமக்கு முக்கியம். விவசாயிகளுக்கு அதில் பெரும் பங்கு இருக்கிறது. ஆகவேதான் விவசாயக் காரியங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய செஞ்சி பகுதியில் மட்டும் 500 முதல் 1,000 வரையில் பம்புசெட்டுகள் மின் இணைப்பு இல்லாமல் இருக்கின்றன. உடனடியாக அவைகளுக்கு மின்னிணைப்பு வழங்க மின்சாரத் துறை அமைச்சரவர்களும், வாரியமும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நம்முடைய தமிழ்நாட்டிலே கிராம மின் வசதிக் கழகங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. வல்லம், மலையனூர், செஞ்சி போன்ற பகுதிகளுக்கும் கிராம மின்வசதிக் கழகப் பணிகளை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தெருவிலே எரிகின்ற விளக்குகளைப் பற்றி பலரும் குறிப்பிட்டார்கள். பஞ்சாயத்து விளக்குகளுக்கெல்லாம் மீட்டர் பொருத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அதையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மின்சார வாரியத்திலே நாம் பெரிய பெரிய திட்டங்களை, செயல்களை எல்லாம் செய்திருந்தாலும் இது போன்ற சிறிய சிறிய குறைபாடுகளினால் அந்த சாதனைகளை குறைத்து மதிப்பிடுகிற ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இதுபோன்ற குறைகளை திருத்திக்கொள்ள வேண்டு மென்று யோசனை கூறி, மின்சார உற்பத்தியில் எவ்வளவு கஷ்டங்கள் இருந்தாலும் தட்டுப்பாடு இருந்தாலும் அவைகளை எல்லாம் பொருட்படுத்தாமல் இவ்வளவு சிறப்பான ஒரு நிதிநிலை அறிக்கையை வழங்கியிருக்கிற மின்சார வாரியத்திற்கும் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம். நன்றி.

**திரு. வை. பாலசுந்தரம்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையையும் 1973-74-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கையையும் இந்த மாமன்றத்தில் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கின்றார்கள். பொறுப்பு வாய்ந்த இந்தத் துறையை ஏற்றிருக்கின்ற நம்முடைய அமைச்சர் மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே எப்படிப்பட்ட மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டாலும் சரி, அல்லது எதிர்காலத்திலே மின்சார குறை ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று எதிர்க் கட்சிக்காரர்கள் அபாய அறிவிப்பை செய்கின்ற ஒரு சூழ்நிலை உருவானாலும் சரி, அத்தனையையும் தாங்கி, திடமாக தன்னால் ஈடு செய்கின்ற நிலைமை உண்டு என்ற திறமையோடு மாண்புமிகு அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்கள் தமிழ்நாட்டிலே மின்சார பற்றுக்குறை ஏற்பட்ட நாளில் எவ்வளவு திறமையாக அதை சமாளித்தார்கள் என்பதை மனசாட்சி உள்ளவர்கள் மனதிலே கை வைத்துப் பார்த்தால் புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன்.

அதன் அடிப்படையிலேதான் இன்றையதினம் மின்சார உற்பத்தியைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டுக்குத் தேவையான மின்சார உற்பத்தியை செய்யக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லை என்றாலும். இன்றைக்கு அகில இந்திய ரீதியில் இந்த மின்சார வாரியத்தினுடைய திறமைகளைப் பார்க்கும்போது, மின்சாரத்தை உற்பத்தி செய்து விற்கின்ற கேரளாகூட, மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகின்ற கர்நாடகம்கூட, இன்றைக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் காட்டுகின்ற நல்ல முறைகளை, நல்ல திறமைகளை அந்த மாநிலங்கள் பாராட்டாமல் இல்லை என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மின்சாரத் துறையின் மூலமாகத்தான் தமிழ்நாட்டினுடைய வருங்கால வாழ்க்கையை வகுக்க முடியும். தமிழ்நாட்டில் ஏற்படுகின்ற பஞ்சத்தைப் போக்கமுடியும்; தமிழ்நாட்டில் ஏற்படுகின்ற இன்னல்களைப் போக்க முடியும் என்பதை யாரும் மறுக்க





முடியாது. எதற்காக இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் இந்த நாட்டில் பசுமைப்புரட்சி வெற்றி பெற வேண்டுமென்றால், நாட்டில் அதிகமான உணவு தானியங்கள் பெருக வேண்டுமென்றால் இந்த மின்சாரம்தான் கை கொடுத்தாக வேண்டும். அந்த அடிப்படையிலே பார்க்கும்போது இந்த மின்சாரத் துறையை நிர்வகிக்கின்ற மாண்புமிகு ஓ. பி. இராமன் அவர்கள், தன்னுடைய நிர்வாகத்தின் மூலம் விவசாயத்துறை பாதிக்காமல் மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்தார்கள். மின்சாரப் பஞ்சம், மின்சாரப் பற்றுக்குறை ஏற்படுகின்ற காலங்களிலும் சரி, அவைகளைக் காரணமாக வைத்து பெரிய பிரச்சனைகள் உருவாக்கப்பட்டாலும் சரி, பசுமைப் புரட்சியின் மூலம் இந்த நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்கின்ற விவசாய மக்கள் பாதிக்காத வண்ணம் பார்த்துக் கொண்டது உண்மையிலேயே எல்லோரும் மகிழ்ச்சியடையக்கூடிய ஒன்றாகும். அதுமட்டுமல்ல. விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கைகளை, அல்லது இந்தத் துறையிலே பணியாற்றுகின்றவர்களின் கோரிக்கைகளை—அவற்றின் நியாயங்களை உணர்ந்து நல்ல முறையிலே நிறைவேற்றித் தருகின்ற திறமையும் நல்ல நிர்வாக ஆற்றலும் படைத்த ஒரு அமைச்சரை இந்த மாமன்றம், இந்த தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அந்த வகையிலே பார்க்கும்போது இன்றைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்து தருகின்ற கேரளா என்று சொன்னார்கள். அது கூட இன்றைக்கு விவசாயத்திலே இவ்வளவு சிறப்போடு இருக்கிறதா என்பதைப் பார்க்க வேண்டும். ஆனால் அதே கேரளத்திலிருந்து மின்சாரத்தைப் பெற்று, தமிழ்நாட்டை ஒரு செல்வம் கொழிக்கின்ற பூமியாக பசுமைப் புரட்சி செய்து காட்டுகிறோம் என்று எண்ணிப் பார்க்கும்போது பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அதுமட்டுமல்ல. இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கின்ற மின்விசைகளைப் பார்க்க வேண்டும். இந்தியா பூராவிலும் இருக்கின்ற விவசாயப் பம்புசெட்டுகளில் 1/3 பங்கு நம்முடைய தமிழ் நாட்டிலே இருக்கிறது, என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அந்தப் பெருமை எல்லாம் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் ஓ. பி. இராமன் அவர்களைத்தான் சேரும்.

இத்தகைய நிர்வாகத் திறமைப் படைத்த நம்முடைய அமைச்சரவர்களைத்தான் சிலர் எள்ளி நகையாடுகிறார்கள்; பரிகசிக்கிறார்கள். பேரவைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைக்கண்டு அச்சப்படுகிறவர்கள் அல்ல நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரவர்கள். அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன், இன்றைக்கு நீங்கள் வகிக்கின்ற இலாகா மிகப் பொறுப்பு வாய்ந்த ஒரு இலாகா. இந்தியா எங்கும் பார்த்தாலும்—மராட்டியத்தை எடுத்துக்கொண்டாலும், கேரளாவை எடுத்துக்கொண்டாலும் அல்லது கர்நாடகத்தை எடுத்துக்கொண்டாலும்—எந்த மாநிலமாக இருந்தாலும் சரி, மின்சாரப் பற்றாக்குறை இருந்துகொண்டுதான் இருக்கிறது. ஆனால் . . . (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வை. பாலசுந்தரம் அவர்கள் நாளை தொடர்ந்து பேசுவார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.30 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

## 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

97. Notification issued with G.O. Ms. No. 669, Home, dated the 25th March 1974 in regard to an amendment to the Tamil Nadu Motor Vehicles Rules, 1940. [Laid on the table of the House under section 133 (3) of Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939)].

98. Notification issued with G.O. Ms. No. 110, Excise and Prohibition, dated 10th June 1974 in regard to certain amendments to the Tamil Nadu Foreign Liquor and Indian-made Foreign Liquor (Storage-in-Bond) Rules 1971. [Laid on the table of the House under section 34 (5) of Tamil Nadu Excise Act, 1971 (Tamil Nadu Act 34 of 1971)].



### B. *Reports, Notifications and Other Papers.*

80. Notification issued with G.O. Ms. No. 972, Revenue, dated 6th March 1974 in regard to remission of stamp duty charge-under the Indian Stamp Act in respect of the mortgage deed to be executed by the Tamil Nadu Electricity Board.

@ 81. The Tamil Nadu General Sales Tax (Third Amendment) Bill, 1974 (L.A. Bill No. 40 of 1974).

@ Despatched to Members on 21st August 1974.

[1974 ஆகஸ்ட் 23

இணைப்பு I

(49.....ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1974–75-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கை குறித்தும், 1973–74-ம் ஆண்டு துணை நிதி நிலை அறிக்கை குறித்தும், தமிழ்நாடு சட்ட பேரவையில் விவாதத்தைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்கள் ஆற்றிய உரை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974–75-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1973–74-ம் ஆண்டின் துணை நிதிநிலை அறிக்கையும் இம்மன்றத்தின் முன் வைக்கப் பட்டுள்ளன. இவற்றை இம்மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென வேண்டுகிறேன்.

2. 1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரிவின்படி, தமிழ்நாடு மின்சார வாரியக் கருத்துரைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம், இந்த நிதி நிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதி நிலை அறிக்கையும், துணை நிதி நிலை அறிக்கையும் சட்டமன்றத்தினால் விவாதிக்கப்படலாம் என்றாலும், இவை வாக்கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்டமன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைகளின் பேரில் நடைபெற்ற விவாதத்தில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை ஒட்டி, மின்சார வாரியம் எடுத்துள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் அறிக்கை ஒன்று, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பப்பட்டுள்ளது.

3. நாடு விடுதலையடைந்த பிறகு, அதுவும் குறிப்பாக கடந்த ஏழெட்டு ஆண்டுகளில், வேகமான மின் வளர்ச்சி தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளது. 1,224 மெகாவாட்டுகள் நிறுவனத்திறனுடன் கூடிய 17 நீர் மின் நிலையங்கள், மத்திய அரசின் நிறுவனமான நெய்வேலி அனல் மின் நிலையத்தின் 600 மெகாவாட்டுகளையும் சேர்த்து, 1,030 மெகாவாட்டுகள் நிறுவனத்திறனுடன் கூடிய 3 அனல் மின் நிலையங்கள் தமிழக மின் இணைப்பில் உள்ளன. சுமார் 2·75 இலட்சம் கிலோ மீட்டர்கள் நீளமுள்ள மின் அனுப்பு, பங்கீட்டுக் கம்பிகள் தமிழ்நாடு மைப்பில் உள்ளன. மேலும், தமிழ்



1974 ஆகஸ்ட் 23]

நாட்டில் மொத்தம் உள்ள 62,487 கிராமங்கள், சிற்றூர்களில், 61,138 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் அதாவது 98 சதவிகிதத்திற்கு மின் வசதி அளிக்கப்பட்டுவிட்டது. 24,799 மொத்த அரிசனக் குடியிருப்புகளில், 23,800 அரிசனக் குடியிருப்புகளுக்கு அதாவது 96 சதவிகிதத்திற்கு மின் தொடர்பு அளிக்கப்பட்டுவிட்டது. தமிழ் நாட்டில் இதுவரை சுமார் 7 இலட்சம் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது இந்திய நாட்டு விசையேற்றங்களின் எண்ணிக்கையில், மூன்றில் ஒரு பங்காகும்.

4. தமிழகத்தின் இன்றைய மொத்த நிறுவனத்திறன் 2,254 மெகாவாட்டுகளாகும். 1973–74-ல் தமிழகத்தின் மின் உற்பத்தியும் வாங்கப்பட்ட மின் சக்தியும் சேர்ந்து 7,05 மில்லியன் யூனிட்டுகளாகும். மின் அனுப்புதல், மின் பங்கீட்டுக் கம்பித்தொடர்களின் நாட்டின் மொத்த நீளத்தில், தமிழ்நாட்டில் மட்டும் 20 சதவிகித அளவு உள்ளது. தமிழ் நாட்டில் 27 இலட்சம் மின் பயனீட்டாளர்களுக்கு (Consumers) மேல் மின்சாரம் வழங்கப்படுகிறது. நிறுவனத் திறனிலும், மின் தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்கள் எண்ணிக்கையிலும், மின் வசதி பெற்றக் கிராமங்களின் எண்ணிக்கையிலும், மின் கம்பி தொடர்களின் நீளத்திலும், இந்தியாவிலேயே நமது மாநிலம் முதல் இடத்தினைப் பெற்றுள்ளது.

5. ஆந்திரம், கேரளம் கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் அடங்கிய தென்னகப் பகுதியில், நிறுவனத் திறன், உச்சத் தேவை, மின் உற்பத்தி, மின் சக்தியினை விற்பனை செய்தல், தனி நபர் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவு, கம்பிகளின் நீளம், மின் தொடர்பு அளிக்கப்பட்ட விசையேற்றங்களின் எண்ணிக்கை, மின் வசதி பெற்ற கிராமங்களின் எண்ணிக்கை ஆகிய எல்லாவற்றிலும் தமிழ்நாடு முதன்மையில் நிற்கிறது.

6. இவ்வளவு வளர்ச்சி இருந்தும், தமிழ்நாட்டில் கடுமையான மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. 1973–74-ஆம் ஆண்டிலும் இந்த நெருக்கடியான நிலைமையே இருந்து வந்துள்ளது.

7. முன்பே திட்டமிட்டபடி, நெய்வேலி அனல் மின் நிலையத்தில் இரண்டு 50 மெகாவாட் இயந்திரங்கள் எண்ணெயினால் எரிக்கப்படுகின்ற முறைக்கு மாற்றப்பட்டது. 1974–75-ம் ஆண்டில் நிலக்கரி மூலமாக வழக்கமாகக் கிடைக்கின்ற 1,700 மில்லியன் யூனிட்டுகளுடன், எண்ணெய்

[1974 ஆகஸ்ட் 23

எரிப்பின் மூலம் கூடுதலாக 500 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம், தமிழக மின் அமைப்புக்குக் கிடைக்கும் என்று நெய்வேலி நிலக்கரிக் கழகத்தினர் முன்பே குறிப்பிட்டுள்ளனர்.

8. நாட்டின் பொருளாதார நலனைக்கருதி, கடந்த ஆண்டில் செய்தது போலவே, அண்டை மாநிலங்களிலிருந்து 1973–74-ம் ஆண்டிலும், அதற்குப் பிறகும், பண்டமாற்று அடிப்படையில் குறைந்த அளவில் மின்சாரம் பெறப்பட்டது.

9. இவ்வாண்டு ஜூன், ஜூலை மாதங்களிலும் தென் மேற்கு பருவ மழை அணைக்கட்டுப் பகுதிகளில் குறைவாகவே இருந்தது. பருவக்காற்று பலவீனமடையவே, நீர்த் தேக்கங்களில் வந்துவிழும் நீரின் அளவு, கடந்த ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, இதுநாள் வரையில் குறைந்த அளவே உள்ளது. 1—8—1974-ல் நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு 685 மில்லியன் யூனிட்டுகள், 1—8—1973-ல் இந்த அளவு 1,465 மில்லியன் யூனிட்டுகள். 1—8—1972-ல் நீர்த்தேக்க அளவு 751 மில்லியன் யூனிட்டுகளுக்குச் சமம் ஆகும்.

10. குறைந்த நீர்த்தேக்கக் கொள்ளளவின் காரணமாக, அண்டை மாநிலங்களான கேரளமும், கருநாடகமும், நமக்கு உதவி செய்கின்ற நிலையில் இல்லை. அதனுடைய நீர்த்தேக்கங்களில் நீரின் அளவு குறையவே, 12—6—74க்குப் பிறகு நமக்கு மின்சாரம் வழங்குதலை கேரளம் தொடர்ந்து செய்யமுடியவில்லை. இந்த நிலையில், 60 சதவிகித மின் வெட்டை 5—8—74 வரை அரசு அமுல் செய்ய வேண்டி வந்தது. இந்த வெட்டு 40 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு, தற்சமயம் 30 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டுள்ளது.

11. நாடு பூராவும் உள்ள மின்சார நிலையினைப் பார்க்கும் பொழுது, மற்ற மாநிலங்களிலும் நிலைமை நெருக்கடியாகத்தான் உள்ளது என்பது புலனாகிறது. மின் உற்பத்தித் திட்டங்களுக்கு மேலும் அதிகமான அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதின் அவசியத்தையும் போர்க்கால அடிப்படையில் மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டியதின் அவசியத்தையும் இது தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது.



1974 ஆகஸ்ட் 23]

12. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் (அதாவது 1978–79-ல்) நம்முடைய உச்சத் தேவை 3,020 மெகா வாட்டுகளை எட்டிவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தேவையைச் சமாளிக்கத், தேவைப்படும் மின் உற்பத்தித் திறன் சுமார் 3,620 மெகாவாட்டுகளாக இருக்கும். மின்சாரம் குறித்த 5-வது திட்ட வரைவில், கீழ்க் கண்ட முறையில் கூடுதலாக 925 மெகாவாட்டுகள் கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டுள்ளது.

| வரிசை எண். | திட்டம். | நிறுவனத் திறன். (மெகா வாட்டுகள்.) | செயல் படத் தொடங்கும் ஆண்டு. |
|---|---|---|---|
| 1 | எண்ணூர் விரிவாக்கம் (1×110). | 110 | 1975—76 |
| 2 | குந்தா நான்காவது நிலை (60×50) | 110 | 1976—77 |
| 3 | சுருளியாறு (1×35) .. .. | 35 | 1978—79 |
| 4 | கல்பாக்கம் (2×235) .. .. | 235 | 1976—77 |
| | | 235 | 1978—79 |
| 5 | தூத்துக்குடி (2×200) .. .. | 200 | 1978—79 |
| | மொத்தம் .. | 925 | |

கூடுதல் நிறுவனத்திறன் 925 மெகாவாட்டுகளாக இருந்தாலும், பயனுக்கு கிடைக்கக்கூடியது 724 மெகா வாட்டுகளாகத்தான் இருக்கும். 5-வது திட்ட இறுதியில், பற்றுக்குறை 1,465 மெகாவாட்டுகளாக இருக்கும். அதேபோல், மின் சக்தித் தேவை 1978-79-ல், 15,490 மில்லியன் யூனிட்டுகள் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. உருவாகி வரும் திட்டங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்த்தால், மொத்தம் பற்றுக்குறை, 1978-79-ல் 5,183 மில்லியன் யூனிட்டுகளாக இருக்கும்.

13, ஆகவே, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல், இரண்டாவது அணு மின் நிலையம் அமைத்தல், கல்பாக்கம் விரிவாக்கம் போன்ற கூடுதலான மின் திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்பட்டாலன்றி, அடுத்து வரும் பத்தாண்டுகளுக்கு, தமிழ்நாடு மின்சாரப் பற்றுக்குறையினால் பாதிக்கப்பட்ட நிலையில்தான் இருக்கும்.

[1974 ஆகஸ்ட் 23

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுவதை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்று மத்திய அரசினை வலியுறுத்தி கடந்த ஆண்டு இந்த மாமன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்க மாட்டார்கள். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டியதின் அவசியத்தை நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் நானும் பலதடவை நேரடியாகவே வலியுறுத்தி வந்துள்ளோம். நேரடியாகவும், அதிகார பூர்வமாகவும் இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் இதுவரை எந்தவிதப் பயனும் அளிக்கவில்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்படுவதும், இரண்டாவது அனல் மின் நிலையம் அமைவதும், இந்த மாநிலத்தின் தேவைகளோடும், நலன்களோடும் பின்னிப் பிணையப் பட்டுள்ளதால், இது வரையிலும் ஒரு முடிவு எடுக்கப் படாமல் இருப்பது வருந்தத்தக்க ஒன்ருகும். தொடர்ந்து மின்சாரப் பற்ருக்குறை நம்மை அச்சுறுத்தும் வகையில் மிகவும் சிரமமான எதிர்காலத்தை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ள இந்த நெருக்கடியான நேரத்திலாவது, தமிழகம் உடனடியாகப் பயன்களைப் பெறும் வகையில் சாத்தியக் கூறுகளை தன்னகத்தே கொண்டுள்ளதால், நெய்வேலியில் இரண்டாவது சுரங்கத்தினை வெட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இனியாவது மத்திய அரசு மேற்கொள்ளும் என எதிர்பார்க்கிருேம்.

14. இந்தச் சந்தர்ப்பத்தில், புது டெல்லியில் அண்மையில் நடைபெற்ற இரண்டு முக்கியமான மாநாடுகளின் நடவடிக்கைகளை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விழைகிறேன். மாநில மின் வாரியத் தலைவர்களின் 8-வது மாநாடும், மாநிலங்களின் மின்சாரத் துறை-பாசனத்துறை அமைச்சர்களின் 8-வது மாநாடும் புது டெல்லியில் அண்மையில் நடைபெற்றன. அந்த மாநாடுகளிலே, மின்சாரத்துறையையும் மின் வாரியங்களையும் எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளும், சிக்கல்களும் தீர்க்கமாக விவாதிக்கப்பட்டு, கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:—



1974 ஆகஸ்ட் 23]

(அ) மாநில மின்சார வாரியங்கள் அனைத்தும் இப்பொழுது இயங்கி வரும் அனல் மின் நிலையங்களின் மின் உற்பத்தியை எவ்வளவு அதிகமாகப் பெருக்க முடியுமோ அந்த அளவுக்குப் பெருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ) மின் திட்டங்களை உருவாக்கி முடிக்க, கால வரையறை அனல் மின் திட்டங்களுக்கு 3½ ஆண்டுகளும், நீர் மின் திட்டங்களுக்கு 5 ஆண்டுகளுமாகும்.

(இ) படிப்படியாக நிறைவேற்றப்படும் வேலைத் திட்ட அடிப்படையில், மின்சாரம் அனுப்புதலில் ஏற்படும் இழப்புகளைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ) மின் கட்டண வீதங்களை மேலும் உயர்த்தி திருத்தியமைத்தல் மூலமும், வசூலாகாமல் பாக்கியுள்ள தொகைகளை வசூலிக்க சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கப் படுவதின் மூலமும், தங்களுடைய உள் நிதி ஆதாரங்களை மின் வாரியங்கள் திரட்ட வேண்டும்.

(உ) இது வரை வாரியத்திற்குப் பொதுவாகக் கிடைத்துவந்த கடன்களுக்குப் பதிலாக, இனிமேல் குறிப்பிட்ட மின் திட்டங்களுக்கு ( Specific projects ) ஆயுள் காப்பீட்டுக் கழகத்தினிடமிருந்து கடன் கிடைக்கும்.

15. தமிழ் நாட்டில் மின் கழகம் ( Power Corporation ) ஒன்றினை அமைப்பது குறித்து ஆராய சிறப்பு அலுவலர் ஒருவரை அரசு நியமித்து, அவருடைய அறிக்கை பெறப்பட்டு, அந்த அறிக்கையை அரசு பரிசீலித்து மின் கழகம் அமைவதற்கான அரசு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டு விட்டன. இந்த மின் கழகம் அமைவதினுல், மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், விநியோகித்தல் சம்பந்தமான பிரச்சினைகளில் மின்சார வாரியம் தன்னுடைய முழுக் கவனத்தையும் செலுத்த முடியும்.

16. 1974—75-ம் ஆண்டிற்கான முக்கிய மின் திட்டங்களைச் சுருக்கமாக எடுத்துக்கூற விழைகிறேன்.

[1974 ஆகஸ்ட் 23

## மின் உற்பத்தித் திட்டங்கள்

தொடர்ந்து உருவாக்கப்பட்டு வரும் திட்டங்கள்.

(அ) எண்ணூரில் மூன்றாவது 110 மெகாவாட் பிரிவு சம்பந்தப்பட்ட பணிகள் நன்கு நிறைவேறி வருகின்றன. 1975–76-ல் இந்தப் பிரிவு செயல்படத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) குந்தா நீர் மின் திட்டம் நான்காவது நிலைத் திட்டத்தின் கீழ், கனடா நாட்டிலிருந்து கருவிகள் நமக்கு வழங்கப்படுகின்றன. இதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. திட்டத்தில் சேர்க்கப்பட்ட இரண்டு பிரிவுகளும் 1976–77-ல் செயல்படத் தொடங்கும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

(இ) பைக்காரா மின் நிலையத்திலும் மோயாறு மின் நிலையத்திலும் கூடுதலாக ஆண்டொன்றுக்கு 69 மில்லியன் யூனிட்டுகள் மின் உற்பத்தி காண வழிவகை செய்யும் நடுவட்டம் நீர்த் திருப்புத் திட்டப் பணிகள் முடிவு பெறும் தருவாயில் உள்ளன. 1975–76-ல் இத்திட்டத்தின் பயன்கள் கிட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய திட்டங்கள் :—

(அ) சுருளியாறு நீர்மின்திட்டத்திற்கான மின் உற்பத்திக் கருவிகள் வழங்க ஆஸ்திரிய நாட்டு நிறுவனம் ஒன்றுடன் பொருள்கள் வாங்குவதற்கான உறுதிக் கடிதம் அண்மையில் தரப்பட்டுள்ளது. அணை தோண்டுதல், குடியிருப்புகள் அமைத்தல் போன்ற தொடக்கப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஒன்று நடைபெற்று வருகின்றன. இந்த நிலையம் 1978–79-ல் செயல்பட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(ஆ) தூத்துக்குடி அனல் மின் திட்டத்தின் கீழ், சிறு சிறு வேலைகள் முன்பே தொடங்கப்பட்டுவிட்டன. 200 மெகாவாட் திறன் கொண்ட ஒரு பிரிவு 1978–79-ல் செயல்படத் தொடங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(இ) 400 மெகாவாட் மொத்த நிறுவனத்திறனுடன் கூடிய காடம்பாறை நீரேற்றுச் சேமிப்பு மின் திட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு நடைபெற்றுவருகின்றன.

(ஈ) சூன், சூலை 1974ல், நெல்லித்துறை நீர் மின் திட்டத்திற்கும், சுருளியாறு நீர் மின் திட்டத்திற்கும் இந்திய அரசு அனுமதியினை வழங்கியது. இத்திட்டங்களுக்கான சிறு சிறு



1974 ஆகஸ்ட் 23]

வேலைகள் முன்பே தொடங்கப்பட்டு விட்டன. ஆறாவது திட்டக்கால ஆரம்பத்தில் இத்திட்டப்பணிகள் முடிவடைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

(உ) பாண்டியாறு-புன்னப்புழா திட்டத்தைப் பொறுத்த வரையில், அனுமதி அளிக்கப்பட்ட அசல் திட்டப்படியே [Original scheme] நடத்துவது என முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

17. 5-வது திட்டத்தில் உருவாக்கப்படும் மேற்சொன்ன இந்தத் திட்டங்கள் தவிர, வளர்ந்து கொண்டே போகும் மின் பற்றுக்குறையைச் சமாளிக்க, கீழ்க்கண்ட அனல், நீர் மின் திட்டங்களுக்கு அனுமதி வழங்கிட வேண்டுமென இந்திய அரசை தமிழக அரசு வலியுறுத்திக் கொண்டே வருகிறது :—

| வரிசை எண். | திட்டம். | நிறுவனத் திறன். (மெகாவாட்) | கிடைக்கும் மின் சாரம். (மில்லியன் யூனிட்டுகளில்.) | மதிப்பீட்டுச் செலவு. (ரூபாய் கோடியில். |
|---|---|---|---|---|
| 1 | *சோழாட்டிப்புழா நீர் மின் திட்டம். | 60 | 225 | 7·39 |
| 2 | கீழ் மேட்டூர் நீர் மின் திட்டம். | 160 | 643 | 34·14 |
| 3 | பரலையாறு நீர் மின் திட்டம். | 35 | 87 | 5·63 |
| 4 | சண்முகா நதி நீர் மின் திட்டம். | 30 | 131 | 9·02 |
| 5 | மேல் அமராவதி நீர் மின் திட்டம். | 20 | 69 | 5·98 |

[1974 ஆகஸ்ட் 23

| | | | |
|---|---|---|---|
| 6 மேல் தாம்பிரபரணி நீர் மின் திட்டம் (சேர்வலாறு பிரிவைச் சேர்க்காமல்). | 165 | 557 | 43·92 |
| துணை மொத்தம் .. | 470 | 1,712 | 106·08 |
| 7 மேட்டூர் அனல் மின் திட்டம் | 330 | 2,024 | 65·53 |
| மொத்தம் .. | 800 | 3,736 | 171·61 |

*இரு மாநிலங்களிடையேயான மின் திட்டம்.

மேற்கண்ட நீர் மின் திட்டங்களில் பல, உச்ச நேரத் தேவைகளைச் சமாளிக்கும் திட்டங்களாக இருந்தாலும், மின் சக்திப் பற்றுக்குறையை கணிசமான அளவில் சமாளிக்கவும் இவை பயன்படும்.

### 18. மின் சக்தி அனுப்புதலும், பங்கீடு செய்தலும்.

மின் சக்தி அனுப்புதல், பங்கிட்டு வழங்குதல் திட்டத்தில் ஒரு மிகப்பெரிய பின்னிப் பிணையப்பட்ட மின் இணைப்புத் தொடரை தமிழ்நாடு மின்சாரவாரியம் தன்னகத்தே கொண்டுள்ளது. 31–3–1974-ல் உள்ள நிலவரப்படி, 66,364 கிலோ மீட்டர்கள் கூடுதல் உயர் அழுத்தம் மற்றும் உயர் அழுத்தக் கம்பித் தொடரும், 1,89,094 கிலோ மீட்டர் நீளமுள்ள குறைவழுத்தத் கம்பித் தொடரும் உள்ளன. இவற்றில் 3,036 கிலோ மீட்டர் கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளும், 10,489 கிலோ மீட்டர் குறைவு அழுத்தக் கம்பிகளும் 1973–74ல் சேர்க்கப்பட்டவையாகும். 1973–74ம் ஆண்டு இறுதியில் தமிழக மின்அமைப்பில் 275 கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தத் துணை மின் நிலையங்கள் உள்ளன.



1974 ஆகஸ்ட் 23]

19. மின்சாரத்தைக் கொண்டு செல்லுதல், மின் விநியோகம் ஆகியவற்றிலும் வாரியம் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. 1974–75ல் 12 கோடி ரூபாய் செலவில் செய்யப்படும் மின் அனுப்புதல், விநியோகித்தல் குறித்த வேலைத் திட்டத்தினால், மேலும் 600 கிலோ மீட்டர்கள் 230 கே. வி. 110 கே. வி. 66 கே. வி. மின் அனுப்புக் கம்பித் தொடர்களும், 21 துணை மின் நிலையங்களும், மின் விநியோகக் கம்பிகளும் மற்ற மேம்பாட்டுப் பணிகளும் மின் அமைப்புகளில் அமையும்.

20. கம்பி இழப்புகளைக் குறைக்கவும் வோல்டேஜ் குறைபாடுகளைப் போக்கி மேம்பாடு காணவும், அதற்கு வேண்டிய தக்க நடவடிக்கைகளையும் வாரியம் மேற்கொண்டு வருகிறது. சேலத்திலும் வட ஆற்காடு மாவட்டத்தில் திருவலத்திலும் இரண்டு இடங்களில் ஒவ்வொரு 25 எம். வி. ஏ. ஆர். கண்டென்சர்களை (Synchronous condensers) நிறுவ வாரியம் முடிவு செய்துள்ளது. அவற்றை அனைத்துலக மேம்பாட்டு நிறுவனக் (I.D.A.) கடன் மூலமாக இறக்குமதி செய்ய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. வேளாண்மை விசையேற்றங்களிலும், குறைவு அழுத்தத் தொழில் நிறுவனங்களிலும் (L. T. Industries) கெபாசிட்டர்களைப் (Capacitors) பொருத்துவதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு, புதிய தொடர்புகளைப் (New connections) பொருத்தவரையில், அவற்றைக் கட்டாயம் பொருத்தச் செய்யும் வகையில், மின்சாரம் வழங்குவதற்கான நிபந்தனைகளும் விதிகளும் மாற்றப்பட்டுள்ளன.

### கிராம மின்வசதித் திட்டம்.

21. 1973–74-ம் ஆண்டில் மேலும் 747 கிராமங்களுக்கும் சிற்றூர்களுக்கும் மின்சக்தி வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மின்சக்தி அளிக்கப்பட்டுள்ள நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்களின் மொத்த எண்ணிக்கை 61,072 ஆகும். கிராமங்களை ஒட்டியுள்ள அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி வழங்குவதற்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் 418 அரிசனக் குடியிருப்புகளுக்கும், 32,017 வேளாண்மை விசையேற்றங்களுக்கும் 1973–74-ல் மின் வசதி அளிக்கப்பட்டது.

22. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் கூற்றுப்படி, ஊரெல்லாம் ஒளிமயம் செய்திடும் கிராம மின் வசதிச் சிறப்புத் திட்டமானது

[1974 ஆகஸ்ட் 23

1969ல் தொடங்கப்பட்டு செயல் படுத்தப்படுவதன் காரணமாக, கிராமப்புறங்களிலே பல்வேறு கிராமத் தொழில்கள் பல்கிப் பெருகவும், வேளாண்மை விசையேற்றங்களுக்கு மின் தொடர்புகள் அளிக்கப்படுவதற்கும், மாநிலத்தின் கிராமப் பொருளாதாரம் பெருக இச்சிறப்புத் திட்டம் அடிகோலியுள்ளது. இந்தச் சீரிய திட்டம் மட்டும் இல்லாமலிருந்திருந்தால், இவ்வளவு சீக்கிரத்தில் கிராமப்புற மக்கள் பரவலாக தாங்கள் உள்ள இடத்திலேயே மின்சாரம் கொண்டு வரப்பட்டு, அதன் பயன்களைத் துய்க்கின்ற நல் வாய்ப்பினைப் பெற்றிருக்க முடியாது. எதிர்காலக் கண்ணோட்டத்துடன் தீட்டப்பட்ட இந்தச் சிறப்புத் திட்டம் சமுதாயத்திற்கு சீரிய நற்பயன்களை விளைவிக்கும் என நம்புகிறோம்.

23. மின் விசையேற்றங்களுக்கும் மற்ற மின் இணைப்புகளுக்கும் மின் சக்தியை நீட்டிக்கும் 10 திட்டங்களுக்கும், திட்ட மேம்பாட்டுக்கான 7 திட்டங்களுக்கும், 1973—74ல் கிராம மின் வசதிக் கழகம் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டங்கள் அனைத்துக்கும் ஆகும் செலவு ரூபாய் 539·12 இலட்சம் ஆகும். இதில் ரூ. 249·17 இலட்சத்தினை இக்கழகம் இதுவரையில் வழங்கியுள்ளது. ஆரம்பத்திலிருந்து இது வரையில், சுமார் ரூ. 17 கோடி செலவிலான 40 திட்டங்களுக்கு கிராம மின் வசதிக் கழகம் அனுமதி வழங்கி, இது வரையில், ரூ. 8.68 கோடியினை இதற்காக வழங்கியுள்ளது.

24. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு இயக்குநர் அலுவலகம் ஒன்று தமிழ்நாடு மின்சார வாரியத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மின் உற்பத்தி, மின் அனுப்புதல், பங்கீடு செய்தல் ஆகிய துறைகளில் ஏற்படும் பல்வேறு இயக்குதல், பராமரித்தல் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து இந்தப் பிரிவு ஆய்வு செய்யும். இப்பொழுது கடைப்பிடிக்கப்படும் தொழில் நுட்பப் பணிகள் மேலும் மேம்பாடு அடையவும், மின் துறையில் மேலும் புதிய தொழில் நுட்பக் கூறுகள் பெருகவும், இயக்குதல், பராமரிப்புச் சம்பந்தமான சில பிரச்சினைகளுக்கு திருப்திகரமான தீர்வுகாணும்படியான நிலை இதனால் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

25. கேரளம், கருநாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலங்களைக் காட்டிலும், மின் உற்பத்திக்காகும் செலவு தமிழ்நாட்டில் அதிகம். கேரளமும், கருநாடகமும் முழுக்க முழுக்க நீர் மின் திட்டங்களைக் கொண்டவை. நிலக்கரிச் சுரங்கங்களுக்கு அருகாமையில் உள்ளமையினால், ஆந்திரப் பிரதேசம்



1974 ஆகஸ்ட் 23]

வாய்ப்பான நிலையில் அமைந்துள்ளது. ஆனால், தமிழகமோ தன்னுடைய அனல் மின் நிலையங்களுக்கு வேண்டிய நிலக்கரியினை வெகுதொலைவிலிருந்து கடல் மூலமாகவும், ரயில் மூலமாகவும் கொண்டு வரவேண்டியுள்ளதால், செலவும் மிக அதிக அளவில் ஏற்படுகிறது.

26. இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையில், மற்றொரு தனித் தன்மை வாய்ந்த அம்சம், மிக அதித அளவில் விசையேற்றங்கள் இயங்குவதாகும். விசையேற்றங்கள் மிக அதிக அளவில் உள்ளதால் (Peaking and Frequency problems) உச்ச நேரப் பிரச்சினைகளும் அலைவெண் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. அதனால், இரு பிரிவுகளாகப் பிரித்து மின்சாரம் வழங்குதல், மின்சாரத்தை நிறுத்தி விடுதல் போன்ற பல்வேறு கட்டுப்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் நேரிடுகிறது. மின் உற்பத்தித் திட்டங்களை உரிய காலத்தில் செயல்படுத்த அதிக நிதி அளிப்பதன் மூலம் மத்திய அரசு நமக்கு உதவி செய்யவில்லையென்றால், இத்தனை ஆண்டுகள் செய்து வருவது போல, வருகின்ற ஆண்டுகளிலும் மிகப் பெரிய அளவிலான எண்ணிக்கையில் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு அளிப்பது மிகுந்த இடர்ப்பாட்டினையும் சிரமங்களையும் விளைவிக்குமோ என நான் அஞ்சுகிறேன்.

27. 1974—75ம் ஆண்டுக்கு வருவாய் வரவினம் ரூ. 99·96 கோடி என எதிர்பார்ப்பது, 1974—75ல் இப்பொழுதுள்ள சிரமமான மின்சாரப் பற்றுக்குறை ஓரளவுக்கு நீங்கிவிடும்என்ற கருத்தில் கொள்ளப்பட்டதாகும். இருந்தும், 1974—75லும் மின்சார நெருக்கடி தொடர்ந்து இருப்பதினால், வருவாய் வரவினத்தில் கணிசமான அளவுக்கு குறைவு இருக்கும். மொத்தத்தில் மின் உற்பத்தியின் அளவு குறைந்து போனதினாலும், வெளியிலிருந்து அதிக அளவில் மின்சாரம் வாங்க வேண்டிய நிலை உள்ளதாலும், முன்பு வழிவகை செய்யப்பட்ட ரூ. 99·96 கோடிக்குப் பதிலாக, வருவாய் வரவினம் ரூபாய் 81·30 கோடியாகத்தான் இருக்கும் என இப்பொழுது மதிப்பிடப்படுகிறது.

28 (அ) கடந்த ஐந்து ஆண்டுகளில், அண்டை மாநிலங்களிலிருந்தும் நெய்வேலி நிலக்கரிக் கழகத்தினிடமிருந்தும் வாங்கப்படுகிற மின்சாரத்தின் விலை உயர்ந்துள்ளது. கேரளத்திலிருந்து வாங்கப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 4·5 காசிலிருந்து எட்டு காசாகவும், நெய்வேலி

[1974 ஆகஸ்ட் 23

நிலக்கரிக் கழகத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 5·9 காசிலிருந்து 8·48 காசாகவும், விலை உயர்ந்துள்ளது. மேலும் நிலக்கரியின் விலையும் ஏறிக் கொண்டே போகிறது. கடல் மூலமாக நிலக்கரி கொண்டு வருவதின் செலவும் அதிகமாயுள்ளது. அத்துடன், நெய் வேலியில் எண்ணெய் எரியவிட்டு மின் உற்பத்தி செய்யும் முறைக்கு மாற்றப்பட்டு, அதன் மூலம் பெறப்படுகிற மின் சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு சுமார் 27 காசு ஆகிறது. இந்த விலை ஏற்றத்தினால், 1974–75ம் ஆண்டில் கூடுதலாக ஏற்படக்கூடிய செலவு சுமார் ரூ. 9·25 கோடியாகும்.

(ஆ) 1973–74-ம் ஆண்டில் மின்சாரம் வாங்கியதில் செலவு ரூபாய் 18·58 கோடியாக இருந்தது, நடப்பு ஆண்டில், அச்செலவு ரூ. 29·51 கோடிக்கு உயரும் எனக் கருதப்படுகிறது. மேலும், மின் வெட்டின் விளைவாக வாரியத்தின் வருவாய் கணிசமான அளவுக்குக் குறைந்துவிட்டது. 1973–74-ம் ஆண்டில் வருவாய்க் குறைவு ரூபாய் 10·5 கோடியாகும். நடப்பாண்டில், இது ரூபாய் 18·66 கோடியாக இருக்கலாம்.

(இ) ஆகவே, கிடைக்கக்கூடிய வருவாயிலிருந்து பணிகளுக்கான நடப்புச் செலவுகளைச் சமாளிக்க இயலாது. தேய்மானச் சேமிப்புகள், அரசுக்கும், வங்கிகளுக்கும், மற்றக் கடன்களுக்குமான வட்டி செலுத்துதலில் சிரமங்கள் ஏற்படும்.

29. ஆகவே, வேறு வழியின்றி, மின் கட்டண விகிதங்களைத் திருத்தியமைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி திருத்தி அமைக்கவில்லை என்றால், நிதி வசதியைப் பொறுத்த வரையில், மின்சார வாரியம் அதிக சிரமத்திற்கு உள்ளாகும்.

30. 1974–75-ம் ஆண்டுக்கான வாரிய மூலதன ஒதுக்கீடு ரூபாய் 47·77 கோடிக்கு, தெளிவாகத் தெரிந்த முடிவு காணப்பட்ட நிதி ஆதாரங்கள், அதாவது, பொதுச் சந்தை, ஆயுள்காப்பீட்டுக் கழகம், கிராம மின்வசதிக் கழகம், சேமிப்புகள் ஆகியவைகளிலிருந்து ரூபாய் 22 கோடிதான் வருகிறது. வங்கிகளுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டிய மொத்தப் பணம் ரூபாய் 14 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ. 62 கோடி தேவைப்படுகிறது. ரூபாய் 10 கோடிக்கு அரசுக் கடன் கிடைக்குமென எதிர்பாக்கப்படுகிறது. இன்னும் 30 கோடி ரூபாய்க்கு நிதி வாயில்களைத் தேடியாக வேண்டும்.



1974 ஆகஸ்ட் 23]

31. புது டில்லியில் நடைபெற்ற பாசனம்-மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் அண்மையில் எடுக்கப்பட்ட முடிவின்படி, அனல் மின் நிலையப் பணி துவங்கப்பெற்று நிலையம் செயல்படத் தொடங்க எடுத்துக்கொள்ளப் பட வேண்டிய காலம் 3½ ஆண்டுகளும், நீர் மின் திட்டங்களுக்கு 5 ஆண்டுகளும் ஆகும். இந்த இலக்குகள் நடைமுறையில் செயல் படுத்தப்பட வேண்டுமெனில், 1974–75-ம் ஆண்டுக்கு தற்போது ஒதுக்கியுள்ள ரூ. 47·77 கோடிக்கு மேல் 15 கோடி ரூபாய் அதிகமாக உயர்த்தப்படவேண்டும். ஏனெனில், 1978–79-ல் செயல்பட இலக்கு வகுக்கப் பட்டுள்ள தூத்துக்குடி போன்ற பெரிய மின் திட்டங்களை முன் கூட்டியே செயல்படும்படி பணி தொடங்க வேண்டி யுள்ளது. திட்டங்கள் செயல்படத் தொடங்குவதற்கான இலக்குகள் கடைப்பிடிக்க வேண்டுமெனில், திருத்தப்பட்ட வேலைத் திட்டத்திற்கொப்ப ஏற்படும் பெருத்த செலவினத்தைச் சமாளிக்க நிதி வாயில்கள் எங்குள்ளன, எப்படிச் செய்வது என்பது குறித்தும் பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது.

32. நடப்பாண்டில், அதாவது, 1974–75-ம் ஆண்டில் ரூ. 47·77 கோடி மூலதன ஒதுக்கீட்டில் பணிகளை நிறைவேற்ற தமிழ்நாடு மின்சார வாரியம் திட்டமிட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, திட்டக் குழுவினிடம் 1974–75-ம் ஆண்டுத் திட்டத்திற்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வருகிறது. மேலும், சமீபத்தில், உருக்கு, மின் கடத்திகள், மின் மாற்றிகளின் விலைகளானது மிகவும் வேகமாக, சுமார் 40 சதவிகித அளவிற்கு மேல் ஏறியுள்ளது. ஆகவே மின் திட்டங்களைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் செயல் படுத்த, மேலும் நிதி உதவி அவசியம் தேவைப்படுகிறது.

33. தன்னுடைய மூலதன வேலைத் திட்டங்களுக்குத் தன்னுடைய சொந்த ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்ள, வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், திறந்தவெளிச் சந்தை போன்றவற்றிலிருந்து பெறப்படும் கடன்களையே மின் வாரியம் எதிர் நோக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில், மின் வாரியங்களுக்கு மிகப் பெரிய அளவில் வங்கிகள் மூலமாக பெறப்படும் கடன்களில் முடக்கம் ஏற்படுமென அண்மைச் சம்பவங்கள் கோடிட்டுக் காட்டுகின்றன;

34. தற்போது நிலவும் மின்சாரப் பற்றுக்குறையிலும் உருவாகி வரும் மற்றும் புதிய திட்டப் பணிகளை வேகப் படுத்தவும் வேண்டிய அவசியம் உள்ள இன்றைய நிலையில்,

[1974 ஆகஸ்ட் 23

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கோரிக்கைகளை அரசு கனிவுடன் கவனித்து எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

35. தமிழ்நாடு மின் வாரியத்தில் பணியாற்றும் பணியாளர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை இப்பொழுது குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன் :—

(அ) 31—12—1972-ல் நான்கு ஆண்டுகள் பணி புரிந்துள்ள தினக்கூலி வேலையாட்களை முறையான பணியில் சேர்த்துக் கொள்வதென சனவரி 1973-ல் எடுத்த முடிவினையொட்டி, (இந்த முடிவினால் 9,000 தினக்கூலி வேலையாட்கள் பயன் பெற்றனர்) 30—4—1974-ல் நான்கு ஆண்டுகள் பணிபுரிந்துள்ள தினக்கூலி வேலையாட்களை 1—5—1974-லிருந்து முறையான பணியில் சேர்த்துகொள்வதென மின் வாரியம் முடிவு செய்துள்ளது. இரண்டாவது கட்டமாக இப்படி எடுத்துக்கொள்வதின் மூலம், 5,000 பேர் பயன் பெறுவர். இது குறித்து வேண்டிய நடவடிக்கைகளை மின் வாரியம் எடுத்து வருகிறது.

(ஆ) மாநில அரசு ஊழியர்களுக்கு உள்ளது போலவே, வாரியத்தில் மாதாந்திரச் சம்பளம் பெறும் எல்லா ஊழியர்களுக்கும், 21—6—1974-லிலிருந்து குடும்ப நல நிதித் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

(இ) தொழில் சம்பந்தமான வேலையாட்களுக்கான அகில இந்தியப் பயனீட்டாளர்கள் சராசரி விலைக் குறியீட்டு எண் அடிப்படையில், ஆண்டுக்கொரு முறை என்பதற்குப் பதிலாக, 1—10—1973 முதல், கால் ஆண்டுக்கொருமுறை, மின் வாரிய ஊழியர்களின் அகவிலைப்படியானது திருத்தி அமைக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஈ) தினக்கூலி வேலையாட்களுக்கும் 1—12—1974-ல் கொடுக்கப்பட வேண்டிய ஊதிய, அகவிலைப்படித் திருத்தங்கள் செய்யப்படும் வரை, 1—10—1973 முதல், மாதம் ரூ. 30 இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

(உ) இப்பொழுது உள்ள ஊதிய ஒப்பந்தம் 1—12—1974-ல் முடிவடைவதால், ஊதியங்கள், படிகள் திருத்தம் குறித்து ஆராய, வாரியத்தில் இரண்டு உறுப்பினர்களும், தலைமைப் பொறியாளர்களும், வாரியத்தின் முது



1974 ஆகஸ்ட் 23]

நிலை அலுவலர்களும் அடங்கிய ஏழு பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வாரியத்தின் பணியாளர்களுக்கு பணி அமைப்பு முறை குறித்தும் இக்குழு ஆராயும்.

(ஊ) 1—6—1974-லிருந்து, ஓராண்டில் 15 நாளைக்குக் குறையாத விடுப்பினை, விடுமுறையிலே போகாமல், அதற்குப் பணம் பெற்றுக்கொள்ளும் வகையில், திருப்பிக் கொடுத்துவிடுகின்ற சலுகை மின் வாரியப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இடையில் விடுப்பு எடுக்காத காலம் 24 மாதங்கள் அல்லது அதற்கு மேலும் இருந்தால், 30 நாட்களுக்கு மேற்படாத வகையில் விடுப்பைத் திருப்பிக் கொடுத்து, பணம் பெற்றுக் கொள்ளலாம்.

(எ) கால் ஆண்டுத் துவக்கத்திலேயே ஆண்டு ஊதிய உயர்வு கணக்கிடப்படும் வகையில், ஆண்டு ஊதிய உயர்வு முன் கூட்டி அனுமதிக்கப்படுகிறது.

(ஏ) தன்னுடைய பணியாளர்களுக்குப் போதிய மனமகிழ் வசதிகளை அளிக்கும் வகையில், மின் அமைப்பு மனமகிழ் மன்றங்களுக்கும் மின் அமைப்பு இடையேயான (Inter-System) விளையாட்டுகளுக்கும், அனைத்திந்திய மின் வாரிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்வதற்கும் தொடர் மான்யத் தொகையை வாரியம் அளித்துக்கொண்டு வருகிறது. விளையாட்டு நடவடிக்கைகளைச் செயல்படுத்த விளையாட்டு ஆளுமைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

(ஐ) தமிழில் சிறந்த முறையில் வரைவுகள், குறிப்புகள் தயாரிக்கும் பணியாளர்கட்கு ரொக்கப் பரிசுகள் வழங்கும் ஒரு திட்டத்தினை வாரியம் அறிவித்துள்ளது. ஆண்டொன்றுக்கு, ஒவ்வொரு நிர்வாகப் பிரிவுக்கும், இத் திட்டத்தின்கீழ், மொத்தம் ரூபாய் 500-க்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

36. மாநிலங்களில் மின்சாரத்தைச் சீரமைப்பு முறையில் விநியோகம் செய்ய வேண்டுமெனில், மின்சாரம் வழங்குவதில் ஈடுபட்டுள்ள தனியார் மின் நிறுவனங்களைக் கையகப்படுத்துவது மிகவும் அவசியம் எனக் கருதப்பட்டது. ஆகவே, அந்தக் கருத்திற்கேற்ப, 1973-ம் ஆண்டு தமிழ் நாடு தனியார் மின் வழங்கு நிறுவனங்கள் (கையகப் படுத்துதல்) சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தச் சட்டத்தின் விதி முறைகளின்கீழ், கீழ்க்கண்ட தனியார்

மின் நிறுவனங்கள் அரசினுல் எடுக்கப்பட்டு, மின் வாரியத்தினிடம் கீழ்க்குறிப்பிட்டுள்ள தேதிகளில் ஒப்படைக்கப்பட்டன :—

| நிறுவனத்தின் பெயர். | ஒப்படைக்கப் பட்ட தேதி. |
|---|---|
| 1. செங்கோட்டை மின் வழங்கு ஏஜென்சியின் செங்கோட்டை மின் நிறுவனம். | 1–12–1973 |
| 2. கும்பகோணம் எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷன் லிமிடெட்டின் கும்பகோணம் மின் நிறுவனம். | 7–1–1974 |
| 3. நாகப்பட்டினம் எலக்டிரிக் சப்ளை கம்பெனி லிமிடெட்டின் நாகப்பட்டினம் மின் நிறுவனம். | 7–1–1974 |
| 4. வேலூர் எலக்டிரிக் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் வேலூர் மின் நிறுவனம். | 7–1–1974 |
| 5. சேலம்-ஈரோடு எலக்டிரிசிட்டி டிஸ்டிரிபூஷன் லிமிடெட்டின் சேலம்-ஈரோடு மின் நிறுவனம்; | 1–2–1974 |
| 6. திருநெல்வேலி-தூத்துக்குடி எலக்டிரிகல் சப்ளை கம்பெனி லிமிடெட்டின் திருநெல்வேலி-தூத்துக்குடி மின் நிறுவனம். | 1–2–1974 |
| 7. தென் சென்னை எலக்டிரிக் சப்ளை கார்ப்பரேஷனின் திருச்சி-ஸ்ரீரங்கம் மின் நிறுவனம். | 1–2–1974 |

37. மின் வாரியப் பிரச்சினைகளையும் அவற்றைப் போக்கத் தேவைப்படும் ஆதாரங்கள் பற்றியும், நான் இவ்வுரையில் விவரித்துக் காட்டியுள்ளேன். நிதி நிலை பற்றி விவாதிக்கும் பொழுது, இம் மாமன்றம் தன்னுடைய அறிவுசால் கருத்துக்களை வழங்குவதன் மூலம், மின் வாரியம் மேலும் பயனுள்ள முறையில் பணியாற்ற, உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன், அவைத்தலைவர் அவர்கட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





இணைப்பு 1.

கடந்த திட்டக் காலங்களில் தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண். (1) | விவரங்கள். (2) | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). (3) | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). (4) | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் 31-ம் நாள்.) (5) | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). (6) | நான்காவது திட்டத்தின் இறுதியில் [1974 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி] (உத்தேசமாக) (7) |
|---|---|---|---|---|---|---|
| | மின் உற்பத்தி. | | | | | |
| 1. | நிறுவப்பட்ட திறனளவு (மெகாவாட்டில்) .. .. .. | 156 | 256 | 560 | 1,070 +300 (நெய்வேலி.) | 1654 +600 (நெய்வேலி). |
| 2. | மின்சக்தி உச்சத் தேவை (மெகாவாட்டில்) .. .. .. | 110 | 172 | 381 | 717 | *1,287 |
| 3. | உற்பத்தி செய்த மின்சாரமும் வாங்கப்பட்ட மின்சாரமும் (மில்லியன் யூனிட்டுகளில்). | 630 | 1,053 | 2,214 | 4,041 | 7,105 |
| | மின் அனுப்புதலும், வழங்குதலும். | | | | | |
| 1. | கூடுதல் உயர் அழுத்த, உயர் அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 6,936 | 11,479 | 24,194 | 39,806 | 66,364 |
| 2. | குறைந்த அழுத்தக் கம்பிகளின் நீளம் (கிலோ மீட்டர்களில்). | 5,728 | 13,055 | 35,352 | 73,198 | 1,89,094 |
| 3. | கூடுதல் உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள் .. | 31 | 48 | 70 | 98 | 150 |

## இணைப்பு 1.

### நடந்த திட்டக் காலங்களில் தமிழ் நாட்டில் மின்சக்தி உற்பத்தி.

| எண். | விவரங்கள். | முதலாவது திட்டத்தின் தொடக்கத்தில் (1951 ஏப்ரல் 1-ம் நாள்). | முதலாவது திட்டத்தின் இறுதியில் (1956 மார்ச் 31-ம் நாள்). | இரண்டாவது திட்டத்தின் இறுதியில் (1961 மார்ச் (31-ம் நாள்.) | மூன்றாவது திட்டத்தின் இறுதியில் (1966 மார்ச் 31-ம் நாள்). | நான்காவது திட்டத்தின் இறுதியில் [1974 மார்ச் 31-ம் நாள் நிலவரப்படி] (உத்தேசமாக). |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 4. | உயர் அழுத்த மின்சக்தித் துணை நிலையங்கள் — | 25 | 41 | 73 | 103 | 125 |
| 5. | பங்கிட்டு அளிக்கும் நிலையங்களின் எண்ணிக்கை .. .. | 1,591 | 3,773 | 10,004 | 17,360 | 35,618 |
| 6. | மின்சக்தி பயன்படுத்துவோர் எண்ணிக்கை (இலட்சக் கணக்கில்.) | 2·5 | 4·3 | 7·7 | 13·6 | 27·12 |
| 7. | நபர் ஒருவர் பயன்படுத்தும் அளவு (யூனிட்டுகளில்) .. .. | 12 | 21 | 60 | 92 | 133 |

### கிராமங்களுக்கு மின்சார வசதி.

| எண். | விவரங்கள். | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மின்சார வசதி அளிக்கப்பட்ட நகரங்கள், கிராமங்கள், சிற்றூர்கள் ஆகியவற்றின் எண்ணிக்கை. | 1,813 | 3,543 | 10,760 | 22,137 | 61,072† |
| 2. | மின் இணைப்பு அளிக்கப்பட்ட வேளாண்மை விசையேற்றங்களின் எண்ணிக்கை. | 14,373 | 32,440 | 1,17,695 | 2,56,594 | 6,81,258 |

### செலவும் வருவாயும்.

| எண். | விவரங்கள். | (3) | (4) | (5) | (6) | (7) |
|---|---|---|---|---|---|---|
| 1. | மூலதனச் செலவு (ரூபாய் கோடிக் கணக்கில்) .. .. | 23·82 | 54·01 | 133·21 | 253·28 | 573·32 |
| 2. | மொத்த வருவாய் (ரூபாய் கோடிக் கணக்கில்) .. .. | 3·18 | 5·94 | 15·82 | 34·67 | 82·60‡ |

* 15 சதவிகித மின்வெட்டின் விளைவாக நிறுத்தி வைக்கப்பட்ட தேவையின் அளவு.

† தெரு விளக்கு கொண்டு மின்வசதி செய்யப்பட்டது.

‡ (அரசு உதவித் தொகை நீங்கலாக, மத்திய நிதி சரிக்கட்டலையும் சேர்த்து).

இணைப்பு 2.

4-வது திட்டக்காலத்தில் மின் திட்டங்களின் பேரிலான செலவும், 1974-75-ம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடும் (ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண். | திட்டத்தின் பெயர். | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. | 1970-71-ல் ஏற்பட்ட செலவு. | 1971-72-ல் ஏற்பட்ட செலவு. | 1972-73-ல் ஏற்பட்ட செலவு. | 1973-74-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு. | 1973-74-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1973-74-ம் ஆண்டில் எதிர்பார்க்கப் படும் செலவு (இறுதியாக நிர்ணயிக்கப் பட்ட மானியங்கள் தொகை) (உத்தேசமாக). | 4-வது திட்டத்திற்கான மொத்தம் 1969-70 லிருந்து 1973-74 வரை (உத்தேசமாக) | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு 1974-75. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| | **I. உற்பத்தித் திட்டங்கள்.** | | | | | | | | | |
| | அ. தொடர்ந்து வரும் திட்டங்கள். | | | | | | | | | |
| 1 | குந்தா நீர் மின்சாரத் திட்டம் 3-ம் நிலை. | —35.23 | 7·56 | 25·21 | —3·78 | 13·25 | 2·97 | —7·73 | —13·97 | 20·00 |
| 2 | பரம்பிக்குளம்-ஆழியாறு நீர் மின்சாரத் திட்டம். | 1,41·29 | 1,60·99 | 51·97 | 71·73 | 63·18 | —39·94 | —35·93 | 390·05 | 8·64 |
| 3 | கோதையாறு நீர் மின்சாரத் திட்டம் .. | 2,73·98 | 2,03·89 | 78·90 | 32·74 | 81·51 | 79·35 | 44·29 | 633·80 | 77·10 |
| 4 | சென்னை மின்சார நிலையம் விரிவு படுத்துதல் 4-ம் நிலை. | 80·77 | 43·37 | 36·22 | 44·18 | 0·01 | 10·64 | 10·98 | 215·52 | 0·01 |
| 5 | எண்ணூர் அனல் மின் நிலையம் .. | 17,41·99 | 4,61·01 | 3,31·28 | 416·85 | 512·67 | 259·90 | 253·98 | 32,05·11 | 34·55 |
| 6 | எண்ணூர் அனல் மின் நிலையத்தை விரிவுபடுத்துதல். | .. | 50·00 | 67·10 | 299·10 | 11,65·77 | 11,65·77 | 10,75·77 | 14,91·97 | 507·42 |
| 7 | பாண்டியாறு புன்னப்புழா நீர் மின் திட்டம். | 44·29 | 7·62 | — 33·09 | —0·96 | 10·00 | —6·50 | — 6·54 | 10·72 | 50·01 |
| 8 | குந்தா நீர் மின் திட்டம் 4-ம் நிலை .. | .. | .. | .. | 74·42 | 100·00 | 340·00 | 305·45 | 379·87 | 275·00 |
| | ஆ. புதிய திட்டங்கள். | | | | | | | | | |
| 1 | நடுவட்டம் நீர் திருப்புத் திட்டம் .. .. | 5·12 | 13·95 | 56·96 | 55·11 | 53·61 | 79·83 | 57·31 | 188·45 | 53·08 |
| 2 | சோழாட்டிப்புழா நீர் மின் திட்டம் .. | .. | .. | .. | — | 0·001 | .. | .. | .. | 0·001 |
| 3 | காடம்பாறை நீர் மின் திட்டம் .. .. | .. | .. | 0·73 | 4·03 | 150·00 | 225·35 | 220·48 | 225·24 | 440·00 |
| 4 | மேல்தாமிரபரணி நீர் மின் திட்டத்தின் சேர்வலாறு மின் நிலையம். | .. | 0·95 | 12·15 | 33·68 | 25·00 | 46·82 | 46·82 | 93·60 | 100·00 |
| ó | நெல்லித்துறை நீர் மின் திட்டம் .. .. | .. | 2·12 | 19·35 | 13·79 | 20·00 | 27·95 | 16·78 | 51·64 | 69·98 |

## இணைப்பு 2.

4வது திட்டக்காலத்தில் மின் திட்டங்களின் பேரிலான செலவும் 1974–75ம் ஆண்டிற்கான நிதிநிலை மதிப்பீடும் (ரூபாய் இலட்சத்தில்)

| எண். | திட்டத்தின் பெயர். | 1969-70-ல் ஏற்பட்ட செலவு. | 1970-71-ல் ஏற்பட்ட செலவு. | 1971-72-ல் ஏற்பட்ட செலவு. | 1972-73-ல் ஏற்பட்ட செலவு. | 1973-74-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. | 1973-74-ம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. | 1973-74 ஆண்டில் எதிர்பார்க்கப் படும் செலவு (இறுதியாக நிர்ணயிக்கப் பட்ட மானியத் தொகை. (உத்தேசமாக). | 4-வது திட்டத் திற்கான மொத்தம் 1969-70 லிருந்து 1973-74 வரை. (உத்தேசமாக). | வரவு செலவுத் திட்ட மதிப்பீடு. 1974-75. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (4) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) | (11) |
| 6 | பரலையாறு நீர் மின் திட்டம் .. .. | .. | .. | ... | .. | 5·00 | .. | .. | .. | 0·001 |
| 7 | சுருளியாறு நீர் மின் திட்டம் .. .. | .. | 0·80 | 20·04 | 66·91 | 200·00 | 200·00 | 145·34 | 233·09 | 200·00 |
| 8 | தூத்துக்குடி அனல் மின் நிலையம் .. | .. | .. | .. | .. | 100·00 | 405·00 | 405·00 | 405·00 | 500·00 |
| 9 | மேல்கொடுமுந்து லோன் பள்ளத்தாக்கு திட்டம். | .. | .. | .. | .. | .. | 0·49 | 0·03 | 0·03 | 16·36 |
| 10 | புதிய திட்டங்கள் பேரில் முன்னோடி நடவடிக்கை. | .. | .. | .. | .. | .. | .. | .. | .. | 33·64 |
| | மொத்தம்— உற்பத்தித் திட்டங்கள் .. | 22,52·21 | 9,51·66 | 6,66·82 | 11,07·40 | 25,00·00 | 27,97·63 | 25,32·03 | 75,10·12 | 23,85·79 |
| இ. | மின்சக்தி அனுப்புதல்—பங்கிட்டு வழங்குதல் திட்டம். | 5,79·07 | 10,98·85 | 7,89·03 | 9,98·08 | 11,00·00 | 11,00·00 | 11,43·44 | 46,08·47 | 12,00·00 |
| ஈ. | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளித்தல் .. | 8,75·00 | 8,75·00 | 8,75·00 | 14,00·00 | 6,50·00 | 6,50·00 | 6,50·00 | 46,75·00 | 700·00 |
| உ. | மின்சார நிறுவனங்களைக் கையகப்படுத்துதல். | —0·10 | 74·01 | 0·28 | 40·99 | 50·00 | 50·00 | 0·001 | 115·09 | 175·00 |
| ஊ. | புதுத் திட்டங்கள் குறித்து ஆய்வு .. .. | 4·75 | 13·03 | 10·62 | 10·56 | 12·50 | 14·90 | 14·90 | 53·86 | 14·00 |
| எ. | மின்சக்தி குறித்து ஆராய்ச்சிகள் .. | 0·33 | 0·48 | 0·56 | 0·43 | 2·00 | 2·00 | 2·00 | 3·80 | 2·00 |
| | மொத்தம்—அ-விலிருந்து எ. வரை .. | 37,11·26 | 30,13·03 | 23,42·31 | 35,57·37 | 43,14·50 | 46,14·53 | 43,42·37 | 1,69,66·34 | 44,76·79 |
| | கிராமப்புறங்களுக்கு மின்சக்தி அளிக்கும் திட்டத்திற்கு திட்டத்தில் சேர்க்கப்படாது செலவிடப்படும் தொகை. | 4,95·50<br>.. | 10,49·09<br>... | 17,72·58<br>.. | 7,30·09 | .. | 6,00·00 | 6,00·00 | 46,47·26 | 3,00·00 |
| | பெரு மொத்தம் .. | 42,06·76 | 40,62·12 | 41,14·89 | 42,87·46 | 43,14·50 | 52,14·53 | 49,42·37 | 21,613·60 | 47,76·79 |

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

### சனிக்கிழமை, 1974 ஆகஸ்ட் 24.

---

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

### *Correspondence Course*

* 283 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the amount of financial assistance rendered by the Government to the Madurai University for running their correspondence courses?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, ஒன்றரை இலட்ச ரூபாய் மான்யம் அளிக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, மதுரைப் பல்கலைக்கழகம் அஞ்சல் மூலமாக நடத்தும் இந்தப் பாட முறைக்கு எந்த அளவுக்கு வரவேற்பு இருக்கிறது, திட்டம் எந்த அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறது என்பதை அறியலாமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது புகுமுக வகுப்பு, பி.ஏ., பி.காம். ஆகிய வகுப்புக்களில் இந்தக் கடிதப் போக்குவரத்து மூலம் அஞ்சல் வழிக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறது. இதற்கு நல்ல வரவேற்பு இருக்கிறது. கிட்டத்தட்ட ஏழாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் நாடெங்கிலுமிருந்து இந்த முறையில் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல முறை ஆதலால் இதில் படிப்பவர்களை ஊக்குவிக்கின்ற முறையில் சர்க்கார் ஏதாவது உதவித் தொகை வழங்கி வருகிறதா?

[1974 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, இதற்கென்று தனி உதவித் தொகை இல்லை. இந்த அஞ்சல் வழிப் பயிற்சி நடத்துவதற்குப் பல்கலைக்கழகத்திற்கு அரசாங்கம் மானியம் அளித்து வருகிறது.

**திரு. ஆலடி அருணா:** இந்த அஞ்சல் வழிக் கல்வி கற்றதன் மூலம் இதுவரை எத்தனை பேர் பட்டம் பெற்றிருக்கிறார்கள்? இதே திட்டத்தை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் இருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, எத்தனை பேர் தேர்வு எழுதினார்கள், எத்தனை பேர் தேர்வு பெற்றார்கள் என்ற விவரக் குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த விவரங்கள் தரப்படும்.

ஆனால், சென்னைப் பல்கலைக்கழகத்திலும் வைக்க வேண்டும் என்று சில பேர் கோரினார்கள். தமிழகத்தைப் பொறுத்த வரையில், ஒரு பல்கலைக்கழகம் நடத்துவதன் காரணமாக வேறு பல்கலைக்கழகங்களில் இதுமாதிரி அஞ்சல் வழியில் பயிற்சி நடத்த வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது. மதுரைப் பல்கலைக் கழகம் மிகச் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறது. ஒரு பல்கலைக்கழகம் நடத்தி வருவது போதாது என்ற நிலை ஏற்படும்போது, வேண்டுமானால் பிற பல்கலைக் கழகங்களிலும் துவக்குவது பற்றி நாம் கவனிக்கலாம்.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, பி.ஏ., பி. காம். போன்ற வகுப்புகளுக்கு நடத்துவதைப் போலவே, எம்.ஏ., எம்.எஸ்ஸி. போன்ற இதர கோர்ஸுகளுக்கும் இந்த அஞ்சல் வழிப் பாட முறை கொண்டு வரப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அது பல்கலைக்கழகம்தான் முடிவு செய்ய வேண்டும்.



1974 ஆகஸ்ட் 24]

## சட்டக் கல்லூரி விரிவுரையாளர்கள்

* 284 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை சட்டக் கல்லூரியில் பணியாற்றும் பகுதி நேர விரிவுரையாளருக்கு தற்போதுள்ள சம்பள விகிதத்தினை மாற்றி அமைக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஆம். பரிசீலனையில் உள்ளது.

* 285 வினா.—**திரு. எம். முத்தையா:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சட்டக் கல்லூரியில் தற்காலிகமாக கல்வித் தகுதி இல்லாதவர்கள் (எம்.எல். ஆனால் 3 ஆண்டு கால வழக்கறிஞர் பணி, பி.எல். இரண்டாவது வகுப்புடன் 5 ஆண்டு கால வழக்கறிஞர் பணி) எத்தனை நபர்கள் பணி புரிகிறார்கள்?

(இ) அதற்குரிய காரணம் என்ன?

(உ) அரசாங்க தேர்வுக் கழகத்தின் மூலம் ஏன் நபர்களை தேர்ந்தெடுக்க விளம்பரம் செய்யவில்லை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:**

(அ) (1) இளநிலை பேராசிரியர்கள்—6 பேர்.

(2) பகுதி நேர விரிவுரையாளர்கள்—9 பேர்.

(இ) முழுத் தகுதி வாய்ந்த நபர்கள் கிடைக்காததாலும், அந்த பணியிடங்களை அவசரமாக நிரப்ப வேண்டியிருந்ததாலும் முழுத் தகுதியில்லாதவர்கள் தற்காலிகமாக நியமனம் செய்யப் பட்டிருக்கிறார்கள்.

(உ) அரசு பணியாளர் தேர்வாணைக் குழு மூலம் தேர்வு நடத்த தனியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் பணியாற்றும் பகுதி நேர விரிவுரையாளர்களுடைய சம்பளத்தை மாற்றியமைப்பது குறித்து எப்பொழுது

பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது? இதுவரை வழங்கப் படாமல் கால தாமதம் ஆவதற்கு என்ன காரணம்? துரிதமாகச் செய்ய முயற்சி ஏதேனும் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே, ரூ. 300—25—600 என்று இருந்ததை ரூ. 525—25—600—30—690—35—900 என்று இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைத்தது. பகுதி நேர விரிவுரையாளர்களுக்கு சம்பளம் தவிர படி இல்லை. சம்பளம்தான் உண்டு. ஆகையால் அவர்களுக்கு ஓரளவு குறைத்தார்கள். ரூ. 400 என்று நிதித் துறை நிர்ணயித்தது. விரிவுரையாளர்களுடைய வேண்டுகோள்—ஏற்கெனவே கொடுத்த ரூ. 525 அடிப்படைச் சம்பளம் தர வேண்டும் என்று அவர்கள் கோரியிருக்கிறார்கள். கல்வித் துறையைப் பொறுத்த வரையிலும், இதற்கு ஆதரவு தந்திருந் தாலும், நிதித் துறை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. ஆகவே, மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு, இதைப் பற்றிய முடிவை விரைவில் எடுக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, may I know from the Hon. Minister for Education and Tourism, whether these part-time Lecturers are ousted and reposted or allowed to continue during the summer vacation?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால், தற்காலிக மானவர்கள், தேர்வு ஆணைக் குழுவின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப் படுகிற வரையில் தொடர்ந்து பணியாற்றுகிறார்கள். பொதுவாக, மற்றக் கல்லூரிகளைப் பொறுத்த நிலைமைகள் எல்லாம், 9 மாதங்கள் தொடர்ந்து பணியாற்றி வந்தால், அவர்களுக்கு விடுமுறைக் காலத்திற்கும் சம்பளம் தரலாம். ஆனால், பகுதி நேர வேலை பார்க்கிறவர்களுக்கு என்ன நிலை என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் அந்த நிலையை அறிவிக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, தகுதி உள்ளவர்கள் இருந்தும் அவர்களை நியமிக்காமல், தகுதியற்றவர்களை நியமித்ததன் காரணமாக சிலர் உயர்நீதி மன்றத்தில் 'ரிட்' தாக்கல் செய்தது உண்மையா? அப்படியென்றால் அதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, தகுதியுடையவர்கள் இருப்பார்களானால், தகுதியுடையவர்களைத்தான நியமிக்க வேண்டும். தகுதியுள்ளவர்களும் விண்ணப் பிக்கிறார்கள், தகுதியற்றவர்களும் விண்ணப்பிக்கிறார்கள். ஆனால், தேர்ந்தெடுப்பவர்கள் தேர்வு ஆணைக் குழுதான். தேர்வு ஆணைக் குழு யாரைத் தேர்ந்தெடுத்து தெரிவிக்கிறார்களோ அவர்களை நாம் நியமிக்க வேண்டும். விண்ணப்பிப்பவர்களில் தகுதி உள்ளவர்களும் இருக்கக் கூடும்; தகுதி இல்லாதவர்களும் இருக்கக் கூடும். ஆனால், தேர்வு ஆணைக் குழு தேர்ந்தெடுக்கிறவர்களைத்தான் நாம் நியமிக்கிறோம். நாம் தற்காலிகமாக நியமித்தாலும், தேர்வாணைக் குழுதான் முடிவு செய்வார்கள். அவர்கள் யாரைத் தேர்ந்தெடுக் கிறார்களோ அவர்களை நியமிக்கும் வகையில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். இப்பொழுதுகூட நான்கு பேர்களை நியமிக்கும்போது உயர்நீதி மன்றத்தினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் நாம் நியமித்து இருக்கிறோம்.

## உயர்நிலைப் பள்ளிகளில் புதிய பாடத் திட்டம்

*** 286 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் 7—8—1973-ல் வினா எண் 52-க்கு அளித்த விடையையொட்டி தயவு செய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப் பள்ளிகளில் புதிய பாடத் திட்டம் இதுவரை எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முன் ஆண்டு களில் புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்த வகுப்புகளையும் சேர்த்து 1974—75-ம் ஆண்டில் முதல் ஆறு வகுப்புகளில் எல்லாப் பாடங்களுக்கும் ஏழாம் வகுப்பில் கணக்கு, அறிவியல் தவிர பிற பாடங்களுக்கும் ஒன்பதாம் வகுப்பில் தமிழுக்கும் புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, இந்தப் புதிய பாடத் திட்டம் கொண்டு வருவதன் நோக்கம் என்ன? எந்த அளவு மாணவர்களுக்கும் பயனுள்ளதாக இருக்கிறது என்பதை அறியலாமா?

[1974 ஆகஸ்ட் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அடிப்படையிலேயே அறிவியல் கல்வி, கணக்கியல் போன்றவைகளில் மிகத் தீவிரமாகவும் விரிவாகவும் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் இந்தப் புதிய பாடத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அறிவியல் பாடங்களை ஆறும் வகுப்பிலிருந்து துவங்குவதாக நிலைமை இருந்தது. இப்பொழுது மூன்றும் வகுப்பிலிருந்து அறிவியல் பாடங்கள் கற்பிக்கும் முறையில் புதிய முறை மாற்றியமைக்கப்பட்டு, புதிய முறைகளிலே கணக்கியல் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. அதுபோன்று 1965-ஆம் ஆண்டு நாம் பாட திட்டங்களை மாற்றிஞேம். அதற்குப் பிறகு காலத்திற்கேற்பவும், அந்தந்த மாவட்ட சூழ்நிலைமைக்கு ஏற்பவும், மாநில சூழ்நிலைமைக்கேற்பவும் பாட திட்டங்கள் ஆறும் வகுப்பு வரை மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. 7-8-9-10 வரையிலும் கூட மாற்றியமைக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மற்ற பாட திட்டங்களும் விரைவிலே கொண்டு வருவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்போது புதியதாகத் துவங்கப்பட்டிருக்கிற பாட திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு புரிந்து கொள்வதற்கும்—அறிந்து கொள்வதற்கும் சில சங்கடங்கள் இருக்கிறதே, அவர்களுக்குத் தனியான முறையில் மாலை நேரங்களில் பயிற்சி அளிக்கிற திட்டம் ஏதாவது உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கணக்கியல், அறிவியல் ஆகிய பாட திட்டங்களில் ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி இரண்டாண்டு காலமாக அளிக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு 50 லட்சம் ரூபாய் அதற்காகத் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டும் 11 லட்சம் ரூபாய் தனிப் பயிற்சி அளிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆலடி அருணு: விஞ்ஞான பாடத்தை அறிவியல் பாடம் என்று அறிவிக்கிருர்கள். அப்படியானல் மற்ற பாடங்கள் அறிவு இல்லாத பாடங்களா? விஞ்ஞானம் என்ற சொல்லுக்குத் தனியாக—பொருளுள்ள ஒரு சொல்லை உருவாக்கித் தருவார்களா?



1974 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: விஞ்ஞானம் என்பதற்கான சொல் அறிவியல் என்ற தன்மையில் அமைந்து விட்ட காரணத்திஞல் மற்ற பாடங்கள் அறிவில்லாதது என்று ஆகாது. விஞ்ஞானம் என்கிற போது சமஸ்கிருத சொல்லில் ஞானம் என்ருல் அறிவு—விஞ்ஞானம் என்ருல் பேரறிவுக்கு என்ற அளவுக்குத்தான் முன்பே வைத்திருந்தார்கள். அறிவியல் என்ற சொல் இதற்குப் பொருத்தமானதுதான்—எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது. சங்கடம் எதுவும் அதில் இல்லை.

### செங்கற்பட்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகள்

* 287 விஞ—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் 1973–74 ஆம் ஆண்டு புதிதாகத் தொடங்கப்பெற்ற உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(இ) எந்தெந்த இடங்களில் தொடங்கப் பெற்றது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) மூன்று உயர்நிலைப் பள்ளிகள். அவை—பெண்ணலூர் பேட்டை, மகாபலிபுரம், புக்கத்துரை என்ற இடங்களில் தொடங்கப்பட்டன.

### கிருதுமால் நதியின் குறுக்கே பாலம்.

* 288 விஞ—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் யூனியன், பழையனூருக்குச் செல்லும் சாலையில் அச்சங்குளம் அருகில் கிருதுமால் நதியின் குறுக்கே பாலம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம். 2.50 லட்சம் ரூபாய் மதிப்பில் இப்பாலம் கட்ட அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

[1974 ஆகஸ்ட் 24

## பல்லடம் தொகுதியில் புதிய பாலங்கள்

*289 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதியில் கரடிவாவி பக்கத்தில் உள்ள மெயின் ரோட்டிலும், காமநாயக்கன்பாளையம் to அன்னூர் ரோடு கணபதிபாளையத்திற்குப் பக்கத்திலும், பல்லடம் to திருப்பூர் மெயின் ரோட்டில் கரைப்பள்ளத்திலும் பாலங்கட்ட, பல்லடம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மூலம் அரசுக்கு மனு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் என்றால், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நிதி நிலைமையும் இவ்வேலைகளின் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டு பின்வரும் திட்டக் காலங்களில் இவற்றைச் செயல்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

## வறட்டுப்பள்ளம் நீர்த்தேக்கத்திட்டம்

*290 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிப் பகுதியிலுள்ள வறட்டுப்பள்ளம் நீர்த்தேக்க திட்ட ஆய்வுப் பணி எப்போது முடிந்தது ?

(இ) மேற்படி திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) கோயம்பத்தூர் மாவட்டம், பவானி வட்டத்திலுள்ள காக்கையனூர் கிராமத்திற்கருகில் வறட்டுப் பள்ளத்தின் குறுக்கே ரூ. 60.00 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டத்திற்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதற்கு மத்திய அரசாங்கம் ஒப்புதல் அளித்துவிட்டதா ? எப்போது அந்தப் பணி துவங்கப்படும் என்று அறிவிக்க இயலுமா ?



1974 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இன்னும் நீர்மின் கழகத்தின் ஒப்பந்தம் கிடைக்கவில்லை. கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அடுத்தமாதம் கோவையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கால்கோல் விழா நடத்த இருக்கிறார்கள்.

திரு. ஏ. எம். இராஜா : வறட்டுப் பள்ளத்தைப்போலவே அங்கே மணியாச்சிப் பள்ளம் என்ற ஓடையிலும் வருடம் முழுவதும் தண்ணீர் ஓடிக் கொண்டிருக்கிறது. அந்தப் பள்ளத்தையும் இந்த நீர்த் தேக்கத்திற்குத் திருப்பிவிட முயற்சி மேற்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற தகவல் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சேகரித்துத் தருகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : வறட்டுப்பள்ளத் திட்டத்தினால் எவ்வளவு ஏக்கரா பயன்பெறும் ? மத்திய அரசாங்கத்தின் நீர்மின் ஆணைக் குழுவின் அனுமதியில்லாமல் இதைச் செயல்படுத்த முடியுமா ? 25 லட்சத்திற்கு மேற்பட்ட திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி தேவைப்படாதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவர்களது அனுமதி இதற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்த்துத்தான் இதைத் துவங்க இருக்கிறோம். இதனால் ஆயக்கட்டு அனுமதிக்கப்பட்ட 670 ஏக்கராவோடு அளிக்கப்படாத 130 ஏக்கரா பாசன வசதி பெறுகிறது. மேலும் இதன் மூலம் 1,670 ஏக்கராவுக்குப் பாசன வசதி அளிக்கப்படும். மேலும் பத்து மைல் தூரத்திலுள்ள 2,500 கிணறுகள் நீர்வளமும் பெறும்.

## கம்பம்—இராஜபாளையம் சாலை

*291 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிதாக கம்பம்–இராஜபாளையம் இணைப்புச் சாலை ஒன்றை அமைக்கக் கோரி சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் அமைச்சரிடம் விண்ணப்பம் கொடுத்துள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

[1974 ஆகஸ்ட் 24

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வழியாக இராஜபாளையத்தையும் கம்பத்தையும் இணைக்கும் வகையில் அமைக்க உத்தேசித்துள்ள சாலையின் தடம் சுருளியார் நீர் மின்சக்தி நிலையத்தின் வழியாகச் செல்ல திட்டமிடப்பட்டிருக்கிறது. அதனால் சுருளியார் நீர் மின்சக்தி திட்ட வேலைகள் முடிவடைந்த பிறகுதான் இச்சாலை போடும் வேலை, "மெற்குந் தொடர்ச்சி மலைப்பகுதி வளர்ச்சி" திட்டத்தின் கீழ் பரிசீலிக்கப்படக்கூடும்.

திரு. ஆலடி அருணா : இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் செலவிடப்பட்டிருக்கிறது? எப்போது முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சுருளியார் நீர் மின்சக்தி திட்ட வேலைகள் முடிவடைந்த பிறகு தான் இத்திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்தேன். அதற்குப் பிறகுதான் இதுபற்றி பரிசீலிக்கப்படும்.

### திருச்சிராப்பள்ளியில் அரசு அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள்.

* 292 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சியில் அரசு அலுவலகங்களுக்கென புதிய கட்டடம் ஒன்று எந்த இடத்தில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருச்சியில் அரசு அலுவலகங்களுக்கென புதிய பல அடுக்கு கட்டடம் ஒன்று கஜ மலைப் பகுதியில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இதற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா? எவ்வளவு தொகை இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது? இந்தப் பணி எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதாக என்னிடம் விவரம் இல்லை.



1974 ஆகஸ்ட் 24]

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : திருச்சியிலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்கூட புராதனமான, இருள் அடைந்த கட்டடத்தில் மிக நெருக்கடியான இடத்தில் இருக்கிறது. இன்னும் மாவட்ட பொறியாளர்கள் அலுவலகம் ஒவ்வொரு இடத்திலே சிதறுண்டு இருக்கிறது. எந்த அலுவலகம் எங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடிப்பதே சிரமமாக இருக்கிறது. இந்த மாவட்டப் பொறியாளர் அலுவலகம், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் ஆகியவற்றிற்கும் தனிக் கட்டடம் கட்ட ஆலோசிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பல அடுக்குக் கட்டடம் உருவாகிற நேரத்தில் இதைப் பற்றிப் பரிசீலித்துக் கொள்ளலாம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது திருச்சியிலுள்ள மாநில அரசு அலுவலகங்கள் பல இடங்களில் சிதறிக் கிடக்கின்றன. எல்லா அலுவலகங்களையும் இந்தப் புதிய கட்டடத்தில் வைக்க இனிமேலாவது வழிவகை செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தக் கருத்தில்தான் இந்தக் கட்டடம் உருவாக்கப்படுகிறது என்று கருதுகிறேன்.

### *Assistance for Coir Industry*

* 293 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state the amount of loan advanced for the production of finished coir goods in the State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இயந்திர மயமாக்கப்பட்ட தென்னை நார்த் தொழில் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தொழில்களுக்கு மாநில அரசு உதவி வழங்கும் சட்டத்தின் மூலம் தொழில் முனைவோர்களுக்குத் தென்னை நார் உற்பத்திச் செய்வதற்கென இதுவரை ரூ. 14,09,500 கடனாக வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். வடிவேல்: வழங்கப்பட்ட பணம் முறையாக வழங்கப்பட்டிருக்கிறதா? இந்தப் பணம் சரியாக வழங்கப்படவில்லை என்கிற புகாரை சர்க்கார் அறியுமா? ஒதுக்கப்பட்ட தொகை வழங்கப்படாது பாக்கி வைக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படிப்பட்ட செய்தி என்னிடத்தில் இல்லை. நானே பலயிடங்களுக்குச் சென்று இந்தத் தொழிலைத் துவக்கி வைத்தேன்.

[1974 ஆகஸ்ட் 24

**திரு. ஜேம்ஸ்:** தென்னை நார்த் தொழிலுக்காக அளிக்கப் படுகின்ற கடன் கூட்டுறவுச் சங்கங்கள் வழியாக அளிக்கப்படுமா? தனி நபர்களுக்கு அளிக்கப்படுகிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஸ்டேட் எய்டு டு இண்டஸ்ட்ரீஸ் ஆக்ட் பிரகாரம் தனி நபர்களுக்கு வழங்கப்படுகிறது.

**திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:** மதுரையில் இருக்கிற தொழில் கூட்டுறவுச் சங்கம் சிறிய அளவில் செயல்படுகிறது. அதற்கு இந்தத் திட்டத்தின் மூலம் உதவி செய்து இந்தத் தொழிலை விஸ்தரிக்க ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்தக் கூட்டுறவு சங்கம் இப்படிப்பட்ட திட்டத்தை அரசுக்கு அனுப்பி வைத்தால் பரிசீலிக்கலாம்.

**திரு. கோவை செழியன்:** தென்னை நார்த் தொழிலால் செய்யப்படுகிற பொருள்களுக்கு வெளிநாடுகளில் நல்ல மார்க்கெட் இருக்கிறது. வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டித் தரக்கூடியது. கேரளாவில் காயர்போர்டு என்று தனியாக அமைத்து உதவி செய்து வருவதைப்போல, தமிழகத்திலும் அப்படி ஒரு வாரியத்தை அமைத்து இதற்கு வேண்டிய ஊக்கத்தை அரசு அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேரளாவில் என்னென்ன வகையில் ஊக்கம் கொடுக்கப்படுகிறதோ, அந்தந்த வகைகளில் எல்லாம் நம் மாநிலத்திலும் ஊக்கமும், உதவியும் அளிக்க தொழில்துறை ஆராய்ந்து வருகிறது. அவர்கள் அதனை ஆராய்ந்த பிறகு அந்தந்த வகையில் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார்:** தென்னை நார் உற்பத்திச் செய்வதற்கு பாக்வாடர்ஸ் காயல்கள் தேவைப்படுகிறது. கேரளாவில் உள்ளது போல தமிழகக் கடற்கரையில் அந்தகைய காயல்கள் உண்டா? அம்மாதிரியுள்ள இடங்களிலாவது கடன் தொகையை அளித்து இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய முன்வருவார்களா?



1974 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கேரளாவைப்போல தமிழகத்தில் இல்லை என்றாலும் உள்நாட்டிலேயே கூட இந்தத் தொழிலை வளர்ச்சி அடையச் செய்ய வாய்ப்பிருக்கிறது.

### *Assistance for manufacture of Umbrellas*

* 294. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government of Tamil Nadu have financed the manufacture of umbrellas in the State; and

(b) if so, the total number of persons so financed during the calender years 1972 and 1973?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம். கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள குடை உற்பத்தி செய்யும் மந்திரம்பாளையம் குடைசெய்வோர் தொழிற்கூட்டுறவுச் சங்கத்திற்கு அரசு நிதி உதவி அளித்துள்ளது. தனியார் எவருக்கும் குடை செய்வதற்காக நிதி உதவி அளிக்கப்படவில்லை.

(ஆ) 52 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இச் சங்கத்திற்கு 1972-ம் 1973-ம் ஆண்டுகளில் நிதி உதவி அளிக்கப்படவில்லை.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, இந்தக் குடை உற்பத்திக்குக் கொடை உள்ளம் கொண்டோர் சிலர் கூட்டுறவு முறையிலே, ஜாயிண்ட் செக்டார் முறையிலே, உற்பத்தி செய்வதற்கான சூழ்நிலையை உருவாக்கினால், அரசு அவர்களுக்கு உதவி செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அவர்கள் அரசினுடைய நிதி நிறுவனங்களை அணுகுவார்களானால் உதவி செய்யலாம்.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய முதல்வர் அவர்கள் பிறந்த நாளின்போது ஒவ்வொரு ஆண்டும், கைரிக்‌ஷாவை ஒழித்து சைக்கிள் ரிக்‌ஷாவைத் தந்தார்கள். கண்ணொளி திட்டம் தந்தார்கள். அதைப் போல், ஏழைகளுக்கு வெளியிலே நடத்துகின்றவர்களுக்குக் குடை தந்தால் கொடை வள்ளல் என்ற பெயராவது கிடைக்கும். அதை அரசு செய்ய முன் வருமா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, இவ்வளவு நல்லெண்ணம் திரு. கோவை செழியனுக்கு இருப்பது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த நிலையத்தில் ஆண்டுக்கு எவ்வளவு குடை உற்பத்தியாகிறது? அதன் மதிப்பு எவ்வளவு என்ற விவரம் அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வால்யூ ஆப் தி புரடக்ஷன் கணக்கு தான் என்னிடத்திலே இருக்கிறது. 1973-74-லே 95,422 ரூபாய்க்கு உற்பத்தியாகி இருக்கிறது.

### மண்பாண்டம்—கலைப்பொருட்கள் ஏற்றுமதி

* 295 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தயாராகும் மண் பாண்டங்கள், கலைப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) மாநில அரசு இடத்தில் அவ்வித உத்தேசம் ஏதும் இல்லை.

(இ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, வெளி நாட்டிலிருந்து வருகின்றவர்கள் இதுபோன்ற பொருள்களை அதிகமாக வாங்குகிறார்கள். நல்ல வரவேற்பும் இருக்கிறது. ஆகவே, இனிமேலாவது ஏற்றுமதி செய்ய அரசாங்கம் முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, பொதுவாக, செராமிக்சிலே செய்யக்கூடிய கைவினைப் பொருள்களுக்கு, அதிக கிராக்கி இருக்கிறது. எந்த அளவுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்ற முயற்சியை Handicrafts Board எடுத்திருக்கிறார்கள்.



திரு. கா. வேழவேந்தன்: தலைவரவர்களே, கைவினைப் பொருள்களுடைய அழகை மேல்நாட்டுப் பயணிகள் விரும்பு கிறார்கள். ஆகவே, அவர்கள் மீனம்பாக்கத்தை விட்டுப் புறம்படும்போது, அயல் நாட்டுச் செலாவணியைக் கடைசியாக போகிற நேரத்தில் செலவழிக்க வேண்டுமென்று விரும்பு கிறார்கள். அந்த இடத்திலேயாவது தனியாக சேல்ஸ் எம்போரியம் திறந்து இந்தக் கைவினைப் பொருள்களை வைக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மாதவன்: இது நல்ல யோசனை. ஹாண்டி கிராஃப்ட்ஸ் கார்பரேஷனுக்குத் தெரிவிக்கப்படும்.

### *Land for raising Mulberry plantations*

* 296. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether a large area of land has been assigned to private parties in Hosur in Dharmapuri district for the raising of mulberry Plantations; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) வினா எழவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, mulberry cultivation and silk industry is prospering in Hosur and it is profitable. To make it more stable, profitable and attractive, may I know from the Hon. Minister whether he would sanction more funds for it?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதற்காகத்தான் சில்க் போர்டுக்குப் பல கோடி ரூபாய்களுக்கு ஒரு திட்டத்தை அனுப்பி இருக்கிறோம். அவர்களுடைய உதவி கிடைக்குமானால் இந்தத் தொழிலுக்கு அதிகம் உதவி செய்யலாம். நம்முடைய மாநில அரசைப் பொறுத்த அளவிலே, சில இடங்களிலே, வட ஆற்காடு, செங்கற்பட்டு, தஞ்சை மாவட்டங்களிலே இதை உற்பத்தி செய்வதற்கு மேலும் வழி இருக்கிறது என்று அந்த உத்திகளையும் பரிசீலித்து வருகிறோம். ஹோசூர் பகுதியைப் பொறுத்து, நாமே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, ஒரு பெரிய பண்ணை இன்றைக்கு வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

[1974 ஆகஸ்ட் 24

## திருப்பத்தூர் துணைச்சிறைச்சாலை

*297 வினா—திரு. ஜி. இராமசாமி: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், திருப்பத்தூரில் உள்ள துணைச் சிறைச்சாலையை சீரமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. ஜி. இராமசாமி:** தலைவர் அவர்களே, அந்தச் சிறைச்சாலை ரொம்பவும் மோசமான நிலையில் உள்ளது. ஆகவே, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டாவது அது சீரமைக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தேவைப்பட்டால் பரிசீலிக்கலாம்.

**திரு. ஆலடி அருணா:** சிறைச்சாலைகளை சரியான முறையிலே சீர்திருத்த வேண்டுமென்று நம்முடைய சட்ட அமைச்சர் அவர்களே, பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்தச் சட்டமன்றத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, சிறைச்சாலைகளைச் சீர்திருத்தி அமைக்க புதிய திட்டங்கள் அரசிடம் இருக்கிறதா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** நாம் ஆட்சிக்கு வந்தபிறகு, சிறைச்சாலைகளுக்குச் செல்கின்ற வாய்ப்பு அவருக்கு கிடைத்திருக்காது. சிறைச்சாலைகளைச் சீர்திருத்த நாம் பல முயற்சிகளை எடுத்திருக்கிறோம். உதாரணமாக, சிறைச்சாலைகளில், தண்ணீர் வசதி, 'லட்ரின்' வசதி ஆகியவற்றைப் பல இலட்சம் ரூபாயில் ஒவ்வொரு சிறைச்சாலையிலும் உருவாக்கத் திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறோம். துணைச் சிறைச் சாலைகளைப் பொறுத்து, படிப்படியாக, ஃபேஸ்ட் புரோகிராம் போட்டு, அரசாங்கமே ஏற்றுக்கொண்டு. சீர்திருத்த வாய்ப்புகளும் அதிக முயற்சிகளும் கொடுக்க பரிசீலித்து வருகிறோம்.



1974 ஆகஸ்ட் 24]

**திரு. எஸ். வடிவேல்:** சிறைச்சாலையிலிருந்து கைதிகள் விடுதலையாகும்போது, உணவுக்கு 50 பைசாக்கள்தான் கொடுக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற விலைவாசிக்கு அது போதாது. அந்தப் படியை ரூ. 3-ஆக உயர்த்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, விடுதலை ஆகும்போது வீட்டுக்குச் செல்வார்கள். ஆகவே, உணவைப் பற்றி அவர்கள் கவலைப்பட மாட்டார்கள்.

**திரு. எஸ். வடிவேல்:** திருச்சி ஓரத்திலேயே எல்லோருக்கும் வீடு இல்லை. திருத்துறைப்பூண்டி, மாயூரம், சீர்காழி போன்ற பகுதிகளுக்குத் திரும்பிச் செல்பவர்களுக்கு 8 அணா இன்றைக்குக் கொடுக்கப்படுகிறது. அகவிலை உயர்ந்துள்ள காரணத்தினால் அதனை குறைந்தபட்சம் ரூ. 3-ஆகக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதனை அரசு செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கைதிகள் சிறைச்சாலையிலே உள்ளபொழுது, சாப்பாடு வசதிகளை எந்த எந்த அளவு மாற்றி இருக்கிறோம் என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது அவர்கள் எழுப்பி இருப்பது வீட்டுக்குப் போவது. நாங்கள் அறிந்தவரை, கைதிகள் எப்பொழுது வீட்டுக்குப் போவோம் என்று ஆர்வத்தோடு இருப்பார்கள். ஆகவே, அதிகப் பணம் கேட்கமாட்டார்கள்.

**திரு. கோவை செழியன்:** முன்பெல்லாம் காலையில் சோளக் கஞ்சி தருவார்கள். இப்பொழுது கைதிகளுக்குத் தோசை, இட்டிலி தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இட்டிலி, தோசை இன்னும் தொடர்கிறதா? அல்லது பழைய மாதிரி சோளக் கஞ்சி தரப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** சோளம் கூட தப்பான ஒன்று அல்ல. ஆனால் சோளக் கஞ்சி போடும்போதும், அரிசிக் கஞ்சிபோடும்போது நாற்றம் எடுத்த காட்சியை நாமே அனுபவித்தோம். ஆகவே, மாற்றியமைத்து, சோளக் கஞ்சிக்குப் பதிலாக, சோளப் புட்டு போடலாமா என்பது பரிசீலனையில் இருக்கிறது. பிரிப்பரேஷன் முறைதான் மாறுபடுகிறது. அளவு அப்படியே தான் இருக்கிறது. குறைக்க வேண்டிய அவசியம் இல்லை.

[1974 ஆகஸ்ட் 24

பிரிப்பரேஷன்—தயாராகிற நிலைமையில் கொஞ்சம் கஷ்டம் இருந்ததால், புதிதாக பாத்திரம் கொடுத்து—முன்பு இரும்பு சட்டி கொடுத்திருந்தார்கள். இப்பொழுது அலுமினியம் கொடுத்திருக்கிறோம், நாற்றம் குறைந்திருக்கிறது. கஞ்சிக்குப் பதிலாக உப்புமா, இட்டிலி போடுகின்ற நிலைமைக்கு மாற்றி வருகிறோம்.

**திரு. ஏ. சுப்பரமணியம்:** கஞ்சிக்குப் பதிலாக இட்டிலி போடப்படுவதாகச் சொன்னார்கள். எத்தனை சிறைச்சாலைகளுக்கு, எந்த எந்த சிறைச்சாலைகளிலே போடப்படுகிறது என்பதனை அறிய விரும்புகிறேன். எவ்வளவு காலத்திற்குள்ளே, எல்லா சிறைச்சாலைகளிலும் போட அரசு ஏற்பாடு செய்யும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஃபேஸ்ட் புரோகிராமாகக் கொடுக்கவேண்டுமென்று ஒப்புக்கொண்டிருக்கிறோம். ஆனால், பண வசதிக்கேற்றபடிதான் ஒவ்வொரு சிறைச்சாலையிலும் விரிவுபடுத்தப்படும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** கைதிகள் திருந்துகின்ற அளவுக்கு, திரைப்படங்கள் காட்டப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது எப்பொழுது காட்டப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** அடிக்கடி காட்டப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவரவர்களே, இன்றைக்குத் தஞ்சை மாவட்டத்திலேயிருந்து ஏறத்தாழ 2,000 பேர் சிறைக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் அரிசிக் கஞ்சிதான் குடித்துப் பழக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சோளக் கஞ்சி கொடுத்ததால், வயிற்றிலே அடித்து, மருத்துவ மனையிலே இருக்கிறார்கள். ஆகவே, தஞ்சை மாவட்டத்திலேயிருந்து வருகிறவர்களுக்காவது அரிசிக் கஞ்சி கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எங்கெங்கே அரிசி கொடுக்கின்ற வாய்ப்பு இருக்கிறதோ அங்கேயெல்லாம் கொடுக்கலாம். ஆனால், எல்லோருக்கும் அரிசிக் கஞ்சிதான் கொடுக்கவேண்டும். சோளக் கஞ்சியே கொடுக்கக் கூடாது என்றால் கஷ்டமாக இருக்கும்.



1974 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 298, 299 ஆகியவை ஒத்திவைக்கப்படுகின்றன.

### வட்டத் தலைமையிடங்களில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள்

*300 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்களுக்காக தாலூகா தலைமை நகரங்களில் வாடகை வீடுகள் கட்டித்தரும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) 30—6—1974 வரை மாவட்டத் தலைநகரங்கள் நீங்கலான 10 தாலூகா தலைநகரங்களில் 690 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னமும் நான்கு தாலூகா தலைநகரங்களிலும் மற்றும் மேற்கூறிய 10 தாலூகா தலைநகரங்களில் இரண்டு இடங்களில் கூடுதலாகவும் மொத்தம் 302 வாடகை குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள தாலூகா தலைநகரங்களில் தேவையை அறிந்தும், பொருள் வளத்திற்கேற்பவும் முதன்மையைக் கணக்கிட்டு இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவர் அவர்களே, கட்டப்பட்டுள்ள வீடுகளில் எவ்வளவு ரூபாய் மாதம் வசூலிக்கப்படுகிறது? இன்னும் கட்டப்படாமலிருக்கிற தாலூகாக்கள் எத்தனை, அதன் விவரத்தை அறியலாமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, கட்டப்பட்டிருக்கிற வீடுகளிலே, சம்பளத்திலே 10 சதவிகிதமும், எச்.ஆர்.ஏ.யும் வாடகையாக வசூலிக்கப்படுகிறது. ரூ. 200 சம்பளம் வாங்குகிறவர்கள், ரூ. 425-லிருந்து ரூ. 725-வரை, ரூ. 725-லிருந்து ரூ. 1,100 வரை, ரூ. 1,100-க்கு மேல் சம்பளம் வாங்குகிறவர்கள் என்று பகுதி பகுதியாகப் பிரிக்கப்பட்டு, சம்பளத்திற்கு ஏற்றவகையிலே வாடகை வசூலிக்கப்படுகிறது. அதனைக் குறைக்கவேண்டுமென்று கூட முறையிட்டார்கள். அதைப் பரிசீலித்து, ஸ்டான்டர்ட் ரென்ட், ஃப்ளாட்டாகக் கணக்கிட்டு, வாடகை வசூலிக்கலாமா என்பதை அரசு கணக்கிட்டு வருகிறது.

[1974 ஆகஸ்ட் 24

**திரு. மு. இரத்தினசபாபதி:** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் 10 தாலுகாக்களில் வீடுகள் கட்டிக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். எந்த எந்த தாலுகாக்கள் என்று அறிவிக்க முடியுமா? புதிதாகத் தேவை ஏற்பட்டால், சேர்த்துக் கொள்வதாகக் கூறினார்கள். அதிலே விளாத்திக்குளம் தாலுகாவைச் சேர்த்துக்கொள்ள முடியுமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியில் 80 வீடுகள், ஊத்தங்கரையில் 40 வீடுகள், உடுமலைப்பேட்டையில் 44 வீடுகள் பொள்ளாச்சியில் 72 வீடுகள், ஈரோட்டில் 54 வீடுகள் செங்கற்பட்டில் 12 வீடுகள் ஆக மொத்தம் 302 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊரில் அங்கேயுள்ள நிலைமையை உத்தேசித்து அங்கே எந்த அளவிற்கு வீடுகள் தேவை என்று பார்த்து வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH: May I know from the Hon. Minister whether this scheme will be implemented in Hosur at an early date?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, விரைவிலே அடிக்கல் நாட்டப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, அதிகாரிகளின் அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதம் வாடகைக்காக என்று எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் வட்டத் தலைநகரங்களிலே அதற்கும் குறைவான தொகைக்கு மலிவான வாடகைக்கு வீடுகள் கிடைக்கின்றன. ஆகவே வட்டங்களைப் பொறுத்த வரையிலாவது 10 சதவீதம் அடிப்படைச் சம்பளத்தில் என்ற நிலைமையைக் குறைத்து 5 சதவீதம் அல்லது 6 சதவீதம் என்று வாங்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** வாடகை இதைவிடக் குறைவாக இருக்கலாம், ஆனால் இந்த வீடுகளில் உள்ள வசதிகள் மற்ற இடங்களில் கிடைக்காது. உதாரணத்திற்கு பிளஷ் அவுட்கூட



1974 ஆகஸ்ட் 24]

கனம் அங்கத்தினர் ஊரில் உட்பட கிடையாது, அப்படிப்பட்ட வசதிகள் உள்ள வீடுகள் எம்.எல்.ஏ.-க்களுக்குகூட அங்கே கிடைக்குமா என்ற நிலைமை இருக்கிறது. நல்ல வசதியான வீடுகள் நாம் தருகிறபோது அதிலேபோய் பேரம் பேசுவது நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்:** வாடகைக்குத் தருகிற திட்டங்களாக இவை ஆரம்பிக்கப்பட்டு பிறகு கடைசியிலே அந்த வீடுகளை அவர்களுக்குச் சொந்தமாக்குகிற திட்டம் இருப்பதைப் போல் தாலுகா தாலுகாவிற்கு கட்டப்பட்டிருக்கிற வீடுகளுக்காக ஒரு தொகை வசூலிக்கப்பட்டாலும் அந்த வாடகை முறை மாறி கடைசியில் அவர்களுக்குச் சொந்தமாக ஆக்குகிற திட்டம் ஏதாவது அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இந்த வீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் அரசாங்க அலுவலிலே பணியாற்றுகின்ற அலுவலாளர்களுக்கு வீடுகள் வாடகைக்குக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டமாகும். பணியாளர்கள் மாற்றுதலாகிப் போகிற நேரத்திலே அவர்களுக்கு இப்படிப்பட்ட வீடுகள் அங்காங்கே தேவை என்ற அடிப்படையிலேதான் இந்த வீடுகள் கட்டப்பட்டு தரப்படுகின்றன, அவர்களுக்கு அவை சொந்தமாக்கப்படாது.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, டெல்லியிலே ஹவுஸிங் ஸ்கீம் சார்பில் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுக்கு வீடுகள் கட்டித் தருகிறார்கள். அதைப் போன்று எம்.எல்.ஏ.க்களுக்கும் வீடுகள் கட்டித் தந்தால் அதற்கான பணத்தை இன்ஸ்டால்மெண்ட் பேஸிஸில் வசூலிப்பதால் வசதியாக இருக்கும், ஆகவே அதை அமைச்சர் அவர்கள் அனுதாபத்துடன் கவனிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, எம்.எல்.ஏ.-க்களும் இந்த நாட்டு குடிமக்கள் என்ற வகையிலே அவர்களுடைய பிரச்சினையும் கவனிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## திருப்பூரில் வீட்டு வசதித் திட்டம்

*301 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்-15 வேலம்பாளையத்தில் வீட்டு வசதி வாரியத்தின்மூலம் வீடு கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) & (இ) ஆம். வேலம்பாளையத்தில் (திருப்பூர்-15) மலிவுவிலை வீட்டுவசதி திட்டத்தையும், குறைந்த வருவாயுள்ளோருக்கான வீட்டு வசதி திட்டத்தையும் செயல்படுத்த தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் அனுப்பிய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆய்வு எப்பொழுது முடிக்கப்பெறும் ? அந்த வேலை எப்போது தொடங்கப்படும் ? அதனுல் எவ்வளவு பேர்கள் பயன் அடைவார்கள் என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஆய்வு விரைவிலே முடிவுபெறும் என்று நம்புகிறேன். இதற்கான திட்டங்கள் எல்லாம் ஏற்கனவே தீட்டப்பட்டு நிலத்தை வாங்குவதிலே பிரச்னை ஏற்பட்டு அதனுல் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது என்று நினைக்கிறேன், வீட்டு வசதி வாரியத் தலைவர் அவர்கள் இதை ஆய்வு செய்து கொண்டிருக்கிறுர்கள். ஆகவே விரைவிலே அதை முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *Visit of Slum Clearance Board Chairman to America*

*302 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether it is a fact that the Chairman of the Tamil Nadu Slum Clearance Board has gone on a tour of the United States in June, 1974;

(b) if so, the purpose of the tour; and

(c) whether the expenditure is to be met by the State Government?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம் :

(இ) அமெரிக்க அரசின் அழைப்பின்பேரில் அந்நாட்டு அரசியலையும், குடிசைப் பகுதி மாற்றுத் திட்டங்களையும் பார்வையிட குடிசைப்பகுதி மாற்று வாரியத் தலைவர் திரு. இராம அரங்கண்ணல், எம்.எல்.ஏ., அமெரிக்க நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார் ;

(உ) இல்லை. அமெரிக்கா சென்று திரும்பிவர ஆகும் செலவுகள் அனைத்தையும் அமெரிக்க அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

திரு. எம். சுரேந்திரன் : சார், அமெரிக்க நாட்டிலே உள்ள குடிசைகள் அமைப்பு, மற்ற மற்ற அமைப்புகளையெல்லாம் அங்கே சென்று பார்த்து வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அங்கே அவர் சென்று பார்த்தவை, பெற்ற அறிவு அனுபவம் இவற்றையெல்லாம் இந்தச் சபையிலே ஒரு ரிப்போர்ட் ஆக சமர்ப்பிக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இதுவரையிலே அதுபற்றிய அறிக்கை எங்களுக்கு வரவில்லை, அப்படி சமர்ப்பிப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது, அவர் சமர்ப்பித்தால் இந்த அவையிலே அதை சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருக்கிறேம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இராம அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்களை அமெரிக்க நாடு அழைத்தது. அவர் சென்றர். ஆனல் அவர்பெற்ற அனுபவங்களை எந்த நண்பர்கள் பெறவேண்டுமானுலும் குடிசை மாற்று வாரியத் தலைவர் தயாராக இருக்கிறுர் என்று அமைச்சர் அவர்கள் அந்த உறுப்பினருக்குச் சொல்லலாமா ?

(பதில் இல்லை.)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, உறுப்பினர் விரும்புவது என்பதல்ல பிரச்னை. குடிசை மாற்று வாரியத் தலைவர் அரசாங்கத்தின் சார்பிலே அமெரிக்காவிற்குச் சென்று பெற்று வந்த அனுபவத்தை நாட்டு மக்களுடைய நலனுக்காக இந்த மன்றத்திலே சமர்ப்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் தயாராக இருக்கிறுர்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 24

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** அவர்கள் போய் திரும்பி வந்த பிறகு இந்த நாட்டில் சரியான முறையில் கடற்கரையில் உலாவுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் சரியானதற்குப் பிறகு அதைப்பற்றிய அறிக்கையை சமர்ப்பிப்பார் என்று நம்புகிறேன்.

**திரு. கு. இராசமாணிக்கம்:** நம்முடைய குடிசை மாற்றுத் தலைவர் அமெரிக்கா சென்று வந்திருக்கிறார். அவர் நல்ல எழுத்தாளர். அங்கே அவர் கண்டவற்றையும் கேட்டவற்றையும் புத்தகமாக எழுதி இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் அந்த நூலைத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இராம அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத் தலைவர் தன்னுடைய அறிக்கையை இந்த அரசுக்கும், இந்திய அரசுக்கும் அனுப்ப இருக்கிறார் என்பது உண்மையா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** உண்மை தான்.

**திரு. கோவை செழியன்:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும்போது குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்கள் இங்கேவந்து உலவமுடியாத நிலைமையிலே இருக்கிறார் என்று சொன்னார்களே, அப்படி என்ன இக்கட்டான நிலைமை என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, வெளி நாடுகளுக்குப் போய்வந்திருக்கிறார்கள், 2, 3 நாட்களுக்கு—சென்ற நாடுகளிலே வேறு காலமாக இருந்திருக்கும், இங்கு வேறு காலமாக இருக்கும்—நம்முடைய சூழ்நிலைக்குத் தகுந்தவாறு மாறிக்கொள்வதற்கு நேரம் வேண்டும் என்ற முறையிலேதான் சொன்னேனேயல்லாமல் அவர்களால் நடக்க முடியாது என்று சொல்லவில்லை, அவர்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 24]

**திரு. இராம அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, திட்டமிட்டபடி திரும்பி வந்தபிறகு எல்லா அலுவல்களையும் தவறாது கவனித்துக்கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், எந்த கோளாறும் நண்பர் கோவை செழியனுக்குப் போல் எனக்கு வரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## திருப்புவனம் ஒன்றியத்தில் சத்துணவுத்திட்டம்

*303 வினா—**திரு. த. சோணையா:** மாண்புமிகு சமூக நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் சத்துணவு திட்டத்தில் எந்தெந்த கிராமம் சேர்க்கப்பட்டுள்ளது ?

(இ) தற்பொழுது எத்தனை குழந்தைகளுக்கு சத்துணவு எத்தனை நாட்களுக்கு தரப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** (அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் சத்துணவுத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் கிராமங்கள் :—

1. கீழடி.
2. பிரமனூர்.
3. திருப்பாச்சேத்தி.
4. மழவராயனேந்தல்..
5. கல்லூரணி.
6. மைக்கேல்பட்டிணம்.
7. புலியூர்.

(இ) ஒவ்வொரு கிராம நிலையத்திலும் வாரத்தில் ஞாயிற்றுக் கிழமை நீங்கலாக ஆறு நாட்களுக்கு மொத்தம் சுமார் 370 குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. அதன்படி மாதத்தில் 26 நாட்களுக்கு ஒவ்வொரு குழந்தைக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல்:** தலைவர் அவர்களே, இந்த சத்துணவு பெரும்பாலும் நகரப்புறங்களிலேதான் கொடுக்கப்படுகிறது. கிராமப் புறங்களிலேதான் அதிகமான ஏழைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் இருக்கிறார்கள், சேரிகளில் இருக்கின்றவர்களுக்குத்தான் இப்படிப்பட்ட சத்துணவு முக்கியமாகத் தரப்பட வேண்டும். ஆகவே இந்தச் சத்துணவுத் திட்டத்தை கிராமப் புறங்களுக்கும் கொண்டுவர அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டங்களிலே உள்ள இடங்களில் ஒரு முன்மாதிரியான திட்டமாக ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் அமலாக்கப்படவேண்டுமென்பதுதான் தமிழக அரசினுடைய கொள்கை. அது அரசால் ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டு வருகிறது, அதற்கான செயற்குறிப்புகள் ஆய்வில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** தலைவர் அவர்களே, இந்த முன்மாதிரித் திட்டத்தின் மூலமாக குழந்தைகளுக்கு சத்துணவு வெறும் பாலும் ரொட்டியும் கொடுக்கப்படுகிறதா? அல்லது வேறு ஏதாவது சத்துணவுகள் சேர்க்கப்பட்டு இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** தலைவர் அவர்களே, ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திற்கும் வருகிற குழந்தைகளுக்கு காலையில் வெல்லமிட்ட ராகி புட்டு, அல்லது தோசை அல்லது அடை, பிற்பகலில் தோசை, அடை, வறுத்த கடலைமாவு உருண்டை, அல்லது கஞ்சி, நண்பகலில் சோறு, சாம்பார், கீரை போன்றவைகள் கொடுக்கபடுகின்றன.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, இந்த சத்துணவுத் திட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகிற பண்டங்கள் மிகவும் மோசமான கழிவான உணவுகளைக் கொடுக்கிறார்கள். சில தினங்களுக்கு முன்பு குமரி மாவட்டத்தில் தக்கலையிலிருந்து எனக்கு ஒரு உணவு பொட்டலத்தை பார்சலாக அனுப்பி வைத்தார்கள், அதிலே புழுக்கள் இருக்கின்றன, தபாலில்கூட புழுக்கள் இருக்கின்றன. அந்த நிலைமையை மாற்றியமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?





**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** எந்த மாவட்டத்திலே இருக்கிறது?

**திரு. க. உரொ. எட்மண்ட்:** குமரி மாவட்டத்திலே.

**மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை:** குமரி மாவட்டத்திலே இந்தத் திட்டம் செயல்படவில்லை. தற்போது மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலேதான் செயல்படுகிறது, உறுப்பினருக்கு அந்தத் திட்டத்தின் பெயரால் புகார் கொடுக்கப்பட்டிருந்தால் அது சரியான முறையில் வந்திருக்காது என்று நினைக்கிறேன்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், சாதாரண உணவைவிட மேம்பட்ட உணவு சத்துணவு என்று சொல்லப்படுகிறது. இந்தச் சத்துணவைச் சாப்பிடுவதற்கு முன்னால் குழந்தைகள் எந்த நிலையில் இருந்தார்கள், பிறகு குறிப்பிட்ட நாள் வரையில் சாப்பிட்ட பிறகு அவர்களுடைய நிலையில் என்ன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது? இந்தச் சத்துணவுத் திட்டம் எல்லா இடங்களுக்கும் பரவுவதற்கான மார்க்கங்கள் இருக்கின்றனவா? இது எல்லாயிடங்களுக்கும் பரவி, சாதாரணமாக பொருளாதார நிலையில் மிகவும் குறைந்த நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கும் கட்டாயமாக இதைக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டம் மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் இரண்டு மூன்று ஒன்றியங்களில் டாக்டர் வேங்கடசாமி அவர்கள் சொன்ன ஆலோசனையின்பேரில் நடக்கிறது. சிலவிதமான சத்துணவை, மிகவும் மலிவான பண்டங்களைக்கூடத் தாய்மார்கள் கொடுக்காமல் இருப்பதால் குழந்தைகள் நோய்வாயினால் பாதிக்கப்படுகின்றன என்பதால் பெற்றோர்களுக்குப் பயிற்சியளிக்கும் முறையில் அந்தக் குழந்தைகளுக்கு இரண்டு மாத காலத்திற்குத் தகுந்த உணவாக இருக்கும் மலிவான பண்டங்களை ஆகாரமாகக் கொடுத்து அந்த நோய்நொடியிலிருந்து, உடல் சோகை, உடல் வளர்ச்சியின்மை, இன்னும் சொல்லப்போனால் வேறு சில நோய்கள் இவைகளிலிருந்து காப்பாற்றி நல்லமுறையில் வளர்ப்பதற்குப் பெற்றோர்களை அறிவுறுத்துகிறார்கள். மலிவான பண்டங்களான கீரை, மணிலா போன்றவைகளைக் குழந்தைகளுக்குக்

கலப்பதால் உடல்நலம் சிறந்திருப்பதாக அறிக்கை தந்திருக்கிறார்கள். அந்த முறையில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஒன்றியங்களிலும் செய்வதற்கு வாய்ப்பு இல்லை. ஆனால் அந்த அளவில் மத்திய சர்க்கார் 'நியூட்ரிஷன் திட்டம்' என்ற திட்டத்தைத் தெரிவித்தார்கள். ஆனால் இன்னும் அதற்கு அனுமதியை வழங்கவில்லை. பரவலாகச் செய்ய முடியுமா என்று மத்திய சர்க்கார் சொன்ன அந்தத் திட்டத்திற்கு நாங்கள் ஆலோசனை வழங்கியிருக்கிறோம். அவர்கள் ஒத்துக்கொண்டால் முடிந்த அளவிற்குப் பரவலாகச் செய்ய முயற்சிக்கலாம்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, இந்தச் சத்துணவுத் திட்டத்திற்கான மொத்தச் செலவையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறதா அல்லது மத்திய அரசு மானியம் தருகிறதா ?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, 55 புதிய காசுகள் இப்பொழுது செலவு செய்யப்பட்டு வருகிறது. அதை மட்டும் மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. ஆனால் இதைப் பராமரிக்கும் செலவாக உலக நாடுகள் கூட்டு நாட்டு மகளிர் நிறுவனத்தின் மூலமாகக் கிடைக்கும் நிதி ஆதாரங்களைக் கொண்டு மாதம் ஒன்றுக்கு பாலசேவிகாவிற்கு 70 ரூபாய் சம்பளம் என்ற வகையிலேயும், உணவு தயாரிக்கும் ஆயாவிற்கு மாதம் ஒன்றுக்கு 20 ரூபாயும் தரப்பட்டு வருகிறது. அந்தச் செலவை அந்த நிறுவனமும், குழந்தைகளுக்கு அளிக்கும் செலவை மாநில அரசும் மேற்கொண்டு வருகிறது.

## *Bangalore-Kanyakumari bus service*

* 304. *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether there is a proposal to introduce a State Express Bus Service between Bangalore and Kanyakumari via Hosur; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பெங்களூருக்கும், கன்னியாகுமரிக்குமிடையே ஹொசூர் வழியாக, விரைவுப் பேருந்து விடும் செயற் குறிப்பு எதுவும் தற்போது தமிழக அரசின் போக்குவரத்துத் துறையின் பரிசீலனையில் இல்லை.



THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, our State Transport buses have been attracting a large number of passengers and the entire credit goes to the Hon. Minister and also to the Transport Department. Now there is a huge traffic between Banagalore and other parts of the Karnataka State. Even persons from Maharashtra have to pass through Bangalore and Hosur to go to other districts like Tirunelveli and Kanyakumari. Since there is no direct route, they have to change at a number of places and especially if they travel with their families, a lot of inconvenience is experienced by them. So, may I know whether the Hon. Minister will consider this matter and introduce buses from Bangalore to Kanyakumari?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, as it is, there is no direct bus from Bangalore to Kanyakumari but at the same time, Bangalore is connected to Madurai and Madurai is connected to Kanyakumari by a number of buses It is not as though the passengers have to frequently get down and get into other buses. If at all they have to get down, they have to do so only at one place. As the hon. Member has been telling that there is sufficient traffic which warrants augmentation of the number of buses, the Government will carefully consider it and do the needful in the matter.

## கல்லணைக்குப் பேருந்துப்பணி

* 305 வினா.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லணையைப் பார்த்துச் செல்வதற்காக வரும் சுற்றுலாப் பயணிகளுக்குப் போதுமான அளவுக்குப் போக்குவரத்துப் பேருந்துகள் திருச்சி, தஞ்சை முதலிய பகுதிகளிலிருந்து விட அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ஆம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கல்லணை வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாகும். இதைப் பார்ப்பதற்கு நம்முடைய நாட்டிலேயிருந்தும், வெளிநாடுகளிலேயிருந்தும் ஏராளமான மக்கள் வருகிறார்கள். தற்பொழுது போக்குவரத்து

வசதி குறைவாக இருப்பதால், திருச்சி, தஞ்சை பகுதிகளில் இருந்து போய்வர மக்கள் சிரமப்படுகிறார்கள் ஆகவே, இதற்குத் துரிதமான நடவடிக்கை எடுத்து கூடுதலாக பஸ் போக்குவரத்து துவக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, கல்லணை தஞ்சையோடும், திருச்சியோடும் இப்பொழுது இணைக்கப் பெற்று ஏராளமான பேருந்துகள் செல்கின்றன.

### பாஞ்சாலங்குறிச்சி-தூத்துக்குடி பேருந்து வழித்தடம்

* 306 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாஞ்சாலங்குறிச்சியிலிருந்து புதியம்புத்தூர் வழியாக தூத்துக்குடிக்கு ஓடிக்கொண்டிருந்த கட்டபொம்மன் போக்கு வரத்து பேருந்து இப்பொழுது ஓடாமலிருப்பதற்குக் காரண மென்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பாஞ்சாலங்குறிச்சியி லிருந்து புதியம்புத்தூர் வழியாக தூத்துக்குடிக்கு கட்டபொம்மன் போக்குவரத்துப் பேருந்து எப்போதுமே ஓட்டப்படவில்லை.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** தலைவரவர்களே, பாஞ்சாலங் குறிச்சி தமிழகத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். அதுவும் சமீபத்தில் கட்டபொம்மன் கோட்டையை அங்கே கட்டி. மாண்புமிகு முதலமைச்சரவர்கள் திறப்பு விழா நடத்தி வந்திருக் கிறார்கள். அதைப் பொதுமக்கள் பார்ப்பதற்கு வசதி செய்யும் வகையில் இனிமேலாவது அந்த வழித்தடத்தை உருவாக்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பாஞ் சாலங்குறிச்சி வரலாற்றுச் சிறப்புமிக்க இடம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் ஒத்துக்கொண்டதற்கு நன்றி. அதேபோல பாளையங்கோட்டையும் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடம். இந்த இரண்டு இடங்களையும் இணைத்து ஏற்கனவே பேருந்து விடப்பட்டிருக்கிறது. புதியம்புத்தூர் வழியாக விடப் படுமா என்பதைப் பற்றி ஆய்வு செய்யப்படும்.



**திரு. எம். சுரேந்திரன் :** சார், கட்டபொம்மன் கோட்டை புதிதாகக் கட்டப்பட்டு இப்பொழுதுதான் திறக்கப்பட்டிருக்கிறது. அது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு. எட்மண்ட் அவர்களும் கூறினார்கள். அம்மாதிரி உள்ள இடங்களை எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று பார்ப்பதற்கு போக்குவரத்துத் துறையிலே ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட முறையிலே போக வேண்டு மானாலும் போகலாம். எல்லோரும் சேர்ந்து ஒருநாளைக்குப் போக வேண்டுமென்றாலும் அரசு அதற்கு ஏற்பாடு செய்யும்.

### அம்பாசமுத்திரத்திற்குக் கூடுதல் பேருந்துகள்

* 307 வினா.—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம் தாலூகாவில் அம்பாசமுத்திரத்திற்கு கடையத்திலிருந்தும், சேரன்மாதேவியிலிருந்தும் போதிய அளவு பஸ்கள் விட அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** செங்கோட்டையி லிருந்து கடையம் வழியாக அம்பாசமுத்திரத்திற்குப் புதிய பேருந்து தடம் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அனுமதி வழங்குவதற்கு மனுக்கள் கோரப்பட்டுள்ளன. சேரன் மாதேவியிலிருந்து அம்பாசமுத்திரத்திற்குப் போதிய அளவு பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.

**திரு. ச. சங்குமுத்து தேவர் :** தலைவரவர்களே, தற்பொழுது அம்பாசமுத்திரம் ஒரு முக்கியமான இடமாக இருப்பதால் சேரன் மாதேவியிலிருந்து அம்பாசமுத்திரத்திற்கு வருவதற்கும், கடையத் திலிருந்து அம்பாசமுத்திரத்திற்கு வருவதற்கும் போக்குவரத்து வசதியில்லாமல் பொதுமக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மேலும் அந்தப் பகுதியில் ஓடிக்கொண்டிருந்த புகை வண்டியும் சமீப காலமாக நின்றுவிட்டபடியால் போக்குவரத்திற்குப் பொது மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அநேகம் பேர் நடையிலேயே செல்ல வேண்டியிருக்கிறது. மேலும் அம்பாசமுத்திரத்தில் கோர்ட்டு, தாலுக்கா அலுவலகம், பேங்கு

[1974 ஆகஸ்ட் 24

போன்ற முக்கியமான அலுவலகங்கள் இருப்பதால் அங்கு செல்ல வேண்டிய மக்கள் போக்குவரத்து வசதியில்லாததால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, சேரன்மாதேவியிலிருந்து கடையம் வரையில் ஒரு பஸ் விட்டால் இப்பொழுதுள்ள நிலையை மாற்ற முடியும் என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் புதிய வழித்தடம் திறப்பதற்காக அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. விரைவில் அவர்கள் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

## மதுரை-திருப்புவனம் பேருந்து வழித்தடம்

*** 308 வினா.—திரு. த. சோனையா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை-திருப்புவனம் புதூர் பள்ளிவாசல் வரை டவுன் பஸ் விடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தற்சமயம் செயற்குறிப்பு ஆய்வில் இல்லை.

## கலப்புத் திருமணங்கள்

*** 309 வினா—திரு. வை. பாலசுந்தரம் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கலப்புத் திருமணம் செய்துகொண்டு தங்கப் பதக்கம் பெற்ற தம்பதிகள் இதுவரை தமிழ்நாட்டில் எவ்வளவு பேர் ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, 277.

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, இப்படிக் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்கள் வேலையில்லாமல் சங்கடப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அப்படிக் கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் முதல் உதவியை நம்முடைய சர்க்கார் செய்யுமா ?



1974 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களில் ஆணோ பெண்ணோ யாராவது ஒருவர் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தே தீர வேண்டும். அந்த வகையில் இருந்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வரும் சலுகைகள் வந்தே தீரும். ஆகவே, இந்தக் கேள்விக்கான பதிலை தாழ்த்தப்பட்டவர்கள் பெறுகின்ற அத்தனை சலுகைகளையும் அடைவார்கள் என்பதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

**திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்களிலே கணவன் ஜாதி இந்துவாகவும், மனைவி தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராகவும் இருந்தாலும் அப்படிப்பட்ட கலப்புத் திருமணம் செய்து கொள்பவர்கள் சமுதாயத்தில் பல்வேறு கஷ்டங்களுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குக் கொடுக்கும் சலுகைகளைத் தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** தலைவரவர்களே, கலப்புத் திருமணத்திற்கு நாம் கொடுத்திருக்கும் விளக்கமே இந்துக்களிலே தாழ்த்தப்பட்டவர்களாக இருக்க வேண்டும். இந்துக்களிலேதான் உயர்ந்த ஜாதி மக்கள் என்று இருக்கிறார்கள். அந்த இருவரில் ஒருவர் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். நான் முன்பே சொல்லியிருக்கிறேன், தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்க வேண்டிய சலுகை, அந்த இருபாலரில் ஒருவர் அந்த வகுப்பைச் சேர்ந்தவராக இருந்தாலும் வந்துவிடுகிறது. ஏற்கனவே அந்தச் சலுகை இயற்கையாகவே இருக்கிறது. ஆனால் அவர்கள் திருமணம் செய்துகொண்ட பிறகு சமுதாயத்தில் தொல்லைகள் இருக்கும் என்று தெரிந்தால் அரசாங்கம் அவ்வப்பொழுது கவனித்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. ந. சோமசுந்தரம் :** கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகின்ற தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் தருவதைத் தவிர வேறு எந்த விதமான சலுகையும் இதுவரை அரசாங்கம் வழங்கவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுந்தரம் அவர்கள் சொன்னது போல் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து மேலும் கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க அரசு வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** வேலை வாய்ப்புக் கொடுக்கும்போது உள்ளபடியே வேலைக்குரிய கல்வி, திறமை மற்றவர்களைப் போல் இருக்குமானால் முதலிடம் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

**திரு. ஆ. கு. சுப்பையா:** அமைச்சர் அவர்கள் பதிலில் இருந்து என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. தாழ்த்தப்பட்ட ஒருவன் பிராமணப் பெண்ணை மணம் செய்து கொண்டால் அவனுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அரசாங்கச் சலுகைகள் முழுதும் கிடைக்கிறது. அதே நேரத்தில் பிராமண வகுப்பைச் சேர்ந்தவன் தாழ்த்தப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு இந்தச் சலுகைகள் கிடைப்பதில்லை. ஆணோ, பெண்ணோ யார் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு அரசாங்கம் இந்தச் சலுகைகளைக் கொடுக்க முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இது ஒரு பெரிய பிரச்சினையாக நாட்டில் எழுந்திருக்கிறது. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தாழ்த்தப்பட்ட பெண்ணோ, அல்லது தாழ்த்தப்பட்ட ஆணோ—இருவருக்கும் பிறக்கும் குழந்தை தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த குழந்தையாகப் பாவிக்கப் படுவதா அல்லது உயர்ந்த சாதிக் குழந்தை என்று கருதுகிற அளவுக்குப் பாவிக்கப்படுவதா என்ற பிரச்சினையில் இன்னும் தாழ்த்தப்பட்டவர்களே ஒரு நல்ல முடிவுக்கு வரவில்லை. ஆகவே, அந்த முடிவை அவர்கள்தான் அறிவிக்க வேண்டும். ஒரு சாரார் தாழ்த்தப்பட்ட குலத்துப் பிள்ளையாகக் கருதப்படக்கூடாது என்ற வாதத்தை முன் வைக்கிறார்கள். இந்த இரண்டு வாதத்தையும் பற்றி அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. மா. வெ. நாராயணசாமி:** கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கம் வழங்கக்கூடிய இந்த ஏற்பாடு 1967-ம் ஆண்டுக்கு முன்னால் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** 1967-ல்தான் இந்தத் திட்டமே ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு முன்னாலும் கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கும் தங்கப் பதக்கம் வழங்க வேண்டுமென்று சொன்னால் அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தான் பரிசீலனை செய்ய வேண்டும்.





**திருமதி சத்தியவாணிமுத்து:** தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணும், வேறு சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு ஆணும் திருமணம் செய்து கொண்டு அவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை. கலப்புத் திருமணம் செய்வதே சாதியை ஒழிக்க வேண்டுமென்பதற்காகத்தான். கலப்புத் திருமணம் செய்து கொண்ட பிறகும் கூட பிறக்கின்ற குழந்தைகளும் தாழ்த்தப்பட்ட சமுதாயமாகவே கருதப்பட்டு சலுகைகள் பெற வேண்டுமென்பதை அந்தச் சமுதாய மக்களே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இப்போது இருக்கின்ற இந்து லா படி பிறக்கின்ற குழந்தைகள் தகப்பன் சாதி என்று சொல்லிவிடலாம். அப்படி இல்லை என்றால் அப்படிப் பிறக்கின்ற குழந்தைகள் தனி சாதியாக வந்துவிடக் கூடிய நிலை ஏற்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கேள்வி நேரம் . . .

**திருமதி சத்தியவாணிமுத்து:** சாதியை ஒழிக்க வேண்டுமென்ற கொள்கையை உடைய இந்த அரசு இதைப் பரிசீலனை செய்து அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளை உயர்ந்த சாதிக்காரர்களாகக் கருத முன்வருவார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத்தான் நான் சொன்னேன். பிரச்சினை எங்கிருந்து எழுந்தது என்பதை இந்த மாமன்றம் அறிந்து கொண்டிருக்கும். மாண்புமிகு உறுப்பினர் ஏ. கே. சுப்பையா அவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகள் தாழ்த்தப்பட்ட மக்கள் பெறுகின்ற சலுகைகளை அனுபவிக்க வேண்டுமென்ற அடிப்படையில் கேள்வி கேட்டார்கள். அம்மையார் அவர்கள், அவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படக்கூடாது, சாதி ஒழிவதற்குத் தடங்கலாக இருக்குமென்று கூறுகிறார்கள். இரண்டு வாதத்தையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று முதலிலேயே சொன்னேன்.

**திரு. கோவை செழியன்:** உயர்ந்த சாதி இந்துக்களும் அரிசன இந்துக்களும் திருமணம் செய்து கொண்டால் பிறக்கப் போகும் குழந்தைகளுக்குச் சலுகைகள் உண்டா என்பது பற்றிய விவாதம் எழுந்திருக்கிறது. அது 30 வருஷத்திற்குப் பின்னால் நடக்கக்கூடிய விஷயம். இப்போது கலப்புத் திருமணத்தை ஊக்குவிக்க உயர்ந்த

[திரு. கோவை செழியன்] [1974 ஆகஸ்ட் 24

சாதியைச் சேர்ந்தவன் அரிசனப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டால், திருமணம் செய்து கொண்ட உடனேயே அவர்களுக்கு அந்தச் சலுகைகளைக் கொடுத்தால் அவர்களுக்கு உற்சாகம் ஏற்படும். கலப்புத் திருமணம் நிறைய நடக்கும். அதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்தெந்த வேலைக்கு யார் யார் தகுதியோ அந்தந்தத் தகுதியின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைகள் வழங்கப்படும். கல்யாணம் செய்து கொண்டதற்காக அவர்களுக்கு வேலை கொடுக்க முடியாது. அவர்கள் வேறு வேலையைத்தான் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. நா. வீராசாமி: கலப்புத் திருமணம் செய்து கொள்ளுகிறவர்களுக்குத் தங்கப் பதக்கம் கொடுப்பதோடு நம்முடைய அரசாங்கம் ஏதாவது சீர்வரிசை கொடுக்கிறதா? சமீபத்தில் சென்னை சேத்துப்பட்டில் முதலமைச்சர் பிறந்த நாள் அன்று 51 ஜோடிகளுக்குத் திருமணம் நடந்தது. அப்படிப்பட்டவர்களுக்கு ஏதாவது சீர்வரிசை கொடுக்கப்பட்டதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தங்கப் பதக்கம் கொடுத்து முடிந்து விட்டது. சீர்வரிசை அறையில் இருக்கிறது. விரைவில் வெளிவரும்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: சீர்வரிசை கூட கொடுத்திருக்கிறோம். சமீபத்தில் நடந்த 51 திருமணத்தில் அவர்களுக்குப் புடவை, வேஷ்டி, தாலி, ஒரு குடம், ஒரு செம்பு எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவை எல்லாம் சீர்வரிசைதான்.

திரு. வ. முத்து: அரிசனங்களுக்கு 100-க்கு 18 சதவிகிதம் வேலை வாய்ப்பில் சலுகை கொடுப்பது போல் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: முன்பே சொன்னேன். தகுதியுடையவர்களாக இருந்தால் தாழ்த்தப்பட்டவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படுகிறது. அது இவர்களுக்கும் பொருந்தும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தகப்பன் அரிசன வகுப்பைச் சார்ந்தவனாக இருந்தால் குழந்தைகளுக்குச் சலுகை, அதே சமயத்தில் தகப்பன் வேறு சாதியாக இருந்து தாய் அரிசன வகுப்பைச் சார்ந்திருந்தாலும் சலுகை இல்லை என்று சொல்லுவது என்ன நியாயம்? Maternity is a certanity.



1974 ஆகஸ்ட் 24] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

இதற்கு மேல் சொல்ல விரும்பவில்லை. தாய், தகப்பன் இருவரில் யார் அரிசனாக இருந்தாலும் அந்தச் சலுகையை வழங்க உடனே அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதைப் பற்றி இரண்டு முன்னாள் அமைச்சர்களும் கலந்து பேசி முடிவு அறிவிக்க வேண்டுகிறேன். (சிரிப்பு)

* 310 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972–73-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கள் எத்தனை பேர் தங்கப் பதக்கங்கள் கோரி மனு போட்டுள்ளனர்?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு தங்கப்பதக்கம் வழங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) & (இ) நான்கு.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கலப்புத் திருமணம் செய்து கொண்டு பல ஆண்டுகள் ஆகியும் தங்கப் பதக்கம் வழங்கப்படாமல் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? இந்தக் குறைபாட்டைப் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இந்த நான்கு பேர்களுக்கும் கொடுத்து விட்டதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

திரு. கு. இராசமாணிக்கம்: கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்கள் பலர் அரசுத் துறையில் பல்வேறு இடங்களில் பணியாற்றுகிறார்கள். கணவன் ஒரு மாவட்டத்திலும், மனைவி இன்னொரு மாவட்டத்திலும் பணியாற்றக்கூடிய நிலை இருக்கிறது. அவர்கள் ஒரே இடத்தில் பணியாற்றும் வகையில் வழி செய்யப்படுமா? ஆசிரியர்களாக இருந்தால் ஒரே பள்ளியிலும் மருத்துவமனையாக இருந்தால் ஒரே இடத்திலும், சாத்தியம் இல்லை என்றால் அருகாமையிலும் பணியாற்றக்கூடிய அளவுக்கு அரசு உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** இதுவரை அரசாங்கக் கொள்கை அப்படித்தான் இருக்கிறது. ஏதாவது ஒன்றிரண்டு தவிர்க்க முடியாத நிலையில் இருக்கும். அப்படி ஏதாவது இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவித்தால் அரசாங்கம் அதைப் பற்றிக் கவனித்து ஆவன செய்யும்.

(முற்பகல் 10-00)

**திரு. கு. காமாட்சி :** தாழ்த்தப்பட்டவர்களில், கிறிஸ்துவ வகுப்பைச் சேர்ந்தவர்கள் திருமணம் செய்துகொண்டால் தங்கப் பதக்கம் கிடைக்க மாட்டேன் என்கிறதே.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** அது முடியாது. இருவரும் இந்துக்களாக இருக்கவேண்டும் என்பது சட்டம். ஆகவே வேறு ஒரு மதத்திற்குப் போய் விட்ட பிறகு இந்த மதத்தில் அவர்களுக்கு உரிமை இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** நம்முடைய முதல் அமைச்சர் அவர்களுடைய புதல்வர் திருச்சி மாவட்டத்தில்தான் கலப்புத் திருமணம் செய்துகொண்டார்கள். அந்தத் தம்பதிக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறதா ? இல்லை என்றால் அப்படி வழங்கப்படாததற்கு என்ன காரணம் என்று அறியலாமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதை அரசாங்கம் அளிப்பதற்குப் பதிலாக மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் ஒரு விழா எடுத்து அவர்கள் அளிப்பார்களானால் பெற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

**திரு. ந. சோமசுந்தரம் :** கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய கல்விச் சலுகைகள் அளிப்பதுபோல் இப்படி கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கும் பதக்கம் அளிக்க அரசு இனிமேலாவது முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** நான் முன்னமேயே சொன்னேன். ஒரு மதத்திலிருந்து போய் விட்ட பிறகு அவர்களுக்கிடையே ஜாதி கிடையாது. ஜாதி எங்கிருக்கிறது என்றால் இந்து மதத்தில்தான் ஜாதிகள் இருக்கின்றனவே தவிர வேறு எந்த மதத்திலும் ஜாதி கிடையாது. எனவே அவர்கள் இந்து மதத்தில் இருந்து போய் விட்டவுடன் அவர்கள் வேறு ஒரு





மதத்திற்குப் போய் விடுகிறார்கள். அங்கு ஜாதி கிடையாது. மதமும் வேறு மதமாகிவிடுகிறது. ஆகவே அதற்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இப்படிப்பட்ட நல்ல காரியங்களுக்கு மதம் குறுக்கே நிற்காமல் சாதாரணமாக ஹரிஜனங்களுக்கு இப்படிப்பட்ட சலுகைகள் கிடைப்பதற்கு மத்திய சர்க்கார் சட்டம்தான் குறுக்கே நிற்கிறதே தவிர மாநில சர்க்கார் எல்லாச் சலுகைகளையும் கொடுத்து வருகிறது என்று கூறுவதுபோல் மாநில சர்க்கார் கொடுக்கிற இந்தச் சலுகைக்கு மதம் குறுக்கே நிற்காமல், அவர்களுக்கு கொடுப்பதற்கு மறுப்பதற்குப் பதிலாக இந்தச் சர்க்கார் அந்தச் சலுகைகளை அவர்களுக்கும் கொடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் :** நாட்டிலுள்ள ஏழை மக்களுக்கு, பொருளாதார வசதி இல்லாதவர்களுக்கு, உள்ளபடியே வாழ்க்கையே நடத்த முடியாத நிலையில் திருமணம் செய்து கொள்ளமுடியாத நிலையில் இருப்பார்களேயானால், அப்படி பொருளாதார நிலையில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மதம் என்று பார்க்காமல் அப்படி ஒரு திட்டத்தை நம் அரசு ஏற்குமானால் அதைச் செய்யலாம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** இந்து மதத்திலேதான் ஜாதி இருக்கிறது, கிறிஸ்தவ மதத்தில் ஜாதி இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி இல்லாத ஒரே மதம் இஸ்லாமிய மதந்தான். கிறிஸ்தவ மதத்தில் ஜாதி வேறுபாடுகள் இருக்கின்றன. நான் பலமுறை அதை இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது பொருளாதாரத் துறையில் பின்தங்கியவர்களுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படும் என்ற கருத்தில் சொன்னார்கள். கிறிஸ்தவ மதத்திலும் இந்தமாதிரி ஜாதியைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் அடிமட்டத்தில் நசுங்கிக் கொண்டிருக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் அங்கு இருக்கிறார்கள், அந்த மதத்தினைச் சேர்ந்தவர்கள். எனவே அரசாங்கம் மீண்டும் பரிசீலித்து—கிறிஸ்தவ மதத்திலும் பல்வேறு ஜாதி வேறுபாடுகள் உள்ளன என்று நான் சொல்கிற நேரத்தில் அதை ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவ

[1974 ஆகஸ்ட் 24

மதத்தில் உள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இப்படி கலப்புத் திருமணம் செய்துகொள்வார்களானால் அந்தச் சலுகைகளை வழங்க இனிமேலாவது அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: கிறிஸ்தவ மதம் ஒரு புனிதமான மதம். உலகத்திலேயே அதிகப்படியான மக்களைக் கொண்ட மதம் அது. அங்கு போய் ஜாதி இருக்கிறது என்று சொல்லி, அந்த மதத்தை துவேஷப்படுத்த வேண்டாம். அங்கு ஜாதி நிச்சயமாக இல்லை. "இந்து மதத்திலிருந்து இங்கிருக்கிற கொடுமைகளைத் தாங்கக் கூடாத, தாங்க முடியாத நீங்கள் எங்கள் மதத்திற்கு வந்தால் கொடுமை இல்லாத இடத்தில் இருக்கலாம்" என்று அவர்களை அழைத்துக் கொண்டார்கள். அவர்களும் போனார்கள். ஆனால் அவர்களைச் சரிவர அந்த நிலையில் வைத்துக் கொள்ளவில்லையேயொழிய கிறிஸ்தவ மதத்தில் ஜாதி கிடையாது என்பதை நான் இங்கு அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: நான் சொல்வது என்னவென்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் வரக்கூடாது.

## 2. நடைமுறைக் கேள்விகள்.

### (அ) ஒரு துணை வினாவிற்கு அமைச்சர் அளித்த விடை குறித்து.

THIRU G. R. EDMUND: I am not rising a question; I am on a point or order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுக்கள் இருக்கக்கூடாது.

திரு. க. உரொ. எட்மண்ட்: பதில் சொல்கிறபோதும் குற்றச்சாட்டுக்களை பதிலாகச் சேர்க்கக்கூடாது. அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், கிறிஸ்தவ மதம் புனிதமான மதம் என்றார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அது என் நம்பிக்கை. இந்து மதத்தில் இருக்கிறவர்கள் இந்து மதத்தை புனிதமானது என்று ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கை அது. ஒவ்வொரு மதத்தினருக்கும் அவரவர்கள் மதத்தின்பேரில் நம்பிக்கை இருக்கிறது.



1974 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் சொன்னதில் என்ன தப்பு?

திரு. க. உரொ. எட்மண்ட்: அவர்கள் சொன்ன அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். அந்தப் புனிதமான மதத்தில் ஜாதி வேறுபாடுகள் இருக்கின்றன என்று சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை என்றுதான் அவர்கள் சொன்னார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: எனது விவாதம் வேறு,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி நேரம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் என்ன என்பதை உங்களுக்கு நான் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்பது பற்றி நீங்களே பலமுறை இங்கு தீர்ப்பு கொடுத்திருக்கிறீர்கள், இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டராகும்?

திரு. க. உரொ. எட்மண்ட்: அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது கிறிஸ்தவ மதம் புனிதமான மதம் என்றும் கிறிஸ்தவ மதத்தில் ஜாதி வேறுபாடுகள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜாதி வேறுபாடுகள் இல்லை என்றுதான் சொன்னார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அமைச்சர் அவர்கள் சொன்னது கிறிஸ்தவ மதம் ஒரு புனிதமான மதம், அந்த மதத்தில் ஜாதி வேறுபாடுகள் இருக்கின்றன என்று சொல்வது அந்த மதத்தை இழிவுபடுத்துவது ஆகும். அந்தக் கருத்தைச் சொன்ன அமைச்சர் அவர்கள், இந்து மதத்தில் ஜாதி வேறுபாடுகள் இருக்கின்றன, தாழ்த்தப்பட்ட மக்கள் நசுக்கப்படுகிறார்கள், அதிலிருந்து விடுபட கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்வதுதான் இந்த மதத்தை அவமானப் படுத்துவதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த மதத்தை?

திரு. க. உரொ. எட்மண்ட்: கிறிஸ்தவ மதத்தை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கு கொடுமைப்படுத்துவதால் அங்கு சென்றார்கள் என்று சொல்வது எப்படி அந்த மதத்தை அவமானப்படுத்துவதாகும்?

திரு. க. உரொ. எட்மண்ட்: இந்து மதத்திலிருந்து கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்கள் இந்து மதத்தில் கோட்பாடுகள் பிடிக்காமல் அல்லது கிறிஸ்தவ மதத்தில் கோட்பாடுகள் சிறந்தவை என்றுதான் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் கூறியது, இந்து மதத்தில் உள்ள ஜாதிக் கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்ளத்தான் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தார்கள் என்று சொன்ன வார்த்தையை என்னால் ஏற்றுக்கொள்ள இயலாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்து மதத்தில் நிறையக் கொடுமைகள் இருக்கின்றன என்று நாம் ஒப்புக்கொள்வோமேயானால் அந்தக் கொடுமைகளில் ஜாதிக் கொடுமையும் ஒன்று. இந்து மதத்தின் கொடுமையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக கிறிஸ்தவ மதத்திற்குச் சென்றார்கள். அப்படிச் சென்றார்கள் என்று சொன்னால் அது எப்படி கிறிஸ்தவ மதத்திற்கு மாசு கற்பிப்பதாகும்?

திரு. க. உரொ. எட்மண்ட்: அந்த மதத்தின் கோட்பாடுகளில் நம்பிக்கை வைத்து அந்த மதத்திற்குப் போகவில்லை, இந்து மதத்தில் உள்ள கொடுமைகளிலிருந்து தப்பித்துக்கொள்வதற்குத் தான் அந்த மதத்திற்குப் போனார்கள் என்ற வாதம் எங்கள் மதத்தை அவமானப்படுத்துவதாகும். அந்த முறையில் அந்த மதத்தை அமைச்சர் அவர்கள் அவமானப்படுத்தி பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. எட்மண்ட் எழுப்பியிருக்கிற பிரச்னை சட்டசபையோடு முடிவதல்ல. நாளையதினம் பத்திரிகைகளில் வந்து கிறிஸ்தவ மதத்தில் நம்பிக்கையுடையவர்கள் அத்தனை பேர்களும் இது தங்களைப் புண்படுத்துவதற்காக சொல்லப்பட்ட வாதம் என்று கருதக்



கூடும். ஹரிஜன நலத் துறை அமைச்சர் அவர்கள் தொடங்கிய போதே கிருஸ்தவ மதம் ஒரு புனிதமான மதம் என்று கோடிட்டு சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கிருஸ்தவ மதத்தை இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தோடோ அல்லது இழிவுபடுத்துகிற வார்த்தையை ஹரிஜன நலத்துறை அமைச்சர் திரு. ராஜாங்கம் அவர்கள் இங்கு பேசவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தஞ்சாவூர் அரிசன கூட்டுறவுப் போக்குவரத்துக் கழகம்.

*311 வினா—திரு. தாழை மு. கருணாநிதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்ட அரிசன கூட்டுறவு "போக்குவரத்துக்கழகம்" தற்போது செயல்பட்டு வருகிறதா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தஞ்சாவூரில் தஞ்சை மாவட்ட அரிசன கூட்டுறவுப் போக்குவரத்துக் கழகம் எனும் அமைப்பு எதுவும். பதிவு செய்யப்படவில்லை.

திரு. எஸ். வடிவேல்: இந்த அரிசன கூட்டுறவுப் போக்குவரத்துக் கழகத்திற்காக எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது? அது நடத்தப்படவில்லை என்றால், வசூலித்த தொகை எவ்வளவு திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இதற்கு ஒரு நோட் தான் என்னிடம் இருக்கிறது. அதை நான் படித்துவிடுகிறேன்—

The Thanjavur Harijan Co-operative Motor Transport Society has not been registered so far. A sum of Rs 23,531 was collected by the District Welfare Officer, Thanjavur as capital to organise a co-operative motor transport society for Harijans. But since the Government have decided to nationalise the passenger transport in the State and since the share capital collected was quits inadequate to purchase the minimum requirement of two buses, to form a co-operative society, the proposal to organise a co-operative society was dropped.

[1974 ஆகஸ்ட் 24

திரு. எஸ். வடிவேல்: ஆங்கிலத்தில் சொன்னுர்கள். நாம் எப்படி மேற்கொண்டு கேள்வி கேட்க முடியும். தமிழில் சொன்னுல் நல்லது.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: சொல்கிறேன். 22,300 சொச்சம் ரூபாய் பஸ் வாங்கவேண்டுமென்று வசூல் செய்து, அதைக்கொண்டு வந்து கட்டினுர்கள். அதைக் கட்டி ரிஜிஸ்டர் செய்யும் நிலையில் சர்க்காரில் பஸ் தேசிய மயக்கொள்கை வந்ததால், பதிவு செய்யாமல் நிறுத்தி விட்டார்கள். வசூலித்த தொகையை கொடுத்து விடவேண்டுமென்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் உத்தரவிட்டு இருக்கிருர்கள்.

## பங்காருபேட்டையில் புதிய பள்ளி

*312 வினு—திரு. மா. வெ. நாராயணசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் ஒன்றியத்தை சார்ந்த மோரை ஊராட்சியில் அடங்கும் பங்காருபேட்டையில் நலத்துறை ஆரம்பப்பள்ளி ஒன்று தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது தொடங்கப்பெறும்?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. வெ. நாராயணசாமி: தலைவரவர்களே, வில்லிவாக்கம் ஒன்றியத்தை சார்ந்த மோரை ஊராட்சியில் அடங்கும் பங்காரு பேட்டையில் உள்ள அரிசன காலனியில் இருக்கும் அரிசன மாணவர்களுக்கு ஆரம்ப பள்ளி இல்லை. இந்தப் பிரச்னை நீண்டகாலமாக இருந்து வருகிறது. நான் அறிந்த வரையில், மாவட்ட நல அதிகாரி அவர்கள்கூட அதற்காகப் பரிந்துரை செய்து, அரசு மட்டத்தில் இறுதி உத்தரவுக்காக இருப்பதாக தகவல். ஆகையால் எந்த அளவில் அது இருந்தாலும், இனிமேலாவது விரைவில் அங்கு ஒரு ஆரம்பப் பள்ளி துவங்க அரசு முன் வருமா? அங்குள்ள மாணவர்கள் 2 மைல் தூரம் செல்லவேண்டியிருப்பதால், விரைவான நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?



1974 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: இந்தக் கேள்வி வருவதற்கு முன்னுலே அரசாங்கத்திடம் அதுபற்றிய செயற் குறிப்பு இல்லை. கேள்வி வந்ததற்குப் பிறகு வந்திருக்கிறது. அது பற்றி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்).

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

## புகுமுக வகுப்பிற்கான பாடபுத்தகங்கள் மாணவர்களுக்குக் கிடைக்காதது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள்—

"the non-availability of text-books for P.U.C. College students and the need to take immediate action to bring out the text books at an early date."

என்ற பொருள்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொடுத்து இருக்கிருர்கள். இது எப்படி ஒத்திவைப்புத் தீர் மானத்தின்கீழ் வரும் என்பதை அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Speaker, Sir, the P.U.C. text books, especially the English text book has not yet been released. It is now more than 3 months since the boys have been going to the College. Many of the Lecturers, I am told, are having notes and from the notes they are conducting the classes. From the notes, they dictate to the students. The reason advanced for this non- availability of text book was this. Originally, the Government wanted to publish text books. Then, the government were not willing to publish the books and asked the private people to publish the text books. The private people were not ready to publish the books, because they were not aware that they would be asked to publish text books and also in view of the rise in

[Dr. H. V. Hande] [1974 ஆகஸ்ட் 24

prices of paper and other things, they were not in a position to supply the books at the price at which the Government wanted. The argument advanced by them was that they will not be able to print them because it will not be possible to sell at that rate. The net result was neither the Government nor the private agencies were able to publish the text books. Now the students after paying a huge amount for admission, they are attending the Colleges. They are not able to get their text books. The copies available are very limited and they are sold at high prices in blackmarket. In the present context, the students are in a disadvantageous position and they are not able to follow their lessons. For these reasons, I thought this opportunity can be well u tilised for soliciting information from the Hon. Minister for Education. Therefore, I am raising this matter.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :* தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஹாண்டே அவர்கள் எழுப்பிய ஒத்தி வைப்புப் பிரச்னை பல்கலைக்கழகத்திலே புகுமுக வகுப்பிற்கான ஆங்கில உரைநடை பாடப் புத்தகம் பொறுத்ததாகும். புகுமுக வகுப்பிற்குப் பாடபுத்தகங்களைத் தெரிந்தெடுப்பது பல்கலைக்கழக போர்ட் ஆப் ஸ்டடீஸ். புத்தகம் தெரிந்தெடுக்கப்பட்ட பிறகு அதை சிண்டிகேட், ஆட்சிக் குழு ஏற்றுக்கொள்கிறார்கள். 1975-76-ம் ஆண்டுக்காக புகுமுக வகுப்பில் பயன்படுத்துவதற்காக திரு. ஏ. கே. ஸ்ரீவத்சா ப்ரோஸ் அண்டு பிளஷர், என்கிற புத்தகம் ஜார்ஜ் ஆலன் ஆண்டு கம்பெனியாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தப் புத்தகத்தை அவர்கள் தெரிந்தெடுக்கிறபோது, அந்தக் கம்பெனியில் எவ்வளவு புத்தகங்கள் இருக்கின்றன என்று ஆராய்ந்தறிந்து தெரிந்தெடுக்க வில்லை. தெரிந்தெடுத்ததற்குப் பிறகு, இந்த ஆண்டுக்கு வரும்போது அவர்கள் கையிருப்பில் போதுமான அளவுக்கு புத்தகம் இல்லாத சூழ்நிலை ஏற்பட்டது. பல்கலைக் கழக பதிப்பாளருக்குப் புத்தகம் கிடைக்கவில்லை என்று புகார் வந்த உடனே, சென்னைப் பல்கலைக் கழகம் பதிப்பாளரோடு தொடர்பு கொண்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், போதுமான காப்பிகள் இல்லாததால் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது என்று அறிந்த உடனே, மறுபரிசீலனை செய்யப்பட்டது. பல்கலைக் கழகம் அதை பிரசுரிப்பது அல்லது அரசாங்கம் அந்தப் புத்தகத்தைப்



1974 ஆகஸ்ட் 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பிரசுரிக்க ஆயத்தமாக இருக்கிறது என்று சொன்னோம். அந்தக் கம்பெனி தாங்களே அதை பிரசுரித்துக் கொடுத்து விடுகிறோம் 23—8—1974-க்குள், அதாவது நேற்றை தினத்திற்குள் என்று உறுதிமொழி தந்தார்கள். மாணவர்களில் சிலருக்குப் புத்தகம் கிடைத்ததும், பலருக்குப் புத்தகம் கிடைக்காமல் இருக்கும் சூழ்நிலை பற்றி 'பல்கலைக் கழக போர்ட் ஆப் ஸ்டடீஸ் மறுபடியும் ஆராய்ந்து, கடைசி இரண்டு பாடத்தை 1975 ஏப்ரல் பரீட்சைக்கும், 1975 செப்டம்பர் பரீட்சைக்கும் நீக்கிவிடலாம் என்று முடிவு எடுத்து இருக்கிறார்கள். இந்த வாரத்திற்குள் எல்லா மாணவர்களுக்கும், புத்தகம் கிடைத்துவிடும் என்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க அவசியமில்லை என்று நான் கருதுவதால், இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு.

### (அ) மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தாமதமாகப் பாசனத்திற்கு நீர் விடப்பட்டதால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அடுத்து, மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

DR. H. V. HANDE : Sir, I wish to call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, the delay in letting out water from Mettur Reservoir for irrigation purposes resulting in the loss of crops and the need to take adequate remedial measures.

*மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :* தலைவரவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கம் ஜூன் மாதம் 12-ந் தேதி பாசனத்திற்குத் திறந்து விடப்படுவது வழக்கமாகும். ஆனால், இந்த ஆண்டு ஜூன் 12-ந் தேதியன்று நீர்த்தேக்கத்தின் மட்டம் 21.45 அடி (அதாவது 4,534

மில்லியன் கன அடி) தான் இருந்தது. தொடர்ந்து சீரான முறையில் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைப்பதை உறுதிப்படுத்துவதற்கு, நீர்த்தேக்கத்தில் போதிய அளவு நீர் இருக்க வேண்டும். காவிரி நீர்கோள் பகுதியில் தென்மேற்குப் பருவ மழை பெய்து விநாடிக்கு சுமார் 20,000 முதல் 30,000 கன அடி வரை நீர்வரவு இருக்கவேண்டும். 12—6—1974 அன்று நீர்த்தேக்கத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லாததாலும், தென்மேற்குப் பருவ மழையும் பெய்யத் தொடங்காததாலும் நீர்த்தேக்கம் திறக்கப்படும் தேதி ஒத்திவைக்கப்பட்டு விவசாயிகளுக்கும் தகவல் தெரிவிக்கப் பட்டது.

நீர்கோள் பகுதியில் தென்மேற்கு பருவமழை ஜூலைத் திங்கள் தொடக்கத்தில் தான் ஆரம்பித்தது. அதன் பின்னர் நீர்த்தேக் கத்தில் நீர்வரவு அதிகமாகியது. 15—7—1974 அன்று நீர்த் தேக்கத்தில் இருந்த நீரின் அளவு, நீர் வரவு மற்றும் குடகில் 5—7—1974 முதல் 13—7—1974 வரை பெய்த மழை ஆகிய வற்றை ஆய்வு செய்து 20—7—1974 அன்றிலிருந்து நீர்த்தேக்கத் திலிருந்து பாசனத்துக்குத் தண்ணீர் விடலாம் என்று தீர்மானிக்கப் பட்டது. 15—7—1974 அன்று நீர்த்தேக்கத்தில் நீர் அளவின் மட்டம் 48.90 அடி, அதாவது 17,126 மில்லியன் கன அடி நீர் இருந்தது. நீர்த்தேக்கம் திறந்து விடப்பட்டது முதல் பாசனத்திற்குத் தேவை யான அளவு தண்ணீர் விடப்பட்டு, காவேரி டெல்டாவில் எல்லாப் பகுதிகளுக்கும் வேண்டிய அளவு தண்ணீர் அனுப்பப்படுகிறது.

1974 ஜூன் மாதம் மேட்டூர் நீர்த்தேக்கத்திற்கு வந்த நீரின் அளவு இயல்பான அளவைவிட, 89 சதவீதம் குறைவு. ஜூலை மாதத்திலும் இயல்பான அளவை விட 54 சதவீதம் குறைவாக இருந்தது. ஆகஸ்ட் மாதம் முதற்கொண்டுதான் இயல்பான அளவு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது.

எனவே, இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழை தாமதமான தாலும் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லாததாலும் தான் மேட்டூர் நீர்த்தேக்கம் தாமதமாகத் திறந்துவிடப்பட்டது. 1966 ஆம் ஆண்டைப் போலவே இவ்வாண்டும் நிலைமை இருந்ததால் மேட்டூர் நீர்த்தேக்கத்தைப் பாசனத்திற்குத் திறந்து விடும் நாளை ஒத்திப் போட வேண்டியதாயிற்று. 1966 ஆம் ஆண்டில் 21—7—1966-ல் தான் தண்ணீர் பாசனத்திற்குத் திறந்து விடப்



பட்டது. நீர்த்தேக்கத்திலிருந்து நீர் வழங்குவது என்பது நீர் கோள் பகுதிகளில் மழை பெய்வது போன்ற நமது சக்திக்கு அப்பாற்பட்ட கூறுகளைப் பொறுத்ததாகையால், நிலநீர் வாயில்களை மேம்படுத்துவதன் மூலம், அதாவது வடிமுனைக் குழாய்களையும் குழாய்க் கிணறுகளையும் பயன்படுத்துவதன்மூலம், சாகுபடி தொடங்குவது பற்றிய நிச்சயமற்ற தன்மையை ஓரளவு குறைக்கலாம். சாகுபடி தொடங்குவதற்காக நிலநீர் வாயில்களை அதிக அளவிற்குப் பயன்படுத்தும் வகையில் திட்டமிடுவதற்காக, அந்த வாயில்களை விரிவான முறையில் மதிப்பிடுவதற்காக ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE: Sir, from the statement of the Hon. Minister for Works, I understand that it is a fact that there has been delay in letingt out water from Mettur for irrigation purposes. My only point is this. If there is proper understanding between Krishna Raja Sagar and Mettur authorities with regard to the level of the waters in both the places, this problem would not have arisen. Ultimately, the water has to be let out from K. R. Sagar to Mettur Dam. From the statement of the Hon. Minister for Works, it can be seen that there has been delay in letting out 10 T.M.C. water, which should have been let out to Mettur much earlier. I would like to know from the Hon. Minister whether it was due to unlawful impounding of water this delay has occurred or due to any other reason.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, தமிழ் நாட்டுக்குச் சட்டப்படி தரவேண்டிய ஏறத்தாழ 12 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமென்று சொன்னதற்கும் மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர் குறைந்திருப்பதற்கும் சம்பந்தமில்லை. 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி 25,000 கியூசெக்ஸுக்குக் குறைவாக கிருஷ்ணராஜ சாகருக்குத் தண்ணீர் வருமானால் அவ்வளவையும் மேட்டூர் அணைக்குத் திறந்துவிட்டுவிட வேண்டும். கே. ஆர். சாகரில் நிறுத்திவைத்துக் கொள்ளக் கூடாது. 25000 கியூசெக்ஸுக்கு மேல் தண்ணீர் வந்தால் முழு அளவு தண்ணீரையும் அவர்கள் நிறுத்தி வைத்துக்கொள்ளலாம், என்று அந்த ஒப்பந்தத்தின் ஒரு ஷரத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்போது கபினியில் இருந்து நமக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கும்.

[திரு. ப. உ. சண்முகம்] [1974 ஆகஸ்ட் 24

இப்போது மேட்டூர் நீர்த் தேக்கத்தில் தண்ணீர் குறைந்திருப்பதற்கு கே.ஆர். சாகரில் இருந்து தண்ணீர் விடப்படாதது காரணம் அல்ல. அந்த நேரத்தில் கே. ஆர். சாகரில் தண்ணீர் குறைவாக இருந்தது. நான் பத்திரிகையில் அறிக்கை விட்டிருந்ததைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் தெரிவித்தார்கள். கர்நாடக பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும் ஒரு அறிக்கை விட்டிருந்தார்கள். அதைப்பற்றி விளக்க விரும்புகிறேன்.

கிருஷ்ணராஜ சாகருக்குக் கீழே தேவராய அணைக்கட்டு ஒன்று இருக்கிறது. அது பழுதுபட்டிருக்கிறது. ஆகவே, தண்ணீர் திறந்துவிட முடியவில்லை என்று கர்நாடக அரசு தமிழ்நாடு அரசுக்கு பல தந்திகள் கொடுத்திருக்கிறது. அப்படி 10 நாட்கள் திறந்துவிடப்படவில்லை. கீழ் அணை பழுதடைந்திருப்பதால், அது ரிப்பேர் செய்யப்பட்டவுடன் திறந்து விடுகிறோம் என்று தெரிவித்தார்கள். ரிப்பேர் ஆன பின்னும் அவர்கள் திறந்து விடவில்லை. அதனால் சட்டப்படி எங்களுக்கு கொடுக்கவேண்டியதைக் கொடுங்கள் என்று கேட்டோம்.

சென்ற ஆண்டு கர்நாடக முதலமைச்சர் தமிழ்நாடு அரசுக்குக் கடிதம் எழுதியிருந்தார். 1.6 டி.எம்.சி. தண்ணீரை எங்களுக்குத் தேவையிருப்பதால் நிறுத்தி வைத்துக்கொள்கிறோம்; அதை எங்களுக்கு கடனாகக் கொடுங்கள்; அடுத்தாண்டு அதைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறோம் என்று கடிதம் எழுதினார்கள். அதைப் பரிசீலனை செய்து, தமிழ்நாடு முதலமைச்சர் நிறுத்தி வைத்துக் கொள்ளுங்கள் என்று அனுமதி அளித்தார்கள். அதையும் சேர்த்து 12 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டிற்குக் கொடுக்க வேண்டுமென்று பத்திரிகையில் நான் ஒரு அறிக்கை விட்டேன். கர்நாடக பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் முதலிலே சென்னைக்கு வரும்போது மறுத்திருந்தாலும், பின்னர் திறந்துவிட்டார்கள். மறுபடியும் நிறுத்திக்கொண்டார்கள். நான் அதற்குப் பிறகு டெல்லிக்குச் சென்று, முழு அளவுத் தண்ணீரையும் திறந்துவிட வேண்டுமென்று சொன்னேன்; அவர்களும் நான் கூறியதை ஒப்புக் கொண்டு திறந்துவிடச் சொன்னார்கள்.



1974 ஆகஸ்ட் 24]

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மேட்டூர் நீர்த் தேக்கம் கே.ஆர். சாகரை நம்பி இல்லை; கபினியில் இருந்து தண்ணீர் வருகிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அப்படி இருந்தாலும் ஓரளவுக்கு மேட்டூர் டாம் அதை நம்பித் தான் இருக்கிறது. இப்போது 12 டி.எம்.சி. கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். இந்த நேரத்தில் நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். இரு மாநிலத்தவர்களும் ஒருவருக்கொருவர் 'கன்ஃப்ரான்டேஷன்' ஆக ஸ்டேட்மெண்ட் விடாமல் நட்பு முறையில் சுமுகமாகப் பேசித் தீர்த்துக்கொள்ள வேண்டும். எப்படியும் நமக்கு கே. ஆர். சாகரில் இருந்து தண்ணீர் வர வேண்டும். அதை நம்பி மேட்டூர் டாம் இருக்கிறது, தஞ்சாவூர் மாவட்டம் இருக்கிறது. கருத்து வேறுபட்ட ஸ்டேட்மெண்டுகள் பத்திரிகையில் வந்ததை நான் பார்த்தேன். அந்தமாதிரி கன்ப்ரான்டேஷன் வருவது சரியல்ல. கூடியவரையில் சுமுகமாகவே தீர்த்துக் கொள்ள நம்முடைய முதலமைச்சரவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சரவர்களும் ஏற்பாடுகளைச் செய்தார்களா? அப்படிச் செய்வதுதான் இரு மாநிலங்களுக்கும் சிறந்தது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மத்திய நீர்-மின் துறை அமைச்சர் மாண்புமிகு பந்த் அவர்கள் என்னிடம் பேசும்போது கர்நாடக மாநிலத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் கன்ஃப்ரான்டேஷன் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. பத்திரிகையில் அப்படித் தவறாகப் போட்டிருக்கிறார்கள். தயவு செய்து அதை வைத்துக்கொண்டு சொல்லாதீர்கள். தமிழ்நாட்டின் நிலைமையை எடுத்துச் சொன்னேன். அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதன் பிறகு திரு. பட்டேல், செயலாளர் அவர்களிடம் சொல்லி, அவர்கள் கர்நாடக அரசுக்குச் சொல்லி, தண்ணீர் விட்டிருக்கிறார்கள். கிருஷ்ணராஜ சாகரில் இருந்து தண்ணீர் வருகிறது. 25,000 கியூசெக்சுக்குக் குறைவாகத் தண்ணீர் வந்தால் அவ்வளவையும் நமக்கு விட்டுவிட வேண்டும்; 25,000 கியூசெக்சுக்கு மேல் வந்தால் அவ்வளவையும் அவர்கள் நிறுத்திக் கொள்ளலாம். இதுதான் 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தின் ஷரத்து. அதன்படி இப்போது கர்நாடக அரசு தண்ணீரை திறந்து விட்டிருப்பதால் இந்த நேரத்தில் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) பால் விலை உயர்வு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து விதி 41-ன் கீழ் திரு. க. உரொ. எட்மண்ட் அவர்கள் பால் விலை உயர்வு பற்றிய அவசர முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒன்றை மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

THIRU G.R. EDMUND : Sir, under rule 41 of the Assembly Rules. I call the attention of the Hon. Minister for Religious Endowments to a matter of urgent public importance, namely, the increase in the prices of milk supplied to the consumers of the State-operated Milk Units.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, சென்னை, மதுரை மாநகரங்களில் முறையே சென்னை பால்வள நிறுவனத்தாலும், மதுரை பால்வள நிறுவனத்தாலும் வழங்கப்படும் பாலின் விற்பனை விலையை 16—7—1974 முதற்கொண்டு திருத்தி அமைக்கப் பட்டது. இதற்கு முன்னர் கடைசியாக 16—4—1973 ஆம் நாளில் பால் விற்பனை விலை உயர்த்தப்பட்டது. பெரும்பாலும் எல்லா மூலப் பொருட்கள், நுகர் பொருட்களின் விலைகளும், பாலைப் பதப்படுத்தி விற்பனை செய்யும் பணியில் பயன்படுத்தப்படுகிற அலுமினியத் தாள், புட்டிகள், இரசாயனப் பொருட்கள் முதலியவற்றின் விலைகளும் மிகப் பெருமளவில் உயர்ந்துள்ள காரணத்தால், பாலின் விலையை இவ்வாறு உயர்த்த வேண்டியது அவசியமாகியுள்ளது.

மேலும் கால்நடைகளின் தீவனப்பொருட்களின் விலை அதிகமாக வுயர்ந்துள்ள காரணத்தால், கால்நடைகளைப் பேணுவதற்காகும் செலவும் கணிசமாக உயர்ந்துள்ளது. எனவே, பால் உற்பத்தியாளர்களிடம் வாங்கும் பாலுக்கு அளிக்கப்படும் விலைகள், தற்காலிக அடிப்படையில் லிட்டர் ஒன்றுக்கு 10 காசு வீதம் உயர்த்தப்பட்டது. இது முதலில் 1—4—1974 இலிருந்து உயர்த்தப்பட்டது. பின்னர் 1—7—1974 இலிருந்தும் இதே போன்ற விலையுயர்வு மீண்டும் அனுமதிக்கப்பட்டது.



சென்னை மதுரை ஆகிய இரு இடங்களிலும் பாற்பண்ணைகளுக்கு விற்கப்படும் கறவை பாலின் அளவு மிகப் பெருமளவிற்குக் குறைந்து போன காரணத்தால், அவ்விரு இடங்களிலும் பாற்பண்ணைகளுக்கு வரும் பால் வரத்து நிலைமையை பேணுவதற்காக வேணும் இந்த விலையுயர்வு அவசியமாயிற்று. இவ்வாறு பாற்பண்ணைக்கு வாங்கப்படும் பாலின் விலை இருமுறை உயர்த்தப் பட்டதாலும் பாலைப் பதப்படுத்த வழங்கும் தொடர்பாக ஏனைய செலவுகளும் உயர்ந்து கொண்டே செல்வதாலும் பால் விற்பனை விலையை உயர்த்துவது தவிர்க்க முடியாததாயிற்று. எனவே, கீழே விவரம் கொடுக்கப்பட்டுள்ளவாறு பால் விற்பனை விலை 16—7—1974 முதல் உயர்த்தப்பட்டது.

| | | முதலில் இருந்தபடி விற்பனை விலை (லிட்டர் ஒன்றுக்கு) | திருத்தப்பட்ட விற்பனை விலை (லிட்டர் ஒன்றுக்கு) |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ. |
| சென்னை— | | | |
| தரப்படுத்திய பால் | .. | 1·50 | 1·70 |
| பதப்படுத்திய பால் | .. | 1·20 | 1·40 |
| மதுரை— | | | |
| தரப்படுத்திய பால் | .. | 1·30 | 1·60 |

## 5. அமைச்சரின் விளக்கம்.

### காவிரி நீர்ப்பிரச்னை குறித்து

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, காவிரி நீர்ப் பிரச்னைப் பற்றி சிறிது விளக்கம் தந்துவிட வேண்டுமென்று விரும்புகிறேன். இந்த அரசோ அல்லது கர்நாடக அரசோ காவிரி நீர்ப் பிரச்னைப்பற்றி ஒருவருக்கொருவர் தகராறு ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்று விரும்பவில்லை. சுமுகமான ஒரு தீர்வு காணவே கர்நாடக அரசும் விரும்புகிறது; நாமும் விரும்புகிறோம். இந்த விஷயத்தில் இரு அரசாங்கத்தாரும் அக்கறை எடுத்திருக்கிறார்கள். அடுத்த மாதம் பெங்களூரில் கூடி பேசலாம் என்று முடிவு செய்திருக்கிறோம். சுமுகமான முடிவு ஏற்படும் என்று நம்புகிறோம். இதிலே ஒருவருக்கொருவர் தகராறு செய்வது என்பதற்கு இடமில்லை என்பதை தெளிவுபடுத்தி விடுகிறேன்.

DR. H. V. HANDE : Sir, I am sure the entire House will welcome this announcement.

## 6. திருமதி சத்தியவாணிமுத்து சாட்டிய குற்றச்சாட்டையொட்டிய கோப்பு குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் பார்க்க வேண்டுமென்று கேட்ட அந்த கோப்பு, நேற்று என்னுடைய அறையில் அவர்களுக்குக் காட்டப்பட்டது. அவரோடு டாக்டர் ஹாண்டே அவர்களும் அந்த கோப்பினைப் பார்த்தார்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் நேற்று வரவில்லை; அதனால் அவர்கள் பார்க்க முடியவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : நேற்று நான் வாராததால் பார்க்க முடியவில்லை; இன்றைக்கு பார்க்கலாம் அல்லவா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : தாராளமாகப் பார்க்கலாம். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எந்த வகையில் டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசர்ஸ் போஸ்டிங்க்ஸ் பற்றிச் சொன்னார்களோ, அதே மாதிரிதான் கோப்பிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி சத்தியவாணிமுத்து** : மாண்புமிகு முதலமைச்சரவர்கள், நான் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திலே பேசியபோது மாவட்ட நல அதிகாரிகள், அவர்களை வயதானவர்களாகப் பார்த்துப் போட்டதற்கு நான் தான் காரணம் என்றும் அதனால் நான் அவர்கள் வயதானவர்களைப் போட்டதாகவும் சொன்னார்கள். மாவட்ட நல அதிகாரிகளை, இப்படி 50 வயதானவர்களைப் பார்த்து போட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அந்த அதிகாரமும் எனக்கு இல்லை. நான் கையெழுத்துப் போட்ட கோப்பு, ஏற்கெனவே மாவட்ட நல அதிகாரிகளாக இருந்தவர்கள்தான், அவர்கள் வேறு இலாகாவிற்கு மாற்றப்பட்டார்கள். மறுபடியும் அவர்கள் இந்த இலாகாவுக்கு வரவேண்டுமென்று கேட்டேன். ஆனால் அவர்களுக்குப் பதிலாக குறைந்த வயதானவர்களைப் போடவேண்டாம் என்று நான் சொல்லவில்லை. அவர்கள் சொல்வது குறைந்த வயதானவர்களைப் போட்டு, அதை நான் வேண்டாம் என்று சொல்லி, அதற்குப் பிறகுதான் வயதானவர்களைப் போட்டதாகச் சொல்வது சரியல்ல. நான் அப்படிச் சொல்லவில்லை. நலத் துறை அதிகாரிகளுக்கு இருக்கிற வயது வரம்பு . . . (மணியடிக்கப் பட்டது).



**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : சம்பந்தப்பட்ட கோப்பை நேற்று அறையிலே காட்டினேன்; நீங்களும் பார்த்தீர்கள்.

(முற்பகல் 10-30)

**திருமதி சத்தியவாணிமுத்து** : நேற்று நான் அந்தப் பதவிக்கு இருக்க வேண்டிய தகுதி, படிப்பு என்ன என்பதைச் சொன்னேன். அந்தப் பதவிக்கு எப்படி தேர்ந்தெடுப்பது என்பதையும் சொன்னேன். அதுதான் கோளாறு. அதைத்தான் இப்போதும் சொல்கிறேன். டிஸ்ட்ரிக்ட் அரிசன் வெல்பேர் ஆபீசராக வரக் கூடியவர்கள் ஆ.டி.ஓ.க்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறவர் களில் இருந்துதான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். டைரெக்ட் ஆர்.டி.ஓ.க்களைக்கூடத் தேர்ந்தெடுக்கக் கூடாது, என்கிறபோது படிப்படியாக அந்த நிலைக்கு அவர்கள் உயர்வதற்குள் வயதாகி விடுகிறது. ஆகவே இவர்களைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்கிறபோது—இவர்களில் ஏற்கனவே இந்தத் துறையில் வேலை செய்தவர்களையே போடுங்கள் என்று நான் எழுதினேன். நான் வயதானவர்களைப் போடுங்கள் என்று எழுதவில்லை. இந்த இரண்டாவது பைலைக் காட்டுவது சரியல்ல. நான் டைரெக்ட் ரெக்ரூட்டாக வரக் கூடிய இளைஞர்களைத்தான் போடவேண்டும் என்று சொன்ன பைலை டாக்டர் முதல்வர் அவர்களும் பார்த் திருக்க வேண்டும். பார்த்திருக்கிறவர்கள் அதைக் கூறவேண்டும்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இந்தப் பிரச்னை பற்றி—உங்கள் அறையில் இது சம்பந்தப்பட்ட பைலைக் காட்டினோம், நீங்களும் பார்த்தீர்கள். மற்ற அங்கத்தினர்களும் பார்த்தார்கள்.

மாவட்ட அரிசன நல அதிகாரியாகப் பணியாற்றுகிறவர்கள் எல்லாம் வயதானவர்கள், வயதானவர்களையே போடுகிறார்கள் என்பது அம்மையார் அவர்களுடைய குற்றச்சாட்டு.

அதற்குப் பதில் சொல்லும்போது தான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில பெயர்களைப் படித்து—நீங்கள் இவர்களை மாவட்ட அரிசன நல அதிகாரிகளாகப் போடச் சொல்லி எழுதியிருக்கிறீர் களே, இவர்களின் வயது என்ன என்று வயதை சொன்னார்கள். இப்படி அம்மையார் அவர்கள் வயதானவர்களை இங்கே அரிசன

நலத்துறை மாவட்ட அதிகாரிகளாகப் போடச் சொல்லி எழுதி விட்டு, வெளியே போய் குற்றம் சொல்வது சரியல்ல என்பது முதல்வர் அவர்களுடைய வாதம்.

வயதானவர்களைப் போடுகிறார்களே என்று சொல்கிறார்கள். வயது எல்லோருக்கும் நிர்ணயிக்கப்படுகிறது. இத்தனை வயதில் சேர்க்கப்பட வேண்டும். இத்தனை வயதில் ஓய்வு பெற வேண்டும். பதவி உயர்வு சீனியாரிட்டி முறையில் அளிக்கப்பட வேண்டும் என்பதை எல்லாம் நிர்ணயித்திருக்கிறோம். டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசர் என்று ஒரு காடர் கிடையாது. அது ஒரு போஸ்ட். அந்தப் போஸ்டுக்கு ஆர்.டி.ஓ. ஆக இருக்கிறவர்களைப் போட வேண்டும் என்பது நியதி. நமது மாநிலத்தில் ஆர்.டி.ஓ. க்கள் நூற்றுக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பல துறை களில் பணியாற்றுகிறார்கள். ஆர்.டி.ஓ. க்களாக இருக்கிறார்கள். இன்னும் இந்த ஆர்.டி.ஓ. க்கள் விவசாயத் துறைக்குச் சென்று பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் இருக்கிறார்கள். தொழில் துறைக்குச் சென்று பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் இருக் கிறார்கள். அரிசனத் துறையிலும் பணியாற்றுகிறார்கள்.

இப்படி நூற்றுக்கணக்கில் பணியாற்றுகிற ஆர்.டி.ஓ. க்களில் அம்மையார் அவர்கள் இளைஞராக இருக்கிறவர்களைப் பார்த்துக் கேட்டு, உங்களுக்கு இளைஞர்களைத் தரமாட்டோம் என்று சொன்னார்களா? 'நீங்கள் கேட்டீர்களா?' என்று தலைவரவர்களே கேட்டார்கள். அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னார்கள்.

அவர்கள் கைப்பட எழுதியிருப்பது—முன்னே இந்தத் துறையில் டி.டபுள்யு.ஓ. ஆகப் பணியாற்றுகிறவர்களைப் போடச் சொல்லி எழுதிய பேர்கள் வயதானவர்கள்—இளைஞர்களாக இருப்பவர் களைப் பார்த்து எழுதிக் கேட்டிருந்தால் நிச்சயமாகப் போட்டிருப் பார்கள். பொதுவாக வயதானவர்களுக்குத்தான் அறிவு அதிகம் என்று சொல்வதுண்டு. நல்ல அனுபவம் உள்ளவர்களைத்தான் பொறுப்புள்ள இடத்திற்குப் போட வேண்டும் என்பார்கள் அம்மையார் அவர்கள்தான் இளைஞர்களாக வேண்டும் என்கிறார்கள் இவர்களே ஆர்.டி.ஓ.க்களில் இளைஞர்களாக உள்ளவர்களைத் தேர் தெடுத்து போடச் சொல்லியிருந்தால் போட்டிருப்பார்கள். ஆனா



யார் யாரைப் போட வேண்டும் என்று இவர்களே எழுதிக் கேட்டிருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் வயதானவர்கள் தான்—இங்கே இப்படி எழுதிக் கேட்டுவிட்டு வெளியில் குற்றம் சாட்டுவது சரியில்லை என்பதைத்தான் முதல்வர் அவர்கள் சொன்னார்கள். பைல் குறிப்பில் வயதானவர்களைத்தான் இவர் களே போடச் சொல்லியிருக்கிறார்கள். வேறு எதுவும் இல்லை.

திருமதி சத்தியவாணிமுத்து: மாண்புமிகு சட்டமன்றத்துறை அமைச்சர் அவர்கள் நான் குறைந்த வயதானவர்களைக் கேட்க வில்லை என்று சொல்கிறார்கள். ரெவின்யூ செக்ரடரி பசுபதி யிடத்தில் ஏழாண்டு காலமாக—ஆறு ஆண்டு காலமாக நான் இதைத்தான் பேசி வாதிட்டிருக்கிறேன். நேரிடையாக ஆர்.டி.ஓ. க்களாக வருகிறவர்களை இந்தப் பதவிக்குப் போட முடியாது. படிப்படியாக பதவி உயர்வு பெற்று ஆர்.டி.ஓ. க்களாக வந்துள்ளவர்களைத்தான் இந்தப் பதவிக்குப் போட முடியும் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். படிப்படியாக பதவி உயர்வு பெற்று ஆர்.டி.ஓ.க்களாக வந்தவர்கள் என்கிறபோது 50 வயதுக்குக் குறைந்தவர்கள் யாரும் இல்லை. குறைந்த பட்சம் 50 வயதுக்கு மேற்பட்டவர்களைத்தான் டி.டபிள்யூ.ஓ.க்களாகப் போட்டிருக்கி றார்கள். அதைத்தான் இப்போதும் கண்டித்தேன். அப்போதும் கண்டித்திருக்கிறேன். இவர்களைத்தான் போட முடியும் என்று சொன்ன காரணத்தினால் ஏற்கனவே இத்துறையில் வேலை செய்த பூச்சியப்பனைப் போடச் சொன்னேன். அவருக்கு வயது 50-க்கு மேல்தான். கந்தசாமியைப் போடச் சொன்னேன். அவருக்கு வயது 50-க்கு மேல்தான். நான் சொல்வது எல்லாம்—இந்தத் துறையில் டைரெக்ட் ரெக்ரூட்டைப் போட முடியாது. இந்தப் பதவிக்கு அதிகாரிகளைப் போட வயது வரம்பு இவ்வளவுதான் என்று இந்த மன்றத்தில் சொல்லிவிடுங்கள். அதைச் சொல்லாமல் —நானே வயதானவர்களைத்தான் போடச் சொன்னேன் என்பது சரியல்ல—நான் சொல்வதில் தவறு சொல்வது முறையாகாது. (திருமதி அனந்தநாயகி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பைலைப் பார்த்து விட்டு க்ளாரிபிகேஷன் கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அதைப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. இங்கே பேசிக் கொள்வதில் இருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சபாநாயகர் அவர்களே, அந்த ஃபைலில் இருக்கக்கூடிய ஆறு ஏழு பக்கம்—2 பக்கத்தில் முக்கியமாக டைப் செய்யப்பட்டு—முன்னாள் அமைச்சர் போடச் சொல்லிய நான்கு ஆபீசர்களைப் பற்றிய விவரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் பார்த்த வரையில் இந்த நான்கு பேரும் ஏற்கனவே மாவட்ட நல அதிகாரியாகப் பணியாற்றி—அப்போது வேறு வேறு துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள்தான். இன்னும் இரண்டு மூன்று பக்கங்களைப் பார்த்ததில் அவர்கள் ஏற்கனவே டி.டபிள்யூ.ஓ. ஆகப் பணியாற்றியிருக்கிற காரணத்தினால் இடையில் ஓராண்டு, இரண்டாண்டு வெளியில் சென்றிருக்கிற காரணத்தினால்...

One or two years ago they were District Welfare Officers. Therefore these District Welfare Officers were later on put as Revenue Divisional Officers. Then the ex-Minister, Thirumathi Sathyavani Muthu had wanted the originally posted District Welfare Officers to be re-posted as District Welfare Officers. The bone of contention of the ex-Minister, Thirumathi Sathyavani Muthu was, what was the age when they were originally posted as District Welfare Officers. The contention of the Hon. Minister, Thiru Madhavan is, what was the age when they were posted. Therefore, there is a very valid point in what Thirumathi Sathyavani Muthu has stated and there is also some substance in what the Hon. Chief Minister has stated. So, this entire controversy should be set at rest in the light of the discussion on the matter and the suggestion of the ex-Minister is that young persons should be posted and old persons should not be posted as before. I hope hereafter postings could be made in the light of her suggestion.

திருமதி த. ந. அனந்தநாயகி: அரிசன நல அதிகாரியாகப் பணியாற்றுகிறவர்கள்—இது சமூக நலப் பணியாதலால், ஃபீல்டு வொர்க்குக்கு ஏற்ற உற்சாகமுடைய இளைஞர்கள் இருக்க வேண்டும் என்று அம்மையார் அவர்கள் சொல்கிறார்கள். வயதானவர்களுக்கு செக்ரடேரியட் வொர்க்காக இருந்தால் சரி



—ஃபீல்டு வொர்க் என்றால் சலிப்பு இருக்கத்தான் செய்யும். படிப்படியாக ஆர்.டி.ஓ. க்களாக வருகிறவர்களைத்தான் போட முடியும் என்றால் வயதானவர்களாகத்தான் இருப்பார்கள். வாழ்க்கையில் சலிப்படைந்தவர்களாகத்தான் இருப்பார்கள். டைரக்ட் ரெக்ரூட்டுகளாகிய ஆர்.டி.ஓ. க்களையாவது இத்துறைக்குப் போடலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இந்த ஃபைல் ஆரம்பமானதே திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுடைய கடிதத்தோடுதான் ஆரம்பமாகிறது. ஃபைலே இதிலேதான் ஆரம்பமாகியிருக்கிறது. ஏதாவது ஒரு குறிப்பிட்ட கோரிக்கை அல்லது நடவடிக்கையிலே தான் ஃபைல் ஆரம்பமாகும். கோரிக்கை யாராவது கொடுத்தால் கூட, அதைப் பரிசீலியுங்கள் என்று எழுதப்பட்டு ஒரு ஃபைல் ஆரம்பமாகிவிடும்.

திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் ரெவினியூ மினிஸ்டருக்கு எழுதிய கடிதத்தில்தான் இந்த ஃபைலே ஆரம்பம் ஆகியிருக்கிறது. அந்தக் கடிதத்தில் அவர்கள் 4 பேரைக் குறிப்பிட்டு போஸ்டிங் போடுங்கள் என்று குறிப்பிட்டுள்ளார்கள். போஸ்டிங் என்று சொன்னால் ஒரு இடத்திலேயிருந்து மாற்றித்தான் போட வேண்டும். திடீரென்று வானத்திலேயிருந்து யாரும் குதித்து விடமாட்டார்கள். அவர்கள் கொடுத்ததன் பேரில் தான் ஃபைலே ஆரம்பமாகியிருக்கிறது. அவர்கள் பதவி விலகிய பிறகு, பதவி விலக்கம் செய்யப்பட்ட பிறகு, பத்திரிகையாளர்களிடம், மாவட்ட நல அதிகாரிகளாக வயதானவர்களை அரசு போடுகிறது என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்குத்தான் சட்டசபையிலே பதில் அளிக்கும்போது நான் குறிப்பிட்டேன், நீங்கள் தான் ஃபைலிலே அப்படி சொன்னீர்கள் என்று. அவர்கள் அதனை அறைகூவலாக எடுத்துக்கொண்டு, நான் அப்படிச் சொல்லவில்லை, இருந்தால் ராஜிநாமா செய்கிறேன் என்று சொன்னார்கள். நான் ஃபைலிலே இருக்கிறது என்று குறிப்பிட்டேன். அவர்கள் ஆதாரம் என்றார்கள். நான் ஹாண்டே அவர்களும், அம்மையார் அனந்தநாயகி அவர்களும்—அந்த விவாதத்திலே அவர்கள் கலந்து கொண்ட காரணத்தால்—திருமதி சத்தியவாணிமுத்து அவர்களும் ஃபைலைப் பார்க்கலாம் என்று குறிப்பிட்டேன். அதன்படி, அந்த ஃபைல் சட்டப் பேரவைத் தலைவரிடத்திலே கொடுக்கப்பட்டு, நேற்றையதினம் ஹாண்டே அவர்களும், அனந்தநாயகி

அவர்களும், திருமதி சத்தியவாணிமுத்து அவர்களும் பேரவைத் தலைவர் அறையில் ஃபைலைப் பார்த்திருக்கிறார்கள். சட்ட அமைச்சரும் கூட இருந்திருக்கிறார்கள். ஆகவே, அந்த ஃபைல் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களுடைய கடிதத்தால் ஆரம்பிக்கப்பட்டது.

**திருமதி சத்தியவாணிமுத்து :** பிரச்னை எழுந்தது, இந்த ஃபைலைப் பற்றியல்ல. பிரச்னை எழுந்தது, நான் வயதானவர்களை டிஸ்டிரிக்ட் வெல்ஃபேர் ஆபிஸர்களாகப் போட்டார்கள் என்று சொன்னதுதான். அம்மையார் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களே போட்டுக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று முதல்வர் அவர்கள் சொல்கிறார்கள். நான் சொன்ன குற்றச்சாட்டுக்கு உரிய ஆதாரமான ஃபைல் அதுவல்ல. அவர் காட்டுகிற ஃபைல், ஏற்கனவே நான் சொன்னதை விட்டு விட்டு, புதிதாக ஏதோ ஒன்றை எடுத்து, ஏதோ ஒன்றைக் காட்டுகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் சொல்வதெல்லாம், நேற்று அறையிலே அந்த ஃபைலைக் காட்டியபொழுது, இந்த ஃபைலே இல்லை, நான் கேட்ட ஃபைல் வேறு என்று சொல்லவேயில்லை நீங்கள்.

**திருமதி சத்தியவாணிமுத்து :** நான் சொல்வதெல்லாம், நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் இந்த விவாதமே வரவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் இந்த ஃபைலைக் கொண்டு வந்தார்கள். எதற்காகக் கொண்டு வந்தார்கள்? நான் இங்கு பேசினேனா? அவர்கள் எதற்காக அந்த ஃபைலைக் கொண்டு வந்தார்கள்? நான் இந்த மன்றத்திலே பேசவில்லை. நான் எங்கே பேசினேனோ? இந்த மன்றத்திலே, அவர்களாகவே இழுத்துக் கொண்டு வந்து அந்த வாதத்தை இங்கே வைத்தார்கள்.

முதலமைச்சர் அவர்களே அந்த வாதத்தினை வைக்கும்போது என்ன சொன்னார்? நான்தான் அப்படிப்பட்ட வயதானவர்களைக் கேட்டேன், போட்டார்கள் என்று சொன்னார். அந்த நலத்துறை அதிகாரிகளை போஸ்டிங் போடுகிற அதிகாரம் எனக்கு கிடையாது. ஏற்கனவே இருந்தவர்களை மறுபடியும் வேண்டுமென்று கேட்டேனே தவிர, இந்த வேலைக்கு இந்தத் தகுதி என்று நிர்ணயிப்பது என்னுடைய கடமை அல்ல, நான் அல்ல. அதைத்தான் இப்பொழுதும் நான் வலியுறுத்துகிறேன்.



கேட்காத அந்த ஃபைலைக் காட்டியதைத் தவிர, இதிலே போட்டிருப்பது எனக்கு ஆதாரமாகத்தான் இருக்கிறதே தவிர, அந்த ஃபைல் எனக்கு விரோதமாக இல்லை. அதைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். முதல்வர் குழப்பிக் கொண்டே வருகிறார்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவர் அவர்களே, இந்த ஃபைலைப்பற்றி இந்தச் சபையிலே விவாதிப்பதே தவறு. அதைப் பற்றி மீண்டும் மீண்டும் பேசி, எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்களுக்கு அரசின் சார்பில் கூறுகிறவை, அம்மையார் கூறுகிறவை இரண்டு தரப்பிலும் இங்கே நடக்கிற விவாதத்திலிருந்து ஒன்றுமே புரியவில்லை உள்ளபடி. ஆகவே, இத்தோடு நிறுத்திக்கொண்டு, அடுத்து, அஜண்டாவிலே இருக்கின்ற அலுவலுக்குச் செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஃபைலை இங்கே காட்ட வேண்டும், படிக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது காட்டப்பட்டது, மாண்புமிகு அம்மையார் அவர்களும் கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதைப் போல், டாக்டர் ஹாண்டே அவர்களும் பார்த்தார்கள். திருமதி அனந்தநாயகி அவர்கள் இல்லாத காரணத்தால் பார்க்கவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்களோ, அவை அந்த பைலிலே இருக்கிறது. அதையும் இங்கே சொல்லியாகிவிட்டது. ஆக, நான் சொன்ன தீர்ப்புப்படி இந்த நிகழ்ச்சி முடிந்துவிடுகிறது. அடுத்து, மின்சார வாரியத்தின்மீது விவாதம் தொடர்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I want your ruling, Sir. Hon. Ministers take an oath of secrecy and can these subjects be discussed on the floor of the House? I would like to raise this point and have your ruling on the same.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அதைத்தான் சொல்கிறேன். அந்த சீக்ரஸீ காப்பாற்றப்பட வேண்டும். அது காப்பாற்றப்படாத காரணத்தால்தான் அரசு சில நடவடிக்கைகளை எடுக்கிறது. அது எங்கே இருக்கிறது என்று கேட்டபொழுது, ஃபைலில் இருக்கிறது என்று சொன்னேன். வேண்டுமானால் ஹாண்டே அவர்களும் அனந்தநாயகி அவர்களும் பார்க்கலாம் என்று சொன்னேன். வேண்டுமானால் பார்க்கலாம். அதைத்தான் ஜாக்கிரதையாகச் சொன்னேன்.

7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974—75 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான விவாதம் (தொடர்ச்சி)

திரு. வை. பாலசுந்தரம்: மின்சார வாரியத்தைப் பற்றி தொடர்ந்து பேசுகிற நேரத்தில், நம்முடைய நாட்டில் பருவ மழை பொய்த்துப் போனால்கூட, நமக்குக் கிடைக்கின்ற குறைவான மின்சாரத்தை வைத்துக் கொண்டு எப்படிப்பட்ட நிறைவான காரியங்களை இந்த அரசு செய்து வருகிறது என்பதை நல்ல உள்ளம் படைத்தவர்கள் நெஞ்சார வரவேற்பார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், தமிழ்நாட்டிலே, மின்சார வாரியம், நான் கூறியதைப் போல், இந்தக் குறைவான மின்சாரத்தில், நிறைவான பணியின்மூலம் ஆற்றியிருக்கிற பணிகளை எண்ணிப் பார்க்கும்போது, தமிழ்நாட்டிலேயுள்ள ஏறத்தாழ 62,487 கிராமங்களில், 61,138 கிராமங்களுக்கு மின் ஒளி வழங்கப்பட்டிருப்பதை யாரும் மறுக்க மாட்டார்கள், மறைக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். அதேபோல், இந்த நாட்டின் அடித்தளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற, சமுதாயத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிற அரிசனக் குடியிருப்புகளில் மொத்தமுள்ள 24,799 அரிசனக் குடியிருப்புகளில், 23,800 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்து தரப்பட்டு, மின் விளக்குகள் ஒளி விளக்குகளாக இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, உள்ளபடியே அதைப் பாராட்டி வரவேற்புக் கூறுகின்ற அளவிலேதான் இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்கள் இருக்கிறார்கள் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு நான் இதன் மூலமாக இந்த நேரத்தில் கூற விரும்புகிறேன்.

இவ்வளவு சிறப்பான பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், மின்சார வாரியம் நல்ல பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நம்முடைய தமிழக அரசு கண்ணற்றவர்களுக்கெல்லாம், கண்ணற்ற கபோதிகளுக்கெல்லாம், கண்ணொளி வழங்கியது. அதேபோல், நாட்டிலே மின்னொளி வழங்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு கண்ணொளி பெற்றவர்கள் இந்த மின்னொளியைப் பாராட்டிக் கொண்டிருக்கிற வகையிலே வீதிகள் தோறும் மின் விளக்குகள் பிரகாசித்துக் கொண்டிருப்பதை யாரும் காணாமலிருக்க முடியாது. ஆனால் இந்த மின் விளக்குகளைக் காணச் சகிக்காதவர்கள் சிலர், இதைக்



காழ்ப்புணர்ச்சியோடு குறை கூறிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை எண்ணும்போது, அப்படி அவர்களுடைய எண்ணம் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லையென்று நான் இந்த அரசுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு ஆரம்பத்தில் என்று கருதுகிறேன், மதிப்பிற்குரிய மத்திய அமைச்சர் திரு. சவான் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பொழுது, மின்சாரத் துறையிலே தமிழகம் பெற்றிருக்கிற சிறப்பினைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது What a beautiful illumination என்று குறிப்பிட்டார். தமிழ்நாட்டின்மேல் விமானத்திலே செல்லும்போது, ஒளியேற்றி வைத்திருப்பது, ஒரு பாங்கான, அழகான காட்சியாக நம்முடைய கண்ணுக்குப் பூங்காவாகத் தெரிகிறது என்று மதிப்பிற்குரிய சவான் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். மத்தியிலேயிருந்து வருகின்ற அமைச்சருக்கு இங்கிருக்கிற இலட்சக்கணக்கான மின்சாரக் கம்பங்களிலே எரிகின்ற மின்விளக்குகள் ஒளி விளக்குகளாகத் தெரிந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இங்கிருக்கிற எதிர்க்கட்சிக்காரர்களுக்குத் தெரியவில்லை. திருவாளர் சவான் அவர்கள் சொல்லியது, மல்லிகையை அள்ளிக் கொட்டியதுபோல் இருக்கிறது என்று சொல்லியதை எண்ணும்போது உள்ளத்தே நிறைவு மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலேயே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

குறைவான மின்சார உற்பத்தி என்று குறிப்பிட்டேன். அந்தக் குறைவான மின்சார உற்பத்திமூலம், தமிழக அரசு நிறைவு தருகிறது என்று சொல்லும்போது, மின்சாரத்தை அதிக அளவில் உற்பத்திசெய்கிற கர்நாடக மாநிலத்திலேகூட தொடர்ந்து 30 சதவிகிதம் மின்சார கட் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. அதுவும் இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற பல மாநிலங்களிலே அதிக அளவில் மின்சார வெட்டு இருக்கிறது. அரியானாவிலே 60 சத விகிதம் மின்சார வெட்டும், பஞ்சாபிலே 60 சத விகிதம் மின்சார வெட்டும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது, மறைக்க முடியாது. உத்திரப் பிரதேசத்தில் 40 சதவிதம் மின்சார வெட்டு இருப்பதை யாரும் மறுக்கமுடியாது, ஒப்புக்கொள்ளத்தான்

[திரு. வை பாலசுந்தரம்] [1974 ஆகஸ்ட் 24

வேண்டும். மேற்கு வங்கத்திலே போர்க்கால இருட்டடிப்பு போன்று சில நேரங்களில் எரிவதும், சில நேரங்களில் விளக்குகள் அணை வதும் போன்ற சூழ்நிலை இருக்கின்ற நிலையை நாம் பார்க்கிறோம்.

மற்ற மாநிலங்களில் இருக்கின்ற நிலைமைகளையெல்லாம் பார்க் கிறபோது நம்முடைய தமிழ்நாட்டிலேதான் சிறப்பான முறையிலே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதை தமிழக அரசின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்கள் எடுத்துக் காட்டி வருகிறார்கள் என்பதை நான் பெரு மகிழ்ச்சி யோடு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட் டிருக்கிறேன். ஆனால் இப்படிச் செய்யும்போது இந்த அறிக் கையிலே அவர்கள் ஒரு அபாய அறிவிப்பையும் அறிவித்திருக்கி றார்கள். வருகிற ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தில் 1978—79-ஆம் ஆண்டிலே இந்த நாட்டிற்குத் தேவையான மின் சக்தி 15,490 மில்லியன் யூனிட்டுகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் அதே ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி முடிவிலே 1979-ஆம் ஆண்டிலே பற்றாக்குறை இருக்கப்போவது ஏறத்தாழ 5,183 மில்லியன் யூனிட்டுகள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை ஒரு அபாய அறிவிப்பாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இந்தப் பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? இந்தப் பற்றாக்குறையை சரிக்கட்ட நம்முடைய தமிழக அரசு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக்கொள்ளவில்லை என்று சொல்ல முடியுமா? என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அவற்றையெல்லாம் எடுத்துக் கொண்டிருக்கிறது நம்முடைய அரசு.

ஆனால் இதில் புறக்கணிக்கிற முறையிலே நடந்துகொண்டு வருவது யார் தெரியுமா? வழக்கமாகச் சொல்வதைப்போன்று மத்திய அரசுதான் காரணம் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. நெய்வேலியிலே இரண்டாவது மின்நிலையம் உற்பத்தி தொடங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், அதற்கான சாத்தியக் கூறுகளை உருவாக்கவேண்டுமென்றும் நாம் கேட்டோம், அதே போன்று கல்பாக்கத்திலே கூடுதலான திட்டங்களை விரைவிலே செயல்படச்செய்யவேண்டுமென்று நாம் கேட்டோம். மத்திய அரசு புறக்கணித்துக்கொண்டு இருக்கிறது, இதனால் நம்முடைய



1974 ஆகஸ்ட் 24] [திரு. வை. பாலசுந்தரம்]

தமிழகத்தில் எதிர்காலத்தில் நல்ல திட்டங்கள் இல்லாமல் போய் விடக்கூடும் என்ற அபாய அறிவிப்பைத் தான் எதிரொலிக்கின்ற வகையிலே நம்முடைய சட்ட மன்றத்திலே அவர்கள் வைத்து இருக்கிறார்கள் என்பதை நான் எதிரொலிக்கக் கடமைப் பட்டவனாக இருக்கிறேன்.

நெய்வேலியில் இரண்டாவது மின்நிலையம் தேவை என்று நாம் சொன்னோம். அது மட்டுமல்ல, சென்ற ஆண்டு என்று கருதுகி றேன், இந்த மாமன்றத்திலேயே அத்தனை கட்சிக்காரர்களும் சேர்ந்து ஏகமனதாக அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி டெல்லிக்கு அனுப்பினோம். நீங்கள் இதை ஒத்துக்கொள்ளவில்லை யென்றால் எதிர்காலத்திலே தமிழகமே இருண்டுவிடும் என்று எச்சரித்து நாம் அனுப்பினோம். அனுப்பி வைத்த தீர்மானம் என்ன ஆனது என்று தெரியவில்லை. அது செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருக்கிறது என்று எண்ணிப் பார்க்கிற போது எதிர்க்கட்சிக்காரர்கள் பற்றாக்குறை பற்றாக்குறை என்று பதறுகிறார்களே, பற்றாக்குறை பற்றாக்குறை என்று போர்க் குரல் எழுப்புகிறார்களே, இங்கே எழுப்பின போர்க் குரலை ஏன் டெல்லியை நோக்கி அவர்கள் எழுப்பவில்லை, டெல்லியைக் கேட்க அவர்களுக்கு அச்சமா, நாணமா என்று கேட்க விரும்புகிறேன். டாக்டர் ஹாண்டே போன்ற அறிவாளிகள்கூட டெல்லியைத் தட்டிக்கேட்க மறுக்கிறார்கள், இங்கே போர்க் குரல் எழுப்புகிறவர்கள் அங்கே போர்க் குரல் எழுப்ப மறுக்கிறார்கள் என்பதை நினைக்கும்போது உண்மையிலேயே வருந்தக்கூடிய சூழ்நிலைதான் இருக்கிறது. (குறுக்கீடு) எந்தவிதமான குறுக்கீடோ அல்லது திருத்தமோ இந்த நேரத்திலே கேட்டுப் பயனில்லை என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இது ஒரு நாட்டுப் பிரச்னை, ஒரு நாட்டினுடைய எதிர்கால பிரச்னையாகும், இது ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தோடு, இந்த அரசோடு தீர்ந்துவிடுகிற பிரச்சனையல்ல. ஏதோ திரு. ஓ. பி. இராமன் அவர்களோடு தீர்ந்துவிடுகிற பிரச்னையல்ல, டாக்டர் கலைஞர் அவர்களோடு தீர்ந்துவிடுகிற பிரச்னையல்ல. இந்த நாட்டின் பிரச்னை என்பதாலே எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் டெல்லிக்கு குரல் கொடுக்க வேண்டும். அப்படி டெல்லி உத்திர வாதம் கொடுக்கவில்லையென்றால், நெய்வேலியில் இரண்டாவது மின்

[திரு. வை பாலசுந்தரம்] [1974 ஆகஸ்ட் 24

நிலையத்தைத் தொடங்க சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தவில்லையென்றால், கல்பாக்கத்திலே மின் உற்பத்திக்கான சாத்தியக் கூறுகளை தொடங்கவில்லையென்றால் எதிர்கால தமிழகம் இருளிலே மூழ்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, டெல்லி அரசு ஒரு கண்ணிலே சுண்ணாம்பு, ஒரு கண்ணிலே வெண்ணெய் என்ற நிலைமையை விட்டுவிட்டு மாற்றாந்தாய் மனப் பான்மையை விட்டுவிட்டு கருணை காட்ட வேண்டுமென்று தங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு விவாதிக்கப்படுகிற பிரச்னை தமிழ்நாட்டிலே இருக்கிற விவசாயிகள் பாதுகாக்கப்பட்டால்தான் நாடு எதிர் காலத்திலே சுபிட்சமாக இருக்கும் என்று தீர்மானிக்கிற பிரச்னையாகும். அதிகமாக உற்பத்தி செய்கிற நாடுகள்கூட மின்சாரத் திலே பஞ்சத்தனம் காட்டுகின்ற நிலையிலே தமிழகம் 7 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறது என்றால் எண்ணிப் பார்க்க வேண்டும். 7 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டதால்தான் இன்றைக்கு 30 சதவீதம் வெட்டு வந்திருக்கிறது, ஒரு வேளை 7 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புகள் என்று கொடுக்காமல் 3 லட்சம் பம்பு செட்டு களுக்குக் கொடுத்திருந்தால் அல்லது 4 லட்சம் பம்பு செட்டு களுக்கு மின் இணைப்பு என்று கொடுத்திருந்தால் இன்றைக்கு 30 சத வீதம் வெட்டு கூட வந்திருக்காது. ஆனால் நம்முடைய அரசு விரைவில் நாட்டிலே பசுமைப் புரட்சியை உண்டாக்க வேண்டு மென்ற முறையிலே விவசாயிகள் கேட்கும்போது எல்லாம் மின் இணைப்புகள் கொடுத்திருக்கிறது. இன்றைக்கு இந்தியா பூராவுக்கும் மின் இணைப்புகள் 24 லட்சம் கொடுக்கப்பட்டிருக் கின்றன என்றால் தமிழகத்திலே கிட்டத்தட்ட அதில் மூன்றில் ஒரு பங்கு 7 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்றால் தங்கள் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். எதிர்க்கட்சிக்காரர்கள் எந்த வகையிலே மற்ற மாநிலங்களைவிட தமிழகம் குறைந்து இருக்கிறது மின்சாரத்தில் என்பதைக் காட்ட முடியுமா?

எந்த வகையில் மற்ற மாநிலங்களைவிடப் பின்தங்கியிருக்கிறது? கம்பிகள் வேண்டுமா, விளக்குகள் வேண்டுமா எந்த வகையிலே பின் தங்கியிருக்கிறது? பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு



1974 ஆகஸ்ட் 24] [திரு. வை. பாலசுந்தரம்]

வேண்டுமா எந்த வகையிலே பின்தங்கியிருக்கிறது? தனியார் களுக்கு தொழிற்சாலைகளுக்கு மின்சாரம் வேண்டுமா எந்த வகையிலே பின்தங்கியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும் அவர்கள் என்பதற்காகத்தான் இதனை நான் சொல்கிறேன். இந்தியத் துணைக் கண்டத்திலேயே அத்தனை மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் முன்னேறியிருக்கிறது, முன்னே நடை போடுகிறது என்பதைச் சொல்வதற்கு நான் இந்த நேரத்திலே கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சார விநியோகத்தைப் பொறுத்தவரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுடைய தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது இந்த அரசு. நம்முடைய எதிர்க்கட்சிக்காரர்கள் சொன்னார்கள், ஆளுங்கட்சியைச் சேர்ந்த நம்முடைய உறுப்பினர் திரு. ராசகோபால் அவர்கள் சொன்னதைப் போல் மின்சாரத் திருட்டு ஏராளமாக நம்முடைய நாட்டிலே இருக்கிறது. அதனால்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் நாட்டிலே இருக்கின்றன.

என்னுடைய தொகுதியிலேகூட சில மாதங்களுக்கு முன்னாலே ஒரு நிகழ்ச்சி நடந்தது. விஜயராகவ ரெட்டியார் என்ற காங்கிரஸ் காரர் மின்சாரம் திருடியதாக, லட்சக்கணக்கான ரூபாய்கள் பெறு மானமுள்ள மின்சாரத்தைத் திருடினார் என்று கைது செய்யப் பட்டிருக்கிறார். ஆனால் இதுவரையிலும் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால் அவர் காங்கிரஸ்காரர் என்பதால் நம்முடைய அரசு சலுகை வழங்கியிருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

மின்சாரம் திருடுவது சாதாரணத் திருடு அல்ல, தேசத் துரோகமான காரியம், தேச விரோதமான காரியமாகும். எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும் சரி, காங்கிரஸ்காரராக இருந்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தவராக இருந்தாலும் சரி கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்திலேயும் பலர் இப்படி பெரிய மனிதர்கள் என்ற போர்வையிலே பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள மின்சாரத்தைத் திருடிக் கொண்டிருக்கிறார்கள்.

எதிர்க்கட்சிக்காரர்கள் வீதிகளிலே விளக்குகள் எரியவில்லை என்று சொல்கிறார்கள். இப்படி மின்சாரத்தை பெரிய மனிதர்களின் போர்வையிலே பலர் திருடி விட்டால் தெரு விளக்குகள் எப்படி எரியும்? எதிர்க் கட்சிக்காரர்கள் இதைச் சொல்வதற்கும் துணிவாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட காரணங்களால் மின்சாரம் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போகக்கூடிய நிலைமை ஏற்படும். நீங்கள் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதன் மூலமாகத்தான் நல்ல பலனைக் காண முடியும்.

(முற்பகல் 11.00)

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின் இணைப்பு ஏறத்தாழ 1½ இலட்சம் கேட்டு நம்முடைய அரசை அனுமதி கேட்டிருக்கிறார்கள். அவர்களை அனுமதித்தால் விவசாயத்தைப் பெருக்குவதற்கான சூழ்நிலையை உருவாக்குவார்கள் என்று தங்கள் மூலமாக இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மின் இணைப்பு தருவதில் தயக்கம் காட்ட வேண்டாம், பெரிய தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பு தருவதைக் காட்டிலும், பெரிய பெரிய தொழிற்கூடங்களுக்கு மின் இணைப்பு தருவதைக் காட்டிலும், சினிமா போன்ற ஆடம்பர நிகழ்ச்சிகளுக்கு மின்சாரம் தருவதைக் காட்டிலும், ஏர் கண்டிஷன், குளிர் சாதனங்கள் ஆகியவைகளைப் புகுத்துவதற்கான மின்சாரத்தைத் தருவதைக் காட்டிலும் அவைகளுக்கெல்லாம் நிறுத்தி வைத்து, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மின்சாரம் கொடுப்பதற்கு அரசு முதலிடம் அளிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. வீ. சா. இளஞ்செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஓரிரு கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன்.

எனக்கு முன்னால் பேசிய ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள், குறைகளையெல்லாம் எங்களைப் பார்த்தே சொல்கிறீர்களே, டெல்லியைப் பார்த்து ஏன் சொல்லவில்லை என்று உணர்ச்சியோடு எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன், உங்களிடத்திலே





இன்னின்னதைச் செய்யுங்கள் என்று தகுந்த நேரத்தில் எடுத்துச் சொல்லும் பொறுப்பு எதிர்க் கட்சிகளைச் சார்ந்தது. அதை நீங்கள் வகைப்படுத்திக் கொண்டு, இன்னின்னது இந்த நாட்டிற்குத் தேவை, இன்னின்னது தர வேண்டுமென்று முறைப்படுத்திக் கொண்டு மத்திய சர்க்காரோடு போராடிப் பெற வேண்டிய பொறுப்பில் ஆளுங்கட்சி இருக்கிறது. உங்களைப் பார்த்துச் சொல்ல வேண்டிய பொறுப்பில் எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் இருக்கிறார்கள். நாங்கள் சாட்டுகின்ற குற்றச்சாட்டெல்லாம் போராடிப் பெற வேண்டியதைப் பெறாமல் இருக்கிறீர்களே, பெற வேண்டுமென்ற தன்மை இல்லாமல் இருக்கிறீர்களே என்ற குற்றச் சாட்டைத்தான் சொல்கிறோம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவரவர்களே, நான் குறிப்பிட்டுச் சொன்னது, பொதுவான பிரச்னைகளில் ஆளுங் கட்சியோடு எதிர்க் கட்சிகள் ஒத்துழைத்தால்தான் நன்மைகளைப் பெற முடியும் என்ற நோக்கத்தோடு சொன்னேன். ஆனால் எதிர்க்கட்சியிலே இருக்கக் கூடியவர்கள் எந்தப் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும் அதை திராவிட முன்னேற்றக் கழகம் செய்கிறது என்பதற்காக எதிர்ப்பு தெரிவிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எதிர்க்கட்சிகள், அதிலும் குறிப்பாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கேட்கிறேன், எந்தப் பிரச்னையிலாவது, நாட்டுக்குத் தேவையான பிரச்னைகளில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங் கட்சியோடு ஒத்துழைத்திருக்கிறார்களா என்பதை விளக்கமாகச் சொல்லட்டும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, நமக்கு வாய்ப்புக் கிடைக்கும் நேரத்தில், எந்தப் பிரச்னையானாலும், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் இரண்டு நாட்களுக்கு முன்னால் மதுவிலக்கு பிரச்னை வந்தது, அந்த நேரத்தில் முதலமைச்சர் சொன்னதை ஓரளவிற்கு நாங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறோம். முதலமைச்சர்கூடப் பாராட்டியிருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சியாக இருக்கும் கட்சி ஆளுங் கட்சி தவறு செய்தால் சுட்டிக்காட்ட வேண்டியது கடமை. திருவள்ளுவரே சொன்னார், இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இல்லாவிட்டாலும் கெட்டு விடுவான் என்று சொல்லி இருக்கிறார். அதைப்போல இடித்துப் பேசவில்லை என்றால் கெட்டு விடுவார்கள். ஆளுங் கட்சியினுடைய நன்மைக்காக எதிர்க்கட்சி

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 ஆகஸ்ட் 24

யிலே இருந்து சிறந்த முறையில் பணியாற்றி நல்லவகையிலே கருத்துக்களைச் சொல்லும் நேரத்தில் அதைப் பாராட்ட வேண்டும் அல்லவா? அதைக்கூடச் செய்ய மாட்டேன் என்கிறீர்களே?

**திரு. வி. சா. இளஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் தந்திருக்கின்ற இந்த நேரத்தில் அவர்கள் கொடுக்கின்ற விவரம் 1969-இல் தமிழக முதலமைச்சரவர்கள் அறிவித்ததற்கிணங்க ஒட்டு மொத்தமாக தமிழகம் இன்றைக்கு மின்னொளி பெற்று விளங்குகிறது என்ற விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

நான் பணிவோடு அமைச்சரவர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன், இங்குள்ள சட்டமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலோர் கிராமங்களிலே இருப்பவர்கள். அங்கு சென்று பார்த்தால் பல்வேறு கிராமங்கள் இன்னும் மின்சார வசதி பெறாமல் இருக்கின்றன. அப்படி மின்சார வசதி பெறும் கிராமங்களில் கூட ஒன்றிரண்டு கிராமங்களில் இரண்டு மூன்று நாட்களுக்கு விளக்குகள் எரிந்து, பிறகு எரியாமல் போய் விடுகின்றன. ஆனால் பிறகு மின்சார இணைப்பு கொடுத்ததற்காக மின்சார இணைப்பு பெற்றோம் என்ற பெயருக்காக அங்குள்ள பொது மக்களிடத்தில் இருந்து பஞ்சாயத்து வரிகள் போடப்படுகிறது. ஆகவே, விளக்குகள் எரியாமல் வருவாயை வாரியம் தேடிக் கொள்வதற்காக அப்படிப்பட்ட ஒரு இணைப்பைக் கொடுத்துவிட்டு வரி பெறப்படுகிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது தான் கிராமங்களிலுள்ள உண்மை. எந்தக் கிராமத்திற்குச் சென்று பார்த்தாலும் மின்னொளி பரிபூரணமாக வந்துவிட்டது என்று சொல்ல முடியாத நிலை இருக்கிறது. உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கே தவறு. ஒரு ஊராட்சி மன்றம் என்று எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 10 கிராமங்கள் இருக்கின்றன. ஏதேனும் ஒரு கிராமத்தில் 3 விளக்குகளை எரிய விட்டுவிட்டு அந்த ஊராட்சி மன்றமே ஒட்டு மொத்தமாக மின்சாரம் பெற்றுவிட்டதாகக் கணக்கு தந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசும்பொழுது பல்வேறு கிராமங்களுக்குப் போடவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூறினார்கள். 98 சதவிகிதம்



1974 ஆகஸ்ட் 24] [திரு. ஓ. பி. இராமன்]

போட்டிருப்பதாகக் கணக்கு சொல்லியிருக்கிறேன். ஒரு கிராமத்திற்குப் போட்டுவிட்டு ஹேம்லெட்டுகளுக்கு, இணைப்புக் கிராமங்களுக்குப் போடவில்லை என்று சொல்கிறார்கள். நான் சென்ற ஆண்டு பேசும்பொழுதே சொன்னேன். புத்தகம் கூட போட்டிருக்கிறேன், அதை வெளியே பார்த்துவிட்டு எந்தெந்த ஊருக்குக் கொடுக்காமல் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லட்டும். இந்த ஆண்டு கூட கணக்கு வைக்கத் தயாராக இருக்கிறேன். போட்டு முடித்த கிராமங்களின் கணக்கைக் கொடுத்து விடுகிறேன். அவர்களுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஒரு தாலுக்கா, மணப்பாறை முழுவதும் மின்சாரம் போட்டு அவர்களே கூட விழாவில் பாராட்டினார்கள். எங்கள் தாலுக்காவிற்கு முழுவதும் போட்டுவிட்டார்கள் என்று பாராட்டிச் சொன்னார்கள். ஆகவே, மின்சாரம் மணப்பாறை பகுதியில் முழுவதும் இல்லை என்று சொல்வது எப்படிப் பொருத்தம் என்று தெரியவில்லை.

**திரு. வீ. சா. இளஞ்செழியன் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு போடாமல் இருக்கும் கிராமங்களின் கணக்கைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். மணப்பாறை தாலுக்காவில் ஒரு பகுதிதான் என்னுடைய தொகுதி. ஒரு வேகத்திலே மாவட்ட நிறைவு விழாவைக் கொண்டாடுகிறோம். அமைச்சர் அவர்களுக்கு பணிவோடு இன்னும்கூடச் சொல்ல விரும்புகிறேன், இன்றையதினம் பெரிய அளவில் இந்த மின்சார வாரியம் பொருளாதார நெருக்கடியில் இருக்கிறது. இன்றைய தினம் மின்சார வாரியம் இணைப்புகளைக் கொடுக்கும் பொழுது ஆங்காங்கு போடப்பட்ட போஸ்ட்டுகள், ஆங்காங்கு போடப்பட்ட கம்பிகள், ஆங்காங்கு போடப்பட்ட சிமெண்ட் ஆகியவைகள் திருப்பி எடுக்கப்படுவதே இல்லை. இந்த அளவிற்குக் கோளாறாக நடக்கிறது. பல கிராமங்களில் இணைப்பு கொடுக்கும்பொழுது 'போல்ட்' அடிக்கப்படுகிறது, 30 மூட்டை சிமெண்ட் பூசப்படுகிறது என்றால் அவைகள் அங்கேயே பயன்படுத்தப்படாமல் கிடக்கிறது. அந்த வகையில் மின்சார வாரியம் அமலாக்கிக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்களை நிறுத்த வேண்டும்.

இன்னொன்று கூற விரும்புகிறேன். இங்கே பேசும்பொழுது சொன்னார்கள். 7 இலட்சம் மின்விசை ஏற்றங்களுக்கு மின்சாரம் கொடுத்ததால்தான் இந்த மின்சார வெட்டு வந்தது; ஆகவே, அதைக் குறைத்து விட வேண்டுமென்று சொன்னார்கள். நாம் எப்படிப்பட்ட அவல நிலையில் தத்தளித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை அறிவோம். மிகப்பெரிய உணவு நெருக்கடியில் நாம் இருக்கிறோம். இந்த நேரத்தில் அப்படிப்பட்ட மின்விசை ஏற்றங்களுக்கு இணைப்பு கொடுப்பதே தவறு என்று ஆளுங் கட்சித் தரப்பிலிருந்து வாதம் வந்தால் உள்ளபடியே நாட்டுமக்கள் அதை நிச்சயமாக மன்னிக்க மாட்டார்கள். இப்பொழுதும் கூட பல நிறுவனங்களிலிருந்து கடன் பெற்று விவசாய மக்கள் மின்சார வாரியத்திலிருந்து இணைப்பு பெற முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். மின் இணைப்பு கொடுத்தாலே பெரிய அளவிற்கு ஏற்பட்டிருக்கும் ஊழல் ஏற்றத்தின் காரணமாக அவர்கள் தவிக்கும் நிலையைக் கிராமங்களில் பார்க்கிறோம். எனவே, பல்வேறு மாவட்டங்களில் காரியங்களெல்லாம் செய்திருந்தாலும் கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் அலட்சியம் காட்டக் கூடாது. எனக்கு முன்னால் பேசிய எங்கள் கட்சியைச் சேர்ந்த பெருமதிப்பிற்குரிய ஹாண்டே அவர்கள் கூட, எவ்வளவு பெரிய தவறு நடைபெறுகிறது என்பதைப்பற்றி நேற்று சொன்னார்கள். அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப் படுகிறதா?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, கிராமங்களில் மின்விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதில் அலட்சியமாக இருக்கிறது என்ற வார்த்தையை அவர்கள் பயன்படுத்தினார்கள். நம்முடைய மாநிலத்தில் 50,000, 60,000 என்ற அளவிற்குக் கொடுத்திருக்கிறோம். ஆனால் அலட்சியம் இல்லாமல், இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலாவது இதை விட அதிகமாகக் கொடுத்திருக்கிறார்களா என்று சொன்னால் நன்றாக இருக்கும், சுவையாகவும் இருக்கும்.

**திரு. வீ. சா. இளஞ்செழியன்:** தலைவரவர்களே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும், இந்த அரசுக்கும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நாம் எவ்வளவு தூரம் போக வேண்டுமென்று எண்ணுகிறோமோ அந்த அளவிற்குப் போக வேண்டுமே





தவிர, எங்கே குறை இருக்கிறது என்று பார்த்து அதைக் காண்பித்து சர்க்காரை ஓட்டிக்கொண்டு போவது அவ்வளவு சரியாகப்படவில்லை. நாம் எவ்வளவு தவறியிருக்கிறோம் என்று எண்ணிப் பார்த்து அதைத் திருத்திக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோமே தவிர அதை விட்டுவிட்டு அதிகத் தவறு செய்தவர்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியல்ல.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, பம்பு செட்டு பிரச்னையில் எவ்வளவு அதிகமாக விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறோம். இனிமேல் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்றால் உற்பத்தியை அதிகமாக்க வேண்டும். உற்பத்தி செய்யும் முறையைப் பொறுத்து எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டு அதற்குத் தகுந்தாற்போல் இங்கே மின்சாரம் கொடுக்கவில்லை என்று சொன்னால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன். அதைவிட்டு விட்டு, கொடுக்கவில்லை என்று சொன்னால் என்ன பொருள்? உற்பத்தி இவ்வளவு இருக்கிறது, ஏன் இவ்வளவு செய்யவில்லை என்று சொன்னால் பதில் சொல்வதற்குக்கூட நன்றாக இருக்கும்.

**திரு. வீ. சா. இளஞ்செழியன்:** அதற்குக் கூடக் குறிப்பிட விரும்புகிறேன். அவ்வளவு கவனக் குறைவாக இருந்திருக்கிறீர்கள். புதுத் திட்டங்கள் தீட்டப்பட்டு எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்றும், எல்லா மின்விசையேற்றங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்றும் முடிவு செய்யப்பட்டது. அதற்கேற்ப நம்முடைய மின் உற்பத்தியை பெருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அந்த வகையில் நம்முடைய காரியங்கள் அமையவில்லை.

நாங்கள் எல்லாம் கிராமப்புற சட்டமன்ற உறுப்பினர்கள். கிராமப் புற விவசாயிகள் எல்லாம் மின்சாரம் வரும், பெரும் பலன் பெறப் போகிறோம் என்று எதிர்பார்த்தார்கள். 1969-ம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றித் தெரிவித்தபோது எந்த அளவுக்கு அவர்கள் அதை வரவேற்றார்களோ, எந்த அளவுக்கு இவர்களிடம் எதிர்பார்த்தார்களோ அது இன்று இல்லை. அப்படி இல்லாத நிலையில் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதிக அளவுக்கு இன்று

[திரு. வீ. சா. இளஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 24

விசையேற்றங்களுக்கு மின்சாரம் கொடுக்க காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கூறி இந்த நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ஏ. சுவாமிதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது ஒரு சில கருத்துக்கள் கூற விழைகிறேன்.

1973-74-ம் ஆண்டைவிட இந்த ஆண்டு அவர்கள் தாக்கல் செய்திருக்கிற அறிக்கையைப் பார்க்கும்போது கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய்க்கு வருவாய் செலவினங்களைத் தந்திருக்கிறார்கள். அப்படிக் கொடுத்துவிட்டு மின்சார உற்பத்தி குறைந்த காரணத்தால் மொத்தத்தில் அதைவிடக் குறைந்த வருவாய்தான் இருக்க முடியும் என்பதற்குப் பல காரணங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் மின்சார வாரியத்தின் அமைப்பு 1967-ம் ஆண்டுக்கு முன்னரேயே நல்ல அடித்தளத்துடன் அமைக்கப்பட்டிருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. மின்சார உற்பத்தியைப் பொறுத்த அளவில் நீர் மின்சார நிலையங்கள் பலவற்றை அமைத்து நல்ல முறையில் முன்னைய அரசு பல திட்டங்களை நிறைவேற்றி வந்தார்கள். அதற்குப் பின்னால் வந்த அரசு முன்னால் இருந்த அரசின் பாதையிலேயே தொடர்ந்து செயல்பட்டிருந்தால் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மின்சாரப் பற்றாக்குறை 30, 40, 60 சதவிகிதம் என்ற வகையில் ஏற்பட்டிருக்க முடியாது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: விளக்கத்திற்காகச் சொல்லுகிறேன். மின்சார உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு அரசு தவறி இந்த நிலைமை வந்ததா? பொதுவாகச் சொல்லுவது நியாயம் அல்ல. எல்லா மாநிலங்களிலும் இன்று மின்வெட்டு இருக்கிறது. நிலைமை என்னவென்று புரிந்து கொண்டு பேசவேண்டும். கொடுத்த திட்டத்தை மின்சார வாரியம் என்ன நிறைவேற்றவில்லை என்ற முறையில் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். மின்சார வெட்டு உள்ள பல மாநிலங்களில் எங்கள் கட்சி ஆட்சியில் இல்லை. தமிழ்நாடு மின்சார வாரியம் செயல்படத் தவறியதன் காரணமாகப் பற்றாக்குறை வந்திருக்கிறது என்று ஆதாரத்தோடு சொல்லுங்கள். பதில் சொல்லுகிறேன்.



1974 ஆகஸ்ட் 24]

* திரு. ஏ. சுவாமிதாஸ்: தமிழ் நாட்டில் எந்த அளவுக்கு நாம் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோமோ அந்த அளவுக்கு மேல் கம்பிகளை நீட்டாமல் இருந்திருந்தால் இந்தப் பற்றாக்குறை வந்திருக்காது. நீர்மின் நிலையங்களை எடுத்துக் கொண்டால்—17 நிறுவனங்கள் இருக்கின்றன—1,224 மெகாவாட் உற்பத்தி செய்யும் திறன் இருக்கிறது. அனல் மின் நிலையங்களை எடுத்துக் கொண்டால் 3 இருக்கின்றன. 1,030 மெகாவாட் உற்பத்தி செய்யும் வாய்ப்பு இருக்கிறது. இடைக்காலத்தில் ஏற்பட்ட பல கோளாறுகள் காரணமாக மின்சார உற்பத்தி குறைந்து விட்டது. எல்லாக் கிராமங்களும் ஒளிமயமாக வேண்டும், எல்லா மின்விசையேற்றங்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று அதிகமாகக் கம்பிகளை நீட்டிவிட்டதால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

மின்சார வாரியம் பல திட்டங்களை மின் உற்பத்திக்காக வைத்திருக்கிறது. அதற்காக மின் வாரியத்தைப் பாராட்டுகிறேன். அந்தத் திட்டங்களை விரைவாக நிறைவேற்றினால் நம்முடைய மின்சாரப் பற்றாக்குறை குறையும். அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கும் அறிக்கையைப் பார்த்தால் 1978-இல் கூட இந்தத் திட்டங்கள் எல்லாம் நிறைவேறிய பிறகு கூட 925 மெகாவாட் அதிகமாக உற்பத்தி செய்தாலும் கூட தேவை பூரணமாகாது என்பதை அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தத் துறை மின் உற்பத்தியிலே இன்னும் தீவிரமாக ஈடுபட வேண்டும். எந்தெந்த வழிகளில் எல்லாம் தமிழ் நாட்டில் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும் என்று ஆய்ந்து பார்க்க வேண்டும்.

முன்பு காங்கிரஸ் அமைச்சரவையிலிருந்து திரு. ஆர். வெங்கட்டராமன் அவர்கள் பல ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள். கடல் அலைகளில் இருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்பது பற்றிப் பரிசீலித்தார்கள். மேனாடுகளில் செய்து கொண்டிருக்கிறார்கள். அதுபற்றி நாம் ஆராய்ச்சி செய்ய வேண்டும். அதே போல் காற்று விசையை வைத்துக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்யலாமா என்றும் யோசிக்க வேண்டும். என்னுடைய மாவட்டத்தில் ஆரல்வாய் மொழி என்ற பகுதியில் காற்று அழுத்தம் அதிகம். அங்கு

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 ஆகஸ்ட் 24

விண்ட்மில்கள் (windmills) சிறு சிறு அளவு அமைத்து பரீட்சார்த்தமாகப் பார்த்து மின் உற்பத்தி செய்ய முடியுமா என்று பரிசிலனை செய்ய வேண்டும்.

நம்முடைய மாநிலத்தில் அதிகமாக நீர் இல்லை. சிறு சிறு அணைகளைக் கட்டி மின் உற்பத்தி செய்ய வேண்டுமென்றாலும் நிதி வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசாங்கம் கருணை காட்டினால் சீக்கிரம் வேலைகளை முடிக்க முடியும் என்று சொல்லுகிறார்கள். அண்டை மாநிலங்களில் நிரம்ப நீர் இருக்கிறது. . . .

## 8. அறிவிப்பு.

### பேரவை மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவையின் 6 (1) விதியின்கீழ் மாற்றுத் தலைவர் பட்டியலுக்குக் கீழ்க்கண்ட உறுப்பினர்களை நான் நியமிக்கிறேன் :—

1. திரு. நா. வீராசாமி.
2. திரு. வி. கே. இராஜாப்பிள்ளை.
3. திரு. ஏ. ஆர். சுப்பையா.
4. திரு. எம். ஏ. லத்தீப்.
5. திரு. ஓ. என். சுந்தரம்.
6. திரு. முனு ஆதி.

## 2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

### (ஆ) ஒரே கூட்டத்தொடரில் இரு மாற்றுத் தலைவர்கள் பட்டியல்களை அறிவித்தல் குறித்து.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். சட்டமன்றம் கூடியபோதே ஒரு பட்டியலை அறிவித்தீர்கள். அதே கூட்டத் தொடரில் மறுபடியும் இன்னொரு பட்டியலை அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன? முன்பு பட்டியலில் அறிவிக்கப்பட்டவர்கள் தகுதியில்லாமல் ஆகிவிட்டார்களா? அல்லது அவர்கள் சட்டமன்றத்திற்கு வருவதே இல்லையா? இப்படிப்பட்ட முறையைக் கையாள என்ன அவசியம் ஏற்பட்டது?



1974 ஆகஸ்ட் 24]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று துணைத் தலைவர் இல்லை. ஏற்கனவே அறிவிக்கப்பட்ட மாற்றுத் தலைவர்கள் பட்டியலில் உள்ள உறுப்பினர்கள் யாரும் இல்லை. அப்போதைக்கப்போது பேரவைத் தலைவர் தேவைப்பட்டால் இந்தப் பட்டியலை அறிவிக்கலாம்.

**திரு. நா. வெ. குருசாமி :** இந்தப் பட்டியல் இன்றைக்கு மட்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்றிலிருந்து தொடர்ந்து இந்தப் பட்டியல்தான்.

## 7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974–75-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீதான விவாதம்—தொடர்ச்சி.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** மின்சார உற்பத்தியைப் பொறுத்த மட்டில் கன்னட மாநிலம், கேரள மாநிலம், தமிழ்நாடு மூன்றும் ஒருங்கிணைந்து ஒரு கூட்டாக நின்று திட்டங்களைத் தீட்டி மின்சார உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்கலாம். நம்முடைய மாநிலம் முன் நின்று அந்தக் காரியத்தைச் செய்யக் கூடாதா என்று தமிழ்நாட்டு அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன்.

சென்ற கூட்டத் தொடரிலேயே லைன் லாசஸ்—கம்பியில் மின்சாரம் செல்லும்போது ஏற்படுகின்ற விரயத்தைப் பற்றிக் குறிப்பிட்டேன். அதற்கு அவர்கள் தற்போது ஒரு பதிலைத் தந்திருக்கிறார்கள். 1968–69-ல் அந்த இழப்பு 17.9 சதவிகிதம்; 1969–70-ல் 17.6 சதவிகிதமாகக் குறைந்து 1970–71-ல் 17.2 ஆகக் குறைந்து, 1971–72-ல் 18.8 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது என்று கணக்கில் கொடுத்திருக்கிறார்கள். ஒரு சதமானம் மின் இழப்பைத் தமிழ் நாட்டில் குறைத்தால் அதனால் வரக்கூடிய லாபம் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கும்.

மூன்று சதமானம் குறைத்தால் கிட்டத்தட்ட மூன்று கோடி ரூபாய் லாபம் வரும் மின்சார வாரியத்திற்கு. எனவே, இந்த மின் இழப்பைக் குறைப்பதற்குத் தீவிர நடவடிக்கைகள்

[திரு. எ. சுவாமிதாஸ்] [1974 ஆகஸ்ட் 24

எடுக்கப்பட வேண்டும். மேல் மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சிப் என்ஜினியர் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தாலும் அல்லது இனி ஈடுபட்டாலும், இன்றுள்ள வாரியத்தின் நிர்வாக அமைப்பைப் பார்க்கும்போது கீழ் மட்டத்தில் இருக்கிறவர்களுக்கு அதை ஏற்று நன்கு செயல்படுகிறார்களா என்றால் இல்லை என்பதை ஒப்புக்கொண்டு தானாக வேண்டும். கீழ் மட்டத்தில் உள்ள ஊழியர்கள்தான் இதைச் செய்ய வேண்டும். மேல் மட்டத்தில் உள்ளவர்கள் கட்டளைகள் பிறப்பிப்பார்களே தவிர, கீழ் மட்டத்தில் உள்ள ஊழியர்கள்தான் கம்பியில் வேலை செய்கிறவர்கள். அவர்கள் அதைச் சரியாக நடைமுறைக்குக் கொண்டுவருவதில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

அவர்கள் பல யூனியன்களை வைத்திருக்கிறார்கள். அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க யூனியன்கள் தேவைதான். அப்படிப் பட்ட அமைப்புகள் வேண்டியதுதான். ஆனால் அவர்களுக்குக் கொடுத்திருக்கிற பணியை அவர்கள் நேர்மையாகச் செய்ய வேண்டும். எட்டு மணி நேர வேலை என்றால் அதை அவர்கள் ஒழுங்காகச் செய்ய வேண்டும். மேல் நாடுகளில் எல்லாம் ஊழியர்கள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வேலைகளை ஒழுங்காகச் செய்வதினால்தான் அங்கு மின் இழப்புகள் அதிகமாக ஏற்படுவது கிடையாது. அவர்கள், தங்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற பணி நாட்டிற்குச் செய்கிற சேவை என்ற முறையில் பணியாற்றுகிறார்கள்.

ஆனால் இங்கே ஒரு ஊழியர் சரியாக வேலை செய்யவில்லை என்பதற்காக ஒரு அதிகாரி அவரை வேறு இடத்திற்கு மாற்றி விட்டால்—வேலையிலிருந்து நீக்குவது அல்ல—உடனே அவரைச் சேர்ந்த யூனியன் தலையிட்டு அவரை மாற்றக்கூடாது என்கிறார்கள். இல்லை, மாற்றித்தான் தீருவேன் என்று அந்த அதிகாரி முனைந்தால் அவரை நையப்புடைப்பதற்குக் கூட அந்த யூனியனைச் சேர்ந்த ஊழியர்கள் முன்வந்துவிடுகிறார்கள். அப்படிப்பட்டதொரு நிகழ்ச்சியை நேராக அறியக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்பட்டது.



1974 ஆகஸ்ட் 24] [திரு. எ. சுவாமிதாஸ்]

சுருளியாற்றுப் பகுதியில் ஒரு அஸிஸ்டெண்ட் என்ஜினியர் ஒரு ஊழியர் சரியாக வேலை செய்யவில்லை என்பதற்காக அந்த இடத்தைவிட்டு மாற்றினார். அந்த அஸிஸ்டெண்ட் என்ஜினியரை நையப்புடைப்பதற்கு பலர் முனைந்திருக்கிறார்கள். இந்தமாதிரி நிலையில் நம் நிர்வாக அமைப்பு இருந்துகொண்டிருக்கிறது.

கேரளாவில் அண்மையில் நடந்த வேலைநிறுத்தத்தைப் பார்த்தோம். அங்கு மின்சார ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்தார்கள். ஆனால் அங்குள்ள அரசு தைரியமாக இருந்து அந்தப் போராட்டத்தைச் சந்தித்து அதில் வெற்றி பெற்றார்கள். அது கம்யூனிஸ்ட் அரசாக இருந்தாலும்கூட அவர்களைப் பாராட்ட வேண்டும். குறிப்பாக அங்குள்ள முதல் அமைச்சர் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

இருக்கும் நம் மின்வாரிய ஊழியர்கள் பயமுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போது தாராளவாம். நான் சொல்வது மின்சார இலாகா ஊழியர்கள் இப்படிப்பட்ட போராட்டங்களில் இறங்கக் கூடாது. ஏனெனில் மின்சாரம் என்பது அனைவருக்கும் இன்றியமையாத ஒரு சாதனமாகும். கிராமங்களில் மின்சாரம் இல்லை என்றால் மக்கள் அவதிப்படும் ஒரு நிலைதான் இருக்கிறது. எனவே, இந்த மின்சாரத் துறையில் வேலை நிறுத்தம் என்ற பேச்சே வரக்கூடாது. அப்படி வந்தால் அரசாங்கம் அதற்குத் தயாராக இருக்க வேண்டும். அப்படி ஏதாவது ஏற்பட்டால் அதைச் சமாளிப்பதற்கான மாற்று யோசனை ஒன்றை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கிருக்கிற அமைப்பைப் பார்த்தால், யூனியன்களின் போக்குகளைப் பார்த்தால் என்றைக்காவது வேலைநிறுத்தம் வரலாம், நம்மிடம் போலீஸ்காரர்கள் இருக்கிறார்கள், நம் ராணுவப் படை வீரர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த மின்சாரத் துறையில் போதிய பயிற்சி கொடுத்து வைத்திருக்க வேண்டும். எமர்ஜன்ஸி நமக்கு வரும்போது அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அப்போது மின்சாரம் ஒழுங்காக கட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும்.

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1974 ஆகஸ்ட் 24

மேல் நாடுகளில் இப்படிப்பட்ட திட்டங்கள் தேவை இல்லை. மேல் நாடுகளில் தொழிற்சாலைகளில் அல்லது மின்சார இலாகாவில் வேலைநிறுத்தம் செய்தால் ஊழியர்களாகவே தாங்கள் பணியாற்றுகிற அந்தக் கருவிகளுக்கு அந்தச் சாதனங்களுக்கு—ஒரு மாதம் வேலைநிறுத்தம் நடைபெறும் என்றால் அந்த ஒரு மாத காலத்திற்கு கருவிகள் அல்லது சாதனங்கள் பழுதுபடாமல் இருப்பதற்கு அவற்றிற்கு க்ரீஸ் போட்டு, எண்ணெய் போட்டு சரியாக வைத்துவிட்ட பிறகுதான் அவர்கள் வேலைநிறுத்தம் செய்வார்கள். ஆனால் நம் நாட்டில் அப்படியல்ல. இங்கு ஒரு வேலைநிறுத்தம் என்றால் தொழிற்சாலையை ஒழிக்க வேண்டும், அதை ஒன்றுமில்லாமலாக்க வேண்டும். டிரான்ஸ்பார்மரை இல்லாமல் ஆக்க வேண்டும், கம்பியை துண்டித்து விட வேண்டும் என்று செய்வார்கள். வேலைநிறுத்தம் தீர்ந்தபிறகு அதைச் சீரமைக்க ஆறு மாதங்கள் ஆகும். எனவே வேலைநிறுத்தம் ஏற்படும்போது, போலீஸ்காரர்களுக்கு தக்க பயிற்சி கொடுத்து அவர்களைத் தயாராக வைத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, கிராமங்களில் மின்சார பில்கள் ஒழுங்காகக் கொடுக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் பில் போடுவதற்கு வைத்திருக்கிற கணக்கர்கள் ஒழுங்காக இல்லை. அவர்கள் கணக்கு போட்டுக்கொண்டிருக்கிறார்கள் 500 பில்கள்தான், 600 பில்கள்தான் போடுவோம் என்று. அலுவலகத்தில் அவர்கள் சரிவர இருக்கைகளில் இருந்து வேலை செய்வதே இல்லை. காலை 10.30 மணிக்கு அலுவலகத்திற்கு வரவேண்டுமென்றால் அந்தச் சமயத்துக்கு வருவதில்லை. கான்டீனுக்கு போவார்கள் வருவார்கள். இன்றையதினம் அந்த அலுவலர்கள் ஒழுங்காக வேலை செய்வதேயில்லை. இன்றிருக்கிற அலுவலர்களே போதுமானது. அவர்கள் சொல்வார்கள் எங்களுக்கு வேலை ஜாஸ்தியாக இருக்கிறது, கூடுதல் அலுவலர்களை நியமிக்க வேண்டுமென்று. இப்போது இருக்கிறவர்களே போதுமானது. (மணியடிக்கப்பட்டது.)

கோதையார் மின் நிலையத்தில் 100 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவேண்டும். இன்று 60 மெகாவாட்தான் உற்பத்தி செய்யப் படுவதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே அங்கு 100 மெகாவாட் அளவிற்கு உற்பத்தி செய்வதற்கான ஏற்பாட்டினை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 24] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

இந்த மலைப் பகுதியில் பணியாற்றுகிறவர்களுக்கு ஹில் அலவன்ஸ் (Hill allowance) கூடுதலாகக் கொடுக்கப்பட வேண்டும். அங்குள்ள ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் போதாது. எனவே அவர்களுக்கு அலவன்ஸ் கூட்டிக் கொடுப்பதோடு கூட வாரம் க்ளோத்திங்ஸ் ɯɹɐʍ) clothings) எல்லாம் கொடுக்க வேண்டும்.

அதோடு அவர்களுக்கு அரிசி போய் சேருவதில்லை. முப்பது மைல் தூரத்தில் இருப்பவர்களுக்கு சாப்பாடு அரிசி சரியாகப் போய்ச் சேருவதில்லை. எனவே இதற்கு மின்சார வாரியமே பொறுப்பேற்று, வாகன்களை வைத்து, எங்கிருந்தாவது அரிசி கொண்டு வந்து அவர்களுக்கு வழங்க வேண்டும். ஏனெனில் 15 மைல்கள் அவர்களுக்கு நடந்து வந்து வாங்கமுடியாது. எனவே அதையும் செய்யவேண்டும். (மணியடிக்கப்பட்டது).

தரக்குறைவான சாமான்கள் விற்கப்படுவதால் ஏழை மக்கள் அதை வாங்கி வீடுகளில் பொருத்திவிடுவதால் வீடுகளில் விபத்துக்கள் பல ஏற்படுகின்றன. ஸ்விச் போடும்போது ஷாக் அடித்து இறந்துவிடுகிறார்கள். எனவே, இந்த மின்சாரப் பொருள்களின் தரக் கட்டுப்பாட்டை கட்டாயமாகக் கொண்டுவர வேண்டும்.

கடைசியாக, ஆஸ்பத்திரிகளுக்கு தொடர்பாக மின்சாரம் கொடுக்கக்கூடிய ஒரு அமைப்பு இருக்கவேண்டும். ஏனெனில் பல மருந்துகளை ப்ரிஜ்-ல் வைத்திருக்க வேண்டியிருக்கிறது. கரன்ட் இல்லாவிட்டால் மருந்துகள் கெட்டுப்போய் விடும். எனவே ஆஸ்பத்திரிகளுக்கு மின்சாரம் எப்போதும் கொடுக்கக்கூடிய நிலை இருக்கவேண்டும். அல்லது தனி ஜெனரேட்டராவது வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அதற்கு மின்சார வாரியம் பொறுப்பேற்றுக் கொண்டு தொடர்பாக மின்சாரம் கொடுப் பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தக்கலையில் ஒரு மின்கோட்டம் அமைத்திருக்கிறார்கள். தக்கலையில் அதன் தலைமையகம் வந்துவிடும் என்று சீப் என்ஜினியர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான வேலைகள்

நடத்திக்கொண்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா: தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று நம் மாநிலம் மற்ற மாநிலங்களைவிட பலவிதத்திலும் முன்னேற்றம் பெற்றிருக்கிறது என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆந்திரா, கர்நாடகம், கேரளா போன்ற பகுதிகளை விட நாம் பலவிதங்களிலும் முன்னேறியிருக்கிறோம். கம்பியின் நீளம், மின்சாரம் பெற்ற கிராமங்களில் எண்ணிக்கை எல்லாவற்றிலும் தமிழ்நாடு முதன்மையில் நிற்கிறது.

ஆனால் நமக்குள்ள சிரமம், எதிர்காலத்தை எதிர்நோக்குகிற நேரத்தில் நெருக்கடிபற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் நெய்வேலியில் ஏற்படக்கூடிய இரண்டாவது சுரங்கத்தில் தடங்கல் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு மாநிலம் எவ்வளவு முன்னேறினாலும் மத்திய அரசின் ஒத்துழைப்பு தேவையாக இருக்கிறது. நாம் எதை எதிர்பார்க்கிறோமோ அதில் தடங்கல் ஏற்படும்போது வருங்காலத்தில் மிகவும் கஷ்டமான ஒரு நிலை இருப்பதாகத் தெரிகிறது.

நமக்கு பெருமளவில் மின்சாரம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் இருந்தாலும் வருவாயைவிட செலவு அதிகமாக இருக்கிறது, எனவே நாம் கஷ்டப்படுகிறோம். அதில் ஏற்படக் கூடிய நஷ்டத்தை நிவர்த்தி செய்து நிலைமையை சீர்படுத்த நிர்வாகத்தில் இருக்கக்கூடியவர்கள் செவ்வனே செயல்பட வேண்டும். சில குறைகளை எப்படி நிவர்த்தி செய்யலாம் என்பதற்கான ஒன்றிரண்டு கருத்துக்களை சொல்ல ஆசைப்படு கிறேன்.

(முற்பகல் 11.30)

இன்றைக்கு டிரான்ஸ்பார்மர் ஓவர் லோட் என்று காரணத்தைச் சொல்லி எந்த இணைப்பானாலும், கமர்சியலுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இன்று ஒவ்வொரு டிரான்ஸ்பார்மரையும்





எடுத்துக்கொண்டால், விதிமுறைக்கு மேல் இரண்டு மடங்கு அல்லது ஒரு மடங்காவது அதிகமாக வைத்து இருக்கிறார்கள். அப்படி வரும்போது யாராவது மனுப் போட்டால், டிரான்ஸ் பார்மர் ஓவர்லோட், கமர்சியலுக்கு அனுப்பிவிட்டோம் என்று பதில் அனுப்பிவிடுகிறார்கள். வேண்டியவர்களாக இருந்தால் அந்த பதில் இல்லாமல் கொடுத்து விடுகிறார்கள், கொஞ்சம் குறைப்பட்டவர்களாக இருந்தால் அந்த பதிலைச் சொல்லி விடுகிறார்கள். இதைத் தடுக்க வேண்டுமானால், ஒவ்வொரு டி. இ. யும் மாதம்தோறும், அல்லது மூன்று மாதத்திற்கு ஒருதரம் ஒரு 'மெர்சி டே' என்று வைத்து, பஞ்சாயத்து தலைவர்களையும் கூட வைத்துக் கொண்டு, அந்தந்தப் பகுதிகளில் இருக்கும் இப்படிப்பட்ட தவறுகளை நீக்கலாம். அதைச் செய்ய இந்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் நிர்வாகத்தில் இருக்கும் ஓரிரண்டு குறைகளையும் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று நிதி நிலை அறிக்கையின் மீது எடுத்துக்கொண்ட விவர அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கை கொடுக்கப்பட்டதைப் பார்க்கிறபோது, அறிக்கைக்கும் பதிலுக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டு பார்த்தால், 29-வது கேள்வி அல்லது குறிப்புக்கு கொடுக்கப்படும் பதில், அதாவது கடையநல்லூரில் துணை மின் நிலையம் திறக்க வேண்டும். கடையநல்லூரில் 120 கே. வி. மின்நிலையம் திறப்பது மின்சார வாரியத்தின் பரிந்துரையில் உள்ளது என்று பதில் கொடுக்கப் பட்டுள்ளது. ஆனால் எனக்கு வந்த பதில், அதாவது நான் அது பற்றி எழுதியிருந்தேன், 1974-ஜனவரி 13-ல், அதில் இந்த மாதிரி கடையநல்லூருக்கு சப்-ஸ்டேஷன் தேவை என்கிற காரணத்தால், The public are sending series of petitions to have a sub-station; Now I understand that estimates are pending with you for necessary recommendation to the Chief Engineer என்று எஸ்.இ.-க்கு எழுதியிருந்தேன். அவர் சீப் இன்ஜீனியருக்கு அனுப்பி இருக்கிறார்கள். எஸ்.இ. நெ. 2/4 என்று போட்டு 8—4—1974-ல் அனுப்பியுள்ளார். அதற்கு

சீப்-இன்ஜினியரிடத்தில் இருந்து எனக்கு பதில் வருகிறது, 26—8—1974-ல்.

I acknowledge receipt of your letter dated... and inform you that there is no such proposal for the establishment of a sub-station at Kadayanallur for the present. என்று போட்டிருக்கிறார்கள்.

நீங்கள் 1973–74 விவாதத்திற்குக் கொடுக்கக்கூடிய பதிலில் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய சீப்-இன்ஜினியர் (டிஸ்டிரிபியூஷன் சௌத்) என்பவர் அந்த மாதிரி பரிசீலனையில் இல்லை என்று சொல்கிறார்கள். அப்படியென்றால், இந்த அச்சு புத்தகத்திற்கு என்ன மதிப்பு என்று தெரியவில்லை. நீங்கள் விவாதத்திற்கு வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். பேச்சுகள் குறிப்பெடுக்கப்படுகின்றன. அதற்கு பதில் கொடுக்கிறார்கள். ஆனால் எனக்கு வருகிறது ஒரு காகிதம். ஜனவரியில் எழுதிய கடிதத்திற்கு 26—8—1974-ல் பதில் வருகிறது. 8—4—1974-ல் எஸ். இ., திருநெல்வேலி, ரெகமன்ட் செய்து அனுப்பியிருக்கிறார்கள். கடையநல்லூரில் சப்-ஸ்டேஷன் தேவை என்று எழுதியிருக்கிறார்கள். அதையும் கவனிக்காமல் 26—8—1974-ல் அந்த மாதிரி பரிசிலனையில் இல்லை என்று எழுதியிருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், உற்பத்தி குறைவு ஆனால் நம் தேவை அதிகம், ஆனால் இருக்கக்கூடியவற்றை ஒழுங்காக, சரியாக கொடுக்கப்படுகிறதா என்றால், வருந்தக்கூடிய நிலைதான் இருக்கிறது.

இதை நான் சொல்வதற்குக் காரணம், இனிமேலாவது நிர்வாகத்தில் இருக்கிறவர்கள் கவனக்குறைவாக இல்லாமல் சரியான முறையில் நடக்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இப்படி கருத்துக்கள் இருந்தால் ஏதோ தட்டிக் கழிக்கும் நிலையில் நிர்வாகம் இருக்கிறது என்பதைத்தான் கண்கூடாகக் காண்கிறோம்.

அதே மாதிரி இன்று பதில் எழுதுவதைப் பார்த்தால் ஏதோ பொறுப்பற்ற எழுதுவது போல் இருக்கிறது என்று நினைக்கிறேன். அதாவது 45-வது கேள்விக்கு சொல்லப்படுகிற அதே பதிலைத்தான் 93-வது கேள்விக்கும் தந்து இருக்கிறார்கள்.





இப்படி ஏதோ புத்தகம் நிரப்பப்பட்டிருக்கிறது. இது ஏதோ பிரன்டர்ஸ் மிஸ்டேக் என்று சொல்வார்கள். இப்படிக் குறிப்பிட்டு இருப்பதைக் கவனிக்கவேண்டும்.

இன்றுள்ள நிலையில் நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தினால் மக்கள் படுகிற கஷ்டத்திலிருந்து நிவர்த்தி பெற வாய்ப்பு ஏற்படும். அதைப்போல், இன்றைக்கு எத்தனை டிரான்ஸ் பார்மர்கள் ஓவர்லோடாக இருக்கின்றன என்று கணக்குப் பார்த்து அதை மாற்றினால் நன்றாக இருக்கும். அந்த மாதிரி செய்வதற்கு ஆயுள் காப்புறுதிக் கழகத்திடமிருந்து கடன் பெற்றுச் செய்யலாம். புதுடெல்லியில் நடைபெற்ற மின்சார அமைச்சர்கள் மாநாட்டில் அப்படிப்பட்ட முடிவு எடுக்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, ஸ்பெசிபிக் பிராஜெக்ட்ஸ் என்று வரும் திட்டங்களுக்கு அவர்களிடமிருந்து கடன் பெற்றுச் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆகவே, இந்த டிரான்ஸ்பார்மர்கள் எவையெவை ஓவர்லோடாக இருக்கின்றன என்பதைக் கணக்கில் எடுத்து, அவற்றை மாற்றுவதற்காக எல்.ஐ.சி.-யிடமிருந்து கடன் பெற்று ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் அதைச் செய்தால் பல மக்களுக்கு இந்த ஓல்டேஜ் டிராப்பினால் ஏற்படும் இன்னல்கள் குறையும். இந்த ஓல்டேஜ் டிராப் இருப்பதால் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை காயில் மாற்ற வேண்டியிருக்கிறது. உங்களுடைய ஒப்பந்தத்திற்கு விரோதமாக நீங்கள் நடந்து கொண்டிருக்கிறீர்கள். நஷ்ட ஈட்டிற்குக்கூட உங்கள்மீது வழக்குத் தொடுக்கலாம். யாராவது பம்ப் செட்டை இன்சூர் செய்திருந்தால் அவர்கள் உங்களிடமிருந்து காம்பன்சேஷன் கூடக் கேட்கலாம். யாராவது வழக்குப் போட்டுப் பார்த்தால் தெரியும்.

இந்த ஓல்டேஜ் டிராப் செய்வதைத் தடுப்பதற்காக இன்னொரு முறை அதாவது 'ஷட் கபாசிடிர்' வைக்கலாம் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு டிரான்ஸ்பார்மர், பம்ப்செட்டிற்கும் இதை வைத்தால் ஓல்டேஜ் டிராப் ஆகாமல் இருக்கும் என்கிறார்கள். அதைச் செய்தால் உபயோகிப்பவர்களுக்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா] [1974 ஆகஸ்ட் 24

சிக்கன நடவடிக்கை என்று சொல்கிறார்கள். இன்று கோடிக் கணக்கான பணம் வசூல் செய்யாமல் இருக்கிறது. இதற்கு இருக்கக்கூடிய அமைப்பில் குறைபாடா அல்லது அதில் இருக்கும் சிலர் செய்யும் ஒட்டுமொத்தமான எதிர்ப்பால் ஏற்படுவதா என்று தெரியவில்லை. அதற்கு இன்சென்டிவ் போனஸ் கொடுத்து, யார் அதிக வசூல் செய்கிறார்களோ அவர்களுக்குப் போனஸ் கொடுக்கும் நிலை என்று சொல்லி வசூல் செய்தால், பணம் நமக்கு வசூலாகும். 10 கோடி. 12 கோடி வசூலாக வேண்டுமென்ற நிலை இருக்கிறபோது நாம் மற்றவர்களிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 81 கோடி ரூபாய்க்கு ஒரு ஆண்டுக்கு வருவாய் இருக்கிறது. இந்த ஆண்டு கிட்டத்தட்ட 1½ கோடித்தான் பாக்கியிருக்கிறது. அதுவும் தனியாரிடமிருந்து சில நிறுவனங்களை நாம் எடுத்ததால் அந்த நிலைமை. 92 லட்சம் ரூபாய் தனியார் நிறுவனங்களிடமிருந்து எடுத்த நிலையங்களில் வசூலாக வேண்டும். 81 கோடி ரூபாய் வருவாய் வருகிற இடத்தில் 1 கோடிக்கும் குறைவாகத்தான் பாக்கி இருக்கிறது. (குறுக்கீடு) அது கூட தவறு. நான் வேண்டுமானால் கணக்குத் தருகிறேன்.

திரு. எஸ். டி. வடிவேல்: 1½ கோடி ரூபாய்க்கு பாக்கியென்றால், பெரிய மனிதர்களிடத்தில் தான் இருக்கும். என்னைப் போன்றவர்களிடத்தில் இருந்தால் ஃப்யூஸ் பிடுங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். ஆகவே, அதை உடனடியாக வசூல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: பெரிய முதலாளிகளிடத்தில் விட்டுவிட்டதாக அவர்கள் உள்நோக்கத்தோடு பேச வேண்டியதில்லை. எல்லோரிடமும் சேர்ந்துதான் கிட்டத்தட்ட லட்சம் சர்விசில் பாக்கியிருக்கிறது. சில மில் முதலாளிகளிடத்தில் இருந்து பாக்கி வரவேண்டும். மில் திவாலாகி விட்டதால் சட்டப்படி கோர்ட்டுக்குப் போய்தான் வசூலிக்க முடியும். சட்டப்படி நடவடிக்கை எடுக்கிறபோது அது தாமதமாகிறது. 81 கோடி வருவாய் இருக்கிற இடத்தில் பாக்கி 1 கோடி என்பது குறைவுதான். இருப்பினும் அரசாங்கம் சட்டப்படி நடவடிக்கை எடுத்து அவற்றையும் துரிதமாக வசூல் செய்ய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்.



1974 ஆகஸ்ட் 24]

திரு. ஏ. ஆர். சுப்பையா: அப்படி ஒரு கோடி, 50 லட்சம் பாக்கி இருந்தாலும் அதையும் வசூலிப்பதற்கு ஏற்றபடி சட்டத்தை வேண்டுமானால் திருத்திக்கொள்ள வேண்டும். அதற்கு லா டிபார்ட்மென்டைக் கேட்டு, ரெவின்யூ ரெக்கவரி செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். பவர் சப்ளை செய்கிறோம்; அதற்குத்தான் வசூல் செய்கிறோம். ஆகவே, இந்த ஒரு கோடி, 50 லட்சம் என்பதைக் கூட விட்டுவிடக் கூடாது; வரவு தடைபடக் கூடாது.

கரண்ட் சப்ளை செய்வதற்குச் சில நேரங்களில் சாமான்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அதனால் எத்தனையோ மைல் தூரம் லைன் போட்டிருந்தாலும் பக்கத்திலே இருக்கின்ற ஊர்களுக்குக் கூட மின்சாரம் பெற முடியாமல் இருக்கிறது. அவர்களுக்கு எல்லாம் அது பெரும் குறையாக இருக்கிறது. இதிலே போகக் கூடிய கரண்டு நமக்குக் கிடைக்க வழியில்லையே என்று சங்கடப்படுகிறார்கள்.

ஒரு தடவைக்குப் பல தடவை போய்க் கேட்டால் சாமான்கள் இல்லை; வாங்கிக் கொடுங்கள்; கரண்டு இணைப்புத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். மக்களுக்குத் தேவைப்படுவதால் அவர்களும் வாங்கிக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் தாங்களே வாங்கிப்போட்ட மாதிரி பில்லைப் போட்டு பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள். ஏன் அப்படிச் செய்கிறீர்கள் என்று கேட்டால் நமக்கு கரண்டு கொடுக்கமாட்டார்கள் என்று நினைத்து அதைப் பற்றி கேட்க யாரும் தயாராக இல்லை.

இப்படிச் செய்வதை விட, சாமான்கள் இல்லை என்று சொல்வதை விட யாருக்கு கரண்டு தேவைப்படுகிறதோ அவர்களே தேவையான சாமான்களை வாங்கிக்கொடுத்துவிட்டு, அதற்கான பில் தொகையைக் கட்ட வேண்டிய பணத்தில் பிடித்துக் கொள்ளட்டும் என்று சொல்லிவிட்டால் தகராறுக்கு இடமே வராது. அதற்கு நாங்கள் எல்லாம் தயாராக இருக்கிறோம்.

அடுத்தபடியாக டிரான்ஸ்பார்மஸ் கப்பாசிட்டி இருக்கிறது. அதைப்பற்றி நாங்கள் கேட்கும்போது லிங்க் கணக்கில் எதை யெதையோ சொல்கிறார்கள். சிலவற்றில் கப்பாசிட்டி

இருக்கிறது; சிலவற்றில் இல்லை. உங்கள் கணக்குப்படி எதிலுமே கப்பாசிட்டி கிடையாது. ஏற்கெனவே 50, 75, 100 சதவிகிதம் ஓவர் லோடு இருக்கிறது.

இரண்டு பக்கம் கிணறு இருக்கிறது. அதற்கு நடுவிலே மூன்றாவதாக ஒரு கிணற்றுக்கு இணைப்பு வேண்டுமென்று கேட்டால், அதில் ஏதாவது தகராறு வரும் என்று தெரிந்தால் கப்பாசிட்டி இல்லை என்று நீங்கள் சொல்லிவிடலாம். இப்படிப் பட்ட சிறு சிறு குறைபாடுகளை எல்லாம் தீர்த்து வைக்க, மக்களுக்கு இருக்கிற இடையூறுகளைச் சொல்வதற்காக டி.இ. மட்டத்தில் ஒரு வட்டாரக் குழு அமைக்கலாம். அதில் சம்பந்தப் பட்ட பஞ்சாயத்துத் தலைவர், யூனியன் தலைவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். எக்ஸ்டென்ஷன் கொடுப்பதில் சிக்கல்கள் இருந்தால் 2 மாதம் அல்லது 3 மாதத்திற்கு ஒரு முறை கூடி, அந்தக் கூட்டத்தில் இருக்கின்ற சிக்கல்களைப் பற்றி விளக்கிச் சொன்னால் கம்ப்ளெய்ன்ட் செய்வதற்கு இடமிருக்காது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல அனுபவசாலி, ஒரு சிறந்த விவசாயி என்பது எனக்குத் தெரியும். இப்போது ஒரு லட்சம் பம்புசெட்டுகளுக்கு மேல் இணைப்பு வேண்டுமென்று விடுத்திருக்கின்ற கோரிக்கை என்னிடம் இருக்கிறது. இந்த ஆண்டு குறைவாகத்தான் இணைப்புக் கொடுக்கிறோம். வேண்டுகோள் அதிகமாக இருப்ப தால், குறைந்த அளவுக்குத்தான் கொடுக்க முடிவதால், கிடைக் காதவர்கள் சிபாரிசின் பேரில் கொடுத்தார்கள், சலுகையில் கொடுத்தார்கள் என்று புகார் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட புகார்கள், குற்றச்சாட்டுக்கள் வராமல் இருப்பதற்குக் கொடுக்கின்ற குறைந்த அளவு இணைப்புகளை எந்த அடிப்படையில் கொடுக் கலாம்; எந்த முறையைப் பின்பற்றினால் தகராறு வராது என்று அவர்கள் சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆகவே, அதை முறைப்படுத்துவது எப்படி என்பதைச் சொன்னால் நல்லது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா:** நமக்குத் தேவை அதிகம் இருக்கிறது ஆனால் குறைந்த அளவுக்குத்தான் கொடுக்க முடிகிறது. இதை எப்படி முறைப்படுத்தலாம் என்பதற்கு



என்னுடைய யோசனையைத் தெரிவிக்கிறேன். ஒரு டிரான்ஸ்பார்மரில் எவ்வளவு கப்பாசிட்டி இருக்கிறது என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள். எவ்வளவு ஏரியாவுக்கு சர்வீஸ் பண்ண முடியும் என்று பார்த்துக்கொள்ளுங்கள். சர்வீஸ் கொடுத்திருக்கின்ற இடத்தில் ஒரு போஸ்ட், இரண்டு போஸ்ட் தூரத்தில் உள்ளவர்களுக்கு முதலில் சப்ளை கொடுங்கள். மாக்சிமம் 2 போஸ்ட் தூரம் உள்ளவர்களுக்குக் கொடுங்கள். முதலில் ஒரு போஸ்ட் தூரத்தில் கொடுத்தால் போதும். அதற்குப் பின்னால் 2 போஸ்ட் கொடுங்கள். இதை மட்டும் செய்தாலே ரொம்ப கேஸ் குறைந்து போகும். தகராறுக்கும் இடம் இருக்காது.

நாம் ஏராளமான பணத்தைச் செலவு செய்து கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்கிறோம். அப்படி இருந்தும் இந்த ஊருக்கு வந்திருக்கிற கரண்டு நமக்குக் கிடைக்கவில்லையே என்று கிராம மக்கள் சங்கடப்படுகிறார்கள் அரசாங்கத்தின்மீது குறை சொல்கிறார்கள். அந்தக் குறைபாடு நீங்க வேண்டுமானால், முதலில் ஒரு போஸ்ட் தூரம், அப்புறம் 2 போஸ்ட் தூரம் கொடுப்பது என்று ஒரு முறையை வைத்துவிட வேண்டும். அப்படியானால் ரொம்ப குறைபாடுகள் தீர்ந்துவிடும். இது முடிந்த பின்னால் மேற்கொண்டு கொடுப்பதைப்பற்றி யோசனை செய்யலாம் என்று தெரிவித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[திரு. நா. வீராசாமி தலைமை]

* **திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்):** தலைவரவர்களே, மின்சார வாரியத்தில் சென்ற ஆண்டிலே இந்த மன்றத்தில் நான் பேசினேன். நான் எடுத்துக்காட்டிய சில குறிப்புகளை அமுல்படுத்தியிருப்பார்கள்; அதன் காரணமாக வாரியம் இப்போது நடைபெறுகின்ற முறையைவிட இன்னும் சிறந்த முறையில் நடைபெறும் என்று எதிர்பார்த்தேன்; ஆனால் ஓரளவுக்குத்தான் அவைகளை அவர்கள் கவனித்து இருக்கிறார்கள் என்று நான் புரிந்து கொண்டிருக்கிறேன்.

நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அருமை நண்பர் ஓ. பி. இராமன் அவர்கள் தன்னால் முடிந்த அளவுக்கு இருக்கக் கூடிய இக்கட்டான சூழ்நிலைகளை ஓரளவு சமாளித்து வருகிறார்கள் என்று சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 ஆகஸ்ட் 24

நெய்வேலியிலே ஏற்படக்கூடிய சிரமங்கள், கல்பாக்கத்திலே நாம் எதிர்பார்த்த அளவுக்கு உடனடியாக பல காரணங்களினால் உற்பத்தி தொடங்க முடியாத நிலை, தூத்துக்குடியில் ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே திட்டமிட்ட 400 மெகாவாட் தெர்மல் பவர் ஸ்டேஷன் இன்னும் ஆரம்பிக்கப்பட முடியாத சூழ்நிலை, என்னூரில் சென்ற ஆண்டு ஏற்பட்ட ஒரு விபத்தின் காரணமாக மின்சார உற்பத்திக் குறைவு—இவைகள் மட்டுமல்லாமல் இயற்கை காரணமாக நீர்த்தேக்கங்களில் போதுமான அளவுக்கு நீர் இல்லாத காரணத்தாலும் பல சங்கடங்கள் இருந்தாலும் அவைகளை மிகவும் சாமர்த்தியமாக அவர்கள் சமாளித்து இருக்கின்றார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நமக்கு உதவி செய்த கேரள மாநிலம் கூட உதவியை நிறுத்தி விட்டார்கள். ஒருவேளை இந்த அரசின் பெயரிலே தேவையற்ற, முறையற்ற புகார்களை நம்முடைய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கிளப்பியதன் காரணமாகக் கூட நிறுத்தியிருக்கலாம் அல்லது அவர்களுக்குச் சங்கடங்கள் இருந்திருக்கலாம். அதனால் அவர்கள் நமக்குத் தேவையான போது கொடுக்காமல், நமக்குச் சிரமம் இருக்கும்போது கொடுக்காமல் இப்போது தருகிறோம் என்று சொல்கிறார்கள். நமக்கு இப்போது தேவை இல்லாததால், நம்முடைய அமைச்சரவர்கள் தேவையில்லை என்று சொல்லிவிட்டார்கள். இப்படி யெல்லாம் நிலைமைகள் இருந்தாலும் ஓரளவு சமாளித்து இருக்கிறார்கள் என்று சொல்லாமல் இருக்க முடியாது. நம்முடைய அமைச்சரவர்கள் உரையிலே நிர்வாக இயக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன்.

ஆனால், சில ஆலோசனைகளை இங்கே நான் சொன்னேன். நான் சொன்ன ஆலோசனைகளை எந்த அளவுக்கு ஏற்றிருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. இப்போது கூட அமைச்சரவர்கள் சொன்னார்கள். மின்சார வாரியத்திற்கு ஒரு கோடிக்குக் குறைவாகத்தான் வசூல் ஆகவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய சந்தேகம் மின்சார வாரியத்தில் இருந்து சரியான புள்ளி விவரங்களை அமைச்சரவர்களுக்குக் கொடுக்கவில்லையோ என்று அச்சப்பட வேண்டியதாக இருக்கிறது. எனக்குத் தெரிந்து, புள்ளிவிவரத்தில் இருக்கக்



1974 ஆகஸ்ட் 24] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கூடியது 15 கோடியாக இருந்து, அதை தயாரித்தவர்கள் 15.2 என்பதற்குப் பதிலாக புள்ளியை மாற்றி 1.52 என்று டைப் அடித்துவிட்டார்களோ என்று சந்தேகப்படுகிறேன். இப்படி தவறாகத்தான் செய்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஒருவேளை நண்பர் வீராசாமி அவர்களின் வேலையாகக் கூட இருக்கலாம். (சிரிப்பு). (மணியடிக்கப்பட்டது) வீராசாமி அவர்கள் முன்னால் மின்சார வாரியத்தில் ஸ்டெனோகிராபராக இருந்தார்கள். அதனால் சொன்னேன். 15.2 கோடி என்பதை புள்ளியை மாற்றி அடித்துவிட்டால் 1.52 கோடி என்று ஆகிவிடும். அதை எல்லாம் அமைச்சரவர்கள் துருவிப் பார்க்கின்ற நிலைமை இருக்காது, என்று நான் நினைக்கிறேன். ஆனால் வசூலிக்க வேண்டிய பணம் மட்டும் ஒரு கோடி. அல்ல—15 கோடிக்கு அதிகம். என்னிடத்தில் சில புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. 13 சிஸ்டங்கள் இருக்கின்றன. வேலூர் சிஸ்டத்தில் மட்டும் 66,000 பில்கள் இருக்கின்றன. மாதத்திற்கு டிமாண்டு 40 இலட்சம்—மூன்று மாத அர்ரியர்ஸ் இருக்கிறது. ஆக, இந்த ஒரு சிஸ்டத்தில் மட்டும் ஒரு கோடி இருபது இலட்சம். இதுபோல பாக்கியுள்ள சிஸ்டங்களிலும் இருக்கத்தான் செய்யும். நீங்களே கணக்குப் போட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, அவர் எந்த வருடத்துக் கணக்கைச் சொல்கிறார். சென்ற ஆண்டு கணக்கை நான் கொடுத்திருக்கிறேன். அவர் எந்த ஆண்டுக் கணக்கைச் சொல்கிறார் என்று தெரிவித்தால் பதில் சொல்வதற்குத் தயாராய் இருக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சில சூப்பிரண்டிங் என்ஜினியர்களைக் கேட்டேன். அவர்கள் கொடுத்த புள்ளிவிவரங்களை வைத்துத்தான் பேசுகிறேன். வேலூர் சிஸ்டத்தில் மட்டும் 66,000 சர்வீஸ்கள் இருக்கின்றன. ஒரு மாத டிமாண்டு மட்டும் 35 இலட்சத்தில் இருந்து 40 இலட்சம் இருக்கிறது. 3 மாதம் வசூலிக்கப்படாமல் இருக்கிறது என்றால் இதுவே ஒரு கோடி இருபது இலட்சத்திற்கு மேல் வருகிறது.

Something is wrong somewhere. I do not know whether it is in the typewriting machine or somewhere or the Department wants wilfully to suppress the arrears.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, மூன்று மாத அர்ரியர்ஸ் என்கிறார்கள்—சென்ற ஆண்டு கணக்கா? இந்த ஆண்டுக் கணக்கா? இந்த மாதத்து பில் அடுத்த மாதம் தான் வரும். இவர் எந்த ஆண்டு கணக்கைச் சொல்கிறார் என்றால் பதில் சொல்ல வசதியாக இருக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பாக்கியிருப்பது ஒரு கோடி என்று இருப்பது டைப்பிங் தவறாக இருக்கும் என்றுதான் சொன்னேன். என் கணக்குப்படி 15 கோடிக்காவது இருக்க வேண்டும். சில என்ஜினியர்கள் என்னிடம் கொடுத்த தகவல் அடிப்படையில்தான் பேசுகிறேன்.

(திரு. ஆலடி அருணா எழுந்திருந்தார்)

அருணா நீங்கள் உட்காருங்கள். என் கருத்தை நான் பேசுகிறேன். எதற்காக நீங்கள் எழுந்திருக்க வேண்டும்?

திரு. ஆலடி அருணா : மாண்புமிகு உறுப்பினர் ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள். வழக்கமாக எங்களிடம் அதற்கு ஆதாரம் இருக்கிறதா என்று கேட்பதுபோல அவரையும் ஆதாரம் கொடுக்கச் சொன்னால் எங்களுக்கு உதவியாக இருக்கும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர் ஒரு கருத்தைச் சொல்கிறார். சந்தேகத்தோடு சொல்கிறார். நான் அதைப் பரிசீலனை செய்து அவருக்குப் பதில் சொல்கிறேன். இது குற்றச்சாட்டு கூட அல்ல.

திரு. கோவை செழியன் : அவர் எஸ்டிமேட் கமிட்டி சேர்மென்னாக இருந்தார். அவர் ஒன்றும் தவறாகச் சொல்ல மாட்டார்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : எனக்காக நீங்கள் எவ்வளவு வக்காலத்து வாங்கினாலும் நான் அந்தப் பக்கம் வரமாட்டேன். நான் அமைச்சரிடத்தில் அதிகாரிகள் சரியான கணக்கைக் கொடுக்கவில்லையோ என்றுதான் சந்தேகப்படுகிறேன். இதன் தாத்பர்யம் மகிழ்ச்சிக்குரிய காரியம் அல்ல. 13 சிஸ்டத்தில் இப்படி 3 மாதம் அர்ரியர்ஸ் என்றால் என்ன ஆயிற்று?





மேலவையில் அமைச்சர் அவர்கள் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறபோது சொன்னார்கள், 10 ரூபாய்க்குக் குறைந்த பில்லே கிடையாது என்று.

(Thiru Aladi Aruna rose)

There is nothing serious. I am not yielding.

இதுபற்றி அமைச்சர் அவர்கள் நாளையதினம் பதிலில் சொன்னால் நன்றாக இருக்கும். என்ஜினியர்கள் என்னிடம் சரியான தகவலைக் கொடுக்கவில்லையா என்பதையும் தெரிந்துகொள்ள முடியும்.

இன்னொன்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்—லைன் லாஸ் 27 சதவிகிதம் என்றால் உலகத்திலேயே இந்த அளவு எங்கும் இருக்க முடியாது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : லைன் லாஸ் பற்றித் தவறாகச் சொல்கிறார்கள். நான் கொடுத்திருக்கிற விவரங்களைப் பார்த்துச் சொல்லலாம். அதைத் தெரியாமல் பேசுகிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : 18.8 சதவிகிதம் என்பதாக ஸ்டேட்மெண்டிலே கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மற்ற மற்ற மாநிலங்களில் எல்லாம் அப்படி இருந்தும் நம் மாநிலத்தில் அதிக நீளமுள்ள கம்பிகள்—அதிக சர்வீஸ்கள் இருந்தும்—மிகவும் குறைவாக இருப்பது தமிழகம் தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

THIRU G. R. EDMUND : May I request the hon. member Thiru V. Krishnamoorthy to explain how the line loss happens?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : உற்பத்தியாகக் கூடிய கரண்டு, அதை விநியோகிக்கிற இடத்தில் எந்த அளவுக்கு உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது என்கிற பில்—இந்த இரண்டிற்கும் இருக்கிற வித்தியாசம்தான் லைன் லாஸ். 300 மெகாவாட் உற்பத்தியாகி 200 மெகாவாட் தான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்றால் இடையில் 100 மெகாவாட் நமக்கு லைன் லாஸ். இதற்கு

எத்தனையோ காரணங்கள்—ஹைவோல்டேஜ் கம்பியில் இருந்து சிறிய கம்பிகளுக்குப் போகிற நிலையில் லாஸ்—இன்னும் தெப்ட்: மீட்டர் இருக்கும்—அது ஓடாது.

எனக்குத் தெரியும்—மீட்டர்கள் போன்ற இதர பொருள்களை மின் வாரியம் வாங்கும்போது டெண்டர் கேட்கிறார்கள்—குறைந்த டெண்டர்களை ஏற்றுக்கொள்கிறார்கள். சாமான்களின் தரம் பார்ப்பது இல்லை. கொஞ்சம்கூட இருந்தாலும் நல்ல—உறுதியான—க்வாலிடி மெட்டீரியல்களையே வாங்க வேண்டும். நாம் எல்லாம் கிராமத்தில் இருந்து வந்தவர்கள்—எனக்குத் தெரியும். மீட்டரை அறைவது போல ஒரு தட்டுத் தட்டினால் சக்கரம் நின்றுவிடும். திரும்ப ஒரு தட்டுத் தட்டினால அந்த வில் ஓடும். ரொம்ப சீப் மெட்டீரியல்—உள்ளே இருப்பது வீக் மாக்னெட்—அதனாலே இந்தக் கோளாறு. இதனால் எல்லாம் நமக்கு லாஸ் எவ்வளவு ஏற்படுகிறது! இன்னும் கீழே இருக்கிற அதிகாரிகள்—நீ எதற்காக 250 ரூபாய் பில் கட்டுகிறாய் என்று அவர்கள் கொஞ்சம் வாங்கிக் கொண்டு மீட்டர் ஓடாத கனெக்ஷன் கொடுத்துக் கொள்கிறார். . . (மணி அடிக்கப்பட்டது)

திரு. க. உ.ரா. எட்மண்ட்: தலைவர் அவர்களே, நேற்றுப் பேசிய பாலசுந்தரத்திற்கு இன்றும் பேச நேரம் கொடுத்தீர்கள். இவருக்கும் கொஞ்சம் தாராளமாகக் கொடுக்கலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. நா. வீராசாமி) திரு. எட்மண்ட் சிபார்சு செய்ய வேண்டியதில்லை. யார் யாருக்கு எவ்வளவு நேரம் கொடுப்பது என்பதை தலைவர் தீர்மானிப்பார்.

(திரு. ஆலடி அருணா, திரு. கோவை செழியன் ஆகியோர் குறுக்கிடு)

நேரம் எவ்வளவு ஒதுக்குவது என்பது உறுப்பினர்கள் அல்ல. தயவு செய்து, திரு. கிருஷ்ணமூர்த்தி 5 நிமிடத்தில் பேசி முடிக்க வேண்டும்.

(நண்பகல் 12.00)

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, நாம் அரசாங்கத்தினுடைய மின்சார இலாகா நல்லபடி இயங்குவதற்கு ஆலோசனை சொல்லும் போது, இந்த மன்றத்திலுள்ள அத்தனை பேரும் அதனை





எடுத்துக்கொள்வதுதான் நல்லது. நேரத்தைக் கட்டுப்படுத்த தலைவருக்கு உரிமையுண்டு. 5 நிமிடத்திலே முடித்து விடவேண்டும், 10 நிமிடத்திலே முடித்து விடவேண்டுமென்றால், மன்றத்திலே மரபு இல்லாமல் போய்விடும்.

திரு. சி. ஆறுமுகம்: ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுவதற்குப் பரிந்துரை செய்கிற அளவுக்கு ஆளுங்கட்சியிலே நாங்கள் யாரும் பஞ்சத்திலே போய் விடவில்லையென்று உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): உறுப்பினர்கள் சம்பந்தமில்லாதவைகளை யெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லி, தயவுசெய்து நேரத்தை வீணாக்க வேண்டாம்.

திரு. ஆலடி அருணா: ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர், மாற்றுத் தலைவர் அவர்களே, நீங்கள் குறிப்பிடும்போது எவ்வளவு நேரம் ஒரு பேச்சாளருக்கு ஒதுக்குவது என்பது என்னுடைய விருப்பத்தைப் பொறுத்தது, உறுப்பினர்கள் நேரம் கொடுக்க முடியாது என்று சொன்னீர்கள். ஆனால், பொதுவாக, பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் ஒவ்வொரு கட்சிக்கும் எவ்வளவு நேரம் என்று ஒதுக்குகிறோம். ஆகவே, எங்கள் கட்சிக்கு ஒதுக்கியிருக்கிற நேரத்தில் கொஞ்சம் நேரத்தை திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): அதை நீங்கள் சொல்லக் கூடாது, உங்களுடைய தலைவர்தான் சொல்ல வேண்டும். அப்படியே, இங்கே நீங்கள் சிபார்சு செய்தாலும், உங்களுடைய நேரத்தை அவருக்கு ஒதுக்க வேண்டும் என்று தலைவருக்கு எந்தவிதமான கட்டாயமும் இல்லை. ஆகவே, இந்த மன்றத்திலே இருக்கிற நேரம் உறுப்பினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும், முறையாகப் பகிர்ந்தளிக்கப்படும்.

திரு. கு. பெரியசாமி : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் குறிப்பிடும்பொழுது மீட்டரை, ஒரு தட்டு தட்டினால் நின்றுவிடும் என்ற ஒரு பாடத்தைக் கற்றுக் கொடுத்தார்கள். அப்படிப்பட்ட பாடமானது, வெளியானால் அதனைத் தெரிந்திராத என் போன்றவர்கள் ஃப்ராட் செய்வதற்கு உதவியாக இருக்கும். அந்தக் காரணத்தினால் அதை சபை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுவதை எல்லோருமே விரும்புகிறார்கள். அவர்கள் சபைக்கு விளக்கமான தகவல்களைத் தரவேண்டுமென்று விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரையிலே, தமிழ் நாட்டிலே மின்சார வாரியம் இப்படி ஏன் இருக்கிறது, இப்படி ஏன் செய்யவில்லை என்று சொன்னால், விவரங்களைத் தெரிந்து கொண்டு, இந்தியாவிலே எந்த மாநிலத்திலே எந்த எந்த ஊரிலே நல்ல மீட்டர் பொருத்தப் பட்டிருக்கிறது? எந்த எந்த ஊரிலே நல்ல டிரான்ஸ்ஃபார்மர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன, எந்த எந்த மாநிலத்திலே அதிக பம்ப் செட்கள் வைத்திருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டு, what is possible என்று சொன்னால் எங்களுக்கு உதவியாக இருக்கும், சபைக்கும் நன்றாக இருக்கும், அவருக்கும் நன்றாக இருக்கும். இப்படியெல்லாம் செய்கின்ற அறிவுரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதை விடத் திறமையாக எப்படி வேலை செய்வது என்று சொன்னால், தெரிந்து கொண்டு சொன்னால், எனக்கும் நன்றாக இருக்கும், வாரியத்திற்கும் உதவியாக இருக்கும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : எனக்கு மின்சாரத்தைப் பற்றி ரொம்ப அதிகமாகத் தெரியாது. தெரிந்ததை வைத்துப் பேசுகிறேன். புரிந்துகொள்கிறவர்கள் புரிந்துகொள்ளலாம், புரியாதவர்கள் விட்டுவிடலாம். நான் சொல்வது மின்சார வாரியத்திற்கு நஷ்டம் வரக் கூடாது என்பதற்காக நல்ல மீட்டர் பொருத்த வேண்டும் என்கிறேன். சிங்கிள் ஃபேஸ் மீட்டர் வைக்க ரூ. 100 ஆகிறது. அதைக் கொஞ்சம் அதிகமாக்கி, ரூ. 150-க்கு வாங்கினால், நல்ல





'ரெகார்டிங்' இருக்கும். 'சீப்பஸ்ட் குவாலிட்டி, 'சீப்பஸ்ட் டெண்டர்' என்பதை தயவு செய்து மின்சார வாரியத்திலே அனுமதிக்க வேண்டாம். அரசாங்கத்திற்கு, மின்சார வாரியத்திற்கு நஷ்டம் வரக் கூடாது என்ற கருத்திலேதான் இதனைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மீட்டர்களை வாங்குவதற்கு ஒரு முறை இருக்கிறது. விலையை எப்படி கோட் பண்ண வேண்டும், எப்படி வாங்க வேண்டுமென்று சட்ட திட்டத்திலே இருக்கிறது. மீட்டர்களை வாங்கும்போது குவாலிட்டி டெஸ்ட் பண்ணிதான் வாங்குகிறார்கள். அதிலே ஏதாவது கோளாறு தெரிந்தால் சொல்லுங்கள், விசாரிக்கிறேன். வாங்குகிற முறையில், டெஸ்ட் முறையில் ஏதாவது தகராறு இருக்கிறதா? அல்லது பண விஷயத்திலே பரவாயில்லை, எவ்வளவு ரூபாய்க்கு வேண்டுமானாலும் வாங்கலாம் என்றால், ஆடிட் அப்ஜக்ஷன் எல்லாம் வரும். . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : நான் என்னுடைய அருமை நண்பர் இராமன் அவர்களைக் குற்றம் சாட்டிச் சொல்வதாக நினைப்பது தவறு. வருமானத்தை இழக்கக் கூடாது என்பதற்காகத்தான் இதனைச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் மீண்டும் சொல்கிறேன். மீட்டர் வாங்குவதிலே, தகுந்த தரமுள்ள மீட்டர் வாங்குவதாகச் சொல்கிறேன். பர்சேஸ் ஆர்டரிலே இப்படித்தான் வாங்க வேண்டுமென்று விதி இருக்கிறது. அதிலே மாற்றி தரமுள்ளவை வாங்க வேண்டுமென்றால், சட்டத்திற்கு உட்பட்டிருந்தால் வாங்கத் தயாராக இருக்கிறேன். குவாலிட்டி டெஸ்ட்டில் தவறு, குறைந்த குவாலிட்டியுள்ளதை வாங்கி விட்டீர்கள் என்று சொன்னால், விசாரிக்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மீட்டர்களிலே பலவிதமான மீட்டர்கள் இருக்கின்றன. அதிலே நல்ல மீட்டர்களும் இருக்கின்றன, சப் ஸ்டாண்டர்ட் மீட்டர்களும் இருக்கின்றன. சப் ஸ்டாண்டர்ட் மீட்டர்களுடைய குவாலிட்டியெல்லாம் கரெக்டாக இருக்கிறது, மீட்டர் டெஸ்டிங் டேபிளிலே

வைத்தால் கரெக்டாக இருக்கும். ஆனால், நமக்கு சப்ளை பண்ணுகிற மீட்டரைப் பார்த்தால் தெரியும். நாம் என்ன 100, 200-ஆ வாங்குகிறோம்.

We are purchasing several lakhs. Even if it is Rs. 25 or Rs.30 more, my advice to the Electricty Board is to purchase best materials, even though it is likely to cost little more to the Board. அதற்காகத்தான் சொல்கிறேன்.

லைன் லாஸ், தெஃப்ட் பற்றியும் சொல்ல வேண்டும். இந்த டிபார்ட்மெண்ட்டிலே இருப்பவர்களுக்கு எவ்வளவு தூரம் நடைபெறுகிறது என்பது தெரியும். மீட்டரைத் தட்டினால் நின்றுவிடும் என்று சொன்னேன். யாரும் தட்ட வேண்டியதில்லை. வேண்டுமானால் தட்டிப் பாருங்கள், சில கதவு திறந்திருக்கும். திறக்கிற கதவை, இன்னும் கொஞ்சம் திறந்து, உள்ளே சிலவற்றைச் செய்கிறார்கள். அதனுள் இருக்கிற மாக்னெட்டில் கொஞ்சம் டஸ்ட் போனாலும் நின்று விடும். மீட்டர் டெர்மினலில் ஒயர் உள்ளே போய் வெளியே வரும். உள்ளே இருக்கக்கூடிய லைன்களை, அந்த டெர்மினல்லை கழட்டி, டிரக்ட் கான்டாக்ட் கொடுத்து, மீட்டரை பை-பாஸ் பண்ணி, மின்சாரத்தைத் திருடுகிறார்கள். 5-ந் தேதி மீட்டர் ரீடிங் முடிந்தவுடன் டிஸ்கனெக்ட் பண்ணிவிட்டு, மீண்டும் 20-ந் தேதி ரீ-கனெக்ட் செய்துவிடுகிறார்கள். இதனால் 25 சதவிகிதம்தான் ரெக்கார்ட் ஆகும். 75 சதவிகிதம் இதுமாதிரி போகிறது என்று சொன்னால் எப்படி வருவாய் கிடைக்கும்? There are a lot of cases against our own staff ஆனால், அது வரக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

இன்னொன்று நான் இங்கே சொல்லக் கூடியது, ஸ்டாஃப் பிரச்னை. நான் பரிதாபமாக இருக்கிற அதிகாரிகளைப் பற்றிக் கூற விரும்புகிறேன். சீப் இன்ஜினீயர், சூப்பரின்டென்டிங் இன்ஜினீயர், டிவிஷனல் இன்ஜினீயர், அசிஸ்டென்ட் இன்ஜினீயர் இவர்களைப் போல் அப்பாவிகள், பரிதாபத்திற்குரியவர்கள் யாரும் கிடையாது. காரணம், மொத்தத்திலே 63 யூனியன் வைத்திருக்கிறார்கள். எத்தனை யூனியன்கள் என்ற அளவே கிடையாது. அவ்வளவு பெடரேஷன்களும், கம்யூனிஸ்ட்





பெடரேஷன், டி. எம். கே. பெடரேஷன், அந்த பெடரேஷன், இந்த பெடரேஷன் என்று ஒருவருக்கு ஒருவர் சண்டை போட்டுக் கொண்டு, இன்ஜினீயர்களைப் பரிதாப நிலைக்கு ஆளாக்குகிறார்கள். இன்ஜினீயர்களை சாதாரண லைன் ஸ்டாஃப் கெரோ பண்ணுகிறான். பண்ருட்டியிலே ஒரு இன்ஜினீயரை சாப்பிடக் கூட விடாமல் கெரோ செய்துள்ளார்கள். போலீஸ் வந்து கூட அந்த சூப்பர்வைசரால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்தமாதிரி 'இன்டிசிப்ளினை' 'ருத்லெஸ்ஸாக' 'டீல்' பண்ண வேண்டும். இன்டிசிப்ளின் இருக்கிற வரைக்கும் இந்த மின்சார வாரியம் உருப்படாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் ஸ்ட்ராங் வியூஸ் உடையவர்கள். (திரு. ஏ. எம். இராஜா எழுந்தார்) அவர் சார்ந்திருக்கிற யூனியனைச் சொல்வதாகத் தயவு செய்து கொள்ளக் கூடாது.

திரு. ஏ. எம். இராஜா : மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ண மூர்த்தி அவர்கள் ஏதோ யூனியன்காரர்கள் மட்டும் பெரிய தவறுகளைச் செய்துவிடுகிறார்கள், ஒழுங்கீனமாகச் செய்கிறார்கள் என்ற முறையிலே தொழிலாளர்களைப் பற்றி குற்றச்சாட்டுகளைக் கூறினார்கள். அங்கே, மின்சார வாரியத்தில் இருக்கிற தலைமைப் பொறியாளர், அங்கே இருக்கிற சேர்மன் ஆகியவர்களிடம் நான் ஒருமுறை கேட்டேன். நீங்கள் இந்த டிசிப்ளனரி ஆக்ஷனிலே மிகவும் கண்டிப்பாக இருங்கள் என்று சொன்னேன். அப்பொழுது, என்னிடம், என்னை ஏன் இந்த வம்பிலே மாட்டி விடுகிறீர்கள் என்று சொன்னார்கள். ஆகவே, யூனியன்காரர்களைத் தயவு செய்து குற்றம் கூறுகிறீர்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : நான் டிசிப்ளினரி ஆக்ஷனைப்பற்றிக் கூறவில்லை. நீங்கள் என்கொயரி வையுங்கள், பனிஷ்மெண்ட் கொடுங்கள். ஒருவன் தப்பு பண்ணும்போது, டி.இ., எஸ்.இ., அவனை மாற்றுகிறார். செங்கல்பட்டு சிஸ்டத்திலே 7 பேரை மாற்றினார் எஸ்.இ. மாற்றி 14 மாதங்களாகிறது. அவர்கள் போக மறுக்கிறார்கள். வேறு இடத்திலிருந்து அந்த இடத்திற்குப் போடப்பட்ட 7 பேர்கள் வந்துவிட்டார்கள். 14 மாதங்களாக 14 பேரும் வேலையும் செய்வதில்லை. சம்பளத்தை மட்டும் ஒழுங்காக வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த டிசிப்ளின் எவ்வளவு நாளைக்கு

ஓடும்? வண்டி ஓடவே ஓடாது. எஸ்.ஓ. வுக்குக் கீழே உள்ள ஸ்டாஃப்க்கு எவ்வளவுக்கெவ்வளவு டிசிப்ளின் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு போட்டி இருக்கிறது. அப்படிப்பட்டச் சூழ்நிலைகளின், உணர்ச்சிகளின் காரணமாக வேலை சரியாக நடக்கவில்லை.

போன வருஷத்திலேயே நான் சொன்னேன். இந்த பில் போடுவது, வசூல் செய்வது ஆகியவற்றை டி.சி.எ. வுக்கு வைத்திருக்கிறார்கள். இங்கே மின்சார வாரியத்திலே பில்லை ஸ்டேட் ஃபண்டிலே மீட் பண்ண வேண்டியதாக இருக்கிறது. ஆனால், அங்கு ரெயில்வேயிலிருந்து ஜெனரல் ஃபண்டுக்கு கான்ட்ரிபியூட் பண்ணினார்கள். இந்த ஆண்டுதான் பண்ணவில்லை. அதுபோல் மின்சார வாரியத்திலே ஸ்டேட் பட்ஜட்டுக்கு ரூ. 15 கோடி, ரூ. 20 கோடி கொடுக்கிற அளவுக்கு மின்சார வாரியம் வர வேண்டும். அப்படி வர வேண்டுமென்றால் staff should be diciplined.

சூப்பர்வைசர்களுக்கு உள்ள அதிகாரத்தை டீசென்ட்ரலைஸ் பண்ண வேண்டும். எஸ்.இ. க்கு இருக்கிற அதிகாரத்தை டி.இ. க்குக் கொடுக்க வேண்டும். டி.இ. க்கு இருக்கிற அதிகாரத்தை ஏ.இ. க்குக் கொடுக்க வேண்டும். ஏ.இ. இடத்திலிருந்து செக்ஷன் ஆபீஸர் வரையிலும் டீசென்ட்ரலைஸ் பண்ண வேண்டும். எஸ்.ஓ. பில் போடுவது, டெலிவர் பண்ணுவதை செக் பண்ணுவது, வசூல் பண்ணிவிட்டாரா, இல்லையா என்று பார்ப்பது ஆகிய அந்த அதிகாரத்தை எஸ்.ஓ. வுக்கே கொடுக்க வேண்டும். எஸ்.ஓ. சரியாகச் சரிபார்க்கிறாரா என்று ஏ.இ. (ஓ. அண்ட் எம்.) பார்க்க வேண்டும், அவர் சரியாகப் பார்க்கிறாரா என்று டி.இ. (ஓ. அண்ட் எம்.) பார்க்க வேண்டும், டி.இ. சரியாகப் பார்க்கிறாரா என்று எஸ்.இ. பார்க்க வேண்டும், எஸ்.இ. சரியாகப் பார்க்கிறாரா என்று சி.இ. பார்க்க வேண்டும். இந்த அளவு இப்போது இல்லை.

பழைய மெம்பர், அக்கவுண்ட்ஸ் மெம்பர் ஒருவர் இருந்தார். அவரால்தான் இந்தத் தொல்லைகள் எல்லாம் ஏற்பட்டன. இப்போது வேறு ஒருவர் வந்திருக்கிறார். அவர் திறமையாகச் செய்வார் என்று நம்புகிறேன்.





மொத்தத்தில் பார்த்தால், நம்முடைய தமிழ் நாடு கிரிட்டில் 27 லட்சம் சர்வீஸ்கள் இருக்கின்றன. மொத்த ஸ்டாப் ஒரு லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். சேர்மனிலிருந்து டெம்பரரி கேஷுவல் லேபரர் வரையில் 1 லட்சம் பேர் ஒரு ஆளுக்கு 27 சர்வீஸ்கள் என்ற நிலைமைதான் இருக்கிறது. இது ஹையஸ்ட், அதிகப்படி என்று நான் சொல்வதற்குக் காரணம் சில நிர்வாகங்களை நாம் இப்போது மேற்கொள்கிறோம். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், சௌத் மெட்ராஸ் எலக்ட்ரிசிடி கார்ப்பரேஷன் என்ற நிறுவனத்தில் 86 ஆயிரம் சர்வீஸ்கள் இருக்கின்றன, அங்கே இருக்கின்ற ஸ்டாப் 865 பேர்கள் இருக்கிறார்கள். அந்த கம்பெனியை நாம் எடுத்துக் கொள்ள இருக்கிறோம். அந்த நிறுவனத்தின் வருமானம் 2 கோடி ரூபாய், அதாவது இருநூறு லட்ச ரூபாய். மின்சார வாரியத்திலே இருக்கக்கூடிய திருச்சி சிஸ்டத்தை மட்டும் எடுத்துக் கொண்டு கணக்குப் பார்த்தால் அவர்களுக்கு இருக்கக்கூடிய சர்வீஸ் ஒரு லட்சத்து ஆறாயிரத்து நூற்றி இருபத்து எட்டு, வருமானம் 400 லட்சம் ரூபாய் அதாவது 4 கோடி ரூபாய், அங்கே வேலை பார்க்கிறவர்கள் 6 ஆயிரம் பேர்கள். 86 ஆயிரம் சர்வீஸ்களை ஒரு பிரைவேட் அண்டர்டேக்கிங் வைத்துக் கொண்டு . . . .

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** வருவாய் என்பது சர்வீஸ் அடிப்படையிலே கிடையாது. அவர்கள் லாபகரமான நோக்கோடு நடத்தி வந்தார்கள். அவர்கள் பக்கத்திலே மட்டும் கம்பிகளை நீட்டிக் கொண்டு எந்த எந்த வகையில் மின்சாரம் கொடுத்தால் லாபம் சம்பாதிக்க முடியுமோ அதை மட்டும் கவனித்து வருவாய் சம்பாதித்தார்கள். ஆனால் அரசாங்கம் லாப நோக்கத்தோடு செய்யவில்லை, பட்டிதொட்டிகளில் கிராமங்களில் கம்பிகளை நீட்டி நாம் மின் விசை கொடுக்கிறோம். 7 லட்சம் விசையேற்றங்கள் கொடுத்திருக்கிறோம் என்றால் 12 பைசா என்று வசூல் செய்கிறோம் என்றால் எவ்வளவு நஷ்டம் அதில் நமக்கு ஏற்படுகிறது என்று நமக்குத் தெரிகிறது. அவர்களுடைய நிறுவனம் லாப நோக்கத்தோடு நடத்தப்பட்டதாகும், அது கிராம மக்களுக்குப் பயன் தரவில்லை, அதனால் தான் தேசியமயமாக்குகின்ற கொள்கைப்படி சேர்க்க வேண்டுமென்று நாம் செய்து கொண்டு வருகிறோம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : நான் அந்த ஆப்ஜக்ட்டைப் பற்றிக் குறை சொல்லவில்லை. தனியார் மின்சார நிறுவனங்கள் அத்தனையும எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் அங்கே இருக்கிற எபிஷயன்ஸி இங்கே வர வேண்டும் எனபதற்காகத்தான் சொல்கிறேன். அங்கே மாதத்திற்கு 1,500 பில்கள் போடுகிறார்கள் என்றால் இங்கே 700 பில்கள்தான் போடுகிறார்கள், அதிகமாகப் போட வேண்மென்று எஸ்.இ. கேட்டால் பில்லுக்கு 15 பைசா வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைப்போலவே ஒருவர் மாதத்திற்கு 15 பில்தான் கலெக்ட் பண்ணுவேன் என்பார், இப்படி எபிஷியன்ஸி குறைந்து விடுகிறது, அதை இம்ப்ரூவ் பண்ண வேண்டும் என்பதற்காகத் தான் சொல்கிறேன். 200 லட்சம் ரூபாய் வருமானம் பெற்று 86 ஆயிரம் சர்வீஸ்கள் வைத்துக் கொண்டிருக்கின்ற இடத்தில் 865 பேர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால் அவர்கள் இண்டஸ்ட்ரிகளுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள், கிராமங்களுக்குக் கொடுக்க மறுக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த ஸ்டாண்டர்டு போய் நம்முடைய ஸ்டாண்டர்டுக்கு வந்த பிறகு சந்தோஷம். ஏற்கனவே உழைத்தவன் இப்பொழுது உழைக்கமாட்டான். இந்த நிலைமையில் எப்படி வாரியம் ஒழுங்காகச் செயல்பட முடியும்?

This procedure should be changed lock, stock and barrel கம்ப்ளீட்டாக மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய எஞ்சினியர்கள் எல்லாம் மனமுடைந்து போயிருக்கிறார்கள். ஏ.இ. யை 4 பேர்கள் அடிக்கிறார்கள், பாதுகாப்பு இல்லை அவர்களுக்கு. டி.இ. யை கெரோ செய்கிறார்கள், அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. டி.இ. டிஸிப்ளினரி ஆக்ஷன் எடுத்து சில பேர்களை மாற்றினால் உடனே போக மாட்டேன் என்கிறார்கள், சத்தம் போடுகிறார்கள், கையை இப்படி வைத்துக் கொள்கிறார்கள், கொஞ்சம் போனால் நான்கு அறைகள் கொடுக்கிறார்கள். பரிதாபத்திற்குரிய நிலைமையில் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள், அவர்களை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.





* திரு. ஏ. சுப்பிரமணியம் : இந்த மின்சாரத் துறைக்கான பட்ஜெட்டின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய எதிர்க்கட்சியினுடைய பணியினை ஓரளவிற்கு எளிதாக்கிவிட்ட அருமை நண்பர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொண்டு என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க முற்படுகிறேன்.

இந்த மின்சார வாரியமானது மிகுந்த முன்னேற்றத்தைக் காட்டியிருப்பதாக பெருமையாகச் சொல்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில் வெகு காலமாக முன்னேற்றம் கணிசமாக இருந்து வந்திருக்கிறது. இந்தக் கட்சி ஆட்சி வருவதற்கு முன்னாலே, ஒரு சில புள்ளிவிவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன். இன்ஸ்டால்டு கெப்பாஸிடி என்பதை எடுத்துக் கொண்டால் 1961–62 ஆம் ஆண்டிலிருந்து 1966–67 ஆம் ஆண்டு வரையிலும் 170 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது. 1966–67-க்குப் பிறகு அதிலிருந்து 1971–72 ஆம் ஆண்டு வரையிலும் 41 சதவிகிதம் தான் இன்ஸ்டால்டு கெப்பாஸிடி அதிகமாகி இருக்கிறது. நீங்கள் கொடுத்திருக்கிற புத்தகத்திலே ஜெனரேஷன் அன்ட் பர்ச்சேஸ் என்று சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள், தனியாகக் கொடுத்திருந்தால் நல்லதாக இருந்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஜெனரேஷன் அன்ட் பர்ச்சேஸ் 1961–62 லிருந்து 1966–67 வரையில் 5 ஆண்டுகளிலும் 1967-க்குப் பிறகு 1972 ஆம் ஆண்டு வரையிலும் உள்ள 5 ஆண்டுகளிலும் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை. அப்போதும் 65 சதவிகிதம்தான், இப்போதும் 65 சதவிகிதம்தான். எனவே, புதிதாகச் சாதித்துவிட்டதாக பெருமையடித்துக் கொள்வதற்கு ஒன்றுமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏராளமான கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் உண்மை என்ன? கம்பிகள்தான் நீட்டப்பட்டிருக்கின்றன, மின்சாரம் அதில் வருவதில்லை. வோல்டேஜ் டிராப் அடிக்கடி ஏற்படுகிறது. அதன் காரணமாக மோட்டார்கள் எரிந்து போவது சர்வ சாதாரணமாக இருக்கிறது, மின்சாரம் அடிக்கடி தடைபட்டு தடைபட்டு நின்று நின்று வருவது சாதாரணமாகிவிட்டது. இந்த மின்சார

வாரியத்தைப் பொறுத்தவரையில் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல் கம்ப்ளீட்டாக ரீஸ்ட்ரக்சரிங் ரீவேம்பிங் செய்ய வேண்டும். செயல்முறைகளை அடியோடு மாற்ற வேண்டும். இல்லையென்றால் பல குறைபாடுகள் மின்சார வாரியத்தில் இருக்கத்தான் செய்யும்.

உதாரணமாகச் சொன்னால் பைனான்ஸ் மிகவும் குறைவு, மெய்யாகப் பார்த்தால் இதற்கு முன்பெல்லாம் ஜெனரல் ரிசர்வ்க்கு பணம் கொஞ்சம் கொடுத்தார்கள், இப்போது ஜெனரல் ரிசர்வ்க்குப் பணம் கொடுப்பதில்லை என்ற நிலைமை இருக்கிறது, காரணம் என்ன என்று கேட்டால் மின்சார வெட்டு வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். போதுமான முன்யோசனையோடு ஏதாவது செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லையென்று தான் தெரிகிறது. இது ஒருபுறமிருக்க, பல பேர்கள் லைன் லாஸ் பற்றிப் பேசினார்கள். மின்சாரத் திருட்டு பற்றிக் குறிப்பிட்டார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் உதாரணத்தோடு குறிப்பிட்டார்கள். உண்மையாகவே, திருட்டுப் போகிறது என்று கூட சொல்லக் கூடாது. துறையைச் சேர்ந்தவர்களுக்குத் தெரிந்தே இம்மாதிரி எடுக்கப்படுகிறது. சென்ற ஆண்டு கூட நான் பார்த்தேன். மின்சார வெட்டு வந்தபொழுது கோவையிலே பல ஆலைகள் இருக்கின்றன, அவைகளில் சில ஆலைகளுக்கு 75 சதவிகித மின்சார வெட்டு என்றும், சில ஏரியாக்களில் உள்ள ஆலைகளுக்கு 50 சதவிகித வெட்டு என்றும், சிலவிடங்களில் மின்சார வெட்டே இல்லாமலும் ஓட்டிக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்க்கிறோம். அதேபோல பல பகுதிகளில் இருக்கிறது. ஆனால் அதை நிரூபிக்க வேண்டுமென்றால் கடினம். பல பகுதிகளில் மின்சார வெட்டு இருக்கும்பொழுது முழுமையாகச் சிலர் மின்சாரத்தைப் பயன்படுத்த முடிகிறது. சிலருக்கு வெட்டு வருகிறது. எதனால் வருகிறது இந்த நிலைமை? இது துறையிலே உள்ள கோளாறின் காரணமாக வருகிறது. துறையிலே மிகவும் மோசமான கோளாறுகள் இருப்பதால் இப்படி வருகிறது.





லைன் லாசைப் பொறுத்தவரையில் சாதாரணமாக 5 சதவிகிதம் ஏற்படலாம். ஆனால் 27 சதவிகிதம், 25 சதவிகிதம் என்று ஏற்படுகிறது. அதுவும் சரியான புள்ளி விவரம் சொல்லப்படவில்லை. 25 சதவிகிதத்திற்கு மேல் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்த இழப்பை 10 சதவிகிதம் குறைத்தாலே சுமார் 130 மெகாவாட். . .

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** 18 சதவிகிதம் என்ற கணக்கைக் கொடுத்திருக்கிறேன், 25 சதவிகிதம் அல்ல. ஒவ்வொரு மாகாணத்திலேயும் எவ்வளவு தூரம் சர்விஸ் இருக்கிறது, நீளக் கம்பிகளெல்லாம் இருக்கிறது என்று அதைப் பார்க்கும்பொழுது நம் மாநிலத்திற்கு இந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், இதை விடக் குறைவாக இருக்கிறது. ஆகவே, இங்குள்ள சர்வீசையும், கம்பிகள் விஸ்தரிப்பையும் பார்க்கும் பொழுது பர்செண்டேஜைப் பார்க்கும்பொழுது தமிழ் நாடு தலைசிறந்ததாக இருக்கிறது, குறைவு என்று எண்ணிக்கையிலே.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும் பொழுது மிகவும் குறைவு என்று சொல்லி, தமிழ்நாடு தலைசிறந்ததாக இருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்வதில் பயனில்லை. ஏனென்றால் லைன் லாசைக் குறைப்பதற்கு அரசாங்கமே ஒப்புக் கொண்டிருக்கிறது. நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள்: அப்படிச் சொன்னதற்குப் பிறகு லைன் லாஸ் குறைந்திருக்கிறதா? குறையவில்லையே.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தலைவரவர்களே, லைன் லாஸ் பற்றிச் சொல்கிறார்கள். மாஸ்டர் பிளான் 82 கோடி ரூபாய் திட்டத்தில் இருக்கிறது. 8 கோடி ரூபாய் வரையில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. எண்ணிக்கை அதிகரித்தது, 50.000 பம்பு செட்டுகள், கம்பியின் நீளமெல்லாம் அதிகரித்திருப்பது, இந்த ரேஷியோவைப் பார்த்தால் எப்படி என்று தெளிவாகத் தெரியும். கூடுதல் என்று சொல்கிறார்கள். நிலைமைகளை மொத்தமாகப் பார்க்கும்பொழுதுதான் எந்தெந்த அளவில் சரியாக நடக்கிறது என்று சொல்ல முடியும்: இந்தியாவைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் ஃபாரின் ஸ்டான்டேர்ட் இருக்க வேண்டுமென்று நினைக்கிறார்கள். அதை நானும் வரவேற்கிறேன்.

[திரு. ஓ. பி. இராமன்] [1974 ஆகஸ்ட் 24

ஆனால் இன்றைக்குள்ள வருவாயை வைத்து 82 கோடி ரூபாய்க்குத் திட்டம் என்றால் 10 கோடி ரூபாய் வேண்டுமானால் அதிகமாகச் செலவு செய்ய முடியும். எல்லாருக்கும் தெரியும், 2.75 கிலோ மீட்டர் நீளம் உள்ள வாய்க்காலில் விவசாயி தண்ணீர் இறைத்தால் வயலுக்குச் செல்லும்பொழுது இயற்கையாகவே தண்ணீர் மண்ணால் உறிஞ்சப்படும். 2.75 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவே சாதாரணமாகக் குளிர்ச்சிபோய் உஷ்ணம் ஏறினால்தான் காந்த சக்தி ஏற்பட முடியும். இயற்கையாகவே இழப்பு இருக்கிறது. அதைத் தவிர்க்க முடியாது என்கிறார்கள். ஆனால் கூடுமான வரையில் குறைக்க வேண்டுமென்பதற்காக நல்ல முறையில் வாரியம் முயற்சி செய்கிறது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அடுத்தாக, மின்சார வாரியம் பேங்குகளில் இருந்தும், எல். ஐ. சி. யிலிருந்தும் கடன் வாங்குகிறது. உயர்ந்த வட்டிக்குக் கடன் வாங்குகிறது. அப்படிக் கடன் வாங்கும் வாரியமானது அதை இன்வெஸ்ட் செய்கிறது. குறைந்த வட்டி விகிதத்திற்கு இன்வெஸ்ட் செய்கிறார்கள். வெளியிலே கூடுதல் வட்டிக்குக் கடன் வாங்கி குறைந்த வட்டிக்கு ஏன் முதலீடு செய்கிறீர்கள்? எலக்ட்ரிசிட்டி சப்ளை ஆக்டின் விதிமுறைகளுக்கு மாறாக ஏன் அப்படிச் செய்கிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இன்னொன்றும் கூறிக்கொள்வேன். ஒர்க் ஆர்டர்களைப் பொறுத்த வரையில் 10, 13 ஆண்டுகளாக முடிக்காமல் வைத்துக் கொண்டிருக்கிறார்கள், எதனால் அப்படி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்? நிர்வாகத்தின் கோளாறுதான் காரணம். அதனால் ஒர்க் ஆர்டர்கள் ஆண்டுக்கணக்கில் பெண்டிங்காக இருக்கிறது. ஒரு இடத்தில் ஒர்க் ஆர்டர் போட்டு சாமான்களை எடுக்கிறார்கள். இன்னொரு இடத்திற்குச் சாமான்களைக் கொண்டு போகிறார்கள், அதைக் கண்காணிக்கும் முறை சரியாக இல்லை. இப்படியே போனால் கடைசியில் சாமான்கள் எங்கே இருக்கிறது, இருக்கிறதா போயிற்றா என்றுகூடத் தெரியாது. இதனால் மின்சார வாரியத்தில் பல தவறுகள் ஏற்பட இடம் ஏற்படும்.

ஸ்டோர்களைப் பொறுத்தவரையில் அட்ஜஸ்ட்மெண்டைப் பொறுத்தவரையில் லெட்ஜர் அக்கவுண்டிற்கும் அப்ஸ்ட்ராக்டிற்கும் ரீகன்சிலியேஷன் செய்யும்பொழுது ஏராளமாக வித்தியாசம்



1974 ஆகஸ்ட் 24] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

வருகிறது. கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நிரம்ப வித்தியாசம் வருகிறது. பல்வேறு சிஸ்டம்களில் இலட்சக்கணக்கான ரூபாய் வித்தியாசம் வருகிறது. இந்த வித்தியாசம் எப்படி வருகிறது? வித்தியாசம் இருப்பதற்குக் காரணம் அக்கவுண்டிங் முறையில் உள்ள கோளாறுதான் காரணம். இதைத்- திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எச். டி. கன்ஸ்யூமர்ஸ் பத்தாண்டுகளுக்கு மேலாக அரியர்ஸ் வைத்திருக்கிறார்கள். மேட்டூரில் ஒரு கன்ஸ்யூமருக்கு 10 லட்சம் ரூபாய் வரையில் 'வெய்வ்' செய்திருக்கிறார்கள்? இது ஏன் செய்யப்பட்டது, எந்த அடிப்படையில் செய்யப்பட்டது என்று தெரியவில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தொகையைச் சொல்லி விட்டார்கள், ஒருவர் என்று சொல்லிவிட்டார். அதன் விவரத்தைச் சொன்னால், பதில் சொல்கிறேன். வெய்வ் பண்ண வேண்டிய அவசியம் இருக்காது என்று தான் நான் கருதுகிறேன். அது உண்மையா என்று தெரியவில்லை. யாருக்கு என்று சொன்னால் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** ரிப்போர்ட்டிலேயே இருக்கிறது. பப்ளிக் அண்டர்டேக்கிங் கமிட்டி ரிப்போர்ட்டில் இருக்கிறது. 10 இலட்சம் ரூபாய் வெய்வ் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல் இன்னும் இரண்டு நிறுவனங்களுக்கு ஏறத்தாழ 50 இலட்சம் ரூபாய் டிமாண்டு வித்ட்ராயல் செய்யப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்திற்கு வழக்கு போய், உயர்நீதி மன்றம்

'The Demand is legal and the concerned establishments have got the capacity to pay the dues . . . . . '

என்று சொன்னதற்குப் பிறகும்கூட அந்த டிமாண்ட் வாபஸ் பெறப்பட்டிருக்கிறது. ஏன் இது நடந்தது? எந்த அடிப்படையில் நடந்தது? எந்தக் கொள்கையின் அடிப்படையில் நடந்தது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒருபுறத்தில் மின்சார வாரியத்திற்கு மிக மிகத் தேவையான கேபிடல் எக்ஸ்பெண்டிச்சர் மற்றும் திட்டங்களை நிறைவேற்றப் பணம் போதவில்லை என்று இருக்கும் நேரத்தில் வெளியிலேயிருந்து கடன்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 ஆகஸ்ட் 24

வாங்கும்பொழுது, பெரிய கன்ஸ்யூமர்களுக்கு, லாபகரமாக நடக்கும் தொழிற்சாலைகளுக்கு ஏன் சலுகை அளிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை.

அடுத்தபடியாக. எண்ணூர் தெர்மல் ஸ்டேஷனில் ஒரு ஆக்சிடெண்ட் நடந்தது, 1973 ஆம் ஆண்டில். அதை விசாரணை செய்ய திருவாளர் மகாலிங்கம் அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி போட்டார்கள். அந்தக் கமிட்டி சொல்லியிருக்கிறது—

"There was neither a provision to quench the fire automatically nor a facility to drain the oil to a distant safe area"

என்று நிறையச் சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆக்சிடெண்டிற்கான காரணங்கள் பலவற்றைச் சொல்லிவிட்டு பிரதானமாக இதைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கமிட்டி ரெஃபரென்சிலே இந்தத் தவறுகளுக்கு யார் பொறுப்பு என்று கொடுக்கப்படவில்லை. அவர்களும் சொல்லவில்லை. நியாயமாகப் பார்த்தால் கமிட்டி அதைச் சொல்லியிருக்க வேண்டும். இதற்கு யார் பொறுப்பு, யாருடைய அஜாக்கிரதையினால், யாருடைய மெத்தனத்தினால், யாருடைய கவனக் குறைவினால் அது ஏற்பட்டது என்று சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அதைச் சொல்லவில்லை, விட்டு விட்டார்கள். சில யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இரண்டைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"It is recommended that all major generator transformers and associated auxiliary transfermers in the T.N.F.B. system should be provided with an automatic fire quenching system, suitably inter-locked with the electrical protective system, and ah adequate oil drainage system."

இன்னொன்று.

'Adequate training procedures should be evolved so that engineers and technicians as well as managerial personnel are trained in the latest methods which can be applied in their areas of work..."

இம்மாதிரி சில பரிந்துரைகளைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ரிப்போர்ட் வந்து ஒரு ஆண்டு ஆகிறது. இதை எந்த அளவிற்கு மின்சார வாரியமோ அல்லது அரசோ நிறைவேற்றியிருக்கிறது; நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப் பற்றி அமைச்சரவர்கள் விளக்க வேண்டும்.



1974 ஆகஸ்ட் 24] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

அடுத்தபடியாக, இந்த மின்சார வாரியத்தில் ஏற்கனவே ஏறத்தாழ 20,000 பேர்களைத் தற்காலிகத் தொழிலாளர்களாக வைத்திருக்கிறார்கள். அவர்களை நிரந்தரமாகச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் வைத்துக்கொண்டே இருக்கிறார்கள். இதற்கிடையே வெளியிலிருந்து விண்ணப்பம் கோரி, ஒரு விண்ணப்பத்திற்கு 5 ரூபாய் என்று கட்டணம் வைத்து சுமார் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களிடமிருந்து விண்ணப்பங்களை வாங்கிப் பலரைப் பொறுக்கி எடுத்தாகிவிட்டது. அவர்களுக்குத் தகவலும் அனுப்பப்பட்டிருக்கிறது, பொறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறது என்று. ஒன்றரை இரண்டாண்டுகள் ஆயிற்று. அவர்கள் காத்துக் கொண்டே இருக்கிறார்கள். இன்னும் வேலைக்கு எடுக்கவில்லை. ஒரு பக்கத்தில் டெம்பரரி தொழிலாளர்கள் நிரந்தரம் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள், அதையும் நிறைவேற்றவில்லை. இதற்கிடையில் விண்ணப்பங்களைக் கோரி அவர்களைத் தேர்ந்தெடுத்ததாகச் சொல்லி தகவல் கொடுத்ததற்கு பிறகும் அவர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறார்கள். என்ன ஆகுமென்று தெரியாது. ஆண்டுதோறும் வயதாகிக் கொண்டே போகிறது. இதை நம்பி வேறு இடத்தில் வேலை தேடவும் முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஒரு பக்கம் தாற்காலிகத் தொழிலாளர்கள்.

(பிற்பகல் 12.30)

**மாண்புமிகு திரு. ஓ பி இராமன் :** ஜூனியர் அசிஸ்டென்ட்ஸ், காஷியர் ஆகியவற்றுக்காக முன்பு மனுக்கள் கோரப்பட்ட பழைய நிகழ்ச்சியைச் சொல்லுகிறார். அதிலே பெரும்பாலோர் தேர்ந்தெடுக்கப்பட்டு சேர்ந்து விட்டார்கள் என்று கருதுகிறேன். தற்காலிகமாக இருப்பவர்கள் பற்றிப் பேசினார்கள் தகுதியுள்ளவர்கள் இருந்தால் அவர்கள் இதற்கு அப்ளை பண்ணலாம். பொதுவாக, நான்கு ஆண்டுகள் டெம்பரரியாக இருப்பவர்கள் நிரந்தரமாக்கப்படுகிறார்கள். இனிமேல் வேலைக்கு எடுக்கும்போது அவர்களுக்குக் கணிசமான சதவிகிதம் ஒதுக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். அதற்கு நான் கட்டுப்படுகிறேன்.

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** இன்னும்கூட சிலபேர் செலக்ட் செய்யப்பட்டு ஆர்டர் வராமல் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது. இம்மாதிரி திரிசங்கு சொர்க்கத்தில் வைக்காமல் முடிவு செய்யவேண்டும். இம்மாதிரி

ஒவ்வொரு விஷயத்திலும் தெளிவான கொள்கை இல்லாமல், வரைமுறை இல்லாமல், திட்டம் இல்லாமல் நடந்து கொண்டிருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டத்தான் இதையெல்லாம் சொன்னேன்.

செலவு கட்டுபடியாகவில்லை, மின்சாரக் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சரியான முறையில் மின்சார வாரியத்தில் செலவுகள் செய்யப்படுகிறதா? ஏன் பில்கள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கின்றன? ஏன் வேலைகள் தேங்குகின்றன? மின்சார வாரியத்தின் அமைப்பு முறையிலே, செயல்படும் முறையிலே என்னென்ன கோளாறுகள் இருக்கின்றன? இவற்றை எல்லாம் ஒழுங்காக ஆராய்ந்து கண்டு பிடிக்க வேண்டும். இருக்கின்ற முறையை அப்படியே வைத்துக் கொண்டு அமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு மேல் பூச்சுப் பூசுவது நடக்காது. இதை ஆராய உடனடியாக ஒரு கமிட்டியைப் போட்டு விரைவாக அறிக்கை பெற்று மின்சார வாரியத்தின் அமைப்பை ஆதியோடந்தமாகச் சீர் செய்ய வேண்டும்.

அமைச்சர் அவர்கள் கவுன்சிலில் பேசும்போது சொன்னார்கள் என்று நினைக்கிறேன். ஜெனரேஷனுக்குத் தனி கார்ப்பரேஷன் போடுவது பற்றிச் சொல்லும்போது மத்திய அரசு பரிந்துரையின் பேரில் கார்ப்பரேஷன் அமைக்கப்படுகிறது என்று சொன்னார்கள். மத்திய அரசு அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்களே தவிர, தனித் தனி கார்ப்பரேஷன் போட வேண்டுமென்று சொல்லவில்லை. இதன் தலைமைப் பொறுப்பு ஒரு டெக்னிகல் மேனிடம் இருக்க வேண்டும். இப்போது போர்டு தலைவராக இருப்பவர் மேல் குறைபாடு இல்லை. சிறந்த திறமைசாலி. அவரது திறமையையும், ஆற்றலையும், அறிவையும் பயன்படுத்த வேறு எத்தனையோ துறைகள் உள்ளன. இந்தப் பொறுப்பு டெக்னிகல் மேனிடம் இருந்தால் இன்னும் திறமையாகச் செயலாற்ற முடியும்.

இந்த மின்சார வாரியத்தின் செல்வுக்கு வருவாய் தேடுவதற்கு முன்பு சிக்கனமாக செலவழிக்க வழி இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். கோளாறு எங்கே என்று பார்த்துத் தவிர்க்க வேண்டும். மின்சார வாரிய அலுவலகத்திற்கு நானும் பல தடவை சென்றிருக்கிறேன். அது அலுவலகமாகப்படவில்லை.



எல்லோரும் சுற்றிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா இடத்திலும் ஆட்கள் இருக்கிறார்கள். பத்திரிகையில் கூட வந்திருக்கிறது. வேலை சரியாக நடப்பதில்லை.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னதுபோல டிசிப்ளின் கெட்டிருக்கிறது. என்ன காரணம்? பல தொழிற்சங்கங்கள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். தொழிற் சங்கங்கள் விஷயத்தில் அரசு எந்தக் காரணத்தைக் கொண்டும் தலையிடாமல் இருக்குமானால் கோளாறு எதுவும் வராது. அதை ஒழுங்கான முறையில் சீரமைக்க வழி செய்யவேண்டும்.

ஹைடல் ஸ்கீம்ஸ் ஏராளமாக இருக்கிறது. அவற்றிலே மண் சேர்ந்து சில்ட் ஆகிறது. சில்ட் ஆனால் தேக்கத்தின் அளவு குறைந்துவிடும். கடைசியில் அணைக்கட்டே பாதிக்கும் அளவுக்கு நிலைமை ஏற்படும். டிசில்டிங் செய்யும்போது பல பிரச்சினைகள் வரும். அவற்றை எல்லாம் ஒழுங்காக இந்தத் துறை செய்ய வேண்டும். அந்தத் திட்டங்களின் ஆயுள் குறைந்துவிடாமல் வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ஆண்டி அம்பலம்:** தலைவர் அவர்களே, மின்சார நிதிநிலை அறிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு மின்சாரம் ரேஷன் முறையில் கொடுக்கப்படுகிறது. இதனால் அவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது காலம் சாகுபடி செய்ய வேண்டும். செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் உழவடையாகும். காலையில் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்தால்தான் விவசாயிகள் ஆட்களை அனுப்பி வேலை செய்ய ஏதுவாக இருக்கும்.

என்னுடைய தொகுதியில் 1968-ம் ஆண்டே விவசாயிகள் கடனுக்குப் பம்ப் செட்டுகளை வாங்கி கிணற்றில் பொருத்தியிருக்கிறார்கள். இன்னும் கூட மின்சார சப்ளை கொடுக்கப்படாமல் இருக்கிறது. செல்லப்பநாயக்கன்பட்டி, கோட்டையூர், கம்பிளிப்பட்டி போன்ற கிராமங்களில் ஐந்தாறு வருஷங்களாக மோட்டார் பம்ப் செட் வைத்தும் மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் இருக்கிறது.

போஸ்ட் நடப்பட்டிருக்கிறது, லைன் இழுத்திருக்கிறார்கள். கரென்ட் இருக்கிறது. பல்பு எரியவில்லை. என்ன காரணம்? சோக் இல்லை என்று சொல்லுகிறார்கள். பஞ்சாயத்தில் பத்து லைட்டில் இரண்டுகூட சரியாக எரிவதில்லை. இதையெல்லாம் சீர் திருத்த வேண்டும்.

செம்பட்டியிலிருந்த எலக்ட்ரிக் எஞ்சினியர் 7 லட்சம் ரூபாய் கையாடல் செய்திருக்கிறார். அவர் தற்போது நத்தத்தில் இருக்கிறார். அவரும் சிலரும் சேர்ந்து இப்படிக் கையாடல் செய்திருக்கிறார்கள். இவ்வளவு இக்கட்டான நிலையில் இந்த மாதிரி கையாடல்கள் நடந்தால் பல கோடி ரூபாய் விரயமாகும். அந்த மாதிரி தவறுகள் நடக்காமல் அரசு பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைத் தெரிவிக்கலாம் என்று கருதுகிறேன்.

எதிர்த்தரப்பில் இருந்து பேசிய எல்லா உறுப்பினர்களும் தமிழ் நாடு இன்று மின்சார வெட்டு காரணமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அதற்கு இந்த அரசாங்கந்தான் காரணம் என்றும் குறை கூறுவது போல் அவர்கள் பேச்சு அமைந்திருந்தது.





பொதுவாக, தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல், அகில இந்தியாவிலும், இரண்டொரு மாநிலங்கள் தவிர, மின்சாரப் பற்றுக்குறை ஏற்பட்டு 30, 40, 50 சதவிகிதம் என்ற அளவுக்கு மின் வெட்டு இருக்கிறது.

ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அரசாங்கம் தொழில்களுக்கு 60 சதவிகிதம் வெட்டை அமல்படுத்தியிருந்தாலும் கிராமப்புறத்தில் இருக்கும் உழவர்களுக்கு மின்சாரம் கிடைப்பதில் எந்தவிதமான சிரமமும் இல்லாமல் செய்திருக்கிறது. உழவுத் தொழிலுக்கு மின்சாரம் தாராளமாகக் கிடைக்கக்கூடிய அளவு சிறந்த காரியத்தை நம்முடைய அரசாங்கம் செய்திருக்கிறது. அதேபோல் பொதுமக்கள் வீட்டு உபயோகத்திற்கு மின்சார வெட்டு இருப்பதே தெரியாத அளவுக்கு குறைபாடு இல்லாமல் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசையும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சாரத் துறையைப் பொறுத்தமட்டில் இந்த மின்சார வெட்டு புதிதாக இப்போதுதான் ஏற்பட்டது அல்ல. 1967-ம் ஆண்டுக்கு முன்னால்கூட, 1952-53-ம் ஆண்டிலே கூட, காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோதே மின்சார வெட்டு இருந்தது என்பதைப் பார்த்திருக்கிறோம்.

ஆனால் மின்சார வெட்டு நம் நாட்டில் வாராமல் இருக்கவேண்டுமென்றால் மின்சாரக் குறைவினால் நாம் பாதிக்கப்படாத நிலை ஏற்பட வேண்டுமென்றால் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியது மத்திய அரசு, என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

1967-க்கு முன்னாலேயே இதே மன்றத்தில் திராவிட முன்னேற்ற கழக உறுப்பினர்கள் தமிழ்நாட்டில் மின்சாரத் துறை வளர்ச்சி பெற நெய்வேலியில் இரண்டாம் சுரங்கம் வெட்டப்பட வேண்டும் என்றும், ஏராளமான அனல் மின் நிலையங்கள் உருவாக வேண்டும்

என்றும், தமிழ் நாட்டுக்கு இரண்டாவது அணு மின் நிலையம் வேண்டுமென்றும் இதே மன்றத்தில் கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோதும் தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன் கிடைக்கிற அளவில் பல்வேறு திட்டங்கள் வேண்டுமென்று வற்புறுத்திப் பேசிவந்திருக்கிறேன். இந்த மன்றத்தில் சென்ற ஆண்டு கூட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அதை நமது தொழிலாளர் நல அமைச்சர் திரு. ராசாராம் அவர்கள் மத்திய அரசு அமைச்சர் அவர்களிடத்தில் கொண்டு சென்றார்கள். அது நிறைவேறவில்லை. மத்திய அரசு இப்படிப்பட்ட திட்டங்களுக்கு அனுமதி கொடுக்காதபோது மாநில அரசைக் குறை கூறுவது என்றால் குறை கூற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் செய்யப்படுகிற காரியமே அல்லாது வேறு அல்ல.

தமிழ் நாடு இன்று மின்சாரத் துறையைப் பொறுத்தவரையில் தன்னிறைவு பெறவேண்டுமென்றால் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட வேண்டும். அதோடு கல்பாக்கத்தை விரிவுபடுத்துவதோடு அதிகப்படியான மின்சாரம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இன்னும் ஒரு அணு மின் நிலையம் வேண்டுமென்று கேட்டு அதை அமைப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பு ஏற்ற பிறகு மகத்தான காரியங்களை மின்சாரத் துறையில் செய்திருக்கிறது. கிராம மக்கள் சென்னை, கோவை போன்ற நகரங்களுக்குச் சென்று அங்கு எரிகிற அழகான மின்சார விளக்குகளைப் பார்த்திருப்பார்கள். அவர்கள் கிராமங்களில் மின்சார விளக்குகளைப் பார்த்திருக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட மக்களுக்கு, சேரி மக்களுக்கு இந்த அரசு வந்ததற்குப் பின்னால்தான் ஏராளமான மின் விளக்குகளை அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

மின்சாரம் நம் மாநிலத்திற்கு வந்ததிலிருந்து 1960-ம் ஆண்டு இறுதி வரையில் இரண்டரை லட்சம் பம்ப் செட்டுகளுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று ஏழு





லட்சம் பம்ப் செட்களுக்கு நாம் மின்சாரம் வழங்கி வருகிறோம். இன்று நம் தமிழ்நாடு மின்சார வாரியம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது என்றாலும் அதிலுள்ள சில குறைபாடுகளை எல்லாத் தரப்பிலிருந்தும் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எனக்கு முன் பேசிய சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள் மின்சார வாரியத்தில் பணியாற்றக்கூடிய ஊழியர்கள் சுற்றிக் கொண்டிருப்பதாக. அவர்கள் அதில் இந்தியத் தொழிற்சங்கத் தலைவர். எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் வேறுபாடு இல்லாமல் மின்சார வாரியத்தில் பணியாற்றுகிற ஊழியர்கள், தொழிலாளர்கள் பற்றிச் சொன்னார்கள். பலதரப்பில் உள்ளவர்களும் இன்று கட்டுப்பாடு இல்லாமல் ஒரு ஒழுங்குமுறை இல்லாமல் இருப்பதைப் பார்க்கிறோம். இது எதனால் ஏற்பட்டது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

1967-க்கு முன்பாக இந்தச் சட்டமன்றத்தில் ஆளும் கட்சி சார்பில் தொழிற்சங்கங்களை ஆதரித்துப் பேசியிருப்பார்களா என்றால் இருக்காது என்றே நான் கருதுகிறேன். 1967-க்குப் பிறகு இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னால் நான் உட்பட பலரும் பேசியிருக்கிறோம். மின்சார ஊழியர்களுக்குச் சங்கம் வைக்க உரிமை வேண்டுமென்று பேசியிருக்கிறோம். அவர்களது பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று பேசியிருக்கிறோம். அவர்களுக்குத் தக்க விதத்தில் நல்ல முறையில் சம்பள விகிதங்கள் அளிக்கப்பட வேண்டுமென்று பேசியிருக்கிறோம். பேசி, பல உரிமைகள் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு, இன்று நம்மால் கொடுக்கப்பட்ட உரிமைகள் நமக்கே பாதகமாக வரக்கூடிய முறையில் நிலைமை அமைந்திருப்பதைக் காண்கிறோம்.

நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் எந்தத் துறை ஊழியர்களாக இருந்தாலும் அவர்கள் நடவடிக்கைகளில் தவறு ஏற்படக்கூடிய சந்தர்ப்பத்தில் கண்டிப்பாக ஒழுங்கு நடவடிக்கைகள்

[திரு. சு. துரைசாமி] [1974 ஆகஸ்ட் 24

எடுத்தேயாக வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள உழவர்கள் மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டால், அந்த வொயர்மேன் அல்லது லைன்மேனைப் பார்த்து அதைப் போட்டுக் கொடுங்கள் என்று கேட்டால் பத்து ரூபாய் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரம் தேடிக் கொண்டு வரமுடியாது. அதைப் பற்றி நாம் மேல் அதிகாரிகளிடம் புகார் சொன்னால், நாங்கள் மாற்றலாம், அப்படி மாற்றினால் உடனடியாக சங்கம் அதில் தலை யிடும், சங்கம் தலையிட்டால் இங்கே வந்து உட்கார்ந்துவிடுவார்கள், ஆகவே நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வரவே கூடாது. தவறுகள் நடந்தால் உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுத்தேயாக வேண்டும். அப்படி நடவடிக்கை எடுத்து மாறுதல் போன்றவை செய்ய மின்சார வாரியம் பின்வாங்கவே கூடாது.

இந்த அறிக்கையில், ஸ்டேட்மென்ட் ஆப் கமர்ஷியல் ரெவின்யூ அன்ட் எக்ஸ்பென்டிச்சரில் பட்ஜெட் எஸ்டிமேட் 1973-74-க்கு ரூ. 91.28 கோடி என்று காட்டியிருக்கிறார்கள். ரிவைஸ்ட் எஸ்டி மேட்டில் ரூ. 88.60 கோடி என்று கணக்கு கொடுக்கப்பட்டிருக் கிறது. இந்த வித்தியாசத்திற்குக் காரணம் மின் வெட்டு என்று சொல்கிறார்கள். இதற்கு மின்சார வெட்டு காரணம் என்றால் பின்னால் அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஒன்பதாவது இனத் தில் அதர் ஐடம்ஸ் என்ற தலைப்பில் என்னவென்று விவரம் கொடுக் கப்படவில்லை. எதிர்பார்த்த வருமானம் ரூ. 1.75 கோடி என்றும் வந்திருக்கிறது. ரூ. 4.82 கோடி என்றும் இருக்கிறது. முன்பு வருவாய் குறைவுக்குக் காரணம் மின்சார வெட்டு என்று சொல்லி ஐட்டம் ஒன்பதில் எதிர்பார்க்கப்பட்டது ரூ. 1.75 கோடி என்றும் வந்திருக்கிற வருமானம் ரூ. 4.82 கோடி என்றும் சொல்லியிருக்கிறார்கள். இதற்கான விவரங்கள் தெரியவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இதற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 24] [திரு. சு. துரைசாமி]

ஒட்டுமொத்தமாக கணக்குப் பிரிவைப் பொறுத்தவரையில் அதில் குறைபாடு இருப்பதாக உணருகிறோம். அதை மாற்று வதற்கும் திருத்தங்கள் செய்வதற்கும் மின்சார வாரியத்திலிருந்து முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பில்கள் எல்லாம் பாக்கி இருக்கின்றன. மூன்று மாத பாக்கியிருக் கிறது என்று சொன்னார்கள். ஜனவரி மாதத்திற்கான பில்லை எந்தக் காரணத்தைக் கொண்டும் பெப்ரவரி மாதத்திலேயே வசூல் செய்தாக வேண்டும். அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் மின்சார வாரியத்திற்கு வரவேண்டிய வருவாய் வரும். இன்று அப்படி வசூல் செய்யாத குறைபாடு இருப்பதைப் பார்க்கிறோம். அதற்குக் காரணம் பில்கள் போடுகிறவர்கள் மட்டுமல்ல, வரி வசூல் செய்பவர்கள் மட்டு மல்ல, அங்கு அதற்குள்ள காஷியர்கள் மட்டுமல்ல, எல்லோருமே எதற்கெடுத்தாலும் ஓவர் டைமை எதிர்பார்க்கிறார்கள். ஆகவே, முடிந்த வரையில் அப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் நீக்கு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

கணக்குத் துறையைப் பொறுத்து அதை முடிந்த அளவிற்கு ஒரு வியாபார நிறுவனமாக கமர்ஷியல் அடிப்படையில் வைத்து நடத்துவதற்கு இனிமேலாவது மின்சார வாரியம் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்தைப் பொறுத்த வரையில் வாங்கப் படுகிற பல்வேறு பொருள்களுக்குச் சில தனிப்பட்ட கம்பெனி களுக்கு அட்வான்சாகப் பணம் கொடுத்திருக்கிறார்கள். ஈசன் என்ஜினியரிங் கம்பெனி. அங்கிருந்து சில பொருள்களை வாங்கு கிறார்கள். வாங்கக்கூடிய பொருள்கள் உரிய காலத்தில் மின்சார வாரியத்திற்கு வந்து சேருவதில்லை. இந்த ஈசன் என்ஜினியரிங் கம்பெனிக்கு மட்டும் இரண்டு கோடி ரூபாய் முன்பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு யார் சம்பந்தப்பட்டது என் பதை மின்சார வாரியம் விசாரிக்க வேண்டும்.

மதுரை மின்சார திட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு நடைபெற்ற கையாடலில் எஸ்.இ.-க்குக் கொஞ்சம் சம்பந்தம் உண்டு என்று தெரிய வருகிறது. எஸ்.இ. அனுமதியோடுதான்

அங்கிருந்து பொருள்கள் வெளியே எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றன. அந்த எஸ்.இ.-யின் மீது விரைவாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று சில மில்கள் பற்றி, சுப்பிரமண்யம் அவர்கள் சொன்னார்கள். சில மில்களுக்கு முழுமையாக வசூல் செய்யப்படுகிறது, சிலவற்றிற்குக் குறைவாக வசூல் செய்யப்படுகிறது என்று. அதைத் தெளிவாகச் சொன்னால்தான் திருத்திக் கொள்ள முடியும். சில பெரிய நிறுவனங்கள் மின்சார வாரியத்திற்குப் பணம் கட்ட வேண்டியிருக்கிறது. அவற்றை அவ்வப்போது வாங்க வேண்டும். தனிப்பட்ட வியாபாரி என்றால் ஒரு மாதம் தள்ளிப் போட்டால் ஒன்றரை அல்லது இரண்டு ரூபாய் என்று வட்டி போட்டு வாங்கி விடுகிறார். இந்த நிறுவனங்கள் இன்கம் டாக்ஸ் கட்டக்கூடியவை. கட்ட வேண்டிய தொகை, ஒரு மாதத்திற்கு மேல் சென்றால் அரசு நிர்ணயிக்கும் நியாயமான வட்டியை அந்த நிறுவனங்களிடமிருந்து மின்வாரியம் வசூல் செய்ய வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு இந்த அறிக்கையை வரவேற்று என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. க. துரைசாமி: தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிற நிதிநிலை அறிக்கைகளை ஆதரித்து நான் என் கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையையும் 1973-74-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையையும் அமைச்சர் அவர்கள் தாக்கல் செய்திருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கிற 62,487 கிராமங்களில் 61,138 கிராமங்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே, மாண்புமிகு கோவை செழியன் அவர்கள் கட்சி மாறி அங்கே சென்று விட்டார்களா, தற்காலிகமாகச் சென்று இருக்கிறார்களா என்ற விவரம் அறிவிக்க வேண்டுகிறேன்.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உறுப்பினர்கள் பேசும்போது மட்டுமே அவர்கள் இருப்பிடத்தில் இருக்க வேண்டும். மற்ற நேரங்களில் எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. ஏ. க. துரைசாமி: தமிழ்நாட்டில் இருக்கும் 24,799 அரிசன குடியிருப்புகளில் 23,800 அரிசனக் குடியிருப்புகளுக்கு, அதாவது 96 சதவிகிதம் மின்வசதி அளிக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். உள்ளபடியே இப்படிப்பட்ட சிறப்பான காரியங்களை இந்தத் துறை ஆற்றி வருவதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களையும், அந்த இலாக்கா அதிகாரிகளையும் நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு என் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே, மற்ற எல்லா மாநிலங்களையும் விட, தமிழகத்தில்தான் 7 லட்சம் விவசாய விசையேற்றங்களுக்கு மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காண்கிறபோது உள்ளபடியே மகிழ்ச்சியாக இருக்கிறது. கடந்த ஆண்டு 75 சதவிகிதம் மின்சார வெட்டு இருந்தும், இந்த ஆண்டு இருந்த 60 சதவிகிதம் மின் வெட்டு, 40 சதவிகிதம் குறைந்து, 30 சதவிகிதம் இப்போது இருக்கும். இந்த நிலையில் வளர்ந்து வரும் எதிர்காலத் தேவையைக் கருத்தில் கொண்டு மிகச் சிறப்பான முறையில் தேவையான திட்டங்களை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்று பலரும் வலியுறுத்திச் சொல்லியதுபோல், நெய்வேலி இரண்டாவது சுரங்கம் வெட்டுதல், இரண்டாவது அனு மின் நிலையம் அமைத்தல், கல்பாக்கம் விரிவாக்கம் போன்ற மின் திட்டங்களை விரைவில் செயல்படுத்த நம்முடைய அமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒப்புதல் தெரிவிக்கக் கோரி கேட்டுள்ளார்கள். அதற்கு மத்திய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய தொகுதியைப்பற்றியும் ஒரு சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன்.

A 96—16

[திரு. ஏ. க. துரைசாமி] [1974 ஆகஸ்ட் 24

தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஒரு பயங்கர தீ விபத்து, 10—3—74-ல் குடியாத்தத்தில் ஏற்பட்டது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். ஆனால் 5 மாதத்திற்கு பிறகும், இன்றும அந்தப் பகுதியில் இருள் சூழ்ந்து இருக்கும் நிலை இருக்கிறது. சம்பந்தப்பட்ட மின்சார இலாக்கா அதிகாரிகளுக்குப் பலமுறை எடுத்துச் சொல்லியும், அந்தப் பகுதியில் இருக்கும் பல கம்பங்களுக்கு மின் இணைப்புத் தரவில்லை. எரிந்துபோன வீடுகளுக்கும் இலவசமாக மின்சார இணைப்புத் தருவதாக அன்றையதினம வாக்குறுதி தந்தார்கள். அதுவும் இன்றுவரை முழுமையாகச் செயல்படுத்தப்படவில்லை.

இன்று பல தெருக்களில் விளக்கு இல்லாத நிலை இருக்கிறது. கேட்டால் பல்பு இல்லை, கம்பி இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நிலைமையைச் சீர்செய்வதற்கான முறையில் பரிவோடு அவாகள் செயல்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடக்கும் டி.டி.சி. கூட்டத்தில் ஐவ்வாதுமலை பற்றிப் பேசினார்கள். பல மின்சார கம்பங்கள் மரத்தால் செய்யப்பட்டிருப்பதால் உடைந்து கீழே விழுந்து இருக்கின்றன. அதனால் எவ்வளவு பெரிய ஆபத்தும் எந்த நேரத்திலும் உண்டாகக்கூடும், எனவே உடனடியாக அதை கவனிக்க வேண்டுமென்றார்கள். அதற்கு அதிகாரிகள் மிகச் சாதாரணமாக, அந்த நேரத்தில் நேரில் பார்த்திருந்தால் தெரியும், வேலை செய்ய ஆட்கள் வரமாட்டேன் என்கிறார்கள் என்ன செய்வது என்றார்கள். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடக்கும் கூட்டத்தில் இருக்கும் பிரச்சினைகளைப் பற்றி எடுத்துச் சொன்னால், அதற்கு அளிக்கும் பதில் இப்படி இருக்கிறது. பெரிய மின்சார இலாக்கா அதிகாரிகளிடத்தில் சொன்னால் அவர்கள் இப்படிப் பதில் சொல்கிறார்கள்.

மின்சாரக் கம்பங்கள் உடைந்து இருக்கின்றன. கம்பிகள் கீழே விழுந்து இருக்கின்றன, இதனால் பலருடைய உயிருக்கு ஆபத்து நேரிடும் என்று சொல்கிற நேரத்தில், பொறுப்புள்ள அதிகாரிகள் அதற்காக நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொல்லாமல், இப்படிப் பதில் சொன்னால், உள்ளபடியே என்னதான் மின்சாரத் துறையில் பெரும் பொறுப்பில் இருக்கிறவர்கள் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு தமிழ் நாட்டில் மின்சார உற்பத்தி



1974 ஆகஸ்ட் 24] [திரு. ஏ. க. துரைசாமி]

செய்தாலும், மக்களுக்கு பல்வேறு விதத்தில் உதவி செய்தாலும், இந்தத் துறையில் கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் மிகச் சிறப்பான முறையில் பணியாற்றவில்லை என்பதைத்தான் நாம் பார்க்கிறோம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டது உண்மைதான். பல மாதங்களுக்கு பில்கள் வராமல் இருக்கிறது. பல நெசவாளர்கள் குடும்பங்கள் மின் வசதி பெற்றிருக்கின்றன. அவர்களுக்கு மாதம் ரூ. 10 மின் கட்டணம் ஆகலாம். அவர்களுக்கு மாதம் ரூ. 10 கட்டுவது என்பதே கஷ்டமாக இருக்கும். அப்படியிருக்கிற நிலையில் மூன்று மாதம் சேர்ந்து, ரூ. 30, ரூ. 40 கட்ட வேண்டுமென்றால் அவர்கள் என்ன செய்வார்கள். அப்படிக் கட்டவில்லையென்றால் ஃப்யூஸை பிடுங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலையைத் தவிர்க்க நம்முடைய அமைச்சர், அந்த இலாகாவில் இருக்கும் உயர் மட்ட அதிகாரிகள் குறிப்பாக கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்த இலாகாவில் பல குறைபாடுகள் இருக்கின்றன. நான் அவற்றை இங்கே விவரித்துச் சொல்ல விரும்பவில்லை. ஒன்று மட்டும் சொல்கிறேன், பல துறைகளில் தொடர்ந்து மூன்றாண்டுகள்

ஒருவர் ஒரு இடத்தில் இருக்கலாம் என்று இருந்தாலும் கூட, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒருவர் ஒரு இடத்தில் ஓர் ஆண்டுக்கு மேல் இருக்கக் கூடாது, மாவட்ட அளவில் மாறுதல் செய்யவேண்டும்.

குடியாத்தத்தில் இருப்பவரை, திருப்பத்தூருக்கு மாற்ற வேண்டும், திருப்பத்தூரில் இருப்பவரை வந்தவாசிக்கு மாற்ற வேண்டும், இப்படிச் செய்வதால் ஓரளவிற்கு அங்குள்ள சில குறைபாடுகள் நீக்கப்படும். அதற்கான காரியத்தை அமைச்சர் அவர்கள். உயர்மட்ட அதிகாரிகளின் ஆலோசனையோடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று மின்சாரத்துறை அமைச்சர் தாக்கல் செய்திருக்கும் இந்த அறிக்கை பல திட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கிறது.

“ வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக்கெடும் ”

என்ற குறளை நன்குணர்ந்து தமிழ்நாட்டிற்கேற்ற வகையில் நல்ல

சிறப்பான பல திட்டங்களை முன்வைத்திருக்கிற இந்த அறிக்கையை வரவேற்று, இந்த அவைக்கு பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி தெரிவித்து, இந்த அளவோடு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய பேரவையிலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் 1974-75-ம் ஆண்டுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ள மின்சாரத் துறை நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றையதினம் நம்முடைய தமிழ்நாட்டின் மின்சார வாரியம் நல்ல பல காரியங்களைச் செய்து இருக்கிறது. குறிப்பாக மின்சார உற்பத்தியிலும், மின் சக்தியை விற்பனை செய்வதிலும், தனி நபர்களுக்கு மின்சாரம் வழங்குவதிலும் நமது மின் வாரியத்தின் சேவை தென்மாநிலங்களில் தமிழகம் முதன்மை பெற்று இருக்கிறது என்பதை அறிகிற நேரத்தில் உண்மையிலேயே பெருமை அடைகிறோம்.

குறிப்பாக, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 62,487 கிராமங்களில் 61.138 கிராமங்களுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது 98 சதவிகிதம் மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போல், தாழ்த்தப்பட்ட பகுதி மக்கள் வாழ்கிற மொத்தம் 24,799 அரிசனக் குடியிருப்புகளில் 23,800 அரிசனக் குடியிருப்புகளுக்கு மின்சார இணைப்புக் கொடுக்கப்பட்டு, அதில் 96 சதவிகிதம் வெற்றியைக் கண்டிருக்கிறார்கள். அதற்காகவும் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

இந்தியாவிலுள்ள மொத்த மின் இணைப்பு பம்ப் செட்டுகளின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு அதாவது 7 இலட்சம் பம்ப் செட்டுகள் மின் இணைப்புப் பெற்றிருக்கின்றன. அதற்காகவும் என்





பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது விவசாயிகளுக்கு பெரியதொரு வரப்பிரசாதமாக கருதப்படுகிறது. ஆகவே, இதிலே நாம் அதிகமான முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம்.

இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு பயங்கரமான செய்தியும் வருகிறது. அதாவது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் நமக்கு மொத்தமாக இருக்கும் மின்சாரப் பற்றுக்குறை 2,183 மெகாவாட்டாக இருக்கும், இதிலே ஐந்து திட்டங்கள் நடைமுறையில் இருக்கிறது. அந்தத் திட்டங்கள் எண்ணூர் விரிவாக்கம், குந்தா நான்காவது நிலை. சுருளியாறு, கல்பாக்கம், தூத்துக்குடி ஆகிய திட்டங்களாகும். இத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டால் 925 மெகாவாட் மின்உற்பத்தி கிடைக்கும். இந்த மின் உற்பத்தியைச் சேர்த்த பிறகும் நமக்கு 2,183 மெகாவாட் பற்றுக்குறை இருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டுதல், அணு மின் நிலையம் அமைத்தல், கல்பாக்கம் விரிவாக்கம் போன்ற கூடுதலான மின் திட்டங்களை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம். நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் உடனடியாக் வெட்ட வேண்டுமென்று இங்கே ஏகமனதாக தீர்மானமே போட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருந்தும், அதை அவர்கள் நிறைவேற்றாமல் இருப்பது வருந்தத்தக்க தொன்றாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்படிப் பல திட்டங்களை மேற்கொண்ட பின்பும், பற்றுக்குறை வருகிறது என்கிற காரணத்தால் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறேன். பல ஆண்டுகளுக்கு முன்பு நமது மின்சார வாரியத்தின் தலைவராக இருந்த அப்பாத்துரை அவர்கள் ஒகனேக்கல்லில் 900 மெகாவாட் திறனுள்ள ஒரு நீர் மின்நிலையம் அமைப்பதற்கான திட்டத்தை அறிவித்தார்கள். கருநாடக அரசு ஆட்சேபித்த காரணத்தால் அது நின்று விட்டது. கருநாடக மாநிலத்தில் நீர் பிடிக்கிறது என்றாலும், ஒகனேக்கல்லில் நீர் மின் திட்டம் கட்டுவது நம் மாநிலத்தில் இருக்கிறது. ஆகவே, நாம் அதை மேற்கொள்ளலாம். கருநாடக அரசு யாரையும் கேட்காமல்

ஹேமாவதி அணையைக் கட்டுவது போல் நாமும் ஒகனேக்கல்லில் ஒரு நீர் மின்நிலையம் கட்டத் துவங்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். 900 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டுள்ள நிலையமாக இது இருப்பதால் உடனடியாக அதை நிறைவேற்ற வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டாலும், அதை நம்முடைய மக்களிடமிருந்து ஓரளவுக்குக் கடனாகவும், அல்லது எல்.ஐ.சி. மூலமாகவும் பெற்று அந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

அதேபோல் இங்கு சிறு சிறு அனல் மின்சார நிலையங்களையும் நீர் மின்சார நிலையங்களையும் உருவாக்கக்கூடிய பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இப்போது இருக்கக்கூடிய சூழ்நிலைகளில் நீர் மின் நிலையங்களையும், அனல் மின் நிலையங்களையும் உருவாக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் போதுமானதாக இல்லை. மூலப் பொருட்களுக்கு அதிகமான பற்றாக்குறை இருக்கிறது. அனல் மின்சார நிலையங்களுக்கு நிலக்கரி வேண்டும். அது நீண்ட தூரத்தில் இருந்து வரவேண்டியிருக்கிறது. ஏதாவது இடையூறுகள் ஏற்பட்டால், அண்மையிலே ஏற்பட்ட ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம் மாதிரி ஏதாவது வேலை நிறுத்தம் வந்தால் நிலக்கரி இங்கே வந்து சேராது. அதன் காரணமாக அனல் மின்சார நிலையம் செயல்பட முடியாது. நீர்த் தேக்கங்களில் போதுமான அளவுக்கு அண்மைக் காலங்களில் நீர் நிரம்பாததால் நீர் மின்சார நிலையங்களை இயக்குவதும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, இப்படி சின்ன சின்ன திட்டங்களைப் போடுவதற்குப் பதிலாக பெரிய திட்டமாகப் போட்டால் நல்லது. 2,000 அல்லது 3,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அணு மின் நிலையங்களை அமைப்பது பற்றிய திட்டங்களைப் போட வேண்டும். நீர் மின்சக்தியை விட இதற்குச் செலவு கூடக் குறைவுதான் என்று வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு பெரிய அணு மின் நிலையத்தை அமைப்பதற்கு ஏற்ற இடம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. அங்கே சால்குடி என்ற இடம் கடற்கரை ஓரமாக இருக்கிறது.







வனத் துறையைச் சேர்ந்த ஏறத்தாழ 10,000 ஏக்கர் நிலம் காலியாக இருக்கிறது. மத்திய அரசு அதிகாரிகளும் அங்கே வந்து பரிசீலனை செய்திருக்கிறார்கள். ஆகவே, அங்கே 3,000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட ஒரு அணு மின் நிலையத்தை உண்டாக்கக்கூடிய வாய்ப்பு வசதிகளை பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு வேண்டிய பணத்தை கடனாகவோ அல்லது ஆயுள் காப்புறுதிக் கழகத்தின் மூலமாகவோ அல்லது மத்திய அரசின் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது பாங்க் மூலமாகவோ கடன் பெற்று உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு முன்னால் இங்கே பேசிய பல உறுப்பினர்கள் பல குறைபாடுகளை எல்லாம் சொன்னார்கள். அவர்கள் சொன்னதில் சில உண்மைகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளுக்குக் காரணம் அரசு கொள்கையில் இல்லை. அரசின் திட்டத்தில் குறைபாடு இல்லை. இந்த வாரியத்தின் மேல் மட்டத்திலும் குறைபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அரசின் திட்டங்களைச் செயல்படுத்துகின்ற நிர்வாகப் பிரிவில்தான் குறைபாடு இருப்பதாகத் தோன்றுகிறது. நிர்வாகக் காரியங்களில் ஏற்படுகிற சுணக்கத்தின் காரணமாக, கவனக் குறைவின் காரணமாக குறைபாடுகள் ஏற்படுகின்றன.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருஞானமூர்த்தி அவர்கள் ஒரு குறைபாட்டைச் சொன்னார்கள். கோடம்பாக்கம், அண்ணா நகர் போன்ற பகுதிகளில் 1973 டிசம்பர் வாக்கில் இருக்கிற பில்கள்தான் இப்போது அனுப்பப்படுகின்றன என்று சொன்னார்கள். 1973 டிசம்பர் மாதம் வீடுகளுக்குப் பயன்படுத்திய மின்சாரத்திற்கு இப்போதுதான் பில் அனுப்புகிறார்கள் என்றால், ஆறு மாதங்களுக்கு முன்னால் அனுப்ப வேண்டிய பில்லை இப்போது தான் அனுப்புகிறார்கள் என்றால், இந்த வாரியத்திற்கு எவ்வளவு நஷ்டம் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆறு மாதங்களுக்கு முன்னால் செலுத்த வேண்டிய பணத்தை இப்போது தான் கட்டுகிறார்கள் என்றால் அது மின்சார வாரியத்திற்கு நஷ்டம்.

[1974 ஆகஸ்ட் 24

[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

அதேநேரத்தில் ஆறு மாதம், ஏழு மாதம் மின்சாரம் உபயோகப்படுத்தியதற்கு ஒன்றாகச் சேர்த்து பில்லை அனுப்பி வைக்கிறார்கள். அதை மொத்தமாகக் கட்டுவதற்கு உபயோகிப்போருக்கு கஷ்டமாக இருக்கிறது. ஒரே நேரத்தில் மொத்த தொகையையும் கட்ட முடிவதில்லை. அந்த அளவுக்கு மின்சார வாரியத்தில் பணியாற்றுகிறவர்கள் செயல்படுகிறார்கள். கோடம்பாக்கம், அண்ணா நகர் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் என்னிடத்தில் இந்தக் குறையைச் சொன்னார்கள். நான் கூட 1973 டிசம்பர் பில்லைப் பார்த்தேன். அதற்குப் பிறகு பில் வரவில்லை என்று சொன்னார்கள். இதனால் பல லட்சம் ரூபாய் வாரியத்திற்கு வராமல் இருக்கிறது. அதனால் மின்சார வாரியத்தின் நிதிநிலை பற்றாக்குறை ஏற்படுகிறது. ஆகவே, இம்மாதிரியான காலதாமதம் ஏற்படாமல் மாதாமாதம் பில் அனுப்பி பாக்கி இருக்கின்ற பணத்தை எல்லாம் துரிதமாக வசூல் செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு குறையையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏற்கெனவே செலுத்த வேண்டிய தொகையை வசூலிக்கிற பிரிவு ஒரு இடத்தில் இருக்கிறது. பில் போடுகிற பிரிவு வேறு ஒரு இடத்தில் இருக்கிறது. இப்படி இரண்டு பிரிவுகளும் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஏற்கெனவே போட்ட பில்லுக்கான பாக்கியை செலுத்திவிட்டாலும் செலுத்திய விபரம் பில் வசூலிக்கும் செக்‌ஷன் ஆபீசுக்குத் தெரிவிக்கப்படாததால் அவர்கள் மீண்டும் அதையும் சேர்த்து பில் கொடு என்று கேட்கிறார்கள். அந்த பில்லை எடுத்துக் கொண்டு, பிரிவு ஆபீசுக்குச் சென்று முன் பாக்கியை கட்டிவிட்டேன் என்று சொல்லி, பில் போட்ட ஆபீசில் போய் முன் பாக்கி கட்டிவிட்டோம் என்று சொல்லி, அதற்கான தொகை கழித்துவிட்டு, மீதிப் பணத்தைப் போட்டு, அதிலே ஒரு எண்டார்ஸ்மெண்ட் வாங்கி வாருங்கள், அப்போதுதான் நாங்கள் பெற்றுக்கொள்வோம் என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த நிலைமை பொதுமக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருப்பதால் மாதாமாதம் உரிய பில்லை அனுப்பி, அதற்கான பணத்தை வசூல் செய்வதிலும் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதோடு வசூல் செய்கிற பிரிவு, பில் போடும்



1974 ஆகஸ்ட் 24]

[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

செக்‌ஷன் ஆபீசுக்கு பில் வசூல் செய்த விபரத்தையும் உடனுக்குடன் தெரிவிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத் தொழிலாளர்கள் ஆங்காங்கே சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். சங்கம் வைப்பது அவர்களுடைய பிறப்புரிமை. அதில் யாருக்கும் ஐயப்பாடு இல்லை. தொழிலாளர்கள் கோரிக்கைகளை, சங்கம் வைப்பது நியாயமானதுதான். அந்தக் கோரிக்கைகளை கவனிக்க வேண்டும். ஆனால் அந்தத் தொழிலாளர்கள் சங்கங்களையும் யூனியன்களையும் வைத்துக் கொண்டு வேலை செய்ய மறுக்கிறார்கள் என்பதுதான் வருந்தத்தக்கதாக இருக்கிறது. கோரிக்கைகளை வைக்கின்ற அதேநேரத்தில் அவர்களுடைய கடமைகளையும் மறந்துவிடக் கூடாது. கிராம மக்களுக்குச் செய்ய வேண்டிய அத்தியாவசியமான பணியைக்கூட செய்ய மறுக்கிறார்கள். என்னைப் போன்றவர்களுக்குக்கூட அதிலே கஷ்டம் ஏற்படுகிறது. சாதாரணமாக ஃப்யூஸ் போய்விட்டால் ஹெல்ப்பர் வந்து அதைப் போட்டுக் கொடுக்க வேண்டும். ஒரு கிராமத்தில் ஃப்யூஸ் போய்விட்டது என்று தெரியப்படுத்தவும், 3 நாட்கள் கழிந்த பின்னால் கூட வந்து போடவில்லை. இம்மாதிரி குறைபாடுகளைப் பற்றி, உதவிப் பொறியாளர், மேற்பார்வை பொறியாளர்களுக்குப் புகார் செய்தால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. காரணம் என்னவென்றால் தொழிலாளர்கள் யூனியனை வைத்துக்கொண்டு அவர்களை மிரட்டுகிறார்கள். புகார் செய்தும் ஹெல்ப்பர் வரவில்லை என்றால் மீண்டும் போய் கொஞ்சம் அழுத்திச் சொல்கிறோம். அப்போது 'நாங்கள் என்ன செய்வது சார், வேலை செய்ய வேண்டுமென்று நாங்கள் வற்புறுத்தினால் யூனியனைக் கூட்டுகிறார்கள்; அவர்கள் வந்து எங்களை மிரட்டுகிறார்கள்; மறியல் செய்கிறார்கள்; போராட்டம் என்று சொல்கிறார்கள்; சில சமயங்களில் அதிகாரிகளை கேரோ செய்கிறார்கள், ஆகவே எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை' என்று சொல்கிறார்கள். தொழிலாளர்கள் சங்கங்களை வைத்துக் கொண்டு, யூனியன்களை வைத்துக் கொண்டு, கடமையைச் செய்ய மறுக்கிறார்கள். கடமையைச் செய்ய மறுக்கின்றவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தொழிலாளர்கள் கோரிக்கைகளை

[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

விடுக்கின்ற அதே நேரத்தில் மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து, செய்ய வேண்டும். தாங்கள் பெறுகிற ஊதியத்தை எண்ணி( நாட்டின் வளர்ச்சியை எண்ணிப் பார்த்து, தேசிய முன்னேற்றம் குறித்து பணியாற்ற வேண்டும். அரசாங்கம் அதற்கு தக்க வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரக்குறைவான சாமான்கள் வாங்கப்படுவதாக பலர் இங்கே சொன்னார்கள். தரக் குறைவான மீட்டர்களைப் பொருத்துவதால் சரியாக ரீடிங் காட்டுவதில்லை. அடிக்கடி ஃப்யூஸ் போய்விடுகிறது. கேட்டால் தரக்குறைவானது என்கிறார்கள். மீட்டர், ஃப்யூஸ் யூனிட் போன்ற சாமான்களை அதிக விலை கொடுத்தாலும் பரவாயில்லை; நல்லதாகப் பார்த்து வாங்க வேண்டும். விவசாயி களுக்கு இன்றியமையாத ஒன்று பம்புசெட். பம்புசெட் சுச் போட்டவுடன் ஃப்யூஸ் ஆகிவிடுகிறது. ஏன் இப்படி ஆகிறது என்று கேட்டால் மீட்டர் கப்பாசிடி இவ்வளவுதான் என்று சொல்கிறார்கள். இந்தமாதிரியான குறைபாடுகள் இல்லாமலிருப் பதற்கு தரமான சாமான்களை வாங்க வேண்டும்.

நம்முடைய மாநிலத்திலே இருக்கின்ற தொழிற்சாலைகளில் தரமான சாமான்களை உற்பத்தி செய்தாலும், இங்கே வாங்காமல் பஞ்சாப் போன்ற மாநிலங்களிலிருந்துதான் சாமான்கள் வாங்கப் படுகின்றன. நம்முடைய மாநிலத்தில் உற்பத்தியாகின்ற பொருட்களை வாங்கினால், இங்கே தொழில் வளர்ச்சியடைந்து ஆயிரக்கணக்கான மக்களுக்குத் தொழில் கிடைக்கும். வேலை யில்லாத் திண்டாட்டம் குறையும். எனவே, மின்சார வாரியத்தில் பயன்படுத்தும் பொருட்களை நம்முடைய மாநிலத்திலிருந்தே வாங்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில இடங்களிலே மீட்டர்கள் அதிக அளவையோ அல்லது குறைந்த அளவையோ காட்டும். மீட்டர் சரியாக ஓடவில்லை; அதிக அளவில் கணக்கைக் காட்டுகிறது; அதை மாற்ற வேண்டு மென்று சொன்னால் மாற்ற மாட்டோம் என்கிறார்கள். அதை எல்லாம் அதிகாரிகள் பரிசீலனை செய்து பொதுமக்களுக்கு



[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

சங்கடங்கள் ஏற்படாத வகையில் தரம் இல்லாத சாமான்களை மாற்றிவிட்டு, உறுதியான தரமான சாமான்களை வழங்கி, பொது மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் மின்சார வாரியத்திற்கு சொந்த கட்டடங்கள் பல இடங்களில் இல்லை. வாடகைக் கட்டடங்களில் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மவுண்ட் ரோட்டிலே 18,000 ரூபாய் மாத வாடகையில் ஒரு அலுவலகம் இயங்கி வருவதாகச் சொல்லப் படுகிறது. ஒரு வருடத்திற்கு 2½ லட்சம் ரூபாய் வாடகை, 4 ஆண்டுகளுக்கு 10 லட்சம் ரூபாய் வாடகை கொடுப்பதாக இருந்தால் மின்சார வாரியம் எப்படி லாபத்தில் இயங்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட இடங்களிலாவது முதலில் மின்சார வாரியத்திற்கு சொந்தமான கட்டடங்களை 10 அல்லது 15 லட்சம் ரூபாய் செலவானாலும் பரவாயில்லை; கட்ட வேண்டும். அதனால் பிற்காலத்தில் பெரும் லாபம் கிடைக்கும். ஆகவே வாடகைக் கட்டடங்களுக்குப் பதிலாக சொந்தக் கட்டடங்களைக் கட்ட வாரியம் முற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய உதவிப் பொறியாளர் அலுவலகத்திற்கு தொலைபேசி வசதி கிடையாது. இப்போது அடிக்கடி கரண்ட் கட் வருகிறது. திடீர் திடீரென்று ஃப்யூஸ் போய் விடுகிறது. திடீரென்று நடு இரவிலே மின்சாரம் தடைபட்டு விட்டால் ஏ.இ. அலுவலகத்திற்கு தெரிவிக்க வசதியில்லாமல் இருக்கிறது. அங்கே தொலைபேசி இருந்தால் உடனுக்குடன் தெரிவித்துவிடலாம். ஆகவே, ஒவ்வொரு உதவிப் பொறியாளர் அலுவலகத்திலும் தொலைபேசி வசதி செய்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் உள்ள கமுதியில் ஒரு துணை மின் நிலையம் கட்டிக்கொண்டு வருகிறார்கள். அதற்காக மின்சாரத் துறை அமைச்சரவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மின் நிலையத்திற்கு தேவையான நிலம் ஓராண்டு காலத்திற்கு முன்பே வாங்கப்பட்டுவிட்டது. நிலத்தை வாங்குவதற்கு முறைப்படி நடவடிக்கை எடுத்தால் காலதாமதம் அதிகம் ஆகும்

என்பதால் அந்த நிலச் சொந்தக்காரர்களுடன் நேரடியாகப் பேசி, சுமார் 20 ஏக்கர் நிலத்தை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். உள்ளூர் விலையை நிர்ணயித்து, அந்த விலைக்கு வாங்கிக் கொடுத்தோம். துணை மின் நிலையத்திற்கான கட்டட வேலையும் முடிந்துவிட்டது. ஆனால் ஓராண்டு காலத்திற்கு மேலாகியும் அந்த நிலச் சொந்தக்காரருக்கு இன்னும் பணம் கொடுக்கவில்லை. நிலத்தைப் பெற்றுத் தரும் பொறுப்பு வருவாய்த் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் இன்னும் 4 (1) நோட்டிபிகேஷன் கூட செய்யவில்லை. எந்தவிதமான விளம்பரமும் செய்யப்படவில்லை. சாதாரணமாக செய்ய வேண்டிய சடங்குகள் எல்லாம் செய்தால் இன்னும் ஓராண்டு காலம் கூட ஆகும். அந்த நிலத்தை வாங்கிக் கொடுப்பதில் நான் பொறுப்பேற்றிருப்பதால் நிலச் சொந்தக்காரர்கள் என்னைத் தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். நான் இதுபற்றி இராமநாதபுரம் மேற்பார்வை பொறியாளரிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் எடுத்துச் சொல்லிவிட்டேன். இதிலே வருவாய்த்துறையும் இந்த மின்சார வாரிய அதிகாரிகளும் சற்று அதிகக் கவனம் செலுத்தி இந்த நிலைமைகள் அகற்றப்பட்டு, துரிதமாக பணம் வழங்க பெருமுயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் கொடுப்பதிலே காலதாமதமாகின்றது. வரிசைப் பிரகாரம் கூடக் கொடுப்பதில்லை—பைபாஸ் செய்து கொடுக்கிறார்கள் என்கிற புகார்களும் வருகின்றன. இதற்கு ஒரு வரையறையை ஏற்படுத்திக்கொண்டு, முறையாக, காலதாமதமின்றி பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் கொடுக்க வகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கோட்டப்பொறியாளர் அலுவலகம் என்றால் ஓ அண்டு எம் இராமநாதபுரத்தில் இருக்கிறது. கமர்ஷியல் சிவகங்கையில் இருக்கிறது. கமர்ஷியல் கம் கன்ஸ்ட்ரெக்ஷன் காரைக்குடியில் இருக்கிறது என்று இப்படி ஒரு விவசாயி 150 மைல் சுற்றளவுக்குச் சென்று தொடர்பு கொள்ள வேண்டிய நிலை உள்ளது. என்னுடைய கருத்தெல்லாம் ஒரு கோட்டப் பொறியாளர் அலுவலகம் என்றால்—அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு அனுகூலமாக மின்வாரியம் சம்பந்தப்பட்ட எல்லா







அலுவலகங்களின் பிரிவுகளும் ஒரேயிடத்தில் இருக்கும்படியாகச் செய்தால்தான் மக்களால் ஒரு இடத்திலேயே அங்கங்கு தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படும், இதனைச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற ஆண்டு மின்சாரவெட்டு ஏற்பட்டபொழுது—இன்ன இன்ன நேரத்தில் இந்தந்தப் பகுதியில் மின்சார சப்ளை கிடைக்கும் என்று அறிவித்தார்கள். அதனால் விவசாயிகள் அந்த நேரத்தில் தங்கள் பணிகளைச் செய்துகொள்ள முடிந்தது. ஆனால் இந்த ஆண்டு அதுபோல அவர்கள் செய்யவில்லை. அதன் காரணத்தினால் விவசாயிகள் அதுவும் கமுதி பகுதியில் மிகவும் தொல்லைக்கு ஆளானார்கள். இதுபோல அன்றி மின்சாரவெட்டு இருக்கிற நேரத்தில் எந்தந்தப் பகுதியில் எந்த நேரம் மின்சார சப்ளை செய்யப்படும் என்பது அறிவிக்கப்படவேண்டும் என்று தெரிவித்து மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையை ஆதரித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

* திரு. கே. என். குமாரசாமி: சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் பேரிலே என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் மினசார வாரியத்தில் இருக்கிற சில குறைகளை எடுத்துச் சொல்லி எப்படி நிவர்த்திக்க வேண்டும் என்று சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே இன்னும் பத்தாண்டுகளுக்கு மின்சார வெட்டு இருந்தே தீரும் என்று ஒரு முடிவாகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம் தெளிவானது. யுத்தகால அவசர நடவடிக்கை போல இத்துறைப் பணிகள் ஆற்றப்படவேண்டும் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. இன்றைக்கு மின்சாரம் இல்லாமல் தமிழ்நாட்டில் எதுவும் இயங்காது என்ற அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மின்சார வெட்டைச் சொல்லி—தொழில்களுக்குத் தேவையான மின்சார சப்ளையைக் கொடுக்காது நம்மால் தட்டிக் கழிக்க முடியாது. தொழில் உற்பத்தி வளர்ந்து வருகிற நேரத்தில் சிற்றூர்களுக்கும், பேரூர்களுக்குமாக 98 சதவிகிதம்

[திரு. கே. என். குமாரசாமி] [1974 ஆகஸ்ட் 24

மின்சார சப்ளை செய்திருக்கிறோம். அதில் மட்டும் மன நிறைவு கொண்டுவிட முடியாது. தொழில்கள் பாதிக்கப்படுகின்றன, உற்பத்தி பாதிக்கப்படுகின்றன என்பதை கவனிக்காது இருக்க முடியாது. மின்சார உற்பத்திக்கு கல்பாக்கம் போன்ற திட்டங்களை நாம் சொல்கிறோம். மத்திய சர்க்காரைக் கேட்டு, அவர்கள் தரவில்லை என்று சொல்லி தட்டிக் கழித்துவிட முடியாது.

கோவையில் உள்ள பஞ்சாலைகளை எடுத்துக்கொண்டால் தங்களுக்குத் தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்துகொள்ள தாங்களே ஒரு தர்மல் நிலையம் வைத்துக்கொள்ள அனுமதி கேட்டு வருகிறார்கள். முன்பு இருந்த அரசாங்கமும் அதற்கு அனுமதி தரவில்லை. நமது அரசாங்கமும் அனுமதி மறுத்து வருகிறார்கள். ஏன் அதுபோன்ற அனுமதியை அளிக்கக்கூடாது? நாம் அங்கே அவர்கள் ஒரு தர்மல் நிலையத்தை ஏற்படுத்திக்கொள்ள அனுமதித்தால் அங்குள்ள பஞ்சாலைகளின் பிரச்சினையாவது ஓரளவு தீரும்.

இன்னும் விவசாயிகளுக்கு காலையில் 6 மணி—இரவில் 10 என்பதாக 16 மணி கொடுக்கிறோம். விவசாய வேலைகளின் தன்மையைக் கருதி பகல் பூராவும் கேட்கிறார்கள். நம்மால் கொடுக்க முடியவில்லை. இன்னும் ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரியை எடுத்துக்கொண்டால் நாம் அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டியதற்குப் பதிலாக 40 சத விகிதம் வெட்டு என்றும் சகட்டுமேனிக்கு எல்லாவற்றுக்கும் 40 சத விகிதம் வெட்டைக் கொண்டுவருகிறோம். கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறவர்களுக்கு—இன்கம்டாக்ஸ் கட்டுகிறவர்களுக்கு தனியாகவே ஜெனரேட்டர்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கலாம். ஆனால் சிறு தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு—தராதரம் பார்த்து அவசியம் இல்லாத துறைக்கு அதிக அளவில் வெட்டை ஏற்படுத்தினாலும்—இவர்களுக்கு இவர்களது தொழிலின் தன்மையைப் பார்த்து மின்சக்தி அளிக்கவேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். இதை எல்லாம் பார்த்துச் செய்வது என்றால் அதிகாரிகள் அங்கங்கே போய் பரிசீலனை செய்தாக வேண்டும். இப்படிச் செய்யாது ஒட்டுமொத்தமாக 40 சத விகிதம் வெட்டு என்று கொண்டுவருவது பல வளர்கிற தொழில்கள் எல்லாம் பாதிக்கப்படக்கூடிய நிலையை உண்டாக்குகிறது.



1974 ஆகஸ்ட் 24] [திரு. கே. என். குமாரசாமி]

இரண்டாவது, லாசைப் பற்றிச் சொன்னார்கள். 18 பர்சென்ட் லைன் லாஸ் என்றால் கட்டாயம் இதைப் பரிசிலித்தாக வேண்டும். ஏற்கனவே பங்களூரில் இந்த லைன் லாசைக் குறைப்பதற்கு நீளமாகக் கம்பிகள் போகக்கூடிய இடங்களில் ஒரு மைலுக்கு ஒரு டிரான்ஸ்பார்மர் வைத்துக் குறைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதுபோன்று லைன் லாசைக் குறைக்க இங்கே எந்தவிதமான பரிசீலனையும் செய்யப்பட்டதாகத் தெரியவில்லை.

நெய்வேலியில் 600 மெகாவாட் உற்பத்தித் திறன் இருந்தும் அங்கே 250 மெகாவாட்டுக்கு மேல் உற்பத்தி செய்யப்படவில்லை. மின்சார வாரியம் எதற்காக இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிதி ஆதாரங்களைப் பெருக்குவது பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில் ஒரு விஷயத்தில் அவர்கள் கருத்தைத் தெரிவிக்கவேண்டும். 12—7—1974 அன்று இந்தியப் பிரதமர் பங்களூரில் பேசுகின்றபோது There was no justification for subsidies in the sale of electricity for irrigation' என்று குறிப்பிட்டிருக்கிறார்களே, இதைப்பற்றியும் அவரது கருத்தைச் சொன்னால் பரிசீலிக்கலாம்.

**திரு. கே. என். குமாரசாமி:** அவர்கள் என்ன சொன்னார்கள் என்பதைப் பார்க்கவில்லை. தமிழ்நாட்டில் இருக்கிற நிலைமையில் இரண்டு மூன்று தர்மல் நிலையங்களை நாம் ஏன் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** அவர்கள் என்ன சொன்னார்கள் என்று பார்க்கவில்லை என்கிறார்கள். 12—7—1974-ல் அவர்கள் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. 'There was no justification for subsidies in the sale of electricity for Irrigation' என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நானே சொல்லித்தான் இவரது கருத்து என்ன என்று கேட்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, விவசாயிகளுக்குச் சலுகை கொடுக்கக்கூடாது என்று அவர்கள் சொன்னார்கள் என்றால் ஏன் அப்படிச் சொன்னார்கள் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. நான் அதைப் பார்க்கவில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: அதைத்தான் நான் சொல்கிறேன். விவசாயிகளுக்கு சலுகை கொடுக்கக்கூடாது என்று பிரதமர் சொல்லியிருக்கிறார்களே, அதுபற்றி தங்கள் கருத்து என்ன?

திரு. கே. என். குமாரசாமி: என்னுடைய கருத்து சலுகை அளிக்கவேண்டுமென்பதுதான். ஆனால், சலுகை கொடுக்கக்கூடாது என்று சொன்னால், இன்றைக்கிருக்கிற நிலைமையிலே முடியாது. விவசாயிகள் ஏற்கனவே பல கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். காரணம், விவசாயிகளுக்கு அடிஷனல் செக்யூரிட்டி டெபாசிட், மினிமம் சார்ஜ் எல்லாம் ஏராளமாகப் போட்டிருக்கிறார்கள். ஓடுகிற கரன்ட்டுக்கு, மின்சாரத்திற்கு, யூனிட்டுக்கு, இவ்வளவு என்று போட்டால், விவசாயி கொடுக்கத் தயாராக இருக்கிறான். ஆனால், அடிஷனல் செக்யூரிட்டி டெபாசிட் என்று 3 மாதத்திற்கு டெபாசிட் போட்டிருக்கிறார்கள். அது ரூ. 600, ரூ. 700 என்று 3 மாதத்திற்கு ஒருமுறை வரும். மின்சாரம் ஓடவே இல்லையென்றால்கூட, மினிமம் சார்ஜ் கொடுக்கவேண்டுமென்று லிமிட் வைத்திருக்கிறார்கள். அதனாலே, விவசாயிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நான் விளக்குவதற்காகத்தான் கேட்கிறேன். மன்னிக்கவும் இடையிலே குறுக்கிடுவதற்காக, பிரதமர் அவர்கள் என்ன கருத்திலே சொல்லியிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. தெரிந்துதானே சொல்லியிருப்பார்கள். தெரியாமல் சொல்லி இருப்பார்களா? தெரியாமல் சொல்லியிருப்பார்கள்



என்றால், நீங்கள் இன்றைக்கு இருக்கிற விவசாயிகளுடைய நிலைமையைப் பார்த்துக் கூறுகிறீர்களா? இதனுடைய விளக்கம் என்ன?

திரு. கே. என். குமாரசாமி: பல மாநிலங்களிலே விவசாயிகளுக்கு மின்சாரத்தைக் குறைவாக கொடுத்திருக்கிறார்கள். அந்த மாநிலங்கள் வேண்டுமானால் அதிகமாகப் போட வேண்டுமென்று சொல்லி இருக்கலாம். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் அடிஷனல் செக்யூரிட்டி டெபாசிட் மினிமம் சார்ஜ் எல்லாம் போட்டிருக்கிறார்கள். அங்கே கிடையாது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மற்ற மாநிலங்களிலே நம்மைவிடக் குறைவாகப் போடவில்லை. இங்கே டிஸ்டிரிபியூஷன் பாய்ன்ட்டிலே 31 பைசாவாகிறது. நாம் 12 பைசாவாக வைத்துள்ளோம். இதைக் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டுமென்பதுதான் பிரச்னை. நம்மைவிட மற்ற மாநிலங்களில் குறைவாகக் கொடுத்தால்கூட, நாம் சலுகைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

இன்றைக்கிருக்கிற நிலைமையிலே 12 பைசா வாங்கிக்கொண்டிருக்கிறோம். இது போதாதுதான். அது ஒரு பிரச்னையாக இருக்கிறது. அவர்கள் நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு யோசனை சொல்கிறார்கள். அவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள் என்பதாலே அந்த ஆதாரத்தைச் சொல்லுங்கள் என்று கோருகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பிரதம மந்திரி அவர்கள் பொதுப்படையாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த மாநிலத்தைப் பொறுத்தவரையிலே, இங்கே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் நிதி ஆதாரத்தைப் பொறுத்து ஆராய வேண்டியிருக்கிறது, மெய்யாகவே நிதி ஆதாரம் குறைவாக இருக்கிறதா என்பதை

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 ஆகஸ்ட் 24

ஆராய வேண்டியிருக்கிறது, இங்கே மிச்சப் படுத்த வழி இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அதற்குப் பதில் கிடைத்த பிறகு கூடுதல் நிதி ஆதாரம் என்ன என்று சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நிதி ஆதாரத்தினை இன்றைக்கிருக்கிற நிலைமையிலே எந்த எந்த வகையிலே தேடிக் கொள்ளலாம் என்று சொல்லுங்கள், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். இந்த ஆண்டு ரூ. 23 கோடிக்கு மின்சாரம் வாங்க வேண்டியிருக்கிறது. சென்ற ஆண்டு ரூ. 13 கோடிக்கு வாங்கினோம். வாங்கவேண்டியது அதிகம். நிலக்கரி விலை ஏறியிருக்கிறது. வரி உயர்வு கிடையாது, கட்டண உயர்வு கூடாது என்றால், எந்த எந்த விதத்திலே ஆராயலாம், நிதி ஆதாரத்தை உயர்த்தலாம், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கலாம் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசிவிட்டீர்கள். திரு. குமாரசாமி அவர்கள் பதில் சொல்லட்டும்.

திரு. கே. என். குமாரசாமி : நான் ஏற்கெனவே சொன்னேன், மற்ற மாநிலங்களிலே, தமிழ்நாட்டைப் போல் விவசாயிகளுக்கு அடிஷனல் செக்யூரிட்டி போடவில்லை. போடாத மாநிலங்களில் எப்படிப்பட்ட நிதி ஆதாரங்களை விவசாயிகளுக்குக் கொடுக்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனால், இங்கே இரண்டு விதமான சார்ஜை நாம் போடுகிறோம், மினிமம் சார்ஜ். . .

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அந்தக் கருத்தையும் ஒத்துக்கொள்கிறேன். மொத்தமாகப் பரிசீலனை செய்து பார்த்து, அந்த மாதிரி ஏற்றுக்கொள்வதாக இருந்தால், மாற்றிக்கொள்ளலாமா? அடிஷனல் டெபாசிட் இல்லாததால்தான் குறைத்துப் போடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். பரிசீலனை செய்து தேர்வது அவசியமிருந்தால், அந்த அளவு போட சம்மதிக்கிறீர்களா?



1974 ஆகஸ்ட் 24]

திரு. கே. என். குமாரசாமி : பரிசீலிக்க வேண்டிய விஷயம் தான். தலைவரவர்களே, அப்படிப்பட்ட நிலைமைகள் நான் ஏற்கனவே சொன்னேன், நம்முடைய மின்சார வாரியத்தின் முழுத் திறனையும் பயன்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கியாக வேண்டும். தொழில் தகராறுகள் உருவாகி இருக்கின்றன. மின்சாரம் பாதிக்கப்படுகிறது. நெய்வேலியிலே இன்ஜினியர்கள் கூட ஸ்டிரைக் பண்ணுகிறார்கள் என்று சொல்கிறார்கள். நீங்கள் ஒன்றை தெரிந்துகொள்ளவேண்டும். அத்தியாவசிய சர்வீஸ் என்ற முறையிலே, இந்த ஸ்டிரைக்கைக்கூட தடை செய்யலாம். நியாயமான குறைகளைப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். ஆனால், அத்தியாவசிய சர்வீசிலே மின்சாரத்தைக் கொண்டுவந்து, மின்சார பற்றுக்குறை ஏற்பட்டுள்ள இக்காலத்தில், ஸ்டிரைக்கை தடுக்காமல், அந்தப் பிரச்னையை ஏன் வளர்க்கவேண்டும்? மின்சார இலாகாவிலே 10,000 பேர்களை டெம்பரரியாக வைத்திருக்கிறோம். அவர்களைக் கேட்டால், பல வருஷங்களாக இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அவர்களை பெர்மனென்ட் செய்யவேண்டும். இந்த மின்சார இலாகாவை, சர்ச்சைக்குரிய இலாகாவாக இல்லாமல் மாற்றவேண்டும். இந்த நாட்டு மக்களுக்கு முழுத் திறமையை அளிக்க, மின்சர இலாகா விழிப்புடன் இருந்தால்தான் முடியும். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் பம்ப் செட்களுக்கு நிறைய கொடுத்திருக்கிறோம், தமிழ் நாட்டிலேதான் பம்ப் செட்கள் அதிகம். கிராமங்களுக்கு விளக்குகள் போட்டிருக்கிறோம் என்று சொல்லி பெருமை அடித்துக்கொள்ள முடியாது.

வளர்கிற நாட்டில், நமக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமைகளை, நாம் முழு சக்தியையும் பயன்படுத்தி, வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே, சிறு தொழில்கள் விஷயத்திலே நான் ஏற்கெனவே சொன்னமாதிரி, வளர்ச்சி அடைகிற தொழிலுக்கு மின்சார கனெக்ஷன் கேட்டால் இங்கே சி.இ.-யைக் கேட்கிற அளவுக்கு இன்னும் நிலைமை இருக்கிறது.

ஏற்கனவே சொன்னோம், பல வருஷங்களாகச் சொன்னோம். பஞ்சாப், அரியானா மாநிலங்களிலே ஒரு தொழில் உண்டாக்கி விட்டு மின்சாரம் கேட்டால் கொடுத்து விடுகிறான். இந்த மாதிரி நிலைமைகள் அங்கே இருக்கின்றன. இங்கே இருக்கிற நிலைமை

[திரு. கே. என். குமாரசாமி] 1974 ஆகஸ்ட் 24

என்னவென்றால் டவுன் பிளானிங் ஆபீசருக்குப் போக வேண்டும். டவுன் பிளானிங் ஆபீசர் பிளானிங் சரியில்லையென்றால். அப்ளூவ் பண்ண முடியாது என்று திருப்பி விடுகிறார். ஹைட் இவ்வளவு இருக்கவேண்டும். என்று ஏதாவது ஒன்றைச் சொல்கிறார். மின் சார இலாகா அதைச் சரி செய்யுங்கள் என்று சொல்கிறது. இந்த நாட்டிலே தொழில் வளர வேண்டுமென்றால் இவ்வளவு கோளாறு இருந்தால் என்ன செய்வது? அரியானாவுக்கு ஒரு சட்டம், பஞ்சாபுக்கு ஒரு சட்டம், இங்கே ஒரு சட்டம் என்றால். எப்படி முடியும்? வளர்கிற தொழில்களுக்கு உதவி செய்யவேண்டும்.

இப்பொழுது டிரான்ஸ்ஃபார்மர்கள் 440 கிலோவாட் கப்பாசிட்டி என்று சொல்கிறார்கள். ஆனால் கப்பாசிட்டி வருவது 325 கிலோ வாட்தான். இந்த மாதிரி லோட் வந்தால் மோட்டார் எரிந்து விடுகிறது. ஒரு மோட்டார் காயில் கட்ட ரூ. 600, ரூ. 700 ஆகிறது. லோட் கம்மியாக இருக்கும்போது மறுபடியும் சர்வீசை நீட்டிக் கொடுக்க வேண்டியது அவசியமா? அதில் தாங்குமா. இவ்வளவு தருகிறோமே என்று பார்ப்பதே கிடையாது. அதனுடைய விளைவு, விவசாயிகள் 3 மாதத்திற்கு ஒரு முறை மோட்டாரை ரிப்பேர் செய்யவேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அதனால் எவ்வளவு லாஸ்? விவசாயிகளுக்கு லாஸ் ஆவதைக் கணக்கிலே எடுத்துக் கொள்வதே கிடையாது. ஐந்து மாதமாக போய்க்கொண்டிருக் கிறது. 440 கிலோவாட் என்று நெம்பர் போட்டிருக்கிறோம். அது வருகிறதா, இல்லையா? ஏன் வரவில்லை என்று யார் பார்க்கி றார்கள். இந்த மாதிரி சூழ்நிலையை நாம் மாற்றுகிறவரைக்கும் மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுக்கொண்டே இருக்கும்.

தனியாக, வசதி உள்ளவர்கள். ஜெனரேட்டர்கள் வைத்துக் கொள்கிறார்கள். வசதியில்லாதவர்கள் வைத்துக்கொள்ள முடியாது. ஆயில் என்ஜினை ஏற்றுக்கொள்கிறார்கள். விவசாயி



1974 ஆகஸ்ட் 24] [திரு. கே. என். குமாரசாமி]

களுக்குப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். உணவு உற்பத்தி பாதிக்கப்படுகிறது. இந்த ஜெனரேட்டர்களை நாமே உற்பத்தி செய்யவேண்டும், அல்லது வெளி நாட்டிலே கடன் வாங்கியோ ஜெனரேட்டர்களைக் கொடுக்கலாம். நீங்கள்தான் சொல்லியா யிற்றே, இந்த மின்சார பற்றாக்குறை போக 10 ஆண்டுக் காலமாகும் என்று. கல்பாக்கம் போன்ற மின்சார திட்டத்தை உண்டாக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்திலே 925 மெகாவாட்டுகள் கிடைக்குமென கணக்கிடப்பட் டிருக்கிறது. 1978-79-ல் நம்முடைய பற்றாக்குறை 5,183 மில்லியன் யூனிட்டுகளாக இருக்கும் என்று சொல்கிறார்கள். இன்னும் 5,183 மில்லியன் யூனிட்டுகள் வரையில் 1979-ஆம் ஆண்டில் பற்றாக்குறை வரப் போகிறது என்று சொன்னால் எண்ணூர் திட்டம், குந்தா திட்டம், சுருளியாறு திட்டம், கல்பாக்கம் திட்டம் இவைகளை யெல்லாம் வேகமாக நடத்த வேண்டும்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்க வேலைக்கு மத்திய சர்க்கார் அனுமதி வழங்கவில்லை என்று சொன்னார்கள். நம்முடைய தேவை களை நாம் சொல்லித்தான் ஆகவேண்டும். மத்திய அரசாங்கத்தை நாம் வற்புறுத்தியாகவேண்டும், தமிழ்நாட்டின் நிலைமையை அவர் களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். அவர்களும் நல்ல முடிவு செய்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. நாம் இங்கே இருக்கக் கூடிய வேலைகளை ஒழுங்காக சரிவர சீக்கிரமாகச் செய்தால்தான் பிரச்னைக்கு முடிவு காண முடியும்.

மின்சார வாரியத்திலே பில்கள் மொத்தமாக 6 மாதத்திற்குப் போட்டு ஒட்டாகக் கட்டுங்கள் என்று சொல்லுகிறார்கள். இந்த வருடம் வறட்சி நிலைமை இருந்தது. எல்லாம் போடுகிற காலம் இது. இந்தக் காலத்தில் 6 மாதத்திற்கும் ஒட்டாக பில் தொகையை கட்ட வேண்டும், இல்லாவிட்டால் கனெக்ஷனை பிடுங்குவேன் என்று சொல்கிறார்கள். 21-ஆம் தேதிக்குள்ளாகப் பணம் கட்டவில்லை யென்றால் பியூஸை எடுப்பேன் என்றால் அந்த நிலைமையை நீங்கள் தொழிற்சாலைகளுக்குச் செய்கிறீர்களா? தொழிற்சாலைகள் கட்ட வேண்டுமென்று வாய்தா கேட்டால் கொடுக்கிறீர்கள்; அவர்கள் தவணை முறையில் கட்டலாம். ஆனால் விவசாயி மட்டும் ஒட்டாகக் கட்டவேண்டுமா? தொழிற்சாலைகள் நல்ல முறையில் நடக்க நீங்கள் அப்படிச் செய்கிறீர்கள் என்றால் விவசாயி பாழாகப்போக

[திரு. கே. என். குமாரசாமி] [1974 ஆகஸ்ட் 24

வேண்டுமா, விவசாயம் நன்றாக நடக்க வேண்டாமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகளுக்கு ஏன் டைம் கொடுக்கக் கூடாது. பியூஸ் கட்டை ஏன் பிடுங்கவேண்டும், 21-ஆம் தேதி என்றால் அதற்குப் பிறகு அவர்களுக்கு டைம் கொடுத்தால் வாய்தா கொடுக்கக்கூடாதா? உடனே பியூஸ் கட்டை பிடுங்கக் கூடாது, அந்த முறையை மாற்றவேண்டும் என்று சொல்லி இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவோடு முடிவுற்று 26—8—1974 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

### 9. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### A. *Statutory Rules and Orders*

99. Notification issued with G.O. Ms. No. 653, Rural Development and Local Administration, dated 16th March 1974, in regard to declaration of the areas forming the Mettur Local Planning area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972].

100. Notification issued with G.O. Ms. No. 384, Co-operation, dated 24th October 1973, in regard to an amendment to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963 as subsequently amended. [*Laid on the table of the House under section* 119 (4) *of the Tamil Nadu Co-operative Societies Act*, 1961 (*Tamil Nadu Act* 53 *of* 1961].

101. Notification issued with G.O. Ms. No. 650, Rural Development and Local Administration, dated 16th March 1974, in regard to declaration of the areas forming the Chingleput Local Planning area. [*Laid on the table of the House under section* 123 (2) *of the Tamil Nadu Town and Country Planning Act*, 1971 (*Tamil Nadu Act* 35 *of* 1972).]



1974 ஆகஸ்ட் 24]

102. Notification issued with Roc. No. 53497/73-E4, dated 12th October 1973, in regard to extension of the provision of the Tamil Nadu District Municipalities Act, 1920, relating to vital statistics in the entire area for the time being within the jurisdiction of the Jayankondam Town Panchayat in Tiruchirappalli district. [*Laid on the table of the House under section* 129 (2) *of the Tamil Nadu Panchayats Act*, 1958. (*Tamil Nadu Act XXXV of* 1958).]

#### B. *Reports, Notifications and Other Papers*

@ 82 Speech of the Hon. Thiru O. P. RAMAN, Minister for Electricity, initiating the discussion on the Annual Financial Statement for 1974-75 and the Supplementary Financial Statement for 1973-74 of the Tamil Nadu Electricity Board. (Tamil and English).

---

@ Laid on the table of the House on 23rd August 1974.

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

### திங்கட்கிழமை, 1974 ஆகஸ்ட் 26.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

#### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 313, 314, 315, 316 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

#### வேலூர் மருத்துவ மனைக்கு அரசு மானியம்

*317 வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் வேலூர் C.M.C. மருத்துவ மனைக்கும், கல்லூரிக்கும் அரசு மானியம் வழங்குகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) அரசு மானியம் மருத்துவ மனைக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

(இ) இம்மருத்துவ மனையில் நாள்தோறும் இலவச சிகிச்சை பெறும் ஒவ்வொரு ஏழை நோயாளிக்கும் ரூ. 0.50 வீதம் கணக்கிட்டு ஆண்டொன்றிற்கு ரூ. 20,000 மேற்படாமல் சில விதி முறைகளின்படி மானியம் வழங்கப்படுகிறது.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே, தமிழர்களுக்கு 80 சத வீத வேலை வாய்ப்பு என்ற நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் வேலூர் மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெறுகிற நர்சு களுக்கும், எம்.பி.பி.எஸ். படிக்கிறவர்களுக்கும் 80 சத வீத வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அந்தக் கேள்வி இதிலிருந்து எழாது.

### Infectious Diseases Research Unit, Tondiarpet

* 318. *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the management of the Reasearch Unit of the Infectious Diseases Hospital, Tondiarpet has been handed over to the Corporation of Madras; and

(*b*) if so, from when and the reasons thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம்.

(இ) 1—4—1972 முதல் தொற்றுநோய்-மருத்துவமனையில் பெரியம்மை நோய் குறித்த ஆராய்ச்சிக்காக இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவால் ஏற்படுத்தப்பட்ட பிரிவு, ஆராய்ச்சிப் பணியை முடித்துவிட்டது. இக்குழு இது தொடர்பான பிற நோய்களை ஆராய்ச்சி செய்வதற்காக இப்பிரிவைப் பணி வருமாறு இம்மாநகராட்சியைக் கேட்டுக் கொண்டது.

**திரு. என். கே. பழனிசாமி:** அம்மை நோய் காரணமாக 13-20 இலட்சம் பேர் வருஷமொன்றுக்கு இறந்து விடுகிறார்கள். ஆகவே, சர்க்காரே ரிசர்ச் நடத்துவதற்குப் பதிலாக கார்ப்பரேஷனிடம் அந்தப் பணியை விடுவது சரியா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஏதோ 13-20 இலட்சம் பேர் என்று சொன்னார்கள். (திரு. என் கே. பழனிசாமி: இந்தியா முழுவதும்) இந்தியா முழுவதும்கூட அத்தனை இலட்சம் பேர் அல்ல. அது ஏதோ ஆயிரக் கணக்கில்தான் இருக்க முடியும். தமிழ்நாட்டில் இந்த அம்மை நோயினால் ஏற்பட்ட பாதகம் பெருமளவு ஒழிக்கப் பட்டு விட்டது. ஓராண்டில் பெரியம்மை நோய் காணப்பட்டவர்கள் இரண்டு பேர் மூன்று பேர்தான்.



அதுவும் வெளியிலிருந்து வருகிறவர்களினால்தான். கடந்த ஆண்டு 7-8-10 பேர்தான் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்கள். இது நான் நினைவிலிருந்து சொல்வது. ஆகவே, பெரியம்மை நோய் குறித்த ஆராய்ச்சி, மாநகராட்சியின் பொறுப்பில் உள்ள தொத்து நோய் மருத்துவ மனையில் டாக்டர் இராமச்சந்திர ராவ் அவர்களிடம் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவால் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த ஆராய்ச்சி பெருமளவு நிறைவேறி முடிந்துவிட்டது என்றும் அந்தப் பொறுப்பை மாநகராட்சி மன்றமே எடுத்து நடத்த வேண்டும் என்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவினர் கேட்டுக் கொண்டார்கள். அதற்குள்ள தளவாடங்கள், கருவிகளை ஒப்படைக்கத் தயாராக இருந்தார்கள். மாநகராட்சி மன்றம் ஏற்றுக்கொண்டது. இப்பொழுது டாக்டர் இராமச்சந்திர ராவ் அவர்கள் அந்தப் பொறுப்பில் இருந்து தம்மை விடுவிக்கும்படி கேட்டு விடுவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது தொடர்ந்து வேறு விதமான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

**டாக்டர் ச. மு. பழனியப்பன்:** தலைவர் அவர்களே, இப்பொழுது தண்டையார்பேட்டை மருத்துவ மனையின் நிர்வாகப் பொறுப்பு கார்ப்பரேஷனில் ஒப்படைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதற்கென்று தனியாக நிர்வாகக் குழுவினை நிறுவி அதன் பொறுப்பில் அந்த நிர்வாகத்தை ஒப்படைத்து, பெரிய அம்மை, மற்றும் என்ன என்ன தொத்து நோய்களுக்கான வைத்திய சிகிச்சை அளிக்கப்படுகிறது என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். இன்னும் நமது மாநிலத்திலிருக்கின்ற தொத்து நோய்களுக்கெல்லாம் அங்கு நிரந்தரமான ரிசர்ச் செக்ஷன்கள் அமைத்து அந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்த இந்த அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, அங்கே ஏற்கெனவே பொறுப்பிலே இருந்த சிறந்த மருத்துவ நிபுணர் ஒருவருடைய அறிவாற்றலைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்தக் குழு அவரிடத்தில் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து தொத்து நோய் மருத்துவ மனை நீண்ட காலமாக மாநகராட்சி மன்றத்தின் பொறுப்பில் இருக்கிறது. இந்த ஆராய்ச்சி ஏற்படுத்தியபோது அதற்கேற்ற திறமையுள்ளவர் டாக்டர் ஏ. இராமச்சந்திர ராவ்

என்ற காரணத்தால் அவரிடத்தில் அந்தப் பொறுப்பை அந்தக் குழு ஒப்படைத்தது. அவர்கள் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார்கள். தற்போது ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்ட திட்டங்களாவன:—

1. கீழ்க்கண்டவை தொடர்பாக அம்மைப்பால் பற்றிய நோய்த் தடுப்பியல் ஆய்வுகள்—

(அ) பேறு காலத்திற்குப் பிந்திய ஊசி மருந்துகள்.

(இ) கருவுற்றோரிடையே அம்மைப்பால் குத்திக் கொண்டவர்கள்.

(உ) பெரியம்மையினால் தாக்கப்பட்ட குரங்குகள்.

2. இரைப்பை, குருதிக் குழாய், நிணநீர்க் குழாய் பாதிக்கின்ற கடும் வியாதிகளால் அல்லலுறுபவர்களுக்கு அடிக்கடி பெரியம்மை ஊசி குத்துவதால் ஏற்படும் விளைவுகள்.

3. தேமல், நச்சு நோய்க் கிருமியும் அதனால் கழுத்தில் புற்று நோய் ஏற்படுவதும்.

4. தேமல் நச்சு நோய்க் கிருமி அடிக்கடி வருதலும், ஆண், பெண் ஆகிய இருபாலரிடையே வரும் மேக நோயும்.

5. கீழ்க்கண்டவை குறித்த மருத்துவ, நச்சு நோய்க்கிருமி, நோய்த் தடுப்பு ஆய்வுகள்—

சின்னம்மை. பொன்னுக்கு வீங்கி.

இப்படிப்பட்ட சில ஆராய்ச்சிகள் மேற்பட்டிருக்கின்றன. முறையாகத் தேர்ச்சி பெற்றவர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் அந்த ஆராய்ச்சியை நடத்துகிறார்கள்.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, தொத்து நோய் பெரும்பாலும் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் அதிகம் பரவுகிறது. குறிப்பாக, சிறு பாம்புக் கடி அவர்களைப் பெரிதும் பாதிக்கிறது. சிறு பாம்புக் கடியை அம்மை என்றே கருதி வைத்தியம் செய்யாமலே விட்டுவிட்டு, பிறகு நோயாளி இறந்த பின்புதான் அது சிறு பாம்புக் கடி என்று தெரிய வருகிறது. அம்மைக்கும் சிறு பாம்புக் கடிக்கும் கிராமப் புறங்களில் உள்ள



பலருக்கு வித்தியாசம் தெரிவதில்லை. அதனால் பலர் சாக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அது பற்றிய விவரம் எனக்குத் தெரியவில்லை. எனவே, உறுப்பினர் அவர்கள் அதுபற்றி தாம் அறிந்தவற்றை எழுதியனுப்பினால் நான் அந்த நிலையத்திற்கு அனுப்பி அவர்களைப் பரிசோதிக்குமபடி கேட்கலாம்.

### *Honorary Medical Officer*

319. Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether any age limit has been fixed for superannuation of Honorary Medical Officers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) கௌரவ மருத்துவ அதிகாரிகளும் உதவி மருத்துவ அதிகாரிகளும், 55 வயதைக் கடந்த பின்னர் பொதுவாக பணியில் வைத்துக் கொள்ளப்படுவதில்லை. கௌரவ மருத்துவ அதிகாரிகள், உதவி மருத்துவ அதிகாரிகள் ஆகியோரின் பணிகள் பொது நலனுக்கு இன்றியமையாததாக உள்ள சிறப்பு நேர்வுகளில், உடற்தகுதிச் சான்றிதழைக் கொணர்வதற்கும் அரசின் சிறப்பு ஒப்புதலைப் பெறுவதற்கும் உட்பட்டு, 58 வயதடையும் வரையில் அவர்களைப் பணியில் தொடர்ந்து வைத்துக் கொள்ளலாம்.

திரு. என். கே. பழனிசாமி: நிபுணர்களைப் பொறுத்து அம்மாதிரி ஆனரரி பதவிகள் இருப்பதைப்பற்றிக் கவலையில்லை. ஆனால், இதுவே வழக்கமாகி விடக்கூடாது. ஒருவர் இரண்டு வருஷம், மூன்று வருஷம் ஆனரரி போஸ்டில் வேலை செய்துவிட்டு, ஓரளவுக்குப் பணம் சம்பாதித்துக் கொண்டபிறகு ஆனரரி போஸ்டை விட்டுவிடுகிறார்கள். ஆகவே, ஆனரரி போஸ்டை அபாலிஷ் செய்துவிட்டு, நிபுணர்களை இம்மாதிரி ஆஸ்பத்திரிகளில் நியமித்துக் கொள்ள சர்க்கார் ஏற்பாடு செய்யுமா? இதைப்பற்றி சர்க்காருடைய கொள்கை என்ன?

[1974 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பொதுவான கொள்கை, எதிர்காலத்தில் ஆனரரி போஸ்ட் தேவை இல்லை என்பதுதான். ஆனால், அந்த எதிர்காலம் எப்போது என்று அரசாங்கத்திற்கும் தெரியவில்லை. மத்திய அரசாங்கத்திற்கும் தெரியவில்லை. மருத்துவக் கல்வித் துறை நிபுணர்களாக உள்ள பலர் வயதானவர்களாக இருந்தாலும், அப்படிப்பட்ட நிபுணர்களை 60 வயது வரையில் நியமிக்க வேண்டும் என்ற ஒரு ஆலோசனை இருக்கிறது. தகுதி மிக்க ஒரு சிறந்த மருத்துவ நிபுணருடைய அறிவும் ஆற்றலும் மாணவர்களை எதிர்காலத்தில் பயிற்றுவிக்கப் பயன்படுத்தப்படுவது, வயது காரணமாக, நிறுத்தப்பட்டுவிடக் கூடாது என்ற ஒரு கருத்தும் இருக்கிறது.

ஆனால், பொதுவாக இப்பொழுது சாதாரணமாக உள்ள கௌரவ மருத்துவ அலுவலர்கள் பத்தாண்டு, பன்னிரண்டு ஆண்டுக் காலம் பணியாற்றியிருப்பார்களானால் திரும்பவும் அவர்களுக்கே அந்த வாய்ப்பைக் கொடுக்காமல் மற்றவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற ஒரு ஆலோசனையைப் பொதுவாக ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால், நிபுணர்களாகவும், மிகப் பெயரும் புகழும் பெற்றவர்களுக்கு இந்த இலக்கணம் பொருந்தாது.

சேலத்தில் நகர அபிவிருத்திக் கட்டணம்.

*320 வினா—திரு. கி. ஜெயராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர மன்றத்தில் நகர அமைப்பு திட்டங்களின் Betterment levy ) அபிவிருத்திக் கட்டணம் விதிப்பதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி 1973-74-இல் கோரிக்கை வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) ஆம். (இ) அரசின் பரிசீலனையில் உள்ளது.



1974 ஆகஸ்ட் 26]

**திரு. ஏ. சுப்பிரமணியம் :** தலைவர் அவர்களே, பெட்டர்மெண்ட் லெவியிலிருந்து விலக்கு அளிக்க ஏதேனும் கொள்கை வகுக்கப் பட்டிருக்கிறதா? என்ன அடிப்படையில் இருந்தால் விலக்கு அளிக்கலாம் என்று வரையறை உள்ளதா ? அப்படியானால் என்ன என்று அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அந்த பெட்டர்மெண்ட் லெவியை ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் பெற வேண்டும் என்ற முறை இருக்கிறது. அதற்கிடையில் நகராட்சி மன்றத்தினுடைய பொருளாதார நிலை உயர்ந்து, ஓரளவு அந்த பெட்டர்மெண்ட் லெவி மூலம் கிடைக்க வேண்டிய கட்டணம் கிடைத்துவிட்டது என்று நகராட்சி கருதினால், அதற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அதற்குப் பின்னர் அரசு வேறு பல பிரச்சினைகளை ஒருங்காராய்ந்து அதற்குப் பின்னர் தளர்த்துவதையோ கைவிடுவதையோ ஏற்றுக்கொள்வார்கள். அதற்குப் பல விதிமுறைகள் உள்ளன.

காவேரிப்பூம்பட்டினத்தில் தங்கும் விடுதி.

*68 வினா—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவேரிப்பூம்பட்டினத்தில் வெளிநாட்டு உள்நாட்டு பிரயாணிகள் வசதியாக தங்கும் வகையில் விடுதிகள் கட்டிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, அண்மையில் அண்ணா விருந்தினர் மாளிகை கட்டப்பட்டு திறக்கப்பட்டிருக்கிறது.

**திரு. எல். வடிவேல் :** தலைவரவர்களே, இந்த பூம்புகாருக்கு வெளிநாடுகளிலிருந்தும் பிரமுகர்கள் வருகிறார்கள். இப்பொழுது அங்கு வசிக்கின்ற மீனவர்களின் குடிசைகளைப் பார்த்தால் தமிழகத்தின் நிலையை அவர்கள் நன்கு புரிந்து கொள்வார்கள். அங்கே அரிசன சேரிகளும், மீனவ சேரிகளும் அதிகமாக இருக்கின்றன. அந்த இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின்

மூலமாக நல்ல வீடுகளைக் கட்டிக் கொடுத்தால் வெளிநாட்டுப் பிரமுகர்கள் பார்க்கும்பொழுது அவர்களுக்கு நல்ல அபிப்பிராயம் உண்டாகும். எனவே, அரசு அதற்கு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, அதைப்பற்றி நினைவில் வைத்து வேறு விடுதி திறக்கும்பொழுது அதைப் பயன்படுத்திக்கொள்ள முயற்சிக்கப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, காவிரிப் பூம்பட்டினத்தில் அதையடுத்து மீனவர்களுக்கான குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன அரசின் சார்பாக. ஒப்பந்தக் காரர்கள் மூலமாகக் கட்டப்பட்டு வருகிறது. ஐந்து வீடுகள் திடீரென்று இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு விழ்ந்துவிட்டது அரசுக்குத் தெரியுமா ? அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, இதற்கான விடையை தொழிலாளர் நல அமைச்சரவர்கள் தர வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆலடி அருணா :** தலைவரவர்களே, நம்முடைய பிற்பட்டோர் நல அமைச்சரவர்கள் ரொம்பவும் தளர்ச்சியாக இருக்கிறார்கள். எனவே, அவர்கள் உட்கார்ந்துகொண்டே விடையளிக்க அனுமதியளிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

### ஜீவானந்தம் நகரிலுள்ள வீடுகள்.

*** 321 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரத்தில் ஓட்டேரி பகுதியிலுள்ள ஜீவானந்தம் நகரில் 1968-ஆம் வருடம் பொதுப்பணித் துறையினரால் குடிசைவாசிகளுக்கு வீடுகள் ஏதேனும் கட்டித் தரப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை வீடுகள் கட்டித் தரப்பட்டன ?



(உ) அவைகளில் பெரும்பான்மையானவை இடிந்துவிட்டது உண்மையா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** (அ) ஆம்.

(இ) 800 வீடுகள்.

(உ) 75 வீடுகளில் மட்டும் மண் சுவர்கள் இடிந்திருக்கின்றன.

### மதுரை–தொண்டி சாலையில் பாலம்.

*** 322 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை தொண்டி, சாலையில் முகவை மாவட்டம் மனையூருக்கும், மதுரை மாவட்டம் சக்குடிக்கும் நடுவே வைகை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** இல்லை.

**திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் :** தலைவரவர்களே, விரகனூருக்கு அருகில் வைகை ஆற்றில் கட்டப்படும் அணைக்கட்டில் அங்கே இரண்டு கரைகளையும் சேர்த்து வசதி செய்யப்படுமா ? அந்தத் திட்டம் இதில் அடங்கியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, திட்டத்திற்கு 16 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று தோராயமாக மதிப்பிடப்படுகிறது. ஆனால், இப்பொழுது நிதிநிலைமை சரியாக இல்லாததால் கைவிடப்பட்டிருக்கிறது.

### மதுரையில் சுரங்கப் பாதை.

*** 323 வினா—திரு. த. சோனையா :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் உள்ள கட்டபொம்மன் சிலைக்கு கீழ் பஸ் ஸ்டாண்டு அருகில் சுரங்கப் பாதை ( Sub-way அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1974 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்தப் பகுதியிலே நெரிசல் நேரங்களிலே மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே, அங்கே சப்-வே போடுவது பொருத்தமாக இருக்கும். அரசாங்கம் இதை மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மிகவும் நெருக்கடியான இடம் என்பதை அரசு ஒத்துக்கொள்கிறது. சிலநேரங்களில் விபத்துகள் ஏற்பட்டு சிலர் உயிரிழக்கவும் நேரிட்டிருக்கிறது. 25 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறது. ஆனால் நிதி நெருக்கடியின் காரணமாக இது கைவிடப்பட்டிருக்கிறது. நிதி ஆதாரம் சரியானவுடன்தான் இதைப் பற்றி பரிசீலிக்க முடியும்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே, அமைச்சரவர்களே விபத்துகள் ஏற்பட்டு சிலர் உயிரிழக்கும் நிலையும் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இனிமேல் எத்தனை உயிர்ச்சேதம் ஏற்பட்ட பிறகு இந்தத் திட்டத்தை மேற்கொள்ள அரசு முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, உயிர்ச்சேதம் ஏற்பட்ட பிறகு இதைச் செய்ய வேண்டிய அவசியமில்லை. நிதி ஆதாரம் சரியான பிறகு இதைப்பற்றி யோசிக்கலாம் என்றுதான் தெரிவித்தேன். கைவிடப்பட்டது என்றால் நிரந்தரமாக அல்ல. தற்சமயம் பணம் இல்லாத காரணத்தால் இப்பொழுது அதை எடுத்துக் கொள்வதற்கில்லை என்று சொன்னேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த இடம் மிகவும் நெருக்கடியான இடம், பல உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். அதை அரசாங்கம் அறிந்தபிறகும்கூட வேறு எந்த வகையிலேயாவது நிதியை ஒதுக்கி இந்த வேலைக்கு 'ப்ரையாரிட்டி' கொடுத்து விரைவில் செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, அங்கத்தினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். ஆனால் நிதி ஆதாரம்தான் சரியாக இல்லை. நமக்குப் பணம் போதிய அளவில் இல்லாததால்,



1974 ஆகஸ்ட் 26]

இந்த நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. இதை அடுத்த ஆண்டு நிதிநிலைமை சரியாக இருக்குமேயானால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

## திருவாரூர்—திருத்துறைப்பூண்டி சாலையில் மேம்பாலம்

*324 வினா—திரு. தாழை. மு. கருணாநிதி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவாரூர்—திருத்துறைப்பூண்டி சாலையில் திருவாரூரில் இரயில்வே மேம்பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

(அ) ஆம்.

(இ) மாயூரம்—முத்துப்பேட்டை சாலையின் (திருவாரூர் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள திருத்துறைப்பூண்டி—திருவாரூர் சாலை) 41—8—வது மைலில், ரூ. 40 லட்சம் மதிப்பீட்டுச் செலவில், மேம்பாலம் கட்டும் பணி 1974-75 ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆய்வுப் பணியை மேற்கொள்ளவும், ரயில்வே துறையின் இசைவைப் பெறுவதற்காக மேம்பாலம் கட்டும் இடம் குறித்து வரைபடங்களைத் தயாரிக்கவும், தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை-கிராமப்பணிகள்) நடவடிக்கை எடுத்துவருகிறார்.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, இந்த மேம்பாலம் அங்கே கட்டப்பட வேண்டியது மிக முக்கியமான விஷயம். ஏனென்றால் திருவாரூர் இப்பொழுது மிகவும் ஜனநெருக்கடியான பகுதியாக இருக்கிறது. அதை விரைவுபடுத்த ஆவன செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஏற்கனவே அரசு அனுமதி அளித்து விட்டது, 1974—75-ம் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1974 ஆகஸ்ட் 26

## Land Colonisation scheme for freedom fighters

* 325 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon the Minister for Revenue be pleased to state:

(a) whether there is any proposal under the consideration of Government to start Land Colonisation Scheme for freedom fighters in the State; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:**

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, விடுதலைக்காகப் பாடுபட்டு மாவீரர்களாக இருந்தவர்கள் இன்றையதினம் நலிந்த நிலைமையில் இருந்துகொண்டு இருக்கிறார்கள். பலருக்கு இருப்பதற்குக்கூட வீடு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இதற்கு ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில்

போர்டு ஆப் ரெவின்யூவிலிருந்து

'The Board has stated that the District Revenue Officer may be directed to assign house-sites to the Freedom Fighters who have not yet been assigned lands for dwelling purposes, after considering the merits of each case.'

என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே நிலம் வாங்கியிருக்கிறார்கள். இடம் வாங்காதவர்களைப் பற்றி பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசின் சார்பாக தெரிவிக்க முடிவு செய்திருக்கிறோம்.

திரு. கு. அ. பொம்மன்: தலைவரவர்களே, இந்த சுதந்திரப் போராட்ட வீரர்களில் தாமிரப்பட்டயம் பென்ஷன் வாங்குபவர்கள் பலருக்கு ஏற்கனவே நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. சிலருக்கு கொடுக்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக அவர்களுக்கு நிலம் அளிக்க அரசு முன்வருமா?



1974 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, என்னிடத்தில் உள்ள விவரப்படி செங்கற்பட்டு மாவட்டத்திலே 26 பேருக்கு கொடுக்கப்பட்டு அதில் சிலர் விற்று விட்டார்கள். ஏற்கனவே வாங்கியிருக்கிறார்கள். அப்படி வாங்கவில்லை என்றால் விட்டு மனைகளுக்காக மனுச் செய்துகொண்டால் நிலைமைகளை அனுசரித்து நடவடிக்கை எடுக்கும்படியாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கோவை செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிலம் வழங்குவதைப்போல மொழிப்போராட்டத்தில் ஈடுபட்டு பல தியாகிகள் உயிரை விட்டிருக்கிறார்கள். அதேபோல் சிறைக்குச் சென்று சித்திரவதைப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களின் குடும்பங்களுக்கும் நிலம் வழங்குவதற்கு திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அதுபற்றித் தனியாகக் கேள்வி போடவும். என்னிடத்தில் தற்பொழுது குறிப்பு இல்லை.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, இந்த விடுதலைப் போராட்டத்தில் தந்தை பெரியார் அவர்கள் கலந்துகொண்டு சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். ஆகவே, தந்தை பெரியார் அவர்களுக்கு அரசாங்கம் நிலம் ஒதுக்கியிருக்கிறதா? அப்படியில்லாவிட்டால் இனிமேலாவது நிலம் ஒதுக்குவதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** அவருக்குத் தாமிரப் பட்டயம் கொடுக்கப்பட்டது. அன்று அவர்கள் இந்த அரசே அவருக்குக் காணிக்கை என்று சொல்லியிருக்கிறார்கள். விண்ணப்பம் போட்டவர்களுக்குத் தரலாம். பெரியார் அவர்கள் விண்ணப்பம் போடவில்லை. அவருக்காக வேறு யாரும் போடமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவரவர்களே, சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நிலம் ஒதுக்குவது சம்பந்தமாக செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டதைப்பற்றிச் சொன்னார்கள். எல்லாப் பகுதி

யிலேயும் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள் அந்த இடத்தில் நிலம் பெறலாமா, ப்ளாட்டிற்கு எவ்வளவு பணம் கொடுக்க வேண்டு மென்ற வரைமுறை வகுக்கப்பட்டிருக்கிறதா? அல்லது செங்கற் பட்டு மாவட்டத்திலுள்ள தியாகிகள் மட்டும் அந்த வீட்டுமனைகள் வேண்டுமென்று மனுச் செய்ய வேண்டுமா என்று அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக்கேள்வி செங்கற்பட்டு மாவட்டத்திலே இதுபோன்ற வீடு கொடுக்க, காலனி அமைக்கும் திட்டம் உண்டா என்று கேட்கப்பட்டது. காலனி அமைக்க ஒரு இடம் கொடுக்கப்பட்டது. கொடுக்கப்பட்டு, அங்கு இடம் இல்லை என்று தெரிவிக்கப்பட்டு, கணக்கு எடுத்துப் பார்த் தால் செங்கற்பட்டு மாவட்டத்திலே,

Further assignment was ordered to 26 Freedom Fighters for cultivation purposes in Chitlapakkam village. Of these 26 persons Thiruvalargal M. Kanniappan, Perumal Udayar, M. D. Narasimhalu, V. S. Ramasamy and Tmt. Pappammal have sold out their lands to Thiru A. Sankaran and others.....

இப்படி நிலம் கொடுக்கப்பட்டு ஓரிருவர் பூமியை விற்று விட்டார்கள் என்று விவரம் இருக்கிறது. நிலம் கொடுக்கப்படாமல் இருந்து அதைப்பற்றிக் கூறினால் . பரிசீலிக்கலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இந்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு நம்முடைய தமிழ்நாட்டில் கொடுக்கப் பட்ட விவசாய நிலம் மொத்தம் எவ்வளவு? விவசாயத்திற்கு வந் திருப்பது எவ்வளவு நிலம்? விவசாயத்திற்கு வர முடியாமல் இருப் பது எவ்வளவு நிலம் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் இப்படிப் பட்ட விவரங்களையெல்லாம் சேகரித்துக் கொடுக்கலாம்.

திரு. கே. என். குமாரசாமி: சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு சிலபேருக்கு நிலம் அளிக்கப்பட்டிருக்கிறது, சில பேருக்குக் கொடுக்கப்பட வில்லை. லாண்ட் சீலிங்கில் வரும் மிச்ச நிலத்தை நிலம் கிடைக்காதவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மூலக் கேள்வி லாண்ட் காலனிசேஷன் அமைப்பது பற்றி. மற்ற விவரங்கள் இல்லை. யாருக்காவது நிலம் வழங்கப்படாமல் இருந்தால் அவர்கள் மனுச் செய்தல் பரிசீலிக்கலாம் என்று அரசு டி.ஆர்.ஓ. வுக்கு தெரிவித்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: கனம் அமைச்சர் அவர்கள் அப்படி நிலம் பெற்றவர்களில் பல பேர் விற்று விட்டார்கள் என்று சொன்னார்கள். அப்படி விற்றுவிட இடம் கொடுப்பது பற்றி அரசின் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விற்று விட்டிருக்கி றார்கள் என்பதாகத் தகவல் இருக்கிறது. வறுமை காரணமாக விற்றிருக்கலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: லாண்ட் காலனிசேஷன் பற்றி மாநிலம் பூராவும் கேள்வி இது. அமைச்சர் அவர்கள் சொன்னது போல் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு மட்டும் உரியதல்ல. பல இடங்களில் அவர்களுக்கு மனைகள் கொடுத்திருந்தாலும் வீடு கட்டிக் கொள்ளும் வசதி இல்லை. ஆகவே, பின் தங்கிய மக்களுக்குச் செய்வது போல் அரசாங்கப் பணத்தில் எல்லா மாவட்டங்களிலும் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஒரே இடத்தில் பத்து இருபது பேர் சேர்ந்து வீடு கட்டும் அளவுக்குநிலைமை இல்லை. ஆங்காங்கு ஓரிருவர்தான் இருக்கிறார்கள். உடுமலைப்பேட்டையில் இரு தியாகிகளுக்கு நிலம் கொடுத்து அவர்கள் அங்கு வசித்துக் கொண்டிருக்கிறார்கள். மொத்தமாக பல பேர் சேர்ந்து வீட்டு மனை வாங்கி வீடு கட்டும்படியான நிலைமை இல்லை. தியாகிகள் நிலமோ, வீட்டு மனையோ இதுவரை வாங்காமல் இருந்தால் அவர்கள் விண்ணப்பம் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அரசைப் பொறுத்தவரை தியாகிகளுக்கு எந்த அளவுக்கு உதவி செய்ய வேண்டுமோ அந்த அளவுக்குச் செய்வதில் ஆட்சேபணை இல்லை.

திரு. எஸ். வடிவேல்: விடுதலை வீரர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் சாகுபடி செய்யாமல் விடப்பட்டு வேறு ஒருவர் அந்த நிலத்தை திருத்தியமைத்து சாகுபடி செய்த பிறகு அந்த நிலம் தியாகிகளுக்குச் சொந்தமா அல்லது சாகுபடிதாரருக்குச் சொந்தமா? அது பற்றி அரசாங்கக் கொள்கை என்ன?

1974 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வீரர்களுக்குப் பூமி கொடுத்து அதை வேறு ஒருவர் ஆக்கிரமித்து விவசாயம் செய்திருப்பாரானால் தியாகிகளுக்கு ஆதரவாக இருக்க வேண்டு மென்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. பல இடங்களில் நிலத்தைப் பெற்ற தியாகிகள் வறுமை காரணமாக விற்று விட்டார்கள்.

### *Standing crops in Dharmapuri district*

* 326 Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Agriculture be pleased to state:

(a) whether it is a fact that the standing crops in Dharmapuri, Hosur and Uthangarai in Dharmapuri district are withering for want of rain; and

(b) if so, the steps taken by the Government in this regard?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### *Plant Protection Scheme*

* 327 Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the names of districts to which Emergency Plant Protection Programme has been extended during 1973-74?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: விவர அறிக்கை @ இப்பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: பிளான்ட் ப்ரொடெக்ஷன் ஸ்கீமில் முன்பு மாதிரி சர்க்கார் அதிக ஆர்வம் காட்டாததற்கு என்ன காரணம்? முன்பு எடுத்த நடவடிக்கையை விட இப்போது குறைவாக எடுத்து வருவதன் காரணமாக பல பயிர்கள் சேதம் அடைகின்றன. இதற்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து அதிகப் படியான பணம் ஒதுக்க சர்க்கார் முன்வருமா?

(@ 441–443ம் பக்கங்களில் இணைப்பு I அச்சிடப்பட்டுள்ளது.)



1974 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எல்லா விவரங்களும் இந்த அறிக்கையில் காணப்படுகிறது. இவற்றைத் தவிர வேறு தகவல் வேண்டுமானால் தனிக் கேள்வி தேவை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பூச்சி கொல்லி மருந்து வழங்கும் போது பருத்தி பூச்சி கொல்லி மருந்துகளை வட ஆற்காடு மாவட்டத்தில் விநியோகம் செய்தார்கள். கோவை மாவட்டத்தில் அதிகமாகப் பருத்தி சாகுபடி செய்கிறார்கள். இவர்கள் வேலூருக்குச் சென்று அந்த பூச்சி கொல்லி மருந்தை வாங்கி வரும் நிலைமை எல்லாம் சென்ற ஆண்டு ஏற்பட்டது. ஆகவே, அந்தப் பகுதியில் என்னென்ன பயிர்கள் விளைகிறது என்று பார்த்து அதற்கான பூச்சி கொல்லி மருந்துகள் அந்தப் பகுதியிலேயே கிடைக்க அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தைக் கவனித்து ஆலோசனை செய்யலாம்.

திரு. எஸ். வடிவேல்: பயிர்ப் பாதுகாப்பு என்று சொல்கிற போது ஜப்பான் நாட்டில் விவசாயிகளுக்கு 40 ஆண்டுக் காலத் தவணையில் கடன் கொடுக்கிறார்கள். ஜெர்மனி நாட்டில் 80 ஆண்டுக் காலத் தவணையில் கடன் கொடுக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டில் பசுமைப் புரட்சி என்று சொல்லி வேளாண்மைத் துறையில் வெற்றி பெற விரும்புகிற நாம் இந்த ஆண்டு கொடுக்கின்ற கடனை இந்த ஆண்டு முடிவதற்குள்ளாகவே திருப்பி வாங்கக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் கடன் தவணைகளை நீட்டிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஜப்பான் நாட்டில் 40 ஆண்டுத் தவணை கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். அங்குள்ள மக்கள் வாழ்நாள் மிக நீண்டதாக இருக்கிறது. இங்கு பயிர் அறுவடையானவுடனே உரத்திற்கும், பூச்சி கொல்லி மருந்திற்கு மான பணத்தைத் திருப்பிச் செலுத்த வேண்டுமென்பதுதான் கூட்டுறவு வங்கிகளில் அமல் செய்கிற நடைமுறை.

திரு. கோவை செழியன்: நாங்கள் கேள்வி கேட்கிறோம். அந்தக் கேள்விக்கான விவர அறிக்கையைச் சட்டமன்றத்தில் தருகிறார்கள். இங்கு வந்து படித்து அதற்குப் பின்னால் கேள்வி

கேட்பது என்பது முடியாது. அறிக்கைகளை ஒரு நாள் முன்னதாகவே கொடுத்துவிட்டால் படித்துவிட்டு கேள்வி கேட்க முடியும். இனிமேல் அப்படிப்பட்ட முறை கையாளப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அரை மணி முன்னதாக வந்து விட்டால் படித்துக் கொள்ளலாம்.

* 328. Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Agriculture be pleased to state the names of places where plant protection pools are being maintained by the Agriculture Department for the distribution of equipments on daily hire basis?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த மாதிரிப் பூச்சிகளை தடுக்க வழிவகை செய்யப்பட்டிருப்பதாக அறிக்கையில் காணப்படுகிறது. மாவட்ட ரீதியாக அதிகமாக விஸ்தரிக்க புதிய திட்டங்கள் அரசாங்கத்தின் கையில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இப்போது மதுரை, திருச்சி, கோவை, தஞ்சை மாவட்டங்களில் செயல்படுகிறது. இன்னும் வேறு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கும் யோசனையைப் பார்த்து முடிவு செய்ய வேண்டும்.

**திரு. ஏ. எம். இராஜா:** இந்த விவர அறிக்கையில் விவசாயிகளுக்கு விசைத் தெளிப்பான்கள் நாள் ஒன்றுக்கு 2½ ரூபாய் வாடகையிலும், கையால் இயக்கப்படும் தெளிப்பான்கள் நாள் ஒன்றுக்கு 50 காசு வாடகையிலும் கொடுக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி சப்சிடைஸ்டு ரேட்டில்தான் கொடுக்கப்படுகிறது என்றாலும் அவை பெரும்பாலும் பழுதுபட்ட நிலையில் இருப்பதால் விவசாயிகளுக்குத் தேவையான நேரத்தில் பயன்படுவதில்லை. ஆகவே, விசைத் தெளிப்பான்களை சப்சிடைஸ்டு ரேட்டில் விவசாயிகளுக்குக் சொந்தமாகக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(@ 444–446ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது).





**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனை ஆலோசிக்கப்படும். இப்போது விசைத் தெளிப்பான்களுக்குத் தனியாக சப்சிடி கொடுக்கவில்லை. அதைக் கொடுப்பது பற்றி ஆலோசித்து முடிவு செய்கிறேன்.

**திரு. என். கே. பழனிசாமி:** பவர் ஸ்ப்ரேயர்ஸ் மற்றும் கருவிகள் முன்னால் உறுப்பினர் சொன்னது போல் 'டிஃபங்க்ட்' ஆக இருக்கிறது. பல பஞ்சாயத்து யூனியன்கள் அவற்றை ரிப்பேர் செய்ய முடிவதில்லை. ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் மொபைல் ஸ்குவாட் போட்டு பழுதடைந்த கருவிகளை ரிப்பேர் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மொபைல் ரிப்பேர் யூனிட்ஸ் எற்கனவே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

### விவசாயத் துறை செயலாளர் ஜப்பான் பயணம்

* 329 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் சார்பில் விவசாயத்துறை செயலாளர் 1973-ல் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டாரா?

(இ) அவர் அறிந்து வந்த விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) ஆம்.

(இ) விவர அறிக்கை @ பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கோவை செழியன்:** அரசாங்கத்தின் சார்பில் ஒரு அதிகாரியை வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள் குறிப்பிட்ட துறையில் பயிற்சி பெறுவதற்காக. பயிற்சி பெற்று வந்த பிறகு வேறு துறையிலே போடுகிறார்கள். குறிப்பாக, சென்ற ஆண்டு ஃபார்ம் பற்றிய விவரங்களை அறிந்து வர டென்மார்க்குக்கு ஒரு அதிகாரியை அனுப்பினார்கள். அவர் வந்தவுடனே எலக்ட்ரிசிடி போர்டிலே போட்டார்கள். இப்படிச் செய்வதால் நாட்டுக்கு என்ன பயன்? அப்படிப் பயிற்சி பெற்று வந்தவர்கள் ஐந்து ஆண்டுகள் அதே துறையில் பணியாற்றக்கூடிய முறையில் பயன்படுத்திக் கொள்ள அரசு முன்வருமா?

(@ 447-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-30)

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டிய கேள்வி.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** வெளிநாட்டுக்குச் சென்ற அதிகாரி ஐ.ஆர். 26, அதேமாதிரி இறைச்சி ஏற்றுமதி செய்தல் போன்றவைகள் பற்றி ஏதோ பயிற்சி பெற்றதாகக் கூறியிருக்கிறார்கள். அந்தப் பயிற்சியின் அடிப்படையில் ஐ.ஆர். 20 உருவாயிற்று? அதேபோல் எக்ஸ்போர்ட் ஆப் பௌல்டரி மீட் அது சம்பந்தமாக ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** பெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். இறைச்சி ஏற்றுமதி என்பது இன்னும் ஆய்வில்தான் இருக்கிறது.

**திரு. ஏ. எம். இராஜா :** இந்த இறைச்சிக்கான கோழி, ப்ராய்லர் சிக்கன் என்ற ஒரு வகை இருக்கிறது அதை வெளி நாடுகளுக்கு நிறைய ஏற்றுமதி செய்ய வாய்ப்பிருக்கிறது. உள்நாட்டிலும் அதற்கு நல்ல கிராக்கி இருக்கிறது. காரணம், அதன் கறி மிகச் சுவையாக இருக்கிறது. எனவே இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்தி ஊக்கம் அளிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** நான் ஏற்கனவே சொன்னேன். இந்தக் கோழி இறைச்சி ஏற்றுமதி என்பது ஆய்வில் இருக்கிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** கேள்வி, விவசாயத் துறை செயலாளர் 1973-ல் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டாரா என்பதும், அவர்கள் அறிந்து வந்த விவரம் என்ன என்றும் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. ஜப்பானுக்கு அனுப்பப்பட்டவர் அறிந்து வந்த விவரங்களை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறார்களா? அறிந்த வந்த விவரங்கள் இந்த அரசாங்கத்திற்கு பயன்பட்டிருக்கிறதா? அல்லது அந்தப் பணம் நஷ்டமாகியிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** எந்த அதிகாரியும் வெளிநாட்டுக்கு அல்லது வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்பட்டால் வந்தவுடனே அவர்கள் அறிக்கை கொடுக்க வேண்டுமென்று விதியிருக்கிறது. அறிக்கை கொடுப்பதல்லாமல் அவர்கள்



அறிந்து வந்த செய்திகள் எவ்வாறு இந்த மாநிலத்திற்கு பயன்படும் என்று குறிப்பிட்டாக வேண்டும் என்று விதியிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டிலிருந்துதான் இந்தக் குறிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கு. காமாட்சி :** இப்படி நல்ல பயனுள்ள காரியங்களுக்காக நம் அதிகாரிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். அப்படிப் போய் வந்தவுடன் அவர்கள் அறிக்கைகள் சமர்ப்பிக்கிறார்கள். ஆனால் நண்பர் செழியன் அவர்கள் கூறியதுபோல் உடனே மற்ற இலாகாக்களுக்கு மாற்றப்பட்டு விடுகிறார்கள். அதைத் தவிர்ப்பதற்கு, போய் வருகிற அதிகாரிகள் கூட சட்ட மன்ற உறுப்பினர்கள் அல்லது சட்ட மேலவை உறுப்பினர்கள் யாரையாவது அவர்களுடன் அனுப்புவது நல்லது. அது அவர்கள் நல்ல பல கருத்துக்களை அறிந்து வந்து இங்கு சொல்வதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே இனிமேலாவது அந்த முறையை அரசு கடைப் பிடிக்குமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இந்த அதிகாரி வெளி நாட்டுக்குச் சென்றது மத்திய அரசாங்கத்தின் செலவில் சட்டமன்ற உறுப்பினர்களை அனுப்ப முடியுமா என்றால் மத்திய அரசு அந்தச் செலவை ஏற்றுக் கொள்ளுமா என்பதைப் பொறுத்திருக்கிறது.

### *Multiplication of exotic variety of pigs*

* 330. Q—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state.

(a) whether there is any proposal under the consideration of Government to undertake the multiplication of exotic variety of pigs; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) ஆம்.

(இ) சைதாப்பேட்டை, படப்பை, சாத்தூர், கொருக்கை ஆகிய நான்கு இடங்களில் நான்கு பன்றி வளர்ப்பு நிலையங்கள் தொடங்க செயற்குறிப்பு உள்ளது.

[1974 ஆகஸ்ட் 26

திரு. என். கே. பழனிசாமி: உணவு உற்பத்திப் பெருக்கத்திற்காக எப்படி திட்டமிடப்படுகிறதோ அதேமாதிரி இறைச்சியின் உற்பத்தியைப் பெருக்கவும் திட்டம் போட வேண்டும். அம்மாதிரி ஒரு திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. வெள்ளைப் பன்றியிலிருந்து அதிகப்படியான இறைச்சி கிடைக்கும். அதை எல்லோரும் சாப்பிடுவதற்கும் முடியும். எனவே, அதை அபிவிருத்தி செய்யும் முறையில் எவ்வளவு பணம் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது? இறைச்சி உற்பத்தியைப் பெருக்க சர்க்காரிடம் ஏதாவது திட்டமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இத் திட்டத்திற்கு ரூ. 7,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. இறைச்சியை இன்னும் அதிகப்படியாக உற்பத்தி செய்வதற்காகத்தான் இந்த உயர் இனப் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: குறிப்பிட்ட இந்த இனத்தில் எந்தெந்த நாடுகளிலிருந்து பன்றிகளை வரவழைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: வெளிநாட்டிலிருந்து உயர் இனப் பன்றிகளை இறக்குமதி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்காகச் செலவாகும் என்று திட்டமிடப்பட்டிருப்பது ரூ. 3,75,000.

திரு. கே. என். குமாரசாமி: மூன்று இடங்களில் இந்த பன்றி இனப் பெருக்கத்திற்காக ஏற்பாடுகள் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த இனப் பெருக்கத்தால், அதை ஏற்றுமதி செய்வதன் மூலம் லாபம் வருகிறதா அல்லது நஷ்டம் வருகிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்த யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகளை வளர்ப்பதால் லாபம்தான். பன்றி வளர்க்க வேண்டுமென்று சொன்னால் அதைப் பற்றித் தப்பாக பிரசாரம் செய்வார்கள். ஆகவே பன்றி வளர்க்க வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்வதில்லை. இந்த யார்க்ஷயர் வெள்ளைப் பன்றிகள், உயர் இனப் பன்றிகள் மூன்று கிலோ தீவனத்திற்கு ஒரு கிலோ இறைச்சி அதன் உடம்பில் ஏறுகிறது. அது நல்ல லாபகரமான தொழிலாகும்.



1974 ஆகஸ்ட் 26]

திரு. எஸ். வடிவேல்: மேல் நாட்டுப் பன்றிகள், இப்போது எந்த எந்த நாடுகளிலிருந்து இந்தப் பன்றிகள் வந்திருக்கின்றன? குறிப்பாக சோவியத் நாட்டுப் பன்றிகள் இங்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: எந்தெந்த நாட்டுப் பன்றிகள் என்று குறிப்பில்லை. ஆனால் டென்மார்க் நாட்டிலிருந்து வரவழைப்பது தெரியும்.

திரு. ஜெ. ஜேம்ஸ்: அமைச்சரவர்கள் மூன்று நிலையங்களில் இந்தப் பன்றிகள் வளர்ப்பதற்குரிய திட்டம் பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். அரசு நடத்துவதற்குப் பதிலாக தனியாரிடம் இந்தப் பன்றிகளை வளர்ப்பதற்குக் கொடுத்து அதற்கான மானியமும் கொடுத்து ஊக்குவித்தால் தனிநபர்களுக்கு அதிகமான தொழில்வாய்ப்பும் கிடைக்கும், பன்றி இறைச்சி உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்பிருக்கிறது. எனவே அதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இனப் பெருக்கம் செய்த பிறகு அந்தப் பன்றிகளின் குட்டிகளை வளர்ப்பதற்கு கொடுப்பதற்கு திட்டம் இருக்கிறது. ஆனால் மானியம் கொடுப்பதற்கு திட்டமில்லை.

திரு. கோவை செழியன்: பன்றி வளர்ப்பதற்காக வெளி நாட்டிலிருந்து பன்றி இறக்குமதி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். தேவை இல்லை. நம்முடைய நாட்டிலேயே நிறையப் பன்றிகள் வத வத என்று குட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பன்றி இறைச்சியை மக்கள் உண்பதற்கு அருவருப்பு அடையக் காரணம் உள்நாட்டுப் பன்றிகள் எதை எதையோ சாப்பிடுகின்றன. ஏற்கனவே நம் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இதற்காக சில கழகங்களை அமைத்து பொதுமக்களுக்கு உற்சாகம் ஊட்ட பன்றி இறைச்சி உண்போர் கழகம் அமைத்திருப்பதாகச் சொன்னார்கள். அம்மாதிரிக் கழகங்களை அமைத்து உள்நாட்டு பன்றி இறைச்சியை நல்ல அளவில் சாப்பிடுவதற்கு வழி செய்தால் இதன் உற்பத்தியும் பெருகும். அதுபற்றி அரசு ஆராயுமா? அதற்கு பதில் அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[1974 ஆகஸ்ட் 26

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பன்றி இறைச்சி உண்போர் கழகம் என்று ஏற்படுத்தப்பட்ட கழகம் கூட மேல் நாட்டு ஜாதியைச் சேர்ந்த பன்றிகளை உள் நாட்டில் வளர்த்து அந்த இறைச்சியை வழங்குவதற்கே தவிர, உள்நாட்டுப் பன்றியை வளர்ப்பதற்கல்ல. கலப்பினப் பன்றிகளை உருவாக்க முடியும். அப்படி உருவாக்கும் பன்றிகளை மேல் நாடுகளில் வளர்ப்பது மாதிரி எந்தவிதமான சுகாதாரக் கேடும் ஏற்படாதவகையில் வளர்த்து அந்த இறைச்சியை மக்களுக்கு வழங்குவது என்ற அடிப்படையில் பலயிடங்களில் பன்றி இறைச்சி உண்போர் கழகம் ஏற்படுத்தப்பட்டது. எனவே, அது உலகம் முழுவதும் ஒத்துக்கொள்ளப்பட்ட ஒரு நல்ல முறை. ஆனால் நம் நாட்டில் பன்றிகளை வளர்க்கும் மக்கள் ஏழைகளாகவும், நல்ல முறையில் வளர்க்காமல் இருப்பதாலும் உள்ளபடியே அவற்றின் தரம் குறைந்ததாகத்தான் இருக்கிறது. எனவே, அதுபற்றி நம் மக்களுக்கு அதை ஆதரித்து எடுத்துச் சொல்ல முடியவில்லை.

## *Calf-rearing Centre at Kelamangalam*

* 331 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH: Will the Hon. Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the proposed scheme to start a calf-rearing centre in the Kelamangalam block of Denkanikota taluk is still under consideration of the Government; and

(*b*) if so, the detalils thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## மாவட்ட வளர்ச்சி மன்றங்கள்

* 298 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட வளர்ச்சி மன்றங்களுக்கு அதிகாரங்களை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1974 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** மாவட்ட அளவில் இந்த வளர்ச்சி மன்றக் கூட்டங்கள் முறையாக நடக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி மன்ற பெரும் தலைவர்கள் இவர்களுக்கெல்லாம் படி கொடுத்து இந்தக் கூட்டங்கள் கூட்டப்படுகின்றன. இப்படிப்பட்ட கூட்டங்களில் விவாதங்கள் நடைபெற்று தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றையெல்லாம் அமல்படுத்துவதற்கு முறையான நடவடிக்கைகள் எடுப்பதற்காக அதக்கேற்ற வகையில் மேலும் அதிகாரம் அளித்து இந்த மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டத்தைத் திருத்த உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** அவைகள் அவைகளுடைய பரிந்துரைகளைச் சொல்லலாமே தவிர, அதை அரசாங்கம் நிறைவேற்றவேண்டுமென்ற அவசியமில்லை. அவற்றில் முன்இடம் கொடுத்து நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களுக்கு அரசு முக்கியத்துவம் கொடுக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, இந்த மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தலைவராக ஜில்லா கலெக்டர் இருக்கிறார்கள். அதை மாற்றி அமைத்து, இன்னும் அதிக அதிகாரம் அந்த மன்றங்களுக்கு வழங்கினால்தான் அது வளர்ச்சி மன்றங்களாக இருக்கும். அப்படியில்லாததால் அது 'டெவலெப்மெண்ட் அட்வைசரி போர்ட்' என்ற அளவில் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் மாற்றி அமைக்க முயற்சிகளை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** பேரவைத் தலைவரவர்களே, நிர்வாக சீர்திருத்த ஆணைக்குழுவிடத்தில் இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் தற்போது செயலில் இருந்துவரும் முறை சரியாக இருக்கிறது. ஆந்திரா, மற்ற மாநிலங்களில் உள்ளது போல் மாற்றத் தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, பரிசிலனை செய்வதற்கு இல்லை.

[1974 ஆகஸ்ட் 26

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, தற்போது இருக்கிற மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் உறுப்பினர்கள் சொல்கிற கருத்துக்களை ஏற்று சில தீர்மானங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அந்த தீர்மானங்கள் அரசுக்கு அனுப்பப்பட்டனவா, அரசிட மிருந்து என்ன பதில் வந்தது என்ற விவரம் உறுப்பினர்களுக்குத் தெரிவிப்பது இல்லை. ஆகவே, இந்த அவையிலே இருப்பதைப் போல், ஒரு 'அஷ்யூரன்ஸ் கமிட்டி' போல், ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றத்திலும் ஏற்படுத்த வேண்டுமென்ற ஆலோசனை கடந்த வடாற்காடு மாவட்ட வளர்ச்சி மன்றக்கூட்டத்தில் ஏற்கப்பட்டிருக்கிறது. இது மாதிரியான ஒரு திட்டத்தை எல்லா மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலும் கட்டாயம் ஏற்படுத்த வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:** தலைவரவர்களே, ஏற்கனவே அது தனித்தனி குழுக்களாக அமைக்கப்பட்டு இருக்கிறது. அந்தக் குழுவிலே சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளும் பங்கேற்கிறார்கள். ஆங்காங்கு கேட்கப்படும் கேள்விகளுக்கு அடுத்த கூட்டத்தில் பதில் சொல்லவேண்டு மென்று இருக்கிறது. அப்படி சொல்லாமல் இருப்பார்களானால் அதைச் சொல்வதற்கு அரசு வற்புறுத்தும்.

**திரு. எம். சுரேந்திரன்:** சார், இந்த மாவட்ட வளர்ச்சி மன்றங்களிலே தனியாக பல சப்-கமிட்டிகள் இருக்கின்றன. அப்படி சப்-கமிட்டிகள் போட்டு இருக்கிறதே தவிர, அது எந்த நாளும் கூட்டப்படுவது இல்லை. அந்த சப்-கமிட்டி என்ன வேலை செய்யவேண்டும், எப்படிப் பணியாற்றவேண்டுமென்று எந்த விவரமும் கிடையாது. அந்த மாதிரி சப்-கமிட்டிகள் புள்ளி விவரங்கள் காட்டுவதற்குப் பயன்படுகிறதே தவிர உண்மையான பயனை அளிக்கவில்லை. இதை மாற்றி அமைக்க அரசு ஏதாவது செய்யுமா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** பேரவைத் தலைவர வர்களே, பல காரணங்களை முன்னிட்டு இந்த சப்-கமிட்டிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, உணவு-வேளாண்மை என்று ஒரு குழுவும், தொழில்-தொழிலாளர் என்று ஒரு குழுவும், பொதுப்பணிகள் என்று ஒரு குழுவும், கல்வி சம்பந்தப்பட்ட வைகளுக்கு ஒரு குழுவும், மதுவிலக்கு உள்பட சுகாதாரம்



1974 ஆகஸ்ட் 26] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

இவற்றிற்கு ஒரு குழுவும் என்ற இப்படி 5 குழுக்கள் நியமிக்கப் பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்கள் அவ்வப்போது வருகிற அந்தத் தீர்மானங்களை அனுப்பி வைக்கின்றன. அவைகளை முன்கூட்டியே, அது வரையில் பரிசீலிக்காமல், அந்தக் கூட்டம் நடைபெறுகிறது. அன்று காலையில் அல்லது கூடுவதற்கு முன்னால் முடிவு எடுப்பதால், ஒரு நிவாரணமும் செய்ய முடிவதில்லை. அதுபற்றி கவனித்து ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) :** தலைவரவர்களே, இந்த டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் ஏற்படுவதற்கு முன்பு ஜில்லா போர்டு அந்த மாவட்டங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், பெரிய பாலங்கள் கட்டுகிற வேலை, ரோடுகள் போடுகிற வேலை போன்றவற்றையெல்லாம் கவனித்து வந்தார்கள். ஆனால் இவைகளெல்லாம் டிபார்ட்மெண்டில் எடுத்துக்கொண்ட பிறகு, அந்தக் கல்வி நிலையங்கள் எல்லாமே அதிகாரிகளால் கவனிக்கப்படுகின்றன. ஆயிரக்கணக்கான பள்ளிகளை ஒரே ஒரு சி.இ.ஓ. விடம் கொடுத்து விட்ட பிறகு, அந்த டிஸ்டிரிக்ட் டெவலப்மென்ட் கவுன்சில் தேவைதானா, அதிகாரம் இல்லாத அந்த போர்ட் இருக்கவேண்டுமா? அதைக் கலைத்து விடக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** வளர்ச்சி மன்றங்கள் திட்டம்பற்றி ஆலோசனை செய்வதற்கு தானே தவிர அதிகாரம் செய்வதற்கு இல்லை.

## பேரூராட்சிகளுக்கு ஈட்டு மானியம்

*299 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பேரூராட்சிகளுக்கு ஈட்டு மானியத்தொகை (Matching grant) ) கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :** தற்சமயம் ஊராட்சி களுக்கு வழங்கப்படும் வீட்டுவரி ஈட்டு மானியத்தை, பேரூராட்சி

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1974 ஆகஸ்ட் 26

களுக்கும் அளிக்கலாமா என்பது, பேரூராட்சிகள் நிதி வளக் குழுவினரின் (Committee on Financial Resources of Town Panchayats) ஆய்விற்கு விடப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர்களே, அது எப்போது ஆய்வுக்கு விடப்பட்டது, எவ்வளவு நாளைக்குள் அறிக்கை அளிக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, 24—7—1973-ல் அமைக்கப்பட்டு, 6 மாதங்களுக்குள் அறிக்கை கொடுக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. அவர்கள் அறிக்கை சமர்ப்பிக்க கொஞ்சம் அவகாசம் தேவை என்று சொன்னதால், 30—9—1974 வரையில் நேரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு அது பரிசீலிக்கப்பட வேண்டும்.

சிறப்பு அங்காடிகளில் விற்பனையாகும் பொருள்கள்

*332 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு சிறப்பு அங்காடியில் விற்கும் பொருள்களின் விலை மற்ற கடைகளில் விற்கும் பொருள்களின் விலையை விட அதிகம் என்று சொல்லப்படுவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதற்கு உரிய காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, திருச்சியில் உள்ள சிறப்பங்காடியில் விற்கிற பொருள்கள் அத்தனையும் வெளிமார்க்கெட்டில் விற்கப்படும் பொருள்களின் விலையைக் காட்டிலும் அதிகமாக இருக்கிறது. நான் வாங்கிப் பார்த்து இருக்கிறேன். அதற்குரிய காரணம் என்ன? இனிமேலாவது இது போன்ற விலை அதிகம் விற்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?



1974 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அவர் எதை அங்கு வாங்கிப் பார்த்தார் என்று சொன்னால், அந்த விலைகளும் வெளிமார்க்கெட் விலைக்கும் கணக்கெடுத்து ஒப்பிட்டுப் பார்க்கலாம். இப்போது ஒவ்வொரு திங்களும் அதிகமான அளவுக்கு மக்கள் வந்து அங்கே பொருள்களை வாங்குகிறார்கள். தனியாரிடத்தில் கிடைக்கும் பொருள்களின் தரமும், இங்கே கிடைக்கும் பொருள்கள தரமும் அந்த மக்களுக்கு நன்கு தெரியும். அவர்களும வாங்கிய பொருள்களைப் பார்த்து இருப்பார்கள். தனியார் கடையில் எல்லாப் பொருள்களையும் மூட்டையிலிருந்து எடுத்துக் கொடுப்பார்கள், ஆனால் சிறப்பங்காடியில் எல்லாப் பொருள்களையும் சலித்து, சுத்தமாக்கி பாலிதின் பாக்கில் போட்டு தருகிறார்கள். அவர் எந்தப் பொருளை வாங்கினார், எது அதிக விலை விற்கப்படுகிறது என்று சொல்ல வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த சிறப்பங்காடிகளில் கோயம்புத்தூரில் இருக்கும் 'சிந்தாமணி'யில் அன்றாடம் வெளிமார்க்கெட்டில் விற்கும் பொருள்களின் விலையை விட 5 சதவிகிதம் குறைவாக வைத்து விற்பதாகக் கேள்விப்படுகிறேன். வேறு அங்காடிகளில் அது மாதிரி நடைபெறவில்லை. அப்படி நடக்கிற அந்தச் சிறப்பங்காடி வேறு அங்காடிகளைக் காட்டிலும் அதிகமான லாபம் பெற்று செயல்படுகிறது. வேறு அங்காடிகள் நஷ்டம் அடைந்து கொண்டிருக்கிறபோது, இது விலை குறைவாகவும் பொருள்களை விற்று எப்படி லாபம் பெறுகிறது, அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து, தமிழ்நாட்டிலுள்ள எல்லா சிறப்பங்காடிகளிலும் இந்த மாதிரி 5 சதவிகிதம் குறைவாக விலையை வைத்து விற்று, மக்களுக்குப் பிரயோசனமாக இருக்கும் வகையில் அவை செயல்பட்டு, நல்ல முறையில் இயங்கச் செய்ய அமைச்சர் அவர்கள் அதற்குரிய ஏற்பாடுகளை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி:** தலைவரவர்களே, அந்த ஒரு முறை இப்போது வகுக்கப்பட்டு நடைமுறையில் இருந்துக்கொண்டிருக்கிறது. அந்தச் சிறப்பங்காடியில் நாளுக்கு நாள் பெரும் வியாபாரம் நடக்கிறது. அதற்குத் தகுந்தாற்போல் அங்கு விலை குறைந்துதான் இருக்கும், லாபம் இருக்கத்தான் செய்யும்.

[1974 ஆகஸ்ட் 26

டாக்டர் ச. மு. பழனியப்பன்: தலைவரவர்களே, கோயம் புத்தூரில் இருக்கும் சிறப்பங்காடியில் விலை குறைவாக இருப்பதாக மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். அங்கே கூட இந்தப் பருப்பு வகைகள், காய்கனிகள் விலை அதிகமாக, வெளி மார்க்கெட் விலையை விட அதிகமாக இருக்கிறது. நாளுக்கு நாள் வியாபாரம் பெருகுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குக் காரணம், ஒரே காம்பௌண்டில் எல்லாச் சாமான் களும் வாங்க முடிகிறது. ஒவ்வொரு பொருள் வாங்குவதற்கு ஒவ்வொரு இடமாக அலைய வேண்டியிருக்கத் தேவையில்லை என்பதால் மக்கள் அங்கே வந்து வாங்குகிறார்கள். ஆகவே, இவற்றைப் பற்றி ஆராய ஒரு குழு நியமித்து, அது எல்லா சிறப்பங்காடிகளையும் பார்வையிட்டு, ஆராய்ந்து, நியாயவிலையில் பொருள்களை விற்க ஏற்பாடுகளை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அவர் சொல்வது எனக்குப் புதுமையாக இருக்கிறது. அங்கே சிறப்பங்காடியில் காய்கனிகள், பருப்பு விலை அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நான் முன்னாலேயே சொல்லியிருக்கிறேன். துவரம் பருப்பில் 4 ரகம் இருக்கிறது. ஒன்றாம் தரம், இரண்டாம் தரம், மூன்றாம் தரம், நான்காம் தரம் என்று இருக்கிறது. தனியார் அங்காடியில் போய்ப் பார்த்தால் 4-வது ரக பருப்பு 1.50 என்று சொன்னால், இங்கே சிறப்பங் காடியில் உயர்ந்த ரகம் 1.75 என்று இருக்கும். இந்த இரண்டு பருப்புக்களையும் பார்த்தால் ரகம் நன்றாகத் தெரியும். அந்த வித்தியாசங்கள் நண்பருக்குத் தெரிய நியாயமில்லை. அவர் வீட்டுப் பெண்களைக் கேட்டால் எந்தப் பருப்பு நல்லது என்பதை அவர்கள் சொல்லிவிடுவார்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, 4-ம் தரமான பருப்பு இருக்கிறது என்று கூறினார்கள். முதல் தரத்தை சூப்பர் மார்க்கெட்டுகளுக்குக் கொடுத்து 4-ம் தரத்தை ரேஷன் கார்டுதாரர்களுக்கு ரேஷன் கடைகளில் கொடுக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: ஒன்றும் இல்லை. அந்தந்த நேரங்களில் எது கிடைக்கிறதோ அதை வாங்குகிறோம். முதல் தரம், இரண்டாம் தரம் என்று விலை நிர்ணயிப்பது இல்லை.



1974 ஆகஸ்ட் 26]

கையில் வந்திருக்கும் பருப்பின் விலையைப் பார்த்து, அதற்கான முறையில் விலையை நிர்ணயம் செய்கிறோம். முதல் தரம் இந்த இடத்தில் போடுவது, மூன்றாம் தரம் இந்த இடத்தில் போடுவது என்று ஒன்றும் இல்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இப்போது ரேஷன் கடைகளில் கொடுக்கப்படும் பருப்பு 4-ம் தரம் கூட இல்லை, அதை விட தரம் இன்னும் குறைந்து இருந்தால் அது தரப்படுகிறது, என்பது என்னுடைய அபிப்பிராயம். மிகவும் மோசமானதாகவும், தரம் குறைந்ததாகவும், மனிதர்கள் சாப்பிடும் அளவில் தரம் உள்ளதாகவும் இல்லை. அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, நல்ல பருப்பு ரேஷன் கார்டு ஹோல்டர்களுக்குக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அப்படி இருந்தால் இனிமேல் வாங்குவதை நல்லதாகப் பார்த்து வாங்கச் சொல்கிறேன். அது முன்னாலே வாங்கிய பருப்பாக இருக்கலாம். அதிகம் ஸ்டாக் இருந்ததால் கொடுத்து இருக்கலாம். இனிமேல் நல்ல பருப்பாக வாங்கி வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, என்னென்ன பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்று அமைச்சர் கேட்டார். புளி, மிளகாய், பருப்பு, உப்பு, பொட்டுக் கடலை போன்ற பொருள்கள் அதிக விலைக்கு விற்கப் படுகின்றன. வெளி மார்க்கெட் விலையை விட கூடுதலாக இருக்கிறது. இரண்டு இடங்களிலும் உள்ள விலையை ஒப்பிட்டுப் பார்த்தால் நிச்சயமாகத் தெரியும். அதை நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். இனிமேலாவது குறைந்த விலைக்கு விற்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, திருச்சி சிறப்பங்காடியையும், கோயம்புத்தூர் சிந்தாமணிதான் எடுத்து நடத்துகிறது. அது சிறப்பான முறையில் நடத்தப்படு மென்று சொல்கிறார்கள். எல்லாப்பொருள்களும் அதிக விலை விற்கப்படுகிறது என்று அவர்கள் சொல்வதால் அங்கே போய் பார்த்தால்தான் நிலைமை தெரியும். ரகத்தில் வித்தியாசம் இருப்ப தால் விலையில்கூட, குறைவு இருக்கும். அப்படி இருக்குமானால் நான் அதை கவனிக்கிறேன்.

திரு. கு. காமராட்சி: தலைவரவர்களே, கூட்டுறவு சிறப்பங்காடிகள் பற்றி பல கேள்விகள் கேட்கப்பட்டன. உண்மையிலேயே அதிகமாக, நல்ல சிறப்பான நியாயவிலைக் கடைகள் திருச்சி நகரில்கூட இருக்கின்றன. இங்கே கேட்கப்படுகின்ற கேள்விகள் எல்லாம் சிறப்பங்காடிகளுக்கு சிறப்பு இல்லாத கேள்விகளாக இருக்கின்றன. இதனால் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு நல்லது ஏற்படுமே ஒழிய கூட்டுறவு சிறப்பங்காடிகளுக்கு ஒரு கெட்ட பெயர்தான் ஏற்படும். ஆகவே அப்படிச் சொல்வது சரியல்ல. தலைவரவர்களே, இது என்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆஃப் ஆர்டருக்கு இடமில்லை.

### திருப்பூர் உணவுப்பொருள் வழங்கு கழகத்தின் கடைகள்

*333 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் "உணவுப்பொருள் வழங்கு கழகம்" (சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்) மூலம் உணவு பொருள்கள் விநியோகம் செய்யும் கடைகளில் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) இப்பொழுது தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கு கழகம் ஒரு கடையை நடத்தி வருகிறது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மேலும் ஒரு கடையை திறக்கும்படி தமிழ்நாடு உணவுப்பொருள் வழங்கு கழகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளார். இக்கோரிக்கை கழகத்தின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி: தலைவரவர்களே, 1½ லட்சம் மக்கள் கொண்ட இந்த நகரில் ஏற்கனவே ஒரு கடை இருக்கிறது. மேலும் ஒரு கடை திறக்கப்படுவது பற்றி பரிசீலித்துக்



கொண்டிருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். குறைந்தது 25,000 மக்களுக்கு ஒரு கடை என்ற விதத்திலாவது நியாயவிலைக் கடைகளைத் திறக்க வேண்டும். அந்த வகையில் இன்னும் 6 கடைகள் திறப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அந்த நகரத்தில் 21,306 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஆகையால் 3, 4 கடைகள்—பிரிவுகள் மூலமாக 7,500 கார்டுகளுக்கு விநியோகம் நடைபெறுகிறது. கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுமார் 3,000 கார்டுகளுக்கு ஒன்று என்ற முறையில் 3 கடைகள் மூலம் கிட்டத்தட்ட 8,000 கார்டுகளுக்கு விநியோகம் நடைபெறுகிறது. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஒரு கடை வைத்திருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் இன்னொரு கடை வைத்தால் சமாளிக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார். அதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலும் கஷ்டம் இருந்தால் மேற்கொண்டு பரிசீலனை செய்யலாம்.

### தொழிலாளர் குடும்பங்களுக்கு சத்துணவு திட்டம்

*334 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில், தொழிலாளர் குடும்பங்களுக்கு 'கேர்' நிறுவனத்தின் மூலம் சத்துள்ள உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் எந்தெந்த செலவினங்களை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாட்டில் தொழிலாளர் குடும்பங்களுக்கு 'கேர்' நிறுவனத்தின் மூலம் சத்துள்ள உணவு வழங்கும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இந்த அரசு ஒவ்வொரு ஆண்டும் பணியாளர்களுக்காகவும், இடைநிகழ் செலவுகளுக்காகவும் சுமார் ரூ. 14,000 செலவு செய்து வருகிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் பூரணமாக எல்லா பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? ஏற்கெனவே இந்த சத்துணவுத் திட்டத்தை பூரணமாகச் செயல்படுத்துவதற்கு

அரசாங்கம் உறுதி கூறியிருக்கிறது. ஆனால் இன்று வரையில் ஒரு சில இடங்களில் மட்டும்தான் அமுல்படுத்தப்பட்டிருக்கிறது. மற்ற இடங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? பூரா இடங்களுக்கும் இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, தற்போது 108 தொழிற்சாலைகளுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அதன் காரணமாக 31,035 தொழிலாளர்கள் பயனடைந்து வருகிறார்கள். மற்ற இடங்களைப் புறக்கணிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. இந்தத் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்றும், எல்லாத் தொழிலாளர்களும் இதனால் பயனடைய வேண்டுமென்றும் திட்டமிட்டு, தொழிலாளர் நல ஆணையாளர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. சு. துரைசாமி:** தலைவரவர்களே, திருப்பூர் நகரில் 30 ஜின்னிங் பாக்டரிகள் இருக்கின்றன. அங்கே 10,000-க்கு மேற்பட்ட பெண்கள் வேலை செய்கிறார்கள். எனவே, அங்குள்ள இந்த பாக்டரிகளுக்கும் இந்த சத்துணவுத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, திருப்பூர் நகரம் பற்றிய குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் சரி சமமாக செயல்படுத்தப்படாமல் ஒருசில மாவட்டங்களில் மட்டும்தான் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எல்லா மாவட்டங்களிலும் சமமான அளவில் இத்திட்டம் அமுல்படுத்தப்படுமா? தற்போது எந்தெந்த தொழிற்சாலைகளில் இத்திட்டம் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியதுபோல 108 தொழிற்சாலைகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது. எந்தெந்த தொழிற்சாலைகளில் என்ற குறிப்பு தற்போது இல்லை. தற்போது இத்திட்டத்தினால் 31,035 தொழிலாளர்கள் பயனடைந்து வருகிறார்கள். எல்லா மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற அடிப்படையில் அரசு செயல்பட்டு வருகிறது.



**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 108 தொழிற்சாலைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் இத்திட்டத்தினால் பயனடைந்து வருவதாகச் சொன்னார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள் இல்லாத காரணத்தால் அமுல்படுத்தவில்லை. ஆனால் அரசாங்க ரப்பர் தோட்டத்தில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அங்கும் இத்திட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே இருக்கின்ற நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளைப் பற்றியது கேள்வி. ஆகவே, நிறுவனங்கள் பற்றித்தான் தகவல் கொடுத்திருக்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்கள் பற்றி தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

வடஆற்காடு மாவட்டம் பற்றிக் கேட்டார்கள். நண்பர் துரைசாமி திருப்பூர் பற்றிக் கேட்டார்கள். தனித் தனியாக குறிப்பு இல்லை. வடஆற்காடு மாவட்டத்தில் சில தொழிற்சாலைகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகிறது என்று நம்புகிறேன்.

### *Kinder Garten schools under Labour Welfare Centre*

*335. Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether any Kinder Garten schools for the workers children are being run by the Welfare Centre at Coimbatore; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூரில் தொழிலாளர் நல நிலையத்தில் ஒரு பாலர் பள்ளி நடத்தப்பட்டு வருகிறது. இதில் 40 குழந்தைகள் கல்வி பயின்று வருகிறார்கள்.

[1974 ஆகஸ்ட் 26

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த லேபர் வெல்பேர் ஸ்கீமில் மதுரை மில்ஸ் 85 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. அங்கே இரண்டொரு பள்ளிக்கூடங்கள் வைத்திருக்கிறார்கள். பாக்கி பூரா பணத்தையும் என்ன செய்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த சட்டம் பாஸ் பண்ணிய பிறகு சர்க்கார் எப்படி ஒழுங்குபடுத்துகிறது; என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது; என்னென்ன திட்டங்கள் வைத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், தற்போது 4 இடங்களில் சிறுவர் பள்ளிகள் நடைபெறுகின்றன. கோயம்புத்தூர், மதுரை, தென் சென்னை, வட சென்னை ஆகிய 4 இடங்களில் சிறுவர் பள்ளி இருக்கிறது. அது மட்டுமல்லாமல் பெண்களுக்கு தையல் கற்றுக் கொடுப்பதற்கான வேலைகளும் மற்றவர்களுக்கு சமுதாய வேலைகளும். தொழிலாளர்கள் வாழுகின்ற பகுதிகளில் ரேடியோ வைக்கின்ற வேலைகளும் லேபர் வெல்பேர் சென்டரில் செய்யப்பட்டு வருகின்றன. தற்போது 5 லட்சம் ரூபாய் வரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் தொகை ஒதுக்கீடு செய்து பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் செயல்படும் முறையை கண்காணிப்பதற்கு குழு ஒன்று போட வேண்டுமென்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவும் உடனடியாகப் போடப்படும் என்று சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே சொன்னார்கள். அந்தக் குழு அமைக்கப் பட்டுவிட்டதா? அதில் யார், யார் உறுப்பினர்கள்? குழு அமைக்கப்படவில்லை என்றால் எத்தனை நாட்களுக்குள் அமைக்கப் படும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குழு அமைக்கப்பட்டுவிட்டது. ஆனால் யார் யார் உறுப்பினர்கள் என்ற குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் விபரம் சேகரித்து, பதில் சொல்கிறேன். இந்தக் குழு விரைவிலே வேலை செய்து, பல சமுதாய சேவைக்கான காரியங்களை தொழிலாளர்களுக்கு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1974 ஆகஸ்ட் 26]

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இன்று மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரவர்கள் பிறந்த நாள். இந்த நல்ல நாளினையொட்டி வடாற்காடு மாவட்டத்தில் பாலர் பள்ளிகள் திறக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு தி[illegible]. க. இராசாராம்: எல்லா நாளுமே நல்ல நாள் தான். அதில் [illegible] சொல்ல முடியாது. தொழிலாளர்களுக்கு எல்லா மாவட்டங்[illegible] இந்தப் பணியைச் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்ப[illegible]பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### முசிறியில் வாடகைக் குடியி[illegible]கள்

*336 வினா—திரு. பு. செ. முத்துச்செ[illegible]: மாண்[illegible]கு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்[illegible]க்கண்ட வி[illegible]க் களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறிக்கு அருகில் உள்ள சமுதாய நிலத்தில் (Community Lands) வாடகை குடியிருப்புகளில் கட்டப் படுவதற்கான செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆமெனில், அது எப்போது நிறைவேறும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, முசிறி ஒரு தாலுகாவின் தலைநகரம். ஆகவே, மீண்டும் மறுபரிசீலனை செய்து அந்த இடத்தில் இதுபோன்ற வாடகை வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, முசிறிக்கு அருகில் உள்ள சமுதாய நிலத்தில் வாடகை வீடு கட்டப்படுமா என்பது கேள்வி. ஆனால் வாடகைக்கு அங்கே இருக்கிற அலுவலர் களுக்கு 71 வீடுகள் 13 லட்சம் ரூபாய்க்கான திட்டம் வரையறுக்கப் பட்டு, வீட்டுவசதி வாரியம் விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, முதிறி வட்டத்தில் இந்த நல்ல காரியத்தை செய்திருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக இந்த அவையின் சார்பில் அவர்களுக்கு 'ஹாப்பி பர்த் டே' என்று தங்கள் அனுமதியுடன் சொல்லிக்கொள்கிறேன்.

### *Assistance for renovation of temples*

* 337 Q.—Thiru N. K. Palanisamy: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether Government have sought the assistance of UNESCO for temple renovations in this State; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) ஸ்ரீரங்கம் அருள்திரு அரங்கநாதசாமி திருக்கோயிலுக்கு ரூ. 1,34,060 மதிப்புள்ள போட்டோ காமெரா, எலெக்டிரிக் வின்ச், ஹாய்ஸ்டிங் மெட்டீரியல்ஸ் முதலிய பொருட்களைப் போன்ற உபகரணங்கள் மூலமாக ரூ. 1,34,060 மதிப்பிற்கு யுனெஸ்கோ உதவி கிடைக்கப்பெற்றது. அதே போன்று இராமேஸ்வரம் அருள்திரு இராமநாதசுவாமி திருக்கோயில் திருப்பணிக்கும், காஞ்சிபுரம் அருள்திரு தேவராஜசுவாமி திருக்கோயில் திருப்பணிக்கும், சிதம்பரம் அருள்திரு சபாநாயகர் திருக்கோயில் திருப்பணிக்கும் யுனெஸ்கோவின் உதவி நாடப்பட்டுள்ளது. யுனெஸ்கோவின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 10-00)

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட ஸ்டேஜ் மட்டும் தான் ஸ்ரீரங்கநாதசுவாமி கோவிலுக்கு யுனெஸ்கோ உதவி கிடைத்திருக்கிறது. முழுவதும் கிடைக்காத காரணத்தினால் அந்த கோபுர வேலையே நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்த வேலையைப் பூர்த்தி செய்வதற்காவது நமது அரசு தனிப்பட்ட முறையில் நிதி ஒதுக்கி, அதைப் பூர்த்தி செய்து கொடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: யுனஸ்கோ உதவியுடன் தொடங்கப்பட்ட வேலை முடிவுறாமல் இருக்குமானால், அதை முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. அ. தேவேந்திரன்: யுனஸ்கோ உதவி மூலமாக தமிழகத்திலுள்ள சில மசூதிகள் நல்லமுறையில் செப்பனிடப்பட்டு அவை சிறப்பாக இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் நமக்கு யுனஸ்கோ உபகரணங்கள் மட்டும் தான் தருகிறது என்றார்கள். அவர்களிடம் இருந்து பணமாகப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பணமாகப் பெற்றாலும் நாம் அதைக் கொண்டு பல உபகரணங்களைத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. அதுவும் வெளிநாடுகளில் இருந்து நாமே வாங்குவதற்குப் பல தடைகள் இருப்பதால் அவைகளை பணமாகக் கொடுப்பதற்குப் பதிலாக—வெளிநாட்டு வர்ண வகைகள் போன்ற பல பொருள்களை அவர்களே வாங்கிக்கொடுப்பதுதான் மிக உதவியாக இருக்கும் என்று கோரி அதுபோலப் பெறப்படுகிறது.

திரு. என். கே. பழனிசாமி: சில முக்கியமான கோயில்களைத் தவிர பல கோயில்கள்—அதுவும் மடங்களாலே நிர்வாகம் செய்யப்படுகிற கோவில்கள் எல்லாம் வெளவால் அடைந்து, மிகச் சீர்கெட்ட நிலையில்தான் இருக்கின்றன. எல்லாக் கோயில்களையும் ரிப்பேர் செய்வது வீண் விரயமாகத்தான் இருக்கும். ஆனால் இன்றைக்கு சர்க்கார் எந்தக் கொள்கை அடிப்படையில் கோயில்களை ரினவேஷன் செய்து வருகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: வரலாற்று சிறப்புமிக்க கோயில்களுக்கு முதலிடம் தரப்படுகிறது. அடுத்து சிறிய கோயில்களாக இருந்தாலும் மக்கள் அதிகமாகக் கூடுகிற கோயில்கள் திருப்பணி செய்யப்படுகின்றன. இந்த அடிப்படையில் தான் சென்ற ஆண்டு 1,500 கோயில்கள் திருப்பணி செய்யப்பட்டன. இந்த ஆண்டு 1,500 கோயில்களை எடுத்து இருக்கிறோம். சில மடங்கள் கோயில்களைத் தூய்மையாக வைத்துக்கொண்டிருக்கின்றன என்றாலும் சில கோயில்களைப் பற்றிய புகார் இருப்பதனால்

அவற்றுக்குச் சொந்தமான கோயில்களில் கூட நிர்வாக அதிகாரியைப்போட வேண்டுமென்று சட்டத்தில் மாறுதல் செய்திருக்கிறோம். விரைவில் அவையும் செம்மையாக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, யுனஸ்கோ, உதவி சில கோயில்களுக்குப் பெறப்படுவது பற்றிச் சொன்னார்கள். குறிப்பாக பாலாற்றங்கரையில் இருக்கிற தமிழ்நாட்டின் கோயில்கள் பல சீர்கெட்ட நிலையில் இருக்கின்றன. உதாரணமாக பழைய வாணியம்பாடியில் உள்ள அகதீசுவரர் கோயில்—இத்தகைய கோயில்களுக்கு உதவியைப் பெற்று இவற்றை திருப்பணி செய்துகொடுக்க முன்வருவார்களா? அடுத்து எனக்குத் தெரிந்தவரையில் மசூதிகளில் எவற்றுக்கும் யுனஸ்கோ உதவி கிடைத்திருப்பதாகத் தெரியவில்லை. அப்படி இருந்தால் அந்த விவரத்தையும் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மசூதிகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறதா இல்லையா என்கிற தகவல் எனக்குத் தெரியாது. வக்ப்போர்டு அமைச்சரைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தமிழ்நாட்டில் உள்ள எந்த மசூதிக்கும் யுனஸ்கோ உதவி கிடைக்கவில்லை. ஆனால் தமிழக அரசின் உதவி கிடைத்திருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள பழமையான கோவில் கோபுரம் பழுதடைந்த நிலையில் இருக்கிறதே, அதைச் செப்பனிட யுனஸ்கோ உதவி பெறப் பட்டதா? அப்படி இருந்தால் அதன் விவரத்தைத் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள பழமையான கோவில் கோபுரம் சற்று சாய்ந்து வருகிறது என்று அறிவிக்கப்பட்டவுடன் அதைச் செப்பனிடுவதற்காக ஒரு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டது. மறைந்த மேல்சபை உறுப்பினர்—திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் தான் அரசாங்க உதவியுடன், பொதுமக்கள் உதவியுடன் அந்தத் திருப்பணி வேலை துவங்கப்பட்டது. வேலை முடியுமடையும் தருவாயில் இருக்கிறது. அந்தத் திருப்பணி வேலையை நம்முடைய



பொதுப்பணித்துறையே மேற்கொண்டு ஒரு உதவிப் பொறியாளரைப்போட்டு நிறைவேற்றி வருகிறது. அந்தக் கோயிலை நல்ல முறையில் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** வரலாற்றுச் சிறப்புமிக்க கோயில்களை எடுத்துக்கொள்ள யுனஸ்கோ நிறுவனத்திற்கு சிபார்சு செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தவகையில் வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை கோயில்கள் சிபார்சு செய்யப் பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** வட நாட்டு மாவட்டத்தில் அப்படிப்பட்ட கோயில் இருப்பதாகத் தெரியவில்லை. எனினும் திருவண்ணாமலையில் உள்ள அருணாசலேசுவரர் கோயிலுக்கு இன்றையதினம் 26 லட்சம் ரூபாய் செலவிட்டு திருப்பணி செய்து கொண்டிருக்கிறோம்.

## புரவேலிநாதர் கோவில் அறங்காவலர்கள்

***338 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, கிளாக்குளம் கிராமத்தில் உள்ள அருள்திரு புரவேலிநாதர் கோயில் அறங்காவலர்கள் எண்ணிக்கை ஐந்தாக உயர்த்தப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஆம்.

(இ) 1959-ஆம் வருடத்திய தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறையின் சட்டப் பிரிவு 49-ன் கீழ் ஐந்து நபர்களுக் குட்பட்ட அறங்காவலர் குழு அமைக்க உதவி ஆணையருக்கு அதிகாரம் உண்டு. குறிப்பிட்ட கோயிலுக்கு ஒருவர் மட்டுமே அறங்காவலராக இருந்தார். இவர் நிர்வாகம் திருப்திகரமாக இல்லாததால் ஆலயத்திற்கு வரவேண்டிய குத்தகை நெல் வசூலிக்க சக்தி வாய்ந்த ஒரு அறங்காவலர்குழு தேவைப்பட்டதாலும், 17—9—1973-ல் ஐந்து அறங்காவலர் கொண்ட குழு நியமிக்கப் பட்டுள்ளது.

[1974 ஆகஸ்ட் 26

## அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம்

*339 வினா—திரு. தாழை மு. கருணாநிதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி வாரியத்தின் தரங்கம்பாடி கிளை அலுவலகம் எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

(இ) தஞ்சை மாவட்டத்திற்கு நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) தரங்கம்பாடியில் தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்தின் கிளை அலுவலகம் ஏதுமில்லை.

(இ) தஞ்சை மாவட்டத்திற்கு நடப்பு நிதியாண்டில் வீடுகள் கட்ட ரூ. 33 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. ந. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, தற்போது வீட்டு வசதிக் கழகத்தின் சார்பாகக் கொடுக்கப்படுகிற வீடுகளின் மதிப்பீட்டுத் தொகை மிகமிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால், இன்னும் கட்டப்படுகிற வீடுகள் சுண்ணாம்பினால் கட்டவேண்டும் என்பதனால் குறைந்தபட்சம் ஆயிரம் ரூபாயாவது சேர்த்துக்கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** இதைப்பற்றி ஆங்காங்கே யோசனைகள் சொல்லப்பட்டு வருகிறது. இதை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

*340 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் "அரிசன வீட்டு வசதி வாரியத்தின்" (தாழ்த்தப்பட்டோர் வீடு கட்டும் கழகம்) சார்பில் வீடு கட்டப்படும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1974 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. சு. துரைசாமி:** அமைச்சர் இல்லையென்று சொன்னார்கள். நடைமுறை ஆண்டிலாவது இந்தத் திட்டத்தின் கீழ் அங்கே வீடுகள் கட்டித்தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** திருப்பூர் வட்டத்தில் 2 ஊர்கள் இந்தத் திட்டத்தின் கீழ்—முத்தூக்கவுடன்புதூர், மேட்டு லட்சுமிநாயக்கன்பாளையம்—ஆகிய இரண்டும்—சேர்க்கப்பட்டிருக்கின்றன.

**திரு. சு. துரைசாமி:** இந்த இரண்டும் பல்லடம் வட்டத்தில் அமைந்திருப்பவை. திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் இந்தத் திட்டத்தின் மூலம் வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** அதுபற்றி அடுத்த கட்டத்தில் பரிசீலித்து எடுத்துக்கொள்ளலாம்.

## அரசினர் கலைக்கல்லூரி, அண்ணாசாலை

*313 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாசாலை அரசினர் கலைக்கல்லூரியில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு இவைகளில் இருபாலரும் பயில வசதி அளிக்கும் திட்டம் 1974-75 கல்வி ஆண்டில் அமுல்படுத்தப்பட உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாநிலத்திலுள்ள அரசினர் கல்லூரிகள் அனைத்திலும் இருபாலாரும் சேர்ந்துபடிக்கின்ற நிலைமை இருக்கிறதா? இம்மாதிரி சேர்ந்துபடிப்பது கூடாது

என்று சிலரால் சொல்லப்படுகிறது. இதுபற்றி இரண்டுவிதமான கொள்கை இல்லாது—திட்டவட்டமான ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, பல்கலைக்கழக பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு சம்பந்தப்பட்டவரை இருபாலாரும் சேர்ந்து படிக்க அனுமதி இருக்கிறது. புகுமுக வகுப்பைப் பொறுத்தவரையில் சிலபல நிபந்தனைகளுக்குட்பட்டு—மகளிர் கல்லூரியே இல்லாத இடங்களில்—20 பெண்களுக்குமேல் சேர்ந்துபடிக்க முன்வந்தால்—அங்கே இரண்டு மகளிர் பேராசிரியை இருந்து, தனியான அறை வசதிகள் இருந்தால்—அங்கே ஆண்கள் கல்லூரியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்பதாக மதுரைப் பல்கலைக்கழகம் அனுமதித்திருக்கிறது.

மதுரைப் பல்கலைக் கழகப் பகுதியிலேயும், சென்னைப் பல்கலைக் கழகப் பகுதியிலேயும் சில நிபந்தனைகளுடைய அடிப்படையில் அவர்கள் சேர்வதற்கான வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆண்கள் கல்லூரி, பெண்கள் கல்லூரி இருக்கிற இடங்களில் அந்த வகை செய்யப்படவில்லை. ஆண்கள் கல்லூரி மட்டுமே இருக்கிற இடங்களில் அந்த வகை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஆலடி அருணா:** தலைவர் அவர்களே, மௌன்ட் ரோடிலுள்ள அரசினர் கலைக்கல்லூரியில் ஏற்கனவே ஆண்கள் படித்து வந்தார்கள். அதை மாற்றியதன் காரணமாக எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே, அங்குள்ள தனிச் சூழ்நிலையின் காரணமாக, அந்தக் கல்லூரியில் பெண்களைச் சேர்க்க—கோ-எடுக்கேஷன் கொண்டுவர—அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இந்த ஆண்டிலிருந்து அது பெண்கள் கல்லூரியாக மாற்றப்பட்டுவிட்டது; 3 ஆண்டுகாலமாக படிப்படியாக எடுக்கப்பட்டு, இந்த ஆண்டு முழுக்க முழுக்கப் பெண்கள் கல்லூரியாக மாற்றப்பட்டுவிட்டது.



### *Parachute training for NCC cadets*

* 314. Q.—Thiru R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state:

(a) whether NCC cadets from this State are to be given Parachute training; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** (அ) ஆம்.

(இ) மைய அரசினரால் ஆக்ராவில் 1972 முதல் தொடங்கப்பெற்ற இந்த ஐந்து வார காலப் பயிற்சியில், இதுவரை 12 தமிழக மாணவர்கள் பங்கு பெற்றுள்ளனர். இந்த ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் மாணவிகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. தமிழக மாணவி ஒருவர் இப்பயிற்சியில் இவ்வாண்டு பங்கு பெற்றார்.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** தலைவரவர்களே,, மேல் படிப்புக்கு மாணவர்களைத் தேர்வு செய்யும்போது, என்.சி.சி. பயிற்சி பெற்றவர்களுக்கு தனி மார்க்குத் தரப்படுகிறது. ஆனால், நம் மாநிலத்தில் இருக்கிற பல தனியார் கல்லூரிகளிலே என்.சி.சி. ஏற்பாடு இல்லாமல் இருக்கிறது. அதனால் இங்கே படிக்கிற மாணவர்களுக்கு ஒரு 'டிராபேக்' ஏற்படுகிறது. ஆகவே, எல்லா தனியார் பள்ளிகளிலும் என்.சி.சி. பயிற்சி கட்டாயமாக அளிக்க வேண்டுமென்று ஆணையிட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தனியார் கல்லூரிகள், அரசினர் கல்லூரிகள் ஆகியவற்றில் எல்லாம் என்.சி.சி. பயிற்சிக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குறிப்பிட்ட எண்ணிக்கையினுடைய அடிப்படையில் இருப்பதன் காரணமாக சில கல்லூரிகளைத் தவிர, பல கல்லூரிகளில் இருக்கிறது. தனியார் கல்லூரிகளில் அறவே இல்லையென்ற நிலையில்லை. வாய்ப்பு வசதிகள் இருந்து, எண்ணிக்கை அடிப்படையிலே செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அந்தக் கல்லூரி முதல்வர் பல்கலைக்கழக துணை வேந்தருக்கு எழுதுவாரானால், ஆண்டுக்காண்டு ஒதுக்குகின்ற நிலையிலே அதனை ஆராயலாம்.

*Kotagiri as tourist centre*

*315 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) the steps taken by the Government to develop Kotagiri in the Nilgiris district as a Tourist Centre; and

(b) whether this Government have represented to the Centre to provide a Railway line between Kotagiri and Ootacumund or Coonoor, with a view to attract more tourists?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) கோத்தகிரியில் இயற்கைக் காட்சி காணும் முனைக்குச் செல்லும் சாலையைச் சீரமைக்கும் பணிக்கு ரூ. 2.56 லட்சம் செலவிட அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி முடிவுறும் தறுவாயில் உள்ளது. கோத்தகிரியிலும், அதைச் சுற்றிலும் உள்ள இயற்கை எழிலார்ந்த இடங்களுக்குச் செல்லும் சில சாலைகளைச் சீரமைப்பது இடைவழி உணவகங்களையும் (Motels) தங்கல் முகாம்களையும் அமைப்பது ஆகியவை குறித்த செயற்குறிப்பு ஒன்றை அரசு பரிசீலித்து வருகிறது.

(ஆ) இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: Sir, Ooty is the Queen of Hill Stations என்று சொல்வார்கள். அப்பப்படிப்பட்ட இடத்திலே நாம் ஊட்டிக்கும் கோத்தகிரிக்கும் ரயில் கேட்கும் போது, மேட்டுப்பாளையத்திற்கும் ஊட்டிக்கும் இருக்கிற ரயிலை எடுத்து 1½ வருஷம் ஆயிற்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த ரயில் பாதையை மத்திய சர்க்கார் நடத்தா விட்டால், நாங்களே நடத்துகிறோம் என்றுகூட சொல்லியிருக்கிறார்கள். அதை ரெஸ்டோர் பண்ண அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்தி, அந்த ரயிலை ஓட்ட நடவடிக்கை எடுக்குமா? அல்லது மாநில சர்க்காரே மேட்டுப்பாளையத்துக்கும் ஊட்டிக்கும் இடையில் ரயிலை ஓட்டுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மத்திய அரசோடு இந்த அரசு கடிதப் போக்குவரத்து செய்துகொண்டிருக்கிறது. மத்திய அரசே அதனை நடத்த வேண்டுமென்று நாம் வற்புறுத்திக் கொண்டு வருகிறோம். எக்காரணத்தைக் கொண்டாவது,





அவர்கள் நடத்தவில்லையென்றால், நம்மிடம் தரவேண்டும். நம்மிடம் தந்தால், சுற்றுலா துறையினர் எடுத்து நடத்துகின்ற முயற்சியை எடுக்கும். இதற்கிடையில் இருப்புப் பாதைகளை அகற்றக் கூடாது என்று நாம் சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் கூறியதைப் போன்று ஒன்று மத்திய அரசு நடத்த வேண்டும், அல்லது மாநில அரசு ஏற்று நடத்த வேண்டுமென்ற கொள்கையைத்தான் அரசு கொண்டிருக்கிறது.

*Krishnagiri Reservoir Area*

*316 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal under the consideration of the Government to illuminate the Krishnagiri Reservoir area?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கிருஷ்ணகிரி நீர்த்தேக்கப்பகுதியை ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் வண்ண விளக்குகளால் அலங்கரிப்பதற்கான செயற்குறிப்புக்களைப் பாசனத் தலைமைப் பொறியாளர் அனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இது எப்பொழுது நடைமுறைக்கு வரும் என எதிர்பார்க்கலாம்? வேறு நீர்த்தேக்க பகுதிகளிலும் இவ்வாறு விளக்குகளால் அலங்கரிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ரூ. 5 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் வண்ண விளக்குகளால் அதனை அழகு படுத்தலாம் என்று தலைமைப் பொறியாளர் செயற்குறிப்பு அனுப்பியிருக்கிறார். ஆனால், இந்திய அரசின் திட்ட ஆணைக் குழுவினர் சில பல முறைகளை வகுத்துக் கொண்டு தேர்ந்தெடுத்து, முன்னுரிமை அளித்து, அதன் அடிப்படையிலேதான் செலவழிக்க வேண்டுமென்ற ஆலோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் எந்த அணைக்கட்டுகள் மிகச் சிறந்தனவாகக் கருதப்படுகின்றனவோ, அவற்றிற்கு முதலிடம் கொடுத்து, முன்னுரிமைப் பட்டியல் வகுக்கப்பட வேண்டுமென்று சொல்லியிருப்பதன் காரணமாக, மேற்கூறிய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 26

அடிப்படையில் முன்னுரிமைப் பட்டியல் ஒன்று தருமாறு தலைமைப்பொறியாளர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்தபிறகு பரிசீலித்து அதன் பேரில் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, Krishnagiri Reservoir area has become a beauty spot in Dharmapuri district and so many people, tourists and students go there every week and even daily. May I know from the Hon. Minister for Education and Tourism whether that area will be developed as a tourist centre with all facilities?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுப்பயணிகள் வந்து பார்ப்பதற்கு ஏற்றவகையிலே, தங்குவதற்கேற்ற வகையிலே, சீர்படுத்துகின்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற் குறிப்புகள் எல்லாம் தயாரிக்கப்படுகின்றன. முன்னுரிமை பட்டியல் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. தலைமைப் பொறியாளர் கருத்து அறிந்தபிறகு, அதன்மீது தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திரு. எம். சுரேந்திரன்: இம்மாதிரி நீர்த்தேக்கப் பகுதிகள் நம்முடைய மாநிலத்திலே எத்தனை இருக்கின்றன? அப்படி இருக்கிற பகுதியிலே, முன்னுரிமை வழங்குவதிலே முதன்மை ஸ்தானம் பெற மேட்டூர் பகுதி இருக்கிறதே, அதற்கு ஏற்கனவே ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, செயல்படுத்தப்படாமல் இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அணைகட்டுகள் எத்தனை என்பதுபற்றிய குறிப்புகள் இல்லை. அதுபற்றி தலைமைப் பொறியாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சில நீர்த்தேக்கத் திட்டங்கள் அழகு படுத்தப்பட்டிருக்கின்றன. வைகை அணைப் பகுதியும் வேறு சில அணைப் பகுதிகளும் அழகுப் படுத்தப்பட்டிருக்கின்றன. அதில், மேட்டூர் அணைப்பகுதியும் அடங்கலாம் என்று நினைக்கிறேன். தலைமைப் பொறியாளரது பட்டியல் வந்தபிறகு அதற்குவேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். கூடுமானவரையில் எல்லா மாவட்டங்களையும்



1974 ஆகஸ்ட் 26] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஏற்கின்ற வகையில் இந்த வசதி வாய்ப்புகளுக்கு ஏற்பாடு செய்யப் படும். சேலம் மாவட்டம் அவ்வகையில் வரும்போது, மேட்டூர் அணைக்கட்டு வரும். அதையும் துறை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.)

## 2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலும், கல்லூரி மூடப்பட்டிருப்பதும் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியில் 15—8—1974 ஆம் நாள் மாணவர்களிடையே ஏற்பட்ட மோதலில் கல்லூரி காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கிறது. இதனால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைப் போக்க எடுக்கவேண்டிய நடவடிக்கையைக் குறித்து விவாதிக்க வேண்டுமென்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. சோ. அழகர்சாமி அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி, சுருக்கமாக, விளக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நம்முடைய தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரியிலே இது மாதிரியாக சென்ற ஆண்டும் ஒரு சம்பவம் நடந்து பல நாட்கள் அந்தக் கல்லூரி மூடப்பட்டுக்கிடந்தது. இப்பொழுதுகூட, இரு கோஷ்டியிடையே தகராறு நடந்து, வெளியாரும் இதிலே புகுந்து, சிலபேருக்குக் காயம் ஏற்பட்டு, ஆஸ்பத்திரியிலே இருப்பதாகச் சொல்லப் படுகிறது. ஆகவே, இந்த நிலைமைகள் எல்லாம் ஏற்படாமல் இருப் பதற்கு அங்குள்ள தனியார்கள் தலையீடு, அல்லது நிர்வாகத்திலே யிருக்கிற கோளாறுகளை எதிர்த்து மாணவர்கள் ஏதாவது செய்யும் போது, தனியார்கள் வந்து அடிப்பது போன்ற ஏற்பாடுகள் இருக்

கின்றன. இதன்மீது அரசாங்கம் இன்றைக்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதைப்பற்றி விவாதிக்க வேண்டியிருப்ப தால், அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, 14-8-1974 அன்று இரு மாணவர்களிடையே வாக்குவாதம் ஏற்பட்டதன் பலனாக, இரு தரப்பினராக அவர்கள் பிரிந்து சண்டை இட்டுக் கொண்டார்கள். அதிலே ஒரு பிரிவினர் வெளியாருடைய துணை கொண்டு வன்முறையிலே ஈடுபட்டதன் காரணமாக, 4 மாணவர்களுக்குக் காயம் ஏற்பட்டது. தகவல் அறிந்தவுடன், கல்லூரி முதல்வர் காயமுற்ற மாணவர்களை அரசினர் மருத்துவ மனையில் சேர்த்துவிட்டு, காவல் துறை யினருக்குத் தெரியப்படுத்தினார்கள். காவல் துறையினர் வந்து நிலைமையை அமைதிப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், வெளியார் மூவர் மீதும், மாணவர் மூவர் மீதும் வழக்கு தொடுத்திருந் தார்கள். அதற்குப் பிறகு, 15-8-1974 அன்று சுதந்திர தின விழா எவ்விதத் தடங்கலுமின்றி நடைபெற்றிருக்கிறது. அடுத்த நாள், பட்டப் படிப்பு, இரண்டாமாண்டு மாணவர் ஒருவர் விடுதியை விட்டு வரும்பொழுது, அவர் வெளியிலே தாக்கப்பட் டிருக்கிறார். தாக்கப்பட்டதன் காரணமாக, வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சிலபேர் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கின்றது. மேலும் கலவரம் ஏற்படாமல் தடுப்பதற்கு கல்லூரி முதல்வர் சொன்ன ஆலோசனைகள் பேரிலே, மேல்பட்டப் படிப்பு தவிர, இதர புகுமுக வகுப்புகள், பட்டப் படிப்பு வகுப்புகள் ஆகியவை மூடப்பட்டிருக்கின்றன. 18—8—1974 அன்று மீண்டும் சில வகுப்புகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மற்ற வகுப்புகளைத் துவக்குகின்ற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம் என்று கல்லூரி முதல்வர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

அங்கேயிருக்கின்ற காவல் துறையினரும், வருவாய்த் துறை யைச் சேர்ந்த அதிகாரிகளும் கல்வித் துறை அதிகாரிகளும் கண்காணிப்பாக இருக்கிறார்கள், மேலும் அவர்கள் கண்காணிக்க வேண்டுமென்று அறிவுரை கூறப்பட்டிருக்கிறார்கள், அங்கே





அமைதி நிலவி வருகிறது. அடுத்தடுத்து புகுமுக வகுப்புகள், பட்ட வகுப்புகள் எல்லாம் தொடங்கப்படக்கூடிய சூழ்நிலை இருப்பதாலே இந்த அவையை ஒத்திவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கண்காணிப்புப் பணிகள் அங்கே தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த விளக்கத்திற்குப் பிறகு அவையை ஒத்தி வைத்து இந்தப் பிரச்னையை விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்,, ஆகவே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார் . . :

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இந்த அட்ஜேர்ன்மென்ட் மோஷனை முடித்துவிடலாம், பிறகு உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள்.

**(ஆ) கிருஷ்ணகிரியில் மாணவர்மீது அத்துமீறி காவல்துறை நடந்ததாகக் கூறப்படுவதும் அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அடுத்து,

'To discuss the serious situation prevailing at Krishnagiri in Salem district due to the repressive action taken by the Police against the students'

என்பதுபற்றி விவாதிப்பதற்காக திரு. ஆலடி அருணா அவர்களும், திரு. எட்மண்ட் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருக்கிறார்கள். இந்தப் பிரச்னை எப்படி இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்கத் தக்க அவசரமும் முக்கியமும் வாய்ந்தது என்பதைப்பற்றி மட்டிலும் சுருக்கமாக கூறவேண்டும். திரு. ஆலடி அருணா.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, பஸ் பிரச்னை சம்பந்தமாக கிருஷ்ணகிரியில் ஒரு பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரி வரைக்கும் பஸ் விடப்படவேண்டுமென்று அந்தக் கல்லூரி மாணவர்கள் கேட்டார்கள். அது அரசினரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அதற்குப் பிறகு பஸ் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்று மாணவர்கள் கேட்டார்கள். 15 காசுகளாக இருந்த கட்டணம் 20 காசுகளாக உயர்த்தப்பட்டதினால் அதைக் குறைக்கவேண்டுமென்று மாணவர்கள் கேட்டார்கள். இதனால் கல்லூரி மூடப்பட்டாக வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு யார் பொறுப்பாளி என்று அரசு கொஞ்சமும் ஆலோசியாமல் மாணவர்கள்மீது தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது, கண்ணீர் புகைக் குண்டுகள் அவர்கள்மீது வீசப்பட்டிருக்கின்றன, கல்லூரிக் குள்ளும் விடுதிக்குள்ளும் போலீசார் அத்துமீறி நுழைந்து—எதிர் காலத்து சந்ததிகள், இளந்தளிர்கள் என்று மக்களிடத்திலே சொல்லிவிட்டு—மாணவர்கள் பிரச்னை ஒவ்வொரு முறையும் வருகின்றபோது பயங்கரமான காட்டு தர்பார் நடத்துவது இந்த அரசிற்கு நல்லதல்ல. ஆகவே, இது அவசரமும் முக்கியமுமான பிரச்சனையாக இருக்கிறது. கிருஷ்ணகிரியிலே 144 தடையுத்தரவு போடப்பட்டிருக்கிறது. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது, விடுதி மூடப்பட்டிருக்கிறது, இவைகள் எல்லாம் காட்டுத் தீபோல் மற்ற மாவட்டங்களிலும் பரவக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நேற்றைய தினம் மாணவர் தலைவர் ஒருவர். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டீடெய்ல்ஸுக்குப் போக வேண்டாம் . . . . . விவரங்களுக்குள் போகாமல் சுருக்கமாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, விவரங்கள் கூறக்கூடாது என்பதைவிட விபரங்களை விபரீதங்களாக ஆக்கக்கூடாது என்பதுதான் மிக மிக முக்கியமானது. அரசாங்கம் பதில் அளிக்கப்போவதற்கு முன்பு என்ன என்ன பதில்கள் எதிர்பார்க்கலாமோ அதை வைத்துத்தான் பேசலாமே ஒழிய எதிர்காலத்திலே என்ன நடக்கப்போகிறது என்றெல்லாம்





ஜோஸியம் பார்த்துப் பேசிக்கொண்டிருப்பது நல்லது அல்ல, அது அவர்களால் கொண்டுவரப்பட்ட நோக்கத்தினையும் நிறைவேற்றக் கூடியதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா : என்னைப் பொறுத்தவரையில், விபரீதம் நடந்திருக்கிறது, அந்த விபரீதம் இன்னும் பரவக்கூடாது என்ற நோக்கத்தோடுதான் நான் சொல்கிறேன். எந்தவிதமான கெட்ட நோக்கமும் கிடையாது. ஆகவே, இந்த அவசரமும் முக்கியமுமான பிரச்னையை, நாடெங்கும் தீப்பற்றக்கூடாது என்ற நிலையிலே, விவாதிக்க இந்த அவையை ஒத்திவைத்து இந்த மாணவர்கள் பிரச்னையை விவாதித்து நல்ல முடிவு எடுக்கவேண்டுமென்ற முறையிலே இந்த அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, I want to make a submission.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த நிகழ்ச்சி முடியட்டுமே, என்ன சொல்லுங்கள்.

THIRU M. A. LATHEEF : On the point raised by the hon. Member, Thiru Aladi Aruna, I want to make a submission. The hon. Member has said that it will aggravate the situation further. The incident has taken place in a private College in Krishnagiri. It has happened in a particular College which is affiliated to Madras University, which is an autonomous body. It has independent entity. Something has happened in that College. I do not understand how it will spread to other colleges. If it is a public institution, of course, it will have the impact on other colleges. Because, the public is connected in each other's action. Here it has happened in an individual College in Krishnagiri. How can it have impact on other colleges? The hon. Member should not be allowed to make such remarks. I request that it should not be allowed. That is my point of order. Under Rule 42, a motion should relate to a particular incident which should call the immediate attention of the House. Therefore, the general statement of the hon. Member that it would spread to other colleges should not be allowed. He should not be allowed to say under the roof of Rule 42—Adjournment Motion. That is my contention.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இந்தப் பிரச்னையிலே இவ்வளவு விவாதிப்பதற்குத் தேவையில்லை. எடுத்துச் சொல்லப்படுகின்ற விவரங்களை இந்த மன்றத்திலே இருக்கின்ற அனைவரும் தெரிந்து கொள்வதற்கு எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கிறது. இதிலே சட்ட சிக்கலோ அல்லது வேறு விதமான நிகழ்ச்சியோ கலந்திருக்கவில்லை. அமைச்சர் அவர்களுடைய விளக்கம் தேவையாக இருக்கிறது. அவர்களுடைய விவரங்களைக் கேட்டபிறகு ஒரு முடிவு செய்வதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப்பற்றிய பாயின்ட் ஆப் ஆர்டரா . . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர் . . . . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திரு. ஆலடி அருணா அவர்கள் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். அதற்குப் பதில்சொல்ல வேண்டிய கடமையில் நான் இருக்கிறேன். அவர்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை அவைத் தலைவர் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆக அடுத்து நான் பதில் சொல்லவேண்டிய அவசியத்தில் இருக்கிறேன், இடையிலே டாக்டர் ஹாண்டே வரவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பாயின்ட் ஆப் ஆர்டர், சார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டிய பாயின்ட் ஆப் ஆர்டரா ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள் லத்தீப் அவர்களுக்கு அனுமதி கொடுத்தீர்களல்லவா ? நான் சொல்வதையும் கேளுங்கள். கேட்டால் உங்களுக்கும் ஸேட்டிஸ்பேக்ஷன் ஏற்படும், நான் சொல்லிவிடுகிறேன். இங்கே திரு. லத்தீப் ஒரு பிரச்னையை



எழுப்பினார்கள். 8-வது 9-வது தடவை என்று நினைக்கிறேன், ஒத்தி வைப்புத் தீர்மானம் நாங்கள் கொடுக்கிறபோது எல்லாம் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து சொல்லவேண்டிய விவரங்களையெல்லாம் சொல்லிவிடுகிறார்கள். அதற்குப் பிறகு நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை என்று சொல்கிறீர்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள். . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : கேளுங்கள் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சொல்லுங்கள். சொல்கிறேன், சொல்கிறேன் என்று சொல்லமாட்டேன் என்கிறீர்களே. . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய திரு. லத்தீப் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி எழுப்பி, அவர் சொல்லவேண்டிய கருத்துக்களையெல்லாம் சொல்லிவிட்டார். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள். . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : பூராவாக நான் சொல்வதைக் கேளுங்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒப்பிட்டுக் காட்டுவது சரியல்ல, நீங்கள் உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சொல்கிறேன். திரு. லத்தீப் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பி மறைமுகமாக தன்னுடைய கருத்துக்களையெல்லாம் சொல்வதற்கு முழுமையாக சொல்வதற்கு நீங்கள் அனுமதித்ததற்குப் பிறகு—பிறகு நிராகரித்தாலும்கூட—அவர் சொல்லவேண்டிய கருத்துக்களையெல்லாம் சொல்வதற்கு அனுமதிக்கிற முறை பலமுறைகள் நாங்கள் இதைப் பற்றிச் சொல்லி இருக்கிறோம், இப்பொழுது அதை வன்மையாக எதிர்க்கிறோம்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1974 ஆகஸ்ட் 26

We object to this. We raise our strong objection because the Hon. Speaker is enabling another hon. Member of the House who is unconnected with the adjournment motion to say what ever he wants to say. He has been allowed and he has been silencing us. I want to know whether it is in order for the Hon. Minister would have replied to the adjournment motion and entire discussion. If the hon. Member had not interrupted us, the Hon. Minister ould have replied to the adjournment motion and the whole thing would have ended. The hon. Member is acting as duplicate Minister and whatever he wants to say has been said in the House.

(முற்பகல் 10-30)

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : ஒரு உறுப்பினர் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பும் நேரத்தில், ஹாண்டே அவர்களே சொல்லியிருக்கிறார்கள், நாங்கள் என்ன சொல்கிறோம் என்று கேட்டால் தான் பாயின்ட் ஆஃப் ஆர்டரா இல்லையா என்று சொல்ல முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த முறையில்தான் எந்த உறுப்பினரும் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது அவர்களது ப்ரிவிலெஜ், அந்த முறையில் எழுந்துகொண்டு என்னென்னமோ சொல்கிறார்கள். அவர்கள் சொல்லியபிறகுதான் பாயின்ட் ஆஃப் ஆர்டரா இல்லையா என்று பேரவைத் தலைவர் சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது. திரு. லத்தீப் அவர்கள் எழுந்தவுடனேயே 'நோ பாயின்ட் ஆஃப் ஆர்டர், உட்கார்' என்று சொல்ல முடியாது. பலமுறை சொல்லியிருக்கிறார்கள், ஹாண்டே அவர்களுக்குக் கோபம்கூட வந்திருக்கிறது. என்ன சொல்கிறோம் என்று கேட்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொ[illegible]றகு அதை ஏற்றுக்கொள்கிறோமா இல்லையா என்பது தா[illegible]ப்ரச்னை. இப்பொழுது லத்தீப் சொன்னதை பாயின்ட் ஆஃப் ஆர்டராக ஏற்றுக் கொள்ளவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, matters relating to rules 40 and 41 of the Assembly Rules come entirely under the discretion of the Hon. Speaker.........

நீங்கள் சேம்பரிலே ப்ராசஸ் செய்து கொண்டு வரலாம் என்று சொல்கிறீர்கள். அதில் எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டர் வருகிறது. இது வேடிக்கையாக இருக்கிறது.



1974 ஆகஸ்ட் 26]

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்* : தலைவரவர்களே, மற்றவர்கள் எழுப்பியது எப்படி பாயின்ட் ஆஃப் ஆர்டரின் கீழே வராதோ அதுபோல் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் எழுப்பியதும் இப்பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டரில் வராது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆலடி அருணா அவர்கள் கொண்டு வந்துள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் கிருஷ்ணகிரி அரசினர் கலைக் கல்லூரி பற்றியது. கிருஷ்ணகிரியிலுள்ள அரசினர் கலைக் கல்லூரி மாணவர்கள் பேருந்து கட்டணக் குறைப்பு வேண்டி 19—8—74-லிருந்து கிளர்ச்சி செய்யத் துவங்கினர். சுமார் 11 பேருந்துகளைக் கடத்திச் சென்று கல்லூரி எல்லைக்குள் வைத்தனர். ஆகவே, கல்லூரியையும் விடுதியையும் 20—8—74-லிருந்து மூடுவதற்கும் கல்லூரி எல்லைக்குள் இருக்கும் பேருந்துகளுக்கு போலீஸ் பாதுகாப்பு அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 20—8—74 அன்று தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் மாணவர் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் பயனாக ஓர் சமரச முடிவு ஏற்பட்டது. மாணவர்கள் அமைதியாக நடக்க ஒப்புக் கொண்டனர். கல்லூரி எல்லைக்குள் இருந்து பேருந்துகளும் விடுவிக்கப்பட்டன. அன்று அமைதியாக நடந்து முடிந்துவிட்டது.

21—8—1974 அன்று மீண்டும் வேறு வகையில் ஆரம்பித்தது. 40, 50 மாணவர்கள் தங்கள் எல்லோரையும் பேருந்துகளில் ஏற்றிச் செல்ல வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர். பேருந்து நடத்துனர் 25 பேர்களுக்கு மேல் பேருந்துகளில் நிற்பதற்கு அனுமதிப்பதற்கில்லை, அதற்குமேல் ஏற்ற முடியாது என்று சொன்னார். இவர்கள் தகராறு செய்தார்கள். கல்லூரி பொறுப்பு முதல்வரும் மாணவர் தலைவர்களும் வெளியில் வந்து மாணவர்களை அமைதியாகச் செல்லும்படி வேண்டிக்கொண்டனர். இதற்கிடையில் பொது மக்கள் சிலர் மாணவர்களைத் தாக்க எதிரில் வந்தனர். அதன் காரணமாக மாணவர்கள் ஒரு முகாமாகவும், அதற்கு நேராக பொதுமக்கள் ஒரு முகாமாகவும் ஏற்பட்டபொழுது போலீசார் அமைதியைக் காப்பாற்ற கண்ணீர்ப் புகை விடுத்து எல்லோரையும் கலைந்து போகச் செய்து நிலைமையை ஒழுங்குக் கொண்டுவந்தனர். இதனால் எந்தவிதமான சேதமோ, பாதகமோ ஏற்படவில்லை.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1974 ஆகஸ்ட் 26

மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதுபோல் போலீசார் விடுதிக்குள் நுழைய வேண்டிய அவசியமோ, அத்துமீறி தாக்க வேண்டிய அவசியமோ ஏற்படவில்லை. அப்படி ஏற்பட்டதாகச் சொல்வது உண்மைக்குப் புறம்பான ஒன்றாகும். அதைக் கல்லூரி முதல்வரோ, மாணவர்களோ தெரிவிக்கவில்லை. ஆனால் இப்படிப் பட்ட பதட்ட நிலைமை ஏற்படாமல் தடுக்க, இரு சாராரும் மோதிக்கொள்ளாமல் தடுக்க அவர்களைக் கலைப்பதற்காக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வன்முறைக்குத் தூண்டுதலாக இருந் தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பதட்ட நிலைமை அடங்கும் வரையில் கல்லூரியையும், விடுதியையும் மூடும் சூழ்நிலை ஏற்பட்டது. மாணவர்கள் பாதுகாப்போடு அவரவர்கள் இல்லங்களுக்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்படுகிறது. பதட்ட நிலை அடங்கும் வகையில் ஊரிலேயுள்ள பெரியவர்களும், ஆங்காங் குள்ள வருவாய்த்துறை அதிகாரிகளும், மாணவர் தலைவர்களும் கூட ஈடுபட்டிருக்கிறார்கள். இது எனக்கு 23-ஆம் தேதி வந்த செய்தி.

இந்நேரம் கல்லூரி திறக்கப்பட்டிருக்கக் கூடும். இரண்டொரு நாட்களில் திறக்கும்படியான சூழ்நிலை ஏற்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அமைதியைக் கண்காணிக்கும் வேலை தொடர்ந்து நடக்கிறது. ஆகவே, இதற்காக அவையை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை, தூண்டி விட்டவர்கள் மீது நட வடிக்கை எடுக்க காவல்துறையினர் மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சர் அவர் களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத் திற்கு அவசியம் இல்லை என்று கருதி இதற்கு அனுமதியை மறுக் கிறேன்.

## (இ) மிடாளம் கிராமத்தில் திடீரென காலராநோய் ஏற்பட்டது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து—

'The sudden outbreak of Cholera in an epidemic form in the Midalam village, Vilavancode taluk, Kanyakumari district......'



1974 ஆகஸ்ட் 26] [பேரவைத் தலைவர்]

என்ற பொருள் பற்றி விவாதிக்க வேண்டுமென்று திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ஜேம்ஸ் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர்களே, இந்தச் சட்ட மன்றத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை முதலில் நான் படிப்பதற்கு முற்படுகிறேன்.

"I move that the business of the House do stand adjourned to discuss a matter of urgent public importance, namely—

'The sudden outbreak of Cholera in an epidemic form in the Midalam Village, Vilavancode Taluk, Kanyakumari District, resulting in the death of six persons during August 1974. ".

அதேபோல் இன்றையதினம் வேறு கல்குளம் தாலுக்காவில் சில யிடங்களில் காலரா நோய் கண்டிருப்பதாகத் தகவல் வந்திருக் கிறது, ஜேம்ஸ் அவர்களுக்கு தகவல் வந்திருக்கிறது. இது முக்கியமான விஷயமாகும். ஏனென்றால் அங்குள்ள நிலைமை என்னவென்றால் உணவுத் தட்டுப்பாடு இருப்பது ஒரு காரணம், இது பரவலாக ஏற்படுவதற்கு மழையின்மை காரணமாகவும் இருக்கிறது. இயற்கையின் காரணமாக இந்தச் சூழ்நிலை உருவாகி யிருக்கிறது. இதற்கு ஒருசில நடவடிக்கைகளை அரசாங்கத் தரப்பிலேயிருந்து எடுத்திருக்கிறார்கள். மேலும் மொத்தமாக பத்து பேர் இதற்காக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இம்மாதிரி எபிடமிக் ஃபாரம்-ஆல் பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. இதனால் அரசாங்கம் முன்னெச்சரிக்கையுடன் நடவடிக்கைகளை எடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த மன்றத்தின் நடவடிக்கையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கோரு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பேரவைத் தலைவரவர்களே, மிடாளம் கிராமத்தில் காலராநோய் ஏற்பட்டுள்ளதாக 22—8—1974-ஆம் நாள் செய்தி கிடைத்தவுடன், கன்னியாகுமரி மாவட்ட சுகாதார அலுவலரிடமிருந்து மக்கள் நல்வாழ்வு மற்றும்

குடும்பநலத்துறை இயக்குநர் தொலைபேசி மூலம் மேற்கொள்ளப் பட்ட தடுப்பு நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களை விசாரித்துத் தெரிந்து கொண்டார்.

கிள்ளியூர் ஒன்றியத்திலுள்ள மங்கலக்குன்னு, மிடாளம், கன்னன்விளை ஆகிய மூன்று ஊராட்சிகளிலும் கடும் குடற்காய்ச்சல் நோய் உள்ளதாக—காலரா அல்ல—அறிவிக்கப் பட்டது. முதலில், நோய் கண்டுள்ளதாக 14—8—74 ஆம் நாள் அறிவிக்கப்பட்டது; கடைசியாக அறிவிக்கப்பட்டது 17—8—74 இல். கிள்ளியூர் ஊராட்சி ஒன்றிய பகுதியிலிருந்து, மொத்தம் 15 பேர் குடற் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டனரென்றும், 6 பேர் அதன் விளைவாக மாண்டனரென்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. மிடாளம் கிராமத்தின் மக்கட் தொகை 2,203 ஆகும். நோய் பரவியுள்ள பகுதியில், 19,211 காலராத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. ஆய்வுக்காக மலம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவுகள் எதிர்பார்க்கப் படுகின்றன. பீடிக்கப்பட்ட பகுதிகளிலும் அவற்றின் சுற்றுப் புறங்களிலும் 7 உடல் நல உதவியாளர்களும், 3 உடல் நல ஆய்வாளர்களும் காலராத் தடுப்புப் பணிகளை விரைந்து செய்து வருகின்றனர்.

மேலும், திருவட்டார் ஊராட்சி ஒன்றியத்தில் 3 பேர் நோயால் பீடிக்கப்பட்டதாகவும், 2 பேர் மாண்டதாகவும், மாவட்ட சுகாதார அலுவலர் அறிவித்துள்ளார். 610 காலராத் தடுப்பு ஊசிகள் போடப்பட்டுள்ளன. பீடிக்கப்பட்ட இடங்களிலும் அவற்றின் சுற்றுப்புறங்களிலும் 6 உடல்நல உதவியாளர்களும், 2 உடல் நல ஆய்வாளர்களும் காலராத் தடுப்புப் பணிகளைச் செய்து வருகின்றனர். மேற்கொண்டு யாரும் நோயால் பீடிக்கப்படவில்லை. மாவட்ட சுகாதார அலுவலர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து வேண்டிய நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படும்போழுது அவைகள் பல நேரத்தில் குடற்காய்ச்சல் நோய் என்று அறியப்படுகிறது. சிலவிடங்களில் சில நேரங்களில் காலராவாக இருக்கிறது. குடற் காய்ச்சல் நோய்க்குத் தடுப்பு ஊசி போடுவதில்லை. காலராவிற்குத் தான் தடுப்பு ஊசி போட முடியும். அதை ஒட்டிய பணி



நடக்கிறது. அவ்வப்பொழுது எங்கேயாவது 'ஸ்ட்ரே இன்சிடென்ட்ஸ்' ஏற்பட்டுவிட்டால் அந்த வட்டாரம் முழுவதும் பாதுகாப்பைப் பெற வேண்டி இருக்கிறது. இது நடைமுறைப் பணியாக இருப்பதால், அன்றாட அலுவல் கடமையாக இருப்பதால் இதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததே போதுமானது, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதால், இதற்காக அவையை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதி இதற்கு அனுமதியை மறுக்கிறேன்.

(ஈ) அரசுப் பேருந்து மூலம் ஆந்திராவிலிருந்து தமிழ் நாட்டுக்கு அரிசி மூட்டைகள் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து,

'Smuggling of rice bags through Government Transport from Andhra Pradesh to Tamil Nadu between 13th and 17th August 1974'.

என்ற பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று திரு. ஆலடி அருணா அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, ஆந்திராவிலிருந்து கடத்தப்படும் அரிசி குறித்து ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அந்தத் தீர்மானத்தை உங்கள் அனுமதியோடு வாசிக்கிறேன்.

"I give notice for the adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely—

'Smuggling of rice bags through Government Trasport from Andhra Pradesh to Tamil Nadu between 13-8-1974 and 17-8-1974'."

தலைவரவர்களே, ஆகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் ஆந்திராவிலிருந்து நூற்றுக்கணக்கான மூட்டை அரிசியை

[திரு. ஆலடி அருணா] [1974 ஆகஸ்ட் 26

கவர்ன்மெண்ட் டிரான்ஸ்போர்ட்டில் கடத்தியதாக பத்திரிகைச் செய்தி மட்டுமல்ல, ஏறத்தாழ பஸ் ரூட் 125, 126, 144 அதாவது சென்னை—புதூர், சென்னை—பிச்சாட்டூர், சென்னை—சித்தூர் செல்லும் பஸ்களில் ஒவ்வொரு பஸ் டிரிப்பிலும் 10 மூட்டை, 20 மூட்டை என்று ஓட்டுநரும், நடத்துநரும் கடத்திச் சென்றிருக்கிறார்கள்.

இதை ஆந்திராவிலிருந்து விஜிலென்ஸ் போலீசார் தற்செயலாக எங்கோ பரிசோதனை செய்து பிடிக்கவில்லை. நம்முடைய பஸ்ஸை ஓட ஓட விரட்டி அதற்குப் பிறகு பஸ்ஸைப் பிடித்து அந்த மூட்டைகளைப் பறிமுதல் செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்குச் சொந்தமான மூன்று பஸ்களை 13 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதி வரை அவர்கள் கையில் வைத்திருந்தார்கள். இந்த அளவுக்கு கீழ் மட்டத்தில் தமிழகத்திற்கே தலைகுனிவு தரக்கூடிய அளவுக்கு விபரீத நிகழ்ச்சி நடந்திருக்கிறது. வேலியே பயிரை மேயக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தமிழக அரசுக்கு வெளியிடத்தில் இருக்கக் கூடிய நல்ல பெயருக்குக் களங்கம் உண்டாகக் கூடிய அளவுக்கு நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இது சாதாரண சம்பவம் அல்ல. பயங்கரமானது. ஒரு படி இரண்டு படி என்று கடத்தவில்லை. பத்து மூட்டை, 20 மூட்டை என்று மூட்டை மூட்டையாகக் கடத்துகிறார்கள். அடிமட்டத்திலுள்ள சில அதிகாரிகள் ஒத்துழைப்பால்தான் தவறுகள் நடந்திருக்க வேண்டும். 50 பேர் 60 பேர் பயணம் செய்கிற பஸ்ஸில் 20 மூட்டை அரிசி வந்திருக்கிறது. இப்படி மூட்டை மூட்டையாகக் கடத்துவதற்கு அரசாங்கக் கருவி பயன்படுத்தப் பட்டிருக்கிறது, அரசாங்க பஸ் பயன்படுத்தப்பட்டிருக்கிறது; அரசாங்கத்தில் வேலை செய்பவர்கள் பயன்படுத்தப் பட்டிருக்கிறார்கள். ஆகவே, இது அவசரமும் பொது முக்கியத்துவமும் உள்ளதாகும். வேலியே பயிரை மேய்கின்ற விபரீதமான காரியமாகும். ஆகவே, இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று **கோருகிறேன்.**



1974 ஆகஸ்ட் 26]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் உள்ள ஒரு வார்த்தையைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். அரிசி கடத்தப் பட்டிருக்கிறது 'Smuggling' என்ற வார்த்தை 'it is a disputable term' அந்த வார்த்தையை அரசு அப்படியே ஏற்றுக்கொள்ளவில்லை.

13 ஆம் தேதியும் 14 ஆம் தேதியும் இந்தச் சம்பவங்கள் ஆந்திர மாநில எல்லையில் நடைபெற்றிருக்கின்றன. அரசாங்கப் போக்குவரத்துப் பேருந்துகள் வழித் தடம் 123, வழித் தடம் 125, வழித் தடம் 144 ஆகியவை இரு மாநில வழித் தடங்களாக இயங்குகின்றன. 13 ஆம் தேதியன்று சென்னையிலே இருந்து பிச்சாட்டூர் செல்லும் வழித் தடம் 123 இல் 4 மூட்டைகள் அரிசி கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. வழித் தடம் 125 சென்னையிலிருந்து புத்தூர் செல்லும் பஸ்ஸில் 10 மூட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. சென்னையிலிருந்து சித்தூர் செல்லும் வழித் தடம் 144 இல் நான்கு மூட்டை அரிசி கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூட்டை மூட்டையாகக் கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அரிசியை மூட்டையாகத் தான் கொண்டு வருவார்கள். வேறு விதமாகக் கொண்டுவர வழி இல்லை.

ஆனால் வழித் தடங்கள் 123, 144 இல் வந்த அரிசி மூட்டைகளைப் பயணிகள் ஏற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களிடம் லக்கேஜ் சார்ஜ் வாங்கப்பட்டு லக்கேஜ் டிக்கட் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒரு வழித் தடத்தைப் பொறுத்தவரை வந்திருக்கின்ற மூட்டைகள் பற்றி நம்முடைய போக்குவரத்துத் துறை ஊழியர்கள் சரியான விளக்கம் எங்களுக்குத் தரவில்லை. ஆனால் இந்தப் பேருந்துகள் அரிசியைக் கடத்திச் சென்றதாக ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த உணவுத் துறையைச் சேர்ந்த காவல் துறையினர் நம்பி அதற்கான வழக்கைத் தொடுத்திருக்கிறார்கள். அந்தப் பேருந்துகளை அவர்கள் கைப்பற்றினார்கள். ஆனால் நம்முடைய மாநில அரசு போக்குவரத்து துறை அதிகாரி கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்தப் பேருந்துகள் நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. நம்மிடத்தில் தரப்பட்டிருக்கும்

[திரு. க. இராமச்சந்திரன்] [1974 ஆகஸ்ட் 26

தகவல்களின்படி அதிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள், பிரயாணிகள் லக்கேஜாக ஏற்றிக்கொண்டு வந்திருக்கிறார்கள், அந்த மூட்டைகள் சிறு சிறு மூட்டைகள் என்று சொல்லுகிறார்கள். ஆந்திர மாநிலத்தைப் பொறுத்தவரை இதை உணவுக் கடத்தல் என்று ஏற்கனவே வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.

எனவே, உண்மையான விவரங்கள் போகப் போகத்தான் தெரியும். 'கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரிப்பதே மெய்' என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே, இதைத் தீவிரமாக விசாரித்து யார் குற்றவாளியாக இருந்தாலும், நமது போக்குவரத்துத் தொழிலாளர்களாக இருந்தாலும், தகுந்த நடவடிக்கை எடுக்க தமிழக அரசு தயங்காது.

இது தமிழ் நாட்டின் மானப் பிரச்சினை அல்ல. ஏதோ ஏற்பட்டுவிட்ட ஒரு சிக்கல். ஆகவே, இதை விசாரித்து தக்க நடவடிக்கை எடுப்பதுதான் உகந்ததாக இருக்குமே தவிர, அவையை ஒத்தி வைத்து விவாதிக்கக்கூடிய அளவுக்கு உள்ள அவசர முக்கியமான பிரச்சினையாக இதை விமர்சனம் செய்வது சரியாகாது என்று தெரிவித்துக்கொண்டு அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அளவுக்கு அவ்வளவு பெரிய பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை அல்ல என்று தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதி இதற்கு அனுமதி மறுக்கிறேன்.

## (3) கவன ஈர்ப்பு

**கோவை மாவட்டத்தில் மின்வெட்டு காரணமாக பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலை பாதிக்கப்பட்டு சம்பளமின்றி அவதியுறும் நிலை குறித்து.**

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிறப்பாக கோவை மாவட்டத்தில் உள்ள சுமார் இரண்டு லட்சம் பஞ்சாலைத் தொழிலாளர்கள், குறிப்பாக பதிலி (தற்காலிக)



[திரு. சு. துரைசாமி] [1974 ஆகஸ்ட் 26

தொழிலாளர்கள் மின்வெட்டு காரணமாக வேலை பாதிக்கப்பட்டு சம்பளம் இன்றி அவதியுறும் நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்**: பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு மின்சார வெட்டு காலத்திற்குத் துயர் தணிப்புத் தொகை அளிக்குமாறு கோவை மாவட்டத்திலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களின் சார்பாக பத்து தொழிற்சங்கங்கள் கோரிக்கைகள் எழுப்பின. அக்கோரிக்கைகளாவன :—

(1) நிலையான தொழிலாளர்களுக்கு மின்சார வெட்டு காரணமாக வேலையற்ற நாட்களில் முழு ஊதியம் அளிக்கப்பட வேண்டும்;

(2) ஏனைய தொழிலாளர்களுக்கு மின்சார வெட்டு காரணமாக வேலையற்ற நாட்களுக்கு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும்.

கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் தென்னிந்திய ஆலை அதிபர்களின் சங்கத்தோடும் தொழிற்சங்கங்களுடனும் இக்கோரிக்கைகள் குறித்து 14—5—74 அன்று பேச்சுவார்த்தை நடத்தி, மேற்கொள்ள வேண்டிய சில நடவடிக்கைகளைக் குறிப்பிட்டார். அதற்கு தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம் தங்கள் குழுவுடன் ஆலோசித்து பதில் அளிப்பதாகத் தெரிவித்தது. இப்பிரச்சினையில் சுமூகமான உடன்பாடு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. சு. துரைசாமி**: நம்முடைய நாட்டில் அண்மையில் மின்சார வெட்டு ஏற்பட்ட நேரத்தில் கூட அதிலே இருக்கும் பதிலி தொழிலாளர்களுக்கு லே ஆப் கிடைக்கவில்லை. அரசாங்கம் கொடுக்க வேண்டுமென்று அறிவித்திருந்தும் கொடுக்கப்படவில்லை. இப்போது எல்லா சங்கங்களும் சேர்ந்து வருகிற செப்டம்பரில் பொது வேலை நிறுத்தம் என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் முன்கூட்டியே எல்லா சங்கங்களோடும் பேச்சுவார்த்தை நடத்தி பதிலி தொழிலாளர்களுக்கு லே ஆப் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, லே ஆப் பிரச்சினை மின்சார வெட்டு காரணமாக ஏற்பட்டது. நூற்பாலைகளில் இருக்கும் தொழிலாளர்களுக்கு என்று மட்டுமல்ல, எல்லாத் தொழிலில் இருக்கும் தொழிலாளர்களுக்கும் இப்படிப்பட்ட பிரச்சினை வந்து கொண்டிருக்கிறது. இதை ஆராய்ந்து முடிவு எடுக்க வேண்டுமென்று தமிழக அரசு கருதியுள்ளது. அதோடு இது ஒரு அகில இந்தியப் பிரச்சினை. தமிழக அரசு மட்டும் தனியாக இந்தப் பிரச்சினையில் தீர்வு காண முடியாது. சமீபத்தில் நடந்த தொழிலாளர்கள் நல அமைச்சர்கள் மாநாட்டில் இதுபற்றிப் பேசினார்கள். 50 சதவிகிதம் என்பதை அதிகப்படுத்தலாம் என்று ஆலோசித்து சில நல்ல முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். அது மத்திய அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. தொழிற்சங்கங்கள் தயவு செய்து பிரச்சினையைச் சூடாக்காமல் பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்துக்கொள்ளும் தன்மையில் பிரச்சினையை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. சு. துரைசாமி:** அகில இந்திய அடிப்படையில் இருந்தாலும் கூட போனஸ் சட்டம் 20 சதவிகிதம் என்று இருக்கும்போது தமிழ்நாடு அதற்கு விதிவிலக்காக 25 சதவிகிதம் என்று கடந்த ஆண்டில் செய்திருக்கிறது. அந்த முறையில் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் முறையில் 50 சதவிகிதத்தை 60 சதவிகிதம் என்று அந்த மாநாட்டில் ஒத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் அதனை அமல்படுத்த தமிழ் நாடு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** ஏற்கனவே சொன்னபடி அதைப் பற்றியும் தமிழக அரசு ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** * * * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பி இதுவரையில் பேசிய பேச்சுக்கள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. அவற்றை பத்திரிகையாளர்கள் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** Why should they be expunged, Sir?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீர்ப்பு கொடுத்தாகிவிட்டது.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** பாயின்ட் ஆப் ஆர்டர். 21-ஆம் தேதி கச்சத் தீவு சம்பந்தமான தீர்மானம் இங்கே வந்து அது நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தை சில கட்சிகள் ஆதரித்தன ஒரு கட்சி வெளிநடப்பு செய்தது. என்னுடைய கட்சி எதிர்ப்பதாக வெளிப்படையாகவே சொன்னது. தாழ்த்தப் பட்டோர் முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களும் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதாகச் சொன்னார்கள். தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்களும் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதாக இந்த மன்றத்தில் சொன்னார்கள். அப்படியிருந்தும் பத்திரிகைகளில், குறிப்பாக மெயில் பத்திரிகையில் வந்திருக்கிறது.

Before the Speaker put the resolution to vote and declared it carried unanimously, the Anna D.M.K. members walked out of the House.

என்று வந்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையில் நடந்தது ஒன்று பத்திரிகையில் வெளிவந்தது ஒன்றாக இருந்தால் அந்தப் பத்திரிகை மீது உரிமைப் பிரச்னை கிளப்பலாம். அதற்கு நோட்டீஸ் கொடுங்கள். எடுத்துக்கொள்ளலாம். இது பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது. சபையிலே நடந்தது ஒன்று. பத்திரிகையில் வெளிவந்தது ஒன்றாக இருந்தால் அது உரிமைப் பிரச்னையின் கீழ் வரவேண்டுமே தவிர, பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பத்திரிகைகள் மீது தவறில்லை. தாங்கள் அன்று அறிவிக்கும்போது ஒருமனதாக நிறைவேறியது என்று சொல்லிவிட்டு தாங்கள் எழுந்துபோய் விட்டீர்கள். அப்போது என் கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து ஆட்சேபணை கூறினார்கள். தாங்கள் வாய் தவறி சொல்லியிருக்கலாம். ஆனால் வாய் தவறிச் சொன்னேன் என்பதை அப்போதே சொல்லி திருத்தியிருக்க வேண்டும். தாங்கள் அதைத் திருத்தாததின் விளைவு பத்திரிகைகளில் தவறாக செய்தி வந்திருக்கிறது.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பத்திரிக்கையில் வந்ததை வைத்துச் சொல்வது அல்ல. நம் ப்ரோசீடிங்சில் எப்படி இருக்கிறது?

திரு. ஏ. சுப்பிரமணியம்: நீங்கள் ப்ரோசீடிங்சை திருத்தி இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய ப்ரோசீடிங்சில் எப்படி வந்திருக்கிறது? அப்படி வந்ததற்கு மாறாக இருந்தால், அந்தப் பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: நான் கடைசி வரையில் இந்த மன்றத்தில் இருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது என்றைக்கு நடந்தது?

திரு. ஏ. சுப்பிரமணியம்: 21-ஆம் தேதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 22-ஆம் தேதி நீங்கள் அவைக்கு வந்திருந்தீர்கள் இல்லையா? அப்போதே கேட்டிருக்க வேண்டும். நம்முடைய ப்ரோசீடிங்சில் எப்படி இருக்கிறது?



திரு. ஏ. சுப்பிரமணியம்: ப்ரிவிலேஜாக இருந்தால் உடனடியாகச் சொல்ல வேண்டும். நான் இதை எழுப்பிய காரணம் என்னவென்றால், தாங்கள் வாய் தவறி ஏதோ ஒரு அவசரத்தில் ஒருமனதாக என்று சொல்லிவிட்டு, பிறகு திருத்தப்பட்டு இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கேட்பதெல்லாம் நம்முடைய அவைக் குறிப்பில் எப்படி வந்திருக்கிறது?

திரு. ஏ. சுப்பிரமணியம்: சபைக் குறிப்பில் நிறைவேறியது என்று வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே எந்த விதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: சபைக் குறிப்பை திருத்தி இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய சபைக் குறிப்பில் எப்படி இருக்கிறது என்றால், "குரல் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது, ஏற்போர் அதிகம், தீர்மானம் நிறைவேறியது". நம்முடைய சபைக் குறிப்பில் எப்படி இருக்கிறதோ அப்படித்தான் பத்திரிக்கையில் வரவேண்டும். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இங்கே நடந்ததற்கு மாறாக பத்திரிக்கையில் வெளிவந்திருந்தால், பத்திரிக்கை மீது உரிமைப் பிரச்னை கொண்டு வரலாம். தாங்கள் அப்போது ஏதோ அவசரத்தில் தவறுதலாக ஒருமனதாக நிறைவேறியது என்று சொல்லிவிட்டீர்கள். உடனே எங்கள் கட்சியின் தலைவர் அதற்கு மறுப்பு சொல்ல எழுந்தார். தாங்கள் அதற்குள் போய் விட்டீர்கள். இம்மாதிரியான தவறுகள், முக்கியமான தீர்மானத்தைப் பற்றி தீர்ப்பு சொல்கிறபோது அவசரப்பட்டு சொல்லிவிட்டால், பத்திரிக்கையில் போட்டு விடுகிறார்கள். அதனால் மக்கள் தங்களைப் பற்றி தவறாகக் கருதிக்கொள்வார்கள். (குறுக்கீடு.) எங்கள் கட்சியின் கருத்தைப் பொறுத்தவரையில்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 ஆகஸ்ட் 26

இங்கே தெளிவாகச் சொல்லப்பட்டு, பத்திரிக்கையிலும் அவை வெளிவந்திருக்கின்றன. ஆனால் அதற்கு மாருகச் செய்தி வந்தால், படிக்கிற மக்கள் என்ன நினைப்பார்கள். படிக்கிற மக்கள் தங்களைப் பற்றி தவருக நினைப்பார்கள். பேசிய கருத்துக்கு மாருக, தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு மாருக, தலைவர் இம்மாதிரி சொல்லிவிட்டார் என்ற கருத்து மக்களிடையே ஏற்படும். அதைத் தவிர்க்க வேண்டுமென்பதற்காக சொல்கிறேன், இம்மாதிரி பிழைகள், இம்மாதிரி தவறுகள் இனிமேல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இதிலே ஓட்டெடுப்பு வேண்டுமென்று சொல்லவில்லை. ஏகமனதாக என்று சொல்லவில்லை. இந்தமாதிரியான நேரம் வருகிறபோது, அது ஒருமனதாக வந்ததா அல்லது வேறுபட்டு வந்ததா என்று பார்க்க வேண்டுமென்றால், நீங்கள் டிவிஷன் கேட்டு இருக்கலாம். நீங்கள் டிவிஷன் கேட்கவில்லை. நீங்கள் டிவிஷன் வேண்டுமென்று எழுந்து நின்று கேட்காததால், நான் குரல் வாக்கெடுப்புக்கு விட்டேன். குரல் வாக்கெடுப்புக்கு விடும்போது 'ஆம்' என்பதோ, 'இல்லை' என்பதோ தெளிவாகக் கேட்பது இல்லை. நம் அவைக் குறிப்பில் இருப்பதைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

திருமதி சத்தியவாணிமுத்து : அன்று நடந்த கச்சத் தீவு தீர்மானத்தில் நாங்கள் எல்லாம் எதிர்த்துப் பேசினேம். ஆனல் நீங்கள் முறையான வாக்கெடுப்புக்கு விடுவதற்கு முன்பே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள். நாங்கள் எல்லாம் இதற்கு உடன்பாடு இல்லை, வெளிநடப்புச் செய்கிறோம் என்று சொல்வதற்கு எழுந்திருந்தபோது நீங்கள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று சொல்லிவிட்டு இறங்கிவிட்டீர்கள். அதனல் நான் பேச வந்ததை பேச முடியாமல் போய்விட்டது. பத்திரிக்கையிலும் அதனல் அந்த மாதிரி செய்தி வந்தது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் கூறுகிருர்.



1974 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கெடுப்பு நடத்துவதற்கு முன்னலே, எதிர்க்கட்சிகளைப் பார்த்து, யார் யார் வெளிநடப்புச் செய்ய இருக்கிறீர்கள் என்று பேரவைத் தலைவர் கேட்க முடியாது. அது முறையல்ல. முடியவே முடியாது.

திரு. தோப்பூர் திருவேங்கடம் : சபைக் குறிப்பு திருத்தப் பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபைக் குறிப்பு திருத்தப் படவில்லை என்று கூறிவிட்டேன்.

## (4) அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்காய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

THIRU M. A. LATHEEF : Sir, I rise to present the Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations of the Committee contained in its reports on the Accounts for the years 1967-68 and 1968-69.

### (ஆ) அரசினர் உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தமிழ் நாடு சட்டப் பேரவை அரசினர் உறுதிமொழிக் குழுவின் ஏழாவது அறிக்கையை (ஐந்தாம் சட்டப் பேரவை) இந்த அவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் (பணயம் அல்லது பந்தயம் கட்டுதல் ஒழிப்பு) சட்ட முன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

அறிக்கை பேரவைத் தலைவரின் அறைக்கு வந்த உடனே, அவையில் வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் . . .

**திரு. ஆலடி. அருணா:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்தப் பிரச்சினையில் அவையில் தந்த தகவல், மதிப்பீட்டு அறிக்கை அச்சகத்தில் இருக்கிறது, வரவில்லை என்று சொன்னீர்கள். இவ்வளவு காலதாமதம் ஏன்? எவ்வளவு நாளாக அச்சில் இருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தவறான தகவல். இந்த அவையில் அச்சில் அந்த அறிக்கை இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. தவறான தகவல் வேண்டாம்.

**திரு. கே. கந்தசாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**திரு. எம். ஏ. லத்தீப்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**திரு. கோவை செழியன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லத்தீப், உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன சொல்லுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவரவர்களே, இந்த மன்றத்தில் தவறான மரபுகள் ஏற்படக்கூடாது என்பதற்காக மாண்புமிகு உறுப்பினர் எட்மன்ட் அவர்கள் கூறியதற்கிணங்க என்னுடைய பேச்சை தாங்கள் சபைக் குறிப்பிலிருந்து நீக்கினீர்கள்.

* * *

என்று அந்தக் கட்சி உறுப்பினரே சொல்கிறார். அது அவைக் குறிப்பில் இருக்க வேண்டுமா? அதை நீக்க வேண்டும். அப்படி நீக்காவிட்டால் அது என்னைப் பற்றி தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். அதைச் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை. அதை தாங்கள் நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் . . .

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் யாராக இருந்தாலும் பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்து பேசுகிற பேச்சுக்கள் தான் முறையான பேச்சுக்கள். அவை தான் சபைக் குறிப்பில் ஏறும். பேரவைத் தலைவர் அனுமதி இல்லாமல் சில நேரத்தில் மன்றத்தில் உறுப்பினர்கள் பேசியிருந்தால் அவைகள் சபைக் குறிப்பில் ஏறாது. நான் பத்திரிக்கைக் காரர்களுக்கும் சொல்லி இருக்கிறேன். அப்படிப்பட்ட பேச்சுக்களை பத்திரிக்கையில் போடக்கூடாது என்று சொல்லியிருக்கிறேன். திரு. செழியன் அவர்கள் பேசியது எல்லாம் சபா நாயகர் அனுமதி கொடுத்துப் பேசியது அல்ல. அது ஏறாது. ஏறினால் தானே நீக்க வேண்டுமென்று சொல்லவேண்டும்.

**திரு. கே. கந்தசாமி:** சார், பாயின்ட் ஆப் ஆர்டர். திரு. கோவை செழியன் அவர்கள் பேசுகின்றபோது

* * *

என்று சொன்னார்கள். அப்படிச் சொல்கிறபோது அவருக்கு பேச அனுமதி கொடுப்பது சரியா? அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியது பேரவைக் குறிப்பில் ஏறாது என்று ஏற்கனவே சொல்லிவிட்டேன். குறிப்பில் ஏறாது என்று சொன்ன பிறகு மீண்டும் அதை நீங்கள் சொல்லி, குறிப்பில் ஏறவைக்க வேண்டாம். ஆகவே, திரு. கந்தசாமி அவர்கள் மைக் பற்றி குறிப்பிட்ட அந்த வார்த்தைகளையும் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன்.

(6) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

**தமிழ்நாடு 1974-ம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் (பணயம் அல்லது பந்தயம் கட்டுதல் ஒழிப்பு) சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவரவர்களே, தமிழ்நாடு 1974-ம் ஆண்டு குதிரைப் பந்தயங்கள் (பணயம் அல்லது பந்தயம் கட்டுதல் ஒழிப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இச்சட்ட முன் வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

## (7) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்னும் 2½ மணி நேரம் தான் இருக்கிறது. 10 பேர் பேசவேண்டியிருக்கிறது. அதனால் உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசிவிட வேண்டும். முதலில் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள்.

***திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, நான் சுருக்கமாக பேசி முடித்துவிடுகிறேன். மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பங்குகொண்டு, இந்த வாரியம் சம்பந்தப்பட்ட அறிக்கையைப்பற்றி ஓரிரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

சாதாரணமாக, இந்த அறிக்கை நீண்ட அறிக்கையாக எப்போதும் இருக்கும். ஆனால் இப்போது சுருக்கமான ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பிட்ட சில விபரங்களை, முக்கியமான விபரங்களை மட்டும் இந்தத் தொகுப் பிலே தந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி, எங்களுடைய கட்சியின் சார்பில் ஒருசில முக்கியமான விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

முதன் முதலில் இந்த வாரியத்தைப் பற்றி பொதுவாக ஒருசில கருத்துக்களை கூறுவது நல்லது என்று கருதுகிறேன். இந்த வாரியத்திலே ஏறத்தாழ 11 பேர்கள் 17 ஆண்டு காலத்தில் தலைவர் களாக—சேர்மென்களாகப் பதவி வகித்திருக்கிறார்கள். இப்போது திரு. எம். ஜி. ராஜாராம் அவர்கள் இந்த வாரியத்தின் தலைவராக



செயலாற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகளைப் பார்க்கும்போது தலைவராக வரக்கூடியவர்கள் அதிக காலம் தன்னுடைய பதவியில் நிலைத்திருக்க முடியாததால் சரியான திட்டவட்டமான காரியங்களை அவர்கள் நிறைவேற்றுவதில் சங்கடங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்ற கருத்து நிலவுகிறது.

(திரு. நா. வீராசாமி—தலைமை)

அது பற்றி சரியாக வெளியிட வேண்டிய பொறுப்பு இந்த இலாகாவைச் சேர்ந்தது. ஏன் அடிக்கடி இந்த மாதிரி மாற்றம் ஏற்படுகிறது? இதனால் செயலூக்கம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த இலாகா சரியாக நடப் பதற்கு உகந்ததாக இல்லை என்ற குற்றச்சாட்டைக் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தப்படியாக, வேறு சில கருத்துக்களை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். இந்த இலாகாவிலே இருக்கின்ற செங்கற்பட்டு மாவட்டம் அச்சரப்பாக்கம் பிரிவில் ஏற்பட்ட முறைகேடுகளினால் ஒரு சில பொருட்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அங்கே கையாடல் நடைபெற்றிருக்கிறது என்ற தகவல் எங்களுக்கு வந்த வண்ணமிருக்கிறது. சுமார் 5 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பொருட்கள் அங்கு காணப்படவில்லை; கையாடல் செய்யப் பட்டிருக்கிறது. அது சம்பந்தமாக என்ன நடவடிக்கை இந்த வாரியத்திலிருந்து எடுத்திருக்கிறார்கள் என்பதை தெளிவாக இந்த மன்றத்திலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலே சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு எந்தவிதமான சுணக்கமும் தேவையில்லை என்று கூறிக்கொள்கிறேன். இந்த மாதிரியான கையாடல் வேறு சில பகுதிகளிலும் நடைபெற்றிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் எங்கள் கட்சியின் சார்பில் பேசிய திரு. ஜேம்ஸ் அவர்கள் மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சி பற்றி சில விபரங்களைத் தந்தார்கள். நானும் அது சம்பந்தமாக எனக்குக் கிடைத்த ஒருசில தகவல்களை கூறுவது என்னுடைய கடமை

என்று கருதுகிறேன். எனக்குக் கிடைத்த தகவலில் இருக்கின்ற முக்கியமான விஷயங்களை குறிப்பிடுவது என்னுடைய கடமையாக இருக்கிறது.

அங்கு ஸ்டோர்கீப்பராக 4 பேர்கள் இருக்கிறார்கள். திருவாளர்கள் காமராஜ், எல். ஜி. சுப்பிரமணியம், குருமூர்த்தி, ஜேசு என்று 4 பேர்கள் இருந்ததாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. காணமல் போன பொருட்களில் குறிப்பாக 6,230 கே.ஜி. எம்.எஸ். ராடு, அதே மாதிரி 31 டன் காப்பர்—இவையெல்லாம் அங்கிருந்து அகற்றப்பட்டு விட்டதாக தகவல் வந்திருக்கிறது. இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, அங்கு ஸ்டோர் கீப்பராக இருந்தவர்கள் ஒழுங்காகத்தான் செயல்பட்டு வந்திருப்பதாகத் தெரிகிறது. ஏனென்றால் அவர்களுக்கு மேலே இருக்கின்றவர்களின் உத்திரவின் பேரில்தான் இந்தப் பொருட்களை கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மேலதிகாரிகளின் அனுமதியின்பேரில்தான் இந்தத் திருட்டு நடைபெற்றிருக்கிறது. ஆகவே, ஸ்டோர் கீப்பர்களின் மீது எந்தவிதமான தவறுதலும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஸ்டோரில் இருந்து மெட்டீரியல்ஸ் கொடுக்க வேண்டுமென்றால் அதற்குப் போதிய உத்தரவுகள் இருக்க வேண்டும். அந்த உத்தரவுகளை அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான ஆதாரங்கள் எல்லாம் ஸ்டோர் கீப்பர்களிடம் இருக்கின்றன. அதன் பிறகு சாமான்களைக் காணவில்லை என்று சொல்லி, ஸ்டோர் கீப்பர் காமராஜ்மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அவரை சஸ்பெண்ட் செய்திருக்கிறார்கள். குற்றம் ஒருபுறம் இருக்க, குற்றவாளி வேறு ஒருவராக இருக்க, உண்மையான குற்றவாளியை விட்டுவிட்டு, ஒரு அப்பாவி மீது நடவடிக்கை எடுத்திருப்பது நியாய விரோதமானது என்று நான் குற்றஞ் சாட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்தபடியாக இன்னொரு முக்கியமான விஷயம். இந்த பவர் போர்டு கார்ப்பரேஷன் விரைவிலே உருவாகப்போகிறது என்பதை இந்த அறிக்கையிலிருந்து திட்டவட்டமாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. அப்படி வரும்போது அதற்கு என்னென்ன அடிப்படைகளின்பேரில் அதிகாரிகளை மாற்றப்போகிறார்கள், என்னென்ன சர்வீஸ் முறைகளை கடைப்பிடிக்கப் போகிறார்கள் என்பதைத் தெரிவிக்க வேண்டும். மாற்றுகின்றபோது அவர்களுக்கு முன்பு இருந்த உரிமைகள் பாதிக்காத வண்ணம் விதி முறைகள் வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். புதிதாக விதிமுறைகள் அமைக்கப்பட்டால் நிச்சயமாக அவர்கள் வெகுவாக பாதிக்கப்படுவார்கள் என்ற ஒரு பீதி இருக்கிறது. அதை நல்ல முறையில் ஆராய்ந்து, பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரிவிஷன் ஆப் டாரிப் வரப்போகிறது, வரப் போகிறது என்று அடிக்கடி பத்திரிகைகளிலே வந்த வண்ணம் இருக்கிறது. இது எப்படி ரிவைஸ் செய்யப்படும் என்பதை கொஞ்சம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். டொமஸ்டிக் கன்சம்ஷன், அகிரிகல்சுரல் கன்சம்ஷன் இவைகளை ரிவைஸ் செய்வதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்; எதிர்க்கிறோம். ஏனென்றால் விவசாயத் துறையிலே 7 லட்சம் பம்புசெட்டுகளுக்கு கனக்ஷன் கொடுத்துவிட்டோம் என்று சொல்லிவிட்டு, இப்போதே ரேட் அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறபோது, இன்னும் டாரிப் ரிவைஸ் செய்வது நியாயமல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேமாதிரி 50 யூனிட் வரையில் டொமஸ்டிக் கன்சம்ஷன் செய்பவர்களின் டாரிபை ரிவைஸ் செய்யக்கூடாது. பல்க் கன்சம்ஷன், எல்.டி. கன்சம்ஷன், இன்டஸ்டிரியல் கன்சம்ஷன் செய்பவர்களின் டாரிபை வேண்டுமானால் மாற்றி அமைக்கலாம். தாங்கக்கூடியவர்கள்மீது மாற்றியமைப்பது பொருத்தமாக இருக்கும். தாங்கக்கூடியவர்கள்மீது வரிச்சுமை என்பதற்கேற்ப அதிகமாக உபயோகிப்பவர்கள்பேரில் டாரிபை மாற்றியமைப்பதில் கஷ்டம் ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இலாகாவில் இருந்து என் இறுகாறும் தொழிலாளர்களுக்கு போனஸ் கொடுக்கப்படவில்லை என்று கேட்க விரும்புகிறேன். 31—3—1974-ல் பாலன்ஸ் ஷீட் கணக்கு முடிந்துவிட்டது. 6 மாதங்களுக்குள் போனஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று விதி இருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏன் போனஸ் கொடுப்பதில் சுணக்கம், காலதாமதம் ஏற்படுகிறது என்று கேட்க விரும்புகிறேன். ஒருவேளை இந்த வாரியத்தின் நிதிநிலை சரியாக இல்லையா? அதல்லாமல் தொழிலாளர்களுக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொடுக்க காலதாமதம் பண்ணினால், இதிலே பணிபுரிகின்றவர்களுக்கு உண்மையிலே நல்ல எண்ணம் பிறக்காது. அவர்கள் இந்த இலாகாவையும் இந்த வாரியத்தையும் பற்றி ஒரு கெட்ட எண்ணத்தோடு பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால் உரிய காலத்தில் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, எல்.ஐ.சி. மூலமாகவும், பாங்குகள் மூலமாகவும் மின்சார வாரியத்திற்குக் கடன் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. பப்ளிக் யுடிலிடி கன்சர்ன் என்கிற காரணத்தினால், அவர்கள் லோன் கொடுக்க மறுக்கிற காரணத்தினால், அரசாங்கமே மின்சார வாரியத்திற்குக் கடன் வழங்க முன்வந்தாக வேண்டும். இன்றைக்கிருக்கிற க்ரெடிட் ஸ்கீளிஸ் காரணமாக அங்கே பல வேலைகள் சுணங்கிக்கிடப்பதை அறிகிறோம். ஆகவே அரசாங்கமே நிதி உதவி செய்து, அவை சரியான முறையில் செயல்படுவதற்கு ஏற்பாடுகளைச் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

இன்னொரு விஷயம்—தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இப்போது சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும். அவர்கள்மீது நடவடிக்கை மேற்கொள்ள எல்லா உரிமைகளும் அவர்களுக்கு இருக்க வேண்டுமென்ற ஆலோசனை நடந்துகொண்டிருப்பதாக அறிகிறோம். இந்த அதிகாரத்தை சூப்பிரண்டெண்டிங் என்ஜினியர்களுக்குக் கொடுத்துவிட்டால் சில பகுதிகளில் இருக்கிறவர்கள் தன்னிச்சையாக நடந்து கொண்டு விட வாய்ப்பு ஏற்படும். சிப் என்ஜினியர் அளவில்—எல்லா



விதமான மேலதிகாரமும் இங்கே இருப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். இதையும் இலாக்காவில் ஆலோசனை செய்ய வேண்டும்.

அடுத்து, இப்போது வேஜ் போர்டு உருவாக்க ஆலோசனை இருப்பதாகக் கருதுகிறேன். இன்றைக்கு அவர்களுடைய ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது. இந்த ஊதிய விகிதத்தை மாற்றி அமைக்க வேஜ் போர்டு நியமித்து ஆலோசனை செய்யப்படுகிற போது எல்லா யூனியன்களுக்கும் ரெப்ரசென்டேஷன் செய்ய வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். காரணம் எல்லா யூனியன்களும் அங்கீகரிக்கப்படவில்லை. ஆளுங் கட்சி சார்பாக அமைந்திருக்கிற யூனியன்தான் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது, மற்ற கட்சி யூனியன்கள் அங்கீகாரம் பெறவில்லை. ஆகவே வேஜ் ரிவிஷன் பற்றி யோசிக்கிறபோது எல்லா யூனியன்களும் கலந்தாலோசிக்கப்பட வேண்டும்.

அடுத்ததாக இந்த வாரியத்தில் வேலை செய்வதற்காக மனுக்கள் போட்டார்கள் என்றால் வருடக் கணக்கில் எந்தவிதமான முடிவும் தெரியாமல் காத்துக்கிடக்கின்ற நிலை இருக்கிறது. அப்படியின்றி வேலை உண்டா, இல்லையா என்கிற முடிவை செலக்ஷன் போர்டு குறிப்பிட்ட ஒரு காலவரைக்குள் எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் தெரிவிக்க வேண்டும். இதில் தற்காலிகப் பணியில் க்ளார்க்குகள்—என்ஜினியர்கள் இருக்கிறார்கள். அவர்களை ரெகுலராக வேலையில் அமர்த்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, மின்சார வாரியத்திலுள்ள குறைபாடுகளைப் பற்றி ஆளுங் கட்சி உறுப்பினர்கள்—அதுவும் குறிப்பாக திரு. கிருஷ்ணமூர்த்தி, திரு. ராசகோபால் போன்றவர்கள் வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். இது சரியான முறையில் இயங்கவில்லை—விவசாயிகளுக்கு பம்புசெட்டு கனெக்ஷன் கொடுப்பதில் அதிகாரிகளுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுக்கிறார்கள்—மற்றவர்களுக்குக் கொடுப்பதில்லை என்கிற புகார் வந்த வண்ணமாக இருக்கிறது—அது இன்னும் முறையாக ஒழுங்குபடுத்தப்படவில்லை. இதைப்பற்றியும் இலாக்கா கவனம் செலுத்த வேண்டும்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 26

அடுத்ததாக டி.எம்.கே. யூனியன் இருக்கிறது. அதன் தலைவராக திரு. ஏ. எம். இராஜா, எம்.எல்.ஏ. இருக்கிறார். இந்த யூனியனுக்கு மட்டும் வாரிய ப்ரிமிசசுக்குள்ளேயே அலுவலகத்துக்கு இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற யூனியன்களுக்கு இடம் மறுக்கப் பட்டிருக்கிறது. இத்தகைய ஒருதலைப்பட்சமான போக்கு சரியல்ல, நியாயமல்ல என்று கூற விரும்புகிறேன்.

இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற குறிப்பில்

Out of a total number of 62,487 villages and hamlets, 61,138 representing 98 per cent have been electrified. Similarly, out of a total number of 24,799 Harijan Colonies, 23,800 representing 96 per cent have been electrified. About seven lakhs pumpsets have been energised. This represents one-third of the total number of 24 lakhs pumpsets operating in all the States together.

என்று பெருமைப்படும் வகையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

ஆனால் மாவட்டங்களில் சென்று பார்த்தால் மின்வெட்டின் காரணமாக மக்கள் பட்ட துன்பம் கொஞ்ச நஞ்சமல்ல. பல இடங்களில் மோட்டார்கள் எரிந்து போய்விட்டன என்று தந்திகள் வந்திருக்கின்றன. நாகர்கோயில் பகுதிகளில் எல்லாம் பரீட்சை நேரத்தில் மாணவர்கள் இரவு மின்சப்ளை இல்லாத காரணத்தினால் விளக்குகளில் படிக்க முடியாது பட்ட துன்பங்களை நான் அறிவேன். எல்லா இடங்களுக்கும் விஸ்தரித்து விட்டோம் என்பதைத் தவிர எந்தப் பகுதியிலும் தாராளமாகக் கிடைக்க வழியில்லாத நிலைதான்—சங்கடம்தான் உண்டாக்கப் பட்டிருக்கிறது.

அடுத்து, இரண்டாவது அட்டாமிக் பவர் ஸ்டேஷனை கூடங்குளத்தில் அமைக்க வேண்டுமென்று பரிந்துரை அனுப்பியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இது வருமா, வராதா? எப்போது வரும்? இதன் நிலைமை என்ன என்பதை எல்லாம் அமைச்சர் அவர்கள் தெளிவாகத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.



1974 ஆகஸ்ட் 26] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

கோதையாறு திட்டத்தை எடுத்துக் கொண்டால் விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மின்சார இயக்கமும் சரியில்லை. அதிகாரிகளிடத்தில் கேட்டால் நாங்கள் மின்சாரத்தை இயக்கிக் கொண்டிருக்கிறோம் என்கிறார்கள். அங்கே 100 மெ.வா. உற்பத்தித் திறன் இருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. அது கமிஷன் ஆகிவிட்டது என்றும் கூறியிருக்கிறார்கள். ஆனால் சரியான முறையில் இயங்கவில்லை என்பதுதான் எங்களுக்குக் கிடைத்திருக்கும் தகவல். டன்னலில் பல பகுதிகளில் தண்ணீர் கசிவு இருக்கிறது. க்ரௌடிங் இருப்பதனால் நஷ்டம் ஏற்படுகிறது—ஆரம்பத்தில் அதிகாரிகள் தவறு செய்து விட்டார்கள் என்கிற புகார் என்னிடத்தில் இருக்கிறது. மின்சார அமைச்சர் அவர்கள் இதைத் தெளிவாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இவர் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு—கொஞ்சம் சுறுசுறுப்பாக பணியாற்றுவார் என்று எதிர்பார்த்தோம். நல்லமுறையில் மின்சார உற்பத்தியில் இத்துறை முழு கவனமும் செலுத்த அமைச்சர் ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மின்சாரத்

(முற்பகல் 11-30)

துறையிலே இருக்கிற பல கஷ்டங்களுக்கும் துன்பங்களுக்கும் காரணம் அதிலே இருக்கின்ற அதிகாரிகள் போதிய அளவிலே செயலாற்றவில்லை, அவர்கள் எல்லாம் செயலிழந்து இருக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டும் வந்த வண்ணமாக இருக்கிறது. ஆகவே, எதிலும் சற்று நிதானமாக, ஆர அமர சிந்தித்துச் செயல்பட வேண்டும். எங்கேயாவது ஊழல் நடப்பது தெரிந்தால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதல்லாமல் அப்பாவிகள் மீது நடவடிக்கை எடுக்கத் தேவையில்லையென்று நான் குற்றச் சாட்டாகக் கூற விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், ஆங்காங்கு ஆளுங் கட்சிக்கு ஆதரவாக பல யூனியன்கள் துவங்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்கு ஊக்கம் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். அது இலாகாவிற்கும் நல்லதல்ல, அமைச்சரவைக்கும் நல்லதல்ல என்ற குற்றச் சாட்டை நான் கூறக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1974 ஆகஸ்ட் 26

பல இடங்களிலே மின்சாரத்தை விஸ்தரிக்க வாய்ப்பிருக்கிறது. நெய்வேலியிலே ஒரு செக்கண்ட் மைன் கட் விரைவிலே ஏற்பட்டால், மின்சாரம் விரைவிலே கிடைக்கும் என்ற வாய்ப்பு இருக்கிறது. இப்பொழுது அண்டை மாநிலங்களைக் கேட்கின்ற நிலைமை இருக்கிறது, கேரளத்தைக் கேட்கின்ற நிலைமை இருக்கிறது, கர்நாடகத்தைக் கேட்கின்ற நிலைமை இருக்கிறது, ஆந்திர மாநிலத்தைக் கேட்கின்ற நிலைமை இருக்கிறது. நாம் மின்சாரத்தில் முதன்மையாக இருக்கிறோம் என்று எவ்வளவு பெருமை பேசிக் கொண்டாலும் மற்ற மாநிலங்களிலேயிருந்து மின்சாரத்தைக் கேட்கின்ற நிலையிலேதான் இருக்கிறோம். குறைவான விலையிலே வாங்கிக் கொண்டு, அதிக விலைக்குக் கொடுக்கின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, விரைவிலே இந்த மாதிரியான குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் தீர்வு காண வேண்டும்.

டாரிஃப் ரிவிஷனிலே, விவசாயிகளுடைய தலையிலே கை வைக்கக்கூடாது என்று விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ச. மு. பழனியப்பன்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும், 1973-74-ம் ஆண்டு துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் ஒரு சில வார்த்தைகள் இங்கே சொல்ல முற்படுகிறேன்.

மின்சார வாரியச் செயல்முறைகளைப் பற்றி, இங்கே பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இந்த உப கண்டத்திலேயே தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய பணிகள் மிகச் சிறப்பான முறையிலே, பல குறைபாடுகளுக்கு மத்தியிலும் பல சிறப்பான பணிகளை அவர்கள் இந்த மாநிலத்திலே ஆற்றியிருக்கிறார்கள் என்பதிலே எந்தவிதமான ஐயப்பாடும் இருக்க முடியாது. மின்சார உற்பத்தியாக இருந்தாலும், அந்த மின்சாரத்தை விநியோகிக்கின்ற பணியாக இருந்தாலும் சரி, மற்ற மாநிலங்களுக்கெல்லாம் எடுத்துக்காட்டாக இன்று இந்தியாவிலேயே முதலிடம் வகிப்பது தமிழ்நாடு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.



1974 ஆகஸ்ட் 26] [டாக்டர் ச. மு. பழனியப்பன்]

விவசாயப் பம்ப் செட்களுக்கு மின் இணைப்பு கொடுப்பதாக இருந்தாலும், கிராமப்புறங்களுக்கு மின் இணைப்பு வழங்குகின்ற பணியாக இருந்தாலும், அரிசனக் காலனிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற திட்டமாக இருந்தாலும், அதனைச் செம்மையாக செய்கிறார்கள். கிராமங்களுக்கு 98 சதவீதம் மின் இணைப்பும், அரிசனக் குடியிருப்புகளுக்கு 96 சதவீதம் மின் இணைப்பும் கொடுத்துள்ளது இந்த வாரியம் என்று அவர்கள் சொல்கிற நேரத்தில், அவர்களது சாதனைக்காக நாம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம்.

இருந்தாலும், விவசாயிகள் குறைபாடு இன்னும் தீர்ந்தபாடில்லை. மின்விசை ஏற்றங்களுக்கு அவர்கள் மின் இணைப்பு கேட்டு, இன்று மாநிலத்திலே ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் பைசல் செய்யப்படாமலிருக்கின்றன. குறிப்பாக ஈரோடு மின் சிஸ்டத்தை எடுத்துக் கொண்டால், சென்ற ஆண்டு 1973-74 ஆம் ஆண்டு அவர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்கள் 5,000-க்கு மேலாகும். ஆனால், இந்த வாரியத்தின் மூலமாக அவர்கள் 3,295 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று குறியீடு—டார்கெட்—போட்டிருந்தார்கள். ஆனால், உண்மையாக—விவசாயிகளுக்குக்—கொடுக்கப்பட்ட மின் இணைப்பு 2,432 பம்ப் செட்டுகள் ஆகும். கிட்டத்தட்ட 800 விசை ஏற்றங்களுக்கு மின் இணைப்புகள் கொடுக்கப்படவில்லை.

நாம் தீட்டுகின்ற திட்டத்தின் அளவுக்கும் உண்மையாக நிறைவேற்றுகின்ற பணிக்கும் இடையிலே நீண்ட இடைவெளி, ஆண்டுக்காண்டு இருப்பதை கவனத்திலே கொள்ள வேண்டும். 1974-75-ம் ஆண்டுக்கு 5,600 பேர்கள் மின் இணைப்பு கோரி மனு செய்திருக்கிறார்கள். ஆனால், இந்த ஆண்டு, 2,400 பம்ப் செட்களுக்குத்தான் மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று டார்கெட் ஃபிக்ஸ் பண்ணியிருக்கிறது மின் வாரியம். ஆனால், அவர்கள் கொடுக்க இருக்கிற மின் இணைப்புகள் அதைவிடக் குறைவாக இருக்கும் என்று இங்கே இருக்கிற மின்வாரிய இன்ஜினியர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த நிலைமைகள் நிச்சயமாக எதிர்காலத்திலே சீர்திருந்தியாக வேண்டும்.

[டாக்டர் ச. மு. பழனியப்பன்] [1974 ஆகஸ்ட் 26

இன்னொன்றையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி ஒவ்வொரு திட்டத்திலும் இருக்கிற எஸ்.இ.யையும். டி.இ.யையும் கேட்கின்ற நேரத்தில் அவர்கள் குறைபட்டுக் கொள்கிறார்கள். நாங்கள் கோரி விண்ணப்பிக்கின்ற மின் சாதனங்கள் இங்கே கிடைப்பதில்லையென்று சொல்கிறார்கள். ஈரோடு மின் திட்டத்தைப் பற்றிய புள்ளி விவரத்தைத் தர கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு அவர்கள் கேட்ட டிரான்ஸ்பார்மர்கள் 720. அவர்கள் கேட்ட கண்டக்டர்கள் 7,500, கிலோ மீட்டர் என்று சொல்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு உண்மையாகக் கிடைத்தது 73 டிரான்ஸ்ஃபார்மர்கள் தான் என்று சொல்கிறார்கள். அவர்கள் கோரியது 720, ஆனால் கிடைத்தது 73 என்று சொல்கிறார்கள். அதேபோல், கண்டக்டர்களும் 1,532 கிலோ மீட்டர்தான் கிடைத்தது என்று சொல்கிறார்கள். அந்தத் துறையினரை நாங்கள் அணுகிக் கேட்கிற நேரத்திலேயும், மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலே இது போன்று மின்வாரியக் கேள்விகளுக்கும் பதில் சொல்லி, அங்கிருப்பவர்கள் எங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். அந்த நிலைமைகள் எதிர்காலத்தில் நிச்சயமாக சீர்திருந்த வேண்டும். சென்ற ஆண்டு மேல் மட்டத்திலே சில நல்ல முன்னேற்றங்களைச் செய்திருக்கிறார்கள். அதாவது மேல் மட்டத்திலே 5 சீப் இன்ஜினீயர்கள் என்ற அளவுக்கு முன்னேற்றம் செய்திருக்கிறார்கள். நான் ஒன்றை ஆலோசனையாகச் சொல்ல விரும்புகிறேன். அவர்களுடைய அதிகார எல்லை மாநிலம் முழுவதற்கும் இருக்கிறது. அதை ரீஜினல் நிலைமையில், இரண்டு மாவட்டங்களை, 3 மாவட்டங்களை ஒன்றாக இணைத்து, அந்தந்தப் பகுதிக்கு ஒருவர் என்று போட்டால், அவர்களது கவனம் சிறப்பாக இருக்கும், குறுகிய எல்லைக்குள் இருக்கும் என்ற காரணத்தால் எதிர்காலத்திலே பணிகள் சிறப்பாக இருக்கும் என்று கூறி, அதை இந்த வாரியமும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் யோசனை செய்ய வேண்டுமென்று கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

பம்ப் செட்டுகளுக்கு இணைப்புகள் கொடுக்கின்ற நேரத்திலே, விவசாயிகளிடமிருந்து சில புகார்கள் வருகின்றன, வாரியத்தைப் பற்றி. எங்களிடம் சாமான்கள் கிடையாது, வெளியே ஓப்பன் மார்க்கெட்டிலே சாமான்கள் வாங்கி வந்தால் இணைப்பு கொடுக்கிறோம் என்று வாரியத்தினர் சொல்கிறார்கள். விவசாயிகள், பயிர்கள் காய்வதன் காரணமாக, அந்தச் சாமான்களைக் கஷ்டப் பட்டு வாங்கிக் கொடுக்கிறார்கள். ஓரளவு, மின் இணைப்பும் கிடைத்து விடுகிறது. ஆனால் அதனை, டிபார்ட்மெண்டிலே சப்ளை செய்ததாக அவனிடம் கையெழுத்து வாங்கிவிடுகிறார்கள். ஏற்கனவே, வெளி மார்க்கெட்டிலே வாங்கிய பம்ப் செட்டு, மின் இணைப்பு சாதனங்களை, மின் இணைப்பு கொடுத்த பிறகு, டிபார்ட்மெண்ட் கொடுத்ததாகக் கையெழுத்து வாங்கினால், அந்தத் துறையின் மின் சாமான்கள் என்ன ஆயிற்று? அவை வெளியில் விற்கப்படுகின்றன என்று சொல்வதைத் தவிர, வேறு எந்தவிதமான காரணமும் சொல்ல முடியாது. அந்த நிலைமைகளை மேலே இருக்கிற அதிகாரிகள் நிச்சயமாகக் கவனத்திலே கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தினை சொல்லி, மின் வாரியத்திலே பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்குப் பல்வேறு சலுகைகளை அறிவித்திருக்கிறார்கள். இந்த ஆண்டு கூட 5,000-க்கு மேற்பட்ட தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்க இருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டி, எதிர்காலத்திலே இந்தப் பணிகள் சிறப்பாக அமைவதற்காகக் கூறப்படுகிற ஒரு சில யோசனைகளைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று கூறி, எனக்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.

*திரு. மணலி சி. கந்தசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது கடந்த 3 நாட்களாக விவாதம் நடந்து வருவதை நான் கூர்ந்து கவனித்தேன். அச்சடிக்கப்பட்டு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையையும் படித்துப் பார்த்தேன். இன்றைக்கு மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலே ஒன்றை நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். பழைய பெருமை பேசி எவ்வளவு தான் நாம் பேசிக்கொண்டே இருந்தாலும் கூட ஒரு சாசுவதமான நெருக்கடியிலே நாம் இன்றைக்கு நின்று கொண்டிருக்கிறோம் என்பதை நாம் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். சென்ற வருஷம் வரையிலே நாம் எவ்வளவு பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்தோம், எவ்வளவு ஊர்களுக்கு மின்சாரம் கொடுத்தோம் எவ்வளவு சேரிகளுக்கு மின்சாரம் கொடுத்தோம் என்று பேசிக்

கொண்டிருந்த காலம் போய் இப்போது விஸ்தரிக்கப்பட்ட காரியங்களுக்கு எப்படி மின்சாரம் கொடுக்கப் போகிறோம் என்ற கவலையான நிலைமையிலே நாம் இருக்கிறோம். இலையைப் போட்டு விட்டோம், சாப்பாடு பரிமாறவில்லை. அந்த நிலைமையிலே நாம் இருக்கிறோம் என்பதை உணர வேண்டும்.

இங்கே சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகள் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லியிருந்தாலும் கூட அவையெல்லாம் இந்த நெருக்கடியைத் தீர்க்க வேண்டுமென்ற முறையிலேதான் சொல்லப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சொல்லப் பட்ட விஷயங்களிலே ஆதாரம் இருக்கிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இன்னும் மின்சார நெருக்கடி, நாம் என்னதான் செய்தாலும், என்ன, என்ன திட்டங்களைப் போட்டாலும் கூட இன்னும் ஒரு சகாப்தம் என்று சொல்லக் கூடிய அளவிற்கு பத்து ஆண்டுகளுக்கு இருக்கும் என்று சொல்லப் படுகிறது. நான் என்னைப் பொறுத்தவரையில் தெரிவித்துக் கொள் கிறேன். இது ஒரு சாசுவதமான நெருக்கடியாக இருக்கப் போகிறது. காரணம், மின்சார உற்பத்திக்குத் தகுந்தாற்போல் தேவைகளும் அப்போதைக்கப்போது அதிகரித்துக் கொண்டு தான் இருக்கும், ஆகவே, தொடர்ச்சியான நெருக்கடியாகத் தான் இது இருக்கப் போகிறது என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த இலாகா மிகத் திறமையாக சுறுசுறுப்பாக கருணை காருண்யம் பார்க்காது இயங்கக்கூடிய தன்மையிலே இருந்தால் தான் இந்தத் துறையைச் சரி செய்ய முடியும் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இங்கே பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. ஸ்டோர் களிலிருந்து சாமான்கள் திருடு போவது, லைன் லாஸ், அதாவது மின்சாரம் போகிறபோது ஏற்படுகிற ஒழுக்கு அதன் காரணமாக ஏற்படுகிற நஷ்டம் இதுபோன்ற விஷயங்களும் குறைபாடுகளும் யுத்தகால அடிப்படையாகவே கவனிக்கப்பட வேண்டிய விஷயங்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாம் இன்னும் எவ்வளவு தீவிரமாக இருக்க வேண்டும், இன்னும் எவ்வளவு ஒழுங்கீனமாக இல்லாமல் செய்யப்படச் செய்ய வேண்டும் என்பதைக் கவனித்து நான் சொல்லிக் கொள்வேன்,





நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் இராமன் அவர்கள் மேஜர் ஜெனரல் இராமனாக இருக்க வேண்டுமென்று விரும்பு கிறேன். அந்த அளவிற்கு இராணுவக் கட்டுப்பாடு என்று சொல்லக் கூடிய முறையில் இயங்கக் கூடியவர்களாக செயல்படச் செய்ய வேண்டும். அப்படி இருக்கிறார்களா என்பது கேள்விக்குரிய பிரச்னையாக இருக்கிறது.

இன்றைக்குப் பரவலாக பேசப்பட்டது ஒழுங்கீனம் தான், ஒரு கோடியா பத்துக் கோடியா பாக்கி இருப்பது என்று எல்லாம்கூட பேசப்பட்டது. நேற்றைய தினம் ஆளுங்கட்சி உறுப்பினர்கூட கூறினார்கள் என்றால், சர்க்கார் தரப்பிலே நடக்கக்கூடிய ஒரு பெரிய தொழில் நிறுவனம், அதிலே எந்த அளவிற்கு நாம் முறையாக நடந்து கொண்டிருக்கிறோம் என்பதைச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம் நாம். எல்லா மின்சார போர்டுகளைச் சேர்ந்த தலைவர்களும் ஒரு மாநாடு நடத்தி சில குறிப்பிட்ட முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். லைன்லாஸ் தவிர்க்கப் பட வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக என்ன, என்ன வழிவகைகள் காணப் போகிறோம் என்று இந்த அரசு ஏதாவது முடிவு எடுத்திருக்கிறதா? அப்படி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது என்றால் மிக்க மகிழ்ச்சியாக இருப்போம் நாங்கள். நாம் மின்சாரத்தினை அனுப்புவதிலே 100-ல் 25 பங்கு வரையில் நஷ்டம் ஏற்படுகிறது. அது தவிர்க்கப்பட்டால் நமக்கு மிகவும் நல்லது. இன்னும் பல ஆயிரக்கணக்கான சேரி களுக்கும், ஊர்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும், விவசாயி களுக்கும் மின்சாரம் கொடுக்கப்பட முடியும் என்ற அடிப் படையிலே அதைப்பற்றி முடிவு எடுப்பதற்கு வல்லுநர்கள் கொண்ட ஒரு கூட்டத்தைக் கூட்டி சீக்கிரமாக முடிவு எடுத்து அதை சட்டசபை அங்கத்தினர்களுக்கு விநியோகம் செய்தால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம்.

வசூலாகாத பாக்கி இன்னும் இருக்கிறது. அது ஒரு கோடி ரூபாயா, பத்து கோடி ரூபாயா என்பதைப்பற்றி நமக்கு தெரியாது. ஆனால் பெரிய அளவிற்கு பாக்கியிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். பெரும்பாலான முதலாளிகள் பல்க் கன்ஸ்யூமர்ஸ் என்று சொல்லக் கூடியவர்கள்தான் ஏராளமான மின்சாரத்தை வாங்கக் கூடியவர்கள், அவர்கள் மத்தியிலேதான்

[திரு. மணலி சி. கந்தசாமி] [1974 ஆகஸ்ட் 26

பாக்கி அதிகமாக இருக்க முடியும். பலவிதமான ஒழுங்கீனங்கள் இருக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. பணக்காரர்கள் இந்தத் துறையிலே மட்டுமல்ல, எல்லாத் துறைகளிலும் தங்களுடைய ஆதிக்கத்தைச் செலுத்தக்கூடிய அரசியலமைப்பு அரசியலிலே செல்வாக்கை ஏற்படுத்தக்கூடிய நிலைமை மாநில சர்க்காராக இருந்தாலும் சரி, மத்திய சர்க்காராக இருந்தாலும் சரி, இருக்கிறது. இந்த நிலைமையிலே அவர்களுடைய பாக்கியை நீங்கள் தீவிரமாக வசூலிக்க வேண்டும், நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

சாதாரணமாக வீட்டுக்காரனோ அல்லது பம்பு செட்டு வைத்திருக்கிற விவசாயியோ பாக்கி வைத்திருந்தால் அவனை வதைப்பதற்குப் பதில் பல லட்சக்கணக்கான ரூபாய் அளவிற்கு பாக்கி வைத்து இருக்கக் கூடியவர்களிடமிருந்து—அவர்கள் வரியை மறைக்கிறார்கள், கள்ளப் பணம் வைத்திருக்கிறார்கள். வேஷம் போடுகிறார்கள். சிக் மில்லாக இருக்கிறது, எடுத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள், பிறகு தெம்பு ஏறியதற்குப் பிறகு அந்த மில்லை வாங்கிக் கொள்கிறார்கள், நாட்டின் மேல் தேச பக்தி என்பது முதலாளிகளுக்குக் கிடையாது—கண்டிப்பாக வசூல் செய்ய வேண்டும். அதிகாரிகளை அனுப்பி நீங்கள் கேட்கச் சொன்னால் அவர்கள் கொடுக்கவில்லை என்றுதான் திரும்பி வருவார்கள். இத்தனை தேதிக்குள் கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று சொல்ல வேண்டும்

மில்காரர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு லாக் அவுட் செய்வார்கள் என்றால் அவர்கள் செய்யட்டும், தேசியமயமாக்கி விடுவோம் மில்களையெல்லாம். முதலாளிகளிடம் உள்ள ஒழுங்கீனத்தை நீங்கள் போக்கவில்லையென்றால் சமுதாயத்தில் இருக்கிற ஒழுங்கீனத்தை நீங்கள் போக்க முடியாது. அந்த அடிப்படையிலே வேகமாக தீவிரமாக பாக்கிகளையெல்லாம் வசூலிக்க வேண்டும். இதிலே ஒரு எச்சரிக்கை இருக்கிறது. மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதுபற்றி அந்த மாநாட்டிலே முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி உயர்த்துவதன் மூலமாக இந்த நஷ்டங்களைச் சரி செய்யமுடியும் என்று நினைத்தால்



1974 ஆகஸ்ட் 26] [திரு. மணலி சி. கந்தசாமி]

உயர்த்தலாம் ஆனால் அப்படி உயர்த்தும்போது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னமாதிரி ஏழை எளியவர்களுடைய தலையிலே கை வைக்காதீர்கள், பல்க் கன்ஸ்யூமர்ஸ் என்று சொல்லக் கூடிய முதலாளிகளிடமிருந்து வாங்குகள், அப்படி செய்யாவிட்டால் ஒரு பெரிய அரசியல் நெருக்கடியை நீங்களே உருவாக்கிக் கொள்கின்ற நிலைமை வந்துவிடும். கன்ஸ்யூமர்ஸ் தங்களுடைய சொந்த உபயோகத்திற்காகப் பயன்படுத்துகின்ற மின்சாரக் கட்டணத்தை உயர்த்தினால் அது ஒரு விஷச் சக்கரம் போன்றது, அதனால் விலைவாசி ஏறிவிடும், வாழ்க்கைத் தரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுவிடும். பொதுப் பொருளாதாரத்தையே அது பாதிக்கக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். ஆகவே, இந்த டேரிப் ரேட்டை உயர்த்தும்போது தொழில் நிறுவனங்கள் வைத்திருக்கிறவர்களுக்கு முதலாளிகளுக்கு உயர்த்துங்கள், பாக்கியிருக்கக் கூடியவர்களுக்கு உயர்த்தினால் பொருளாதாரச் சிக்கல் சீரழிவு ஏற்படும்.

மின்சாரத் துறை தொழிலாளர்கள் மத்தியிலே ஒழுங்கீனம் இருக்கிறது, எஞ்சினியர்களை கேரோ செய்கிறார்கள், அடிக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். தொழிற்சங்கம் நடத்துகின்றவர்கள் ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, மாற்றுக் கட்சியாக இருந்தாலும் சரி—தொழிலாளர் சங்கம் என்பது ஒரு ஜனநாயக அமைப்பு—தொழிற்சங்க விதிகளுக்குட்பட்டு தொழிலாளர்களுக்கு தேச பக்தி ஊட்டப்பட வேண்டும், தொழிலாளர்கள் தங்களுடைய நலனையும் தேச நலனையும் இணைத்துப் பார்த்துச் செயல்பட வேண்டும், அந்த நிலைமையில்லாது ஆளுங் கட்சி தொழிற் சங்கத்தை எப்படி வளர்ப்பது, எப்படி ஓட்டு வாங்குவது, செல்வாக்குப் பெறுவது என்ற காரணங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு இடம் கொடுக்கக் கூடாது. அப்படி இடம் கொடுத்தால் உங்களுக்குத்தான் ஆபத்து ஏற்படும்.

எஞ்சினியர்கள் கேரோ செய்யப்பட்டார்கள், அடிக்கப்பட்டார்கள் என்றால் தொழிலாளர்கள் அத்துமீறி கட்டுப்பாடற்றவர்களாக இருந்திருக்க வேண்டும், தொழிலாளர் என்ற உணர்விலே இல்லாதவர்களாக இருந்திருக்க வேண்டும், அல்லது அந்த உத்தியோகஸ்தர் அல்லது எஞ்சினியர் செல்வாக்கு இழந்தவராக, சீரழிந்தவராக மற்றவர்களைத் தாழ்த்துகின்ற எண்ணம்

கொண்டவராக மனிதத் தன்மையற்றவராக இருந்திருக்க வேண்டும். தொழிலாளர்கள் தங்களுடைய நலனில் அக்கறை கொண்டு அதே நேரத்தில் தேச நலனையும் புறக்கணிக்கக் கூடாது, தொழிலாளர் சங்கம் வால் பிடிக்கின்ற நிலைமைக்கு 'டெய்லிசம்' என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்துவிடக் கூடாது.

தொழிலாளர்களுக்கு தேசபக்தி இருக்கவேண்டும். அவர்கள் சமுதாயத்தில் தாங்களும் ஒரு பகுதி என்று உணர்ந்து தங்களுடைய நலனும் தேச நலனும் இணைந்திருக்க வேண்டுமென்ற முறையிலே செயல்பட வேண்டும். மின்சாரம் சில நேரங்களிலே அடிக்கடி நின்றுவிடுகிறது. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் நான் ஊரிலே தங்குகிற சமயத்தில் எல்லாம் ஒரு நாளைக்கு 2, 3 நிமிடங்கள், சில சந்தர்ப்பங்களில் பல மணி நேரம்கூட மின்சாரம் நின்றுவிடுகிறது. எவ்வளவு நிற்கிறது என்று பார்ப்பதற்கு தாலுகா கச்சேரியிலே மழையை அளப்பதற்கு ஏற்பாடு இருப்பதைப்போல் ஒரு ஏற்பாடு செய்து எத்தனை தடவை எவ்வளவு நேரம் மின்சாரம் நிற்கிறது என்று பார்த்து கணக்கெடுத்து அதற்கான காரணங்களைக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அகமதாபாத்திற்கு நான் போயிருந்தபோது என்னிடம் சொன்னார்கள், அது நூற்றுக்கணக்கான மில்கள் இருக்கக்கூடிய இடம், பல்க் கன்ஸ்யூமர்ஸ் இருக்கக்கூடிய இடம். சென்ற பல ஆண்டுகளாகவே அங்கே ஒரு தடவைகூட மின்சாரம் தவறவில்லை என்று என்னிடம் சொல்லப்பட்டது. இங்கேயுள்ள உத்தியோகஸ்தர்கள் அங்கே சென்று அப்படிப்பட்ட நிலைமையில் எப்படி மின்சார இலாக்கா இயங்குகிறது, அவர்கள் என்னென்ன சாமான்களைப் பயன்படுத்துகிறார்கள், தவறாத முறையில் உத்தரவாதத்திற்கு என்னென்ன முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதைப் பற்றிப் படித்து, தெரிந்துகொண்டு இங்கேயும் அதை நடைமுறைப் படுத்தினால் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இங்கே தினசரி நிற்கிறது என்னுடைய தொகுதியில். கனெக்ஷன் கொடுப்பதிலே ஒழுங்கீனங்கள் இருக்கின்றன. இது உலகம் தெரிந்த விஷயம். இதைத் தவிர்க்க வேண்டும். மின்சாரத் துறையில் உள்ள உத்தியோகஸ்தர்கள். அல்லது பணியாளர்கள்



ஏதாவது தவறு செய்தால். தன்னலத்திற்காக மின்சாரத் துறையைப் பயன்படுத்தினால் அவர்கள் மேல் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். 100 பேரை டிஸ்மிஸ் செய்து வெளியே அனுப்புங்கள், அப்படிப்பட்ட தண்டனையை அரசாங்கம் கொடுக்கட்டும். ஒரு டிசிப்ளின் வேண்டும். இராணுவ அடிப்படையில் இயங்க வேண்டும் என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், தவறு செய்பவர்களுக்கு இராணுவத்தில் கொடுப்பதைப் போன்ற தண்டனைகளைக் கொடுப்பதன் மூலம் ஒழுங்குபடுத்த முடியும்.

அமைச்சர் திரு. ஓ. பி. இராமன் அவர்களை மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன், இந்தத் துறை வரப்போகும் காலத்தில் மிகவும் கண்டிப்பான முறையில் இயங்கும் விதத்தில் நடவடிக்கைகளை நிச்சயமாக மேற்கொண்டால் நல்ல முறையில் இருக்கும். அந்த ரீதியில் செய்தால் சாதனைகளைச் செய்ய முடியும். அப்படிச் செய்யாவிட்டால் நாம் ஒளிமயமாக்குகிறோம் என்று சொல்கிறோமே அதற்கு உத்தரவாதம் ஏற்படாமல் இருள் மயமாகும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இங்கே சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை, குறிப்பிட்ட விஷயங்களை, ஏதோ காழ்ப்புணர்ச்சியோடு சொன்ன கருத்துக்கள் என்று எடுத்துக் கொள்ளாமல், உண்மைகளை எடுத்துக் கொண்டு அதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் பொதுவாக 'செல்ஃப் சேட்டிஸ்ஃபேக்ஷன்' நம்மை நாமே திருப்திபடுத்திக் கொள்ளாமல் நம்மிடத்தில் என்னென்ன குறைபாடுகள் இருக்கின்றன என்று பார்த்து அவைகளை நிவர்த்தி செய்து இன்னும் முன்னேற முடியுமா என்ற ரீதியில் இருந்தால் உதவிகரமாக இருக்கும் என்று சொல்லி, இவ்வளவு சிக்கலிலும் இந்த இலாக்காவை நிர்வகித்து வரும் அமைச்சருக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. ஆறுமுகம்:** தலைவரவர்களே, மின்சார வாரியத்தின் 1974-75 ஆம் ஆண்டு நிதி மதிப்பீட்டை ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். 1967 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் கிராமங்கள் தோறும் நகரங்கள் தோறும் பரவலாக மின் விளக்குகளை அமைத்துள்ள இந்த நன்னாளில்

[திரு. அ. ஆறுமுகம்] [1974 ஆகஸ்ட் 26

நம்முடைய அரசைப் பாராட்டுவதை விட்டுவிட்டு எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் எங்கே மின்சாரம் உபயோகத்தில் இல்லை என்ற கணக்கைக் காட்டுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்ததற்குப் பிறகு கிராமங்கள் தோறும் தெரு விளக்குகள் இல்லாத ஒரு பஞ்சாயத்தும் இல்லை என்ற அளவிற்குச் தெரு விளக்குகளை அமைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கிராமங்களில் சில நேரங்களில் தெரு விளக்குகள் எரியவில்லை என்று சொல்லப்பட்டது. அப்படி எரியவில்லை என்றால் அதற்குக் காரணம் அவர்கள் வாங்குகின்ற பல்புகள் சிறந்த முறையில் இல்லாததுதான் காரணமாக இருக்கிறது. அதற்குக் காரணம் சரியான முறையில் உற்பத்தி செய்யாத கம்பெனிகளிடமிருந்து பல்புகளை வாங்குவதாகச் சொல்கிறார்கள். அதை நிவர்த்திக்கும் முறையில் நம்முடைய அரசு அதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கிராமங்களில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கும் நேரத்தில் நிலவள வங்கிகளின் மூலமாக விவசாயிகளுக்கு கடன் கொடுக்கிறோம். அப்படிக் கொடுக்கும் நேரத்தில், மின்சாரம் அவர்களுக்குக் கிடைக்க இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிறது. அப்படி மூன்றாண்டுகள் ஆகும் நேரத்தில் அவர்கள் வாங்கிய கடனுக்கு, அந்தக் கடனையும் திருப்பிச் செலுத்த வேண்டும், அதே நேரத்தில் அதற்கான வட்டியையும் செலுத்த வேண்டும். எனவே நிலவள வங்கிகள் மூலம் கடன் பெறும் விவசாயிகளுக்கு உடனடியாக மின்சாரம் கொடுக்க தொடர்பு கொடுத்து உடனடியாக மின்சாரம் வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்குள்ள நிலவரத்தில் நாட்டின் முதுகெலும்பாக இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு சில முக்கியத்துவங்களைக் கொடுக்க வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்தில் சென்று கேட்டால் போதுமான அளவில் மின்சாரம் இருந்தாலும்கூட தேவையான கம்பங்கள், அல்லது கம்பிகள் இல்லை என்று சொல்கிறார்கள். அந்த நிலைமைகளை நிவர்த்தி செய்து விவசாயிகளுக்கு முதன்மையிடம் கொடுக்க வேண்டும்.



1974 ஆகஸ்ட் 26] [திரு. அ. ஆறுமுகம்]

விவசாயிகளுக்குத் தேவையான மின்சாரத்தைக் கொடுக்கும் நேரத்தில் அவர்களுக்குப் போதுமான அளவிற்கு உற்பத்தியிருந்தால்தான் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். அதேநேரத்தில் நகர மக்களுக்கும் உணவு வழங்க முடியும். என்னுடைய தொகுதியில் எருமைப்பட்டி என்ற கிராமத்தில் 1967 ஆம் ஆண்டு முதல் கிட்டத்தட்ட 108 கிணறுகளுக்கு மின்சாரம் வேண்டுமென்று பலமுறை விண்ணப்பித்தும் இதுவரையில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் கிராமங்களில் மின் இணைப்பு தரும் நேரத்தில் சில இடங்களில் தேவையான அளவிற்கு மின்சாரம் இருந்தாலும் கூட டிரான்ஸ்பார்மர் இல்லை, லோடு இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். டிரான்ஸ்பார்மரை மாறுதல் செய்ய வேண்டுமென்றால் போதுமான டிரான்ஸ்பார்மர்கள் இல்லை என்ற நிலைமை அதிகாரிகள் மத்தியில் ஏற்படுகிறது. அப்படி ஏற்படாத முறையில் டிரான்ஸ்பார்மர்கள் இல்லையென்றால் உடனடியாகக் கொடுக்க ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, கிராமங்களில் பணிபுரியும் லைன்மேன்கள், சூப்பர்வைசர்கள் இவர்கள் குடியிருப்பதற்கு வீடுகள் கிடைப்பதில்லை. அதனால் அவர்கள் கிராமங்களில் மிகவும் வேதனைப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக ஆசிரியர்களின் குடியிருப்பு மனைகளைக் கட்டுவதைப்போல, அரசாங்கம் ஒவ்வொரு லைன்மேனுக்கும் லைன் இன்ஸ்பெக்டருக்கும் சூப்பர்வைசருக்கும் குடியிருப்பு மனை கட்டிக் கொடுத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கிராமங்களிலுள்ள விவசாயிகள் அதிகாரிகளைக் கேட்கும் நேரத்தில், எங்களிடத்தில் போதுமான மரம் இல்லை, கம்பி இல்லை என்று அதிகாரிகள் கூறுகிறார்கள். அவைகளை வாங்கிக்கொடுத்தால் உடனடியாக நிவர்த்திக்கிறோம் என்று சொல்கிறார்கள். அந்த நேரத்தில் விவசாயிகள் தங்களுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக வட்டிக்குக் கடனை வாங்கும் நிலைமையேற்படுகிறது. அப்படியேற்பட்ட பிறகு அந்தப் பணம்

அவர்கள் கைக்குத் திரும்பச் செல்கிறதா என்றால் இல்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கணக்கெடுத்து அந்தக் கோளாறுகளை உடனடியாக நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமத்தில் திடீரென்று லைன் ஃப்யூஸ் போய்விட்டால் சம்பந்தப்பட்ட லைன்மேனை அழைத்தால் அவர்களால் உடனடியாக வர முடியவில்லை என்று சொல்கிறார்கள். எனவே ஒவ்வொரு லைன்மேனுக்கும் ஒரு சைக்கிள் வாங்கிக்கொடுத்தால் மிகவும் சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அந்த அளவிற்கு இந்த வாரியம் நல்ல திட்டங்களை நாடு பூராவிலும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பு தந்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இந்த மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மேல் ஒருசில கருத்துக்களை நான் கூறுவதற்கு ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் தமிழகத்திலுள்ள மின்சார வாரியம் திட்டம் போடுகின்ற திறமையும் இல்லாமல், ஒழுங்காக நிர்வாகத்தை நடத்துகின்ற திறமையும் இல்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கிறது என்பது என்னுடைய முதல் குற்றச்சாட்டு.

இருபதாண்டுகால காங்கிரஸ் கட்சியின் ஆட்சிக்காலத்தில் எவ்வளவு வேகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்து நீர்ப்பாசன வசதிகளில் கவனத்தைச் செலுத்தினார்களோ அதற்கு நேர் மாறாக இன்றைக்குள்ள அரசாங்கம் அதில் கவனம் செலுத்தாமல் இன்றையதினம் எவ்வளவு வெட்டு வரும் என்று ஒவ்வொரு ஆண்டும் கேட்கும்விதத்தில் இவர்கள் திறமை இருக்கிறதே தவிர, எவ்வளவு ஒழுங்காக விநியோகம் நடக்கிறது என்பதே பெரிய கேள்விக்குறியாக இருக்கிறது.

ஒளிமயமாக்குகிறோம், ஒளிமயமாக்குகிறோம் என்று சொல்லி இன்றைக்கு தமிழகத்தை இருள்மயமாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். ஏனென்றால் 50 சதவிகிதம் வெட்டு,



30 சதவிகிதம் வெட்டு என்று இவர்கள் விருப்பப்படி வெட்டுகளைப் போட்டுக்கொண்டே இருந்தால் தமிழகம எப்படி முன்னேறும் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

தமிழகத்தில் முன்னேற்றத்திற்குப் பெரிய சாவியாக இருப்பது மின்சார இலாக்கா. எவ்வளவு வேகமாக மின்சாரம் பாய்கிறதோ அவ்வளவு வேகமாக செயல்திட்டங்கள் இருக்க வேண்டும். ஆனால் இன்றையதினம் அம்மாதிரி இருக்கிறதா என்று பார்த்தால் பாவம், நன்றாக விளக்கு எரிந்துகொண்டிருந்த கடைகளில் மெழுகு வர்த்தி எரிவதைப் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. சரியான நேரங்களில் மின்சாரம் நின்று விடுகிறது. சாப்பிடும்பொழுது மின்சாரம் நின்று விடுகிறது. அவசியமான நேரங்களில் அபசகுனம் மாதிரி மின்சாரம் நின்று விடுகிறது.

அதேபோல் எவ்வளவு தூரம் பம்பு செட்டுகளைப பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்க முடியுமோ அதில் தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டும். காரணம் என்னவென்றால், ஆண்டவன் தமிழ்நாட்டிற்கு ஜீவநதிகளைக் கொடுக்கவில்லை, இருப்பது ஒரேயொரு நதி, காவேரி. அதைப் பங்கிட்டுக்கொடுக்க வேண்டும்.

நீங்களோ அண்டை மாநிலங்களோடு சண்டைபோட்டுக் கொண்டே இருப்பதில் வல்லவர்களாக இருக்கிறீர்களே தவிர, உங்களுக்கு அண்டை மாநிலங்களோடு அனுசரணையாக, நட்பு மனப்பான்மையோடு வாழத் தெரியவில்லை. நீங்கள் இப்படி அண்டை மாநிலங்களோடு சண்டை போட்டுக்கொண்டிருப்பதற்குத் தயாராக இருப்பதால் அவர்கள் சலுகை காட்டத் தயாராக இல்லை.

தமிழகத்தில் கிணறுகளைத் தோண்டி ஊற்றுத் தண்ணீரை எடுப்பதற்கு மின்சாரத்தைப் பயன்படுத்தினால்தான் உற்பத்தியைப் பெருக்க முடியும். இப்படிப்பட்ட தமிழகத்தில் இன்றைக்கு என்ன செய்திருக்கிறீர்கள்? நிலவள வங்கியின் தலைவர் அறிக்கை விடுகிறார், ஒரு ஜோடி மாடு வாங்க வேண்டுமானால் கடன் கொடுக்கிறோம், ஆனால் பம்பு செட்டு வாங்குவதற்கு கடன் கொடுக்க முடியாது. அப்படியே கொடுத்தாலும் மின்சாரம் கிடைக்காது

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஆகஸ்ட் 26

என்று சொன்னால் இதைவிட எவ்வளவு தூரம் பின்னுக்குப் போகிறோம் என்பதற்கு வேறு ஒரு அத்தாட்சி தேவையா என்று கேட்கிறேன்.

(நண்பகல் 12.00)

தமிழ்நாட்டிலே இருக்கும் உழவர்கள் மின்சாரத்தைப் பயன் படுத்தி நவீன முறையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று ஒவ்வொரு வருஷமும் கதறிக் கொண்டிருக்கிறோம். ஆனால் 1974-ல் நிலவள வங்கித் தலைவர் ஒரு ஜோடி மாடு வாங்க கடன் கொடுப்ப தாகச் சொல்லுகிறார். சிறந்த ஆட்சி, மக்களாட்சி, புரட்சிகர மான ஆட்சி, தீவிரமான ஆட்சி, திறமையான ஆட்சி என்று எல்லா அடைமொழிகளும் போட்டு ஆட்சி நடத்துகிற நீங்கள் ஒரு ஜோடி மாடு வாங்கக் கடன் தருகிறோம், கவலை அடித்து தண்ணீர் இறை என்று சொல்லுகிறீர்கள். இதைவிட ஒரு அவல நிலை தமிழகத் திற்கு ஏற்படப் போகிறதா? இதைவிடப் பெருத்த அவமானம் வேறு என்ன இருக்கிறது? உற்பத்திப் பெருக்கத்தில் அக்கறை காட்டவில்லை, ஒழுங்கான விநியோகத்தில் அக்கறை காட்டவில்லை. இப்படி இருந்தால் உணவுப் பிரச்சினை உண்டாகும், தொழிலில் உற்பத்தி குறையும். மக்கள் வேதனைக்கு ஆளாவார்கள். உங்கள் ஆட்சியில் வரியை அதிகப்படுத்துவதிலேதான் மன்னர்களாக இருக்கிறீர்களே தவிர, வசதிகளைப் பெருக்குவதில், நன்மைகளைச் செய்வதில் நாட்டம் இல்லை.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் 3,020 மெகாவாட் நமக்குத் தேவைப்படுகிறது. அப்போதும் பற்றாக்குறை சற்றேறக் குறைய 1,465 மெகாவாட்டாக இருக்கும் என்று சொன்னால் 50 சதவிகிதப் பற்றாக்குறை இருக்கப் போகிறது. இது என்ன திறமையைக் காட்டுகிறது? ஹைட்ரோ எலக்ட்ரிக் ஸ்கீம் போட வேண்டுமென்றால் 5 ஆண்டுகள் ஆகும். அனல் மின் நிலையத்தை அமைக்க 3½ ஆண்டுகள் ஆகும். திட்டங்களை எல்லாம் தொலை நோக்கோடு முன்கூட்டியே போட்டு செயல்படுத்தி இருக்க வேண்டாமா? ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப் படும் என்று சொன்னால் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்தான் உருவாகும். நல்ல காலத்திலேயே திட்டங்களை விரைவாகச்



1974 ஆகஸ்ட் 26] [திருமதி. த. ந. அனந்தநாயகி]

செய்ய மாட்டீர்கள். இப்போது இருக்கக்கூடிய ஸ்டீல் பற்றாக் குறை, சிமெண்ட் பற்றாக்குறையில் காலாகாலத்தில் எங்கே நீங்கள் திட்டங்களை முடிக்கப் போகிறீர்கள்? இன்னும் 15 ஆண்டுகளுக்குப் பிறகுதான் திட்டம் முடியும் என்றால் வளர்ச்சி எங்கே, தமிழகத்தின் பொருளாதாரம் எப்படி இருக்கும் என்று தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று இருக்கக்கூடிய நிலையைப் பார்த்தால் ஏற்கனவே போடப்பட்ட திட்டங்களே முடியவில்லை. கல்பாக்கத்தில் அணு மின் நிலையம் 1970-71, 1972-லேயே வரும் என்று சொன்னோம். நாம் 1974-75-ம் வருடத்திற்கு வந்து விட்டோம். திட்டம் முற்றுப்பெற வில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, may I kouw from the hon. Member, why the Government of India took such a long time to pass many of the schemes sent by this Government? The delay is mainly caused because of the indifference of the Government of India.

திருமதி த. ந. அனந்தநாயகி: புதிதாக வந்திருப்பதால் ரொம்ப வேகமாக இருக்கிறார்.

மாநில அரசாங்கத்தில் நாங்கள் அமைச்சர்களாக இருந்த போது எண்ணூர் அனல் மின் திட்டத்தை ஆறே மாதத்தில் கொண்டு வந்தோம். இப்போது நீங்கள் ஆறு வருஷமாக தபால் ஆபீஸ் அரசாங்கமா நடத்திக் கொண்டிருக்கிறீர்கள்? போய்க் கேட்டு முக்கியத்துவத்தைச் சொல்லி வாங்கிக் கொண்டு வர வேண்டும். மத்திய அரசாங்கம் ஒரு கடல். உங்களைப் போல் 13 மாநிலங்கள் இருக்கின்றன. இப்போது நீங்கள் டில்லிக்குப் போவதுதான் பெருமையாக இருக்கிறதே தவிர, வேலை நடை பெறவில்லை. காரணத்தை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். திட்டங்களைத் துரிதமாகக் கொண்டுவர ஏன் அக்கறை இல்லாமல் இருக்கிறீர்கள் என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவர் அவர்களே, இடை மறிக்கக்கூடாது என்றுதான் கருதினேன். தமிழ்நாடு மின்சார வாரியம் திறமைக் குறைவாக இருக்கிறது, இந்த அரசு திறமைக்

[திரு. ஓ. பி. இராமன்] [1974 ஆகஸ்ட் 26

குறைவாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். மற்ற எல்லா மாநிலங்களிலும் மின்சார வெட்டு இருக்கிறது; உங்கள் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலும் மின்சார வெட்டு இருக்கிறது. அதற்கெல்லாம் திறமைக் குறைவுதான் காரணமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எல்லா மாநிலத்திற்கும் வழி காட்டியாக இருந்தது தமிழகம். மற்ற மாநிலங்களை விட தமிழகத்தில் மின்சார விஸ்தரிப்பு மிக வேகமாக முன்பு செய்யப் பட்டிருக்கிறது. பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** இதுவரை விரைவுத் திட்டத்தின் மூலமாக போட்டிருக்கும் பம்ப் செட்டுகளும் மற்ற மாநிலங்களை விடக் குறைந்தது அல்ல என்று பதில் சொல்ல முடியும். இப்போது இருக்கும் நிலையில் இவ்வளவு போட்டிருக் கிறார்கள்.

இதே மன்றத்தில் நெய்வேலி இரண்டாவது சுரங்கத்தை வெட்ட வேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி னோம். உங்களுடைய ஆட்சி இருந்த காலத்திலேயே திரு. எம். பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே நெய் வேலி இரண்டாவது சுரங்கத் திட்டத்தைத் தொடங்கவேண்டு மென்று சொல்லியிருக்கிறார்கள்.

இரண்டாவது அணு மின் நிலையம் வரவேண்டுமென்று சொல் லியிருக்கிறார்கள். கல்பாக்கம் திட்டம் மத்திய சர்க்கார் திட்டம், அது துவங்குவதில் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. தமிழ் நாடு அரசின் திட்டங்களைப் பொறுத்தவரை எந்தத் திட்டத்தினைத் தொடங்கி முடிப்பதிலும் காலதாமதம் இல்லை. ஐந்து வருஷமாகி யும் இந்தத் திட்டம் முடிவுறாமல் இருப்பது மத்திய சர்க்காரின் திறமையா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மத்திய அரசு பற்றியும், மற்ற மாநிலங்கள் பற்றியும் பேசுகிறார்கள். மற்ற மாநிலங்கள் இந்தத் துறையில் அதிகக் கவனம் செலுத்துவதற்கு முன்னாலேயே இங்கிருந்த காங்கிரஸ் ஆட்சி கவனம் செலுத்தி சிறப்பான முறை யில் இந்த இலாகாவைக் கொண்டு வந்து நிறுத்தியது. அதே



1974 ஆகஸ்ட் 26] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வேகத்தில் நீங்கள் வேலை செய்திருந்தால் இந்தக் கஷ்டங்கள் வந்திருக்காது. இதை அப்படியே விட்டு விட்டீர்கள். உங்களுடைய கவனம் வேறு இலாகாக்களிலே சென்றிருக்கிறது. சுற்றுலா மாளிகை கட்டுவது என்று சென்றுவிட்டீர்கள். மின் சாரம், இரிகேஷன் பற்றி உங்கள் கவனம் செல்லவில்லை. மற்ற மாநிலங்களோடு ஒத்துப் பார்ப்பதில் பயன் இல்லை. அரியானாவில் இரண்டே வருஷத்தில் கம்ப்ளீட்டாக ரூரல் எலக்ட்ரிபிகேஷன் செய்திருக்கிறார்கள். இங்கே முழுமையாகிவிட்டது என்று சொல்ல முடியாது. 98, 99 சதவிகிதந்தான் நிறைவேறியிருக்கிறது.

Haryana has completed almost all the villages.

நீங்கள் வேகமாகப் போகவில்லை, மெதுவாகப் போகிறீர்கள்.

**திரு. கே. எம். சுப்பிரமணியம்:** அரியானாவில் வில்லேஜஸ் இருக்கிறதா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அரியானாவில் வில்லேஜஸ் இல்லாமல் எல்லாம் நகரமாகவேயா இருக்கிறது? அங்கே போய்ப் பாருங்கள். இங்கே நீங்கள் வேகத்தைக் குறைத்து விட்டீர்கள், திறமையைக் குறைத்து விட்டீர்கள். . .

**மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்:** நீங்கள் 20 ஆண்டுக் காலத்தில் 2½ லட்சம் பம்ப் செட்டுகளுக்குத்தான் மின் இணைப்புக் கொடுத்திருந்தீர்கள். இப்போது 6½ லட்சத்திற்கு மேற்பட்டு இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அரிசனக் காலனிகளில் 24,800-க்கு மேற்பட்ட காலனிகளில்—98 சதவிகிதத்திற்கு மேல் இன்று மின் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை யெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டுமே தவிர, ஏதோ சில சமயங்களில் ஏற்படுகின்ற வெட்டைப் பற்றிச் சொல்லுவதில் பயன் இல்லை. உங்கள் காலத்தில் கூடத்தான் சினிமாக்களுக்கு இரண்டு ஷோவுக்கு பதிலாக ஒரு ஷோ என்று தடை செய்தார்கள். ஆகவே, அந்தந்த நிலைமைகளுக்குத் தகுந்தாற்போல் மின்சாரத் தின் அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: அன்றயதினம் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்த வெட்டு 20 சதவிகிதம். இன்று இருப்பது போல் 90 சதவிகிதம், 80 சதவிகிதம் வெட்டு அன்று கிடையாது. கிராமங்களில் லைட் போஸ்டுகள் இருக்கின்றனவே தவிர, லைட்கள் எரிவதே கிடையாது. கார்ப்பரேஷன் பகுதியிலேயே லைட் எரியவில்லை, கிராமப்புறங்களிலே எங்கே லைட் எரியப் போகிறது ?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: நம்முடைய மாநிலத்தில் இணைப்புத் தருவதில் 98 சதவிகிதம் அளவுக்கு பூர்த்தி செய்து விட்டோம். முன்பு 2½ லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்து வந்த இடத்தில் இப்போது 6½ லட்சம் முதல் 8 லட்சம் வரை பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு அளித்திருக்கிறோம். இந்த அளவுக்கு மின் இணைப்பை விஸ்தரித்திருக்கிற காரணத்தால் சில காலதாமதங்கள், சூழ்நிலைகள் இருக்கத்தான் செய்யும். இதை ஒரு குறையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. மேலும் எப்படி அபிவிருத்தி செய்யவேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் ஆலோசனை சொன்னால் நல்லது.

திருமதி த. ந. அனந்தநாயகி: இனிமேலாவது வேகமாகப் போகவேண்டுமென்றுதான் இவ்வளவு வேகமாகச் சொல்லுகிறேன். அவ்வளவு மந்தமாக இருக்கிறது இலாகா. நான் மின்சார வேகத்தில் சொல்லுகிறேன். அதை நீங்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால் அது என்னுடைய தவறு அல்ல.

நமக்கு இருக்கக்கூடிய ஹைட்ரோ எலக்ட்ரிக் பிராஜக்ட்ஸ் முக்கால் பங்கு பருவ மழையைப் பொறுத்திருக்கிறது. அவை இரிகேஷனும் சேர்ந்ததாக இருக்கிறது. ஆகவே, நாம் அனல் மின் நிலையங்களை அமைப்பதில் கான்சன்ட்ரேட் செய்யவேண்டும். எண்ணூரின் கதி என்ன? மூன்றாவது யூனிட் இனிமேல்தான் வரப் போகிறது. எண்ணூரிலே எவ்வளவு குறைபாடு இருக்கிறது? அங்கே ஏற்பட்ட தீ விபத்திற்கு என்ன காரணம், யார் பொறுப்பு என்று இன்னும் அறிக்கை வரவில்லை. மின்சார வேகம் என்ன? உங்கள் வேகம் என்ன? அந்தத் தீ விபத்திற்குக் காரணம் யார்? எவ்வளவு நாட்களாக மின்சாரம் கிடைக்காமல் போய்விட்டது? யார் அதற்குக் காரணம் என்று கண்டுபிடித்து ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? அப்படி நடவடிக்கை எடுத்தால் பின்னால் ஏற்படுகிற தவறுகளைத் தவிர்க்க முடியும் அல்லவா?



எருக்கஞ்சேரி ஊழல்—இன்று முதலமைச்சராக இருக்கக் கூடியவர் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருந்தபோது பிரச்சினையைக் கிளப்பி பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி விசாரணைக் கமிட்டியாக மாறி யார் பொறுப்பு, என்ன ஊழல் என்று ஆராய்ந்து முடிவு செய்தார்கள். அவர்கள் யார் பேரிலாவது நடவடிக்கை எடுத்தார்களா? யார் பேரில் நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அவர்கள் செத்துவிட்டார்கள். மிச்சம் இருப்பவர்கள் பேரிலாவது சாவதற்கு முன்னால் நடவடிக்கை எடுங்கள். இப்படி ஊழலைக் கண்டிக்காமல் விட்டுக் கொண்டே போவதால் பத்து மடங்கு ஊழல் நடக்கிறது. 1966-67-ல் நடந்த ஊழல் இது. இதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்ற வினாவைக் கேட்டால் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். நோட்டீஸ் இந்த உலகத்திற்கா அடுத்த உலகத்திற்கா? மீதிப் பேரும நோட்டீஸை வாங்கிக்கொண்டு அடுத்த உலகத்திற்குப் போவதற்கு முன்னால் நடவடிக்கை எடுங்கள். அப்போதுதான் நிர்வாகம் ஒழுங்காக இருக்கும். இந்த நிலைமை இல்லை என்றால் 15 கோடி ரூபாய்க்கு பில் பாக்கி இருக்குமா?

டாக்டர் க. நாகராஜன்: விசாரணை சற்றுத் தாமதமாக நடந்தது பற்றிச் சொல்லுகிறார்கள். அறுபது லட்சம் ஊழலில் வேகமாக நடந்ததா?

திருமதி த. ந. அனந்தநாயகி: எப்படி இருந்தாலும் ஊழல் ஊழல்தான். (குறுக்கீடு) எதைச் சொல்லுகிறார் என்று புரிகிறது. நாட்டில் நடக்கும் நடவடிக்கை எங்களுக்கும் புரிகிறது. இன்றையதினம் உங்கள் இலாகாவிலே ஊழலைபற்றி உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் அதுவும் நீங்களே சுட்டிக் காட்டிய ஊழலில் நடவடிக்கை எடுக்காமல் இருப்பதன் காரணம் என்ன? நீங்களே வெகு வேகமாக அன்று கிளப்பிவிட்டு இன்று தாமதமாகப் போகக் காரணம் என்ன? மக்களுக்கு நீங்கள் அதைப் பற்றிச் சொல்ல வேண்டாமா? இந்த ஊழலை மூடி மறைக்கக் காரணம் என்ன என்பதைக் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது எண்ணூரை எடுத்துக்கொண்டால். . .

திரு. குப்பல் கே. எஸ் இராமகிருஷ்ணன்: சில வருடங்களுக்கு முன்பு . . .

*திரு. க. உரொ. எட்மண்ட்:* பாயின்ட் ஆப் ஆர்டர். நம்முடைய ஆளும காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசும்போது உறுப்பினர்கள் அடிக்கடி குறுக்கிட்டு...

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):* இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் கிடையாது. அம்மையார் அவர்களே ஈல்ட் செய்து உட்கார்ந்து விட்டார்கள்.

THIRU G. R. EDMUND: Sir, I am on a point of order. I have got every right to raise the point of order............

*மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):* நீங்கள் ஏன் குறுக்கிடுகிறீர்கள்? அவர்களே, அம்மையார் அவர்களே உட்கார்ந்து விட்டார்கள். ஒரு உறுப்பினர் ஈல்ட் செய்து விட்டால் இன்னொரு உறுப்பினருக்குக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. ஒரு விளக்கம் கேட்டுவிட்டுப் போகட்டுமே, அந்த உரிமையைத் தடுப்பானேன்?

*திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்:* சில வருடங்களுக்கு முன் உ.பி.-யில் விவசாயிகளுக்கு உதவுவதற்காக மூன்று கோடி ரூபாய் செலவில் அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் என்று ஒன்று அமைக்கப்பட்டது. இப்போது அந்த ஸ்தாபனம் ஓட்டாண்டியாக நிற்கிறது. காரணம், வசூலிக்க வேண்டிய பாக்கிகள் மட்டும் சுமார் இரண்டேகால் கோடி ரூபாய் வசூல் ஆகவில்லை. இப்படி நாமம் சாத்தியவர்கள் பட்டியலில் கமலாபதி திருபாதி மந்திரிசபையில் இருந்த பல அமைச்சர்களும், கமலாபதி திருபாதியின் அந்தரங்க ஊழியர் ஒருவரும் இடம் பெற்றுள்ளார்கள். இப்படி பல கோடிக்கணக்கான ரூபாய் வசூலாகாமல் இருக்கும்போது நம் மாநிலத்தில் தாமதமாகிறது என்று சொல்வதில் அர்த்தம் இல்லை.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* நம் மாநிலம் எல்லா மாநிலங்களையும் விட நல்ல மாநிலம். நல்ல எபிஷியன்ட் அட்மினிஸ்ட்ரேஷன். நாம் ஏன் அதைக் கெடுத்துக்கொள்ளவேண்டும் சொத்தை மாநிலத்தோடு ஒப்பிட்டு? என்னூரை எடுத்துக்கொண்டால்



பாயிலர்ஸ்க்கு வாட்டர் வேண்டுமென்று கிணறு வெட்டினார்கள். அதில் தண்ணீர் போதுமான அளவிற்கு இல்லை. தண்ணீரும் ப்ராக்கிஷ்-ஆக இருக்கிறது. மீண்டும் ஒரு ப்ளான்ட் போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* முன்பே ஒரு தடவை கூறியிருக்கிறேன். மணல் இறைக்க இயந்திரம் ஒன்று வாங்கப் பட்டது. வெளிநாட்டிலிருந்து ஒரு ட்ரெட்ஜர் வாங்கிய பிறபாடு, அதைப் பொருத்திய பிறகு இடர்ப்பாடு இல்லாமல் வேலை செய்கிறது. என்னூரைப் பொறுத்தவரையில் நான்கு யூனிட்டுகளும் நன்கு பணி செய்கிறது. நெய்வேலியிலிருந்து கிடைக்காமல் இருந்தும் கூட சென்ற வாரம் சமாளிக்க முடிந்தது.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* அங்கு போட்ட போர்வெல்ஸ்-ன் நிலைமை என்ன? அந்தத் தண்ணீர் பயன்படுகிறதா? அல்லது பல லட்சம் ரூபாயையும் கிணற்றில் போட்டுவிட்டார்களா? ட்ரெட்ஜர் வாங்கியது எனக்குத் தெரியும். பல்லாயிரக்கணக்கான ரூபாயில் ஒருவருக்குக் குத்தகைக்குக் கொடுத்து இறைத்துக் கொண்டிருந்தீர்கள். இப்போதாவது சொந்தத்தில் வைத்திருக்கிறீர்களே, குத்தகைக்குக் கொடுத்து பணத்தைப் பாழாக்காமல் இருக்கிறீர்களே.

*மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:* அது திட்டத்தின் கோளாறே தவிர இந்த அரசின் கோளாறு அல்ல. அப்படி டிசைன் செய்யச் சொல்லியிருந்தார்கள். உங்கள் ஆட்சியில்தான் எல்லாம் செய்திருந்தார்கள். அது நடைமுறையில் தோல்வி அடைந்து விட்டது. அப்படி தோல்வி அடைந்ததால் தாரிந நடவடிக்கை எடுத்து வெளிநாட்டிலிருந்து தருவிக்கா நல்ல மெஷின் போட்டிருக்கிறார்கள். ஆகவே உங்கள் ஆட்சியில் போட்ட திட்டத்தின் விளைவே அது.

*திருமதி த. ந. அனந்தநாயகி:* எந்தக் கட்சியின் திட்டமானால் என்ன, நீங்கள் அதை சரிசெய்திருக்கலாமே. அதற்காகத்தானே உங்களை ஆட்சியில் ஏழு ஆண்டுகள் வைத்திருக்கிறார்கள். பல லட்சக்கணக்கான ரூபாய்களை பாழாக்கி விட்டார்கள்.

கரி வாங்கி வர கன்வெயர் கொடுக்கிறார்கள். இரண்டு சகவிகிதம் கொடுக்கிறார்கள் அதைப் பயன்படுத்தாததால் பல லட்சம் ரூபாய் நஷ்டமடைந்திருக்கிறீர்கள். நீங்கள் விழிப்போடு

இல்லாததால் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. என்னூரில் காஸ்ட்லி ஷீட்ஸ், இரும்பு ஷீட்கள், கம்பிகள் எல்லாம் கேட்க ஆள் இல்லாமல் போட்டு வைத்திருக்கிறார்கள். அவை உப்புக் காற்றில் துருப் பிடித்து இருக்கின்றன. பில்பரேஜ் எவ்வளவு என்று சொல்ல முடியாது. செக்யூரிட்டி சரியாக இல்லை. பல்லாயிரக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள சாமான்கள் காலியாக இருக்கிறது. அதோடு உப்புக் காற்றில் துருப்பிடித்திருக்கிறது. பொதுச் சொத்துத்தானே, யார் பொறுப்பேற்கப் போகிறார்கள்? அப்படியே ஊழல் கண்டுபிடிக்கப்பட்டாலும் நடவடிக்கை எடுக்க எவ்வளவு காலம்? கிடைத்தது கிடைக்கட்டும் என்று சுருட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

பின்னர் லைன் லாஸ். 1969-ல் சொல்லியிருக்கிறீர்கள் 15 சதவிகிதத்திற்கு குறைத்து விடுவோம் என்று. இன்று 18.83 சதவிகிதம் என்றிருக்கிறது. இன்னும் அதைவிட மேலேபோகும்.

பின்னர், க்ளார்க்ஸ் எடுக்கிறார்கள். 1971-ல் அட்வர்டைஸ் செய்து பல்லாயிரக்கணக்கானவர்கள் ஐந்து ரூபாய் போஸ்டல் ஆர்டர் வைத்து அரசாங்கத்திற்கு தட்சிணை கொடுத்தார்கள். அதில் எதுவும் திருப்பிக் கொடுத்ததாக என் காதில் விழவில்லை. வேலைக்கு மனுப் போட்டவர்கள் கூட வேலைக்கு அமர்த்தப்பட வில்லை. 1971-ல் இருந்து 74 ஆகிவிட்டது. பணம் வாங்கி வைத்துக் கொண்டீர்களே? அவர்களுக்கு வேலை கொடுப்பதில் ஏன் இவ்வளவு தாமதம்? 1971-ல் அப்ளிகேஷன்ஸ் கால்ஃபார் செய்து 74 வரை ஆட்களைப் போடவில்லை என்றால் எதற்காக அப்போது கால்ஃபார் செய்தீர்கள்?

Having called for the applications, you have not appointed the personnel. Why there is delay?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** எடுத்து ஆறு மாதங்களாகி விட்டது. எல்லோரும் சேர்ந்துவிட்டார்கள். அம்மையார் அவர்களுக்கு வேண்டியவர்கள் சேராமல் இருந்தால் சொல்லுங்கள், பார்த்துச் சொல்கிறேன். ஒவ்வொரு ஆண்டும் கால்ஃபார் செய்ய முடியாது. ஆகவே ஒரு பானல் வைத்திருக்கிறோம். அதன்படி போட்டுவருகிறார்கள். பாக்கியுள்ளவர்களுக்கு மூன்று மாதத்தில் வந்துவிடும் என்று சொல்கிறார்கள்.





**திருமதி த. ந. அனந்தநாயகி:** 1971-லும் அப்படித்தான் சொன்னார்கள். 74-லும் அப்படித்தான் சொல்கிறார்கள். க்ளார்க்குகளைப் போடுவதில் இவ்வளவு டிலே அவசியமில்லை.

**திரு. ஏ. சுப்பிரமணியம்:** அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், உங்களுக்கு வேண்டியவர்கள் இருந்தால் சொல்லுங்கள் போடலாம் என்று. வேண்டியவர்களுக்குத் தான் போடுகிறீர்களா?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி):** போடலாம் என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** நான் சொன்னது, கார்ட் வராமல் இருந்தால் சொல்லுங்கள். தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவித்த பிறகு கார்ட் போகவில்லை என்றால் சொல்லுங்கள் என்று தான் சொன்னேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** வேண்டியவர்களாக இருந்தால் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். மக்கள் பிரதிநிதி என்ற முறையில் நாங்கள் சொல்கிறோம்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** தெரிந்தவர்கள் சொல்லியிருப்பார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை என்றால் அப்படி உங்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் சொல்லுங்கள், விவரத்தைக் கேட்டுச் சொல்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உங்களுக்கு வேண்டியவர்களுக்குத்தான் வரும். நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படக் கூடாது. தங்களுக்கு வேண்டியவர்களுக்குத்தான் செய்வார்கள்.

அடுத்தபடியாக, வொர்க்கர்ஸ் ப்ராப்ளம். நிறைய யூனியன்கள் உங்கள் கட்சி அடிப்படையில் ஆரம்பித்தால் தனிச் சலுகை. ஓவர் டைம் கொடுப்பதில் கூட தனிச் சலுகை. தவறு செய்தால் கூட தனிச் சலுகை. இப்படி கட்சி விருப்பு வெறுப்புகளின் அடிப் படையில் நிர்வாகத்தைக் கொண்டு போய் விட்டால் நிர்வாகம் எப்படிச் சரியாக நடக்கும்?

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1974 ஆகஸ்டு 26

ஒரு கோடி அல்ல, பத்து கோடி ரூபாய்க்கு பில்கள் வராது எவ்வளவு கோடி ரூபாய் யார் யார் தலைகளில் தப்பாக விழப் போகிறதோ, எப்போது வந்தாலும் பில் அரியர்ஸ் போட்டு வருகிறது. எப்போதும் டாலியாவது கிடையாது. பணம் கட்டிய ரசீதுகளைக் கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும். இல்லா விட்டால் பில்லோடு சேர்த்து அரியர்ஸ் ஆகப் போட்டுவிடுவார்கள். பில்கள் காலாகாலத்தில் அனுப்பப்படுவதில்லை.

Your bills are not perfect. Your readings are not perfect.

இன்னும் 'ரிவிஷன் ஆப் டாரிப்' வேண்டுமென்று சொல் கிறீர்கள். இப்போதே எலெக்டிரிசிடி பில் 'டொமஸ்டிக் கம்சம்ஷனுக்கு' என்று சொன்னால் ரூ. 40, ரூ. 50, ரூ. 60 வருகிறது. ஆகவே, இப்படி ரிவிஷன் ஆப் டாரிப் என்று வருகிறபோது, பொது மக்களிடத்தில் போகாதீர்கள். நீங்கள் போகவேண்டிய இடம் பெரிய பெரிய தொழில் அதிபர்கள் 49 சதவிகிதம் மின்சாரத்தை உபயோகிக்கிறார்களே அவர்களிடம். அவர்கள் மின்சாரத்தை அதிக அளவிற்குப் பயன்படுத்துவது மாத்திரம் அல்ல, கணக்கும் தவறாகக் காட்டுகிறார்கள். சரியாகக் காட்டுவது இல்லை. நானே பார்த்தேன். கணக்காய்வுக்குழு அறிக்கையில். 'பவானியில் ஒரு தொழிற்சாலை மீட்டர் கணக்கு சரியாகக் காட்டவில்லை. ஏதோ ஒரு டெக்னிகல் ஃபேளா சொல்லி அவர்கள் தப்பித்துக்கொண்டு போய் விட்டார்கள். இப்படி தவறாக பயன்படுத்துகிறவர்களுக்குச் சலுகை காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். ஆகவே, அந்த இண்டஸ் டிரியல் டாரிப்பை நீங்கள் கை வையுங்கள். அவர்களுக்கு வரி விதியுங்கள் என்று சொல்லி. சாதாரணப் பொதுமக்களிடத்தில் வரி ஏற்றக் கூடாது என்று சொல்லி, என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இங்கு வைக்கப்பட்டுள்ள மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விழைகிறேன்.

இன்று தமிழகத்தில் இருக்கிற மின்சார அமைப்புகளை வைத்துக்கொண்டு, நமக்குக் கிடைத்து வரும் மின்சாரத்தை விநியோகம் செய்வது அதிகமாக இருக்கிறது. ஆகவே பற்றாக் குறை இருக்கிறது. இதில் எந்தவிதமான தவறும் இல்லை. நீர்மின்



1974 ஆகஸ்டு 26] [திரு. எம். ஆர். கண்ணன்]

நிலையங்கள் 17-ம், 3 அனல் மின் நிலையங்கள், ஆக 20 அமைப்புகளை வைத்துக்கொண்டு நமமுடைய மாநிலத்திற்கு வேண்டிய மின்சாரத்தை நாம் சப்ளை செய்து வருகிறோம்.

இந்தியாவிலேயே எல்லாத் துறைகளிலும், குறிப்பாக மின்சாரத் துறையைப் பொறுத்தவரையிலும், தமிழகம் தான் முன்னணியில் இருக்கிறது என்பதை யாரும் மறுக்கவில்லை. எதிர் தரப்பில் பேசுகிறவர்கள் ஏதோ குறைபாடுகள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். குறைபாடு இல்லாத துறை எந்த அரசிலும் இருக்க முடியாது. இருக்கத்தான் செய்யும். அதிலும் ஏறக்குறைய 1 லட்சம் மக்கள் வேலை செய்யும் அமைப்பில் குறைபாடுகள் இருப்பது சர்வ சாதாரணம். ஆனால் அந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று நாம் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்கிறோம். அதற்குண்டான ஆதரவான நிலைமையை ஏற்படுத்தித் தரவேண்டு மென்று அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே தமிழகம் தான் நல்ல முறையில் ஒளிவளம் பெற்று இருக்கிறது. இங்கேயுள்ள 100 கிராமங்களில் 98 கிராமங்கள் மின்னொளி பெற்று இருக்கின்றன. இன்று தொழில் துறையாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, மற்ற மற்ற காரியங்களாக இருந்தாலும் சரி, அனைத்துக்கும் மின்சாரம் மிகமிகத் தேவையானதும், அத்தியாவசியமானதும் ஆகும் என்பதை எல்லோரும் அறிவர். இந்த முறையில் தமிழகம் நல்ல முறையில் முயற்சி எடுத்துக்கொண்டு எல்லாத் துறைகளிலும் இயங்கி வருகிறது. விசையேற்றங்களுக்கு இந்தியாவிலேயே அதிகமாக மின் இணைப்பு தந்திருப்பது தமிழகம் தான். இந்தியாவிலேயே தமிழகம் தான் முதன்மையாக இருக்கிறது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். இருப்பினும் அவற்றிலுள்ள ஒன்றிரண்டு குறைபாடுகளை வைத்துக்கொண்டு அதிகமாகப் பேசுகிறார்கள்.

இங்கே 7 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறார்கள். முன்பு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், அவர்கள் பல்லாண்டுகாலம் ஆட்சியில் இருந்தார்கள், பெரிய பெரிய திட்டங்களெல்லாம் நாங்கள் தீட்டினோம், ஹைட்ரோ எலெக்டிரிசிடி நாங்கள் தான் ஏற்படுத்தினோம் என்று பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், அந்தப் பெருமைப்படக்கூடியவர்கள்

[திரு. எம். ஆர். கண்ணன்] [1974 ஆகஸ்ட் 26

அவர்கள் காலத்தில் ஏறக்குறைய 2½ லட்சம் பம்ப் செட்டு களுக்குத்தான் மின் இணைப்புக்கொடுத்து இருந்தார்கள். நாங்கள் குறைந்த காலத்தில் 5 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு இணைப்புக் கொடுத்து இன்றைக்கு ஒட்டுமொத்தமாக 7 லட்சம், 8 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு இணைப்புக் கொடுத்திருக்கிறோம். பசுமைப்புரட்சி ஏற்பட்டது திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகுதான். மின்சாரத்தை நல்ல முறையில் அபிவிருத்தி செய்து, கிராமங்களுக்குக் கொடுத்தது மட்டுமல்ல, எல்லா இடங் களிலும் உள்ள பம்ப் செட்டுகளுக்கு இணைப்புக்கொடுத்து, அதன் மூலம் பசுமைப்புரட்சி ஏற்பட காரணமாகியிருக்கிறது. அதன் மூலம் தமிழ்நாடு உணவுத்துறையில் தன்னிறைவு பெற்று இருக்கிறது. இந்த அடிப்படைக் காரணத்தை யாரும் மறுக்க முடியாது.

நாம் இந்த அளவுக்கு நல்ல முறையில் பணியாற்றி இருந்த போதிலும், இன்னும் 10 ஆண்டுகாலத்திற்கு நாம் எந்த முயற்சி எடுத்தாலும் மின்சாரத் தட்டுப்பாடு இருக்கும் என்று அரசாங்கம் எடுத்துச்சொல்லியிருக்கிறது. நாம் எத்தனையோ திட்டங்களை ஐந்தாண்டுத் திட்டங்களில் நிகழ்கால திட்டங்களில் போட்டு அனுப்பி வைத்து இருக்கிறோம். இவைகளையெல்லாம் நிறை வேற்றினால் கூட மின்சாரத் தட்டுப்பாடு இருக்கும். இந்தத் திட்டங்களுக்கெல்லாம் மத்திய அரசாங்கம் அனுமதி கொடுக்க வேண்டும். அப்படிச்செய்தால் தான் நாம் அவற்றை நிறைவேற்ற முடியும்.

நாம் பல முறை கேட்டு இருக்கிறோம். இங்கே, இதே மன்றத்தில் ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிறோம் மத்திய அரசுக்கு. இருப்பினும் மத்திய அரசு அதை நடை முறைக்குக் கொண்டுவரவில்லை. நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட, இரண்டாவது அனல் மின் நிலையம் அமைப்பு ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது தொடங்கப்பட்டால் இப்போதுள்ள மின்சாரத் தட்டுப்பாட்டை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடியும். ஆனால் அவர்கள் உடனடியாக எடுக்கவில்லை. தூத்துக்குடியிலும் ஒரு மின்திட்டம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்கும் அவர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. இன்னும் நாம் என்ன சொல்ல முடியும்? திட்டங்கள் தீட்டித் தர முடியுமே தவிர, அதை உடனடியாக



1974 ஆகஸ்டு 26] [திரு. எம். ஆர். கண்ணன்]

நிறைவேற்றும் அதிகாரம் நம் கையில் இல்லை. அவர்கள் மனது வைத்து அனுமதி கொடுத்தால் தான் தமிழகம் நல்ல முறையில் தொழில் துறையிலும், மின்சாரத் துறையிலும் முன்னேற முடியும்.

இந்த ஆட்சி தவறு செய்தது மாதிரி சொல்கிறார்கள். மத்திய அரசை அவர்கள் கேட்பது இல்லை. இந்த அரசின் எண்ணம், இந்த அரசின் நோக்கம் எல்லாம் எல்லாவற்றையும் நாட்டுடைமையாக்கி மக்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்பதாகும். அந்த அடிப்படையில் தனியார் மின் நிலையங்களை அரசாங்கம் எடுத்து, அவைகளை மின்வாரியத்திடம் ஒப்படைத்து இருக்கிறது.

இருந்தும் ஒரு சில குறைபாடுகள் இருக்கலாம், அவை களெல்லாம் நிர்வாகத்தின் குறைபாடின் காரணமாக ஏற்படுகிறது. கட்சியின் அடிப்படையிலோ, கட்சி வகுக்கும் கொள்கையின் அடிப்படையிலோ ஏற்படுவது அல்ல.

சென்னையில் ஒரு வீட்டில் பல குடும்பங்கள் இருக்கின்றன. 'மல்டி-டெனென்ட்ஸ் கன்சம்ஷன் ஸ்கீம்' அடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு 150 யூனிட் தான் கொடுக்கப்படுகிறது. ஒரு வீட்டில் 5, 6, 10 குடும்பங்கள் கூட இருக்கின்றன. 150 என்று வைத்து விட்டதால், அவர்களுக்குப் போதவில்லை. அதிகமாக உபயோகித்தால் பெனால்டி போட்டு வாங்கிவிடுகிறார்கள். அதனால் பல குடும்பங்கள் உள்ள இடங்களில், முதல் மீட்டருக்கு 150-ம், அடுத்து இருக்கும் சப்மீட்டர்களுக்கு ஒவ்வொன்றுக்கும் 75 வீதம் கொடுத்தால் நல்லது என்று சொல்லிக்கொள்கிறேன்.

ஜார்ஜ் டவுன் பகுதியில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படு கிறது. அவற்றை கண்காணிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மின்சார இலாகாவில் ஒரு குறை இருக்கிறது. ஒரு கடிதம் எழுதினால் பதில் வருவதில்லை என்று சொல்கிறார்கள். அதையும் கவனிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

எச். டி. கன்சம்ஷன் பாக்டரிக்குக் கொடுக்கிறார்கள். அதிலே காலத்தை மாற்றிக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு கொடுக்கும் சக்தியை அவர்களுக்கு வேலைவாய்ப்புக்குக் குத்தகம் இல்லாமல்

கொடுத்தால் நல்ல முறையில் இருக்கும் என்று சொல்கிறார்கள். இதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த முறையை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இப்போது கேள்விப்படுகிறேன், இந்த லைன் லாஸை ரெட்யூஸ் செய்வதற்கு ஒரு புதிய டெக்னிக் வந்திருப்பதாக. அதை உபயோகித்துக் குறைக்க முடியுமா என்பதைப் பரிசிலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிகாரிகள் டிரான்ஸ்ஃபர் விஷயம்பற்றி இங்கே சொன்னார்கள். கூடிய வரைக்கும் ஒரு அதிகாரியையோ, கிளார்க்கையோ டிரான்ஸ்ஃபர் செய்வதோ கூடாது. தவறு செய்கிறார்கள் என்றால், காரணம் என்ன என்று ஆராய்ந்து நடவடிக்கை எடுத்து, அவர்களை டிஸ்மிஸ் கூடச் செய்யலாம். அப்படிச் செய்தால்தான் அந்த இலாகா உருப்படும். அப்படியில்லாமல் அவனை ஒரு இடத்தி லிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவது என்றால் அவன் அங்கே போயும் ஊழல் செய்வான். ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு ஊழல் பரவும். ஆகவே, ஊழல் செய்பவர்களைக் கண்டு பிடித்து அவ்வப்போது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, எந்த அடிப்படையில் பார்த்தாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்ற பிறகு தொழில் துறையாக இருந்தாலும் சரி, விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, நல்ல முறையில் மின்சாரத்தை உற்பத்தி செய்து, அதிகமான அளவுக்கு நாட்டிலுள்ள பம்ப்செட்டுகளுக்குக் கொடுத்து, பசுமைப்புரட்சியை ஏற்படுத்தி, தொழில் வளம் பெருகச்செய்து, எல்லா மக்களும் நல்ல முறையில் வாழ்கிறபடி செய்திருக்கிறார்கள்.

ஆனால், இங்கேயுள்ள எதிர்க்கட்சிகள் மட்டும் பொறாமையின் காரணமாக தவறு சொல்கிறார்கள். அந்தப் பொறாமையை அவர்கள் மறந்து, நாம் எல்லோரும் மக்களுக்கு சேவை செய்ய வந்திருக்கிறோம். மக்களுக்கு உண்மையான வாழ்வளிக்கப் பாடு பட வந்திருக்கிறோம் என்ற எண்ணம் கொண்டு, ஆளும் கட்சியோடு ஒத்துழைத்து, இருக்கின்ற குறைபாடுகளை எடுத்துக்காட்டி, நல்ல முறையில் பாடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.





(பிற்பகல் 12-30)

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நம்முடைய இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பேசிய பல உறுப் பினர்கள் குறிப்பாக ஆளும் கட்சி உறுப்பினர்களே அதில் உள்ள கோளாறுகளையும் நிர்வாக திறமை இன்மையையும் அழகாக எடுத்துச் சொன்னார்கள். ஏனென்றால் இன்று இந்த மின்சார வாரியமானது. . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): எதிர்க்கட்சி வரிசையில் இருக்கக் கூடியவர்களால் பேசமுடியவில்லை என்றால் எங்களை ஏன் காட்ட வேண்டும்? You can depend upon your own legs and not on our legs.

திரு. சோ. அழகர்சாமி: நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு ரொம்ப நன்றி. ஆளும் கட்சியில் உள்ளவர்களே குறை சொல்லக் கூடிய அளவுக்கு மோசமாக இருக்கிறது என்பதை அழுத்திச் சொல்வதற்காகத்தான் நான் அப்படிக் குறிப்பிட்டேன். இன்றைக்கு மின்சார வாரியத்திலே ஊழல்கள் மலிந்துவிட்டன. திறமையின்மை பெருகிவிட்டது. அதை இன்னும் அழுத்தமாகச் சொல்வதற்காகத்தான் அப்படிக் குறிப்பிட்டேன்

சென்ற ஆண்டு பட்ஜெட்டிலே பல குறைபாடுகள் சொல்லப் பட்டன. மின்சார திருட்டு, லைன் லாஸ் பற்றியெல்லாம் சொல்லப் பட்டிருந்தது. அப்போது அதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். என்ன நடவடிக்கை எடுத்திருக் கிறார்கள் என்பது ஒன்றும் தெரியவில்லை. இந்த அறிக்கையிலும் அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

கோயம்புத்தூரில் இருக்கின்ற தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் சொல்கிறார்கள், அங்கே 60 சதவிகிதம், 70 சதவிகிதம் பவர் கட் இருந்த நேரத்தில் கூட பல மில்கள் தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தன என்று. அதற்குக் காரணம் என்ன? பவர் கட் இருக்கும்போது எப்படி அவர்கள் தொடர்ந்து ஓட்ட முடியும்? மின்சார இலாகா அதைக் கவனித்ததா இல்லையா? அல்லது மின் சார இலாகாவுக்கும் தெரிந்துதான் அது நடைபெற்றதா? அமைச்சரவர்கள் இதற்கு எல்லாம் தக்க பதில் சொல்லவேண்டும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1974 ஆகஸ்டு 26

1½ கோடி ரூபாய் வசூலாகாமல் பாக்கி இருக்கிறது என்று இந்த அறிக்கையிலே அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 15 கோடி ரூபாய்க்குமேல் பாக்கி இருக்கும் என்று கருதப் படுகிறது. புள்ளிவிபரத்தில் ஏதோ கோளாறு இருக்கலாம் என்று கூட இங்கே சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் விபரத்திற்காக விளக்கம் சொல்ல வேண்டுமென்று கருதுகிறேன். கோயம்புத்தூரில் 70 சதவிகிதம் பவர் கட் இருந்தபோது கூட மில்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தன என்று சொல்வது சரியல்ல. எந்த இடத்தில், எந்த மில் ஓடியது என்று குறிப்பிட்டுக் குற்றச்சாட்டாக சொல்வதாக இருந்தால் அதற்குத் தகுந்த பதிலை நான் சொல்ல முடியும். சில தொழிற்சாலைகளுக்கு ஜெனரேட்டர் வைத்துக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஜெனரேட்டர்களை வைத்து தொடர்ந்து ஓட்டியிருக்கலாம்.

1972–73-ம் ஆண்டில் 14 நாட்கள் 70 சதவிகிதம் பவர் கட் இருந்தது. அப்போது எத்தனை நாட்கள் மில்கள் தொடர்ந்து ஓடின, எந்த எந்த மில்கள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் தவறு செய்தார்களா அல்லது அங்கத்தினர் அவர்கள் தவறுதலாகச் சொல்கிறார்களா என்பதை தான் சொல்ல முடியும். குற்றச்சாட்டைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். பாக்கித் தொகை 1½ கோடியா, 15 கோடியா என்று சந்தேகத்திற்கு இடமில்லை. பதினைந்து கோடி என்று சொல்வது தவறு. நான் சொன்னதுதான் உண்மை.

**திரு. சோ. அழகர்சாமி:** போன வருஷம் பேசும்போது கோயம்புத்தூரில் மின்சார வெட்டு இருக்கும்போது அங்கே இருக்கிற பல மில்கள் தொடர்ந்து ஓடிக்கொண்டிருந்தன. . .

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** பொதுவாகக் குற்றச்சாட்டு கூடாது. எந்த இடத்தில் எந்த மில் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அதற்குப் பதில் சொல்ல முடியும். அப்படித்தான் குற்றச்சாட்டு இருக்க வேண்டும். அல்லாமல் பொத்தாம் பொதுவில் ஏதோ குற்றச்சாட்டு என்று சொல்வது சரியல்ல.



1974 ஆகஸ்டு 26]

**திரு. சோ. அழகர்சாமி:** அதற்கு வேண்டிய அளவு டைம் கொடுத்தால் விபரங்களைச் சேகரித்துத் தரமுடியும். நான் தவறான தகவலைச் சொல்லவில்லை. பவர் கட் இருந்தபோதும் அங்கே மில்கள் தொடர்ந்து ஓடியதற்கான ஆதாரங்கள் உண்டு. கேரளத்தில் இருந்து மின்சாரம் வாங்கிவந்தும் பற்றாக்குறை தீரவில்லை. அப்படி எல்லாம் இருந்தும் கூட அங்கே மில்கள் . . .

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** டிபன்ஸ் ஓரியன்டட் இண்டஸ்ட்ரீஸ், எசன்ஷியல் சர்வீஸ்களுக்கு 10 சதவிகிதம்தான் பவர் கட் இருந்தது. எல்.டி. இண்டஸ்ட்ரிஸ்க்கு 75 சதவிகிதம் கட், விவசாயத்திற்கு கட் இல்லை. அவர்களுக்கு அட்ஜஸ்ட் மெண்ட் முறையில் வழங்கப்பட்டது. மொத்தத்திலே எவ்வளவு உற்பத்தி, எவ்வளவு பர்சன்டேஜ் கட் என்று தெரிந்துகொண்டு சொன்னால் நல்லது. அப்படியானால்தான் அதைப் புரிந்து கொண்டு தக்க பதில் சொல்ல முடியும்.

**திரு. சோ. அழகர்சாமி:** மொத்தத்தில் பவர் கட் இருந்த போது பல ஊழல்கள் நடந்திருக்கின்றன. அதை என்னால் நிரூபிக்க முடியும். நிரூபிக்க முடியாத குற்றச்சாட்டுகளை நான் சொல்லவில்லை. 16 மணி நேரம் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டது; பகலில் 4 மணி நேரம், இரவில் 12 மணி நேரம் கொடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். அதைக் கேட்டுவிட்டு நான் அங்கேபோய் பார்த்தேன். மூன்று மணி நேரம் கூட மின்சாரம் கொடுக்கப்படவில்லை. ஒரு வாரம் தொடர்ந்து மின்சாரம் கொடுக்கப்படவே இல்லை. மின்சாரம் கொடுப் பதற்கு இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிட வேண்டும். இப்போது வரும், முன்னால் வந்தது, போய்ப் பாருங்கள் என்று சொல்லி விவசாயிகளுக்கு பல வழிகளில் நஷ்டத்தை ஏற்படுத்து கிறார்கள்.

அதிகாரிகளிடத்திலே போய் இல்லை என்றால் இல்லை என்று சொல்லிவிடுங்கள், ஏன் இப்படி வருத்துகிறீர்கள் என்று கேட்டால் "நாங்கள் என்ன செய்வது, இல்லை என்று சொல்லா தீர்கள் என்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்" என்று அவர்கள் சொல்கிறார்கள். மின்சாரம் இப்போது வரும், ஒரு மணி நேரத்தில் வரும், இரண்டு மணி நேரத்தில் வரும் என்று சொல்வது, விவசாயிகள் மற்ற வேலைகளையும் விட்டு விட்டு அங்கே

போய் காத்திருந்துவிட்டு, வெறுமனே திரும்புவது. இப்படித்தான் நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் இங்கே 16 மணி நேரம் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். விவசாயக் காரியங்களுக்கு சரியாக மின்சாரம் வழங்கப்படாததினால்தான் உற்பத்தி குறைந்திருக்கிறது. சரியானபடி கிணற்றுப் பாசனத்திற்கு மின்சாரம் கொடுத்திருந்தால் போன வருஷம் எதிர்பார்த்த அளவுக்கு நெல், மற்றும் இதர உணவு தானியங்கள் உற்பத்தியாகி இருக்கும்.

விவசாய பம்ப்செட்டுகளுக்கு மின்சார இணைப்புக் கேட்டால் கிடைப்பதில்லை. ஆனால் தொழிற்சாலைகளுக்கு உடனே கொடுத்து விடுகிறார்கள். விவசாயிகளுக்கு விசேஷ சலுகை காட்டுகிறோம் என்று சொல்லும்போது பல ஆயிரக்கணக்கான பம்ப்செட்களுக்கு இணைப்புக் கொடுக்காமல் இருக்கிறதே, அதை என்னவென்று சொல்வது? செங்கற்பட்டு மாவட்டத்தில் இப்படி பல ஆயிரக் கணக்கானவர்கள் மோட்டார் வாங்கி வைத்துவிட்டு, மின்சார இணைப்பு கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் கடன் வாங்கி மோட்டார் வாங்கி வைக்கிறார்கள். இணைப்பு கிடைக்காமல், அதனால் உற்பத்தி செய்ய முடியாமல், வாங்கிய கடனை அடைக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். கடனை அடைக்காததால் மோட்டார்கள் எல்லாம் இன்றைக்கு ஜப்தி போய் கொண்டிருக்கின்றன. இதுதான் விவசாயிகளுக்கு நீங்கள் செய்யும் விசேஷ சலுகை.

அதே நேரத்தில் பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு எல்லாம் உடனடியாக மின்சாரம் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு சலுகை விலையில் கூட மின்சாரம் கொடுக்கிறார்கள். மேட்டூர் அலுமினியத் தொழிற்சாலை, தாரங்கதாரா தொழிற்சாலை இவர்களுக்கெல்லாம் சலுகை காட்டப்படுகிறது. சிக் மில்களுக்கு சர்க்கார் சலுகை அளித்தது. அது நியாயம். இப்போது அவர்களுக்கு நல்ல லாபம் வந்துகொண்டிருக்கிறது. 1,000 ரூபாய் பெறுமானமுள்ள சாமான்களை 2,000 ரூபாய்க்கு கொடுக்கிறார்கள். 100 ரூபாய்க்கு பஞ்சு வாங்கி, 200 ரூபாய்க்கு கொடுக்கிறார்கள். அந்த வகையில் நல்ல லாபம் வருகிறது. அப்படி இருக்கும்போது வசூல் செய்ய வேண்டிய கட்டணத்தை ஏன் தள்ளுபடி செய்ய வேண்டும்?





தள்ளுபடி செய்ய வேண்டிய அவசியம் என்ன? 1½ கோடி ரூபாய்க்கு மேல் பாக்கி இருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். பெரும்புள்ளிகள்தான் பாக்கி வைத்திருக்கிறார்கள்.

விவசாயிகளுக்கு ஒழுங்காக பில் அனுப்பி வைப்பது கிடையாது. ஒரு வருஷம் கழித்து, எல்லாவற்றையும் சேர்த்து பில் அனுப்புகிறார்கள். மொத்தமாக விவசாயிகளால் கட்ட முடியவில்லை. கட்ட முடியாவிட்டால் உடனே போய் ஃப்யூசைப் பிடுங்கி விடுகிறார்கள். எனக்குக் கூட அப்படித்தான் பில் அனுப்பினார்கள். என்னால் மொத்தமாக கட்ட முடியவில்லை. என்னுடைய ஃப்யூசையும் பிடுங்கிவிட்டார்கள். இன்னும் போடவில்லை. ஒரு வருஷம் கழித்து, 400 ரூபாய் 500 ரூபாய் சேர்த்து கட்டு என்றால் ஒரு விவசாயியால் எப்படிக் கட்ட முடியும்? கட்டவில்லை என்றால் உடனே ப்யூசைப் பிடுங்கி விடுகிறார்கள். மின்சார இலாகா இதை ஏன் கண்டிக்கவில்லை? ஏன் ஒழுங்காக பில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை?

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு சங்கம் என்று சொல்கிறார்கள். ஆனால் சர்க்காரே தலையிட்டு, அவர்கள் கட்சிக்காரர்கள் சங்கம் வைத்துக்கொள்ள அனுமதிக்கிறார்கள். ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? மெஜாரிட்டி எந்தச் சங்கத்திற்கு இருக்கிறதோ அவர்கள் சங்கத்திற்கு அனுமதி கொடுங்கள். மற்றவைகளை வைக்க அனுமதிக்காதீர்கள். அதற்கு உங்களுக்குத் தைரியம் கிடையாது. மின்சார வாரியத்தில் இன்றைக்கு எத்தனையோ சங்கங்கள் இருக்கின்றன. அதைக் கட்டுப்படுத்த உங்களுக்குத் தைரியம் இல்லை. அதனால்தான் இப்படி பில்லை ஒரு வருஷத்திற்கு சேர்த்துப்போட்டு விட்டு, கட்ட முடியாவிட்டால் ஃப்யூசை பிடுங்கிக்கொண்டு போகிறார்கள்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்ட வேண்டும், வெட்ட வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. மத்திய அரசைக் கேட்டிருக்கிறோம் என்று சொன்னால் போதாது. அதை வற்புறுத்தி வாங்கவேண்டியது மாநில அரசின் கடமை. அதை முதலிலே செய்யுங்கள். வற்புறுத்திக் கேளுங்கள்.

கோதையாறு மின்சார உற்பத்தி பற்றிச் சொல்லி ரொம்ப நாள் ஆகிவிட்டது. அதற்கு ஒரு சின்ன சாமான் வேண்டுமானாலும் கூட வெளிநாட்டுக்குத்தான் போகவேண்டும் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** கோதையாற்றில் இருந்த இரண்டு மின்சார நிலையங்களிலும் சில பழுதுகள் சென்ற ஆண்டு ஏற்பட்டிருந்தன. வெளிநாட்டிலிருந்து அதற்கு வேண்டிய நீடில்கள் வாங்கவேண்டியிருந்தன. அவை வாங்கப்பட்டு, பழுதுகள் சரிபார்க்கப்பட்டுவிட்டன. இப்போது இரண்டு மின்சார நிலையங்களும் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் அமைக்க வேண்டுமென்பது எங்கள் கருத்து. அந்தக் கருத்தைப் பற்றி அழகர்சாமி அவர்கள் சொன்னார்கள். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா?

**திரு. சோ. அழகர்சாமி :** ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற் சங்கம் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதிலே கருத்து வேறுபாடு இல்லை.

இந்த பேசின் பிரிட்ஜ் மின்நிலையம் 90 மெகாவாட் உற்பத்தித் திறன்கொண்டது. அது ரொம்ப பழமையானதாக இருப்பதால் அடிக்கடி பழுதடைந்து விடுகிறது. அதை ஏன் புதுப்பிக்கக் கூடாது. அதிகமாக அனல் மின்சாரம் தேவைப்படுவதால் அதை ஏன் புதுப்பித்து, அதிக உற்பத்தி செய்ய முடியாது? புதுப்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹொகனேக்கல் சம்பந்தப்பட்ட வரையில், மைசூர் அரசாங்கத்தோடு பேசி, அங்கே ஒரு நீர்மின் நிலையத்தை கட்ட ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அமைச்சரவர்கள் போன வருஷம் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அதுபற்றி என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரியவில்லை.

அதிகமான மின்சாரத்தை எப்படி உற்பத்தி செய்வது என்று திட்டமிட்டு, வேகமான முறையிலே இந்த அரசாங்கம் செயல்படவில்லை என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



அதேநேரத்தில் கட்டணத்தை உயர்த்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது இருக்கின்ற கட்டணத்தையே கட்ட முடியாமல், ஃப்யூசை பிடுங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். இந்த நேரத்தில் விவசாயப் பம்ப் செட்டுகளுக்கும் மற்றவைகளுக்கும் கட்டணத்தை உயர்த்தினால் எப்படிக் கட்ட முடியும்? ஆகவே, இந்தமாதிரியான காரியங்களுக்கு கட்டணத்தை உயர்த்தக் கூடாது. பெரிய பெரிய தொழிற்சாலைகளுக்கு உயர்த்தலாம். இப்போது பல தொழிற்சாலைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சலுகைகளை எடுத்துவிடலாம். தாரங்கதாரா தொழிற்சாலை, மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலை,

சன் பேப்பர் தொழிற்சாலை போன்றவைகளுக்கு சலுகை காட்டவேண்டியதில்லை. இப்போது 3½ பைசா என்ற அளவில் அவர்களுக்குக் கொடுக்கிறார்கள். 49 சதவிகிதத்திற்கு மேல் பெரிய பெரிய தொழிற்சாலைகள்தான் பயன்படுத்துகின்றன. அவர்களுக்கு பெருத்த லாபமும் இருக்கிறது. யாருக்கும் நஷ்டம் இல்லை. அதனால் மற்ற காரியங்களுக்குக் கொடுப்பதுபோல அவர்களுக்கும் நியாயமான விலையில் கொடுக்கலாம்.

அதேநேரத்திலே வீடுகளுக்கு முதல் 50 யூனிட்டுக்கு 35 பைசா என்கிறார்கள், அடுத்த 50 யூனிட்டுக்கு 30 பைசா என்கிறார்கள். பவர் மீட்டருக்கு குறைந்த தனி சார்ஜ். ஏன் இப்படி? வசதி உள்ளவர்கள் அதிகமாகக் கட்டுகிறார்கள். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் போன தடவையே சொன்னார்கள். முதல் 50 யூனிட்டுக்கு 30 பைசா. அதற்குமேல் 50 யூனிட்டுக்கு 35 பைசா. அதற்குமேல் போனால் 40 பைசா என்பதாக அதிகமாக மின்சாரத்தை உபயோகப்படுத்துகின்ற வசதி படைத்தவர்களுக்கு அதிக ரேட் விகிதம் இருந்தால் நியாயமானதாக, முறையானதாக இருக்கும். பெரிய பங்களாக்களில் பெரிய பெரிய தொழில்களை வைத்து நடத்துகிறவர்கள் மட்டும் ஏன் குறைந்த கட்டணம் கட்ட வேண்டும்? பெரிய தொழில்களுக்கு 3½ பைசா, 4 பைசா என்று கொடுப்பதை கம்ப்ளீட்டாக நிறுத்தி விட வேண்டும். விவசாயப் பம்ப் செட்டுகளுக்கு—50 யூனிட்டுக்குள் உபயோகித்துக்கொள்கிற வீடுகளுக்கு—கண்டிப்பாக மின்சாரக் கட்டணத்தைக் கூட்டக்கூடாது.

[திரு. சோ. அழகர்சாமி] [1974 ஆகஸ்ட் 26

நாம் இன்றைக்கு கம்பிகளைத்தான் நீட்டியிருக்கிறோமே தவிர எங்கும் விளக்குகள் எரியவில்லை. செங்கல்பட்டு மாவட்டத்தில்—30 ஆயிரம் என்கிறார்கள்—எனக்கு சரியான விவரம் தெரியாது—ஆயினும் ஆயிரக்கணக்கான பம்ப்செட்டுகளுக்கு இன்னமும் கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. அவற்றுக்கு எல்லாம் உடனடியாக கனெக்ஷன் கொடுக்கவேண்டும் . . . (மணி அடிக்கப்பட்டது)

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை குறித்து நான் என்னு சில கருத்துக்களைக்கூற விரும்புகிறேன்.

எனக்கு முன்பாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் மின்சார வாரியம் பெரிய வெற்றிகளைக் கண்டிருந்தாலும் செயல்படுகிற முறையில் பல கோளாறுகள் இருந்துகொண்டிருக்கின்றன என்பதை கட்சி வேறுபாடின்றி சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

பொதுவாக இன்றைக்கு இந்த மின்சாரத்துறை நிதி நிலை அறிக்கையின் மீது இந்த மன்றம் விவாதம் நடத்தினாலும் கூட, அது இந்த மன்றத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டது அல்ல என்ற நியதி இருக்கிறது. 1948 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் அடிப்படையில் இந்த மின்சார வாரியம் அமைக்கப்பட்டது. அன்றைக்கு இதை இப்படி அமைத்ததன் நோக்கம்—இந்தத் துறை தனித்து இயங்கினால் செம்மையாகச் செயல்படும், அதனுடைய நிதி ஆதாரங்கள் சர்க்காருடைய பொது நிதி ஆதாரங்களோடு இணைக்கப்படாமல் தனித்து வைக்கப்பட்டால் தான் அதில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்ற நோக்கத்துடன் விதி 5 இன் அடிப்படையில் 1948 ஆம் ஆண்டு எலெக்ட்ரிசிடி சப்ளை ஆக்ட் அடிப்படையில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இப்படி எந்த நோக்கத்தோடு இந்த வாரியத்தை ஏற்படுத்தினோமோ அந்த நோக்கத்தில் முழுமையாக நாம் வெற்றி பெறவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய பேச்சில் இருந்து நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

பொதுவாக, நான் இன்றையதினம் ஒரு விஷயத்தை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். சர்க்கார் அல்லது ஒரு பொது நிறுவனம் ஒரு பெரும் நிதிப் பொறுப்பில் செயல்படுமானால்—



1974 ஆகஸ்டு 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

அதன் நிதி ஆதாரங்களைப் பற்றியும், அதைச் செலவிட்டு நிர்வகிக்கின்ற முறைபற்றியும் இந்த மன்றம் ஆய்வு செய்து வாக்களிக்கின்ற ஒரு நிலை இருந்தாக வேண்டும் என்பது என் கருத்தாகும்.

இன்றைக்கு அமைச்சரவையில்—மின்சாரத்துறை அமைச்சர் என்று திரு. ஓ. பி. இராமன் அவர்கள் இருக்கிறார்கள். இருந்தும் இந்த மன்றம் அந்த அறிக்கைபற்றி விவாதிக்கலாமே தவிர—அதற்கு ஒப்புதல் அளித்தாக வேண்டும் என்ற நிலைமை இல்லாமல் இருப்பது ஜனநாயக மரபுக்கு எந்த அளவுக்கு ஏற்றதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நாம் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

என்னுடைய வேண்டுகோள் எல்லாம்—இந்த மின்சார வாரியத்தின் நிதி ஆதாரங்களைப்பற்றி—பொதுமக்களிடம் இருந்து கட்டணகப் பெறுகிற பணம்—வங்கிகளில் இருந்து பெறுகிற பணம்—ஆயுட் காப்புறுதிக் கழகத்திடம் இருந்து பெறுகிற பணம்—பொது நிறுவனங்களிடம் இருந்து வருகிற பணம்—இந்தப் பணத்தை எல்லாம் வாரியம் செலவழிக்கிற முறைகள்—இவை பற்றி எல்லாம் இந்த மன்றம் ஆய்வு செய்து, ஒப்புதல் அளித்தல் வேண்டும் என்பதுதான் ஜனநாயகத்திற்கு உகந்ததாக இருக்கும். வெட்டுப் பிரேரணைகள் கொடுப்பதற்கும், வாக்கெடுப்பு நடத்துவதற்கும் அது உட்பட்டதாக இருக்க வேண்டும். விவாதிக்கலாம், அதைப் பற்றி வாக்களிப்பதற்கு உரிமையில்லை என்பது ஜனநாயகத்திற்கு உகந்ததாகாது. மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கைபற்றி மறுப்பதற்கோ, கொடுப்பதற்கோ இந்த மன்றம் முழு உரிமையுடையதாக இருக்கும் வகையில் எப்படி இதனைத் திருத்தலாம் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். அப்போது தான் இப்போதுள்ள கோளாறுகள் பலவும் நிவர்த்திக்கப்படும் என்ற வகையில் என் ஆலோசனைகளைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நான் சென்ற ஆண்டு சில கருத்துக்களைச் சொல்லியிருந்தேன். முக்கியமான கருத்து என்னவென்றால் மின்சாரத் துறைக்கும், மற்ற துறைகளுக்கும் ஒரு தொடர்பு இருக்க

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 ஆகஸ்டு 26

வேண்டும் என்பதை வலியுறுத்தினேன். அது என்னமோ தேவையில்லாத கருத்துப்போல—அதற்கு எந்தவிதமான பதிலும் இங்கே கொடுக்கப்படவில்லை.

'Lack of Co-ordination and Consulation among various Departments'

என்பதுபற்றித் தெளிவாகப் பதில் கொடுக்கப்படவில்லை. இது நாம் சொல்கிற ஆலோசனைகளை சரியாகப் பரிசீலனை செய்வது இல்லையோ என்கிற ஐயப்பாட்டை எங்கள் உள்ளத்தில் எழுப்புகிறது.

அம்மையார் அவர்கள் அரியானாவில் ஏற்பட்டிருக்கிற முன்னேற்றம் பற்றிச் சொன்னார்கள். அது சின்ன மாநிலம்—தொழிற்சாலைகளோடு இணைந்த மாநிலம்—ஜீவநதிகள் இருக்கிற மாநிலம்—டெல்லிக்கு அருகில் வேறு இருப்பதால் அதன் முன்னேற்றத்தில் உடனுக்குடன் கவனித்து பல காரியங்களைச் செய்ய முடிகிறது. அதை தமிழகத்தோடு ஒப்பிட முடியாது. ஆயினும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மிகப் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்றைக்கு ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் என்கிற முறையில் நம்முடைய மாநிலத்தில் உள்ள 62,484 கிராமங்களில் 61,138 கிராமங்களுக்கு மின் இணைப்பு கொடுத்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் தம் அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். அதைப் பாராட்டுகிறோம்.

ஆனால், தமிழகத்திலுள்ள கிராமங்களுக்கு எல்லாம் மின் இணைப்பு கொடுக்கப்பட வேண்டுமென்றால் நமக்கு எந்த அளவுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது என்பதை முன்கூட்டியே கணக்கிட்டு, அந்த அளவுக்கு முதலில் மின்சார உற்பத்தியில் கவனம் செலுத்தி பிறகு கிராம மின் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தியிருந்தால் இன்றைக்கு மின்சாரப் பற்றாக் குறையினால் ஏற்பட்டிருக்கிற சிக்கல் நிச்சயமாக நமக்கு ஏற்பட்டிருக்காது.

இன்றைக்கு நமது பொருளாதாரம் வளர்ந்து வருகின்ற ஒரு பொருளாதாரமாக இருக்கிறது. பல்வேறு ஐந்தாண்டுத் திட்டங்களின் அடிப்படையிலே ஒவ்வொரு மாநிலத்திலேயும் பல தொழிற்



1974 ஆகஸ்டு 26] [திரு. எம். ஏ. லத்தீப்]

சாலைகளை ஏற்படுத்த வேண்டும், பல்வேறு விதமான தொழில் முன்னேற்றங்களை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு மனப்பான்மை இருந்து வருகிறது. அந்த மனப்பான்மையின் அடிப்படையிலே தமிழகம் தொழில் துறையிலே முன்னேறி இருக்கிறது என்பது உண்மை. அந்தத் தொழில்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்ற முனைப்போடு திட்டமிடுகிறோமே தவிர, இவ்வளவு தொழிற் சாலைகளிலே எவ்வளவு மின்சாரம் பயன்படும் என்று திட்டமிட்டு செயல்பட்டிருந்தால் இன்றைக்கு தொழில் துறையிலே ஏற்பட்டிருக்கிற மின்சாரக் குறைப்பு என்ற வகையிலே, பல கோடி ரூபாய்களை மூலதனமாகப் போட்டு, பல மெஷின்களை வெளி நாடுகளிலிருந்து வாங்கி, இன்வெஸ்ட்மென்ட் செய்து, தொழிற் சாலைகளுடைய முழு கப்பாசிட்டியைக் கூடப் பயன்படுத்தாமல் தொழிற்சாலைகள் வாரத்திற்கு 3 நாள், அல்லது, ஒரு நாளைக்கு இவ்வளவு நேரம்தான் வேலை செய்ய வேண்டுமென்று உற்பத்தியைக் குறைத்து, வேலை வாய்ப்புகளைக் குறைத்து, நாட்டிலே இருக்கிற உற்பத்தியினுடைய அளவைக் குறைத்து, அதே நேரத்தில் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய வருவாய், காப்பிட்டல் பிளாக் செய்யப்பட்டிருக்கிறது என்ற நிலைமை ஏற்பட்டிருக்காது. 'Without there being any use' என்ற வகையிலே இன்றைக்கு நாடு சிக்கலிலே, சூழலிலே அகப்பட்டு தத்தளித்துக் கொண்டிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் நான் சொல்வது, தொழிற் சாலைகளை ஏற்படுத்துவதற்கு முன்னால் எவ்வளவு மின்சாரம் தேவைப்படுகிறது என்ற அளவை திட்டமிடவில்லை நீங்கள். அதன் காரணமாகத்தான் இன்றைக்கு நாட்டிலே இந்தப் பொருளாதாரச் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் மிகப் பணிவுடன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு கணக்குகளைச் சொல்கிறார்கள். இவ்வளவு கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மின்சார இணைப்புகளையும் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் எனக்குத் தெரியும்.

அன்றைக்கு ஒரு உறுப்பினர் பேசும்போது மலைகளிலும், மடுக்களிலும், நதிகளிலும் ஊழியர்கள் நடந்துசென்று மிகப் பெரிய பிரமாண்டமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள் என்று

[திரு. எம். ஏ. லத்தீப்] [1974 ஆகஸ்டு 26

சொன்னார்கள். ஊழியர்கள் செய்திருக்கிறார்கள், மலைகளிலே ஏறியிருக்கிறார்கள், மடுக்களிலே இறங்கி இருக்கிறார்கள், நதிகளைத் தாண்டியிருக்கிறார்கள். ஆனால், மலைகளிலே ஏறியவர்கள், மடுக்களிலே இறங்கியவர்கள், நதிகளைத் தாண்டியவர்கள், மின்சார உற்பத்தியைப் பெருக்க எப்படி திட்டம் திட்ட வேண்டுமோ அப்படி திட்டமிட்டிருந்தால் இந்தச் சிக்கல்கள் தீர்ந்திருக்கும். அந்த வகையிலே சில பிரச்னைகளை அணுகியிருப்பார்களானால் இன்றைக்கு இந்த நிலைமை நாட்டிலே ஏற்பட்டிருக்காது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

பல கிராமங்களிலே பார்க்கிறேன், கம்பங்கள் மூளியாக இருக்கின்றன. கம்பங்கள் இருக்கின்றன, பல்புகள் இல்லை. சில மலைப் பகுதிகளிலே கம்பங்கள் நட்டிருக்கிறார்கள். மழை பெய்கிறது. மழை பெய்தவுடனே செல்லரித்து, இந்தக் கம்பங்கள் சாய்ந்து விடுகின்றன. கம்பங்கள் எல்லாம் அப்படியே தரையிலே கவிழ்ந்து விட்டிருக்கின்றன. அவை இன்றைக்கு கவனிப்பாரே இல்லாமலிருக்கின்றன. அங்கே இருக்கிற ஓவர்சீயர்கள் அல்லது ஊழியர்களிடத்திலே நாம் எடுத்துச் சொன்னால், அவர்கள் என்ன செய்கிறார்கள்? நான் ஒரு உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் துறையிலே வேலை செய்கிற ஒரு பெரிய அதிகாரி, வட ஆற்காடு மாவட்டத்திலே இருக்கிற பெரிய அதிகாரி, அவரிடத்திலே சொன்னேன். சாதாரணமாக லைன்மென்களிடத்திலே சொன்னால், போய்யா, யாரும் ஒன்றும் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். நான் சொல்லி அனுப்பினேன். இந்தக் கிராமத்திலே இப்படி இருக்கிறது.. அந்த லைன்மென் சென்று பார்க்க வேண்டுமென்று சொன்னேன். ஜோலார்பேட்டை அலுவலகத்திற்கு நானே போனேன். போனால், அந்த லைன்மென் என்ன சொல்கிறான்? 'என்ன சார், எம்.எல்.ஏ.-வுக்கும் இதற்கும் என்ன இருக்கிறது? பல்ப் இல்லையென்றால், எவனாவது திருடிக் கொண்டு போயிருப்பான்'. என்ற பதிலைத்தான் சொல்கிறானே தவிர, திருடு ஏன் போகிறது? திருடு போகின்ற அளவுக்கு ஏன் விடுகிறார்கள் என்று சொல்லவில்லை. (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): எதிர்க் கட்சித் தலைவர் பேச வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு அமைச்சர் . . .



1976 ஆகஸ்டு 26]

திரு. எம். ஏ. லத்தீப்: நானும் எதிர்க் கட்சித் தலைவர் . . .

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): உறுப்பினர் லத்தீபுக்கு கோபம் வருகிறதே தவிர, இருக்கிற நிலைமைகளைப் புரிந்துகொள்ள மறுக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் பேசி, அமைச்சர் பதில் சொல்ல வேண்டுமென்று சொன்னேன். சீக்கிரம் முடியுங்கள் என்றேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: சீக்கிரம் முடிக்காமலா போகிறோம். பேசும்பொழுது நடுவிலே, இந்தக் கருத்தைக் கொண்டிருக்கும் போது, இப்படியென்றால்? ஆகையினால் மேலதிகாரியிடத்திலே சொன்னேன். அவர் சொல்கிறார், நீங்கள் சொல்வதைவிட அதிகமாக எங்களுக்குத் தெரியும். எந்த இடத்திலும் லைன்மென்கள் வேலை செய்வதில்லை. எந்த இடத்திலும் ஓவர்சீயர்கள் வேலை செய்வதில்லை. மலைப் பகுதிகளுக்கு அவர்கள் போவதில்லை. எங்களிடத்திலே ஸ்டாஃப் இருக்கிறது. ஆனால், அவர்கள் மலைப் பகுதிகளுக்குப் போக மறுக்கிறார்கள். நாங்கள் டிசிப்ளினை ஏற்படுத்த வேண்டுமென்று ஏதாவது கடுமையான நடவடிக்கை எடுக்க, கடுமையான உத்தரவுகளைப் போட்டால் உடனே கொடியைத் தூக்கி விடுகிறார்கள். கொடியைத் தூக்கிக்கொண்டு ஒழிக என்று கோஷம் போடுகிறார்கள். எங்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லையென்று அதிகாரிகளே கூறுகிறார்கள்.

இங்கேயிருக்கிற சர்வகட்சியினரைக் கேட்கிறேன். நாட்டிலே தொழிலாளருக்கு சுதந்திரம் இருக்க வேண்டுமென்பதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. இந்த நாடு சுதந்திர நாடு. அவர்களுக்கு சுதந்திரம் பெற்றுத்தர சங்கங்கள் இருக்கின்றன. அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப் படவேண்டும், அவர்களது குறைகளை, கோரிக்கைகளை அவர்கள் சொல்லவேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்களுடைய உரிமைகளைப் பெற அந்தச் சங்கங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய ஆசை. ஆனால், கடமையிலிருந்து தப்ப அந்தச் சங்கங்கள் பயன்படுமானால், அதை இந்த நாட்டுமக்களும், ஏழை எளிய மக்களும் சகித்துக் கொள்ளமாட்டார்கள். ஒருகாலம் இல்லாவிட்டால் இன்னொரு காலத்தில் இத்தகைய ஊழல்களுக்கு

[திரு. எம். ஏ. லத்திப்], [1974 ஆகஸ்ட் 26

விரோதமாக, கடமையற்ற உணர்ச்சிகளுக்கு விரோதமாக, அல்லது நேரடியாக துறைக்கு விரோதமாக மக்கள் ஆர்த்தெழுவார்கள். அவர்களுக்கு முன்னால் நாம் நம்மைத் தடுத்துக் கொள்ள வேண்டும். கடமையைச் செய்து உரிமையைப் பெறவேண்டும். உரிமைக்குப் போராட வேண்டும். அதே நேரத்தில், போராடுகின்ற அவர்கள் கடமையைச் செய்ய வேண்டும், இந்த மாற்றங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்காக சலுகை என்று குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். ரூ. 35 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், ஒரு உண்மையைச் சொல்கிறேன். அரிசனக் காலனிகளிலே போய் பார்ப்போமானால் 100-க்கு 5 காலனிகளில் கூட விளக்கு இருக்கிறது என்று திட்டமிட்டு சொல்ல முடியாது. இந்த நிலைமையிலே அரிசனக் காலனிகள் இருந்து கொண்டிருக்கின்றன. அரிசனக் காலனிகளிலே மின்சார விளக்குகள் எரிக்கத்தான் இந்தத்தொகை செலவு செய்யப்படுகிறது. இன்றைக்கு ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இருக்கிற நிதி ஆதாரங்கள் மிகமிகக் குறைந்து வருகிறது. இவ்வளவு குறைந்த நிதி ஆதாரங்களை உடைய உள்ளாட்சி நிறுவனங்கள், மின்சாரக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் இருக்கிறார்கள். பல்புகள் இருந்தாலும், இல்லாவிட்டாலும் பஞ்சாயத்து யூனியன்களிடத்திலிருந்து கட்டாயமாக அவர்கள் தொகையை வசூலிக்கிறார்கள் துறையினர். பஞ்சாயத்துகளிடமிருந்து கட்டாயமாக வசூலித்து விடுகிறார்கள். (மணி அடிக்கப்பட்டது) 3 நிமிடங்கள் கொடுங்கள், முடித்து விடுகிறேன்.

நேரம் போவதே தெரியமாட்டேனென்கிறது. மின்சாரத் துறையல்லவா? அதனால்தான். அரசாங்கம் ஒரு ஜி.ஓ. போட்டிருக்கிறது. அங்கே இருக்கிற ஒரு குறையைப் பற்றி நான் சொல்கிறேன். அரசாங்கம் தெளிவாக ஜி.ஓ. போட்டிருக்கிறது. அரிசனக் காலனிகளுக்காகச் செலவிடப்பட்டிருக்கிற கட்டணத்தை அரசின் நலத்துறையிடம் வசூலிக்க வேண்டும். அதற்காகத்தான் ரூ. 35 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறார்கள். ஆனால், கடுமையாக, நிதிப் பற்றாக்குறை இருக்கிற ஊராட்சிமன்றங்களிடம் இருந்து நீங்கள் கடுமையாக, கட்டாயமாக வசூலிக்கிறீர்கள் என்று சொன்னால், இது பகல் கொள்ளையாக இருக்கும். நான் திருப்பித் திருப்பிச் சொல்கிறேன். நீங்கள் வசூலிக்கக் கூடாது,



1974 ஆகஸ்ட் 26] [திரு. எம். ஏ. லத்திப்]

நலத் துறையிடமிருந்துதான் வசூலிக்கவேண்டுமென்று சொன்னாலும் நீங்கள் வசூலிப்பதில்லை. அப்படிக் கட்டாயமாக வசூலிக்கின்ற காரணத்தினால், மின்சாரத்தைக் கொடுக்காமல், பல்புகளைப் போடாமல், அரிசனக் காலனிகளிலே சென்று பார்க்காமல் உதாசீனம் செய்கிறார்கள். ஆகையினால் அரிசனக் காலனிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற கட்டணத்தை நலத் துறையிடமிருந்துதான் வசூலிக்க வேண்டும். அதற்காக தனி மீட்டர்களைப் பொருத்தி அசஸ்மெண்ட் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நிச்சயமாக சட்டத்திற்குப் புறம்பாக நடக்கிற இந்தக் காரியத்திற்கு மக்கள் ஒத்துழைக்க மாட்டார்கள் என்பதை உணர்ந்து அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்யவேண்டும்.

(பிற்பகல் 1-00)

பலர் பல பிரச்னைகளைப்பற்றிப் பேசியிருந்தாலும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் தெளிவாகவும் விரிவாகவும் பேசியிருந்தாலும் நமக்குக் கிடைக்கிற நேரம் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தினால் பல விஷயங்களைச் சொல்லாமல் விடுகிற மனக்குறையோடு என்னுடைய பேச்சை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற 1974–75 ஆம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தினுடைய நிதிநிலை அறிக்கையின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இந்த மன்றத்திலே என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரண்டு நாட்களாக இந்த நிதி நிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் பேசிய உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். வழக்கமாக அரசாங்கம் கொண்டுவருகிற நிதிநிலை அறிக்கை எதுவாக இருந்தாலும் ஆளுகின்ற தரப்பிலே இருக்கின்றவர்கள் பாராட்டிப் பேசுகின்ற வழக்கமும் எதிர்க் கட்சியிலே இருக்கின்றவர்கள் அதிலே இருக்கின்ற குறைபாடுகளையெல்லாம்

[திரு. க. உரோ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 26

சுட்டிக்காட்டுகின்ற முறையும் இந்த மன்றத்திலே இருந்தாலும் கூட இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் பலர் பேசியிருந்தாலும்கூட சிலர் குறைகளை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆளுங்கட்சிக்குத் துணைபோகின்ற தோழமைக் கட்சிகளும் தங்களுடைய மனக் குமுறல்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் எடுத்துரைக்கின்ற கருத்துக்களைத் தொடங்கிவைத்த டாக்டர் ஹாண்டே அவர்கள் பல்வேறு குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்திலே ஆதாரங்களோடு சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கூறிய சில குற்றச்சாட்டுகளை நான் ஆதாரங்களோடு இங்கே எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சில குற்றச்சாட்டுக்களை நாங்கள் இந்த மன்றத்திலே சொல்கிறோம் என்றால் ஏதோ மின்சார வாரியத்தின் மீது களங்கம் சுமத்தவேண்டும் என்பதற்காக அல்ல, ஏதோ சேற்றை வாரி வீசவேண்டுமென்ற எண்ணத்தினால் அல்ல, பொறுப்புள்ள எதிர்கட்சியிலே இருக்கின்ற நாங்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளின் மேல் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார் என்ற நம்பிக்கையிலேதான் நாங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

நம்முடைய மின்சார வாரியத்திலே டெக்னிக்கல் மெம்பர் ஒருவர் இருந்துகொண்டிருக்கிறார். அவர் கடந்த 6 மாத காலமாக விடுமுறையிலே இருந்துகொண்டிருக்கிறார். அவருக்குப் பதிலாக ஒரு மாற்று உறுப்பினர், ஒரு டெக்னிக்கல் மெம்பர் போடப்படவில்லை இதுவரையிலே. எதற்காகப் போடவில்லை? ஒருவேளை டெக்னிக்கல் மெம்பர் பதவியே இந்த வாரியத்திற்குத் தேவையில்லை என்ற அடிப்படையிலோ என்னவோ, அது வாரியத்திலே உள்ளவர்களுக்குத்தான் தெரிந்திருக்கமுடியும். அவர் விடுமுறையிலே இருந்தாலும்கூட டெக்னிக்கல் மெம்பர் என்ற முறையிலே மின்சார வாரியம் சம்பந்தப்பட்ட முக்கியமான ஒப்பந்தங்களிலே அவர் கையெழுத்துப் போடுவது—வீட்டிலிருந்து கொண்டே அவற்றிற்கு கையெழுத்துப்போட்டுக்கொண்டிருப்பது —எந்தவகையிலே பொருந்தும் என்று கேட்கவிரும்புகிறேன். ஒரு டெக்னிக்கல் மெம்பர் விடுமுறையிலே போயிருக்கிறார் என்றால் நியாயத்தின் அடிப்படையிலே, நேர்மையின் அடிப்படையிலே,



974 ஆகஸ்ட் 26] [திரு. க. உரோ. எட்மண்ட்]

நீதியின் அடிப்படையிலே வேறு ஒரு டெக்னிக்கல் மெம்பர் போட வேண்டாமா? விடுமுறையிலே இருப்பவரை வீட்டிலே வைத்துக்கொண்டு சில முக்கியமான மின்சார வாரிய ஒப்பந்தங் களிலே கையெழுத்துப் போடுவதற்கு மாத்திரம் வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்.

வீட்டிலே உட்கார்ந்துகொண்டிருக்கின்ற விடுமுறையிலே இருக்கின்ற அந்த டெக்னிக்கல் மெம்பர் பிரதம பொறியாளர் போடுகிற உத்தரவுகளையெல்லாம் மீறுகிற அளவிற்கு இருக்கிறார் கள் என்றால் எதற்காக? ஒருவேளை அமைச்சர் அவர்கள் கேட்க லாம், நீங்கள் சொல்வதற்கு ஆதாரங்களைச் சொல்லமுடியுமா என்று. நாங்கள் கேள்விப்படுகிறோம், நல்ல இடத்திலிருந்து வந்த தகவல்களைத் தந்துகொண்டிருக்கிறோம், நீங்கள்தான் அதை கவனித்து பதில் சொல்லியாகவேண்டும்.

ஆனால் ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் நீங்கள் ஆதாரம் கேட்டால் நான் இந்த நேரத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் சொல்லிய கருத்தைத்தான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அறிஞர் அண்ணா அவர்கள் 1963 ஆம் ஆண்டிலே மாநிலங்கள் அவையிலே டெல்லியிலே பேசும்பொழுது மத்திய அரசாங்கத்தின் மீது குற்றச்சாட்டுகளை அள்ளிவீசுகின்ற நேரத்திலே அன்றைய தினம் சொல்லியிருக்கிறார்கள், எதிர்கட்சியிலே உள்ள நாங்கள் சொல்கிற குற்றச்சாட்டுகளுக்கு நீங்கள் ஆதாரம் கேட்டால் ஆதாரங்கள் கொடுக்கக்கூடிய அளவில் எதிர்க்கட்சிகளுக்கு திறமையிருந்தால் அல்லது ஆதாரங்கள் எதிர்க்கட்சிகளுடைய கைகளில் இருக்குமானால் அதை வைத்துக்கொண்டு நீதி மன்றங் களுக்குச் சென்றிருப்போமே தவிர, சட்ட மன்றத்திலே பேசிக் கொண்டு இருக்கமாட்டோம் என்று சொன்னார்கள். ஆதாரங்களை கைகளிலே வைத்துக் கொண்டு இருந்தால் அமைச்சரவையை நீதி மன்றத்திற்குத்தான் இழுத்துச்செல்வோமே தவிர இங்கே பேசிக்கொண்டிருக்கமாட்டோம் என்று 1963 ஆம் ஆண்டிலே அங்கே பேசியிருக்கிறார்கள். நான் அந்தக் கருத்தைத்தான் இந்த நேரத்திலே ஆளுங்கட்சியினருக்கும் அமைச்சரவைக்கும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆதாரம், ஆதாரம் என்று கேட்டால் என்னுடைய கைகளிலே இருந்தால் மின்சார வாரியத்தைப்பற்றி இந்த மன்றத்திலே பேசிக் கொண்டிருக்க மாட்டேன், அங்கே நடந்துகொண்டிருக்கின்ற ஊழல்களைப்பற்றிய ஆதாரங்கள் கைகளில் இருந்தால் இந்த அமைச்சரவையை நான் நீதிமன்றத்திற்கு இழுத்துச் சென்றிருப்பேன் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஐந்தாண்டுகளுக்கு முன்னதாக இந்த அரசினுடைய எண்ணம் இந்த வாரியத்திலே ஒரு பிரதம எஞ்சினியர் இருந்தால் போதும் என்ற நிலைமைதான் இருந்தது. ஆனால் இப்போது 5 சீப் எஞ்சினியர்கள் போட்டிருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, டெக்னிக்கல் மெம்பர் என்று போட்டிருக்கிறார்கள். இந்த டெக்னிக்கல் மெம்பர் போர்டு மீட்டிங் நடக்கிற காலத்திலே, வாரியக் கூட்டங்கள் நடைபெறும்போது கலந்துகொள்கிறார். இப்பொழுது விடுமுறையிலே இருக்கிறார். அவருக்குப் பதில் யார் கலந்துகொள்கிறார் என்றால் ஒரு ஜூனியர்மோஸ்ட் சிப் எஞ்சினியர், அதாவது குறைந்த சர்விசுள்ளவர் கலந்துகொண்டிருக்கிறார். எதற்காக சி.இ.-க்கள் இருக்கிறார்கள், அவர்களில் சீனியர்மோஸ்ட் சீப் எஞ்சினியர் கலந்துகொள்ள வேண்டாமா? ஜூனியர்மோஸ்ட் எஞ்சினியர் கலந்துகொள்ளக்கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் 5 சீப் எஞ்சினியர்களும் குமுறிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் உங்களிடம் வந்து சொல்லவில்லை. அவர்கள் உங்களிடம் வந்து குறைபடவில்லை. அவர்கள் உங்களிடம் வந்து புகார் சொல்லவில்லை. உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருக்கிறார்கள்.

சில மாதங்களுக்கு முன்னால் நம்முடைய மின்சார வாரியத்தினுடைய தலைவர் அவர்களும், நம்முடைய மாநிலத்தின் தலைமைச் செயலாளர் அவர்களும் மேற்பார்வை பொறியாளர்கள் கூட்டத்திலே கலந்துகொண்டிருக்கிறார்கள். அவர்கள் கலந்து கொள்கிற நேரத்திலே அங்கே வருகை தந்திருந்த மேற்பார்வை பொறியாளர்கள் எல்லாம் ஒட்டுமொத்தமாக ஒரேமனதாக ஒரே ஒரு குறைபாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியம் தன்னுடைய பணிகளை நல்ல முறையிலே நடத்தவேண்டுமென்றால் மின்சார வாரியப் பணியாளர்களிடையே உள்ள கட்டுப்பாடற்ற





தன்மையை, இன்டிஸிப்ளினை நீக்கியாகவேண்டும், அப்படி நீக்குவதற்கு இந்த வாரியத்திலேயுள்ள உயர்மட்ட அதிகாரிகள் ஒத்துழைப்பு தரவேண்டும், அமைச்சர் ஒத்துழைப்பு தரவேண்டும். கீழ் மட்ட அலுவலர்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அவர்களுக்கு கட்டுப்பாட்டு உணர்ச்சியை ஊட்டிவிட, உருவாக்கிவிட ஒத்துழைப்பு தரவேண்டும், அப்பொழுதுதான் இந்த வாரியத்தை நல்லமுறையிலே நடத்தமுடியும் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கூட்டத்திலே கலந்துகொண்ட நம்முடைய சீப் செகரட்டரி அவர்கள் அந்த உத்திரவாதத்தை இந்த அரசாங்கம் கொடுக்கமுடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். எதற்காக? அரசாங்கம் அந்த அளவிற்குப் பயப்படுகிறது? வாரியத்திலே வேலை செய்கிறவர்கள் இன்டிஸிப்ளினாக நடந்தால் அவர்களைக் கட்டுப்படுத்த உத்திரவாதம் கொடுத்தால் கீழ்மட்டத்திலே உள்ளவர்கள் எங்கே அரசாங்கத்திற்கு எதிராகத் திரும்பிவிடுவார்களோ என்ற பயத்தின் அடிப்படையிலேதான் அவர்கள் அப்படிப்பட்ட உத்திரவாதத்தைக் கொடுக்க முடியாது என்று அங்கே சொல்லியிருக்கிறார்கள். அந்த அளவிற்கு இன்றைக்கு கட்டுப்பாடு இல்லாமல் இருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் சார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் குறிப்பிடும்பொழுது போர்டு மீட்டிங்கில் கலந்து கொள்வதற்கு ஜூனியர்மோஸ்ட் எஞ்சினியர் சென்றார் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். சீஃப் எஞ்சினியர்களில் ஜூனியர்மோஸ்ட் எஞ்சினியர், சீனியர்மோஸ்ட் எஞ்சினியர் என்று இருப்பதாகத் தெரியவில்லை. எல்லோருமே ஒரே ஈக்வல் ரேங்க். அப்படியிருக்கும்பொழுது இது எப்படி குற்றச்சாட்டாகும்? முதலமைச்சரவர்கள், கச்சத்தீவு பிரச்சனையைப் பற்றிப் பேசுவதற்காக எதிர்க்கட்சிகளின் கூட்டத்தைக் கூட்டிய நேரத்தில் அன்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அவர்களுக்கும் அழைப்பு அனுப்பியிருந்தார்கள். அதற்கு அன்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வராமல் அவருக்குப் பதிலாக அட்லீஸ்ட் கட்சியின் சீனியர்மோஸ்ட் அங்கத்தினர் திரு. எட்மண்ட் அவர்களை அனுப்பியிருக்கலாம், ஆனால் ஜூனியர்மோஸ்ட் அங்கத்தினராக உள்ள திரு. அரங்கநாயகத்தை அனுப்பியிருந்தார்களே, அதைவிடவா இது குறைவாக இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 26

**திரு. க. உரொ. எட்மண்ட் :** திரு. ஏ. எம். இராஜா அவர்கள் என்னை சீனியர்மோஸ்ட் உறுப்பினர் என்றும், திரு. அரங்கநாயகம் அவர்களை ஜூனியர்மோஸ்ட் உறுப்பினர் என்றும் சொல்லி எங்களுக்கிடையே பிளவுகளை உருவாக்க வேண்டுமென்று காணுகின்ற கனவு நிச்சயமாக நடக்காது என்பதை 'மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன். கச்சத்தீவு பிரச்சனையைப்பற்றி, சம்பந்தம் இல்லாத காரியத்தை இழுத்திருக்கிறார்கள். அந்தக் காரணத்தினால் . . . .

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) :** டைம் இல்லை. விஷயத்திற்கு வாருங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட் :** டைம் இல்லை என்றால் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டாமா ? அவர் சொன்னது புரொசீடிங்ஸில் இருக்கிறது. அது புரொசீடிங்ஸில் போகாமல் இருந்தால் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

கச்சத்தீவு பிரச்சனை சம்பந்தமாக நம்முடைய முதலமைச்சரவர்கள் சென்னையிலே கூட்டத்தைக் கூட்டியிருந்த நேரத்தில் நான் திருச்சியிலே மாநாட்டில் கலந்துகொண்டிருந்தேன். ஆகவே, என்னுடைய சம்மதத்தின்பேரில்தான் எங்கள் தலைவர் திரு. அரங்கநாயகம் அவர்களை அனுப்பி வைத்தார்கள் என்பதை அருமை நண்பர் திரு. இராஜா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றும் சொன்னார்கள். 5 சீஃப் எஞ்சினியர்களில் யாரும் ஜூனியர்மோஸ்ட் என்று இருப்பதாகத் தெரியவில்லை என்று கூறினார்கள். என்னுடைய வாதம் அது அல்ல. டெக்னிக்கல் மெம்பர் போர்டு மீட்டிங்கிற்குப் போய்க்கொண்டு இருந்தார். அவர் 6 மாதமாக விடுமுறையில் இருக்கிறார். 6 நாட்கள் அல்ல, 6 வாரங்கள் அல்ல, 6 மாதங்கள் விடுமுறையில் இருக்கிறார்கள். போர்டு மீட்டிங்கிற்குச் செல்ல வேண்டியவர் விடுமுறையில் இருக்கிறார் என்றால் போர்டு மீட்டிங்கிற்குப் போவதற்கு அவருக்குப் பதிலாக இன்னொரு டெக்னிக்கல் மெம்பரைப் போட்டிருக்கக் கூடாதா என்பதுதான் என்னுடைய வாதமே தவிர, அதை விட்டுவிட்டு ஏதோ புதிதாக வாதத்தை எழுப்பிக்கொண்டிருக்கிறார்கள்.



1974 ஆகஸ்டு 26] [திரு. க. உரொ. எட்மண்ட்]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, ஒழுங்கின்மை; கட்டுப்பாடின்மை பற்றி இந்த மன்றத்திலே சொன்னேன். முன்பு இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஆளுங்கட்சியிலிருந்து தங்கள் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், காஞ்சிபுரத்தில் என்ன நடந்திருக்கிறது என்று. காஞ்சிபுரம் மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் பணியாற்றிய 7 கணக்கர்களை வேறிடத்திற்கு மாற்றல் செய்திருக்கிறார்கள். மாற்றப்பட்ட அவர்களுடைய இடத்திற்கு வேறு 7 கணக்கர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி நியமிக்கப்பட்டவர்கள் வேலையில் சேருவதற்கு முன் வந்திருக்கிறார்கள். ஆனால் மாற்றப்பட்டவர்கள் அதை விட்டு வெளியேறத் தயாராக இல்லை. அதனால் 7 பேர் பார்க்க வேண்டிய வேலையை 14 பேர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியும் அந்த வேலைகள் அங்கே நடக்கவில்லை. 7 பேர் செய்யும் வேலையை 14 பேரும் சேர்ந்து செய்ய முடியாத நிலைமை உருவாகியிருக்கிறது. மேல்மட்ட அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையையும் அவர்கள்மேல் எடுக்க முடியவில்லை. இதிலுள்ள வேதனை என்னவென்றால், 14 பேர் வேலை செய்திருக்கிறார்கள், அந்த 14 பேருக்கும் சம்பளம் கொடுத்திருக்கிறார்கள் என்றால் எந்த அளவிற்குக் கட்டுப்பாடு இருக்கிறது? ஆட்சியிலே இருப்பவர்கள், அதிகாரத்திலே இருப்பவர்கள் உத்தரவைப்போட்டு அதிகாரிகளை மாற்றக் கூடியவர்கள், நினைத்தால் ஒரு வினாடியில், ஒரு நிமிடத்திலே மாற்றுகிறீர்கள். அப்படியிருக்க, நீங்கள் போட்ட உத்தரவைப் புறக்கணித்துவிட்டு, அவமதித்து, வெளியே போக மாட்டேன் என்று சொல்கிறார்கள், சேர வேண்டியவர்களைச் சேர முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனையும் நடந்தபிறகு ஒரு மின்சாரவாரியம் தேவையா? இதற்காக ஒரு வாரியம் தேவையா ? இத்தனை எஞ்சினியர்கள் தேவையா ? ஒரு அமைச்சர் தேவையா ? இந்த மின்சார வாரியத்தின்மீது மூன்று நாட்கள் இந்த மன்றத்திலே விவாதம் நடத்த வேண்டுமா ? 234 உறுப்பினர்களுக்கு தினமும் 35 ரூபாய் படி என்று கொடுக்க வேண்டுமா என்பதை அமைச்சரவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். ஏனென்றால் அந்த அளவிற்கு நிலைமையிருக்கிறது.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 26

இன்னும் பல ஆதாரங்களை வைத்திருக்கிறேன். எங்கெங்கு குற்றங்கள் நடந்திருக்கின்றன, எங்கெங்கு கட்டுப்பாடற்ற தன்மை நடந்திருக்கிறது என்பதையெல்லாம் வைத்திருக்கிறேன். ஆனால் நேரம் இல்லை. இத்தனையையும் படிக்க வேண்டுமென்றால் எனக்கு குறைந்தபட்சம் 2 மணி நேரம் தேவைப் படுகிறது. அந்த அளவிற்கு ஆதாரம் வைத்திருக்கிறேன். அவைகளில் ஒன்றிரண்டை மட்டும் நான் வாசிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஆதாரங்களை அமைச்சரிடம் கொடுத்து விடுங்களேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: இரண்டை மட்டும் படிக்கிறேன்.

On 9th August 1972 at Darapuram 600 members of the Revenue Unit were arrested and kept in custody for three days; no action was taken; pay for the three days on which the workmen were in custody was also paid.

இந்த அளவிற்கு பல ஆதாரங்களை வைத்திருக்கிறேன். எந்த அளவிற்கு மின்சார வாரியம் கட்டுப்பாடில்லாத நிலைமையில் இருக்கிறது என்பதற்கு . . .

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, ஆதாரமே இல்லை என்று முதலில் சொன்னார்கள். இப்பொழுது ஆதாரம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி ஆதாரம் இருந்தால் கோர்ட்டுக்கு போவேன் என்று சொன்னதுபோல் கோர்ட்டிற்குப் போயிருக்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட்: எல்லாவற்றிற்கும் ஆதாரம் வைத்திருப்பதாக நான் சொல்லவில்லை. ஒருசிலவற்றிற்கு ஆதாரம் வைத்திருக்கிறேன், ஒருசிலவற்றிற்கு ஆதாரம் இல்லை. இந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு யார் மேல் வழக்கு தொடர்வது? கீழே வேலை பார்க்கிறார்கள், அவர்களுக்கு மேலே மேலதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு மேலே அமைச்சர் ஒருவர் மாதத்திற்கு 1,000 ரூபாய் அலவன்ஸ் என்றெல்லாம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஊரைச் சுற்றி வந்தால் பயணப் படி கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அவர்களாலேயே கட்டுப் படுத்த முடியவில்லை. நீதிமன்றத்திற்குப் போய் எப்படிக்



1974 ஆகஸ்ட் 26] [திரு. க. உரொ. எட்மண்ட்]

கட்டுப்படுத்த முடியுமென்று மதிப்பிற்குரிய நண்பர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு நிலைமைகள் இங்கே நடக்கிறது.

இவைகளையெல்லாம் பார்க்கும்பொழுது மின்சார வாரியம் நடக்கிறதா அல்லது மின்சார வாரியத்திற்குப் பதிலாக ஒரு பைத்தியக்கார விடுதி நடந்துகொண்டிருக்கிறதா என்ற சந்தேகம் எழுகிறது. அந்த அளவிற்கு, You are ridiculing the Board. சிரிப்புக்கு ஆளாக்கியிருக்கிறீர்கள், அந்த அளவிற்கு நிலைமைகள் இருந்துகொண்டு இருக்கின்றன.

அதுமட்டுமல்ல. அடுத்தாற்போல் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டால் நிலக்கரி வாங்கிக்கொண்டிருந்தார்கள். நிலக்கரி வந்து சேருகின்ற இடத்திலே எவ்வளவு நிலக்கரி சேர்ந்திருக்கிறதோ அதற்கான பணத்தைத்தான் மின்சார வாரியம் அன்றைக்குக் கட்டிக் கொண்டிருந்தது. வேகன்களில் நிலக்கரி வந்துகொண்டிருக்கிறது என்றால் எத்தனை வேகன்கள் இங்கே வருகிறதோ அல்லது எத்தனை டன்கள் வருகிறதோ அதற்கான பணத்தை மட்டுமே மின்சார வாரியம் முன்னாலே கொடுத்துக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட நிலைமையில்கூட 25 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நிலக்கரி காணாமல் போயிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே வந்து சேர்ந்த நிலக்கரிக்குத் தான் வாரியம் பணம் கொடுக்க வேண்டுமென்று இருந்தது. அப்படியிருந்தும் 25 இலட்சம் பெறுமானமுள்ள நிலக்கரி காணாமல் போயிருக்கிறது. அது இரயில்வேயின் நிர்வாகத் திறமையின்மையாக இருக்கலாம் அல்லது வேகன்கள் திசை மாற்றப்பட்டிருக்கலாம். எவ்வளவோ காரணங்கள் இருக்கலாம். இவ்வளவு நடந்திருக்கிறது. ஆனால் இன்றையதினம் எந்த சீர்திருத்தத்தைச் செய்திருக்கிறார்கள் என்று பார்த்தால் பரிதாபமாகக் கூட அல்ல, வேடிக்கையாக இருக்கிறது, வேதனையாக இருக்கிறது. இன்றைக்கு என்ன ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள்? Agreement on telex இங்கேயிருந்து நிலக்கரிச் சுரங்கத்திற்கு டெலக்ஸ் கொடுக்க வேண்டும், எங்களுக்கு நூறாயிரம் வேண்டும் என்று கொடுக்கவேண்டும். அவன் என்ன விலை சொல்கிறானோ அத்தனை பணத்தையும்

இங்கே கட்ட வேண்டும். முன்பிருந்த நிலைமை வந்து சேர்ந்த நிலக்கரிக்குத்தான் பணம் கட்டவேண்டும். அப்பொழுது 25 இலட்சம் ரூபாய் பெறுமதிப்புள்ள நிலக்கரி காணாமல் போயிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது இந்த நிலைமை உருவானால் என்ன ஆகும்? அங்கே நிலக்கரிச் சுரங்கத்திலேயுள்ள சாதாரண குமாஸ்தா டெலக்ஸ் செய்தி கொடுப்பான் மின்சார வாரியத்திற்கு, நூறாயிரம் டன் நிலக்கரி வாங்கியிருக்கிறது, இத்தனை இலட்சம் ரூபாய் அனுப்ப வேண்டும் என்று. இவர்கள் அனுப்புவார்கள். ஆனால் அங்கேயிருந்து ஐம்பதாயிரம் டன்தான் வரும். இதனால் என்ன பிரச்னைகள் எழும்பியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். மேலேயிருந்து கீழே இறங்கக் கூடாது, கீழேயிருந்து மேலே போகப் பாருங்கள்.

மணி அடிக்காதீர்கள். இன்னும் நிறையப் பேச வேண்டியிருக்கிறது. 20 நிமிஷத்திற்குள்ளேயே மணி அடித்து விட்டீர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அரை மணி கேட்டீர்கள். இன்னும் ஐந்து நிமிஷத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. க. உரொ. எட்மண்ட்** : இன்னும் ஐந்து நிமிஷத்தில் முடித்து விட வேண்டுமென்றால் இப்போதே உட்கார்ந்து விடுகிறேன். நான் பேசவில்லை. குறுக்கீடுகள் இருந்தன. திரு. ராஜா குறுக்கிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : குறுக்கீடுகள் இல்லை.

• **திரு. க. உரொ. எட்மண்ட்** : அந்த அளவுக்கு நிலைமைகள் மின்சார வாரியத்தில் இருக்கின்றன. நம்முடைய அமைச்சர் அவர்கள் வாரியத்தின் நிதிநிலை பற்றி அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். டிப்ரிசியேஷன் வால்யூ—தேய்மானச் செலவைக் கூடச் சரிக்கட்ட முடியவில்லை, வாங்கிய கடனுக்கு வட்டி கொடுக்க முடியவில்லை என்ற மோசமான நிலையில் மின்சார வாரியம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

ஆனால் அவர்கள் எந்த அளவுக்கு ஆடம்பரமான செலவுகளைச் செய்கிறார்கள்? அதனை நான் இந்த மன்றத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கனவே, கான்பரன்ஸ் ஹால்—கூட்டம் நடக்கிற இடத்திற்கு ஏர் கூலர் வைத்திருக்கிறார்கள்.



இப்போதுள்ள நிதிநிலை நிலைமையில் அதனை ஏர் கண்டிஷன் பண்ண வேண்டுமென்ற புதிய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அதோடு சேர்மன் அறை, டெக்னிகல் மெம்பர் அறைகளை ஏர் கண்டிஷன் செய்யவும் திட்டம் போட்டிருக்கிறார்கள். இங்கு முதலமைச்சர் அறைக்கே ஏர் கண்டிஷன் கிடையாது. 234 மெம்பர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கே ஏர் கண்டிஷன் அறை கிடையாது. நம்முடைய சீப் செக்ரட்டரிக்குக் கிடையாது. இன்று மின்சார வாரியம் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. ஏராளமான திருட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோடிக் கணக்கில் பாக்கி இருந்து கொண்டிருக்கிறது. வட்டி கட்ட முடியவில்லை. தேய்மானச் செலவையே சந்திக்க முடியவில்லை. எந்த அடிப்படையில் நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இந்த குளு குளு அறைக்குச் சம்மதித்தார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை.

நம்முடைய மின்சார வாரியத் தலைவர், அக்கவுண்ட்ஸ் மெம்பர், டெக்னிகல் மெம்பர் ஆகியவர்களுக்கு அம்பாசிடர் கார்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் அலுவலகத்திலிருந்து பணியாற்றுகிறவர்கள். அந்த அம்பாசிடர் கார்களிலும் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கார்கள் என்று தெரியக்கூடிய அளவுக்கு பெயர் எழுதப்படவில்லை. அரசாங்க ஜீப்புகளில்கூட 'தமிழ்நாடு அரசு', 'பாரஸ்ட் டிப்பார்ட்மென்ட்', 'டிபார்ட்மென்ட் ஆப் அக்ரிகல்சர்' என்று எழுதி இருப்பார்கள். ஆனால் மின்சார வாரியக் கார்களிலே அந்தக் கார்கள் மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கார்கள் என்று தெரிந்துகொள்ளக் கூடிய அளவுக்கு ஒன்றும் எழுதப்படவில்லை. இது எழுதப்படாததால் என்ன நடக்கிறது என்றால், அந்தக் கார் இங்கிருந்து குற்றாலத்திற்குப் போகிறது, இங்கிருந்து மைசூருக்குப் போகிறது அல்லது ஊட்டிக்குப் போகிறது, கொடைக்கானலுக்குப் போகிறது. அட்மினிஸ்ட்ரேட்டிவ் சீஃப் எஞ்சினியர்—வெளியே சுற்றிப் பார்க்கும் வேலை கிடையாது. அவருக்குக் கூட ஒரு காரைக் கொடுத்திருக்கிறார்கள்.

இவற்றுக்கெல்லாம் மேலாக மின்சார வாரியத்தில் ஒரு குளு குளு கார் இருக்கிறது. இவர்கள்தான் அன்று எதிர்க்கட்சியிலே இருந்த நேரத்திலே 'கும்பி எரியுது, குடல் கருகுது கோலேந்தி

களை குளு குளு ஊட்டி உங்களுக்குக் கேடா?' என்று கேட்டார்கள். (குறுக்கீடு: நீங்களும் சேர்ந்துதான் சொன்னீர்கள்) நாங்களும் சேர்ந்துதான் சொன்னோம். அதனால்தான் இன்று கண்டிக்கிறோம். இதற்கு லாலி பாடவில்லை, இன்றைக்கு வக்காலத்து வாங்கவில்லை. 'கும்பி எரியுது, குடல் கருகுது கோலேந்திகளே குளு குளு ஊட்டி ஒரு கேடா' என்று பேசியவர்கள் ஆட்சியிலே, அப்படிக் கேட்டவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர் இந்த அமைச்சர் பொறுப்பிலே இருக்கிற காலத்திலே தான் மின்சார வாரியத்திற்கு ஒரு குளு குளு கார். எதற்காக என்று கேட்டால் 'ஃபார் யூஸ் ஆப் வி.ஐ.பிஸ்' என்று தப்பித்துக் கொள்ளுகிறார்கள். * * *

**திரு. க. உரோ. எட்மண்ட்:** அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொள்வதால் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * * என்று பேசிய பேச்சுக்கள் நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறவில்லை. அதைப் பத்திரிகையில் வெளியிட வேண்டாம்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** எதற்கெடுத்தாலும் ஆதாரம் கேட்காதீர்கள். உங்களுக்குக் கீழே வேலை பார்ப்பவர்களே உங்களுக்குக் கட்டுப்பட்டு அடங்கி நடக்கமாட்டேன் என்கிறார்கள். நீங்கள் எங்களிடம் ஆதாரம் கேட்கிறீர்கள்.

**திரு. கு. காமாட்சி:** எங்கள் பக்கத்தில் இருந்தவர்களே எங்களுக்கு அடங்கி நடக்கவில்லை.

(மணி அடிக்கப்பட்டது.)

**திரு. க. உரோ. எட்மண்ட்:** மணி அடிக்காதீர்கள். 1¾ மணிக்கு முடித்து விடுகிறேன். எங்கள் கட்சியில் நான் மூன்றாவது ஆள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுவே உங்கள் கட்சிக்கு அதிகம்.

**திரு. க. உரோ. எட்மண்ட்:** நாங்கள் இப்போது பிரதான எதிர்க்கட்சி. தாங்கள் பழைய ஞாபகத்திலேயே இருக்கிறீர்கள். இப்போது பிரதான எதிர்க்கட்சியாக மாறி இருக்கிறோம்.

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.**





அடுத்து, இப்போது மின்வாரியத்தில் இருக்கும் அக்கவுண்ட்ஸ் மெம்பர் திரு. ஷியாம் சுந்தர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். அது மாத்திரமல்ல, அவருக்குத் தமிழ் தெரியாது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உடனே "நீங்களும் எங்களோடு சேர்ந்து கொண்டீர்கள்; மற்ற மாநிலத்தில் இருந்து வந்தவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக்கூடாது என்று சொல்லுகிறீர்கள்" என்று சொல்லுவார்கள். அப்படிச் சொல்ல வேண்டாம். நாங்கள் அண்ணா அவர்கள் கொள்கையில் இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறோம். தமிழ் மாநிலம், கர்நாடக மாநிலம் என்று பிரித்துப் பேசிக் கொண்டிருக்கவில்லை. திரு. ஷியாம் சுந்தர் கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். அவருக்குக் கன்னடந்தான் தெரியுமே தவிர, தமிழ் தெரியாது. அவரிடம் கொடுக்கப்பட்ட பொறுப்பு என்ன என்றால் "லேபர் காண்ட்ராக்ட்ஸ் அக்ரிமென்ட்" அவர்தான் போடவேண்டும். தொழிலாளர்களோடு அவர் பேச வேண்டும். தமிழ் தெரியாதவர் தொழிலாளர்கள் தொடர்பு கொண்ட பிரச்சினைகளிலே, ஒப்பந்தங்களிலே முடிவு காண எந்த வழியில் பயன்படுவார் என்பதை இந்த நேரத்தில் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக திரு. ஷியாம் சுந்தரை கர்நாடக மாநிலத்திற்கு விரட்டிவிடுங்கள் என்று சொல்லவில்லை. அவருக்குப் பதிலாக தமிழ் தெரிந்த ஒரு அதிகாரியைப் போட கூடியவிரைவில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சமீபத்தில் பல ஜூனியர் என்ஜினியர்கள் மேல்நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் மின்சார வாரியத்தின் செலவில். பல கோடி ரூபாய் இந்த வாரியத்திலிருந்து செலவழிக்கப் படுகிறது. அனுப்ப வேண்டாமென்று சொல்லவில்லை. நம்முடைய நாட்டில் இருக்கும் திறமையுள்ள இளம் பொறியாளர்கள் வெளிநாட்டுக்குப் போகவேண்டும். அங்கு போய் தனிப்பட்ட முறையில் (ஸ்பெஷலைசேஷன்) படிக்க வேண்டும். படித்துவிட்டு வரட்டும். அப்படி பயிற்சி பெற்று தாயகம் திரும்பிய பின்னால் அவர்களை இந்த வாரியம் ஒழுங்காகப் பயன்படுத்திக் கொள்கிறதா என்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

உதாரணத்திற்கு இரண்டை மாத்திரம் சொல்லுகிறேன். நம்முடைய மின்சார வாரியத் தலைவருக்குத் தனி உதவியாளராக இருக்கின்ற மதிப்பிற்குரிய திரு. சிக்கோபா அவர்கள் பிரான்ஸ்

1974 ஆகஸ்ட் 26] [திரு. க. உரொ. எட்மண்ட்]

நாட்டுக்குப் போய் வந்திருக்கிறார்கள்—மின்சார வாரியத்தின் செலவில். தனியாக சிறப்புக் கல்வியைக் கற்று வந்திருக்கிறார்கள். அவருடைய அறிவு இந்த வாரியத்தை வளர்ப்பதிலே, வாரியத்திலே இருக்கும் குறைகளைக் களைவதிலே பயன்படுத்துவதற்குப் பதிலாக அவரை பி.ஏ. டு சேர்மன் என்ற அளவிலே போட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-30)

அடுத்தாற்போல் திரு. தியாகராஜன் எக்சிக்யூட்டிவ் என்ஜினியர். அவர் ஸ்விட்சர்லாந்த் போய் வந்திருக்கிறார். இதே வாரியத்தின் செலவில் அவர் ஸ்விட்சர்லாந்து போய் வந்திருக்கிறார். தனிப்பட்ட கல்வி படிப்பதற்காக போய்விட்டு வந்திருக்கிறார். அவரை எங்கே போட்டிருக்கிறார்கள் என்றால் பர்ச்சஸ் சாமான்கள் வாங்குவதற்காக. மின்சார வாரியத்திற்குண்டான சாமான்களை வாங்குவதற்காக யாரைப் போட்டிருக்கிறார்கள் என்றால் ஸ்விட்சர்லாந்த் நாட்டுக்குப் போய் தனிப்பட்ட முறையில் படித்து வந்திருக்கிற திரு. தியாகராஜன் அவர்களைப் போட்டிருக்கிறார்கள். கொள்முதல் செய்வதற்கு ஸ்விட்சர்லாந்த் போய் படிக்க வேண்டுமா? இலங்கைக்குக் கூட போகவேண்டிய தேவையில்லை. அண்மையில் உள்ள கேரளா மாநிலத்திற்குக் கூடபோகவேண்டிய தேவையில்லை. கொள்முதல் செய்ய நீங்கள் அவர்களை படிக்க அனுப்பிய இடம் ஸ்விட்சர்லாந்த். அந்த அளவிற்கு நிலைமை இன்றையதினம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

அடுத்து, மின் கட்டணம் கூடுதல் கட்டணம் கொண்டுவரலாம் என்று அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். எண்ணிக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். மின்சாரக் கட்டணத்தை நீங்கள் கூட்டிப்போடுங்கள், நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் யாருக்கு போடவேண்டும்? தாங்கக்கூடியவர்கள் மீது போடவேண்டுமென்று அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலேயே சொல்லியிருக்கிறார்கள்.

Tap the rich and pat the poor.



1974 ஆகஸ்ட் 26] [திரு. க. உரொ. எட்மண்ட்]

என்று அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். பண்க்காரர்களிடமிருந்து கறந்து எடுக்கவேண்டிய அளவிற்கு எடுங்கள் என்று அண்ணா அவர்களே சொல்லியிருக்கிறார்கள். தயவுசெய்து நமது அமைச்சர் மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் அவர்கள் அதை மறந்துவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்கிறேன். சிமெண்ட் தொழிற்சாலையை எடுத்துக்கொள்வோம். சில ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கிலோ வாட்-க்கு வாங்கிய கட்டணம் ரூ. 150. அப்போது சிமெண்ட் விற்ற விலை, ஒரு டன்னுக்கு சொல்கிறேன் ரூ. 40. இன்று அதே சிமெண்டின் விலை டன்னுக்கு ரூ. 300 என்று விற்றுக் கொண்டிருக்கிறது. ஏறத்தாழ முன்பிருந்ததை விட எட்டு மடங்கு கூடுதலாக விற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் ரூ. 40-க்கு விற்றுக் கொண்டிருந்த காலத்தில் ஒரு கிலோ வாட்-க்கான மின்சாரக் கட்டணம் ரூ. 150. இன்று ரூ. 300 என்று விற்கும் போது ஒரு கிலோ வாட்-க்கான மின்சாரக் கட்டணம் எவ்வளவு இருக்கவேண்டுமென்றால் ரூ. 1,200 ஆக இருக்கவேண்டும் எட்டு மடங்கு. ஆனால் இப்போது என்ன கட்டணம் போட்டிருக்கிறார்கள் என்றால் ஒரு கிலோ வாட்டுக்கு ரூ. 300, அவ்வளவுதான் மின் கட்டணம். உற்பத்திப் பண்டத்தின் விலை எட்டு மடங்கு கூடியிருக்கிறது, ஆனால் மின் கட்டணம் இரண்டு மடங்குதான் உயர்ந்திருக்கிறது. எனவே தொழிற்சாலைகளுக்கு மின் கட்டணத்தைக் கூட்டிப்போடும்போது உற்பத்தியாகிற பொருளின் உற்பத்திச் செலவு என்னவாகிறது என்று பார்த்து, அதற்குத் தகுந்தாற்போல் மின் கட்டணத்தை மின்சார வாரியம் உயர்த்தவேண்டும்.

கூட்டவேண்டிய இடத்தில் கூட்டுங்கள். அதற்காக வீட்டில் சொந்த உபயோகத்திற்காக விளக்கு எரிக்க அல்லது மின்சார விசிறி ஓட்டுவதற்கு அல்லது அடுப்புக்கு மின்சாரம் தேவைப்பட்டால் அதற்குக் கூட்டுவதில் எந்தவிதமான நியாயமும் இல்லை.

வசூலிக்க வேண்டிய பாக்கிகளை வசூலித்தாலே போதும், எங்களைப் போன்றவர்கள் வீடுகளில் உபயோகிக்கிற மின்சாரத்திற்கு அதிகக் கட்டணம் வசூலிக்க வேண்டிய தேவையே இல்லை.

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 26

தாரங்கதாரா கெமிக்கல்ஸ் தொழிற்சாலையில் எவ்வளவு பாக்கி, மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலையில் எவ்வளவு பாக்கி என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள் திரு. அழகர்சாமி அவர்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட ஒரு பிரச்னையை இந்த மன்றத்தில் கிளப்பினார்கள். அது 1.52 கோடி ரூபாய் பாக்கியா அல்லது 15.2 கோடி ரூபாய் பாக்கியா என்ற ஒரு பெரிய புதிரை இந்த மன்றத்தில் எழுப்பியிருக்கிறார்கள். எழுப்பியவர் திரு. கிருஷ்ணமூர்த்தி என்ற காரணத்தால் அந்தக் குரல் ஆளும் கட்சியினுடைய வரிசையிலிருந்து வருகிற காரணத்தால் எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது. மொத்தம் 14 ஸிஸ்டங்கள் இருக்கின்றன மின்சார வாரியத்தில். அமைச்சர் அவர்கள் இந்தக் குழப்பத்திற்குப் பிறகாவது இந்த 14 ஸிஸ்டத்திலும் ஸிஸ்டம்வாரியாக ஒவ்வொரு ஸிஸ்டத்திலும் வரவேண்டிய பாக்கி என்ன என்ற கணக்கை இந்த மன்றத்திற்கு அவர்கள் கொடுக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மின்சாரத் திருட்டு பற்றிச் சொன்னார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்கூடச் சொன்னார்கள். நாங்கள் சொன்னால் உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்பார்கள், ஆதாரம் இருக்கிறதா என்று. யார் யார் திருடினார்கள் என்று பெயர் சொல்லமுடியுமா என்று அமைச்சர் அவர்கள் உடனே கேட்பார்கள். ஆனால் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மின்சாரத் திருட்டு இருக்கிறது என்று சொன்ன நேரத்தில் நமது அமைச்சர் அவர்கள் மௌனமாக இருந்தார்கள். மௌனம் சம்மதம் என்பதற்கு அறிகுறி என்று பழமொழி சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்:** திருட்டு என்றால், விவரம் தெரிந்து சொல்வதற்காகத்தான் கேட்கிறோமே தவிர நீங்கள் சொல்வதை மறுக்கவேண்டும் என்பதற்காக அல்ல. பத்திரிகைகளில் வந்ததை வைத்துச் சொல்கிறார்கள். நாங்கள் நடவடிக்கைகள் எடுத்த பிறகுதான் பத்திரிகைகளில் அவை வந்திருக்கின்றன. மதுரை பசுமலையில் ஒன்பது பேர்களை சஸ்பெண்ட் செய்த பின் பத்திரிகைகளில் வந்ததைப் பார்த்துப் பேசுகிறார்கள். நடவடிக்கைகள் எடுத்த பின்னர்தான் வெளியே வந்திருக்கிறது.



1974 ஆகஸ்ட் 26] [திரு. ஓ. பி. இராமன்]

ஆக, வாரியம் சோம்பேறித்தனமாக இல்லை. தவறுகள் இருந்து சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றுதான் கேட்கிறோம்.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** மின்சாரத் திருட்டுகள் எப்படி நடக்கின்றன? அது எதனால் கூடுதலாகிக் கொண்டிருக்கிறது என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம் மின்சாரத் திருட்டு நடக்கிறது என்றால் நடவடிக்கை எடுப்பது யார்? வாரியமே நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. வாரியத்தில் இருந்து நடவடிக்கைகள் எடுப்பது என்றால் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் எடுக்கப்படாமல் தடுத்து நிறுத்திவைக்கப்படுவதற்கு முடியாதா? நிச்சயமாக முடியும். அதற்காக அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு மாற்று யோசனை கூற விரும்புகிறேன்.

மின்சாரத் திருட்டுக்கள் பற்றிய வழக்குகளை காவல் துறையினரிடம் ஒப்படையுங்கள். போலீசார் நடவடிக்கை எடுக்கட்டும். அவர்கள் திருட்டுக்களைக் கண்டுபிடிப்பார்கள். எனவே அந்த முறையை மேற்கொள்ள வேண்டும்.

கடைசியாக, நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற மின்சார விரயம். வேஸ்டேஜ் ஆப் பவர் எவ்வளவு நடந்துகொண்டிருக்கிறது. ஒரு விவசாயி பயிர் உற்பத்தி செய்ய தண்ணீர் இறைப்பதற்கு மின்சாரம் வேண்டுமென்றால் அதிகாரிகள் சொல்கிறார்கள் இராத்திரி 12 மணிக்கு மேல் போய் சுவிட்சை போடு என்று. இரவு 12 மணிக்கு மேல் விவசாயி வயல்காட்டுக்குப் போய் சுவிட்சைப் போட்டு, இரண்டு மணி நேரம் வயல்காட்டில் காத்திருக்க வேண்டுமாம். உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு தொடர்ந்து மின்சாரம் கிடைப்பதில்லை. அவர்களுக்கு உங்களால் தேவையான சமயத்தில் மின்சாரம் கொடுக்கமுடியவில்லை. அதே நேரத்தில் திருச்சியில் பொருட்காட்சிக்கு உடனே கொடுக்கிறார்கள், திருநெல்வேலியில் பொருட்காட்சிக்கு உடனே கொடுக்கிறார்கள். தஞ்சையில் பொருள்காட்சி என்றால உடனே கொடுக்கிறார்கள். சென்னையில் பொருட்காட்சி என்றால் உடனே கொடுக்கிறார்கள். வெளியே நின்று பார்த்தால் இது நமது சென்னைதானா அல்லது எங்கேயோ அமெரிக்கா நாட்டில் நியூயார்க் பட்டணத்தில் இருக்கிறோமா என்று சந்தேகப்படுகிற

அளவிற்கு மின்சார விளக்குகள் ஒளி வீசிக்கொண்டிருக்கின்றன. ஆனால் உள்ளே என்ன நடக்கிறது? அதுதான் வேடிக்கை. பொருட்காட்சியில் என்ன நடக்கிறது என்றால் மக்களின் அறிவுத் தேவைக்கான காரியங்கள் நடக்கின்றனவா? நடப்பது பூராவும் சூதாட்டம். ஒரே சூதாட்டம். தம்போலா, ரிங் - த்ரோ, ரிக்கார்ட் டான்ஸ் இவை நடக்கின்றன. (குறுக்கீடு) நான் பார்க்கவில்லை. உள்ளே போய் பார்க்கவேண்டிய அவசிய மில்லை. வெளியே நின்றுகொண்டு உள்ளே என்ன நடக்கிறது என்று விசாரித்துக் கொண்டிருக்கிறோம்.

**திரு. கு. காமாட்சி:** ஒரு ஷாட் எடுக்கவேண்டியதற்கு 15 ஷாட்ஸ் எடுக்கிறார்களே.

**திரு. க. உரொ. எட்மண்ட்:** காமாட்சி அவர்கள் ஒரு தலை சிறந்த நடிகராக வந்து ஒரு ஷாட்டிலேயே ஒரு படத்தை எடுப்பது என்றால் அதற்குண்டான திறமை அவர்களுக்கு இருந்தால் அவர்களைப் போன்ற நடிகர்களை வெளியே இருக்கிற படத் தயாரிப்பாளர்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும் என்று இந்த நேரத்தில் நான் வேண்டுகோள் விடுத்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். படம் எடுக்கிறவர்கள் எந்த ஷாட் சரியாக வருகிறது என்று பார்த்துதான் படம் எடுப்பார்கள். ஒரே ஷாட்டில் எடுப்பதற்கு காமாட்சி போன்ற நடிகர்கள் வரவேண்டும் அப்படி அவர்கள் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறேன்.

அந்த அளவுக்கு மின்சார வாரியம் இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. தேவையான காரியங்களுக்கு நாட்டிலே இன்றையதினம் மின்சாரக் கட்டுப்பாடு இருக்கிறது: கட்டுப் பாடு இருக்கிறது. மின்சாரக் கட்டுப்பாடும் கட்டுப்பாடும் இருக்கிற நேரத்தில், இந்தமாதிரியான காரியங்களுக்கு இந்த மின்சார வாரியத்தில் உள்ளவர்கள் அனுமதிக்கிறார்கள்.

எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், இதை நடத்து பவர்கள் எல்லாம் தி.மு.க. வட்டச் செயலாளர், மாவட்டச் செயலாளர்கள். ஒருவர் எக்சிபிஷன் போடவேண்டியது; ஒருவர் ரிங் த்ரோ காண்டிராக்ட் எடுக்க வேண்டியது. இன்னொருவர்





தம்போலா, இன்னொருவர் ரிக்கார்ட் டான்ஸ் என்று எடுத்து விடுகிறார்கள். மின்சாரக் கட்டுப்பாடு, மின்சாரத் தட்டுப்பாடு அறவே நீங்கி, மின்சாரம் தங்குதடையின்றி கிடைக்கும் காலம் வரையில் 'எக்சிபிஷன்' வேண்டாம் தேவையில்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்த பைகாரா, குந்தா மின்சாரத் திட்டங்களில் பணியாற்றிக்கொண்டிருக்கும் தொழிலாளர்கள் எந்த விதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பும், வசதியும் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகளுக்கு குளு குளு கார், ஆனால் திரு. லத்தீப் அவர்கள் சொன்னது போல், மலையேறி, மடுவிறங்கி, நதி நீந்தி, தங்கள் உயிரை துச்சமென மதித்து காடுகளில் மிருகங்களிடையே வாழ்க்கையைப் பணயம் வைத்து, இந்த நாட்டு மக்களுக்கு மின்சாரம் தரவேண்டுமென்பதற்காக அல்லும் பகலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிற, அந்த மின்சாரத் திட்டங்களில் பணியாற்றிக் கொண்டிருக்கிற தொழிலாளர்களுக்கு நீங்கள் தகுந்த பாது காப்பை இனிமேலாவது ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று கேட்டு, மதிப்பிற்குரிய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்ட மின்வாரிய நிதிநிலை அறிக்கை எங்களுக்கு திருப்தி இல்லை என்பதை மாத்திரம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே தெரிவித்து. விடைபெற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மின்வாரியத் துறை அமைச்சர் அவர்களின் பதில் நாளையதினம் நிகழும். பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்

பின்னர் பேரவை பிற்பகல் 1.42 மணிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.

8. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. *Statutory Rules and Orders*

103. Notification issued with G.O. Ms. No. 422, Co-operation, dated 17th November 1973, in regard to certain amendments to the Tamil Nadu Co-operative Societies Rules, 1963, as subsequently amended. [Laid on the table of the House under section 119 (4) of the Tamil Nadu Co-operative Societies Act, 1961 (Tamil Nadu Act 53 of 1961).]

B. *Reports, Notifications and Other papers*

@ 83. The Tamil Nadu Payment of Salaries (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 42 of 1974).

@ 84. The Payment of Wages (Tamil Nadu Amendment) Bill, 1974 (L.A. Bill No. 43 of 1974).

85. Report of the Committee on Public Accounts on the action taken by the Government on the recommendations of the Committee contained in its Reports on the Account for the years 1967-68 and 1968-69.

86. The Seventh Report (Fifth Assembly) of the Committee on Government Assurances.

---

@ Despatched to Members on 24-8-74.



இணைப்பு I

(310-ம் பக்கத்தில் 327ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க)

*A.*—Plant Protection is part of the important Agricultural Programmes; such as, intensive Area Department Programme, intensive Cotton Development Programme, Pulses Programme, etc. After the withdrawal of the general subsidy for plant protection chemicals, the general programmes do not envisage any subsidised sale of pesticides. But in some of the special schemes, such as, intensive Cotton Development Programme, a subsidy of 25 per cent for the first three rounds of spraying and a subsidy of 33.3 per cent for the subsequent sprayings limited to 10 sprays is being made available to the farmers, For rainfed areas, 25 per cent subsidy is allowed for 3 treatments. This programme is being implemented in the Irrigated Cotton Areas of Coimbatore and Tirunelveli districts. Similarly, the plant protection equipments are also distributed at subsidised rates. A subsidy of 25 per cent subject to the maximum of Rs. 200 per power sprayer is given to ryots.

2. Under the Pulses Development Programme, a subsidy of Rs. 2 per acre is allowed for areas covered under plant protection. This scheme is in operation in all the districts of Tamil Nadu.

3. Whenever, large-scale pest incidence is noticed, such as; Redhairy Caterpiller or Stem-borer of Paddy, Mass Ground Spraying Programmes are launched. There is provision to give Rs. 3 per acre as subsidy under this programme. This programe is extended to all districts but is being taken up in areas wherever such incidence is noticed.

4. Under the General Plant Protection Programme, the following facilities are made available to ryots :—

(i) Quality pesticids are supplied to ryots at reasonabel pricos through 757 agricultural depots spread over throughout the State,

(ii) Large number of sprayers and dusters are kept in stock by the department for hiring out to ryots Power-operated sprayer is hired at Rs. 2-50 per day and hand operated sprayer is given at 30 paise per day.

(iii) Six Mobile Servicing Units have been set up to repair sprayers and dusters available with the Panchayats and Panchayat Unions, with individual ryots, etc.

(iv) One Mobile Plant protection squard has been set up in Thanjavur district to attend to plant protection works on the spot in the district.

(v) Under the Insecticides Act, which has come into force with effect from 1st August 1971, samples of pesticides from the stock of private suppliers are taken and sent to pesticides Testing Laboratories for analysis to enforce quality control.

விடை :—

பயிர் பாதுகாப்பு என்பது மும்முரப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் மும்முரப் பருத்தி மேம்பாட்டுத் திட்டம், பருப்பு வகைகள் திட்டம் போன்ற முக்கியமான வேளாண்மைத் திட்டங்களின் அங்கமாக அமைகிறது. பயிர் பாதுகாப்பு இராசயனப் பொருள்களுக்கு உதவித்தொகை வழங்குவதை நிறுத்திய பின்னர், பொதுத்திட்டங்களின் கீழ் ஈடுசெய்த விலையில் பயிர்ப்பூச்சி கொல்லி மருந்துகள் வழங்கப்படுவதில்லை. ஆனால் மும்முரப் பருத்தி மேம்பாட்டுத்திட்டம் போன்ற சில சிறப்புத் திட்டங்களின் கீழ் முதல் மூன்று மருந்து தெளிப்புக்கு 25 சதவீதமும், அடுத்த பத்து தெளிப்புக்கு உட்பட்டு 33.3 சதவிகிதமும், மானாவாரி பகுதிகளுக்கு மூன்று தெளிப்புகளுக்கு 25 சதவீதமும் உழவர்களுக்கு உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டம் கோயம்புத்தூர், திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்ந்த ஒருங்கிணைந்த பருத்திச் சாகுபடிப் பகுதிகளில் நிறைவேற்றப்படுகிறது. இதைப போலவே பயிர்ப் பாதுகாப்பு சாதனங்களும் ஈடுசெய் விலையில் வழங்கப்படுகின்றன. விசைத் தெளிபபான் ஒன்றுக்கு ரூ. 200 என்னும் பேரளவுக்கு உட்பட்டு உழவர்களுக்கு 25 சதவீத உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2. பருப்பு வகைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்ற பகுதிகளில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 2 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டம், தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலுமே செயலில் உள்ளது,



3. சிவப்புக் கம்பளிப்பூச்சி அல்லது நெல் குருத்துப்பூச்சி போன்றவை அதிக அளவில் தாக்கும்போது தரையிலிருந்து பெருமளவில் மருந்து தெளிக்கும் திட்டங்கள செயற்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 3 உதவித் தொகை வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் எல்லா மாவட்டங்களுக்குமே நீடிக்கப்பட்டு, இந்நோய் பரவிய தாக க்காணப்படும் பகுதிகளிலெல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. பொது பயிர்ப்பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், உழவர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன :—

(i) இம்மாநிலம் முழுவதிலும் உள்ள 757 வேளாண்மைப் பண்டக சாலைகள் மூலமாக உழவர்களுக்கு நியாயமான விலைகளில் தரமான பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனை செய்யப்படுகின்றன.

(ii) உழவர்களுக்கு வாடகைக்கு விடுவதாக வேளாண்மைத் துறை ஏராளமான தெளிப்பான்களையும் தூவு கருவிகளையும் இருப்பில் வைத்து வருகிறது. விசைத் தெளிப்பான் நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 என்ற வீதத்திலும் கையால் இயக்கப்படும் தெளிப்பான் நாள் ஒன்றுக்கு 50 காசு என்ற வீதத்திலும் வாடகைக்கு விடப்படுகின்றன.

(iii) ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், தனிப்பட்ட உழவர்கள் முதலியோரிடம் உள்ள தெளிப்பான்களையும் தூவு க்கருவிகளையும் பழுது பார்ப்பதற்காக வலம்வரும் பணிப்பிரிவுகள் ஆறு ஏற்படுத்தப்பட்டுள்ளன.

(iv) அந்தந்த இடத்திலேயே பயிர்ப் பாதுகாப்புப் பணிகளைக் கவனிப்பதற்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் வலம்வரும் பயிர் பாதுகாப்புப் பிரிவு ஒன்று அமைககப்படடுள்ளது.

(v) 1—8—1971 ஆம் நாள் முதல்செயலுக்கு வந்த 1968 ஆம் ஆண்டு பூச்சிக்கொல்லி மருந்துகள் சட்டத்தின்கீழ் மருந்துகளில் தரக்கட்டுப்பாட்டைச் செயற்படுத்துவதற்காக தனிப்பட்ட விற்பனையாளர்களிடம் உள்ள பயிர்பூச்சிக் கொல்லி மருந்துகளிலிருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு சோதனைக்காக ஆய்வுக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன,

## இணைப்பு-II

(312-ம் பக்கத்தில் 328 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.)

*A*—

Plant protection pools are maintained by the Regional Deputy Directors of Agriculture in their respective headquarters at Madras, Tiruchirappalli, Madurai, Coimbatore and Tirunelveli and by the Project Director, Intensive Agricultural District Programme at Thanjavur.

2. A limited number of Plant protection equipments are kept in stock in the Agricultural Depots for the purpose of hiring out to the farmers. These equipments fall in two categories. (*a*) stock belonging to the Agriculture Department, (*b*) stock belonging to the Panchayat Unions. Hand-operated, equipments form a major portion of the above two categories of stock, while the pool stock is mostly power-operated. The Plant protection equipments in the plant protection pools are meant mainly for the purpose of combating large-scale pest epidemics and for the implementation of mass campaigns, such has mass ground spraying against the pests on Paddy, Cotton, and Groundnut. These equipments are also sometimes hired out to the farmers, if need be. They are hired to the farmers directly on the recommendation of the respective District Agricultural officers or through the local Officers.

3. The responsibility for keeping the equipments in good working condition is now with the Deputy Directors of Agriculture assisted by the Crop and Plant Protection Officer, Machanics and the Mobile Servicing Units.

4. During 1972–73, an area of 72,461 acres was covered under ground spraying programme with the power sprayers available with the Department. During 1973–74, an area of 1,21,000 acres was covered under the programme.

5. The power sprayers are hired out at Rs. 2·50 per day while the hand-operated sprayer is hired at 50 paise per day.



6. It has been estimated that 17,000 power-operated sprayers and dusters and nearly 72,000 hand-operated equipments are in use in this State. The number of power-operated sprayers-*cum*-dusters held in the various plant protection pools maintained by Deputy Directors of Agriculture and the Programme Director. Intensive Agricultural District Programme, Thanjavur, is estimated at 10,000. It is proposed to purchase 1,000 power sprayers and dusters during 1974-75.

7. There are six mobile servicing units with Agricultural Department to repair sick sprayers and dusters. During 1974-75 it is proposed to set up one more mobile servicing unit to repair sprayers and dusters.

### விடை

சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய தலைமை இடங்களில் வேளாண்மைத் துறை வட்டாரத் துணை இயக்குநர்களாலும் தஞ்சாவூரில் மாவட்ட முப்முர வேளாண்மைத் திட்டத்தைச் சேர்ந்த திட்ட இயக்குநராலும் பயிர்ப் பாதுகாப்பு நிலையங்கள் வைத்துவரப் படுகின்றன.

2. உழவர்களுக்குப் பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளை வாடகைக்குக் கொடுப்பதற்காக வேளாண்மைக் கிடங்குகளில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் இருப்பில் வைத்துவரப்படுகின்றன. இக்கருவிகள் (a) வேளாண்மைத் துறை இருப்பைச் சேர்ந்தவை (b) ஊராட்சி ஒன்றியங்களின் இருப்பைச் சேர்ந்தவை என்று இரண்டு வகைப்படுகின்றன. மேற்கூறிய இரண்டு வகையைச் சேர்ந்த கருவிகளில் பெரும்பாலானவை கையால் இயக்கப்படுபவையாகும். ஆனால் பயிர்ப் பாதுாப்பு கருவிகள் நிலையத்தில் உள்ளவற்றில் பெரும்பாலானவை விசையால் இயக்கப்படும் கருவிகளாகும். பயிர்ப் பாதுகாப்பு நிலையங்களிலுள்ள கருவிகள், பெருமளவில் பூச்சிகளையும் பயிர் நோய்களையும் ஒழிக்கும் காரியத்திற்காகவும் நெல், பருத்தி, வேர்க்கடலை, ஆகியவற்றைப் பூச்சிகள் தாக்கும்போது தரையிலிருந்து பெருமளவில் மருந்துகளைத் தெளித்தல் போன்ற பணிகளை நிறைவேற்றுவதற்கே முக்கியமாக இவை பயன்படுத்தப்படுகின்றன. தேவையாயிருக்குமாயின் உழவர்களுக்குச் சில சமயங்களில் இக் கருவிகள் வாடகைக்கும் கொடுக்கப்படுகின்றன. அவை சம்பந்தப்பட்ட மாவட்ட வேளாண்மைத் துறை அதிகாரிகளின் பரிவுரையின் மேல், நேரடியாகவோ அல்லது உள்ளூர் அதிகாரிகள் மூலமாகவோ உழவர்களுக்கு வாடகைக்கு விடப்படுகின்றன.

3. இக்கருவிகளை நல்ல நிலையில் வைத்து வரும் பொறுப்பு தற்போது வேளாண்மைத் துறை துணை இயக்குநர்களிடம் உள்ளது. இவர்களுக்கு பயிர்ப் பாதுகாப்பு அதிகாரியும், இயந்திரக் கம்மியர்களும், நடமாடும் பழுதுபார்க்கும் பிரிவினரும் உதவுகின்றனர்.

4. 1972-73-ல் துறையில் இருக்கும் விசைத் தெளிப்பான்களைக் கொண்டு, தரையிலிருந்து மருந்து தெளிக்கும் திட்டத்தின்கீழ் 72,461 ஏக்கர் நிலத்திற்கு மருந்து தெளிக்கப்பட்டது. 1973-74-ல் இத்திட்டத்தின் கீழ் 1,21,000 ஏக்கர் பரப்புள்ள நிலத்திற்கு மருந்து தெளிக்கப் பட்டது.

5. நாள் ஒன்றுக்கு ரூ. 2.50 என்ற வீதத்தில் விசைத் தெளிப்பான் களும், நாள் ஒன்றுக்கு 0.50 காசு வீதத்தில் கையால் இயக்கப்படும் தெளிப்பான்களும் வாடகைக்கு விடப்படுகின்றன.

6. இம்மாநிலத்தில் விசையால் இயக்கப்படும் 17,000 தெளிப்பான் களும், தூவுகருவிகளும், கையால் இயக்கப்படும் கருவிகள் ஏறக்குறைய 72,000 உபயோகத்தில் உள்ளன, என்று மதிப்பிடப்பட்டுள்ளது. வேளாண் மைத்துறைத் துணை இயக்குநர்கள், தஞ்சாவூர் மாவட்ட மும்முர வேளாண் மைத்திட்ட இயக்குநர், ஆகியோரால் வைத்து வரப்படும் பல்வேறு பயிர்ப்பாதுகாப்பு நிலையங்களில் விசையால் இயக்கப்படும் 10,000 தெளிப் பான் தூவு கருவிகள் உள்ளன என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1974-75 ஆம் ஆண்டில், 1,000 விசைத் தெளிப்பான்கள், தூவு கருவிகள் வாங்கக் கருதப் பட்டுள்ளது.

7. பழுதடைந்த தெளிப்பான்களையும் தூவு கருவிகளையும் பழுதுபார்ப் பதற்காக வேளாண்மைத் துறையில் நடமாடும் பழுதுபார்க்கும் பிரிவுகள் ஆறு உள்ளன. தெளிப்பான்கள் தூவு கருகளைப் பழுது பார்ப்பதற்காக 1974-75 ஆம் ஆண்டில் மேற்கொண்டும் ஒரு நடமாடும் பழுதுபார்க்கும் பிரிவு அமைக்கக் கருதப்பட்டுள்ளது.



## இணைப்பு III

(313-ம்பக்கத்தில் 329 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறிப்பிட் வினாவிற்கான் வினாவையக் காண்க.)

**விடை;**

வேளாண்மைத்துறைச் செயலாளர், உலக நாடுகள் வளர்ச்சி நிறுவனம், உணவு-வேளாண்மை நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவின்கீழ், கொரியா, ஜப்பான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு 1973-ம் ஆண்டு நவம்பர்-டிசம்பரில் அனுப்பப்பட்டார். நிலப்பயன், நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் ஆகியவைப் பற்றி அவர் மிக விரிவாக அறிந்து வந்துள்ளார். பல்வேறு பண்ணைகள் முறையாகச் செயல்படுதல் பற்றியும், மிக நவீனமான வேளாண் பொருளாதார நடைமுறைகள் பற்றியும் அவர் ஆராய்ந்தார். இன்னும் கூடுதல் உணவு உற்பத்திக்குச் சீரான விகிதத்தில் உரங்களைப் பயன்படுத்துதல் பற்றியும்கூட அவர் அங்கு ஆராய்ந்தார். இவை தவிர, அவர் பிலிப்பைன்ஸ் நாட்டில் மணிலாவில் உள்ள உலக நாடுகள் அரிசி ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் சென்றிருந்த பொழுது, அங்கு அந்நிறுவனம் செயல்படுதல் பற்றி அறிந்து கொண்டு, அங்கிருந்து ஐ.ஆர். 26 ரக விதை நெல்லை இம்மாநிலத்துக்குக் கொண்டு வரவும் ஏற்பாடு செய்துள்ளார். இவ்விதைகள் பரிசோதனை முறையில் பயிரிடுவதற்காக விவசாயத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவர் ஜப்பானுக்குச் சென்றிருந்தபொழுது இங்கிருந்து அந்நாட்டுக்குக் கோழி இறைச்சி ஏற்றுமதி செய்வது குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டது.

*Answer—*

Secretary, Agriculture was deputed to Korea, Japan, Phillipines during November-December 1973 under the auspices of the UNDP/FAO. He has made very extensive studies regarding land use and water management. The proper working of different farms and the latest agronomical practices were studied. The use of balanced fertilisers for increased food production was also studied. Apart from that, during his visit to Phillipines International Rice Research Institute, Manila, he studied the working of the Research Institute and has arranged for bringing samples of IR. 26 paddy seeds to the State. The seeds have been distributed to the Department for trial. The possibilities of export of poultry meat was also examined during his tour in Japan.

## தமிழ் நாடு சட்டப் பேரவை.

## செவ்வாய்க் கிழமை, 1974 ஆகஸ்ட் 27.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினக்கள்—விடைகள்.

### வெள்ளிக் குறியிட்ட வினக்கள்.

### சேலத்தில் கைப்பற்றப்பட்ட நெல், உரம்.

*1. குறுகியகால வின.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு உணவு, கூட்டுறவு துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வீட்டிலிருந்து 7–8–1974-ம் நாள் அளவில், நெல் மூட்டைகள் 800-ம், உர மூட்டைகள் 1,446-ம் கைப்பற்றப்பட்டன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : 5–8–1974 அன்று இரவு கோயம்புத்தூர் உணவுப் பிரிவினரின் புலனய்வுத் துறையினராலும் வருவாய்த் துறை அதிகாரிகளாலும் பவானி தாலூகா சிங்கம்பேட்டை கிராமத்திலுள்ள திரு. கே. எஸ். அர்தநாரீஸ்வர கவுண்டர் என்பவருடைய கிடங்குகளை சோதனை செய்தபொழுது 452.62 குவிண்டால் அளவுள்ள 719 நெல் மூட்டைகளையும் 1,504 ரசாயன உர மூட்டைகளையும் கைப்பற்றினர். 40 குவிண்டாலுக்கு மேற்பட்ட அளவு நெல் வைத்திருந்த அர்தநாரீஸ்வர கவுண்டரால் நெல் அரிசி (அறிவிப்பு செய்தலும் கைப்பற்றுதலும்) கட்டுப்பாடு உத்தரவு 1967, 3 (1) பிரிவின் கீழ் அறிவிப்பு செய்யப்படாததாலும் உரக் கட்டுப்பாடு உத்தரவுக்கு முரணக உர மூட்டைகள் சேமிக்கப்பட்டமையாலும், புலனய்வுத் துறையினர் அர்தநாரீஸ்வர கவுண்டரின் மீது நெல், அரிசி (அறிவிப்பு செய்தலும் கைப்பற்றுதலும்) உத்தரவின் 3 (1) பிரிவு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் 7 (1) (எ) (2) பிரிவு, உரக் கட்டுப்பாடு உத்தரவு 5 (1), 21 பிரிவு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் 7-வது பிரிவின் கீழும் வழக்குகள்

பதிவு செய்துள்ளார்கள். வழக்குகள் விசாரணையில் உள்ளன. உணவுத் துறையின் புலனாய்வுத் துறையின் மூலம் அறிக்கை கிடைத்தபின் நீதி வழங்கும் முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணை பிறப்பிக்க வேண்டியிருப்பதால் மேற்கொண்டு தகவல்களை வெளியிடுவது உசிதமில்லை.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த நெல் மூட்டைகளுக்கு விலை கொடுக்கப்பட்டதா? உர மூட்டைகள் சம்பந்தமாக அவர் பாரி கம்பெனி டீலராக இருப்பதன் காரணமாக அவரிடமிருந்து அவைகளைப் பறிமுதல்செய்தது நியாயம் இல்லை என்று சொல்லப்படுகிறதே அது உண்மையா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, இதுபற்றி விசாரணையில் இருக்கிறது. அவர் லைசென்ஸ் வைத்திருப்பதாக எனக்கு வந்த செய்தியிலிருந்து தெரியவில்லை. ஆகவே, உர மூட்டைகளை அவருடைய விவசாயத்திற்காகத்தான் அவர் வைத்திருந்ததாக தகவல் சேகரித்திருப்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றி விசாரணையும் நடந்துகொண்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, திரு. அர்தநாரீஸ்வர கவுண்டர் அவர்களுக்கு எத்தனை ஏக்கர் நிலம் இருக்கிறது? எவ்வளவு இரசாயன உரம் வைப்பதற்கான கார்டு அவருக்கு இருக்கிறது? என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, அவருக்கு 18.31 ஏக்கர் நிலம்தான் இருக்கிறது. ஆனால், அவரிடம் 1,500-க்கு மேற்பட்ட மூட்டை உரம் இருந்திருக்கிறது. இவ்வளவும் அந்த 'எக்ஸ்டென்ட்'டுக்கு நிச்சயமாகத் தேவை இல்லை. அதிகமாகத்தான் இருக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, 1,446 உர மூட்டைகளை அவர் யாரிடமிருந்து பெற்றார் என்ற விவரம் ஏதாவது இருக்கிறதா? ஏதாவது கூட்டுறவு சொஸைடியிடமிருந்து பெற்றாரா? அல்லது வேறு வகையில் இந்த உரத்தைப் பெற்றாரா என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எப்படி எப்படியெல்லாம் பெற்றார் என்பது குறித்து ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. சீக்கிரமாகப் புலனாய்வு விசாரணை செய்து மற்ற துறைகளுக்கும் சென்று அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, வெறும் பறிமுதல் மட்டும் செய்யப்பட்டிருக்கிறதா? அவர் பேரில் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறதா? இம்மாதிரி பெரிய நிலச்சுவான்தார்கள் அதிகமாகப் பதுக்கி வைக்கும் நெல்லை எடுத்துப் பிடிக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா?



மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இப்பொழுது உடனடியாகச் செய்தி கிடைத்து மூட்டைகள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், நீதி மன்றத்திற்குப் போய் வழக்கு வெற்றி பெற வேண்டுமல்லவா? ஒருவர் இவ்வளவுதான் ஸ்டாக் வைத்திருக்கவேண்டும், அதை நியாயமான முறையில் டிக்ளேர் செய்ய வேண்டும் என்று இருக்கிறது. 25 குவிண்டாலுக்கு மேல் அரிசி வைத்திருப்பவர்கள் டிக்ளரேஷன் கொடுக்க வேண்டும். 40 குவிண்டாலுக்குமேல் நெல் வைத்திருந்தால் டிக்ளரேஷன் செய்ய வேண்டும். அப்படி அவர் செய்திருக்கிறாரா என்ற விவரத்தைப் பார்த்து, அதற்குமேல் எப்படி முறைப்படி வழக்குத் தொடர வேண்டுமோ அப்படி வழக்குத் தொடருவார்கள்.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, திரு. அர்தநாரீஸ்வர கவுண்டர் தொடர்ந்து அந்தப் பகுதியில் உரத்தைக் கள்ள மார்க்கெட்டில் விற்று வந்ததாகவும் அப்படி விற்பதற்காக வைத்திருந்த மூட்டைகள்தான் இந்த 1,446 மூட்டைகள் என்றும் சொல்லப்படுகிறதே அது உண்மையா? அப்படியானால், விவசாயிகளுக்கு வேண்டிய உரத்தைக் கள்ள மார்க்கெட்டில் விற்கின்ற அவர் மீது நம்முடைய அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதையெல்லாம் விசாரணை செய்து கொண்டிருக்கிறார்கள்.

## பழங்கால கையெழுத்து நூலகம்.

*341 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி, சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழக பழங்கால கையெழுத்து நூலகத்தில் (Oriental Manuscripts Library) இதுவரை பகுத்தாய்வு செய்யப்பெறாத நூல்களையும் பகுத்தளிக்க மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லா மொழிகளிலுமுள்ள 56,362 சுவடிகளில், 46,021 சுவடிகள் பகுத்தாய்வு செய்யப்பட்டுள்ளன. எஞ்சிய 10,341 சுவடிகள் விரைவில் பகுத்தாய்வு செய்யப்படும். அவ்வம்மொழியில் தேர்ச்சி பெற்ற தக்க புலவர்கள் கிடைத்த பின் சுவடிகள் விரைவில் பகுத்தாய்வு செய்யப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I am a regular visitor to that Oriental Manuscript Library and I go there almost every day. They have got longstanding and reasonable grievances. There are a number of Clerks for each language. They possess secondary grade teachers' qualification and vidwan qualification but they are not paid the salaries and other emoluments paid to secondary grade teachers. They are not getting even the increments. The persons who copy palm-leaf manuscripts are paid only three paise for each leaf and they have to copy about 16 lines from each leaf and it takes a number of hours to do it. So, may I know whether the Hon. Minister will kindly arrange to investigate the whole matter and do justice to the employees of that Library and that institution?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அவற்றைப் பகுத்தாய்வு செய்து முறைப்படுத்துவதற்கு என்ன என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை கொடுக்கும்படியாக இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதிலே இருக்கும் விலை மதிக்கவொண்ணாத சுவடிகளைப் பகுத்தாய்வு செய்து தொகுத்து வைக்கவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் செயல்கள் நடைபெற்று வருகின்றன. அதை எப்படி விரிவுபடுத்தலாம், சீர்படுத்தலாம் என்று அறிக்கை வந்தபிறகு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். குப்பல் இராமகிருஷ்ணன்: தலைவர் அவர்களே, சட்டசபை ஹாஸ்டல் லைப்ரரி மெம்பர்கள் படிப்பதற்கேற்ற நேரங்களில் திறந்து வைக்கப்படுவதில்லை. காலையிலும் மாலையிலும் படிக்க...... ..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி 'தமிழக பழங்கால கையெழுத்து நூலகம்' பற்றியது. நீங்கள் கேட்பது இதற்குத் தொடர்புடையது அல்ல.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் தனியாரிடம் நிறைய இருக்கின்றன. தனிப்பட்ட முறையில் வைத்துக்கொண்டிருக்கிற கையெழுத்துப் பிரதிகளை நூலகங்களில் வைத்தால் நன்றாக இருக்கும். எங்கெங்கு அப்படி தனிப்பட்டவர்களிடம் கையெழுத்துப் பிரதிகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் பெறுவதற்கு அரசு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனியார் பலருடைய கையிலிருந்த பல்வேறு சுவடிகள்தான் இப்படிப்பட்ட நூலகங்களுக்கு வந்து சேருகின்றன. பலர், தாங்களாகவே இப்படிப்பட்ட நூலகங்களுக்குத்



தருகிறார்கள். சில விலை மதிக்கவொண்ணாத சுவடிகள் இருக்கின்றன. அவற்றை நாம் விலை கொடுத்துக்கூட வாங்கலாம். தனிப்பட்டவர்கள் இந்த நூலகத்திற்கு அவர்களிடமுள்ள அப்படிப்பட்ட சுவடிகளைக் கொடுக்க முன்வந்தால் அவற்றை வாங்கி வைப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கையெழுத்துப் பிரதிகள் அடங்கிய இந்த நூலகம் தற்போது எங்கே இருக்கிறது? எந்த எந்த காலத்துக் கையெழுத்துப் பிரதிகள் அந்த நூலகத்தில் இடம் பெற்றிருக்கின்றன என்பதை அறியலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இது சென்னைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்தவொன்றாக இப்பொழுது வைக்கப்பட்டிருக்கிறது. 24 மொழிகளில் சுவடிகள் இருக்கின்றன. வட்டெழுத்து, தமிழ் தேவநாகரி, நந்தனகிரி, சாரதா, கிரந்தம், மலையாளம், தெலுங்கு, கன்னடம், மராத்தி, சயாமீஸ், சிங்களம், ஹீப்ரு, இந்துஸ்தானி, அராபிக், பெர்சியன், பெங்காலி, ஒரியா, ஜப்பானியம், சீனம், ஃப்ரெஞ்ச், இலத்தீன், ஆங்கிலம் ஆகிய மொழிகள் அத்தனையிலும் சுவடிகள் இருக்கின்றன.

*Buildings for schools in Karungal Range.*

* 342—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to provide a pucca building for the Government Primary School at Parampu in Karungal Range in Kanyakumari district ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் பொருட்டு நன்கொடையாக அளிக்கப்படும் நிலத்தினை ஏற்கும் பொருள் அரசின் பரிசீலனையிலுள்ளது. இந்த நன்கொடையை ஏற்பது பற்றி முடிவெடுக்கப்பட்டவுடன் கட்டிடம் கட்டும் பொருள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இந்தக் கட்டடம் கட்டுவதற்காக நன்கொடை நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளியில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியர்களும் இருக்கிறார்கள். அதற்கு ஒரு டெம்பரரி ஷெட்கூட இல்லாமல் பள்ளி நடைபெறுகிறது. மாணவர்களும் காற்றிலும் மழையிலும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, துரித நடவடிக்கை எடுத்து, பெர்மனன்ட் பில்டிங் கட்டுவதற்கு அரசு வேண்டிய முயற்சிகளைச் செய்யுமா?

[1974 ஆகஸ்ட் 27

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நன்கொடையாக அளிக்கப்படும் நிலத்தின் தஸ்தாவேஜ்கள் அரசாங்க வழக்கறிஞரிடமிருந்து இப்போது சட்டத் துறைக்கு போயிருக்கிறது. பரிசீலனை முடிந்த பின்னுல், அவர்களிடம் இருந்து நிலம் கையகப்படுத்தப்பட்டு, பள்ளிக் கல்வி இயக்குநரால் கட்டடம் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த பள்ளியின் புகைப்படங்களை பனை மரத்திலே தொங்கவிட்டு—வெளியிலே மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் போது எடுக்கப்பட்ட புகைப்படம் அது—கேலி செய்யப்பட்டிருந்தது. அதை ஒரு முறை அரசுக்கு கொடுத்திருக்கிறோம். கொடுத்து நீண்ட நாள் ஆகிறது. இப்போது நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இந்தக் கல்வி ஆண்டுக்குள்ளேயே கட்டடம் கட்டிக்கொடுக்க உத்தரவிடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நன்கொடையாக அளிக்கப்படுகின்ற நிலம் கல்வித் துறையின் கைக்கு வந்தவுடன் கட்டடம் கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 343—THIRU R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state whether there is any proposal to construct a pucca school building for the Government Primary School at Mangantuvilai, Karungal Range, Kuzhithurai Educational District in Kanyakumari district ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இதற்கு நிலம் ஆர்ஜிதம் செய்து பல ஆண்டுகள் ஆயிற்று. இன்னும் அதற்கான வரைபடங்கள் போடுதல், எஸ்டிமேட் தயாரித்தல் போன்ற ஆரம்ப வேலைகள்கூட நடைபெறவில்லை. இதையும் இந்தக் கல்வி ஆண்டுக்குள்ளாகவே கட்டி முடிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நிலம் இருக்கிறது. கட்டடம் கட்ட 35,000 ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டது, ஆனுல், ரிவைஸ்ட் எஸ்டிமேட் போடவேண்டுமென்று இப்போது கூறுகிறார்கள். அதனுல் தலைமைப் பொறியாளருக்கு அனுப்பியிருக்கிறார்கள். அங்கிருந்து வந்தவுடன் இந்த ஆண்டேகூட கட்டட வேலையை மேற்கொள்ளலாம்.



1974 ஆகஸ்ட் 27]

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பல அரசாங்க ஆரம்பப் பள்ளிகள் டெம்பரரி ஷெட்டில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அவைகளின் நிலைமை பரிதாபமாக இருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு எல்லாம் பெர்மனன்ட் பில்டிங் கட்ட அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே. இப்படிப்பட்ட கட்டடங்கள் கட்டுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படுகிறது. அதை வைத்துக்கொண்டு எந்தெந்த இடங்களில் கட்டடங்கள் கட்ட முன்னுரிமை கொடுக்கப்படுகிறதோ அங்கே முதலில் கட்டடங்கள் கட்டுகிறார்கள். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தற்போது என்னிடம் இல்லை. கூடுதலாக ஒதுக்கிக் கொடுப்பதற்கு நிதிப் பற்றாக்குறை இருக்கிறது. ஆகவே, நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு வேறு பல முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம். இந்த ஆண்டு முன்னுரிமை வழங்கப்பட்ட கட்டடங்கள் முதலில் ஒதுக்கப்பட்ட தொகையைக் கொண்டு கட்டப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பரிசுச்சீட்டில் இருந்து வந்த வருவாயை வைத்து இந்தப் பள்ளிக் கட்டடங்களைக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஒரு குறிப்பிட்ட தொகையைத்தான் பரிசுச் சீட்டு நிதியிலிருந்து தருகிறார்கள். அதைக்கொண்டு ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு கட்டடம்தான் கட்ட முடியும். 374 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்த வகையில் வருகிற பணத்தைக் கொண்டு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு பள்ளிக் கட்டடம்தான் கட்ட முடியும். அந்தந்த மாவட்டத்திற்கு இதற்கென்று ஒதுக்கீடு செய்யப்படும் பணத்தை வைத்து முன்னுரிமை வழங்கப்பட்ட இடங்களில் கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதிகமான கட்டடங்கள் கட்ட வேண்டியிருக்கிறது. அதற்காக எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்து நிதி உதவி பெறும் முயற்சி இன்னும் கைகூடவில்லை. அதற்கென்று தனியாக ஒரு வாரியம் அமைத்து, கடன் உதவி பெற்று, கட்டடங்கள் கட்டிவிட்டு, பிறகு பணத்தைத்திருப்பிக் கொடுத்து விடலாமா என்ற எண்ணம் பரிசீலனையில் இருக்கிறது. அந்த எண்ணம் செயலுக்கு வருமானுல் விரைவிலேயே பல கட்டடங்கள் கட்டப்படும்.

திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்காக எஸ்டிமேட் தயார் செய்து ஒப்புதலுக்காக அனுப்பினுல் ஆண்டுதோறும் ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட

வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை மாற்றி, ஒப்புதலுக்கு அனுப்பினுல் உடனடியாக, காலதாமதம் இல்லாமல் ஒப்புதல் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அந்தமாதிரியாக வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு எஸ்டிமேட்டுடன் ஒப்புதலுக்கு அனுப்பினுல் உடனடியாக ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று பொதுப்பணித் துறையை கேட்டிருக்கிறேம். பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கான மதிப்பீடுகளை பரிசீலனை செய்வதற்கு என்று தனியாக ஒரு பொறியாளரை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று பொதுப்பணித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறுர்கள். பொதுப் பணித் துறையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறுர்கள். காலதாமதம் தவிர்க்கப்பட்டால், ரிவைஸ்ட் எஸ்டிமேட் போடவேண்டிய அவசியம் இருக்காது, ஆகவே, இதற்கென்று ஒரு தனி யூனிட்டை பொதுப்பணித் துறையில் வைத்து, பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதை கண்காணிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேம்.

## ஆயக்குடி அரசு மருத்துவ மனை.

* 344 வினு—புலவர் சி. பழனிச்சாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டம், ஆயக்குடியில் இருக்கும் அரசினர் மருத்துவ மனையை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் அதற்கருமையிலுள்ள இடத்தை கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) இதற்கு ஏற்ற வகையில் மருத்துவமனையை அடுத்து கையகப்படுத்துவதற்குத் தகுந்த நிலம் கிடைக்குமா என்பது மாவட்ட மருத்துவ அலுவலரின் பரிசிலனையில் இருக்கிறது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, ஆயக்குடி 20,000 மக்கள் தொகை கொண்ட ஒரு பேரூராட்சியாக இருக்கிறது. அங்கே 10 படுக்கைகள் கொண்ட ஒரு சிறிய மருத்துவமனை தான் இருக்கிறது. அந்தமருத்துவ மனைக்கு அண்மையில் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தை மருத்துவமனை கட்டுவதற்கு கொடுக்க அதன் உரிமையாளர் முன்வந்திருக்கிறுர்கள். அந்த நிலத்தில் மருத்துவமனைக் கட்டிக்கொடுப்பதற்காக பழனி அருள்மிகு தண்டாயுதபாணி தேவஸ்தானம் 75,000 ரூபாய் உதவித் தொகையாகக் கொடுக்க முன்வந்திருக்கிறுர்கள். ஆகவே அந்த நிலத்தை விரைவிலே கையகப்படுத்தி, மருத்துவமனைக் கட்ட உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?



மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, தாசில்தார் மூலமாக டி. எம். ஓ. நடவடிக்கை எடுத்திருக்கிறுர்கள். நிலத்தைக் கையகப்படுத்தும் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த முயற்சி விரைவிலே நிறைவேற மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் அங்கே துரிதப்படுத்திஞல் உடனடியாக நிறைவேறிவிடும் என்று நம்புகிறேன். பழனியிலிருந்து 75,000 ரூபாய் நன்கொடையாக தருவதாக இருந்தால் மெட்டர்னிட்டி சென்டர்—தாய்-சேய் மருத்துவமனை என்ற முறையிலேகூட செய்வது ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

## ரெட்டியார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம்.

* 345 வினு—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டி கிராமத்தில் 1969-லிருந்து நடைபெற்று வந்த ஆரம்ப சுகாதார நிலையம் தற்சமயம் அந்த ஊரிலிருந்து மாற்றப்பட்டுவிட்டது என்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அவ்விதம் மாற்றக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ரெட்டியார்பட்டியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை பர்க்கிட் மாநகருக்கு மாற்றுவதற்கான உத்தரவை அரசு பிறப்பித்தது. உயர்நீதி மன்றத்தில் நீதிப் பேராணை தாக்கல் செய்ததினுல் அரசு உத்தரவிற்கு நிறுத்த ஆணையை உயர்நீதி மன்றம் பிறப்பித்துள்ளது. ஆகையால் மேற்படி நிலையம் இதுவரை மாற்றப்படவில்லை.

## *Allowances of doctors in Primary Health Centres.*

* 346 Q.—THIRU N.K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be pleased to state whether it is a fact that Doctors working in Primary Health Centres are given additional allowance ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

திரு. என். கே. பழனிசாமி : சார், பிரைமரி ஹெல்த் சென்டர்களில் இருக்கக்கூடிய டாக்டர்கள் 4, 5 மிட் ஒய்வ்ஸ் சென்டர்களை ஒருவர் பார்க்கவேண்டியிருக்கிறது. ஆனுல் அவர்கள் அங்கே சரிவர போவதில்லை. அலவன்ஸ் கொடுக்கப்படுவதை அனுசரித்து, அவர்கள் வாரம் ஒரு முறையாவது அங்கே போய் நோயாளிகளை கவனிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கே சப்-சென்டர்கள், பிரைமரி ஹெல்த் சப் சென்டர்கள், ஃபாமிலி பிளானிங் சப்-சென்டர்கள் என்று 8, 9 பிரிவுகள் இருக்கின்றன. அவைகளுக்கு, ஆரம்ப சுகாதார டாக்டர்கள் பிரைமரி ஹெல்த் சப்-சென்டர்களுக்கு சென்று வரவேண்டும். அது அவர்களுடைய பொறுப்பாக இப்போதும் இருக்கிறது. ஆகவே, அதற்கு புதிதாக உத்தரவு எதுவும் போடவேண்டியதில்லை.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : தலைவரவர்களே, இப்படி பிரைமரி ஹெல்த் சப்-சென்டர்களுக்கு டாக்டர்கள் போய்வர வேண்டுமென்று விதி இருந்தாலும் 90 சதவிகிதம் சப்-சென்டர்களுக்கு போவதில்லை என்று தெரிகிறது. ஆகவே, இருக்கின்ற விதிமுறைகளை மீண்டும் ஒரு முறை அவர்களுக்கு நினைவுபடுத்தி, அவர்கள் கட்டாயம் சப்-சென்டர்களுக்கு சென்றுவர ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அவர்கள் வாரத்தில் இன்ன நாள்—திங்கட்கிழமை இன்ன சப்-சென்டர், செவ்வாய்க்கிழமை இன்ன சப்-சென்டர்—இன்ன சப்-சென்டர் போகவேண்டுமென்று அவர்களின் டயரியில் குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த குறிப்பிட்ட நாளில் அந்த சப்-சென்டருக்குப் போகவில்லை என்றால் அன்றைக்கு அவர் விடுமுறையில் சென்றிருக்கலாம். ஃபாமிலி பிளானிங், பிரைமரி ஹெல்த் சென்டர் இரண்டிலும் உள்ள ஜீப்பை அவர்கள் பயன்படுத்தி சப்-சென்டர்களுக்கு சென்று வரவேண்டும். எங்காவது அவர்கள் செ[illegible]ர்ந்து வராமல் இருந்தால், அங்கத்தினர்கள் புகார் அனுப்பி[illegible] [illegible]தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : இந்த அடிஷனல் அல[illegible] எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ? அங்கு வேலை செய்[illegible] பாராமெடிகல் வொர்க்கர்சுக்கும் இந்தச் சலுகை கொடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : பாராமெடிகல் வொர்க்கர்ஸ் அந்த மாதிரி இடங்களிலேயே இருந்து வேலை செய்வதனால் இந்த உதவித் தொகை கொடுக்கப்படுவதில்லை. டாக்டர்களைப் பொறுத்தவரையில் தாலூகா மருத்துவமனையில்—ஜில்லா மருத்துவமனையில்—ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேலை செய்கிறார்கள். for restricted private practice, that is, non-practice allowance 125 ரூபாய் வழங்கப்படுகிறது. ஃபாமிலி ப்ளானிங் டாக்டருக்கு ரெஸ்ட்ரிக்டெட் ப்ரைவேட் ப்ராக்டீஸ் அலவன்சு ரூ. 125-ம், Family planning work ஆக Special allowance, Family planning work allowance ரூ. 75 வழங்கப்படுகிறது.



1974 ஆகஸ்ட் 27]

திரு சி. கந்தசாமி : ஆரம்ப சுகாதார நிலையங்களில் வேலை செய்கிற டாக்டர்களுக்கு அலவன்சு கொடுப்பதாகச் சொல்கிறார்கள். பெரும்பாலானவர்கள் அந்த நிலையங்கள் இருக்கிற கிராமங்களில் தங்காத காரணத்தினால் வைத்திய வசதி அங்குள்ள மக்களுக்கு உடனடியாகக் கிடைப்பதில்லை. அவர்களுக்கு அங்கேயே வீடு கட்டி—ஜாகை வசதி செய்துகொடுக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : வீடு கட்டிக் கொடுக்கிற திட்டம் குடும்ப நலத் திட்டத்தின்கீழ் பெரும்பாலும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரை ஆண்டுக்கு 30 இடங்கள் என்று எடுத்து கட்டப்பட்டு வருகிறது. படிப்படியாக இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். ஆனால் இன்றைக்கு அங்கேயே இருப்பதாக எழுதிக் கொடுத்துவிட்டு, வேறு இடத்தில் இருக்கிறார்கள் என்றால் அது பற்றி புகார் வருகிறபோதுதான் நாங்கள் விசாரிக்க முடிகிறது.

திரு. எம். சுரேந்திரன் : நகரங்களைவிட கிராமத்தில் இருக்கிற ஜனங்கள் பொது அறிவோ, சுகாதார அறிவோ குறைவானவர்கள். ஆகவே கிராமங்களில் வேலை செய்கிறவர்கள் அனுபவம் பெற்ற டாக்டராக இருந்தால் நன்றாக இருக்கும். அங்கே அனுப்பப்படுகிற டாக்டர்கள் எல்லாம் கல்லூரியில் இருந்துவருகிற இளைஞர்களாகவே இருக்கிறார்கள். ஆகவே சிறிதுகாலம் அந்தத் துறையில் ஈடுபட்டிருக்கிற அனுபவம் பெற்ற டாக்டர்களை அந்த நிலையங்களுக்குப் போடுவார்களா ?

[illegible]கு திரு க. அன்பழகன் : எது அனுபவம் என்பது உ[illegible] பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நகரங்களில் ந[illegible]னுபவம் பெற்றவர்களை கிராமங்களில் போடுகிறபோது [illegible]ளுக்கு ரூரல் டிசீஸ் பற்றிய அனுபவம் இல்லாதவர்களாக [illegible]கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மருத்துவக் கல்லூரியில் [illegible] ரூரல் டிசீஸ் பற்றிய சிறப்புப் பாட திட்டத்தை ஏற்படுத்த [illegible]ண்டுமென்ற கருத்து இருக்கிறது. 27, 28 வயது உடைய டாக்டருக்கு இருக்கிற அனுபவம்—திறமை சில நேரங்களில் 50 வயதுக்காரருக்கு இல்லாமல் இருப்பதையும் பார்க்கிறோம். திரு. சுரேந்திரனுடைய அனுபவம் எனக்குக் கிடையாது.

திரு ஆர். பொன்னப்ப நாடார் : கிராமப் பகுதியில் இருக்கிற மருத்துவமனைக்கு பெரும்பாலும் டாக்டர்கள் போக சம்மதம் தெரிவிப்பதில்லை. குறிப்பாக, அங்கே தங்க வசதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே படிப்பு முடிந்தவுடன் ஒன்றிரண்டு வருஷம் கிராமப் பகுதியில் தங்கி மருத்துவம் செய்தாகவேண்டும் என்கிற உத்தரவினைப் பிறப்பிக்க அரசு முன்வருமா ?

[1974 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு க. அன்பழகன் : இப்போது நடைமுறையில் இருக்கிற நிலையே படிப்பு முடிந்தவுடன் முதல் ஒன்றிரண்டு வருஷங்கள்—ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது ஃபாமிலி ப்ளானிங் சென்டர் அல்லது ஜெயிலில் உள்ள மருத்துவமனை பின்னர் தொழுநோய் மருத்துவமனைகள் இப்படி பணி செய்யத் தான் போடுகிறோம். ஒருவர் இருவர் வேறுசில காரணங்களுக்காக இங்கே போடப்படுவதில்லையேதவிர பொதுவாக இந்த ரீதியில்தான் நியமிக்கப்படுகிறார்கள். நான்காண்டு, ஐந்தாண்டுகள்கூட இங்கே பணியாற்றுகிற டாக்டர்கள் இருக்கிறார்கள்.

## குடும்ப நலத் திட்ட அச்சகப் பணியாளர்கள்.

*347 வினு.—திரு, எம். முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) மாநில குடும்ப நல அச்சகத்தில் பணியாற்றுபவர்களது பணி இன்னும் வரன்முறைப்படுத்தப்படவில்லை என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) & (இ) : உதவி ஆசிரியர், தலைமை முதுநிலை அச்சக மேற்பார்வையாளர் (Top Senior Foreman) இவர்களது பணி வரன்முறைப் படுத்தப்பட்டு விட்டது. மற்ற பதவிகளுக்கான பணி விதிகள் (Ad-hoc Rules) வரையறுக்கப்பட்டவுடன் மற்றவர்கள் பணி வரன்முறைப் படுத்தப்படும்.

திரு பெ. சௌந்தரபாண்டியன் : இவர்கள் பல்லாண்டு காலமாக வரன்முறைப்படுத்தப்படாமல் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். உடனடியாகச் செய்வதில் ஏன் தாமதமாகிறது ? அரசாங்கம் இனிமேலாவது உடனடியாக இவர்களை வரன்முறைப் படுத்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : இது குடும்ப நலத் திட்டத்தோடு இணைந்த அச்சகத்தினுடைய பணியாகும். இதழ் வெளியிடுகிற பணியின் காரணமாக இதனை ஏற்படுத்தியபோது தற்காலிக அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டது. அவர்களை நிரந்தரமாக்க யோசிக்கப்பட்டபோது அரசாங்க அச்சகத்துறையில் பணியாற்றுகிற விதிமுறைகளை இவர்களுக்கும் ஏற்படுத்த ஆலோசிக்கப்பட்டது. அது இவர்களுக்கு ஒத்துவராத காரணத்தினுல் புதிய விதிமுறைகளையே ஏற்படுத்த ஆலோசிக்கப்படுகிறது. இந்த விதிமுறைகள் விரைவாக வகுக்கப்பட்ட பின் இந்தப் பதவியில் உள்ளவர்களும் நிரந்தரமாக்கப்படுவார்கள்.



1974 ஆகஸ்ட் 27]

## குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை.

*348 வினு.—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்கு இந்து மதத்தினரைத் தவிர கிருஸ்துவ, முஸ்லீம் மதங்களைச் சார்ந்தவர்களும் முன் வந்திருக்கின்றனரா ?

(இ) ஆம் எனில், இதுவரை சுமார் எத்தனை சதவிகிதத்தினர் அப்படி அறுவை சிகிச்சை செய்துகொண்டனர் ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) இம் மாநிலத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் அமுல் ஆக்கப்பட்ட நாளிலிருந்து 1968–1969 வரை அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் மதவாரியான விபரங்கள் சேகரிக்கப் படவில்லை. 1968–1969 ஆண்டிலிருந்து 1972–73 வரை இந்த விபரங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. அதன்படி இம்மாநிலத்தில் 1968–69 முதல் 1972–73 வரை, மொத்த அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களில் கிருத்துவர்கள் 4.30 சதவீதம், அதே போல் அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களில் முகம்மதியர்கள் 3.16 சதவீதம் ஆகும்.

திரு. என். கிட்டப்பா : குறிப்பிட்ட கிருஸ்துவ, இஸ்லாமிய சமூகத்தைச் சேர்ந்தவர்கள் குடும்ப நலத்திட்டத்தின்கீழ் குடும்பக் கட்டுப்பாடு செய்துகொள்ளக் கூடாது என்று மத அடிப்படையில் கட்டுப்பாடு செய்திருப்பதாக அறியப்படுகிறதே, எனவே குறிப்பிட்ட மதங்களுடைய தலைவர்களை அணுகி அந்தக் கட்டுப்பாட்டை அவர்கள் தளர்த்தச் செய்ய அரசு ஏதேனும் முயற்சி எடுத்துக் கொண்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. க. அன்பழகன் : இஸ்லாமிய, கிருஸ்துவ மதத் தலைவர்கள் அதுபோன்ற கட்டுப்பாட்டை வரையறுத்திருப்பதாகச் சொல்ல முடியாது. ஆனுல், அவர்களில் பெரும் பாலோர் இதில் அக்கறை இல்லாத காரணத்தினுல் செய்து கொள்ளாமல் இருக்கலாம். இதற்கு நேர்மாறாக இந்துக்களில் தான் குடும்பக் கட்டுப்பாட்டு எதிர்ப்பு அமைப்பு Anti-Family Planning என்று ஏற்படுத்திக்கொண்டு எதிர்ப்பவர்கள் இருக்கிறார்கள். ஆக மத எதிர்ப்பு என்று சொல்வதைவிட அந்த மதங்களில் உள்ள வைதிக மனப்பான்மை உள்ளவர்கள் எதிர்க்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கலாம்.

[1974 ஆகஸ்ட் 27

திரு. ஆ. பரந்தாமன் : இந்தியாவில் இந்துக்கள் அதிக அளவில் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்வதால் அவர்களது எண்ணிக்கை குறைந்துவிட்டது. இன்னும் சிறிது காலத்தில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்து விடும் என்று டெல்லியில் இருந்து ஒரு பெரியவர் கடிதம் எழுதியிருக்கிறார். இதற்கு எல்லா மதத் தலைவர்களையும் கூட்டிப் பேசி சுமுகமான தீர்வு காண அரசு முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

முற்பகல் 9.30

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர்வர்களே, எல்லா தலைவர்களையும் கூப்பிட்டுப் பேசி, முடிவு காணாத நிலைமையில் திண்டாட வேண்டிய பொறுப்பு இருப்பதுகூட இந்திய அரசுக்குத் தானேதவிர நமக்கு அல்ல. என்னைப் பொறுத்தவரையில், தமிழ்நாட்டில், அறுவைச் சிகிச்சைச் செய்துகொள்ள, இஸ்லாமிய சகோதரர்களும், கிறித்தவ சகோதரர்களும் முன் வருகிறார்கள். ஆனால், ஏதாவது ஒன்றிரண்டு கிராமங்களில் கிராமக் கட்டுப்பாடு என்ற முறையில், எதிர்ப்பு உருவாக்குகிறார்களேதவிர, பல இடங்களிலே அவ்வாறு இல்லை. இதனால் இந்துக்களுடைய எண்ணிக்கை குறைந்து வருகிறது என்பது தவறு. புள்ளி விவரப்படி, கம்பாரெடிவாக வேண்டுமானால் இருக்கலாம். ஆனால், மொத்த எண்ணிக்கை என்றைக்கும் குறைந்து விடாது. மொத்த எண்ணிக்கை அப்படி குறையாதபோது, மத அடிப்படையில் சிந்திக்கிறவர்கள் அப்படி சொல்வதுதான் இவையே தவிர, செக்குலர் ஸ்டேட் என்று சொல்கிற நாம் அந்த மத அடிப்படையில் அதைப்பற்றி அதிகமாகக் கவலைப்படத் தேவையில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர்வர்களே, இந்தக் குடும்ப நலத்திட்டத்தைப் பற்றி பல வெளியீடுகள் வந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கு, மாவட்டக் குடும்ப நல அதிகாரி, கத்தோலிக்க வகுப்பினரது மத உணர்ச்சிகள் புண்படக்கூடிய அளவிலே ஒரு வெளியீடு தந்திருக்கிறார்கள். அந்தமாதிரியான வெளியீடு கொடுக்கக்கூடாது என்ற தாக்கீதை அரசாங்கம் கொடுக்க முன்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, யாருடைய மனமும் புண்படக்கூடாது. உடம்பிலே ஒரே ஒரு இடம் புண்படலாமேதவிர, யாருடைய மனமும் புண்படக்கூடாது என்பதுதான் நம்முடையக் கருத்து. ஆனால் அந்த கருத்தை வெளிப்படுத்துகின்ற நேரத்தில் சிலருடைய மனம் புண்படலாம். சமுதாய நலனை முன்னிட்டு அவற்றைத் தாங்கத்தான் வேண்டும்.

திரு. கே. எ. வகாப் : இஸ்லாமிய மார்க்கத்தினரும், கிறித்தவ மார்க்கத்தினரும் ஒருவேளை அதிகமாக சிகிச்சை செய்து கொள்ளாமல் இருக்கலாம். ஆனால், இஸ்லாமிய மார்க்கத்திலேயே அவர்களுக்கென்று சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. உதாரணமாக, மொகரம் மாதத்திலே ஆண் பெண் சேரக்கூடாது, இரம்சான் மாதத்திலே சேரக்கூடாது என்று இரண்டு மாதங்களிலே அப்படி கட்டுப்பாடு வைத்திருக்கிறார்களே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதையே குடும்பக் கட்டுப்பாடு என்ற நியதியில் வருகிறது என்பதை அரசாங்கம் அறியுமா? அந்தச் செய்திகளை குடும்பக் கட்டுப்பாடு பத்திரிகையில் விளம்பரத்திற்குப் பயன்படுத்தலாமே, அதனை அரசாங்கம் செய்யுமா?



1974 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அதே போல், இந்து மதத்திலேகூட, ஆடி மாதம் சேரக்கூடாது இன்ன இன்ன விசேஷ நாட்களிலே சேரக்கூடாது என்று இருக்கிறது. ஆனால், இந்த இரண்டு மாதங்களைத் தவிர, மீதமுள்ள 10 மாதங்களில் செய்யக்கூடிய காரியம், நாட்டினுடைய மிகப் பெரிய வேதனையாக மாறுகிறது என்பதை அங்கத்தினர் அவர்கள், அருள்கூர்ந்து அவர்களைச் சேர்ந்தவர்களுக்குச் சொல்லவேண்டும்.

திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, குடும்ப நலத் திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை செய்வதற்கு கடந்த காலத்தில் நல்ல முறையிலே உதவித் தொகை அளிக்கப்பட்டது. அந்தத் தொகை இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கிறது. ஒரு குழந்தையை வளர்க்க எவ்வளவு செலவாகிறது என்பதைக் கணக்கெடுத்து பார்த்து, இனி வருங்காலத்திலாவது, அதிகமான அளவுக்கு அறுவை சிகிச்சை செய்வதற்கு, ஒரு அறுவை சிகிச்சைக்குக் குறைந்த பட்சம் ரூ. 1,000 கொடுக்க அரசு முன்வந்தால் அந்தத் திட்டம் தீவிரப்படும். எனவே அதைப் பின்பற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மத்திய அரசு இந்தத் திட்டத்தைத் தீவிரப்படுத்த, பல்வேறு மாநில அரசுகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ரூ. 100 வீதம் அறுவை சிகிச்சை செய்கிற ஆணுக்குத் தர முன்வந்து, அறுவை சிகிச்சை திட்டம் விரைவாக நடத்தப்பட்டது. பொது மக்களும் அதனை விரும்பி ஏற்றுக்கொண்டார்கள். இப்பொழுது மத்திய அரசு ரூ. 100 தருவதை நிறுத்திவிட்டது. ஏறத்தாழ ரூ. 35 என்ற அளவுக்குத்தான் உதவித் தொகை தரலாம் என்று தெரிவித்து விட்டார்கள். நாம், தமிழக அரசின் சார்பில் ரூ. 60 ஆவது உதவித் தொகை தந்து, அதனை நிறைவேற்ற வேண்டுமென்று, கடந்த ஆண்டிலிருந்து தமிழக அரசே ஓரளவில் செயலாற்றி வருகிறது. மத்திய அரசு அளிக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி வருகிறோம், மத்திய அரசு திட்டங்களெல்லாம் குறிக்கோளை அடைய முடியாத நிலையை சந்திக்கிற நேரத்தில், திட்டங்களுக்கு அடிப்படை காரணம் குடும்ப நலத்திட்டம்என்பதை உணர்ந்து, ரூ. 100 வீதம் அளித்தால்,

[1974 ஆகஸ்ட் 27

ரூ. 5,000 வீதம் திட்ட முதலீடு செய்வதைத் தடுக்கலாம் என்ற கணக்கைப் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். நாம் திரும்பத் திரும்ப மத்திய அரசுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசிலே, அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி வேறு சில மாநிலங்களிலே சரியாகச் செலவழிக்கப் படவில்லை என்ற காரணத்தாலோ, அல்லது 'மாஸ் காம்பெய்ன்' சரியாக நடைபெறவில்லையென்ற காரணத்தாலோ, அவர்கள் அதனை வரவேற்கவில்லை, அதனால், தமிழகமும் இடர்ப்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இப்பொழுது குடும்ப நலத் திட்டத்தை அமுலாக்குவதிலே சிரமங்களிருந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமண வயதை அதிகமாக்குவதன் மூலம், ஓரளவுக்குக் கட்டுப்பாட்டுக்கு வாய்ப்பு இருக்குமே. ஜப்பான் போன்ற நாடுகளில் ஆண்களுக்கு 25 வயது, அதே போல் பெண்களுக்கு இன்ன வயது என்று விதிமுறைகளை அமுலாக்கு கிறார்களே, அது மாதிரி இந்நாட்டிலும் செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இப்பொழுது இருக்கிற வயதைக்கூட உயர்த்த வேண்டுமென்று மத்திய அமைச்சர் கலந்துகொண்ட, மாநில நலத்துறை அமைச்சர்களுடைய மாநாட்டிலே எடுத்துத் தெரிவித்திருக்கிறோம். குறைந்தது பெண்களுக்கு 18 வயதும், ஆண்களுக்கு 21 வயதும் என்று சட்டமுள்ள காரணத்தால், குறைந்த பட்சம் அதைத் தான் வைக்க முடியும். மாநில அரசு மத்திய அரசை சட்டம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறது. 5, 6 ஆண்டு காலமாக பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, குடும்ப நலத் திட்டத்தில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் யார் யார் என்பதை அறிவிக்க இயலுமா ? அப்படி செய்து கொண்டவர்களுக்குத் தனிச் சலுகைகள் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : எனக்கு நினைவிலே இருப்பது, தண்டராம்பட்டு தொகுதி உறுப்பினர் திரு. இராதா கிருட்டிணன் அவர்கள். அவர்கள் தலைமை வகித்து நடத்தினார்கள். மற்ற அங்கத்தினர்கள் தலைமை வகிக்க முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

## மருத்துவ ஆய்வுக்கூட நுட்பனர் பட்டப்படிப்பு.

*349 வினா—திரு. ஏ. பாலையா : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1974 ஆகஸ்ட் 27]

(அ) 1973-ம் ஆண்டு சென்னையில் நடந்த தமிழ்நாடு மருத்துவ ஆய்வுக் கூட நுட்பனர்கள் சங்கத்தின் மாநில மாநாட்டில் சென்னை பல்கலைக் கழகத்தின் மூலம் பி.எஸ்ஸி மருத்துவ ஆய்வுக்கூட நுட்பனர் படிப்பை அரசு தொடங்கும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதிப்படி 1974--75-ல் மேல் குறிப்பிட்ட பட்டப் படிப்பு தொடங்கப்படவிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதில் மருத்துவ தொழில் நுட்பனர் களாக வேலை பார்த்து வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கி சேர்த்துக் கொள்ளப்படுவார்களா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) மத்திய அரசின் நிதி உதவியுடன் இத்திட்டத்தை செயல்படுத்துமாறு இந்திய அரசுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

(இ) மருத்துவ ஆய்வுக்கூட தொழில் நுட்ப இயல் பாட முறையை பல்கலைக் கழகம் ஏற்றுக் கொண்ட பின்னர் அது பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கப்படவேண்டும்.

திரு. கா. வேழவேந்தன் : இந்த லாபரேட்டரி டெக்னிஷியன்கள் நடத்திய மாநாட்டில், இதை அமைச்சரிடத்திலே வற்புறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, விரைவாக இந்தப் பட்டப் படிப்பைத் துவங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதைத் தொடங்குகிற பொழுது, தொடக்கச் செலவு மூலதனத்திற்கு ரூ. 3,10,000 அளவுக்கும், தொடர்கிற செலவு ரூ. 91,000 ஆகும் என்று கணக்கிடப்படுகிறது. மத்திய அரசினுடைய இந்தத் துறைச் செயலாளர் இந்தத் திட்டத்தை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் என்று உறுதி அளித்தார்கள். அந்த உறுதி அடிப்படையிலே பல்கலைக்கழகம் துவங்கவேண்டுமென்று சென்னையிலேயுள்ள மருத்துவக் கல்லூரியிலே இந்தத் தொழில் நுட்பப் படிப்பைத் தொடங்கலாம் என்றும் எண்ணியிருக்கிறது. ஆனால், மத்திய அரசினுடைய இசைவு இன்னும் தெரிவிக்கப்படவில்லை. அந்த இசைவு தெரிவிக்கப்பட்டவுடனே தொடங்குவதற்கான வழி முறைகள் செயலாக்கப்படும்.

## சித்த வைத்திய நூல்கள்.

*350 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சித்த வைத்திய ஆராய்ச்சி நூல்களை வெளியிடுவதற்கென அரசு ஏதேனும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

[1974 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம். 1974--75-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 50,000 இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : அந்த முயற்சி இதுவரையில் எந்த நிலையில் உள்ளது என்பதையும் அதற்காக எந்த எந்த வகையில் ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பல் வேறு சுவடிகள் சரியாகச் சேர்க்கப்பட்டு அவை வெளியிடப் படுகிற கட்டத்தை இன்னும் அடையவில்லை. ஓலைச் சுவடிகளை விலை கொடுத்து வாங்க சுமார் ரூ. 15,000 ஒதுக்கப்பட்டிருக் கிறது. கையெழுத்துப் படிகளை, படி எடுத்து, தனியார் அச்சகங் களிலே அச்சிட ரூ. 35,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலமாக, சரியாக சீராக்கப்பட்ட சித்த வைத்திய நூல்கள், ஏற்கெனவே அச்சடிக்கப்பட்டவை 521, பழைய கையெழுத்துப் படிகள் 84, ஓலைச் சுவடிகள் 369. அவற்றைச் சீர்படுத்தி, அச்சுக்குக் கொடுக்கத் தக்க அளவுக்குக் கொண்டு வர சிலர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். சிறந்த சித்த மருத்துவ நூல்களை வெளியிடுவது என்ற முறையில் அதற்கான பணியிலே, பழனி அறங்காவலர் குழு ரூபாய் இரண்டு இலட்சத்தை இந்தப் பணிக்காக ஒதுக்க சம்மதித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, நாட்டி[illegible] மக்கள் வெள்ளம் போல் பெருகி வருகிற நேரத்தில், நோயும் [illegible]ாகப் பரவுகிற காரணத்தால், அலோபதிக் மெடிசின் [illegible]யைக் கொண்டு, ஆற்ற முடியாத நோய்களை சித்த வை[illegible]ன் மூலமாக ஆற்றுகிறார்கள். குணப்படுத்துகிறார்கள் என்ப[illegible] கிறோம். நோயின் முக்கிய காரணங்களில் ஒன்று, [illegible] போல் அடிக்கடி சேஷ்டை பண்ணும் மனமாகும். அ[illegible] மனத்தைக் கட்டுப்படுத்துகிற நிலையைத் தெரிவிக்கும் வைத்தி யர்களை, குருக்களை, ஆசிரியர்களை, ஆசான்களைக் கொ[illegible] புத்தகம் வெளியிடுவது மாத்திரம் அல்லாமல், வைத்தியத் து[illegible] யையும் நன்கு ஆராய்ச்சி செய்து பாபுலரைஸ் பண்ணினால் [illegible] களுக்கு நலம் விளைவிக்கும் அல்லவா ? அதற்கு இன்னும் அதி[illegible] நிதி ஒதுக்கம் செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எவ்வ ளவுதான் நமக்கு இப்படியெல்லாம் ஆர்வம் இருந்தாலும் அதைச் செய்வதற்குரிய தகுதியுடையவர்கள் கிடைப்பதைப் பொறுத்து தான் செய்யமுடியும். அப்படிப்பட்ட தகுதியுடையவர்கள் வயதானவர்களாக இருந்தாலும் நாம் பயன்படுத்திக் கொள்ள



1974 ஆகஸ்ட் 27]

லாம். தொடர்ந்து அரசாங்கம் எடுத்துவருகின்ற முயற்சிகள் காரணமாக தகுதியுடையவர்கள் கிடைப்பார்களானால் பயன் படுத்திக் கொள்ளலாம்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, பழனியிலே அனுபவம் வாய்ந்த சித்த மருத்துவர்கள் இருக்கிறார்கள். சித்த வைத்திய நூல்களும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் பயன் படுத்திக்கொள்கின்ற முறையிலே அரசு என்ன என்ன நடவடிக்கை களை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே தெரியும். பழனியிலிருந்து சிறந்த நூல்கள், ஏட்டுச் சுவடிகள் எல்லாம் வாங்கப்பட்டிருக் கின்றன. மேலும் கிடைக்குமானால் அவை வாங்கப்படும். அவைகளிலே ஒரே கருத்து குறித்து மருத்துவம் குறித்து 3, 4 சுவடிகள் இருக்குமானால் அந்தச் சுவடிகளை ஒப்பிட்டுப் பார்த்து எந்தப் பாடல் சரியான பாடல், எந்த மருத்துவ இலக்கணம் சரியான இலக்கணம் என்று கண்டுபிடித்து அச்சிடுவதற்கு முயற்சி களை மேற்கொள்ள வேண்டும். ஆகவே நினைத்தவுடனே அச்சிடு வதற்கான நிலையில்லை. சரியான இலக்கணம் எது என்று தகுதி யுடையவர்களைக் கொண்டு கண்டுபிடித்துத்தான் செய்ய வேண்டியிருக்கிறது. தகுதியுடையவர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அதனால்தான் காலதாமதம் ஏற்படுகிறது. இருந் தாலும் அரசு இதிலே தேவையான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

திரு. வ. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இந்தப் பணி ஒரு சிறந்த பணி என்பதையும் அரசு இதற்காக ஒதுக்கியிருக்கிற தொகை 50 ஆயிரம் ரூபாய் என்பது குறைவான தொகை [illegible] என்பதையும் அரசு உணர்ந்து இருக்கிறதா ? ஆகவே கோயில்களிலே உள்ள தேவஸ்தானங்கள் மூலமாக அந்தக் கோயில்களின் நிதியை இதற்காக ஒதுக்கி இதிலே ஆராய்ச்சி செய்ய வேணடுமென்கிற ஏற்பாடுகளைச் செய்யக்கூடிய அறிவிப்பை தமிழக அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆராய்ச்சிகள் கூட மருந்துகளைச் செய்வதற்குத்தான் பலர் தனித் தனியாக ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறார்கள். சிலர் மருந்து களைச் செய்து கொடுக்கிறார்கள். சிலர் நோயாளிகளைப் பார்த்து மருந்து கொடுக்கிறார்கள். ஆனால், மருந்து செய்கின்ற முறைகளை உலகத்திற்கு அறிவிக்க யாரும் முன்வரவில்லை. அந்த முறைகளை, சரியான முறைகளை உலகத்திற்கு அறிவிக்கக் கூடிய முறையிலே அது பல இடங்களுக்குப் பரவக் கூடிய முறையிலே உதவி செய்வதற்கு யாரும் முன்வருவதில்லை. தனித்தனியாக மருந்துகளைச் செய்யவும், மருந்துகளை நோயாளிகளுக்குக் கொடுத்து மனமகிழ்ச்சியடைய

வும்தான் சிலர் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் இதற்காக மேலும் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## *List of Backward Classes.*

* 351 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Backward Classes be pleased to state?

(*a*) whether the list of Backward Communities has been revised;
(*b*) if so, when; and
(*c*) the details of the list so revised?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம்.

(இ) 1972 ஆம் ஆண்டு மே திங்களில் திருத்தியமைக்கப் பட்டது.

(உ) பின்தங்கிய வகுப்பினரின் திருத்தியமைக்கப்பட்ட பட்டியல் * பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: சார், 1974—75-ஆம் ஆண்டிலே எந்த எந்த கம்யூனிட்டிகள் இந்தப் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டுமென்று விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது? அதன் மீது அரசு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கை என்ன? இந்த பின்தங்கியோர் பட்டியலில், சர்க்காருடைய அறிக்கைப்படி கன்னியாகுமரியையும் சேர்த்து, 181 சப்-செக்ட்டுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் கொஞ்சம்தான் பாக்கியிருக்கும் என்று நினைக்கிறேன். எந்த அடிப்படையிலே இந்தப் பட்டியல் தயாரிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, பின்தங்கிய மக்கள் என்று ஒதுக்குவது கல்வியிலும் சமுதாயத் துறையிலும் சம அந்தஸ்து இல்லாதவர்களைப் பொறுத்துதான். இரண்டு துறைகளிலும் குறைந்த அந்தஸ்து உள்ளவர்கள், குறைபாடுகள் உள்ளவர்கள் எல்லாம் பிற்பட்ட மக்கள் என்று கருதப்பட்டு இந்தப் பட்டியலிலே சேர்க்கப்படுகிறார்கள். அந்த வகையிலே அதற்கான பரிந்துரைகளைச் செய்வதற்கு அரசு பரிசீலனை செய்துவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, ஜாதியை ஒழிக்க வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம். மெய்யாகவே பொருளாதாரத் துறையிலோ அல்லது வகுப்பு

* 595—117-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



முழுவதும் பின் தங்கிய நிலையிலோ பலர் இருக்கின்றார்கள். ஆனால் பல வகுப்புகளைச் சார்ந்தவர்கள் பொருளாதாரத் துறையிலே முன்னேறிய பிறகும்கூட இன்னும் ஜாதி அடிப்படையிலே சலுகைகளைப் பெற்றுவருகிறார்கள். ஆனால் ஜாதி அடிப்படையிலே உயர்ந்தவர்களாகக் கருதப்படுகிறவர்கள்கூட பொருளாதாரத் துறையிலே தாழ்ந்த நிலையில் உள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு அப்படிப்பட்ட சலுகைகள் தரப்படுவதில்லை. ஆகவே இந்த அடிப்படையை மாற்றி பொருளாதாரத்துறையிலே பின் தங்கியவர்கள் என்ற அடிப்படையிலே சலுகைகள் அளிக்கவும் இப்போதிருக்கிற இந்த தப்பான ஏற்பாட்டைத் திருத்தி மாற்றியமைக்கவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்வதாக இருந்தாலும்கூட ஜாதி அடிப்படையிலே மக்கள் பிரிந்து வாழ்கின்ற நிலையும், ஒற்றுமையில்லாமல் இருக்கிற நிலையும் இருந்து வருகிறது. ஆகவே இன்னும் தொடர்ந்து கொஞ்ச காலத்திற்குச் சலுகைகள் தர வேண்டியிருக்கிறது.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, 1972ஆம் ஆண்டிலே திருத்தியமைக்கப்பட்டதாகச் சொன்னார்கள். கோவை மாவட்டத்திலே கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், விவசாயம் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். அதேபோன்று வட ஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டத்திலே வன்னியர்கள் என்று சொல்லப்படக் கூடியவர்களும், திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டத்திலே நாடார் என்று சொல்லப்படக் கூடியவர்களும் விவசாயம் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள். கோவை மாவட்டத்திலே உள்ள விவசாயம் செய்யக் கூடியவர்களைப் பின் தங்கியவர்களின் பட்டியலிலே அரசாங்கம் சேர்க்குமா? 1972-ம் ஆண்டு கொடுக்கப்பட்ட அறிக்கை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பொருளாதாரத் துறையிலே பின் தங்கியவர்கள் என்ற முறையிலே இந்தச் சலுகைகள் தரப்படாது, பின் தங்கியவர்கள் என்று அறிவிக்கப்பட்டவர்களுக்குத்தான் சலுகைகள் தரப்படும். எந்த ஒரு ஜாதியும் இன்னொரு வகுப்பை ஆளுவதற்கோ, உயர்ந்த ஜாதி என்று சொல்லிக்கொள்ளவோ இடம் ஏற்படக்கூடாது என்ற முறையிலேதான் நாம் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்து வருகிறோம்.

திரு. எஸ். வடிவேல்: தலைவர் அவர்களே, பொருளாதாரத் துறையிலேயும் சமுதாயத்திலேயும் பின்தங்கியிருக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உயர்ந்த ஜாதி என்று சொல்லப்படக்கூடியவர்கள் பிராமணர்கள், முதலியார்கள் சிலர் ரொம்ப பின்தங்கிய நிலைமையிலே இருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய பொருளாதார அடிப்படையை வைத்து

ஏன் அவர்களுக்குச் சலுகைகள் வழங்கக் கூடாது? அதைப் போன்றே பின் தங்கியவர்கள் என்று சொல்லப்படக் கூடியவர்களில் சிலர் படையாச்சி என்று ஒருவர் இருக்கிறார் என்றால் அவர் 70 வேலி நிலம் வைத்துக் கொண்டு சலுகைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார். கவுண்டர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். நல்ல நிலைமையிலே இருந்து கொண்டும் சலுகைகள் பெறுகிறார்கள். ஆகவே பொருளாதாரத் துறையிலே பின்தங்கியவர்கள் அனைவருக்கும் இந்தச் சலுகைகளைக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன்</u>: சில தவறுகள், ஒன்றிரண்டு சம்பவங்கள் இருந்தால் அதற்காக இதை நிறுத்திவிடக் கூடாது. அப்படியிருந்தால் எப்படியெப்படி சீர்திருத்தமுடியும் என்பதை அரசாங்கம் யோசிக்கும்.

<u>திரு. ஆலடி அருணா</u>: பின்தங்கிய மக்களைவிட ஆதித்திராவிட மக்களுக்கு அதிகமான சலுகைகள் தரப்படுகின்றன. ஆகவே சவரத் தொழிலாளர், சலவைத் தொழிலாளர்கள் போன்றவர்கள் எல்லாம் தங்களை ஆதித் திராவிடர்கள் பட்டியலில் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்களா? அவர்களைப் பின் தங்கியவர்களின் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டு அந்தப் பட்டியலிலே சேர்க்கவேண்டுமென்று கேட்டிருக்கிறார்களா? அதைப் பற்றி அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

<u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன்</u>: கேட்டிருக்கிறார்கள். சற்று நிதானம் காட்டவேண்டும். வருவாய் மட்டும் கணக்கிலே கொள்ளப்படக்கூடாது. ஒன்றிரண்டு சம்பவங்களை வைத்து இந்த மகத்தான பணியை நாம் கைவிடக்கூடாது.

<u>திரு. கே. கந்தசாமி</u>: தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்படுகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே போகிறது. அதனால் அவர்களுக்குரிய விகிதாச்சார அளவிற்கு உத்தியோகம் போன்றவைகள் கிடைக்கவில்லையென்பது பொதுவான நிலைமையாக இருக்கிறது. அவர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற எண்ணிக்கைப்படி பிற்பட்ட வகுப்பினர்களுக்குள்ளேயே இருக்கின்ற மைனாரிட்டிகளுக்கு அதிகமான அளவு போய்விடுகிறது. மெஜாரிட்டிகளுக்குக் கிடைக்கவில்லை. 'tyranny of the minority over the majority' என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அவர்களுடைய எண்ணிக்கை குறைந்திருந்தாலும் அவர்கள் தங்களை வலிவுள்ளவர்களாக ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள்ளேயே இருக்கின்ற மெஜாரிட்டியிலே உள்ளவர்களுக்கு அந்த அளவிற்குக் கிடைக்கவில்லை, ஆகவே பின்தங்கியவர்கள் பட்டியலிலே உள்ள மெஜாரிட்டியினருக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? 'in proportion to the population of each community' என்ற ஜன விகிதாசாரப்படி பிற்பட்ட வகுப்பினரில் உள்ள மெஜாரிட்டி வகுப்பினரின் நியாயத்தை அரசு பாதுகாக்குமா?





<u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன்</u>: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மிகவும் சிரமமானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் திட்டம் நடைமுறையில் இருக்குமானால் எந்த எந்த வகுப்பு மக்களுக்கு எத்தனை எத்தனை இடங்கள் என்று பிரிக்க வேண்டிய நிலை ஏற்படும். இப்போதிருக்கிற கொள்கைப்படி எல்லோரும் ஒரே சமுதாய எழுச்சி பொருளாதார வசதி வாழ்க்கையிலே வாழவேண்டுமென்ற நிலைமையிலேதான் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்த அரசு தனது கடமைகளை நிறைவேற்றி வருகிறது.

<u>திரு. கு. காமாட்சி</u>: இந்த கம்யூனல் ஜி.ஓ. வரவேண்டுமென்று நம்முடைய பழைய தலைவர்கள் எல்லாம் பாடுபட்டார்கள். அதன் நோக்கமே பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் தாழ்ந்த நிலையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு சமுதாயத்திலே வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றுதான் கொண்டுவரப்பட்டது. அவர்கள் பாடுபட்டதால் இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் உயர்நீதி மன்ற நீதிபதியாகக் கூடிய அளவிற்கு அது உதவி செய்திருக்கிறது. ஆகவே இந்த அருமையான சட்டம் என்றும் நிரந்தரமாக இருக்கவேண்டுமென்ற முறையிலே மாற்றக்கூடாது என்ற முறையிலே ஒரு சட்டம் இயற்ற அரசு முன்வருமா?

<u>மாண்புமிகு திரு. என். வி. நடராசன்</u>: தலைவர் அவர்களே, இதற்கு அரசியல் சட்டம் துணை செய்யுமானால் அதைப்பற்றி அரசு பரிசீலனை செய்யலாம்.

## <u>கங்கை—காவேரி இணைப்பு.</u>

<u>*352 வினா.—திரு. கா. வேழவேந்தன், திரு பெ. சௌந்தர பாண்டியன்</u>: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கங்கை—காவேரி இணைப்புத் திட்டம் இப்போது எந்நிலையில் உள்ளது?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: உத்தேச கங்கை—காவிரி இணைப்புத் திட்டமும், கோதாவரி—கிருஷ்ணா நதியோடு காவிரியை இணைக்கும் திட்டமும் பற்றிய ஆய்வுகள், புலனாய்வுகள் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளன.

திரு கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, நீண்ட நாட்களாகப் பேசப்பட்டு வரும் கங்கை—காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அகில இந்தியக் கட்சிகள் டெல்லியில் நடைபெறும் மாநாட்டிலேயாவது, தமிழகத்தில் நடைபெறும் மாநாட்டிலேயாவது வற்புறுத்தி தீர்மானம் போட்டிருக்கிருர்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தீர்மானம் அதில் முக்கியம் அல்ல. நீண்டகாலத் திட்டம் மட்டுமல்ல. நீளமான பயணம் உள்ள இரண்டு ஆறுகளையும் இணைக்கும் திட்டம். இந்திய அரசாங்கத்திடமிருந்து தெளிவான முடிவு இன்னும் வரவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கங்கை—காவிரியை இணைப்பதற்கு முன்பாக தென்மாநிலங்களிலுள்ள ஆறுகளை இணைப்பதற்கு தமிழக அரசு ஏதாவது கோரிக்கை எழுப்பியிருக்கிறதா ? அதற்கு மத்திய அரசு என்ன பதில் அளித்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, முதலிலே தெற்கே உள்ள மாநிலங்களில் கிருஷ்ணு நதியையும் தமிழகத்திலுள்ள பெண்ணையாறு அல்லது கங்கையையும் இணைக்கலாமா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கோரினேம். அவைக்கு இந்த நேரத்தில் ஒரு தகவலை நான் சொல்ல விரும்புகிறேன். கிருஷ்ணு நதியிலிருந்து சென்னைக்கு 5 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பது நீண்ட நாள் கோரிக்கை. தமிழக முதல்வரவர்கள் சமீபத்தில் எழுதிய கடிதத்திற்கு ஆந்திர முதல்வரவர்கள் சமீபத்தில் எழுதிய கடிதத்தில், கிருஷ்ணு அவார்டில் ஆந்திரா வஞ்சிக்கப்பட்டுவிட்டதால் தண்ணீர் மிச்சம் இல்லை என்று கடிதம் எழுதியிருக்கிருர்கள். எனவே, திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்ருல் அகில இந்திய ரீதியில் எல்லா மாநிலங்களும் ஒத்துக்கொண்ட பிறகுதான் முடியுமே தவிர தனி ஒரு மாநிலம் முயற்சித்தால் பலன் இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : With regard to linking Ganga with Cauveri upto Pochambad there is no trouble. Only afterwards Karnataka Government, Maharashtra Government and Andhra Government are putting different proposals to connect it with Mettur dam in different ways. But the correct and most appropriate method of linking is through Hosur taluk only which is near Mettur Dam. Will the Hon. Minister inform us whether proper investigations will be done in this regard ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : I am sorry, Sir, I am not a research scholar.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, கங்கையிலிருந்து காவிரி வரை இந்த நாடு ஒரே நாடு என்று சொல்லக்கூடியவர்கள் தான் இன்றையதினம் இந்தியப் பேரரசின் ஆட்சிப் பொறுப்பில்



இருக்கிருர்கள். அவர்களைச் சேர்ந்தவர்கள்தான் ஆந்திர மாநிலத்திலும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிருர்கள். இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டுமென்று சொல்லும் இவர்கள் கோதாவரியையும் காவிரியையும் அல்லது கிருஷ்ணுவையும் காவிரியையும் இணைப்பதற்கு முட்டுக்கட்டை போட வேண்டிய அவசியம் என்ன ? மத்திய அரசு உடனடியாக இதில் தலையிட்டு இணைப்பதற்கு உத்தரவு போடாததற்கு என்ன காரணம் ? இதில் ஏதாவது அரசியல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதில் அரசியல் இருக்கிறதோ இல்லையோ எனக்குத் தெரியாது. கங்கையையும் காவேரியையும் இணைக்கும் பெரிய திட்டம் நிறைவேற வேண்டுமென்பதிலே நமக்கு ரொம்ப ஆசை இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனுல் நிறைவேற முடியாத சூழ்நிலையில் இருக்கிறது. இடையிலே உள்ள ஆந்திராவில், 8—7—74-ல் சமீப காலத்தில், ஆந்திர சட்டசபையிலே இர்ரிகேஷன் அமைச்சர் மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், கங்கையையும் காவேரியையும் இணைக்கும் திட்டத்தில் ஆந்திராவில் கிருஷ்ணுவை இணைப்பதால் ஆந்திராவிற்கு நஷ்டம், நாங்கள் ஏற்பதற்கில்லை என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிருர்கள். ஆகவே, எல்லா மாநிலங்களும் ஒத்துக்கொண்ட பிறகுதான் செய்ய முடியும். அது மத்திய அரசு செய்ய வேண்டிய ஒன்று. நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம், ஆனுல் எப்பொழுது முடியும் என்று தெரியவில்லை.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, பல நதிகளும் அயல் மாநிலங்களில் உற்பத்தியாவதால், இந்த வீராணம் ப்ராஜக்டையாவது துரிதமாகச் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வீராணத்திலிருந்து எவ்வளவு துரிதமாகச் சென்னைக்குக் கொண்டு வரமுடியுமோ அவ்வளவு துரிதமாகக் கொண்டுவர அரசு முயற்சிக்கிறது. அதிலும் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். வீராணத்திற்கு சென்னைக்குக் குடிதண்ணீருக்காக எவ்வளவு தண்ணீர் எடுக்கிறேமோ அந்த அளவைக்கூட நாம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் தண்ணீர் அளவில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கர்நாடக மாநிலம் காவிரிப் பிரச்னை பற்றிப் பேசும் பொழுது கருத்து தெரிவித்திருக்கிறது.

## கல்லாறு பாசனத் திட்டம்.

*353 வினு.—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம், கல்லாறு பாசனத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

[1974 ஆகஸ்ட் 27

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) ரூ. 138 லட்சம் அளவு மதிப்பீட்டில் கல்லாறு குறுக்கே வடகரை கிராமத்தில் ஒரு நீர்த்தேக்கம் கட்ட பாசனத்துறை தலைமைப் பொறியாளர் ஒரு திட்டம் அனுப்பியிருக்கிறார். இது படி தற்போதுள்ள 3,985 ஏக்கர் நிலத்திற்கு பாசன உறுதியும் இதுவரை பாசன வசதி பெறுமலுள்ள 480 ஏக்கர் நிலத்திற்கு பாசன வசதியும் கிடைக்கும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நீண்ட காலமாகியும் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் ? இதைத் துரிதமாக நிறைவேற்றுவதற்கு அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, ஒரு திட்டத்தை எடுக்கும்பொழுது இப்பொழுது நாம் வகுத்துள்ள விதிமுறைப்படி ஒரு டன்னுக்கு 3,000 ரூபாய்க்குள்ளாக இருந்தால்தான் சிக்கனம் என்று வைத்திருக்கிறோம். ஆனால் இதற்கு ஒரு டன்னுக்கு 5,210 ரூபாய் ஆகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, மதுரை மாவட்ட ஆட்சியாளர் தலைமை வனப் பாதுகாவலரோடு ஆலோசிக்காமல் தயாரிக்கப்பட்டுள்ளது என்று வருவாய்த்துறை வாரியத்திற்கு இதன் குறிப்புரைக்காக அனுப்பப் பட்டிருக்கிறது. வருவாய்த்துறையின் இறுதிக் குறிப்பு எதிர் பார்க்கப்படுகிறது. அது கிடைத்த பிறகுதான் முடிவெடுக்க முடியும்.

## எட்டயபுரத்தில் பயணியர் விடுதி.

*354 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

எட்டயபுரத்தில் பயணியர் விடுதி கட்டும் திட்டம் ஏதேனும் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, எட்டயபுரம் பாரதியார் பிறந்த இடமாகும். அங்கே அடிக்கடி பெரியவர்களெல்லாம் செல்கிறார்கள். அந்த நேரத்தில் அவர்கள் அங்கே தங்குவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே இதை



1974 ஆகஸ்ட் 27]

அனுதாபத்தோடு கவனித்து இனிமேலாவது அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எட்டயபுரத்திற்கு 15 கிலோமீட்டர் தொலைவிலுள்ள கோவில் பட்டியில் நல்ல வசதியுள்ள பயண விடுதி இருப்பதாலும், எட்டய புரத்தில் தங்குவதற்கு பாரதியார் பிறந்த இடம் என்ற ஒரு சிறப்பைத் தவிர வேறு சிறப்புகள் இல்லாததாலும் தற்சமயம் தேவை இல்லை என்று அரசு கருதுகிறது.

## நகர்ப்புற நிலவரி.

*355 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை நகர்ப்புற நிலவரிகளை வசூலிப்பதில் 31-3-1974-ம் அன்றுள்ளபடி நிலுவையில் உள்ள தொகை என்ன ?

(இ) வசூலிக்கப்படாமல் உள்ள வரி பாக்கிகளை வசூலிக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) மூலச் சட்டம் 1966–திருத்தச் சட்டம் 1971—352 இலட்சம் ரூபாய்.

திருத்தச் சட்டம் 1972—105.53 இலட்சம் ரூபாய்.

(ஆ) மாநகரத்தில், நகர்மனை வரி குறித்த காலம் கடந்த நிலுவைகள், நடப்புப் பசலி ஆண்டிற்கான வரித்தொகையுடன் இரண்டு பசலியாண்டு நிலுவைத்தொகை என்ற வீதத்தில் ஆண்டுத் தவணை முறையில் வசூலிக்கப்படவேண்டுமென்று 1973 ஜூன் திங்களில் ஆணையிடப்பட்டுள்ளது. வரவேண்டிய தொகை களை வசூலிப்பதற்கு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளு மாறு வரி வசூல் அதிகாரிகள் கேட்கப்பட்டுள்ளனர்.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, சென்னை நகர்ப்புற நிலவரியை வசூலிக்க வேண்டியதில் இவ்வளவு தொகை நிலுவையில் இருக்கிறது. ஆகவே, இப்படி நிலுவையிலுள்ள அர சாங்கத்திற்கு வர வேண்டிய வரித் தொகை வந்தால் அதைப் பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்த முடியும். எனவே அதை விரைவாக வசூலிக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா. : தலைவரவர் களே, இந்த நிலுவை பாக்கி இருப்பதற்கு ஒரு சரித்திரமே உண்டு. 1963-ம் ஆண்டு போடப்பட்ட சட்டம் செல்லாது

[1974 ஆகஸ்ட் 27

என்று ஹைகோர்ட் தீர்ப்பு கொடுத்ததற்குப் பிறகு வேறு ஒரு சட்டம் போடப்பட்டது. அதில் கடந்த 8 ஆண்டுக்காலமாக இருக்கும் பாக்கியையும் வசூலிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் 8 ஆண்டு காலத்திற்கான தொகையையும் ஒரே காலத்தில் கொடுக்க முடியாது என்ற காரணத்தினால் நடப்பு ஆண்டுத் தொகையையும், பாக்கித் தொகையில் இரண்டு ஆண்டுக்கால தொகையையும் வசூலிக்க வேண்டுமென்று 1973-ஆம் ஆண்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்தரவுப்படி பாக்கித் தொகை வசூலிக்கப்பட்டு வருகிறது.

### ஓடந்துறை பகுதியில் நெல் சாகுபடி.

* 356 வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் ஓடந்துரை பகுதியிலிருக்கும், நெல் சாகுபடியாகும் ஒரு போக நிலங்களை இருபோக நிலங்களாக்குவது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இப்பகுதியில் தற்பொழுது நீர் வசதி இரு போகங்களுக்குப் போதுமானதாக இல்லை.

### மிளகு உற்பத்தி.

* 357 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் நல்ல ரக மிளகு உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு ஏதேனும் சிறப்புத் திட்டம் வகுத்து செயல்படுத்த இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) இரண்டு மத்திய நாற்றங்கால்களும், 50 புதிய விளக்கப் பாத்திகளும் அமைக்கப்பட உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, இந்த நல்ல ரக மிளகு தற்பொழுது எந்தெந்தப் பகுதிகளில் பயிரிடப்பட்டு வருகிறது. இதைத் தீவிரப்படுத்துவதற்காக விவசாயத் துறை முன்னோடித் திட்டம் ஏதேனும் வகுத்து இருக்கிறதா ? அப்படியிருந்தால் எப்பொழுது செயல்படுத்தப்பட இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



1974 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் பேச்சிப்பாறையிலும், நீலகிரி மாவட்டம் கூடலூரிலும் இந்த நாற்றங்கால்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்க தரமான பதியங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

திரு. அ. தேவேந்திரன்: தலைவரவர்களே, குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் இந்த மிளகுப் பயிர் நன்றாக வளர்கிறது. நிறையப் பயிராகிறது. நான்கூட கொச்சியிலேயிருந்து கொண்டு வந்து என்னுடைய தோட்டத்திலே இரண்டு கொடிகள் வைத்திருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இப்படிப்பட்ட பயிர்களை வளர்ப்பதற்கு அரசு ஊக்குவிக்கும் திட்டம் ஏதேனும் வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தற்போதுள்ள குறிப்பில் தஞ்சை மாவட்டத்தில் மிளகு பயிரிடுகின்ற திட்டம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தேவேந்திரன் அவர்கள் ஆராய்ச்சிக்குப் பிறகு அங்கும் மிளகு பயிரிட முடியுமா என்று பார்க்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: மிளகு உற்பத்தி தமிழ்நாட்டில் புதிதாகத் துவங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு உற்பத்தி எவ்வளவு கிடைக்கும்? அதற்கு என்ன மூலதனம் போட வேண்டும்? எம்மாதிரியான சீதோஷ்ண நிலையில் இது உற்பத்தியாகும்? எந்த அளவுக்கு மிளகு உற்பத்தி செய்யத் திட்டம் இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தற்போதுள்ள திட்டம் நான் ஏற்கனவே சொன்னபடி இரண்டு நாற்றங்கால்களும் 50 விளக்கப் பாத்திகள் என்ற அளவிலே நடைபெறும். இதற்குச் செலவு சுமார் ரூபாய் ஐந்து லட்சம். மற்றப் பகுதிகளில் விரிவாக்குவதுபற்றி ஆலோசிப்பதாகச் சொல்லியிருக்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: இந்த மிளகு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரும் பயிர். தமிழ்நாட்டிலே ராணிப்பேட்டையில் நவ்லக் போன்ற பண்ணைகளிலே இதுபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நவ்லக்கில் செய்வது வேறு ஒரு திட்டம். மிளகு ஆராய்ச்சி அங்கு செய்யப்படவில்லை. மிளகை மலைப் பகுதிகளில் தவிர வேறு இடங்களிலும் வளர்க்க முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அரசு ஏற்பாடு செய்து வருகிறது.

[1974 ஆகஸ்ட் 27

*Apple plantations.*

* 358Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the places in this State where apple plantations are raised ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: கொடைக்கானல், கூனூர், ஊட்டி ஆகிய இடங்களில் ஆப்பிள் பயிராகிறது.

திரு. என். டென்னிஸ்: வேறு இடங்களில் ஆப்பிள் பயிரிட முடியுமா என்று ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா? எந்தெந்த சீதோஷ்ண நிலையில் ஆப்பிள் பயிரிட முடியும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஆப்பிள் பயிரிட 6,000 அல்லது 7,000 அடி உயரம் தேவைப்படுகிறது. குறிப்பாக குளிர்ச்சி அதற்குத் தேவைப்படுகிறது. 'வெரி கூல் கிளைமேட்'. பெரும்பாலும் காஷ்மீர், இமாசலப் பிரதேஷ் ஆகிய இடங்களில்தான் அதிகமாகப் பயிராகிறது. தமிழ்நாட்டில் மொத்தமே 75 ஏக்கரில்தான் பயிர் செய்து பார்த்திருக்கிறோம். நம் மனம் நிறைவு அடைகின்ற வகையில் நன்றாக வளர்ச்சி இல்லை.

திரு. கு. அ. பொம்மன்: அமைச்சர் அவர்கள், கூனூர், உதகையில் ஆப்பிள் பயிரிடப்படுவதாகச் சொன்னார்கள், தனியார் துறையிலா? அரசுத் துறையிலா? காஷ்மீர் ஆப்பிளிலும், நீலகிரி ஆப்பிளிலும் எது உயர்ந்தது? எங்கே மார்க்கட் செய்யப்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இன்னின்ன இடம் என்று குறிப்பாக இல்லை. தனியாரும் ஆப்பிள் பயிர் செய்வதற்கு ஊக்கம் கொடுக்கப்படுகிறது. ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய் அளவில் நீண்ட காலக் கடன் கொடுக்கப்படுகிறது. அரசு பழத் தோட்டங்களில் இதைச் சோதனையாகச் செய்து பார்த்திருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் ஆப்பிள் பழத்தின் தரம் காஷ்மீர் ஆப்பிள் பழத்தின் தரத்திற்குச் சமமாக இல்லை. நம்முடைய நாட்டில் ஆப்பிள் பழங்களின் தரத்தை மேலும் உயர்த்த விவசாயத் துறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தமிழ்நாட்டில் விளைகின்ற ஆப்பிள் பழத்தின் தரத்தை உயர்த்த ஏறத்தாழ 106 ரகங்கள் சோதனை செய்து பார்க்கப்பட்டு தமிழ்நாட்டுக்கு உகந்தது 'பேர்லேன் பியூட்டி' என்ற ரகம் என்று முடிவு செய்து



1974 ஆகஸ்ட் 27]

பயிராக்கப்படுகிறது. அது நல்ல மகசூல் கொடுக்கிறதா என்று பார்க்கப்படுகிறது.

சின்னமனூரை நகராட்சியாக்கல்.

* 359வினா—திரு. நா. வெ. குருசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுரை மாவட்டம், சின்னமனூர் பேரூராட்சி மன்றத்தை முனிசிபாலிட்டியாக மாற்றும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுதுமுதல் இத்திட்டம் அமுல் படுத்தப்படும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) மதுரை மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து விவர அறிக்கை வந்தபின், அரசு பரிசீலனை செய்து தக்க முடிவெடுக்கும்.

திரு. நா. வெ. குருசாமி: சின்னமனூர் பேரூராட்சி மன்றம் வருமானத்திலும் மக்கள் எண்ணிக்கையிலும் பெரிய நகரமாக இருக்கிறது. அதை உடனடியாக முனிசிபாலிட்டியாக ஆக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் விளக்கம் கேட்கப்பட்டிருக்கிறது. எனினும் சட்டப்பேரவை தொகுதிகள் அமைப்பு வேலைக்கு இம்மாற்றம் குந்தகமாக இருக்கும் என்ற கருத்தின் காரணமாக 31—12—1974-க்குப் பிறகு இச்செயற்குறிப்பு பற்றி நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றம், மாவட்ட அபிவிருத்தி கவுன்சில் ஆகியவற்றின் கருத்துக்களை அறிந்து தெரிவிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

நாட்டார் வாய்க்காலின் குறுக்கே பாலம்.

*360வினா—திரு. தொ. க. சிறைமீட்டான்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், அரியன்கோட்டை அருகில் நாட்டார் வாய்க்காலுக்கு குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தொ. க. சிறைமீட்டான்: இந்தக் கால்வாய் மிகவும் பெரியது. விவசாயப் பெருமக்கள் இந்தக் கால்வாயைக் கடக்க கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அரியங்கோட்டை நாட்டார் வாய்க்காலுக்குக் குறுக்கே இந்தப் பாலத்தை அமைக்க கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்து செயற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: ஆர். எஸ். மங்கலம் இளையாங்குடி சாலையில் இந்த வேலைத் திட்டத்திற்காக ஏறத்தாழ 2 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதர சாலைத் திட்டத்தின்கீழ் இந்த வேலையை எடுத்துக்கொள்ள இயலாத காரணத்தால் இந்த வேலை எடுத்துக் கொள்ளப்படவில்லை.

*Fair Price Shops for Vegetables.*

*361*Q*.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state:

(*a*) the number of fair price shops opened by the Government in Madras City for the sale of vegetables during the period from 1st January 1973 to 30th November 1973; and

(*b*) the places where they have been opened?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: (அ) ஏது மில்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி: கூட்டுறவுத் துறையில் பல கடைகளை இம்மாதிரித் திறந்து ஊட்டி போன்ற இடங்களிலிருந்து கூட்டுறவுக் கடைகள் மூலம் இங்கு கொண்டு வந்து ஜனங்களுக்குக் காய்கறிகள் நியாய விலையில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: முயற்சி நடந்துகொண்டிருந்தது. நீலகிரி கூட்டுறவு மார்க்கட்டிங் சொசைடி சார்பில் விவசாய இலாகா ஏற்று நடத்தினார்கள். இருந்தாலும் நட்டம் ஏற்பட்ட காரணத்தால் சென்ற ஆண்டு 12—7—1973 முதல் நிறுத்திவிட்டார்கள்.



THIRU K. M. SUBRAMANIAM: Sir, in view of the increasing prices of vegetables, will the Government consider opening of fair-price shops so that vegetables may be made available to the public at fair prices?

மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி: காய்கறி நியாய விலைத் திட்டம் என்ற பெயரால் 9 இடங்களில் சர்க்கார் இடங்களில் மொத்தமாக கொத்தவால் மார்க்கட்டில் கொள்முதல் செய்து லாபம் 20 சதவிகிதத்தில் கிளை இடங்களில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: காய்கறிகளைப் பொறுத்த வரை விலை நாளுக்கு நாள் ஏறிக் கொண்டே போகிறது. அரிசி விலை தற்போது ஏறி இருக்கின்ற நிலையில் இதுவும் ஏறிக் கொண்டே போகிற நிலையில் பயங்கரமான பிரச்சினையாக இருக்கிறது. ஃபேர் பிரைஸ் ஷாப்ஸ் அமைக்கும் திட்டம் அரசாங்கத்திடம் இல்லாவிட்டாலும் இப்போது இந்தப் பிரச்சினையைச் சமாளிக்கும் வகையில் அரசாங்கத்திடம் ஏதாவது புதுத் திட்டம் இருக்கிறதா? அந்தத் திட்டத்தை அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி: அரசாங்கம் ஏற்கனவே நான் சொன்ன திட்டத்தைத்தான் எடுத்திருக்கிறது. ஒவ்வொரு சீசனில் ஒவ்வொரு காய்கறி விளையும். சீசனுக்குத் தகுந்தாற்போல் விலை ஏறி இறங்கும். இதிலே ஒரு நிதானமான விலையை நிர்ணயிக்க முடியாது.

THIRU B. VENKATASWAMY: Sir, in Hosur taluk, we are growing large quantities of vegetables because of the climatic conditions there, but the people are suffering as they are not in a position to sell them at good price. May I know whether any comprehensive scheme is there with Government to purchase these vegetables and sell them at fair prices so that both the ryots and consumers may get them at fair prices?

மாண்புமிகு மன்னை. திரு. ப நாராயணசாமி: அப்படி அங்கு உற்பத்தி செய்து தமிழ்நாடு பூராவும் பரவலாகக் கிடைக்க முடியுமா என்று பார்த்து முயற்சிகள் மேற்கொள்ளலாம். அந்த விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கவும் வழி செய்ய முடியுமா என்று பார்க்கலாம்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தமிழ்நாடு காய்கறி விற்பனைக்கழகம் என்ற அமைப்பு சென்னையில் இயங்குவதாக அறிகிறேன். அது எந்த அளவுக்குச் செயல் படுகிறது? அந்த அமைப்பின் மூலம் சென்னையில் காய்கறி விநியோகம் செய்ய அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

[1974 ஆகஸ்ட் 27

மாண்புமிகு மன்னை. திரு. ப. நாராயணசாமி : அதுதான் முதலிலேயே சொன்னேன். சென்னையில் மொத்தம் 9 கடைகள் செயல்படுகின்றன. தியாகராயநகரில்-2 ; சிந்தாதிரிப் பேட்டையில்-1, புதுப்பேட்டையில்-1, கெல்லிசில்-1, நந்தனத்தில்-1, ஜார்ஜ்டவுனில்—2 ; வாஷர்மேன்பேட்டையில்—1. ஆக மொத்தம் 9 இடங்கள்.

திரு. வி. பழனிவேலு : மத்திய அரசினுடைய உர விலைக் கொள்கையால் காய்கறி உற்பத்தியாளர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? காய்கறி உற்பத்தி செய்பவர்களுக்கு ஏதாவது மான்யம் அளிக்கப்படுமா ? அப்படி அளிக்கப்பட்டால் அந்தத் தொழில் நல்லமுறையில் வளர வாய்ப்பாக இருக்கும் என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : உரவிலை ஏறியிருப்பது எல்லோருக்கும் தெரியும். தெரிந்திருந்தும் ஒரு சிலர் அதைப்பற்றிப் பேசுவது கிடையாது. இருந்தாலும் இப்போது உரவிலை உள்ளபடியே அவர்களுக்குக் கட்டாது என்று தெரியும். ஆகவே, மானியம் கொடுத்தால் சரியாக வருமா என்பதை யோசிக்க வேண்டும்.

திரு. கோவை செழியன் : காய்கறிக் கடைகளில் காய்கள் பசுமையாக இருப்பதற்காக புதுவகையாக ஒரு சாயத்தைக் கலக்கி விற்பதாக நேற்று பத்திரிகையில் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இங்கே இல்லை. சென்னையில் என்ரு வந்திருக்கிறது பத்திரிகையில் ? சென்னையில் என்று இல்லை.

திரு. கோவை. செழியன். : பத்திரிகையாளர்களுக்குத் தெரியாது. சென்னையிலும் அப்படிச் சில இடங்களில் இருக்கிறது. அப்படி சாயம் போடாமல் காய்கறிகள் விற்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இப்போது தான் பத்திரிகையில் வந்திருக்கிறது. அந்தப் பாவிகளைக் கண்டு பிடிக்க உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

THIRUMATHI ALDA M. FOWLER : Sir, the schools and colleges which have boarding establishments are finding it very difficult to keep the cost of boarding down. So, may I ask the Hon. Minister if the Government will kindly arrange to supply vegetables at reduced price for these establishments ? May I suggest that co-operatives, farming co-operatives, especially in the Tambaram area be started there, because so many large colleges are there round about that area? May I request the Government to think on those lines, please ?



1974 ஆகஸ்ட் 27]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : அரிசியைப் பொறுத்தவரையில் ஹாஸ்டல்கள் மற்ற போர்டிங்க்குகளுக்குக் கொடுக்கிற ஏற்பாடுகள் இருக்கின்றன. செய்யமுடியும். காய்கறிகள் மற்ற காரியங்களைப் பொறுத்த வரையில் நாம் இனிமேல் தான் அதுபற்றி யோசிக்க வேண்டும்.

## வீட்டு வசதித் திட்டங்கள்.

* 362 விஞ—திரு. தாழை. மு. கருணாநிதி : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திருவாரூரில் வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) திருவாரூரில் தமிழ்நாடு அரசாங்க ஊழியர்களுக்கு 24.13 லட்ச ரூபாய் திட்ட மதிப்பீட்டில் 196 வாடகை குடியிருப்புகள் கட்ட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. நிலங்கள், நிலஎடுப்பு செய்யப்பட்டபின் திட்டம் துவங்கப்படும்.

* 363 விஞ—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் மலிவு விலையில் வீடு கட்டும் திட்டங்கள் எங்கெங்கே நிறைவேற்றப்பட்டுள்ளன ?

(ஆ) இத்திட்டத்தை செங்கற்பட்டு மாவட்டத்தின் எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் நீட்டிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், திருவள்ளூர், திருத்தணி, வேளச்சேரி, ஜமீன் பல்லாவரம், அமிர்தபுரம் (திருத்தணி), மேலம்மையூர் (செங்கற்பட்டு) முதலிய இடங்களில் ரூ. 97.47 லட்ச திட்ட மதிப்பீட்டில் 781 மலிவு விலை வீடுகள் கட்டும் திட்டங்கள் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டு கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது.

(இ) இம்மாவட்டத்தின் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து, குறைந்த வருமானம் உள்ளவர்கள் இத் திட்டத்தின்கீழ் முன்பணம் கட்டி பயனடைய விரும்பினால், அவர்களுடைய விண்ணப்பங்களைப் பரிசீலித்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் ஆவன செய்யும்.

திரு. கா. வேழவேந்தன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் இயங்கும் இந்தத் திட்டத்தின் முழு விவரங்கள் என்ன ? முதலில் எவ்வளவு தொகை செலுத்த வேண்டும் ? பிறகு எவ்வளவு செலுத்தவேண்டும் ? அங்குள்ள 27 ஒன்றியங்களிலும் முன் மாதிரித் திட்டமாக ஒவ்வொரு திட்டமேனும் எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இந்தத்திட்டத்தின் அடிப்படையில் ரூ. 6,000-திலிருந்து ரூ. 10,000 வரையில் வீடு கட்டும் திட்டம் ஆண்டுதோறும் ரூ. 4,200-ம் அதற்குக் கீழே சம்பாதிக்கிற மக்களுக்கு இந்த வீடுகள் கட்டித் தரப் படுகின்றன. முன்னல் எல்லாம் 25 சதவிகிதம் பணம் கட்டினல் தான் வீடு கட்டப்படும். இப்போது 10 சதவிகிதம் அவர்கள் கட்டினல் வீடுகள் கட்டித் தருகிறேம். நிலம் முடிந்த அளவிற்கு அவர்களையே வாங்கச் சொல்லி வீடுகள் கட்டித் தருகிறேம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மலிவான வீடுகளைக் கட்டுகிற இடத்தை எப்படித் தேர்ந்தெடுக்கிறீர்கள் ? ரெயில்வே வசதி இருக்கக் கூடிய இடங்களைப் பார்த்து அங்கு கட்டினல் உடனடி யாக கடன் தரப்படுகிறதா ? அப்படி ஏதாவது ப்ரயாரிட்டி வைத்திருக்கிறர்களா ? இல்லை, தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளுக்குக் கொடுக்கிறீர்களா ? எந்த அடிப் படையில் கொடுக்கிறீர்கள் ? விருப்பப்பட்ட மாவட்டங்களுக்குக் கொடுக்கும் போது விருப்பப்படி கொடுக்கிறீர்களா ? இதற்கு ஏதாவது கைட் லைன்ஸ் உண்டா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீடு கட்டுகிற இடம் தேர்ந்தெடுப்பதில் முதலில் குடிதண்ணீர் இருக்கிறதா என்று பார்க்கிறேம். அடுத்து, போக்குவரத்துத் துறை இருப்பதால் நூறு பேர்கள் இம்மாதிரி ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்தால் அந்த இடத்திற்கு அனுமதி அளிக்கிறேம். ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் இருந்தால் அங்கு வேகமாக மேற்கொள்ளப்படுகிறது. ஸைட்டைப் பார்க்கிறேம், பொறியாளர்களை அனுப்பி அஸ்திவாரம் பத்து பதினறு அடி என்று போகாமல் இரண்டு மூன்று அடியில் நல்ல தரை கிடைக்கும் முறையில் இருந்தால் அதற்கான அனுமதி அளித்து வருகிறேம்.

திரு. வை. பாலசுந்தரம் : மலிவு விலையில் கட்டித் தருகிற இந்த வீட்டிற்கு 25 சதவிகிதம் கட்டவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அதைத் தளர்த்தி 10 சதவிகிதம் கட்டினல் போதும் என்று ஒரு அறிவிப்பை அரசு செய்யுமா ?



மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதைத்தான் சொன் னேன். 10 சதவிகிதம் கட்டினல் போதும் என்ற நிலையில் இப்போது கட்டிக் கொண்டு இருக்கிறேம் என்று தான் சொன்னேன்.

*E.S.I. Scheme in Dharmapuri and Nilgiris districts.*

* 364 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to extend the benefits of the Employees' State Insurance Scheme to Dharmapuri and Nilgiris districts also ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கிடமில்லை.

திரு. என். கே. பழனிசாமி : தர்மபுரி, நீலகிரி போன்ற பிரதேசங்களில், ஊட்டியில் போட்டோ பிலிம் கம்பனியில் ஏராள மான தொழிலாளர்கள் வேலை செய்கிறர்க்ள். அதேமாதிரி தர்மபுரியிலும் ஏராளமான தொழிலாளர்கள் வேலை செய்கிறர் கள். இந்தத் திட்டம், கோவை, மதுரை போன்ற சில இடங் களில்தான் இருக்கிறது. எனவே அதை மேலும் வேறு இடங் களுக்கு விஸ்தரிக்க ஏன் முயற்சி எடுக்கக்கூடாது சர்க்கார் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தர்மபுரி, நீலகிரி போன்ற மாவட்டங்களில் தொழில்கள் எதுவும் இல்லை. நீலகிரி மாவட்டத்தில் நிறைய ப்ளான்டேஷன்ஸ் இருக்கின்றன. அங்கு இந்துஸ்தான் போட்டோ பிலிம் பாக்டரி ஒன்றுதான் இருக் கிறது. அது தவிர வேறு இல்லை. 600 தொழிலாளர்களுக்கு மேல் வாழ்கிற பகுதிகளில் இந்த ஈ.எஸ்.ஐ. திட்டம் விஸ்தரிக் கப்படுகிறது. இந்த போட்டோ பிலிம் தொழிற்சாலையில் இருக்கிற தொழிலாளர்களுக்காக இந்த திட்டத்தை விரிவு படுத்த வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் அரசு ஒரு ஆய்வு செய்து கொண்டுவருகிறது. தர்மபுரியில் லாக்கோ, ஒரே தொழிற்சாலைதான் இருக்கிறது. வேறு எந்த தொழிற்சாலையும் இல்லை. ஹோசூரில் தொழில்கள் பரவிய பிறகு ஈ. எஸ். ஐ. திட்டம் விஸ்தரிக்கப்படுவது பற்றி அரசு ஆலோசிக்கும். தோட்டத் தொழிலாளர்களுக்கான மருத்துவ வசதி பற்றி வேறு வகையில் கவனித்து வருகிறேம்.

[1974 ஆகஸ்ட் 27

## Buildings for Service Homes.

* 365. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Social Welfare be pleased to state:

(*a*) whether new buildings for the Service Homes at Thanjavur and Cuddalore have been constructed; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை: (அ), & (இ) 1973-74-ல் தஞ்சாவூர் பணி இல்லத்திற்கான கட்டிடம் ரூ. 81,000 செலவில் கட்டப்பட்டுள்ளது. கடலூரில் பணி இல்லத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 16,164.10 செலவில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், கட்டிடப் பணி இன்னும் மேற்கொள்ளப்படவில்லை.

## Consumption of diesel oil.

* 366 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government to organise a national competition on methods to economise diesel consumption; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(இ) பயணிப் பேருந்துகளில் டீசல் எண்ணெய்ச் செலவைக் கணிசமான அளவிற்குக் குறைப்பதற்கான புதிய கருத்து அல்லது கருத்துக்களைத் தெரிவிக்கக் கூடிய நபர்கள் அல்லது நிறுவனத்தைப் பற்றிப் பரிவுரைக்கத் தேசிய வல்லுநர் குழு ஒன்றை அரசு அமைத்து வருகிறது.

திரு. என். கே. பழனிசாமி: சர்க்கார் போக்குவரத்தில், ஸ்டார்ட்டிங் ட்ரபிள்தான் முக்கியமாக இருக்கிறது. பெருவாரியான பஸ்களை ஒரு தடவை தள்ளி ஓடவிட்டால் சாயந்திரம் வரை ஓடிக் கொண்டிருக்கின்றன. எனவே, அதை சீர் செய்யக் கூடிய விதத்தில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் போக்குவரத்துத் துறை மேற்கொண்டிருக்கிற பல காரியங்களைக் கூர்ந்து கவனித்து வருகிறார் என்பதில் எனக்கு



1974 ஆகஸ்ட் 27]

நிறைய நம்பிக்கை உண்டு. டீசல் பற்றாக்குறை நாட்டில் ஏற்பட்டவுடனே அதனுடைய அளவைக் குறைத்து செலவினத்தைக் குறைக்க வழிவகை காணவேண்டுமென்று முதன்முதலாக இந்தியாவிலேயே திட்டமிட்டு செயலாற்றத் தொடங்கியது தமிழ்நாடு அரசுதான். மூன்று வகையான திட்டங்களை அரசு கடந்த ஒரு ஆண்டுக்கு முன்னால் அறிவித்திருக்கிறது. முதலாவதாக, ஒரு பணிமனையில் அவர்கள் பயன்படுத்துகிற டீசலின் அளவை எவ்வளவு குறைக்கிறார்களோ, அதில் எவ்வளவு ரூபாய் மிச்சமாகிறதோ அதில் மூன்றில் ஒரு பங்கு அலுவலகங்களில் பணியாற்றுகிற அத்தனை பேர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கப்படுகிறது. இது அரசாங்கப் போக்குவரத்துத்துறை தானாகவே மேற்கொள்கிற திட்டம்.

இரண்டாவதாக, பஸ் பாடி அதிக வெயிட்டாக இருப்பதால் டீசல் அதிகச் செலவாகிறது என்று கண்டு, அந்த பாடி டிசைனில் கொஞ்சம் வெயிட் குறைப்பதற்கு ஆலோசனைகள் தேசிய மட்டத்தில் இந்தியாவில் எங்கிருந்து சொன்னாலும் அவர்களுக்கு ரூ.50,000 பரிசு கொடுப்பது என்று திட்டமிட்டது நம்முடைய அரசாங்க போக்குவரத்துத்துறைதான்.

மூன்றாவதாக, டீசல் எண்ணெய் பயன்படுத்துவதில், ஏதாவது அட்ஹசிவ்ஸ், கெமிகல்ஸ் சேர்த்து, அதன்மூலம் டீசல் எண்ணெய்ச் செலவைக் குறைப்பது, அந்த வகையில் ஆலோசனை தருபவர்களுக்கு ரூ. 1 லட்சம் பரிசு தரப்படும். இந்தியத் துணைக் கண்டத்தில் எங்குள்ளவர்கள் ஆலோசனை தந்தாலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டு அந்தப் பரிசுத்தொகை தரப்படும்.

அதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. ப்ரொபசர் நாயுடம்மா அதன் தலைவர். டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா, டாக்டர் பி. எஸ். மூர்த்தி, எம். வி. சூரி, எஸ். ரத்தினம், டைரக்டர் ஆப் மோட்டார் வெஹிகில்ஸ் அண்டு ரிசர்ச், மகாராஷ்டிரா, டாக்டர் என். ஜி. ரத்னு, ஏ. கே. டே ஆகியோர் அந்தக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

DR. H. V. HANDE: Sir, this House is glad that steps have been taken to economise the consumption of diesel oil. May I know whether it is possible for this Government to pass the extra diesel oil thus saved towards the expansion of the routes. I am told the Central Government have given a directive to the State Government to stop expanding the long-distance routes. So, may I know whether it is possible for the Government to utilise the extra saving of oil towards the expansion of the routes and see to it that our transport system is normalised and long-distance routes are properly looked after?

மாண்புமிகு திரு. ச. ராமச்சந்திரன்: தலைவரவர்களே, மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இதிலேதான் அடிப்படையான வேறுபாடு. மத்திய அரசைப் பொறுத்தவரையில் எவ்வளவு

[1974 ஆகஸ்ட் 27

செலவாகிறது என்று கணக்கிட்டு அந்தச் செலவை சரிக்கட்டு வதற்காக எந்த நாட்டுக்காரர் கடன் கொடுப்பார் என்று ஒவ்வொரு நாடாகத் தேடிக் கொண்டிருக்கிறுர்கள். ஆனுல் நம்மை பொறுத்தவரையில் செலவு என்று சொல்கிறபோது டீசலின் செலவைக் குறைத்தால் அது உபயோககரமாக இருக்கும் என்று உயர்ந்து இருக்கிற காரணத்தால், நாம் இப்போது எவ்வளவு டீசல் கொள்முதல் செய்கிறுேமோ அந்த கொள்முதல் செய்வதில் எவ்வளவு சிக்கனத்தைக் கடைப்பிடிக்கிறுேமோ, அந்தச் சிக்கனத்தின் மூலம் மக்களுக்கு நன்மை செய்யும் வகையில் நாம் திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருக்கிறுேம்.

*Light weight buses.*

* 367. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(*a*) whether there is any proposal under the consideration of the Government to promote competition in designing a lighter bus body for State Transport buses ; and

(*b*) if so, the details thereof ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> (அ) ஆம்.

(இ) எரிபொருள் சிக்கனத்துக்கு உதவும் வகையில், இலேசான எடையுள்ள பேருந்து உடற்பகுதி கூட்டினுக்கான, ஏற்புடைய வடிவமைப்பு ஒன்றை அளிக்கும் நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கு ரூ. 50,000 பரிசு வழங்குவதற்காக அரசு ஒரு குழுவை அமைத்து உள்ளது.

<u>திரு. என். கே. பழனிசாமி :</u> தலைவரவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்ஞர்கள். அந்தக் குழுவிற்கு இதுவரையில் ஏதாவது ஆலோசனைகள் வந்திருக்கிறதா ? முக்கியமான ஆலோசனை ஏதாவது இருந்தால் அதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, அவைகள் வழங்கப்படுவதற்கான இறுதி தேதி 31—12—1974 வரையில் இருக்கிறது. ஆகையால், இந்த ஆண்டு டிசம்பர் முடிகிற வரையில் எங்கிருந்தும் அத்தகைய ஆலோசனைகள் வரலாம். அதையெல்லாம் சேகரித்து, அதற்குப் பின்ஞலேதான் அந்த நிபுணர்கள் குழு முடிவு எடுக்கும்.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி ;</u> தலைவரவர்களே, இந்தக் குழுவில் உள்ள எல்லா டாக்டர்களுக்கும், டாக்டர் பட்டம் கௌரவப் பட்டமா அல்லது படித்து டாக்டர் பட்டம் பெறறு இருக்கிறுர்களா ?



1974 ஆகஸ்ட் 27]

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> அந்த ஆராய்ச்சி அம்மையாருக்கு இப்போது தேவையில்லை.

<u>திரு. கே. எ. வகாப் :</u> தலைவரவர்களே, இந்த இலேசான போக்குவரத்து கட்டுவதற்கு, இப்போது உடையாத பிளாஸ்டிக் வருவதை வைத்துக் கொண்டு, மேல்நாடுகளில் அதை வைத்துக் கொண்டு செய்து வருகிறுர்களே......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அந்தக் குழுவிடத்தில் நீங்கள் சொன்ஞல் ரூ. 50,000 பணம் வாங்கிக் கொள்ளலாம்.

<u>திரு. கே. எ. வகாப் :</u> அப்படிப்பட்ட கருத்தில், அந்தக் குழு யோசனை செய்வதற்கு அரசாங்கம் கேட்டுக் கொள்ளுமா ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனது யோசனையை அந்தக் குழுவிற்குத் தெரிவித்தால் நன்றுக இருக்கும்.

*Khadi and Village Industries Board.*

* 368. *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether the Government propose to set up a High Level Committee to review the methods of work as well as to evaluate the performance of Tamil Nadu Khadi and Village Industries Board ; and

(*b*) if so, the details thereof ?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> (அ) இல்லை.

(இ) இவ்வினுவிற்கு இடமில்லை.

<u>திரு. என். கே. பழனிசாமி:</u> சார், இந்த காதி அண்டு வில்லேஜ் இன்டஸ்டீரிஸ் போர்டு...........

<u>திரு. என். எம். இராஜா:</u> பாயின் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைரவர்களே, இன்றைக்கு 8 பில்கள் இருக்கின்றன. நேரம் போதாது. கேள்வி நேரம் 10—30 வரை வந்துகொண்டிருக்கிறது. இன்னும் கேள்விகள் நிறைய இருந்துகொண்டிருக்கின்றன. தொடர்ந்து இந்த 8 பில்களையும் முடிக்கப்போகிறீர்களா, நாளைக்கும் விவாதம் போகுமா? இன்றைக்கே நாங்கள் ஊருக்குப் போக டிக்கெட் வாங்கி வைத்துக்கொண்டிருக்கிறுேம். தலைவரவர்களே, அதைச் சொல்ல வேண்டும் .

[1974 ஆகஸ்ட் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிந்த உடனே தலைவர்கள் முடிவு செய்யட்டும்.

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, ஏற்கெனவே காதி போர்டில் அதிக லாபம் வருவது இல்லை. நஷ்டம் வருகிறது. அந்த சிறு தொழில்கள் பூராவும் மெசினரிக்கு எதிராக நிற்க முடியவில்லை. ஆகவே, அந்தத் தொழில்கள் லாபகரமாக நடப்பதற்கு மாற்றுத் திட்டம் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்த கதர் வாரியம் சம்பந்தப்பட்ட தொழில்களைச் சிறந்த முறையில் நடத்த வேண்டுமென்று கடந்த 14—8—1973 நாளன்று சட்ட மன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பொதுக் கணக்காய்வுக் குழு அறிக்கையில், தனியாக நிபுணர் குழு நியமித்து பரிந்துரை செய்யும்படி யோசனை சொல்லி இருந்தார்கள். அந்த யோசனையை ஏற்றுக்கொண்டு தலைமை நிர்வாக அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு, சென்னை உற்பத்தித் திறன் ஆய்வுக் குழு, மெட்ராஸ் ப்ரொடக்டிவிடி கவுன்சில், அவர்களிடத்தில் அந்தத் துறை பற்றி ஆலோசனை கேட்டு, அவர்களும் ஒரு சிறந்த யோசனை சொல்லி இருக்கிறார்கள். அந்த யோசனை வாரியத்தின் பரிசீலனையில் இப்போது உள்ளது. அந்தப் பரிசீலனை விரிவாக முடிக்கப்பட்டு, அவர்கள் சொல்லியிருக்கும் சிபாரிசுகளை அமல்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

### *Cheese manufacturing unit.*

* 369. *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation has proposed to manufacture cheese ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

### இலங்கையிலிருந்து திரும்பியோருக்குத் தேயிலைத் தோட்டங்களில் வேலை.

* 370 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :



1974 ஆகஸ்ட் 27]

(அ) இலங்கையிலிருந்து வந்த அகதிகளில் எத்தனை குடும்பங்கள் 1974 சனவரி வரை ரப்பர் தோட்ட வேலையில் அமர்த்தப்பட்டனர்?

(இ) அவர்களில் எத்தனை குடும்பங்கள் அங்கு வேலை செய்யாமல் திரும்பி சென்றுவிட்டனர்?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: (அ) 115.

(இ) 4.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, ரப்பர் தோட்டத்தில் வேலைக்கு அமர்த்தப்பட்ட அகதிகள் திரும்பிச் சென்றதற்கு என்ன காரணம்? திரும்பிச் சென்றவர்கள் மிகவும் சிரமப்படுகிற காரணத்தால் அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து இனிமேலாவது இது போன்ற அகதிகளுக்கு உரிய வாய்ப்பு வசதிகளை உருவாக்குவதற்கு முனைப்புத் திட்டம் வகுக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, 4 குடும்பங்கள் ரப்பர் தோட்டத்திலிருந்து சென்றுவிட்டார்கள் என்று குறிப்பு இருக்கிறது. அந்தக் குடும்பங்களில் ஒரு குடும்பத்திற்கு நீலகிரியில் நிலங்கள் இருப்பதாகவும் அங்கேபோய் பயிரிட்டுத் தொழில் செய்வதற்காக சென்றுவிட்டார்கள். மற்ற மூன்று பேரும் மஸ்தூராக வேலை செய்தவர்கள். அவர்கள் 3 குடும்பத்திற்கும் குளிர் தாங்கவில்லை. மேலும் அங்கே இருக்கப் பிடிக்கவில்லை. ஆகவே, வெளியே சென்று விட்டார்கள். இருக்கிறவர்களுக்கு தேவையானவற்றை அரசாங்கம் விதிப்படி செய்து வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பர்மா அகதிகளுக்கு ரப்பர் பிளான்டேஷன்களில் ஒரு குடும்பத்திற்கு 2 பேருக்குத்தான் வேலை கொடுக்கப்படுகிறது. அந்த இருவருடைய ஊதியத்தை வைத்துக்கொண்டு அவர்கள் குடும்பம் நடத்த முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, ஒரு குடும்பத்திலுள்ள அனைத்து நபர்களுக்கும் வேலை கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, குடும்பத்திற்கு இருவருக்கு நிரந்தர வேலை, பாக்கி உள்ளவர்களுக்கு அன்றாடம் கூலி வேலை கொடுத்துவிடுகிறார்கள். எல்லோரையும் நிரந்தரம் செய்வது என்பது படிப்படியாக செய்ய வேண்டும். 2,000 ஏக்கர் நிலங்களில் 124·63 லட்சம் மேற்பட்ட செலவில் ரப்பர் தோட்டம் அமைத்து, குடியிருக்க வீடுகள் மற்றவைகள் செய்து தருகிறார்கள். இன்னும் அந்தத் திட்டம் சரிவர நிலைக்கு வரவில்லை. எல்லோருக்கும் நிரந்தர வேலை அளிக்கும் காலகட்டம் வரும். இப்போது இருக்கும் நிலை இதுதான்.

[1974 ஆகஸ்ட் 27

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே இந்த இலங்கை அகதிகளில் ஏற்கனவே ரப்பர், தேயிலை போன்ற தோட்டங்களில் பணியாற்றியவர்களுக்கு அந்த மாதிரி ரப்பர் தோட்டத்தில் வேலை கொடுக்கலாம். ஆனால் அவர்களில் சிலர் வியாபாரம் மற்றும் வேறு தொழில்களில் ஈடுபட்டிருந்து இங்கே அவர்கள் வந்தவுடன் அவர்களை ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யச் சொல்வதால் அவர்கள் சென்றுவிடும் நிலை இருக்கிறது. எதிர்காலத்திலாவது, அவரவர்கள் அங்கே என்னென்ன வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்களோ அந்த வேலையைச் செய்வதற்குரிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: அந்த முறை இப்போது பின்பற்றப்படுகிறது. ரப்பர் தோட்டங்களில் வேலை செய்தவர்களுக்கு ரப்பர் தோட்டத்திலும் வியாபாரம் செய்தவர்களுக்கு வியாபாரம் செய்வதற்கும், கூட்டுறவுத் துறையில்கூட அவரவர்கள் எந்தெந்த தொழில்களைச் செய்தார்களோ அவற்றைச் செய்வதற்கு கூட்டுறவுத் துறையில் கடன் கொடுத்து வருகிறோம். வருகிறவர்கள் அத்தனை பேருக்கும் இப்போதுள்ள நிலையில் நிரந்தர வேலை கொடுக்க முடியாத நிலை இருக்கிறது.

## வெள்ளிக் குறியிடாத வினாக்கள்

### *Government Brick Factory.*

1 *Q.*—Thiru N. DENNIS : Will the Honourable the Minister for Industries be pleased to state—

(*a*) whether the state Brick Factory near Madras, is facing loss ; and

(*b*) if so, the details thereof ?

*A.*—

(*a*) Yes.

(*b*) The total loss incurred during the years 1967–68 to 1971–72 is Rs. 37,71,604·43.

(அ) ஆம்.

(ஆ) 1967–68 ஆம் ஆண்டு முதல் 1971–72 ஆம் ஆண்டு முடிய மொத்த இழப்பு ரூ. 37,71,604·43.



1974 ஆகஸ்ட் 27]

### *Profits earned by Nationalised Transport.*

2 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Transport be pleased to state the net profit obtained by the Government by running the Nationalised Transport in this State during 1971–72 ?

*A.*—

The Government has not earned any profit, but only incurred loss to the tune of Rs. 171·53 lakhs during 1971–72.

### மகாராஜபுரம்-கங்கணம்புத்தூர் சாலை.

3 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியத்தில் மகாராஜபுரம் பஞ்சாயத்தினையும் கங்கணம்புத்தூர் பஞ்சாயத்தினையும் இணைக்கின்ற சாலையினைக் கப்பிச்சாலையாக மாற்றியமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—இல்லை.

### பயணிகள் விடுதிகள்.

[illegible] வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பொதுப்பணித் துறை—நெடுஞ்சாலைத் துறை பயணிகள் விடுதிகளில் பயணிகள் தங்குவதற்கு விதிமுறைகள் ஏதேனும் உள்ளனவா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் யாவை?

விடை—

(அ) ஆம்.

(இ) பொதுப்பணித்துறை—நெடுஞ்சாலைத் துறை பயணிகள் விடுதிகளில் ஆய்வு மாளிகையில் தங்குவதற்கான விதிமுறைகளைக் கொண்ட அரசாணைகள் தொகுப்பு சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது a

a618–628 ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

*A.*—

(*a*) Yes.

(*b*) Rules relating to the occupation of T.Bs. I.Bs. are placed on the Table of the House.

## இலங்கைத் தமிழர்கள்.

5 வினு—திரு. வை. பாலசுந்தரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து தமிழக அரசு அண்மையில் மத்திய சர்க்காருடன் ஆலோசனை ஏதேனும் நடத்தியதா?

விடை—

இல்லை.

## வேப்பம்பேடு—பூச்சி அத்திப்பேடு சாலையில் பாலம்

6 வினு—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், வேப்பம்பேடு கிராமத்திலிருந்து பூச்சி அத்திப்பேடு செல்லும் பாதையில் உள்ள சிறு பாலம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) இது எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

(அ) 1974–75-ம் ஆண்டிற்கான திட்டத்தில், ரூ. 10,000 செலவில் இந்தச் சிறு பாலத்தை அமைப்பதாக எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம் தீர்மானித்திருக்கிறது.

(ஆ) 1974–75-ல் இவ்வேலை செயல்படுத்தப்படும்.



## *State Films Division.*

7 *Q.*—THIRU G. R. EDMUND : Will the Honourable the Chief Minister be pleased to state :

(*a*) the total number of Documentaries produced by the State Films Division during the last three years.

(*b*) the number of (i) feature films and (ii) news reels ; and

(*c*) the amount spent on these productions, film-wise.

*A.*—

(*a*) The total number of documentary films produced by Tamil Nadu Films Division during the last three years are as follows :—

| *Year.* | *No. of documentaries produced.* |
|---|---|
| 1971—72 .. .. .. .. | 8 including two colour quickie. |
| 1972—73 .. .. .. .. | 4 |
| 1973—74 .. .. .. .. | 10 |

(*b*) (i) No feature film has been produced by Tamil Nadu Films Division.

(ii) The total number of News reels produced during the last three years are as follows :—

| *Year.* | *No. of news reels produced.* |
|---|---|
| 1971—72 .. .. .. .. | 23 |
| 1972—73 .. .. .. .. | 23 |
| 1973—74 .. .. .. .. | 23 |

### (c) DOCUMENTARY FILMS.

| Name of the film. | Amount incurred. |
|---|---|
| | RS. P. |
| **1971-72—** | |
| 1 Museum .. .. .. .. .. .. | 13,000·00 |
| 2 High Yielding Varieties .. .. .. .. }<br>3 Plant Protection .. .. .. .. .. }<br>4 Fertilizers .. .. .. .. .. .. } | 67,942·35 |
| 5 Marine Fisheries .. .. .. .. | 20,270·00 |
| 6 Family Planning—<br>1. Main Documentary Film, Black and White }<br>2. Colour quickie, 2 films .. .. } | 88,790·95 |
| | 1,90,003·30 |
| **1972-73—** | |
| 1 Fire Fighting .. .. .. .. | 15,000·00 |
| 2 Small Savings (Namadu Kadamai) .. .. | 17,835·00 |
| 3 Valluvar Vakku (Family Planning) .. .. | 56,472·70 |
| 4 Prosperity Brigade .. .. .. .. | 20,000·00 |
| | 1,09,307·70 |
| **1973-74—** | |
| 1 Management of Paddy .. .. .. .. | 20,000·00 |
| 2 Management of Cotton .. .. .. .. | 20,000·00 |
| 3 Maintenance of Power Sprayers .. .. .. | 20,000·00 |
| 4 Enthanalum Kappom .. .. .. .. | 20,000·00 |
| 5 Manam Oru Kurangu .. .. .. .. | 33,000·00 |
| 6 Valamana Vazhvu .. .. .. .. .. | 33,000·00 |
| 7 Kanketta Piragu .. .. .. .. .. | 33,000·00 |
| 8 Annaiyar Iruvar .. .. .. .. .. | 33,000·00 |
| 9 Vazhkai Valam Pera .. .. .. .. | 33,000·00 |
| 10 Asian Productivity .. .. .. .. .. | 20,000·00 |
| | 2,65,000·00 |



2. *Newsreels films.*

| Year. | | | | | | | Amount incurred. |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | RS. P. |
| 1971-72 | .. | .. | .. | .. | .. | .. | 5,35,976·00 |
| 1972-73 | .. | .. | .. | .. | .. | .. | 6,15,000·00 |
| 1973-74 | .. | .. | .. | .. | .. | .. | 7,50,000·00 |

(அ) கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாடு திரைப்படப் பிரிவு தயாரித்த விளக்கப் படங்களின் மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :—

| வருடம். | தயாரிக்கப்பட்ட விளக்கப் படங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1971-72 | இரு வண்ண துண்டுப் படங்களையும் (Colour Quickie) சேர்த்து 8. |
| 1972-73 | 4 |
| 1973-74 | 10 |

(இ) (1) விளம்பரப் படங்கள் (Feature Films) ஏதும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவால் தயாரிக்கப்படவில்லை.

(2) கடந்த மூன்று ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட செய்திப் படங்களின் (News reels) மொத்த எண்ணிக்கை பின்வருமாறு :—

| வருடம். | தயாரிக்கப்பட்ட செய்திப் படங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1971-72 | 23 |
| 1972-73 | 23 |
| 1973-74 | 23 |

(உ) விளக்கப் படங்கள்— .

| வருடமும் படத்தின் பெயரும். | செலவான தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. பை. |
| **1971–72—** | |
| 1 கல்லும் சொல்லாதோ கவி (Museum) | 13,000·00 |
| 2 உயர் விளைச்சலைத்தரும் உன்னதப் பொருள்கள் (High Yielding varieties) 3 பயிர்ப் பாதுகாப்பு (Plant Protection) 4 உரமே உணவு (Fertilizers) | 67,942·35 |
| 5 நெடுங் கடல் மேலே (Marine Fisheries) | 20,270·00 |
| 6 குடும்பக் கட்டுப்பாடு (Family Planning) | 88,790·95 |
| | 1,90,003·30 |
| **1972–73—** | |
| 1 குடிசைப் பகுதிகளில் தீயணைப்பு (Fire Fighting) | 15,000·00 |
| 2 நமது கடமை (Small Savings) | 17,835·00 |
| 3 வள்ளுவர் வாக்கு (Family Planning) | 56,173·70 |
| 4 வீட்டுக்கு ஒருவர் [(R.D.L.A.)(Prosperity Brigade)] | 20,000·00 |
| | 1,09,307·70 |
| **1973–74—** | |
| 1 நெல் வேளாண்மைக்கு வழி முறைகள் (Management of Paddy) | 20,000·00 |
| 2 பருத்தி (Cotton) | 20,000·00 |
| 3 விசை தெளித்தல் (Maintenance of Power Sprayers). | 20,000·00 |



| வருடமும் படத்தின் பெயரும். | | செலவான தொகை. |
|---|---|---|
| (1) | | (2) |
| | | ரூ. பை. |
| 4 எந்த நாளும் காப்போம் (Family Planning) | | 20,000·00 |
| 5 மனம் ஒரு குரங்கு | Do. | 33,000·00 |
| 6 வளமான வாழ்வு | Do. | 33000·00 |
| 7 கண்கெட்ட பிறகு | Do. | 33,000·00 |
| 8 அன்னையர் இருவர் | Do. | 33,000·00 |
| 9 வாழ்க்கை வளம்பெற | Do. | 33,000·00 |
| 10 உற்பத்தித் திறன் (Asian Productivity) | | 20,000·00 |
| | | 2,65,000·00 |

| செய்திப் படங்கள். (1) வருடம். | செலவான தொகை. (2) ரூ. பை. |
|---|---|
| 1971–72 .. .. .. .. .. | 5,35,976·00 |
| 1972–73 .. .. .. .. .. | 6,15,000·00 |
| 1973–74 .. .. .. .. .. | 7,50,000·00 |

*Fish Sales Counters.*

8 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Social Welfare be pleased to state—

(*a*) the number of fish sales counters opened by the Government in the State during 1972–73 ; and

(*b*) the number proposed to be opened during 1973–74 ?

*A.*—

(*a*) No sales counters were opened by the Government in the State during 1972–73.

(*b*) One counter has been constructed near Marina Acquarium during 1973–74 and this will be commissioned shortly.

(அ) இம்மாநிலத்தில் 1972–73 ஆம் ஆண்டில் மீன் விற்பனை நிலையங்கள் எதுவும் அரசினுல் திறக்கப்படவில்லை.

[1974 ஆகஸ்ட் 27

(இ) 1973–74 ஆம் ஆண்டில் சென்னை மெரீனு மீன் கண்காட்சி சாலையருகில் ஒரு மீன் விற்பனை நிலையம் கட்டப்பட்டு அண்மையில் செயல்படவிருக்கிறது.

## அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

9 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்களுக்கு வீடு கட்டுவதற்காக 1973 டிசம்பர் வரை தமிழகம் முழுவதும் வழங்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அவைகளில் வீடு கட்டப்படாமல் காலியாக உள்ள மனைகள் எவ்வளவு?

விடை—

(அ) 2,06,412.

(இ) 70,377.

10 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டுமனை பட்டாக்கோரி அரிசனங்களிடமிருந்து அரசுக்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்துள்ளன?

(இ) இதில் எத்தனை பேர்களுக்கு பட்டாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன?

விடை—

(அ) 1973 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் வீட்டுமனை பட்டாக்கோரி அரிசனங்களிடமிருந்து அரசுக்கு வந்த விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை 542.

(இ) இதில் 217 பேருக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 27]

11 வினு—திரு. கே. என். குமாரசாமி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சூலூர், பல்லடம் வட்டத்தில் எத்தனை ஊர்களில் அரிசனங்களுக்கு வீடு கட்ட நிலம் வழங்கும் திட்டம் அமல் ஆக்கப்பட்டது?

விடை—

கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடம் வட்டத்தில் (சூலூர் மற்றும் பல்லடம்) 1973–74-ம் வருடம் வரை 26 கிராமங்களில் அரிசனங்களுக்கு வீடு கட்ட நிலம் வழங்கும் திட்டம் அமல் ஆக்கப்பட்டது.

## குடும்பநலத் திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை.

12 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1973 ஆம் ஆண்டில் நவம்பர் முடிய குடும்ப நலத்திட்டத்தின்கீழ் அறுவை சிகிச்சை பெற்றவர்கள் எத்தனை பேர்; மாவட்ட வாரியாக?

(இ) அவர்களுள் ஆண், பெண் முறையே எத்தனை பேர்?

விடை—

(அ) & (இ) விடை ஒன்று பேரவை* முன் வைக்கப்பட்டுள்ளது.

## கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து அரிசி கடத்தியோர்.

13 வினு—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1973-ம் ஆண்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் அரிசி கடத்தலில் கைதானவர்கள் எத்தனை பேர்?

(இ) அதில் தண்டனை அடைந்தவர்கள் எத்தனை பேர்?

(உ) கைப்பற்றப்பட்ட அரிசியின் அளவு என்ன?

*628—629-ம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

விடை—

(அ) 664.

(இ) 398.

(உ) அரிசி 3,048.74 குவிண்டால்.

*School for Blind at Irenipuram.*

14 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) Whether any grant is being given to the School for the blind at Irenipuram in Kanyakumari district ; and

(*b*) If so, the details of the grants made during the calendar years 1972 and 1973 ?

*A.*—

(*a*) No.

(*b*) Does not arise.

விடை—

(அ) இல்லை.

(இ) கேள்விக்கிடமில்லை.

*Occupants of Kudiyiruppu Act.*

15 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Revenue be pleased to state the districts to which Tamil Nadu Occupants of Kudiyiruppu Act has been extended now ?

*A.*—

The Tamil Nadu Occupants of Kudiyiruppu (Conferment of Ownership) Act, 1971 has been extended to the following districts :—

(1) Thanjavur.

(2) Chingleput.

(3) North Arcot.



(4) South Arcot.

(5) Tiruchirappalli.

(6) Dharmapuri.

(7) Salem.

(8) Ramanathapuram.

(9) Tirunelveli.

(10) Kanyakumari.

(11) Madurai.

(12) Coimbatore and

(13) Pudukkottai.

விடை—

தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகக்காரர்கள் (உடைமையுரிமை வழங்கல்) சட்டம் 1971, இப்பொழுது கீழ்க்கண்ட மாவட்டங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது:—

(1) தஞ்சாவூர்.

(2) செங்கல்பட்டு.

(3) வட ஆற்காடு.

(4) தென் ஆற்காடு.

(5) திருச்சிராப்பள்ளி.

(6) தர்மபுரி.

(7) சேலம்.

(8) இராமநாதபுரம்.

(9) திருநெல்வேலி.

(10) கன்னியாகுமரி.

(11) மதுரை.

(12) கோயம்புத்தூர்.

(13) புதுக்கோட்டை.

*Temple under Atheenams.*

16 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Honourable the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the total number of temples under the control of the (i) Thiruvavaduthurai Atheenam, (ii) Dharmapuram Atheenam, (iii) Kundrakudi Atheenam at present ; and

(*b*) the details—District-wise ?

[1974 ஆகஸ்ட் 27

விடை—

(அ) திருவாவடுதுறை ஆதினத்தில் 19 திருக்கோயில்களும், தர்மபுரம் ஆதினத்தில் 28 திருக்கோயில்களும், குன்றக்குடி ஆதினத்தில் 6 திருக்கோயில்களும் ஆக மொத்தம் 53 திருக்கோயில்கள் உள்ளன.

(இ) மாவட்ட வாரியாக கோவில்களின் பட்டியல் @ ஒன்று அவைமுன் @ வைக்கப்படுகிறது.

## *Motor Vehicles Licences.*

17 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Honourable the Minister for Transport be pleased to state—

(*a*) whether it is a fact that the work relating to the licensing and taxation of motor vehicles will now be done by the Deputy Transport Commissioner (Nationalisation) and not by the Commissioner of Police; and

(*b*) if so, the details thereof?

*A.*—

(*a*) Yes.

(*b*) Orders were issued in G.O. Ms. No. 473, Home, dated 6th March 1974 that the entire work relating to taxation and licensing under the Motor Vehicles Act and the Rules made thereunder will be transferred with effect from 18th March 1974 from the Police Department to the Transport Department. The Deputy Transport Commissioner (Nationalisation), Madras shall be in-charge of this work functioning as the Regional Transport Authority of Madras City, having his office in the present premises of the Deputy Commissioner of Police (Traffic and Licensing), Madras. The Collection centres now run by the Police Department shall continue to function till separate unit offices of the Transport Department are opened.

The Regional Transport Officer, Madras shall be the Secretary to the Regional Transport Authority, Madras.

The Deputy Commissioner of Police (Traffic and Licensing), who shall be re-designated as Deputy Commissioner of Police (Traffic) shall, under the immediate control of the Commissioner of Police, be in-charge of the enforcement of the provisions of the Motor Vehicles Act and the rules entrusted from time to time to the Police Department and the enforcement of the Hackney Carriage Act.

@ 630—636-ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1974 ஆகஸ்ட் 27]

விடை—

(அ) ஆம்.

(இ) மோட்டார் வண்டிகள் சட்டம் அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் ஆகியவற்றின் கீழ் வரி விதித்தல், உரிமம் வழங்குதல் தொடர்பான பணிகள் அனைத்தும் 18—3—1974-லிருந்து காவல் துறையிலிருந்து போக்குவரத்துத் துறைக்கு மாற்றப்படுமென, உள்துறையின் 6—3—1974 நாளிட்ட 473-ம் எண்ணில் அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சென்னை போக்குவரத்துத் துணை ஆணையாளர்(நாட்டுடைமை)இப்பணிக்கு பொறுப்பு வகிப்பார். இவர், சென்னை மாநகரத்தின் வட்டார போக்குவரத்து அதிகாரியாகச் செயல்படுவார். தற்போது சென்னையிலுள்ள காவல் துறை துணை ஆணையாளர் (போக்குவரத்து உரிமம் வழங்குதல்) அலுவலகத்தின் வளவிற்குள் இவரது அலுவலகம் அமைந்திருக்கும். தற்போது காவல் துறையால் நடத்தப்படும் வசூல் நிலையங்கள், போக்குவரத்துத் துறையின் தனிப்பட்ட பிரிவு அலுவலகங்கள் திறக்கப்படும் வரை தொடர்ந்து செயல்படும்.

வட்டாரப் போக்குவரத்து அதிகாரி, சென்னை வட்டாரப் போக்குவரத்து அதிகார மன்றத்தின் செயலாளராவார்.

காவல்துறை துணை ஆணையாளர் (போக்குவரத்து-உரிமம்) வழங்குதல் பதவிப் பெயர் காவல்துறை துணை ஆணையாளர் (போக்குவரத்து) என்று மாற்றப்படும். காவல்துறை ஆணையாளரின் நேரடி பொறுப்பின்கீழ் செயல்படுவதுமன்றி காவல்துறையிடம் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் மோட்டார் வண்டிகள் சட்டம், விதிகள் ஆகியவற்றின் விதித்துறைகளைச் செயல்படுத்துவதும், பயணிப் பேருந்து சட்டத்தினைச் செயல்படுத்துவதும் இவரது பொறுப்பாகும்.

## நடமாடும் நீதிமன்றங்கள்.

18 வினா—திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தற்போது நடமாடும் கோர்ட் (Mobile Court) எங்கெல்லாம் செயல்பட்டு வருகிறது.

(இ) I.P.C.-ல் எந்த எந்த பிரிவு கேஸ்கள் அந்தக் கோர்ட் விசாரணை செய்கிறது.

விடை—

(அ) குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1973, 1—4—1974 முதல் அமுலுக்கு வந்த பிறகு, தமிழ்நாட்டில் நடமாடும் நீதி மன்றங்கள் எவ்விடத்திலும் செயல்படுவதில்லை.

(இ) தற்போது இக்கேள்விக்கு இடமில்லை.

*A.*—

(*a*) Consequent on the introduction of new Code of Criminal Procedure, 1973, all the Mobile Courts in the State ceased to function from 1st April 1974.

(*b*) Does not arise now.

*Metropolitan Courts.*

19 *Q.*—THIRU N. DENNIS: Will the Honourable the Minister Industries be pleased to state—

(*a*) the total number of Metropolitan Courts to be set up at Madras City; and

(*b*) the places of their locations?

*A.*—

(*a*) and (*b*).—At present there are 19 (nineteen) Magistrate's Courts in Madras City and they are situated as indicated against their names below:—

Egmore, Madras—

1. Chief Metropolitan Magistrate (District Judge cadre).
2. II Metropolitan Magistrate (Sub-Judge cadre).
3. V Metropolitan Magistrate (District Munsif cadre).
4. VI Metropolitan Magistrate (District Munsif cadre.)
5. X Metropolitan Magistrate (Sub-Judge cadre).
6. XII Metropolitan Magistrate (District Munsif cadre).
7. XIII Metropolitan Magistrate (District Munsif cadre).



Egmore, Madras—

8. XIV Metropolitan Magistrate (District Munsif cadre).
9. XV Metropolitan Magistrate (District Munsif cadre).

George Town, Madras—

10. III Metropolitan Magistrate (Sub-Judge cadre).
11. VII Metropolitan Magistrate (District Munsif cadre).
12. VIII Metropolitan Magistrate (District Munsif cadre).
13. XVI Metropolitan Magistrate (District Munsif cadre).
14. XVII Metropolitan Magistrate (District Munsif cadre).

Saidapet, Madras—

15. IV Metropolitan Magistrate (Sub-Judge cadre).
16. IX Metropolitan Magistrate (District Munsif cadre).

[illegible] ...politan Magistrate (Sub-Judge cadre).

[illegible] Metropolitan Magistrate (District Munsif cadre).

[illegible] Metropolitan Magistrate (District Munsif cadre).

[illegible] ...ere is no fresh proposal for setting up new Metropolitan Magistrate ...rts now.

(அ), (இ).—சென்னை மாநகரில் தற்போது 19 (பத்தொன்பது) மாநகர் மாஜிஸ்டிரேட் நீதி மன்றங்கள் உள்ளன. அவை கீழ்க்காணும் இடங்களில் அமைந்துள்ளன:—

எழும்பூர், சென்னை—

1 மாநகர தலைமை மாஜிஸ்டிரேட் (மாவட்ட நீதிபதி பதவித் தரம்).
2. மாநகர இரண்டாவது மாஜிஸ்டிரேட் (துணை நீதிபதி பதவித்தரம்).
3. மாநகர ஐந்தாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).

[1974 ஆகஸ்ட் 27

எழும்பூர், சென்னை—தொடர்ச்சி.

4. மாநகர ஆறுவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
5. மாநகர பத்தாவது மாஜிஸ்டிரேட் (துணை நீதிபதி பதவித்தரம்).
6. மாநகர பன்னிரண்டாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
7. மாநகர பதின்மூன்றுவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
8. மாநகர பதினுன்காவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
9. மாநகர பதினைந்தாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).

ஜார்ஜ்டவுன், சென்னை—

10. மாநகர மூன்றுவது மாஜிஸ்டிரேட் (துணை நீதிபதி பதவித்தரம்).
11. மாநகர ஏழாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
12. மாநகர எட்டாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
13. மாநகர பதினுறுவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
14. மாநகர பதினேழாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).

சைதாப்பேட்டை, சென்னை—

15. மாநகர நான்காவது மாஜிஸ்டிரேட் (துணை நீதிபதி பதவித்தரம்).
16. மாநகர ஒன்பதாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
17. மாநகர பதினென்றுவது மாஜிஸ்டிரேட் (துணை நீதிபதி பதவித்தரம்).
18. மாநகர பதினெட்டாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).
19. மாநகர பத்தொன்பதாவது மாஜிஸ்டிரேட் (மாவட்ட முன்சீப் பதவித்தரம்).

தற்போது மாநகர மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களைப் புதிதாக அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.



1974 ஆகஸ்ட் 27]

## திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசன மாணவர் விடுதிகள்.

20 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் எத்தனை அரிசன ஹாஸ்டல்கள் தற்போது உள்ளன?

(இ) அதில் வார்டனுகப் பணிபுரிபவர்கள் எத்தனை பேர்?

(உ) அதில் அரிசனங்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) 58.

(இ) 58.

(உ) 39.

## திருநெல்வேலி மாவட்டத்தில் நிலவள வங்கிகள்.

21 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் எத்தனை நிலவள வங்கிகள் தற்போது உள்ளன?

(இ) அவைகள் எந்தெந்த ஊர்களில் உள்ளன?

விடை—

(அ) & (இ)—திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள நிலவள வங்கிகளின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:—

| வரிசை எண்ணும் நிலவள வங்கிகளின் பெயர்களும். | நிலவள வங்கிகளின் தலைமையிடம். | நிலவள வங்கிகளின் கிளைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 திருநெல்வேலி .. | திருநெல்வேலி | .. |
| 2 பாளையங்கோட்டை | பாளையங்கோட்டை | .. |

[27 ஆகஸ்ட் 1974

| வரிசை எண்ணும் நிலவள வங்கிகளின் பெயர்களும். | நிலவள வங்கிகளின் தலைமையிடம். | நிலவள வங்கி களின் கிளைகள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 3 தென்காசி .. | தென்காசி | ஆலங்குளம், கீழ்ப் பாவூர், கடைய நல்லூர். |
| 4 செங்கோட்டை .. | செங்கோட்டை | .. |
| 5 நாங்குநேரி .. | நாங்குநேரி | காலக்காடு, ராதா புரம். |
| 6 வள்ளியூர் .. | வள்ளியூர் | .. |
| 7 அம்பாசமுத்திரம் | அம்பாசமுத்திரம் | கடயம், பாப்பாக் குடி, சேரன் மாதேவி. |
| 8 ஸ்ரீவைகுண்டம் | ஸ்ரீவைகுண்டம் | .. |
| 9 திருச்செந்தூர் .. | திருச்செந்தூர் | உடன்குடி, சாத் தன்குளம், ஆழ் வார் திருநகரி. |
| 10 கருங்குளம் .. | கருங்குளம் | .. |
| 11 புதுக்கோட்டை | தூத்துக்குடி (கிராம பகுதி). | .. |
| 12 கோவில்பட்டி .. | கோவில்பட்டி | கயத்தாறு, ஒட்டப் பிடாரம் புதூர். |
| 13 விளாத்திகுளம் .. | விளாத்திகுளம் | |
| 14 சங்கரன்கோவில் .. | சங்கரன்கோவில் | |
| 15 வாசுதேவநல்லூர் | வாசுதேவநல்லூர் | .. |
| 16 மேலநீலிதநல்லூர் | மேலநீலிதநல்லூர் | .. |
| 17 குருவிக்குளம் .. | குருவிக்குளம் | .. |

## அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட தையல் மிஷின்கள்.

22 வினு—திரு. எம். முத்தையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் 1973 சனவரி முதல் 1973 டிசம்பர் வரை அரிசனங்களுக்கு எத்தனை தையல் மிஷின்கள் மானியமாகக் கொடுக்கப்பட்டன?

(இ) அதற்காக பெறப்பட்ட மனுக்கள் எத்தனை?



1974 ஆகஸ்ட் 27]

விடை—(அ) 91.

(இ) 222.

## சிமெண்ட் தொழிற்சாலைகள்.

23 வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் எத்தனை சிமெண்ட் தொழிற்சாலைகள் உள்ளன?

(இ) அவை எங்கெங்கே உள்ளன?

விடை—

(அ) & (இ) தமிழகத்தில் ஏழு சிமெண்ட் ஆலைகள் உள்ளன. அவைகளில் ஆறு தனியார் துறைகளிலும் அரசு நிறுவனமான தமிழ்நாடு வளர்ச்சிக் கழகத்தினுல் நடத்தப்படும் ஒன்று பொதுத் துறையிலும் உள்ளன. அவற்றின் பெயர்களும் அவை நிறுவப் பட்டுள்ள இடங்களின் பெயர்களும் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

| சிமெண்ட் ஆலையின் பெயர். | தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ள இடம். |
|---|---|
| (1) | (2) |
| 1 தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், 175/1, அண்ணு சாலை, சென்னை-2. | சங்கர் நகர், திருநெல்வேலி மாவட்டம். |
| 2 தி இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட், 175/1, அண்ணு சாலை, சென்னை-2. | சங்கரி துர்க்கம், சேலம் மாவட்டம். |
| 3 டால்மியா சிமெண்ட் (பாரத்) லிமிடெட், டால்மியா புரம். | டால்மியாபுரம், திருச்சிராப் பள்ளி மாவட்டம். |
| 4 செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட், 6, ஆர்மினியன் தெரு, சென்னை-1. | புலியூர், கரூர் வட்டம், திருச்சி ராப்பள்ளி மாவட்டம். |

| | |
|---|---|
| 5 தி அசோசியேடட் சிமெண்ட் கம்பெனிலிமிடெட், மதுக்கரை, கோயம்புத்தூர். | மதுக்கரை, கோயம்புத்தூர் மாவட்டம். |
| 6 தி மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிடெட், இராசபாளையம், இராமநாதபுரம். | துலுக்கப்பட்டி, இராமநாதபுரம் மாவட்டம். |
| 7 அரசு சிமெண்ட் லிமிடெட், ஆலங்குளம், இராமநாதபுரம். | ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம். |

In Tamil Nadu there are seven Cement factories—Six in the private sector and one in the public sector, run by Tamil Nadu Industrial Development Corporation Ltd., which is a Government owned Corporation. The names of the Cement factories and their locations are given below :—

| *Name of the Factory.* (1) | *Location of the Factory.* (2) |
|---|---|
| 1. The India Cements Ltd., 175/1, Anna Salai, Madras-2. | Sankarnagar, Tirunelveli district. |
| 2. The India Cements Ltd., 175/1, Anna Salai, Madras-2. | Sankaridrug, Salem district. |
| 3. Messrs. Dalmia Cement (Bharat), Ltd., Dalmiapuram. | Dalmiapuram, Tiruchirappalli district. |
| 4. The Chettinad Cement Corporation Ltd., 6, Armenian Street, Madras-1. | Puliyur, Karur taluk, Tiruchirappalli district. |
| 5. The Associated Cement Company Ltd., Madukkarai, Coimbatore district. | Madukkarai, Coimbatore district. |
| 6. The Madras Cements Ltd., Rajapalayam, Ramanathapuram district. | Tulukkapatti, Ramanathapuram district. |
| 7. The Tamil Nadu Cements Ltd., Alangulam, Ramanathapuram. | Alangulam, Ramanathapuram district. |



## திருப்பூர் சிக்கண்ணு அரசினர் கலைக் கல்லூரி.

24 வினு—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா :

1974–75-ல் திருப்பூர் சிக்கண்ணு அரசினர் கலைக் கல்லூரியில் புதிதாக எந்த எந்த பட்டப் படிப்புப் பிரிவுகள் துவக்கப்பட உள்ளது?

விடை—

1974–75-ல் சிக்கண்ணு அரசினர் கலைக் கலூல்ரியில் புதிதாக எந்த வகுப்புகளும் ஆரம்பிக்கவில்லை.

## SPORTS STADIUM.

25 Q.—Thiru N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Education and Tourism be pleased to state the amount sanctioned as grants for the construction of sports stadium in the State by the Government during the year 1973–74 district-wise ?

A.—

A grant of Rs. 1,00,000 to the Tirunelveli District Sports Council was sanctioned for the construction of Stadium at Palayamkottai during the year 1973–74.

## ROADS UNDER CRASH PROGRAMME.

26 Q.—Thiru K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Local Administration be pleased to state :

(a) the total number of roads laid under the Crash Programme in the Sulagiri Panchayat Union, Kelamangalam Panchayat Union, Hosur Panchayat Union Areas ;

(b) whether there is a proposal to metal them ; and

(c) if so, the details thereof ?

A.—

| | | |
|---|---|---|
| (*a*) Shoolagiri Panchayat Union | .. .. .. | 19 |
| Kelamangalam | .. .. .. .. | 19 |
| Hosur Panchayat Union .. | .. .. .. | 14 |

(*b*) & (*c*) The roads formed under the Crash Scheme for Rural Employment will be taken over by the Panchayat Unions for future maintenance. Such roads will be metalled subject to availability of funds with the Panchayat Unions concerned.

| | | |
|---|---|---|
| (அ) சூலகிரி ஊராட்சி ஒன்றியம் | .. .. | 19 |
| கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் | .. | 19 |
| ஒசூர் | .. .. .. .. | 14 |

(இ) & (உ) கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள சாலைகளை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்து பேணி வரும் ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைக்கேற்ப இச் சாலைகளுக்கு ஜல்லி போடப்படும்.

## இடைக்காட்டூர் அருகே வைகை ஆற்றுப்பாலம்.

27 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை ஒன்றியம் இடைக்காட்டூர் அருகில் வைகையின் குறுக்கே கட்டப்பட இருக்கும் மேம்பாலத்தின் மதிப்பீடு என்ன?

விடை—

13·60 லட்சம் ரூபாய்.

## மதுரை அழகர் கோவிலுக்கு அறங்காவலர் குழுத்தலைவர்.

28 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை அழகர் கோவிலுக்கு 1973-ம் ஆண்டுக்கு அறங்காவலர் குழுத் தலைவராக யார் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்?



விடை—

மதுரை அழகர் கோவிலுக்கு அறங்காவலர் குழுத் தலைவர் இன்னும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

## மானாமதுரை வட்டத்தில் புறச் சாலைகள்.

29 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை துணைத்தாலூகா இராஜகம்பீரத்தில் பைபாஸ் ரோடு போடும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உண்டா ?

விடை—இல்லை.

30 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை துணைத் தாலூகா திருப்புவனத்தில் பைபாஸ் ரோடு போடும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உண்டா?

விடை—இல்லை.

31 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை துணைத் தாலூகா. திருப்பாச்சேத்தியில் பைபாஸ் ரோடு போடும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உண்டா?

விடை—இல்லை.

திருப்பாச்சேத்தி கண்மாய்.

32 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மானாமதுரை துணைத் தாலூகா திருப்பாச்சேத்தி (வடக்கு) கண்மாய் பெரிய மடை பழுதுபட்டிருப்பதைச் செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் ஏதேனும் உண்டா?

விடை—

திருப்பாச்சேத்தி வடக்கு கண்மாய் பெரிய மடையை பழுது பார்க்க மதிப்பீடு தயார் செய்யவும் அம்மதிப்பீட்டின்படி வேலை களைச் செய்து முடிக்கவும் தலைமைப் பொறியாளரால் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Action has been initiated by Chief Engineer to prepare an estimate for carrying out urgent repairs to the sluice of Thirupachetti tank and to execute the work.

33 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மானாமதுரைத் துணைத் தாலூகா திருப்பாச்சேத்தி (தெற்கு) கண்மாய் புதுமடை பழுதுபட்டிருப்பது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம். திருப்பாச்சேத்தி தெற்கு கண்மாயிலுள்ள இரண்டாவது மடை (புது மடை) சிறிது பழுதடைந்திருந்தது.

(இ) பழுதடைந்திருந்த புதிய மடை சீர் செய்யப் பட்டுள்ளது. தற்பொழுது இந்த மடை நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

(i) Yes. The second sluice (i.e., new sluice) in Thirupachetti South Tank required some repairs.

(ii) The repairs to the sluice have already been carried out. Now the sluice is in good condition.





அம்பாசமுத்திரம் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம்.

34 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு கல்வி, சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கப்படு கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(இ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் 57 தொடக்கப் பள்ளிகளும், 16 உயர் தொடக்கப்பள்ளிகளும் உள்ளன. அவற்றில் தொடக்கப்பள்ளிகளில் 9,810 பேர்களும் உயர் தொடக்கப்பள்ளிகளில் 7,995 பேர்களும் ஆக 17,805 மாணவர்கள் பயின்று வருகின்றனர். அவர்களுள் தொடக்கப்பள்ளி மாணவர்களுள் 3,515 ஏழை மாணவர்களுக்கும் உயர் தொடக்கப் பள்ளி மாணவர்களுள் 1,097 ஏழை மாணவர்களுக்கும் 1974-75-ம் ஆண்டில் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது.

*New Tenements for fishermen.*

35—*Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Labour be pleased to state :

(*a*) whether it is a fact that new tenements for the fishermen of Nochikuppam in Mylapore have been provided ; and

(*b*) if so, the details thereof ?

*A.*—

(*a*) Yes. It is a fact that new tenements for the fishermen of Nochikuppam in Mylapore have been constructed ; and

(*b*) The total number of tenements constructed at Nochikuppam is 534 ; out of these, 478 tenements have been allotted to fishermen.

(அ) ஆம். மயிலாப்பூரில் உள்ள நொச்சிக்குப்பத்தில் மீனவர்களுக்காக புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

(இ) நொச்சிக்குப்பத்தில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளின் மொத்த எண்ணிக்கை 534 அவைகளில் 478 குடியிருப்புகள் மீனவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

முற்பகல் 10-30

## (2) வினாக்களுக்கு விடையளிப்பதற்கு காலவரையறை ஏற்படுத்துவது குறித்து.

DR. H. V. HANDE : I want to raise a very important point. May I know from the Hon. Speaker whether it would be possible for him, as has been done in the Legislative Council by the Hon. Chairman, to fix a time-limit within which the questions should be answered. Otherwise it becomes out of context and loses its importance. The Hon. Chairman has fixed a time-limit of 42 days in the Council. He has said that within that time the question should be answered, answers being supplied by the Department in the meantime. May I know whether similarly in this House also, the Hon. Speaker could fix a time-limit within which a question put should be answered? Can he not fix a time-limit within which the answers should be sent by the department and the questions answered ? Otherwise if it is delayed, it loses its significance and it looks out of context.
ஒரு கேள்வி போட்டால், அதற்கு 6 மாதம் கழித்துதான் பதில் அனுப்புவது என்றிருந்தால் அதனுடைய முக்கியத்துவம் குறைந்து போகிறது. ஆகவே, மேலவையில் சொன்னமாதிரி, ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பதில் வந்துவிட வேண்டுமென்று ஏதாவது இன்ஸ்டிரக்ஷன் கொடுத்தால் சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேலவையில் கேள்வி நேரம் 15, 18 நிமிடங்களில் முடிந்து போகிறது. வேறு கேள்வி இல்லை. அதனால் அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. கேள்விகள் சீக்கிரம் முடிந்து போவதால் அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே அந்த நிலைமை இல்லை. இன்றைக்கு 1 1/2 மணி நேரம் கூட கேள்வி நேரத்தை நடத்தியிருக்கிறோம். இன்னும் அவைக்கு கொடுக்கக்கூடிய அளவுக்கு பதில் வந்த கேள்விகள் இருக்கின்றன. நமக்குநேரம் தான் இல்லை. ஆகவே, அந்த முடிவு நமக்குத் தேவையில்லை.



## (3) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

### (அ) பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின்கீழ் தாராபுரம், பல்லடம் தாலூகாக்களுக்குத் தண்ணீர் விடுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் கிழ் இவ்வாண்டு தாராபுரம், பல்லடம் தாலூகாக்கள் தண்ணீர் பெறவேண்டும். தண்ணீர் தருவதாக அறிவித்துவிட்டு சென்ற ஆண்டு நீர் பெற்ற உடுமலை வட்டத்திற்கும் நீர் விடுவதால் தாராபுரம் வட்டத்திற்கு சரியாக நீர் வருவதில்லை. இதனால் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள கொதிப்பு நிலை பற்றி விவாதிக்க வேண்டும்" என்று திரு. கோவை செழியன் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் வாய்ந்தது என்பதை அவர்கள் சுருக்கமாக விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தின் கீழ் ஒரு இடத்திற்கு ஒரு ஆண்டு தண்ணீர் விட்டால் அடுத்தாண்டு வேறு பகுதிக்கு தண்ணீர் விடுவது என்ற முறையை வைத்து தண்ணீர் விடுகிறார்கள். சென்ற ஆண்டு என்னுடைய தொகுதியில் தண்ணீர் வரவில்லை. அதனால் இந்த ஆண்டு தண்ணீர் விடுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் தண்ணீர் சரியாக வரவில்லை. காரணம் இப்போது சென்ற ஆண்டு தண்ணீர் விட்ட உடுமலைப்பேட்டைப் பகுதிக்கு—மாண்புமிகு ரெவின்யு இலாகா அமைச்சரவர்களுடைய தொகுதியாக இருப்பதால்—தண்ணீர் விட்டார்கள். இந்த ஆண்டும் அங்கே தண்ணீர் விட உத்தரவிட்டிருப்பதால் எங்கள் பகுதிக்கு தண்ணீர் சரியாக வரவில்லை. 4, 5 மாதங்கள் வரவேண்டிய தண்ணீர் 20 நாள்கூட சரியாக வரவில்லை. அதனால் அங்கே இருக்கிற மக்கள் எல்லாம் கொதிப்படைந்து கலெக்டர் ஆபீஸ் முன்னாலும் மற்ற தாலூகா ஆபீஸ் முன்னாலும் மறியல் செய்வது என்று முடிவு செய்து என்னிடம் வந்து சொன்னார்கள். நான் அவர்களைக் கொஞ்சம் பொறுங்கள், அரசாங்கத்திடம் கேட்டு முடிவு சொல்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். அமைச்சரவர்கள் தற்போது எலெக்ஷன் வருகிற காரணத்தால், தன்னுடைய தொகுதிக்கு தண்ணீர் விட வேண்டுமென்ற அடிப்படையில் .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள். நோக்கம் கற்பிக்கக்கூடாது.

திரு. கோவை. செழியன் : நான் தி.மு.க.வில் இருந்தபோதே அதைப்பற்றிப் பேசியிருககிறேன். அமைச்சரவர்களிடம்கூட கேள்வி கேட்டிருக்கிறேன் என்று நம்புகிறேன். வருஷா வருஷம்

உடுமலைப் பேட்டைக்கு மட்டும் தண்ணீர் விடுவது, எங்கள் பகுதிக்கு தண்ணீர் இல்லை என்றால் அது எப்படி நியாயமாகும்? தண்ணீர் வருவதில்லை; பயிர் விளைவதில்லை. ஆனால் வரி மட்டும் போடுகிறார்கள். இது நியாய விரோதமானது. அதனால் மக்கள் கொதிப்படைந்திருக்கிறார்கள். அந்தக் கொதிப்பு அடங்க வேண்டுமென்றால் எங்கள் பகுதிக்கு தவறாது தண்ணீர் விடவேண்டும். அதைப்பற்றி விவாதிப்பதற்காக சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: தலைவரவர்களே, கோவை செழியன் அவர்கள் எழுப்பியிருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு ஒரு நீண்ட அறிக்கை வைத்திருக்கிறேன். அதைப் படிப்பதற்கு முன்னால் அவர்கள் எழுப்பிய சிலவற்றிற்கு பதில் சொல்லி விடலாம் என்று நினைக்கிறேன்.

இப்போது வரலாற்றிலே இல்லாத அளவுக்கு முதல் முறையாக சோலையாறு வழிந்து ஓடுகிறது. எனவே, அவர்கள் எழுப்பிய பிரச்சனை அங்கு எழாது. அங்கே தண்ணீர் விடுவது பற்றி இரண்டு நாட்களுக்கு முன்னால் நானும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்களும், மாண்புமிகு அமைச்சர் கண்ணப்பன் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், தலைமைப் பொறியாளர் அவர்களும் கூடி பரிசீலனை செய்து முடிவு செய்திருக்கிறோம். அதுபற்றிய அறிக்கை நீண்ட அறிக்கையாக இருக்கிறது, 8 பக்கம் இருக்கிறது. அதைப் படித்து முடிக்கும்வரையில் கொஞ்சம் பொறுமையாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: இது விதி 42-ன்கீழ்தான் வருகிறது. நேரம் இல்லாததால், அதிலுள்ள முக்கியமான பகுதிகளை மட்டும் படித்தால் போதும்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: திரு. செழியன் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு—தாராபுரம், காங்கேயத்திற்கு தண்ணீர் விடவில்லை என்ற பிரச்சனையை எழுப்பியிருக்கிறார்கள். அந்தப்பகுதிகளுக்கும் தண்ணீர் விடுகிறோம். அவை தவிர வேறுபகுதிகளுக்கும் தண்ணீர் விடலாமா என்பது பற்றி பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். போன முறை கொடுத்தவர்களுக்கு இந்த முறை கொடுக்கக்கூடாது என்றல்ல. யார் யாருக்கு கொடுக்கவில்லையோ அவர்களுக்கு முதலிலே கொடுக்க வேண்டும். அவர்களுக்குக் கொடுத்தது போக தண்ணீர் மேலும் இருக்குமானால் மற்ற பகுதிகளுக்கும் கொடுக்கலாம். அதைப்பற்றி பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் தலைமைப் பொறியாளருக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.





செழியன் அவர்கள் நேற்றுதான் இதுபற்றிக் கேட்டிருப்பதால் நான் முழு விபரத்தையும் தயாரித்துக் கொண்டுவந்திருக்கிறேன். இல்லை என்றால் சுருக்கமாகச் சொல்லியிருப்பேன். அவர்கள் திருப்தி பட்டுக்கொள்வார்களானால் நான் இந்த 8 பக்கம் உள்ள நீண்ட அறிக்கையை படிக்க வேண்டியதில்லை.

<u>திரு. கோவை செழியன்</u>: நீங்கள் படிக்க வேண்டுமென்பதில்லை. எங்களுக்கு தண்ணீர் கிடைக்கும் என்ற ஒரு காரண்டியை கொடுத்தால் போதும்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்</u>: நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், தலைமைப் பொறியாளர் அவர்களும் சேர்ந்து எங்கெங்கே தண்ணீர் விடுவது என்பது பற்றி பரிசீலனை செய்து முடிவெடுக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, எந்தெந்த வாய்க்கால்களில் தண்ணீர் விடலாம் என்பதை அவர்கள் முடிவு செய்து விடலாம். சோலையாற்றில் தண்ணீர் வழிந்தோடுவதால் காங்கேயம், தாராபுரம் பகுதிகளுக்கு தண்ணீர் நிச்சயமாகக் கிடைக்கும். அங்கே தண்ணீர் விடுவது பற்றி அரசு கவனத்தில் கொள்ளும் என்ற உறுதிமொழியைத் தருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதுபற்றி மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

## <u>(ஆ) பல்லடம், அவனாசி, கோவை போன்ற தாலூகாக்களை வறட்சியின் காரணமாக, பஞ்சப் பிரதேசமாக அறிவித்து நிவாரணம் அளிப்பது குறித்து</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: அடுத்து, "இந்த ஆண்டு பருவமழை தவறியதால் பல்லடம் தாலூகா, அவனாசி, கோவை போன்ற தாலூகாக்களில் மிகவும் வறட்சி ஏற்பட்டுள்ளது. பருத்தி, புஞ்சை தானியங்கள் பருவத்தில் பயிர் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வருமானம் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது பற்றியும் அதனால் பஞ்சநிலை ஏற்பட்டுள்ளதைப் போக்கி, பஞ்சப்பிரதேசமாக அத்தாலுகாக்களை அறிவிக்கவும் நிவாரணம் தேடவும் மிக முக்கியமான அவசர நடவடிக்கை எடுக்க வேண்டியது குறித்து விவாதிக்க" அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை திரு. கே. என். குமாரசாமி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இது அந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததா என்பதை சுருக்கமாக விளக்கும்படி அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்த ஆண்டு சென்ற மாதமே பருத்தி பயிரிட வேண்டிய ஒரு காலகட்டம். ஆனால் ஒரு மாதமாகியும் மழை இல்லாததால், பருத்தி, புஞ்சை தானியங்கள் பயிரிட முடியவில்லை. அதே நேரத்தில் அந்தப் பகுதியானது ஓராண்டுவிட்டு ஓராண்டுதான் மழை பெய்யக் கூடியதாக இருக்கிறது. தொடர்ச்சியாக அங்கே மழை பெய்வதில்லை. அதனால் பருத்தி, புஞ்சை தானியங்கள் பயிரிடுவதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. விவசாயிகள் பெரும் கஷ்டங்களுக்குள்ளாகி இருக்கிறார்கள். இந்த ஆண்டும் அப்படி விவசாயம் பாதிக்குமானால் நிச்சயமாக வறட்சி ஏற்படும், பஞ்சம் ஏற்படும் என்பதில் ஐயமில்லை. காரணம் வழக்கமாகவே அந்தப் பகுதி ஓராண்டு விட்டு ஓராண்டு பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டிய பகுதியாக இருக்கிறது. இந்த ஆண்டு இன்னும் மழை அங்கு பெய்யாததால், பஞ்ச நிலைமை ஏற்படும் சூழ்நிலை இருப்பதால் அங்கிருக்கிற விவசாயிகள் பெரும் அச்சத்திற்குள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியை நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கவும், கடன் சம்பந்தப் பட்டவைகள் மீது தீவிர கவனம் செலுத்தப்படவும் வேண்டியிருப்பதால், விவசாயிகள் அச்சத்திற்குள்ளாகியிருப்பதால், இந்தப் பிரச்சனையைப் பற்றி விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் அந்தப் பகுதியிலே பஞ்சநிலை இருப்பதாகச் சொல்லப்பட்டது. அதனால் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். பொதுவாக தமிழ்நாடு பூராவும் இந்த ஆண்டு மழை திருப்திகரமாக பெய்யவில்லை என்பது அனைவருக்கும் தெரியும்.

பொதுவாகவே, கோவை, பல்லடம், அவனாசி தாலுகாக்கள் வறட்சிப்பகுதிகள் என்று எல்லோருக்கும் தெரியும். கடந்த ஆண்டுகளைவிட இப்போது மழை குறைவாகத்தான் பெய்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் செழியன் அவர்களின் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் பதிலிலே சொன்னது போல பரம்பிக் குளம், ஆளியாறு பகுதிகளில் பெருமழை பெய்து ஏராளமாக தண்ணீர் இருப்பதால் 35,000 ஏக்கர் நிலம் 30 கிராமங்களில்—பல்லடம் தாலுகாவில் பயிர் செய்வதற்கு விடப்படுகிறது. மேலும் பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் சொன்னதுபோல பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டப் பகுதியில் வரலாறு காணாத அளவிற்கு தண்ணீர் இருப்பதால் இன்னும் அதிகமாக தண்ணீர் விட்டு, பல்லடம் தாலுகாவில் மேலும் 15,000 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் விட முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.



கோயம்பத்தூர் தாலுகாவில் மழை பெய்து, ஏரிகளிலும் குளங்களிலும் தண்ணீர் நிறைந்திருப்பதால், 5,000 ஏக்கர் நிலத்திற்கு தண்ணீர் விடலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும், இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல அங்கே பஞ்ச நிலைமை இல்லை. ஏப்ரல் 1974-ல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையை ஏற்று, வறட்சிப் பகுதிகளில் குடி தண்ணீர் கிணறுகளை ஆழப்படுத்தும் வகையில் 5 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அதைக்கொண்டு குடிதண்ணீர் கிடைப்பதற்கான வேலைகளைச் செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டமாதிரியான நிலைமை அங்கே இல்லை. கடன் சம்பந்தப்பட்ட வரையில், நிலைமைகளை உத்தேசித்து தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவசர நிலைமை ஏற்பட்டால் மாவட்ட ஆட்சித் தலைவரே நடவடிக்கை எடுக்க வழி செய்யப்பட்டிருப்பதால் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு தேவையில்லை என்று சொல்லி அமர்கிறேன். (திரு. கே. என். குமாரசாமி எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். இதில் விளக்கம் பெறுவதற்கு ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, சோலையாற்றிலே தண்ணீர் மிதமிஞ்சி இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த சோலையாற்றுத் தண்ணீரை பல்லடம் மேற்குப் பகுதி குளம் குட்டைகளுக்கு விட்டு நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு அங்கத்தினர் அதைப்பற்றிக் கேட்டதற்கு நன்றி. அதுபோல அந்தப் பகுதிக்கு குடிதண்ணீருக்கு வேண்டிய நீரை நிரப்பித் தரும்படி அதிகாரிகள் தெரிவிக்கப் பட்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு கொண்டால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று நான் கருதுவதனால் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன். அடுத்து திரு. எட்மெண்டு அவர்கள் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம்.

## (இ) சாலிக்கிராமத்திலுள்ள ஜி. இ. சி. நிறுவனம் மூடப்பட்டதால் ஊழியர்கள் வேலையற்று அல்லல் படுதல் குறித்து.

திரு. க. உரோ. எட்மண்டு : தலைவர் அவர்களே, சென்னை சாலிகிராமத்திலுள்ள ஜி.இ.சி. நிறுவனத்தில் வேலைபார்க்கும் ஊழியர்கள் அந்த நிறுவனம் மூடப்பட்டதால் வேலையற்று அல்லல் படுகிற நேரத்தில்—அந்த நிறுவனத்தார் அங்குள்ள இயந்திரங்களை அப்புறப்படுத்தும் வேலையில் ஈடுபட்டிருப்பதோடு, புதிய தொழிலாளிகளை வேலைக்கு நியமிக்கும் முயற்சியை மேற்கொண்டிருப்பதால் இது பற்றி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்துவிட்டு விவாதிக்கவேண்டுமென்று நான் விதி 42-இன் கீழ் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

ஏற்கெனவே இந்தப் பிரச்சினைப் பற்றி நீண்ட நாட்களாக அங்கே வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே தகராறு இருந்து கொண்டிருந்தது. இந்த மாதம் 8-ஆம் தேதி இந்த நிர்வாகம் மூடப்பட்டதால் வேலையற்ற தொழிலாளர்கள் நீதிமன்றத்திற்குப் போய் இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டுமென்றும், அங்கே இருக்கிற இயந்திரங்களை அப்புறப்படுத்தக்கூடாது என்றும், புதிய ஆட்களைச் சேர்க்கக் கூடாது என்றும் தடை செய்யவேண்டுமென்று கோரி பூந்தமல்லி டிஸ்ட்ரிக்ட் முனிசிப் கோர்ட்டில் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் வழக்குப் பதிவு செய்யப் போய் இருக்கிறார்கள் என்று அறிந்து நிர்வாகத்தினர் காவல்துறை உதவியுடன் பெரிய பெரிய கிரேன்கள் மூலம் இயந்திரங்களை எல்லாம் அப்புறப்படுத்தியிருக்கிறார்கள். இந்த நிலை காரணமாக தொழிலாளர்களது 50 குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இது பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்ய, மற்ற அலுவல்களை எல்லாம் ஒத்திவைத்துவிட்டு இதை விவாதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : பேரவைத் தலைவர் அவர்களே, 59, ஆற்காடு ரோடு, கோடம்பாக்கம், சென்னை-26 என்ற முகவரியில் இருக்கும் இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் என்ற தொழிற்சாலையில் சுமார் 45 தொழிலாளர்கள் வேலை பார்த்து வந்தனர். இந்த நிறுவனம் சென்னை ஜி.இ.சி. ஆப் இந்தியா லிமிடெட் தொழிற்சாலை இயங்கும் பகுதியினுள் அமைந்துள்ளது. ஜி.இ.சி. தொழிற்சாலைக்குத் தேவையான கருவிகளை இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் தொழிற்சாலை உற்பத்தி செய்வதற்கு ஒப்பந்த முறை கடைபிடிக்கப்பட்டு வந்தது. மேற்சொன்ன ஒப்பந்தத்தை புதுப்பிக்க முடியாத காரணத்தால் இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் தொழிற்சாலையை மூடிவிட வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டது என இத் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநர் 31—7—1974 அறிக்கையின் மூலம் அறிவித்தார். தொழிலாளருக்குரிய சம்பளம்



மற்றும் செலவினங்களை இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் நிர்வாகத்தினருக்கு ஜி.இ.சி. நிர்வாகத்தினர் ஈடு செலுத்தும் முறை கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் நிர்வாகத்தினர் தங்களது தொழிலாளர்களுக்கு தொழில் தகராறு சட்டத்தின் கீழ் சேரவேண்டிய நஷ்ட ஈடு மற்றும் தொகைகளை 7—8—1974 அன்று தங்களது கிண்டியிலுள்ள அலுவலகத்தில் வழங்குவதாக அறிவிப்புச் செய்தனர்.

இதை எதிர்த்து மெட்ராஸ் ஸ்டேட் ஜெனரல் ஒர்க்கர்ஸ் யூனியன் மற்றும் பலதுறை தொழிலாளர் முன்னேற்ற சங்கம் ஆகிய இரண்டு தொழிற்சங்கங்களும் 1—8—1974, 31—7—74 அன்று ஒரு தொழிற்தகராறு எழுப்பினர். உடனடியாக 1—8—74 அன்று பிற்பகலில் சென்னை மூன்றும் வட்ட தொழிலாளர் துறை அலுவலரால் இரு சாராரையும் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. தொழிற் சங்கங்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஜி.இ.சி. நிர்வாகத்தையும் இத்தொழிற்தகராறில் ஒரு கட்சிக்காரராக இணைக்கப்பட்டது. 13—8—74 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தையின் போது ஜி. இ. சி. நிர்வாகத்தினர் தங்களுக்கும் இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் நிர்வாகத்தினருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும், அத்தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் தங்களால் நியமிக்கப்பட்டவர்கள் அல்ல எனவும் தெரிவித்தனர். இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் நிர்வாக இயக்குநர் தமக்கும் ஜி.இ.சி. நிர்வாகத்திற்கும் உள்ள ஒப்பந்தம் நிறைவு பெற்று மேலும் புதுப்பிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டதால் அதை மூடவேண்டியதாயிற்று எனத் தெரிவித்தார்.

அத்தொழிற்சாலையில் பயன்படுத்தப்பட்ட சில இயந்திரங்கள் ஜி.இ.சி. நிர்வாகத்திற்குச் சொந்தமானவை. ஜி. இ. சி. உற்பத்திக்குத் துணைப் பொருள்கள் செய்யும் பணியில்பாதிக்கப் பட்ட தொழிலாளர்கள் ஈடுபட்டு இருந்ததால், அவர்களை வேலையில் தொடர்ந்து வைத்துக் கொண்டு ஜி.இ.சி. நிர்வாகமே தொழிற்சாலையை தொடர்ந்து நடத்தலாம் எனத் தெரிவிக்கப்பட்ட ஆலோசனையை ஜி.இ.சி. நிர்வாகத்தினர் ஏற்கவில்லை. இதற்கிடையில் இண்டஸ்டிரியல் ஆன்சிலரி சர்வீஸஸ் நிர்வாகத்தினர் தங்கள் இயந்திரங்களை விற்றுவிட்டதால் பூந்தமல்லி முன்சீப் கோர்ட்டின் உத்தரவு பெற்று அவற்றை மேற்படி தொழிற்சாலைப் பகுதியிலிருந்து வெளியே எடுத்துவிட்டதாக அறியப்படுகிறது.

தொழிலாளருக்குக் கிடைக்க வேண்டிய நிவாரணத்தைப் பற்றி மேற்கொண்டு சென்னை 3-வது வட்ட தொழிலாளர் துறை அலுவலர் முன் பேச்சுவார்த்தை தொடரப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இதைப்பற்றி விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுவதால், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

(ச) இராமேசுவரத்திற்கு அருகே கடலில் மீனவர்கள் வெடி பொருள் கொண்டு தாக்கப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து டாக்டர் ஹாண்டே, திரு. கந்தசாமி, திரு. ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் கடந்த சனிக்கிழமை 24—8—1974 அன்று இராமேசுவரத்தில் இருந்து பத்துக்கல் தொலைவில் கடலில் நம்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் ஸ்ரீலங்கா மீனவர்களால் வெடிப் பொருள் கொண்டு தாக்கப்பட்டு, நான்கு மீனவர்கள் படுகாயம் அடைந்திருப்பது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I have given notice for the adjournment of the business of the House to discuss a matter of urgent public importance, namely,

'the injuries sustained by four fishermen off the Rameswaram coast while they went for fishing as a result of hand-granades hurled against them by fishermen from Sri Lanka on 24th August 1974.'

Sir, for two reasons I have given notice of the above adjournment motion. Firstly, the responsibility of the Government is fixed as far as the subject matter is concerned and secondly this does not come under the day-to-day administration and therefore I have given notice of this adjournment motion. This does not come under the administration of the Government because another country is involved in this problem.

What exactly has happened is this. Messrs. Munisamy, [illegible] Ramadoss and K. Munusamy, these four persons who belonged to Kottur village in Rameswaram district, went for fishing to '[illegible] Seethai', that is the place they went. (Interruption) Only whatever facts are available to me, I am stating. I will be brief. At that time [illegible] fishermen of Sri Lanka also came there, and told our men 'this place belongs to us' and later our men have said that we had been fishing here for ages and then without any notice, some hand-granades had been hurled against our fishermen and one of them sustained very serious injury and he is in the hospital. This is why I say that it does not come under the ordinary day-to-day administration.

Secondly, I shall explain how the Government's responsibility is involved in this. Recently, the State Government itself has recommended to the Centre that Katchativu should not have been given to Sri Lanka, and that it should have been retained within the precincts of the Indian Union.



I shall highlight the fact. This problem is directly involved and coming out of Katchativu. If the Katchativu had not been given to Sri Lanka, it is quite possible that this incident could have been avoided or averted. It only substantiates the view or stand taken by other parties with regard to giving away of Katchativu to Sri Lanka. The giving away of Katchativu has not been in the interest of the people of Tamil Nadu. We do not know whether such incidents will not take place in the future. The life of fishermen there is not safe.

Therefore, in order to have a thorough discussion, the business of the House may be adjourned. This can be discussed only if the other business of the House is adjourned. Therefore, I want that the business of the House be adjourned.

THIRU K. KANDASWAMY : Sir, under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules, I have given notice for the adjournment of the business of the House to discuss a matter of urgent public importance,namely, the attack and throwing of bombs recently by Ceylonese on our boats and fishermen causing serious injuries to several persons near Rameswaram, within our limits. Further it has caused terror and panic in the minds of the people and several thousands of fishermen's normal life has come to a standstill, and it is likely to affect public peace and tranquility.

பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு ஹாண்டே அவர்கள் கூறியதைப் போல், நம்முடைய எல்லைப் பகுதிக்குள்ளேயே வழக்கம் போல் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களில் 4 பேர்மீது வெடி குண்டுகளை சிலோனைச் சேர்ந்தவர்கள் வீசி, அவர்களுடைய உயிருக்கும் ஆபத்தான நிலைமையிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவரக்கடமைப் பட்டிருக்கிறேன். சமீபத்திலே நம்முடைய இந்தச் சபையில் விவாதித்து ஒரு தீர்மானத்தை மத்திய அரசுக்கு நாம் அனுப்பியிருக்கிறோம். கச்சத்தீவு, இந்தியாவின், தமிழக எல்லையின் கீழுள்ளது. இராமநாதபுரம் இராஜா அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இராமேஸ்வரம்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கச்சத்தீவுக்கு எல்லாம் போய்விடாதீர்கள். இந்த விவாதத்தோடு நில்லுங்கள்.

திரு. கே. கந்தசாமி : கச்சத் தீவு, அது கசக்கும் தீவாக மாறிக் கொண்டிருக்கிற காரணத்தால், நீங்கள் சில விநாடிகள் அதிகம் தரவேண்டுமென்று கேட்டு...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கச்சத் தீவு பிரச்னை அல்ல. நம் மீனவர்கள் மீது, இலங்கை மீனவர்கள் குண்டு வீசினார்கள் என்பது பற்றியது. அதுபற்றி பேசுங்கள்.

__திரு. கே. கந்தசாமி :__ கச்சத் தீவு பிரச்னைக்கு நான் போகவில்லை. அது முடிந்தும் முடியாமலிருக்கும் போது இந்த அசம்பாவிதங்கள் நிகழ்ந்திருப்பதை நாம் பரிசீலனை செய்ய வேண்டும். இலங்கைக்குக் கொடுத்தது தவறு என்று சொல்கிற நேரத்தில், தமிழக மக்கள் உள்ளத்தில் வேதனை இருக்கும் போது, குறிப்பாக தமிழக மீனவ மக்களைப் பாதிக்கும் அளவு இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. இது சாதாரணமான சம்பவமாக உள் நாட்டிலே இருந்தால் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், இது ஒரு பிரச்னையாக, இந்தியாவின் எல்லையை, இந்தியாவின் எதிர் காலத்தைப் பாதிக்கக்கூடிய பிரச்னையாக கருதப்பட்டு, அதை நாம் வேதனையோடு அணுகிக் கொண்டிருக்கும் போது, மத்திய அரசு இன்னும் முடிவை அறிவிக்காமல் இருக்கும்போது, தமிழக அரசுக்கு, குறிப்பாக, தென் மாவட்டங்களில் ஒரு பதட்ட நிலையை உருவாக்கி இருக்கிறது.

மீனவர்கள் அச்சுறுத்தப்பட்டு, நாளை என்ன ஏற்படுமோ என்ற பயம் உருவாக்கப்பட்டு, 'நார்மல் லைஃப்', சாதாரணமான வாழ்க்கைப் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால், அவர்கள் குடும்பம் பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், அதை இந்த மன்றம் தீர்க்கமான முறையில் பரிசீலிக்க, ரொட்டீன் லைஃப் லீட் பண்ண ஒரு நம்பிக்கை பிறப்பிக்கும் வகையில் இந்த மாமன்ற மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து, இதனை தீ[illegible]ாக பரிசீலித்து, நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று நான் [illegible]. அமர்கிறேன், வணக்கம்.

__திரு. ஏ. சுப்பிரமணியம் :__ தலைவரவர்களே, [illegible]த சனிக்கிழமை இராமேஸ்வரத்திலிருந்து 10 மைல் தொ[illegible] நமது நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் ஸ்ரீலங்கா மீனவர்க[illegible] வெடி குண்டுகளால் தாக்கப்பட்டு 4 மீனவர்கள் படுகாயம் [illegible]ந்தது குறித்து விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் கூட்[illegible] சிறிது நேரம் ஒதுக்கி வைக்கவேண்டுமென்ற என்னுடை[illegible] மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

இந்தச் சம்பவமானது நம்முடைய நாட்டின் எல்லைக்[illegible]ளேயே நடந்திருக்கிறது என்பதுதான் செய்தியிலிருந்[illegible] தெரிகிறது. இப்படி நம்முடைய நாட்டின் எல்லைக்குள்ளேயே, நம்முடைய மீனவர்கள் தங்களுடைய தொழிலைச் செய்யப் போகும் போது, அண்டை நாட்டு மீனவர்கள் தாக்கியிருக்கிறார்கள். இத்தகைய சம்பவங்கள், குறிப்பாக இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே கடல் எல்லையானது அண்மைக்கால ஒப்பந்தத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட பிறகு, நடக்க விடுவது சரியானது அல்ல.

ஆகவே, ஒருவேளை இது தப்பான கருத்திலே நடந்திருக்கலாம். அல்லது மீன் பிடிக்கும் போட்டியிலே ஏற்பட்டிருக்கலாம். எப்படியிருந்தாலும் இரு நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு தீங்கு



விளைவிக்கும் என்பது மட்டுமல்லாமல் இரு நாட்டு மக்களுக்கும் கேடு விளைவிக்கும் என்ற காரணத்தாலே, இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெருமல் இருக்க, மேல் நடவடிக்கைகளை எடுக்க, தேவைப்பட்டால் மத்திய அரசோடு கலந்து செய்வதும் அத்தியாவசியமானது என்ற காரணத்தாலே, அது பற்றி, இந்த மன்றத்தின் கருத்தினைச் சொல்ல உதவிகரமாக இருக்கும் என்ற காரணத்தாலே, நான் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதனைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

__மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :__ தலைவரவர்களே, இங்கு வைக்கப்பட்டுள்ள இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் உண்மையிலேயே இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருக்குமேயானால், இந்த மாமன்றம் ஆராய்ந்து அது பற்றி விவாதித்து, தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஏற்ற கருத்துக்கள்தான். ஆனால், இதுவரையில் விசாரித்ததிலிருந்து, இந்த அரசுக்குக் கிடைத்திருக்கிற தகவலின்படி, முதலில் ஏடுகளிலே வந்த சம்பவத்திற்கும், நடந்ததாகச் சொல்லப்படுகின்ற சம்பவத்திற்கும் மிகுந்த முரண்பாடு இருப்பதாகத் தெரிகிறது. இதுபற்றி ஏடுகளில் செய்தி வந்ததும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரோடு அரசு தொடர்புகொண்டு விசாரித்ததில் கிடைத்திருக்கிற தகவல் வேறு மாதிரியாக உள்ளது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்து வைத்திருக்கிற தகவலின்படி, நம்முடைய மீனவர்கள் நம்மால் வரையறுக்கப் பட்டிருக்கிற கடற்பகுதிக்குச் சென்று மீன்பிடிக்கிற நேரத்திலே, இலங்கை மீனவர்களால் வெடிகுண்டுகள் வாயிலாக தாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது இங்கே கூறப்பட்டுள்ள சம்பவமாகும். ஆனால் வந்திருக்கிற தகவல், அப்படி நமக்கு வரவில்லை.

இராமேஸ்வரம் பகுதியிலேயிருந்து மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் எப்பொழுதும் வழக்கமாக கையிலே நாட்டு வெடிகளைக் கொண்டு போவது வழக்கம் என்றும் மீன்கள் சுலபமாகக் கிடைப்பதற்கேற்ற வகையில் அந்த வெடிகுண்டுகளை மீன்கள் இருக்கிற பகுதியிலே அவர்கள் வெடிப்பதும் அதன் காரணமாக மீன்கள் இறந்து மேலே மிதப்பதும், அவைகளைச் சுலபமாக பிடித்து விற்பதை வழக்கமாகச் செய்கிறார்கள் என்றும் அந்த முறையில் அவர்கள் வெடிகுண்டுகளை எடுத்துச் செல்லும்போது, அந்தப் படகுக்குள்ளேயே அந்த வெடிகுண்டுகள் வெடித்து விட்டதன் காரணமாக அந்த விபத்து ஏற்பட்டு, 4 மீனவர்கள் இராமேஸ்வரம் மருத்துவ மனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள் என்றும் அவர்கள் மயக்கமுற்று இருக்கிறார்கள், அதனால் மேற்கொண்டு எந்த ஆதாரமும் அவர்கள் வாயிலாகப் பெற இயலவில்லை என்றும் தகவல் கிடைத்திருக்கிறது. நான் கூறுகின்ற இந்தத் தகவல்கள்கூட, மீண்டும் விசாரணைக்குப் பிறகு வேறு மாதிரியாக இருக்கக் கூடும். ஆகவே இலங்கை மீனவர்கள் நம் மீனவர்களைத் தாக்கியிருக்கிறார்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1974 ஆகஸ்ட் 27

என்ற கருத்தில் நாம் விவாதிப்பது, இரண்டு நாடுகளுக்கிடையே அபிப்பிராய பேதம் உருவாக, நாம் அடிப்படையை உருவாக்கக் கூடாது என்ற அடிப்படையில், இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து, இப்பொழுது இந்தக் கருத்திலே விவாதிக்கத் தேவையில்லையென்று, தலைவர் அவர்களே, உங்களுக்குத் தெரிவித்து வேறு தகவல் வருமானால் இந்த மன்றத்திற்கு அளிக்கப்படும் என்று கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இதற்கு அனுமதி மறுக்கப் படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இன்றோ, நாளையோ, அவையின் அலுவல்களை நாம் முடிக்க எண்ணியிருக்கிறோம். நான் ஒரு முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது, ஏறத்தாழ 2,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், அரசாங்கத்திற்கும் பெரும் நஷ்டம் அன்றாடம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதாகும். ஆகவே, அந்தத் தீர்மானத்தை எடுக்கும்படி தலைவர் அவர்களே உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருப்பது இலாகாவிற்குப் போயிருக்கிறது. அதை எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலைமை வந்தால்தான் எடுத்துக் கொள்ளப் படும். அவர்களுக்கு வாய்ப்பு தரப்படும்.

## (4) அரசினர் தீர்மானம்.

### விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டப் பேரவை விதி 244-ன் கீழ் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"விதி 41(3)-ன்படி, ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவர தடை இருப்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

* * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



1974 ஆகஸ்ட் 27]

(முற்பகல் 11·00)

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

* * * *

திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆப் ஆர்டர் அனுமதிக்கப்படவில்லை. பத்திரிகைகளும் போட வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (5) கவன ஈர்ப்பு.

### (அ) பட்டணங்கால் கால்வாய்க்கு தண்ணீர்விடத் தவறியதால் கல்குளம், விளவங்கோடு தாலூகாக்களில் ஏற்பட்டுள்ள வறட்சிநிலை குறித்து.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I call the attention of the Hon. Minister for Revenue to a matter of urgent public importance, namely, the drought conditions prevailing due to the failure to let water in the Pattanamkal Channels in Kalkulam and Vilavancode taluks of the Kanyakumari district, to revise the rules regarding the opening of Pattanamkal or in the alternative to take steps to stop the payment of water rates by the ryots.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அணைகளிலிருந்து பாசனத்திற்காக நீர் திறந்துவிட அரசு 1970-ல் கீழே கண்ட விதிகளைப் பிறப்பித்துள்ளது :—

| பாசன ஏற்பாட்டின் பெயர். | வழக்கமாகத் திறந்து விடப் படும் நாள். | பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு I, II அணைகளில் இருக்க வேண்டிய குறைந்த அளவு நீர்சேமிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| கோதையாறு பாசன ஏற்பாடு. | ஜூன் 1-ம் நாள் | 150 கோடி கன அடி. |
| கோதையாறு பாசன ஏற்பாடு, சித்தாறு பட்டணங்கால் பாசன ஏற்பாடு. | ஷை | 200 கோடி கன அடி. |

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1974 ஆகஸ்ட் 27

சித்தாறு-பட்டணங்கால் பாசன ஏற்பாடு 3 ஆண்டுகளுக்கு முன்னர் செயலுக்கு வந்தது. கடந்த 3 ஆண்டுகளில் இக்கால்வாய், சாதகமான பருவநிலை காரணமாக 1971, 1972 ஆம் ஆண்டுகளில் ஜூன் மாத முதல் நாளன்றும் 1973-ல் ஜூன் 11ஆம் நாளன்றும் திறந்து விடப்பட்டது. இவ்வாண்டு ஜூன், ஜூலை மாதங்களில் பருவ மழை சரியாகப் பெய்யாததால், இவ்வாண்டு மிகவும் பாதகமானதாகும் எனலாம். ஆகஸ்ட் மாதத்தின் இரண்டாவது, மூன்றாவது வாரங்களில்தான் பருவ மழை ஓரளவு பெய்ய ஆரம்பித்து நீர்த்தேக்கங்களுக்கு ஓரளவு நீர் வந்து கொண்டிருக்கிறது. 1974 ஜூன், ஜூலை மாதங்களில் நீர் இருப்பு குறைவாக இருந்ததினால், சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தின்கீழ் உள்ள கால்வாய் பாசனத்திற்காகத் திறந்து விடப்பட இயலவில்லை. சித்தாறு-பட்டணங்கால் திட்ட ஆயக்கட்டு நிலங்களைக் காட்டிலும் கோதையாறு ஆயக்கட்டு நிலங்களுக்கு அதிக முன்னுரிமை இருந்தும் அவற்றின் தேவைகளை நிறைவு செய்வதற்குக்கூட போதுமான அளவு நீர் இல்லை.

சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு :—

| வட்டத்தின் பெயர். | இருபோகப் பயிர் நன்செய் நிலங்கள். | 30–6–74 வரை நன்செய்யாக மாற்றப்பட்ட புன்செய் நிலங்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ஏக்கர். | ஏக்கர். |
| விளவங்கோடு வட்டம் | 2,963.37 | [illegible]34 |
| கல்குளம் வட்டம் | 1,886.82 | 1,[illegible] |

இருபோகப் பயிர் விளைவிக்கப்படும் நன்சயெ் நிலங்கள் பல ஏரிகளின் வாயிலாகப் பாசன வசதிகளைப் பெற்றுள்ளன. இந்த ஏரிகளுக்குச் சித்தாறு-பட்டணங்கால் கால்வாயிலிருந்து முக்கியமாக நீர் கிடைக்கிறது. மிகக் குறைந்த அளவுக்கு மழை நீரும் இந்த ஏரிகளுக்குக் கிடைக்கின்றன. பொதுவாக, ஜூலையில் நடவுக்காக சித்தாறு-பட்டணங்கால் கால்வாயிலிருந்து நீரை எதிர்பார்த்து ஜூன் மாதத்தில் விவசாயிகள் முதல் போகப் பயிருக்காக நாற்று விடுகின்றனர். 1974 ஆகஸ்ட் மூன்றாம் வாரத்தில் மழை தொடங்குவதற்கு முன்னர் ஆயக்கட்டு நிலங்களிலுள்ள நெற்பயிர்கள் சாவியாகி விடக்கூடிய நிலைமைகள் தென்பட்டன. இப்பயிர்களைப் பாதுகாக்க வேண்டி, 17—8—74 அன்று மாலை 6 மணிக்கு சித்தாறு-பட்டணங்கால் கால்வாயைத் திறந்துவிடுமாறு ஆணையிடப்பட்டது. அரசு நிர்ணயித்துள்ள வரையறுத்த அளவுக்கு அணைகளின் மொத்த நீர் சேமிப்பு நிலை இல்லாத போதிலும்கூட ஏரிகளுக்கு நீர்விடுவதற்காக சித்தாறு-பட்டணங்கால் கால்வாயைத் திறந்துவிடும்படி ஆணையிடப்



1974 ஆகஸ்ட் 27] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

பட்டது. ஆனால், பருவமழை இம்மாதத்தின் நடுவிலிருந்து பெய்யத் தொடங்கியது. நல்ல மழை காரணமாக அநேகமாக ஏரிகள் அனைத்தும் நிரம்பி விட்டதால், கால்வாயைத் திறந்து வைத்திருப்பது அவசியமற்றதாகியது. ஆகவே, கால்வாயிலிருந்து நீர் விடுவது 19—8—1974 அன்று நிறுத்தப்பட்டது. தற்போதைய சாதாரணமான பருவநிலை பயிர்க்காலம் முழுவதும் தொடர்ந்து நிலவுமானால், ஏரிகளில் தற்போது உள்ள நீரைக் கொண்டு ஆயக்கட்டு நிலங்களில் விளைந்து வருகிற பயிர்களின் பெரும்பகுதியை பயனளிக்கத்தக்க வகையில் அறுவடை செய்ய முடியும். 1974 ஆகஸ்டில் பெய்யும் மழையை அடுத்து நீர்த்தேக்கத்திலிருந்து ஓரளவு கூடுதலாக நீர் வழங்கவும் இயலும்.

சித்தாறு-பட்டணங்கால் கால்வாய் திட்டத்தின் கீழ் உள்ள புன்செய் நிலமாக மாற்றப்பட்ட நன்செய் நிலங்களுக்கு நீர்த்தேக்கங்களில் குறைந்த அளவு நீரே இருப்பதன் காரணமாக, இதுவரை நீர் வழங்கப்படவில்லை. பொதுவாக, நன்செய் நிலங்களுக்கும், புன்செய் நிலமாக மாற்றப்பட்ட நிலங்களுக்கும், ஜூன் திங்கள் முதல் நாளில் சித்தாறு-பட்டணங்கால் கால்வாயிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும்போது விவசாயிகள் சாதாரணமாக நெல் பயிரிட விரும்புவர். ஆனால் இந்தக் கால்வாய் இந்த ஆண்டு இதுவரை திறந்துவிடப் படாததால் விவசாயிகள் புன்செய் பயிர்களைப் பெரும்பாலான பகுதிகளில் பயிரிட்டுள்ளனர். வரும் மாதங்களில் நல்ல மழை பெய்யும் என்பதை எதிர் பார்த்து சிலர் இங்குமங்குமாக நெல் பயிரிட்டுள்ளனர். ஆனால் இவ்வாறு நெல் பயிரிடப்பட்ட பகுதி அதிகமல்ல.

இந்தப் பகுதியில் பாசனம், குடிநீர் காரியங்களுக்காகத் தேவைப்படும் நீர் கிடைக்காத பற்றுக்குறையை ஏற்படுத்தும் அளவுக்கு வறட்சி நிலைமை எச்சமயத்திலும் ஏற்படவில்லை.

ஒரு பயிரை விளைவிப்பதற்கு சித்தாறு-பட்டணங்கால் கால்வாய் நீரைப் பயன்படுத்தும் அனுகூலத்தை விவசாயிகள் பெற்றிராவிட்டால், நன்செய், புன்செய் நஞ்சையாக மாற்றப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்குத் தண்ணீர் வரி விதிக்கப்படமாட்டாது. அத்தகைய சூழ்நிலைகளில் தண்ணீர் வரி விதிப்பினின்று விவசாயிகளைப் பாதுகாக்க அரசு இயற்றிய விதிகளில் போதிய பாதுகாப்பு உள்ளதால், தண்ணீர் வரி விதிப்பது குறித்து தற்போதுள்ள கட்டளைகளில் மாறுதல் ஏதும் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

பட்டணங்கால் கால்வாயைத் திறந்து விடுவது குறித்த விதிகளைத் திருத்தியமைக்கத் தெரிவிக்கப்பட்ட கருத்துரையைப் பொறுத்தவரை, இந்த ஆண்டில் பருவ மழை காலம் தாழ்த்திப் பெய்தது. அதன் விளைவாகப் பாசன ஏற்பாட்டில் போதிய நீர் இல்லாமற் போயிற்று என்பதனாலேயே பாசனத்திற்கு இந்தக்

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஆகஸ்ட் 27

கால்வாயைத் திறந்துவிடுவதற்கான தேதிகளில் மாறுதல் செய்ய வேண்டிய கட்டாயமில்லை என்பதை இங்கு குறிப்பிடலாம். விதிகளில் வரையறுக்கப்பட்டுள்ள தேதிகள் கடந்த ஆண்டுகளில் ஏறத்தாழ சரியாகப் பின்பற்றப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் ஏற்பட்டுள்ளது போன்ற நிலைமை அடிக்கடி ஏற்படாது. சித்தாறு-பட்டணங்கால் திட்டங்கள் பழைய கோதையாறு பாசன ஏற்பாட்டுடன் இணைந்த பாசனத் திட்டங்களில் ஒரு பகுதியாக உள்ளன. எனவே, சித்தாறு-பட்டணங்கால் திட்டத்தை பழைய கோதையாறு திட்டத்திலிருந்து பிரிப்பதற்கான சாத்தியக்கூறு ஏதுமில்லை.

பட்டணங்கால் பாசன ஏற்பாட்டின் கீழ் உள்ள விவசாயிகள் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரின் அளவை எண்ணிப் பாராமல் பயிர் விளைவிக்கத் தொடங்கினர் என்பதை இங்கு கவனிக்க வேண்டும். ஆனால், அதிர்ஷ்டவசமாக, நீர் சேமிப்பு நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டதன் காரணமாகவும் அண்மையில் மழை பெய்ததன் காரணமாகவும், இப்பகுதியில் நிலைமை கணிசமாகச் சீரடைந்துள்ளது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, புதிதாக சிற்றாறு 1, சிற்றாறு 2 என்று இரண்டு அணைக்கட்டுகளைக் கட்டியிருக்கிறார்கள். இந்தத் தண்ணீருக்கு முன் [illegible] பழைய பாசன வாயில்களுக்கு ஏற்ப இருக்கமுடியாது [illegible] அதை மாற்றியமைக்க வேண்டும். மாவட்ட வளர்ச்சி [illegible]களைக் கலந்துகொண்டு தண்ணீர் விடுவதிலுள்ள முறைக[illegible]த்தியமைக்க அரசாங்கம் முன்வருமா ? அது மட்டுமின்றி [illegible]ம் சேனலோடு எங்கள் பகுதியையும் இணைத்து இருப்பதால் [illegible]ர் கிடைப்பதில் சங்கடம் இருக்கிறது. ஆகவே அந்த [illegible]களையெல்லாம் மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த ஆண்டு போதுமான தண்ணீர் இல்லாததால் இப்படிப்பட்ட கஷ்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து குறித்து பரிசீலனை செய்யப்படும்.

திரு. என். கே. பழனிசாமி : சார் இன்றைக்கு எட்டு பில்கள் இருக்கின்றன. இன்றைக்குள்ளே முடிக்கமுடியுமா....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் சீக்கிரம் முடித்துவிட்டால் அதையும் முடித்துவிடலாம்.



(ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் வறட்சி நிலையிலும் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது குறித்து

திரு. மு. மாரிமுத்து : தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட ஆத்தூர் வட்டத்தில் கடந்த 1972-73-ஆம் ஆண்டு பருவ மழை பொய்த்ததின் விளைவாக விளைச்சல் இல்லாமல், குடிநீர் கிணறுகள் வற்றி, மக்களுக்கு உணவுப் பொருட்களும், கால்நடைகளுக்குத் தேவையான தீவனமும் கிடைக்காமல் இருக்கும் நிலையில் வருவாய்த் துறையினரும் கூட்டுறவுத் துறையினரும் ஜப்தி போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவரவர்களே, 1972 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஆத்தூர் வட்டத்தில் பருவ நிலைமை மோசமாயிருந்ததாக அறிக்கைகள் வரப்பெற்றதன்பேரில் வருவாய்துறை வாரிய உறுப்பினர் ஒருவர் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டு அங்கு நிவாரண உதவி நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதற்குப் பரிவுரைத்தார். அவரது பரிவுரையின் பேரில் தலைவாசல், வீரகனூர், கங்கவள்ளி பிர்காக்களில் நிலவரி, கடன்கள், வேளாண்மை வருமான வரி பாக்கிகளை வசூலிப்பதை 1972 டிசம்பர் இறுதிவரை ஒத்திப் போடவேண்டுமென அரசு உத்திரவிட்டது. ஆனால், 1972 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் டிசம்பர் வரையிலான கால அளவில் ஆத்தூர் வட்டத்தில் பலத்த மழை பெய்தது. அந்தக் கால அளவில் பலத்த மழையினாலும், வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கணிசமான நிதியுதவி அளிக்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டின் முற்பகுதியில் போதிய மழை பெய்யாத காரணத்தால் விவசாயிகள் பயனுறும் வகையில் சரிவரப் பயிர் செய்ய முடியவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆத்தூர் வட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு பருவகால வரித் தள்ளுபடி அளிக்கப்பட்டுள்ளது. 1383 ஆம் பசலி ஆண்டில் ரூ. 45,300-க்கும் அதிகமாக வரி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

அரசுக்குச் சேரவேண்டிய கடன்களை வசூலிப்பதைப் பொறுத்தவரையில் விவசாயிகள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத பல இனங்களில் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது. மோசமான இனங்களில் கடனை மெதுவாக வசூலிக்குமாறு உள்ளூர் அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். கடனை மொத்தமாகச் செலுத்த முடியாத இனங்களில் அவர்கள் தவணை முறையில் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஏனெனில், இவை நெடுங்காலமாக செலுத்தப்படாமல் உள்ள பெருந்தொகைகளாகும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அவர்களுடைய மாவட்டத்தில் பருவ நிலைமை மோசமாக உள்ள பகுதிகளில் உண்மையாகவே கடன் பாக்கிகளை திருப்பிச் செலுத்த இயலாதவர்களிடம் அவர்களுக்கு சிரமம் ஏற்படாதவகையில் கடன்களை வசூலிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

ஆத்தூர் வட்டத்தில் உணவு தானிய பற்ருக்குறை இல்லை. கம்பும் சோளமும் ஏராளமாகக் கிடைக்கின்றன. விவசாயிகள், அண்மையிலுள்ள திருச்சிராப்பள்ளி, தென்ஞர்க்காடு மாவட்டங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்து கால்நடைத் தீவனங்கள் பெற்று வருகிருர்கள்.

1974 ஏப்ரலிலிருந்து ஆத்தூர் வட்டத்தில் மழை பெய்து வந்துள்ளது. பாசனம் செய்யப்பட்ட வேர்க்கடலை தற்பொழுது எடுக்கப்பட்டு வருகிறது. மரவள்ளிக் கிழங்கு, வேர்க்கடலை, கம்பு ஆகியவை இன்னும் அறுவடை செய்யப்படவில்லை. இங்கு கூறப்பட்டுள்ளது போல், பற்ருக்குறை நிலைமைகள் எவையும் இல்லை. இருப்பினும் அரசு நிலைமையை நன்கு கண்காணித்து வருகிறது. அவசியப்படுமானல் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மூ. மாரிமுத்து: தலைவரவர்களே, 1970-ஆம் ஆண்டு, 1972-ஆம் ஆண்டு, 1973-ஆம் ஆண்டு என்று இப்படி ஒவ்வொரு வருஷமும் இதுபோன்ற வறட்சி ஏற்பட்டதை அரசாங்கத்திற்குக் கூறி வருகிருேம். ஒவ்வொரு வருஷமும் இதுபோன்ற நிலையை எடுத்துக் கூறியும் அரசாங்கம் அந்தப் பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவிக்கவில்லை. இனிமேலாவது அந்தப் பகுதியை வறட்சிப் பகுதி என்று அறிவிக்க அரசுக்கு இயலுமா ?

அடுத்து, உணவுப் பொருள்கள் அதிகமாக இருக்கிறது, மரவள்ளிக் கிழங்கு, கம்பு போன்றவை இருப்பதாக அமைச்சரவர்கள் கூறிஞர்கள். அங்கு பார்வையிட்ட மாவட்ட ஆட்சித் தலைவரும், வருவாய்க் கழக உறுப்பினர் அவர்களும் உண்மையிலேயே வேதனைப்பட்டார்கள். அவர்களுடைய குறிப்பெல்லாம் அரசுக்கு வந்திருக்கிறது. எனவே, அந்த இடத்திற்கு உணவுப் பொருள்களை நியாய விலைக்கடைகள் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் 1970-ஆம் ஆண்டு, 1972-ஆம் ஆண்டு, 1973-ஆம் ஆண்டுகளிலே ஏற்பட்ட வறட்சிக்கு நிவாரணம் அளிக்கப்படவில்லை என்று சொல்கிருர்கள். நான் விவரமாகப் படித்தேன். 1974-ஆம் ஆண்டிலே 45,000 ரூபாய்க்கு வரி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. 1974-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் மழை பெய்திருக்கிறது. அறுவடை ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனவே பஞ்ச நிலைமை இல்லை.

திரு. மூ. மாரிமுத்து: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் ஒத்துக் கொள்கிருர்கள். அங்கே வறட்சிப் பகுதி என்று அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: வறட்சி, பஞ்சப் பகுதியாக அறிவிக்க முடியாது என்றுதான் நான் சொன்னேன்.

(இ) காவிரித் தண்ணீர் பங்கீடுபற்றி கர்நாடக அரசின் பொதுப் பணித்துறை அமைச்சரின் அறிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, சட்டப் பேரவை விதி 41-இன் கீழ் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கொண்டு வருவார்.

THIRU M. A. LATHEEF: Sir, I hereby call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance, namely, "The statement of the Minister for Public Works, Government of Karnataka, about the sharing of Cauvery waters and about 1924 Agreement causing great anxiety to the people of Tamil Nadu and challenging the lower riparian rights of the State of Tamil Nadu".

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, காவிரி ஆற்று நீரைப் பகிர்ந்து கொள்வது குறித்தும், 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் குறித்தும் கருநாடக அரசின் பொதுப்பணித்துறை அமைச்சர் அளித்துள்ள அறிக்கை பற்றி செய்தித் தாள்களில் வெளிவந்துள்ள தகவல்களையொட்டி, நான் 29—7—1974-ஆம் நாளன்று செய்தித் தாள்களுக்கு வெளியிட்ட அறிக்கையின் படி * ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தற்போதுள்ள ஆயக்கட்டு தொடர்ந்து தனக்கு உரிய பாசனத் தேவைகளைப் பெற்று வரவேண்டும் என்பதே காவிரி நீரைப் பகிர்ந்து கொள்ளுவது பற்றிய நமது நிலையாகும்.

நமது மாநிலத்துக்குச் சேர வேண்டியதும், ஆனல் கருநாடக மாநிலத்தால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுமான 1,160 கோடி கன அடி அளவு நீரை விடுவிப்பது தொடர்பாகத் தற்போதுள்ள நிலைமை பின்வருமாறு :—

தமிழ்நாட்டுக்கு இயல்பாகச் சேர வேண்டிய அளவுக்கும் மேலாக விஞடிக்கு 10,000 கன அடி நீர் 29—7—1974-ஆம் நாள் நண்பகலிலிருந்து விடுவிக்கப்பட்டு, 4—8—74 அன்று இரவு 8-மணிக்கு நிறுத்தப்பட்டது. மொத்தம் விடுவிக்கப்படவேண்டிய 1,160 கோடி கன அடி அளவு நீரில், இவ்வாறு விடுவிக்கப்பட்ட நீர் அளவு சுமார் 550 கோடி கன அடியேயாகும். தொடர்ந்து, 13—8—1974 அன்று காலை முதற்கொண்டு கிருஷ்ணராஜசாகரத்திலிருந்து கூடுதலாக விஞடிக்கு 10,030 கன அடி நீர் விடுவிக்கப்பட்டது. இவ்வாறு, நமக்கு விடுவிக்காமல் தடுத்து வைக்கப்பட்ட 1,160 கோடி கன அடி நீர் முழுவதுமே 17—8—1974-க்குள் நமக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

*637—638-ம் பக்கங்களில் இணைப்பு V-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, கர்நாடக மாநில பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் சென்னையிலே பேசும் பொழுது 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தையே ஒப்புக் கொள்ள என்ற அளவிலே பேசியிருக்கிறார்கள். அத்துடன் இது தொடர்பாக முதலமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கர்நாடகத்தின் நிலையை ஒப்புக் கொண்டு, ஒப்புதல் தந்து வந்திருக்கிறார்கள் என்ற அளவில் அவர்கள் சென்னையிலே பேசியிருக்கிறார்கள். ஆகவே, இது தொடர்பாக பொதுமக்களிடையே அதிருப்தியும், அதிர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. இது தொடர்பாக மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் தருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தம் ரத்தாகிவிட்டது, காலாவதியாகி விட்டது என்பது கர்நாடக மாநிலத்தின் நிலை. நமது நிலை அந்த ஒப்பந்தம் இன்னும் முடியவில்லை, தொடர்ந்து உயிரோடு இருக்கிறது என்பது. இது தொடர்பாக மேற்கொண்டு விளக்கம் அளித்து சிக்கலான பிரச்னையை உருவாக்க நாங்கள் விரும்பவில்லை. மேலும் இதைச் சிக்கலாக்காமல் சுமுகமாக முடிவதற்கு நாம் முயற்சிக்கிறோம். கர்நாடக மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு சென்னபசப்பா அவர்கள் முதலமைச்சர்கள் மாநாட்டில் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு அப்பால் போய் முடிவு செய்து கொள்ளலாம் என்று தெரிவித்ததை முதலமைச்சரவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தத்தைப் பற்றி அங்கு வரவில்லை. எவ்வளவு தண்ணீர் இருக்க முடியும் என்று பரிசீலிக்கிறோம். சுமுகமான முடிவு ஏற்படும் நேரத்தில் இதைச் சிக்கலாக்காமல் இருப்பதற்காக, மேற்கொண்டு விளக்கம் கொடுப்பது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஈ) தேன்மாங்குளம் உள்ளாட்சி மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற தலைவரிடம் நிர்வாகத்தை ஒப்படைக்க துணைத் தலைவர் மறுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. எட்மண்ட் அவர்கள் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு பிரச்னையை கொண்டு வருவார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே பேரவை விதி 41-ன்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

'' நெல்லை மாவட்டத்திலுள்ள, ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள தேன்மாங்குளம் உள்ளாட்சி மன்றத்தின் தலைவர் பதவிக்கு சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தலில்



வெற்றி பெற்ற திரு. பாபநாசம் என்பவரிடம், ஊராட்சி மன்றத்தின் நிர்வாகத்தையும் தஸ்தாவேஜுகளையும் ஊராட்சி மன்றத்தின் துணைத்தலைவர் கொடுக்க மறுப்பதையும், புதிய தலைவரை ஊராட்சி ஒன்றியங்களுக்கு வர அனுமதிக்க மறுப்பதையும் பற்றி''.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, திரு. ஏ. பாபநாசம் 24—9—73-ம் தேதி அன்று நடந்த இடைத்தேர்தலில் திருநெல்வேலி மாவட்டம் ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தேன்மாங்குளம் ஊராட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன் பிறகு திரு. ஏ. பாபநாசம் ஏற்கெனவே ஐ.பி.சி. 324-ம் பிரிவின்கீழ் தண்டிக்கப்பட்டவர் என்ற 'காரணத்தினால் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வாளர் என்ற முறையில் 9—1—74-ம் அன்று திரு. ஏ. பாபநாசம் அவர்களை தலைவர் பதவியிலிருக்க தகுதி இழந்ததாக அறிவித்தார்.

திரு. ஏ. பாபநாசம் 28—1—74-ம் அன்று ஸ்ரீவைகுண்டம் முன்சீப் கோர்ட்டில் இதன்மீது வழக்கு தொடர்ந்தார். பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் உரிய காலத்தில் வழக்கு தொடர்ந்திருப்பதால், அவர் தொடர்ந்து பதவி வகிக்க தகுதியுடையவர் ஆவார். நீதிமன்றமும் 4—4—74 அன்று மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்திரவின்மீது இடைக்காலத் தடை உத்திரவு பிறப்பித்துள்ளது. ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றிய ஆணையர் 6—6—74 அன்றைய கடிதத்தில் தேன்மாங்குளம் ஊராட்சித் துணைத்தலைவரை ஊராட்சி தலைவரிடம் பொறுப்புகளை கொடுக்குமாறு உத்திரவிட்டுள்ளார். நாளது வரை தன்னிடமோ அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையரிடமோ ஊராட்சித் துணைத்தலைவர் பதவிப் பொறுப்புக்களை தலைவரிடம் ஒப்படைக்கவில்லை என்ற முறையீடுகள் ஏதும் வரவில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். முன்சீப் கோர்ட்டில் தொடர்ந்த வழக்கு இன்னும் முடிவு ஆகவில்லை.

ஊராட்சி மன்ற உறுப்பினர் பதவித் தகுதி இழப்பது பற்றிய சட்டவிதிகள் ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் பதவிக்கும் பொருந்தும். எனவே, ஊராட்சி ஒன்றிய ஆணையர் 18—11—1973 அன்றே திரு. பாபநாசம் அவர்கள் ஒன்றியக் குழு உறுப்பினர் பதவி வகிக்க தகுதியற்றவர் ஆனார் என்று அறிக்கை விட்டார். அவ்வறிக்கையை திரு. பாபநாசம் 22—11—1973 அன்று பெற்றுக்கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவரின் உத்தரவை, அதாவது ஊராட்சித் தலைவர் பதவி வகிக்க தகுதி இழந்தவர் என்பதை எதிர்த்து தாக்கல் செய்த வழக்குடன் ஒன்றியக் குழுவின் உறுப்பினர் பதவி வகிக்க தகுதியிழந்தவர் என்ற ஆணையரின் உத்திரவை எதிர்ப்பதையும் சேர்த்துக் கொண்டுள்ளார். தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 28 (2)-ன் பிரிவின்படி பதவித்தகுதி இழந்தவர் அதுபற்றிய அறிக்கை கிடைத்த 60 நாட்களுக்குள் எதிர்ப்பு மனு குறிப்பிடப்பட்ட நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவேண்டும். ஆனால், திரு. பாபநாசம் 60 நாட்கள் கழிந்த பின்னரே மனுச்செய்துள்ளார். எனவே அவர் தொடர்ந்து ஒன்றியக் குழுவில் உறுப்பினராக இருக்க தகுதி அற்றவர். மேலும், கோர்ட்டு ஊராட்சித் தலைவர் பற்றிய மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கையை மட்டுமே தடை செய்துள்ளது. ஊராட்சி ஒன்றிய ஆணையரின் திரு. பாபநாசம் பதவி வகிக்க தகுதி இழந்தவர் என்ற அறிக்கையை கோர்ட்டு தடை செய்யவில்லை. எனவே, ஊராட்சி ஒன்றிய ஆணையர் கூட்டங்கள் பற்றிய அறிவிப்புகளை திரு. பாபநாசம் அவர்களுக்கு அனுப்பவில்லை.

திரு. பாபநாசம் அவர்களின் பதவி தகுதி இழப்பு பற்றிய முறையீடு இன்னும் கோர்ட்டின் முடிவு வரவில்லை. ஆகவே, பொருள் நீதிமன்ற விசாரணையில் உள்ளதால் இதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கையோ விவாதமோ தேவையில்லை, சாத்தியமில்லை என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: திரு. பாபநாசம் அவர்கள் முறைப்படி நடைபெற்ற ஊராட்சி மன்றத் தலைவர் இடைத் தேர்தலில் வெற்றி பெற்று இருக்கிறார். வெற்றி பெற்ற பின்னால் தேர்தல் செல்லாது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட அதிகாரம் கிடையாது. அந்த தேர்தல் செல்லாது என்றால் தேர்தலை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குப் போட்டு அதற்குச் தடை வாங்கலாமே தவிர, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆளுங் கட்சிக்குச் சாதகமாக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் கேட்கலாமே தவிர புதிய விவாதத்தை உண்டாக்கக்கூடாது.

திரு. க. உரொ. எட்மண்ட்: விளக்கம் பெறத்தான் இவைகளைச் சொல்லுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளக்கம் பெற இரண்டொரு கேள்விகள்தான் கேட்கலாம். புதிய விவாதமாக இருக்கக் கூடாது.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாவட்ட ஆட்சித் தலைவர் தேர்தல் செல்லாது என்று சொலல அதிகாரம் கிடையாது. நீதிமன்றந்தான் தேர்தல் செல்லுமா, செல்லாதா என்று தீர்ப்பு வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதெல்லாம் எப்படி இதிலே வரும்? வழக்கு மன்றத்திலே வாதாட வேண்டியதை எல்லாம 41-வது விதியின்கீழ் விவாதித்துக் கொண்டிருக்க முடியாது.



திரு. க. உரொ. எட்மண்ட்: அவர் ஊராட்சி ஒன்றியக் கூட்டங்களில் கலந்து கொள்ள இனிமேலாவது நம்முடைய அமைச்சர் அவர்கள் தகுந்த உத்தரவு பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வாளர் என்ற முறையில் விலக்க சட்டத்தில் இடம் இருக்கிறது. அது நம்முடைய திரு. எட்மண்ட் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். கலெக்டர் என்ற முறையில் அல்ல. ஆய்வாளர் என்ற முறையில் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. அடுத்த கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வது பற்றிச் சொன்னார்கள். இப்போது அது வழக்கு மன்றத்தில் இருக்கும் காரணத்தால் அதுபற்றி ஒன்றும் செய்வதற்கில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: மாவட்ட ஆட்சித்தலைவர் ஒரு ஊராட்சி மன்றத் தலைவரை நீக்க அதிகாரம் இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். எந்தச் சந்தர்ப்பங்களில் நீக்க அதிகாரம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். ஊராட்சி மன்றத் தலைவர் நிர்வாகத்திலே ஏதாவது தவறு செய்திருந்தால், ஊழல் செய்திருந்தால் நீக்க உரிமை இருக்கிறதே தவிர, தேர்தல் செல்லாது என்ற அடிப்படையில் நீக்க மாவட்ட ஆட்சித் தலைவருக்கு எந்த விதமான உரிமையும் இல்லை என்பதை மனதில் கொண்டு இதிலே உத்தரவு பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அந்தத் தலைவர் ஐ.பி.சி. 324-ன் கீழ் தண்டிக்கப்பட்டவர் என்ற காரணத்தால் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற விவரங்களைக் கேட்டுச் சொல்லுகிறேன்.

(6) அறிவிப்புகள்.

(அ) தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்ற அவைகளால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு, 1973-ம் ஆண்டு, பயிரிடும் குத்தகைதாரர்கள் (நிலவுடைமையாளர்களின் உரிமைகளை வாங்கும் உரிமை) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/73) ஆளுநர் அவர்களிடமிருந்து 7—8—1974-ம் நாளிட்டு வரப்பெற்ற செய்தியில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு இணங்க, மறு ஆய்வு செய்வதற்கென கூட்டாய்வுக் குழு அமைப்பதற்கு சட்ட மன்ற மேலவை இசைவு தந்து, மேற்படி கூட்டாய்வு

குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட மேலவை உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சட்டமன்ற மேலவை தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

1. திரு. கோ. சி. மணி.
2. திரு. வி. ஆர். பெரியண்ணன்.
3. திரு. டி. வி. முத்துகிருஷ்ணன்.
4. திரு. இரா. சாம்பசிவம்.
5. திரு. வி. தங்கப்பாண்டியன்.
6. திரு. கே. எஸ். அப்துல் வஹாப்.
7. திரு. ஜி. சுவாமிநாதன்.
8. திரு. ஏ. ஆர். தாமோதரன்.
9. திரு. கே. இராசாராம்.
10. திரு. என். சுந்தரேச தேவர்.

(ஆ) மேலவையில் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவுகள்பற்றி மேலவைத் தலைவர் அனுப்பியுள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் சட்டமன்ற மேலவையில் 23—8—1974-ம் நாள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பரிந்துரை ஏதுமின்றி அனுப்பப்பட்டுள்ளனவென்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது:—

(1) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/74) ;

(2) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 40/74) ;

(3) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 33/74) ;

கீழ்க்கண்ட சட்ட முன்வடிவுகள் அவற்றிற்கு நேரே குறிப்பிட்டுள்ள நாட்களில், சட்டமன்ற மேலவையில் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப்பட்டு, ஒப்புதல் அளித்து அனுப்பப்பட்டுள்ளதென்று மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரபபெற்றுள்ளது:—



| | நிறைவேற்றப் பட்ட நாள். |
|---|---|
| (1) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு, எஸ்டேட்டுகள் (ஒழிப்பு, ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/74). | 23—8—1974 |
| (2) 1974-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/74). | 23—8—1974 |
| (3) 1974-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) மூன்றும் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/74). | 24—8—1974 |
| (4) 1974-ம் ஆண்டு, மதுரை மாநகராட்சி (திருத்த, பதவிக்கால நீட்டிப்பு) இரண்டாம் திருத்த சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/74). | 24—8—1974 |
| (5) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு மதுவிலக்கு (மீண்டும் அமல்படுத்தலும், திருத்தமும்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/74). | 24—8—1974 |

(7) தகவல் கோரல்.

டெல்லியில் திட்டக்குழுவுடனும் தொகுதி நிர்ணயக் குழுவுடனும் முதலமைச்சர் விவாதித்தது குறித்து.

DR. H. V. HANDE : Sir, the Hon. Chief Minister and the Hon. Minister for Industries have gone to Delhi and we have heard only from the reports of the newspapers as to what transpired there. It is the normal parliamentary practice and there is also provision in the Assembly Rules that the Hon. Chief Minister or the Hon. Minister for Industries can take this House into his confidence and make a statement under Rule 82 on what transpired during the discussion with the Planning Commission and the Delimitation of Parliamentary and Assembly constituencies in Tamil Nadu.....

என்ன நடந்தது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுருக்கமாகச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். சட்ட சபை நடந்து கொண்டிருக்கும் போது பத்திரிகையில் பார்த்துத் தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நிலை இல்லாமல் ரூல் 82-ன்கீழ் ஸ்டேட்மெண்டாக இல்லாவிட்டாலும் முதலமைச்சர் அவர்கள் சுருக்கமாக அதைப்பற்றிச் சொல்லுவது தான் மரபாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இந்தச் சட்டமன்றத்தில் டிலிமிடேஷன் சம்பந்தமாக தீர்மானத்தை நிறைவேற்றினோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 'டில்லி செல்ல இருக்கிறேன், அங்கு தேர்தல் கமிஷனரைச் சந்தித்து இதுபற்றி விவாதிப்பேன்' என்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அங்கு தேர்தல் கமிஷனரைச் சந்தித்தாரா? அதன் பயன் என்ன? கச்சத் தீவு சம்பந்தமாகவும் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். பிரசிடென்டையும், பிரதம அமைச்சரையும் சந்தித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக என்ன பேசப் பட்டது, இவற்றைப்பற்றியெல்லாம் கலந்தாலோசித்ததன் முடிவு என்ன என்பதைப்பற்றியெல்லாம் அவர்கள் சபைக்குத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, டில்லிக்குச் சென்று வந்தால் உடனே சபையில் அறிவிக்க வேண்டுமென்ற மரபு இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி ஒரு மரபாக உருவாக்குவதும் முறை அல்ல என்று கருதுகிறேன். ஆனால், இங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்பற்றியெல்லாம் பேசப்பட்டது என்பதால் நாளைய தினம் அதுபற்றிய தகவல்களை சபைக்குத் தெரிவிக்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, on a point of order. From the statement just made by the Hon. Chief Minister we understand that the Assembly is sitting tomorrow also. We want to know whether we are sitting tomorrow also.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கூட்டத்தை இன்றே முடித்து விடுவதாக இருந்தால், வேண்டுமானால் இன்றைக்கே கூட்ட இறுதியில் சொல்லுகிறேன்.

(8) நீதிமன்றத்திலுள்ள ஒரு வழக்கை நிறுத்திவைப்பது பற்றி அரசு உத்திரவிட்டதாக திரு. க. உரோ. எட்மண்ட் சாட்டிய குற்றச்சாட்டு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 17—8—74 அன்று நடந்த விவாதத்தில் பங்குகொண்ட மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் திருநெல்வேலி டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்





கோர்ட்டில் இருக்கும் ஒரு வழக்கை நிறுத்திவைக்க வேண்டுமென்று அரசாங்கத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது என்ற குற்றச் சாட்டைச் சொன்னார்கள். அதற்கு ஆதாரமாக மாவட்ட கலெக்டர் அவர்கள் அந்த மாவட்ட சூப்பரின்டென்டென்ட் ஆப் போலீசுக்கு எழுதிய கடிதத்தின் நகலை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசின் கருத்து என்ன என்று சட்ட அமைச்சர் அவர்கள் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தில் கலந்து கொண்டு, நான் சில தவறுகள் நீதித் துறையில் நடந்திருப்பதாக இந்த மன்றத்தில் எடுத்துக் கூறிய நேரத்தில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளின்பேரில் நான் பேசிய பேச்சுக்களின் அந்தப் பகுதி நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டதோடு அல்லாமல் அதற்கானஆதாரங்களைச் சட்டமன்றத்தில் கொடுத்தால் மீண்டும் நடவடிக்கைக் குறிப்பில் ஏறும் என்று சொன்னதன் பேரில்தான் நான் இன்று அந்தக்கடிதத்தை உங்களிடம் கொடுத்திருக்கிறேன். நீங்கள் இதைப்பற்றி மாண்புமிகு சட்ட அமைச்சரிடம் அபிப்பிராயம் கேட்பதற்கு முன்னால் என்னிடம் அதற்கான அபிப்பிராயம் கேட்டால் அதற்கான விளக்கங்களைக் கொடுக்க வாய்ப்பளித்ததாக இருக்கும். என்னுடைய விளக்கங்களைக் கேட்டு பிறகு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களானால் பேரவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பளிப்பது முறையாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அன்று சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். ஆதாரம் வேண்டுமென்று சொன்னதற்கு இன்று ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அரசாங்கத் தரப்பில் அவர்கள் கருத்து என்ன என்று கேட்பது முறையே தவிர, மீண்டும் உங்களைக் கேட்க வேண்டிய அவசியம் இல்லை.

[முற்பகல் 11.30.]

திரு. க. உரோ. எட்மண்ட் : நான் என்ன ஆதாரத்தைக் கொடுத்திருக்கிறேன் என்பதைப்பற்றி இந்த அவையில் கூற வேண்டும். நான் கொடுத்திருக்கிற ஆதாரத்தை தாங்கள் வாசிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டக் காவல் துறை அதிகாரிக்கு, சூப்பரின்டென்டென்ட் ஆப் போலீசுக்கு எழுதிய ஒரு கடிதம்.

THIRU G. R. EDMUND : I have to explain certain circumstances under which I rely on this document.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் ஆதாரமாகக் கொடுத்திருப்பது இதுதான். ஆதாரம், மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளருக்கு அனுப்பிய கடிதம்.

திரு. க. உரோ. எட்மண்ட் : நான் மீண்டும் மீண்டும் சொல்கிறேன். நான் கொடுத்திருக்கிற ஆதாரம், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் எழுதப்பட்டிருக்கிறது. காவல் துறை கண்காணிப்பாளருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எந்தச் சூழ்நிலையில் அனுப்பியிருக்கிறார்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அந்த வாக்கியத்தையே படித்துவிடுகிறேன்.

'Please refer to the correspondence resting with your D. O. letter cited.'

This is from letter written by Thiru R. Shanmugasigamani, I.A.S., Collector, Tirunelveli to Thiru Roshanlal Handa, I. P. S., Superintendent of Police, Tirunleveli.

THIRU G. R. EDMUND : If you do not read the document fully, it will not be useful to the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படிக்கிறேன்.

*Confidential.*

D. O. No. N. 17/72524/71-G.

*Sub.*—Panchayat Administration—Palayamkottai Panchayat Union—Marudur Panchayat—Chitraipandian (Thiru) P., Panchayat Union Chairman, Palayamkottai—D.C.B. Crime No. 24/72-u/s 409, I.P.C.—Records receipt acknowledged.

*Ref.*—Your D. O. No. C1/16751/73, dated 3rd November 1973—Received by me on 9th November 1973.

Please refer to the correspondence resting with your D. O. letter cited. The records in D.C.B. Crime No. 24/72, under section 409, I.P.C. received along with your D. O. letter cited have been forwarded to Government for reference and return.



Your suggestion to address the Registrar, High Court to instruct the District Magistrate, Tirunelveli to have the proceedings in the Court stayed has already been referred to the Government. Orders if any received will be communicated to you. As the High Court alone is competent to issue such instructions, I am not addressing the District Magistrate, as requested in paragraph 3 of your D. O. letter cited.

THIRU V. KRISHNAMOORTHI : Sir, this is a confidential document. How can it read in the House ? There is no secrecy then.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இதில் ஒன்றும் ஸிக்ரஸி இல்லை

You may consult the Assistant Public Prosecutor, Grade I and file an application for long adjournment pending receipt of orders from Government or in the alternative if the counsel for the accused prays for an adjournment, the prosecution may express no objection.

The summons received along with your D. O. letter cited are enclosed.

*Yours sincerely,*
(*Sd.*) R. SHANMUGASIGAMANI.

To,
Thiru Roshanlal Handa, I.P.S.,
Superintendent of Police, Tirunelveli.

Copy to the District Magistrate, Tirunelveli.

இவ்வளவுதான்.

THIRU M. A. LATHEEF : Sir, I am raising a point of order. It is said that this document has been written by the District Collector to the District Superintendent of Police and we would like to know whether it has been filed in Court. If it had been filed in Court, it becomes a Court document and even the legislature has no power, unless the Court agrees, to go into details of the concerned document as such. Only the Advocate on record or the person accredited to receive the document can produce the document. The Legislature cannot compel the Court or the concerned department as such. It has no right. The Legislature can ask the executive to instruct the officers there in turn to instruct the Public Prosecutor to file a petition before the Court and if the Court agrees to give a certified copy, then only it can be introduced here with the consent of the Court.

But now, a document has been submitted to the Hon. Speaker and the Hon. Speaker has read over the contents of the document. In all these matters the right belongs to the Court. When a matter is pending before the Court, in a judicial matter, without the knowledge and consent of the judicial authority, we have no right to produce the document here and the Legislature has no power to transgress the limit visualised by the Constitution for the purpose of separation of powers, judicial independence and privilege of the judiciary. I challenge this document, as to how it can be produced before the House and how it can be taken cognisance of by the Hon. Speaker and how it can be read in the House.

Therefore, what I submit is that the entire proceedings, unless and until it is done properly, should be expunged and we should not attempt to do such things in future.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பாயின்ட் ஆப் ஆர்டரைப் பின்னால் எழுப்புங்கள். வாய்ப்பு தருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இதை, எப்படி நீதிமன்றத்தில் இருப்பதை நம் பேரவை பெற்றிருக்கலாம் என்று சொன்னார்கள். இது, நீதிமன்றத்திற்கு எழுதி வரவில்லை. இந்தக் கடிதம் அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த மாவட்டத்தினுடைய காவல் துறை அதிகாரிக்கு எழுதிய கடிதம். இந்தக் கடிதத்தை என்னிடம் மாண்புமிகு உறுப்பினர் திரு. எட்மண்ட் அவர்கள் கொடுத்தார்கள். இந்தக் கடிதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இது நீங்கள் எழுதிய கடிதம்தானே என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டோம் அரசாங்கத் துறையில். மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கடிதம் காவல் துறை அதிகாரிக்கு எழுதப்பட்ட கடிதம் என்று சொன்னார்கள். ஆக, கோர்ட்டோடு, நீதிமன்றத்தோடு எந்தவிதமான தொடர்பும் கொள்ளவில்லை. இதில் எந்தவிதமான முறைகேடும் இல்லை.

THIRU M. A. LATHEEF : May I now whether these things have been filed in Court, whether it is a Court document. If it is a letter written by the District Collector to the Superintendent of Police, I have no objection. The executive can call at any time any document written by one official to another under its executive authority.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் நடைபெற்றிருக்கிறது.



THIRU M. A. LATHEEF : If that document is filed in Court, then the executive or this House has no authority to bring it here without the consent of the Court.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோர்ட்டில் பைல் செய்திருக்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றியெல்லாம், கேட்கக்கூட இல்லை. மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட காவல் துறை அதிகாரிக்கு இப்படி ஒரு கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். எழுதியிருக்கிறீர்களா என்று கேட்டதற்கு இந்தக் கடிதத்தை எழுதியிருப்பதாகச் சொன்னார்கள்.

THIRU M. A. LATHEEF : The Hon. Member said on that day that the document has been filed in Court. So, a clarification must be asked from the hon. Member.

THIRU R. PONNAPPA NADAR : We would like to hear the Hon. Minister first.

DR. H. V. HANDE : I am raising a very valid point of order.

Whenever a member claims a particular document to prove his statement, when I have a document at my disposal to prove a particular fact, then it is customary on the part of the Hon. Speaker to demand from that member to produce that document. Now the question is if the Government agency is responsible for it then the question of independence of judiciary may be brought in. Here it is a document that Mr. G. R. Edmund has collected. He can collect the document in his own way. That is not the business of the House. The business of the House and the Hon. Speaker is to find out the genuineness of the document. That is all.

In Lok Sabha also it has happended several times when members had produced documents in support of their case. They did not go into how the concerned members were able to procure the document. What we are concerned with is about the genuineness of the document. No other member of the House has got a right to question the member, or theChair saying or asking whether the document has been filed in Court whether it is a Court document, etc., That question does not arise at all here. It is here a question of finding out the genuineness of the document. That is all. The Hon. Speaker and the House is concerned only with the genuineness of the document. No other point could come under discussion. That is what I want to submit.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, திரு. எட்மண்ட் அவர்கள் அன்று எழுப்பிய பிரச்னை பற்றி அரசு தரப்பில் கேட்கிறோம் என்றும், இந்த மன்றத்தில் உறுதி

கூறப்பட்டது. அன்றைய விவாதத்தை மறுப்பது போல் இன்று புதிய விவாதம் ஒன்று வேறு விதத்தில் எழுப்பப்பட்டது. இன்று நடந்த விவாதத்தின் மூலம் மாண்புமிகு உறுப்பினர் எத்தகைய தவறான செய்தியை இந்த மன்றத்திற்கு தந்திருக்கிறார்கள் என்பது நன்றாகப்புரியும்.

அன்று திரு. எட்மண்ட் அவர்கள் சொன்ன வார்த்தைகள் சரியாக நினைவு இல்லாவிட்டாலும், எல்லாமன்ற உறுப்பினர்களும், கட்சி வேறுபாடில்லாது, அவர் சொன்ன கருத்தைப் புரிந்து கொண்டிருப்பார்கள். அரசாங்கம் அதாவது அரசாங்கத்தைச் சேர்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக நீதிமன்றத்தில் தலையிட்டது. கலெக்டர் மூலமாக அந்த வழக்கு மேலும் நடக்காமல் ஸ்டே செய்யப்பட்டிருக்கிறது. தடுத்து நிறுத்தப்பட்டு இருக்கிறது என்று இங்கே சொன்னார்கள். நான்கூட டைரக்ஷன் கொடுத்து இருக்கிறதோ என்று பயம் அடைந்து அவர்களை திரும்பவும் விளக்கச் சொன்ன உடனே, டைரக்ஷன் இல்லை, கலெக்டர் ரிக்வெஸ்ட் செய்து சொல்லி இருக்கிறார்கள், அந்தக் கடிதத்தையே நான் பார்த்தேன் என்று அப்போது சொன்னார்கள். இப்போது அவர்கள் ஆதாரம் கொடுத்து இருக்கிறார்கள். அந்த ஆதாரத்திலுள்ள கன்டென்ட்ஸை புரிந்து கொண்டீர்கள். மாண்புமிகு சபைத் தலைவர் அவர்களும் அந்தக் கடிதத்தை வாசித்துவிட்டார்கள். அதிலே உள்ள உண்மை புரிந்து இருக்கும் என்று நம்புகிறேன்.

இந்த மன்றத்தில் நமக்குத் தரப்பட்ட தகவல், அவர்களால் எழுப்பிய வாதம், கலெக்டர் நீதிபதிக்கு எழுதினார் என்பது. இப்போது அவர்கள் கொடுத்து இருக்கும் ஆதாரம் கலெக்டர் மாவட்ட போலீஸ் அதிகாரிக்கு எழுதியதைக் கொடுத்து இருக்கிறார்கள். (குறுக்கீடு) நான் சொல்லிமுடித்து விடுகிறேன். பிறகு உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்...............

THIRU G. R. EDMUND: Sir he cannot mislead the House....
...............................

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அப்புறம் உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன்:</u> நான் மிஸ்லீட் செய்கிறேனா அல்லது மாண்புமிகு உறுப்பினர் மிஸ்லீட் செய்தாரா, யார் மிஸ்லீட் செய்தது என்பதைப் புரிந்துக் கொள்ளலாம். மாவட்ட நீதிபதிக்கு மாவட்ட கலெக்டர் எழுதினார் என்பது கூற்று. இப்போது இங்கே காப்பி கொடுக்கப்பட்டிருக்கிறது. மாவட்ட கலெக்டர் மாவட்ட போலீஸ் அதிகாரிக்கு எழுதிய கடிதம். அதை சபைத் தலைவர் வாசித்தார்கள். எங்கே வாசிக்காமல் விட்டுவிடுவார்களோ என்று நினைத்தீர்கள். அதிலே என்ன இருக்கிறது. மாவட்ட ஜுடீஷியல் மேஜிஸ்டிரேட்டுக்கு காப்பி போட்டு இருக்கிறார்கள். அதை இங்கே சொல்லியிருக்கலாம்,



மாவட்ட கலெக்டர் காவல் துறைக்கு எழுதிய கடிதத்தை மாஜிஸ்டிரேட்டுக்கும் காப்பி போட்டு இருக்கிறார், இப்படி நகல் அனுப்பலாமா என்று கேட்டு இருந்தால், அது ஏன் என்று விசாரித்துச் சொல்லியிருக்கலாம்.

ஆகவே, மன்றத்தில் சொல்லப்பட்ட தகவல் மிகமிகத் தவறான தகவலாகும். அவர் என்ன சொன்னார், அந்தக் கடிதத்தைப் பார்த்தேன் என்று சொன்னார்கள். அதைச் சரியாகப் பார்த்திருப்பார்களானால், இந்த மன்றத்தில் தவறான ஒரு பாரம் பர்யம் உண்டாக்காமல் தவிர்த்து இருக்கமுடியும். அவர்கள் உள்ளே இருக்கும் வாசகங்களை படித்து இருப்பார்களானால்—படித்ததாகச் சொன்னார்கள்—அதிலே சொல்லப்பட்டுள்ள பொருளை தவறாகச் சொல்லி இருக்கிறார்கள் என்பது புலப்படும். அவர் தந்த செய்தி, அரசாங்கம், கலெக்டர் மூலமாகத் தலையிட்டு வழக்கை நிறுத்தியது, தி.மு.க.காரர் என்பதற்காக என்று மக்களுக்கு அது போய் சேரும்.

இதில் மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட போலீஸ் அதிகாரிக்கு எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள்

as the High Court alone is competent to issue instructions

அரசாங்கம் எந்த கலெக்டர் மூலமாக அந்தக் குற்றத்தைச் செய்தது என்று திரு. எட்மண்ட் அவர்கள் அன்று வாதிட்டார்களோ அந்த அதிகாரியே அரசாங்கத்திற்குக் கிடையாது, உயர்நீதி மன்றத்திற்குத்தான் உண்டு என்று மிகத் தெளிவாக அந்தக் கடிதத்தில் எழுதியிருப்பதைப் பார்த்து இருக்கிறோம்.

கலெக்டர் நீதித்துறைக்கு எழுதினார் என்பது பொருத்தமா? அதுவும் வழக்கறிஞர் நண்பர் அப்படிச் சொல்வது பொருத்தமா என்று எண்ணிப்பார்க்கவேண்டும். இதைவிட இன்னும் அதிகமாக எழுதியிருக்கிறார்கள். அந்த வழக்கை ஒத்தி வைக்க வேண்டுமென்று இடைக்காலத்திற்கு விரும்பினால், மாவட்ட காவல் துறை அதிகாரி என்ன செய்யவேண்டுமென்பதையும் அந்தக் கடிதத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்று விளக்கியிருக்கிறார்.

திரு. லத்தீப் அவர்கள் சொன்னது போல், சட்டப்படி காவல் துறை அதிகாரி அவர்களுடைய ஏ.பி.பி. மூலமாக மனுப் போட்டு வாய்தா வாங்கவேண்டும் என்ற சட்டத்தின் நடைமுறையையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது முதல் பிரச்னை, முடித்துக் கொள்கிறேன்.

இங்கே எழுப்ப விரும்பும் பிரச்னை எல்லாம் காப்பி ஆப் லெட்டர் ஏன் டிஸ்டிரிக்ட் மேஜிஸ்டிரேட்டுக்குப் போட்டார்கள். அதைச் சொல்லலாமேதவிர அராங்கம் தலையிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக எதுவும் செய்யவில்லை. இது முற்றிலும்

முரணான செய்தியாக இருக்கிறது என்று நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒவ்வொரு அரசாங்கச் செயல்களிலும் அந்த மாவட்ட நீதிபதிக்கு நகல் அனுப்பப்படும் முறை பற்றி தனியாகக் கேட்டால் உயர்நீதி மன்றத்தைக் கேட்டு பதில் தரலாம்.

என்னைப் பொறுத்தவரையில் இந்த மன்றத்தில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள், தரப்பட்ட ஆதாரங்கள் முற்றிலும் பொருத்தம் அற்றது. இப்படி தவறான செய்திகளையே கொடுத்து இந்த மன்றத்தின் நேரத்தை குறைப்பது, பாரம்பர்யம் தவறி எல்லாவற்றிலும் மக்களிடத்தில் ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்துவது, நீதிபதிகளை அவமானப் படுத்திக் கூறுவது, நிர்வாகத் துறையைக் குறை சொல்வது, இவையெல்லாம் மிகமிகத் தவறு, பெரிய பொறுப்பிலுள்ளவர்கள் இதைச் செய்யக்கூடாது என்று இந்த சபைக்கு விளக்கக்கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. க. உரோ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே பேசும் போது சொன்னார்கள், ஏதோ நாங்கள் எல்லாம் தவறான கருத்தைச்சொல்லி, தவறான தகவலைக் கொடுத்து, மக்களையும் நாங்கள் ஏமாற்றிக் கொண்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். (குறுக்கீடு) அவர்கள் சொல்லும்போது நாங்கள் சொல்லக்கூடாதா? அப்படி அமைச்சர் சொல்லும்போது அதை அனுமதித்தீர்களே? தவறான பாரம்பர்யத்தை நாங்கள் இங்கே உருவாக்குகிறோம் என்று சொன்னார்கள். தவறான பாரம்பர்யத்தை உருவாக்குவதற்கும், தவறான செய்திகளை மன்றத்தில் கொடுத்து நாட்டு மக்களை திசை திருப்பவும் நாங்கள் இந்த மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு வரவில்லை.

நம்முடைய சட்ட அமைச்சர் வழக்கறிஞர். வாதத்திறமையில் நீதிமன்றத்தில் எந்த அளவுக்கு சட்டத்தின் அடிப்படையில், ஸ்பிரிட் ஆப் தி லெட்டரை மாத்திரம் வைத்துக் கொண்டு வாதிடுவார்களோ, அதேபோல் அமைச்சர் அவர்கள் இங்கே வாதிட்டு இருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட காவல் துறைக்கு எழுதிய கடிதம்தான் அது, அதை ஏற்றுக்கொள்கிறேன். கடிதத்தின் முதலில் என்ன எழுதியிருக்கிறது. 'கான்பிடன்சியல்' என்று எழுதியிருக்கிறார்கள். என்னுடைய கேள்வியெல்லாம், அதிலே இன்னொரு கருத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவர் சொல்லியிருக்கிறார்கள்.

orders if any received will be communicated to you. As the High Court alone is competent to issue instructions, I am not addressing the District Magistrate as requested in paragraph 3 of the D. O. letter cited....... என்று கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கூறப்பட்டதை அவர் ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஒரு டிஸடிரிக்ட் மேஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் ஒரு



வழக்கு போடப்படுகிறது என்று சொன்னால், அத்த வழக்கை தடுத்து நிறுத்தும் அதிகாரம் ஸ்டே ஆர்டர் கொடுப்பதற்கு அதிகாரம் உயர்நீதி மன்றத்திற்கு இருக்கிறது. அது இல்லை என்று சொல்லவில்லை. அதை மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிந்து வைத்திருக்கிறார். அதேபோல் நீதிமன்றத்தில் அரசாங்கத்தின் தரப்பில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் வழக்கு பதிவு செய்தால் அந்த வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் காவல் துறைக்கு இருக்கிறது.

They can refer the case or they can withdraw the case.

நாங்கள் விசாரித்தோம். போதுமான சாட்சியங்கள் கிடைக்கவில்லை. ஆகவே, எந்தக் குற்றத்தின் அடிப்படையில் குற்றவாளியைப் பிடித்து, வழக்கு தொடர்ந்தோமோ, அந்தக் குற்றம் நிரூபிக்கப்படாத காரணத்தால், குற்றம் நிரூபிக்க சாட்சியம் இல்லாத காரணத்தால் வழக்கை திரும்பப் பெற்றுக் கொள்கிறோம் என்று மாவட்ட காவல் துறை அந்த வழக்கை மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கு அதிகாரம் இருக்கிறது. நான் இந்தச் சூழ்நிலையை மனதில் வைத்துக் கொண்டுதான் சொன்னேன். இதை மனதில் வைத்துக் கொண்டு பார்க்க வேண்டும். கடிதத்தை மாத்திரம் ஒட்டுமொத்தமாக வைத்துக் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை அதிகாரிக்கு எழுதினார், எனவே நீதிமன்றத்திற்கு எழுதவில்லை என்று நான் ஒரு கேள்வி இந்த மன்றத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். அதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவேண்டும்.

கான்பிடன்சியல் என்று கடிதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறைக்கு கடிதம் எழுதுகிறார். அது மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மாவட்ட காவல் துறை அதிகாரிக்கும் மட்டுமே தெரிய வேண்டும். அதனுடைய நகலை நீதிமன்றத்திற்கு அனுப்புகிறார் என்றால்

Where is it confidential? What is confidential there? இதிலே என்ன மர்மம் இருக்கிறது? இதிலே ரகசியம் என்ன இருக்கிறது?

Why should he mark it confidential?

நான் அதைத்தான் இந்த மன்றத்தில் சொல்கிறேன்.

You have to see the intention of the Collector. You should not go by the words or writings of the Collector alone. You have to go deeper into the sense of the Collector and intention of the Collector. மாவட்ட ஆட்சித் தலைவரின் எண்ணங்களை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். புரிந்துகொண்டு எழுதியிருக்கிறார். உயர் நீதிமன்றம்தான் டிஸ்ட்டிரிக்ட் மேஜிஸ்டிரேட் கோர்ட்டில் உள்ள

[திரு. க. உரொ. எட்மண்ட்] [1974 ஆகஸ்ட் 27

வழக்கை தடுத்து நிறுத்த முடியும். அந்தக் கடிதத்தை மாவட்ட ஆட்சித் தலைவரே அனுப்பியிருக்கிறார். அந்தக் கடிதம் நீதிமன்றத்தில் அந்த வழக்கினுடைய காப்பி பைலிலே இருக்கிறது. இல்லை என்று சொல்லமுடியாது.

இன்னொன்றையும் சொல்கிறேன். வழக்கை நடத்துகின்ற நீதிமன்றத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதவில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதிலே அரசாங்கம் தலையிடவில்லை என்று சொன்னார்கள். மாவட்டத்திலே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்தின் ஏஜெண்ட்தான். அரசாங்கந்தின் ஏஜெண்ட்தான் மாவட்ட ஆட்சித் தலைவர். அரசாங்கத்திடம் இருந்து சம்பளம் வாகுங்கிற கலெக்டர்கள் அரசாங்கத்திற்கு வேலையாட்கள்தான். நீதிமன்றத்திலே வழக்கு நடக்கிறது. நீதிமன்றத்திலே வழக்கு இருக்கும்போது the discretion of adjournment is with the District Magistrate and not with the Collector.
ஒரு வாய்தா போடுகிறார்கள். 10-ந் தேதி அல்லது 18-ந் தேதி வாய்தா போடுகிறார்கள் என்றால் அதற்கு ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு உரிமை இருக்கிறது. வேண்டுமென்றால் வாதி தரப்பிலோ அல்லது எதிர் தரப்பிலோ வழக்காடுகின்ற வழக்கறிஞர் 10 நாள் போதாது, 20 நாள் வேண்டுமென்று கேட்கலாம். அப்படிக் கேட்டுப் பெறலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. உரோ. எட்மண்ட் : நான் முடித்துவிடுகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெரியும். அவர் வேண்டுமென்றால் இந்தக் கடிதத்தின் நகலை அரசாங்க வழக்கறிஞருக்கு அனுப்பியிருக்கலாம். மாவட்ட போலீஸ் அதிகாரிக்கு இப்படி கடிதம் எழுதியிருக்கிறேன் ; உங்களுக்கு அதன் நகலை அனுப்பியிருக்கிறேன் ; அதைப்பற்றி நீதிமன்றத்தில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளுங்கள் என்று எ.பி.பி. 1 அல்லது எ.பி.பி. 2-க்கு அனுப்பி இருக்க வேண்டுமே தவிர டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்ப வேண்டியதில்லை.

'You may consult the A.P.P. Grade I and file an application for long adjournment pending receipt of orders from the Government or in the alternative if the counsel for the accused prays for an adjournment'.
இது என்ன பொருள் ?

Why should he file a vakalat for the accused? 'If the counsel for the accused prays for an adjournment, the prosecution may express no objection.'



1974 ஆகஸ்ட் 27] [திரு. க. உரோ. எட்மண்ட்]

அந்த அடிப்படையில்தான் நான் சொன்னேன். இந்த மன்றத்திலே அதைத்தான் சொன்னேன். மாவட்ட ஆட்சித் தலைவர் கடிதம் அனுப்பியிருக்கிறார் என்று சொன்னேன். சொன்னதில் வேண்டுமென்றால் தவறு இருக்கலாம். இந்தக் கடிதத்தைப் பார்த்த காரணத்தால் சொன்னேன். ஜில்லா கலெக்டரிடமிருந்து கடிதத்தின் காப்பி வந்திருக்கிறது என்றால் இதற்கு என்ன பொருள் ?

What does it mean? Government is interested in withdrawing the case. The same letter is marked to the District Magistrate. Why not we presume it.. .. .. .. ..

அந்த அடிப்படையில்தான் சொன்னேனே தவிர வேறல்ல. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கு ஏதோ தகவல் கேட்பதற்காகத்தான் அனுப்பியிருக்கிறார்கள் ஆகவே, நான் சொன்னதில் எந்தவிதமான தவறும் இல்லை. இங்கே தவறான தகவல் சொல்லி நாட்டு மக்களை திசை திருப்பவில்லை, இந்த மன்றத்தின் பாரம்பர்யத்தைக் காப்பாற்றுவதில் எனக்கும் பங்கு இருக்கிறது. நீங்கள் இருக்கிற அந்த இடத்தில் நானும் இரண்டு ஆண்டு காலம் துணைத் தலைவராக இருந்திருக்கிறேன். சட்டமன்ற விதிகளைப்பற்றி நானும் தெரிந்திருக்கிறேன். நானும் ஒரு வழக்கறிஞன்தான். ஆகவே, விதிமுறைகளை மீறி நான் எதையும் சொல்லிவிட மாட்டேன். சொல்லவும் இல்லை. நீதி மன்றத்தையும் இழிவு படுத்த வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. இந்த மன்றத்தின் மரபைக் காப்பாற்றுவதில் எனக்கும் கடமை இருக்கிறது. ஆகவே, தலைவரவர்களே, என்னுடைய விளக்கத்தை ஏற்று, அன்றையதினம் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தின்மீது விவாதம் நடத்தும்போது இந்த மாவட்ட ஆட்சித் தலைவர் பற்றி எடுத்துச் சொல்லிய குறிப்பை மீண்டும் சபை நடவடிக்கைக் குறிப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஏற்கெனவே இந்த மன்றத்தில் சொல்லியது தவறு என்பதை ஒப்புக் கொண்டதற்காக மகிழ்ச்சி; நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். முதலிலே தற்காலிகமாக நிறுத்திவையுங்கள் என்பது வாசகம். பின்னால் வரும்போது கடிதம் சம்பந்தப்பட்ட வரையில் வேண்டுகோள் விடுத்தார்கள் என்று வந்தது.

இந்தக் கடிதத்தை ஆதாரமாக வைக்கிறேன் என்று சொன்னார்கள். அதை ஆதாரமாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்பதற்கு போதுமான விளக்கங்களை கொடுத்திருக்கிறேன். கடிதத்தில் இருக்கிற வார்த்தைகளை நன்றாகக் கவனிக்க வேண்டும். as the High Court alone is competent to issue instructions.

மாவட்ட ஆட்சித் தலைவர் நீதி மன்றத்திற்கு எழுதக் கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தின் காப்பியை வைத்துக் கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் மீதும், நீதி மன்றத்தின் மீதும் மாசு கற்பிப்பது சரியல்ல என்பதே என்னுடைய கருத்து. இந்தக் கடிதத்திற்கும் அவர்கள் சொல்கிற குற்றச்சாட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்பதை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(டாக்டர் எச். வி. ஹாண்டே, திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோர் எழுந்தனர்):

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் திரு. பொன்னப்ப நாடார் சொல்லட்டும்.

DR. H. V. HANDE : Sir, on a point of order.. .. .. ..

THIRU M. A. LATHEEF : Sir, I am on a point of order.. .. ..

THIRU R. PONNAPPA NADAR : Sir.. .. .. ..

MR. SPEAKER : Thiru Ponnappa Nadar

THIRU R. PONNAPPA NADAR : Sir, I have been listening to the arguments advanced by the Hon. Minister as also to the arguments addressed by Mr. Edmund. I am surprised to find that a copy has been marked to the District Magistrate. It is a matter of disappointment and dismay to me. Why should the Collector send a copy to the District Magistrate? That I am at a loss to understand and that would lead to the conclusion that it is indirectly giving some direction to the Judiciary. That is the main point. I should say that it is not very happy and it is unbecoming. It should not have been communicated in that form.

DR. H. V. HANDE : Sir, the Hon. Minister was mentioning that the Collector has written only to the Superintendent of Police and he has not written to the Magistrate. From the wording read out, it means that the Collector has tacitly given a direction to the Magistrate. The Superintendent of Police perhaps has written to the Collector requesting him to write to the Magistrate and the Collector has said he was not writing to the Magistrate. This is a very very serious matter. So, the Collector has very intelligently and in a non-committal manner



written a letter to the Superintendent of Police. They have been very careful as far as writing is concerned. But the effect of it is definitely interference with the Judiciary and Magistracy.

நீங்கள் எழுதச் சொன்னீர்கள். அதற்கு நான் தயாராக இல்லை என்று எழுதியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒன்றை நான் விளக்கி விடுகிறேன். அரசாங்கம் இது போன்ற வழக்குகளை வாபஸ் வாங்க முடியாது. நிறுத்தி வைக்க முடியாது என்று விவாதிப்பது போல் இருக்கிறது. அரசாங்கம் விரும்பினால் நேரடியாகவே உத்தரவு போட முடியும். இந்த வழக்கை நிறுத்தி வைக்க முடியும்; வாபஸ் பெற முடியும். வழக்கை வாபஸ் வாங்க வேண்டுமென்று போலீஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டால் வாபஸ் வாங்கியிருக்க முடியும். அரசாங்கம் மறைமுகமாகச் செய்யவேண்டியதில்லை; நேரடியாகவே செய்யலாம். அதற்கு அதிகாரம் உண்டு. ஆகவே, மறைமுகமாக கலெக்டரையோ அல்லது போலீஸ் அதிகாரியையோ தூண்டினார்கள் என்று சொல்வது சரியல்ல.

(திரு. க. உரோ. எட்மண்ட், திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோர் எழுந்தனர்).

திரு. க. உரோ. எட்மண்ட் : என்னுடைய கருத்தெல்லாம் .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்புறம் பேசுங்கள். திரு. லத்தீப் முதலில் பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார். ஆகவே, அவர் முதலில் பேசி முடிக்கட்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இங்கே அநேகமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற உறுப்பினர்கள்தான் இந்தப் பிரச்சனையைப் பற்றி விவாதித்துக் கொண்டிருக்கிறோம். நாம் முக்கியமான சில விதிமுறைகளைக் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மிக முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, சில தவறான தகவல்களை இங்கே கொடுத்து, வேண்டுமென்றே நீதித் துறையின் புனிதத் தன்மை பாதித்துவிடுமோ என்ற அச்சத்தில் இந்த ஒழுங்குப் பிரச்சனையை நான் எழுப்பியிருக்கிறேன்.

முதலாவதாக, குறிப்பிடப்பட்டிருக்கிற இந்த கடிதம் இரண்டு சர்க்கார் அலுவலர்களுக்கிடையே பரிமாறிக் கொள்ளப்பட்ட ஒன்று.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அவருடைய கருத்து. அவருடைய கருத்தைச் சொல்கிறார்; அவ்வளவுதான்.

THIRU M. A. LATHEEF: The Collector has not directly addressed the Judicial Officer. That is the first point. The other point is that a copy of it was found in the Court's File. What I submit is this, as an advocate practising. What happens is this. If a letter is forwarded to the advocate; whether it is Public Prosecutor or ordinary advocate—any document that is forwarded is in turn forwarded for information to the judicial official. What happened in this case seems to be this. The Collector has addressed the District Superintendent of Police. The Superintendent of Police, in turn, sends the same to the Law Officer, who is attending this case. That letter is sumbitted for the perusal of the judicial officer. That is how it happens and not in any other way.

நண்பகல் 12.00

THIRU G. R. EDMUND: No. No. It is absurd.

THIRU M. A. LATHEEF: You are an advocate. I am sorry you are not aware of it. You are casting aspersion on the Court. You are casting aspersion on the judicial officer. You are attributing something to the judicial officer. It is not proper. This is how it happens in all the courts. When this was addressed to the Superintendent of Police, the Superintendent of Police submitted the same to the Public Prosecutor and the Public Prosecutor would have submitted it to the judicial officer.

Another thing is this. It is not known how the hon. Member was able to peruse the document. This is rather wrong, Mr. Speaker. Therefore, I move a motion that under rule 48 of the Assembly Rules and other rules, that the matter be referred to the Committee of Privileges and disciplinary action be taken against the hon. Member for giving wrong information.

THIRU R. PONNAPPA NADAR: We emphatically oppose this.

THIRU G. R. EDMUND: With great respect to my hon. Friend Thiru Latheef, I may inform him that he is not a lawyer at this stage to file a 'vakalath' for the Government.

THIRU M. A. LATHEEF: You are filing a vakalath for injustice, indiscipline and wrong things. I am filing for justice, discipline and right things and for the independence of the judiciary.

திருமதி த. ந. அனந்தநாயகி: கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் கனம் சட்ட அமைச்சர் அவர்களுக்கு அரசாங்கத்தின் நிலையை பாதுகாக்க வேண்டுமென்ற எண்ணம் இருப்பதில் தவறு கிடையாது. நாம் ஒரு மரபை ஏற்படுத்த வேண்டும்—நிர்வாகத்தில் ஒரு மரபை ஏற்படுத்த வேண்டும்—



நீதித்துறைக்கு ஒரு மரபை ஏற்படுத்த வேண்டும். இங்கே ஒரு தவறு நடந்துவிட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அதன் நகலை மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பியிருக்கக்கூடாது. இனி மேல் இதுபோன்ற தவறு நடக்காதிருக்க் வகை செய்யப்படும் என்று சட்ட அமைச்சர் சொல்லியிருந்தால் மிக நன்றாக இருந்திருக்கும். அதைவிட்டு அப்படி அனுப்பியது சரி என்பது போல ..........

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அம்மையார் அவர்கள் இதுபோன்று எப்போதும் கேட்பது வழக்கம். நானும் அதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். திரு. எட்மண்ட் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் போலீஸ் அதிகாரிக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பியது குறித்து எழுப்பியிருந்தால் ஆட்சேபணை இல்லை. நான் பேசும்போது அவர் அப்படி அனுப்பியது சரி என்றோ, தவறு என்றோ எதுவும் சொல்லவில்லை, நான் சொல்லாததைச் சொன்னதாகச் சொல்வது சரியல்ல, தவறாகச் சொல்வது அவர்களது வாடிக்கை.

திருமதி த. ந. அனந்தநாயகி: திரு. எட்மண்ட் என்னவோ இந்த அவைக்குத் தவறான தகவலைக் கொடுத்துவிட்டதாக எல்லாம் சொன்னார்களே, நீங்கள் செய்த தவறை ஒத்துக் கொண்டீர்களா? எதற்காக இந்தக் கடிதத்தின் நகல் மாஜிஸ்டிரேட்டுக்கு அனுப்பவேண்டும்? அரசாங்கத்திற்கு வழக்கைத் தொடரவோ, திரும்பப் பெறவோ எல்லாவிதமான அதிகாரமும் இருக்கிறது என்பது நமக்குத் தெரியும். எத்தனையோ வழக்குகள் அப்படித் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. ஆனால் இங்கே மாவட்ட ஆட்சித் தலைவர் ரொம்ப சாமர்த்தியமாக எழுத்தில் அகப்பட்டுக் கொள்ளாது As the High Court alone competent to issue such instructions, I am not addressing the District Magistrate என்று எழுதிய கடிதத்தை Copy to the District Magistrate, Tirunelveli என்று எதற்காக போடவேண்டும்?

Why he should send a copy to the District Magistrate? Should not the Collector be pulled up? Should not the Government question the Collector why he has marked a copy? It is the duty of the Government to see that the independence of the judiciary is maintained.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எட்மண்டு அவர்கள் தம்முடைய குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக ஒரு கடிதத்தைக் கொடுத்தார்கள். அது மாவட்ட ஆட்சித் தலைவரால் போலீஸ் அதிகாரிக்கு எழுதப்பட்ட கடிதம் தான். அதிலும் உயர்நீதி மன்றத்திற்குத்தான் வழக்குகளை நிறுத்திவைக்க அதிகாரம் இருக்கிறது என்பதாக தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே அவரது குற்றச்சாட்டுக்கு இந்தக் கடிதத்தில் எந்தவிதமான ஆதாரமும் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மின்சார வாரிய அறிக்கையின் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிப்பார்கள்.

## (9) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீடு, 1973-74-ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை மதிப்பீடு ஆகியவற்றின் மீது இந்த அவையில் 3 தினங்களாக விவாதம் நடந்து வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மாலையிலும் கூட்டத்தை வைத்து நம்முடைய அலுவல்களை முடித்துவிடலாமா? அல்லது நாளைய தினமும் அவையை வைத்துக் கொள்வதா?

திரு. கோவை செழியன் : பலர் இன்றைக்கே டிக்கட் வாங்கிவிட்டார்கள். இன்றைக்கே முடித்துவிடலாம்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பேரவைத் தலைவர் அவர்களே, விவாதத்தை மாலையில் வைப்பதைவிட நாளை வைப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

திரு. க. உரோ. எட்மண்டு: நாளைக் காலையில் வைத்துக்கொள்ளலாம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அநேக மெம்பர்கள் இன்றைக்கே ஊருக்குப்போக ஏற்பாடு செய்திருப்பதனால் தொடர்ந்து வைத்து முடித்துவிடலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாலையில் என்றால் முடியாது.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, இந்த மூன்று நாள் விவாதத்திலே எதிர்கட்சித் தலைவர் அவர்களும், மற்றும் மாமன்ற உறுப்பினர்களும் பல்வேறு பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி அவற்றிற்கு நான் பதில் சொல்கிற நிலையில் இருக்கிறேன். இந்தத் தடவை ஆண்டுதோறும் நடைபெறுகிற விவாதத்தைக் காட்டிலும் சற்று சூடு அதிகமாக இருந்தாலும் சுவை குன்றாத அளவில் எல்லாத் தரப்பில் இருந்தும் பல்வேறு நல்ல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டிருப்பதாகக் கருதுகிறேன். ஆனால் பொதுவாகச் சொல்லப்பட்ட ஒரு கருத்து என்ன என்பதை நாம் ஒருகணம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

இந்தியா முழுவதுமே இன்றைக்கு மின்சாரப் பற்றாக்குறை இருப்பதைப் பார்க்கிறோம். இந்திய நாடு முழுமையிலுமே மின் பற்றாக்குறை காரணமாக உற்பத்தி பாதிக்கப்பட்டு—பல்வேறு இடையூறுகள் இருக்கிற சூழ்நிலையை நாம் அறிகிறோம்.



ஆயினும் தமிழ்நாட்டில் மின்சார வெட்டு இருப்பதற்கு திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் காரணம் என ஒரு சிலர் சொல்வார்களானால் அதற்கும்—இதற்கும் எப்படி பொருத்தம் ஏற்படும் என்பதை அருள்கூர்ந்து கவனிக்கவேண்டும்.

இந்த மன்றத்திற்கு மின்வாரியம் பற்றி பல்வேறு விவரங்களைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறேன். அந்த அறிக்கையைப் படித்துவிட்டுப் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும். பல்வேறு உறுப்பினர்கள் அந்த அறிக்கையைப் படிக்கவில்லை என்று நான் சொல்லமாட்டேன் அறிக்கையைப் படித்துவிட்டு—அதைத்தெரிந்து கொள்ளாதவர்கள்போல பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்றுதான் நான் சொல்லவேண்டும்.

ஆனால், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக பேசிய உயர்திரு. என். கே. பழனிசாமி அவர்கள் ஒரு நல்ல விவசாயி என்று எனக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் எடுத்த எடுப்பிலேயே சொன்னார்கள், இன்றைக்கு மின்சார வெட்டு தமிழ் நாட்டில் மட்டுமல்ல, இந்திய உபகண்டத்திலேயே ஒரு பெரிய பிரச்சனையாக ஆகிவிட்ட காரணத்தாலே மத்திய சர்க்கார்தான் காரணம் என்பதை அழுத்தந்திருத்தமாக திரு. என். கே. பழனிசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் ஏதோ எங்கள் மீது குறையைப் போட்டுவிட்டு தட்டிக் கழிப்பதைக் காட்டிலும் இருக்கிற பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காகத்தான் திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் சொல்லிய கருத்தை நான் பதிலாக சொல்ல விரும்புகிறேன்.

அதே நேரத்தில் வாரியத்திலே, குறைபாடே இல்லை. வாரியத்திலே கவனிக்கப்பட வேண்டியதே இல்லை, அங்கிருப்பது பொன்னான காரியங்கள்தான் என்ற வாதத்திற்கு நான் வரவில்லை. இது போன்ற விவாதம் நடப்பதே, மின்சார வாரியத்திலே இருக்கிற குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டு, அந்தக் குறைகள் களைந்தெறியப்பட்டும், இன்னும் நல்ல முறையில், மக்களுக்குரிய முறையில் வாரியம் பணியாற்றத்தான் நாங்களும் விவாதத்தை வைத்திருக்கிறோம். அந்தக் கருத்தைக்கூட என்னுடைய உரையின் கடைசியில் எடுத்து வைத்திருக்கிறேன். தன்னுடைய அறிவுசால் கருத்துக்களை வழங்குவதன் மூலம், மின்வாரியம் மேலும் பயனுள்ள முறையில் பணியாற்ற, உறுதுணையாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்து, அவ்வகையில் கருத்தினை நல்கிட வேண்டுமென்று நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

அந்த அடிப்படையில் பார்த்தால், முதலில், நான் எந்த எந்த அளவில் குறைகளைக் களைய முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். பேசிய உறுப்பினர்கள், பெரும்பாலானவர்கள், 'லைன் லாஸ்' கம்பிகள் மூலமாக, இழப்பு அதிகம் ஏற்படுகிறது என்று எல்லோரும் பேசினார்கள். அதற்குப் பரிகாரம் காணவேண்டுமென்று

பேசினார்கள். பரிகாரம் காண்பதன் மூலமாக, நிதிநிலைமை சீராகும் என்று சொன்னார்கள். இருக்கிற கம்பி இழப்பைக் குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் இருக்கின்றன. இது உங்களுக்குத் தெரியாதது அல்ல. ஆகவேதான், தமிழ்நாடு மின்சார வாரியம் ரூ. 82 கோடியிலே ஒரு மாஸ்டர் பிளான் தயார் செய்து, அந்த இழப்புகளை எவ்வாறு குறைக்க வேண்டுமென்று திட்டமிட்டு, இன்றைக்கு ஒவ்வொரு நடவடிக்கையாக எடுத்து வருகிறது. அதற்கு இன்றைய தினம் ரூ. 8 கோடி அளவிலே செலவு செய்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நிதி நிலைமைக்கு ஏற்ப, ரூ. 10 கோ்டியோ, ரூ. 12 கோடியோ செலவு செய்து அதற்கு வேண்டிய பல்வேறு மாற்றங்கள் செய்து வருகிறோம்.

Replacement of service wires, renewel of damaged insulators fuse units, and additional sub-stations.

இதுபோன்ற பல்வேறு திட்டங்களை உருவாக்கிட வேண்டும். ரூ. 82 கோடியை நாம் செலவு செய்ய வேண்டுமென்று சொன்னால், நமக்கு இருக்கிற நிதி ஆதாரங்களை வைத்து, ஆண்டு ஒன்றுக்கு ஒரு திட்டமாக வைத்துப் பிரித்து பிரித்துச் செலவுசெய்ய வேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தால் இந்த இடர்பாடுகளை ஒரே நாளில், ஒரே அடியாக தீர்த்துவிட முடியாது என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். இழப்பு, இழப்பு என்று சொல்லுகிறார்கள்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திலே மட்டும்தான் இழப்பா? அம்மையார் அவர்கள் சொன்னார்கள், வேறு மாநில வாரியங்களைப் பற்றி சொல்லாதீர்கள், தமிழ்நாடு வாரியத்திற்குத்தான் பாரம்பரியம் இருக்கிறது, திறமை இருக்கிறது என்று சொன்னார்கள் நான் அதே கருத்தைத்தான் சொல்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத் திறமையும் பாரம்பாரியமும் அன்றும் இருந்தது, இன்றும் இருக்கிறது. வாதங்களை வைக்கிற பொழுது அந்த உண்மை தெளிவாகும்.

இருக்கிற இழப்பு, அந்த உற்பத்தியை மட்டும் பொறுத்தது அல்ல. மின்சாரம் எவ்வளவு தூரம் விஸ்தரிக்கப்பட்டதோ, மின்சாரம் எவ்வளவு ஏரியாக்களுக்கு, எவ்வளவு பரப்புகளுக்கு விஸ்தரிக்கப்படுகிறதோ, எவ்வளவு பம்பு செட்களுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ, எத்தனை கிராமங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறதோ, அல்லது எத்தனை கன்ஸ்யூமர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த ' நெட் ஒர்க்'கைப் பொறுத்துதான் இழப்பு ஏற்படும். கொடுக்கப்பட்டிருக்கிற மின்சார விஸ்தரிப்பு, இருக்கின்ற பம்ப் செட்களின் எண்ணிக்கை, மின்சாரம் உபயோகிப்போர் எண்ணிக்கை ஆகியவற்றை எடுத்துப் பார்க்கும் போது, தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்த அளவில் எந்த அளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் தெரியும். அதற்கான புள்ளி விவரங்களை உங்களிடத்திலே சொல்ல ஆசைப்படுகிறேன்.





ஆந்திரப் பிரதேசத்தை உதாரணத்திற்காகச் சொல்கிறேன், குறை சொல்வதாகக் கருத வேண்டாம். அங்கே கிட்டத்தட்ட 1,60,000 கிலோ மீட்டர்களுக்கு விஸ்தரிப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அருகாமையிலே இருக்கிற ஆந்திரப் பிரதேசத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற விஸ்தரிப்பு தூரம் 1,60,000 கிலோ மீட்டர்கள். ஆனால், இழப்பு சி. டபிள்யூ.சி. கணக்குப்படி 26 சதவீதம் . இதை கவனத்திலே வைத்துக்கொள்ள வேண்டும். கொடுக்கப்பட்டிருக்கின்ற தூரம் குறைவானது, ஆனால் இழப்பு 26 சதவீதம். ஏதோ அடுத்த மாநிலத்தைத் தவறாகச் சொல்வதாக நீங்கள் கருதிவிடவேண்டாம்.

அது மட்டுமல்ல, அம்மையார் அவர்கள்கூடச் சொன்னார்கள். இன்றைக்கு மின்சார உற்பத்தியைப் பார்த்தால், மக்களுக்கு அளிப்பதிலே, பஞ்சாப்-அரியானா எல்லாம் முதன்மையிடம் வகிக்கின்றன என்று சொன்னார்கள். நான் ஒப்புக் கொள்கிறேன். அந்த முதன்மைக்குப் பிறகு, எவ்வளவு தூரம் விஸ்தரிப்பு செய்திருக்கிறார்கள் 66,000 கிலோ மீட்டர்கள்; மிக அதிக உற்பத்தியை கொடுத்துக் கொண்டிருக்கிற அந்த அரியானா மாநிலத்தில் அவர்களுடைய இழப்பைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது 28 சதவீதம் வருகிறது. எந்த மாநிலம் இந்தியாவிலேயே நல்ல காரியங்களை மக்களுக்காகச் செய்து கொண்டிருக்கிறது என்று நாம் பேசிக்கொண்டிருக்கிறோமோ அந்த அரியானா மாநிலத்திலே மின்சார இழப்பு 28 சதவீதம்.

அதுமட்டுமல்ல, பீகாரிலே 23 சதவீதம் மேல் வருகிறது.

நான் இந்தப் புள்ளி விவரங்களைச் சொல்லிக் கொண்டு போவதாக நீங்கள் கருதவேண்டாம். ஆனால், தமிழ்நாட்டிலே கம்பிகளுடைய நீளம், மின்சாரத்தை உபயோகிக்கின்ற மக்களுடைய எண்ணிக்கை, கொடுக்கப்பட்டிருக்கிற சர்வீஸ் கனெக்ஷன் ஆக்கியவற்றைப் பார்க்கும்போது, இன்றைக்கு இந்தியாவிலே யாரும் கொடுக்காத அளவுக்கு, மின்சாரம் கொடுத்திருக்கிறோம் என்றால், அதை யாரும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது. தமிழ்நாட்டிலே மின்சார விஸ்தரிப்பின் நீளம் 2.75 இலட்சம் கிலோ மீட்டர்கள். 2.75 இலட்சம் கிலோ மீட்டர்கள் நீளம் என்பது மட்டுமல்ல, 7 இலட்சம் மின்சார விசை ஏற்றங்கள்.

அதுமட்டுமல்ல, 27 இலட்சம் சர்வீஸ்கள். இவற்றைப் பார்க்கின்ற பொழுது, இன்றைக்குத் தமிழ்நாடு மின்சார வாரியத்தினுடைய பரப்பளவு, விஸ்தரிக்கப்பட்டிருக்கிற அளவு, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் கிடையாது. இந்த நீளத்தையும், சர்வீஸ் கனெக்ஷன்களையும் வைத்து, சாதனைகளைப் பார்க்கின்றபொழுது, இந்தியாவிலே குறைந்த இழப்புள்ள ஒரு மாநிலம் இருக்கிறது என்றால், தமிழ்நாடு மின்சார வாரியம் இருக்கிற இந்த மாநிலம்தான். ஆகவே, இழப்பில் போகிறது,

திருட்டுப் போகிறது, இவையெல்லாம் கவனிப்பாரற்று கிடக்கிறது, எல்லாம் கெட்டுவிட்டது என்றெல்லாம் பேசுவது சரியல்ல. குறை இருந்தால் கண்டிக்கிறேன். அதைத் தடுக்கத் தயாராக இருக்கிறேன்.

பல்வேறு குற்றச்சாட்டுகளைச் சொல்லியிருக்கிறார்கள். மின்சார வாரியம் எந்தக் கட்டத்திலும் தவறு செய்தால் அதனைப் பாதுகாக்க நான் தயாராயில்லை. சென்ற ஆண்டுதான் நான் சட்டமன்றத்திலே ஒரு உறுதி கொடுத்தேன். இந்த இழப்பீடு, சில திருட்டுகள் நடக்கின்றன. அது உண்மை. ஆனால் வேறு மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது குறைவாக இருக்கிறது. திருட்டைக் கட்டுப்படுத்த முடியும் என்று சென்ற ஆண்டு ஒரு திட்டத்தை அறிவித்தேன்.

Surprise inspection Squad for each System with two Engineers, four Testers and two helpers

இது எப்பெழுது? சென்ற ஆண்டு, நான் சபையிலே சொன்னதற்கு உத்தரவாதம் அளித்து, அதற்குப் பின்னாலே ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டு, கிட்டத்தட்ட 31,800 சர்வீஸ்கள், இணைப்புகள் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. இந்த 8 மாதத்திற்குள்ளாக, இதன் விளைவாகப் பிடிக்கப்பட்டு, தவறுகள்—தவறுகள் என்று கூட சொல்ல மாட்டேன்—கரண்டை உபயோகித்த திருடர்கள் என்றுகூட நான் சொல்வேன்—அரசினுடைய மின்சாரத்தைத் திருடுகின்றவர்கள் சமுதாயத்திலே பலபேர் இருக்கிறார்கள். அங்கங்கே, அதிகாரிகளை வைத்து சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் செய்ததில், 107 சமுதாயத் திருடர்கள்—மின்சாரத்தைத் திருடியவர்கள்—பிடிபட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நல்லவர்களைப் போல் இருந்து திருடுகின்ற திருடர்கள் பிடிபட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, மீட்டர்களை டேம்பர் செய்கின்ற 97 பேர் இருக்கிறார்கள். அந்த 204 பேர்களும் 6 இலட்சம் யூனிட் மின்சாரத்தைத் திருடியுள்ளனர். அவர்களிடமிருந்து ரூ. 1,60,000 பெனல்ட்டி வசூலிக்கப்பட்டிருக்கிறது. வேறு தண்டனைகளும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதோடு விட்டுவிடவில்லை. இன்றைக்கிருக்கிற கிரிமினல் சட்டப்படி நாம் என்ன செய்ய முடியும்? வழக்குப்போட சாட்சி வேண்டும். வீட்டிற்கு அதிகாரிகள் போகிறார்கள். தகப்பனை பிடித்தால், பிள்ளை சாட்சி சொல்வானா? வீட்டிலே நடைபெறுகிற இப்படிப்பட்ட சிக்கலிலே சட்டபூர்வமாக நாம் சாட்சி பெற முடியாத காரணத்தால், பல்வேறு நிலைகளிலே வழக்கிலே பிடிக்க முடியாமல் போய் விடுகிறது. இருந்தாலும் கூட 79 வழக்குகளை நீதி மன்றத்திலே கொண்டு வந்து மின்சாரம் திருடியவர்களை நிறுத்தியிருக்கிறோம்.



அடுத்த பிரச்னையாகச் சொன்னார்கள். தெரு விளக்குகள் எல்லா இடங்களிலும் எரியவில்லை, பணம் வாங்கிக் கொள்கிறார்கள் எரியாத விளக்குகளுக்குக்கூட என்று சொன்னார்கள். நான் என்னைப் பொறுத்தவரையிலே அதை ஒரு குற்றச்சாட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. யோசனையாக எடுத்துக் கொள்கிறேன், அவர்கள் நல்ல விளக்குகளாகப் போடவேண்டுமென்ற முறையிலே சொன்னதாக நான் எடுத்துக் கொள்கிறேன். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகப் பேசப்பட்டு வந்த ஒன்று, சில பேர்கள் தெரிவித்தார்கள். மீட்டர்கள் பஞ்சாயத்து விளக்குகளுக்கு வைக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் இந்தப் பிரச்னையைப் பற்றி ஒரு பூர்வாங்கமான முடிவை இந்தச் சட்ட மன்றத்தின் மூலமாக அவர்கள் எங்களுக்குச் சொல்லவில்லை.

சென்ற ஆண்டு நாங்கள் இதுபற்றி ஒரு முடிவு எடுத்தோம். இனிமேல் எல்லா பஞ்சாயத்துக்களிலும் உள்ள தெரு விளக்குகளுக்காக மீட்டர்கள் வைக்கப்படும் என்ற முடிவை எடுத்ததற்குப் பிறகு, நம்முடைய மாநிலத்திலே உள்ள 65ஆயிரம் கிராமங்களுக்கும் உடனடியாக மீட்டர்களை வாங்கி—இங்கே இரண்டு கம்பெனிகள்தான் இருக்கின்றன. அவர்களிடம்தான் வாங்க வேண்டும்—பொருத்திவிட முடியாது, இருந்தாலும்கூட இந்தப் பிரச்னை அரசாங்கத்தினால் கவனிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு பஞ்சாயத்துக்களுக்கு படிப்படியாக மீட்டர்கள் பொருத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ எரியாத விளக்குகளுக்கும் மின்சார வாரியம் பணத்தை வாங்கிக் கொள்கிறது என்ற எழுப்பப்பட்ட குற்றச்சாட்டை வைத்துக் கொண்டு, அவர்களே எழுப்பிய பிரச்சனையை வைத்துக்கொண்டு, அரசாங்கம் இந்த முடிவை எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நிதி நிலைமைப் பிரச்னை. இந்த வாரியத்திலே பல்வேறு கோளாறுகள் இருக்கின்றன. அதன் காரணமாகத்தான் நிதிப் பற்றுக்குறை ஏற்பட்டு இருக்கிறது என்று யாராவது கணக்குச் சொன்னால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், இந்தியாவிலே உள்ள வேறு எங்காவது இருக்கின்ற வாரியத்திலே லாபகரமாக நடத்தப்படுகிறதா என்பதை அவர்கள் சொல்வார்களானால் அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அனுப்பிப் பார்த்து வரச் சொல்கிறேன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நம்மைக் காட்டிலும் அதிகமாக மின்சாரக் கட்டணம் வசூலித்துக் கொண்டிருக்கின்ற மின்சார வாரியங்களின் நிதி நிலைமைகூட இப்படித்தான் இருக்கிறது என்ற நிலைமையை மறந்துவிடவேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நேற்றைய தினம்கூடச் சொன்னேன். இந்திய நாட்டின் பிரதம அமைச்சர்கூட மின்சார வாரியங்களின் நிதி நிலை சீர்படவேண்டுமென்ற முறையிலே சொன்னார்களோ

[திரு. ஓ. பி. இராமன்] [1974 ஆகஸ்ட் 27

என்னவோ தெரியவில்லை-அவர்களும் விவரம் தெரிந்தவர்கள்தான், ஏதோ விவரம் தெரியாதவர்கள் அல்ல, சொல்லியிருக்கிறார்கள் சென்ற மாதம் 11-ஆம் தேதி பெங்களூரிலே சொன்னார்கள்.

'There was no justification for subsidy in the sale of electricity for irrigation'

என்று சொன்னார்கள். பேசியது யார்? இந்தியத் தலைமை அமைச்சர் அவர்கள். காலம் எப்போது? ஐந்து ஆண்டு, பத்து ஆண்டுகளுக்கு முன்னால் கிடையாது, சென்ற மாதந்தான் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமைகளைப் புரிந்து கொண்டு மின்சார வாரியங்களின் நிதி நிலைமையைப் பெருக்கவேண்டுமென்ற முறையிலே சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதே கட்சி, இங்கே இருக்கிறது, அவர்கள் சொல்கிறார்கள், மின்சாரக் கட்டணத்தை ஏற்றிவிடாதீர்கள் என்று சொல்கிறார்கள். ஒரே கட்சி அங்கேயும் இருக்கிறது, இங்கேயும் இருக்கிறது, அதே கட்சி இங்கே ஒரு கொள்கையைச் சொல்கிறது, அங்கே ஆட்சி நடத்துகிற அதே கட்சி அங்கே ஒரு கொள்கையைச் சொல்கிறது. நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், இதிலே கட்சி மாச்சரியங்கள் இல்லாத முறையிலே நாம் பிரச்னையை அணுகியாகவேண்டும்.

[திரு. நா. வீராசாமி தலைமை]

1973–74 ஆம் ஆண்டில் மின்சாரம் வாங்கியதில் அதாவது நாம் வெளி மாநிலங்களிலேயிருந்து, பர்ச்சேஸ் ஃப்ரம் அதர் ஸ்டேட்ஸ், நெய்வேலியிலிருந்து வாங்கியதன் மூலமாக செலவு 18.58 கோடியாக இருந்தது. இந்த ஆண்டு அச்செலவு ரூ.29.51 கோடிக்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1973–74 ஆம் ஆண்டில் ஏற்பட்ட வருவாய்க் குறைவு அதாவது இழப்பு 10.5 கோடியாகும். இந்த ஆண்டு அந்த இழப்பு 18.66 கோடி ரூபாய் அளவிற்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே அதிலே 29 கோடி ரூபாய், 30 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு இருக்கும் என்ற நிலைமை இருக்கிறது. இதை எப்படிச் சரிக்கட்டுவது, நீங்கள் எல்லாம் நல்ல யோசனைகளை சொல்ல வேண்டுமென்ற முறையிலேதான் நான் எதிர்பார்த்தேன். நாம் மற்ற மாநிலங்களைப் போன்ற லாபகரமான நோக்கத்தோடு நடத்தவில்லை. தமிழ்நாட்டிலே ஒரு உன்னதமான பொருளாதாரத் திட்டத்தை நாம் உருவாக்கி வருகிறோம்.

நேற்றையதினம் திரு. லத்தீப் அவர்கள் பேசும்போதுகூடச் சொன்னார்கள், உற்பத்தியைப் பார்த்து அல்லவா விஸ்தரிப்பு செய்திருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இது ஒரு பெரிய குற்றச்சாட்டு. நீங்கள் திட்டமிடாமல் விஸ்தரிப்புச் செய்தீர்கள் என்ற குற்றச்சாட்டு பொருத்தமில்லாத குற்றச்சாட்டாகும். எல்லா மாநிலங்களிலும் மின்சார வெட்டு இருக்கிறது, எல்லா மாநிலங்களும் செய்திருக்கிறது தவறா? எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து மொத்தமாக திட்டங்கள் தயாரிக்கக்கூடிய மத்திய சர்க்காருடைய தவறா? . . . . . . . . . . .



1974 ஆகஸ்ட் 27]

திரு. எம். ஏ. லத்தீப்: நான் குற்றச்சாட்டாக சொல்லவில்லை. என்னுடைய எண்ணமாகத்தான் சொன்னேன். அந்த மாதிரி நடந்திருக்க வேண்டும் என்று சொன்னேன், அப்படித்தான் நடந்திருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் நான் ஏற்றுக் கொள்கிறேன், நடக்கவில்லை என்று நான் சொல்லவில்லை. இப்படித்தான் செய்யவேண்டுமென்ற கருத்தைக் கூறினேன். அப்படித்தான் செய்திருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னால் எனக்கு மிக்க மகிழ்ச்சிதான்.

திரு. என். கே. பழனிசாமி: ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு. நா. வீராசாமி): கிளாரிபிகேஷன் எல்லாம் அமைச்சர் முடித்த பிறகு கேளுங்கள்.

திரு. என். கே. பழனிசாமி: ஒரு சிறிய விளக்கம் மட்டும். பிரதம அமைச்சர் அவர்கள் பெங்களூரில் பேசியதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விவசாயிகளுக்கு அதிகம் போட வேண்டும், தொழிற்சாலைகளுக்கு அப்படியே இருக்கவேண்டுமென்று சொன்னார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: நான் சொல்லிய கருத்து பத்திரிகையிலே வந்ததைத்தான் சொன்னேன். அவர்கள் சொன்னது என்ன என்ற வாக்கியம் முழுவதும் படித்துக் கொண்டிருந்தால் வாதத்தின் திசை மாறிவிடும். திரு. லத்தீப் அவர்கள் சொல்லிய கருத்து, ஏதோ எந்தவிதமான சிந்தனையும் செய்யாமல் எந்தவிதமான அனுபவமும் இல்லாமல் செய்து விட்டார்கள் என்று சொல்வதைப் போன்று சொன்னார்கள். நிலைமை என்ன? இன்னும் சொல்கிறேன், தமிழ்நாட்டில் செய்யப்பட்ட விஸ்தரிப்பு காரணமாக மின்சார வெட்டு கிடையாது. தமிழ்நாட்டில் ஊரெல்லாம் ஒளிமயம் என்ற டாக்ட[illegible]லைஞர் அவர்களுடைய உன்னதமான லட்சியத்தைப் புரிந்[illegible] கொண்டிருக்கின்றவர்கள் அப்படிச் சொல்லமாட்டார்கள். ஏதோ பத்து லட்சம் பேர்களுக்குத்தான் மின்சாரம் கிடைக்கவேண்டும், நகரத்திலே உள்ளவர்களுக்குத்தான் மின்சாரம் கிடைக்கவேண்டும் என்ற நிலைமை இருந்தது, அதை மாற்றி எல்லா பட்டி தொட்டிகளுக்கும் மின்சாரம் நாம் கொடுத்திருக்கிறோம். எல்லாக் கிராமங்களிலும் அதன் காரணமாக பரவலான பொருளாதாரம் வளர்வதற்கான திட்டங்களை ஏற்படுத்துகின்ற வகையிலே 4 லட்சம் பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறோம், ஏழு ஆண்டுகளுக்குள்ளாக, விஸ்தரிப்பு செய்யாவிட்டால் என்ன ஆகும்? எங்கெங்கே மின்சாரக் கம்பி இருந்ததோ அங்கேதான் கொடுக்கப்பட்டிருக்க முடியும், தமிழகத்திலே பொருளாதாரத்தை சமமாக ஆக்குகின்ற உன்னதமான திட்டத்தைக் கொண்டுவந்திருக்க முடியாது. ஏதோ குறை சொல்லவேண்டுமென்ற முறையிலேதான் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறல்ல.

கல்பாக்கம் அணுமின் நிலையம் ஆரம்பிக்கப்போகும் அதன் ஷெட்யூல்ட் டேட் என்ன? நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள்ளே, அதிலே இரண்டு விதமாக 700 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும், மத்திய அரசு அனுமதித்திருந்தால். ஆனால் நிலைமை என்ன? நெய்வேலியில் நிலக்கரியை எடுக்கக் கூடிய மைனிங்கில் இயந்திரங்கள் பழுதடைந்துவிட்டன, அதை 30 கோடி ரூபாய் செலவு செய்து பழுதுபார்க்கவேண்டும்.

(பிற்பகல் 12-30)

மூன்றாண்டாகும் என்று சமீபத்தில் செய்திருக்கிறார்கள். அதே மெகாவாட்டிற்கு நிலக்கரி எடுத்திருந்தால், 470 மெகாவாட் கொடுத்திருந்தால், நமது நீர் நிலையங்களிலே மழை பெய்திருந்தால், நமது அனல் மின்சாரத் திட்டம் சுமாராக ஓடியிருந்தால் இன்றைக்குச் சொல்கிறேன், தமிழ்நாட்டில் மின்சார வெட்டு இல்லை என்று தெளிவாகச் சொல்லமுடியும். இன்னும் சொல்கிறேன் . . . . . . . . . . . . .

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இருந்தால், இருந்தால் என்று சொல்கிறார்களே, அதுதான் எல்லோருக்கும் தெரியுமே. எல்லாம் இருந்தால் மின்சார வெட்டு வராது என்பதுதான் எல்லோருக்கும் தெரியுமே.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இருந்தால் என்பதற்கு நான் சொல்லும் அர்த்தம் வேறு. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக பண ஒதுக்கீடு செய்து உற்பத்திக்கு மின்சாரம் வந்துவிடும் என்று இலக்கை வைத்து, வந்துவிட்டால் அதைப் பயன்படுத்தக்கூடிய அளவில் திடீரென்று மின்சாரக் கம்பங்களை நட்டுவிட முடியாது, அதற்கு இரண்டு, மூன்று ஆண்டுகளாகும். வந்துவிடும் என்று உறுதி அளிப்பதற்கு முன் உற்பத்தித் திட்டம் நான்கையும், ஒதுக்கீட்டையும் சொல்லிவிட்டார்கள். தமிழகத்தில் எல்லாப் பகுதிகளிலும் விஸ்தரித்திருந்தால் கொடுத்திருக்க முடியும். இன்றைய திட்டத்தில் எப்பொழுது உற்பத்தியைத் தொடங்க வேண்டுமென்று எதிர்பார்த்தோமோ அதே கட்டத்தில் கல்பாக்கமும், நெய்வேலியும் இருந்திருந்தால், தமிழ்நாட்டில் நீர் நிலையங்களில் மழை பெய்திருந்தால் இந்த அளவிற்கு ஏனைய மாநிலங்களில் இருக்கும் அளவிற்குப் பாதிப்பு இருக்காது என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, நான் சொல்ல நினைப்பது, பல்வேறு தவறுகளைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவைகளில் முக்கியமானவற்றிற்குப் பதில் சொல்லவேண்டுமென்று கருதுகிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் பேசிய பேச்சுக்களுக்கெல்லாம் பதில் கொடுத்துப் புத்தகமாக வெளியிடப்படுகிறது. பேசிய பேச்சுக்கு விடையளிக்கிறார்கள் அந்தப் புத்தகத்தில். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா முதலியார் என்று கருதுகிறேன்



அவர்கள் இப்பொழுது இங்கு இல்லாவிட்டாலும் நல்ல குற்றச்சாட்டு என்று நான் கூடக் கருதினேன். இந்த அவையில் பேசப்படும் பேச்சுக்களுக்கு பதில் அளிக்கிறார்கள். அந்த பதிலிலே சரியான தகவல்களைத் தராமல், முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் வந்திருப்பதாகச் சொன்னார்கள், அதனால் அதிருப்தி அடைந்தார்கள். அவர்கள் சொன்னது, கடையநல்லூர் சப்-ஸ்டேஷனைப் பற்றி. பதிலை வாசித்தார்கள். 28—6—1974-லே கடிதம் போயிருக்கிறது. அதில் எழுதப்பட்டுள்ள வாசகம்,

'There is no proposal for the establishment of a Sub-station at Kadayanallur. However, the S. E., Tirunelveli, has been asked to examine the necessity for the establishment of a Sub-station at Kadayanallur. . . .'

சென்னையிலேயிருந்து போயிருக்கிறது. இதை அனுப்பிய தேதி 28—6—74. ஆனால் அதற்குப்பிறகு இவர்கள் இல்லாவிட்டாலும் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யுங்கள் என்று ஆலோசனை கூறப்பட்டபிறகு சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர் ஒரு திட்டத்தை உருவாக்கி இங்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன் மதிப்பீடு கிட்டத்தட்ட 10,50,036 ரூபாயிலே ஒரு சப்-ஸ்டேஷன் போடவேண்டும் என்ற திட்டத்தை அவர்கள் இல்லாமல் இருந்தாலும் அதற்குப்பிறகு ஆலோசனை தெரிவிக்கப்பட்டதால் சூப்பிரண்டெண்டிங் எஞ்சினியர் தயார் செய்து கிட்டத்தட்ட 10—7—1974 ஆம் தேதி அன்று அனுப்பியிருக்கிறார்கள். புத்தகம் எப்பொழுது அச்சடிக்கப்படுகிறது என்றால் சுமார் நான்கைந்து நாட்களுக்கு முன்புதான், அவைக்கு அவ்வப்போழுது இருக்கும் நிலைமைகளைப் பற்றிப் பதில் இருக்க வேண்டும் என்ற முறையில் செய்யப்படுகிறது. எனவே, அது புகாராக இருக்காது. அவர்கள் சொன்னதற்குப் பிறகு கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

பல்வேறு குற்றச்சாட்டுக்களை இங்கே கூறினார்கள். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், வாரியத்திலே தவறே கிடையாது, அதை மறைக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருப்பதாகத் தயவு செய்து கருதவேண்டாம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொன்னார்கள், பசுமலையிலே பல இலட்சம் ரூபாய் மதிப்புள்ள ஸ்க்ரேப் மெட்டிரியல்ஸ், உதிரித் துண்டுகள், தளவாடங்கள் போன்றவை வாரிய அதிகாரிகள் மூலமாக திருடப்பட்டிருக்கிறது, கைப்பற்றப்பட்டிருக்கிறது, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். எப்பொழுது? பசுமலையில் 1.7 இலட்சம் ரூபாய்க்குச் சமமான ஸ்க்ரேப் மெட்டீரியல்ஸ் களவு போயிருப்பதாகத் தெரிந்ததும்—மின்சார வாரியம் ஸ்பெஷல் ஸ்குவாட் போட்டிருக்கிறது—அந்த ஸ்பெஷல் ஸ்குவாட் ஸ்டோருக்கு உடனடியாகச் சென்று பரிசீலிக்க வேண்டுமென்று அவர்கள் சென்று கண்டுபிடித்தார்கள். பலபேர் சொன்னார்கள், எப்பொழுதுமே எஞ்சினியர்கள் என்று சிலர் சொல்கிறார்கள், சிலர் கணக்காயர்கள் என்று சொல்கிறார்கள். சிலர் கம்பியாளர்கள் என்று சொல்கிறார்கள். அங்கே வேண்டியவர்கள்

யார் இருக்கிறார்களோ அதை மட்டும் பேசுகிறார்கள். அந்தப் பிரச்சனைக்குப் போக வேண்டாமென்று நான் கருதுகிறேன். யாரானாலும் பொது நிர்வாகத்தில் அரசாங்க அதிகாரி என்ற பொறுப்பிலே இருப்பவர்கள் பொதுச் சொத்துக்குப் பங்கம் விளைவிக்கும் யாரானாலும் தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்கலாம். இரண்டு எஞ்சினியர்கள், அப்துல் காதர், செக்ஷன் ஆபிசர், சுப்பிரமணியம், ஸ்டோர் கீப்பர், காமராஜ், ஸ்டோர் கீப்பர் ஆகியோரடங்கிய 9 பேர்கள் உடனடியாக சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். தவறு நடந்திருக்கும் செய்தியைப் பத்திரிகையில் வந்த செய்தியைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன். பிறகுதான் அதிகாரிகள் மூலம் விசாரித்து தகவல்கள் கிடைத்தன.

இங்கேகூட சொன்னார்கள், சில குற்றச்சாட்டுகளை. அதில் ஒன்றிரண்டிற்குப் பதில் சொல்லிவிட்டு வேறு காரியங்களுக்குச் செல்ல வேண்டுமென்று கருதுகிறேன்.

ஃபாரின் வெசல்ஸ் பற்றிச் சொன்னார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், வெளிநாட்டுக் கப்பலின் மூலமாகத்தான் நிலக்கரி வாங்க வேண்டுமா, அப்படி வாங்காவிட்டால் என்ன ? அரசாங்க சொத்தை எப்படி பாழ்படுத்தலாம் என்று கேட்டார்கள், சாதாரண ஆட்கள் அப்படிச் சொன்னால் கூடப் பரவாயில்லை. ஆனால் விஷயம் தெரிந்த இவர்கள் எப்படிச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. வெளிநாட்டுக் கப்பலில் யார் எந்த நிர்ப்பந்தத்தில் வாங்கினார்கள் என்று பார்க்கவேண்டும். நிலக்கரி வங்கத்திலேயிருந்து 30,000 டன் மாதம் ஒன்றுக்கு வருகிறது. அதற்கு 5 கப்பல்கள் தேவைப்படுகின்றன. நிலக்கரி வாங்குவதில் சிக்கல் வந்தது. அதிகாரிகள் போனார்கள், வாரியத் தலைவர் போனார், நானும் போனேன். அந்தத் துறை அமைச்சரைப் பார்த்தேன். இந்தியக் கப்பல், லோகல் ஷிப்ஸ் கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தேன். இப்பொழுதுள்ள நிலைமையில் இரயில்வேயும் இன்னும் பல்வேறு நிறுவனங்களும் கேட்கிறார்கள், ஆகவே 5 கப்பல்கள் ஒதுக்க முடியாது, ஆகவே, நீங்கள் தனியார் கப்பல்கள் அல்லது வெளிநாட்டுக் கப்பல்களாக இருந்தால் அதில் ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள்.

The Ministry of Transport, New Delhi has given that directive.

இதைத்தான் யோசிக்கவேண்டும். ஏதோ நாங்களாக வெளி நாட்டுக் கப்பலில் இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்து கொண்டதாகக் கூறப்படும் வாதம் சரியானதல்ல.

The Ministry of Transport has stated—

'The number of coastal ships are not adequate. The Government of India themselves have directed that the Boards go in for chartered foreign vessels in addition to the Indian vessels.... '





இதுதான் உண்மை நிலை. ஆனால் இதன் மூலமாக வெளியிலே என்ன பேசப்படும் என்றால் இந்தியக் கப்பலை விட்டுவிட்டு வெளிநாட்டுக் கப்பலுக்கு அதிகப்பணம் செலவு செய்யலாமா என்ற குற்றச்சாட்டு எழும். அதற்காகவே இந்த விளக்கத்தைக் கொடுத்திருக்கிறேன்.

டிரட்ஜெரைப்பற்றிச் சொன்னார்கள். மணலை நீக்கி தண்ணீர் கொண்டுவருவதற்காக மணலை வெளியேற்றும் இயந்திரத்தைப் பொருத்தினோம். அதிலே ஊழல் என்று சொன்னார்கள். இது சம்பந்தமாக ஒரு சில குற்றச்சாட்டுகள் வந்தன என்பதற்காகப் பதில் சொல்லுகிறேன். பத்திரிகையில் சிலவற்றைப் போடுவார்கள், சிலவற்றைப் போடமாட்டார்கள், பத்திரிகைக்காரர்கள் டேஸ்ட் அப்படி இருக்கிறது. டிரட்ஜெரைப் பொருத்தினோம். அதற்கென்று இருக்கும் ஸ்டாண்ட் பம்ப் வேலை செய்யவில்லை. அதை இறக்குமதி செய்யவேண்டும். அதனுடைய முழுமையான டெக்னிகல் நோஹௌ தெரியவில்லை. இம்மாதிரி அவசர காலங்களில் உடனடியாகப் பார்த்தால் வாடகைக்கு எடுக்க வேண்டும். இப்பொழுதுள்ள ஆபத்தான நிலைமையைப் போக்குவதற்காக வாரியத்திலே உள்ளவர்களும், முதலமைச்சரும் எல்லோரும் முடிவெடுத்து இன்டர்நேஷனல் டெண்டர் கோரப்பட்டது. குறைவாகக் கேட்டவர்களுக்குக் கொடுக்கவில்லை, அதிகமாகக் கேட்டவர்களுக்கு கொடுக்கப் பட்டது என்று ஹாண்டே அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் படித்தவர்கள். அவர்கள் குற்றச்சாட்டாகக் கூறினார்கள்,

'Rate quoted by them was higher than that of Messrs. Easun Engineering Company'.

குறைவாகக் கேட்டவர்களுக்குக் கொடுக்காமல் அதிகமாகக் கேட்டவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள் என்று சொன்னார் கள்.

The distance from which sand has to be pumped out has to be taken into consideration.

இதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு மணலை விலக்கி, எவ்வளவு தண்ணீர் வரவேண்டுமென்று உத்தரவாதம் கொடுத்து அதை ஒப்புக் கொண்டோம். ஏதோ குறைவாகப் பணம் கேட்கிறார்கள் என்பதற்காகக் கொடுத்தால் அவர்கள் மணலை நீக்காமல் தண்ணீர் வரவில்லை என்றால் அது ஆபத்தாக முடியும்.

ஹார்பரிலே உள்ளதை, பழுதடைந்ததை, செகண்ட் ஹேண்டாக வாங்கினார்கள் என்று கூறினார்கள். இரண்டாவது முறையாக வாங்கப்பட்டது ரிப்பேர் செய்யப்பட்டது. அம்மாதிரி டிரெட்ஜர் இயந்திரங்கள் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவிலேயே அதிகம் இல்லை என்பதுதான் இன்றைக்குள்ள வாதம்.

[திரு. ஓ. பி. இராமன்] [1974 அகஸ்ட் 27

வெளிநாட்டு 'க்ரூஸ்' தான் இயக்க முடியுமென்ற நிலைமை. பெனல்டி கிளாஸ் ஏன் போடவில்லை என்றுர்கள். பெனல்டி கிளாஸ் போடப்பட்டிருக்கிறது. அவருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

DR. H. V. HANDE : Sir, I would like to know whether it would be possible for the Hon. Minister to lay on the table of the House the entire proceedings with regard to Easun Engineering Company transaction. I have mentioned something last time and an answer has been given, a very brief and unsatisfactory answer. Again I have raised some points and because I have no time at my disposal I cannot mention other points. Will the Hon. Minister be prepared to issue a sort of white paper on this subject so that we can have a clear idea of things and so that it can be shown that there is nothing wrong with the Government.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : குற்றச் சாட்டு சொல்லுவதைப் பொருத்தமாகச் சொல்ல வேண்டும். சொல்லுவதிலே சிலவற்றிலாவது உண்மைகள் இருக்க வேண்டும். இருப்பதிலேயே ஈசன் எஞ்சினியரிங் கம்பெனிதான் குறைந்த விலையில் கொடுக்கிறுர்கள். உடனே எதற்கெடுத்தாலும் ஃபைலைக் கொடுக்கவேண்டுமென்று சொல்லுவது சரியல்ல.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒரு கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): கிளாரிபிகேஷன் கடைசியில் கேளுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : What I want to say is this.

நான் சொல்லுவது என்னவென்றல்—முதலில் 5 ட்ரெட்ஜர்கள் வாங்கியதன் விலை எவ்வளவு? டெண்டர் எவ்வளவு கோட் பண்ணினுர்கள்? சாண்ட் இன்னும் அப்படியே இருக்கிறது. மகாலிங்கம் ரிப்போர்ட்டில்கூட என்ன சொல்லியிருக்கிறுர்கள்? 40, 45 சதவிகிதந்தான் அவுட்புட் என்று காரணம் சொல்லியிருக்கிறுர்கள். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது, எவ்வளவு பெனல்டி போடப்பட்டிருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன். We want the details.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : மகாலிங்கம் ரிப்போர்ட் வேறு. மின்சார நிலையம் சரியாக வேலை செய்கிறதா, விபத்திற்கு என்ன காரணம், யார் பொறுப்பு என்பதையெல்லாம் பார்த்து அறிக்கை கொடுத்த பிறகு நடவடிக்கை எடுத்து நிவர்த்தி செய்வதற்காக அறிக்கை தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.



1974 ஆகஸ்ட் 27]

டாக்டர் எச். வி. ஹாண்டே : இதற்கு அரசாங்கந்தான் காரணம். முதலிலேயே ஏன் வாங்கவில்லை? முதலிலே ஏன் ஈசன் எஞ்சினியரிங் கம்பெனிக்குக் கொடுத்து இவ்வளவு நஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் என்ன? மௌத் ஆப் தி ரிவிர் கிளீன் பண்ணவில்லை.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : முதலிலேயே ஏன் வாங்கவில்லை என்று கேட்கிறுர்கள், திட்டம் உருவாக்கி எப்படி அது வேலை செய்கிறது என்று முதலில் பார்க்கப்பட்டது. சாண்ட் பம்ப் போட்டோம். திட்டம் தோல்வியடைந்து விட்டது என்று சொல்லலாம். பத்து ஆண்டுகளுக்கு முன்னுல் உருவாக்கப்பட்ட திட்டம். இப்போது வேலை செய்யவில்லை என்பதால் மாற்று யோசனை என்ன என்று பார்க்கப்பட்டது. 75 சதவிகித மின்சார வெட்டு ஏன், நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சட்டசபையில் கூட பல உறுப்பினர்கள் சொன்னுர்கள். உடனடியாக சாண்ட் பம்பை விலைக்கு வாங்கக் கூடாது, வாடகைக்கு வாங்கிப் பார்த்து சரியாக வேலை செய்தால் பிறகு வாங்கிக் கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பட்டது. கடந்த ஒரு வருஷ காலமாக அது பிரமாதமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஒரு வருஷ காலமாகப் பிரமாதமாக ஓடிக் கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறுர்கள். அப்படி இல்லை. ஆறு மாதத்திற்கு முன்னுல்கூட பிரமாதமாக போகவில்லை என்று கூறியிருக்கிறுர்கள். மகாலிங்கம் ரிப்போர்ட் 6 மாதத்திற்கு முன்னுல் வந்த ரிப்போர்ட். சாண்ட் பம்ப் சரியாக வேலை செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறுர்கள். நீங்கள் சொல்லுவதற்கும் ரிப்போர்ட்டுக்கும் இடையே முரண்பாடு இருக்கிறதே.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ரிப்போர்ட்டை மாற்றிச் சொல்லக் கூடாது. ஏற்கெனவே இருந்த முறைகளைச் சொல்லியிருக்கிறுர்கள். நிரந்தரமாகப் பரிகாரம் காண டன்னல் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறுர்கள். அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : In paragraph 9.3 of the Mahalingam Committee's report it is clearly stated as follows :—

"There appears to be a problem in maintaining adequate flow of sea water to the power station C.W. pump, suctions, because of the formation of sand bars. It is also understood that the present dredging arrangement may not be a permanent solution. This being a complicated and an important subject for the continued operation of the power plant, immediate steps should be taken to find a satisfactory long-term solution for this problem.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்போது ட்ரெட்ஜிங் அரேஞ்ச்மென்ட் செய்திருக்கிறோம். இது போதுமானதாக இல்லை. நிரந்தரமான பரிகாரம் காணவேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். கடலிலிருந்து டன்னல் மூலமாக—சுரங்கம் வெட்டி தண்ணீர் கொண்டு வர முடியுமா என்ற திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். தற்போது நடைமுறைச் சிக்கலைப் பார்த்த பிறகுதான் எஞ்சினியர்களைப் போட்டோம். திரு. மகாலிங்கத்தைப் போட்டு ஆராய்ந்து அறிக்கை கொடுக்கச் சொன்னோம். தவறுகள் இருக்குமானால் அவற்றைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இந்த மாதிரி தவறுகளைக் களைய வேண்டுமென்பதற்காகத்தான் முதல்வர் அவர்கள் குழு போட வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அந்தக் குழுவின் பரிந்துரைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இதற்கா ஒரு மின்சார வாரியம், இதற்கா ஒரு அமைச்சர் என்றெல்லாம் சொன்னார்கள். என்னுடைய உடல் அப்படியெல்லாம் பேச இடம் கொடுக்காது. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஐந்து சீஃப் எஞ்சினியர்கள் எதற்காக என்றெல்லாம் கேட்டார்கள். அவர்களுடைய கட்சி வேறு எங்கெங்கு ஆளுகிறதோ அங்கெல்லாம் நிலைமை என்ன என்று தெரியாமல் பேசுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அவர்கள் கட்சிக்காரரே பேசினார் முதலில்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : நான் விளக்கத்திற்காகச் சொல்லுகிறேன். ஐந்து சீஃப் எஞ்சினியர்கள் எதற்காக என்று சொல்லிச் சிரித்தார்கள், கை தட்டினார்கள். நம்மைச் சுற்றியுள்ள மூன்று அண்டை மாநிலங்களின் நிலைமை என்ன? கேரளா, மைசூர், ஆந்திராவில் நிலைமை என்ன? கேரளா நம்மில் மூன்றில் ஒரு பங்குகூட இல்லை. அங்கு 6 சீஃப் எஞ்சினியர்கள் இருக்கிறார்கள். இதையெல்லாம் தெரிந்து கொண்டால் நல்லது. நாம் 5 பேரைத்தான் வைத்திருக்கிறோம். இதை ஒரு பெரிய குற்றச்சாட்டாகச் சொன்னார்கள். இவ்வளவு பெரிய மின் வாரியத்திற்கு 5 பேர் தேவை என்றுதான் போட்டிருக்கிறோம். ஆந்திராவில் நான்கு சீஃப் எஞ்சினியர்கள், கர்நாடகத்தில் 8 சீஃப் எஞ்சினியர்கள். நம்முடைய மாநிலத்தில் 5 பேர்தான். 7 லட்சம் பம்பு செட்டுகளைப் பராமரிக்க வேண்டும். 8 லட்சத்திற்கு மேற்பட்ட மின் விளக்குகளைப் பராமரிக்க வேண்டும். மின்சார உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான் இப்போது பவர் கார்ப்பரேஷன் போட முடிவு செய்திருக்கிறோம். மின்சார உற்பத்தி நிலை இன்று இந்திய நாட்டுப் பொருளாதாரத்தையே பாதிக்கக்கூடிய அளவில் இருக்கிறது.

கார் பிரச்சினையைப் பற்றி வேறு கோணத்தில் பேசினார்கள். அதை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து தலைவர் அவர்கள் எடுத்துவிட்டார்கள். அங்கு வெளி நாட்டுக் கார்கள் 12 இருந்தன.



யார் காலத்தில்? அப்பாத்துரை அவர்கள் சேர்மனாக இருந்த காலத்தில் வேறு ஆட்சி இருந்த நேரத்தில் 12 வெளிநாட்டுக்கார்கள் இருந்தன. அண்ணா ஆட்சி பிறகு, கலைஞர் ஆட்சி வந்து இன்று இப்போது ஏழாண்டுகள் ஆகின்றன. அந்த 12 கார்கள் வாங்கி 12 வருஷத்திற்கு மேல் ஆகிவிட்ட காரணத்தால் பழுதடைந்து காயலாங்கடைக்குப் போகக்கூடிய நிலைக்கு வந்து விட்டன. அதனால் இப்போது ஒரே ஒரு கார் வெளிநாட்டுக் கார் வாங்கப்பட்டது. எதற்காக வாங்கினார்கள்? மின்சார வாரியத் திட்டங்களில் கனடா நாட்டு உடன்பாடு இருக்கிறது, செக்கோஸ்லாவாக்கியா நாட்டு உடன்பாடு இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து கருவிகள் வாங்க வேண்டியிருக்கிறது. வெளிநாட்டு கான்சல்கள் வருகிறார்கள். இன்ஸ்பெக்ஷனுக்காக வருகிறார்கள். அவர்களுக்காகத்தான் முன்பு 12 கார்கள் இருந்த இடத்தில் ஒரே ஒரு கார் வாங்கப்பட்டிருக்கிறது. ஏர் கண்டிஷன் செய்யப்பட்ட கார் வாங்கப்பட்டிருக்கிறது.

இது என்ன சாதாரண குடு குடு விளையாட்டா என்று கேட்கிறேன். வெளிநாடுகளில் இருந்து வருகிற கான்சல்ஸ் மின்சார நிலையங்களைப் பார்க்க வசதியான கார்கள் வைத்துக் கொள்ளக் கூடாதா? கேலி கிண்டல் செய்தார்கள். இந்த வாரியத்திற்கு என்று ஒரு அமைச்சரா என்று கேட்டார்கள். அவரைக்காணோம். ஆதாரம் கேட்டால் நான் எங்கே போவேன் என்று சொன்னார்கள். அண்ணா அவர்களை உதாரணத்திற்காகச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் இப்படி ஒரு சொத்தைவாதத்தை எந்த அரங்கிலும் நிகழ்த்தியது கிடையாது. அவர்கள் என்ன சொன்னார்கள்? ஜூனியர் என்ஜினியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினார்கள் என்று. வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட ஜூனியர் என்ஜினியர்களுக்கு தக்க பதவிகள் கொடுக்கப்பட்டனவா என்று கேட்டார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் நான் பேசாததை பேசியதாகச் சொல்லக் கூடாது. வேறு ஒரு கருத்துப்பட பேசியதை இன்னொரு பொருள் படப் பேசக்கூடாது. நான் கூறியது என்னவெனில், ஜூனியர் என்ஜினியர் அல்லது எந்தப் பொறியாளராக இருந்தாலும் சரி

whether he is a Junior Engineer or an Executive Engineer or whatever may be the position he is holding......

என் வாதம் எல்லாம் ஒரு ஸ்பெஷல் ஸ்டடிக்காக

having sent an Engineer for specialisation in a particular subject, when he comes back, why don't they utilise him?

மாண்புமிகு திரு ஓ. பி. இராமன் : புரிகிறது வாதம். உறுப்பினர் அவர்கள் பேசியதை எடுத்து வைத்திருக்கிறேன். வெளிநாடுகளுக்கு அனுப்பினார்கள் என்று சொன்னார்கள். அனுப்ப

வில்லை என்று நான் சொல்லவில்லை. சிக்கோபாவை அனுப்பினோம். மின்சார நிலை பற்றி அறிந்துவர அனுப்பப்பட்டார். மின்சார வாரியத்தின் தலைவராக இருக்கிறார் திரு. ராஜாராம், ஐ.ஏ.எஸ். அவர்கள் மிகக் கண்ணியமானவர் என்று நீங்களே புகழாரம் சூட்டினீர்கள். அவர்களுக்கு மின்சாரம் பற்றிய விவரங்கள் தெரிந்தவரை பீ.ஏ. ஆகப் போடக்கூடாதா ? அவர்கள் குந்தா போகிறார், மற்ற மற்ற இடங்களுக்கு இன்ஸ்பெக்ஷன் போகிறார். அவர்களுக்கு டெக்னிகலாக அட்வைஸ் செய்ய ஒருவர் இருக்க வேண்டாமா ?

திரு. க. உரொ. எட்மண்ட் : எனது வாதம், சிக்கோபாவை விட்டுவிடுங்கள். திரு. தியாகராஜனை எடுத்துக் கொள்ளுங்கள். தனிப்பட்ட முறையில் படிக்க ஸ்விட்சர்லாந்த் அனுப்பப்பட்டவரை கொள்முதலுக்காகவா அனுப்பவேண்டும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர்கள், கரியர் கம்யூனிக்கேஷனுக்காக அனுப்பப்பட்டார். அதற்காகத்தான், அந்த இடத்திற்குத்தான் அவர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். அதற்குத்தான் ஆர்டர் போடப்பட்டிருக்கிறது. ஆனால் அவர் லீவ் கேட்டுக் கொண்டிருக்கிறார். நீங்கள் அங்கே போய்விடுங்கள் என்றால் அவர் சென்னையில் இருக்க விரும்புகிறார். அவர் உங்களுக்குத் தெரிந்தவர் என்றால் போகச் சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : அமைச்சர் அவர்களின் நிலைக்காகப் பரிதாபப்படுகிறேன். மின்சார வாரியத்திற்கு, அந்தத் துறைக்கு அமைச்சராக இருப்பவர்கள், வெளிநாட்டுக்குச் சென்று தனிப்பட்ட படிப்பு படித்து விட்டு வந்துள்ள ஒரு என்ஜினியரை அவர் திரும்பி வந்தவுடன் அவரை சரியான முறையில் பயன்படுத்த எங்களால் முடியவில்லை என்று இந்த மன்றத்தில் சொல்கிற ஒரு அமைச்சரைப் பார்த்துப் பரிதாபப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவரை ஸ்விட்சர்லாந்திற்கு அனுப்பியது கரியர் கம்யூனிக்கேஷன் படிப்பதற்காக. நான் சொல்லாத ஒன்றை சொல்கிறார்கள். திரு. தியாகராஜன் ஸ்விட்சர்லாந்துக்கு கரியர் கம்யூனிக்கேஷன் படிப்பதற்காக அனுப்பப்பட்டார். அவர் அதே இடத்திற்குத்தான் போடப்பட்டிருக்கிறார்கள்.

திரு. பெ. சீனிவாசன் : ஒரு அதிகாரியை வேலைக்கு சேரச் சொல்லி எதிர்க்கட்சி உறுப்பினரைப் பார்த்து அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், இது நியாயமா ?

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): அமைச்சர் அவர்கள் அந்தமாதிரிச் சொல்லவில்லை.



மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : ஒரு பெரிய நிறுவனம் நல்ல முறையில் நடக்கவேண்டும், குற்றச் சாட்டுகள் அது பற்றி வரக்கூடாது என்பதினால்தான் இதுபற்றி நான் விளக்குகிறேன். அவர்கள் சொன்னதற்கெல்லாம் பதில் சொல்லவேண்டும் என்று நான் கருதவில்லை. எந்த அளவிற்கு அவை உண்மை, எந்த அளவிற்கு உண்மை இல்லை என்பது மக்களுக்குத் தெரியும். காடம்பாறைத் திட்டத்திற்காக வெளிநாட்டுக்கு இரண்டு பேர்கள் அனுப்பப்பட்டார்கள். நான்கு பேர்கள் எந்தக் காரியத்திற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டனரோ அந்தக் காரியங்களுக்காக அவர்கள் போடப்பட்டிருக்கிறார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு நா. வீராசாமி): இன்று இந்த விவாதம் முடிவுற்று மூன்று பில்களாவது எடுத்துக் கொண்டால்தான் மேல் சபையில் அலுவல்கள் இருக்க பில்களை பாஸ் செய்யமுடியும். எனவே ஒரு மணிக்குள்ளாக அமைச்சர் அவர்கள் தமது உரையை முடித்துக்கொள்ளும்படிக் கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் க்ளாரிபிக்கேஷன்ஸ் கேட்கவேண்டியிருந்தால் அமைச்சர் அவர்கள் பேசி முடித்துவிட்ட பிறகு கேட்கலாம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : ஆன் எ பாயின்ட் ஆப் க்ளாரிபிக்கேஷன். என் வேண்டுகோள் எல்லாம் அமைச்சர் அவர்கள் பேசி முடித்து விளக்கங்கள் கேட்கவேண்டுமென்றால் விளக்கங்கள் கேட்க ஒவ்வொருவருக்கும் அரை மணி நேரமாவது தேவைப்படும். தருவீர்களா ?

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி): விளக்கம் கேட்க ஒவ்வொருவருக்கும் எப்படி அரை மணி நேரம் தரமுடியும் ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவர்கள் சொன்னதில் ஒன்றை மட்டும் பற்றி பதில் சொல்ல விரும்புகிறேன். தாராபுரத்தில் தொழிலாளர்கள் தகராறு மூலம் 500 பேர்கள் அரெஸ்ட் செய்யப்பட்டார்கள் என்றார்கள். 9—8—72-ல் 64 பேர்கள் அரெஸ்ட் செய்யப்பட்டார்கள். இல்லை என்று நான் சொல்லவில்லை. தொழிலாளர் தகராறு ஏற்பட்டு 64 பேர்கள் அரெஸ்ட் செய்யப்பட்டார்கள். ஏன் அவர்களை வேலையில் சேர்த்துக் கொண்டீர்கள் என்று கேட்கிறார்கள். இந்த வாரியம் கட்சி கண்ணோட்டத்தோடு நடக்கவில்லை. செய்தவர்கள் யார்? கம்யூனிஸ்ட் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், பெடரேஷனைச் சேர்ந்தவர்கள் செய்தார்கள். தொழிலாளர்கள் சங்கத்தோடு பேசப்பட்டது. சமாதானம் கோரப்பட்டது. கட்சி மாச்சரியம் பார்க்க வேண்டுமென்றால் அந்த 64 பேர்களின்

கதி என்னவாகியிருக்கும்? ஒரு சுமுகமான நிலைமை உருவாக வேண்டுமென்று கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி பரவாயில்லையென்று அவர்களை மன்னித்துவிடவேண்டுமென்று மன்னித்திருக்கிறோம். எனவே கட்சி அடிப்படையில் இந்த மின்சார வாரியம் செல்கிறது என்ற குற்றச்சாட்டு ஆதார மற்றது.

அடுத்து, மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது, மின் உற்பத்திக் கழகத்திற்கான அமைப்புகள் எல்லாம், தனி அதிகாரி போடப்பட்டு, அறிக்கை கொடுக்கப்பட்டு, அந்த அமைப்பை ஏற்படுத்துவதற்கான உத்தரவுகள் எல்லாம் பிறப்பிக்கப்பட்டு கார்ப்பரேஷன் அமைக்கப்படும் நிலையில் இருக்கிறது. சுருளியாறு, தூத்துக்குடி, காடம்பாறை, நெல்லித்துறை போன்ற ஆக்கபூர்வமான திட்டங்கள் எடுக்கப்பட்டு இந்தத்திட்டத்தில் செயல்பட இருக்கின்றன.

பின்னர், ஜெனரேஷன் அன்ட் டிஸ்ட்ரிப்யூஷன், உற்பத்தி விநியோகம் இரண்டையும் பிரிக்கவேண்டுமென்று மத்திய அரசு நல்ல ஆலோசனை சொன்னார்கள். அந்த ஆலோசனை வருவதற்கு முன்னாலேயே செய்தோம். மின் உற்பத்திக் கழகம் பற்றிச் சொன்னேன். இருந்தாலும் இருக்கிற திட்டங்களை எல்லாம் சட்டத்தில் சில சிக்கல்கள் இருப்பதால் பாராளுமன்றத்தில் ஒரு அமெண்ட்மென்ட் வந்தால்தான் அதை மாற்றமுடியும். அதுவரையில் புதுத் திட்டங்கள் மட்டும் இந்த உற்பத்திக் கழகத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து, பவர் கட். சுவையான பிரச்னை. 72-ல் குற்றச்சாட்டு சொன்னார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சுவையான பிரச்னை என்றார்கள். வேதனையான பிரச்னையாகும்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: 10, 12 சதவீதம்தான் உற்பத்திக் குறைவு ஏற்பட்டிருக்கிறது. 75 சதவீதம் கட் ஏன் வைத்தீர்கள் என்று கேட்டார்கள். ப்ளாக் மார்க்கெட்டிங் இன் பவர் என்று சொல்கிறார்கள். எக்கனமிக் அப்ரைசல் என்ற புத்தகத்தை வைத்துச் சொல்கிறார்கள்.

(பிற்பகல் 1·00)

75 சதவீதம் மின்சார வெட்டு காரணமாக தமிழ்நாட்டில் எல்லா உற்பத்தியும் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லக் கூடிய வாதம் பொய்யாக இருக்க வேண்டும். அல்லது 12 சதவீத உற்பத்தி குறைந்து இருக்கிறது என்று சொல்லக் கூடிய வாதம் பொய்யாக இருக்கவேண்டும். மின்சார வெட்டு எப்போது இருந்தது. பலவற்றிற்கு எக்சம்ஷன் கொடுத்து இருக்கிறோம். அக்ரிகல்சர்க்கு டைம்ரெஸ்டிரிக்ஷன்தான். டொமஸ்டிக், கமர்சியலுக்கு நோ ரெஸ்டிரிக்ஷன், கோட்டாவுக்கு மேல் எடுத்தாலும் துண்டிப்பது கிடையாது. எசன்சியல் சர்வீஸ் 10—15 சதவீதம் தான் வெட்டு.





அது மட்டுமல்ல. சிறிய தொழிற்சாலைகள், 200 யூனிட்கள் உபயோகிப்பவைக்கு முழுமையாக மின்சார வெட்டிலிருந்து ரத்து. இவற்றையெல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டும். அதோடு மாத்திரமல்ல. தமிழ்நாட்டில் எத்தனையோ பேர்கள் ஜெனரேட்டர் வைத்து இருக்கிறார்கள். தெரியுமா? தமிழ்நாட்டில் இருக்கிற சர்க்கரை ஆலைகள், டெக்ஸ்டைல் மில்கள், சேஷசாயி மில்ஸ், டி. வி. எஸ்., டால்மியா சிமெண்ட் மற்றும் பல பெரிய நிறுவனங்கள் ஜெனரேட்டர்கள் வைத்து மின் உற்பத்தி செய்து, மின்சார வெட்டின் மூலம் பாதிக்கப்படும் உற்பத்தியைச் சரிக்கட்டியிருக்கிறார்கள். இந்த 75 சதவீதம் கூட எத்தனை நாளைக்கு இருந்தது? 14 நாள், சில நாள் 72 சதவீதம், 73 சதவீதம் இருந்திருக்கிறது. 13 நாள் 20 சதவீதம், 25 சதவீதம், 30 சதவீதம் வெட்டு மற்ற நாட்களில் இருந்து இருக்கின்றது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் வைத்துப் பார்த்தால் மின்சார வெட்டு எப்படி சீராக இருக்கிறது என்று புரியும்.

தலைவரவர்களே, அடுத்தபடியாக இப்போது இருக்கும் நீர் நிலைப் பகுதிகளில் மழை பெய்து கொண்டிருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, இப்போதுள்ள நிலையைப் பரிசீலித்துப் பார்த்ததில் ஓரளவிற்கு திருப்திகரமாக நிலைமை இருக்கிறது. ஆகவே, இன்று அளவோடு சிலமணி கட்டுப்பாடுகள் தவிர எல்லாவிதமான மின்சார வெட்டும் ரத்து செய்யப்படுகிறது. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், தற்காலிகமாக இரண்டு மூன்று அணைகளில்—மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் கூறினார்கள்—நீர் வழிந்து செல்கிறது, ஆகவே, தற்காலிகமாக எல்லாவிதமான மின்சார வெட்டும் ரத்து செய்யப்படுகிறது.

செப்டம்பர் இறுதியில்தான் தென்மேற்குப் பருவகாற்று மழையின் பலன் தெரியும். செப்டம்பர் மாதக் கடைசியில் ஆண்டுக்கு ஒரு சீரான கட்டுப்பாடு எவ்வளவு வைத்துக் கொள்வது என்று கணக்கிட்டுச் சொல்லலாம் என்று இருக்கிறோம். இந்த மாதம் சிலநேரக் கட்டுப்பாடு தவிர மின்சார வெட்டு எந்தவிதமான காரியங்களுக்கும் கிடையாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, மின்சார வெட்டு முழுமையாக நீக்கப்பட்டது என்று சொன்னதற்குப் பின்னாலே என்னுடைய பகுதியில் 4 மணி நேரம் தான் கொடுக்கிறார்கள். அதை மாற்றுவதற்கு அரசு உத்தரவிடுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இதிலே ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது. மின்சாரம் விநியோகிப்பதில் இடர்பாடு இருக்கிறது. மின்சாரக் கம்பியில் சில பிரேக் டவுன்கள

ஏற்படும், அப்படிப்பட்ட இடர்பாடுகள் வரும். ஆகவே, மின் சாரம் இருந்தாலும் வினியோகிப்பதில் சங்கடம் இருக்கிறது. 6 மணி நேரம் இரவு நேரங்களில் கொடுப்பது என்று சொல்லி யிருக்கிறோம். இருக்கிற மின்சாரத்தை முறையாக விவசாயி களுக்குக் கொடுத்துக் கொண்டு வருகிறோம். எந்த அளவுக்கு அவர்களுக்கு உதவி செய்ய முடியுமோ அந்த அளவுக்கு ஆராய்ச்சி செய்து இன்று மாலை உத்தரவு பிறப்பிக்க இருக்கிறோம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

நாம் எல்லாம் யோசித்துப் பார்க்க வேண்டிய மிகப்பெரிய பிரச்சனை இருக்கிறது. இன்று நிலைமை என்ன? இன்றைக்கு மின்சார வெட்டு தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அகில இந்தியா விலும் இருக்கிறது. நாடு முழுவதும் பொருளாதாரம் வளர வேண்டுமென்ற அடிப்படையில் நாம் 7 லட்சம் பம்ப் செட்டு களுக்கு மின்சாரம் கொடுத்து இருக்கிறோம், மின்சார வெட்டு இருந்தபோதிலும். இந்த மின்சார வெட்டைப் போக்குவதற்கு அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன? மாண்புமிகு உறுப்பினர்கள் மத்திய அரசிடம் சொல்கிறபடி சொல்லி, கேட் கிறபடி கேட்டிருந்தால் கொடுத்திருப்பார்கள் என்று சொல் கிறார்கள்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வேண்டுமென்பதற் காக ஜனநாயகத்தில், பெரிய அம்சமாக உள்ள இந்தச் சட்ட மன்றத்தில் எந்த ஒரு கட்சியின் மூலமாகவும் இல்லாமல், எதிர்க்கட்சிகள் மூலமாகவும் இல்லாமல், எல்லாக் கட்சிகளும் சேர்ந்து ஏகமனதாக, எந்தநாளும் நிரந்தரமாக இருக்கக்கூடிய, மறுக்க முடியாத ஒரு தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்.

நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வேண்டுமென்று கேட்டு அனுப்பியிருக்கிறோம். இன்று பேசப்பட்டதல்ல இது. ஏழு ஆண்டுகளாகப் பேசுகிறோம். நாங்கள் மட்டும் பேசினோமா, நீங்களும் பேசினீர்கள், 10 ஆண்டுக்காலமாக நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வேண்டுமென்று சொன்னோம். தமிழ் நாட்டில் இருக்கிற ஒரே ஒரு வழி, மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு ஒரேவழி, 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய வாய்ப்புள்ள ஒரு திட்டம், நெய்வேலி இரண்டாவது சுரங்கத் திட்டம். இதை ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது சேருங்கள் என்று பல முறை எடுத்துச் சொல்லியாகிவிட்டது. நான் சொல்லியிருக்கிறேன், தொழில் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள், இந்த மன்றமே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்ட நகல் முடிவுறும் தருவாயில் இருக்கிறது. இன்னும் அதுபற்றி கோடிட்டுக் காட்டக் கூட இல்லை.



நாட்டிலுள்ள பற்றுக்குறையை நீக்க 1,500 மெகாவாட் மின் உற்பத்தி செய்ய உள்ள ஒரே சாத்தியக்கூறு நெய்வேலி இரண்டா வது சுரங்கத் திட்டம். மத்திய சர்க்கார் அனுமதி அளித்தால் நான் நாட்டு மக்களுக்கு உத்தரவாதம் அளிக்க முடியும், விவசாய உற்பத்தி பெருகும், உணவுப் பஞ்சம் இருக்காது. பரவலாகப் பொருளாதார அபிவிருத்தி செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் இந்த 7 ஆண்டுக் காலத்தில் 4 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு கிராமங்களில் பரவலாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மின் இணைப்புக் கொடுத்து இருக்கிறோம். அதை இன்னும் விஸ்தரிக்கத் தயாராக இருக்கிறோம். இன்று இருக்கும் மின்சார வெட்டிற்குக் காரணம் தமிழ்நாடு அரசின் திட்டத்தில் யாரும் குறை சொல்ல முடியாது, இந்தியா பூராவிலும் இருக்கிறது. மத்திய சர்க்காரும் இதற்குக் காரணமாக இருக்கிறது என்று மாண்புமிகு என். கே. பழனிசாமி அவர்கள் சொன்னதை எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு பிரச்னைகளைச் சொன் னார்கள். அவற்றிற்கெல்லாம் நான் பதில் சொல்ல இயலவில்லை. வழக்கம்போல் அந்தப் பிரச்னைகளைக் கவனித்து அவற்றிற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, வாரியத் தொழிலாளர்களுக்கு ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வாரியத் தொழிலாளத் தோழர்களே, வாரியம் யாரும் செய்ய முடியாத சாதனையைச் செய்திருக்கிறது. அதை யாரும் மறுக்க முடியாது. உயர்ந்த கோபுரம் இருக்கிறது. சிலைகள் கட்டப் படுகின்றன. அதிலே கலசம் இருக்கிறது. பார்ப்பதற்கு அற்புத மாக இருக்கிறது. அதன் மேல் கோபுரம் வைத்தாற்போல் நீங்கள் செயல் புரிந்திருக்கிறீர்கள். அதை சிலர் மூடி மறைப்பதற்கு ஒரு கறுப்புத் துணியை வைத்து மறைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் துணி கிழிக்கப்பட்டால், அந்த வாரியத்தின் சிறப்புப் பணி தலைசிறந்து விளங்கும். தொழிலாளர் களே, கொத்தனார் கோபுரம் கட்டினார் என்பதற்காக கோபுரத்துச் சிலைகளை உடைக்க வேண்டுமென்பதல்ல. கட்டிய கோபுரங்களைப் பராமரிக்க வேண்டியதுபோல், நீங்கள் செய்திருக்கிற செயல்களைக் கட்டிக் காப்பாற்ற வேண்டும். ஒரு காலத்தில் 50 லட்சம் பேர் தான் மின்சாரத்தை உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். இன்றைக்கு $4\frac{1}{2}$ கோடி மக்களும் மின்சாரத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அத்தகைய சாத்தியக் கூறுகள் இன்றைக்குத் தமிழ்நாட்டில் இருக்கிறது. அதனால்தான் இன்று இந்த அளவுக்குக் குறைபாடு சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் உணர்ந்து, பொதுமக்கள் சௌகர்யத்தை உணர்ந்து, வாரிய நண்பர்களே, நீங்கள் எல்லாம் தெளிவாக, திறமையாக பணியாற்றியாக வேண்டுமென்று இந்தக் கட்டத்தில் உங்களுக்கு எடுத்துக் கூறி, இந்த அரசு எதுவும் உங்களுக்குச் செய்யத் தயாராக இருக்கிறது என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. அடுத்து, அரசினர் சட்ட முன்வடிவுகள், 1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிவார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீது தன்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிற நேரத்தில்—நீங்கள் நாற்காலியில் இல்லை, மாற்றுத் தலைவர் வீராசாமி அவர்கள் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள், அவர்கள் சில பிரச்னைகளை எழுப்புகிற நேரத்தில், நாங்கள் சில விளக்கங்களைக் கேட்க எழுந்தபோது, அமைச்சர் பேசி முடித்த பிறகு சந்தேகம் இருந்தால் கேட்கலாம் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அதுவரை எட்மண்ட் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு அரை மணி நேரம் விவாதம் நடத்துவதற்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டபோது, தலைவராக இருந்த திரு. வீராசாமி அவர்கள் முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

மாண்புமிகு பேராவைத் தலைவர் : விவாதம் முடிந்துவிட்டது. மறுபடியும் நீங்கள் கேட்பதற்குப் பதில் சொல்ல இடம் கொடுக்கப் போவதில்லை. பேரவைத் தலைவர் அனுமதித்தால்தான் நீங்கள் பேசலாம். நான் அனுமதிக்கவில்லை.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நீங்கள் விவாதத்தை முடித்துவிட்டு பில்லுக்குப் போயிருக்கிறீர்கள். அதைப்பற்றி நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பவில்லை. சட்டமன்றத்தின் மரபு, இந்த அவையிலே சபாநாயகராக இருக்கிறவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ அதே அதிகாரம் துணைத் தலைவருக்கும், மாற்றுத் தலைவர்களுக்கும் இருக்கிறது. அப்போது மாற்றுத் தலைவராக இருந்த உறுப்பினர் திரு. வீராசாமி அவர்கள் விளக்கம் கேட்க அவகாசம் தருகிறேன் என்று உறுதிமொழி கொடுத்திருக்கிறார்கள். அதை மறுக்கிற அதிகாரம் தலைவருக்கு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதில் ஒன்றும் ஒழுங்குப் பிரச்சனை இல்லை.





## (10) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) 1974-ம் ஆண்டு, சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/74).

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவரவர்களே, "1974-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/74) இம்மன்றத்தின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என முன்மொழிகிறேன்.

வெளியிடப்பட்ட கடனீட்டுறுதிப் பத்திரங்கள் மீது வாங்கப்பட்ட கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்கான கடன் கரைப்பு நிதி, இயன்ற விரைவில் சென்னை மாநகராட்சிப் பொறுப்பதிகாரியால் மத்திய அல்லது மாநில அரசின் கடன் பத்திரங்களில் அல்லது மத்திய அரசால் அல்லது மாநில அரசால் உத்தரவாதமளிக்கப்பட்ட அரசுக் கடன் பத்திரங்களில் அல்லது சென்னை, கல்கத்தா, பம்பாய் மாநகராட்சிகளில் கடனீட்டுறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட வேண்டும் என்று 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 4/1919) வகை செய்கிறது. சென்னை மாநகராட்சிக் கடன் கரைப்பு நிதித் தொகை, நாட்டுடைமையாக்கப்பட்ட வணிக வங்கிகளில் குறித்த கால வைப்பீடுகளில் முதலீடு செய்யப்பட்டால், அது தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்குரிய காலத்தில் தொகையைத் திரும்பப் பெறுவதற்கு அதிக அனுகூலமாக இருக்கும் என்பதாலும், மேலும் நல்ல வட்டி வீதம் பெற வேண்டும் என்னும் கருத்துடனும் சென்னை மாநகராட்சியை அவ்வாறு செய்ய அனுமதித்து நிர்வாக ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகராட்சி 1973 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ம் நாளிலிருந்து மேற்சொன்ன நிதியை நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் வைப்பீடு செய்து வந்துள்ளது. கடந்தவொரு தேதியிலிருந்து செயலுக்கு வரும் வகையில், இந்த நடவடிக்கைகளை முறைப்படுத்தும் பொருட்டு, மேற்சொன்ன கடன் கரைப்பு நிதியை நிகரான புதிய வங்கிகளில் குறித்தகால வைப்பீடுகளில் முதலீடு செய்வதற்கான விதித்துறை இயற்றப்பட வேண்டுமென்றும், அவ்விதித்துறை 1973-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 27-ம் நாளில் இருந்து செயலுக்கு வரும் வகையில் செய்யப்பட வேண்டுமென்றும் தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. பேரவை முன் வைக்கப்பட்டுள்ள இச்சட்ட முன்வடிவு அதற்கு வகை செய்கிறது என்பதால் இதை ஏற்று நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. கே. எம். சுப்பிரமணியம், டாக்டர் எச். வி. ஹாண்டே ஆகியோர் எழுந்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஒரு சாதாரண பில். நமக்கு நேரம் அதிகம் இல்லை. இப்போது 3 பில்களையாவது பாஸ் பண்ண வேண்டும்.

*16—8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I entirely agree with the amendment that is proposed now. There is a difficulty. If the Corporation of Madras borrows from two scheduled banks, it often happens that in one bank there is a balance in current account while in another bank there is deficit. Therefore, it should be laid down that the Corporation or any such institution must have account only in one bank and not in too many scheduled banks. We will have the misfortune of surplus in one bank and deficit in another. That should be avoided.

DR. H. V. HANDE : Though the Speaker is very keen to rush through........

MR. SPEAKER : No, no. ஸ்பீக்கருக்கு அவசரம் என்று நீங்கள் சொல்வது சரியல்ல. எத்தனை மணி வேண்டுமானாலும் எத்தனை நாள் வேண்டுமானாலும் காத்திருக்க நான் தயார்; அதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

DR. H. V. HANDE : This is not an ordinary thing. I do not agree with the Speaker that this is an ordinary Bill........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசவேண்டுமென்றால் பேசுங்கள்- நான் வேண்டாமென்று சொல்லவில்லை. நேரம் இல்லாததால், சாதாரண பில்லாக இருப்பதால் பாஸ் பண்ணிவிடலாமே என்று தான் சொன்னேன். பில்லைப் பற்றி பேசுவதாக இருந்தால் பேசுங்கள்.

DR. H. V. HANDE : Sir, I would submit that this is an important Bill and not an ordinary Bill. By this Bill, you invest money, the sinking fund is invested. The question is whether it is good to allow private banks to come into contact with the Corporation. There is always the possibility of private banks coming into contact with the Commissioner or the Revenue Department who makes the investments. I do not know, but my information is that red is more than blue in the Corporation, that is, what the Corporation has to pay is much more than what the Corporation has to receive by way of interest. That is my information.

The House does not know what is the amount the Corporation is investing and what is the amount involved by this Bill. All these things will have to be discussed and the House should be taken into confidence and it is the duty of the Hon. Minister to clarify as to what is the amount to be invested, how much interest is expected and how much they are paying now. Now that the Corporation is superseded, at least a paper should be placed on the Table of the House as a sort of a pre-runner to this Bill. Even that has not been done. Scant courtesy is shown to the House and my plea is that this should be avoided and a detailed reply should be given furnishing full details.



திருமதி த. ந. அனந்தநாயகி : ஸ்பீக்கர் சார், இந்தச் சட்டத்திலே கடன் கரைப்பு நிதி வைப்பு என்று கொண்டு வந்திருக்கிறார்கள். அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்தால் பின்னால் பணம் வேண்டுமென்று கேட்கும்போது கிடைப்பதற்கு வசதி இல்லை, அதனால் வணிக வங்கிகளில் பிக்செட் டிபாசிட்டில் வைக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் இந்த செக்ஷன்களில் ஒன்றும் கிளீயராகச் சொல்லவில்லை.

fixed deposit in any corresponding new bank

புதிய பாங்குகள் என்று சொன்னால், பழைய பாங்க் புதிய கட்டடத்தில் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்களா அல்லது புதிதாகத் தொடங்கப்பட்ட பாங்குகளைப்பற்றிச் சொல்கிறார்களா என்று ஒன்றும் தெரியவில்லை. நாஷனலைஸ்டு பாங்க்ஸ் என்று திட்டவட்டமாகச் சொன்னால் நல்லது. புதிய பாங்க் என்று சொல்லி, தனியார் யாராவது நடத்துகின்ற வங்கிகளில் பணத்தைப் போட்டால் தவறுகள் ஏற்படுவதற்கு ஏதுவாகும். பாங்க் ஏஜென்ட் கமிஷனருக்குப் பின்னால் ஓட வேண்டி வரும். அப்படி வரும்போது நீங்களே அதிகாரத்தை தவறான வழிகளில் பயன்படுத்துவதற்கு காரணமாவீர்கள்.

தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளில் போடுவதாக இருந்தால், அவைகளிடையே போட்டிகூட இருக்கலாம். அவைகள் வளர்ச்சியடைவதற்கு இந்தப் பணம் பயன்படலாம். ஆகவே, தேசீயமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கரைப்புப் பணத்தை போடலாம். corresponding new bank இது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. புது பாங்க் என்று சொல்லும்போது fixed deposit in any corresponding new bank என்றிருப்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதிலே பெரிய தவறுக்கு ஒன்றும் இடமில்லை. எந்த வங்கிகள் மாநகராட்சிக்குக் கடன் கொடுக்க முன் வருகிறதோ அந்த வங்கியில்தான் போடுவார்கள். மூழ்கிப் போகிற எந்த வங்கியிலும் போட மாட்டார்கள் என்கிற உறுதியை அளிக்கிறேன்.

சிங்கிங் பண்டு எவ்வளவு ரூபாய் இருக்கிறது என்று கேட்டார்கள். அதுபற்றிய தகவலை வேண்டுமானால் பிறகு சேகரித்து அளிக்கிறேன்.

THIRUMATHI T.N. ANANDANAYAKI : What is the new bank ? What is the old bank ? Definition has not been given for the new bank.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1974-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட) முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/74 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, குறுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இச் சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டுமென்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## (ஆ) தமிழ்நாடு 1974-ம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/74.)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் சட்ட (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்ற பேரவை சட்ட வரைவு எண் 31/1974) இம்மன்றத்தின் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என நான் முன்மொழிகிறேன்.

உரிமம் அல்லது அனுமதி அல்லது பதிவு வேண்டிச் செய்து கொள்ளப்படும் விண்ணப்பத்தின் மேல் ஆணைகள் அந்த விண்ணப் பத்தை ஆணையாளர் பெற்றுக் கொண்ட பின்னர் சென்னை மாநக ராட்சி, நகராட்சிகளைப் பொறுத்தவரை விண்ணப்பதாரருக்கு 30 நாட்களுக்குள்ளும், மதுரை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் 45 நாட்களுக்குள்ளும் அனுப்பப்படாவிட்டால் அந்த விண்ணப்பம் ஓராண்டிற்கு அல்லது அந்த விண்ணப்பத்தில் குறிப் பிட்டுள்ள குறைந்த கால அளவிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாகக் கருதப் படவேண்டும் என்றும், அந்த விண்ணப்பம் இது குறித்த சட்டங்கள், விதிகள், துணை விதிகள், ஒழுங்கு முறைகள், சாதா ரணமாக விதிக்கப்படும் நிபந்தனைகள் அனைத்திற்கும் உட்பட்ட தாகும் என்றும் உள்ளாட்சி மன்றச் சட்டங்கள் தற்போது வகை செய்கின்றன.

அனுமதி, உரிமங்கள் ஆகியவற்றைக் கேட்டுச் செய்து கொள் ளப்படும் விண்ணப்பத்தின் மேல் பிறப்பிக்கப்படும் ஆணைகள், விண்ணப்பங்கள் வரப்பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள்

* 16-8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



அனுப்பப்படாவிட்டால், அந்த விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகக் கருதப்பட வேண்டும் என்று வகை செய்கிற அளவில் உள்ளாட்சி மன்றங்களை முறைப்படுத்தும் சட்டங் களில் விதித்துறை ஒன்று செய்யப்படலாமென நிர்வாகச் சீர் திருத்த ஆணைக் குழு பரிவுரை செய்துள்ளது. இந்த விதித் துறையை தாற்காலிக நிறுவனங்களுக்கு மட்டுமின்றி நிலையான நிறுவனங்களுக்கும் பொருந்தச் செய்யத் தற்போது கருதப் பட்டுள்ளது. தொழிற்சாலை (பாக்டரி), பணிக்களரி (வொர்க்ஷாப்) அல்லது பணி நடக்குமிடம் (வொர்க்ப்ளேஸ்) அல்லது வளாகத் திற்கு (ப்ரிமிசஸ்) அனுமதி வழங்குவது குறித்து அதற்கான ஒப்புதல் நிகழ்காலத்தில் செயலில் உள்ள தொழிற்சாலைகள் சட்டம் ஒன்றின் விதித்துறைகளின்கீழ் பெறப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட உரிமம் வழங்கும் அதிகாரிகள் அது குறித்து தொழிற்சாலைகள் ஆய்வாளரின் ஒப்புதல் இன்றியே அதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று வகை செய்வது மற்றொரு செயற்குறிப்பாகும். இச்சட்ட முன் வடிவை இம்மன்றம் ஏற்று நிறைவேற்றித்தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இதிலே 60 நாட்களுக்குள் அனுமதி வழங்கப்படவில்லை என்றால் அந்த தொழிற்சாலைக்கு அனுமதி அளிக்கப்பட்டுவிட்டதாகத் துவங்கலாம் என்பதன் காரணமாக குடியிருப்புப் பகுதிகளிலேயே பலதொழிற்சாலைகள், வொர்க்ஷாப்புகள் வந்துவிடக் கூடிய பேரபாயம் இருக்கிறதே, இந்த நிலைமை வராதிருக்க அதைத் தடுப்பதற்குப் பாதுகாப்பாக என்ன வழி செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I thought that the Government would bring in an amendment making it obligatory on the part of the authorities to send the licences within 60 days. Instead of bringing that amendment, it has been brought in this way. If the Government does not sanction the licence within sixty days, according to the present Bill, any trade can be started. This is generally happening in the City of Madras. People apply for licences. What is happening is this. They start the industry in collusion with the officials and subordinates. When it is brought to the notice of the officials, a case is registered and the matter is referred to the Court. A fine of Rs. 250 is levied for starting the industry without a licence. The moment he pays the fine, the trader thinks that he can carry on the business. Thousands of such trades are going on in the City of Madras. The Hon. Minister may consider whether such an amendment is necessary. Under Section 288, the expression "the Commissioner shall as soon as may be after the receipt of application issue the licence" has been mentioned. I would suggest that for the words 'as soon as may be' the words within 60 days may be substituted. It will become obligatory on the part of the Com-

missioner to issue licences, though it is not issued in 90 per cent of the cases. As pointed out by Thiru A. Subramaniam, a number of unlicenced industries will come up in the State, which should be stopped.

திருமதி த. ந. அனந்தநாயகி : இது மிகவும் வரவேற்கக் கூடிய திருத்தமாகும், காரணம் கார்ப்பரேஷனை எடுத்துக் கொண்டால் ஒரு விண்ணப்பம் போட்டால் அது எங்கே போகிறது என்றே தெரியவில்லை. பில்டிங் அப்ளிகேஷன் போட்டால்கூட பின்னாலேயே போக வேண்டியதாக இருக்கிறது. ஆகவே விண்ணப்பம் போட்டு 60 நாட்களுக்குள் அனுமதி அளிக்கப்படவில்லை என்றால் அதற்கு அனுமதி வழங்கப்பட்டதாக மேலே தொடர வேண்டியதுதான் என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆயினும் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தெரிவித்ததைப் போல—குடியிருப்புப் பகுதிகளில் எல்லாம் வொர்க்ஷாப் வந்து பலவித இடையூறுகள் ஏற்படாதிருக்க தக்க பாதுகாப்பு வேண்டும். அதற்கு இப்போதே இந்தச் சட்டத்தில் விதிகள், துணை விதிகள், ஒழுங்கு முறைகள், சாதாரணமாக விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டே என்ற பிரிவு இருக்கிறது. ஆயினும் அதை அமல் படுத்துகிற அதிகாரி சரியாகச் செயல்பட்டால்தான் இது ஒழுங்காக இருக்கும். சினிமாக் கொட்டகை போன்றவற்றைக் கட்ட லோகல் அதாரிடி அனுமதிக்கு அனுப்புகிறோம். மாவட்ட ஆட்சி தலைவர் அனுமதி வேண்டும் என்றிருக்கிறது. அப்படி அப்படி அங்கேயே கட்டிவைத்துவிடுவதால் சரியான முறையில் எதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை. அதுபோல ஏற்படாதிருக்க வழி செய்ய வேண்டும்.

இன்னும் ரொட்டிக்கடை, விறகுக்கடை போன்றவற்றுக்கு வருடா வருடம் லைசென்ஸை புதுப்பிக்க வேண்டியிருக்கிறது. அதுபோல இன்றி ஒரு 3 வருடமோ, 5 வருடமோ லைசென்சு வழங்கும் போதே காலம் கொடுக்கப்படலாம். அல்லது கொடுக்கப்பட்ட லைசென்சில் எவ்வித மாற்றமும் இல்லையென்றால் அப்படியே அது ரின்யூவல் செய்யப்பட்டதாகவாவது கருதப்பட வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இந்த மசோதா எதற்காக இவ்வளவு அவசரம் அவசரமாகக் கொண்டுவரப்படுகிறது என்கிற மர்மம் எந்த உறுப்பினருக்கும் தெரியவில்லை. எந்தக் குறிப்பிட்ட சம்பவத்தின் அடிப்படையில் கொண்டு வரப்படுகிறது என்றும் தெரியவில்லை. அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன்—திரு. ஹனுமந்தையா காலதாமதம் ஆகாமல் லைசென்சு வழங்கப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். காலதாமதம் ஆகாமல் 60 நாட்களுக்குள் உரிமம் வழங்கப்பட வேண்டும் என்று மாநகராட்சியைக் கட்டுப்படுத்த வேணடும். அதற்குப் பதிலாக 60 நாட்களுக்குள் அனுமதி வரவில்லை என்றால் அனுமதி அளிக்கப்பட்டதாகக் கருதப்படும் என்று சொல்வது சிக்கலை நீக்காது. புதிய புதிய சிக்கல்களை உண்டாக்கப் போகிறது. மீண்டும் இந்த மன்றத்திற்கே ஒரு புது திருத்த மசோதா வந்தாக வேண்டிய நிலையை



உருவாக்கப் போகிறது. அதைத் தவிர இதனால் பயனில்லை. இது உங்களுடைய குற்றங்களை மறைத்து, மறைமுகமாக திசை திருப்பத்தான் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

Because of the commissions and omissions of the Corporation something has to be done to rectify them. How many cases are pending with the Government as on date ?

அவர்களைக் கட்டுப்படுத்த முன்வராமல் இதுபோன்ற மசோதாவைக் கொண்டுவருவது திரு. சுப்பிரமணியம் சொன்னது போலத் தான் ஆகப்போகிறது. எத்தனை கேஸ்கள் இருக்கின்றன ?

(பிற்பகல் 1.30)

How many cases are pending with the Government ? எத்தனை கேஸ்கள் அரசிடம் இருக்கின்றன ? அந்தக் குறிப்பு இருக்கிறதா ? எத்தனை கேஸ்கள் தீர்க்கமுடியாமல் இருக்கின்றன என்ற முழு விவரத்தைக் கொண்டு வரவேண்டும். இதற்காக, ஒரு காம்ப்ரெஹென்சிவ் பில் கொண்டு வருவதுதான் சரியாக இருக்கும். இது சின்ன விஷயமாக இருக்கிறது. ஆனால், பெரிய விஷயமாக மாறப் போகிறது. பல இடங்களிலே unauthorised கிரைன்டிங் மில்ஸ், ஓசை கிளப்பி கட்டிடத்திற்கு ஆபத்தாக வரக்கூடிய நிலைமையிருக்கிறது. ஏற்கெனவே ஒரு சட்டம் இருக்கிறது. கட்டிடத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரு சட்டம். 1965-ம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு, நம்முடைய மாண்புமிகு திரு. ப.உ. சண்முகம் அவர்கள் இதன் அமைச்சராக இருந்த காலத்திலே அது நிறைவேற்றப்பட்டது. அதற்கு இது முரண்பட்டது. ஒரு சின்ன பாக்டரி மாதிரி ஒன்றிருக்கிறது என்றால், அது பில்டிங்குக்கு ஆபத்தாக இருக்கிறது, கட்டிடத்திற்குப் பாதகமாக இருக்கிறது என்றால், லைசென்ஸ் தாமதமாக வந்தால் என்ன செய்யவேண்டும்? ஆகவே, அச் சட்டத்திற்கும் இந்த மசோதாவுக்கும் சரியான உடன்பாடு இல்லை. இந்த மாதிரி சிக்கல் இருக்கிற காரணத்தாலே, அவசர அவசரமாகக் கொண்டு வருவதற்குப் பதிலாக, ஆராய்ந்து ஒரு மசோதா கொண்டு வருவது நன்றாக இருக்கும். நான் சொல்வது, voice in the wilderness ஆகக் கூடாது.

மறுபரிசீலனை செய்யக்கூடிய மசோதா வரவில்லையென்றால் பாருங்கள். ஆகவே, இதை மீண்டும் பரிசீலனை செய்யுங்கள் என்று கூறி அமர்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்தத் திருத்தம், முன்னாலே 30, 45 நாட்கள் என்றிருப்பதை 60 நாட்களாக ஆக்குகின்ற திருத்தம் என்று கருதுகிறேன். இதற்கு முன்னாலே 30 நாட்களுக்குள் அந்த விண்ணப்பத்தின் பேரிலே முடிவு செய்யவில்லை யென்றால், லைசென்ஸ் கொடுத்ததாக கொள்ளப்படும்.

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1974 ஆகஸ்ட் 27

ஆனல், அதை 60 நாளாக ஆக்கக் காரணம் என்ன? இதற்கு முன்னுலே 30 நாள், 45 நாள் என்று இருந்தபொழுது ஏற்பட்ட அனுபவங்கள் என்ன? அதனுல் ஏற்பட்ட விளைவு என்ன? இதை ஒன்றும் நான் புதிதாகக் கருதவில்லை. 30, 45 என்று இருப்பதை இப்பொழுது அதிகமாக்கக் காரணம் என்ன? ஏ.ஆர்.சி. சொன்னதற்காக மாற்றப் போகிறீர்கள் என்றுல் என்னவாயிற்று? அதனுல் அதிகாரிகளுக்கு என்ன கஷ்டம் ஏற்பட்டது? அதனுல் ஏற்பட்ட விளைவு என்ன என்பதைப் பார்க்கவேண்டும்.

அடுத்து, பாக்டரி இக்ஸ்பெக்டர் அனுமதி இல்லாமல் லைசென்ஸ் கொடுக்கலாம் என்றிருக்கிறது. 45 நாள் என்றிருந்ததை டைம் கொடுத்து மாற்றும்போது, பாக்டரி இன்ஸ்பெக்டர் அனுமதி இல்லாமல் லைசென்ஸ் கொடுக்கக்கூடாது என்று இப்பொழுது இருக்கிறது. இப்பொழுது மாற்றுகிறுர்கள். அவரது அனுமதி இல்லாமல் லைசென்ஸ் கொடுத்தால் சிக்கல் வராதா? பின்னர் பாக்டரி இன்ஸ்பெக்டர் வேறுவிதமாகக் கருதி, அந்த இடத்திலே லைசென்ஸ் கொடுக்கக் கூடாது என்று கருதினுல், அதனுடைய விளைவு என்ன, சிக்கல் என்ன என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும். பாக்டரிஸ் ஆக்ட், லோக்கல் அத்தாரிட்டீஸ் ஆக்ட் இரண்டின்கீழ் லைசென்ஸ் கொடுக்க வேண்டும். இரண்டு பேரும் கலந்து கொண்டு செய்து வந்ததை மாற்றி, இப்படி வைப்பதால், பின்னுல், ஆரம்பித்த பிறகு, சங்கடங்கள் ஏற்படாமல் இருக்க, பார்த்துக்கொள்ள வேண்டும்.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலையே திருமதி அனந்தநாயகி அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறுர்கள். மாண்புமிகு டாக்டர் ஹாண்டே இந்தச் சட்டத்திற்கே ஒரு பெரிய பிரச்னையை எழுப்பினுர்கள், ஏற்கெனவே இயற்றப்பட்ட சட்டத்திற்கு முரணுனது என்று. அதற்கும் இதற்கும் முரண்பாடு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. போதிய அளவுக்கு அவகாசம் கொடுப்பதற்காக, 30, 45 என்று இருப்பதை, ஒரேயடியாக 60 நாட்களாக்கலாம் என்றுதான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. நிச்சயமாக எந்த எந்த விதிகள் பின்பற்றப் பட வேண்டுமோ, அவை ஏற்றுக் கொள்ளப்பட்டு, நடைமுறைக்கு ஒத்த வகையிலே செய்யத் தயாராக இருக்கிறுேம் என்பதைக் கூறி இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> பேரவையின் முன்னுள்ள கேள்வி: "தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."



1974 ஆகஸ்ட் 27]

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2,3,4 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:</u> தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1974-ம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/74) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என முன்மொழிகிறேன்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே:</u> நாங்கள் எவ்வளவோ பிரச்னைகளை இங்கே கிளப்பினேம். நம்முடைய அமைச்சரவர்கள் ஒன்றும் ஆராயாமல், இதுதான், ஆகவே, நிறைவேற்றித் தாருங்கள் என்று கூறுவது, அவைக்கே நன்றுக இல்லை. நீங்கள் பாஸ் பண்ணலாம், மெஜாரிட்டி இருக்கிறது, உங்களுக்கு. நாங்கள் கஷ்டப்பட்டு படித்து சந்தேகங்களை கிளப்புகிறும். உங்களிடம் அதிகாரிகள் இருக்கிறுர்கள். அவர்களிடம் கன்சல்ட் பண்ணிச் சொல்லலாம். அதிகாரிகளுக்காக ஒரு காலரி இருக்கிறது. கொஞ்சம் குறிப்புகளை எடுத்து விரிவாகப் பதில் கொடுத்தால் நன்றுக இருக்கும். எப்படி முரண்பாடு இல்லையென்று சொல்கிறீர்கள்? நாம்தான் சட்டம் வைத்திருக்கிறுேமே, பில்டிங்குக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று.

தொழில் ஆரம்பிக்கும்போது, பில்டிங்குக்கு என்று சட்டம் போட்டிருக்கிறும். மதிப்பிற்குரிய ஜோதி வெங்கடாசலம் அவர்கள் அமைச்சராக இருந்த நேரத்தில் அந்தச் சட்டம் கோர்ட்டுக்குப் போயிற்று. மூன்றுமுறை போயிற்று. பிறகு இப்பொழுது வந்தது. ஸ்டாச்சுட் புக்கிலே வந்து விட்டது. அந்தச் சட்டத்திற்கும் இதற்கும் முரண்பாடு இருக்கிறது என்று நாங்கள் சொல்கிறும். அந்த பில்டிங்குக்குப் பாதுகாப்பு இல்லை, இதன் பிரகாரம். ஒரு பெரிய மில் ஆரம்பித்திருக்கிறுர்கள். அல்லது ஒரு ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரி ஆரம்பித்தால், பில்டிங்குக்குப் பாதுகாப்பு இல்லையென்று நாங்கள் சொல்கிறும். அது எப்படி முரண்பாடு இல்லை யென்று விளக்கமாகச் சொல்ல வேண்டுமல்லவா? நீங்கள் ஒரு நிமிஷத்திலே, டைம் பார்த்து, விளக்கம் கொடுத்தால் அது நன்றுக இருக்காது.
Definitely it is not in good taste in a parliamentary debate.

திருமதி த. ந. அனந்தநாயகி : டாக்டர் ஹாண்டே அவர்கள் முரண்பாடு பற்றி எல்லாம் சொன்னார்கள். செக்ஷன் 3-லே நல்ல பதில் சொன்னார். நான் இருக்கிற சட்டத்தைச் சொன்னேன், இதெல்லாம் பார்த்துத்தான் கொடுக்க வேண்டுமென்று. இந்தச் சட்டத்தைப் பார்த்து அதிகாரிகள் எல்லாம் அது நடக்கும் என்று இருந்துவிடக் கூடாது. அவர்கள் ஒழுங்காக இருந்து, கவனிக்காமலிருந்தால், 'டீமிங் கிளாஸிலே' லைசென்ஸ் வந்துவிடும், ஆகவே, எந்த இலாக்காவிலே, இந்த மாதிரி அக்கறை இல்லாமல், பேசாமலிருந்து , 'டீமிங் கிளாஸிலே' அதிக பர்சன்டேஜ் வருகிறது என்று பார்த்து, அந்த அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். நன்றாகத் தூங்குவார்கள் அதிகாரிகள். அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். 'டீமிங் கிளாஸ்' கொடுத்தால், நீங்கள் தூங்கக் கூடாது. உங்களுடைய வேலையை நீங்கள் செய்ய வேண்டும், டீமிங் கிளாஸிலே போவது மிகக் குறைவாக இருக்க வேண்டுமென்ற கட்டு திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இந்தத் திருத்தத்தைப் புதிதாக ஓர் அம்சமாக நாம் கொண்டு வந்திருக்கிறோம். ஏதோ தவறு செய்கிறோம் என்று முடிவு எடுக்கக் கூடாது. ரொம்ப நீண்ட நாட்களாகப் பழைய சட்டங்களிலே இருப்பதைத்தான் கொண்டு வந்திருக்கிறோம். சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்புப்படி, லோக்கல் போர்டிலே காலதாமதம் ஆகும்போது, அந்த மனு என்னவாகும் என்ற பிரச்னை வந்தபொழுது, இதுபோன்ற முடிவை எடுக்க வேண்டுமென்று 60 நாட்களுக்குள்ளாக அந்த இலாக்கா செய்ய வேண்டுமென்றுதான் இதனைக் கொண்டு வந்திருக்கிறோம்.

திருமதி அனந்தநாயகி அவர்கள் சொன்னார்கள், 'subject to rules and regulations' என்ற வார்த்தையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. சட்டத்திற்கும் மீறி 'shall be deemed' என்ற வார்த்தையே வராது. அதையும் போட்டிருக்கிறோம். பாதுகாப்பு இருக்கிறது. இது புதிய பிரிவே இல்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் 'subject too rules' என்று சொல்கிறீர்கள். ஒருவர் ஒரு பில்டிங் கன்ஸ்ட்ரக்ட் பண்ணுகிறார். கன்ஸ்ட்ரக்ட் பண்ணியதற்குப் பிறகுதான் ரூல்ஸ் பொறுப்பாகும். Afterwards it would become too late and it would become fait accompli. அதைப் படித்துத் தெரிந்துதான் பேசுகிறேன். தெரியாமல் பேசவில்லை. அதற்குள்ளே முடித்து விடுகிறேன். தாமதம் பண்ணுவது கார்ப்பரேஷன் அல்லது கவர்ன்மென்ட்டல் ஆர்கனைசேஷன். ஆனால், அவர்கள் முடித்துவிட்டு, அதற்குப் பிறகுதான் ரூல்ஸ் அப்ளை ஆகிறது. கட்டி முடித்த பிறகு. அதற்குத்தான்.



மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுவும் தவறான கருத்தாகும். 'subject to rules and regulations' யார் ஒருவர் ஒரு காரியத்தைச் செய்யப் போகின்றாரோ அவர் சட்டப்படி செய்தாக வேண்டும். அதுதான் 'subject to rules and regulations' செய்து முடித்துவிட்டு மறுபடியும் சட்டப்படியில்லை யென்று அல்ல. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், ஒரு காரியத்துக்கு அனுமதி கொடுக்கின்றார்களா, இல்லையா என்பது வேறு பிரச்னை. ஆனால், அந்தச் சட்டத்தை அவர் பின்பற்ற வேண்டும். 'Shall be deemed' என்பதால் அவர் லைசென்ஸ் வாங்கிவிட்ட பிறகு, சட்டப்படி நிறைவேற்றவில்லை யென்றால், மறுபடியும் நடவடிக்கை எடுக்க நமக்கு அதிகாரம் உண்டு. அதுதான் 'subject to rules and regulations'.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, உள்ளாட்சி மன்றங்கள் சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண். 31/74) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவடைந்து, நாளைக் காலை 9-00 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

நாளைக் காலை கேள்வி நேரமில்லாமல் பேரவை தொடங்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-40 மணியளவில் ஒத்தி வைக்கப்பட்டது.

(ii) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A Statutory Rules and Orders—Nil.

*B. Reports, Notification and other papers.*

87. Return of Assets submitted to the House by the Hon. Minister for Labour and Hon. Members of the Legislative Assembly (*vide*-names below).

*As on* 31*st March* 1971.

Thiru A. Rajamanickam.

*As on* 31*st March* 1973.

Hon. Thiru K. Rajaram, Minister for Labour.

*Members.*

(1) Thiru A. Rajamanickam.

(2) Thiru K. P. Kandasamy.

(3) Thiru C. Kaverimaniam.

(4) Thiru A. M. Mohideen.

88. Return of Assets submitted to the House by the Hon. Speaker, Hon. Minister for Public Works, Hon. Minister for Revenue, Hon. Minister for Local Administration, Hon. Minister for Labour, Hon. Minister for Religious Endowments and Members of the Legislative Assembly (*Vide* names below).

*As on* 31*st March* 1974.

1. Hon. Pulavar K. Govindan—Speaker.
2. Hon. Thiru P. U. Shanmugam, Minister for Public Works.
3. Hon. Thiru S. J. Sadiq Pasha, Minister for Revenue.
4. Hon. Thiru A. P. Dharmalingam, Minister for Local Administration.
5. Hon. Thiru K. Rajaram,, Minister for Labour.
6. Hon. Thiru M. Kannappan, Minister for Religious Endowments.

*Members.*

1. Thiru S. Arumugam.
2. Thiru V. Rajagopal.
3. Thiru M. Raman.
4. Thiru P. Ettiappan.
5. Thiru T. Ganapathy.
6. Thiru J. Karunainathan.
7. Thiru V. Kartheesan.
8. Thiru K. S. Kothandaramiah
9. Thiru Kovai Chezhiyan.
10. Thiru M. Shanmugam.
11. Thiru O. N. Sundaram.
12. Thiru A. R. Subbiah.
13. Thiru M. Surendran.
14. Thiru K. Thiruppathy.



15. Thiru N. Nachimuthu.
16. Thiru A. M. T. Nachiappan.
17. Thiru K. Balakrishnan.
18. Thiru T. Ponnumalai.
19. Thiru P. S. Muthuselvan.
20. Thiru M. Muthiah.
21. Thiru A. M. Mohideen.
22. Thiru E. Ramasamy.
23. Thiru Ka. Vezhavendan.

89. List of unstarred questions and answers from numbers 1 to 35.

90. Booklet on the Reorganisation of State Transport Department.

இணைப்பு I

(468ஆம் பக்கத்தில் 351 ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்கான விடையைக் காண்க.)

*List of Backward Classes.*

Throughout the State of Tamil Nadu.

1 (*a*) Agamudayar of Southern Tamil Districts belonging to Mukkulathors.
(*b*) Agamudayar of Northern Tamil Districts.
(*c*) Thozhu or Thuluva Vellala.
2 Ambalakarar.
3 Andipandaram.
4 Archakarai Vellala.
5 Badagar.
6 Bestha, Siviar.
7 Bhatraju (other than Kshtriya Raju).
8 Billava.
9 Bondil.
10 Boyar, Oddar.
11 Dasari.
11-A Dekkani Muslims.
12 Dommara.
13 Devanger (Sedan).
14 Dudekula.
15 Enadi.
16 Eravallar (Except in Kanyakumari District and Shencottah Taluk of Tirunelveli District where the community is a Scheduled Tribe).

17 Gangavar.

18 Gavarai (Kavarai) and Vadugan (Vaduvan) other than Kamma, Kapu, Balija and Reddi.

19 Gowda (including Gammala, Kalali).

20 Converts to Christianity from Scheduled Castes—only persons who are themselves converts for the purpose of reservation of seats in educational institutions and for posts in Public Services.

21 Hegde.

22 Idiga.

23 Illathu Pillaimar.

24 Isaivellalar, Melakarar.

25 Jambuvanodai.

26 Jangam.

27 Jhetty.

28 Jogi.

29 Kabbora.

30 Kambar.

31 Kadupattan (Malabar).

32 Kaikolar, Sengunthar.

33 Kalingi.

34 Kallar.

35 Kalveli Gounder.

36 Kammalan or Viswakarma and Viswakarmala (including Thattan or Porkollan, Kannar, Karuman or Kollan, Thachen and Kalthacher).

37 Kani or Kanisu or Kaniyar Panickkar.

38 Kannada Saineegar, Kannadiyar.

39 Katesan or Pattamkatti.

40 Kavuthiyan.

41 Kerala Mudali.

42 Kharvi.

43 Khatri.

44 Kongu Chettiar (Coimbatore District).

45 Koppalavelama.

46 Koracha.

47 Koteyar.

48 Kulala including Kuyavar and Kumbaran.

49 Kunchidigar.

50 Kunnuvar Mannadi.





51 Kurumba.

52 Kurihini Chetty.

53 Labbais (whether their spoken language is Tamil or Urdu).

54 Lambadi.

55 Mahratta (Non-Brahmin) including Namdev Mahratta.

56 Malayan.

57 Mapilla.

58 Male.

59 Maravar.

60 Maruthuvar, Navithar, Mangala, Velakattalavan, Velakattalanair and Pronopakari.

61 Moniagar.

62 Moundadan Chetty.

63 Mahendra, Medara.

64 Mukkuvan or Mukayan.

65 Mutlakampatti.

66 Muthuraja (Muthuracha, Muttiriyar and Muthiriyar).

67 Nadar, Shanan and Gramani.

68 Nagaram.

69 Narikoravan.

70 Nokkar.

71 Odiya.

72 Ovachar.

73 Pamulu.

74 Panan (Except in Kanyakumari District and Shencottah taluk of Tirunelveli District where the community is a Scheduled Caste).

75 Pannayar.

76 Paravan (Except in Kanyakumari District and Shencottah Taluk of Tirunelveli District where the community is a Scheduled Caste).

77 Paravan Christians (in Kanyakumari District and Shencottah Taluk of Tirunelveli District).

78 Parkavakulam (Surithiman, Malayaman, Nathaman).

79 Meenavar (Parvatharajakulam, Pattanavan, Sembadavan).

80 Perike.

81 Poraya.

82 Pulluvan.

83 Punnan Vettuva Gounder.

84 Pusala.

85 Rajapuri (South Kanara).

86 Reddy (Ganjam).
87 Sadhu Chetty (including Telugu Chetty, Telegupatty Chetty, 24 Manai Telugu Chetty).
88 Saliyar (Padmasaliyar, Pattusaliyar, Pattariyar, Adhaviyar).
89 Sathatha Srivaishnava (including Sathani).
90 Senaithalaivar, Senaikudiyar and Illaivaniar.
91 Sourashtra (Patnulkarar).
92 Sozhia Chetty.
93 Srisayan.
94 Thiyya of Ponnani, Palghat, Walluvanad and Ernad taluks of Malabar.
95 Thogata Veerakshtriya.
96 Tholuva Naicker and Vetalakara Naicker.
97 Thoriyan.
98 Thottiya Naicker (including Rajakambalam, Gollavar, Sillavar, Thockalavar and Tholuva Naicker).
99 Thondaman.
100 Uppara.
101 Urali Gounder (throughout the State Orudaya Gounder in Madurai, Coimbatore and Tiruchirappalli districts).
102 Valaiyar.
103 Valmiki.
104 Vaniyar, Vania Chettiar (including Gandla, Ganika Telikula and Chekkalar).
105 Vannan (Salavai Thozhilalar) (except in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district where the community is a Scheduled Caste).
106 Vanniyakula Kshatriya, including Vanniya, Vanniyar, Vannia Gounder, Gounder or Kander, Padayachi, Palli.
107 Vedan (Except in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district where the Community is a Scheduled Caste).
108 Vellan Chettiar.
109 Vettaikaran.
110 Vettuva Gounder.
111 Virakodi Vellala.
112 Vokkaligar (including Vakkaligar, Okkaligar, Kappiliyar, Kappiliya Okkaliya Gowder, Okkaliya Gounder, Okkaliya Gowda).
113 Wynad Chetty of the Nilgiris District.
114 Yadava (including Idaiyar, Telugu speaking Idaiyar known as Vaduga Ayan or Vaduga Idaiyar or Golla, Mond Golla, Asthnthra Golla).



115 Yogeeswarar.
116 Yerukula.
117 Savalakaran.
118 Pannirandam Chettiar or Uthama Chettiar.
119 Vellambar.
120 Yavana.
121 Salivagana.

List of Backward Classes in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district :

1 Alwar.
2 Arayan (Nulayan).
3 Aryavathi.
4 Chavalakkaran.
5 Chettu or Chetty (including Kottar Chetty, Elur Chetty, Pathira Chetty, Valayal Chetty, Pudukkadai Chetty).
6 Ezhuthachan.
7 Ezhavathy.
8 Ezhava.
9 Kalari Krup (Kalari Panicker).
10 Kudumbi
11 Naikkan.
12 Odan.
13 Perumkollan.
14 Sakkaravar (Kavathi).
15 Tholkollan.
16 Veerasaiva.
17 Veluthedathu Nair.
18 Krishnavaka
19 Latin Catholics.
20 C.S.I. formerly S.I.U.C.
21 Nanjil Mudali.

NOTE.—The following communities are treated as Backward Classes only for the purpose of Reservation of seats in Educational Institutions and for the posts in Public Services:—

(i) Paravan Christian in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district.
(ii) Latin Catholics.
(iii) Krishnavaka.
(iv) C.S.I. formerly S.I.U.C.

(*List of Most Backward Classes.*)

Throughout the State of Tamil Nadu.

1 Ambalakarar.
2 Andipandaram.
3 Bestha, Siviar.
4 Bhatraju (other than Kshatriya Raju).
5 Boyar, Oddar.
6 Dasari
7 Dommara.
8 Eravallar (except in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district where the community is a Scheduled Tribe).
9 Isaivellalar, Melakkarar.
10 Jambuvanodai.
11 Jangam.
12 Jogi
13 Kongu Chettiar (Coimbatore district).
14 Koracha.
15 Kulala including Kuyavar and Kumbaran.
16 Kunnuvar Mannadi.
17 Kurumba.
18 Kuruhini Chetty.
19 Maruthuvar, Navithar, Mangala, Velakattalavan, Velakatalanair and Pronopakari.
20 Mond Golla.
21 Moundadan Chetty.
22 Mahendra, Medara.
23 Mutlakampatti.
24 Narikoravan.
25 Nokkar.
26 Vanniakula, Kshatriya including Vannia, Vanniyar, Vannia Goundar, Gounder or Kander, Padayachi, Palli.
27 Paravan (except in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district where the community is a Scheduled Caste).
28 Meenavar (Paravatharajakulam Pattanavan, Sembadavan).
29 Punnan Vettuva Gounder.
30 Sathatha Srivaishnava (including Sathani).
31 Sozhia Chetty.
32 Telugupatti Chetty.
33 Thottia Naicker (including Rajakambalam Gollavar, Sillavar, Thockalavar and Tholuva Naicker).
34 Thondaman.
35 Valaiyar.
36 Vannan (Salavai Thozhilalar) (except in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district where the community is a Scheduled Caste).
37 Vettaikaran.
38 Vettuva Gounder.
39 Yogeaswarar.



The Backward Classes Commission, among others, suggested the deletion of the communities, sub-castes, titles, etc., for the reasons that either they are not found in the State or they are redundant and repetitive. The Backward Classes Commission has also suggested amplifying the description of certain communities and clubbing together of certain other communities. The suggestions were accepted. By doing so it is not the intention of the Government to deny any concession to the deleted communities as they were deleted from the list only for the reasons stated above. Hence, executive instructions were issued to treat such deleted communities who are in the State as Backward Classes. The list of such deleted communities and the orders for which concessions have been allowed to continue are given below :

| | *Entry prior to issue of revised list of Backward Classes.* | *Entries deleted.* | *Entries as modified, amplified, altered after issue of the revised list mentioned in column (1).* |
|---|---|---|---|
| | (1) | (2) | (3) |
| 1 | Illuvan (Ezhuvan Illathar) .. .. | Illuvan (Ezhuvan Illathar) .. .. | Illathu Pillaimar. |
| 2 | Vanniyakula Kshatriya in Tamil Districts including Vanniya, Vanniyar or Vanniya Gounder, Kander or Vanniya Gounder (other than Vellala Gounder) belonging to Vanniyakula Kshatriya Caste, Agnikulakshatriya in Telugu Districts, Padayachi (Vellayankuppam) Palli. | Agnikulashatriya .. .. .. .. | Vanniyakula Kshatriya including Vanniya, Vanniyar, Vanniya, Gounder, Gounder or Kander, Padayachi, Palli. |
| 3 | Uppara (Sagara Uppila) .. .. .. | Uppilia, Sagara .. .. .. .. | Uppara. |
| 4 | Chattadi, Chattada Srivaishnava .. .. | Chattadi, Chattada Srivaishnava .. | Sathatha Srivaishnava (including Sathani). |
| 5 | Vannan (Agasa, Madivala, Ekali, Rajakula, Veluthadan, Rajaka) .. .. | Agasa, Madivala, Ekali, Rajakula, Veluthadan, Rajaka. | Vannan (Salavai Thozhilalar). |
| 6 | Perike, Perike Balija .. .. .. .. | Perike Balija .. .. .. .. | Perike. |

| | | | |
|---|---|---|---|
| 7 | Kammalans or Kamsalas or Viswabrahmin or Viswakarmas. | Kamsala, Viswabrahmin | Kammalan or Viswakarma and Viswakarmala (including Thattan or Porkollan, Kannar, Karuman or Kollan, Thachan and Kalthacher). |
| 8 | Parkavakulam (Surithiman, Nathaman, Malayaman, Moopanar and Nainar). | Moorpanar, Nainar | Parkavakulam (Surithiman, Malayaman, Nathaman). |
| 9 | Kallar (including Esanattu Kallar) | Esanattukallar | Kallar. |

The Government have orderd—

(i) that all educational concessions hitherto given to Illuvan (Ehzuvan, Illathar), Agnikulakshatriya, Uppilia, Sagara, Chattadi, Chattada Srivaishnava, Rajaka, Ekali, Agasa, Rajakula, Veluthadan, Madivala, Perike Balija, Kamsala, Moopanar, Nainar and Esanattu-Kallar communities referred to in column (2) above be allowed to continue ;

(ii) in future, whenever a person belonging to the deleted community requires a certificate, the certificate issuing authorities should adopt only the entry or one of the entries shown in column (3) of the above statement;

(iii) if a person belonging to the above deleted community has already produced a certificate in that name with reference to entry (or entries) in the previous list of Backward Classes, he should be regarded as belonging to the corresponding community mentioned in column (3) of the Statement above for award of scholarships, fees concession and reservation of seats in educational institutions and posts in Public Service.

(G.O. Ms. No. 18, S.W., dated 6—1—73, G.O. Ms. No. 956 S.W., dated 5—11—73 and G.O. Ms. No. 81, S.W., dated 5—2—1974.)



## பின்தங்கிய வகுப்பினர்களின் பட்டியல் தமிழ்நாடு முழுவதிலும்.

| | | |
|---|---|---|
| 1. | (a) Agamudayar of Southern Tamil Districts belonging to Mukkulathors. | (அ) முக்குலத்தோர்களைச் சேர்ந்த தென் தமிழ் மாவட்டங்களிலுள்ள அகமுடையார். |
| | (b) Agamudayar of Northern Tamil Districts | (இ) வடதமிழ் மாவட்டங்களிலுள்ள அகமுடையார். |
| | (c) Thozhu or Thuluva Vellala | (உ) தொளு அல்லது துளுவ வெள்ளாளர். |
| 2. | Ambalakarar | அம்பலக்காரர். |
| 3. | Andipandaram | ஆண்டிப் பண்டாரம். |
| 4. | Archakarai Vellala | அர்ச்சகரை வெள்ளாளர். |
| 5. | Badagar | படகர். |
| 6. | Bestha, Siviar | பெஸ்தா, சிவியர். |
| 7. | Bhatraju (other than Kshatriya Raju) | பட்ராஜு (க்ஷத்திரிய-ராஜு இவர்களைத் தவிர). |
| 8. | Billava | பில்லவா. |
| 9. | Bondil | பொண்டில். |
| 10. | Boyar, Oddar | போயர், ஒட்டர். |
| 11. | Dasari | தாசரி. |
| 11-A | Dekkani Muslims | தக்கனி முஸ்லீம்கள். |
| 12. | Dommara | தொம்மரா. |
| 13. | Devanger (Sedan) | தேவாங்கர் (சேடன்). |
| 14. | Dudekula | துடிகுலா. |
| 15. | Enadi | ஏனாதி. |
| 16. | Eravallar (Except in Kanyakumari district and Shencottah taluk of Tirunelveli district where the community is a Scheduled Tribe). | எரவல்லர் (கன்னியாகுமரி மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், தவிர அங்கு இந்த வகுப்பினர் பழங்குடி மக்கள் எனப்படுவர்). |
| 17. | Gangavar | கங்கவார். |

| | | |
|---|---|---|
| 18. | Gavarai (Kavarai) and Vadugan (Vaduvan)—Other than Kamma, Kapu, Balija and Reddi. | கவரை (Gavarai), கவரை (Kavarai), வடுகன் (வடுவன்) (கம்மா, காப்பு, பலிஜா, ரெட்டி நீங்கலாக). |
| 19. | Gowda (including Gammala, Kalali) .. .. .. | கௌடர், (கம்மாளர், கலாலி உட்பட). |
| 20. | Converts to Christianity from Scheduled Castes—Only persons who are themselves converts for the purpose of reservation of seats in educational institutions and for posts in Public Services. | கிறிஸ்துவ மதம் மாறிய தாழ்த்தப்பட்டோர்—தாமே மதம் மாறுபவர்களுக்கு மட்டும் கல்வி நிறுவனங்கள், அரசு பணிகள் இவற்றில் ஒதுக்கீடுக்காக. |
| 21. | Hegde .. .. .. .. .. .. .. | ஹெக்டே. |
| 22. | Idiga .. .. .. .. .. .. .. | இடிகா. |
| 23. | Illathu Pillaimar .. .. .. .. .. .. | இல்லத்து பிள்ளைமார். |
| 24. | Isaivelalar, Melakarar .. .. .. .. .. | இசைவேளாளர், மேளக்காரர். |
| 25. | Jambuvanodai .. .. .. .. .. .. | ஜாம்பவனோடை. |
| 26. | Jangam .. .. .. .. .. .. .. | ஜங்கம். |
| 27. | Jhetty .. .. .. .. .. .. .. | ஜட்டி. |
| 28. | Jogi .. .. .. .. .. .. .. | ஜோகி. |
| 29. | Kabbora .. .. .. .. .. .. .. | கப்போரா. |
| 30. | Kambar .. .. .. .. .. .. .. | கம்பர். |
| 31. | Kadupattan (Malabar) .. .. .. .. .. | காடுபட்டன் (மலபார்). |
| 32. | Kaikolar, Sengunthar .. .. .. .. .. | கைகோலர், செங்குந்தர். |
| 33. | Kalingli .. .. .. .. .. .. .. | கலிங்கி. |
| 34. | Kallar .. .. .. .. .. .. .. | கள்ளர். |
| 35. | Kalveli Gounder .. .. .. .. .. .. | கல்வேலி கவுண்டர். |
| 36. | Kammalar or Viswakarma and Viswakarmala incuding Thattan or Porkollan, Kannar, Karuman or Kollan, Thachen and Kalthacher). | கம்மாளர் அல்லது விஸ்வகர்மா, விஸ்வகர்மாளா (தட்டான் அல்லது பொற்கொல்லன், கன்னார், கருமான் அல்லது கொல்லன், தச்சன், கல்தச்சர் உள்பட). |



| | | |
|---|---|---|
| 37. | Kani or Kanisu or Kaniyar Panickkar .. .. | கனி அல்லது கனிசு அல்லது கனியர்—பணிக்கர். |
| 38. | Kannada Saineegar, Kannadiyar .. .. .. | கன்னட சைனிகர், கன்னடியர். |
| 39. | Katesan or Pattamkatti .. .. .. .. .. | கடேசன் அல்லது பட்டம்கட்டி. |
| 40. | Kavuthiyan .. .. .. .. .. .. | கவுத்தியன். |
| 41. | Kerala Mudali .. .. .. .. .. .. | கேரள முதலி. |
| 42. | Kharvi .. .. .. .. .. .. .. | கார்வி. |
| 43. | Khatri .. .. .. .. .. .. .. | கத்ரி. |
| 44. | Kongu Chettiar (Coimbatore District) .. .. | கொங்குசெட்டியார் (கோயமுத்தூர் மாவட்டம்) |
| 45. | Koppalavelamma .. .. .. .. | கோப்புல வெலமா. |
| 46. | Koracha .. .. .. .... .. .. | கொராச்சா. |
| 47. | Koteyar .. .. .. .. .. .. .. | கோட்டேயர். |
| 48. | Kulala including Kuyavar and Kumbaran .. .. | குலாலா—குயவர், கும்பரன் உட்பட. |
| 49. | Kunchidigar .. .. .. .. .. .. | குஞ்சிடிகர். |
| 50. | Kunnuvar Mannadi .. .. .. .. .. | குன்னுவர் மன்னாடி. |
| 51. | Kurumba .. .. .. .. .. .. .. | குரும்பர். |
| 52. | Kurihini Chetty .. .. .. .. .. .. | குருகினி செட்டி. |
| 53. | Labbais (whether their spoken language is Tamil or Urdu). | லப்பை அவர்கள் பேசும் மொழி தமிழாக இருந்தாலும் சரி அல்லது உருதுவாக இருந்தாலும் சரி. |
| 54. | Lambadi .. .. .. .. .. .. .. | லம்பாடி. |
| 55. | Mahratta (Non-Brahmin) including Namdev Mahratta. | மராட்டா (பிராமணர் அல்லாதோர்), நாம்தேவ் மராட்டா உட்பட. |
| 56. | Malayan .. .. .. .. .. .. .. | மலையான். |
| 57. | Mappilla .. .. .. .. .. .. .. | மாப்பிள்ளா. |
| 58. | Male .. .. .. .. .. .. .. | மாலி. |

| | | |
|---|---|---|
| 59. | Maravar .. .. .. .. .. .. | மறவர். |
| 60. | Maruthuvar, Navithar, Mangala, Velakattalavan, Velakattalanair and Pronopakari. | மருத்துவர், நாவிதர், மங்களா, விலகத்தலவன், விலக்கத்தல நாயர், பரஞோபகாரி, |
| 61. | Moniagar .. .. .. .. .. .. | மோனியகார். |
| 62. | Moundadan Chetty .. .. .. .. .. | மவுண்டாடன் செட்டி. |
| 63. | Mahendra, Medara .. .. .. .. .. | மகேந்திரா, மேதரா. |
| 64. | Mukkuvan or Mukayan .. .. .. .. | முக்குவன், அல்லது முகயன். |
| 65. | Mutlakampatti .. .. .. .. .. | முட்லகம்பட்டி. |
| 66. | Muthuraja (Muthuracha, Muttiriyar and Muthiriyar). | முத்துராஜா (முத்துராசா, முத்திரியர்). |
| 67. | Nadar, Shanan and Gramani .. .. .. .. | நாடார், சாணுன், கிராமணி. |
| 68. | Nagaram .. .. .. .. .. .. | நகரம். |
| 69. | Narikoravan .. .. .. .. .. .. | நரிகுறவன். |
| 70. | Nokkar .. .. .. .. .. .. .. | நோக்கர். |
| 71. | Odiya .. .. .. .. .. .. .. | ஒடியா. |
| 72. | Ovachar .. .. .. .. .. .. .. | உவச்சர். |
| 73. | Pamulu .. .. .. .. .. .. .. | பாமலு. |
### 2. முதலமைச்சரவர்களின் அறிக்கை.

டெல்லியில் பிரதம அமைச்சரையும் மற்றும் சில மத்திய அமைச்சர்களையும் சந்தித்துப் பேசியது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவைக்கு ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கை அளிப்பார்கள்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் ( * ) வெள்ளிக் குறி இடப்பட்டிருந்தால் அது உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, 26—8—1974 அன்று நானும் தொழிலமைச்சரும் டில்லி சென்று வந்ததையும், அங்கு பிரதம அமைச்சர், நிதி அமைச்சர், திட்ட அமைச்சர் ஆகியோரைச் சந்தித்த விவரங்களையும் அறிய மன்ற உறுப்பினர்கள் விருப்பம் காட்டுவதை நான் வரவேற்கிறேன் எனினும், டில்லி சென்று திரும்புகிற போதெல்லாம், அதுபற்றி மன்றத்திற்கு அறிக்கை தர வேண்டுவது மரபாக இல்லை. இருந்தபோதிலும், இந்த அவையில் இந்தக் கூட்டத் தொடரில் விவாதிக்கப்பட்ட சில பிரச்சினைகள் பற்றி டில்லியில் மத்திய அரசு அமைச்சர்களுடன் நானும் தொழிலமைச்சரும் நமது அரசு அதிகாரிகளும் விவாதித்தோம்.

தமிழகத்தில் பாராளுமன்றத் தொகுதிகளை அதிகப்படுத்த வேண்டும் என்றும், ஒரு பாராளுமன்றத் தொகுதிக்கு ஏழு சட்ட மன்றத் தொகுதிகள் தரப்பட வேண்டும் என்றும் இந்த மன்றம் நிறைவேற்றிய தீர்மானம் பற்றி தலைமை அமைச்சரிடத்தில் எடுத்துக் கூறப்பட்டது. தோல் பதனிடும் தொழிற்சாலையில் ஏற்பட்டுள்ள இன்னல்கள் பற்றி பிரதம அமைச்சரிடம் எடுத்துக் கூறப்பட்டது.

மத்திய நிதி அமைச்சருடனும் திட்ட அமைச்சருடனும் இந்த ஆண்டு திட்டத்தைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. நாம் வகுத்துள்ள 158 கோடி ரூபாய் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி உதவி அதிகம் அளித்திட வேண்டுமென்று எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, நம்முடைய திட்டத்தில், சுமார் 45 கோடி ரூபாய் செலவில் திட்டமிடப்பட்டிருக்கும் மின்சார வாரியத்தினுடைய திட்டங்களுக்குத் தேவைப்படும் முழு நிதியையும் மத்திய அரசு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது.

இரயில்வே துறை அமைச்சரைச் சந்தித்து, அண்மைக் காலத்தில் தமிழகத்தில் ஏராளமான இரயில்கள் நிலக்கரி இல்லாத காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ள நிலையை எடுத்து விளக்கி, அந்த இரயில்களை மீண்டும் விடவேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

மூடப்பட்ட மேட்டுப்பாளையம்—உதகை இரயில் தொடர்பு மத்திய அரசால் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டும், அல்லது மாநில அரசின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் எடுத்துக் கூறப்பட்டது. மாநில அரசிடம் ஒப்படைப்பது பற்றியோ அல்லது மாநில—மத்திய அரசுகள் சேர்ந்து நடத்துவது பற்றியோ ஆலோசிப்பதாக இரயில்வே அமைச்சர் எடுத்துக் கூறினர்.





நெல்லை மாவட்டத்தில் மணியாச்சி இரயில்வே சந்திப்புக்கு விடுதலைப் போராட்ட வீரர் வாஞ்சிநாதன் அவர்களுடைய நினைவாக "வீர வாஞ்சி சந்திப்பு" என்று பெயர் வைக்க வேண்டும் என்ற கோரிக்கை இரயில்வே அமைச்சரிடம் மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

தமிழகத்தினுடைய உணவு நிலைமை பற்றி, மத்திய உணவு அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடத்தில் எடுத்து விளக்கப்பட்டது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * * * * *

இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை. முறையற்ற முறையிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பப்படுவது அவைக் குறிப்பில் ஏறாது என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். ஆகவே, இதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * *

இந்த பாயின்ட் ஆப் ஆர்டர் முறையற்ற பாயின்ட் ஆப் ஆர்டர். ஆகவே, இதுவும் அவைக்குறிப்பில் ஏறாது.

### 1. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/74).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

I have received the following message from the Governor :—

In pursuance of Article 207, clause (1) read with Article 199 (1) (a) of the Constitution of India, I, Kodardas Kalidas Shah, Governor of Tamil Nadu, hereby give my recommendation for moving in the Tamil Nadu Legislative Assembly, the amendments to the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 (Legislative Assembly Bill No. 34 of 1974) as shown in the "Annexure."

திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

* * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1974 ஆம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/74). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : * * * *

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதைப்பற்றி பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லுங்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : * * * *

(உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் வெளிநடப்பு செய்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'உறுப்பினர் திரு. பெ. சௌந்தரபாண்டியன் வெளிநடப்பு செய்தார்' என்பது மட்டும் அவைக் குறிப்பில் இடம் பெறும். அவர் வெளிநடப்பு செய்வதற்கு முன்பாக கூறிய கருத்துக்கள் அவைக் குறிப்பில் இடம் பெறு.

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆட் ஆர்டர்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதைப் பற்றி பாயின்ட் ஆப் ஆர்டர் ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : இப்பொழுது இதைப்பற்றி நான் பேசவில்லை. பொதுவாக உரிமைப் பிரச்சனை வரும்போது தாங்கள் அறையில் டிஸ்கஸ் பண்ணுகிறீர்கள். அம்மாதிரியாக இந்த உரிமைப் பிரச்சனையைப் பொறுத்தும் இங்கே குறிப்பிடக் கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். இந்த உரிமைப் பிரச்சனையைப் பொறுத்த வரையில் உறுப்பினர் அவர்கள் மிகவும் வேதனை அடைந்திருப்பதால், தங்களுடைய அறைக்கு இரண்டு மூன்று பேர் வந்து டிஸ்கஸ் பண்ணி, இதுகுறித்து முடிவு எடுக்க தாங்கள் அனுமதிப்பீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் என்னுடைய அறைக்கு வந்து எந்தப் பொருள் பற்றி என்னிடத்தில் விவாதிக்க விரும்பினாலும் நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களை நான் வரவேற்கிறேன். எந்த நேரத்திலும் உறுப்பினர்களுடன் இந்த அவை சம்பந்தமான பொருள் பற்றி விவாதிக்க நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். வரவேற்கிறேன்.

## (4) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/74).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே,

"தமிழ் நாடு, 1974-ஆம் ஆண்டு, கேளிக்கைகள் வரி மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1974) இம்மன்றம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும்." என நான் முன் மொழிகிறேன்.

கூடுதல் நிதி திரட்டுவதற்காக அரசு, தமிழ் நாடு 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1939) 4-ஏ பிரிவின்கீழ் செலுத்தத்தக்க தற்போதைய காட்சி வரி வீதங்களுக்கும், தமிழ் நாடு 1961 ஆம் ஆண்டு உள்ளாட்சி மன்றங்கள் நிதிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 52/1961) 3 ஆவது

* 16—8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. செ. மாதவன்] [1974 ஆகஸ்ட் 28

பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பிரிவின் கீழ் செலுத்தத் தக்க காட்சி வரி மீதான தற்போதைய மேல் வரி வீதங்களுக்கும் பதிலாக திருத்தியமைக்கப்பட்ட கட்டண வரிவீதங்களை விதிக்க முடிவு செய்தது. இவ்வரி வீதங்களுக்கு எதிராக முறையீடுகள் செய்யப்பட்டதன் பேரில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய காட்சி வரி மீது கூடுதல் மேல் வரி விதிப்பதெனவும், கேளிக்கை வரி மீதான கூடுதல் மேல் வரியினை அதிகப்படுத்துவதெனவும் அரசு முடிவுசெய்துள்ளது. எந்த ஊராட்சிப் பகுதியில் செயல்படுகின்ற தற்காலிகத் திரை அரங்கின் சொந்தக்காரர்களும் விரும்பினால், தற்போது செலுத்தப்படுகின்ற கேளிக்கைகளின் மீதான வரிகளுக்குப் பதிலாக, ராசி, (கம்பவுண்டு) செய்து கொள்ளவும் இச்சட்ட முன்வடிவில் வகை செய்யப்பட்டுள்ளது.

மேற்சொன்ன செயற்குறிப்புக்குச் செயல் வடிவம் அளிப்பதற்காக தமிழ் நாடு 1974 ஆம் ஆண்டு கேளிக்கைகள் வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவுக்கு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/1974) சட்ட மன்றத்தால் ஒப்புதலளிக்கப்பட்டு, அவைமுன் கொண்டு வரப்பட்டுள்ளது. இப்பிரேரணையை இம்மாமன்றம் ஏற்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு டாக்டர் ஹாண்டே, திரு. கோவை செழியன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. என். கே. பழனிசாமி ஆகியோர் ஒரே மாதிரியான திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதிலே முதலிலே வரக்கூடியதாக இருக்கின்ற டாக்டர் ஹாண்டே அவர்களின் திருத்தம் முன்மொழிவதற்கு அனுமதிக்கப்படுகிறது. மற்றைய திருத்தங்கள் சட்டப் பேரவை விதி 77 (1)-ன்படி அனுமதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே.

டாக்டர் எச். வி. ஹாண்டே : சார் . . . . .

திரு. கோவை செழியன் : நானும் கொடுத்திருக்கிறேன், நான் பேச விரும்புகிறேன் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேசுவது யார் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் திருத்தம் அவர்தான் முன்மொழிய வேண்டும். அவர் முன்மொழியட்டும், பிறகு நீங்கள் வேண்டுமானால் பேசுங்கள்.

DR. H. V. HANDE : Sir, I move the following amendment :—

"That the Tamil Nadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974 (L.A. Bill No. 34 of 1974), be referred to a Select Committee consisting of.........Members of the Assembly (names of Members to be given later )."

The amendment was duly seconded.



1974 ஆகஸ்ட் 28]

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் முன்மொழிந்த திருத்தத்தை நான் வழிமொழிந்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த துணை நிதிநிலை அறிக்கையிலே சில புதிய வரிகளை அறிவித்தார்கள்: அவைகளிலே மிக முக்கியமான ஒன்று சினிமா கொட்டகைகளுக்கு விதித்த வரியாகும். அந்த வரி விதிப்பைக் கேட்டவுடன் ஒரு நாள்கூட விடாமல் எல்லா திரைப்பட கொட்டகைக்காரர்களும் தியேட்டர்களை நடத்தமுடியாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தினாலே தமிழகம் முழுவதும் தியேட்டர்களை எல்லாம் மூடினார்கள். சாதாரணமாக ஒரு தீர்மானம் வருகிறது என்று சொன்னால் அந்தத் தீர்மானத்தை அமல்படுத்துவதற்கு கொஞ்ச நாட்கள் தருவது என்பது பழக்கத்திலே இருக்கிற மரபாகும். ஆனால் இந்த சினிமா கொட்டகைகளைப் பொறுத்தவரையிலும் இது உடனடியாக அமலுக்கு வருகிறது என்று குறிப்பிட்ட காரணத்தினாலே அவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கோ அவர்கள் தங்களுடைய கருத்துக்களை அறிந்துகொள்வதற்கோ நேரம் இல்லாமல் போனதால் அவர்கள் தமிழகம் முழுவதும் தியேட்டர்களை மூடினார்கள். இருந்தாலும் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி தியேட்டர்களை எல்லாம் திறந்துவைத்துவிட்டு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்துப் பேசினார்கள்.

ஆனால், சந்தித்துப் பேசியதற்குப் பின்னால் ஒரு புதிய தீர்மானம் இந்த அவைக்கு வந்திருக்கிறது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலும் புதிதாக வந்த தீர்மானத்தை நாங்கள் முழு எதிர்ப்போடு எதிர்க்கிறோம். எந்த விதமான முறையிலேயும் ஒரு சிறு இடத்திலேயும் ஆதரிக்கின்ற வகையிலேகூட நாங்கள் இல்லை என்பதற்காகத்தான் அப்படிச் சொன்னேன். நீங்கள் அதிக வரியைப் போடலாம், ஆனால் நீங்கள் போட்டிருக்கிற முறை தவறான முறையாகும் என்று முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன், நேற்று அவர்களிடத்திலே நாங்கள் கேட்டுக்கொண்டோம், இந்தத் தீர்மானத்தை செலக்ட் கமிட்டிக்கு விட்டு ஒரு நாள் அவகாசம் கொடுத்தால் போதும், நாங்கள் அதற்குள்ளாக ஒரு ரிப்போர்ட் தந்துவிடுகிறோம், பிறகு அதற்குமேல் நீங்கள் முடிவை எடுக்கலாம் என்று சொன்னோம். முதலமைச்சர் அவர்கள் ஏனோ இந்த விஷயத்திலே பிடிவாதமாக இருக்கிறார்கள். என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இதற்கு முன்னால் நடந்த ஒரு விஷயத்தை நான் இந்த நேரத்திலே உதாரணத்திற்காகச் சொல்ல விரும்புகிறேன். விவசாய வருமான வரி பற்றிய தீர்மானம் இந்தச் சட்ட மன்றத்திலே

வந்த நேரத்தில் இரண்டு கிளாஸ்கள் நிறைவேற்றிய பிறகும்கூட—எதிர்க்கட்சிக்காரர்கள் என்னிடம் கேட்டார்கள். அப்போது நான் ஆளுங்கட்சியிலே இருந்தேன். நான் முதலமைச்சர் அவர்களிடத்திலே சொன்னேன், எதிர்க்கட்சிக்காரர்கள் சொல்வதிலே சில நியாயங்கள் இருக்கின்றன, ஆகவே நாம் ஆலோசனை செய்ய வேண்டுமென்று சொன்னேன்—உடனே அவர்கள் பெருந்தன்மையோடு அதற்கு இணங்கி செலக்ட் கமிட்டிக்கு விடுகிறேன் என்று சொன்னார்கள். அதைத் தமிழகம் பாராட்டியது.

ஆனால், இன்றைக்கு என்னவோ இந்த விஷயத்திலே அவர்கள் ஏன் பிடிவாதமாக இருக்கிறார்கள் என்று புரியவில்லை. நீங்கள் 10 நாட்கள் அவகாசம் கொடுங்கள், ரிப்போர்ட் கொடுத்து விடுகிறோம், உங்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் உங்கள் முடிவுப்படி செய்யுங்கள் என்று எதிர்க்கட்சியிலே பல பேர்கள் சொல்லியும்கூட ஜனநாயகத்திலே நீங்கள் அதைக்கூட செய்யவில்லை என்றால் என்னால் காரணத்தைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்தத் தீர்மானத்தை கேபினட்டிலே இருக்கிற அத்தனை பேர்களும் ஆலோசனை செய்துகொண்டு வந்திருக்கிறார்களா இல்லையா என்பதும் தெரியவில்லை. இதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. சட்டப் பிரச்னை மூலமாக கோர்ட்டிலே இந்தச் சட்டம் அடிபடும் என்ற அளவிலே விதிமுறைகள் இருக்கின்றன. எனக்கு உள்ள கவலையெல்லாம் கோர்ட்டுக்குப்போகிற நிலைமைக்கு வந்துவிடக்கூடாது என்பதுதான். நாங்கள் இங்கே எதிர்த்தாலும்கூட இங்கே சட்டமானதற்குப் பிறகு அதற்கு உரிய மரியாதை இருக்கவேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். கோர்ட்டிலே சில தவறுகள், சில லூப்ஹோல்ஸ் இருக்கின்றன என்று சொல்லி சட்டத்தை அடித்துவிட்டால் பிறகு அது இந்த மன்றத்திற்கு அவமானத்தை ஏற்படுத்துகிற நிகழ்ச்சியாக இருந்துவிடும், அதற்காகத்தான் சொல்கிறேன்.

சௌத் இண்டியன் பிலிம் சேம்பரில் உள்ளவர்கள் ஒத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்றால் அவர்களோடு பேசியது இதில் இல்லை. அவர்கள் ஒத்துக்கொண்டது வெறும் 5 பைசா தான். ஆனால் டிக்கட்டுகளுக்குத் தகுந்த மாதிரி 50 பைசா வரையிலும் ஏற்றலாம் என்று இதிலிருக்கிறது. இந்தியாவிலே உள்ள பல மாநிலங்களிலேயும் இந்தத் தொழில் முன்னுக்கு வரவேண்டுமென்ற முறையிலே பல உதவிகளைச் செய்துவருகிறார்கள். ஒரு படத்திற்கு ஒரு லட்சம், 50 ஆயிரம் ரூபாய் என்ற அளவிற்கு மைசூர் மாநிலத்தில் எவ்வளவோ சலுகைகள் எல்லாம் தருகிறார்கள். நீங்கள் ஓரளவிற்கு சலுகைகளைத் தராவிட்டாலும், இந்தத் தொழில் வாழ்வதா, சாவதா என்ற நிலையிலே இந்தத் தொழிலை அழித்துவிடக்கூடாது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தத் தொழிலைப் பற்றி நன்கு தெரியும். மற்றவர்கள் சினிமாக்காரர்களுக்கு நிறையப் பணம் வருகிறது, நிறையக் கொட்டுகிறது என்று நினைத்தாலும்கூட முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும் அது



உண்மையல்ல என்று. முதலமைச்சர் அவர்களையும் அவர்களுடைய குடும்பத்தையும் வாழவைத்தது, வாழவைத்துக்கொண்டு இருப்பது இந்தத் தொழில்தான் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த பில் பற்றி பேசுங்கள் அதற்கு வெளியேபோய் பேசவேண்டாம்.

திரு. கோவை செழியன் : இந்தத் தொழிலை நல்லமுறையிலே தெரிந்து வைத்திருக்கிறவர்கள் என்பதற்காகச் சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில பேர்களை வாழ வைக்காமல் ஆக்கிவிட்டதும் இந்தத் தொழில்தான்.

திரு. கோவை செழியன் : இப்படியே தீர்மானங்களைக் கொண்டு வந்தால் வாழவைக்க முடியாமல் போவது மட்டுமல்ல, சாகவைத்துவிடும். அப்படி வாழ வைக்காமல் போவதற்கு இந்தச் சட்டங்களும் ஒரு காரணமாகும்.

ஆகவே, இந்தத் தொழிலின் மீது ஏன் இவ்வளவு அவசரப்பட்டு கோபம் கொண்டீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. பொதுவாக இன்றைக்குப் போட்டிருக்கும் இந்தத் தீர்மானத்தின்படி தியேட்டர்காரர்கள் ஒழுங்காக வரி கொடுக்க முடியாது.

அது மட்டுமல்லாமல், முதலமைச்சரவர்கள் சொன்னார்கள், வரி ஏய்க்கப்படுகிறது, 8 கோடி ரூபாய்க்குமேல் வரி ஏய்ப்பதால்தான் இப்படிக் கொண்டுவருகிறோம் என்று கூறினார்கள். வரி ஏய்ப்பு இருப்பதால்தான் புதிய வரிகளைப் போடுகிறோம் என்று சொன்னார்கள். அந்த வாதமும் இதிலே அடிபட்டுப் போகிறது. புதிதாக 50 பைசா போட்டு அந்த வரியும் வரா்மல் போகுமானால் இப்பொழுது 8 கோடி ரூபாய் வரி ஏய்ப்பு என்பது இன்னும் அதிகமாகி 16 கோடி ரூபாய் என்று ஆகும். அதனால் நஷ்டம் அதிகமாகும். எனவே, இதற்கு ஏதாவது மாற்று வழி கண்டுபிடிக்க வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தியேட்டரில் கிராஸ் இன்கம் எவ்வளவு வரும், ஹவுஸ் ஃபுல் ஆனால் எவ்வளவு வரும், ஓடிய பிறகு மொத்தமாக எவ்வளவு வசூலாகும் என்று பார்த்து ஆவரேஜாக 30 பர்சென்டா, 35 பர்சென்டா என்பது பிறகு யோசிக்க வேண்டிய ஒன்றாகும். மொத்தமாக அந்தத் தியேட்டர்கள் தர வேண்டுமென்றால் என்ன நிலைமை இருக்கும் என்பதையும் பார்க்க வேண்டும்.

யாராவது தியேட்டர்களில் பணத்தை வாங்கிக்கொண்டு டிக்கட் இல்லாமல் அனுப்பினால், அதிகமான ஆட்களை விட்டால் என்ன ஆகும் என்ற பிரச்னை எழலாம். பஸ்ஸிலே ஓவர் லோட் ஏற்றினால் ஆங்காங்கே செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் கண்காணிப்

பதைப்போல, தியேட்டர்கள் அதிகமான ஆட்களை விட்டால் இப்பொழுதுள்ள சட்டம் என்ன சொல்கிறதென்றால் தியேட்டரின் லைசென்ஸை கேன்சல் செய்யலாம், எது வேண்டுமானாலும் செய்யலாம். டிக்கட்டில் அதிகமாக ஏற்றுவதால் சாதாரண ஏழை மக்களுக்கு ஒரு பொழுதுபோக்கு சாதனமாக இருக்கும் சினிமாத் தொழில் நசிந்துவிடும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். வில்லேஜ் பஞ்சாயத்துக்களை எடுத்துக் கொண்டால் அங்கே தியேட்டர் கட்டினால் குறைந்தது 5 இலட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. 5 இலட்சம் ரூபாய் போட்டு கட்டும் தியேட்டரிலே 5 நாட்கள் படம் ஓடுகிறது என்று வைத்துக் கொள்வோம். அதே ஊரிலே ஒரு மைல் வித்தியாசத்தில் ஒரு டூரிங் டாக்கீஸ் நடை பெறுகிறது. இரண்டிலும் ஒரே படம் ஓடுகிறது என்று வைத்துக் கொண்டால் 5 நாள் கலெக்‌ஷனிலே தியேட்டரிலே 2,000 ரூபாய் வருகிறது, டூரிங் டாக்கீசிலேயும் 2,000 ரூபாய் வருகிறது.

இப்பொழுதுள்ள புதிய சட்டத்தின்படி பர்மனென்ட் தியேட்டர்காரர்கள் 1,000 ரூபாய் தருகிறார்கள், டூரிங் டாக்கீஸ்காரர்கள் 600 ரூபாய் தருகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை வரும்பொழுது பர்மனென்ட் தியேட்டர்காரர் ப்ரொஜக்டரைப் பிடுங்கிக்கொண்டு போய் டூரிங் டாக்கீஸில் வைத்துவிட்டு தியேட்டர் இருந்த இடத்தில் ரைஸ் மில்லையோ அல்லது மாவு மில்லையோ வைப்பார். புதிதாக தியேட்டர்களைக் கட்டமாட்டார்கள். வட்டிக்கு வட்டியும் போகிறது, 5 இலட்சம் ரூபாய்க்குள்ள வட்டியும் போய் வரியும் அதிகமாகக் கொடுத்துத் தீர வேண்டுமென்றால் தியேட்டர்களைக் கட்ட மாட்டார்கள். ஏற்கெனவே ஃபிலிம் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் வைத்திருக்கிறீர்கள், செமி பெர்மனென்ட் தியேட்டர் கட்டுவதற்குப் பணம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில்லைப் பற்றி மட்டும் பேசுங்கள். இந்த பில்லை வைத்துக்கொண்டு சினிமாத் தொழிலைப் பற்றியெல்லாம் ஆரம்பிக்க வேண்டாம்.

திரு. கோவை செழியன் : தியேட்டர் என்று போட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரி விதிப்பைப் பற்றி மட்டும் பேசுங்கள். எல்லாவற்றையும் பற்றிப் பேச ஆரம்பித்தால் எப்படி ?

திரு. கோவை செழியன் : ரெலவண்டாகத்தான் இருக்கிறது. ஆகவே, பர்மனென்ட் தியேட்டர்காரர்களுக்குத் தண்டனை தருகிறீர்கள். டூரிங் டாக்கீஸ்காரர்களுக்குச் சலுகை தருகிறீர்கள். இதற்குஎன்ன காரணம் என்று பார்த்தால் டூரிங் டாக்கீஸ்காரர்கள் ஒரு அஃசோசியேஷன் வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பலராமன் அவர்கள் துணைத்தலைவராக இருக்கிறார்கள். மற்றவர்களெல்லாம் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் வாதாடியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். வாதாடி வெற்றி பெற்றுவிட்டார்கள். பர்மனென்ட் தியேட்டர்காரர்களுக்குத் தண்டனை வந்திருக்கிறது.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தியேட்டர்காரர்கள் இப்பொழுது நாங்கள் போட்டிருக்கும் இந்தத் திருத்தத்தை, 5 பைசா அதிகமாக்குவதை, இதைத்தான் ஒத்துக்கொண்டு போனார்கள். ஆகவே, அவர்களுடைய ஒப்புதலுக்குப் பிறகு இந்த அவையில் மாண்புமிகு அங்கத்தினர்களின் ஒப்புதலுக்காக வைக்கப்பட்டிருக்கிறது. இதைப்போல, ஷோ டாக்ஸ் போடுவதற்குப் பதிலாக கம்பவுண்டிங் செய்யும் முறையை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டோம். சென்னையிலே இருக்கும் ஒரு ஏ.சி. தியேட்டருக்கு எல்லா வரிகளும் உட்பட 750 ரூபாய் ஒரு காட்சிக்குக் கொடுப்பது என்று போட்டோம். அதைப் போலவே ஒவ்வொரு தியேட்டருக்கும் வரிசைக்கிரமமாக, நான்-ஏ.சி. தியேட்டர், முனிசிபாலிட்டியில் இருக்கும் தியேட்டர், முனிசிபாலிட்டியில் இருக்கும் ஏ.சி. தியேட்டர், ஏ, பி, சி என்று கம்பவுண்டிங் செய்து மொத்தமாக கொடுத்துவிடுவது பற்றிக் கேட்டோம். அவர்கள் ஒரு மணி நேரம் யோசித்துவிட்டு ஒரு கணக்கைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். இப்பொழுது நமக்கு வரும் வரி வசூல் 14 கோடி ரூபாய் என்றால் அவர்கள் போட்ட கணக்குப்படி 11 கோடி ரூபாய்தான் வந்தது. 14 கோடி ரூபாய்க்குப் பதில் அவர்களுடைய அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் 11 கோடி ரூபாய்தானே வருகிறது என்று சொன்னபொழுது, ஆமாம், அப்படித்தான் இருக்கிறதென்று சொன்னார்கள் வேண்டுமானால் கட்டணத்தை ஏற்றிக் கொடுங்கள் என்று சொன்னார்கள். அப்படியே ஏற்றிக் கொடுத்தாலும் இப்பொழுது வசூலிக்கும் 14 கோடி ரூபாய்க்கும் குறைவாகத்தான் வந்தது.

அடுத்தபடியாக, இந்தத் திருத்தத்தின்படி 5 பைசா அதிகப்படுத்தலாம், பிறகு நீங்கள் யோசித்து எவ்வளவு ரூபாய் கொடுக்க முடியும், எவ்வளவு ரூபாய் கொடுத்தால் கட்டுப்படியாகும், வரி ஏய்ப்பைத் தடுக்கும் முறையில் 750 ரூபாய் அல்லது 800 ரூபாய் என்று தரமுடியும் என்று சொல்லுங்கள். பர்சென்டேஜ் போடும் வேலையை டிப்பார்ட்மெண்டிற்கு கொடுத்து விடுங்கள். அதை நீங்கள் போடாதீர்கள், சென்னையிலே உள்ள ஆனந்த் தியேட்டரும், சாதாரண மினர்வா தியேட்டரும் இதுவும் ஏ.சி.யாக இருந்தாலும் ஒன்றாக ஆகாது. எனவே பர்செண்டேஜ் போடும் வேலையை டிபார்ட்மெண்டிற்கு விட்டுவிடுங்கள் என்று சொன்னோம். அவர்கள் நாங்களேதான் போடுவோம் என்று சொன்னார்கள். அதை நாங்கள் ஒத்துக்கொள்ளவில்லை. பிறகு இதை ஒத்துக் கொள்வதாக ஒத்துக்கொண்டு சென்றார்கள். அந்த அடிப்படையில்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : அவர்கள் 5 பைசாவிற்கு ஒத்துக் கொண்டார்கள். ஆனால் நீங்கள் 50 பைசா வரையில் போட்டிருக்கிறீர்கள். இருந்தாலும் முதலமைச்சர் சொல்வதிலுள்ள நியாயத்தை ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் சொல்லும் அந்த யோசனைப்படி மொத்த கலெக்ஷனில் கிராஸ் டோட்டல் இன்கமில் ஒரு பர்செண்டேஜ் போடுவது என்றாலும் ஃபிலிம் சேம்பரில் நானும் ஒரு அங்கத்தினர், உங்களுடைய ஆலோசனையை நான் ஏற்றுக்கொள்கிறேன். இப்பொழுதுகூட மறுபரிசீலனை செய்யலாம். 8 கோடி ரூபாய் ஏமாற்றுகிறார்கள், அது உங்களுக்கு வர வேண்டும் என்றால் அதற்கு ஃபிலிம் சேம்பர் பொறுப்பு எடுத்துக் கொள்ளலாம். தயவு செய்து இதை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் ஏற்கெனவே சொன்ன யோசனையை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். அவர்களையும் ஒத்துக்கொள்ளச் செய்யலாம். ஆனால் அவசரப்பட்டு இதைச் செய்யாதீர்கள், இதை செலக்ட் கமிட்டிக்கு விடுங்கள். நான்கு நாட்களாவது அவகாசம் கொடுங்கள். நிச்சயமாக ஏற்றுக்கொள்கிறோம். அப்படியில்லாமல் ஜனநாயக முறைப்படி மெஜாரிட்டி இருப்பதால் பாஸ் செய்கிறோம் என்று சொன்னால், பிறகு நாங்கள் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இன்று காலையிலேகூட சம்பந்தப்பட்டவர்கள், அன்றைக்கு என்னிடத்தில் பேசிய நண்பர்கள் வந்தார்கள். தியேட்டரை மூடச்சொல்லி அறிக்கை விட்டவர்கள், பிறகு திறந்தவர்கள் வந்து பேசினார்கள். இருக்கின்ற சிக்கலைப்பற்றிச் சொன்னார்கள். நான் சொன்னேன், இது இந்த நேரத்தில் அமலாகட்டும், அதற்கிடையில் நீங்கள் யோசனை செய்து கம்பவுண்டிங் முறையில் கொடுப்பதைப்பற்றிச் சொல்லுங்கள் இதுவும் இருக்கட்டும். டூரிங் டாக்கீஸ்களைப் பற்றி பலராமன் ஒத்துக்கொண்டதாகச் சொன்னீர்களே, அவர்கள் எதை ஒத்துக்கொண்டார்கள்? இந்த வரி இல்லாவிட்டால் அந்த கம்பவுண்டிங் முறைப்படி 30 ரூபாய் கொடுப்பது என்று ஒத்துக் கொண்டார்கள். ஆகவே, இந்த வரியைப்பற்றிச் சொன்ன நேரத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டு, இது அமலில் உள்ள நேரத்தில் வேறு ஒரு மாற்று யோசனை தந்தால் ஆப்ஷனலாக, இதுவா அதுவா என்று நிர்ணயித்துக் கொள்ளலாம்.

திரு. கோவை செழியன் : நான் ஒரு கருத்தைச் சொல்கிறேன். இதை ஏன் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று சொல்கிறேன் என்றால், இப்பொழுது தீர்மானம் போட்டு நிறைவேற்றிவிட்டு பத்து நாட்களுக்குப் பிறகு அதை மாற்றினால் அரசாங்கத்திற்கு . . .



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. அப்படியே இருக்கலாம். அவர்களது மாற்று யோசனைப்படி இதே அளவிற்கு நமக்குக் குறையாத வகையில், வரி ஏய்ப்பிற்கு இடமில்லாமல் இருந்தால் அதையும் ஏற்றுக்கொள்வோம். ஆப்ஷனுக்கு விட்டு இரண்டில் ஒன்றை ஏற்றுக்கொள்ளச் செய்யலாம்.

திரு. கோவை செழியன் : அதற்காக ஒரு ஐந்து நாள் டைம் கொடுங்களேன். ரிப்போர்ட் கொடுத்து விடுகிறோம். நீங்கள் டூரிங் டாக்கீஸ்களுக்கு ஒரு முறையைக் கொண்டு வந்திருக்கிறீர்கள், இதேபோன்ற சலுகையைத் தியேட்டர்களுக்கும் கொண்டு வாருங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அதைத்தான் மீண்டும் சொல்கிறேன். இதே வரிதான் டூரிங் டாக்கீசிற்கும் இப்பொழுது இருக்கிறது. இப்பொழுது போடும் இதே வரியைத் தான் டூரிங் டாக்கீசும் செலுத்த வேண்டும். ஆனால் அவர்கள் இதற்குப் பதிலாக வேறு முறையை மேற்கொள்வதாகக் கூறி இருக்கிறார்கள். இதேபோல் தியேட்டர்காரர்களும் வேறு முறையைக் கையாள்வதாகச்சொல்லி, அது நமக்குப் பொருத்தமாக இருந்தால், வருவாயாகக் கிடைக்க வேண்டிய பணம் ஒழுங்காகக் கிடைக்குமானால், ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். எனவே இந்த வரி அப்படியே இருக்கலாம், அவர்கள் நாம் ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு வேறு முறையைச் சொன்னால் அதையும் ஏற்றுக்கொள்ளலாம்.

(முற்பகல் 9·30).

திரு. கோவை செழியன் : முதலமைச்சர் அவர்கள் அதைச் சொல்லுகிறார்கள். செலக்ட் கமிட்டி போட்டு டூரிங் டாக்கீசுக்குச் செய்வது போல் இதற்கும் செய்வதற்கு நான்கு நாள் டைம் கொடுத்தால் நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : செலக்ட் கமிட்டிக்குச் செல்லாமலே ஒத்துக் கொள்கிறேன் என்று சொன்ன பிறகு எதற்காக செலக்ட் கமிட்டி? நான்தான் ஒத்துக்கொள்கிறேனே.

திரு. கோவை செழியன் : பின்னாலே ஆர்டினன்ஸாகக் கூடக் கொண்டு வரலாம். இப்போதே சட்டசபையிலே நிறைவேற்றி விடவேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, கொஞ்சம் டைம் கொடுக்கும் வகையில் இதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

[1974 ஆகஸ்ட் 28

(4) நடைமுறைக் கேள்விகள்.

அவையின் முன் சில வரிப் பிரேரணைகள் இருக்கும்பொழுது, அதில் சம்பந்தப்பட்டவர்களுடன் முதலமைச்சர் பேசி முடிவெடுப்பது குறித்து.

திரு. செ. அரங்கநாயகம் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் சட்டப்பேரவையின் முன்னால் சில வரிப் பிரேரணைகளை அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். ஆனால் எதிர்க் கட்சியில் இருக்கும் நாங்கள் முழுமையாக விவாதத்தில் கலந்து கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய திட்டத்தை ஏற்றுக் கொண்ட பிறகு அந்த வரிப் பிரேரணையை இங்கு வைத்திருக்கிறார்கள். நாங்கள் இதை எதிர்க்கின்ற நேரத்தில் முதலமைச்சர் அவர்கள் ' அவர்கள் ஒப்புக்கொண்டு போய்விட்டார்கள் ' என்று சொல்லுகிறார்கள். நான் குறிப்பிடுவது மன்றத்தில் ஒரு பிரச்னை இருக்கும்போது வெளியே சில பேரைக்கூட்டி அவர்கள் முன்னால் வைத்து முடிவு கட்டுவது எதிர்க்கட்சிகள் பொறுப்பாகக் காரிய மாற்ற முடியாத நிலைமையை உருவாக்கி இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இதுபோன்ற நிலைமைகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது என்பதற்காக இந்த ஒழுங்குப் பிரச்னையில் நல்ல தீர்ப்பு தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தியேட்டர்காரர்களையும், தயாரிப்பாளர்களையும், விநியோகஸ்தர்களையும் கூப்பிட்டுப் பேசினீர்களா என்று கேட்டார்கள். எல்லோரையும் கூப்பிட்டுப் பேசவேண்டுமென்று சொல்லிவிட்டு பேசியது தவறு என்று சொல்லுவது வேடிக்கையாக இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம் : நான் சொல்லியதை முதலமைச்சர் அவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்று கருதுகிறேன். பேசியது தவறு என்று சொல்லவில்லை. 25 ஆண்டுகளாக பாராளுமன்ற ஜனநாயகம் செயல்பட்டு வருகிறது. எவ்வளவோ நிதியமைச்சர்களைப் பார்த்திருக்கிறோம். எவ்வளவோ முறையீடுகள் வந்திருக்கின்றன. ஆனால், அதுபற்றிய பிரேரணை இங்கு வந்திருக்கின்ற நிலையில் இந்த மன்றத்தில் முடிவு எடுக்காமல் சம்பந்தப்பட்டவர்களைச் சந்தித்து முடிவு எடுத்ததை இன்றுதான் முதல் முறையாகப் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே போய் ஒன்றும் முடிவு எடுக்கவில்லை. இந்த மன்றத்திலேதான் முடிவு எடுக்கப் போகிறோம். இதிலே எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.



1974 ஆகஸ்ட் 28] [திருமதி. த. ந. அனந்தநாயகி]

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(அ) தமிழ் நாடு, 1974-ம் ஆண்டு, கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 34/74.)

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, இந்தக் கேளிக்கை வரித் திருத்தச் சட்டத்திலே பல மாறுதல்களை எல்லாம் இந்த அரசாங்கம் இன்று கொண்டு வந்திருக்கிறது. கனம் முதலமைச்சர் அவர்கள் ' எல்லாவற்றையும் ஒப்புக் கொண்டு போயிருக்கிறார்கள்' என்று சொன்னார்கள். உங்களுடைய கொள்கைகளில் என்றைக்குமே நிரந்தரம் இல்லாமல் இருக்கிறீர்கள் என்று இந்த வரியைப் போடும்போதே சொன்னேன். வரி போடும் போது 100 ரூபாய், 150 ரூபாய் என்று தீவிர நோக்குடன் போடவில்லை , அவர்களை எல்லாம் வரவழைத்து என்ன காரியங்களைச் சாதிக்க வேண்டுமென்று நினைத்தார்களோ, அப்படிச் சாதிக்கத் தான் எக்கச்சக்கமாக முதலிலே போட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இது பத்திரிகையில் வரும்போது தவறாகப் படும். அவர்களை அழைத்துப் பேசி என்ன காரியங்களைச் சாதித்துக் கொள்ளவேண்டுமோ, அவற்றைச் சாதித்துக் கொள்ளப் போட்டதாகச் சொன்னார்கள். டில்லியில் கூட வரி போடும்போது சம்பந்தப்பட்டவர்களைக் கூப்பிட்டுப் பேசுகிறார்கள். அவர்கள் என்ன காரியங்களைச் சாதிக்கிறார்கள் ? நாம் என்ன காரியங்களைச் சாதிக்கிறோம் ?

திருமதி த. ந. அனந்தநாயகி : எப்படியாவது இந்த 54 கோடி ரூபாய் வரிப் பணத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொன்னேன். ஏன் தவறாக எடுத்துக் கொள்ள வேண்டும். நல்ல எண்ணத்துடன் சொல்லுகிறேன்.

அரசாங்கம் இப்படி வியாபாரத் துறையில் சில வரிகளைப் போடும்போது நியாயமான முறையில் போட்டால் வரவேற்கத் தக்கது. 12½ ரூபாயாக இருந்ததை 150 என்று கூட்டி 1200 மடங்கு இப்படி வரி போடும் கொள்கையை அரசாங்கம் வைத்துக் கொள்ளலாமா என்ற அடிப்படையிலேயே நான் கேட்க ஆசைப் படுகிறேன். போடுகின்ற வரி நியாயமாக இருக்கவேண்டும். 12-ஐ 20 ஆக்கலாம் ; 20-ஐ 30 ஆக்கலாம். 30-ஐ 40 ஆக்கலாம். 12½ ரூபாயாக இருந்ததை 150 ரூபாயாகவா ஆக்குவது ?

திரு. நா. வீராசாமி : 12½ ரூபாயாக இருந்ததை 150 ரூபாய் என்று ஆக்கியது 1200 மடங்கு என்று சொல்லுகிறார்கள். அது எப்படி 1200 மடங்கு ஆகும் ?

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் பர்சன்டேஜ் கணக்குச் சொல்லுகிறேன். 100 பாசன்ட் என்று கணக்கு வைத்துக் கொண்டால் இப்போது 1200 சதவிகிதம் ஆகும். உங்களுக்குக்

கணக்குத் தெரியவில்லை என்றால் நான் என்ன செய்வது? ஆகவே, 12 மடங்கு உயர்த்தியது நியாயம் அல்ல. ஆகவேதான் அந்தத் தொழிலிலே இருப்பவர்கள் உடனே தியேட்டரை மூடிவிட்டார்கள். ஓட்டினால் மறுநாளே வரி அமலுக்கு வருகிறது. எப்படி வரியைக் கட்டுவது என்ற காரணத்தால் உடனே மூடிவிட்டார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காட்சி வரி தினந்தோறும் வசூலிப்பதில்லை. வாரா வாரந்தான் வசூலிக்கப்படுகிறது. ஓட்டிவிட்டுக் கூட பேசியிருக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஓட்டினால் காட்சிக்கு வரி கொடுத்தாகவேண்டுமே . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேசி முடிவு செய்துவிட்டால் கட்டிய தொகையைக் கூட அட்ஜஸ்ட் செய்து கொள்ளலாம். அந்த முறைகள் எல்லாம் இருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: அவர்கள் புத்திசாலித்தனமாக இதிலே மாட்டிக் கொள்ளக்கூடாது என்று மூடிவிட்டார்கள். நியாயமான முறையில் வரி போட்டால் நியாயமான முறையில் கட்டுவார்கள். இப்போது நீங்கள் போடுகின்ற என்டர்டெயின்மென்ட் டாக்ஸ், ஷோ டாக்ஸ் எல்லாம் கொடுத்து தொழிலில் லாபம் சம்பாதிக்க முடியுமா? இது கனம் முதலமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். அவருக்குத் தெரியாத ரகசியம் என்ன? கத்தரிக்காய் முத்திரை போட்டு வரியை எவேட் பண்ணுகிறார்கள். எல்லோருக்கும் தெரியும். இந்தத் தொழிலில் நீங்கள் போடுகின்ற வரி நியாயமான முறையில் இருந்தால்வரி ஏய்ப்பு இல்லாமல் இருக்கும்; புத்திசாலித்தனமான காரியமாக இருக்கும்.

இன்றைக்குக்கூட டிக்கட்டுக்கு 5 பைசா, 10 பைசா ஏற்றுவதாகச் சொல்லுகிறார்கள். இந்து பத்திரிகையில் நேற்று லெட்டர்ஸ் டு தி எடிட்டரில் ஒரு கடிதம் வந்தது. நீங்கள் வரியைப் பொதுமக்கள் தலையில் போடுகிறீர்கள். பொதுமக்களும் 5 பைசா, 10 பைசாவை ஒழுங்காகக் கொடுத்து வருகிறார்கள். ஆனால் அந்தப் பணம் அரசாங்கத்திற்கு வந்து சேருகிறதா? இந்தக் கேள்விக்கு உங்களால் பதில் சொல்ல முடியுமா? வங்க தேச நெருக்கடி வந்தபோது மத்திய அரசாங்கத்திலே வரியை ஏற்றினார்கள்; நீங்களும் ஏற்றினீர்கள். நெருக்கடி தீர்ந்த பிறகு மத்திய அரசு வரியை ரத்து செய்தார்கள். நீங்கள் மத்திய அரசைப்போல் வாபஸ் வாங்காமல் வருமானம் தேவை என்று சொல்லி அப்படியே வைத்துக் கொண்டார்கள். இப்போதும் டிக்கட்டுக்கு மேல் 10 பைசா, 15 பைசா என்று கிரேடேஷன் போட்டு ஏற்றியிருக்கிறீர்கள். இந்தவரி உங்களுக்கு வருகிறதா? வருவது கிடையாது. ஆகவே, இந்த முறையை மாற்றி பஸ்ஸில் சீட்டுக்கு வரி விதிப்பது போல் ஒவ்வொரு தியேட்டரின் கெபாசிடி



என்ன என்று பார்த்து நியாயமான அளவுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை வரியாகச் செலுத்த வேண்டுமென்று சொன்னால், ஒழுங்காக வசூலாகும். அப்படிச் செய்தால் டி.சி.டி.ஓ. வேண்டாம். டி.சி.ஆர். போட வேண்டாம். இன்றைக்கு இருக்கக்கூடிய வரி விதிப்புக் கொள்கையை இந்த முறையில் மாற்றியமைக்கலாம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கெபாசிடியைப் பொறுத்து பஸ்ஸில் போடுவது போல் தியேட்டருக்குப் போடுவதில் ஒரு சங்கடம் இருக்கிறது. சட்டச் சிக்கல் இருக்கிறது. இந்த வரி கேளிக்கை வரி—என்டர்டெய்ன்மென்ட் வரி; அனுபவிக்கக்கூடியவர்கள் தரக்கூடிய ஷோ டாக்ஸ் என்று இருப்பதால் வேறு முறையில் போட்டால் கோர்ட்டுக்குப் போனால் நிற்காது. ஆகவேதான் இந்த வரியும் இருக்க வேண்டும்; கெபாசிடியை வைத்து கம்பவுண்டிங் செய்து மொத்தத் தொகையாகக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்ற முறையில் இரண்டு முறையும் இருக்கலாம் என்று செய்து தியேட்டர்காரர்களுக்கு ஆப்ஷன் கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறோம். அவர்கள் பரிசீலித்துச் சொல்லுகிறோம் என்று கூறியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இரண்டாவது வரி, டூரிங் தியேட்டர்ஸ்க்கு வைத்திருக்கிறீர்கள். பெர்மனென்ட் தியேட்டர்களையும் சேர்த்துக்கொள்வதுதானே. அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்று இல்லை. நீங்களே யோசித்துச் செய்யலாமே. பஞ்சாயத்துக்களில் போட்டிருக்கிறீர்கள். டூரிங் தியேட்டர்களுக்கு ரூ. 25, ரூ. 40 என்று போட்டிருக்கிறீர்கள். பஞ்சாயத்துக்களில் டூரிங், பெர்மனென்ட் தியேட்டர்கள் இரண்டும் இருக்கின்றன. ஒன்றுக்கு ரூ. 40 என்று போடப்படுகிறது, ஆனால் பெர்மனென்ட் தியேட்டர்களுக்கு இல்லை என்று சொன்னால் அது டிஸ்க்ரிமினேஷன் தானே.

Both touring and permanent theatres should be treated alike.

இப்போது வரிவிதிப்பை அதிகமாக்கியிருக்கிறீர்கள். 20, 30, 40 என்று மொத்தமாகக் கட்டிவிடு என்று—நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். எவ்வளவு குறைவாக அதிகாரிகளுக்கு வேலை கொடுக்க வேணடுமோ, அப்படிக் கொடுக்க வேண்டும் இதில். இப்போது பாண்டிச்சேரியை எடுத்துக் கொண்டால், அங்கு கப்பாஸிட்டியை வைத்துத்தான் போடுகிறார்கள். அங்கு அதனால் யாரும் கோர்ட்டுக்குப் போகவில்லை. ஆகவே மொத்தமாக நீங்கள் இவ்வளவு, இவ்வளவு தரவேண்டும் என்று மொத்தயாக வசூல் செய்வதுதான் அல்லது வரிவிதிப்பதுதான் இந்தத் துறைக்கு லாபத்தைக் கொண்டு வந்து தரும். இல்லை என்றால் சம்பாதிப்பதை எப்படி ஏய்ப்பது என்ற கலையைக் கற்றுக்கொள்ளும் அளவிற்குத்தான் அவர்களைத் தள்ளுகிறீர்கள். இல்லையென்றால் வரி கொடுக்கும் ஒரு சூழ்நிலை அங்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். பலராமன்: அம்மையார் அவர்கள் கேளிக்கை வரி விதிப்பது தவறு என்று சொன்னார்கள். சர்க்கார் சொன்னதை ஏற்றுக்கொள்ள வேண்டும். தியேட்டர் முதலாளிகள் சர்க்கார் சொன்னதை ஏற்றுக்கொள்ளவில்லை. பாண்டிச்சேரிபற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கு பாண்டிச்சேரியில் நூறு திரை அரங்கங்கள்தான் இருக்கின்றன. தமிழ்நாட்டில் 1,400 திரை அரங்கங்கள் இருக்கின்றன. திரை அரங்கங்களில் தவறு செய்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் கற்பனையில் தவறுதலாகச் சொல்கிறார்கள். யோக்கியன் யார், யார் யோக்கியன் இல்லை என்று சர்க்கார் கண்டு பிடிக்க சங்கடமாயிருக்கிறது. திரு. செழியன் அவர்களும் ஏதோ கற்பனையில் சொல்கிறார்கள். நாங்கள் கம்பௌண்டிங்க் முறைக்கு சரி என்று முதல்வரிடம் கூறியிருக்கிறோம். டூரிங் தியேட்டர்கள் வைத்திருப்பவர்கள் பெரிய முதலாளிகளாக இல்லை. தியேட்டர் வைத்திருப்பவர்கள்தான் லாபம் அடைந்து மேலும் நான்கு தியேட்டர்கள் கட்டுகிறார்கள். டூரிங் கொட்டகைக்காரன் வீடு வாசலை விற்றுக் கொண்டிருக்கிறான்.

திரு. சி. கணேசன்: துணை மானியக் கோரிக்கைமீது அம்மையார் அவர்கள் பேசும்போது டூரிங் சினிமாக்காரர்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேசினார்கள். முதல் அமைச்சர் அவர்கள் திருவாரூர் பக்கத்தில் போனால் எப்படி வசூலாகும் என்று சொன்னார்கள். இன்று அம்மையார் அவர்கள் முழுக்க முழுக்க தியேட்டர்காரர்களுக்கு வக்காலத்து வாங்கி பேசுகிறார்கள். இந்த இடையில் ஏற்பட்ட மாறுதலுக்குக் காரணம் என்ன?

திருமதி த. ந. அனந்தநாயகி: இட் ஈஸ் ஆன் இன்ஸினுவேஷன். வக்காலத்து வாங்கவேண்டியது எங்கு வாங்க வேண்டுமென்று எனக்குத் தெரியும். உங்களுக்குத்தான் எங்கே வக்காலத்து வாங்குவது என்று தெரியவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: தலைவர் அவர்களே, இந்த சப்ளிமென்டரி பட்ஜெட்டைச் சமர்ப்பிக்கும்போது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சினிமாத் துறையில் ஏராளமான கள்ளப்பணம் இருக்கிறது என்று. அதை வெளியே கொண்டுவரக்கூடிய முறையில் வரி போடுகிறோம் என்று சொன்னார்கள். ரூ. 25 கோடி வரவேண்டும், ஆனால் அதற்குப் பதிலாக ரூ. 14 கோடிதான் வருகிறது, 11 கோடி ரூபாய் வரி ஏமாற்றுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆகவே இந்த வரி ஏமாற்றுவதைத் தடுக்க ஒரு புதிய முறையில் வரியை அதிகரிக்கப் போகிறோம் என்ற முறையில் அவர்கள் சொன்னார்கள்.

சர்சார்ஜை அதிகப்படுத்துவதாக முதலில் இந்த மசோதா கொண்டுவரப்பட்டது. இப்போது அதை மாற்றியமைத்து ஷோ டாக்ஸை உயர்த்தியிருக்கிறார்கள். கள்ளப் பணத்தை வெளியே கொண்டுவருகிற முறையா இது என்பது சந்தேகமாகயிருக்கிறது.





ஒவ்வொரு தியேட்டரை எடுத்துக் கொண்டாலும் நாள் ஒன்றுக்கு ரூ. 6,000 வரையில் லாபம் வருகிறது. தியேட்டர்களில் அவர்களாகவே எந்தவிதமான வரியும் இல்லாமல் டிக்கட்களை அவர்களே அச்சடித்து ப்ளாக் மார்க்கெட்டில் விற்கிறார்கள். இந்த முறையிலும் ஏமாற்றம் இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பது யார்? கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர்கள். ஆனால் அவர்கள் ஒரு ஷோவிற்கு 25 பேர்களுடன் போய் உட்கார்ந்து விடுகிறார்கள். அப்படியிருக்கும்போது இந்த வரி ஏய்ப்பை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? ஒன்றிரண்டு பணக்காரர்கள் சொல்வதைக்கேட்டு இந்த முறையில் மக்களிடமிருந்து அதிகமாகப் பணம் வசூல் செய்வது என்ற முறை சரியானதல்ல.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன். தேவி பாரடைஸ் இருக்கிறது, நான்கு தியேட்டர்கள் ஒரே கட்டடத்தில். எவ்வளவு வருமானம் வருகிறது என்று தெரியாது. அதைக் கட்டுவதற்கு பணம் எங்கேயிருந்து வந்தது என்று சொல்லமுடியாது. சுற்றுப்புற பில்டிங்ஸை வாடகைக்கு விட்டு வாரத்திற்கு ரூ. 18,000 வருகிறது. மத்திய அரசு வருமான வரிக்குக் கணக்கு காண்பிப்பது ரூ. 3,000 என்றுதான். டிக்கட் விற்பனையில் ஏமாற்றுகிறார்கள். அந்த முதலாளிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். சாதாரணப் படம் எடுக்கக் கூடியவர்கள் இந்தத் தியேட்டர்களில் காண்பிக்க முடியாது. ரூ. 20,000, ரூ. 30,000 என்று உள் ஏலம் இருக்கிறது.

இப்படி ரொம்ப மோசமான முறையில் தியேட்டர் நிர்வாகம் இருக்கிறது. ஏன் அவர்கள் பேரில் அதிக வரி போடக்கூடாது? ஒரு படம் எடுப்பதற்கு ஒரு ப்ரொட்யூஸருக்கு அறுபது அல்லது எழுபது லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இந்தப் பணம் எப்படி வருகிறது? பூராவும் கள்ளப் பணம். இந்தக் கள்ளப் பணத்தை எப்படி வெளியே கொண்டுவருவது? தியேட்டர்கள் மீது அதிக வரி போட முடியாதா? முடியும். ஏன் பயப்படுகிறீர்கள்? தைரியமாகப் போடவேண்டும். அவர்கள் அதிகமாக பணம் சம்பாதிக்கும்போது மக்கள் அதிகமாக வரி கொடுக்க வேண்டுமா அது அவசியந்தானா என்பதை யோசிக்க வேண்டும். ஆகவே முதலில் போட்டதுமாதிரி மக்கள் மீது அதிக வரி போடாமல் சர்சார்ஜ் வசூல் செய்வதுதான் சாலச் சிறந்தது. மக்கள் மீது அதிகப் பணத்திற்கு வரி வசூல் செய்வது சரியல்ல.

ஏற்கனவே ஷோ டாக்ஸை சரியாக வசூல் செய்ய முடியவில்லை. நகரப்புரங்கள் அல்லது பஞ்சாயத்துக்களை எடுத்துக் கொண்டால் இந்த ஷோ டாக்ஸை ஒழுங்கான முறையில் வசூல் செய்வது கிடையாது. கமர்ஷியல் டாக்ஸ் ஆபீஸர்கள்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாக்கி உள்ளவர்களால் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்க முடியாது. மற்றவர்களுக்கு அதிகாரம் கிடையாது. ஆகவே வரி வசூல் செய்யும் முறையை மாற்றியமைத்து யார் யாருக்கு அதிகாரம் கொடுக்கவேண்டுமோ, அந்த முறையில் மாற்றியமைக்க வேண்டும்.

தியேட்டர்களை எல்லாம் சர்க்கார் எடுத்துக்கொண்டால் என்ன என்ற ஒரு கருத்து இருக்கிறது. பத்திரிகைகளுக்கு, சினிமாக்களுக்கு எல்லாம் சுதந்திரம் கொடுக்க வேண்டும் என்று கருத்து சொல்லலாம். சர்க்காருக்கு ஒரு பொறுப்பு இருக்கிறது. சினிமாவில் உள்ள முறைகளை முறைப்படுத்த வேண்டும். இன்று வரும் படங்கள் செக்ஸ் அடிப்படையில் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பில்லைப் பற்றி மட்டும் பேசுங்கள். சினிமாத் தொழிலுக்குப் போனால் டிஸ்கஷன் முடியாது. சினிமாத் தொழிலுக்கே போய்விடுகிறீர்களே.

திரு. என். கே. பழனிசாமி : தியேட்டர்களைச் சர்க்கார் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு கருத்து இருக்கிறது. கீழ்த்தரமான படங்கள் வருகின்றன. நடிகர்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. சாதாரணமாக, நடிகர்களில் ரொம்ப மோசமான நடிகர்கள் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நடிகர்கள், தியேட்டர் முதலாளிகளைப்பற்றி பேச வேண்டியதில்லை. பில்லைப் பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. என். கே. பழனிசாமி : எனவே ப்ரொட்யூஸருக்கு இவ்வளவு பங்கு, தியேட்டர்காரர்களுக்கு இவ்வளவு பங்கு என்று போட்டு, இவ்வளவு சதவிகிதம் என்று போட்டு சர்க்கார் வசூல் செய்யவேண்டும். முன்பு இருந்தமாதிரி செய்யலாம். நடிகர்களில் இரண்டுவிதமான நடிகர்கள் இருக்கிறார்கள். ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்ஸ், சக நடிகர்கள் . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் பற்றியெல்லாம் பேசவேண்டியதில்லை. இந்த நேரத்தில் அது தேவையில்லை. நடிகர்கள் பற்றி இங்கு பேச வேண்டாம்.

திரு. என். கே. பழனிசாமி : அந்தச் சக நடிகர்களுக்கு ட்ரேட் யூனியன் ரைட்ஸ் வந்திருக்கிறது. அவர்களது தொழிற்சங்க உரிமையைப் பாதுகாக்கும் முறையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நான் இந்த மசோதாவின் மீது ஒரு திருத்தத்தைக் கொடுத்து இருக்கிறேன். இந்த மசோதாவானது பொறுக்குக் கமிட்டிக்குப் போய் மீண்டும் இந்த அவைக்கு வரும் என்று சொன்னால் நிச்சயமாக பல குறைபாடுகள் நீங்குவதற்கு வாய்ப்பு இருக்கும். ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் துணை மானியத்தை இந்த மன்றத்தில் வைத்தபோது ஒரு திரைப்படக் காட்சிக்கு 12 ரூபாயாக இருப்பதற்குப் பதில் அதை ரூ. 150 ஆக உயர்த்தி இருக்கிறோம் என்ற முறையை எடுத்துக் கூறினார்கள். அதனால் பாதிக்கப்பட்ட திரைப்படமுதலாளிகள் அன்றைய தினம் திரைப்பட அரங்குகளை இழுத்து





மூடிவிட்டார்கள். அதற்குப் பிறகு அவர்களையெல்லாம் அழைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசி, ஏதோ அவர்களிடத்தில் ஒரு உடன்பாடு ஏற்பட்டாலும், இன்னும் அந்த கம்பௌண்டிங் முறையை எந்த அளவுக்கு அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்று முடிவு செய்யவில்லை. அதையும் ஆலோசித்துச் சொல்லுங்கள் என்று அவர்களிடத்தில் கூறியதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

ஆகவே, ஆரம்பத்திலிருந்து இதுவரையிலும் இந்த மசோதாவானது எந்த ஷேப்பில் இருக்க வேண்டும், எந்த முடிவில் இருக்க வேண்டும் என்று அரசாங்கம் ஒரு நிலையான கொள்கையை ஏற்கவில்லை. இந்த நிலையில் இந்த மசோதா இந்த மன்றத்தில் நிறைவேற்றப்படுவதைவிட, இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு விட்டு, அதில் இருக்கும் குறைபாடுகள் என்ன என்று ஆராய்ந்து, அதன் மீது திரைப்பட முதலாளிகள், பொதுமக்கள் ஆகியவர்களின் கருத்தை அறிந்து நிறைவேற்றப்படுமானால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இதுவரையில் அரசோடு தொடர்பு கொண்டது, திரைப்பட முதலாளிகள்தான். இந்த முடிவால் பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள் மட்டுமல்ல. பொதுமக்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அன்று திரைப்படக் காட்சிவரியை உயர்த்துகிறோம் என்று சொல்லி, பிறகு, முதலாளிகளுக்கும், அரசுக்கும் இடையே ஏற்பட்டு இருக்கும் உடன்பாடு என்ன என்று சொன்னால், அதை மாற்றி கேளிக்கை வரி 5 காசு என்று இருப்பதை 10 காசு என்று மாற்றவேண்டும். இதை இருவரும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். முதலாளிகள் எப்படி கேளிக்கை வரியை ஒப்புக்கொள்வது ஏற்றுக் கொள்வது. பொது மக்களைக் கேட்டு அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தால், ஒருவேளை அதை ஒப்புக்கொள்ளலாம். முதலாளிகள் கூடி மக்களிடத்தில் இருந்து நாங்கள் வசூலித்துக் கொடுக்கிறோம் என்று சொன்னால் நிச்சயமாக அது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள். கேளிக்கை வரி ஏறத்தாழ 25 கோடி வசூலிப்பதற்குப் பதிலாக, ரூ. 12 கோடிதான் வசூலாகிறது. ரூ. 13 கோடி ஏய்ப்பு ஏற்படுகிறது என்று கூறினார்கள். பொதுமக்களிடமிருந்து வசூலித்த வரியை முதலாளிகளிடத்தில் இருந்து வசூலிப்பதற்குப் இந்த அரசாங்கத்திற்கு சக்தி இல்லை என்று கூறுகிறபோது இன்னும் அதிகமான வரியை பொதுமக்களிடமிருந்து வசூலியுங்கள் என்று முதலாளிகளுக்கு இந்த மசோதாவின் மூலம் அனுமதி கொடுப்பது நிச்சயமாக ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் நாம் 5 பைசா என்று இருப்பதை 10 பைசா என்று உயர்த்தி இருக்கிறோம். இப்போது ஒரு டிக்கெட் ரூ. 2.70 காசுக்கு விற்கிறது என்று சொன்னால், ரூ. 40,

ரூ. 50 என்று கொடுத்து டிக்கெட் வாங்கும் நிலை இருக்கிறது. ஒருவேளை ஏழை மக்கள் இதனுல் பாதிக்கப்படுகிருர்கள் என்று சொன்னுலும்கூட, இதனுல் பயன் அடைகிறவர்கள் யார், முதலாளிகள், சினிமா நடத்துபவர்கள்தான். அவர்கள் பொது மக்களிடமிருந்து வரியை வசூலித்துவிட்டு, அரசாங்கத்திற்கு வரி ஏய்ப்புச் செய்கிருர்கள். அதைக் கண்டுபிடித்து கட்டாய வசூல் செய்வதற்குப் பதிலாக, வக்கற்ற ஏழைகள் மீது இந்த வரியைச் சுமத்துவது நிச்சயமாக ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

பெரிய நடிகர்கள் பிளாக் மணி வாங்குவதாக இன்றைக்குக் கூறுகிருர்கள். இந்த பிளாக் மணி எங்கே இருக்கிறது? எந்த அளவுக்கு இருக்கிறது என்று பார்க்கவேண்டும். அதைக் கண்டு பிடித்து வெளிக் கொண்டுவருவதற்கு சக்தி இல்லாமல், அந்தச் சூழ்நிலையை மாற்றிக் கொள்ள சக்தி இல்லாமல், இப்படி மீண்டும் மீண்டும் ஏழைகளைத் தாக்குவது என்ற சூழ்நிலை வருகிறது என்று சொன்னுல் அதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே, பொதுமக்களையும், திரைப்பட முதலாளிகளையும் சந்தித்து எந்த அளவுக்கு வரி சுமத்தப் படவேண்டுமென்று அறிந்து முடிவுக்கு வந்தால், அது கருத்துள்ள மசோதாவாக இருக்கும். ஆகவே, இதைப் பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று மொத்தம் நமக்கு 6 பில்கள் இருக்கின்றன. நேரம் வைத்துக் கொண்டு செய்தால் நல்லதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டிருக்கும் வரிவிதிப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன்.

அதற்கு முக்கியமான காரணம், இந்த வரிகளெல்லாம் உன்னதமான காரியங்களுக்குகாக கொண்டுவரப்படுகிறது என்பது மட்டும் அடிப்படை அல்ல. இன்றையதினம் கேளிக்கை வரி, காட்சி வரி அதிகமாக்குவதால் ஏதோ மக்கள் சமுதாயத்திற்கே கேடு வந்துவிட்டதுபோல் பேசிக்கொண்டிருக்கிருர்கள்.

திருமதி அனந்தநாயகி அம்மையார் பேசும்போது சொன்ஞர்கள், இந்த வரியை 12 மடங்கு அதிகப்படுத்தியிருக்கிறீர்கள், அநியாயம் அல்லவா என்று கேட்டார்கள். பெட்ரோலுக்கு 15 மடங்கு, ரயில்வே கட்டணத்திற்கு 25 மடங்கு (குறுக்கீடு) 25 சத விகிதம் என்று மத்திய அரசு தூக்கிப் போட்டுக்கொண்டிருக் கிருர்கள், அங்கே நடக்கிறது இப்படியெல்லாம், அதைப் பார்த் துக்கொண்டிருக்கிருர்கள். ஆனுல் இந்தத் தமிழக சட்ட மன்றத் தில் போடப்படுகிறது என்று சொன்னுல் பரிதாபப்பட்டுப் பேசிக்கொண்டிருக்கிருர்கள்.



மாண்புமிகு கோவை செழியன் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் குடும்பம் இதனுல் பிழைப்பது போல் சொன்ஞர்கள். அப்படி அவர்கள் சொன்னதுபோல் நடக்கிறது என்று வைத்துக் கொண்டாலும், அவர்கள் வாழ்க்கையை பாதித்தாலும் பரவாயில்லை, நாட்டு மக்களுக்கு நன்மை ஏற்பட வேண்டுமென்ற அடிப்படையில் இதைக்கொண்டு வருவதைப் பார்க்கும்போது, முதலமைச்சரின் நல்லெண்ணத்திற்காக நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இன்றைய தினம் சினிமாக் காட்சி ஒன்றுக்கு ரூ. 150 என்று விதித்து இருந்ததை ஏன் ரூ. 27·50 என்று குறைத்து இருக் கிருர்கள் என்று தெரியவில்லை. ரூ. 150 என்று இருந்ததை ரூ. 75 என்று குறைத்து இருக்கலாம். ரொம்பவும் குறைத்து இருப்பதற்காக வருத்தப்படுகிறேன்.

அடுத்தபடியாக மக்களின் பேரில் இந்த வரி விதிக்கப்படு வதைப் பற்றியும் இங்கே குற்றம் சாட்டினுர்கள். அதையும் நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இன்று மக்கள் எப்படி இருக்கிருர்கள்? நாட்டில் அரிசி கிடைக்கவில்லை, அதற்காக கியூ நின்ருல் இங்கே கூச்சல் போடுகிருர்கள். கிரசின் கிடைக்க வில்லை, கியூ நின்ருல் கூச்சல் போடுகிருர்கள். ஆனுல் இன்றைய தினம் சினிமா காட்சி பார்ப்பதற்காக மக்கள் கியூவில் மணிக் கணக்காக நின்று கொண்டிருக்கிருர்கள். ஒரு டிக்கெட் ரூ. 50 என்று சொன்னுல்கூட பொதுமக்கள் வாங்கிக் கொண்டு போகி ருர்கள். அந்த அளவுக்கு சினிமா மோகம் மக்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறது; தலைக்கு ஏறியிருக்கிறது. அவர்களுடைய பொருள்களை, பண்டங்களை விற்றுகூட சினிமாவுக்குப் போக வேண்டுமென்ற எண்ணம் வந்திருக்கிறது. அப்படிப்பட்ட மக்களின் மீது இந்த 5 பைசா இல்லை, 50 பைசா, இரண்டு ரூபாய் அதிகப்படுத்தினுலும் தவறு இல்லை என்று என்னுடைய கட்சியின் வாதமாகச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த மன்றத்தில் பேசுகிறபோது, நாம் எல்லாம் மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு பேசவேண்டும். இந்த நாட்டில் இருக்கிற மக்களுக்கு சினிமா தவிர வேறு பொழுதுபோக்கு இல்லை. ஆகவே, அந்த மக்களை கேவலப்படுத்துகிற வகையில் இந்த மன்றத்தில் பேசுவது முறையானதா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. கோவை செழியன்: மக்களைத் தவருகப் பேசினுல் எப்படி? அவர்கள் என்ன சங்கராச்சாரியார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கருத்தை நீங்கள் சொல்லுங்கள், அவர் கருத்தை அவர் சொல்கிறார். இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, நாம் எல்லோரும் மக்களின் பிரதிநிதிகள்தான். ஆனால் மக்களைப் பாழ்படுத்துவதற்காக என்று இருப்பதைக் குறித்து, மக்களின் பிரதிநிதிகளாகிய நாம் சிந்திக்க வேண்டும். சினிமாக்காரர்கள் மக்களைப் பாழ்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நான் மிக வேதனையோடு சொல்வேன், என்னுடைய ஜில்லா கொங்குநாட்டுச் சகோதரருக்குச் சொல்வேன், அது பொழுதுபோக்கு என்பதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. என்னை அவர் மன்னிக்க வேண்டும். அது பொழுதுபோக்கு அல்ல. மனித இனத்தில் பண்பாடு பாழாக்கப்படுகிறது. பண்பாடு காக்கப்பட வேண்டுமானால் எவ்வளவு வரி போடமுடியுமோ அவ்வளவு போட்டு அதைத் தடுக்க வேண்டும். அதைச் செய்தால் தப்பு இல்லை, தவறு இல்லை. ஒரு படம் இப்பொழுது ஓடிக்கொண்டிருக்கிறது. அதனுடைய பெயரை நான் சொல்லவில்லை. அந்தப் படத்திற்குதான் என்னுடைய நண்பர் சொன்னார் ரூ. 25 முதல் ரூ. 50 வரை பணம் கொடுத்து டிக்கெட் வாங்குகிறார்கள். அந்தப் படம் எது என்று நண்பர் செழியன் அவர்களுக்குத் தெரியும். அந்தமாதிரிப் படம் தமிழ் நாட்டு எல்லையில் நுழைவதை தடுக்கவேண்டியது மிகமிக அவசியம். அவர் சொல்கிறார், பொழுது போக்கு என்று, அது ஒன்றுதான் பொழுதுபோக்கா ? ஏன் குழந்தைகளை அழைத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்று அங்கே விற்கும் பட்டாணி சுண்டலை வாங்கிச் சாப்பிட்டால் அதுவும் பொழுதுபோக்குதான். அது அருமையான பொழுதுபோக்கு இல்லையா ?

திரு. கோவை செழியன் : அவர்கள் வயது வரும்போது நாங்களும் அதைச் செய்கிறோம்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : என்னுடைய வயது வரும்போது நீங்கள் பாழாகிப் போய்விடுவீர்கள் என்பதற்காகத் தான் சொல்கிறேன். என்னுடைய வயது வரும் வரை நீங்கள் இருக்கவேண்டும். இப்படி சினிமா பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி நீங்கள் உருப்படப் போகிறீர்கள் ? எனக்கு வயது 67 ஆகிறது, உங்களுக்கு வயது 50 இருக்கும். நீங்கள் 67-க்கு வரும்போது எப்படியிருப்பீர்கள் ?

(முற்பகல் 10·00)

இப்பொழுது நடைபெறுவது படங்களா ? பப்படங்கள். இதைத்தான் படங்கள் என்று சொல்கிறார்கள். இதுவா பொழுது போக்கு ? நிச்சயமாக என்னால் ஒத்துக்கொள்ள முடியாது. இதற்கு வரி போடவேண்டியதுதான். வரியை எந்த முறையிலே





போட்டு பொதுமக்களின் பார்வையைக் குறைக்க முடியுமோ அந்த அளவுக்கு குறைப்பதுதான் நல்லது என்பது என்னுடைய வாதமாகும்.

திரு. கோவை செழியன் : சினிமாப் படங்களில் சில தவறுகளும் இருக்கின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. அதற்காக......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படியே கருத்துப் பரிமாற்றம் நடந்து கொண்டிருந்தால், நமக்கு நேரம் போதாது. திரு. வகாப், நீங்கள் பேசுங்கள்.

திரு. கே. எ. வகாப் : நாமெல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான். அதனால் மக்களுடைய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று திரு. செழியன் அவர்கள் சொன்னார்கள். ஆனால் மக்கள் தவறான வழியில் செல்கிறார்கள் என்றால் அதை இந்த மன்றத்தில் சுட்டிக் காட்டக்கூடாது என்பதல்ல. தனிப்பட்ட முறையிலே நானும் சினிமா பார்க்கின்றவன்தான். சினிமா பார்க்க வேண்டுமென்றால் அதற்கு போடுகின்ற வரியை ஏற்றுக் கொள்ளவும் நான் தயாராக இருக்கிறேன். மக்கள் நிலைமைகளைப் பார்க்கும்போது இதை சொல்ல வேண்டியிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது).

வரி ஏய்ப்பு நடக்கிறதா என்றால் நிச்சயமாக வரி ஏய்ப்பு நடக்கிறது. அம்மையார் அவர்கள்கூட இங்கே சொன்னார்கள். எல்லாக் கட்சிக்காரர்களும் அதை ஒத்துக் கொள்கிறார்கள். அதைப் போக்க என்ன செய்ய வேண்டுமென்றால் அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு தியேட்டரிலும் பஸ்ஸிலே செக்கிங் இருப்பது போல் வைத்துக்கொள்ளலாம். அதற்காகும் பணத்தை தியேட்டர் அதிகாரிகளிடம் இருந்து பாதி, அரசாங்கத்திடமிருந்து பாதி போட்டு, ஒவ்வொரு தியேட்டருக்கும் ஒரு செக்கிங் ஏற்படுத்தலாம். அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வரியை முழு மனதோடு வரவேற்று, அமர்கிறேன்.

*திரு. எம். சுரேந்திரன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த கேளிக்கை வரி, காட்சி வரியைப் பற்றி இங்கே பல கருத்துக்கள் சொல்லப்பட்டாலும்கூட நான் சொல்லக்கூடிய ஒரே ஒரு கருத்து இந்த வரி போடுகின்ற முறையே இந்தமாதிரி இருக்கக் கூடாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சட்டசபை நடந்துகொண்டிருக்கிறது. வரி விதிப்பு அறிவிக்கப் பட்டுள்ளது. அதன் பிறகு வெளியே பேசி, முடிவு செய்து இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் வரிப் போடுவதிலே இந்த அரசாங்கத்திற்கு ஒரு முறையான கண்ணோட்டம் இல்லை ; கொள்கை இல்லை என்பதை காட்டுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசியவர்கள் பலர் சொன்னார்கள். சினிமா பார்க்காமல் இருப்பது நல்லது என்று ஆலோசனை சொன்னார்கள். அது நல்லதுதான், எல்லோரும் துறவறம் பூணுகிற நிலைமையில் தான் அது முடியும். இப்போது அது முடியாது. இது அனுபவப் பூர்வமான உண்மை. இந்த நாட்டிலே இருக்கிற லட்சக்கணக் கானவர்களுக்கு, கோடிக்கணக்கானவர்களுக்கு சினிமாவை ஒரு பொழுது போக்காக வைத்திருக்கிறார்கள். டிக்கட்டு எவ்வளவு விலை இருந்தாலும் வாங்கிக்கொள்ள தயாராக இருக்கிறார்கள். இது எப்படி வளர்ந்திருக்கிறது என்பதை, மக்களின் உணர்வை கவனமாகப் பார்க்கவேண்டும். அதல்லாமல் ஏதோ வேதாந்தம் பேசுவது, துறவறம் பூணுவது எல்லாம் நடைமுறைக்குப் பொருந்தாது. ஆகவே, அதையெல்லாம் விட்டுவிட்டு, இந்த சட்டமன்றத்தில் சாத்தியப்பூர்வமான விஷயங்களைப் பேசுவதுதான் நல்லது.

அரசாங்கத்திற்குப் பணம் தேவை. அதை எப்படிப் பெறுவது என்று நல்ல முறையிலே சிந்தித்துப் பார்த்துதான் செய்ய வேண்டும். சினிமாத் துறையிலே வரி போட்டு அந்தப் பணத்தை பெற்றுவிடலாம் என்று நினைத்தால், அதனால் நன்மையா, தீமையா, கேடு வருமா, அதனால் கெடுதல் உண்டா, அதனால் மக்களுக்கு சஞ்சலம், பீதி ஏற்படுமா என்பதை எல்லாம் பார்த்துதான் செய்யவேண்டுமென்பது என்னுடைய கருத்து. இந்த வரி விதிப்பைப் பார்க்கும்போது இந்த அம்சங்கள் எதையுமே கவனத்தில் கொண்டதாகத் தெரியவில்லை என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதையுமே பார்க்காமல் போட்டதால்தான் இந்த வரியைப் போட்டதுமே சினிமாத் தியேட்டர்களை எல்லாம் முழுவதுமாக மூடிவிடுகின்ற ஒரு நிலைமை இந்த நாட்டிலே ஏற்பட்டது. சினிமா தொடங்கிய காலம் முதல் இப்படி ஒரே நாளில் எல்லா சினிமா தியேட்டர்களையும் மூடிவிடுகின்ற நிலைமை இதுவரையில் ஏற்படவில்லை. எல்லோரும் சேர்ந்து ஒரு 'ஷாக்' போன்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பு அவர்கள் உள்ளத்தில் மோதி இருக்கிறது. அதன் காரணமாகத் தான் இப்படிச் செய்திருக்கிறார்கள்.

வரி விதிப்பது என்றால் ஏதோ நினைத்தவுடனே நினைத்தபடி செய்வது என்பது நடைமுறைக்கு கொஞ்சம்கூட ஒத்துவராதது. அப்படி செய்வது எந்த வகையிலும் சிறந்ததல்ல. ஏற்கெனவே 12 மடங்கு வரி, உயர்வு என்று இங்கே சொன்னார்கள். அரசாங் கத்திற்குப் பணம் வரவேண்டும். அதை வேண்டாமென்று சொல்லவில்லை. அதை தகுந்த கண்காணிப்போடு செய்ய வேண்டும். அதல்லாமல் இந்தமாதிரியாக சிந்திக்காமல் நினைத்த வுடன் நினைத்தபடி செய்வது என்று இருந்தால் அது மக்கள் மத்தியிலே ஒரு மோதலைத்தான் உண்டுபண்ணும். அது தவிர்க்க முடியாதது.



தியேட்டர்காரர்கள் தியேட்டர்களை எல்லாம் ஒட்டு மொத்தமாக மூடியவுடன் முதலமைச்சரவர்கள் என்ன சொன்னார்கள்? தியேட்டர்களைத் திறக்காவிட்டால் தேசியமயமாக்கி விடுவோம், லைசென்சை ரத்து செய்து விடுவோம் என்று மிரட்டினார்கள். அப்படி பேசிய பின்னால்தான் அவர்கள் சமரசத்திற்கு வந்தார்கள். தேசியமயமாக்குவது, லைசென்சை ரத்து செய்வது இவைகள் எதற்காக? ஒரு கோப உணர்ச்சியோடுதான் இப்படி முதலமைச்சர் சொல்லியிருக்கிறார் என்று எண்ணத்தோன்றுகிறது. நாட்டின் விளைவுகளை எண்ணி, மக்கள் முன்னேற்றத்தைக் குறித்து சொல்லப்பட்ட வார்த்தைகளாக அவை இல்லை.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> ஒரு அரசுக்கு 14 கோடி ரூபாய் வந்துகொண்டிருந்ததை—14 கோடி ரூபாய் வரக்கூடிய தியேட்டர்களை மூடிவிட்டால் அரசு சும்மா இருக்குமா? ஆகையால்தான் சும்மா இருக்காமல், அரசு எடுத்து நடத்தும் என்று அறிவிக்கப்பட்டது. ஒரு பொறுப்புள்ள அரசு, பொறுப்போடு நல்லதைச் செய்வது எப்படி தவறாகும்?

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> அரசாங்கத்திற்கு வருமானம் வரக் கூடாது என்பது என்னுடைய வாதமல்ல. தேசியமயமாக்குவது, நினைத்ததை நினைத்த நேரத்தில் நினைத்தபடி செய்வோம் என்ற கருத்தை வைத்துக்கொள்ளக் கூடாது என்பதுதான் என்னுடைய வாதமெல்லாம். தன்மைகளை ஆராய்ந்து பார்த்து கண்காணிப்போடு கணக்கிட்டுச் சொல்ல வேண்டும். அதுதான் என்னுடைய கருத்து. வருமானத்தை இழந்துவிட்டு, வருகின்ற வருமானத்தை நிறுத்திவிட்டால் சும்மா இருப்போமா என்பது சரியல்ல. உங்களுக்கு அதிகாரம் இருக்கிறது; வல்லமை இருக் கிறது; ஆற்றல் இருக்கிறது. அப்படி இருக்கும்போது ஏதோ கோபத்தோடு காரியத்தை அணுகுவது என்பது.........

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> தேசியமயமாக்கும் கொள்கை அறிவிக்கப்படவில்லை. தியேட்டர்களை யாரும் ஓட்டா விட்டால் அரசு எடுத்து நடத்த வேண்டிவரும் என்று அறிவிக்கப் பட்டது. தியேட்டர்களை மூடிவிடுவதனால் 14 கோடி ரூபாய் வருமானம் நின்றுவிடும். அதுமட்டுமல்லாமல் மதுவிலக்குக் கொள்கையினால் ஆண்டு ஒன்றுக்கு 56 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது. ஆகவே, 14 கோடி ரூபாய் வருகின்ற ஸ்தாபனங்களை மூடிவிட்டால் அரசு சும்மா இருக்காது; தொடர்ந்து நடத் தாவிட்டால் அரசே எடுத்து நடத்துவதைத் தவிர வேறு வழி யில்லை; தேசியமயமாக்க வேண்டி வரும் என்று அப்போது அறிவிக்கப்பட்டதே அல்லாமல் தேசியமயமாக்குகிறோம் என்று சொல்லவில்லை.

<u>திரு. எம். சுரேந்திரன் :</u> நான் சொல்வது, ஏற்கெனவே இந்தத் துறையில் வரி போட்டிருக்கிறீர்கள். ஏற்கெனவே அதன் மூலம் சரியான வருமானம் இல்லை என்று தெரியும். அப்படி

[திரு. எம். சுரேந்திரன்] [1974 ஆகஸ்ட் 28

யானல் மீண்டும் அதேமுறையில் கையாளுவது புத்திசாலித்தனமாக இருக்குமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு டாக்ஸ் ஆபீசர்கள் எப்படி வசூல் செய்கிறார்கள், எவ்வளவு பணத்தை வாங்குகிறார்கள், எத்தனை தியேட்டர்களில் ஒழுங்காக வசூல் செய்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கொஞ்சம் புரிந்துகொண்டு பேசுவது நல்லது. நான் அப்படிச் சொல்வதால் ஏதோ புரியாமல் பேசுகிறார்கள் என்று குற்றம் சாட்டுவதாக எண்ணிக் கொள்ளக் கூடாது. இரு முறைகளும் இருந்தால்தான் அவர்களுடைய கருத்தைக் கேட்டு 'ஆப்ஷன்' விட முடியும். அதற்காகத்தான் இருமுறைகளையும் வைத்திருக்கிறோம். இந்த இரண்டு முறைகளைப் பற்றியும் சொன்னபோது, சிந்தித்து சொல்வதாக தியேட்டர் உரிமையாளர்கள் சொன்னார்கள். ஆகவே, இரண்டாவது முறைக்கு காத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன் : தியேட்டர் சொந்தக்காரர்கள் சொல்வதை ஒப்புக்கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்கள் என்று தெரிகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை அப்படியே ஒத்துக்கொள்வதில்லை. அதைப் பரிசீலிப்போம் என்று சொல்லியிருக்கிறோம். அரசாங்கத்திற்கு நஷ்டம் இல்லாத வகையில் பார்த்துக்கொள்ளப்படும். அதற்காக ஏதோ அரசாங்கத்திற்கு ஒன்றும் தெரியாது; தியேட்டர் சொந்தக்காரர்களுக்குத்தான் தெரியும்; அவர்கள் சொல்வதை அரசாங்கம் செய்யப் போகிறது என்று சொல்வது சரியல்ல. இங்கே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களுக்கும் தியேட்டர் முறைகள் பற்றி பூராவும் தெரியாது. ஆனால் பலருக்குத் தெரியும். அதனால் தியேட்டர் சொந்தக்காரர்களுக்கு தெரிந்தது அரசாங்கத்திற்குத் தெரியாது என்று சொல்லிவிட முடியாது. சினிமாத் துறையைப்பற்றி அரசாங்கம் நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறது; அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருந்த காரணத்தால் எனக்கும் நன்றாகத் தெரியும்.

திரு. எம். சுரேந்திரன் : சினிமாத் துறையிலே நல்ல பற்றும் பாசமும் அன்பும் ஆதரவும் கொண்ட உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். அதில் சந்தேகமில்லை. அதேசமயத்தில் அரசாங்கம்............

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னுடைய பற்றும் பாசமும் அப்படியே இருக்கிறது. புதிதாக வந்த பற்றும் பாசமும் பாதியிலே போய்விடும். ஆகவே, புதிதாக பற்றும் பாசமும் எனக்கு ஏற்பட வேண்டியதில்லை.



1974 ஆகஸ்ட் 28]

திரு. எம். சுரேந்திரன் : எப்படியும் இந்த வரிக்கு ஏதாவது ஒரு மாற்று ஏற்படுத்தி ஆகவேண்டும் என்ற அபிப்பிராயம் இருந்துவருகிறது.

சினிமாத்துறை மூலமாக வரக்கூடிய வருமானத்தை—இரண்டு மூன்று வருஷக் கணக்குகளை எடுத்துப் பார்த்து இவற்றை ஒழுங்குபடுத்தி வரி விதிக்கப்படுவது நல்லது என்று எஸ்டிமேட் கமிட்டி அபிப்பிராயம் சொல்லியிருக்கிறார்கள். அந்தமாதிரி முறைகளில் எல்லாம் செய்யப்படவில்லை என்பதை வருங்கால அடிப்படையில்தான் சொல்கிறேனே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இன்னொன்றையும் கூடச் சொல்ல ஆசைப்படுகிறேன். மது விலக்குக் காரணமாக நமக்கு ஏராளமான கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருக்கிறது, அதை ஓரளவு ஈடு செய்யத்தான் இந்தக் காரியம் செய்ய வேண்டியிருக்கிறது என்று கூறினார்கள். நமக்கு மிக அதிகமாக நட்டம் ஏற்படக்கூடிய நேரத்தில்தான் குதிரைப் பந்தயத்தையும் ஒழிக்க முன்வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் இந்த பில்லைப் பற்றி மட்டும் இப்போது பேசவேண்டும். நேரம் இல்லாத காரணத்தினால், பொதுவாக அதனால் நட்டம் வருகிறது, இதனால் வருகிறது என்றெல்லாம் பேசவேண்டியதில்லை.

திரு. எம். சுரேந்திரன் : நாம் செய்கின்ற காரியங்களில்—போடுகின்ற வரிகளில் ஒரு ஒழுங்குமுறை இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். நினைத்தபோது—நினைத்த மாத்திரத்தில் காரியங்களை ஆற்றுவது என்பது சரியல்ல. இதை செலெக்ட் கமிட்டிக்கு விட்டு நல்ல முறையில் பரிசீலித்து இதனைக் கொண்டுவர வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

DR. H. V. HANDE: Hon. Speaker, SIR.

(திரு. கு. காமாட்சி குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே—இன்றைக்கு 6 பில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பில்லுக்கும் இவ்வளவுநேரம் என்று வகுத்துக் கொடுத்து விட்டால் கூட நன்றாக இருக்கும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அது கூட நான் பேச முன் வருகிற போதுதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுங்கள். நான் முன்பே இன்றைக்கு 6 பில்கள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்துழைத்தால்தான் இன்றைக்கு அவற்றை எல்லாம் நிறைவேற்ற முடியும். நீங்கள் பேசுவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை.

[1974 ஆகஸ்ட் 28

திரு. ஆலடி அருணா : இந்த ஆறு பில்களிலே இது மிக முக்கியமான பில். ஆளுங் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் 2 பேர் பேசியிருக்கிறார்கள். 'இரண்டு பேர்களுக்கு மேலே இதில் என்ன பேசுவது ?' என்று திரு. காமாட்சி அவர்கள் உங்களுக்கு என்ன டிக்டேட் பண்ணுவது ?

திரு. கு. காமாட்சி : நான் டிக்டேட் பண்ணவில்லை. இருக்கிற நிலைமையைச் சொன்னேன். அவருடைய கட்சியைச் சேர்ந்த திரு. செழியன் அவர்கள் இந்த பில்லில் அரை மணி நேரம் பேசியிருக்கிறார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்த எங்களுக்கு சான்ஸ் இல்லை.

THIRU ALADI ARUNA : That is the responsibility of the Chair and not the responsibility of the Hon. Member.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு 6 பில்கள் இருக்கின்றன என்பதை நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். யாரும் டிக்டேட் பண்ண வேண்டியதில்லை. டாக்டர் ஹாண்டே நீங்கள் பேசுங்கள் சுருக்கமாக.

DR. H. V. HANDE : Let us not waste our time. Let us not waste the time of the House. I always stick to the points of the Bill. I have already jotted down the points on which I want to speak, because I do not want to take much time of the House.

Sir, I have moved an amendment for referring this Bill to a Select Committe. I am grateful to the Hon. Speaker for allowing me to move the amendment for referring the Bill to a Select Committee. My purpose of moving the amendment for referring the Bill to a Select Committee is very clear. Several Members of the House belonging to various parties have given individual notice of amendment for referring this Bill to a Select Committee. It fairly proves that this Bill should not be passed without referring to a Select Committee.

It is also a clear indication that various sections of the House are not satisfied with the provisions of the Bill. They are all dissatisfied with the manner in which the Bill has been brought, the form in which the Bill has been brought and also the provisions in the Bill. Therefore, I request the Hon. Chief Minister to give serious consideration to my suggestions.

It should not be misunderstood that I want to condemn the Government or I want to exploit the present situation. The object of moving my amendment is very clear and if the Bill is referred to a Select Committee and brought in an amended form, it will satisfy all the sections of the House.



1974 ஆகஸ்ட் 28] [Dr. H. V. HANDE]

Now the Bill has been brought forward in a haphazard manner. The Hon. Chief Minister is also aware of the fact that I have on several occasions wanted several Bills to be referred to a Select Committee, but he was not willing but they have been struck down by the Courts. I can quote several instances. I do not want to waste the time of the House.

Several provisions in the Bill require careful and calm consideration. The way in which the cinema theatres are taxed is discriminatory. They cannot sustain the provisions under Article 3 of the Constitution of India. It clearly lays down that the violation of the fundamental rights can be taken to the Courts. If this Bill is taken to a Court, there is a likelihood of this Bill being struck down by the Court. Therefore, let us sit in a Select Committee and discuss the Bill in a proper and impartial manner.

Another point, I would request the Hon. Chief Minister to consider is this. The amendment which he has brought here is not at all in a proper form. The Hon. Minister for Law knows it. What is the amendment he has brought ? He has brougt in the total deletion of clause 2. The entire thing has been substituted by another new clause. They have not made an attempt to change any part of the clause. The entire clause has been deleted. They did not have time to print the amendment. It has been cyclostyled hurriedly and haphazardly and a cyclostyled copy has been sent to us. If you go through the copy, you will know the exact position. The whole Bill has been removed and the entire Bill has been substituted by another amendment. This is not at all an amendment. This is not an amendment to the amending Bill. This is another duplicate Bill. We have never heard of this in the annals of the Parliament or Legislatures. Have we ever heard of this ? Can the Hon. Minister for Law or the Hon. Chief Minister quote a single instance in which the Bill has been removed and a new Bill has been superimposed ? This is a very unhealthy practice. We are subject to harsh criticism both inside and outside the House.

My object in asking for reference of the Bill to a Select Committee is to bring in the Cinematograph Act and the taxation policy together.

THIRU K. M. SUBRAMANIAM : I am on a point of order. There was a Bill, Madras City Municipal Act, 1919, which was amended by 'White Paper' in 1967. It is not as if the Bills are not amended. The Bills are amended by appropriate Bills.

DR. H. V. HANDE : The Hon. Member is not at all correct. Such a thing has not taken place. I was in the Legislative Council as a member. I know there was no such paper. It is absolutely irrelevant and unwanted. The Hon. Member was not at all in the Assembly at that time. I know the full details. I have no time to explain.

[Dr. H. V. HANDE] [1974 ஆகஸ்ட் 28

Another thing I want to tell the Hon. Chief Minister.

ஒரு பாயிண்டை சொல்லி ஸ்கோர் பண்ண விரும்பவில்லை.

I know nothing is going to be achieved. He has said something about show tax. The methods to collect the tax should be adopted in a proper way and at the appropriate time. When the Hon. Chief Minister referred to this in his Supplementary Budget, he has not thought of the 'Mini Theatres'. Only after going through the amendment, I thought there was another problem of mini theatres. How it struck the Hon. Chief Minister ? Like that there may be many other problems with regard to cinema theatres and taxation measures. All these things may not strike us immediately. Only after discussion, officials might have brought this to his notice.

That is a very, very important thing. What is the object of bringing forward this Bill. Let us see, what is the object and reason for bringing forward this Bill. If you go through the Objects and Reasons appended to the Bill, you will see that they want to augment the resources.

இதோடு இணைக்க முடியுமா? நீங்கள் படித்துப் பாருங்கள்.

The Hon. Minister for Law, who is an expert in law, can kindly go through it. In the Statement of Objects and Reasons, it is specifically stated that they want to augment the resources. But what does the Hon. Chief Minister say ? He has stated that there is no question of augmenting the resources. Therefore, there is a contradiction between what is stated in the Statement of Objects and Reasons and what the Hon. Chief Minister has stated. How can there be a contradiction in regard to this matter ? As the Hon. Chief Minister himself has openly stated that there is no question of augmenting the resources, the expression 'augmenting the resoueres' should not find a place in the Statement of Objects and Reasons. (Interruption) The Hon. Chief Minister himself has mentioned it. That is what he has stated....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்லாத ஒன்றை, சொன்னதாகக் கற்பனையாகச் சொல்லவேண்டாம். தியேட்டர் முதலாளிகள் சொன்னபடி ரூ. 13 கோடி, ரூ. 14 கோடி வருகிறது என்று சொன்னார்களே தவிர, சொல்லாத ஒன்றைச் சொல்லி, நேரத்தை வீணாக்கவேண்டாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நேரத்தை வீணாக்குவதே இல்லை, நேரத்தை வீணாக்குகிற பழக்கமே இல்லை. My time is very precious. I am busy. Not a single moment I waste.



1974 ஆகஸ்ட் 28] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

முதலமைச்சரே எழுந்து சொன்னார். நான் எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்காது, ரூ. 13 கோடி, ரூ. 14 கோடிதான் கிடைக்கும் என்று சொன்னார். இந்த மசோதா திருத்த அடிப்படையிலே அவ்வளவுதான் நமக்குக் கிடைக்கும். இனிமேல் அவர்கள் என்ன முடிவு செய்வார்களோ, என்ன சொல்வார்களோ அதைப் பொறுத்துதான் இருக்கும். ஆகவே, இப்பொழுதிருக்கிற நிலையிலே ஆப்ஜக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸிலே கொடுத்திருப்பதற்கும் இதற்கும் ஒத்து வரவில்லை. அதைத்தான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இதை எதற்காகக் கொண்டு வந்தார்கள் ? டாக்ஸ் எவேஷனைப் பொறுத்தவரையிலே முதலமைச்சர் வாதத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். நானே பலமுறை இந்த மன்றத்திலே சொல்லி இருக்கிறேன். டாக்ஸ் எவேஷனை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். இது அதற்கு ரெமடியா ? டாக்ஸ் எவேஷனுக்கு இது ரெமடி கிடையாது. அதற்கு வேறு பரிகாரங்கள் இருக்கின்றன. டாக்ஸ் எவேஷனைத் தடுக்க இந்த மசோதா எந்தவிதத்திலும் பயன்படாது.

ஆக, டாக்ஸ் எவேஷன் என்று சொல்லிவிட்டு இந்த மசோதாவைக் கொண்டு வந்து, பஞ்சாயத்து செஸ் விதிக்கும் உரிமையை எடுத்துவிடுவதால் பல பிரச்னைகள் வந்திருக்கின்றன. அதற்காகத்தான் சொல்கிறேன், செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று.

செலக்ட் கமிட்டிக்கு வந்தால் நன்றாக ஆராயலாம். விடாமல் போனால் பின்னால் நீங்களே ஃபீல் பண்ணுவீர்கள். பல பிரச்னைகள் வரும். காலையிலே பத்திரிகையிலே பார்த்தோம், ஒரு செய்தியை. இந்த டாக்ஸ் ஏன் போடுகிறோம் ? அந்தத் தியேட்டர்கள் சில பணிகளைச் செய்யவேண்டும், செய்தார்களா ? தியேட்டர்காரர்கள் குற்றவாளிகள் அல்ல என்று சொல்ல முடியவில்லை.

பல தியேட்டர்காரர்கள் தவறு செய்கிறார்கள். யாராக இருந்தாலும் இந்த மன்றத்திலே அதை ஒத்துக் கொள்ளவேண்டும். ஏர் கன்டிஷன் போட்டிருக்கிறார்களா ? கமிஷனர் எத்தனைமுறை அறிக்கை விடுத்திருக்கிறார்கள்; சினிமாடோகிராஃப் ஆக்டை அமுல் படுத்தவில்லை. செலக்ட் கமிட்டிக்கு விட்டால், நாம் அவர்களைக் கேட்கலாம், கிராஸ் செய்யலாம், இண்டர்வியூ செய்யலாம், ஏன் செய்யவில்லையென்று கேட்கலாம். அதற்கு செலக்ட் கமிட்டி பயன்படும்.

கட்டடங்கள் சரியாக இருக்கின்றனவா ? அதுகூட இல்லை. எலிஃபின்ஸ்டோன் தியேட்டர் பழைய கட்டடம். நாளைக்கு விழுந்துவிடுமோ, நாளைய மறுநாள் விழுந்துவிடுமோ என்றிருக்கிறது........

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த செலக்ட் கமிட்டியிலே, நீங்கள் விரும்புகின்ற செலக்ட் கமிட்டியிலே, அதைப் பற்றி பேசவே முடியாது. இது சினிமாட்டோகிராஃப் ஆக்ட் அமெண்ட்மெண்ட் அல்ல. இது என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸ் அமெண்ட்மெண்ட்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நமக்கு ஒரு பிடிப்பு இருக்கிறது. என்டர்டெய்ன்மெண்ட் டாக்ஸை குறைப்பது என்றால் குறைக்கலாம், நீங்கள் இதெல்லாம் செய்தால் என்று.........

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி பேரம் பேசுவதற்குக்கூட ஜாய்ன்ட் செலக்ட் கமிட்டியிலே வழியில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேரம் பேசுவது யார் என்று உங்களுக்குத் தெரியும்; நாங்கள் பேசுவதல்ல. இப்பொழுது பாஸ் பண்ணினால் அநாவசியமாக 'ரீகால்' ஆகிவிடும். உங்களை 'டாம்' செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. உங்களுக்காகத்தான் சொல்கிறேன், நல்ல எண்ணத்தோடுதான் சொல்கிறேன். முதலமைச்சர் ஒத்துக் கொள்வார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. டாக்ஸ் எவேஷன் செய்தால், அதற்கு ரெமடியாக எதைச் செய்யவும் அரசாங்கத்திற்கு உரிமை இருக்கிறது.

அடுத்து, இந்த டிஸ்கிரிமினேஷன். நம்முடைய கான்ஸ்டிடியூஷன் பிரகாரம் டிஸ்கிரிமினேஷன் கூடாது என்று திட்டவட்டமாக இருக்கிறது. இந்த மசோதாவிலே பல பகுதிகள் அதற்கு மாறாக இருக்கின்றன. அதை நீங்கள் எடுத்துப் பாருங்கள், நமது லா அமைச்சரிடத்திலே பேசிப் பாருங்கள். இதிலே பல கிளாஸ்களுக்குள் டிஸ்கிரிமினேஷன் வருவதற்கு இடமிருக்கிறது. டிஸ்கிரிமினேஷன் வந்துவிட்டால், கான்ஸ்டிட்யூஷன் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும். ஆகவே, ஒட்டு மொத்தமாக, இந்த மசோதா குழப்பத்திற்கு அஸ்திவாரமான அமெண்ட்மெண்டைக் கொண்டிருக்கிறது. அதிலே சந்தேகமே கிடையாது. ஆகவே, இந்த மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்புவதுதான் சாலச் சிறந்ததாக இருக்கும். அதுதான் அரசாங்கத்திற்கும் நல்லது. இதை அப்படியே பாஸ் செய்வது மன்ற மரபுகளுக்கு மாறாக இருக்கும். பொதுமக்களிடத்திலும், நீதிமன்றத்திலும் இந்த மசோதா எப்படி அவசர அவசரமாக வந்தது என்ற பயங்கரமான நிலைமை ஏற்படும் என்று நல்லெண்ணத்தோடு சொல்கிறேன். எடுத்துக் கொண்டால் எடுத்துக் கொள்ளுங்கள், உங்களுக்கு மெஜாரிட்டி இருக்கிறது. புறக்கணித்தால் புறக்கணியுங்கள், ஆனால் கஷ்டப்படுவீர்கள் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : சட்டப் பேரவைத் தலைவரவர்களே கேளிக்கை வரி திருத்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மன்றத்தில்





நமது முதலமைச்சர் காட்சி வரியை மாற்றி அமைப்பதைப் பற்றி அறிவித்தார்கள். அதை அறிவித்த உடனே, ஏதோ நாட்டிலே ஒரு பூகம்பமே ஏற்பட்டதைப் போல் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருந்தவர்கள் எல்லாம் கூச்சல் போட்டார்கள். இந்த நாட்டிலே சினிமாவே கிடையாது என்று சொன்னார்கள். அதற்குப் பின்னாலே ஒரு கூட்டம் கூட்டினார்கள். பிரபல நடிகர்கள் பேசினார்கள். ஒரு நடிகர் அடக்கத்தோடு சொன்னார், அரசாங்கம் இதிலே சம்பந்தப்படக் கூடாது என்று சொன்னார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த இடத்திலே உட்கார்ந்து விட்டால் பரவாயில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : செழியன் பேசியதை நாங்கள் டாலரேட் பண்ணினோம்.

திரு. நா. வீராசாமி : நான் ஒன்றுமே பேசவில்லை. இப்பொழுதுதானே ஆரம்பித்திருக்கிறேன். தலைவரவர்களே, இது பற்றி முடிவெடுத்த பொழுதே, இதை மாற்றியமைக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அவர் அறிவித்த பிறகு, நாட்டிலே சில சம்பவங்கள் ஏற்பட்டதை நான் சுட்டிக் காட்டினேன். ஒருவர் அரசாங்கத்தோடு மோதக் கூடாது என்றார். இன்னொரு நடிகர் விடக் கூடாது ஒரு கை பார்க்கலாம் என்று சொன்னார். எப்படி இருந்தாலும் முதலமைச்சர் நாட்டினுடைய நன்மையைக் கருதி, நான் போட்டது தான் சட்டம் என்று சொல்லாமல், நாட்டு நிலைமைகளை அலசிப் பார்த்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். மேஜர் பஞ்சாயத்திலே இருக்கிறவர்கள் ஒரு கீத்துக் கொட்டகைப் போட வேண்டுமானால் எந்த அளவுக்குத் தவறு செய்கிற நிலைமை ஏற்பட்டது என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்துதான் இன்றைக்குக் கிராமங்களிலே, மேஜர் பஞ்சாயத்துக்களிலே ரூ. 40 கட்டினால் போதும் என்று இந்த அருமையான சட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.

சென்னையிலே இருக்கக்கூடிய, நகரங்களிலே இருக்கக்கூடிய நிரந்தரக் கொட்டகைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதையும் பரிசீலிப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால், என்னுடைய கோரிக்கையே வேறு. அதை மாற்றியமைத்தாலும் கூட, இது ஒரு நல்ல தொழில். இதை நான் மறுக்கவில்லை. இந்தச் சமுதாயத்திற்குப் பொழுது போக்கிற்காக கேளிக்கை வேண்டும். ஆனால், அந்தத் தொழில் சமுதாயத்தை ஒரு பக்கம் கெடுத்துக் கொண்டிருக்கிறது என்று நான் இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். தொழிலைப் பற்றிச் சொல்லவில்லை. தொழிலிலே சம்பந்தப்பட்டவர்கள் எப்படி எப்படி கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் கறுப்புப் பணம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. நா. வீராசாமி] [1974 ஆகஸ்ட் 28

அதுமட்டுமல்ல, இன்றையதினம் அந்தத் தொழிலிலே வருகின்ற இந்த வரியை இன்னும் அதிகமாக்கலாம் அதற்குப் பல வழிகள் இருக்கின்றன. நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்வது இவ்வளவு நல்ல வருமானம் வரக்கூடிய தொழிலுக்கு இப்படி வரிப் போடுவதற்குப் பதிலாக, தேசிய மயமாக்குவது சாலச் சிறந்தது. அதற்கு காரணம் பல இருக்கின்றன. அதிலே ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் நன்மையைக் கருதி அப்படிச் செய்வது நல்லது. தமிழ்நாட்டிலே 1,500 தியேட்டர்கள் இருக்கின்றன. அந்தத் தியேட்டர்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்கள் எவரும் நிரந்தரமாக்கப் படவில்லை. அவர்களுக்கு முறையாகச் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. நம்முடைய அரசு தொழிலாளர்களுடைய அரசு. இங்கே சிலர் முதலாளிகளைப்பற்றிப் பேசுகிறார்களே தவிர தொழிலாளர்களைப்பற்றி பேசுவதே இல்லை.. ..................

(முற்பகல் 10·30).

திரு. எம். சுரேந்திரன் : பில் வரி போடுவதைப் பற்றியது, தொழிலாளர்களைப் பற்றியது அல்ல.

திரு. நா. வீராசாமி : தேசியமயமாக்க வேண்டுமென்று நான் சொல்வதற்குக் காரணம் தொழிலாளர்களின் நன்மைகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற முறையிலேதான். சென்னையிலே சத்தியா ஸ்டுடியோ இருக்கிறது. அங்கே இருக்கின்ற தொழிலாளர்கள் ஒருவாரமாக உண்ணாவிரதம் இருக்கிறார்கள், அவர்களைப்பற்றி . . . .

திரு. கோவை செழியன் : இவர் மட்டும் எது வேண்டுமானாலும் பேசலாமா ? இந்தச் சட்டத்திற்கும் அவர்கள் பேசுவதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா ? நான் பேசும்போது மட்டும் சொன்னீர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே பேசும் போதுகூட மவுண்ட் ரோடிலே உள்ள சினிமா தியேட்டரைப் பற்றிச் சொன்னார், என்ன நடந்தது என்று சொன்னார் . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

திரு. கோவை செழியன் : அவர் தியேட்டரைப் பற்றிச் சொன்னார், இவர் சத்தியா ஸ்டுடியோவைப் பற்றிச் சொல்கிறார்.. ..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், பேரவைத் தலைவர் எழுந்தால் உட்காரவேண்டுமென்று விதியிருக்கிறது, உட்காருங்கள்.



1974 ஆகஸ்ட் 28 ]

திரு. கோவை செழியன் : வேண்டுமானால் நாங்கள் வெளியே போகிறோம், அவர் மட்டும் பேசலாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் மவுண்ட் ரோடு தியேட்டர் பற்றிச் சொன்னார்கள். அந்த மாதிரி பேசுகின்ற நேரத்திலே ஒரு நிகழ்ச்சி நடந்ததாக சொன்னார்கள். அவர்கள் அப்படி ஒரு தியேட்டரைப் பற்றிப் பேசியது அனுமதிக்கப் பட்டிருக்கிறது, இன்னொருவர் இன்னொன்றைக் குறிப்பிடுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று சொல்வது முறையல்ல . . .

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார் . . .

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் இருங்கள், அவர் சொல்லட்டும்.

DR. H. V. HANDE : While it would be relevant to the discussion to discuss about theatres, because it is a question of tax about theatres, I might say that when the Hon. Minister for Law pointed out something I yielded to his request. But here Mr. Veerasami is discussing something outside theatres ; he is talking about something which is totally irrelevant ; he is talking about some studio. If you say it is in order, then we will also have to demand similar precedents and we will be talking something and maintaining that they are all relevant. So, please give your ruling on this.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வரி சம்பந்தமான மசோதா. இதிலே தியேட்டர்களைச் சொல்லி என்ன என்ன நடக்கிறது என்று சொன்னீர்கள், அதைப் போன்று அவர்கள் ஸ்டுடியோவைச் சொல்லிப் பேசுகிறார்கள், அதிலே ஒன்றும் தவறு இல்லை. உட்காருங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்கள் கொடுக்கிற ரூலிங் நல்லதாக இல்லை. Everybody knows it is all one-sided ruling.

திரு. நா. வீராசாமி : சில உண்மைகளைச் சொல்லும்போது சிலருக்கு ஆத்திரம் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பில்லைப் பற்றிப் பேசுங்கள் . . . .

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : சில அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள் எழுந்திருக்கிறார்கள், அவர்களுக்காகப் பாதுகாப்புக் கொடுக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள் திரு. வீராசாமி பேசட்டும்.

திரு. நா. வீராசாமி : வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்று சொல்கின்ற நேரத்திலே தொழிலைப்பற்றியெல்லாம் சொல்லித்தான் ஆகவேண்டும். சிலர் சொல்கிறார்கள், " நான் கறுப்புப் பணம் வாங்குகிறேன், உண்மைதான் ஆனால் ஏன் வாங்குகிறேன் என்றால் சட்டம் அப்படி இருக்கிறது " என்று சாக்குபோக்கு சொல்கிறார்கள், ஆகவேதான் சொல்கிறேன். தேசியமயமாக்கினால் கறுப்புப் பணம் சம்பாதிப்பதற்கு வழியில்லை, கறுப்புப் பணம் சம்பாதித்து அதன் மூலமாக 10 லட்சம் 12 லட்சம் என்று தியேட்டர்காரர்கள் கட்டுகிறார்கள், அவர்கள் அக்கவுண்டில் வருவது 5 லட்சம், 6 லட்சம்தான். இந்த அரசாங்கம் தொழிலாளர் நல அரசு, ஆகவே அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களைப் பாதுகாக்க கடமைப்பட்டிருக்கிறோம். அவைகளையெல்லாம் தேசியமயமாக்கினால் தொழிலாளர்களைப் பாதுகாக்க முடியும். நாட்டிலே சிலர் புத்தர் என்றும் இயேசுநாதர் என்றும் தன்னை நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் தங்களிடத்திலே வேலை செய்கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பதில்லை. புத்தர் என்றும் இயேசு என்றும் தன்னைச் சொல்லிக்கொள்கிறவர்கள் தொழிலாளர்களைக் காப்பாற்ற முடியாமல் இருக்கிறார்கள். ஆகவே இந்த தொழிலைத் தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லி இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறேன். வணக்கம்.

திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, இந்தத் தொழிலிலே சம்பந்தப்பட்டவன் என்ற அளவில் நம்முடைய அரசு கொண்டுவந்திருக்கிற இந்த மசோதாவைப் பெரிதும் நான் பாராட்டுகிறேன். எடுத்ததுதான் முடிவு என்று பிடிவாதமாக இல்லாமல் தொழிலிலே ஈடுபடுகின்றவர்கள் சொல்லுகின்ற குறைகளையெல்லாம் கேட்டு, அவர்கள் குறைகளையெல்லாம் சொல்வதற்கு முன்பு எவ்வளவு அவதூறான வார்த்தைகளையும், சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி இதையும் அரசியலாக்கலாமா என்று துடிக்கின்ற சூழ்நிலை இருந்தாலும் அந்த விவரங்களை எல்லாம் பெற்றிருந்தாலும் கூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இப்படியெல்லாம் பேசுவார்கள், இதையெல்லாம் செய்வதற்குச் சில பேர்கள் இருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டுதான் எல்லோரையும் அழைத்துப் பேசி ஒரு சுமுகமான நிலைமையை உருவாக்கி ஒரு அருமையான சட்டத்தைக் கொண்டுவருவதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியா முழுவதும் கேளிக்கை வரியைப் பெறுவதற்குரிய சட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் எனக்குத் தெரிந்த வரையில் தமிழ்நாட்டிலே



தான் வரவுக்குத் தகுந்தபடி வரியைக் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்த கேளிக்கை வரிச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே இந்தத் தொழிலிலே இருக்கிற அத்தனை பேர்களும் இந்தச் சட்டத்தை வரவேற்பார்கள் என்று கருதுகிறேன்.

சினிமாத் தொழிலைப் பொறுத்த வரையிலும் அது இன்றைய தினம் ஒரு பெரிய தொழிலாக, அதுவும் இந்தியாவிலேயே அதிகமான படங்களை உற்பத்தி செய்கிற பகுதியாக தமிழ்நாடுதான் இருக்கிறது என்று சொல்லக்கூடிய பெருமையை நாம் அத்தனை பேர்களும் பெற்றிருக்கிறோம், தமிழ்நாட்டிலே ஏராளமான தியேட்டர்கள் இருக்கின்றன. நகரத்திலே இருக்கின்ற தியேட்டர்கள், சிறு நகரங்களிலே இருக்கின்ற தியேட்டர்கள். பஞ்சாயத்துக்களிலே இருக்கிற தியேட்டர்கள், டூரிங் தியேட்டர்கள் என்று பல விதமான தியேட்டர்கள் இருக்கின்றன. ஆனால் நகரங்களிலே இருக்கின்ற தியேட்டர்களைப் பொறுத்த வரையிலும் சென்னை போன்ற மாநகரத்திலேயும் கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களிலேயும் இருக்கின்ற தியேட்டர்களைப் பொறுத்த வரையிலும் தியேட்டர்காரர்கள் வைத்ததுதான் சட்டம் என்ற சூழ்நிலைதான் இருந்துகொண்டு இருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் நான் ஒருபடத் தயாரிப்பாளன். உண்மைதான் நான் தயாரிப்பாளன், இந்தச் சட்டமன்றத்திலே நான் ஒத்துக்கொள்கிறேன், பெரிய நடிகர்களைப் போட்டால் கறுப்புப் பணம் கொடுக்க வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. ஆனால் அந்தச் சூழ்நிலைக்கு ஆளாகக் கூடாது என்று கருதித்தான் நானும், அந்தப் பக்கத்திலே உள்ள கோவை செழியன் அவர்கள் இங்கே இருந்த நேரத்தில், அவரும் சாதாரண நடிகர்களைப் போட்டு, கறுப்புப்பணம் கொடுக்க வேண்டிய நிலைமைக்கு ஆளாகாமல் சாதாரண நடிகர்களைப் போட்டு நல்ல கதையை வைத்துக்கொண்டு, நல்ல டைரக்டரை வைத்துக்கொண்டு படம் எடுத்தோம். அந்தக் கொள்கையோடுதான் நான் கம்பெனி ஆரம்பித்ததிலேயிருந்து படம் எடுக்கிறேன்.

கறுப்புப் பணம் சினிமாவில் எல்லாத் துறையிலேயும் இருக்கிறது. அது சினிமாத் தியேட்டர்களுக்கும் வரும் கொடுமையை நினைத்தால்தான் கஷ்டமாக இருக்கிறது. சென்னையிலே பெரிய தியேட்டர் வேண்டுமானால், வார வாடகையாக 17,500 ரூபாய் கொடுக்கவேண்டிய நிலைமை இருக்கிறது. டிஸ்ட்ரிபியூட்டரோ அல்லது படம் எடுப்பவர்களோ கொடுத்தாக வேண்டும். அப்படிக் கொடுப்பதோடு மட்டுமல்ல, அங்கேயுள்ள நிர்வாகிக்கு மேசைக்கு அடியிலே கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டும். அந்த 17,500 ரூபாயில் ஒரு பகுதியைக் கறுப்புப் பணமாகக் கொடுக்க வேண்டும். அதுதான் இதுவரையிருந்த உண்மை நிலை. ஆனால் இந்தப் புதிய சட்டத்தின் காரணமாக அந்தச் சூழ்நிலை அநேகமாக மாறும் என்று கருதுகிறேன்.

பெங்களூரில் ஒரு நல்ல முடிவை எடுத்திருக்கிறார்கள். பெங்களூர் பெருநகரத்தைப் பொறுத்தவரையில் அங்கே படங்களை விநியோகிக்க வேண்டுமென்றால் 80 சதவிகிதம் அங்கே கன்னடப் படங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டுமென்ற ஒரு முடிவை—சட்ட முடிவு அல்ல—அங்கேயுள்ள தியேட்டர்காரர்கள் அரசோடு கலந்து பேசி எடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே இங்கேயுள்ள தியேட்டர்காரர்களும் விரைவில் அரசாங்கத்தைச் சந்தித்துப் பேச இருப்பதாக அறிகிறேன், அவர்களைக் கூப்பிட்டுப் பேசி தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் படங்களை, அது பெரிய கொட்டகையானாலும் சரி, சிறிய கொட்டகையானாலும் சரி 80 பர்செண்ட் ஒவ்வொரு கொட்டகையிலும் தமிழ்ப்படம் ஓட வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். வாராவாரம் வாடகை கொடுக்கும் அந்தக் கொடுமையிலேயிருந்து தயாரிப்பாளர்கள் தப்பிக்க ஒரு பர்செண்ட்டேஜ், 100 ரூபாய் வசூலானால் 50 பர்செண்ட் அல்லது 60 பர்செண்ட் படத்தை வாங்கியவர்கள் அல்லது படத்தயாரிப்பாளர்கள் பெற்றுக் கொள்ளலாம். 40 சதவிகிதத்தை கொட்டகைக்காரர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்ற சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் தொழில் ஒரு சிறந்த தொழில், பிரசித்திபெற்ற தொழில், கிட்டத்தட்ட எல்லா ஊர்களிலும் சேர்த்து 15 இலட்சம் பேருக்குமேல் ஈடுபட்டிருக்கிறார்கள். நெசவுத் தொழிலுக்கு அடுத்தபடியாக தமிழகத்தில் உள்ள பெரிய அங்கீகரிக்கப்படாத தொழில். டெல்லி அரசாங்கம் உதவி செய்கிறார்கள் தயாரிப்பாளர்களுக்கு என்றாலும் அந்த உதவிகள் தமிழகத்தைப் பொறுத்தவரையில் கொஞ்சமும் வருவதில்லை. ஆகவே, நம்முடைய அரசு இந்தத் தொழிலுக்கும் ஊக்கம் தர வேண்டும், உதவி செய்வதற்கு முன் வர வேண்டும். அந்த வகையில் இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் கொஞ்சம் சிரத்தை எடுத்து, கறுப்புப்பணம் புழங்காமல் தடுக்கும் வகையிலே இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொண்டு இந்தியாவிற்கே வழி காட்டும் மசோதா இது என்று கூறி இந்த அருமையான மசோதாவைக் கொண்டு வந்த அரசையும் பாராட்டி அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, திரைப் படத் தொழிலிலிருந்து என்டர்டெயின்மென்ட் டாக்ஸ் என்ற முறையிலே, அரசாங்கத்திற்கு வருவாய் அதிகமாக வர வேண்டும், அதுவும் இப்பொழுதுள்ள சூழ்நிலைக்கேற்ப, மதுவிலக்கைக் கொண்டுவருவதால் அதிக வருவாய் வேண்டுமென்ற சூழ்நிலைக்கேற்ப, இந்த அறிவிப்பு இந்த மன்றத்திலே செய்யப்பட்டது. அதையொட்டி இந்த மசோதா இங்கே கொண்டுவரப் பட்டிருக்கிறது. இங்கே பேசிய பல பிரச்னைகள் சினிமாத் தொழிலைச் சுற்றியே அமைந்திருந்தது. இந்த பில்லைப் பற்றி அதிகம் பேசாதது எனக்குக் கொஞ்சம் சுலபமாக இருக்கிறது பதில் சொல்வதற்கு.





சினிமாத் தொழிலைப் பொறுத்த மட்டில் எல்லாத் தரப்பு உறுப்பினர்களும் அவரவர்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள் நான் அதில் தலையிட விரும்பவில்லை. நம் முன்னுள்ள பிரச்னை, முதலமைச்சரவர்கள் மிகத் தெளிவாக கூறியதைப்போல, வரி ஏய்ப்பு இருக்கக்கூடாது, வருவாயும் வர வேண்டுமென்று கூறியதில் கருத்து வேறுபாடு இல்லை, எல்லோரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால், எப்படிக் கொண்டு வர வேண்டுமென்பதிலேதான் பிரச்னை.

ஷோ டாக்ஸ் என்று கொண்டு வரலாம் என்று அறிவிப்பு தந்து மசோதாவில் கொண்டு வந்தோம். அதில் சிக்கல் இருக்கிறது என்பதை எல்லாக் கட்சித் தரப்பிலும் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே, மறுபரிசீலனை செய்து—மறுபரிசீலனை கூடாது என்று சொல்வது சரியல்ல—ஷோ டாக்ஸ் மூலம் வரி ஏய்ப்பைத் தடுக்கலாம் என்று முயற்சித்தோம், ஆனால் அதிலே சிக்கல் இருக்கிறது என்று எல்லாத் தரப்பிலேயும் சொல்லப்பட்டதால் நாம் மறுபரிசீலனை செய்து புதிய திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

இதனால் வருவாயே நமக்கு வராது என்று புதுமையாக எப்படிச் சொல்கிறார்கள் என்று புரியவில்லை. மசோதாவின் நோக்கம் புதிதாக வருவாயைப் பெறுவதுதான். அதிக வருவாயைப் பெறுவதுதான். நிச்சயமாக அதிகமாக வரும். அப்படி வரும்பொழுது வரி ஏய்ப்பு இல்லாமல் எப்படிப் பெறுவது என்பதுதான் நம் முன்னுள்ள பிரச்னையாகும். பல யோசனைகள் சொல்லப்பட்டன. பஸ்ஸுக்கு இருப்பதைப்போல் வரி போடலாம் சீட்டின் பேரில் என்று தெரிவிக்கப்பட்டது. அதையும் அரசாங்கம் பரிசீலித்தது. அரசு வழக்குரைஞர்களைக் கலந்துகொண்டது. ஆனால்அதிலும் சிக்கல் ஏற்படும் என்று கண்டோம். இன்கம்டாக்ஸ் என்ற முறையில் வந்து விடுமோ என்ற பயம் இருக்கிறது. முதலமைச்சரவர்கள் கூறியதைப் போல அரசு எடுத்த முடிவுப்படி என்டர்டெயின்மெண்ட் டாக்ஸ் அமைப்பை அப்படியே வைத்துக் கொள்கிறோம், அதை எடுக்க வேண்டாம். அது என்டர்டெயின்மெண்டிலே போடும் வரி. வருமானத்தில் போட முடியாது. ஷோ டாக்ஸை அதிகமாகப் போட்டால் வருமான வரியாகிவிடும், அப்பொழுது செல்லாமல் போகலாம்.

அதே சமயத்தில் வரி ஏய்ப்பு இல்லாமல் இருக்க ஒரு முறையை கொண்டு வரலாமா என்று முயற்சிக்கப்பட்டு, அதே சட்டத்திலே இவர்களாகவே முன்வந்து நாங்கள் இந்தந்த வரி முறையிலே ஒவ்வொரு காட்சிக்கு இவ்வளவு வரி என்று கொடுத்து விட்டால், அது நாம் எதிர்பார்க்கும் வருவாயைத் தந்தால் அப்பொழுதுதான் ஆப்ஷன் கொடுக்கும் முறை வருகிறது. ஆப்ஷன் கொடுத்தால் சட்டச் சிக்கல் எழாது என்றுதான் இந்த மசோதாவைத் தயாரிக்க வேண்டுமென்று முயற்சித்தோம்.

கோவை செழியன் அவர்கள் சொன்ன அருமையான யோசனையை முதலமைச்சரவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். தியேட்டர்களில் இவ்வளவு கிராஸ் இன்கம், வருமானம் வந்தாலும், வரா

விட்டாலும், ஹவுஸ் ஃபுல் ஆனால் வரவேண்டிய வருமானத்தின் அடிப்படையில் பர்செண்ட்டேஜ் நிரந்தரமாக தரவேண்டுமென்ற ஆப்ஷன் எடுத்துக்கொண்டு அதன்படி வரி கட்ட வேண்டுமென்பதை முதலமைச்சரவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அதை ஓர்க் அவுட் செய்து பார்த்ததில் சில சிரமங்கள் ஏற்படுகின்றன. இதே நகரத்தில், சென்னை மாநகரத்தில் மவுண்ட் ரோட்டில் ஒரு தியேட்டர் இருக்கலாம், ஓரத்தில் ஒரு தியேட்டர் இருக்கலாம். சிரமம் இருப்பதால் கூடாது என்பது அல்ல, ஆழமாகப் பரிசீலித்து நல்லமுறையில் ஆப்ஷனைத் தியேட்டர்களைப் பொறுத்த வரையில் கொண்டுவரலாம் என்று எடுத்த முடிவை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். காலதாமதம் ஆனாலும் செழியன் சொன்னதைப் போல நல்லது என்று ஏற்றுக் கொள்வார்கள்.

டூரிங் தியேட்டர்களைப் பொறுத்த வரையில் பிரச்னை எழவில்லை. அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள், ஆப்ஷனை ஒத்துக் கொள்கிறோம் என்று சொல்கிறார்கள். நாம் போட்டுவிட்டோம். டூரிங் தியேட்டர்களாக இருப்பவைகளுக்கும், பர்மனென்ட் தியேட்டர்களாக இருப்பவைகளுக்கும் இப்படிப்பட்ட இடைவெளி தேவையா என்று கேட்டார்கள். அது பரிசீலிக்கப்பட வேண்டிய கேள்வி. நாமும் ஏற்றுக்கொண்டு தியேட்டர்களுக்கு ஆப்ஷன் கொடுக்கும் முறை வந்தால் டிஸ்கிரிமினேஷன் பாயின்ட் வராது. அந்த முடிவுப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தியேட்டர்களின் வருமானம், ஹவுஸ் ஃபுல் ஆனால் எவ்வளவு வருமானம் வரும் என்ற விவரங்களை வரவழைக்க முயற்சிக்கிறோம். அவைகள் வந்தவுடன் ஆப்ஷன் கொடுக்கும் முறையில் நிச்சயமாக ஈடுபடுவோம், முதலமைச்சரவர்களும் அறிவித்திருக்கிறார்கள். இதற்காக ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விட்டால் அரசுக்கும் நல்லது அல்ல, எதிர்க்கட்சிகளுக்கும் நல்லதல்ல. கொள்கையை ஏற்றுக் கொண்டபிறகு, தியேட்டர்களுக்கு ஆப்ஷன் கொடுக்கப்படும் என்பதை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு அதைப்பற்றி அதிகமாக வற்புறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

எவேஷன் இருப்பதை அந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களே ஒத்துக் கொள்கிறார்கள். பர்மனென்ட் தியேட்டரானாலும், டூரிங் தியேட்டரானாலும் எவேஷன் இருக்கிறது என்பதை ஒத்துக் கொண்டுதான், ஆப்ஷன் கொடுத்தால் நிச்சயமாக எவேஷன் இல்லாமல் தடுக்கலாம் என்று அவர்களே ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்குக் காலமாகுமே தவிர தவறு என்று யாரும் சொல்லவில்லை என்பதைத்தான் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த வரியின் மூலமாக நாம் பெறும் வருமானத்தை இன்னும் அதிகப்படுத்த வேண்டுமென்ற முறையை யாரும் எதிர்க்கக் கூடாது என்பதை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய அரசுக்கு வரித்துறையே கொஞ்சம்தான், வேறு வரித்துறையை, எலாஸ்டிக்காக இருக்கும் முறையைப் பெறவில்லை.



எனவே, இந்த நிலையை ஏற்றுக்கொண்டு தியேட்டர்காரர்கள் கொஞ்சநாள் கோபித்துக் கொள்வார்கள், அதற்காகப் பயந்துவிட முடியாது, மூடுகிறோம் என்று சொன்னார்கள் என்பதற்காக வருந்தக் கூடாது. அரசாங்கத்தில் குறைகள் இருந்தால், டிஸ்கிரிமினேஷன் இருந்தால் அதைப்பற்றிப் பேசித்தீர்த்துக் கொள்ளலாமே தவிர அரசாங்கத்தை மிரட்டுவது தவறு.

ஆக, நாம் எடுத்துச் சொன்னது எல்லாம் அரசாங்கம் இப்படிப்பட்ட நிலையைப் பார்த்துக் கொண்டிருக்கும் சூழ்நிலை ஏற்படக் கூடாது. தியேட்டர்களை மூடினால் அரசுக்கு வருவாய் குறையும். ஆகவே, அரசாங்கமே எடுத்து நடத்தும் என்றார்கள்.

திரு. சுரேந்திரன் அவர்கள், ஒரு தொழிற்சாலையை மூடிவிட்டால் அதை அரசாங்கம் எடுத்து நடத்த வேண்டுமென்று வாதாடுவார்கள். அது சரியான கொள்கை. அதை நாங்கள் சொன்ன காரணத்தால் திரு. சுரேந்திரன் அவர்கள் அதிலே முரண்படுகின்ற பாணியில் சொன்னார்கள். அவர்கள் தியேட்டர்களை மூடியது மிரட்டுவது போல் அமைந்திருந்தது. எதிர்க்கட்சிகளின் சார்பில் மூடியது சரிதான் என்பது போல் பேசிவிட்டால் தியேட்டர்காரர்களுக்குச் சந்தோஷம் ஏற்பட்டுவிடும். எதிர்க்கட்சியினர் ஆதரித்துவிட்டார்கள். மந்திரி சபையை ஒரு கை பார்த்து விடலாம் என்று முதலாளிகளுக்குச் சாதகமாக அமைந்து விடக்கூடாது. எந்தக் குறையையும் எடுத்துச் சொல்லலாம். மிரட்டுகிற முறையை நம்முடைய அரசாங்கம் எந்த நேரத்திலும் அனுமதிக்க முடியாது. அதற்கு எல்லாக் கட்சித் தரப்பிலிருந்தும் கண்டனம் தெரிவிக்க வேண்டும். குறைகளைச் சொல்லும்போது பரிசீலிக்கலாம். செழியன் அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்தை நிச்சயமாக ஏற்றுக் கொள்ளுகிறேன், பரிசீலிக்கிறேன் என்ற உறுதியை முதலமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள், இப்படி பரிசீலிக்கிறேன், ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று சொல்லக்கூடிய அரசு இருக்கும்போது மிரட்டுவது போல் நடவடிக்கை எடுப்பது சரியல்ல. அதனை சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தத் தரப்பில் இருந்தாலும் ஆதரிக்கக்கூடாது என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதை ஜாயின்ட் செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்றார்கள். இதிலே வேறு பிரச்னை ஒன்றுமில்லை. செழியன் அவர்கள் சொன்ன பர்சன்டேஜ் பற்றி பரிசீலிப்பதாக நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்த அளவில் இந்தப் பிரச்சினையை விட்டுவிடலாம்.

சினிமாத் தொழிலைப்பற்றி ரொம்பவும் நாம் கவலைப்படத் தேவையில்லை. நமக்கு வரி வருவாய் வரவேண்டும்; யாராக இருந்தாலும் வரவேண்டும்; யார் நடித்தாலும் வரவேண்டும்; யாருடைய ஸ்டூடியோவாக இருந்தாலும் வரவேண்டும்; யாருடைய தியேட்டராக இருந்தாலும் அரசுக்கு வருவாய் வரவேண்டும்.

[திரு. செ. மாதவன்] [1974 ஆகஸ்ட் 28

வரியே போடப்படவில்லை என்ற கருத்தும் பேசப்பட்டது. ஷோ டாக்ஸை அதிகப்படுத்தியிருக்கிறோம். அடிஷனல் சர் சார்ஜ் போட்டிருக்கிறோம். அவர்களுக்கும் வரியைக் கூட்டியிருக்கிறோம்.

ஹாண்டே அவர்கள் சட்ட சிக்கல் வரும் என்றார்கள். அடிக்கடி அவர்கள் அப்படிச் சொல்லுவார்கள். இன்றைக்கு இருக்கும் அரசியல் சட்டப்படி நீதிமன்றத்திற்குச் செல்லும் உரிமையைத் தடுக்க முடியாது. நீதிமன்றத்திற்குச் செல்லுகிற ஒரே காரணத்தால் நாம் பயந்து விடுவதாகக் கொள்ளக்கூடாது. நீதிமன்றம் சொல்லுவதை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றில்லை. நமக்குக் கொள்கை இருக்கிறது. வரி போடுகின்ற முறையில் நீதிமன்றம் சிக்கல்களை எடுத்துக் காட்டினால் திருத்தச் சட்டம் கொண்டு வந்து வரியைப் பெற்றுத்தான் தீருவோம். நீதிமன்றத்திற்குப் போவார்களே என்பதற்காக அவர்கள் கவலைப்படத் தேவையில்லை. அப்படி நீதிமன்றத்திற்குச் சென்று மாறுபட்ட நிலை ஏற்படுமானால் நிச்சயமாக இந்த அரசு திருத்தச் சட்டம் கொண்டு வந்து வரியைப் பெற்றே தீரும். அதைப் பற்றி அரசாங்கம் கவலைப்படப் போவதில்லை.

திரு. செழியன் அவர்கள் திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கான காரணங்களைச் சொன்னார்கள். நாங்களே அப்படித் திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டுமென்றால் கொண்டு வருவோம் என்று கூறி இதைப் பொறுத்த வரை எல்லோரும் ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சரவர்கள், 'செழியன் திருத்தச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்றால், நாங்களே கொண்டு வருவோம்' என்று சொன்னார்கள். அப்படித் திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கு அவசியமில்லாமல் இப்போதே எல்லாவற்றையும் ஆராய்ந்து செலக்ட் கமிட்டிக்கு விட்டு நல்ல முறையில் பரிசீலித்துக் கொண்டு வரக்கூடாதா என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு செ. மாதவன்: வரி போடுகின்ற முறையில் மாற்றமில்லை. அப்படியே வைத்துக் கொள்கிறோம். டூரிங் தியேட்டர், பர்மனென்ட் தியேட்டர் வரி செலுத்துகிற முறையில் வேறுபாடு இருக்கிற காரணத்தால் அந்த உரிமை கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆப்ஷன் கொடுக்க ஒத்துக் கொண்டிருக்கிறோம். ஒரு முறை ஆப்ஷன் கொடுத்துவிட்டு மறுபடியும் மாற்ற முடியாது. அப்படி சட்டத்தில் கொண்டு வருகிறோம். அந்த முறை பர்மனென்ட் தியேட்டருக்கும் வருகிறது.



1974 ஆகஸ்ட் 28]

திரு. எம். சுரேந்திரன்: அமைச்சர் அவர்கள் சினிமா தியேட்டர்களை மூடியது சரியானது என்று நான் கருதுவது போல் என்னுடைய பேச்சைப் பிரதிபலித்தார்கள். என்னுடைய கருத்து அதுவல்ல. அவர்கள் செய்தது தவறு என்று இருந்தாலும் கூட தவற்றைத் திருத்துகிற முறையில் அரசாங்கத்தினுடைய வாயிலிருந்து வருகிற வார்த்தைகள் இருக்க வேண்டும். அப்படி அல்லாமல் பேசியது முதலமைச்சருக்கு வேண்டுமானால் பெருமையாக இருக்கலாமே தவிர, அரசாங்கத்திற்கு பெருமையாகாது. தேசீயமயமாக்குகின்ற கொள்கை எங்களுக்கு விரோதமானதல்ல. கட்டாயமாக ஆக்க வேண்டும். தேசீயமயம் என்று ஆக்குவதாக இருந்தால் அரசாங்கம் அதுபற்றித் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டு வரவேண்டுமே தவிர, இப்படிப் பதில் சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே பேசியதை மறுபடியும் விளக்கிச் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.

திரு. எம். சுரேந்திரன்: தவறான கருத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன். பெரும் பணக்காரர்களுக்கு வரி விதித்தால் அரசு அதிலே உறுதியாக இருக்கவேண்டும். அப்படி வரி விதித்துவிட்டு பின்பு கட்டாயமாக, உறுதியாக அதிலே நிற்காமல் குறைத்துக்கொண்டு வருவது அரசாங்க நிலையில் பார்க்கும்போது அழகல்ல என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: வரியைப் போட்டோம், குறைத்தோம் என்பது தவறு. வரியைக் குறைக்கவில்லை. அந்த முறையிலேதான் மாற்றம்.

தேசீயமயமாக்குவது என்றால் நன்றாகப் பரிசீலித்துச் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். மறுபடியும் வேறுமாதிரி சொன்னதற்கு நன்றி. ஆனால் அதுவும் தவறு. தேசீயமயமாக்குவதாக மிரட்டவில்லை. அப்படி மிரட்டுவதாக ஊகித்துக்கொண்டு பேசுவதுகூட தேசீயமயத்திற்கு எதிரி போல் காட்சியை உருவாக்கும். கோரிக்கை வைக்காமல், பேச்சுவார்த்தைக்கு முற்படாமல் மிரட்டுகின்ற முறையில் தியேட்டர்கள் மூடப்பட்டால் அதற்குப் பயப்படுபவர்கள் நாங்கள் அல்ல. மத்திய அரசாங்கம் பயப்படுகிறதோ என்னவோ அது எங்களுக்குத் தெரியாது. அதை நாங்கள் சொல்லக்கூடாது.

DR. H. V. HANDE: Sir, I am pressing my amendment.

டாக்டர் ஹாண்டே அவர்கள் முன்மொழிந்த திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

(திரு. கோவை செழியன், டாக்டர் ஹாண்டே எழுந்து நின்றனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

" தமிழ் நாடு, 1974ஆம் ஆண்டு, கேளிக்கை வரி—உள்ளாட்சி மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 34/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திரு. கோவை செழியன் : * * *

இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பாததாலும் நாங்கள் வெளி நடப்புச் செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * *

என்ற தொடர் சட்டசபை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

*Clause* 2.

MR. SPEAKER : The question is :—

" That Clause 2 do stand part of the Bill "

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move the following amendment :—

" 2. For clause 2, *substitute* the following clause, namely :—

"2. *Amendment of Tamil Nadu Act X of* 1939.—In the Tamil Nadu Entertainments Tax Act, 1939 (Tamil Nadu Act X of 1939),—

(1) in section 4-A, in sub-section (1), in the *Explanation*, after the expression " this sub-section ", the expression " and of sections 4-C and 5-A " shall be inserted ;

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.



(2) in sub-section (1) of section 4-B—

(i) in clause (a), for the words " ten paise", the words " fifteen paise " shall be substituted ;

(ii) for clauses (b) and (c), the following clauses shall be substituted, namely :—

" (b) thirty paise, where such payment exceeds one rupee but does not exceed two rupees ;

(c) forty paise, where such payment exceeds two rupees but does not exceed three rupees ; and

(d) fifty paise, where such payment exceeds three rupees ". ;

(3) after section 4-B, the following section shall be inserted, namely :—

" 4-C. *Additional surcharge on tax on cinematograph exhibitions.*—(1) In the case of cinematograph exhibitions, in addition to the levies under sections 4, 4-A and 4-B of this Act and the surcharge levied under sub-section (1) of section 3 of the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961), there shall be levied and paid to the State Government an additional surcharge calculated at the following rates, namely :—

| | Rate of tax. |
|---|---|
| (i) Exhibitions held in the City of Madras.— | |
| (a) air-conditioned (not being mini-air-conditioned) theatres. | Twenty-seven rupees and fifty paise for every show. |
| (b) mini-air-conditioned theatres and non-air-conditioned theatres. | Seventeen rupees and fifty paise for every show. |
| (ii) Exhibitions held in the City of Madurai. | Seventeen rupees and fifty paise for every show. |
| (iii) Exhibitions held in Municipalities notified under item (ii) of sub-section (1) of section 4-A. | Ten rupees for every show. |
| (iv) Exhibitions held in other Municipalities. | Seven rupees and fifty paise for every show. |
| (v) Exhibitions held elsewhere | Five rupees for every show |

*Explanation.* —For the purpose of this sub-section, " mini-air-conditioned theatre ". means, an air-conditioned theatre with a seating capacity for not more than four hundred spectators.

(2) The additional surcharge levied under sub-section (1) shall be recoverable from the proprietor.

(3) Save as otherwise provided in sub-section (1), the provisions of this Act (other than sections 4, 6, 7 and 13) and the rules made thereunder shall, so far as may be, apply in relation to the additional surcharge payable under this section, as they apply in relation to the tax on cinematograph exhibitions payable under section 4-A.

(4) In section 5, after the words " on the application of the proprietor of any entertainment ", the brackets and words " [other than an entertainment held in a temporary (touring) theatre in a panchayat area] ", shall be inserted ;

(5) After section 5, the following section shall be inserted, namely:—

" 5-A. Special provision for composition for certain touring theatres.—(1) Notwithstanding anything contained in this Act or in the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961), every proprietor of a cinematograph exhibition held in a temporary (touring) theatre in any panchayat area may, at his option, and subject to such conditions as may be prescribed, instead of paying the taxes in accordance with the provisions of this Act and the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961), pay tax at the following rates, namely :—

| | *Rate of tax.* |
|---|---|
| " Exhibitions held in Panchayat—towns. | Forty-five rupees for every show. |
| Exhibitions held in panchayat villages. | Thirty rupees for every show. |

(2) Any proprietor who opts to pay tax under this section shall apply in the prescribed form to the prescribed authority to be permitted to pay the tax under this section.

(3) On being so permitted, such proprietor shall pay the tax for every week according to the number of shows permitted to be run by him in the order of such prescribed authority irrespective of the fact whether or not he runs all such shows.



(4) The option permitted under this section shall continue to be in force for such period as may be prescribed. "

(6) in sub-sections (1) and (1-A) of section 6, after the expression " section 5 ", the expression " or section 5-A " shall be inserted.

(7) to sub-section (1) of section 13, the following proviso shall be added at the end, namely :—

" Provided also that where in any case the proprietor of a cinematograph exhibition in a panchayat area pays tax at the compounded rates specified in section 5-A, there shall be paid to the panchayat and the panchayat union council concerned such sum as may be determined by the State Government in this behalf."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following amendment :—

In the proposed section 5-A the word " touring " occurring before the word " theatres " and the words " in a temporary (touring) theatre " occurring before the words " in any panchayat area " shall be omitted.

THIRU A. R. MARIMUTHU : I second the amendment.

திரு. என். கே. பழனிசாமி : இன்றையதினம் கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லக்கூடிய சமயத்தில் இந்தமாதிரி வரி ஏய்ப்பு கூடாது, ஷோ டாக்ஸ் எல்லோருக்கும் போடுகிறோம் என்று சொன்னார்கள். ஷோ டாக்ஸ் வாங்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்தும். ஆனால் யாரிடமிருந்து வாங்குவது என்பதுதான் பிரச்சினை. யாரிடத்தில் அதிகமாக இருக்கிறதோ அவர்கள் மீது வரி போடக்கூடிய முறையில் இந்த மசோதா கொண்டுவரப்படவில்லை. அவர்களுக்கு ஒரு சலுகை கொடுத்து ஷோ டாக்ஸை 10 பைசா முதல் 55 பைசா வரை இன்க்ரீஸ் செய்திருக்கிறார்கள் 20 பைசாவை, 40 பைசாவாகவும், 40 பைசாவை 50 பைசாவாகவும் உயர்த்தியிருக்கிறார்கள். இப்படி அதிகப்படியாக வரியை வசூல் செய்வது சரியல்ல. இதை சர்க்கார் வாபஸ் வாங்காததால் இதை எதிர்த்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

(முற்பகல் 11-00)

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, செக்ஷன் 5, 5 (எ)-யை எடுத்துக் கொண்டால் சில விளக்கங்களை அரசாங்கம் தந்தால் நல்லது. ஏற்கனவே compounding and consolidation provision

இருக்கிறது சட்டத்தில். நேரடியாக எவ்வளவு பேர்கள் வந்தார்கள், எவ்வளவு பேர்கள் சினிமா பார்த்தார்கள் என்று கணக்கு வைக்காமல் the State Government may on the application of the proprietor under Section 4, allow such proprietor to compound tax payable for a fixed sum. என்று சொல்லியிருக்கிறார்கள். இது வரையில் அப்படி எந்தத் தியேட்டர்காரராவது கம்பவுண்டிங் கன்ஸாலிடேஷனுக்கு அப்ளிகேஷன் போட்டதுண்டா? அப்படிப் போடவில்லை என்றால் கம்பவுண்டிங், கன்ஸாலிடேஷன் பீஸ் என்ன? அது மிக உயர்ந்த காரணத்தால் போடவில்லையா? மோட்டார் வெகிக்கிள்ஸில்கூட நான்குஐந்துமுறை ஸஸ்பென்ஷன் கொடுத்தால் அதற்குப் பதில் கம்பவுண்டிங் செய்து வண்டி ஓட்டலாம். லாரி, பஸ்ஸுக்கு இவ்வளவு என்று போட்டிருக்கிறார்கள். ரேட் வீதம் இருக்கிறது. காரணம், இது ஒரு ஆப்ஷன். வருகிற ஆள்களைப் பார்த்து வரி போடுவது, இல்லை இவ்வளவு என்று கொடுத்துவிடுகிறோம் என்று ஆப்ஷன் கொடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அது ஏற்கனவே இதில் இருக்கிறது. அதை ஏன் தியேட்டர்காரர்கள் பயன்படுத்திக் கொள்ளவில்லை? அதற்குக் காரணம் என்ன என்று அரசாங்கம் தெரிவிக்குமா?

டூரிங் சினிமா வரையில் கம்பவுண்டிங், கன்ஸாலிடேஷன் கிடையாது. டூரிங் சினிமா என்றால் பஞ்சாயத்து டவுனில் இருப்பதற்கு ஒரு காட்சிக்கு ரூ. 45, பஞ்சாயத்து கிராமம் என்றால் ஒரு காட்சிக்கு ரூ. 30 என்று கொடுக்க வேண்டுமென்று சலுகை கொடுத்திருக்கிறீர்கள். அந்தச் சலுகையை டூரிங் சினிமாக்களுக்கு மட்டும் கொடுக்காமல் பஞ்சாயத்து அல்லது பஞ்சாயத்து டவுனில் உள்ள பர்மனென்ட் தியேட்டர்களுக்கும் கொடுப்பதில் என்ன தவறு? அதில் ஒரு சட்டச் சிக்கலும் வராது.

நான் முதலில் சொன்னபோது முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் சட்டச் சிக்கல் வருகிறது என்று. என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் என்றில்லையானால் தியேட்டர் வரி என்று போட்டு விடுங்கள். அப்படி தியேட்டர் வரி என்று போட்டு வசூலித்துக் கொள்ளலாமே. சட்டத்தைத் திருத்த முடியாதா? மாற்ற முடியாதா? அதை யோசிக்க வேண்டும். அப்போது எவேஷனுக்கு இடம் இருக்காது. ஷோ டாக்ஸை ஏற்றினாலும் அது சினிமா பார்க்கிறவர்களைத்தான் பாதிக்கப் போகிறது. நான் ஏதோ பெர்மனென்ட் தியேட்டர்காரர்களுக்கு வக்காலத்து வாங்குவதாகச் சொன்னார்கள். இப்போது ஐம்பது பைசா போட்டிருக்கிறீர்கள் என்டெர்டெயின்மென்ட் டாக்ஸில். எப்படி வசூலிக்கப் போகிறீர்கள்? அது உங்களுக்கு வரப் போகிறதா? கட்டாயம் வராது. கட்டாயம் வராது என்று நான் திட்டவட்டமாகச் சொல்லமுடியும். நான்கு டிக்கட்களுக்கு வசூல் செய்தால் ஒரு டிக்கட்டுக்குள்ளது வரும்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> ஐம்பது பைசா யாருக்கு, எந்த டிக்கட்டுக்கு?





<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> எந்த டிக்கட்டாக இருந்தாலும் சரி. அந்த ஐம்பது பைசா வசூல் செய்யப்பட்டு அது பூராவும் கஜானாவிற்கு வந்தால் ஐம்பது பைசா அல்ல ஒன்றரை ரூபாய் என்று போட்டாலும் அதை ஏற்றுக்கொள்ள நான் தயார். ஆனால் அது அப்படி வராது. இப்போதே வருவது கிடையாது. நான் கேட்கிறேன், என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் ஃபுல்லாக வருகிறதா? எவ்வளவு டிக்கட்கள் விற்கிறார்கள் என்று சொல்கிறார்கள்? ஆகவே மக்கள் தலையில் ஐம்பது பைசாவைப் போட்டு தியேட்டர் முதலாளிகளுக்கு நீங்கள் மறைமுகமாகக் கொடுக்கிறீர்கள். ஷோ டாக்ஸை ஏற்றியிருப்பவர்கள் இதை ஏன் 50, 30, 20 பைசா என்று ஏற்றினீர்கள்? பொதுமக்கள்தான் கடைசியில் பாதிக்கப்படப் போகிறார்கள்.

கள்ளுக்கடை, ரேஸ் இல்லாவிட்டால் ஜனங்கள் ஜாஸ்தி சினிமா பார்க்கப் போகிறார்கள். அந்தப் பணம் பூராவும் அரசாங்கக் கஜானாவிற்கு வந்தால் அதிகமாகப் போட்டால்கூட அதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். ஆனால் இது முழுக்க முழுக்க கஜானாவிற்கு வருகிற சூழ்நிலை இல்லை, வராது. இப்போது 133 தியேட்டர்கள் இருக்கின்றன. டூரிங் தியேட்டர்கள் 586 இருக்கின்றன. 725 பெர்மனென்ட் தியேட்டர்கள் இருக்கின்றன. ஸெமி-பெர்மனென்ட் தியேட்டர்கள் 19 இருக்கின்றன. கார்ப்பரேஷன் லிமிட்டில் இருப்பது 64. முனிசிபாலிட்டியில் ஐம்பது அல்லது அறுபதுக்கு மேல் போகாது. மொத்தத்தில் இந்த என்டெர்டெயின்மென்ட் டாக்ஸ் எவேஷனைப்ளக் செய்ய என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள்? அதற்கு வழி செய்தால் மக்களுக்கு நல்லது. இல்லை என்றால் தியேட்டர் முதலாளிகள்தான் பயனடைவார்கள்.

<u>மாண்புமிகு திரு. செ. மாதவன் :</u> தலைவர் அவர்களே, இந்த் சினிமாப் பிரச்னையில் அடிக்கடி வக்காலத்து என்ற வார்த்தை வருகிறது. வெளியே இருப்பவர்கள் தப்பாக நினைக்கப்போகிறார்கள், யார் யார் வக்காலத்து வாங்குகிறார்கள் என்று தவறான கருத்து ஏற்பட்டுவிடக்கூடாது.

இந்தப் பிரச்னை பற்றி நான் ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன். தியேட்டர்கள் பொறுத்தவரையில் ஆப்ஷன் என்ற முறையில் பரிசீலிக்கப்படும். வரி ஏய்ப்பு இருப்பதை ஒத்துக்கொண்டார்கள். ஸீட்டுகளுக்குப் போடலாம் என்பதுபற்றி ஏற்கனவே பரிசீலித்தோம். அரசாங்க வழக்குரைஞர்கள் வேறு கருத்து சொல்கிறார்கள். அதுபற்றி மறுபரிசீலனை செய்யவேண்டுமென்று ஏற்கனவே சொன்னேன். Percentage of gross income என்பதுபற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அது விரைவில் வரும் என்று சொன்னேன். அதற்குப் பிறகும் இப்படிப் பேசுவது வருத்தமாக இருக்கிறது.

[திரு. செ. மாதவன்] [1974 ஆகஸ்ட் 28

கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஏன் வரியைக் குறைத்தீர்கள், இன்னும் அதிகமாகப் போட வேண்டாமா என்று கேட்டுவிட்டு அதற்கு வெளிநடப்பு செய்தார்கள்.

இந்த வரியை அதிகமாகப் போட்டுவிட்டீர்கள், இது சினிமாத் தொழிலைப் பாதிக்கப் போகிறது, அப்படிப் பாதித்தால் என்ன என்ன ஆகும் என்று கவலைப்படுகிறவர்கள் ஏன் அதிகமாகப் போட்டீர்கள் என்று சொல்லி அவர்கள் வெளிநடப்பு செய்கிறார்கள். மக்கள் இரண்டையும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அரசாங்கத்தின் நிலை நேர்மையான முறையில் வருவாய் வரவேண்டும் என்று அரசாங்கம் நேர்மையான பாதையில் செல்கிறது.

வெளியே ஒன்றாக இருக்கிற இரண்டு கட்சிகள் சட்டமன்றத்திற்குள்ளே இரண்டுவிதக் கருத்துக்களைச் சொல்லி ஒரே சட்டத்தில் வெளியேறிய காட்சியை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரையில் சினிமாத்துறை மூலம் வருவாயைப் பெருக்கிட இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் சில திருத்தங்கள் வேண்டுமென்றால் அதையும் கொண்டு வரலாம் என்று கூறி இந்தத் திருத்தம் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

அரசினர் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு' நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 2, திருத்தப்பட்டபடி,' பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

*Clause* 3.

MR. SPEAKER : The question is : " That clause 3 do stand part of the Bill."

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move—

For clause 3, *substitute* the following clause, namely :—

' 3. *Amendment of Tamil Nadu Act* 52 *of* 1961 : In the Tamil Nadu Local Authorities Finance Act, 1961 (Tamil Nadu Act 52 of 1961) to sub-section (1) of section 3, the following proviso shall be added, namely:—

" Provided that where in any case the proprietor of a cinematograph exhibition pays tax at the compounded rates specified in section 5-A of the Entertainments Tax Act, no surcharge shall be levied under this section by the local authority concerned. "

The Government amendment was put and carried.

Clause 3, asamended, was put and carried.



1974 ஆகஸ்ட் 28]

*Clause* 1.

MR. SPEAKER : The question is : " That clause 1 do stand part of the Bill. "

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I move the following amendment :—

" 1. In clause 1, for sub-clause (2) *substitute* the following sub-clause, namely :—

" (2) Clauses (1) and (3) of section 2 shall be deemed to have come into force on the 15th August 1974 and the rest of this Act shall come into force on such date as the State Government may, by notification, appoint."

The amendment was put and carried.

Clause 1, as amended, was put and carried.

முகப்புரை, நெடுத்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

THE HON. THIRU S. MADHAVAN :. Sir, I move

' That the TamilNadu Entertainments Tax and Local Authorities Finance (Amendment) Bill, 1974, as amended, be passed '.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன்வடிவு, திருத்தப்பட்டபடி, சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(ஆ) தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, குதிரைப் பந்தயங்கள் (பணையம் அல்லது பந்தயம் கட்டுதல் ஒழிப்பு) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/74).

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே,

" தமிழ்நாடு, 1974-ம் ஆண்டு, குதிரைப் பந்தயங்கள் (பணையம் அல்லது பந்தயம் கட்டுதல் ஒழிப்பு) சட்ட முன்வடிவு* (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/74) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும் " என்று கோருகிறேன்.

* 26—8—1974 தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[THIRU S. MADHAVAN] [1974 ஆகஸ்ட் 28

Sir, under the Madras City Police Act, 1888 (Tamil Nadu Act III of 1888) and the Tamil Nadu Gaming Act, 1930 (Tamil Nadu Act III of 1930), wagering or betting on horse races in the State of Tamil Nadu is permitted. But in 1949, the Legislature enacted the Madras City Police and Gaming (Amendment) Act, 1949 (Tamil Nadu Act VII of 1949), seeking to include within the definition of ' gaming ', the wagering or betting on horse races by reason of section 2 and 4 of Tamil Nadu Act VII of 1949. But the bringing into force of these sections has been postponed from time to time. It has now been decided to abolish wagering or betting on horse races on and from the 31st March 1975. It is therefore proposed to bring into force the provisions of the said sections 2 and 4 on the 31st March 1975 so as to make wagering or betting on horse races punishable under the Madras City Police Act, 1888 and the Tamil Nadu Gaming Act, 1930.

It is also proposed specifically to cancel the orders of the Government issued in G.O. Ms. No. 1570, Home, dated the 7th June 1973, directing the postponement of the operation of the said sections till the 30th June 1976.

The Bill seeks to achieve the above objects.

திரு. என். கே. பழனிசாமி : சார், இந்த மசோதாவை நான் வரவேற்கிறேன்.

ஆனால் இந்த மசோதாவில் டிசம்பர் மாதம் வரையிலும் 6 மாத காலம் இந்த ஒழிப்புக்கு தவணை கொடுத்து இருப்பதை நான் எதிர்க்கிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வரும் சமயத்திதில் இந்த மசோதா சட்டமானவுடன் அமலுக்கு வரும் என்று சொல்லிவிட்டு, இப்போது 6 மாதகாலம் தவணை கொடுக்கவேண்டிய அவசியம் ஏன் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல. இந்தக் குதிரைப் பந்தயம் ஒழிப்பு வெறும் சென்டிமென்டலாக இருக்குமே ஒழிய நடைமுறையில் அதைக் கட்டுப்படுத்துவதற்கு வழிமுறைகள் இதில் இல்லை. காரணம், மைசூரில் நடக்கும் குதிரைப் பந்தயத்திற்கு மற்ற ஊர்களில் நடப்பதற்கு, இங்கே புக்கீஸ் மூலம் டிக்கெட் விற்கும் முறை நடைபெற்று வருகிறது. மைசூரில் குதிரைப் பந்தயம் நடக்கிறது என்று சொன்னால் ரூ. 10 அங்கே டிக்கெட் என்றால் ரூ. 2 அதிகம் பெற்று இங்கே டிக்கெட் விற்கிறார்கள். ஆகவே, இந்த புக்கீஸ் மூலமாக மறுபடியும் இங்கேயிருக்கும் ஜனங்கள் அங்கே நடக்கும் குதிரைப் பந்தயங்களில் கலந்து கொள்ளமுடியும். ஆகவே, அந்த புக்கீஸ் முறையைத்தடை செய்யவேண்டும்.. அந்தவகையில்

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்—தலைமை).

இந்தச் சட்டத்தில் வகைசெய்யப்படவில்லை.



1974 ஆகஸ்ட் 28] [திரு. என். கே. பழனிசாமி]

குறிப்பாக, இந்தக் குதிரைப் பந்தயத்தால் பாதிக்கப்படுகிறவர்கள் சென்னை நகரத்தில் இருப்பவர்கள்தான். மற்ற மாவட்டங்களில் இருப்பவர்கள் இல்லை. ஆகவே, இந்த பெட்டிங் முறையைக் கட்டுப்படுத்தாமல் இருக்கும்போது, இந்தக் குதிரைப் பந்தயத்தை எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்பதே நான் கேட்க விரும்புவதாகும்.

காட்டன் பெட்டிங் எல்லாம்கூட இருக்கிறது. அவற்றை கட்டுப்படுத்த முடியவில்லை இன்னும்......

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தாங்கள் பேசுவதைப் புரிந்து கொள்ளமுடியவில்லை. குதிரைப் பந்தயம் ஒழிக்க வேண்டுமென்று பேசுகிறீர்களா ? காட்டன் பெட்டிங் செய்வதைத் தடுத்து இருக்கிறோம். கிண்டியிலே குதிரை ஓடுவதை மட்டும் தடுக்கவில்லை, எங்கே ஓடினாலும் அதன் மீது பெட்டிங் செய்வதைத் தடுக்கிறோம்.

திரு. என். கே. பழனிசாமி : இங்கே ஏஜென்டுகள் இருக்கிறார்கள். அவர்களைத் தடைசெய்யவில்லையே......

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதைத்தான் சொல்கிறேன், இங்கே, சென்னையில் குதிரை ஓடுவதை மட்டும் தடுக்கும் சட்டம் இல்லை, எங்கே ஓடினாலும் குதிரைப் பந்தயத்தில் பெட்டிங் வைத்தால் தடுக்கப்படும். அங்கத்தினருக்குத் தெரிந்து தகவல் கொடுத்தால் அதையும் தடுப்போம்.

திரு. என். கே. பழனிசாமி : ஆகவே, இந்த பந்தயத்தை ஒழிப்பதில் ஏன் காலதாமதம் ? ஏற்கெனவே அரசாங்கத்திற்கு இரண்டு கோடி வருமானம் வருகிறது. அதை நடத்துகிறவர்களுக்கு 2 1/2 கோடி வருமானம் வருகிறது. அது பூராவும் பொது மக்கள் பணம். அந்தப் பணத்தை அவர்கள் பல விதமாக செலவு செய்துவிடுகிறார்கள். அங்கே ஸ்டூவர்ட் என்று சொல்லி ஒருவர் இருக்கிறார். அவர் எந்தக் குதிரை வரவேண்டுமென்று முடிவு செய்கிறாரோ அந்தக் குதிரைதான் பந்தயத்தில் ஜெயிக்க வேண்டும். அந்த முறையில் செய்கிறார்கள்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : இது அநியாயமான, ஆதாரமற்ற குற்றச்சாட்டு. யாரும் எந்தக் குதிரை பந்தயத்தில் ஜெயிக்க வேண்டுமென்று சொல்வது இல்லை. எந்த ஸ்டூவர்ட்டும் அதைச் செய்வது இல்லை. ஸ்டூவர்ட்டாக இருப்பவர்கள் கட்டக் கூடாது. அப்படியே அவர்கள் சொந்தக்காரர்கள் கட்டினாலும், அவர்கள் குதிரை வரவேண்டுமென்று அவர்களே முடிவு செய்ய முடியாது. அவர்கள் குதிரைப் பந்தயத்தைப் பார்க்காமல், குதிரைப் பந்தயத்தைப் பார்த்ததுபோல் பேசுகிறார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : குதிரைக்கு ஆல்கஹால் போடுவது, ஜாக்கியை சரி செய்வது எல்லாம் செய்வார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது தள்ளி வைத்ததற்குக் காரணம், 400 பேருக்கு வேலை இல்லாமல் போகும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தள்ளி வைக்க வேண்டுமென்று ஒரு கட்சியின் சார்பில் இங்கே முறையீடு தெரிவிக்கப்பட்டது. 6 மாதம் தள்ளி வைக்கலாம் என்று சொன்னார்கள். அது பற்றி கனம் அங்கத்தினர் கருத்து என்ன ?

திரு. என். கே. பழனிசாமி : ஏற்கெனவே நான் சொன்னேன். இந்த மசோதா ஆக்டான உடனே அமலுக்கு வரவேண்டுமென்பதாகும். சர்க்கார் பல நன்மைகளைக் கருதி சில காரியங்களைச் செய்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டசபையில் அந்தக் கட்சியின் கருத்தை தாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை என்று சொன்னதற்கு நன்றி.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது கூட மதுவிலக்குத் தள்ளப்பட்டதால் . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மதுவிலக்கு தள்ளப்பட்டது என்று சொல்வது தவறு. மதுவிலக்கு வந்து இருக்கிறது என்று சொல்லவேண்டும்.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது மதுவிலக்கு கொண்டு வந்திருப்பதால், கள்ளுக்கடை வைத்திருப்பவர்களுக்கு வேலை இல்லை. அதற்காக அதை இன்னும் ஒரு வருடம் தள்ளி வைக்கலாம். கள்ளுக்கடைகளில் ஒரு ஒரு சொட்டாக வாங்கிக் குடித்துகொண்டிருப்பான். அவனுக்கு வேலை இல்லை என்பதற்காக தள்ளி வைக்கலாம். சில நல்ல காரியம் செய்கிறபோது 400 பேர் வேலையில்லாமல் இருப்பார்கள் என்று பார்ப்பதைவிட, நாட்டிலுள்ள மக்களின் நலனைக் கருத்தில் கொள்ளவேண்டும். அங்கே குதிரைப் பந்தயத்தில் இருப்பவர்களுக்கு ' பெனவலென்ட் பண்டு ' இருக்கிறது. ப்ராவிடென்ட் பண்டு இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுத்து, உடனடியாக இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, குதிரைப் பந்தய ஒழிப்பு மசோதாவினை திராவிட முன்னேற்றக் கழகம் ஆரம்பித்த நாட்கள் முதற்கொண்டு



பேரறிஞர் அண்ணா அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தப் பந்தயத்தை, ஒழித்து விடவேண்டும், இந்தக் குதிரைப் பந்தயம் இருப்பதால் ஏழை மக்கள், குறிப்பாக சென்னையைச் சுற்றியுள்ள மக்கள் பல பேர் தங்களுடைய வாழ்வையும், வளத்தையும் இழக்கும் நிலை இருக்கிறது என்று நாம் நீண்ட காலமாகவே பேசிக் கொண்டு வந்து, அறிஞர் அண்ணா அவர்கள் விரும்பி அவர்கள் இருக்கின்ற சமயத்திலே அதைச் செய்ய வேண்டுமென்று நினைத்து இருந்தாலும் பொருளாதார நெருக்கடி காரணமாக அந்தச் சமயத்தில் செய்ய முடியாமல், இன்றையதினம் அவர்களுடைய வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக் கொண்டு வருவது கண்டு திராவிட முன்னேற்றக் கழகம் மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கக்கூடிய தாய்மார்களும், ஏழை எளிய குடும்பங்களில் இருக்கக்கூடியவர்கள் மிக்க மகிழ்ச்சியையும், பாராட்டையும் அளிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இப்படிப்பட்ட நல்ல மசோதாக்கள் கொண்டு வரும்போது, ரூ. 2 கோடி, ரூ. 3 கோடி வருமானம் போய்விடும் அரசுக்கு என்ற சூழ்நிலை இருந்தாலும், 56-57 கோடி ரூபாய் மதுவிலக்குக் கொள்கை அமல் படுத்துவதால் இழப்பு ஏற்படும் என்று இருந்தாலும், வருமானத்தை மட்டும் கருத்தில் கொள்ளாமல் எவ்வளவு சிரமங்கள் இருந்தாலும், அதைச் சிறந்த முறையில் கொண்டு வருவதற்கு நம்முடைய அரசாங்கம் முன் வந்திருக்கிறது, நம்முடைய கலைஞர் அவர்கள் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு நாம் அத்தனைபேரும் பெருமைப் படுகிறோம். அதற்காக என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் பழனிசாமி அவர்கள் வரவேற்பதைப்போல் பேசினார்கள். அவர்களுடைய உள்ளத்திலே இருப்பதைத் தெளிவாகக் காட்டினார்கள், மதுவிலக்குக் கொள்கையிலும் அவருக்கு அப்படித்தான். குதிரைப் பந்தய ஒழிப்பிலும் அப்படித்தான். ஆனால் நான் நிச்சயமாகச் சொல்லுகிறேன், தமிழகத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள், தாய்மார்கள மதுவிலக்குக் கொள்கையினால் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறார்கள். அதைப்போல இந்தக் குதிரைப் பந்தய ஒழிப்பிலும் எத்தனைபேர் வரவேற்கிறார்கள் என்பதை, இதுவரையில் கஷ்டங்களை அனுபவிக்கக் கூடிய குடும்பங்களைப் பார்த்தால் தெரியும்.

குதிரைப் பந்தயத்தை ஒழித்துவிட்டால் போதுமா என்று சொன்னார்கள். வெளி மாநிலங்களில் போய் பெட்டிங் செய்வார்களே, அதை தடுக்க முடியுமா என்று கேட்டார்கள். பம்பாய், பெங்களூரில் குதிரைப் பந்தயம் நடக்கிறது. பப்ளிக்காக அங்கே போகமாட்டார்கள் என்றாலும் மறைமுகமாக பெட்டிங் செய்வார்கள் என்று சொன்னார்கள். அதை அரசாங்கம் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும்.

[திரு. வி. கிருஷ்ணமூர்த்தி] [1974 ஆகஸ்ட் 28

விளக்கு எரிந்து கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அதன் பக்கத்திலே இருக்கக்கூடிய குழந்தைக்கு விளக்கு சுடும் என்று தெரியாது. ஆனால் அந்தக் குழந்தையின் தாய்க்கு அது தெரியும். ஆகவே, நல்ல தாயாக இருந்தால், குழந்தை கையை விளக்கிலே வைத்து, சுட்டு புண்ணாகிவிடும் என்று கருதி, குழந்தைக்கு அருகிலே விளக்கை வைக்காமல் தூரத்திலேதான் வைப்பாள். அதைப்போலதான் பொதுமக்களை இந்தக் கெட்ட பழக்கம்—இந்தக் குதிரைப் பந்தயம் ஒட்டக்கூடாது என்று நம்முடைய மாநிலத்திலே குதிரைப்பந்தயத்தை ஒழிக்கிறோம். அந்தக் கெட்ட பழக்கம் இங்கே இல்லாவிட்டால், இங்கே அந்தப் பழக்கம் குறைந்துவிடும். மக்களுடைய பொருளாதாரம் பாதிக்காது. அந்த முறையிலேதான் இன்றைய தினம் நம்முடைய முதலமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தை கொண்டுவந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே இது சம்பந்தப்பட்ட கேள்வியைக் கூட கேட்டிருக்கிறேன். அப்போது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இங்கே ஒழித்துவிட்டால் பக்கத்திலே இருக்கிற ஆந்திராவுக்கு போவார்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்லியிருந்தாலும் அதிலுள்ள நல்ல காரியங்களை ஆராய்ந்து பார்த்து, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தத் தீயப் பழக்கம் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்று குதிரைப் பந்தயத்தை ஒழித்திருக்கிறார்கள்.

அதைப் போலவேதான் ஒரு கொள்கையை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். கஷ்டப்படாமல், சிரமப்படாமல் பணம் சேர்க்கின்ற முறையை அரசாங்கமோ அல்லது வேறு யாருமோ வரவேற்கக்கூடாது. லாட்டரி சீட்டுக் கூட குதிரைப் பந்தயத்தைப்போல ஒழிக்கப்பட வேண்டும். முதலமைச்சர் அவர்கள் அடுத்தக் கூட்டத் தொடரில் அதைச் செய்வார்கள் என்று கருதுகிறேன். ஒரு ரூபாய் பணம் கொடுத்து லாட்டரி சீட்டு வாங்கினால் ஒரு லட்சம் கிடைக்கும் என்ற எண்ணம் சோம்பேறித்தனத்தை வளர்க்கும். அதைத்தான் அப்போது இராஜாஜி அவர்கள் சொன்னார்கள். கஷ்டப்படாமல் ஒரு லட்சத்திற்கு அதிபதியாகிவிடலாம், இரண்டு லட்சத்திற்கு அதிபதியாகிவிடலாம் என்ற எண்ணம் மக்களுக்கு வரக்கூடாது. ஆகவே, குதிரைப் பந்தயத்தை ஒழித்ததைப் போல அதையும் ஒழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது பலர் குறை சொன்னாலும் ஒரு காலம் வரும். அப்போது எதிர்க்கட்சிக்காரர்களே கூட பாராட்டுவார்கள். இந்த நாட்டிலே குதிரைப் பந்தயம் வெள்ளைக்காரர்கள் காலம் தொட்டே இருந்தது. காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலும் இருந்தது. ஆனால் கலைஞர் என்று ஒருவர் இருந்தார். அவர் தான் குதிரைப் பந்தயத்தை ஒழித்தார் என்று எதிர்கால சந்ததியினர் பாராட்டுவார்கள். அதைப் போலவே லாட்டரிச் சீட்டையும் ஒழித்து விடவேண்டும்; மக்களுக்கு சிரமப்பட்டு உழைத்து பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற சுறுசுறுப்பும் உத்வேகமும் ஏற்படச் செய்யவேண்டும் என்று கேட்டு, இந்த அளவில் அமர்கிறேன். வணக்கம்.



1974 ஆகஸ்ட் 28] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

*திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, குதிரைப் பந்தயத்தையும் பெட்டிங் முறையையும் ஒழிக்கின்ற அரசின் முடிவை வரவேற்று மகிழ்ச்சியடைகின்ற அதே நேரத்தில் அது பற்றி என்னுடைய ஒரு சில கருத்துக்களையும் கூற விரும்புகிறேன்.

குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற கோரிக்கை இந்தப் பேரவையிலே ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலே கூறப்பட்டு உள்ளது. பட்ஜெட் விவாதத்திலும், கவர்னர் உரை மீதான விவாதத்திலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அப்போதெல்லாம் குதிரைப்பந்தயத்தை ஒழித்துவிட்டால் நமக்கு வரவேண்டிய வருமானம் வெளி மாநிலங்களுக்குப் போய்விடும் என்று காரணம் சொல்லி, அதைத் தட்டிக் கழித்தார்கள். இப்போது திடீரென்று ஒரு அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள்.

இங்கே அறிவிப்புச் செய்த பின்னால் சில உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள் என்று சொல்லி, விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது 3 மாதத்திற்குத் தள்ளி வைக்கத் தயார் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது 3 மாதத்திற்குத் தள்ளிப்போகும் என்று சொன்னது 5 மாதத்திற்குத் தள்ளிப் போயிருக்கிறது. ஆக, குதிரைப் பந்தய ஒழிப்பு என்பது ஒரு கொள்கைப் பிரச்சனையாக வரும்போது, எடுக்கக்கூடிய முடிவைச் சிந்தித்து எடுக்க வேண்டாமா? அறிவிப்பிலே ஒன்றைச் சொன்னார்கள். விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது 3 மாதம் என்றார்கள். இந்த மசோதாவிலே 5 மாதம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இந்த மசோதாதான் அரசாங்கத்தின் இறுதி முடிவு என்று சொல்வதற்கு இடமில்லாமல் இருக்கிறது. அறிவிப்பு வந்தபோது இதில் அரசாங்கம் உறுதியாக இருக்கும் என்று நம்பினேன். இந்த மசோதாவைப் பார்க்கும்போது அந்த நம்பிக்கைக்கு இடமில்லை.

ஏழை எளிய மக்களின் கண்ணீரைத் துடைக்கவே இந்த மசோதா வந்திருக்கிறது என்று நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். ஏழையின் கண்ணீரைத் தடுக்கின்ற வகையிலே அறிவிக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கை முடிவில் இந்தத் தடுமாற்றம் ஏற்படக் காரணம் என்ன? இந்த மசோதாவிலே தடுமாற்றம் அடைந்திருக்கிறார்கள்; மாறுதல் செய்திருக்கிறார்கள்; அதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1974 ஆகஸ்ட் 28

இந்தக் குதிரைப் பந்தயத் தொழிலில், 400 பேர், 800 பேர், ஆயிரம் பேர், 2,000 பேர் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைப்பற்றியெல்லாம் எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அந்தப் பக்கமே தலைவைத்துப் படுப்பதில்லை. தொழிலாளர் களுக்கு இழப்பு ஏற்படும் என்று சொன்னால் ஒரு கொள்கையை வகுக்கும்போது, அதையெல்லாம் யோசித்துச் செய்ய வேண்டாமா? அதைத் திட்டமிட்டுச் செய்ய வேண்டாமா? முதலமைச்சர் எதையும் திட்டமிட்டுச் செய்யக் கூடிய ஆற்றல் படைத்தவர். அப்படித் தீர யோசித்துச் செய்திருந்தால் மீண்டும் மீண்டும் வாய்தா போடவேண்டிய அவசியம் இருக்காது. ஆகவே, இந்த அரசுக்கு இதிலே உண்மையான நாட்டம் இருக்கிறதா என்று ஐயப்பட வேண்டியிருக்கிறது.

இந்த மசோதாவுக்கு நான் கூட ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2-ம் தேதிமுதல் அமல் படுத்தவேண்டுமென்ற திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். குதிரைப் பந்தயத்தை அக்டோபர் 2-ம் தேதி முதல் ஒழித்துவிடவேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

இம்மாதிரியான கொள்கை முடிவுகளை எடுக்கும்போது அவசரக்கோலமாக எடுக்காமல் இருக்கின்ற பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து பார்த்து, பிறகு கொண்டுவருவதாக இருந்தால் ஏற்கெனவே எடுத்த முடிவை மாற்ற வேண்டியிருக்காது. காஷுவலாக எடுக்கின்ற முடிவுகளில் மாற்றங்கள் நிச்சயமாக வரத்தான் செய்யும். இதிலும் அப்படித்தான் வந்திருக்கிறது. காஷுவலாக முடிவெடுத்துவிட்டு, பிறகு ஊசலாடுவது கூடாது என்று சொல்லி, ஊசலாட்டங்கள், சஞ்சலங்கள் கூடாது என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்றுச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் ஏதோ ஆங்கிலேயர் காலத்தில் ஒழிக்கப்படாமல், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் ஒழிக்கப்படாமல் இருந்த குதிரைப் பந்தயத்தை நாங்கள் ஒழித்துவிட்டோம் என்று சொன்னார்கள். அதற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளும் அதே நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

1949-ம் ஆண்டு சட்டத்தில் பிரிவு 2, 4-ன்படி குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்ற எண்ணத்தை அந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் ஒழிக்கப்படுவதற்கான சமயம் தான் குறிக்கப்படாமல் காலம் கழிந்து விட்டது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): Did it take 25 years?



1974 ஆகஸ்ட் 28]

திரு. ஜே. ஜேம்ஸ்; I am coming to that point. குதிரை பந்தய ஒழிப்பை காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒத்திப் போட்டார்கள். ஓராண்டுக்குத்தான் குதிரைப் பந்தயத்தை நடத்த அனுமதி கொடுக்கப்பட்டது. 1949-ம் ஆண்டுச் சட்டத்தில் ஓராண்டுக்கு அனுமதி வழங்கப்பட்டது காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில்.

முற்பகல் 11-30

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் பதவிக்கு வருவதற்கு முன்னதாகவே தனது தேர்தல் அறிக்கையில் குதிரைப் பந்தயத்தை ஒழிப்போம் என்ற வாக்குறுதியை அளித்துவிட்டுக் கடந்த ஏழு ஆண்டுக்காலமாக அதனை நிறைவேற்றாமல் உறங்கி விட்டு............

திரு. இராம. அரங்கண்ணல்: தொழில்களைத் தேசியமாக்குவோம் என்று 50 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அகில இந்தியக் காங்கிரஸ் கட்சி தீர்மானம் போட்டதே, ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு என்ன செய்தது?

திரு. ஜே. ஜேம்ஸ்: எத்தனை தொழில்களைத் தேசியமாக்கியிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன். கொடுத்த வாக்குறுதியை காங்கிரஸ் கட்சி நிறைவேற்றித்தான் வந்திருக்கிறது. ஆனால் ஒவ்வொரு ஆண்டுக்கும் குதிரைப் பந்தயம் நடத்த காங்கிரஸ் ஆட்சியில் அனுமதி கொடுக்கப்பட்டு வந்தது என்றால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்ற பிறகுதான் 1970 ஆம் ஆண்டு ஜி. ஓ. 570 இன் கீழ் 3 ஆண்டுக்காலத்திற்குத் தொடர்ந்து அனுமதி அளித்தது. அவர்களுக்கு நாம் அளித்திருக்கிற அனுமதிப்படி 1976-ஆம் ஆண்டு வரை அவர்கள் குதிரைப் பந்தயத்தை நடத்தலாம். குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு இருந்திருந்தால் ஓராண்டுக்காகக் கொடுக்கப்பட்டு வந்த அனுமதியை ஏன் 3 ஆண்டுக் காலத்திற்கு நீட்டித்துக் கொடுத்தீர்கள்? இந்தத் தருணத்திலாவது இதை ஒழிக்கவேண்டுமென்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருப்பதை நான் வரவேற்கிறேன். இதற்காக உண்மையில் மகிழ்ச்சி அடைகிறேன்.

முக்கியமாக நண்பர் கிருஷ்ணமூர்த்தி குறிப்பிட்டதைப் போல தீய பழக்கங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்கிற கொள்கை அடிப்படையில் பார்த்தால் லாட்டரியையும் ஒழித்தாகவேண்டும். மதுவிலக்கை நிறுத்திவைக்க முதலமைச்சர் முன் வந்தபோது தனது உள்ளத்தில் ஒரு முள் குத்தியது போலவும் அந்த உணர்வோடு 3 ஆண்டுக் காலம் இருந்ததாகவும், இன்றைக்கு மதுவிலக்கைத் திரும்பக் கொண்டு வருகிற நேரத்தில்தான் அந்த முள் எடுக்கப்பட்டதாகவும் சொன்னார். அதைப் போன்ற உணர்வேதான் லாட்டரியை அவர்கள் கொண்டு வந்தபோதும் ஏற்பட்டிருக்கவேண்டும். உழைக்காமல் லட்சாதிபதியாகிவிடலாம்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1974 ஆகஸ்ட் 28

என்ற எண்ணத்தில் நாட்டில் அழிந்து வருகிற குடும்பங்கள் எத்தனையோ. அதுவும் இதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும் என்பது போல தினத்தந்தி போன்ற பத்திரிகைகளில் லட்சாதிபதியானவர்களது விளம்பரங்கள் எல்லாம் செய்யப்படுகிறது. ஆகவே இதையும் கண்டிப்பாக ஒழிக்க தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் ஏன் இதை 6 மாதங்களுக்கு நீட்டிக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே நவம்பரோடு ஒழிப்பதாக இருந்தோம். இப்போது மார்ச் வரை நீட்டிக்கப்படுகிறது. எதிர்க்கட்சிகள் கேட்டுக் கொண்டதால் அப்படி நீட்டிப்பதாகச் சொன்னார்கள். அப்படிக் கேட்டுக் கொள்கிற எதிர்க்கட்சியே இல்லாத காரணத்தினால் இதை முன்பு திட்டமிட்டபடியே நவம்பரோடு ஒழித்துவிடவேண்டும்.

கடைசியாக இதில் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிச்சயமாக மாற்று வேலைக்கான ஏற்பாட்டைச் செய்து தருவதற்கும் ஆவன செய்யவேண்டுமென்று சொல்லி இந்த மசோதாவை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : இந்த மசோதாவை வரவேற்று என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னைப் பொறுத்த வரையில் இதை முழுக்க முழுக்க வரவேற்கிறேன்.

ஆனால் இந்த மசோதாவின்படி மார்ச் 75 வரை அனுமதி கொடுக்கப்படுகிறது. ஆனால் முன்பு அனுமதிக்கப்பட்டபடி ஜூன் 76 வரை அனுமதி இருந்த காரணத்தினால் அவர்கள் 70 லட்சம், 80 லட்சம் என்று உறுப்பினர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள்—குதிரைகள் வாங்க. மார்ச் 75-ஓடு சரி என்றால் அந்தக் கடன் தொகையை எப்படி வசூலிப்பது ? ஆகவே 76 ஜூன் வரையில் இதை நீட்டித்தருவதுதான் பொருத்தமாக இருக்கும். அப்படி நீட்டித்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று மார்ச்சோடு என்கிறபோது சென்னையில் ரேஸ் முடிந்துவிடும். ஆனால் அதற்குப் பிறகுதான் ஊட்டியில் ஆரம்பிக்கும். ஊட்டியிலே உள்ளவர்களுக்கு இந்த ரேஸ் அங்கே நடக்காவிட்டால் வியாபாரம் இல்லை—அதுதான் அவர்களுக்கு சீசன்—ஊட்டி நகராட்சி மன்றமே தீர்மானம் போட்டு அனுப்பியிருக்கிறது. மேலும் அங்கே உள்ளவர்கள் 2 ரூபாய்க்கு சீப் டிக்கெட்தான் ஆடுவார்கள். அங்கே ரேஸ் ஆட வருகிறவர்கள் வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள்—அதுவும் 2,000 பேர்கள்தான் வருவார்கள். அவர்களும் பெரிய பணக்காரர்கள்—ஆகவே ஜூன் முடிவுவரை என்று காலம் நீட்டிக்கப்படுவதுதான் பொருத்தமாக இருக்கும்.



1974 ஆகஸ்ட் 28] [திரு. ஏ. சி. நரசிம்மன்]

இந்த ரேஸ் இருநூறு ஆண்டுகளாக சென்னையில் இருக்கிறது. 1949-லேயே சட்டமியற்றினார்கள் என்றாலும் தொடர்ந்து இருந்து வந்திருக்கிறது. இதைக் கொண்டு வருகிறபோது ஜூன் 76 வரை நீட்டிப்பது நல்லது. இல்லையென்றாலும் ஜூன் 75 வரையாவது நீட்டிக்க வேண்டும். பொதுவாக இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பி எல்லாப் பிரச்சினைகளையும்ஆராய்ந்து பார்த்தபின் கொண்டுவரலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி : எனக்கு முன் பேசிய உறுப்பினர் ரேஸ் கிளப் உறுப்பினர்களுக்குக் கடன் கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். ரிசர்வ் பாங்க் தான் நேரிடையாக அவர்களுக்குக் கடன் கொடுத்திருக்கிறது. ஆகவே அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் ?

திரு. ஏ. சி. நரசிம்மன் : ரிசர்வ் பாங்க் இவர்கள் மூலமாகத்தான் கடன் வழங்கியிருக்கிறது. ஆகவே இவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஸ்டுவர்டு சொல்வதையே கரெக்ட் என்று ஏற்றுக் கொள்வோம். இதிலே போய் தகராறு என்ன ?

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I congratulate this Government on their introducing this Bill, but I have got a very serious objection. My objection is that when the whole of India is encouraging racing or not stopping racing, how can Tamil Nadu prevent betting on racing. The Hon. Member, Thiru A. Subramaniam congratulated the Government. The Party that governs Karnataka State, the Party that rules Andhra Pradesh, the Party that rules Maharashtra, the Party that rules Bengal—the Party belongs to Indira Congress—has not abolished racing in their States. Such being the case, I cannot understand how the Hon. Member, Thiru Subramaniam, particularly can support the abolition of racing in Tamil Nadu.

Sir, the declared policy of the Congress Government is Socialism and I was a member of that Party for many, many years. If socialism has to be practised, there cannot be gambling and if there cannot be gambling, there cannot be horse-racing, which should have been abolished in 1949 itself.

The Hon. Member, Thiru James has stated that their Government had passed the Bill and they did not act according to it. That is not what is wanted. When a Bill is passed, you must act according to the Bill. Even the Congress Government did not have the courage to do it.

[ THIRU K. M. SUBRAMANIAM ] [1974 ஆகஸ்ட் 28

In this connection I want to point out that I am never a supporter of racing and I am never a supporter of drinking liquor. The other day the Hon. Chief Minister had stated that except K. M. Subramaniam, others would co-operate with him in this regard. Many persons have asked me, of all persons why should I support racing. I am not supporting racing. I am not even supporting gambling on horses. My point is that you should adopt an all India policy in regard to this matter.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் உறுப்பினர் அவர்கள் இதை ஆதரிக்கிறேன் என்ற முகாந்திரத்தில் தமிழ்நாட்டில் ஏன் கொண்டு வந்தீர்கள் என்று கண்டிக்கிறார்களே, தமிழ்நாட்டிலே கொண்டு வந்திருப்பதை அவர் பாராட்டவில்லை. ஆல் இந்தியா பாலிசி என்று எடுத்துக் கொண்டு, இதைத் தள்ளிப் போடவேண்டுமென்று கருதுகிறார்களா ?

THIRU K. M. SUBRAMANIAM : I am very sorry he has misunderstood. I entirely support the Tamil Nadu policy. I only say that Tamil Nadu may not be able to enforce it, because of the surrounding areas where racing is going on. That is my point. However much we may say, as Mr. Krishnamoorthy has put it, if you are going to have racing nearby, much could not be gained by abolishing racing here only. What amount of illegal betting is going on in Tamil Nadu, Assembly members may not know. The steward who spoke previously may not know about the extent of illegal betting going on. I know several lakhs are being spent illegally in this respect, not only inside the race course but outside also. That is my objection.

Until the Government of India takes up a decision to abolish racing throughout the country, let us wait. They have also given election promises to abolish racing. Let them fulfil that promise.

I say raffling is also as bad as racing, poor people are spending from Re. 1 onwards thinking they would get huge prizes. If you are going to abolish racing, gambling on racing, stop this raffle sale also.

Only enactment can be there but enforcement is difficult. So I say till 1980 let us continue. Let us not lose the revenue we are getting now. Ruling party at the Centre have also said in their election manifesto that they would abolish racing. Let them come with their decision to abolish racing throughout the country. Just as DMK promised during election time they would abolish racing (they are doing so now) let the Ruling Party at the Centre fulfil their election promise. Till then we can wait and not lose the revenue we are getting. Why should we lose Rs. 2 crores annually ? That is my objection with regard to this Bill.



1974 ஆகஸ்ட் 28]

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, என் வாழ்நாளில் நான் இன்றைக்கு அடைந்த மகிழ்ச்சியைப் போன்று, மிகக் குறைந்த காலத்தில், மிகக்குறைந்த சந்தர்ப்பங்களில்தான் அடைந்திருக்கிறேன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். பஞ்சமா பாதகத்தில் இரண்டை, இந்தப் பேரவை, அதாவது, இந்த மந்திரிசபை ஒழித்து மக்களுக்கு நலன் வழங்கயிருக்கிறது என்று எண்ணும் போது பழம் நழுவிப் பாலில் விழுந்து, அதுவும் நழுவி வாயில் விழுந்தது போல் இருக்கிறது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்தக் குதிரைப் பந்தயம் பஞ்சமா பாதகங்களில் ஒன்றுதான். சூதுதானே அது. பஞ்சமா பாதகத்தில் ஒன்று. இதை ஒழிக்கவேண்டுமென்று கொண்டுவந்து விட்டு, அதற்கு இன்னும் கொஞ்சம் தள்ளி வைப்பு என்பதை நான் அறவே விரும்பவில்லை. தீயதை ஒரு நிமிஷமேனும் தள்ளக்கூடாது. இன்றே கொண்டு வந்து நாளையே சட்டமாக்க வேண்டும். அவர் சொன்னார், ஒரு வருஷத்திற்கு விட்டுவிடுங்களேன் என்று. இதைத்தான் குடிகாரர்களும் சொல்கிறார்கள். சரி, போகட்டுமே, அவர்கள் மந்திரி சபை காலம் வரையிலாவது விட்டுவைத்தால் போதுமே, நாங்கள் ஒரு தம் அடித்துவிடுவோம் என்று சொல்கிறார்கள். முடியாது. தீயதை ஒழித்துத்தான் ஆகவேண்டும். அதற்கு ஒத்தி வைப்பு வேண்டியதில்லை.

நீலகிரியில் உள்ளவர்கள்—அவர்கள் நலனைக் கருதி என்று சொல்கிறார்கள். என்ன அவர்கள் பற்றி இவர் வாதாடுவது ? இந்தத் தீயதை—அவர்களுக்கென்ன நாம் வக்காலத்து வாங்குவது தேவையில்லை, இது மிகச் சிறந்த ஒரு செய்கை. மக்களால் பாராட்டத் தகுந்த ஒரு செய்கை. பல்லாயிரக்கணக்கான மக்களுக்குப் பரோபகாரம் செய்ய இருக்கிற ஒரு செய்கையாகும். இந்த மந்திரிசபை பற்றி பேசும்போதெல்லாம் பல குறிப்புகள் சொல்கிறார்கள். அது எப்படியோ இருக்கட்டும். ஆனால் ஒன்றை மட்டும் முதலமைச்சருக்கும் அமைச்சரவைக்கும் இந்தக் கட்சிக்கும் சொல்லிக் கொள்வேன், வருங்கால சந்ததிகள் நீங்கள் ஆட்சியிலிருந்து போனாலும், நிச்சயமாக மனமாரப் பாராட்டுகின்ற பாரம்பரியத்தை பல 100 வருஷங்களுக்கு ஆக்கி வைத்திருக்கிறீர்கள், என்று சொல்லிக் கொள்வேன். இந்த அருமையான காரியங்களைச் செய்திருக்கிறது.

இந்தக் குதிரைப் பந்தயத்தை நான் பார்த்ததில்லை. நான் ஒரு வகையான ஆள். எனக்கு உலகத்திலே இருக்கிற எந்த விளையாட்டிலேயும் இன்டரஸ்ட் கிடையாது. ஒருமுறை என்னை பரத நாட்டியத்திற்கு அழைத்துக் கொண்டு போனார் நண்பர் ஒருவர், அங்கே கையையும் காலையும் ஆட்டினார்கள். அதைப் பார்த்த நான், அங்கே உட்காரமாட்டேன் என்று எழுந்துவிட்டேன். எனக்கு அதெல்லாம் பிடிக்காது.

குதிரைப் பந்தயத்தை நான் பார்க்கவில்லை, ஆனால், குதிரைப் பந்தயத்தால் அழிந்த குடும்பங்களைப் பார்த்திருக்கிறேன் குதிரைப் பந்தயத்தால் கண்ணீர் விட்ட பெண்களை பார்த்திருக்கிறேன் குதிரைப் பந்தயத்தால், தாலி வரை எல்லாவற்றையும் ஒழித்து விட்டக் குடும்பங்களைப் பார்த்திருக்கிறேன். அதை நீங்கள் ஒழித்துவிட்டீர்கள்.

இந்தக் குதிரைப் பந்தயத்தை ஒழித்ததற்காக பல இலட்சக் கணக்கான தாய்மார்களின் சார்பில் நான் நன்றியைச் சொல்லி, இதை வரவேற்கிறேன்.

இதை ஒத்திவைக்காதீர்கள். அதிலும் இன்றக்கே அமுல் நடத்தப்படும் என்று சொல்லுங்கள். யாரோ ஒரு கட்சியினர் சொன்னார்கள் என்று சொன்னார்கள். இருக்கட்டும், நானும் பெயர் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் ஒரு கட்சியினர் சொன்னார்கள். நாங்கள் பல கட்சிகள் சொல்கிறோம். இதற்கு ஜனநாயக ரீதியில் மதிப்புக் கொடுங்கள். ஒரு கட்சி சொல்கிறது ஒத்திவைக்க வேண்டுமென்று. நாங்கள் பல கட்சிகள் அனுமதிக்க வேண்டாமென்று சொல்கிறோம். இதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

பஞ்சமா பாதகத்தில் ஒன்றான குதிரைப் பந்தயத்தினை ஒழிப்பதும் மற்றொன்றான மதுவிலக்கையும் நீங்கள் கொண்டு வந்திருப்பதை நான் நிறைந்த உள்ளத்தோடு, இந்தப் பேரவையையும், இந்த மந்திரிசபையையும் குறிப்பாக, எனது அன்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதல்வர் கருணாநிதி அவர்களையும் பாராட்டி, எனது கட்சியின் சார்பில் வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இந்த மசோதாவை வரவேற்பதிலே எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சிதான். ஏனென்றால், நீண்ட நாட்களாக இது சட்டமாக்கப்பட்டு, அமுலாக்கப்படாமலே இருந்த ஒன்று, இப்பொழுது அமுலாக்கப் படுகிறது என்று சொல்லும்பொழுது அதை மறுத்துச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

எனது கட்சி உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் இதை முன் கூட்டியே, பிராஸ் அண்ட் கான்ஸ், எல்லாம் நன்றாக ஆராய்ந்து, இதுபற்றி அறிவிப்பு செய்திருக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அதுதான் என்னுடைய கருத்தும்கூட. இனி மேலாவது, இம்மாதிரி கொள்கை அறிவிப்புகள் செய்கின்றபொழுது, அதனுடைய நன்மை தீமைகளை நன்றாகப் பரிசீலித்து, அதிலே அனுபவம் பெற்ற அதிகாரிகளுடையக் கருத்துக்களை எல்லாம் கேட்டு முடிவு தெரிவிக்கவேண்டும்.

நான் கடந்த காலத்தினுடைய நிலைமையைப் பார்க்கின்றபொழுது, நமது முதலமைச்சரவர்கள் ஒரு முடிவை 'ஆன் தி ஸ்பாட்' முடிவு எடுக்கக்கூடிய திறமை வாய்ந்தவர் என்று எல்லோரும் கருதக்கூடிய விதத்தில் இருப்பவர். அதிலே கருத்து வேறுபாடு



இல்லை. ஆன் தி ஸ்பாட் முடிவு எடுக்கும்போது எல்லா நேரத்திலும் அது சரியாக அமையாது. சில இடங்களிலே அது தவறாக அமைந்துவிடும். ஆகவே, நான் முதலமைச்சரைக் கேட்டுக் கொள்வது, அனுபவம் வாய்ந்தவர்களை—வெளியிலே இருக்கிறவர்களைக் கேட்க வேண்டுமென்று கூறவில்லையென்றாலும்—அனுபவம் வாய்ந்தவர்களுடைய கருத்துக்களைப் பரிபூரணமாகப் பரிசீலித்து அந்த முடிவுகளையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் ஏதோ இதர மாநிலங்களிலே எல்லாம் ரேஸ் இருக்கிறபோது எங்கள் கட்சி உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் ஏன் இதை ஆதரித்தார், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஏன் ஆதரித்தார்கள் என்று கேட்டார்கள். இந்த பெட்டிங் என்பது அந்த அந்த மாநிலத்தினுடைய சப்ஜக்ட் ஆகும். அந்த அந்த மாநிலங்களின் அதிகாரங்களுக்கு உட்பட்டது. அந்தச் சட்ட மன்றங்களிலேயெல்லாம் உள்ளவர்கள் இதை ஒழிக்கவேண்டுமென்று நாங்கள் கேட்க முடியாது. மகாராட்டிர மாநிலத்திலே இப்படிச் செய்யவேண்டுமென்று நாங்கள் கேட்க முடியாது, அங்கே இருக்கின்ற கட்சிகள், பிரதிநிதிகள்தான் செயல்படவேண்டும். நாங்கள் இந்த தமிழ் மாநில மக்களுடைய பிரதிநிதிகள் என்ற முறையிலே தான் செயல்படவேண்டும்.

இதிலே நாங்கள் பார்ப்பது ஒரு கொள்கையை அறிவிக்கின்றபோது அகில இந்திய கட்சியினுடையப் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்தோ அல்லது முரண்பட்டோ இல்லாமல் இங்கே கொள்கை வகுக்கப்படுகிறதா என்று பார்க்கிறோம். அதைப் பார்க்கிறபோது இதை ஒழிப்பது சரி என்ற முடிவுக்கு வருகிறோம். திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் காங்கிரஸ் கட்சியைப்பற்றி இங்கே மட்டுமல்ல வெளியேயும் பேசிவருகிறார்கள். நான் நினைக்கிறேன், அவர் இந்த அவையிலே இருப்பதைவிடப் பாராளுமன்ற உறுப்பினராக இருப்பது சால சிறந்தது, அடுத்த தடவை அவர்கள் பாராளுமன்ற உறுப்பினராக ஆகி........

திரு. கே. எம். சுப்பிரமணியம் : I am prepared.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஆனால் அவர்கள் எந்தக் கட்சியிலே நிற்பது என்பதை இப்பொழுதே முடிவு செய்துவிடுவது நல்லது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்கள் கதை என்ன ?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : எங்கள் கதை எப்போதும் சரியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

DR. H. V. HANDE rose in his seat.

[1974 ஆகஸ்ட் 28

MR. DEPUTY SPEAKER : No, no. It is already late.

DR. H. V. HANDE : I will finish in a minute.

MR. DEPUTY SPEAKER : It has been the convention that after the speech of Leaders of Parties, no member takes part in the discussion......

டாக்டர் எச். வி. ஹாண்டே : அப்படி கன்வென்ஷன் கிடையாது. There is no such convention.

MR. DEPUTY SPEAKER : Don't say there is no convention. You are breaking the convention.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை முழு மனதோடு ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இந்த மசோதாவை ஆதரிக்கிற நேரத்திலே முதலமைச்சருக்குச் சாதகமாகப் பேசுகிறேன் என்று கருதாமல் இந்த மசோதா நன்மை தரக்கூடிய மசோதாவாக இருந்தால் ஆதரிக்கலாம் என்ற வகையிலேதான் ஆதரிக்கிறேன்.

இதிலே குறிப்பாக நம்முடைய மாநிலத்தை பொறுத்த வரையிலே ஏராளமான தொழிலாளர்கள், 3 ஆயிரம் தொழிலாளர்கள் வரையில் இதிலே ஈடுபட்டிருக்கிறார்கள். எங்களுடைய கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசும்போது அந்தத் தொழிலாளர்களுடைய மறுவாழ்விற்கு அரசாங்கம் ஒரு திட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று சொன்னார்கள், அந்த அடிப்படையிலே நான் என்னுடைய கட்சியின் கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறவர்கள் என்ன என்ன வகையிலே பாதிக்கப்படுகிறார்கள் என்று சரியான கணக்கெடுத்து பரிகாரம் காண வேண்டும்.

ஆளும் காங்கிரஸ் கட்சித் தரப்பிலே ஒரு கருத்துச் சொல்லப்பட்டது. மற்ற மாநிலங்களிலே எடுக்காமல் இங்கே எடுத்தது நியாயம் என்று சொல்வது நியாயமா என்று கேட்ட கேள்விக்கு அவர்கள் பதில் சொன்னார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை நான் வரவேற்கிறேன், கட்சிப் பாகுபாடு இல்லாமல் நான் பேசுகிறேன், மற்ற மாநிலங்களிலே வைத்துக் கொண்டு இங்கே மட்டும் எடுத்துவிடுவது சரியாக இருக்காது, அதனால் நம்முடைய மாநிலம் பாதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களுக்கு நம்முடைய பணம் போய்விடும் என்ற முதலமைச்சர் அவர்களுடைய கருத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1974 ஆகஸ்ட் 28] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

மதுவிலக்கிலேகூட தமிழ்நாட்டிலே எடுத்துவிட்டால் மற்ற மாநிலங்களிலே எடுக்காமல் இருந்தால் நாம் மட்டும் தமிழ்நாட்டிலே இருக்கிறவர்களை மட்டும் ஏமாளிகள் என்று நினைப்பது, அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி இதிலே கட்சிகளுக்குள்ளே நமக்குள்ளேயே தகராறு இருக்கக் கூடாது, தமிழகத்தைக் காட்டிக் கொடுக்கக்கூடிய போக்கு இருக்கக்கூடாது. ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, வேறு எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, எல்லோரும் சேர்ந்து எல்லா மாநிலங்களிலும் இதை செய்யவேண்டுமென்ற முறையிலே—திரு. மொய்தீன் அவர்கள் பேசும்போது சொன்னார்கள் இதை அவர்கள் சொல்லவில்லை, ஆனால் அவர்கள் பேசிய பேச்சின் தொனி அப்படி இருந்தது—எல்லா மாநிலங்களிலும் அப்படிச் செய்தால் நன்றாக இருக்கும் என்றுகூறி இந்த மசோதாவை ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிக மகிழ்ச்சிகரமான, பெருமைக்குரிய ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்திலே ஒரே மனதாக நிறைவேற்றுகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தியதற்காக நான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும் என்கின்ற முடிவு 1949-ஆம் ஆண்டு எடுக்கப்பட்டது என்றாலும் 18 ஆண்டு காலம், காங்கிரஸ் கட்சி ஆட்சியை விட்டு அகலுகின்ற வரையிலும் எடுத்த முடிவை நடைமுறைக்குக் கொண்டுவரவில்லையென்பதையும் 7 ஆண்டுக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இதுவரையிலும் ஏன் கொண்டு வரவில்லை என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் கேட்பதற்குப் பதிலாக 18 ஆண்டுக் காலமாக நாம் நடைமுறைப் படுத்தாததை, 7 ஆண்டு காலத்திலே அவர்கள் நடைமுறைப்படுத்தினார்களே என்ற அளவிற்கு மகிழ்ச்சியைத் தெரிவித்து இருப்பார்களானால் நான் வரவேற்றிருப்பேன்.

ஆளுங் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய நண்பர் திரு.. சுப்பிரமணியம் அவர்கள் இதுபோன்ற கொள்கைகளை அறிவிக்கின்ற நேரத்திலே திட்டவட்டமாக அறிவிக்கவேண்டும், முதலிலே அந்தக் கொள்கைகள் நிறைவேற்றப்படவேண்டுமென்று சொல்கிற நேரத்திலே அளித்த பதில்கள் வேறாகவும், பிறகு திடீரென்று இப்படிப்பட்ட அறிவிப்புகள் வருவதும் விசித்திரமாக இருக்கிறது என்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று, டெல்லியிலே நடைபெற்ற தேசிய வளர்ச்சிக் குழு மாநாட்டில் முதலமைச்சர்கள் அனைவரும் கலந்து கொண்டபோது, பிரதம மந்திரி இந்திரா காந்தி முன்னிலையில் நான் கருத்துக்களை வெளியிட்ட நேரத்திலே இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல என்று மத்திய அரசிடமிருந்து பதில் தரப்பட்டது. ஆனால் அதே கருத்து அடுத்த

இரண்டாண்டுக் காலத்தில் ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாக ஆகி இந்தியாவிலே 14 வங்கிகள் தேசியமயம் ஆக்கப்பட்டதை நாம் மறந்திருக்க முடியாது. ராஜ மானியங்கள் ரத்து செய்யப்படவேண்டும் என்ற கொள்கை காங்கிரஸ் கட்சியிலே நீண்ட நாட்களாக இருந்த கொள்கையானாலும், 1971ஆம் ஆண்டிற்கு முன்புதான் நிறைவேற்றப்பட்ட கொள்கையாக உருவெடுத்தது என்பதையும் மனத்திலே கொள்ளவேண்டும். சிற்சில சங்கடங்களாலும் வேறு பல சூழ்நிலைகளாலும் நாம் நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற கொள்கைகள் நடைமுறைப்படுத்துவதற்குத் தடங்கல்கள், தடைகள் ஏற்பட்டுவிடுவதுண்டு. ஆனால் அந்த தடைகளையெல்லாம் கடந்து நாம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இயன்ற வரையில் நிறைவேற்ற வேண்டுமென்ற அடிப்படையிலே இயங்குகின்ற இந்த அரசு, குதிரைப் பந்தயத்தை ஒழிக்கவேண்டும் என்று 1962 ஆம் ஆண்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கைகளிலே குறிப்பிட்டு, தொடர்ந்து தேர்தல் அறிக்கைகளிலே எடுத்துப் பேசப்பட்டு, இன்றைக்கு இந்த நல்ல முடிவை மேற்கொண்டு இருக்கிறோம், மேற்கொண்டிருக்கிற இந்த முடிவை நவம்பர் முதல் தேதியிலிருந்து அமல் படுத்தவேண்டும் என்பதற்கு மாறாக மார்ச் 31ஆம் தேதி வரை ஏன் ஒத்திவைக்கவேண்டுமென்று எழுந்த கருத்துக்கள் குதிரைப் பந்தயத்தை ஒழிக்க வேண்டுமென்ற கருத்துக்கு எதிரான கருத்துக்கள் அல்ல என்று கருதுகிறேன். அவர்கள் எல்லாம் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

ஆனால் இதிலே சில பிரச்னைகளைக் கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஒரு கொள்கை அமுலாக்கப்படுகின்ற நேரத்திலே அந்தக் கொள்கையால் யார் யார் பாதிக்கப்படுகிறார்கள் என்ன என்ன சங்கடங்கள் எல்லாம் ஏற்படும் என்று பார்க்கின்ற காரணத்தினாலே நாம் அந்தக் கொள்கையைத் துணிவாக அறிவிக்கின்ற சக்தியை இழந்து விடுகிறோம். நிறைவேற்றவேண்டுமென்று முடிவு எடுத்த பிறகு இரண்டொரு மாதங்கள் என்று சில மாதங்கள் காலதாமதமானால் ஒரு கொள்கை நிறைவேற்றப்பட்டாக வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டதற்கு பிறகு, இருக்கின்ற பிரச்னைகளை இடைக்காலத்திலே களைந்திடவேண்டும் என்ற முறையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைத் தலைவர் திரு. எட்மண்ட் அவர்கள் இங்கே கருத்துக்களை எடுத்துரைத்தபோதும் வேறு சில உறுப்பினர்கள் அதுபற்றிப் பேசியபோதும் நான் ஒரு உறுதிமொழியைத் தந்தேன்.

(நண்பகல் 12 . 00)

குதிரைப் பந்தயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற ஏராளமான தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்காத அளவிற்கு வகைகள் செய்யப்படும், 3 மாத காலமோ, 4 மாத காலமோ தேவைப்பட்டால் தவணை தரப்படும் என்ற உறுதிமொழியை இந்த மன்றத்தில் சொன்னேன். அந்த உறுதி மொழியின் அடிப்படையில்



